மாண்புமிகு திரு. செ. மாதவன் : வழக்குரைஞர்களின் திறமையை முதலில் பார்த்து அதற்குப்பிறகு அரசாங்கத்திற்கு அவர்கள் சிறந்த முறையிலே வழக்காடுவோர்கள், நம்முடைய கொள்கையைபெற்று



வழக்காடுவோர்கள் என்று பரிசீலிக்கவேண்டியது நியாயம். காரணம், நம்முடைய வழக்குகளுக்கு அவர்கள் எதிர் வழக்காடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால் அரசாங்கம் பரிசீலித்த பின்னுல் முடிவெடுக்கப்படுகிறது.

Thiru K. VINAYAKAM : Apart from the efficiency of the lawyer who applies for this post, is it not a fact that of late recent appointments have been made to this cadre from the political party which is in power?

மாண்புமிகு திரு. செ மாதவன் : அரசியல் கட்சியிலே இருப்பவர்களை வழக்குரைஞர்களாகச் செய்யக்கூடாது என்று விதியிருப்பதாகத் தெரியவில்லை. அவர்களையெல்லாம் போடக்கூடாது என்றுகூட விதியிருப்பதாகத் தெரியவில்லை. அரசியல் கட்சியின் நேரடி நிர்வாகத்தில் ஈடுபடக்கூடாது என்று பரிசீலிக்கிறோம். மனுச் செய்த பின்னாலே, தனிப்பட்ட கட்சியிலேயிருந்தால் சூதகம் ஏற்படும் என்ற முறையில் எந்த அரசியல் கட்சியிலும் இருக்கக்கூடாது என்று விதியிருக்கிறது. சேர்வதற்கு முன்னால் அரசியல் கட்சியாக இருந்தால் பாவம் என்று கருதவில்லை. இப்போது இந்த ஆட்சி வந்ததற்குப்பிறகு அப்படிச் செய்வது கனம் அங்கத்தினர் அவர்களுக்கு வருத்தமாகயிருந்தால் அதற்கு நாங்கள் பொறுப்பாளி அல்ல.

*Improvements to Cauvery Delta area.*

558 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether any team of World Bank officials visited the Cauvery Delta areas in Tamil Nadu around 21st October 1969?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

Thiru K. VINAYAKAM : What were the findings of the World Bank officials regarding this Cauvery delta? Were they in a position to give us intelligent suggestions as to how we could improve the scheme already on hand or did they help us with monetary aid?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பாசனத் திட்டத்தைப் புதுப்பிக்கும் வடிகால் வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டத்தை நம்முடைய அரசு ஏற்கெனவே தயாரித்து உலக வங்கியின் உதவிக்காக அனுப்பியிருக்கிறது. உலக வங்கியின் நிபுணர்களும் இதைப் பார்வையிட்டிருக்கிறார்கள். திருப்தியளிக்கும் திட்டத்தைத் தயாரித்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய சர்க்காரின் மூலமாக உலக வங்கியின் உதவியை நாடியிருக்கிறோம். 1970-ஆம் ஆண்டு ஜூன் மாதம் பதில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு. என். இட்டப்பா : தலைவரவர்களே, இந்த காவிரி டெல்டா பகுதி அபிவிருத்திக்காக, குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் கடைமடைப் பகுதியைச் சீர்திருத்த ரூபாய் 50 கோடி முதலீட்டில் அங்கு தமிழக அரசு ஒரு திட்டத்தைத் தயாரித்து உலக வங்கியிடம் மத்திய அரசாங்கத்தின் மூலமாக கடன் கோரியுள்ளதா? அதுபற்றிய விவரத்தை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 49 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் பழைய காவிரி கயவாய்ப் பகுதி பாசனத் திட்டத்தைப் புதுப்பிக்கவும் அதற்கு வடிகால் வசதிகள் செய்யவும்

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் சார், அநேக இடங்களில் சப்-மாஜிஸ்ட்ரேட்கள் குடியிருப்பதற்கு அரசாங்க வீடுகள் இல்லாததன் காரணத்தால், தனியார்களுக்குச் சொந்தமான வீடுகளில் அவர்கள் வாடகைக்கு இருக்கிறார்கள். ஹைகோர்ட்டிலிருந்து தமிழகம் முழுவதும் எந்த எந்த இடங்களில் வாடகைக் கட்டடங்களில் கோர்ட்கள் இருக்கின்றனவோ, அந்த இடங்களில் சர்க்கார்க் கட்டடங்கள் கட்ட வேண்டும் என்ற விரிவான ஸ்கீம் ஒன்றை அரசாங்கத்திற்கு அனுப்பியதாகத் தெரிகிறது. அப்படி அனுப்பியிருந்தால் அந்தக் கட்டடங்களுக்கு அருகிலேயே சப்-மாஜிஸ்ட்ரேட்கள் குடியிருக்க வீடுகள் கட்டிக்கொடுக்க அரசு உத்தேசிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நீதிமன்றக் கட்டடம் கட்டவேண்டும் என்று எந்தவிதமான யோசனையையும் உயர்நீதிமன்றம் தெரிவித்ததாக எனக்கு நினைவில்லை. ஆனால்; அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், உயர்நீதிமன்ற நீதிபதிகள் அத்தனை பேருக்கும் வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும் என்ற யோசனையைத் தெரிவித்திருந்தோம். அதன் அடிப்படையில் தமிழ்நாடு முழுவதும் நீதிபதிகளுக்கு சப்-மாஜிஸ்ட்ரேடிலிருந்து—டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் வரை எங்கெங்கு வீடுகள் இல்லையோ அங்கெல்லாம் அரசாங்கம் ஹவுசிங் போர்டு மூலமாக வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்ற முடிவை எடுத்திருக்கிறது. சப்-மாஜிஸ்ட்ரேட்டிலிருந்து ஆரம்பித்து மாவட்ட நீதிபதிகள்வரை உள்ளவர்களுக்கு இந்த வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும் என்ற ஒரு முடிவு செய்திருக்கின்றோம். அண்மையில் அதற்கான இடம் கிடைக்கவில்லையென்றாலும், எங்கெங்கே நீதிமன்றங்கள் இருக்கின்றனவோ, அந்த இடங்களிலேயே வீடுகள் கட்டுவதற்கான மனை இருந்தால், குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்கு அதைப் பயன்படுத்திக்கொள்ளுவதற்கும் அண்மையில் ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : அஸிஸ்டெண்ட் பப்ளிக் ப்ராசிக்யூடர்கள், பப்ளிக் ப்ராசிக்யூடர்கள் ஆகியவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, தகுதி, திறமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களா ? இல்லையென்றால், அதற்குக் காரணம் என்ன ? தகுதி, திறமை அடிப்படையில்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்றால் அதனுடைய விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தகுதி, திறமையை நாம் கணக்கில் எடுத்துக்கொண்டு எப்படித் தேர்வு நடத்துவது என்பதற்கு விதிமுறை இருக்கிறது. ஸ்டாண்டிங் ஆர்டர்ஸ் இருக்கின்றன. அவற்றின்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மனுக்களை வாங்குகிறார்கள். இந்த அரசாங்கம் வந்ததற்குப்பிறகு ஒரு புதிய முடிவு எடுத்தது, மாவட்ட ஆட்சித் தலைவரே பார்த்து, அனுப்புகிறவர்களைமட்டும் இங்கே பரிந்துரை செய்யக்கூடாது, அதற்கு மாறாக, இந்த இடத்திற்கு காலி இருக்கிறது என்று யார்யார் மனுச் செய்துகொண்டிருக்கிறார்களோ அவர்களெல்லாரும் மனுச் செய்யலாம் என்றும், மாவட்ட நீதிமன்றத்திலோ, குறிப்பிட்ட நீதி மன்றத்திலோ வழக்குரைஞர்கள் சங்கத்திலே அறிவிப்புக் கொடுக்கவேண்டும், அதன்பேரில் யார் யார் மனுப் போடுகிறார்களோ அவர்கள் அத்தனை பெயர்களைப் பற்றியும் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், மாவட்ட நீதிபதிகளும் பரிந்துரை செய்யவேண்டும். ஒருவரை விட்டுவிட்டு இன்னொருவரைப் பரிந்துரை செய்யக்கூடாது. எல்லாப் பெயர்களையும் அனுப்பவேண்டும். ஒவ்வொருவரைப்பற்றியும் குறிப்பு அனுப்பவேண்டும். அவர்களுடைய கருத்துக்களை அனுப்பவேண்டும். அதிலிருந்து அரசாங்கம் முடிவு எடுக்கிறது.

திரு. எம் எஸ். மணி : தலைவரவர்களே, இந்த ஏ.பி.பி., பி.பி. ஆகியவர்களை எடுக்கும்பொழுது அவர்கள் அரசாங்கத்தின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களா என்று அறியப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வழக்குரைஞர்களின் திறமையை முதலில் பார்த்து அதற்குப்பிறகு அரசாங்கத்திற்கு அவர்கள் சிறந்த முறையிலே வழக்காடுவார்கள், நம்முடைய கொள்கையையேற்று



வழக்காடுவார்கள் என்று பரிசீலிக்கவேண்டியது நியாயம். காரணம், நம்முடைய வழக்குகளுக்கு அவர்கள் எதிர் வழக்காடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால் அரசாங்கம் பரிசீலித்த பின்னால் முடிவெடுக்கப்படுகிறது.

Thiru K. VINAYAKAM : Apart from the efficiency of the lawyer who applies for this post, is it not a fact that of late recent appointments have been made to this cadre from the political party which is in power?

மாண்புமிகு திரு. செ மாதவன் : அரசியல் கட்சியிலே இருப்பவர்களை வழக்குரைஞர்களாகச் செய்யக்கூடாது என்று விதியிருப்பதாகத் தெரியவில்லை. அவர்களையெல்லாம் போடக்கூடாது என்றுகூட விதியிருப்பதாகத் தெரியவில்லை. அரசியல் கட்சியின் நேரடி நிர்வாகத்தில் ஈடுபடக்கூடாது என்று பரிசீலிக்கிறோம். மனுச் செய்த பின்னாலே, தனிப்பட்ட கட்சியிலேயிருந்தால் குந்தகம் ஏற்படும் என்ற முறையில் எந்த அரசியல் கட்சியிலும் இருக்கக்கூடாது என்று விதியிருக்கிறது. சேர்வதற்கு முன்னால் அரசியல் கட்சியாக இருந்தால் பாவம் என்று கருதவில்லை. இப்போது இந்த ஆட்சி வந்ததற்குப்பிறகு அப்படிச் செய்வது கனம் அங்கத்தினர் அவர்களுக்கு வருத்தமாகயிருந்தால் அதற்கு நாங்கள் பொறுப்பாளி அல்ல.

### *Improvements to Cauvery Delta area.*

558 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether any team of World Bank officials visited the Cauvery Delta areas in Tamil Nadu around 21st October 1969?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

Thiru K. VINAYAKAM : What were the findings of the World Bank officials regarding this Cauvery delta? Were they in a position to give us intelligent suggestions as to how we could improve the scheme already on hand or did they help us with monetary aid?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பாசனத் திட்டத்தைப் புதுப்பிக்கும் வடிகால் வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டத்தை நம்முடைய அரசு ஏற்கெனவே தயாரித்து உலக வங்கியின் உதவிக்காக அனுப்பியிருக்கிறது. உலக வங்கியின் நிபுணர்களும் இதைப் பார்வையிட்டிருக்கிறார்கள். திருப்தியளிக்கும் திட்டத்தைத் தயாரித்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய சர்க்காரின் மூலமாக உலக வங்கியின் உதவியை நாடியிருக்கிறோம். 1970-ஆம் ஆண்டு ஜூன் மாதம் பதில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு. என். இட்டப்பா : தலைவரவர்களே, இந்த காவிரி டெல்டா பகுதி அபிவிருத்திக்காக, குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் கடைமடைப் பகுதியைச் சீர்திருத்த ரூபாய் 50 கோடி முதலீட்டில் அங்கு தமிழக அரசு ஒரு திட்டத்தைத் தயாரித்து உலக வங்கியிடம் மத்திய அரசாங்கத்தின் மூலமாக கடன் கோரியுள்ளதா? அதுபற்றிய விவரத்தை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 49 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் பழைய காவிரி கயவாய்ப் பகுதி பாசனத் திட்டத்தைப் புதுப்பிக்கவும் அதற்கு வடிகால் வசதிகள் செய்யவும் [illegible]

திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. காவிரி கயவாய்ப் பகுதியில் உள்ள வடிகால் திட்டங்களுக்கு ரூபாய் 6·30 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்களுக்காக உலக வங்கியிடம் மத்திய அரசாங்கத்தின்மூலம் கடன் உதவி கோரியிருக்கிறோம். கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எம். பூபதி : தலைவரவர்களே, உலக வங்கியின் அதிகாரிகள் காவிரி கயவாய்ப் பகுதியைப் பார்வையிட்டதைப்போல வேறு எந்தெந்தப் பகுதிகளைப் பார்வையிட்டார்கள் ? அதைப்பற்றி கருத்துரைகள் ஏதாவது வழங்கினார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : காவிரி கயவாய்ப் பகுதியை மட்டும்தான் பார்வையிட்டார்கள்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, காவிரி கயவாய்ப் பகுதியைச் செப்பனிடத் தயாரிக்கப்பட்ட திட்டத்தை அங்கத்தினர்களுக்கு அரசாங்கம் வழங்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : விவரக் குறிப்பை இப்பொழுது கொடுப்பதற்கில்லை.

### கடில நதியின் குறுக்கே பாலம்.

*559 வினா—திரு. மு. கந்தசாமி படையாச்சி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உளுந்தூர்பேட்டையிலிருந்து திருவெண்ணெய்நல்லூர், 20-வது மைல் தூர பாதையில் உள்ள கடிலம் நதிமீது பாலம் கட்டும் திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு அதற்கான பணம் ஒதுக்கப்பட்டதா ?

(இ) ஆம் என்றால், எப்பொழுது அவ்வேலை நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) உளுந்தூர்பேட்டை—திருவெண்ணெய்நல்லூர் சாலை 21/1-வது மைலில் கடிலம் ஆற்றின் குறுக்கே ரூ. 80,000 செலவில் பாலம் ஒன்று கட்டும் திட்டம் மாவட்ட வாரியத் தலைப்பின்கீழ் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டது. ஆனால் பாலம் கட்டுவதற்காகும் செலவு அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டதால் பின்னர் இது நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்படவில்லை.

(இ) நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மத்திய சாலை நிதித் திட்டத்தின்கீழ் இப்பணியை நிறைவேற்றுவது குறித்து ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது. இப்பணிக்கு இந்திய அரசு இசைவு அளித்து இப் பணிக்காகப் போதிய நிதி ஒதுக்கப்பட்டால் நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இப்பணி நிறைவேற்றப்படுவதற்காக மேற்கொள்ளப்படும்.

திரு. மு. கந்தசாமி படையாச்சி : தலைவரவர்களே, இந்த கடிலம் நதியில் பாலம் கட்டும் திட்டத்தை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்தும் இதுவரையில் எடுத்துக்கொள்ளாததற்குக் காரணம் என்ன ? அப்படிப் பணம் ஒதுக்கியும் அதைச் செய்யாததைப்பற்றி, அங்கேயுள்ள அதிகமான மக்களுக்குப் போக்குவரத்துத் தொல்லை அதிகமாக இருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ? நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்து, எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்ட முதலீட்டைப்போல் இரண்டு மடங்கு முதலீடு செய்வதற்கென வகை செய்யப்பட்டிருந்தது. எனவே



இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு ஆட்சித் தலைவரால் இசைவளிக்கப்பட்ட பணிகள் அனைத்தையும் செலவின்மேல் வரம்பிற்குள் மேற்கொள்ள இயலவில்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தொழிற்பகுதியிலுள்ள பணிகளைமட்டுமே மேற்கொள்ள முதலிடம் கொடுக்கப்பட்டிருந்ததால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் இந்தப் பணியை மேற்கொள்ள இயலவில்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல், மத்திய அரசு இசைவு கொடுத்தால் இந்த வேலை துவங்கப்படும்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்ினுடைய எஸ்டிமேட் என்ன ? நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எவ்வளவு எஸ்டிமேட் போட்டிருக்கிறார்கள் ? அதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத் திட்டத்திற்கு சுமார் 10 லட்சம் ரூபாய செலவாகும் என்று இப்பொழுது மதிப்பிடப்படுகிறது.

### *Meenambakkam Air Port.*

*560 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Air Lines Corporation has consulted the Tamil Nadu Government about the expansion of the Meenambakkam Air Port?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

**Dr. H. V. HANDE** : With regard to the aerodrome is it not a fact that the Government of Tamil Nadu has suggested certain recommendations and is it not a fact that the present aerodrome is insufficient to allow Boeings and other big planes to freely come and go? May I also know whether the aerodrome is going to be developed as an inter-national airport? What suggestions have this Government offered to aerodrome authorities or the Central Ministry concerned with regard to this aerodrome?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த விமான நிலயத்தை விரிவுபடுத்துவதுபற்றி இந்திய விமானப் போக்குவரத்துக் கழகம் மாநில அரசாங்கத்துடன் கலந்தாலோசிப்பதில்லை. ஆனால் ஒரு புதிய விமானப் போக்குவரத்து வசதிக்கேற்ற தளம் மீனம்பாக்கத்தில் அமைக்கப்பெறவேண்டும். அதுவும் மேலாக பகுதி விமானக் கூடம் அமைப்பது என்ற அடிப்படையில் உள்நாட்டு போக்குவரத்துக்கும், வெளிநாட்டுப் போக்குவரத்துக்கும் ஏற்றதான வகையில் தற்போதுள்ள விமானக்கூடம் பாதை ஆகியவற்றிற்கு ஒட்டினாற்போலவும், அவற்றுக்கு தென்-மேற்கேயுள்ள நிலங்களிலும் தளத்தை அமைக்கவேண்டும். இம் மேம்பாட்டுக்கான மதிப்பீட்டுச் செலவு ரூபாய் 18·28 கோடி என இப்பொழுது கணக்கிடப்பட்டுள்ளது

திரு. மு.ச. சிவசாமி : தலைவரவர்களே, தமிழகத்தில் இப்பொழுதிருக்கும் நான்கு விமான தளங்களைத்தவிர, வேறு புதிய விமான தளங்கள் அமைக்க தமிழக அரசு சிபாரிசு செய்திருக்கிறதா? சிபாரிசு செய்திருக்கிறது என்றால்; தூத்துக்குடி அதில் சேர்க்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தூத்துக்குடியில் விமான தளம் அமைக்கும் செயற்குறிப்பு நம்முடைய அரசாங்கத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் தூத்துக்குடிக்கு விமானதளம் வேண்டுமென்று விண்ணப்பம் கொடுத்தால் அதைக்கொண்டு மத்திய அரசுக்கு சிபாரிசு செய்யலாம்.

*Madras–Vedanthangal special buses.*

* 561 Q.—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether special buses of Tamil Nadu StateTransport Department are run to Vedanthangal, a bird sanctuary in Chingleput district; and

(b) if so, how frequently?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) சென்னையிலிருந்து வேடந்தாங்கல் பறவைகள் உய்விடத்திற்குச் சென்று திரும்புவதற்குத் தனிப்பேருந்து ஒன்று தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை நடத்துகிறது.

(இ) நவம்பர் திங்கள் முதல் மார்ச் திங்கள் முடிய உள்ள ஞாயிற்றுக்கிழமைகளிலும், பொது விடுமுறை நாட்களிலும தனிப் பேருந்து விடப்படுகின்றது. சென்னையில் இநதப் பேருந்து காலை 7-30 மணிக்குப் புறப்பட்டு மாலை 8-15 மணிக்குத் திரும்புகிறது.

THIRU K. VINAYAKAM : Whereas this Vedanthangal Bird Sanctuary has earned international reputation for attracting birds from different countries, will not the Government think of the possibility of running a daily service during this season instead of running the service only on holidays like Sunday and other public holidays, and will it not be profitable for the Government to run a daily service because there is a great demand for sight-seeing in this sanctuary?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வேடந்தாங்கல் பறவைகள் உயவிடத்திற்குச் சாதாரண நாட்களிலே செல்ல வேண்டுமென்று கனம் உறுப்பினரவர்கள் சொல்வதைப்போன்று ஒரு டிமாண்ட் இல்லை. சீசன் காலத்திலே மாத்திரம் போகவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இப்பொழுது ஞாயிற்றுக்கிழமைகளிலும், பொது விடுமுறை நாட்களிலும் போகிறார்கள், அப்படி அதிகமாகப் போகும் நாட்களில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று போக்குவாத்துத்துறை ஏற்பாடு செய்திருக்கிறது. அவர்கள் குறிப்பிட்டபடியிருந்து அதைப் போக்குவரத்துத் துறை இயக்குநருக்குத் தெரிவித்தால் ஏற்பாடு செய்யலாம்.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, இப்பொழுது ஞாயிற்றுக்கிழமைகளிலும், விடுமுறை நாட்களிலும்தான் சர்க்கார் பேருந்து போய்க்கொண்டிருக்கிறது. ஏற்கனவே நீண்ட நாட்களாக சென்னையிலிருந்து வேடந்தாங்கலுக்கு பஸ் விடவேண்டும் என்று கோரிக்கை இருந்துகொண்டிருக்கிறது. ஞாயிற்றுக்கிழமைகள், விடுமுறை நாட்கள் ஆகியவைதவிர மற்ற நாட்களில் போவதற்கு வசதி இல்லை. ஆகவே, தற்பொழுது சென்னையிலிருந்து மதுராந்தகத்திற்குப் போகும் அரசுப் பேருந்தை வேடந்தாங்கல்வரை நீட்டிப்பதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அம்மாதிரி நீட்டிப்பதால் பயனில்லை என்று அரசு கருதுகிறது.

திரு. பெ. சீனிவாசன் : வேடந்தாங்கலுக்கு வருகிற பயணிகள் செய்கிற ஆர்பாட்டத்தினால் அங்கே வருகின்ற பறவைகள் அஞ்சுகின்றன என்று ஒரு பறவை நிபுணர் பத்திரிகையில் எழுதியிருக்கிறார். இதைத் தடுக்க அரசாங்கம் நிபுணர்களைக் கலந்து ஆலோசிக்குமா ?



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அச்சப்படத்தக்க அளவுக்கு உள்ள பிரயாணிகள் அல்லது பயணிகள் அங்கே போகாமல் இருப்பது தான் அதற்குரிய வழி. (சிரிப்பு). பறவைகள் அச்சப்படத்தக்க ஆட்களைப் பார்த்து அச்சப்படுவதாகவும் சொல்ல முடியாது.

*Express buses from Hosur*

* 562 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether any proposal has been received recently from the Dharmapuri District Development Council to extend all the express buses starting from Krishnagiri to start from Hosur for the benefit of the people who come from Mysore State as well as Hosur area?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.

THIRU B. VENKATASWAMY : Sir, there are not sufficient number of direct buses between Bangalore and important cities of our State like Coimbatore, Madurai, Tiruchirappalli and Madras and the passengers from Mysore State are finding it very difficult, to change three buses. To alleviate the sufferings of the passengers, will the Government be pleased to start our buses at Ahipalli on the Mysore State Border instead of at Krishnagiri? in fact by the Mysore State Border instead of at Krishnagiri? In fact by this arrangement the buses will earn more income.

THE HON. THIRU S. J. SADIQ PASHA : There is no proposal to start buses from the Mysore State border. There is a proposal for runing the service "Kirshnagiri to Madras" as Dharmapuri to Madras Express Service for providing direct connection between Madras and Dharmapuri, the headquarters of the district.

THIRU B. VENKATASWAMY : People coming from Bangalore and Mysore are finding it very difficult. To provide facility for such passengers, will the Government run at least one or two buses from the Mysore State border?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: At present there is no such proposal. If a specific request to that effect is made, it will be considered.

THIRU K. S. KOTHANDARAMIAH : A number of State buses start from Madras and reach Krishnagiri and stop there instead of going to Hosur, our last border town on the Mysore side. A number of passengers of Mysore State including a number of Tamil people who have settled at Bangalore and Mysore are coming to Madras side very frequently. Now they travel in a number of buses, that is, private buses, luxury buses and also in lorries.

**THIRU K. VINAYAKAM** : Whereas the Madras State Transport is a very consumer of petrol and liesel oil and whereas the commission on the purchase of these would go to the coffers of the Government, will the Government think in terms of maintaining their own petrol buwnk in all workshops where the buses stay during nights?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : அதைப்பற்றி செயற் குறிப்பு இப்பொழுது இல்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவதுபோல அரசாங்கப் போக்குவரத்துத் துறை இது போன்ற பெட்ரோல் பங்குகளை, பெட்ரோல், டீசல் ஸ்டேஷன்களை ஆரம்பிக்கலாம் என்பது விவாதத்திற்குரிய ஒரு பிரச்னை.

### அரசுப் பேருந்து விபத்துக்கள்

*565 வினா.—**திரு. ஆர். கருப்பையா** : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடந்த 1969-ம் ஆண்டு டிசம்பரில் மட்டும் அரசினர் பேருந்துகள் எத்தனை இடங்களில் விபத்துகளுக்கு உள்ளாயின?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : நூற்று முப்பத்து ஒன்று இடங்களில்.

*566 வினா.—**திரு. ஆர். கருப்பையா**: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் 1969-ம் ஆண்டு, அக்டோபர் 6-ந் தேதி, இரண்டு அரசாங்க பஸ்கள் மோதிக்கொண்டது உண்மையா?

(இ) இதனால் எத்தனை பேர் படுகாயமுற்றனர்?

(உ) இந்த விபத்திற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : (அ) ஆம்.

(இ) ஒரு விபத்தில் 21 பேர்களும் மற்றொரு விபத்தில் 19 பேர்களும் காயமுற்றனர்.

(உ) பேருந்து ஓட்டுநர்களின் கவனக்குறைவினால் விபத்துக்கள் நேர்ந்தன.

முற்பகல் 9-30 **திரு. கொ. இர. ஞானசம்மந்தன்** : தலைவர் அவர்களே, இப்பொழுது மெயின்டினன்ஸ் சரியாக இல்லாததால், இப்படிப்பட்ட ஆக்ஸிடெண்ட்கள் ஏற்படுகின்றன. ஆகவே, இதைத் தடுக்க தக்க நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா**: பராமரிப்புச் சரியாக இல்லாததால் விபத்துக்கள் ஏற்படுவதாகச் சொல்ல முடியாது.

**திரு. க. இராமமூர்த்தி**: தலைவர் அவர்களே, இம்மாதிரி விபத்துக்கள் ஏற்பட்டால், பஸ்களுடைய ஓட்டுநர்கள், ட்ரைவர்கள், அல்லது சம்பந்தப்பட்ட அலுவலர்கள்மீது போலீசார் நடவடிக்கை எடுத்தபோது, கோர்ட்டில் வழக்கு பதிவு செய்தால், அப்படிப்பட்ட ட்ரைவர்களுக்கு வாரண்டு சர்வ் செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது என்பது வாஸ்தவமா? அடிக்கடி ட்ரைவர்களை மாற்றுவதால், அதைப் பற்றிய விவரங்கள் தெரியாததால், வாரண்ட் ஒரு ஆண்டுகாலமாகியும் சர்வ்





பண்ண முடியாத நிலை அரசுக்குத் தெரியுமா? அப்படிப்பட்ட நிகழ்ச்சி, with the permission of the Chair I would say என்னுடைய காரையே அடித்த ட்ரைவர் இன்னமும் அறிவிக்கப்படாமல், வாரண்ட் சர்வ் செய்ய முடியாதநிலை இருக்கிறது. இப்படிப் பல்வேறு பஸ்களில ட்ரைவர்கள் மாற்றப்படுவதால், அந்த விவரம் தெரியாததால், ஏற்படும் இப்படிப்பட்ட நிலையைப் போக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : மாண்புமிகு உறுப்பினர் ஒரு வழக்கறிஞர். வாரண்ட் சர்வ் செய்ய வேண்டும் என்றால், குறிப்பிட்ட இலாகாவில் வேலை செய்பவர்களுக்கு through the Head of the Department கொடுக்கலாம் டைரக்டரிடம் அனுப்பினால், அவர்கள் சர்வ் செய்து கோர்ட்டுக்கு அனுப்புவார்கள்.

**திரு. ஜே. கருணைநாதன்** : தலைவர் அவர்களே, இந்த விபத்துக்களுக்கு ட்ரைவர்களுடைய கவனக் குறைவு காரணமா அல்லது பஸ்கள் பழுதுபட்டிருப்பது காரணமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : பல காரணங்கள் உண்டு விபத்துக்களுக்கு.

**திரு. சி. கோவிந்தராசன்**: தலைவர் அவர்களே, விபத்துக்கு அடிப்படைக் காரணம் ப்ரேக்குகளை சரியான முறையில் பராமரிக்க போதிய ஸ்டாப்புக்கள் இல்லை என்ற கருத்து இருக்கிறதே, அதைச் சரிசெய்தால், விபத்துக்கள் தடுக்கப்பட்டு நிறுத்தலாம் என்பதால், அதன்மேல் நடவடிக்கை எடுக்க உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : மெயின்டினன்ஸ் சரியானபடி இல்லாததால் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்பது இல்லை. ஒரு பஸ் வெளியிலே போகும்போது, நன்றாகப் பரிசீலிக்கப்பட்டு, தொழிலாளர்கள் ப்ரேக் சரியாக இருக்கிறதா என்பதையெல்லாம் சரிபார்த்துத்தான் அனுப்புகிறார்கள். விபத்துக்களுக்கு பல காரணங்கள். அதன் பெயரே "ஆக்ஸிடெண்ட்", எதிர்பாராமல் ஏற்படுகிறது. (சிரிப்பு)

**திரு. இல. பலராமன்** : தலைவர் அவர்களே, ஓட்டுநர்கள் வேகமாக ஓட்டுவதால்தான் ஆக்ஸிடெண்டுகள் ஏற்படுகின்றன. ஆகவே, துரித பஸ்களுக்கு இவ்வளவு மைலுக்கு மேல் போகக்கூடாது என்ற நிபந்தனையை வைத்து, சீலிங் வைத்து, பஸ்களை ஓட்ட அரசாங்கம் முயற்சிக்குமா? ஜப்பான் போன்ற நாடுகளில் ட்ரைவரின் குடும்பத்தினரின் படங்களை, மனைவி, பிள்ளைகளுடைய படங்களை ஓட்டுநர்கள் முன்னால் வைத்து, அதைப் பார்த்தாவது அவர்கள் ஜாக்கிரதையாக ஓட்டுவார்கள் என்று செய்யப்படுவதுபோல் நம்முடைய அரசாங்கமும், அரசு பஸ்களில் குடும்பத்தினரின் படங்களை வைக்க நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : அரசாங்க பஸ்களில் அவர்கள் குடும்பத்தினரின் படங்களை வைக்கலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் கூறுகிறார்கள். ஒரு வேளை மனைவியின் படத்தைப் பார்த்துக்கொண்டு வேகமாக ஓட்டுவதால் ஆக்ஸிடெண்டுகள் அதிகமாகக் கூட ஏற்படலாம் (சிரிப்பு). குடும்பத்தினரைக் காப்பாற்றுவதை விட, பொதுமக்களைக் காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. நா. வீராசாமி** : தலைவர் அவர்களே, ஆக்ஸிடெண்ட் நடைபெறுவதற்கு பல காரணங்கள் என்று சொன்னார்கள். அதிலே குறிப்பாக 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதம், 6-ம் தேதி நடைபெற்ற ஆக்ஸிடெண்டுக்கும் காரணம் ஓட்டுநர் கவனக்குறைவு என்று

சொன்னார்கள். பொதுவாக ஓட்டுநர்கள் ஒரு வழித்தடத்தில் ஒருவரே இல்லாமல் அடிக்கடி மாற்றப்படுவதால், பஸ் ஓடும் ரோடுகளில் வளைவுகள் இருப்பது தெரியாமல், பெரும்பாலான ஆக்ஸிடெண்டுகள், வளைவுகள் இருக்கும் இடங்களில்தான நடக்கிறது. ஆகவே, ட்ரைவர்களை குறைந்தது ஒரே வழித்தடத்தில் ஒரு ஆண்டுக்காலத்திற்காவது இருக்கவேண்டும், அடிக்கடி மாற்றக்கூடாது என்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு உறுப்பினருடைய யோசனை ஒரு நல்ல யோசனை. அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

**திரு. கே. போஜன்:** தலைவர் அவர்களே, அமைச்சர் கூறிய பதிலில் கடந்த டிசம்பர் மாதத்தில் 131 இடங்களில் விபத்துகள் ஏற்பட்டன என்று சொன்னார்கள். விபத்துகளில் சம்பந்தப்பட்ட பிரயாணிகள் எத்தனை பேர்கள்? உயிர் இழப்பு ஏற்பட்டிருந்தால் எவ்வளவு? காயம் அடைந்தவர்கள் எத்தனை பேர்கள்?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: The total number of insignificant accidents is 668. Deducting this from the total number of accidents 799, there were 131 accidents.

விபத்தில் உயிர் இழப்பு பற்றி விவரம் தெரிந்துகொள்ள இப்பொழுது இல்லை.

**திரு. நா. காசிராமன்:** இந்த விபத்துக்களையெல்லாம் தடுக்க உண்மையான காரணங்கள் என்ன என்பதைக் கண்டுபிடிக்க உதவியாக இருக்கும் வகையில், வேகத்தைக் கண்டுபிடிக்க "கவர்னர்கள்" என்ற கருவியை வைப்பதன்மூலம் செய்யலாம். எந்த வேகத்தில விபத்து நடந்தது என்று கண்டுபிடிக்க "டாகோகிராப்" என்ற கருவி இருக்கிறது. நகரில் ஓடும் ஒவ்வொரு பஸ்ஸிலும் வைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அதுபோன்ற இயந்திரம் பொருத்தப்பட்டு வருகிறது. மேலும் பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

*Fire accident in Thanjavur Municipal Market.*

* 567 Q.—Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether there was outbreak of fire in the municipal market of Thanjavur during the first week of November 1969; and

(b) if so, the damage thereof?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** (அ) ஆம். 1969-ம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ம் தேதி அன்று தீ விபத்து ஏற்பட்டது.

(இ) ரூ. 4 லட்சத்திலிருந்து 5 லட்சம்வரை மொத்த இழப்பு ஏற்பட்டதென்று மதிப்பிடப்பட்டது.

**திரு. கே. விநாயகம்:** சார், இதுவரையில் தீ விபத்துக்கு சென்னை நகரம்தான் பிரசித்திபெற்று இருந்தது. எப்படி அது தஞ்சாவூருக்குப் போனது? அதற்குக் காரணம் யாது? அதைக் கண்டுபிடித்தார்களா? இப்படி தஞ்சாவூரிலிருந்து திருச்சிக்கு, நாகர்கோவிலுக்கு என்று வரையெல்லாம் போவதைத் தடுக்க அரசாங்கம் யோசிக்குமா? (சிரிப்பு)



**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** தீ விபத்துக்கள் சென்னையில் தான் ஏற்படுகின்றன என்று இல்லை. அப்படிப்பட்ட நிலைகள் பிற இடங்களிலும் ஏற்படாமல் இருக்க, மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் அந்த இடங்களுக்குப் போய், அங்கெல்லாம் ஏற்படாமல் தடுக்க முயற்சியை மேற்கொள்ளலாம். இந்த விபத்து எதிர்பாராத வகையில் ஏற்பட்ட ஒன்று.

**திரு. எம். பூபதி:** தலைவர் அவர்களே, தஞ்சாவூரில் எத்தனை வணிகர்கள் வீடுகள் பாதிக்கப்பட்டன என்று அறிய விரும்புகிறேன். அவர்களுக்கு நஷ்ட ஈடு ஏதாவது கொடுக்கப்பட்டதா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** அந்த அங்காடியில் ஏறத்தாழ 80 பெரிய கடைகளும், 300 நடைபாதை குடிசைகளும், பக்கத்தில் இருந்த சில தனியார் வீடுகளும், 5 தனியார் கடைகளும் தீக்கு இரையாயின. இதன் மொத்த மதிப்பு ரூ. 4 லட்சத்திலிருந்து 5 லட்சம் வரையில். தேவையான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. முதலாவதாக, சமூக சேவை மன்றம், 900 ரூபாய் பெறுமான துணிகளும் மூன்று படி அரிசியும் வழங்கியது. வீடு கட்டிக்கொள்ள 80 ரூபாய் கொடுக்கப்பட்டது. மாண்புமிகு முதல் அமைச்சர் உடனடியாக 1969-ம் ஆண்டு நவம்பர் மாதம் 9-ம் தேதியன்று சென்று நேரில் பார்த்து உலகத் தமிழ் மாநாடு நிதியிலிருந்து ரூ.24,694 கொடுக்கப்பட்டது. நிலையான கடைகளைக் கட்ட 69 பேர்களுக்கு, சொந்த பணயத்தில், 500 முதல் 1000 ரூபாய் வரையில் பணமும், வேறுவிதமான உதவிகளும் கொடுக்கப்பட்டிருக்கிறது. நகராட்சி மன்றமும் மீண்டும் கட்டடங்களைக் கட்டுவதற்காக ரூ. 2 லட்சம் மானியமும், 4·5 கடனுதவும் வழங்கியிருக்கிறது. டெண்டர் காலமும் தள்ளுபடி செய்யப்பட்டு, வேலை பொதுப்பணித் துறையிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கரு. சிமைச்சாமி:** தலைவர் அவர்களே, தஞ்சாவூர் பெரிய நகரம். கிட்டத்தட்ட தீ விபத்தினால் 5 லட்சம் ரூபாய் வரைக்கும் சேதம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சாதாரணமாக கிராமப்புறம் என்றால் தீயணைப்புப் படை வருவதற்குக் கொஞ்சம் காலதாமதமாகும். தஞ்சாவூர் போன்ற பெரிய நகரங்களில் தீயணைப்புப்படை இருந்திருக்குமே, அங்கிருக்கும் தீயணைப்புப்படை வேலைசெய்யவில்லையா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** தலைவர் அவர்களே, தஞ்சாவூர் நகரத்திலுள்ள தீயணைப்புப் படை தான் தேவையான நடவடிக்கைகளை எடுத்தது. அங்காடிகள் என்று சொல்லும்போது அந்த இடத்தில் மிக நெருக்கமாக ஒன்றோடொன்று ஒட்டியிருக்கின்ற காரணத்தாலும், தீ பிடித்த நேரம் பகல் 1–40 மணியாதலால், தீ வேகமாகப் பரவுவதற்கு வசதியிருந்ததாலும் சேதம் இவ்வளவு அதிகமாக காமராஜ் மார்க்கெட்டுக்கு ஏற்பட்டது.

**திரு. நா. காசிராமன்:** தலைவர் அவர்களே, தீவிபத்து நடந்த நேரம் தீபாவளி சமயம். அப்போது பட்டாசு கடைகளும், வாண விற்பனைக் கடைகளும் அதிகம் இருந்தன. இவைகளும் சில சமயங்களில் தீ விபத்துக்களுக்குக் காரணமாக இருக்கின்றன. ஆகவே, வாணங்களும், பட்டாசுகளும் விற்பதற்குள்ள லைசென்சுகள் கொடுப்பதைக் கடுமையாக்கி, பொது மக்களுக்குக் கஷ்டம் ஏற்படாமல் தடுக்கவும், தீவிபத்து ஏற்படாமல் தடுக்கவும் வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** தலைவர் அவர்களே, பொதுவாக தீபாவளி போன்ற சமயங்களில் லைசென்ஸ் வழங்குவதற்கு என்னென்ன விதிமுறைகள் பின்பற்றப்படவேண்டுமோ, அவைகளையெல்லாம் அனுஷ்டித்துத்தான் லைசென்ஸ் கொடுக்கப்படுகிறது. தீ பிடிப்பதற்கு அதுதான் காரணமா என்று தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் எல்லாம் தீபாவளி பண்டிகையில் அதிக அக்கறை காட்டாமல் பட்டாசுகள் வெடிப்பதைக் குறைத்துக்கொள்ளும் முயற்சி எடுக்கவேண்டும்.

**திரு கே. என். குமாரசாமி:** தலைவர் அவர்களே, தீபாவளி நேரத்தில பட்டாசுகள் விற்பதனால்தான் தீவிபத்துக்கள் ஏற்படுகின்றன என்று சொல்லப்படுகிறதே, அதைத் தடைப்படுத்தும் உத்தேசம் அரசின் ஆலோசனையில் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தலைவர் அவர்களே, அதுபற்றி நம்மிடத்திலே எந்தப் புகாரும் வரவில்லை. இது காமராஜ் மார்க்கெட்டில் ஏற்பட்ட தீ விபத்தைப்பற்றிய கேள்வி.

### சிதம்பரம் வட்டத்தில் குழாய் கிணறுகளுக்கு மின்இணைப்பு

* 568 வினா—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுகா, திருமுட்டம் பகுதியில் இருக்கும் குழாய்க் கிணறுகள் பூராவும் மின்சாரம் இல்லாமல் ஆயில் இன்ஜின் மூலம் தண்ணீர் இறைத்து வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், இக்கிணறுகளுக்கு மின்சார இணைப்பு தர அரசு நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளதா?

**மாண்புமிகு திரு ஓ. பி. இராமன்:** (அ) சிதம்பரம் வட்டம், திருமுட்டம் பிர்க்காவில் 170 குழாய்க் கிணறுகள் மின்சாரத்தினால் இயங்கிக்கொண்டிருக்க, 45 குழாய்க் கிணறுகள் மட்டுமே எண்ணெய்ப் பொறிகளின்மூலம் தற்போது இயங்கி வருகின்றன.

(இ) இந்த 45 குழாய்க் கிணறுகளில், 8 குழாய்க் கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கும் பணி நடந்தேறி வருகிறது. எஞ்சிய 37 குழாய்க் கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கான திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே, சிதம்பரம் தாலுக்காவில் திருமுட்டம் பிர்க்காவில் உள்ள குழாய்க் கிணறுகளுக்கு மின்சார இணைப்புக் கொடுத்தால், அங்குள்ள புஞ்சை நிலங்களை, நஞ்சை நிலங்களாக மாற்றி விவசாயிகள் அதிக விளைச்சலைக் காண்பார்கள். ஆகவே அரசு திரும்பவும் பரிசீலித்து, எல்லா குழாய்க் கிணறுகளுக்கும் மின்சார இணைப்புக் கொடுக்க ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவர் அவர்களே, இப்பொழுது 8 குழாய்க் கிணறுகளுக்கு மின்சார இணைப்புக் கொடுக்கும் வேலை நடந்து வருகிறது. பாக்கி 37 குழாய் கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கும் திட்டம் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் மின் இணைப்பு கொடுக்கவேண்டுமென்று புதிதாக 385 திட்டங்களுக்கு ஒரு தனித் திட்டம் வகுக்கப்பட்டு, வேலைத்திட்டம் செய்யப்பட்டிருக்கிறது.

### *Delay in disposal of files.*

* 549 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state the steps taken to root out corruption and delays in disposing of files by the Government officials?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** லஞ்ச ஊழல் வழக்குகளை ஆய்வு செய்வதற்காக, கண்காணிப்பு-லஞ்ச ஒழிப்பு இயக்குநர் அலுவலகத்தை அரசு ஏற்படுத்தியுள்ளது. பொதுவாக, அரசுத் துறையில் எவ்வாறு தடுப்பது என்பது குறித்தும், நாட்டத்திற்குக் கொண்டுவரப்படும் தனிப்பட்ட லஞ்ச ஊழல் வழக்குகள் குறித்து எவ்வாறு நடவடிக்கை எடுப்பது என்பது குறித்தும் கண்காணிப்பு ஆணைக்குழு அரசுக்கு ஆலோசனை





கூறுகிறது. காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கான நிலையான கட்டளைகளும், நடைமுறைகளும் துறையின் நடைமுறை நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. காலதாமதம் குறித்து மேல் அதிகாரிகள் அவ்வப்பொழுது நடுதல்கள் (ஆய்வுகள்) நடத்துகின்றனர். மிகவும் தாமதம் ஏற்பட்ட நேர்வுகள், அரசின் கவனத்திற்குத் திட்டவட்டமாகக் கொண்டுவரப்பட்டால், தவறுசெய்யும் சார்நிலைப் பணியாளர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது குறித்து ஆய்வு செய்யப்படுகின்றது.

துறைத் தலைவர்கள் அனைவரும், மேற்பார்வை அதிகாரிகளும், கோப்புகளைத் தாமதப்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும் என்றும், அரசு அலுவலகங்களில் காலதாமதமாவதைக் குறைப்பதற்கும் பல்வேறு வழிவகைகளை எடுத்துக்கூறியும் காலதாமதத்திற்குக்காரணமாக இருப்பவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவும் அண்மையில்கூட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**திரு. கே. விநாயகம் :** தலைவர் அவர்களே, நமது அரசு அலுவலகத்திலே லஞ்சப் புகார்கள் அல்லது அதற்குச் சம்பந்தப்பட்ட பைல்கள் எல்லாம் தாமதமாக ஒரு ஆபீசரிடமிருந்து இன்னொரு ஆபீசருக்குச் செல்கிறது என்பதை ஆராய்வதற்காக ஓய்வுபெற்ற சீப் செகரடரி ஒரு அறிக்கை சமர்ப்பித்தார்கள். காலதாமதத்தைப்பற்றி 'உறஷ் மணி' என்றும் 'புஷ் மணி' என்றும் வர்ணித்திருக்கிறார்கள். ஆகவே, இதைத் தடுப்பதற்கும், அறவே ஒழிப்பதற்கும் அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கான முயற்சிகளைப்பற்றித்தான் நான் அளித்த பதிலிலேயே விவரங்கள் தந்திருக்கிறேன்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, காலதாமதத்திற்குக் காரணமாக அமைவது, அதிகாரங்கள் மேலிடத்தில் குவிந்தும், கீழ் மட்டத்தில் இருப்பவர்கள் முடிவு எடுக்க முடியாமல் இருப்பதும்தான். ஆகவே, மேல்மட்டத்திலுள்ள அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதன் மூலம் இதைத் துரிதப்படுத்த முடியும். இப்படிச் செய்தால் சிவப்பு நாடா முறையை மாற்றி, பச்சை நாடா முறையைக் கொண்டுவருவதற்கு வழிவகை செய்யும் என்பதை அரசு அறியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, நாடாவின் வர்ணத்தை மாற்றுவதனால் எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்பட்டுவிடப்போவதில்லை. அவர்களின் மனப்போக்கை மாற்ற வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, லஞ்சத்தை ஒழிப்பது என்ற அடிப்படையில், முன்கூட்டியே விவரம் தெரிந்துகொண்டு அந்தப் பணத்தின்மீது குறியிட்டு, பணத்தைக் கொடுத்து லஞ்ச ஊழல் போலீசார் பிடித்துவந்ததை அப்படி பிடிக்கக்கூடாது என்று சர்க்கார் உத்தரவு ஏதேனும் பிறப்பித்ததா ? அப்படியிருந்தால் அதை மாற்றுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அப்படிச் சொல்லப்படுகிற 'ட்ராப்ட் கேஸ்' என்ற வகையில் வந்த 20 வழக்குகள் புலன் விசாரணை செய்யப்பட்டிருக்கின்றன. அப்படிப் பிடிக்கக்கூடாது என்று உத்தரவு போடவில்லை.

**திரு. பெ. சீனிவாசன் :** தலைவர் அவர்களே, லஞ்சப் புகார்களின் மீது நடவடிக்கை எடுக்கிறபோது சம்பந்தப்பட்டவர்களை உடனடியாக சஸ்பெண்ட் செய்கிறார்கள். எந்த பீரியட் வரை சஸ்பெண்ட் என்று வரையறை இல்லை. உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கில் தீர்ப்பில் சொல்லும்

போது, குறிப்பிட்ட காலத்திற்குள் சஸ்பெண்ஷனில் இருக்கும் நபர்களின் வழக்கைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, சஸ்பெண்ஷன் பீரியடை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குக் கொண்டுவர அரசு முயற்சி செய்யுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, வந்துள்ள புகார்களுக்கேற்ப, தகுதிகளுக்கேற்ப சஸ்பெண்ட் செய்யலாம். விசாரிப்பதற்கு உள்ள நபர் அலுவல் தொடர்பு இருக்கக்கூடாது என்ற நிலை இப்போது இருந்து வருகிறது. ஆனாலும் விதிகளையனுசரித்து உடனடியாக நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வதற்கும், விரைவுபடுத்துவதற்குமான தேவையான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அரசு எடுத்துச் சொல்லி வருகிறது.

### *Prohibition of entry of lorries into Kanyakumari district.*

*550 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Inspector-General of Police prohibited the entry of buses and lorries into the district of Kanyakumari on the 5th, 6th, 7th and 8th of January 1969; and

(*b*) if so, reasons therefor?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) & (இ) 1969-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ம் தேதி அன்று நடந்த நாகர்கோவில் பாடாளுமன்றத் தொகுதிக்கான இடைத் தேர்தல் அணுகுந்தறுவாயில் தேர்தல் பிரச்சாரத்திற்காக வெளி மாவட்டங்களினின்று கன்னியாகுமரி மாவட்டத்திற்குள் தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் விதிகளின் 261-வது விதியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள வரம்பிற்கு மேலாக, மக்கள் லாரிகளில் பெருமளவில் வந்துகொண்டிருந்தனர். மோட்டார் வண்டிகள் விதிகளுக்கு முரணான வகையிலிருந்ததால் அந்த லாரிகள் மட்டும் ஓடாமல் தடுக்கப்பட்டன. சரக்குகள் ஏற்றிவந்த லாரிகளோ, பயணிகளை ஏற்றிவந்த பேருந்துகளோ கன்னியாகுமரி மாவட்டத்திற்குள் நுழையக்கூடாதென்று தடுக்கப்படவில்லை. மாநிலக் காவல் துறைத் தலைவரால் தடை உத்தரவு ஏதும் அதற்காக பிறப்பிக்கப்படவில்லை.

**திரு. கே. விநாயகம் :** தலைவர் அவர்களே, அந்தத் தேர்தல் நடந்த நேரத்தில் போய் இருந்த நானே அதைப் பார்த்திருக்கிறேன். தேர்தலைப் பொறுத்தவரையில் 8-ம் தேதி நடப்பதாக இருந்தது. ஆனால் அந்தத் தேர்தல் நடப்பதற்கு ஆறு நாட்களுக்கு முன்பாகவே குறிப்பிட்ட கட்சிக்காரர்கள் வண்டிகள் அதிகமாக வருகின்றன என்கிற காரணத்தினால் தடை செய்தது என்ன நியாயம்? அரசு நடத்துகிற கட்சிக்காரர்கள், காங்கிரஸ்காரர்களின் வண்டிகளும், பஸ்களும் அதிகமாக வருகின்றன என்பதற்காக அவற்றைத் தடுத்தார்கள் என்பது உண்மைதானா ? தேர்தல் நடக்கும் இடத்தில் கூட்டம் அங்கு வராமலிருக்கத் தடுத்திருந்தால் நியாயம். அது பொருத்தமாக இருக்கும். ஆனால் அந்த மாவட்டத்திற்கு வருவது திருநெல்வேலி பார்டரிலேயே நிறுத்தியது நியாயம் என்று அரசு கருதுகிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, 5, 6, 7, 8 ஆகிய நாட்களில் தடுத்து நிறுத்தியது குற்றம் என்றால், அதற்கு முழுப் பொறுப்பாளிகள் நானும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும்தான். ஏனெனில் நானும் அவரும் இரண்டு பேரும் கலந்து பேசித்தான் அப்படி ஒரு முடிவு செய்தோம்.



### திரை அரங்குகளில் புகைப் பிடித்தல்

* 551 வினா—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திரை அரங்குகளில் (Auditorium) 'புகைப்பிடித்தல்' தொடர்பான சட்டத்தை நீக்கிவிடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, திரை அரங்குகளில் புகை பிடித்தல் தொடர்பான சட்டத்தை நீக்குவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. செஞ்சி வெ. முனுசாமி :** தலைவர் அவர்களே, திரை அரங்குகளில் புகை பிடிக்கக்கூடாது என்பதற்கு என்ன காரணம் என்று அறியலாமா ? ரயிலில் பிரயாணம் செய்கிறபோது, உடன் இருக்கும் பயணிகள் ஆட்சேபணை செய்யவில்லையென்றால், புகை பிடிக்கலாம் என்று வேண்டுகோள் விடுத்திருக்கிறதே, அதேபோல் திரைப்பட அரங்குகளிலும் அதை அமலுக்குக் கொண்டுவர ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, புகை பிடிக்கின்ற காரணத்தால் தீ விபத்துக்கள் ஏற்படக்கூடும் என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் திரைப்பட அரங்குகளில் புகை பிடிக்கக்கூடாது என்ற தடை விதிக்கப்பட்டிருக்கிறது. மேலும் பலரும் புகை பிடிக்க ஆரம்பித்தால் சுகாதாரத் தூய்மையும் கெட்டுவிடும். அதை முன்னிட்டுத்தான் சுகாதாரத்திற்கும் ஏற்றவகையில் இவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது. ரயிலில் பிரயாணம் செய்யும்போது, உடனிருக்கும் பயணிகளின் விருப்பு வெறுப்பை அறிந்து புகைபிடிப்பவர் புகை பிடிக்கவேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. உடன் இருப்பவர்களின் விருப்பு வெறுப்பை அறிந்துகொள்வது என்பது திரைப்பட அரங்குகளில் முடியாத காரியம். ரயிலில் செல்வதுபோன்ற குறைவான கூட்டம் திரைப்பட அரங்குகளில் இல்லை.

### மீன்பிடி துறைமுகங்கள்

* 552 வினா—திரு. டி. மார்டின் : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில் தூத்துக்குடியில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பது பற்றி தூத்துக்குடியிலுள்ள தெற்குக் கடற்கரை மீனவர்கள் துறைமுகம் அமையவிருக்கும் இடம் பற்றி வேளாண்மைத் துறை அமைச்சருக்கும், தமிழக அரசுக்கும் 1968-லும் 1969-லும் மனுக்கள் அனுப்பியுள்ளனரா ?

(இ) ஆம் எனில், அவற்றின்மீது தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) & (இ) தூத்துக்குடியில் மீன்பிடி துறைமுகத்திற்கென தெரிந்தெடுக்கப்பட்ட இடம் குறித்து மறுப்பு தெரிவித்து தூத்துக்குடி மீனவர் கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து 1969-ல் ஒரு முறையீடு வரப்பெற்றது. இந்த முறையீட்டை அரசு நன்கு பரிசீலித்து, தற்போது தெரிந்தெடுக்கப்பட்டுள்ள இடத்தில் ஒரு மீன்பிடி துறைமுகத்தைக் கட்டுவதற்கான செயற்குறிப்பு 1963-லேயே தயாரிக்கப்பட்டதென்பதாலும், ஆழ்ந்த கவனத்துடன் பரிசீலனை செய்தபிறகு தூத்துக்குடியில் தற்போது தெரிந்தெடுக்கப்பட்டுள்ள இடத்தில் மீன்பிடி துறைமுகத்தைக் கட்ட இந்திய அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளதென்பதாலும் இந்த மீன்பிடி துறைமுகம் கட்டுவதற்கான இடத்தை மாற்றுவது குறித்து வினா எதும் எழவில்லை என்று அரசு முடிவு செய்துள்ளது. தூத்துக்குடியில் மீன்பிடி துறைமுகம் [illegible]

பணியின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களை, 1969-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1-ம் தேதி அன்று சந்தித்து தூத்துக்குடி மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரிடமும், உறுப்பினர்களிடமும் மேற்சொன்ன நிலை தெரிவிக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் வினா எண் 553-க்கும் விடை அளித்துவிடலாம்.

THIRU K. VINAYAKAM: These are different questions with different answers. You cannot embarrass the Minister by suggesting the clubbing of the questions. She herself refuses to have them clubbed.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுவும் மீன்பிடி துறைமுகம் பற்றியதுதான். அமைச்சர் அவர்கள் பதில் அளித்துவிடுவார்கள்.

* 553 வினா—திரு. கரு. சிமைச்சாமி: மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னை மீன்பிடி துறைமுக திட்டத்துக்கு நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது?

(இ) வேலைத் திட்டத்தின் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) சென்னையில் மீன்பிடி துறைமுகம் ஒன்றைக் கட்டுவதற்கு இந்திய அரசு ரூ. 388·50 லட்சம் தொகைக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

(இ) துறைமுகம் கட்டுதல்:—

1. தொடக்கப்பணி—மண்வள ஆய்வு—மாதிரி சோதனை நேரிட அலுவலகம்.

2. நிலம் கையகப்படுத்துதல்.

3. சிறப்பு இயந்திரங்கள், கருவிகளை வாங்குதல்.

4. 10-20 மட்டக்கோட்டில் அலைத் தடுப்புச் சுவர் கட்டுதல்.

5. 20-30 மட்டக்கோட்டில் அலைத் தடுப்புச் சுவர் கட்டுதல்.

6. இழு படகுக்காக சரக்குத் துறைகளையும் 1,100 அடி நீளம் கொண்ட மீட்புச் சுவர்களையும் கட்டுதல்.

7. இயந்திரப் படகுகளுக்காக ஆழமில்லாத சரக்குத் துறையைக் கட்டுதல்.

8. இழு படகுகள் வந்து தங்குவதற்கான வசதிகளைச் செய்தல்.

9. வடிநிலத்தில் 20 அடிக்கு தூறு எடுத்தல்.

10. நீர்வழிப் போக்குவரத்திற்கான வசதிகளைச் செய்தல்.

கரையோர வசதிகளான சாலைகள், ரயில் பாதைகள், மின்சக்தி, நீர் வழங்குதல் ஆகிய வசதிகளைச் செய்தல்.

இழு படகுகளுக்கான சரக்குப் பாதை பழுது பார்க்கும் வசதிகள் ஆகியவைகளைச் செய்தல்.

கரையோர கட்டிடங்களான, ஏலம் விடும் கூடம், சிப்பங்கட்டும் கூடம், அலுவலகம், சிற்றுண்டிச்சாலை, பண்டகசாலை, ஓய்வுக் கொட்டகைகள், கழிப்பிடங்கள், வேலிகள், வாயில்கள் ஆகியவைகளை அமைத்தல்.

பனிக்கட்டிப் பிரிவு குளிர்ப்பதனப் பிரிவு உறையவைக்கும் பிரிவு, கொள்கலன்களில் அடைக்கும் பிரிவு, மீன் மாவுப் பிரிவு போன்ற சேமிப்புப் பிரிவுகளையும் பதப்படுத்தும் பிரிவுகளையும் ஏற்படுத்தல்,



திரு. டி. மார்டின்: தூத்துக்குடியில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்காக எடுக்கப்பட்ட இடத்தை தொன்றுதொட்டு பலகாலமாக மீனவர்கள் தங்கள் படகுகளை நிறுத்துவதற்குப் பயன்படுத்திவந்த இடமாகும். அந்த இடத்தை எடுத்துக்கொள்வது அவர்களுடைய பிழைப்பை பாதிப்பதாக இருக்கும். ஆகவே தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்திற்குச் சற்றுத் தெற்கே தள்ளியோ அல்லது தூத்துக்குடியின் வடபாகத்திலோ துறைமுகம் அமைக்கவேண்டுமென்று மனுக்கள் அனுப்பியிருந்தார்களே, அப்படி மாற்றுவதற்கான முறை பரிசீலிக்கப்பட்டதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இப்போது தேர்ந்தெடுத்த இடத்தில் இருந்து துறைமுகத்தை மாற்ற எந்தவிதமான ஏற்பாடும் செய்யப்படவில்லை.

சுற்றுலா மாளிகைக்குத் தெற்கில் உள்ள ஐந்து ஏக்கர் நிலத்தை மீனவர்களது படகுகள் வைக்க ஒதுக்குவதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மீனவர் சங்கமும் இதை ஒத்துக்கொண்டிருக்கிறது. இந்தப் புதிய துறைமுகம் கட்டும்போது தூர் வாரப்படுகிற மண்ணைக்கொண்டு அந்த நிலத்தை மேம்படுத்தி அளிக்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

திரு. மு. வேதாசலம்: சென்ற ஆண்டிலேயே கட்ட ஏற்பாடு செய்யப்பட்ட சென்னை ராயபுரம் மீன்பிடித் துறைமுகம் கட்டுவதில் தாமதம் ஏற்படக் காரணம் என்ன? அது எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: 1971—72-ஆம் ஆண்டிற்குள் இது கட்டி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கரு. சிமைச்சாமி: சென்னை மீன்பிடித் துறைமுக வேலைகளைப் பற்றிச் சொன்னார்கள். அது எப்போது ஆரம்பிக்கப்படும்? தேசிய அபிவிருத்திக் கவுன்சில் நான்காவது திட்டத்தில் சேலம் இரும்பாலையைச் சேர்க்கவில்லை என்பதாக நிதி அமைச்சர் அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்களே, அதனால் இந்தத் திட்டம் பாதிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இதை மத்திய அரசாங்கம் ஏற்கெனவே ஒத்துக்கொண்டிருக்கிறது. அதற்கான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டிருக்கிறது. 1970-71-ஆம் ஆண்டிற்குள் எல்லா வேலைகளும் முடிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. ச. சிவசாமி: தற்போது தூத்துக்குடியில் கட்டப்பட்டுக்கொண்டிருக்கிற மீன்பிடி துறைமுகத்தில் இதுவரை நிறுத்தப்பட்டு வந்த கட்டுமரங்களுக்கு வேறு இடம் இல்லை, சுற்றுலா மாளிகைக்குத் தென்பக்கம் ஐந்து ஏக்கரா நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதை ஆழப்படுத்தி, இப்போதே மேடு பண்ணிக்கொடுத்தால்தான் படகுகளை ஒதுக்க முடியும். அதுவரை தொல்லை ஏற்படுவதால் அந்த வேலையை அரசு இந்த ஆண்டே ஆரம்பித்து முடித்துக் கொடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: சுற்றுலா மாளிகைக்குப் பக்கத்தில் இடம் ஒதுக்கப்படுவது படகு உரிமையாளர்களுக்கு என்று சொல்லவில்லை. அங்கே இரண்டு சங்கங்கள் இருக்கின்றன. ஒன்று படகு உரிமையாளர் சங்கம், மற்றொன்று மீனவர் சங்கம். மீனவர் சங்கத்தின் கோரிக்கைகளின்படிதான் அவர்களுக்கு இந்த இடம் ஒதுக்கப்படுகிறது.

படகு உரிமையாளர் உபயோகப்படுத்தி வந்த நிலத்தில் இந்தத் துறைமுகத்திற்கு 1·5 ஏக்கர் நிலமே தேவைப்படுகிறது. அது பற்றி கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களுடனும் சேர்ந்து விவாதித்த பிறகு 670 அடி எடுத்துக்கொள்ளலாம் என்றும், 650 அடியை அவர்களே எடுத்துக்கொள்ளலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. அதற்கு, படகு உரிமையாளர் சங்கமும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

### *House sites for Harijans.*

***554 *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. the Minister** for Agriculture and Harijan Welfare be pleased to state:

(*a*) whether this Government has any proposal to allot house sites for Harijans who can construct houses at the earliest and form a colony;

(*b*) if so, the total area and the places chosen after the advent of the new ministry for allotment;

(*c*) whether the scheme will be open to all Harijans irrespective of their employment positions; and

(*d*) if not, the procedure that will be followed while alloting plots?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:**

(அ) ஆம்.

(இ) தமிழ் நாட்டில் சென்னை மாநகரம், நீலகிரி நீங்கலாக ஏனைய எல்லா மாவட்டங்களிலும் 1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதியிலிருந்து 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரை 29,106 வீட்டு மனைகள் கையகப்படுத்தப்பட்டன.

(உ) இல்லை.

(எ) சொந்தமாக வீட்டுமனைகள் இல்லாத அரிசனங்கள் அனைவருக்கும் வீட்டுமனைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆனால், தாங்களாகவே பணம் கொடுத்து வீட்டுமனைகள் வாங்கக்கூடியவர்களைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு குடும்பத்தலைவரின் பணம் கொடுக்கும் சக்தியை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மதிப்பிட்டு அவர்களிடமிருந்து மனையின் விலையை வசூலிக்கின்றனர்.

DR. H. V. HANDE: Will this Ministry consider the necessity of giving three types of assistance to these Harijans? Firstly, those who want to take sites can be given sites. Secondly, for those who want to have houses built in slum areas where Harijans are predominant, such areas can be earmarked and the houses constructed through the State Housing Board. Thirdly, there are those who want to get houses constructed through the Corporation. How exactly are the Government going to solve the problem of provision of houses to Harijans?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** ஏற்கனவே வீட்டுமனை இல்லாதவர்களுக்கு நஞ்சை, புஞ்சையாக இருந்தாலும் கையகப்படுத்தி அவர்களுக்கு கொடுத்திருக்கிறது. இந்த இடங்களில் வீடுகட்ட முடியாமல் இருப்பவர்களுக்கு தீப்பற்றாத வீடுகளைப்போல ஆயிரம் ரூபாய் வீடு ஒன்றுக்கு எனப் பணம் ஒதுக்கி கட்டித்தர ஏறத்தாழ 5 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சென்னையிலும் சேரிப்பகுதியை அபிவிருத்தி செய்வதற்காக நீண்டகால திட்டமிட்டு 1970-71-க்கு 1 கோடி செலவு செய்து காலனியை அமைத்துக்கொடுக்கும் திட்டம் பற்றி ஏற்கனவே முதல் அமைச்சர் அவர்களும், நிதி அமைச்சர் அவர்களும் இந்த அவைக்குத் தெரிவித்திருக்கிறார்கள்.

இன்னும், வேலையில் இருந்து, ஒரு பகுதி பணம் செலுத்தக்கூடியவர்களுக்கு என்று ஸ்டேட் ஹவுஸிங் போர்டில் 10% ஒதுக்கப்படுகிறது.

தனிப்பட்ட வகையில் நிலம் வைத்துக்கொண்டு வீடு கட்ட விரும்புகிறவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களே உதவி வருகிற திட்டமும் இருந்து வருகிறது.



### *Analysis of fertiliser samples*

***555 *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. the Minister** for Agriculture and Harijan Welfare be pleased to state:—

(*a*) whether the Government have any proposal to establish a laboratory at Madurai Agriculture College to analyse fertiliser samples; and

(*b*) if so, the details there of?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** (அ) & (இ) இது வேளாண்மைத்துறை இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது. இதுகாறும் செயற்குறிப்புகள் எதுவும் அரசுக்கு வரவில்லை.

DR. H. V. HANDE: Sir, in view of the fact that even the Central Government have abolished the system by which mixed fertilisers can be sold and in view of the fact that the Hon. Minister for Agriculture gave an assurance that the matter would be examined—now there are a number of farmers who do not know which type of fertilisers should be used for what type of field and a particular type of fertiliser depends on the quality of the field—and in view of the absence of help from the concerned department of the Agriculture College, what is the method by which the Government propose to help the agriculturists in supplying the fertiliser required for different categories of lands? முற்பகல் 10-00

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** விவசாயிகளுக்கு எந்த மாதிரியான உரம், எந்த அளவுக்குப் போடுவது என்பதைப் பற்றியெல்லாம் விஸ்தரிப்புப் பணியாளர்கள் அங்கங்கே சென்று அவர்கள் மத்தியிலே விளக்கவுரைகள், பிரச்சாரங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். உரங்களைப் பகுப்பாய்வு செய்து கலப்படம் இருக்கிறதா என்பதைக் கண்டறிந்து குவாலிடி கண்ட்ரோல், தரக்கட்டுப்பாடு செய்கின்ற வகையிலே அரசாங்கம் இந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிறது. அதற்காகக் கோவையிலே உள்ள வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் ஓர் உதவி வேளாண்மை ரசாயன வல்லுநர், ஐந்து பகுப்பாய்வு உதவியாளர்கள், ஒரு சிற்றெழுத்தர், ஒரு கடைநிலைப் பணியாளர் ஆகியோரையும் வட்டார உர ஆய்வாளர்கள், மாவட்ட வேளாண்மைத் துணை அதிகாரிகள், நிலப்பரப்பு அதிகாரிகள் இவர்களைத் தவிர பல்வேறு இடங்களிலிருந்தும் மாதிரி உரங்களை வாங்கி கோயம்புத்தூர் ஆய்வுக்கூடத்திற்கு அனுப்புகின்றனர். பகுப்பாய்வு செய்து தவறு இருந்தால் சரியாக்கவும், சரியாக இருந்தால் நற்சாட்சி கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதேபோன்று மதுரையிலும் உள்ள வேளாண்மைக் கல்லூரியிலே இந்தப் பணியாளர்களை நியமித்து பகுப்பாய்வு செய்வதற்கும் நல்ல உரங்களைக் கொடுப்பதற்கும் அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

### வேர்க்கடலை உற்பத்தி

*556 வினா.—திரு. பெ. மலைச்சாமி: மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) வேர்க்கடலையின் உற்பத்தி, அமைப்புக் கூறுகளை ஆய்வு செய்வதற்கு கோவையில் ஆய்வு நிலையம் ஒன்று அமைக்கப்பெற்றுள்ளதா?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து**: (அ) ஆம்.

(இ) கொத்து வேர்க்கடலை கொடி வேர்க்கடலை ஆகியவற்றின் விளைச்சலை மதிப்பிடுவதற்குத் தகுந்த தேர்வு அட்டவணையொன்றைத் தயாரிப்பதற்காக கோவை வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தி லுள்ள எண்ணெய் வித்துக்கள் பிரிவில் விரிவான ஆய்வுகள் செய்யப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. நடைமுறைக் கேள்வி

**பார்வர்டு பிளாக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் காங்கிரஸின் ஒரு கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் அவையில் இல்லாதது குறித்து.**

**திரு. என். எஸ். வி. சித்தன்** : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், இந்த மன்றத்திலே எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இருக்கிறோம். ஆனால் சமீபத்திலே சுதந்தராக் கட்சியிலிருந்து பிரிந்த பார்வர்ட் பிளாக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் காங்கிரஸின் ஒரு கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் இங்கே இல்லையே, அவர்கள் புதிதாக ஒரு கூட்டணி சேர்ந்திருக்கிறார்களா? அல்லது சபையை பகிஷ்காரம் செய்கிறார்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை, இது பாயிண்ட் ஆப் ஆர்டரா? எதை வேண்டுமானாலும் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்து பேசக்கூடாது.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

**(அ). சென்னை துறைமுகத் தொழிலாளர்கள் மீது போலீஸ் தடியடிப் பிரயோகமும் அதையொட்டி தொழிலாளர் வேலை நிறுத்தமும்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : சட்டப் பேரவை விதி 42-ன் கீழ் திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். அதில்—

"சென்னைத் துறைமுகத் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்ததை ஆட்சேபித்துத் துறைமுக அலுவலக வாசலில் அமர்ந்து தங்களின் கோரிக்கைகளை வலியுறுத்திக்கொண்டிருந்த தொழிலாளர்கள் மீது 1970-ம் ஆண்டு மார்ச் மாதம் 23-ம் தேதி போலீசார் தடியடிப் பிரயோகம் செய்ததையொட்டி தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருவதால், ஏற்றுமதி இறக்குமதி பாதிக்கப்பட்டு ஒரு நெருக்கடியான நிலை ஏற்பட்டுள்ளதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று" கொடுத்திருக்கிறார்கள்.

இது அரசினுடைய அன்றாட நிர்வாகத்திற்குட்பட்ட காரணத்தினால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.



**(ஆ) நில உச்சவரம்புக் குறைப்பை எதிர்த்து நிலவுடைமையாளர்கள் நடவடிக்கைகள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. எ. அ. சுப்பராஜா அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதில்—

"தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள திருவாரூரில் நில உடமையாளர்கள் கூடி, நில உச்சவரம்புக் குறைப்பை சட்டமாகக் கொண்டு வருவதற்கு முன்பு, அவர்களைக் கலந்துகொள்ளாத காரணத்தைச் சுட்டிக்காட்டி, இனி அவர்கள் நிலவரி கொடுப்பதில்லையெனவும், குறுவைப் பயிரிடுவதை நிறுத்தி விடுவதெனவும் முடிவு செய்ததினால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலையும் அதனால் மக்களுக்கு ஏற்படும் பின் விளைவுகளையும் பற்றி விவாதிக்க என்றும் அதை விவாதிப்பதற்காக சபையின் நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டுமென்றும் கொடுத்து இருக்கிறார்கள்.

இதுவும் அரசின் அன்றாட நிர்வாகத்திற்குட்பட்ட காரணத்தினாலே அனுமதி தர மறுக்கிறேன்.

**(இ) ஆரணியாறு ரிசர்வாயரின் நீர்ப்பங்கீடு குறித்து தமிழ்நாடு—ஆந்திர மாநிலங்களிடையே எழுந்துள்ள கருத்து வேறுபாடு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** :

'The dispute that has arisen between Tamil Nadu and Andhra Pradesh regarding the sharing of irrigation water from Araniyar Reservoir consequent to the implementation of the Pataskar Award' என்று திரு. டி. மார்டின் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

இதுவும் அரசினுடைய அன்றாட நிர்வாகத்திற்குட்பட்ட காரணத்தினால் இதற்கும் அனுமதிதர மறுக்கிறேன்.

## 4. அமைச்சரின் விளக்க உரை.

**தமிழ்நாடு பரிசுச் சீட்டின் புத்தாண்டு சிறப்புப் பரிசுகள் குறித்து**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: சட்டப்பேரவை விதி 82-ன் கீழ் இப்பேரவைக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்**: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டத்தின் 19-வது குலுக்கல் 1970 எப்ரல் திங்களில் நடத்தப்படும். குலுக்கல் தேதி 30-4-70 வியாழக்கிழமை, எப்ரல் மாதம் தமிழ்ப் புத்தாண்டு நாளோடு இணைந்த மாதம். எனவே இந்தக் குலுக்கலில் சில ஈடு இணையற்ற சிறப்புப் பரிசுகளைத் தர அரசு முடிவு செய்துள்ளது. இந்தச் சிறப்புப் பரிசுகள் ஏற்கனவே ஒவ்வொரு தொடருக்கும் உள்ள ரூ. 3,50,000 பரிசுகள் தவிர கூடுதலாகத் தரப்படும் பரிசுகளாகும். இந்தக் குலுக்கலில் 10 தொடர்களை (EL முதல் EU வரை) வெளியிட அரசு முடிவு செய்துள்ளது. தொடருக்கு ரூ. 3,50,000 வீதத்தில், அந்த 10 தொடர்களுக்கும் வழக்கமான ரூ. 35,00,000 பரிசுகள் உண்டு. அத்துடன் இந்த 10 தொடர்களுக்கும் பொதுவாக ரூ. 25,00,000 மதிப்பில் கீழ்க்கண்ட 7 சிறப்புப் பரிசுகள் இருக்கும்.

| | | ரூ. |
|---|---|---|
| ஒரு முதல் சிறப்புப் பரிசு | .. .. | 10,00,000 |
| ஒரு இரண்டாவது சிறப்புப் பரிசு | .. .. | 5,00,000 |
| ஐந்து மூன்றாவது சிறப்புப் பரிசுகள் | .. | 10,00,000 |
| ஒவ்வொன்றும் ரூ. 2,00,000 வீதத்தில் | | |
| ஆக 7 சிறப்புப் பரிசுகள் | .. | 25,00,000 |

ஆக மொத்தத்தில் இந்த குலுக்கலில் ரூ. 60,00,000 பரிசுத் தொகையாக வழங்கப்படும். ஏஜெண்டுகள், வழக்கமான பரிசுகளுக்குப் பெறும் 10 சதவீதம் போனசுடன், இந்த சிறப்புப் பரிசுகளுக்கு 5 சதவீதம் போனஸ் பெறத் தகுதியுள்ளவர்களாவர். மேற்கூறப்பட்ட சிறப்புப் பரிசுகளைக் கவனத்தில் கொண்டு, அரசு பரிசுச் சீட்டின் விலையினை ரூ. 2 என்று நிர்ணயித்து உள்ளது.

1970 மார்ச் 27-ந் தேதி எல்லா உப கருவூலங்களுக்கும் ஒரே நேரத்தில் கிடைக்கும்படியும், அதன்பின் பொது மக்களுக்கு விற்பனை செய்ய வசதியாகவும் பரிசுச் சீட்டுக்களை விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே இந்த மன்றத்தில் அறிவிக்கப்பட்டபடி, புத்தாண்டு சிறப்புப் பரிசுகள் மூலம் கிடைக்கும் தொகை "தமிழ்நாடு சிறப்பு நல நிதி" யில் சேர்க்கப்பட்டு, மருத்துவ வசதிகள் அளிக்கவும் விரிவுபடுத்தவும், தொடக்கப்பள்ளி கட்டடங்கள் கட்டவும், குடிசைப் பகுதிகளை மாற்றி அமைக்கவும், மற்றும் அரசினால் ஒப்புதலளிக்கப்படும் பிற வளர்ச்சித் திட்டங்களுக்கும் பயன்படுத்தப்படுமென்பதை இம்மன்றத்தின் நினைவுக்குக் கொண்டு வருகிறேன். பல புதிய பரிசுகளைப் பெறக்கூடிய வாய்ப்பு மக்களுக்கு அளிக்கும் இப்பரிசுச் சீட்டுத் திட்டம் ஆக்கப் பணிகளுக்கு அதிக வசதிகளைப் பெருக்கித் தருகிறது என்பது இப்புதிய ஏற்பாட்டில் நன்கு தெளிவாகிறது. ஆகவே எல்லா மக்களாலும் இந்த மன்றத்தாலும் இத்திட்டம் வரவேற்கப்படும் என நம்புகிறேன்.

## 2. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு பரிசுச் சீட்டின் புத்தாண்டு சிறப்புப் பரிசுகள் குறித்த அறிக்கை, பத்திரிக்கைகளில் வந்த பிறகு அவைக்கு அறிவிக்கப்படுதல்

**திரு. கே. விநாயகம்:** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயிண்ட் ஆப் ஆர்டர் ஆர் கிளாரிபிகேஷன்?

**திரு. கே. விநாயகம்:** பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். நம்முடைய அமைச்சர் அவர்கள் சிறப்புத் திட்டங்களைப் படித்தார்கள். அவை கூடிக் கொண்டிருக்கிறது, ஒன்றரை மாதமாகக் கூடியிருக்கிறோம். இந்தச் சிறப்புத் திட்டங்கள் பற்றிய விபரம் பத்திரிகையிலே வெளி வந்திருக்கிறது. அவை கூடியிருக்கும் பொழுது இப்படிப்பட்ட சிறப்புத் திட்டங்களைக் கொண்டுவரப் போகிறோம் என்று முதலிலே பத்திரிகையிலே கொடுத்துவிட்டு இங்கு வந்து டீடெய்ல்ஸ் கொடுப்பது இந்தச் சபையை அவமானப்படுத்துவது ஆகாதா? பத்திரிகையிலே புதிய அம்சங்கள் எல்லாம் வரப்போகின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். இங்கு வந்து டீடெய்ல்ஸ் சொல்லியிருக்கிறார்கள். பத்திரிகையிலே சிறப்பு அம்சங்கள் வரப்போகிறது என்று அறிக்கை கொடுத்ததைப் படித்தேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** சிறப்பு அம்சங்கள் இருக்கும் என்பதைப் பற்றிப் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது, என்றுதான் சொல்லப்பட்டு வந்திருக்கிறது. அதிலே முடிவு எடுத்த உடனே இந்த மன்றத்திற்குச் சொல்ல வேண்டுமென்ற முறையிலேதான் இப்போது அந்த விவரங்களைச் சொன்னேன். இல்லாவிட்டால் நாங்களும் பத்திரிகையிலே வந்த பிறகு பார்த்துக்கொள்ளும் நிலைதான் இருக்கும். இதற்கு முன்னால் சொல்லப்பட்ட விஷயம் சிறப்புப் பரிசுகள் கொடுப்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்பதுதான். அதிலே முடிவு எடுத்த சில விநாடிகளுக்குள்ளாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டுவிட்டது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் விநாயகம் எழுப்பியது பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல; பாயிண்ட் ஆப் பிரிவிலேஜ்.

(THIRU K. VINAYAKAM : I will table it tomorrow.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்லுவதற்குள்ளாக நீங்கள் எழுந்து விடுகின்றீர்களே. பாயிண்ட் ஆப் பிரிவிலேஜ் என்று சொல்லும்போது என்றைக்குப் பத்திரிகையில் நீங்கள் பார்க்கிறீர்களோ அன்றைக்கே இந்த அவை முன் பிரிவிலேஜ் கொண்டுவந்திருக்க வேண்டும். அமைச்சரவர்கள் இந்த அவையிலே ஒரு அறிக்கை அளித்த பிறகு பத்திரிகையிலே முன்னரே வந்திருப்பதாகக் கூறுவது சரியான முறை அல்ல. செய்திப் பத்திரிகையில் பார்த்த உடனேயே அது உரிமை மீறியது என்றால் இந்த அவை முன் கொண்டு வந்திருக்க வேண்டுமென்பது தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது.

**திரு. நா. வீராசாமி :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். நான்கு தினங்களுக்கு முன்பு எஸ். எஸ். பி. கட்சியைச் சேர்ந்த நல்லசிவம் அவர்கள் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறாத ஒன்றைக் கூறியதாக இந்த மன்றத்திலே கூறி இந்த அரசாங்கத்திற்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் களங்கத்தை உண்டாக்கும் வகையில் நோக்கம் கற்பித்துப் பேசினார்கள். முதலமைச்சர் அவர்கள் கூறாத ஒன்றைக் கூறியதாகத் திரித்துக் கூறியிருப்பதால், அது உரிமை மீறிய செயலாகும் என்றும் அது குறித்து தாங்கள் தீர்ப்புக் கூறுவதாகவும் சொன்னீர்கள். நான்கு நாட்களாகியும் தீர்ப்புக் கூறவில்லை. அது பற்றி உங்கள் தீர்ப்பு என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதிலே தீர்ப்புக் கூறுகிறேன் என்று சொன்னேன். இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவையில் இல்லை. அவருடைய விளக்கத்தைக் கேட்டுவிட்டு அதன் பிறகு என்ன செய்வது என்று முடிவு எடுக்கலாம் என்று கருதியிருந்தேன். அதன்பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அவைக்கே வரவில்லை. வராமலே இருந்துவிட்டால் என்ன செய்யலாம் என்பதைப் பற்றிப் பிறகு யோசித்து முடிவு செய்யலாம் என்று கூறிக் கொள்ளுகிறேன்.

* **THIRU T. MARTIN :** Just now the Hon. Speaker said that he was thinking of what to do in case the particular Member was not at all to be found in his seat. In such cases a procedure adopted in the House of Commons by the Hon. Speaker is giving notice to that Member to come to the House and offer his explanation for the notice which the Hon. Speaker proposes to give to the member in the Houses of Commons. Likewise may I request the Hon. Speaker to state whether any such notice has been sent to that particular Member so far?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மார்டின் அவர்கள் இதிலே பாயிண்ட் ஆப் ஆர்டர் இருக்கிறதா என்பதைத் தெரிந்துக் கொள்ள வேண்டும். இதை யோசனையாகக் கூறலாம். சம்பந்தப்பட்ட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அவையிலே இல்லை. அவருக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்து என்ன சொல்லுகிறார் என்று கேட்டு அதன் பிறகு தீர்ப்புக் கொடுக்கலாம் என்று கருதியிருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அவைக்கே வராமல் இருந்துவிட்டால், அதற்குப் பிறகு என்ன செய்யலாம் என்பதையும் யோசித்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறி இருக்கிறேன். அவ்வாறு கூறிய பிறகு அதிலே எங்கே பாயிண்ட் ஆப் ஆர்டர் இருக்கிறது?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஏதாவது நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறதா? கொடுக்கப்பட்டிருந்தால், இந்த அவைக்குத் தெரிவிக்கலாமே. எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த மார்டின் அவர்கள் எழுப்பிய பிரச்சினை பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல என்பதை மட்டும் தெரிந்து கொள்ளவேண்டும். அந்த உறுப்பினர் தொடர்ந்து வராமல் இருந்தால் என்ன செய்யலாம் என்பதைப் பற்றியும் யோசிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். நோட்டீஸ் கொடுக்கவில்லையா என்று கேட்டால், நான் சொன்ன பதிலிலேயே நோட்டீஸ் கொடுக்கப்படவில்லை என்பது தொனிக்கிறது. கம்பன் பாட்டில் இதிலிருந்து இது தொனிக்கிறது என்று சொல்லக்கூடிய கோவைக் கம்பன அவர்களுக்கு நான் சொன்ன பதிலில் இருந்து 'நோட்டீஸ் கொடுக்கவில்லை' என்பது தொனிக்கிறது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** 'தொனிக்கிறது' என்பது எந்த விதியில் இருக்கிறது என்று அறியலாமா? இப்படி இருந்தால் இது தொனிக்கும், இப்படி இருந்தால் இது தொனிக்காது என்ற விதிமுறைகள் இருக்கின்றனவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது படிக்கின்றவர்களுடைய அறிவையொட்டித் தெரிந்து கொள்ளவேண்டிய ஒன்று. அதற்குத் தனியாக விதியைக் கொடுக்க முடியாது.

## 5. கவன ஈர்ப்பு

### மாம்பலம் தக்கர் பாபா வித்யாலயா இலவச உணவு விடுதி மூடப்பட்டதும் மாணவர்கள் பாதிக்கப்பட்டதும்

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, மாம்பலத்திலுள்ள தக்கர் பாபா வித்தியாலயா இலவச உணவு விடுதியைத் திடீரென்று 21–2–70-ம் தேதி மூடியதால், அவ்விடுதியில் சாப்பிட்டு படித்துவரும் சுமார், 100 அரிசன மாணவர்கள் பட்டினி கிடந்து படிக்க முடியாத நிலைபற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு வேளாண்மை, அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** தலைவர் அவர்களே, தக்கர் பாபா வித்தியாலயம் அரிசன சேவை சங்கத்தினால் நடத்தப்படும் ஒரு நிறுவனமாகும். தச்சுத் தொழில், பட்டறை, கடைசல் இயந்திரம், மோட்டார் செப்பனிடு பணி ஆகியவற்றில் இந்த வித்தியாலயம் அரிசன மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கின்றது. இந்த நிறுவனத்துடன் மாணவர் விடுதி ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்திற்கு அரசின் அரிசன நலத்துறையால் மொத்தமாக உணவு மானியம் வழங்கப்படுகிறது. தற்போது இந்த மாணவர் விடுதியில் பின்தங்கிய வகுப்புமாணவர் உட்பட 78 மாணவர்கள் தங்கியுள்ளனர். இவ் விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்கள் தங்களுக்கு அதிக உணவு அளிக்கப்பட வேண்டுமென்றும் மாலை நேரங்களில் தாங்கள் விருப்பம் போல் வெளியில் சென்றுவர அனுமதிக்கப்பட வேண்டும் என்றும், சில காலமாக அவ்விடுதி காப்பாளரை வற்புறுத்திவந்தனர். 21-2-70 அன்று அவர்கள் வித்தியாலயத்தின் பொறுப்பு வகிக்கும் உதவிச் செயலாளருக்கு இது குறித்து முறையிட்டனர். உதவிச் செயலாளர் இது குறித்து கவனிப்பதாகக் வாக்களித்தார். 23–2–1970 அன்று இரவு அங்குள்ள மாணவர்கள் விடுதிக் காப்பாளரையும், அவரது உதவியாளரையும் தாக்க முயன்றதாகத் தெரிகிறது. நிகழ்ச்சி நடந்த இடத்திற்கு,



பின்னர் வந்து சேர்ந்த உதவிச் செயலாளர் காவற்படையின் துணையை நாடினர். காவல் படையினர் மாணவர்களுக்கு எச்சரிக்கை விடுத்து தங்கள் குறைகளை நிர்வாகக் குழுவுடன் பேச்சு வார்த்தைகள் நடத்துவதன் மூலம் தீர்த்துக்கொள்ளுமாறு அறிவுரை வழங்கினர். மாணவர்களிடையே கொந்தளிப்பு ஏற்பட்டிருந்ததின் காரணமாக அந்நாளன்று அந்த நிறுவனம் மூடப்பட்டதாகச் செயலாளர் அறிவித்தார். நிர்வாகக் குழுவின் இசைவுடன் உதவிச் செயலாளர் 5 மாணவர்களை விடுதியினின்றும் வெளியேற்றினார்.

தற்போது 58 மாணவர்கள் திரும்பச் சேர்ந்து விட்டார்கள். மீதி 15 மாணவர்களும் கூடிய சீக்கிரம் சேர்ந்து விடுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாலை நேரத்திலே வெளியே சென்று வரவேண்டுமென்பதற்காக அனுமதி கோரி மறுத்ததன் காரணமாக அங்கே தகராறு ஏற்பட்டது என்பது உண்மையான காரணம் அல்ல. சர்க்காருடைய மானியத் தொகையைப் பெற்றுக் கொண்டு 200 கிராம் உணவு அளித்து வந்தவர்கள் அதை 150 ஆக ஆக்கி, பிறகு 120 ஆகக் குறைத்த நேரத்திலேதான், பசியும் பட்டினியுமாகக் கிடந்த அவர்கள் கூட்டம் கூட்டிச் சொல்லியும் செவி சாய்க்காத காரணத்தால் கிளர்ச்சி ஏற்படக்கூடிய அளவுக்கு நிலைமை ஏற்பட்டது. மாணவர்களிடத்திலே மீண்டும் விசாரணை செய்து நீதி வழங்கப்படுமா? அதுமட்டுமல்லாமல் யாரையும் பழி வாங்காத அளவுக்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இந்த மாணவர்கள் என்னையும் வந்து சந்தித்தார்கள். அரிசன நலத் துறை இயக்குநரும் மாவட்ட அதிகாரிகளும் சென்று விசாரணை செய்யுமாறு பணித்தேன். அவர்களும் விசாரித்து வந்தார்கள். உறுப்பினர்கள் அவர்கள் கூறியது போல் 150, 120 கிராம் என்ற அளவுக்குக் குறைக்கவில்லை. சாதாரணமாக, சென்னையில் ரேஷன் அளவு குறைக்கப்பட்டிருக்கிறது. 1,400 கிலோ கிராமாக இருந்தது, ஆயிரமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு அந்த மாணவர்களுக்கும் உணவு அளவு குறைக்கப்பட்டிருக்கிறதே தவிர, மானியத்தைப் பெற்றுக் கொண்டு வேண்டுமென்றே குறைத்துப் போடுவதாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்று எடுத்துச் சொன்னதை அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். விவரம் தெரியாமல் புரட்சியில் ஈடுபட்டார்கள். விவரம் கூறிய பிறகு ஏற்றுக் கொண்டார்கள். இப்போது நிலைமை சரியாக இருக்கிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ரேஷன் அளவு குறைக்கப்பட்டுவிட்ட காரணத்தாலே, அவர்களுக்கு முழு வயிறு சாப்பாடு போட்டு வந்ததை அரை வயிறு ஆக்கிவிட்டால் உண்மையில் அவர்கள் படிக்க முடியுமா? வேலை செய்ய முடியுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதிலே இரண்டொரு விளக்கங்கள் பெறலாமே தவிர, குற்றம் சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஆகவே அந்தக் காரணம் சரியான காரணம் அல்ல என்பதைச் சொல்லிக் கொள்வதோடு மீண்டும் அதை நல்ல முறையில் பரிசீலனை செய்து பழிவாங்காத தன்மையில் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** யாரையும் அரசாங்கம் பழி வாங்காது, யாரும் யாரையும் பழி வாங்கவும் இந்த அரசு பார்த்து கொண்டிருக்காது. நிச்சயமாக யாரும் பழி வாங்கப்பட மாட்டார்கள். முதலிலேயே நான் கூறியதுபோல் உணவு அளவில் எல்லோருக்குமே குறைக்கப்பட்டிருக்கிறது. அந்த விளக்கத்தை விடுதியை நடத்துகிறவர்கள்

மாணவர்களின் மத்தியில் சொல்லியிருந்தால் அவர்கள் ஏற்றுக்கொண் டிருப்பார்கள். அதைச் சொல்லியிருக்கிறார்களோ என்னவோ அதைப் பற்றி தகவல் இல்லை. குறைவு ஏற்பட்டிருக்கிறது. அதற்குண்டான காரணங்களை விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அரைப்பட்டினி அல்லது வயிற்றுக்கு போதுமான அளவிற்கு சோறு போடமுடியாத நிலையிலுள்ள விடுதிகளை, அந்த நிலையை அரசு ஏற்றுக்கொள்ளாது. குறை பாடுகள் இருந்தால் அந்த விடுதிகளை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்கிற எண்ணத்தில் ஏறத்தாழ 20 விடுதிகளை, தனியார் நடத்துகிற விடுதிகளை எல்லாம் அரசு எடுத்துக்கொள்ளவேண்டுமென்ற முடிவு எடுத்து அப்படி எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபட் டிருக்கிறோம். அரசாங்க மானியம் பெற்றும் ஹரிஜன, பின் தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு குறைவாகப் போடப்பட்டிருக்கிறது என்பதை அரசாங்கம் நிச்சயமாக பார்த்துக் கொண்டிருக்காது.

## 6. அறிக்கைகள் அளித்தல்

(அ) 1966–67-ம் ஆண்டுக்கான தமிழ்நாடு கணக்குகளின் மீதான பொதுக்கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

THIRU P. G. KARUTHIRUMAN : Sir, I rise to present the report of the Public Accounts Committee on the accounts of the State of Tamil Nadu for 1966–67. I place it on the table of the House.

(ஆ) அரசினர் உறுதிமொழிக் குழுவின் அறிக்கை.

THIRU K. VINAYAKAM : Sir, I have the honour to present the Fifth Report of the Committee on Government Assurances for the year 1969–70.

## 7. 1970-71-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி

### நிதிக்கோரிக்கை எண் 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழி கிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் என்ற தலைப்பின்கீழ் ரூ. 81,49,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

DR. H. V. HANDE : To discuss the ways and means to enable the labourers to take part in the management, I move the following cut motion :—

"That the allotment of Rs. 81,49,800 under Demand No. 24—Labour including Factories be reduced by Rs. 100".

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளில் தற்காலிகப் பணியாளர்களாக ஒரு வருடம் வேலை பார்த்தவுடன் நிரந்தரப் பணியாளர்களாக்கப்பட வேண்டுமென்று விவாதிக்க "நிதிக் கோரிக்கை எண் 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 81,49,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.





திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, சர்க்கார் (கார்ப்ப ரேஷன்) எடுத்துக் கொண்ட ஆலைகளில் உள்ள தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நலச் சட்டத்தில் உள்ள உரிமைகள் கிடைக்க வழி செய்யக் கோரி விவாதிக்க.—

"நிதிக் கோரிக்கை எண் 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 81,49,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழி கிறேன்.

திரு. சி. கோவிந்தராஜன் : தலைவர் அவர்களே, ஈ. எஸ். ஐ. திட்டம் இல்லாத அரசு சிறு தொழில் கார்ப்பரேஷனிலுள்ள தொழிலாளர் களுக்கு வைத்திய வசதியும், மருத்துவ விடுப்பும் கொடுக்க வேண்டியது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 81,49,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி அரசாங்க ரப்பர் தோட்டத் தொழிலாளர்களின் கூலி உயர்வு முதலான பல்வேறு கோரிக்கைகளை அரசு தீர்க்காதது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 81,49,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வருகின்றன.

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, தொழிற் சாலைகள் உட்பட தொழிலாளர் என்ற இந்த மானியக் கோரிக்கையின் மேல் உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னால் இந்த அவையில் உறுப்பினர்களுக்கு என்னுடைய உரை* அச் சடித்துத் தரப்பட்டிருக்கிறது. அதே மாதிரி தொழிலாளர்கள் நிலை பற்றிய விளக்க ஆய்வுரையும்† தரப்பட்டிருக்கிறது. உறுப்பினர்கள் அருள் கூர்ந்து அவற்றை முழுவதும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மாமன்றத்திற்குப் பூரிப்பான செய்தி ஒன்றை முதலில் தெரி வித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த ஆண்டு வரலாற்றில் இல்லாத அளவிற்கு நல்ல சிறப்பான தொழில் அமைதி இந்த நாட்டில் காணப்படுகிறது. மற்ற ஆண்டுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த ஆண்டு கதவடைப்புகள், வேலை நிறுத்தங்கள் மிகமிகக் குறைவாக இருக்கின்றன என்பது மட்டுமின்றி வேலை இழப்பு நாட்கள் மிக மிகக் குறைவாக இருப்பதையும் உறுப்பினர்கள் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வர் என்று நினைக்கிறேன். இத்துடன் பல்வேறு விவரங்களையும் இந்த அரசு புதிதாக மேற்கொண்டிருக்கிற காரியங்களைப் பற்றியும் இந்த விளக்க உரையில் விவரமாகத் தரப்பட்டிருக்கிறது. உறுப்பினர் கள் அவற்றைக் கவனித்து ஆக்க பூர்வமான மேலான ஆலோசனை களைத் தரவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். குறைபாடு களைச் சொல்லத்தான் வேண்டும். ஆனால் அவற்றைச் சொல்லும்போது "கான்க்ரீட் க்ரிட்டிஸிஸம்", என்று சொல்கிற அளவிற்கு நல்ல திறனாய்வு முறையில் பேச்சுக்கள் அமைய வேண்டுமென்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல பல ஆலோசனைகளைத் தரவேண்டுமென்றும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

---

*79–86-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

†86–149-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. கா. வேழவேந்தன்] [1970 மார்ச் 26

இந்த ஆண்டு புதிதாக இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு "கேர்" நிறுவனத்தின் உதவியோடு ஒரு கோடி ரூபாய் பெறுமானமுள்ள உணவுப் பொருள்களை தொழிலாளர் குடும்பத்தைச் சேர்ந்த இளம் சிறுர்க்கும், மகளிருக்கும் புரதச் சத்து நிறைந்த உணவை மதிய உணவாகக் கொடுப்பதற்கு, வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது.

தொழில் தகராறுகளை விரைவில் முடிக்கவேண்டுமென்ற எண்ணத்தில் மாவட்டத்திற்கு ஒரு தொழிலாளர் சமரச அதிகாரி என்று கன்வலியேஷன் ஆபீசர்கள், லேபர் ஆபீசர்கள் நியமிப்பதுபற்றிய தொழில் கொள்கையை இங்கு தெரிவித்திருக்கிறேன்.

மூடப்பட்ட மில்கள் திறக்கப்படுகின்றன. இது பற்றியெல்லாம் ஆலோசித்து உறுப்பினர்கள் தங்கள் மேலான ஆலோசனைகளை, ஆக்கபூர்வமான ஆலோசனைகளைத்தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். பின்னால் நான் எனது கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறி விவாதத்தைத் தொடங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. சி. நஞ்சன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் தொழிலாளர்கள் மானியக் கோரிக்கையின் மேல் எனக்குப் பேச வாய்ப்பளித்ததற்காக என் நன்றியைச் செலுத்திக் கொண்டு எங்கள் கட்சி சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

இன்று திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் நாங்கள் ஏழைகளின் அரசு, தொழிலாளர்களின் அரசு என்று பல வார்த்தைகளைக் கூறிக்கொண்டு அவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள். ஆனால் ஆட்சிக்கு வந்த பிறகு அவர்கள் தொழிலாளர்களை மறந்து விட்டு இன்று பட்டணத்தில் உள்ள முதலாளிகளுக்கும் மற்றவர்களுக்கும்தான் நன்மை செய்கிறார்களே தவிர தொழிலாளர்களுக்கு எந்தவிதமான நன்மையும் செய்யவில்லை என்பதுதான் என் குற்றச்சாட்டு. ரூ. 300-க்கு குறைந்தவர்களுக்குப் படி அரிசித் திட்டம் என்று இந்த அரசு சொல்லியிருக்கிறது. அதே சமயத்தில் ரேஷன் இல்லாத மற்ற இடங்களில் ஒரு மாதத்திற்கு ஒரு தொழிலாளிக்கு ரூ. 75 தான் வருமானம் வருகிறது. கணவனும் மனைவியும் சேர்ந்து வேலை செய்தால் ரூ. 150 தான் கிடைக்கிறது. அப்பேர்ப்பட்ட தொழிலாளர்களுக்கு இன்றைய தினம் படி அரிசித் திட்டம் இல்லை என்றால் இவர்களுடைய கொள்கை சரி இல்லை என்பதுதான் என் குற்றச்சாட்டு.

அடுத்தபடியாக, இதற்கு முன்பு இருந்த அரசாங்கம் தொழிலாளர்களுக்கு நல்ல சம்பளத்தை வாங்கிக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது அண்டை மாநிலமான கேரளத்தில் இங்குள்ள கூலியைவிட அங்கு குறைவாகத்தான் கொடுத்து வந்தார்கள். ஆனால் கடந்த ஆண்டில் கேரளாவில் தொழிலாளர்களின் சம்பளங்கள் உயர்த்தப்பட்டிருக்கின்றன. இங்கும் நாம் சிறிது சிறிதாக உயர்த்தியிருக்கிறோம். ஆனால் கேரளாவோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது இங்கு தொழிலாளர்களுக்குச் சம்பளம் குறைவாகவே இருக்கிறது. அதற்கு காரணம் என்னவென்று தெரியாது. இதற்கு முன்பு இருந்த அரசாங்கம் அதிகக் கூலி வாங்கிக் கொடுத்தார்கள். இந்த அரசாங்கம் வந்ததற்குப் பிறகு மற்ற மாநிலங்களில் இருப்பதைவிட இங்கு கூலி குறைந்து விட்டது. அமைச்சர் அவர்கள் இதற்குப் பதில் அளிப்பார்கள் என்று நம்புகிறேன். அடுத்தபடியாக, தொழிலாளர்களின் வீட்டுவசதி பற்றி. . .

முற்பகல் 10-30 மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, முதலிலேயே தவறான தகவலோடு ஆரம்பிப்பதால் தலையிட வேண்டியிருக்கிறது மற்ற மாநிலங்களைவிடப் குறைவானக் கூலியாக இருக்கிறது என்றால் இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு குறைந்து விட்டது என்று சொல்லுகிறார்களா? கூலி உயர்வு குறைவாக இருக்கிறது



1970 மார்ச் 26] [திரு. கா. வேழவேந்தன்]

என்றால் இந்த அரசாங்கம் எப்படிப் பொறுப்பாளி என்று உறுப்பினர்கள் சொல்ல வேண்டும். ஏனென்றால் இது பயங்கரமான குற்றச்சாட்டாகயிருக்கிறது.

திரு. சி. நஞ்சன் : தலைவரவர்களே, அண்டை மாநிலமான கேரளாவில் தோட்டத் தொழிலாளிகளுக்கு இன்று கிடைக்கும் கூலி 3 ரூபாய் சில்லரை. அதே சமயத்தில் நமது மாகாணத்தில் இருக்கும் தோட்டத் தொழிலாளிக்கு இன்று கிடைக்கும் கூலி 2 ரூபாய் சில்லரை என்று தான் நான் நம்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : நாங்கள் வந்ததற்குப் பின்னாலே குறைக்கப்பட்டதா? எந்த எஸ்டேட்டில் எந்த பிளாண்டேஷன் தொழிலாளர்களுக்குக் குறைக்கப்பட்டது என்று அறிவித்திருக்கிறார்களா? இந்த அரசாங்கம் வந்ததற்குப் பின்னாலே அப்படி வந்ததாக அறிவிக்கப்பட்டதா?

திரு. சி. நஞ்சன் : தலைவரவர்களே, 1967-க்கு முன்பு கேரள மாகாணத்தில் இருந்த கூலியை விட நமது சென்னை மாகாணத்தில் இருக்கும் தொழிலாளர்கள் அதிகச் சம்பளம், அதிகக் கூலிதான் வாங்கி வந்தார்கள். அதற்குப் பிறகு இந்த மாகாணத்தில் 1968-க்குப் பிறகு என்று நான் கருதுகிறேன. கேரளா மாகாணத்தில் ஒரு வேஜ் போர்டு போட்டு அதன் முடிவுகளின் காரணமாக அங்கிருக்கும் தொழிலாளர்களுக்கு அரசாங்கத்தின் முயற்சியினாலே இன்று அவர்கள் இந்த மாகாணத்தில் கொடுப்பதைவிட அதிகப்படியான கூலியைத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் வாங்கிக்கொண்டு வருகிறார்கள் என்பதுதான் என்னுடைய கருத்து. ஆகவே, அதைப்போல மாற்றி, கேரளா மாகாணத்திலிருக்கும் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான சம்பளம் கிடைக்கிறதோ அதைப்போல இந்த மாகாணத்திலும் கூலி கிடைக்க வழிவகை செய்யவேண்டுமென்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வீட்டு வசதி, இன்று லேபர் ஆக்டின்படி, சில எஸ்டேட்டுகளில் சில நிர்வாகிகள் ஸ்டாண்டிங் ஆர்டர்படி வீட்டு வசதி செய்யவில்லை. பழைய வீடுகளைப் புதுப்பிக்கிறார்கள். அதைச் சரியாகச் செய்யவில்லை. அதையும் இந்த அரசாங்கம் கவனித்து, எங்கெங்கு தவறுகள் இருக்கிறதோ அந்தந்த இடங்களைக் கண்டுபிடித்து, அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து சட்டப்படி வீட்டு வசதி செய்து கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்று தொழிலாளிகளுக்குள்ள முக்கியமான பிரச்சினை, தொழிலாளிகள் ஆறு நாட்கள் வேலை செய்தால் ஒரு நாள் ஓய்வு நாள் என்று அரசாங்கத்தின் விடுமுறை நாள் இருக்கிறது. ஆனால், அன்றைக்குச் சம்பளம் இல்லை. ஆறு நாட்கள் வேலை செய்து விட்டு ஒரு நாள் ஓய்வு எடுக்கும்பொழுது சம்பளத்தோடு ஓய்வு நாள் கொடுக்க வேண்டும். ஏனென்றால், மற்ற அரசாங்க உத்தியோகஸ்தர்களானாலும் சரி, அல்லது அந்தத் தேயிலைத் தோட்டத்திலுள்ள மற்ற உத்தியோகஸ்தர்களானாலும் சரி அவர்களுக்குச் சம்பளத்தோடு ஓய்வு நாள் இருக்கிறது. ஆனால் தொழிலாளிகளுக்கு அப்படி இல்லை. ஆகவே, அரசாங்கம் சம்பளத்தோடு லீவ் கொடுக்க வேண்டுமென்று கட்டளை பிறப்பித்தால் நன்றாகவிருக்கும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, சிலோனிலிருந்து வரும் அகதிகளுக்கு [illegible] நமது அரசாங்கம் செய்திருக்கும் இந்தத் திட்டம் வரவேற்கத்தக்க திட்டம். அதேசமயத்தில் நமது மாகாணத்திலிருக்கும் வேலையில்லாத தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு உண்டாக்கப் பல திட்டங்களைப் போடவேண்டும். தேயிலைத் தோட்டப் பகுதிகளிலேயுள்ள சில தொழிலாளிகளுக்கு இன்று வேலை வாய்ப்பு நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகிறது. அதற்குக் காரணம் பத்து ஆண்டுகளுக்கு முன்பு ஒரு குடும்பத்தில் 5 உறுப்பினர்களாக இருந்தால், பத்தாண்டுகளுக்குப் பிறகு அந்தக் குடும்பத்தில் இன்று

பார்த்தால் 8 பேர், 10 பேர் ஆகிவிடுகிறார்கள். எனவே, அந்தக் குடும்பத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டு வருகிறது. ஆனால், தேயிலைத் தோட்டமோ அல்லது காபித் தோட்டமோ அல்லது ரப்பர் தோட்டமோ அங்கெல்லாம் குறிப்பிட்ட தொழிலாளிகளைத்தான் பதிவு செய்கிறார்கள். மற்றவர்களுக்கு வேலை வாய்ப்பில்லை. அதே சமயத்தில் அங்கே விவசாயம் செய்ய வேண்டுமென்றாலோ அதற்குத் தகுந்த பூமி இல்லை. தோட்டத் தொழிலாளர்களுக்கும் இந்த அரசாங்கம் வேலை வாய்ப்பிற்கு ஏதாவது திட்டம் செய்தாக வேண்டும். சிலோனிலிருந்து வரும் அகதிகளுக்கு, என்னுடைய தொகுதியான கூடலூரில் சேரம்பாடி என்ற இடத்தில் ஒரு தேயிலைத் தோட்டத்தை அமைக்க திட்டம் போட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் மூலம் அந்தப் பகுதியிலுள்ள தொழிலாளிகளுக்கும் மற்றும் வேலையில்லாதவர்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடிய முறையில் தகுந்ததொரு திட்டத்தை உருவாக்கி மற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு உண்டாக்க இந்த அரசாங்கம் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இந்த அரசாங்கத்தின் கொள்கை ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற கொள்கை. ஆனால் இப்பொழுது அதற்கு மாறாக உங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆங்காங்கு போட்டி சங்கத்தை ஆரம்பித்து வருகிறார்கள். அதனால் தொழிலாளிகள் மோசமாகி வருகிறார்களே தவிர, தொழிலாளிகளுக்கு எந்தவிதமான நன்மையும் அந்தச் சங்கம் செய்ய முடியாது என்று நிச்சயமாகக் கூற முடியும். ஏனென்றால், நான் தோட்டப்பகுதியில் இருக்கும் ஒருவன். என்னுடைய அனுபவத்தை வைத்துச் சொல்லுகிறேன். அங்கேயிருக்கும் நீலகிரிப் பகுதியில் போட்டி சங்கம் ஆரம்பித்த பிறகு எவ்வளவு தொழிலாளிகள் டிஸ்மிஸ்ஸாகியிருக்கிறார்கள்? அவர்களுக்கு வேலைவாங்கிக் கொடுப்பதற்கு அந்தச் சங்கத்தின் சார்பில் எந்தவிதமான முயற்சிகளும் எடுக்கப்படவில்லை. இரண்டாண்டுக் காலமாகியும் அவர்களுடைய பிரச்னை என்னவென்று திட்டவட்டமாகச் சொல்லவில்லை. இந்த அரசாங்கம் ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்பதை நிச்சயமாக அறிவிக்க வேண்டும். அதை மீறி அவர்கள் ஏதாவது போட்டிச் சங்கத்தை ஆரம்பித்தால் அதற்குத் தடை செய்ய சட்டத்தில் ஏதாவது வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இன்றையதினம் தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் ஏதாவது தகராறுகள் ஏற்பட்டால் அந்தத் தகராறைத் தீர்ப்பதற்கு முதலாளிகள், மேனேஜ்மெண்டார்தான் விசாரணை செய்கிறார்கள். என்கொயரி செய்யும் தொழிலாளிகளின் பிரதிநிதியாக யாராவது செல்ல வேண்டுமென்றால் அதற்கு அனுமதி கிடையாது. அந்தத் முதலாளியின் நிர்வாகஸ்தர்கள் என்ன தீர்ப்பு கொடுக்கிறார்களோ அந்த தீர்ப்பிற்குத்தான் அந்தத் தொழிலாளி கட்டுப்பட்டாக வேண்டும். அதை மீறிப்பேச யாருக்கும் உரிமை இல்லை. ஏனென்றால் முதலாளியும், மேனேஜ்மெண்டாரும், தொழிலாளியும்தான் விசாரணை செய்கிறார்கள். தொழிலாளர்களுக்காக யாராவது போய் வக்காலத்துப் பேசுவதற்கு அனுமதி கிடைப்பதில்லை. அதே நேரத்தில் தொழிலாளிகள் செய்யக்கூடிய குற்றத்திற்கு எந்தவிதமான விசாரணை செய்யவேண்டுமென்ற முடிவுக்கு வர வேண்டும். தொழிலாளிகள் ஏதாவது தவறு செய்தால் தொழிலாளியும், தொழிலாளியின் பிரதிநிதியும், மேனேஜ்மெண்டாரும், மேனேஜ்மெண்டாரின் பிரதிநிதியும் சேர்ந்து அந்தக் குற்றத்தை விசாரணை செய்யவேண்டுமென்ற திட்டத்தைக் கொண்டு வந்தால் தொழிலாளர்களுக்கு நன்மையேற்படும் என்ற என்னுடைய கருத்தைக் கூறிக்கொள்ளுகின்றேன். ஏனென்றால், என்ன தீர்ப்பு சொல்லுகிறார்களோ அந்தத் தீர்ப்பிற்குக் கட்டுப்பட்டு அதற்குப் பிறகு மேல் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றால் லேபர் ஆபீசருக்கு கன்சிலியேஷன் போட்டு, அதற்கும் மேலாக கோர்ட்டிற்குப் போய், கோர்ட் முடிவுகள் வருவதற்குப் பல நாட்களாகின்றன. எனவே இந்தத் தொழிலாளர்களின் நிலைமை என்னவென்பதை யோசிக்க வேண்டும். சிக்கலான பிரச்னைகளைத் தீர்க்க வேண்டுமென்றால், தொழிலாளிகளின் பிரதிநிதிகளின் முன்னிலையில்தான் தொழிலாளர்களின்



கேஸ்களை விசாரணை செய்யவேண்டுமென்ற திட்டத்தை இந்த அரசாங்கம் கொண்டுவந்தால் அதனால் தொழிலாளர்களுக்கு நன்மையேற்படும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்குப் பல எஸ்டேட்டுகளில் குளிர் கம்பளி சரியான முறையில் விநியோகம் செய்வதில்லை. மழைக் காலத்தில் கிடைக்கும் வகையில், கம்பளியை ஏப்ரல் மாதத்தில் கொடுத்தாக வேண்டும். ஆனால் அவர்கள் ஏதோ சாக்கு சொல்லி, மே, ஜூன் மாதங்கள் வரை தள்ளிக்கொண்டு போகிறார்கள். அதற்குப் பிறகு, அந்த அடைமழை பிடிக்கும் சமயத்தில் அவர்கள் கொடுக்கும் அந்தத் தரமில்லாத கம்பளியைத்தான் வாங்கிக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகையால் இந்த அரசாங்கம் தொழிலாளர்களுக்குக் கொடுக்கவேண்டிய கம்பளியைக் குறிப்பிட்ட மாதத்தில் அதாவது மார்ச் மாதக் கடைசிக்குள் கொடுத்தாக வேண்டும். ஏனென்றால் நீலகிரி பகுதியில் ஏப்ரல் மாதமே மழைக்காலம் ஆரம்பமாகிவிடும். மார்ச் மாதக் கடைசித் தேதிக்குள் இந்தக் கம்பளியைக் கொடுத்தால் நல்ல குவாலிட்டியாக வாங்க முடியும் என்று சொல்லிக்கொள்ளுகின்றேன்.

தொழிலாளர்கள் இருக்கும் என்னுடைய பகுதியில் பஸ் போக்குவரத்து மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. நான் முடிந்த ஆண்டும் இந்த விஷயத்தை இங்கு சொன்னேன். அமைச்சரவர்களுக்கும் நான் பல தடவை மகஜர் அனுப்பியிருக்கிறேன். நேரடியாகவும் அமைச்சரிடத்தில் எடுத்துச்சொன்னேன். ஆனால் இந்த விஷயத்தில் அமைச்சரவர்கள் கவனம் செலுத்தவில்லை என்பதை நான் மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். ஏனென்றால் தோட்டத் தொழிலாளிகள் இருக்கும் அந்தப் பகுதியில் பஸ் போக்குவரத்து இல்லை என்றால் அவர்கள் 6 நாட்கள் வேலை செய்து விட்டு 7-வது நாள் லீவ் எடுத்துக்கொண்டு, சந்தைக்குச் சென்று வேண்டிய சாமான்களை வாங்க வேண்டுமென்றால் 10 மைல், 15 மைல், 20 மைல் தூரம் சென்று சாமான்களை வாங்க வேண்டும். அப்படிப்பட்ட இடங்களில் பஸ் வசதியில்லை என்பது வருந்தத்தக்க விஷயம். அதுவும் யானைகள் உள்ள பகுதி. தொழிலாளிகள் நடந்து போகும் சமயத்தில் காட்டு மிருகங்களால் ஏற்படும் பயம் வேறு. எனவே, தொழிலாளர்கள் இருக்கும் அந்தப் பகுதிக்குப் பஸ் வசதி செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி செலுத்திக்கொண்டு முடித்துக்கொள்ளுகின்றேன், வணக்கம்.

*திரு. பெ. சீனிவாசன்: மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் அவர்களே, தொழிற்சாலை உள்பட தொழிலாளர் மானியக் கோரிக்கையில் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற சில அருமையான யோசனைகளுக்காக நான் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். உலகத் தொழிலாளர்கள் எல்லாம் அவர்களுடைய தேசியத் தினமாகக் கொண்டாடுகின்ற 'மே' தினத்தை விடுமுறையாக விடவேண்டும் என்று அரசாங்கம் எடுத்திருக்கின்ற முடிவை நிச்சயம் தமிழ் நாட்டில் இருக்கிற அத்தனை தொழிலாளர்களும் பாராட்டுவார்கள். 1968-ம் ஆண்டில் நடந்ததை விட குறைவான வேலை நிறுத்தங்கள், குறைவான விவகாரங்கள் தான் இந்த ஆண்டு ஏற்பட்டன என்று அமைச்சர் அவர்கள் கணக்கு காட்டி இருக்கிறார்கள். அந்த அளவுக்கு இந்த முன்னேற்றம் தொடர்ந்து இருக்க வேண்டும் என்றும், வேலை நிறுத்தமே இல்லாத ஆண்டை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் வேழவேந்தன் அவர்கள் அவருடைய காலத்தில் செய்துகாட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர் இந்த அரசாங்கம் தொழிலாளர்களுடைய நலனுக்காகப் பாடுபட்டதாகத் தெரியவில்லை என்று கூறினார். இன்றைய தினம் இந்த அரசாங்கம் எந்த அளவுக்குத் தொழிலாளர்களுடைய ஆதரவால் ஆட்சிக்கு வந்தது என்பதும், ஆட்சிக்கு வந்த பின்னால் நடுத்தர வர்க்கத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் அரசாங்கம் எவ்வளவு பாடுபட்டிருக்கிறது என்பதும் பொதுமக்கள் அனைவராலும் அங்கீகரிக்கப்பட்ட ஓர் உண்மையாகும். ஆனால் தொழிலாளர் நல

[திரு. பெ. சீனிவாசன்] [1970 மார்ச் 26

இலாக்காவில் தொழிலாளர் விவகாரங்களில் மாநில அரசாங்கம் எதுவும் செய்ய முடியாத அளவுக்கு மத்திய அரசாங்கம், காங்கிரஸ் அரசாங்கம் உருவாக்கிய சட்டங்கள் குறுக்கே நிற்கின்றன.

* *

ஆக அன்றைய தினம் பொறுப்பு ஏற்றவர்கள் சட்டங்களை உருவாக்கும்போது தொழிலாளர்களுக்காக அவர்கள் உருவாக்கிய சட்டங்கள் முதலாளிகளுக்குக் கவசமாக இருந்தனவே தவிர தொழிலாளர்களுடைய துயரங்களை மாற்றுகின்ற மார்க்கமாக அமைய வில்லை. இன்றையதினம் அதே சட்டங்களை வைத்துக்கொண்டு இந்த மாநில அரசாங்கம் தொழிலாளர்களுக்கு வேலைசெய்ய வேண்டியதாக இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த இரட்டை ஆட்சி முறையை ஒழித்து தொழிலாளர்களுக்கான ஒரு சட்டத்தை இயற்றி அந்தப் பெருமையை அடையவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். இன்றையதினம் தொழிலாளர்களுக்கு முழுக்க முழுக்க குறுக்கே நிற்பது தொழிலாளர்நல இலாகாவில் இருக்கும் சிகப்பு நாடா முறை தான். தொழிற்சாலையில் ஒரு தொழிலாளி தவறு செய்கிறான் என்று நிர் வாகம் கருதினால் ஒரு போலி விசாரணை அங்கே நடைபெறுகிறது. அவர்களாகவே உருவாக்கி சாட்சிகளைத் தயாரித்து தொழிலாளிக்கு எந்த விதமான வாய்ப்பும் கொடுக்காமல் டிஸ்மிஸ் செய்துவிடுகிறார்கள். இதற்குமேலே லேபர் ஆபீஸர், ஒன்று, இரண்டு என்று வரிசையாகப் படிக்கட்டுகளில் ஏறி இங்கே டிரிபியூனலுக்கு வருவதற்குள் அவனுக்கு ரிடையர்மெண்ட் வந்துவிடுகிறது. ஆக இந்தக் குறையை நிவர்த்திக்க இதிலே ஒரு லிமிடேஷன் அதாவது ஒரு தொழிலாளி வேலையிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்தால் இத்தனை நாட்களுக்குள் பரிகாரம் கொடுக்க வேண்டும் அல்லது உடனடியாக வேலையில் வைத்துக்கொண்டு நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஒரு குறிப்பை ஒரு ஆணையை இந்த அரசாங்கம் பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் முதலாளிகள் சுப்ரீம்கோர்ட் வரை செல்ல முடியும். தொழிற்சங்கத்தைச் சேர்ந்த நாங்கள் உயர்நீதிமன்றம் வரையில்கூட விசாரணையை நடத்த முடிவது இல்லை. தொழிலாளர்களு டைய நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட சட்டங்கள் மூலமாக முதலாளிகள் தான் பயன்பெறுகிறார்களே தவிர தொழிலாளர்களுக்கு எந்தப் பரிகாரமும் கிடைப்பதில்லை. தப்பித்தவறி எங்கேயாவது ஒரு மூலையில் நிர்வாகம் மறந்துவிட்டால் அல்லது அயர்ந்து விட்டுவிட்டால் அப்பொழுதுதான் ஏதோ கொஞ்சம் கிடைக்கிறது. இந்த நடவடிக்கைகளைத் துரிதமாக்க தொழிலாளர்நல இலாகா ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ந. தருமலிங்கம் தலைமை]

இன்னொன்று போலீஸ். எந்த ஒரு பேக்டரி முதலாளியோ, ஒரு நிர் வாகமோ போன் செய்தவுடனேயே கொலை, கொள்ளை நடந்திருந்தாலுங் கூட அவை எல்லாவற்றையும் விட்டுவிட்டு, நிர்வாகத்திற்கு உதவியாக அந்த இடத்திற்கு லாரி லாரியாகச் சென்றுவிடுகிறார்கள். மிக சாமர்த்திய மாகத் தொழிலாளர்கள்மீது வழக்குப்போடுவதற்கு ஐ.பி.சி.யில் கைதேர்ந்த ஐந்து அல்லது ஆறு வழக்கறிஞர்களையும் கூடவே வைத்துக்கொண்டு வழக்குகளைப் போடுகிறார்கள். இப்படியான நிலைமையில் ஒருபக்கம் நீதிமன்றம் போகவேண்டும், இன்னொருபக்கம் லேபர் கோர்ட்டுக்குப் போக வேண்டும். வேலை கிடையாது. குடும்பம் ஒருபக்கம் கஷ்டப்பட்டுக்கொண்டி ருக்கும். அப்பொழுது இவர்களுடைய சங்கம் எந்தவிதமான முடிவை எடுத்தாலும் அது முறியடிக்கப்படுகிறதேதவிர தொழிலாளிக்கு எந்தப் பயனும் கிட்டுவதில்லை. ஆக ஒரு தொழிலாளிமீது கிரிமினல் வழக்குப் போடுகிற காலத்தில் நிர்வாகம் எப்படிப் போடுவது என்று சொல்லி அதன்படி போடுவது என்ற பழக்கம் போகவேண்டும். முடிவு செய்ய வேண்டியது போலீஸ் இலாகா. தொழிலாளர்கள்மீது வீண் வழக்குகள் போடக்கூடாது என்று போலீஸ் இலாகாவிற்கு அரசாங்கம் ஒரு உத்தரவு போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1970 மார்ச் 26] [திரு. பெ. சீனிவாசன்]

இன்றையதினம் கடைசியில் தொழிற்சங்கத்தைச் சேர்ந்த தொழிலா ளர்கள் வெற்றி பெறுகிறார்கள் என்றாலும் அந்த வெற்றியை அனுப விக்க அந்தத் தொழிலாளி இருக்கமாட்டான். மழை பெய்வது காலத்தில் பெய்தால்தான் நல்லது. மரம் பட்டுப்போனபிறகு பெய்தால் என்ன நிலைமையோ அந்த நிலைமைதான் தொழிற்சங்கத்தின் நிலை. இதை அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

இங்கே எனக்குமுன் பேசிய அங்கத்தினர் அவர்கள் ஒரு தொழிற்
சாலைக்கு ஒரு சங்கம்தான் இருக்கவேண்டும் என்று சொன்னார். அந்த
யோசனையைச் சொன்னவரே நமது மாண்புமிகு அமைச்சர் மாதவன்
அவர்கள். அவர்கள் தொழிலாளர் நல இலாகா அமைச்சராக இருந்த
போது இந்த ஆலோசனையை எல்லா தொழிற்சங்கங்களுக்கும் சொல்லி
யிருக்கிறார். ஆனால் பல இடங்களில் அரசியல் காரணங்களுக்காக இதை
யாருமே சரியான முறையில் செயல் படுத்த முன்வரவில்லை. அவர்
சொன்ன யோசனை உண்மையிலேயே அருமையான யோசனை. தொழி
லாளர்கள் விவகாரங்களில் சிக்கல்கள் அதிகமாகக் காரணம் அரசியல்
தான். முதலாளிகள் என்றைக்கும் ஆளுகின்றவர்கள் பக்கம்தான் இருப்
பார்கள். எந்தக் கட்சியாக இருந்தாலும் முன்னால் இருப்பார்கள். நாங்
கள் கம்யூனிஸ்டுகளைத் தடுக்க, பலாத்காரத்தைத் தடுக்க, ஜனநாயகத்தைக்
காப்பாற்ற பாடுபடுகிறோம் என்ற போர்வையில் முதலாளிகள் தொழிலா
ளர்களை நசுக்கி அவர்கள் லாபம் அடைந்து வருகிறார்கள். அரசியல் கார
ணங்கள்தான் தொழிலாளர்கள் இயக்கத்தைப் பலவீனப்படுத்துகிறது.
டன்லப் கம்பெனியில் இருக்கிறமாதிரி எங்கும் இருக்கவேண்டும். யார்
வேண்டுமானாலும் வரலாம் என்ற முறை உருவாகவேண்டும்.

அடுத்தபடியாக தொழிற்சாலைகளில் லேபர் ஆபீஸர்கள் இருக்கிறார்
கள். அவர்களுக்கு தொழிலாளர்நல அதிகாரி என்று பெயர். ஆனால்
அவர்கள் முதலாளிகளுடைய சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர்போல் வேலை
செய்து வருகிறார்கள். எந்தத் தொழிலாளியை டிஸ்மிஸ் செய்ய வேண்
டும் என்று நிர்வாகம் விரும்புகிறதோ அதற்கு ஏற்றபடி காரணங்களைக்
கண்டுபிடித்துக் கொடுத்து, ஆலோசனை சொல்லும் ஒரு ஆலோசகராக
இருந்துவருகிறார்கள். இப்படிப்பட்ட லேபர் ஆபீஸர்களை, தொழிற்சாலைக்குள்
பணிசெய்கின்றவர்களை நியமிக்கும் அதிகாரம் அரசாங்கத்தினிடம் இருக்க
வேண்டும். அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கும் பொறுப்பு முதலாளி
களுக்கு இருக்க வேண்டும். இந்த ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று
அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, தொழிலாளர்களுக்காக அவர்கள்
அறிவித்திருக்கின்ற நன்மைகளுக்காக பாராட்டுதலையும் நன்றியையும்
தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* * *

* திரு. சி. கோவிந்தராஜன்: தலைவர் அவர்களே, தொழிலாளர்
கிளர்ச்சியையும், தொழிற்சங்க இயக்கத்தையும் பொழுது விடிந்தால்,
பொழுதுபோனால் வெறியாண்டி செய்துவரக்கூடிய திரு. எச். வி. ஆர்.
ஐயங்கார் முதலாளித்துவப் பொருளாதார நிபுணர், முன்னாள் ரிசர்வ்
பாங்கு கவர்னர் அவர்கள்கூட ஒரு விஷயத்தை ஒப்புக்கொள்ளவேண்டிய
சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. சென்ற 20-ம் தேதி எம்ப்ளாயேர்ஸ் பெட
ரேஷன் ஆப் சவுத் இந்தியா, என்ற தென் இந்திய முதலாளிகள் சங்
கத்தில் அவர்கள் பேசும்போது சில உண்மைகளை ஒத்துக்கொண்டார்கள்.
தொழிலாளர்கள் மத்தியில் அதிருப்தியும், தொழில் அமைதியும் குலை
வதற்குக் காரணம் என்ன என்று அவர்கள் கூறும்பொழுது, கடந்த
காலத்தில் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்பட்ட கூலி மிகவும் குறைவு,
1939-ல் இருந்ததைவிட ஏழு மடங்காக விலைவாசி உயர்ந்திருக்கிறது, விலை
வாசி உயர்வை எட்டிப் பிடிக்கத் தகும் அளவுக்கு சம்பள நிலைமை
உயரவில்லை. இன்னும் சில தொழில்களில் உண்மைச் சம்பளம் குறைந்தே
விட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு
நாள் பெருகிக்கொண்டே வருகிறது என்ற உண்மைகளை அவர்கள் ஒத்துக்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட மோசமான நிலைமைகளின் காரணமாக தொழிலாளர்கள் தங்களுடைய உரிமைகளைப் பெறுவதற்காக கிளர்ச்சிகள், வேலைநிறுத்தங்கள் செய்யவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறதேதவிர, இது யாரும் தூண்டி விட்டு வருவதில்லை. தூண்டி விட்டு வரவும் முடியாது. தொழிலாளர்களுக்கு இன்று இருக்கும் சம்பளம் இதர வசதிகளையாவது காப்பாற்றிக்கொடுக்க வேண்டும் என்ற உண்மையான ஒரு கொள்கை இந்த அரசாங்கத்திற்கு இருப்பதாகத் தெரியவில்லை. அப்படிப்பட்ட கண்ணோட்டம் இருக்குமானால், இப்படிப்பட்ட கிளர்ச்சிகளை அல்லது வேலைநிறுத்தங்களை வெறுப்புக் கண்ணோட்டத்தோடோ அல்லது அரசுக்குத் தொந்தரவு கொடுக்கக்கூடிய கிளர்ச்சி என்றோ கருதவேண்டியதற்கு இடம் இருக்காது.

அரசாங்கம் நடத்தக்கூடிய தொழில் நிறுவனங்கள் தனியார் தொழில்களுக்கு ஒரு முன் உதாரணமாக இருக்கவேண்டும். அரசாங்கம் மாடல் எம்ப்ளாயராக இருக்கவேண்டும். கூட்டுறவு ஸ்பின்னிங் ஆலைகள் இருக்கின்றன. அவைகளுக்காக ஒரு தனிக் குழு போட்டு, நான்கு கட்டமாக ஊதியத்தைக் கொடுக்கவேண்டுமென்று சொல்லியுங்கூட, அது எந்த இடத்திலும் அமல் நடத்தப்படவில்லை. அதனால் ஆரல்வாய்மொழியில் வேலை நிறுத்தம், உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. சங்கரன் அவர்கள் அளித்த நடுவர் தீர்ப்பு அங்கே அமல் நடத்தப்படவில்லை. தனியார் முதலாளிகளெல்லாம் எஞ்ஜினியரிங் வேஜ் போர்டு சிபாரிசுகளை அமல் நடத்தவேண்டும் என்று அரசாங்கத்தால் வேண்டுகோள் விடுக்கப்படுகிறது ஆனால் ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ரீஸ் கார்ப்பரேஷனின் நிலைமை என்ன? அரசு தன்னுடைய நிறுவனங்களில் என்ஜினியரிங் வேஜ் போர்டு பரிந்துரைகளை அமலுக்குக் கொண்டுவரவில்லை. சட்டமன்றத் துறையில் பணிசெய்யும் தொழிலாளர்கள்கூட ஆண்டுக் கணக்கில் அந்தக் கூலிகளாகவே வைக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களுக்குக் குறைந்தபட்ச சம்பளமும், நிரந்தரமான சூழ்நிலையும் ஏற்படும்படி செய்யப்படவில்லை.

அதற்கு அடுத்தபடியாக அரசப் போக்குவரத்துத் துறையிலுள்ள நிலைமைகளைக் கூற விரும்புகிறேன். அங்கு இருக்கக்கூடிய குறைந்தபட்ச சம்பளம் ரூ. 15. ஸ்வீப்பருக்கு இந்த ரூ. 15 சம்பளம் கொடுக்கப்படுகிறது. அதை வைத்துக்கொண்டு யாராவது வாழ முடியுமா? மேலும், சிறுதொழில் கார்ப்பரேஷனில் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச சம்பளம் ரூ. 30. அந்தச் சம்பளத்தை வைத்துக்கொண்டு எந்தத் தொழிலாளியாவது வாழமுடியுமா? அதையெல்லாம் அரசு சற்று யோசித்துப் பார்க்கவேண்டும். அரசு மற்ற முதலாளிகளுக்கு முன் உதாரணமாக இருக்கவேண்டும். அப்படி இருப்பதாகத் தெரியவில்லை. இன்று அரசப் போக்குவரத்துத் துறையில் இருக்கக்கூடிய தொழிலாளர்கள் என். ஜி. ஓ.-க்களாகக் கருதப்படுகிறார்கள். அவர்கள் இண்டஸ்டிரியல் தொழிலாளர்களாகக் கருதப்பட வேண்டும். அவர்கள் தங்களுடைய உரிமைகளைப் பெறுவதற்கும், சம்பளத்தை உயர்த்திக்கொள்வதற்கும் வேலைநிறுத்த நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். நெய்வேலியில் தொழிலாளர்கள் வேலைநிறுத்த நோட்டீஸ் கொடுத்து, லேபர் கமிஷனர் மூலமாக கன்ஸிலியேஷன் நடந்து ரூ. 80 லட்சம் அளவுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்பட்டது. நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு அதன்விளைவாக ரூ. 92 லட்சம் அளவுக்கு ஊதியத் தொகை உயர்த்தப்பட்டது. அது மத்திய அரசின் நிறுவனம். போக்குவரத்துத்துறை நமது மாநில அரசின் நிர்வாகத்திற்குட்பட்டது. மின்சார வாரியமும் நமது மாநில அரசின் நிர்வாகத்தைச் சேர்ந்ததுதான். அந்த நிறுவனங்களிலும் நம்முடைய மாநில அரசும் முதலமைச்சரும் இதே நிலையைக் கையாளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற்சங்கங்களைப் பாரபட்சமாக நடத்தும் சில வருந்தத்தக்க விஷயங்களை நான் குறிப்பிட விரும்புகின்றேன். தங்களுக்கு வேண்டியவர்கள் சங்கம் என்றால் அந்தச் சங்கங்களுக்குச் சலுகைகள் மற்றச் சங்கங்களைப் பாரபட்சமாக நோக்கி வரக்கூடிய பல உதாரணங்களை நான் பட்டியல் மூலம் கொடுக்க முடியும்.





இந்துப் பத்திரிகையில் ஒரு சங்கம் இருக்கிறது. அந்தச் சங்கத்திற்கு தொழிலாளர்கள் பெருவாரியாக ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அந்தச் சங்கத்தின் தலைவர் திரு. வி. பி. சிந்தன், அந்தச் சங்கத்திற்குப் போட்டியாக, அந்தச் சங்கத்தைக் கைப்பற்றவேண்டும் என்ற நோக்கத்தோடு சோமு என்ற தி. மு. க.-வைச் சேர்ந்தவருடைய தலைமையில் ஒரு போட்டிச் சங்கம் அமைக்க முயற்சி எடுத்து, அதற்காக போலீசை உபயோகப்படுத்தி, அந்தச் சங்கத்திற்கே சீல் வைக்கப்பட்டது. மறுபடியும் அந்தச் சங்கம் ஹைக்கோர்ட்டிற்குச் சென்று அப்படி சீல் வைத்தது தவறு என்று சொல்லி ஹைக்கோர்ட் உத்தரவு பிறப்பிக்கத்தக்க நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதன் பின்பு முக்கிய அரசியல் தலைவர், தொழிற்சங்கத் தலைவர் சிந்தன்மீது 107-வது செக்ஷன்கீழ் ஜாமீன் கேஸ் போடப்பட்டது. ஜாமீன் கேஸ் போடப்படுகிறது என்று சொன்னால், கலவர நிலைமை இருந்தால், இரு சாராரின் மேலும்தான் ஜாமீன் கேஸ் போடவேண்டும். ஒரு சாராரின்மீது மட்டும் இப்படிப்பட்ட ஜாமீன் கேஸ் போடுவது எந்த நோக்கம்? சோமுவின் சங்கத்திற்கு முட்டுக் கொடுக்கக்கூடிய நடவடிக்கைதான் இது என்று கருதுகிறேன்.

பிரிட்டானியா பிஸ்கட் தொழிற்சாலையில மெஜாரிடி சங்கம் இருக்கிறது. அவர்கள் கோரிக்கைகள் வைத்தார்கள். அதன்பேரில் கன்ஸிலியேஷன் நடைபெற்றது. அந்த சமயத்தில் ஒரு போட்டி சங்கம் ஏற்படுத்தப்பட்டது. அந்த சங்கம் மைனாரிடி சங்கம். தி. மு. க. தலைமையில் ஏற்படுத்தப்பட்டது அந்தச் சங்கம். அரசாங்க லேபர் ஆபீஸர் 12(3) செக்ஷன்படி ஒப்பந்தம் செய்தார் இந்தச் சங்கத்துடன். அங்கு நடந்த ரெக்ரியேஷன் கிளப், கான்டீன் இவைகளுக்கான தேர்தல்களில் பெருவாரியான இடங்களை மெஜாரிடி சங்கம்தான் கைப்பற்றியது. அதிலிருந்து அது மெஜாரிடி சங்கம் என்பது தெரியவரும். கான்டீன் தேர்தலில் மூன்று ஸீட்களில் மூன்றையும் இந்தச் சங்கம் கைப்பற்றிவிட்டது. ரெக்ரியேஷன் கிளப் தேர்தலில் 8 ஸீட்களில், 7 ஸீட்டுகளை இந்தச் சங்கம் பெற்றது. ஒரு ஸீட் சுயேட்சைக்குப் போயிற்று.

அரசப் போக்குவரத்துத் துறையில் வொர்க்ஸ் கமிட்டி தேர்தலில், 10 ஸ்தானங்களில் 6 ஸ்தானங்களைப் பெற்றது மெஜாரிடி சங்கம். நாகர்கோவிலில் இருக்கக்கூடிய கிளையில் வொர்க்ஸ் கமிட்டிக்கு 10 ஸீட்களில் 7 ஸீட்டுகள் இந்தச் சங்கத்தினால் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. பாக்கி மூன்று ஸீட்டுகள்தான் வேறு சுயேச்சைகளுக்குப் போயிற்று. அங்கீகரிக்கப்பட்டிருக்கக்கூடிய சங்கத்திற்கு எந்த ஸீட்டும் இல்லை. தொழிலாளர்கள் ஆதரவு இல்லாமல் இருக்கக்கூடிய சங்கங்களுக்கு, தங்களுக்கு வேண்டியவர்கள் என்ற காரணத்திற்காக அரசு அந்தச் சங்கங்களுக்கு அங்கீகாரம் கொடுத்திருக்கிறது.

இன்னொரு விஷயம். தாராபுரம் கூட்டுறவு நூற்பு ஆலையில் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ், கான்டீன் ஆகியவைகளுக்கான தேர்தல்களில் எல்லா இடங்களையும் பிடிக்க சங்கத்திற்கு அங்கீகாரம் கிடையாது. மெஜாரிடி சங்கத்திற்கு அங்கீகாரம் கிடையாது.

நெய்வேலியில் சமீபத்தில் வருத்தப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தொழிலாளர்கள் இரு சாராருக்குள் தகராறு நடைபெற்று, ஒரு சாரார் மீதுதான் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள்மீது வழக்குப் போடப்பட்டிருக்கிறது. இன்னொரு சாராரின் சங்க ஆபீஸ் கொளுத்தப்பட்டும், செயலாளரின் கைகால் முறியும்படி அடிக்கப்பட்டும், அதிகாரிகளுக்குப் புகார் கொடுத்திருந்தபோதிலும் அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இன்னொரு விசித்திரமான செய்தியைக் கூற விரும்புகிறேன். விருதுநகரில் ஐயனார் டெக்ஸ்டைல் மில்லில் இருக்கும் தொழிற்சங்கத்திற்கு சட்டமன்ற உறுப்பினராகிய திரு. சீனுவாசன் தலைவர். அந்தச் சங்கம் எல்லாக் கட்சியினரும் சேர்ந்து நடத்திவரக்கூடிய சங்கம். அந்தச் சங்கத்திற்குப் போட்டியாக மேலவை உறுப்பினர் தங்கபாண்டியன் தலைமையில் ஒரு

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: எத்தனை வழக்குகள் போட்டிருக்கிறார்கள் என்றும் இருக்கிறது.

திரு. வி. கோவிந்தராசன்: குறிப்பாக சில விஷயங்களைக் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நெல்லிக்குப்பத்தில் கன்பெக்ஷனரி இருக்கிறது. அந்தத் தொழிற்சாலையில், கீழே தரையில் உஷ்ணம், எங்கும் கன்பெக்ஷனரியின் ஸ்க்ரேப்ஸ் காலைப் பொசுக்கும். அப்படிப்பட்ட இடங்களில் காலணி கொடுப்பது கிடையாது. கைக்கு கிளவ்ஸ் கொடுப்பது கிடையாது. அடிக்கொரு இயந்திரம் என்று இருக்கிறது. விபத்துக்கள் ஏற்படக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. இவற்றைத் தடுத்து நிறுத்த பாக்டரி இன்ஸ்பெக்டர் முற்படுவதில்லை. வடலூரில் கக்கூஸ் வசதி கூடக் கிடையாது. பல மெஷின்களுக்கு பென்சிங் கிடையாது. பல தடவை எண்ணூரில் பாய்லர் வெடித்து விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. சமீபத்திலே கூட இரண்டு தொழிலாளிகள் பாதிக்கப்பட்டு, காயம் ஏற்பட்டு உருவே மாறியிருக்கிறார்கள். இந்த விபத்து அடிக்கடி நடைபெறுவதற்குக் காரணம் என்ன என்று பாக்டரி இன்ஸ்பெக்டர்கள் கவனித்து நடவடிக்கை எடுப்பது இல்லை.

அடுத்து, பத்திரிகைகளைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லி முடிக்கிறேன். சில பத்திரிகைக் காரியாலயங்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. பாக்டரி சட்டத்தின்படி, அங்கு மஸ்டர் ரோல் கிடையாது. அட்டெண்டென்ஸ் ரெஜிஸ்டர் கிடையாது. பே ரெஜிஸ்டர் கிடையாது. நியூஸ் எடிட்டர்களை நிரந்தரமில்லாமல் வைக்கிறார்கள். தினத்தந்தி, நாத்திகம், மாலைமுரசு போன்ற பத்திரிகைகளில் நியூஸ் எடிட்டர் காஷுவல் என்று வைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த சந்தர்ப்பத்திலே நாத்திகம் சம்பந்தமான வழக்கில், வழக்கு மன்றத்தில் நியூஸ் எடிட்டர் கூறிய சாட்சியத்தை நினைவு படுத்த விரும்புகிறேன். இவர்களுடைய நிலை நித்திய கண்டம் பூர்ணாயுசு என்று இருக்கிறது. அரசுத் தொழில் நிறுவனங்களுக்கு சில ஆலோசனைகளைக் கூறி முடிக்கிறேன்.

ஆரல்வாய்மொழி தொழிற்சாலையில் சம்பளம் போதவில்லை என்கிறார்கள். அரசாங்கம் இந்த ஸ்பின்னிங் தொழிற்சாலைக்கு 55 லட்ச ரூபாய் கடன் கொடுத்திருக்கிறது. ஷேர் காபிடல் 27 லட்ச ரூபாய். கடனுக்கு அரசு ஏராளமான வட்டி பெறுகிறது. அதை மூலதனமாக கன்வர்ட் செய்தால், தொழிலாளர்களுக்கு சலுகைகள் கொடுக்க முடியும். மின்சார வாரியத்திற்கு 200 கோடி ரூபாய் அரசு கடன் கொடுத்து, வட்டி பெறுகிறது. வட்டிக்குப் பதிலாக, ஆர். வெங்கட்ராமன் கமிட்டி ஆலோசனைப்படி அதை மூலதனமாகக் கன்வர்ட் செய்தால், தொழிலாளர்களுக்கு நன்மை பண்ண முடியும் சிறு தொழில் கார்ப்பொரேஷனுக்கு ரூ. 3 கோடி கடன் கொடுத்து வட்டி பெறுகிறது. அரசாங்கமே அந்த மூன்று கோடி ரூபாயையும் மூலதனமாகக் கன்வர்ட் பண்ணினால் தொழிலாளர்களுடைய வசதிகளைப் பெருக்க ஏற்பாடுகள் செய்ய முடியும் என்று கூறி என் உரையை முடிக்கிறேன்.

*திரு. எஸ். அக்னிராஜு: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த மானியத்தை ஆதரித்து எனது கருத்துக்களைக் கூற முன்வருகிறேன்.

வளர்க தொழில்கள், வாழ்க தொழிலாளர்கள் என்பது போல, தொழில் வளர்ச்சியைப் பொறுத்துத்தான் தொழிலாளர்களுடைய வளர்ச்சி, இவற்றின் வளர்ச்சியைப் பொறுத்துத்தான் நாட்டின் வளர்ச்சி இருக்கிறது இந்த முக்கூட்டுக் கொள்கையை நம் கொள்கையாக வைத்துக்கொண்டு இருக்கும் இந்த நிலையை அமைச்சர் தெள்ளத்தெளிவாக விளக்கியிருக்கிறார்கள். நலன் பற்றிப் பேசும்போது, பாதிக்கப்பட்டிருக்கிறது என்று ஒரு பக்கம் பேசி, கிளர்ச்சியை உண்டு பண்ணி, தொழிலாளர்களுக்கு நன்மையைச் செய்ய வேண்டும் என்று, நீங்களெல்லாம் இந்தக்கட்சியை சேர்ந்திருக்கிறீர்கள், வேறு பக்கம் போங்கள் என்றும், முதலாளிகளைச் சொல்லி அந்தப் பக்கத்தில் அரசியலை வளர்ப்பதும், இந்த இரண்டு காரியங்களாலும் தொழிலாளர்களுடைய நலன்கள் பாதிக்கப்படுகின்றன



என்று பல்வேறு தொழில் சங்க வாதிகள் உணர்ந்தாலும், ஒரு தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்கு ஒரே கொடி இருக்கவேண்டும். ஒரே தொழிற்சங்கம் இருக்கவேண்டும் என்றெல்லாம்சொல்லி வருகிறார்கள். ஒரு தொழிலுக்கு ஒரு தொழில் சங்கம் என்று சொல்லும்போது, சர்வ கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து, இத்தனாவது மாதம், இத்தனாவது நாளிலிருந்து யாருமே செல்லக்கூடாது. இந்தக் கட்சியின் தலைமையில் ஒரே சங்கம்தான் என்று ஒப்புக்கொண்டு வீட்டில் இருந்து விட்டால் நலமாக இருக்கும். அதை விட்டு விட்டு, தொழிற் சங்கங்கள் பல என்றும், தொழிலாளர்களுக்கு 7, 8 கொடிகளென்றும், செய்து சில்லரை பிரச்சினைகளைப் பெரிதாகச் செய்து விட்டு, கிளர்ச்சி மூலம் ஆதாயம் பெறலாம் என்று செய்தால், அதை திராவிட முன்னேற்றக் கழக தொழிற்சங்கம் ஏற்றுக்கொள்ள முடியாது. அனைத்துக் கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து, ஒரு முடிவுக்கு வந்தால், அதை அறிவித்து விட்டால் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

கடந்த ஆண்டைக் காட்டிலும், இதற்கு முந்திய நிலையைக் காட்டிலும் இப்பொழுது தொழிற்சங்க நடவடிக்கைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன என்று ஒருவாறு நினைத்தாலும், முக்கியமான நிலைமை என்னவென்றால் தொழிலாளர்கள் மத்தியில் அமைதி இருக்கிறது. கதவடைப்புகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு மூலகாரணம் என்னவென்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழிலாளர் நலனிலே எடுத்துக்கொண்ட பெரு முயற்சியே ஆகும். இதை நான் பாராட்டுகிறேன், 'மேன் டேஸ் லாஸ்ட்' போன ஆண்டைக் காட்டிலும், அதற்கு முந்தின ஆண்டைக்காட்டிலும் குறைக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் கூட, 'தொழிலாளர்களுக்கு எங்களால் இன்னும் அதிகமான நன்மைகளைச் செய்ய முடியவில்லையே' என்ற மனவருத்தம் இருக்கிறது.

பெரிய பெரிய தொழிற்சாலைகளை உண்டாக்கி, எல்லோருக்கும் வேலை வாய்ப்பு அளிப்பதும், தகராறு ஏற்பட்டால் நேரடியாகச் சென்று தகராறுகளைத் தீர்த்து வைப்பதும் இந்த அரசின் கடமையாக இருந்து வருகிறது. சில நேரங்களில் மத்திய அரசின் சட்டம் இதில் நுழைகிறது. மாநில சர்க்கார் தொழிலாளர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் யாதொரு காரியத்தையும் செய்ய முடியவில்லை. உதாரணத்திற்காக ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்குக்கூட துறைமுகத்திலே தகராறு நடக்கிறது. இதற்கு நம்முடைய அரசாங்கம் ஒன்றும் செய்ய முடியாது. ஐ. சி. எப். இல் ஒருவர் சுடப்பட்டு இறந்தார். ஆனால் பொதுவாகச் சொல்கின்ற நேரத்திலே திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியில் இங்கே தகராறு, அங்கே துப்பாக்கிச் சூடு என்ற அளவில்தான் சொல்கிறார்கள்.

மத்திய அரசாங்கத்திற்கும், மாநில அரசாங்கத்திற்கும் உள்ள அதிகாரங்களைக் குறித்து சரியானபடி முடிவு செய்யவேண்டும். மத்திய அரசு 'இரட்டை ஆட்சி' முறையை நடத்தி வருகிறார்கள். பெரிய பெரிய தொழிற்சாலைகள், சேதுசமுத்திரத் திட்டம், நெய்வேலி இரண்டாவது சுரங்கத் திட்டம், தூத்துக்குடி துறைமுக வேலைகள் இவற்றிற்காகப் பணம் ஒதுக்கிக் கேட்டாலும் மத்திய அரசு கொடுப்பதில்லை. சமீபத்தில்கூட கேரள அரசுக்கும், மைசூருக்கும் ஸ்டீல் பிளாண்ட்டுக்காக பணம் ஒதுக்கியிருப்பதாகச் சொல்லப்பட்டது. ஆனால் சேலம் இரும்பாலைத் திட்டத்திற்குப் பணம் இல்லையென்று சொல்கிறார்கள். காவேரித் தண்ணீர் வரவேண்டுமென்று நாம் சொல்கின்ற நேரத்தில் அங்கேயும் நமக்கு நியாயம் கிடைக்கவில்லை. வரவர மத்திய மாநில உறவுமுறைகள் குறைந்துகொண்டே வருகின்றன. பஞ்சாப் மாநில விவசாய அமைச்சர் அவர்கள், மத்திய அரசு விவசாய சொத்து வரியை வசூலிக்க வேண்டுமென்று உத்தரவு போட்டாலும், நாங்கள் வசூலிக்கப்போவதில்லையென்று அறிவித்திருக்கிறார். ஆகவே, மத்திய, மாநில அரசுகளின் உறவுமுறைகள் இன்னின்ன என்பதை வரையறுத்து செயல்பட வேண்டும். மாநில சுய ஆட்சி பெறுகின்ற காலகட்டம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. தொழிலாளரைப் பொறுத்த வரையில் மத்திய அரசின் தலையீடு கூடாது. தொழிற்சாலைகள்

[திரு. சா. மெய்யப்பன்] [1970 மார்ச் 26

இல்லாவிட்டாலும் வேண்டுமென்று தூண்டிவிடுவதற்கே ஒருசில சக்திகள் வெளியில் இருக்கின்றன. சட்டத்தின் மூலம் எதையும் கட்டுப்படுத்த முடியாது. இன்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல மனப்பக்குவம் வேண்டும். நிர்வாகத்தினருக்கும், தொழிலாளர்களுக்குமிடையே நல்லுறவு ஏற்படவேண்டும். எந்த எந்த வகையில் அதைச் செய்ய முடியுமோ, அந்த அந்த வகையில் அதைச் செய்ய வேண்டும்.

அரசு தன் நிலையை வலுப்படுத்திக்கொள்வதற்காக அரசியல் பிரச்சாரத்தைச் செய்கிறார்கள். அரசியல் நோக்கத்தில் செய்யப்படுகிற எந்தக் காரியமும் தொழில் துறையை வளர்க்காது. அதில் அகப்பட்ட எந்த நிர்வாகமும் உருப்படாது.

கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பிலே எத்தனை மில்கள் திறக்கப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவைகள் மூடப்பட்டது எப்போது, எத்தனை தொழிலாளர்கள் எத்தனை நாட்களுக்கு வேலை யில்லாமல் இருந்தார்கள், என்கிற உண்மையான நிலவரங்களை எல்லாம் இந்தப் புள்ளிவிவரங்களைக் கொண்டு தெரிந்துகொள்ள முடியாது. புள்ளிவிவரம் என்கிறபோது ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் எடுத்திருப்பார்கள். மறுநாள் நிலை எப்படி மாறிற்று என்பது ஒன்றும் தெரியாது. ஆகவே எப்போதுமே நான் இந்தப் புள்ளி விவரங்களை நம்புவது இல்லை. இன்றைக்கு அரசியல், சமூக, பொருளாதாரத்தில் ஒரு மலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது, ஜனநாயக ஆட்சி செம்மையாக நடைபெறுகிறது என்கிறபோது எத்தனையோ ஆயிரம் தொழிலாளர்கள் வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பதையும் பார்க்கிறோம். எங்களிடம் வந்து சிபார்சுக் கடிதம் கேட்கிறார்கள். நாங்களும் கொடுக்கிறோம். தட்ட முடியாது சில இடத்தில் வேலை கொடுத்தாலும் ஒரு மாதத்திற்கு எல்லாம் எடுத்துவிடுகிறார்கள்.

கோயம்புத்தூரில் பல மில்கள் மூடப்பட்டன. சில மில்களைத் திறந்திருக்கிறார்கள் என்றாலும், லேபர் ரூல்ஸ் அத்தனையும் சஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கின்றன. திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் தானே ஒரு மில்லை எடுத்து நடத்துவதாகவும், நஷ்டம் வந்தால் நானே ஒப்புக்கொள்வதாகவும், லாபம் வந்தால் தொழிலாளர்களுடன் பகிர்ந்துகொள்வதாகவும் சொன்னார்கள். ஆனால் ஒரே ஒரு வார்த்தையில் அவருடைய யோசனை ஒப்புக்கொள்ளப்படாது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவர் அருமையான யோசனையைத் தான் சொன்னார்கள். ஆனால் உறுப்பினர் யாருடைய மில்லை எடுத்து அவரிடம் கொடுக்க முடியும்? அரசாங்கத்திற்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை. அவர் எந்த மில் முதலாளியிடம் பேசி அவருடைய மில்லை எடுத்து நடத்த சம்மதம் பெற்றாலும் அரசாங்கத்தைப் பொறுத்தவரை ஆட்சேபணை இல்லை.

திரு. சா. மெய்யப்பன் : எனக்குக் கிடைத்துள்ள தகவல் எந்தக் காரணமும் குறிப்பிடப்படாது அவருடைய யோசனை நிராகரிக்கப்பட்டது என்பதாகும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் உறுப்பினர் அவர்களே இங்கு இருக்கிறார்கள்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : நான், பரிட்சார்த்தமாக ஒரு மில்லைக் கொடுங்கள், நடத்திக் காட்டுகிறேன், நஷ்டம் வந்தால் நானே ஏற்றுக்கொள்கிறேன் என்றும் சொன்னேன். அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலும் விளக்கினேன். திரு. ராமச்சந்திரன் அவர்கள் அது பற்றி யோசிப்பதாகச் சொன்னார்கள். ஆனால் எந்தக் காரணமும் சொல்லாமல் அந்த யோசனையை மறுத்துவிட்டார்கள்.



1970 மார்ச் 26]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இருக்கக்கூடிய சட்ட சிக்கலைத் தான் நான் சொன்னேன். யாருடைய மில்லையும் எடுத்து அரசாங்கம் கனம் உறுப்பினர் கையில் கொடுக்க முடியாது. மூடப்பட்ட மில்களை அரசாங்கம் எடுத்துக்கொண்டது என்றால் அதுவும் ஒரு சட்டப்படி டெக்ஸ்டைல் கார்ப்பரேஷனிடம் ஒப்படைக்கப்படுகிறது. கார்ப்பரேஷன் எடுத்துக்கொள்கிற மில்லில் ஒன்றை இவரிடம் கொடுப்பது என்றாலும் அதற்கும் மத்திய அரசாங்கத்தின் சம்மதம் வேண்டும். இந்த அரசுக்கு அதிகாரம் கிடையாது. அப்படியே கொடுக்கலாம் என்றாலும்—கொடுக்கக்கூடிய அளவுக்கு இந்த அரசாங்கத்திற்கு அதை நடத்தத் திறமை இல்லை என்பதை நாங்கள் ஒப்புக்கொள்ளவும் தயாராய் இல்லை.

திரு. சா. மெய்யப்பன் : மூடப்பட்ட மில்களை எடுத்து நடத்துகிறபோது லேபர் ரூல்ஸ் அனைத்தும் கான்சல் செய்யப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு உறுப்பினர் முன்பே சொன்னார். நாம் மில்களை எடுத்துக்கொள்கிறபோது சட்டப்படி சில விதிகளை எல்லாம் தளர்த்திவிடுவதற்கு அதிகாரம் உண்டு. ஆனால் தொழிலாளர்களும் ஒப்புக்கொண்ட காரணத்தினால் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சா. மெய்யப்பன் : எண்ணூர் தர்மல் ஸ்கீம் என்பது நம்மால் நடத்தப்படுகிறது. அதிலே பல தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. ஒரு சங்கத்தைப் பொறுத்தவரை டாக்டர் ஹாண்டே அவர்கள் தலைவராக இருக்கிறார்கள். அங்கு தகராறு ஏற்படும்போது அங்குள்ள சேர்மென், சீப் சூப்பரின்டிங் என்ஜினியர், என்ஜினியர் இவர்களுக்குள்ளேயே விசாரணையை முடித்துக் கொண்டு விடுகிறார்களே தவிர, தொழிற்சங்கத் தலைவர்களையும் கலந்துகொண்டு தீர்ப்பதில்லை என்கிற மனவேதனை இருக்கிறது. அரசாங்கமே நடத்துகின்ற இந்தத் தொழில் நிறுவனங்கள் மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாக இந்தத் தொழிலாளர் தகராறு பிரச்சினைகளைத் தீர்க்க முன் வரவேண்டும். அப்போதுதான் மற்றவர்களும் பின்பற்றுவார்கள் என்று சொல்லி, இந்த வாய்ப்பினைத் தந்ததற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. ந. தருமலிங்கம்) : அடுத்து, ஓர் அறிவிப்பு. முன்னாலே உறுப்பினர் திரு பெ.சீனிவாசன் அவர்கள் பேசியபொழுது

* * *

என்று பேசியிருக்கிறார்கள்.

* * *

இப் பகுதியை சட்டப்பேரவை நடவடிக்கைக் குறிப்பேட்டிலிருந்து நீக்கிவிடவேண்டும். நீக்கப்பட்டவைகளைப் பத்திரிகைகளும் வெளியிடவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. இ. ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிற தொழிலாளர் மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்கள் சொல்ல நான் கருதுகிறேன். முற்பகல் 11-30

தொழிலாளர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப் பேற்றதற்குப் பின்னால் எந்தவிதமான நல்ல காரியங்களும் செய்யப்பட வில்லை என்று எதிர்த்தரப்பிலேயிருந்து குற்றச்சாட்டுகள் சாட்டப்பட்டன. குறிப்பாகத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களைப் பற்றிப் பேசுகின்ற

---

*மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் கேரளத் தொழிலாளர் களைவிட தமிழகத்திலே உள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு மிகக் குறைவாகச் சம்பளம் கொடுக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டை சாட்டி ஞர்கள். தமிழகத்திலே தோட்டத் தொழிலாளர்களுக்கு 1 ரூபாய் 14 அணு என்ருல் கேரளத் தொழிலாளர்களுக்கு 2 ரூபாயாக இருந்தது. தமிழகத்திலே உள்ள தொழிலாளர்களுக்கு 2 ரூபாய் என்ருல் அங்கே கேரளத்திலே உள்ள தொழிலாளர்களுக்கு இரண்டே கால் ரூபாய் என்று வாங்குவார்கள். இப்படிப் படிப்படியாக அவர்கள் தமிழகத்திலே உள்ள தொழிலாளர்களைவிட அதிகமாக கடந்த காலத்தில் வாங்கிக் கொண் டிருந்தார்கள். ஆனல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு 2·90 காசு இந்த ஆண்டு முடிந்தால் அடுத்த ஆண்டிலிருந்து 3 ரூபாய் வாங்கக்கூடிய நிலைமையைத் தமிழக அரசு உருவாக்கியிருக்கிறது. அதற்கு அக்ரிமெண்ட் முடிவடைந்து இருக் கிறது. 1969-ம் ஆண்டு எப்ரல் மாதம் 14-ம் தேதி அன்று அந்த ஒப்பந்தம் முடிவடைந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பினையேற்றுக் கொண்டதற்குப் பின்னல் இந்த அரசு தொழி லாளர்களுக்கு எதுவும் செய்யவில்லை என்று சொல்வது ஒப்புக்கொள்ள முடியாத குற்றச்சாட்டு என்பதை அறிந்து கொள்ளலாம்.

1967-ம் ஆண்டிற்கு முன்னலே பேறு காலத்திற்காக உதவித் தொகை என்ற முறையில் ரூ. 64 தான் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததற்குப் பின்னல் அவர்கள் வாங்குகின்ற சம்பள அடிப்படையிலே வேலையின் அடிப்படையிலே ரூபாய் 300 முதல் 400 வரை பேறு காலத்திற்காகக் கொடுக்கப்பட்டுவருகிறது. இவை எல்லாம் தொழிலாளர்களுக்குச் செய்யப்படுகின்ற நன்மைகள் இல்லையா? எனவே தமிழக அரசைத் தொழிலாளர் வர்க்கத்தின் சார்பாக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் கிடைக்கின்ற கூலி போதுமா என்ருல் ஓரளவிற் குப் போதாது என்றுதான் சொல்லவேண்டும். என்ருலும் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுச் சொல்லுகிற நேரத்திலே இந்த மாநிலத்திலே குறைவாகக் கொடுக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டை நான் மறுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழிலாளர்களுடைய கிளர்ச்சிகள் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னல் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற நிலையில் சுமுகமாகவும் அமைதியாகவும் இருக்கக்கூடிய நிலைமையினை யாரும் மறுக்கமுடியாது. அப்படிப்பட்ட நிலைமையை உருவாக்கியிருக்கின்ற தமிழக அரசையும் தொழிலாளர் நல அமைச்சர் அவர்களையும் நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிருேம்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி வாரிய ஆலோசனைக் குழு கன்னியா குமரியிலும் வால்பாறையிலும் முறையே 1969 எப்ரல் மாதத்திலும், செப்டம்பர் மாதம் 30-ஆம் தேதியிலும் கூடியது. அந்த ஆலோசனை யில் தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதி போதாது, தொழிலாளர் களுக்கு இரண்டு அறைகள் கொண்ட வீடுகள் கொடுக்கவேண்டு மென்று, தொழிலாளர்களின் வீடுகளுக்கு மின்சார விளக்குகள் போட வேண்டுமென்று, அவர்கள் குடியிருக்கின்ற இடங்களில் தெரு விளக்குகள் போடவேண்டுமென்று எல்லாம் ஆலோசனை செய்யப்பட்டது. இன்னும் சூப்பர்வைசர்கள் இருக்கிருர்கள். அவர்களுக்கும் எந்தவிதமான வசதி யும் இல்லாமல் இருக்கிறது. அவர்கள் சாதாரணத் தொழிலாளர்களைப் போல்தான் மேனேஜ்மெண்டாரால் நடத்தப்படுகிருர்கள். தேயிலைத் தோட்டத்தினுடைய பொறுப்பை அவர்கள்தான் ஏற்றிருக்கிருர்கள். தேயிலையை எடை போடுவதிலிருந்து வேலை வாங்குகின்ற நிலைமை வரை யில் முழுப் பொறுப்பும் அவர்களுக்குத்தான் இருக்கிறது. ஆனல்



அவர்கள் சாதாரண தொழிலாளர்களைப்போல்தான் நடத்தப்படுகிருர்கள் நிர்வாகிகளால். அவர்களுக்கு வீட்டு வசதி இல்லை. தொழிலாளர் வீட்டு வசதி ஆலோசனை வாரியம் அதையும் பரிசீலித்து இருக்கிறது. இவற்றையெல்லாம் விரைவில் அமல்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தோட்ட ஆய்வாளர்கள், பிளாண்டேஷன் இன்ஸ்பெக்டர்கள் இருக்கிருர் கள். தோட்ட விதிமுறைகளை அமல்படுத்துகிருர்களா, என்று பார்த்து, இல்லையென்ருல் அப்படி அமல்படுத்தாத மேனேஜ்மெண்டாரை விசாரணை நடத்தி உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு அவர்களுக்கு அனுமதி இல்லை. அதிகாரம் இல்லை. நிர்வாகிகள் இவர்களை பியூன் போல்தான் நினைத்துக்கொள்கிருர்கள். அவர்கள் கேட்பதற்கு நிர்வாகிகள் சரியாகப் பதில் சொல்வதில்லை. அலட்சியமாக நடத்திவருகிருர்கள். அவர்களுக்குப் போதிய அளவுக்கு அதிகாரங்களை, பிராஸிக்யூஷன் செய்கிற அளவுக்குக் கொடுத்தால், தொழில் தகராறுகள் ஏற்படாதவாறு, மேனேஜ்மெண்டார் தவறு செய்தால், நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தோட்டப் பகுதிகளிலே பஞ்சாயத்து யூனியனே அரசாங்கமோ பஞ்சா யத்து பள்ளிகளை நடத்தினல் அங்கே பணியாற்றுகின்ற ஆசிரியர் களுக்கு வீட்டு வசதிகள் கொடுக்க மறுக்கிருர்கள். பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்கள் தானே, அவர்களிடத்திலே வீடு வாங்கிக் கொள் என்று சொல்கிருர்கள். பஞ்சாயத்து யூனியனின் அல்லது பஞ்சாயத்து போர்டு ஸ்கூல் இருந்தால் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு வீடு ஒதுக்கக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஆணை பிறப்பிக்க வேண்டும். வால்பாறை, கன்னியாகுமரியில் தெரிவிக்கப்பட்ட ஆலோசனையின்படி இத்தகைய ஆசிரியர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்க மேனேஜ்மெண்டாருக்கு ஆணை பிறப்பிக்க வேண்டும்.

இன்றைய தினம் தேயிலையின் மூலமாக டெல்லி சர்க்காருக்கு ஆண்டொன்றுக்கு 2 கோடி ரூபாய்க்கும் அதிகமாக வருமானம் வருகிறது. இரண்டு கோடி ரூபாய் வரியை மத்திய சர்க்கார் எடுத்துக் கொள்கிற நேரத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு அதிலே எந்த விதமான உதவியும் செய்யவில்லை. நீலகிரியிலே தையல் தொழில் பயிற்சி, கோவையிலே அரசினர் மருத்துவ மனையில் 9 மருத்துவச்சிகள் பயிற்சி இவற்றை நமது சர்க்கார் செய்திருக்கிறது. ஆனல் தோட்டத் தொழிலாளர்களுடைய குழந்தைகள் படிப்பதற்கோ, தொழில் பயிற்சி பெறுவதற்கோ, பிற நலனுக்காகவோ அந்த 2 கோடி ரூபாயில் குறிப்பிட்ட தொகை ஒதுக்க வேண்டுமென்று மத்திய அரசிடம் நம் முடைய அரசு கேட்டு வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதிய உணவுத் திட்டம் இருக்கிறது. தோட்டத் தொழிலாளர்கள் சட்டத்தின்படி தோட்ட நிர்வாகிகள்தான் கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது. பள்ளிகளில் படிக்கின்ற குழந்தைகளுக்கும் பள்ளிக்குச் செல்லாத குழந்தைகளுக்கும் மதிய உணவுத் தொகை அவர்கள் அர சிடம் பெற்றுக் கொள்கிருர்கள். ஆனல் அவர்கள் கொடுக்கவேண்டு மென்று சட்டத்திலே இருக்கின்ற மாதிரி அவர்கள் கொடுப்பதில்லை. அவர்கள் அரசாங்கத்திலிருந்து பணத்தை வாங்கிக் கொள்கிருர்கள். அரசாங்கம், அவர்கள் கொடுக்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு ஏக்கருக்கு ஒன்றேகால் ஆள் வீதம் வைத்துக்கொள்ள வேண்டு மென்று சட்டத்தில் இருந்தாலும், ஒரு ஆயிரம் பேர் செய்யக்கூடிய வேலையை 700 பேர்களை மட்டும் நிரந்தரமாக வைத்து செய்துகொள்ளு கிருர்கள். ஆயிரம் பேர் வேலையை 700 பேர்கள் தலையிலே வேலைப் பளுவைச் சுமத்துகிருர்கள். ஒரு ஏக்கருக்கு ஒன்றேகால் ஆள் வீதம் பதிவு செய்துகொள்ள வேண்டும். தற்காலிகமாக 500 பேர்கள் வேலையைச் செய்கிற

இடத்திலே இன்னொரு 500 பேர்களை நிரந்தரமாக வேலைக்கு வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தொழில் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிற சலுகைகளை தற்காலிகத் தொழிலாளிகளுக்கு அளிக்கவில்லை. தற்காலிகமாக எவ்வளவு காலம் வரையில் வேலை செய்கிறார்களோ என்ற கணக்கை வரையறுத்து அதை வைத்துக்கொண்டு அவர்களை நிரந்தரமாக்குவதற்கு அரசாங்கம் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேசச் சந்தர்ப்பம் அளித்தற்காக நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. ஏ. ஆர். பெருமாள்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், சிண்டிகேட் காங்கிரஸிலே மொத்த உறுப்பினர்கள் 41 பேர்கள் இருக்கிறார்கள். ஆனால் சபையிலே மிகுதியானவர்களைக் காணோம், எங்கே போய்விட்டார்கள் என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு ந. தருமலிங்கம்): இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. இருக்கிறார்கள்.

*திரு. பி. வேலுசாமி: தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின்சார்பில் கொண்டு வந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்........

திரு. கே. விநாயகம்: அவர் என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினார்? நீங்கள் என்ன தீர்ப்புக் கொடுத்தீர்கள்? அவர் சொன்னதை ப்ரொசீடிங்ஸில் இருந்தே நீக்க வேண்டும். நாங்கள் கூட டி.எம்.கே. வில் இருப்பவர்கள் எல்லாம் எங்கே போய்விட்டார்கள் என்று சொல்ல முடியும். ஏதோ அவரவர்கள் சவுகரியத்திற்குத் தகுந்தபடி வெளியே போய் வருவார்கள். ஏதோ மாமியார் வீட்டில் பேசுவது மாதிரிப் பேசி விட்டுப் போய்விட்டாரே....

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ந. தருமலிங்கம்): அது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லையென்று ஏற்கனவே கூறிவிட்டேன். அதை நான் அனுமதிக்கவில்லை.

திரு. க. இராமமூர்த்தி: It need not go into the proceedings. வெளியே போகிறவர்கள் எதற்காகப் போகிறார்கள் என்றால்....

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ந. தருமலிங்கம்): காலையிலே உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் கூட இதுபோன்ற ஒரு கேள்வியைக் கேட்டார்கள். அது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லையென்று அனுமதிக்கப்படவில்லை.

திரு. க. இராமமூர்த்தி: திரு. சித்தன் அவர்கள் அந்த பார்ட்டியின் ரெப்ரசன்டேஷன் இல்லையே என்பதற்காகக் கேட்டார்கள். இவர்கள், இங்கே இல்லாமல் எங்கோ போய்விட்டார்கள் என்றால் என்ன என்று புரியவில்லை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ந. தருமலிங்கம்): அது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லையென்று நான் ஏற்கனவே கூறிவிட்டேன். திரு. வேலுசாமி அவர்கள் தொடர்ந்து பேசுவார்கள்.

திரு பி. வேலுசாமி: சென்னை மாநிலத்தில் கிட்டத்தட்ட மூன்று லட்சம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்குக் கிடைக்கின்ற ஊதியம் சராசரி விலை உயர்வின் காரணத்தால் ஏற்படுகின்ற வாழ்க்கைக் குறியீட்டு எண்ணை மையமாகக் கொண்டு அமைகிறது. மத்திய அரசாங்கத்தில் இருந்து புள்ளிவிவரக் கமிட்டி நியமிக்கப்பட்ட நேரத்தில் 1967-ம் ஆண்டு சென்னை மாநிலத்திற்கு வருகின்ற நேரத்தில் புரபசர் சண்முகசுந்தரம் என்பவரால் இங்கே 13 புள்ளிகள் குறைவாக இருக்கிறது



என்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டு அதைப் பற்றி ரிப்போர்ட்டிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 'மாநில தொழிலாளர் களின் வாரியத்தில் ஒரு சிறப்புக் கூட்டம் ஆலோசித்து 1936 தொடர்களுக்குப் பதிலாக 1960 தொடர்களை மேற்கொள்ள வேண்டுமென்று அரசு முடிவு செய்துள்ளது. 1936 தொடர்கள் 1960 தொடர்களுடன் இணைவதற்கு முன்பாக 1936 தொடர்கள்—1960 தொடர்களுடன் 13·2 புள்ளிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தினர். குழுவின் பரிந்துரையை அரசு ஏற்றது. இதுபற்றி இந்திய அரசுடன் கடிதப் போக்குவரத்து நடைபெற்று வருகிறது' என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது.

கடிதப் போக்குவரத்து என்று சொல்லும்போது ஆச்சரியமாக இருக்கிறது. 1967-க்குப் பின்னாலே பம்பாய் மாநிலத்திலே லக்டாவாலா தலைமையில் குழு நியமிக்கப்பட்டு 30 புள்ளிகள் குறைவாக இருக்கிறது என்று கண்டு பிடிக்கப்பட்டது. குஜராத்தில் புரபசர் தேசாய் தலைமையில் போடப்பட்ட கமிட்டியின் மூலம் வாழ்க்கைக் குறியீட்டு எண் குறைவாக இருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. டில்லியிலும் குறைவாக இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். சராசரி ஒரு தொழிலாளிக்குச் சம்பளம் மாதம் ஒன்றுக்கு ரூ 3·78 காசு என்றால் இன்றைக்குக் குறைவாகக் கொடுக்கப்படும் சம்பளத்தைக் கணக்கிட்டால் மாதம் ஒன்றுக்கு 10 லட்சம் ரூபாய் வரும்; வருஷம் ஒன்றுக்கு 1,20,00,000 ரூபாய் தொழிலாளிகளுக்குக் கிடைக்காமல் இருந்துகொண்டிருக்கிறது. மத்திய சர்க்காருடைய தலையீடு என்ன? அவர்களிடமிருந்து எந்த அளவு பெற்றாக வேண்டுமென்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் கொஞ்சம் விளக்கவேண்டும். மற்ற மாநிலங்களுக்கு இருக்கின்ற நிதி நிலைமைகள் தான் இந்த மாநிலத்திற்கும் இருக்கும். அப்படி இருக்கும்போது இந்த மாநிலத்திற்கு.......

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, இந்தப் பேராசியர் சண்முகசுந்தரம் தலைமையில் கூடிய எக்ஸ்பர்ட் கமிட்டி அறிக்கையை வெளியிட்ட பிறகு தொழிலாளர் வாரியம் இரண்டு மூன்று முறை கூடி தீவிரமாக ஆலோசித்தபிறகு, நம்முடைய தொழிலாளர் தலைவர்களும், தொழில் அதிபர்களும் கலந்து ஆலோசித்த பிறகு அமைச்சரவைக்குப்போய் இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இதற்குப் பிறகு மத்திய அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றாகவேண்டும். இதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை பத்திரிகைகளின் மூலமாக அறிவித்திருக்கிறார்கள். ரிட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுப்பது பற்றியும் யோசித்துக் கொண்டிருக்கிறோம். இந்தப் புள்ளி விவரத்தைப் பற்றி மத்திய அரசாங்க அனுமதியைப் பெற்றபிறகு இது வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. பி. வேலுசாமி: மற்ற மாநிலங்களில் காலதாமதம் இல்லாமல் செய்து விட்டார்கள். நம்முடைய மாநிலத்தில் ரொம்பக் காலதாமதமாகிறது. தொழிலாளர்களுக்குச் சராசரியாகக் கிடைக்கும் சம்பளம் கிடைக்காமல் இருக்கிறது.

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: இப்போது ஏறக்குறைய வெளியிட்டாகிவிட்டது. சென்னை நகரத்தில் இருக்கக்கூடிய அரிசி விலையைப் பொருத்து சப்சிடைஸ்டு ரேட்டில் கொடுக்கப்படும் ரூபாய்க்கு ஒரு படி அரிசியைக் கணக்கில் எடுத்துக்கொள்ளுவதா அல்லது மார்க்கெட்டில் முதலாளிகள் விற்பதைக் கணக்கில் எடுத்துக்கொள்ளுவதா என்பதில் முதலாளிகள் தரப்பில் ரூபாய்க்கு ஒரு படி அரிசியைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். இந்தப் பிரச்சினை சிக்கலில் இருக்கிறது. இதுபற்றி அதிகமாகப் பேசவேண்டாம். அடுத்து வரக்கூடிய ஆலோசனை வாரியக் கூட்டத்தில் இதைப்பற்றி முடிவு செய்வதாக இருக்கிறார்கள்.

**திரு. பி. வேலுசாமி :** சாதாரணமாக பஞ்சாலைகள் மூடப்பட்டிருக்கும் காரணத்தால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இல்லாத நிலைமையில் மூடப்படாத பஞ்சாலைகளில் உள்ள தொழிலாளர்களுக்கு வேலைப் பளு எந்த அளவு இருக்கவேண்டுமோ அதைவிட அதிகமாக வேலை செய்யக்கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அப்படி அதிகமாக வேலை செய்தாலும் சாதாரணமாகக் கொடுக்கப்படுகின்ற கூலியே கொடுக்கப்படுவதில்லை. கோவை, மதுரை போன்ற நகரங்களில் சாதாரணமாகக் கொடுக்கக்கூடிய சம்பளத்திலேயே நாலைந்து ரூபாய் குறைவாகக் கொடுக்கும் நிலை இருக்கிறது. எதை அடிப்படையாக வைத்துக் கொடுக்கிறார்கள் என்று தெரியவில்லை. வேலை அதிகமாகச் செய்கிறான்; கூலி குறைவாக இருக்கிறது. இதனால் சமூக நீதி கிடைக்காமல் போகிறது. அம்மாதிரி தொழிலாளர்கள் சென்னை, மதுரை, கோவை போன்ற பகுதிகளில் 15,000 பேர் இருக்கிறார்கள். சில ஆலைகளிலே ஐந்து வருஷம், பத்து வருஷம் வேலை செய்த தொழிலாளர்கள் கூட நிரந்தரமாக்கப்படவில்லை. நம்முடைய தொழிற் சட்டத்தின் விதிகள் எந்த விதத்திலும் அவர்களைக் கட்டுப்படுத்தவில்லை. இருக்கின்ற விதிமுறைகள் எல்லாம் எங்கே போய்விட்டன என்று தெரியவில்லை. ஒவ்வொரு மில் முதலாளியும் தொழிற்சாலைகளில் அவரவர்கள் இஷ்டத்திற்கு ஏற்ப தொழிலாளர்களை வைத்துக்கொள்ளுகிறார்கள். இந்த வேலைக்கு இவ்வளவு தொழிலாளர்களை வைக்கவேண்டுமென்ற முறை இருக்கிறது. அந்த முறையே காணுமல் போய்விட்டதோ என்று ஆச்சரியப்படுகிறேன். அதுதான் யதார்த்த நிலைமையாகும்.

மூன்றாவது ஷிப்டில் இன்னொரு அநியாயம். இரவு நேரத்தில் பெண்கள் வேலை செய்வது தமிழகத்தில் கிடையாது. ஆனால் கோவையில் பல ஆலைகளில் இரவு 12 மணிக்குப் பெண்கள் வேலை செய்யும் அநியாயம் இருக்கிறது. இதைத் தடுக்கும் வகையில் ஃபாக்டரி இன்ஸ்பெக்டர் சென்றாரா, பார்த்தாரா என்றால் ஒன்றையும் காணோம். இரவு 12 மணிக்குப் பெண்கள் வேலை செய்கின்ற அநியாயத்தைப் பார்க்கிறோம். இப்போது தொழிலில் அமைதி இருக்கிறது என்றாலும் வறுமை ஏற்படுகின்ற காலத்தில் அமைதியாக இருப்பது ஒன்று. அவர்களுடைய உரிமைக் கோருகின்ற நேரத்தில் அச்சம் வந்து பேசாமல் இருப்பதற்கும் சாதாரண நேரத்தில் உரிமையைக் கிளப்புவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. இன்று அச்சத்தால் அமைதியாக இருக்கிறார்கள் என்று தான் கருதுகிறேன். இந்த வேலையும் இல்லாமல் பட்டினி கிடக்க நேரிடுமோ என்ற காரணத்தால்தான் அமைதியாக இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இந்த நிலைமையைப் போக்க அரசு முயற்சி எடுக்கவேண்டும். நிரந்தரமாகாத தொழிலாளர்களைப் பாதுகாக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அமைச்சர் அவர்கள் அதிக அக்கறை காட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, லேபர் கமிஷனர் அல்லது லேபர் ஆபீசர் உத்தரவு போடுகிறார், முதலாளியை வரச்சொல்லி. அதை முதலாளிகள் அலட்சியப் படுத்துவதைப் பார்க்கிறோம். அதற்கு நம் விதிகளில் இடம் இருக்கிறதா என்று தெரியவில்லை. சர்க்காரிலுள்ள ஒரு பெரிய அதிகாரி ஒரு முதலாளியை வா என்று அழைக்கும்போது அப்படிப் போவதற்கு மறுக்கப்படுவது சர்வசாதாரணமாக இருக்கிறது. அவர்கள் அதிகாரிகளை மரியாதை செய்வதாகக் காணோம். ஆகவே அதிகாரிகளுக்குத் தகுந்த மரியாதை கொடுக்கும் விதத்தில் அவர்களுக்குப் பாதுகாப்பு செய்து கொடுக்கவேண்டும். நான் முப்பது ஆண்டுகளாகத் தொழிற்சங்கத்தில் இருந்து வருகிறேன். ஆனால் இன்றுள்ளதைப்போல் ஆமை வேகத்தில் என்றைக்குமே இருந்ததில்லை. இன்று கோவையில் லேபர் ஆபீசர் இருக்கிறார், உடுமலைப் பேட்டையில் ஒரு லேபர் ஆபீசர் இருக்கிறார். ஆனால் ஒரு பிரச்னை குறித்து அவர்களை அணுகும்போது அந்த ஆபீசர்களைக் காணுவது இல்லை என்ற நிலை சகஜமாக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** உறுப்பினர்கள் அவர்கள் குறிப்பிடும்போது ஆமை வேகத்தில் என்று குறிப்பிட்டார்கள். அப்படி இருப்பது தொழிலாளர் நல அதிகாரிகள் மட்டும்தானா அல்லது



யூனியன்களும் தொழில் அதிபர்களும் இரண்டு பேர்களும் பங்கேற்றுக் கொள்கிற சமரசப் பேச்சில் அவர்கள் வாய்தா வாங்குவதும் கூட காரணமா என்பதை விளக்கவேண்டும்.

**திரு. பி. வேலுசாமி :** சமரசப் பேச்சுப் பற்றிய பிரச்னை இதில் வரவில்லை. அதிகாரிகளை நாடிச் செல்லும்போது சமரச அதிகாரிகள் ஸ்தலத்தில் இருப்பது கிடையாது. இரண்டு மூன்று நாட்களுக்கு அப்புறம் தான் அதிகாரிகளைக் காணும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. ஒரு நாள் என்றால் அது சாதாரணமானது. ஆனால் பல நாட்கள் என்றிருக்குமானால் அதற்குப் பெயர் ஆமை வேகம் என்று சொல்வதைத் தவிர வேறு வார்த்தை எனக்குக் கிடைக்கவில்லை.

மில்களில் வெல்பேர் ஆபீசர்கள் வைத்திருக்கிறார்கள். அவர்கள் தொழிலாளர்களின் வெல்பேரை கவனிக்கிறார்களா அல்லது முதலாளியின் வெல்பேரைப் பாதுகாக்கிறார்களா என்பது சந்தேகம். முதலாளிகள் தீர்மானிக்கிறபடிதான் வெல்பேர் ஆபீசர்களை நியமிக்கிறார்கள். முதலாளிகள் அமைதியாக இருந்தாலும் இந்த ஆட்கள், இந்த வெல்பேர் ஆபீசர்கள் அமைதியாக இருக்க விடுவதில்லை. அப்படிச் செய்தால்தான் இவர்களுக்குச் சென்னை அல்லது கோயம்புத்தூர் என்று தொழில் கோர்ட்டுகளுக்குப் போகமுடியும், இண்டஸ்ட்ரியல் ட்ரிப்யூனலுக்குப் போக முடியும். இருக்கிற விவகாரத்தை அதிகப்படுத்துவதில்தான் இந்த வெல்பேர் ஆபீசரின் கவனம் செல்கிறது. ஆகவே வெல்பேர் ஆபீசர்களை நியமிக்கும்போது சர்க்காரே இந்த வெல்பேர் ஆபீசர்களை நியமிப்பது என்பது சரியாக இருக்குமே தவிர, முதலாளிகள் அவர்களை நியமிப்பது என்பது சரியாக இருக்காது. இந்த நிலைமை மாற்றப்படவேண்டும்.

சில முதலாளிகள் ஜபர்தஸ்து உள்ளவர்களாக இருக்கிறார்கள், சிலர் சாதாரணமாக இருக்கிறார்கள். முதலாளிகள் தொழிலாளர்களை அழைத்துப் பேசுகிறார்கள். தொழிலாளர்கள் அதிகமாக கைநாட்டுகள்தான். அவர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. இவர்கள் எழுதிக்கொடுப்பதில் கையொப்பம் போட்டுவிட்டு வருகிறார்கள். ஆகவே அதில் என்ன எழுதியிருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியாது. ஆகவே சர்க்கார் நியமிக்கிற வெல்பேர் ஆபீசர்கள் மூலம்தான் ஒப்பந்தங்கள் இருக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது.)

ப்ராவிடண்ட் பண்ட் இருக்கிறது. அதிலிருந்து கடன் கொடுக்கப் படுகிறது. ரெயில்வேயிலும் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அப்படிக் கொடுக்கப்படும்போது அவர்களின் சம்பளத்திலிருந்து அதைப் பிடித்துக்கொள்கிறார்கள். ஆகவே இந்த பிராவிடண்ட் பண்ட் பணத்தைத் தொழிலாளர்கள் தவறாகப் பயன்படுத்திக்கொள்ள ஒரு சந்தர்ப்பம் கொடுக்கக்கூடாது.

கார்ப்பரேஷனில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு வேலைப் பளு அதிகம். கொடுக்கிற கூலியோ குறைவு. தொழில் அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டுவரும்போது ஒரு வாக்குறுதியைக் கொடுத்திருந்தார்கள். இதைச் சர்க்காரிலிருந்து கொண்டு வருகிறோம். தொழிலாளர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு எங்களைச் சார்ந்தது என்று சொல்லியிருக்கிறார்கள். அது அவர்களுக்கு ஞாபகம் இருக்கும் என்று கருதுகிறேன். அதே நேரத்தில் நாங்களும் பலவிடங்களில் அட்ஜெஸ்ட் மெண்ட்ஸ் செய்து கொள்கிறோம். சிலவிடங்களில் குறைந்த சம்பளம் பெற்றும் கூட அதிக வேலை செய்யும்படி வற்புறுத்தப்படுகிற நிலை இருக்கிறது. அந்நிலையைச் சிறிது தடுத்து நிறுத்தி அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள வாக்குறுதிப்படி முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு நியாயம் கிடைக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தொழில் அமைச்சர் அவர்கள் சிறிது நேரத்திற்கு முன்னலேயே சொன்னார்கள். முடிவு கட்டினாலும் வற்புறுத்தவில்லை, எந்தத் தொழிலாளரும் பாதிக்கப்படவில்லை என்று

சொல்லியிருக்கிறார்கள். இப்போதும் சொல்கிறார்கள். எங்கேயாவது அப்படி வற்புறுத்தப்பட்டிருந்தால் அதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்களேயானால் அதுபற்றிய பிரச்சினையை அவர்கள் கவனிப்பார்கள்.

**திரு. பி. வேலுசாமி :** கிருஷ்ணவேணி ஆலையில் அப்பிரச்னை வந்தது. அது முடிந்து ஓடிவிட்டது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தொழிலாளர்களுடைய உணர்ச்சிகளைப் பற்றிச் சொல்கிறார்கள் என்று பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அரசாங்கத்தின்மீது குற்றம் சுமத்தினால் அதற்குப் பதில் சொல்லவேண்டியிருக்கிறது. என்ன நடைபெற்றது, ஏன் லாக் அவுட் ஏற்பட்டது என்பது அவர்களுக்குத் தெரியும். சம்பளத்தைப் பற்றி ஒன்றுமில்லை. அன்றே நான் அதைப்பற்றி இந்த மன்றத்தில் அறிவித்திருக்கிறேன். கொடுக்கக்கூடிய சம்பளத்தில் கொஞ்சம்கூடக் குறைக்கவில்லை. பஞ்சப்படியை ஒவ்வொரு ஆலையிலும் அந்த ஆலையின் சக்திக்கேற்றவாறு குறைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு வருடமும் அதன் வரவு செலவைப் பார்த்து லாபம் வந்தால் அந்த லாபத்தை அரசாங்கமே எடுத்துக் கொள்ளாமல் மீண்டும் அதைத் தொழிலாளர்களுக்கு குறைக்கப்பட்ட பஞ்சப்படியை டெஃபர்ட் பேமெண்ட் என்று திருப்பிக் கொடுப்போம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களிடையே ஒரு தகராறு. அது சுமூகமாக முடிந்துவிட்டது. அரசின்மீது ஒரு தவறும் கிடையாது. தொழிலாளர்களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். நமக்கு அங்கு லாபம் வரும்போல் தோன்றுகிறது. அப்போது அதை மீண்டும் கொடுத்துவிடலாம் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

**திரு. பி. வேலுசாமி :** அமைச்சர் அவர்களின் நம்பிக்கை வெற்றி பெறும் என்று நம்புகிறேன். சர்க்காரைக் குறை கூறவேண்டுமென்று சொல்லவில்லை. வேலைப் பளுவால் ஏற்பட்ட மாறுதலினால் வந்தது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** வேலைப் பளுவிற்கேற்றவாறு இருக்கிற பஞ்சப்படியை, சம்பளத்தை உயர்த்திக் கொடுப்பதாக ஒத்துக் கொண்டிருக்கிறது. அதற்கேற்றபடி வேலைப்பளு தனியார் துறையிலும் ஏற்றப்பட்டிருக்கிறது. தனியார் துறையில் கொடுக்கப்படக்கூடிய அளவிற்கு நாம் கொடுக்கவில்லை. அதுதான் அவர்கள் குற்றச்சாட்டு. நமக்கு சக்தி இல்லை, ஆகவே கொடுக்க முடியாது என்று சொல்லியிருக்கிறோம்.

**திரு. பி. வேலுசாமி :** தனியார் துறையில் இருப்பதுபோல் உள்ள வேலைப் பளுவைப் பற்றி ஆட்சேபணையில்லை. அதைவிட அதிகமாக வரும் போதுதான் சொல்கிறோம்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** வேலைப் பளுவை அதிகப்படுத்தியிருக்கிறோம். அவர்களும் அதிகப்படுத்தியிருக்கிறார்கள். வேலைப் பளுவின் அளவிற்குக் கூலி உயர்த்தப்படவேண்டுமென்பது கோரிக்கை. அதையும் ஒத்துக்கொண்டிருக்கிறோம். அது தனியார் துறையில் உயர்த்துகிற அளவு கூடுதலாக இருக்கிறது. நம் சக்திக்கு ஏற்றவாறு பரிசீலித்து எப்படிச் செய்யமுடியுமோ அப்படி உயர்த்திக் கொடுக்கிறோம்.

* **திரு. வ. ஜார்ஜ் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது எங்கள் கட்சி சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பொதுவாக எந்த அரசியல் கட்சியை எடுத்துக் கொண்டாலும் தாங்களே தொழிலாளிகளின் தோழன், உழைப்பாளர்கள் என்று கூறிக்கொள்வது ஒரு மரபு. அந்த மரபை வைத்துக் கொண்டு தொழிலாளர்களை எக்ஸ்ப்ளாயிட் செய்கிற ஒரு நிலையைத்தான் காண்கிறோம். எந்தத் தொழிற் சங்கத்தை எடுத்துக் கொண்டாலும் அதில் தலைவர்களாக் வெளியில் உள்ள அரசியல்



கட்சியைச் சார்ந்த நண்பர்கள்தான் இருக்கிறார்களே தவிர அந்தத் தொழிலில் உள்ள தொழிலாளர்கள் அடிமட்டத்தில் இருக்கிற நிலையைக் காணவில்லை. இதனால் ஒரு 'பொலிட்டிக்கல் எக்ஸ்ப்ளாயிடேஷன்' தான் நடந்துகொண்டிருக்கிறதே தவிர உண்மையில் தொழிலாளர்களின் நலன்கள் பேணப்படவில்லை. எனவே இந்த அரசு தொழிலாளர்களின் நலனைப் பேணுகிறது என்றால் அந்தத் தொழிலில் உள்ளவரே அந்தத் தொழிற்சங்கத்தின் தலைவராக இருக்கவேண்டும் என்றும் வெளியில் உள்ளவர்கள் அதில் தலையிடக்கூடாது என்ற நிலையில் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக தொழிலாளர்களுக்குள் தகராறுகள் ஏற்படுவதற்குக் காரணம் அரசியல்தான். போட்டிச் சங்கங்களை ஏற்படுத்துவதன் காரணமாகத்தான் தகராறுகள் ஏற்படுகின்றன. அதை உடனடியாக அரசாங்கம் பரிசீலித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொழில் ஸ்தாபனங்களில் வளர்ச்சி ஏற்பட வேண்டுமானால் தொழிலாளர்கள் மேனேஜ்மெண்டில் பங்கு பெற வேண்டும் என்ற முறையைத் தர்க்க ரீதியாக ஆராய்ந்து வருகிறோம். ஒரு சில ஸ்தாபனங்களில் செயல் படுத்தப்பட்டதுபோல் தெரிகிறது. எல்லாத் தொழிற்சாலைகளிலும் அரசாங்கத் தொழிற்சாலையாக இருந்தாலும், தனியார் துறையாக இருந்தாலும், அந்த மேனேஜ்மெண்டில் தொழிலாளர்கள் பங்கு பெற வழி வகை செய்தால் தொழில் தகராறுகளில் குறைவு ஏற்படும். இந்த அரசாங்கத்தின் தொழில் கொள்கையை விமர்சிக்கும் நேரத்தில், நாம் 1967–68 நிலையையும் ஒப்பிட்டு இப்போதைய நிலைமையைப் பார்த்தால் உண்மையில் திருப்தி அடையும் நிலைமை இருக்கிறது என்று ஒத்துக்கொள்கிறேன். 1967–68-ல் தொழிலில் அமைதியின்மை மற்றும் தொழில் தகராறுகள் ஏற்பட்டன. அதை நாங்கள் கூற வேண்டியதில்லை. நேஷனல் லேபர் கமிஷன் ஆய்வுக் குழு இங்கு வந்து பார்த்து அவர்கள் சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால் இன்று அந்த ஆய்வு உரையின்படி 1967–68 நிலைமையைப் பார்த்தால், ஒரு நல்ல நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைத்தான் பார்க்கிறோம்.

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** 1967–68-ல் நேஷனல் லேபர் கமிஷன் வந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. வ. ஜார்ஜ் :** நேஷனல் கமிஷன் ஆன் லேபரின் ஆய்வுக்குழு (Study Group) வந்தது.

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** நேஷனல் லேபர் கமிஷன் அமைக்கப்பட்டது டெல்லியில். ஸ்டடி குரூப் என்பது வேறு. அதன் அறிக்கை இருக்கிறது. அதற்கும் இந்தக் கமிஷனுக்கும் சம்பந்தம் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வ. ஜார்ஜ் :** தொழிலாளர்களுக்கு நன்மை செய்வது என்று சொல்கிறபோது, ஆர்கனைஸ்ட் லேபர்களைப் பற்றித்தான் சிந்திக்கப்படுகிறது. நான்—ஆர்கனைஸ்ட் லேபராக இருக்கிற விவசாயத் தொழிலாளர்கள் மற்றத் தொழிலாளர்களைப் பற்றிக் கருதுவதில்லை. இப்படி நன்மைகள் வருகிறபோது ஆர்கனைஸ்ட் லேபர்களுக்குத்தான் செய்கிறோம். மருத்துவ வசதியை எடுத்துக் கொண்டாலும், ஈ.எஸ்.ஐ. போன்ற மற்ற வசதிகளை எடுத்துக் கொண்டாலும் சாதாரணத் தொழிலாளர்களுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் கிடைப்பது இல்லை. விவசாயத் தொழிலாளர்களுடைய நிலை என்ன? ஒரு வருஷத்தில் மூன்றில் ஒரு பங்கு நாட்களுக்குத் தான் வேலை இருக்கிறது. மற்ற நாட்களில் அவர்களுக்கு வேலை இல்லை. இந்த நிலைமையில் இருக்கின்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு அந்தத் தொழில் இல்லாத சமயங்களில் மாற்று வேலை கிடைக்க

சிறு தொழில் திட்டங்களும், அதை நிறைவேற்ற முடியாத இடங்களில் ஒரு இன்ஷூரன்ஸ் ஸ்கீமும் ஏற்படுத்தி அரசாங்க உதவி கிடைக்க வசதி செய்து இருந்தால் இதைத் தொழிலாளர் நலன் கருதி செயல்படும் சர்க்கார் என்று கருதுவேன். இன்றையதினம் அந்த முறையில் இல்லை. அதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிறகு எங்கள் பகுதியில் பனையேற்றுத் தொழிலாளர்கள் மிகவும் கடுமையாக உழைக்கின்றவர்கள். அவர்களுக்கு இந்த ஆர்கனைஸ்ட் லேபர் யூனியன் இல்லை. அவர்களுடைய குறைகளைப் பற்றிக் கவனிப்பார் அற்ற நிலைமையில் இருக்கிறார்கள். கடந்த வருஷம் இந்த அமைச்சரவை அந்தத் தொழிலாளிகளில் சாதாரணமாக ஆக்ஸிடண்டில் சாகின்றவர் களுடைய குடும்பத்திற்கும் ஆயிரம் ரூபாய் நிதி உதவி கொடுப்பதாக அறிவித்தார்கள். இதுவரையில் அந்த உதவி யாருக்கும் அளிக்கப் பட்டதாகத் தெரியவில்லை. இது எல்லாம் பிரசாரத்திற்காக அறிவிக்கப் பட்டதாகத் தோன்றுகிறது. விளம்பரத்திற்காக சில திட்டங்களை அறிவித்துவிட்டு, செயல் படுத்தாமல் இருப்பது நல்லதல்ல. நல்ல திட்டங்களை அறிவித்தால் அவற்றை உடனடியாகச் செயல்படுத்த வேண்டும்.

இப்பொழுது இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், ஒரு லட்சத்திற்கு மேல் ஜனத் தொகை உள்ள நகரங்களில் எரிவாயு வினியோகிக்கும் திட்டம் ஒன்று வைத்திருப்பதாகத் தெரிகிறது. அந்தப் பனையேற்றுத் தொழிலாளர்களுக்கு இந்த எரிவாயு அடுப்பு வைக்க, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனோடு இந்த அரசு தொடர்பு கொண்டு, இந்தத் தொழி லாளர்கள் இருக்கிற இடங்களிலும் அதை வினியோகிக்க ஏற்பாடு செய்து அந்த அடுப்புக்களை அமைக்க அரசாங்கம் உதவவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பனையேற்றுத் தொழிலாளர் களுடைய வாழ்வு அரிஜனங்களுடைய வாழ்வைவிட மிக மோசமாக இருக்கிறது என்று கூறிக்கொள்கிறேன். அதை யாரும் மறுக்க முடியாது. இந்தப் பனையேற்றுத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற குடும்பங்களில் பிள்ளை களுக்கு அரிஜனங்களுக்கு வழங்கப்படுகின்ற சகல சலுகைகளையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். படிப்பு விஷயத்திலும், வேலை தேடித் தரும் முறையிலும் குறிப்பாகச் செய்து தர வேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய எம்பிளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சுகளைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த அமைப்பு இருக்கிறது. ஆனால் அதனால் பலன் என்ன ? வேலை இல்லை என்று பதிவு செய்து வைத்துக் கொண்டால், வேலைக்கு ஆள் வேண்டும் என்று அரசாங்கத்திலிருந்தோ தனியார் துறை ஸ்தாபனங்களிலிருந்தோ தகவல் வந்தால், 10 அல்லது 15 பேர்களை அனுப்பி வைக்கும் இந்த ஸ்தாபனம். அவர்களில் ஒருவருக்கு வேலை கிடைக்கும். ஆனால் இப்படிக் கிடைக்கும் வேலைகள் நிரந்தரமாக இருப்பதில்லை. அரசாங்கத்துறையாக இருந்தால் மூன்று அல்லது நான்கு மாதங்கள் நீடிக்கலாம். அதற்குப் பின்னால் அதே வேலையில்லாத நிலைமைதான். இந்த மாதிரி வேலை தேடிக் கொடுக்கும் ஸ்தாபனம் இருந்து வருவது எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த வேலை தேடித் தரும் ஸ்தாபனங்களால தேடித் தரப்படும் வேலைகள் நிரந்தரமானதாக இருந்தால்தான் பலன் உண்டு. நிரந்தரமான வேகன்சியில் அவர்கள் அமர்த்தப்பட வேண்டும். அந்த மாதிரியான இடங்களில் அவர்களை அமர்த்த அரசு பரிசீலனை செய்து ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எம்பிளாயிமெண்ட் எக்ஸ்சேஞ்சில் பல வருஷங்களாகப் பதிவு செய்தும் வேலை கிடைக்காமல் ஓவர் ஏஜ் ஆகி பலர் இருக்கிறார்கள். நான் தற்போது குறிப்பிட விரும்புவது என்னவென்றால், எம்பிளாயி



மெண்ட் எக்ஸ்சேஞ்சில் பதிவு செய்து கொண்டு வேலை கிடைக்காமல் இருந்தால், அந்த பதிவு செய்து கொண்டிருக்கின்ற கால வரம்பை ஏஜ் கேல்குலேஷனுக்கு அரசாங்க உத்தியோகத தகுதிக்கு, குறிப்பிட்ட வயது வரம்போடு கூட்டி அவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கேரள மாநிலத்தில் இந்த முறை அமுல் செய்யப்பட்டு வருகிறது.

அடுத்தபடியாக பிசிகலி ஹேண்டிகேப்டுகளுக்காக சென்னை நகரத்தில் ஒரு ஸ்தாபனம் இருக்கிறது. அதில் 152 பேருக்கு வேலை கொடுக்கப் பட்டிருப்பதாகக் குறிப்பு இருக்கிறது. எங்களுடைய பகுதியில் சில ஹேண்டிகேப்டு நபர்கள் சுமார் பத்து வருஷமாக எந்தவிதமான வேலையும் இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கும் நிலைமையைப் பார்க்கிறேன். தாங்கள் நஞ்சு தின்று தற்கொலை செய்து கொள்ள உரிமை வழங்கினால்போதும் என்று சொல்லும் நிலைமைக்கு அவர்கள் மோசமாயிருக்கிறார்கள். அதை அவர்களே சொன்னார்கள்.

இந்த மாதிரியாக எம்பிளாயிமெண்ட் எக்ஸ்சேஞ்சில் பதிவு செய்து கொண்டவர்களுக்கு எந்த விதமான தகவலும் கொடுப்பது இல்லை. இந்த மாதிரி நிலையில் உள்ளவர்களுக்கு அவ்வப்போது தகவல் கொடுத்துக் கொண்டிருந்தால் தற்கொலை எண்ணம் வராமல் இருக்கும். நெடுங்காலமாகப் பதிவு செய்து கொண்டிருப்பவர்களுக்குத் தகவல் கொடுத்துக் கொண்டிருந்தால் அவர்களுக்கு ஒரு மனத் தேர்வு ஏற்படும். மக்கள் நலம் கருதும் சர்க்கார் என்று சொல்லிக் கொண்டு தொழிலாளிகளை எக்ஸ்பிளாயிட் செய்யு நிலை இருக்கக் கூடாது. இப்பொழுது அரசாங்கத்தால் எடுக்கப்பட்டுள்ள பஞ்சாலைகளில் உள்ள தொழிலாளர்களுக்கு தொழிலாளர்கள் நல சட்டங்கள் விலக்கு என்று இருப்பது சரியல்ல. கன்னியாகுமரி மாவட்டத்தில் தோட்டத் தொழிலாளர் களுக்கு தனிப்பட்டவர்களிடம் ஒரு நாள் கூலி ரூ. 4–14 வீதம் கிடைக்கின்றது. அரசாங்கத் தொழிலாளர்களுக்கு ரூ. 3–45 வழங்குவது என்றால் அது சரியாகாது. அதுபோலவே தமிழக அரசு போக்கு வரத்துத் துறையில் இருக்கிற தொழிலாளர்கள் நிலை பற்றி ஒரு வார்த்தை. போக்குவரத்துத் துறையில் சென்னையில் வேலை செய்து கொண்டிருக்கிறவர்கள் பலர் பல மாவட்டங்களிலிருந்து வந்திருக் கிறார்கள். அவர்களுக்கு சென்னையில் வீட்டு வசதி இல்லை. தனியார் துறையிலுள்ள பௌண்டேஷன்களில் வீட்டு வசதி வேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால் அரசாங்கம் நடத்தும் தொழிலில் அவர்களுக்கு எந்தவிதமான தங்குவதற்கான வீட்டு வசதியும் செய்து கொடுக்கப்படவில்லை. குறைந்த வருவாயைப் பெற்றுக்கொண்டு, சென்னை மாநகரத்திலே வீடு தேடி ஜீவிக்க வழியேயில்லை. அங்கே இங்கே என்று கண்ட இடத்திலே தங்கக்கூடிய அவல நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, அரசாங்கம் அவர்களுக்குப் படிப்படியாக வீடு கொடுக்கும் ஸ்கீமை நடைமுறையில் கொண்டுவர வேண்டுமென்று வற்புறுத்தி என்னுடைய கருத்துக்களை முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் மானியக் கோரிக் கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இங்கே தெரிவிக்கலாம் என்று விரும்புகிறேன்.

இந்த மன்றத்திலே பேசிய உறுப்பினர் திரு. கோவிந்தராசன் அவர்கள், இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு தொழில் துறையில் ஏற்படும் பல்வேறு போலீஸ் வழக்குகளையெல்லாம் வாபஸ் வாங்குவதில்லை என்ற குற்றச்சாட்டைக் கூறினார்கள். பல்வேறு தொழிற் சாலைகளில் ஏற்பட்ட காரியங்களுக்கு, நடைபெற்ற போராட்டங்களிலேயெல் லாம் தொழிலாளர்கள் மீது வழக்குப் போடப்பட்டிருந்ததை இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு திரும்பப் பெற்றிருப்பதை இந்த மன்றத் திலேயிருக்கின்ற அத்தனைபேரும் தெளிவாக அறிவார்கள். அதேநேரத்தில்,

பலாத்காரத்தைத்தூண்டும் முறையிலே ஏற்பட்டுவிட்ட, இரண்டு பேர்களுக்கிடையே ஏற்பட்ட தகராறின் காரணமாக ஒருவர் வழக்கைத் திரும்பப் பெற மறுத்து விட்டால் அந்த இடத்திலே அரசாங்கம் எதுவும் செய்ய முடியாது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அப்படிப்பட்ட இடங்களைத் தவிர, அரசாங்கத்தறை வழக்குகளாயிருந்தால் எல்லா வழக்குகளையும், இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு திரும்பப் பெற்றிருப்பதைத் தெளிவாகப் பார்க்கிறோம். இன்னொரு கருத்தைத் தெரிவித்தார்கள். இங்கிருக்கும் தொழிலாளர்களைப் பல்வேறு இடத்திலும் கைது செய்து ...கிறார்கள், ஆனால் நிர்வாகத் துறையிலே அப்படி கைது செய்யப்படுகிறார்களா ? தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய பிராவிடண்ட் பணம், இ.எஸ்.ஐ. பணம் செலுத்தப்படாமல் இருக்கும் இப்படிப்பட்ட நேரத்திலே அரசாங்கம் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறது என்ற குற்றச்சாட்டைத் தெரிவித்தார்கள். இதே கருத்தை இரண்டாண்டு காலத்திற்கு முன்பு, மறைந்துவிட்ட முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சர் பொறுப்பையேற்ற நேரத்தில், கோவை மாவட்டத்தில் மூடிக்கிடந்த பஞ்சாலைகள் சம்பந்தமாக திருச்சியிலே ஒரு கூட்டம் நடந்த நேரத்தில், எல்லாத் தொழிற்சங்கத் தலைவர்களையும் வைத்துக்கொண்டு, இப்படிப்பட்ட குற்றச்சாட்டைப் பல்வேறு தொழிற்சங்கத் தலைவர்களும், பிராவிடண்ட் பண்ட் கட்டப்படவில்லை, இ எஸ்.ஐ. பணம் கட்டப்படவில்லை என்ற குற்றச்சாட்டைச் சுமத்திய நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் மிகத் தெளிவாகக் கேட்டார்கள். நாம் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தால் என்ன நடக்கும் ? ஓடிக்கொண்டிருக்கும் தொழிற்சாலைகளை மூடவேண்டிய நிலைமை வரும். அதன்காரணமாக ஏராளமான தொழிலாளர்களின் வேலை வாய்ப்பு பாதிக்கப்படும் என்ற கருத்தையும் சொல்லி இங்கிருக்கின்ற தொழிற்சங்கத் தலைவர்கள், அப்படி யார் மீதாவது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று விரும்பினால், பெயரைத் தெரிவிக்கலாம் என்று கேட்டார்கள். ஆனால் இந்த இரண்டாண்டுக் காலத்தில், அப்படி எந்தவொரு நிர்வாகத்தின் மீதும், தொழிற்சங்கத் தலைவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்களா ? அப்படி யாரையும் காட்ட முடியாது. அதோடு மட்டுமல்ல, இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, நிர்வாகத் தரப்பிலேயுள்ள அங்கத்தினர்கள், ஆலை நிர்வாகிகள், தங்களுடைய நிர்வாகத் துறையிலிருந்தும்கூட எடுத்த நடவடிக்கை தவறாயிருந்ததன் காரணமாக இன்று நாம் கைது செய்திருக்கின்றோம் என்பதைப் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன். கடந்த மாதம் எஸ்.ஆர்.சி. மில்லில் ஏற்பட்ட தொழில் தகராறின் காரணமாக, அங்கிருக்கும் மில் நிர்வாகிகள் பிடிவாதமாக நடந்து கொண்டதால், வேலைக்குச் சென்ற தொழிலாளர்களை உள்ளே அனுமதிக்காத காரணத்தால், தடுத்து நிறுத்திய நிர்வாகத் தரப்பு ஊழியர்களைக் கைது செய்திருக்கிறார்கள். குற்றவாளியாக மாற்றியிருக்கிறார்கள் என்பதையும் பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் இன்னொரு கருத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த மாமன்றத்திலே பேசிய உறுப்பினர் திரு. வேலுசாமி அவர்கள், பெண்கள் இரவு 12 மணிக்குப் பஞ்சாலைகளில் வேலை செய்வதாகக் கூறினார்கள். உள்ளபடியே அப்படி யார் செய்திருந்தாலும் தவறுதான். அப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தால் அவர்கள் தொழிற்சங்கத்தின் மூலமாக அங்கிருக்கும் அதிகாரிகளைச் சந்தித்துச் சொல்லியிருந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும் என்ற கருத்தையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு கார்ப்பொரேஷன் எடுத்துக்கொள்ளும் மில்களில் சம்பளம் குறைவாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டையும் சுமத்தினார்கள். கார்ப்பொரேஷன் எடுத்துக்கொண்டிருக்கும் மில்களில் இன்றைக்குப் பஞ்சப்படி குறைவாகயிருந்தாலும்கூட, அந்தப் பஞ்சப்படியை, அந்த ஆலை லாபகரமாக ஓடும் நேரத்திலே திருப்பிக்கொடுப்போம் என்ற வாக்குறுதியை அரசாங்கம் கொடுத்திருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் தமிழகத்திலேயிருக்கும் பல்வேறு ஆலைகள், பல்வேறு தொழிற்



சங்கங்களைச் சார்ந்த தலைவர்கள் இன்று கொடுக்கப்படும் குறைந்த சம்பளத்திற்குச் சம்மதித்தது மட்டுமல்ல, பஞ்சப்படியைக் குறைந்த அளவில் வாங்கிக்கொள்ளவும், குறைந்த தொகையைத் திருப்பிப் பெறாமல் இருக்கவும் பல்வேறு முறையிலே, பல்வேறு சங்கங்கள் ஒத்துக்கொண்டிருப்பதை யாரும் மறுக்க முடியாது. ஒரு கட்சி மட்டுமல்ல, இந்த நிலைக்கு எல்லாக் கட்சிகளும், எல்லாச் சங்கத்தைச் சார்ந்தவர்களும், இடதுசாரிக் கட்சியும்கூட, இப்பொழுது திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் தாங்கள் இல்லை என்று குறிப்பிடுகிறார்கள். நான் அவர்களை மிகப் பணிவன்போடு மாண்புமிகு தலைவர் மூலமாகக் கேட்டுக்கொள்ளுகின்றேன். அவர்களைச் சார்ந்த சங்கம், கோயம்புத்தூரில் சோமசுந்தரா மில்லிலும், காளீஸ்வரா மில்லிலும் அங்கே குறைந்த சம்பளத்திற்கு ஒத்துக்கொண்டுள்ளார்கள். ஏனென்றால் இந்தத் தொழிற்சங்கத்தில் மெஜாரிட்டி சங்கத்தைச் சார்ந்தவர்கள்....

திரு. எ. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, எனது சங்கம் கையெழுத்துப் போடவில்லை என்றுதான் சொன்னேன்.

திரு. க. துரைசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் தனது சங்கம் கையெழுத்து போடவில்லை என்ற கருத்தைத் தெரிவிக்கிறார்கள். சங்கம் கையெழுத்துப் போடாமலிருந்தாலும், ஆயிரக்கணக்கான உறுப்பினர்கள், தொழிலாளர்கள் அந்தத் தலைவருடைய கோரிக்கையைக் கேட்காமல் போய்விட்டார்களோ என்னவோ தெரியவில்லை. அப்படிப்பட்ட நிலைமைகள் இன்றைக்கு ஏராளமாக இருப்பதைப் பார்க்கிறோம். அரசாங்கம் எடுத்துக்கொண்ட மில்களில் மட்டும்தான் இப்படிப்பட்ட நிலைமைகள் என்று யாரும் தயவு செய்து கருதவேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நம்முடைய அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் பொறுப்பேற்ற பிறகு முதலில் 1967-ம் ஆண்டு மே தின விடுமுறையை அரசாங்கம் அறிவித்தது. அன்றைக்குக்கூட சிலர், 'நாங்கள் இதைப் பெருமையாகக் கருதவில்லை. வெறும் விடுமுறைதானா ? இதற்குச் சம்பளம் உண்டு என்று அறிவிக்கவேண்டும்' என்ற கோரிக்கையைத் தெரிவித்தார்கள். நீண்ட நெடுங்காலமாக, தமிழகத்திலுள்ள தொழிலாளர்களின் கோரிக்கையான மே தின விடுமுறை விடவேண்டுமென்ற கோரிக்கையை, இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு, ஏற்று முதலில் மே தின விடுமுறையை விட்டது. இன்றைக்கு அதே மே தினத்திற்கு சம்பளத்தோடு கூடிய விடுமுறையாக அளிக்க அதற்குத் தேவையான சட்டத்தைத் தமிழக அரசாங்கம், திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம், இந்த நாட்டிலுள்ள தொழிலாளர்களின் மீதிருக்கும் பற்றின் காரணமாக இன்றைக்குக் கொண்டுவந்திருப்பதைப் பார்க்கிறோம். நம்முடைய அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டபிறகு, இன்றைக்கு நாட்டிலே தொழில் அமைதி நிலவுவதைப் பார்க்கிறோம். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினரே, தொழில் அமைதி இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு நமது தமிழகத்தில், பல வெளி மாநிலங்களிலிருந்து—வங்காளத்திலிருந்தும், பம்பாயிலிருந்தும்—தொழில்களைத் துவங்க போட்டி போட்டுக்கொண்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டதைப்போல அல்லாமல், எங்கள் திருப்பூர் நகரத்தில் மேற்கு வங்காளத்திலிருந்து பனியன் பேக்டரிகள், 2, 3 பேக்டரிகள் வைக்க நடவடிக்கைகள் இன்று நடந்து கொண்டிருக்கிறது. இந்த அளவுக்கு இன்றைக்குத் தமிழகத்தில் தொழில் அமைதி நிலவுவதையும், புதிய தொழிற்சாலைகள் ஏராளமாகத் துவங்கி வருவதையும் பார்க்கிறோம்.

அதே நேரத்தில் இந்த அரசாங்கம், தொழிலாளர்களுக்குப் பல்வேறு சலுகைகளைக் கொடுத்திருக்கிறது. நம்முடைய சர்க்கார் வருவதற்கு முன்னால், அரசாங்கத் துறை ஊழியர்களும் சரி வேறு பலரும் சரி, தொழிற்சங்க உரிமைகள் அற்றுக் கிடந்தார்கள். தங்களுடைய சங்கத்தை அங்கீகரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை வற்புறுத்திச் சொல்லியிருந்

அந்த உழைப்பு தான் நாட்டின் செல்வம் என்று மக்களுக்கு உணர்த்த வேண்டும். செய்யும் தொழிலை தெய்வமாகக் கருத வேண்டும், திறமை யாரிடமிருந்தாலும், தேடிச் சென்று அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சமூகம் தனி மனிதனால் ஆனது. எனவே தனி மனிதன் முழு மனதுடன் பாடுபட்டு உழைத்தால் தான், சமூகம் உயரும் என்பதை மக்களுக்கு உணர்த்த வேண்டும். சோம்பேறிகளும், சமூகத்தை ஏமாற்றுகிறவர்களும், பழமைவாதிகளும் ஒழிக்கப்பட வேண்டும், அல்லது ஒடுக்கப்பட வேண்டும். உழைப்புத்தான் நாட்டின் உயிர்நாடி என்பதை உணர்த்த வேண்டும். தொழிலின் அடிப்படையில் மரியாதை வழங்கப் படாமல், ஜனநாயகத்தின் அடிப்படையில் உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

சங்ககிரி சிமிண்ட் பேக்டரியில் 2,000 தொழிலாளர்கள் வரையில் வேலை செய்கிறார்கள். இவர்களுக்கு மருத்துவ வசதி குறைவாக உள்ளது. சங்ககிரியில் தற்போது 8 படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரி தான் உள்ளது. எனவே, அதை 40 படுக்கைகள் கொண்ட பெரிய ஆஸ்பத்திரியாக மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தண்ணீர் பிரச்னையும் தீர்க்கப்பட வேண்டும்.

அடுத்தபடியாக, தோல் பதனிடும் தொழிலை அருந்ததிய மக்கள் தான் மேற்கொண்டிருக்கிறார்கள். அரிசன மக்கள், அருந்ததியர்கள் தான் தமிழ்நாடு பூராவும் தோல் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். செங்கற்கள், ஓடுகள் தயாரிக்கும் தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்ததுபோல, மிதியடிகள் செய்யும் தொழிலாளர் களுக்கும், பரி தைக்கும் தொழிலாளர்களுக்கும் குறைந்த அளவு ஊதியத்தை நிர்ணயிக்கவேண்டும் என்று தொழிலாளர் நல அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

*திரு. என். மருதாசலம்: சபாநாயகர் அவர்களே, தொழிலாளர் மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தொழிலாளர்கள் நலன்களைப் பாதுகாப்பதற்கு என்று ஒரு தொழிற் தகராறுச் சட்டம் இருக்கிறது. அந்தத் தொழிற் தகராறு சட்டத்தில் முதலாளிகள் வாழ வழி வகுக்கப்பட்டிருக்கிறது. கோவை யிலே தொழில் வளர, வளர தொழில் தகராறுகள் அதிகரித்துக் கொண்டு வருகிறபொழுது, அந்தத் தொழிலாளர் கமிஷனிடம் தொழிலாளர்கள் தொழில் சம்பந்தமாக ரிபோர்ட்டு பண்ணினாலும், அந்த ரிபோர்ட்டு வருஷக் கணக்கில் நீடித்துக் கொண்டே போகிறது. அப்படி நீடித்துக்கெண்டே போவதால் முதலாளிகளுக்கு உற்சாகம் ஏற் படுகிறது. அப்படி நீடித்துக்கொண்டே போனால், தொழிலாளிகளுக்கு குறைந்தபட்சமாக முதலாளிகளிடமிருந்து பாதிச் சம்பளத்தையாவது வாங்கிக் கொடுப்பதற்கு இந்தத் தொழில் தகராறு சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டுவர வேண்டும். அதே மாதிரி சம்பளப் பட்டுவாடா சட்டம் ஒன்று இருக்கிறது. அதுவும் தொழில் தகராறு சட்டத்தில் ஒரு ஷரத்துதான். சம்பளப் பட்டுவாடா சட்டத்தில் 10-வது நாள் அல்லது 7-வது நாள் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆனால், இப்பொழுது இருக்கிற முதலாளிகள் 30-ம் தேதி அல்லது அடுத்த மாதம் சம்பளம் கொடுக்கிறார்கள். அப்படிச் சம்பளம் கொடுக்காத முதலாளி மீது தொழிற் தகராறு சட்டத்தின் கீழ் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கிற தொழில் தகராறு சட்டத்தின் அடிப்படையில் தொழிலாளர் குறைகளைப் பரிசீலனை செய்ய ஒவ்வொரு பகுதியிலும் முத்தரப்பு மகாநாடு ஒன்று கூட்டப்படுகிறது. இந்த முத்தரப்பு மகாநாடு 6 மாதம் [illegible] ஒரு முறையோ அல்லது அடிக்கடியோ கூடி தொழிலாளர் களுடைய பிரச்னைகளைப் பரிசீலனை செய்தால், தொழிலாளர்களுக்கு



நன்மையாக இருக்கும், அதற்கான நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டும். அப்படி நடவடிக்கை எடுக்காவிட்டால் தான் தொழிலாளர்களுக்கு அதிருப்தி ஏற்படுகிறது, முதலாளிகளுக்கு உற்சாகம் ஏற்படுகிறது.

அடுத்தபடியாக, இன்றைக்கு மத்திய சர்க்கார் ஒரு சம்பள போர்டை நியமித்திருக்கிறார்கள். மின்சார இலாகாவில் இருக்கும் தொழிலாளர் களுக்கு ஒரு சம்பள போர்டு நியமிக்கப்பட வேண்டும். காங்கிரஸ் சர்க்காரால் அப்படிப்பட்ட போர்டு நியமிக்கப்பட்டது. அதைக் காங்கிரஸ் சர்க்கார் அமுல் நடத்தவில்லை. இப்பொழுது இருக்கும் தமிழக சர்க்காராவது இந்த சம்பள போர்டு முறையை மின்சார இலாகா தொழிலாளர்களுக்கு அமுல் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே சமயத்தில், ஒவ்வொரு நகர சபையிலும் நகர சுத்தித் தொழிலாளிகள் வேலை செய்கிறார்கள். அவர்கள் வேலை செய்யும் இடங் களில் 5 வருஷம், 10 வருஷம் என்று தொடர்ந்து வேலை செய்து வருகிறார்கள். ஆனால், பர்மனெண்ட இடையாது, டெம்பரரியாகத்தான் வைத்திருக்கிறார்கள். எந்த விதமான வாழ்க்கை வசதியும் இடையாது. சாதாரணமாக நோய்வாய்ப் பட்டாலும், ஆஸ்பத்திரிக்கு உத்தரவாதம் இடையாது. அதனால் தொழிலாளிகள் அவஸ்தைப்படுகிறார்கள். தொழில் சட்டத்தின்படி 3 வருஷம் வேலை செய்திருந்தால், பர்மெனண்ட் செய்யப்படவேண்டும். ஆகவே, அந்த வகையில் உத்தரவு போட்டு அவர் களுக்கு சலுகைகளும் தரவேண்டும். இந்த மாதிரியே எல்லா இடங் களிலும் உள்ள தொழிலாளிகளை டெம்பரரியாக இருப்பவர்களை பர்ம னெண்ட் செய்ய ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

சிங்கோனா தொழிலில் 200 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர் கள் 10, 15 வருஷமாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர் களுக்குச் சம்பளம் 10 ரூபாயிலிருந்து 25 ரூபாய் வரைக்கும் தான். அதிக பட்சம் 25 தான். ஆகையினால் இவர்களையெல்லாம் நிரந்தர தொழிலாளிகளாகப் பாவித்து, சம்பளப் பட்டுவாடா சட்டத்தின் கீழ் நிரந்தர வேலையும், சம்பளமும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன் . . . . (மணி அடித்து அடுத்த உறுப்பினர் அழைக் கப்பட்டார்).

* திரு. எஸ். இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் துறை மானியத்தை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

மேதினி போற்றும் மே தினத்தை ஊதியத்தோடு கூடிய விடுப்பு நாளாக அறிவிக்க அரசு முன் வந்திருப்பது எல்லோராலும் பாராட்டக் கூடிய ஒன்று. தொழிலாளர்களுக்காகப் பாடுபடுகிறவர்கள், தொழிலாளர் களுடைய உரிமையைக் காக்கிறோம், மே தினத்திற்கு நாங்கள்தான் சொந்தக்காரர்கள் என்று சொல்லுகிறவர்கள் அதைப் பற்றிப் பாராட்டிப் பேசுவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால், பாராட்ட வேண்டிய வற்றைப் பாராட்டத் தவறி விட்டார்கள். இனியாவது பாராட்டுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

வளர்க தொழில், வாழ்க தொழிலாளர்—தொழில் வளர்ந்தால்தான் தொழிலாளி; தொழிலாளி இருந்தால் தான் தொழில். ஆகவே தொழிலும் தொழிலாளரும் ஒன்றோடொன்று இயைந்தது. இம் முழக் கத்தில் முதலாளிகளைப் பற்றிக் குறிப்பிடவில்லை. காரணம், இந்த முழக்கம் சமதர்மத்தின் அடிப்படையில் இவ்வரசால் உருவாக்கப்பட்ட தனால்தான். இதை எதிர்க் கட்சி, அதிலும் பிரதான எதிர்க் கட்சிக் காரர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய சட்ட மன்ற உறுப்பினர் சொன்னார்கள். தனியார் நிர்வாகம் எப்படி இருந்தாலும், அரசு ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்று. மின் வாரியமாக இருந்தாலும், ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டாக இருந்தாலும், அரசு ஒரு முன்மாதிரியான நிர்வாகமாக இருக்க வேண்டும் என்றார்கள். இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி முதல் சுதந்திரா கட்சி வரையில் எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்கு ஒன்றே ஒன்றை மட்டும் திருப்பிச் சொல்ல விரும்புகிறேன். தொழில் சங்கங்கள் முன்மாதிரியான சங்கங்களாக இருக்கின்றனவா? அதைப் பார்க்க வேண்டும். அவை மாடல் யூனியன்களாக இருக்கின்றனவா? தொழில் சங்கங்கள் எப்படி நடத்தப்பட வேண்டும், என்பதற்கு முன் மாதிரியாக இருக்கின்றனவா? அந்த நிலையில இன்றைக்கு தொழில் சங்கங்கள் நடைபெறவில்லை. குறிப்பாக எண்ணூர் அனல் மின் திட்டத்தில் பல்வேறு தொழில் சங்கங்கள் நடைபெறுகின்றன. அந்த அனல் மின் திட்டம் மின்சார வாரியத்தினால் நடத்தப்படுகிறது. அரசு நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது. அங்கே குறிப்பிட்ட சங்கத்தைச் சேர்ந்த ஒரு தொழிலாளி இரும்புக் கட்டை தூக்கிக் கொண்டு வந்து சூப்ரவைசர் மண்டையில் அடித்தார். இதற்கு என்ன பொருள்? இதுதான் தொழில் சங்கமா சரிதானா? பொதுத் துறையில், சர்க்கார் துறையில் இப்படி நடைபெறுவது? இதை தொழில் சங்கத்தை நடத்துகிறவர்கள், தொழில் சங்கத் தலைவர்கள் கவனிக்க வேண்டும்.

இதே இடத்தில் சுதந்திராக் கட்சி நண்பர்கள் ஒரு தொழில் சங்கத்தை நடத்துகிறார்கள். எனக்கு முன் பேசிய சுதந்திராக கட்சி உறுப்பினர் அங்கேயிருக்கும் நிர்வாகத்தினர் பாரபட்சம் காட்டுகிறார்கள். தொழிலாளிகளை வைத்துப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில்லை என்று சொன்னார்கள். அவர்கள் ஒரு நோட்டீஸ் போட்டிருக்கிறார்கள். இது பொருத்தமானது தானா? என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள்? அங்கே நிர்வாகி ஒரு முஸ்லிம்; அங்கேயிருக்கும் பொறியாளர் ஒரு முஸ்லிம். அவரைப் பற்றி, அயுப்கானின் ஏடேபே, என்று குறிப்பிடுவது சரிதானா? தனிப் பட்ட அதிகாரியைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். இந்தத் துண்டு அறிக் கையில் (மாண்புமிகு பேரவைத் தலைவர் உறுப்பினரைத் துண்டுப் பிரசுரத்தைப் படிக்க வேண்டாம் என்று சைகை செய்தார்) அங்கே சிண்டிகேட் காங்கிரஸைச் சேர்ந்தவர்களும் ஒரு தொழில் சங்கத்தை நடத்துகிறார்கள்....

திரு ஏ. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, துண்டு அறிக்கை களைப் படிக்கிறது என்று ஆரம்பித்தால், எல்லோரும் ஆயிரக்கணக்கான துண்டு அறிக்கைகளைப் படிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : படிக்க விடவில்லையே.

திரு எஸ். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அதே போல சிண்டிகேட் கட்சியைச் சேர்ந்தவர்கள் தொழில் சங்கம் நடத்து கிறார்கள். அவர்கள் தங்கள் பத்திரிகையில் திராவிட முன்னேற்றக் கழக வட்டச் செயலாளர் என்று எழுதுகிறார்கள். பொதுத் துறையில் அரசு முன்மாதிரியான நிர்வாகமாக இருக்க வேண்டும் என்று சொல்லும்போது, தொழில் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் தொழில் சங்கத் தலைவர்கள் அல்லது தொழிற் சங்கங்களை நடத்துகின்ற அரசியல் கட்சிக்காரர்கள் முன்மாதிரியாக நடக்கிறார்களா என்பதைக் கவனிக்க வேண்டும்.

அதே போல, தொழிலாளர்கள் உரிமைக்காகப் போராடக் கூடாதா என்று கேட்டார்கள். உரிமைகளுக்குப் போராட வேண்டியதுதான். ஆனால், நெய்வேலியில் நடந்தது என்ன? பல கண்டக்டா ஒரு தொழில் சங்கத்தைச் சேர்ந்தவர். செக்கிங் இன்ஸ்பெக்டர் ஒரு சங்கத்தைச் சேர்ந்தவர். போலிச் சீட்டுகளை அச்சடித்து விநியோகித்தார் என்று செக்கிங் இன்ஸ்பெக்டர் கண்டித்தார். இந்த நிகழ்ச்சியின் விசாரணையின்



போது மூன்று தொழிலாளத் தோழர்கள் சாட்சியம் சொன்னபொழுது கத்தியால் குத்தப்பட்டார்கள். அதுபற்றி புலன் விசாரணை நடக்கிறது. இதை யெல்லாம் அவையின், உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்குக் காரணம், உரிமைகளுக்குப் போராடுவதில், பாடுபடுவதில் தவறு இல்லை. ஆனால், பலாத்காரச் சூழ்நிலைகளை விளைவிப்பதால் ஏதாவது அரசியல் லாபம் இருக்கலாம், ஆனால் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான நன்மையும் இல்லை என்பதை எடுத்துக் காட்டத்தான். இந்தப் போக்கின் காரணமாக, இன்றைக்கு இருக்கக் கூடிய தொழி லாளர்கள் வேறு தொழில் சங்கங்களை அமைக்க முன் வருகிறார்கள். ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்பதை ஒப்புக் கொண்டிருக்கிற நாம் புதிய சங்கங்களை ஆரம்பிக்கிறார்களே என்கிறார்கள். எல்லோரும் ஒப்புக் கொள்கிறார்கள், ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்று. ஆனால் அந்தச் சங்கம் தங்களுடைய சங்கமாக இருக்கவேண்டும் என்று ஒவ்வொரு அரசியல் கட்சியும் விரும்பும் நிலைமை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரம் இல்லை.

திரு. எஸ். இராமச்சந்திரன் : ஒரு நிமிஷம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரே நிமிஷத்தில் முடித்துவிடுங்கள்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தொழில் சங்கத்தின் நிர்வாகப் போக்குப் பிடிக்காதபோது, இப்படி வேறு சங்கம் வேண்டும் என்பது இயல்பு. இந்த நிலையில் புதிய சங்கங்கள் தோன்றுகின்றன என்பதை எல்லா அரசியல் கட்சிகளும் ஒப்புக் கொண்டாக வேண்டும்.

தொழிலாளர் நல இலாகா பற்றி ஒரு வார்த்தை. முதலாளிகள் விஷயத்தில் கொஞ்சம் கண்டிப்பாக இருக்க வேண்டும். நானே ஒரு சங்கத்திற்குத் தலைவன், கிண்டி ரேஸ் கிளப் தொழிலாளர் யூனிய னுக்கு. முதலாளிகள், இந்த யூனியனை ஒழித்து விட்டால் எட்டு மாதம் போனஸ் கொடுக்கிறோம் என்கிறார்கள். இந்த 20 ம் நூற்றாண்டில் முதலாளிகளிடம் இப்படிப்பட்ட போக்கு இருக்கிறதென்றால், என்ன பொருள்? பேரறிஞர் அண்ணா சொல்வார்கள் "சீமான் சந்தர்ப்ப வாதிகள்" என்று. இவர்களையெல்லாம் சந்தர்ப்பவாதிகள் என்று சொல்வது வழக்கம். இப்படிப்பட்ட முதலாளிகள் விஷயத்தில் நமது அரசு கண்டிப்பாகவும், கவனமாகவும் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த மானியத்தை ஆதரிக்கிறேன்.

(டாக்டர் எச். வி. ஹாண்டே தன் இடத்தில் நின்றார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள், நேரம் இல்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே : ஒரு விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களைப் பற்றி ஒன்றும் சொல்ல வில்லையே.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் தலைவனாக இருக்கும் சங்கத்தைப் பற்றிச் சொன்னார்கள்.

The Hon. Member specifically mentioned about that. He mentioned about that particular union. I want the Hon. Minister to take both sides into account, and not only one side. Even as "Guindy Mudalaligal" threatened the workers that if they did not join the union they would be given higher bonus; similarly our union is also threatened. The particular

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1970 மார்ச் 26

Superintending Engineer says "you leave that union and join the other union and we will give you all grants." I request the Hon. Minister to examine both sides. Apart from this, there is nothing else that I want to say.

* திரு. ஜே. ஜேம்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் இருக்கின்ற தொழிற்சாலை, தொழிலாளர் மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணையை யொட்டி என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சமதர்ம சமுதாய சோஷலிசக் கொள்கைகளை ஏற்றிருக்கிற எந்த அரசும், எந்த அரசியல் கட்சியும் தொழிலாளர் நலனில் மிகுந்த அக்கறை காட்டும் என்பது வியப்புக்குரிய காரியம் அல்ல. இந்த மன்றத்தில் பல நண்பர்கள் பல கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். எல்லா அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களுமே தொழிலாளர் நலனில் அதிக அக்கறையுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய நண்பர்கள், இந்த அரசு தொழிலாளர்களுக்கு அதிக நன்மைகளைச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருக்கிறது ஆனால் மத்திய அரசும், காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களும்தான் இந்த எண்ணத்திற்குக் குறுக்கே நிற்கின்றன என்ற தோரணையில் பேசினார்கள். தொழிலாளர் நலனுக்காக ஏராளமான சட்டங்கள் செய்யப்பட்டு இருக்கின்றன. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில்தான் அதிகமான நல்ல சட்டங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் இன்றைக்கு இருக்கும் சூழ்நிலை என்னவென்றால், இருக்கின்ற சட்டங்களை நல்ல முறையில் இந்த அரசால் அமல்படுத்த முடியவில்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். "முன்பு செய்யப்பட்ட சட்டங்களில் ஓட்டைகள் இருக்கின்றன, அந்த ஓட்டைகளை வைத்துக் கொண்டு முதலாளிகள் தப்பித்துக் கொள்கிறார்கள்" என்ற கருத்துக்கள் சொல்லப்பட்டன. நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், அப்படி ஏதாவது முன்பு செய்யப்பட்ட சட்டங்களில் ஓட்டைகள் இருந்தால், அவைகளை அடைப்பதற்கு, சட்டத்தைத் திருத்துவதற்கு, இந்த அரசுக்கு சக்தியில்லையா என்பது தான். ஒருவேளை இந்தச் சட்டங்கள் எல்லாம் மத்திய அரசால் பாராளுமன்றத்திலே தான் நிறைவேற்றப்படுகின்றன என்று சொல்லலாம். இந்த அரசின கட்சியினர் அங்கே பாராளுமன்றத்தில் செயல்படுகிறார்கள். அப்படி, தொழிலாளர் நலனுக்கு இடையூறான முறையில் சட்டங்கள் இருந்தால், அவைகளைத் திருத்தி, மாற்றியமைக்கின்ற வசதியும் வாய்ப்பும் இந்த அரசுக்கு இருக்கிறதே, அப்படிச் செய்யாமல் முன்னால் இருந்த காங்கிரஸ் கட்சியைக் குறை கூறுவது எப்படிப் பொருந்தும் என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நல்ல சட்டங்கள் தொழிலாளர்களுக்காக இருக்கின்றன. ஆனால் அவற்றை நிறைவேற்றுகின்ற சக்திதான் இந்த அரசுக்கு இல்லையென்பதைக் கூற விரும்புகிறேன்.

இப்போது கொடுக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையில் சட்டங்களை நல்ல முறையில் அமல் நடத்தி வருவதாகவும், தொழிலாளர்களுக்கு நன்மைகள் கிடைத்து வருவதாகவும் கூறப்பட்டிருக்கிறது. பெக்டரி ஆக்டைப் பற்றிக் கூற விரும்புகிறேன். இது காங்கிரஸ் ஆட்சியின் காலத்தில் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின் அடிப்படையில் எத்தனை தொழிலாளிகள் நன்மை பெற்றிருக்கிறார்கள், எத்தனை முதலாளிகள் இந்தச் சட்டத்தை அமல்படுத்துகிறார்கள் என்பதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும். மின்சார சக்தியை உபயோகப்படுத்தக்கூடிய இடத்தில் குறைந்தது பத்து பேர்கள் வேலை செய்தால் அந்த இடங்களில் இந்தச் சட்டத்தை அமல் நடத்த வேண்டும். ஆனால் 20 பேர்களோ, 50 பேர்களோ வேலை செய்தாலும்கூட, இந்த பெக்டரி ஆக்டின்கீழ் வருவதில்லை. பெக்டரி ஆக்ட் அமல் நடக்கின்ற இடங்களில் பெக்டரி இன்ஸ்பெக்டர் கூட அந்த இடங்களில் நுழைவதில்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இந்த அறிக்கையில் புள்ளிவிவரங்கள் என் [illegible]பட்டிருக்கின்றன. பரிசோதகர்கள் சென்று சட்டத்தை அமல்



1970 மார்ச் 26] [திரு. ஜே. ஜேம்ஸ்]

படுத்தத் தவறுகிறவர்களைக் கண்காணிக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. பரிசோதகர்களைக் குறை சொல்வதில் பயன் இல்லை. சூழ்நிலைகளுக்கேற்பதான் அவர்கள் புள்ளிவிவரங்களைத் தருகிறார்கள். இந்த அரசு எத்தனையோ வேலைகளைச் சாதித்தவிட்டது என்றும், காங்கிரஸ் ஆட்சி ஒன்றும் செய்யவில்லை யென்றும் சொல்வது சரியல்ல என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

ஷாப்ஸ் அண்ட் எஸ்டாபிளிஷ்மெண்ட்ஸ் ஆக்ட் என்பதன்கீழ் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு குறைவாகத்தான் நிறுவனங்கள் வந்திருக்கின்றன. இதற்குக் காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் கூறவில்லை. அந்தச் சட்டத்தை நல்ல முறையில் அமல் செய்தால் வளர்ந்து வருகின்ற சமுதாயத்தில் அதிகத் தொழில் நிறுவனங்கள் வருகின்ற சூழ்நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக, பிளான்டேஷன் ஆக்டைப்பற்றி ஒன்றைக் கூற விரும்புகிறேன். எத்தனையோ நன்மைகள் கிடைக்கும் என்ற வகையில் பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறது. இத்தனை நன்மைகளும் தொழிலாளர்களுக்கு உண்மையில் கிடைக்கின்றனவா என்பதை நெஞ்சில் கையை வைத்துப் பார்த்துச் சொல்லட்டும். அதிகாரிகளை வைத்திருக்கிறோம், அவர்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இன்றைக்கு ஸ்மால் ஸேவிங்ஸ் லோனைப் பெற்றுத் தர வேண்டும் என்று சொல்கிறோம். யாரிடம் போய் இதை அதிகாரிகள் செய்யப்போகிறார்கள். சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ளும் முதலாளிகளிடமிருந்துதான் அவர்கள் லோனும் வாங்கிக் கொண்டு, அவர்களுடைய தவறைச் சுட்டிக்காட்டி, அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்க அந்த அதிகாரிகளால் முடியுமா என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே, தொழிலாளர்கள்பால் அமைச்சருக்கு உண்மையிலேயே அக்கறை இருக்குமானால், தொழிலாளர் இலாகாவிலிருந்து அதிகாரிகள் ஸ்மால் ஸேவிங்ஸ் லோனைப் பெறுவதை உடனடியாக நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ப்ளான்டேஷன் அண்ட் லேபர் ஆக்ட் என்பதன்கீழ் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதித் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. நாம் சற்று அமைதியாகச் சிந்தித்துப் பார்த்தால் எத்தனை பேருக்கு முதலாளிகள் வீட்டு வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள் என்பது தெரியும். அப்படி அவர்கள் வீட்டு வசதி செய்து கொடுக்கவில்லையென்றாலும்கூட, வீட்டு அலவன்ஸாவது கொடுத்தார்களா என்றால், இல்லை. சென்ற ஆண்டில் அன்றைய தொழில் அமைச்சர் அவர்கள் ரெஸிடென்ஷியல் லேபர் என்று சட்டம் கூறுகிறது என்றார். சட்டத்தில் எத்தனையோ கோளாறு இருக்கிறது என்று சொன்னார்கள். சட்டத்தில் கோளாறு இருந்தாலும் கூட எல்லாத் தொழிலாளர்களுக்கும் வீடு அவசியம் கொடுக்க வேண்டும். தவறினால் வீட்டுக்குரிய அலவன்ஸாவது கொடுக்க வேண்டும். வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக மத்திய அரசாங்கத்திலேயிருந்து பணம் ஒதுக்கப்படுகிறது. போன ஆண்டில் ஒதுக்கப்பட்ட பணம் செலவு செய்யப்படாமல் லாப்ஸ் ஆகிவிட்டது. சென்னையிலும் அதையடுத்த பகுதியிலும் இருக்கும் தொழிலாளர்களுக்கு 168 வீடுகள்தான் கட்டப்பட்டதாகக் கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டுகூட தொடர்ந்து கட்டப்படும் என்று சொல்லப்படுகிறது. மறைந்த மாமேதை ஜவஹர்லால் நேரு அவர்கள் பிலாய் ஸ்டீல் ப்ளான்டைத் திறந்து வைக்கச் சென்ற போது தொழிற்சாலைகளுக்கான கட்டடங்களையெல்லாம் கட்டியிருந்தார்கள். தொழிலாளர்களுக்கான வீடுகள் கட்டப்படவில்லை. அதைப் பார்த்து, இனி முதற்படியாக தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித்தர முன்வருகிறவர்களுக்குத்தான் லைசென்சு கொடுப்பது என்கிற நிபந்தனையை விதிக்க வேண்டும் என்றார்கள். அந்த நிபந்தனையை இந்த அரசும் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேண்டும், அதை வைத்து அவர்களுடைய வசதிகளைச் செய்து கொள்ள லாம், அவர்களுடைய நலன்களைக் கவனிக்கலாம், என்று அறிவித்து இருக்கிறார்கள். உறுப்பினர்கள் எதை எதை வற்புறுத்துகிறார்களோ அப்படிப்பட்ட வசதிகளை யெல்லாம் செய்து கொடுக்க ஒரு வாரியத்தை அமைத்துச் செய்யவேண்டுமென்ற நிலை இருக்கிறது என்ற பூரிப்பான செய்தியை நான் அறிவிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அதற்கு முதல் கட்டமாக 5 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசுகின்றபொழுது, திரு. வேலுசாமி போன்றவர்கள் கன்சிலியேஷன் செய்கிற அதிகாரிகள் அதாவது சமரஸம் செய்கிற அதிகாரிகள் கிடைக்கவே மாட்டேன் என்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்களுடைய குறைகளைப் போக்குகின்ற அளவிலே அரசாங்கம் முன்வந்து இன்னொரு முக்கியமான அறிவிப்பும் வெளியிட இருக்கிறது. இனிமேல் அமைக்கப்பட இருக்கிற கன்சிலியேஷன் அதிகாரி களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தப்பட வேண்டுமென்ற நீண்ட நாளைய தொழிலாளர் தரப்பிலிருந்து வந்த கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு ஒரு மாவட்டத்திற்கு ஒரு லேபர் ஆபீஸர் நியமிப்பதற்குத் திட்டமிட்டு அதை அறிவிக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருச்சியிலே இருக்கிற அந்த அதிகாரி தஞ்சைக்குப் போய்க் காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற நிலைமை இருக்காது. தஞ்சைக்கென்று ஒரு தனி அதிகாரி நியமிக்கப்படுவார். தென் ஆற்காடுக்கென்று ஒரு தனி அதிகாரி, வட ஆற்காடுக்கென்று ஒரு தனி அதிகாரி என்ற முறையிலே நியமிக்கக்கூடிய நிலைமைகளை இனி உருவாக்கப் போகிறோம். இப்படிச் செய்வதன் மூலமாக ,தொழில் தகராறுகளை விரைவிலே தீர்ப்பதற்கு உதவிகரமாக இருக்கின்ற நிலைமையை நாம் ஏற்படுத்துகின்றோம்.

மே தின விடுமுறையினைப்பற்றி ஆளுங்கட்சி உறுப்பினர்கள்தான் பாராட்டிப் பேசினார்களே தவிர, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அதிகமாகப் பாராட்டவில்லை. பல மாநிலங்கள் இதைச் செய்ய முன்வராத நிலைமை யிலே நம்முடைய மாநிலத்திலே அந்தச் சட்டத்தைத் திருத்தி 8 நாட்கள் விடுமுறையை 9 நாட்களாக்குகிறோம். அதைப்பற்றிய சட்டம் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே வர இருக்கிறது. இதைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லி இருப்பார்களானால் எங்களுக்கு உற்சாகமாக இருக்கும். ஆனால் அவர்கள் அதைக் குறிப்பிடவில்லை.

காங்கிரஸ் தரப்பிலே மலைத் தோட்டத் தொழிலாளர்கள் பற்றியும் சொன்னார்கள். கேரளத் தோட்டத் தொழிலாளர்களைவிட இங்கே இருக்கிற தொழிலாளர்களுடைய தரம் உயரவில்லை என்று சொன்னார்கள். உண்மை யாகப் போய்ப் பார்த்தால் நிச்சயமாகத் தெரியும். அண்மையிலே நான் நாகர்கோவிலுக்குச் சென்று தோட்டத் தொழிலாளர் ஸ்டாப் யூனியன் நடத்திய மாநாட்டிலே கலந்து கொண்டேன். அந்தத் தரப்பிலிருந்து தொழிலாளர்கள் குறைபாடுகளைச் சொல்லி இவை நீக்கப் படவேண்டு மென்று சொன்னார்கள். தமிழ் நாட்டிலே பரவாயில்லை, எங்களுடைய நிலைமை சரியாக இல்லை என்று எங்களிடத்திலே சொன்னார்கள். எது எப்படியிருந்தாலும் இதிலே ஒரு நல்ல மாற்று முறையைக் கண்டுபிடிப் பதற்காக வரப்போகிற மே திங்களில் உதகமண்டலத்தில் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கின்ற பகுதிகளில் எல்லாத் தொழிலாளர்களுடைய தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் தொழில் அதிபர்களையும் எல்லா அதிகாரி களையும் அழைத்து முத்தரப்பு மாநாடு நடத்தலாம் என்று நினைக்கிறேன். வரப்போகிற மே திங்கள் 22, 23 ஆம் நாட்களில் அம் மாநாடு உதக மண்டலத்தில் நடைபெற இருக்கிறது. அந்த அந்த எஸ்டேட்டுகளில், அந்த அந்தத் தொழிலகங்களில் பணியாற்றுகின்ற தோட்டத் தொழிலாளர் கள் தங்களுக்குச் சட்டப்படிச் செய்யப்படவேண்டிய காரியங்கள் எப்படி நிறைவேற்றப்படவில்லை என்று சுட்டிக்காட்டினால் அதிலே நேரடியாகவே நடவடிக்கை எடுப்பதற்கு உரிய வழி பிறக்கும் என்பதால் அப்படிக் கூட்டுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.



இங்கே பேசியவர்கள் நீண்டகாலமாகச் சில பிரச்னைகள் இருக்கின்றன, அவற்றைத் தீர்க்கவில்லை என்ற கருத்தை ஒரு பக்கம் சொன்னார்கள். சிலவற்றை வேகமாக முடித்துவிடுகிறீர்கள், தொழிலாளர்களுக்கு வாய்ப்புத் தரவில்லையென்று இன்னொரு பக்கம் சொல்கிறார்கள். இதில் எதை ஏற்றுக்கொள்வது ? உதாரணத்திற்காகச் சொல்ல வேண்டுமென்றால் வண்டலூரில் ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனத்தில் தொழில் தகராறு ஏற்பட்டது. ஏற்பட்ட உடனே நாம் கூப்பிட்டுப் பேசினோம் அவர்கள் ஒத்து வரவில்லை. இரண்டு தரப்பிலிருந்தும் இரண்டுவிதமான வாதங்கள் சொல்லப்பட்டன. அரசாங்கத்திற்குச் சட்ட பூர்வமாக இருக்கிற ஒரே ஒரு பரிகாரம் நீண்ட நாள் வேலைநிறுத்தம் நடக்கக்கூடாது, இரண்டாயிரம் தொழிலாளர்கள் அப்படி வேலைநிறுத்தம் செய்தால் இழப்பு ஏற்படும் என்று பொறுத்துப் பார்த்து, பிறகு நடுவர் தீர்ப்புக்கு அதை விட்டோம். அதற்குப் பின்னாலே தொழிலாளர்கள் சார்பில் ஏன் இவ்வளவு விரை வாய் தலையிடுகிறீர்கள், கொஞ்சம் விட்டுப் பார்க்கலாமே என்று சொன் னார்கள். விரைவாகச் செய்யவில்லை யென்றாலும் தொழில் அமைதி கெடுகிறதே என்று சொல்கிறார்கள். ஆகவே இந்த இரண்டு தரப்பிலும் உள்ள நிலைமைகளைக் கவனிக்க வேண்டுமென்றுதான் நான் இந்த மன்றத் திலே இதைச் சொன்னேன். அதற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நானும் அதிகமாகத் தலையிட்டு பிரச்னைகளைத் தீர்த்திருக்கிறோம். அந்தத் தொழிற் சங்கத்தினுடைய தலைவருக்கும் செயலாளருக்கும் வேலை இல்லாமல் சம்பளம் கொடுப்பதா என்ற பிரச்னை வந்தது. அவர்கள் கேட்டுக்கொண்டதுபோலவே உயர்நீதிமன்ற நீதிபதியொருவரை ஆர்பிட்ரேட்டராக நியமித்து அந்தப் பிரச்னை விடப்பட்டிருக்கிறது. இதை யெல்லாம் முடிந்த அளவுக்கு அக்கறை எடுத்துக்கொண்டு தீர்த்து வருகிறோம். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற முறையிலே நான் இதை எடுத்துக் கூறினேன்.

தமிழக அரசு அதுவும் திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்த தற்குப் பின்னால் தொழிலாளர் நலத் துறைக்கு ஒரு அமைச்சரை நியமித்த காரணத்தால் எந்த அளவுக்குப் பயன்படுகிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு நாளைக்கு எந்தத் தொழிற்சாலையிலே என்ன என்ன நடக்கிறது என்பதற்காக அதைப்பற்றிய ரகசிய அறிக் கைகள் அமைச்சருக்கு வருகின்றன, இதைச் சொல்லக் கூடாது, இருந் தாலும் சொல்கிறேன். அந்த அறிக்கைகளைப் படித்துவிட்டுத்தான் நான் தூங்குவதற்குப் போகிறேன். தொழிலாளர்கள் தரப்பிலிருந்து தரப்பட் டாலும், தொழிலதிபர்கள் தரப்பிலிருந்து தரப்பட்டாலும் உடனே அந்த அந்த மண்டலத் துணைக் கமிஷ்னர் அவர்களோடு தொலைபேசி மூலமாகப் பேசி அல்லது ஆணையர் மூலமாக அவர்களை அணுகச்செய்து எப்படி முடிக்க வேண்டும் என்று சொல்லி, சம்பந்தப்பட்டவர்களைக் கூப்பிட்டுப் பேசுங்கள், அவர்களை அழைத்து சட்டப் பூர்வமான விவரங்களை எடுத்துச் சொல்லுங்கள் என்று சொல்கிறேன். ஆகவே அந்த அந்த மட்டங்களில் விரைவாகக் காரியங்கள் நடைபெறுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு கோரிக்கையை ஒரு யூனியன் கொடுக்கிறது என்றால் முதல் கட்டமாக பேச்சுவார்த்தைகள் நடக்கிறது. அந்த நிலைமையிலேயே அதி காரிகள் விரைவாக முடித்துப் பரிகாரம் தேட வேண்டுமென்ற நிலைமையை உருவாக்கி இருக்கிறோம் என்பதற்கு உதாரணமாகத்தான் சொன்னேன். இதற்கு முன்பைவிட இப்பொழுது நிலைமை பரவாயில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இந்த ஆட்சி பொறுப்பேற்றுக்கொண்டபொழுது பழைய தொழிலாளர் நல அமைச்சராக இருந்த இப்பொழுது தொழில் அமைச்சராக இருக்கின்ற திரு. மாதவன் அவர்கள் ஏற்கெனவே குறிப் பிட்டு இருக்கிறார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் உயிரோடு இருந்த நேரத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். புதிதாகப் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு தொழிலாளர்களுக்கு நியாயம் வழங்க வேண்டு மென்று பல ஆண்டுகளாக முடங்கிக் கிடந்த [illegible] பிரச்னைகளை யெல்லாம் வேகமாக எழுப்பியிருந்தார்கள், அதனால் தொழில் அமைதி கெடவில்லை. அதற்கே போராட்டமுன் [illegible]

பெற்றாலும் அவற்றைத் தீர்ப்பதற்கு நல்ல முறையிலே முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். நான் எடுத்துக்காட்டாகச் சொல்ல விரும்புகிறேன், மேன்-டேஸ் லாஸ்ட் அதாவது வீணான நாட்கள் ஆண்டுக்கு 18 லட்சம் என்ற அளவிற்குப் போயிற்று ஆனால் 1969 ஆம் ஆண்டிலே அது 6 லட்சம் என்ற அளவிற்கு மூன்றில் ஒரு பகுதி என்ற அளவிற்குக் குறைக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தி நாம் எல்லாம் பாராட்டி மகிழத்தக்க ஒன்று. அதையும் எதிர்க்கட்சி நண்பர்கள் பாராட்டாதது எனக்கு வேடிக்கையாக இருந்தது.

இன்னொரு கருத்தையும் சொல்ல விரும்புகிறேன். திறக்கப்பட்ட ஆலைகளில் தொழிலாளர்களுக்கான சட்டங்களை சஸ்பெண்ட் செய்து விட்டீர்களே, தடுத்து நிறுத்தி விட்டீர்களே என்று சொன்னார்கள். மராட்டிய மண்டலத்திலே கூட மில்களைத் திறக்கும்போது இந்த முறையிலேதான் செய்தார்கள். தொழிலாளர்களையும் வைத்துப் பேசித்தான் சஸ்பெண்ட் செய்யப்பட்டது என்பதை எடுத்துச் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். அவர்களுடைய பஞ்சப்படி போன்றவற்றில் கூட 40 ரூபாய்க்கு மேல் பிடிப்பதற்குக் கூடத் தொழிலாளர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற விவரத்தைப் பார்க்கும்போது நான் இங்கே யாரையும் நிர்ப்பந்திக்கவில்லை என்பதைப் புரிந்துகொள்ள முடியும். தொழிலாளர்கள் தாங்களாகவே ஒப்புக் கொண்டார்கள் என்று தொழில் அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கத்தின்போது சொல்லியிருக்கிறார்கள்.

இன்னொன்றையும் நான் எடுத்துச் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். ஒரு தொழிலுக்கு, ஒரு நிறுவனத்திற்கு ஒரு தொழிற்சங்கந்தான் இருக்கவேண்டுமெனறு சொன்னீர்களே, இப்போது உங்கள் கட்சியின் சார்பில் மத்திய சங்கத்தை நியமிக்கிறீர்களே என்ற கருத்தைச் சொன்னார்கள். நான் ஒரு முக்கியமான விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசாங்கத்தைப் பொருத்தவரை பார்கெய்னிங் அதாரிடியாக தொழிற்சங்கம் ஒன்றாக இருக்க வேண்டுமென்று நிச்சயமாகச் சொல்லுகிறோம். நடைமுறையில் இருக்கக்கூடிய தொழிலாளர்களும் தொழிற்சங்கத் தலைவர்களும் அதை உண்மையாக்க வேண்டும். இதைச் சட்ட பூர்வமாக ஆக்கக் கூடாதா என்று காங்கிரஸ் உறுப்பினர்கள் கேட்டார்கள். அப்படிக் கேட்டவர்கள்கூட சட்டம் படித்தவர்கள். இந்திய அரசியல் சட்டத்தின் 'ரைட் ஆப் அசோசியேஷன்ஸ்' பிரிவுப்படி அவை எல்லாம் அவர்களுடைய அடிப்படை உரிமைகள் என்பது அவர்களுக்கெல்லாம் தெரியும். கஜேந்திர கட்கர் தலைமையில் நேஷனல் கமிஷன் கூடி நீண்ட நாள் ஆராய்ந்த பிறகும் அவர்களே ஒரு முடிவு சொல்லவில்லை. அவர்களுடைய 1,000, 1,200 பக்க அறிக்கையிலேயே அதற்குத் தீர்வு காணப்படவ.ல்லை என்று பார்க்கும்போது நாம் இவ்வளவு பெரிய பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண முடியுமா என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

திரு. அக்கினிராஜு அவர்கள் ஒரு அழகான கருத்தைச் சொன்னார்கள். எந்தப் பஞ்சாலையாக இருந்தாலும், எந்தத் தொழிலாக இருந்தாலும் ஏராளமான கொடிகளைப் பறக்க விட்டிருக்கிறார்கள். இருவண்ணக் கொடி பறப்பதை மட்டும் ஏன் எதிர்க்கிறார்கள் என்று கேட்டார்கள். ஜனநாயக அடிப்படையில் அப்படி அமைவது தேவை என்று இதே நேஷனல் கமிஷன் விவாதத்தில் கலந்து கொண்ட கேரள அமைச்சரும், முக்கியமான கேரள நாடாளுமன்ற உறுப்பினரும் காரசாரமாக விவாதித்திருக்கிறார்கள். 'என்னுடைய தொழிற்சங்கத்தில் நான்கு உறுப்பினர்கள் மட்டுமே இருப்பார்கள். ஆனாலும் அங்கீகாரம் தேவை, என்று வேகமாகப் போராடிய காட்சியை நான் நினைவூட்ட விரும்புகிறேன். கால வேகத்தில் இந்தக் கொள்கையை உருவாக்க வேண்டுமே தவிர, 'நீங்கள் ஏன் வருகிறீர்கள்' என்று ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டிருப்பது விரும்பத்தக்கதல்ல. அந்த நிலைமையைத் தொழிற்சங்கத் தலைவர்கள்தான் உருவாக்கவேண்டும்; முடிவு கட்டவேண்டும். அப்படிப் பேசிய காங்கிரஸ் தரப்பு உறுப்பினர்கள் தொழிற்சங்கங்களை வைக்காமல் இருக்கிறார்களா என்றால் ஐ.என்.டி.யு.சி. என்ற நிறுவனத்தை தமிழ்



நாடு முழுவதும் நூற்றுக்கு மேல் வைத்திருக்கிறார்கள். அதற்கு மேல் போகாது என்ற காரணத்தால் இப்போது பேசலாம். அப்படிப்பட்ட தொழிற்சங்கங்கள் தமிழ்நாட்டில் இருக்கின்றன என்பதற்காக அந்தக் கருத்தை இந்த நேரத்தில் நினைவூட்ட விரும்புகிறேன்.

நண்பர் சீனிவாசன் அவர்கள் இந்தத் தலைப்பில் பேசும்போது போலீஸ் சில பல நேரங்களில் தலையிடுகிறது, தொழிற்துறைகளிலே என்றார்கள். அன்று அறிஞர் அண்ணா அவர்கள் கம்பீரமாகவும், பெருமையாகவும் சொன்னார்கள். 'இந்த ஆட்சிதான் சட்டம், ஒழுங்குப் பிரச்சினையை நிலைநாட்டுவதற்காக ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினரைக் கூடக் கைது செய்ய முனைந்தது என்றார்கள். அது ஆட்சியின் நாணயத்தையும், புனிதமான தன்மையையும் எடுத்துக் காட்டுகிறது. சீனிவாசன் போன்றவர்கள் எடுத்துச் சொல்லிய வேகமான காரியங்களில், வெல்பேர் ஆபீசர்கள் ஏன் அரசாங்கத்தால் நியமிக்கப்படக் கூடாது என்று கேட்டார்கள். ஏன் மானேஜ்மெண்டால் அவர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்ற கேள்வியை எழுப்பினார்கள். இதே கருத்தைப் பின்னால் பேசியவர்களும் கூறினார்கள். அப்படி அமைக்கப்படுகின்ற வெல்பேர் ஆபீசர்கள் முழுக்க முழுக்க தொழிலாளர்களின் நன்மைக்கே பாடுபட வேண்டுமென்றும் தொழிலாளர் டிசிப்ளின் பற்றி நடவடிக்கை எடுக்க அந்த அதிகாரிகளைப் பயன்படுத்தக்கூடாது என்றும் விதிமுறைகள் இருக்கின்றன. இதையெல்லாம் ஃபாக்டரி இன்ஸ்பெக்டர்களும். மற்றவர்களும் போகும்போது கண்காணிக்க உரிய வழிமுறைகள் இருக்கின்றன. இந்தப் பிரச்சினையிலே மேற்கொண்டு என்ன செய்யலாம் என்பதைப் பற்றியும் ஆலோசனை வாரியத்தில் வைத்து விவாதிக்கலாம். ஆனால் ஒன்றை மட்டும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவர்களை நிர்வாகம் நியமிக்காமல் அரசாங்கமே நியமிப்பது என்று வைத்துக் கொண்டால் ஏற்கனவே அரசாங்கத் தரப்பில் பல கன்சிலியேஷன் அதிகாரிகள் இருக்கும் நிலைமையில், தொழிலாளர் நலத்துறை அதிகாரிகள் இருக்கும் நிலைமையில் அவர்கள் மட்டத்தில் வரும்போது அரசாங்கக் கண்ணோட்டத்திலேயே முடிவு எடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே, ஒவ்வொரு தொழிற்சாலையிலும் ஒரு வெல்பேர் ஆபீசர் அரசாங்கத் தரப்பில் இருக்க வேண்டுமென்று கூறுவது எவ்வளவு தூரம் பொருந்தும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இடது கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த கோவிந்தராஜன் அவர்கள் பேசும்போது வேஜ்போர்டு முடிவுகளை அமல்படுத்தவில்லை, முயற்சிகள் செய்யவில்லை என்ற பொதுவான குற்றசாட்டைக் கூறினார்கள். நான் ஒன்றை மட்டும் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சமீபகாலத்தில் அதாவது 1969-ம் ஆண்டுதான் அதிகமான அளவுக்கு இதுபற்றி சமரச உடன்பாடு செய்யப்பட்டு வேஜ்போர்டு முடிவுகளை அமல்படுத்த வேண்டுமென்று பல்வேறு கட்டங்களில் வற்புறுத்தி வெற்றியும் பெற்றிருக்கிறோம். கோவை மாவட்டத்தில் மட்டும் 52 மில்களில் ஊதியக் குழு பரிந்துரைகளை அமல்படுத்த வேண்டுமென்ற முடிவுக்கு வந்திருப்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும்.

மின்சார வாரியத்தினுடைய வேஜ்போர்டு முடிவுகளை ஏன் அமல்படுத்தவில்லை என்று கேட்டார்கள். இதுபற்றி டில்லியில் இருக்கும் அமைச்சகத்தோடு தொலைபேசி மூலமாக அணுகிக் கேட்டோம். அந்த முடிவுகள் வருவதற்குள்ளாகவே அதற்கான வேலைகள் தொடங்கப்பட்டு விட்டன. அந்தக் குழு தன்னுடைய ரிப்போர்ட்டை மத்திய அரசாங்கத்திற்குக் கொடுத்திருக்கிறது. மத்திய அரசாங்கம் அதை அனுமதித்து அமல்படுத்துங்கள் என்று சொல்வதற்கு முன்பாகவே நம்முடைய மாநிலத்தைப் பொருத்தவரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மின்சார வாரியம் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருப்பதும், நடைமுறையில் இருக்கக்கூடிய பேச்சுவார்த்தைகள் நல்ல முறையில் முடிவுறும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

தொழிற்சங்கத்தில் கூட அரசியல் சூடு வரலாமா என்பதைப்போல் கேட்டு 'இந்து' நிறுவனத்தில் இருக்கிற தொழிற்சங்கத் தகராறைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். சோமு என்ற திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற்சங்கத் தலைவருக்கும், சிந்தன் என்ற கம்யூனிஸ்ட் தொழிற் சங்கத் தலைவருக்கும் இருக்கிற பிரச்சினையைப் பற்றிச் சொன்னார்கள். இரு தொழிற்சங்கங்களுக்கு இடையே இருக்கிற போட்டியைப் பற்றி நாம் சட்டபூர்வமாக உடனடியாக முடிவுக்கு வரமுடியாது. அதற்கு வேண்டிய முடிவுகளை சிவில் கோர்ட் மூலமாகத்தான் தேடவேண்டுமென்பது சட்டம் படித்தவர்களுக்கு நன்றாகத் தெரியும். நான் இரு தரப்பாரையும் கூப்பிட்டுப் பேசியிருக்கிறேன். சோமு என்பவர் சிவில் கோர்ட்டுக்குப் போய் நியாயத்தை எடுத்துச் சொல்லி அவருக்குச் சாதகமாக சிவில் கோர்ட்டு முடிவு கொடுத்திருக்கிறது என்பதையும் அறிவோம். சிந்தன் அவர்கள் மேல் போடப்பட்ட 104 புரொசீடிங்ஸ் வழக்கின்மீது ரிட் மனு தாக்கல் செய்து உயர்நீதி மன்றத்தில் இருக்கும் காரணத்தால் அதைப்பற்றி இங்கே அதிகமாக எடுத்துச் சொல்லத் தேவையில்லை என்பதும், அது அவர்களுக்கே தெரியும் என்பதையும் அவர்கள் இதைத் தொட்டுக் காட்டிய காரணத்தால் சொல்லுகிறேன். ஒன்றை மனப் பூர்வமாக, மனம் திறந்து பேசவேண்டும். சோமுவைப் பார்த்து நான் கேட்டேன்—ஒரு தொழிற்சங்கம் நடந்து கொண்டிருக்கும்போது நீங்கள் தலையிடலாமா என்று கேட்டேன். அவர் சொல்வது தொழிலாளர்கள் பெருவாரியானவர்கள் விரும்புகிறார்கள். நேரடியாக தேர்தல் நடத்தட்டும். அந்த அறைகூவலை ஏற்றுக்கொள்கிறேன் என்று குறிப்பிட்டார். இதுபோன்ற பிரச்சினைகளைச் சட்டமன்றத்திலே எடுத்துக்கூறி அதற்கு அமைச்சர் பதில் சொல்லக்கூடிய நிலைமையை உறுப்பினர்கள்—குறிப்பாக கோவிந்தராசன் போன்ற உறுப்பினர்கள் உருவாக்கக் கூடாது. என்னிடத்தில் அவர்கள் வருகின்ற நேரத்தில் எல்லாம் இதைப் பற்றி கலந்து பேசியிருக்கிறோம் என்பதை அவர்களே அறிவார்கள். ஆகவே, இந்தப் பிரச்சினையை இதோடு விட்டுவிட விரும்புகிறேன்.

ஃபாக்டரி சட்டத்தை அமல்படுத்துவது பற்றி ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஃபாக்டரியில் கக்கூஸ் கூட இல்லையென்று சொன்னார்கள். இந்தமாதிரிப் பிரச்சினைகளை ஆங்காங்கு இருக்கும் இன்ஸ்பெக்டர்கள் கவனிக்க வேண்டும். கனம் உறுப்பினர்களைப் போன்றவர்கள் கூட போலீஸ் அதிகாரியைப் போல் வேலை செய்தால் இந்தக் காரியங்கள் எல்லாம் நடக்கும். வேண்டுமானால் என்னைத் தலைமைப் போலீஸ் அதிகாரியாக வைத்துக் கொள்ளுங்கள். நாமே நீதிபதியாக இருந்து இந்தக் காரியங்களை நடத்திக் கொள்ள வேண்டும். சட்டமன்றத்தில் இப்போது சொன்னது போல் பலமுறை என்னைச் சந்திக்கும்போது இதுபோன்ற வசதிகள் எல்லாம் இல்லை என்பதை என்னிடம் எடுத்துச் சொன்னால் நிச்சயமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவேன்.

இன்னும் சொல்லப் போனால் ஃபாக்டரி ஆக்டின் கீழ் பல ப்ராஸிக்யூஷன் வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. இவ்வளவு வழக்குகள் போடப்பட்டதற்குப் பின்பும் இன்னும் தொழில் அதிபர்கள் கடமை தவறி நடக்கிறார்கள் என்றால் அதை என் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

சுதந்திரக் கட்சியின் சார்பாக ஒரே ஒரு அங்கத்தினர் திரு. மெய்யப்பன் அவர்கள் பேசினார்கள். புதிதாகத் தொழில் சட்டங்கள் தேவை இல்லை என்றார்கள். அது புதுச் சிக்கல்களை உருவாக்கும் என்று சொல்லிவிட்டு அவர்களும் அவர்கள் அருகில் இருப்பவரும் இருந்த சட்டங்களை சஸ்பெண்ட் செய்தீர்களே என்று வேறு பக்கத்திற்குக் கொண்டு போய் விட்டார்கள். அவர்கள் முன்னுக்குப்பின் முரணான கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. ஜெம்ஸ் அவர்கள் பேசும்போது கன்னியாகுமரியில் உள்ள ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் பற்றியும் ஆரல்வாய்மொழியில் உள்ள கூட்டுறவு நூற்பாலை பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். அதுபற்றி





பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. ரப்பர் தோட்டத் தொழிலாளர் பற்றிய பிரச்சினை அரசாங்க ஆய்வில் இருக்கிறது. அறிக்கை வந்திருக்கிறது. வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க இருக்கிறோம். பொதுவாக அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகள் பற்றி திராவிட முன்னேற்றக் கழக தரப்பிலும் எதிர்தரப்பிலிருந்து சிலரும் வரவேற்றுப் பேசினார்கள். லேபர் வெல்பேர் பண்ட், தொழில் அதிகாரிகள் தொகையை அதிகப்படுத்தப் போகிறோம். மாவட்டத்திற்கு ஒருவரை நியமிக்கப் போகிறோம் என்ற முறையில் பல காரியங்கள் செய்யப்பட்டுள்ளன. இதற்கு மேலும் காரியங்கள் நடைபெறாமல் இருக்குமேயானால்—இங்கு இருப்பவர்கள் கடவுள் அல்ல. எல்லாக் காரியங்களையும் ஒரே நேரத்தில் செய்வதற்கு, எவ்வளவோ காரியங்களைச் சொல்லியிருக்கிறார்கள். இன்னின்ன அதிகாரிகள் தங்கள் தங்கள் கடமையிலிருந்து தவறியிருக்கிறார்கள், இந்த கன்ஸீலியேஷன் ஆபீசர் கிடைக்கவேயில்லை என்றால், இவற்றைப் பற்றியெல்லாம் பொதுவாகச் சொல்வதற்குப் பதிலாக எந்த எந்த அதிகாரிகள் கடமை தவறியிருக்கிறார்கள், யார் யார் வழக்குகளை வேகமாக முடிக்காமல் இருக்கிறார்கள், யார் யார் பேச்சுவார்த்தைகளை. முடிக்காமல் இருக்கிறார்கள் என்பதையெல்லாம் அவ்வப்போது என் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த எண்ணத்தில்தான் தொழிலாளர் நலனுக்காக என்று ஒரு தனி அமைச்சர் என்ற முறையில் நல்லெண்ணத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையைப் பயன் படுத்திக்கொள்ளாமல் பொதுவாகக் குற்றச்சாட்டுக்களைக் கூறவேண்டாம்.

தொழிலாளர் நலத் துறையைப் பொறுத்தவரையில் வெகு வேகமாகவும் கையாளக் கூடாது. சோர்ந்து போகவும் கூடாது. வெகு வேகமாகப் போனால் நிலைமை மோசமாகப் போய்விடும். பாலைக் காய்ச்சுவதுபோல் பக்குவமாகக் காய்ச்ச வேண்டுமென்ற நிலையில் இருக்கிறோம். சில கட்டங்களில் வெகு வேகமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டால் ஏன் எங்களுக்கு ஒரு வாய்ப்பு அளிக்கவில்லை, எங்கள் கட்சியை எடுத்துச்சொல்ல என்று கேட்பார்கள். மெதுவாகப் போனால் ஏன் தூங்கிக் கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்பார்கள். ஆக இந்த இரண்டு கட்டங்களுக்கு இடையே பணியாற்ற வேண்டியிருக்கிறது. பாலை அடுப்பில் வைத்து அளவோடு காய்ச்சி கீழே இறக்க வேண்டியிருக்கிறது. கூடுதலாகக் காய்ச்சினால் பால் பொங்கிவிடும். நல்ல அளவில் காய்ச்சாமல் இருந்தால் சுவை இருக்காது. இந்த நிலைதான் இதற்கும் இருக்கிறது.

தொழிலாளர் நலத்துறை ஆலோசனை வாரியம், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், தொழில் அதிபர்கள் ஆகியோரை வைத்துக் கூட்டங்கள் பல நடத்தி வருகிறோம். ஷுகர் வேஜ் போர்டு முடிவுகள் பற்றி, அது வராத நேரத்தில் என்ன பரிகாரம் காணலாம் என்பது பற்றி ஏறக்குறைய மூன்று நான்கு மணி நேரம் கலந்து பேசி அவர்கள் சொன்ன முடிவுகளை ஏற்று செயல்படுத்த இந்த அரசு முடிவெடுத்திருக்கிறது. இந்த அரசின் கையை நீங்கள் எல்லோரும் பலப்படுத்த வேண்டும். அந்த முறையில் உறுப்பினர்கள் தங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மன்றத்திற்கு வருகின்ற நேரத்தில்தான் சொல்ல வேண்டுமென்பதல்ல, எப்போதும் என்னிடம் சொல்ல உரிமையிருக்கிறது. அவற்றைக் கூர்ந்து கவனித்து நடவடிக்கைகள் எடுக்கிறோம். உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களை ஒன்றுவிடாமல் குறித்து வைத்துக் கொண்டிருக்கிறோம். அதன்மேல் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று கூறி இந்த மானியக் கோரிக்கைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையில் வெட்டு இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. விநாயகம் : அமைச்சர் அவர்களைக் குறுக்கிடக் கூடாது என்று மரியாதைக்காக இருந்தேன். பல பிரச்சினைகள் வருகின்றன. அவற்றையெல்லாம் உடனடியாகத் தீர்ப்பதற்கு நாங்கள் ஒன்றும் கடவுள் அல்ல என்று சொன்னார்கள் அமைச்சர் அவர்கள். அப்படியென்றால், கடவுளைப் பற்றி அவர் சர்வ வல்லமை பொருந்தியவர், சர்வாந்தர்யாமி, நமக்கெல்லாம் அப்பாற்பட்டவர் என்ற கொள்கையை அவர்கள் ஏற்றுக்கொள்கிறாரா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த விளக்கம் இந்த டிமாண்டில் வராது.

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்:** கடவுள் சித்தாந்தத்தைப்பற்றி சொல்பவர்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காக அப்படிச் சொன்னேனே தவிர நாங்கள் ஒத்துக்கொள்கிறோமா இல்லையா என்பது எங்கள் பிரச்னை, அது அவர்களுடைய பிரச்னை அல்ல.

***திரு. சி. கோவிந்தராஜன்:** 'இந்து' பத்திரிகை தொழிலாளர் சங்கத்தைப்பற்றிக் கூறும்போது மெஜாரிட்டி இருக்கிறதா என்பதை நிர்ணயிப்பதற்கு தொழிலாளர் நலத்துறை இலாகாவுக்கோ அல்லது சிவில் கோர்ட்டுக்கோ உரிமை இருக்கிறது என்பதில் கருத்து வித்தியாசம் இல்லை. போலீசைப் பயன்படுத்தி ஒரு சாரார் மீது மட்டும் 107 வது பிரிவின்கீழ் கேஸ் போட்டு இருப்பது பாரபட்சத்தைக் காட்டுகிறது என்றுதான் குறிப்பிட்டேன். மேலும் அரசு வன்முறையை அனுமதிக்க வேண்டும், அதுதான் கிளர்ச்சி என்று சொல்லவில்லை. வன்முறைகளில் ஈடுபட்ட இரு சாராரில் ஒரு சாரார் மீது மட்டும் நெய்வேலியில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வழக்கும் தொடரப்பட்டுள்ள பாரபட்ச செய்கையைத்தான் சுட்டிக்காட்டினேன். சில விஷயங்கள் பற்றிக் குறிப்பாக கூறியிருக்கிறேன். அவற்றின் மீது நடவடிக்கைகள் எடுப்பார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்:** 'இந்து' பிரச்னை பற்றிய வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. ஏற்கெனவே அதற்கு விளக்கங்கள் சொல்லியிருக்கிறேன். அவர்கள் சொன்ன கருத்துக்களைக் குறித்து வைத்துக்கொண்டு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திரு. சி. நஞ்சன்:** மே மாதத்தில் இரண்டு நாட்கள் உதகையில் மாநாடு நடத்த வேண்டுமென்று உத்தேசித்திருப்பதாகச் சொன்னார்கள். அந்த இரண்டு நாட்களில் ஒரு நாள் உதகையிலும் ஒரு நாள் கூடலூர் பகுதியிலும் மாநாடு நடத்தினால் கூடலூர் பகுதியில் உள்ள தோட்டத் தொழிலாளர்கள் பிரதிநிதிகள் கலந்துகொள்ள வசதியாக இருக்கும் என்ற கருத்தை தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்:** தோட்டத் தொழிலாளர்கள் கன்னியாகுமரியிலும் இருக்கிறார்கள், வால்பாறையிலும் இருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இடத்தில் நடத்த முடியாது. ஒரு இடத்தில் நடத்த வேண்டும். அங்கு எல்லோரும் வரவேண்டும் அப்போதுதான் மாநாடு ஒழுங்காக நடைபெறும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்களும், திரு. சோ. அழகர்சாமி அவர்களும் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திரு. கே. என். குமாரசாமி, திரு. சி. கோவிந்தராஜன், திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் என்ற தலைப்பின் கீழ் ரூ. 81,49,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

பகல் 1-30 **மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் 28—3—1970-ம் தேதி காலை 9-00 மணி அளவில் கூடும்.

**பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.**



## 8. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### *A. Statutory Rules and Orders*

**@ 172. Notification issued with G.O. Ms. No. 29, Co-operation, dated the 19th September 1969 in regard to certain** amendments to the Tamil Nadu Money Lenders Rules 1969. **[Laid on the Table of the House under section 22 (3) of the** Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act **1957).]**

@ 173. Notification issued with G.O. Ms. No. 2104 Local **Administration, dated the 30th October 1969 in regard to preliminary notification for constitution of a municipality** with the name of Thuraiyur in the Tiruchirappalli district. [Laid on **the Table of the House under section 304 (*d*) of the** Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

**@ 174. Notification issued with G.O. Ms. No. 2106, Local** Administration, dated the 30th October 1969 in regard to preliminary notification for constitution of a municipality with the **name of Satyamangalam in Coimbatore district.** [Laid on the **Table of the House** under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

175. Notification issued with G.O. Ms. No. 2105, Local **Administration, dated the 30th November 1969** in regard to preliminary notification ofr the constitution of a municipality with the name of Pallavapuram in Chingleput district. [Laid **on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act, V of 1920).]**

**176. Notification issued with R. Dis. No. 144837/69-P.2 dated the 7th November 1969 in regard to exclusion of certain areas from the existing Keelapaguthy Panchayat of Tiruchirappalli district and constitution of a separate panchayat by name "Tharagampatty" Panchayat.** [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act. **1958 (Tamil Nadu Act XXXV of 1958).]**

177. Notification issued with R. Dis. No. 74668/69-P.2, **dated the 22nd November 1969 in regard to exclusion of certain areas from the existing Vanavasi Town Panchayat in Mettur taluk of Salem district and constitution of a separate panchayat by** name "Sanarpatti" panchayat. [Laid on the Table of the House **under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]**

178. Notification issued with R. Dis. No. 144829/69-P.2, **dated the 27th October 1969 in regard to exclusion of certain areas from the limits of Kolakudi Panchayat in Musiri taluk of Tiruchirappalli district and constitution of a separate panchayat by name "Appanallur Panchayat". [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]**

**@ Laid on the Table of the House on 28th March 1970**

*வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவற்றின் எண்ணிக்கையும், வீணான உழைப்பு நாட்களும்.*

1968-ல் நிகழ்ந்த வேலை நிறுத்தங்களும், கதவடைப்புகளும் 231 ஆகும். வீணான உழைப்பு நாட்களும் 1,881,559 ஆகும்; ஆனால், 1969-ம் ஆண்டில் 174 வேலை நிறுத்தங்களும் கதவடைப்புகளும் ஏற்பட்டன. வீணான உழைப்பு நாட்கள் 683,059 ஆகும். முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1969-ல் தொழிலாளர்-தொழிலதிபர் உறவில் பெரிதும் முன்னேற்றம் கண்டுள்ளது அரசிற்குப் பெரிதும் மனநிறைவளிக்கிறது. இதனால், இம் மாநிலம் மேலும் தொழில் வளர்ச்சியில் முன்னேறுவதற்குத் தேவையான தொழில் மேம்பாட்டுச் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

*தொழில் வாரியான தீர்வு.*

மலைத் தோட்டத் தொழிலில் சம்பளம், பூரிப்பூதியம் வழங்குவது குறித்து 85,000 தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கும் வகையில் இந்த ஆண்டில் தொழில் வாரியான தீர்வுகள் காணப்பட்டன. தோல் பதனிடும் தொழிற்சாலைகள் சம்பந்தமாகவும் ஒரு தீர்வு காணப்பட்டது; இதனால் ஊதியத்தைத் திருத்தியமைப்பது சம்பந்தப்பட்ட சிக்கலை, நடுவர் தீர்ப்புக் காகத் தொழிலாளர் ஆணையாளரிடம் விடுவதற்கு இருதரப்பினரும் இசைந்தனர். 11,100 தொழிலாளர்களுக்குப் பயன்தரும் ஊதியத்தை மாற்றியமைப்பது குறித்த தனது முடிவை ஆணையாளர் இப்போது அளித்துள்ளார்.

தொழிலாளர் நிலைமையைக் குறித்து நான் மிக உன்னிப்பாக நாட்டம் செலுத்திவருகிறேன் என்பதை இச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்பு கிறேன். ஏதேனும் தொழிலாளர் தகராறு இருப்பதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டால், அதுகுறித்து உடன்பாட்டு அமைப்பு உடனடியாகச் செயல்பட நடவடிக்கை எடுத்துள்ளேன். பல தடவைகளில், தகராறுகளைத் தீர்க்கத் தொழிலாளர்களுடனும் தொழிலதிபர்களுடனும் தொழிலாளர் அமைச்சர் என்ற முறையில் நானே பேசித் தீர்வு காண முயன்றுள்ளேன். உடன்பாடு அமைப்பை விரிவுபடுத்த அரசு தீவிரமாகப் பரிசிலித்து வரு வதை இந்தச் சமயத்தில் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

*பஞ்சாலைத் தொழில் நெருக்கடி.*

வேலையில்லாச் சிக்கல்களை உருவாக்கியும் அதன் விளைவாகத் தொழி லாளரிடையே அமைதியின்மையை ஏற்படுத்தியும் வரும் பஞ்சாலைத் தொழிலில் நிலவும் நெருக்கடி நிலைபற்றித் தொடர்ந்து அரசு நாட்டம் செலுத்தி வருகிறது. தகராறுகளின் விளைவாகத் தொழிற்சாலைகள் மூடப் பட்டுள்ள இடங்களில் தகராறுகளைத் தீர்த்து ஆலைகள் திறக்கப்பட வகை செய்தும் சீரமைப்பு சம்பந்தமான சிக்கல்களைத் தீர்த்தும் செயலாற்றிய துடன் மூடப்பட்ட ஆலைகளின் நிலைமையைத் தக்கவாறு ஆராய்ந்த பின்னர் வங்கிக் கடன்கள் பெற அவற்றிற்கு உத்தரவாதம் அளித்து அரசு உதவியளித்தும் வருகிறது. இது காரியத்திற்குத் தக்கதென்று கருதப்படும் ஆலைகளை, 1951-ம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சி, முறைப் படுத்தல்) சட்டத்தின்கீழ் எடுத்துக்கொண்டு அவற்றை நடத்தத் தமிழ் நாடு பஞ்சாலைக் கார்ப்பொரேஷன் ஒன்றை அரசு நிறுவியுள்ளது.

இந்த நடவடிக்கைகளின் விளைவாக, 1969-ல் 12 ஆலைகள் மீண்டும் திறக்கப்பட்டன; 1970-ல் மேலும் 2 ஆலைகள் திறக்கப்பட்டன. தமிழ் நாடு பஞ்சாலைக் கார்ப்பொரேஷன் 4 ஆலைகளை மேற்கொண்டுள்ளது; அவையாவன :—

1. ஓம் பராசக்தி ஆலை.
2. கிருஷ்ணவேணி நெசவாலை நிறுவனம்.
3. ஸ்ரீரங்க விலாஸ் பஞ்சு அரைத்தல், பஞ்சு நூற்பு ஆலை நிறுவனம்.
4. கம்போடியா ஆலை நிறுவனம்.

இந்த நான்கு ஆலைகளில், மூன்று ஏற்கனவே திறக்கப்பட்டுள்ளன;
ஸ்ரீரங்க விலாஸ் பஞ்சு விதை நீக்கல், நூற்பாலை விரைவில் திறக்கப்
படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தொழிலாளர் அரசுக் காப்புறுதி, தொழிலாளர் வருங்கால வைப்பு
நிதித் தொகைகளின் நிலுவைகளை அளிப்பதில் பஞ்சாலைகளுக்கு அரசு,
தாராளமான சலுகைகளை அனுமதித்துள்ளது.

தொழிலாளர் பாதுகாப்பு, சுகாதாரம், நலன் இவற்றைக் காக்கத் பாதுகாப்பு சுகாதார வசதிகளைச் செயல்படுத்தல்
தொழிலாளர், தொழிற்சாலைகள் சட்டங்கள் அனைத்தையும் செயல்படுத்
தவும் தனியார் துறைக்கும் பொதுத் துறைக்கும் எந்த வேறுபாடுமின்றி
அச் சட்டங்களை நிறைவேற்றவும் செயல்படுவதே அரசின் நோக்கமாகும்.

தொழிற்சாலைகளிலுள்ள தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பானதும்
சிறப்பானதுமான பணி நிலைமைகளை ஏற்படுத்திக் கொடுக்கத் தொழிற்
சாலை ஆய்வாளர் அலுவலக அமைப்பு மூலம் அரசு அவசியமான
நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதனால் உற்பத்தியைப் பெருக்குவதுடன்
தொழிலாளரின் நலனும் மேம்படுத்தப்படுகிறது. அவ்வத்தொழிற்
சாலைகள் அளவில் அவசரகால உற்பத்திக் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன ;
இதனால், தொழிலாளரும் நிர்வாகத்தினரும் கூட்டாக முனைந்து
உற்பத்தியைப் பெருக்க வழிகாண முடியும். தொழில் அபாயங்களிலிருந்து
தொழிலாளர்களைப் பாதுகாக்கவும் அவர்களின் நலன் பேணவும் பாது
காப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம் மாநிலத்தில் விரைந்து
தொழில்கள் வளர்ந்து வருவதனால் இப் பணிக்குப் பெரும் அவசரத்
தேவை ஏற்பட்டுள்ளது ; மேலும், இத் தொழில் வளர்ச்சியினால் ஏற்படும்
கழிவுகள், வெளியேற்றக் கழிவுநீர், சுற்றுப்புறச் சீர்கேடு இவை சம்பந்தப்
பட்ட சிக்கல்களைக் கவனிக்கவும் இது அவசியமாகிறது. பாதுகாப்பு,
சுகாதாரம் குறித்த சிக்கல்களை நன்கு தெளிவுபடுத்தும் நோக்கத்தில்,
பாதுகாப்பைச் சீராக்க அவர்கள் செய்யும் பணிக்குச் சிறப்பளிக்கும் வகையில்
தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் கேடயங்கள்
வழங்கவும் ரொக்கப் பணம் பரிசளிக்கவும் அரசு, ஒரு திட்டத்தை
வகுத்துள்ளது.

தேசியப் பாதுகாப்பு மன்றம் சென்னையில் குழு ஒன்றை அமைத்
துள்ளது. தொழிலாளர் துறை ஆணையாளர் இதன் முதல் தலைவ
ராவார். இக்குழு 28—1—1970 அன்று என்னால் தொடங்கி வைக்கப்
பட்டது. கருத்தரங்குகள் நடத்துதல், பாதுகாப்பு பற்றிய சுவரொட்டிகளை
வழங்குதல், பாதுகாப்பு பற்றிய பத்திரிகை ஒன்றை உறுப்பினர்களிடையே
அனுப்புவதற்காக வெளியிடுதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் பாது
காப்பு ஏற்பாடுகள் பற்றிப் பிரச்சாரம் செய்ய வகை செய்வதே இம்
மன்றத்தின் நோக்கமாகும்.

தொழிலாளர் உடல் நலன் பற்றியும் அவர்களின் நல்வாழ்வு குறித்தும் "கேர்" நிறுவனத் திட்டம்.
நடவடிக்கை மேற்கொள்கையில் அவர்தம் குடும்பத்தினரையும் நாம்
மறந்து விடக்கூடாது. தொழிலாளர் குடும்பத்தைச் சேர்ந்த இளம்
சிறார்க்கும், மகளிருக்கும் சமைத்த புரதச் சத்து நிறைந்த உணவு
வழங்க வகை செய்யும் திட்டம் ஒன்றைத் தமிழ்நாடு அரசு செயலுக்குக்
கொண்டுவந்துள்ளது என்பதை இங்கு நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்
கொள்ளுகிறேன். இந்தியாவிலேயே இத் திட்டத்தை முதன் முதலாகச்
செயல்படுத்திய பெருமை தமிழ்நாட்டையே சாரும். "கேர்" நிறுவனம்
களிகூர்ந்து அளித்துள்ள உதவியினால் இது இயன்றது. "கேர்"
நிறுவனம் இலவசமாக உணவுப் பொருட்களை வழங்குகிறது. இத்
திட்டத்தை முதலமைச்சர் 1969 செப்டெம்பர் திங்களில் பின்னி ஆலையில்
தொடங்கி வைத்தார். மேலும், பல தொழில் நிறுவனங்கள் இத்
திட்டத்தை நிறைவேற்றி வருகின்றன. இதுவரையில் இத்திட்டம் 40
தொழில் நிறுவனங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்
கீழ் 12 ஆயிரம் பேர் பயனடைகின்றனர்.

**மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியம்.**

அனுபவம் வாய்ந்த தொழிலாளர் தலைவர்களையும், தொழில் தலைவர்களையும் கொண்ட மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியத்தை அரசு மாநில நிலையில் தொழிலாளர் குறித்த முக்கியமான சிக்கல்கள் அனைத்தினையும் கலந்து ஆலோசனை செய்துவருகிறது. இந்த வாரியம் தொழிலாளர் நலன் குறித்து ஆலோசனை நல்குவதற்காக நிறுவப்பட்ட ஆலோசனை மன்றமாகும்.

**குறைந்த அளவு கூலியை முடிவு செய்தல்.**

முறைப்படி அமையாத தொழிலாளர் நலனைக் காக்கும் பொருட்டுக் குறைந்த அளவு ஊதியத்தை முடிவு செய்வதைப் பொறுத்த வரையில், கீழ்க்காணும் தொழில்கள் குறித்து குறைந்த அளவு ஊதியங்களை முடிவு செய்வதற்காக 1969-ஆம் ஆண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

1. செங்கற்கள், ஓடுகள் தயாரிப்புத் தொழில்.

2. பருத்தி விதை எடுத்தல், அழுத்துதல், பருத்திக் கழிவுத் தயாரிப்புத் தொழில்.

3. கம்பளி, பட்டுத்துணி நீங்கலான பிற துணிகளைச் சலவை செய்யும் சலவையகங்களில் தொழில்.

<u>இதனால், இத் தொழில்களில் செயல்படும் சுமார் 38,000 தொழிலாளர்கள் நன்மை பெறுவர்.</u>

குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம் செயல்படும் முறையை ஆராய்வதற்காக இந்திய அரசினால் நியமிக்கப்பட்ட தனி நபர் குழு அளித்துள்ள பரிவுரைகளை ஒட்டி, குறைந்த அளவு ஊதியங்கள் குறித்த பணியைத் தனியே கவனிப்பதற்காக குறைந்த அளவு ஊதியச் சட்டத்தை நிர்வகிக்கும் அமைப்பை வலுப்படுத்துவதற்கு வகைசெய்யும் செயற்குறிப்பு ஒன்று அரசின் ஆலோசனையில் இருந்து வருகிறது.

**ஊதிய வாரியங்கள்.**

ஊதிய வாரியங்களின் இடைக்காலப் பரிவுரைகளையும், இறுதிப்பரிவுரைகளையும் செயல்படுத்துவதற்கான நடவடிக்கை இந்த ஆண்டு தொடரப்பட்டது.

பொறியியல் தொழில்கள், தோல் தொழில், தோல் பொருள் தொழில், கனரக ரசாயன உரத் தொழில்கள், சாலைப் போக்குவரத்துத் தொழில்கள், மின்சார நிறுவனங்கள் ஆகியவை குறித்து ஊதிய வாரியங்கள் பரிவுரை செய்த இடைக்கால நிவாரணமும், சிமிட்டித் தொழில் குறித்து இரண்டாவது ஊதிய வாரியத்தின் முடிவான பரிவுரைகளும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டில் பஞ்சாலைத் தொழில் குறித்து இரண்டாவது ஊதிய வாரியத்தின் இறுதிப் பரிவுரைகளும், பொறியியல் தொழில்களுக்கான ஊதிய வாரியத்தின் இறுதிப் பரிவுரைகளும் வெளியிடப்பட்டன. கோவை மாவட்டத்திலுள்ள 52 பஞ்சாலைகள் 1969-ம் வருடம் செப்டம்பர் மாதம் 5-ம் தேதி அன்று நிறைவேற்றப்பட்ட உடன்பாட்டு ஏற்பாடு மூலம் ஊதிய வாரியத்தின் இறுதிப் பரிவுரைகளைச் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன. பிற மாவட்டங்களிலும் இதே போன்ற ஏற்பாடுகள் செயலுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொறியியல் தொழில்கள் குறித்து ஊதிய வாரியத்தின் இறுதியான பரிவுரைகள் ஒருமனதாக அமையவில்லையாதலால், தொழிலாளர் துறை ஆணையர் தொழில் நிர்வாக, தொழிலாளர் பிரதிநிதிகளுடன் அது குறித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தினார். ஊதிய வாரியத்தின் தலைவர், தனிப்பட்ட உறுப்பினர்கள் ஆகியோரின் பரிவுரைகள் அடிப்படையாக மேற்கொள்ளப்பட வேண்டுமென இரு தரப்பினருக்கும் ஆலோசனை வழங்கப்பட்டது. சமரச ஏற்பாடு இயலாத இடத்து நேரடிப் பேச்சு வார்த்தைகளின் மூலமும், தகுந்த நடவடிக்கை எடுப்பதற்காக சமரச அதிகாரியின் அறிவுரை



வதன் மூலமும் பரிவுரைகளைச் செயல்படுத்துமாறு, தொழில் நிர்வாகங்கள் தொழிற்சங்கங்கள் ஆகியவற்றைக் கேட்டுக்கொண்டு அரசு பத்திரிகைக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

தோல் தொழில், தோல் பொருள் தொழில், கனரக ரசாயன உரத் தொழில், சாலைப் போக்குவரத்துத் தொழில், மின்சார நிறுவனங்கள் ஆகியவை குறித்து மத்திய ஊதிய வாரியத்தின் இறுதிப் பரிவுரைகளும் வரப்பெற்றுள்ளன. அவை, அரசின் ஆலோசனையில் உள்ளன.

சர்க்கரை ஆலை ஊதிய வாரியத்தின் பரிவுரைகளை வெளியிடுவதில் அதிக அளவு காலதாமதம் ஏற்பட்டதால் பொறுமையிழந்த தொழிலாளர்கள் ஊதிய வாரியமின்றிய சமரச ஏற்பாடு ஒன்று ஏற்பட வேண்டுமென்று விரும்பினர். ஆனால் இத்தகைய நடைமுறையை மேற்கொள்ள உரிமையாளர்கள் இணங்கவில்லை, எனவே சர்க்கரை ஆலை உரிமையாளர்கள், தொழிலாளர்கள் பிரதிநிதிகளின் கூட்டத்தை 1970 பிப்ரவரி திங்களில் நான் கூட்டினேன். ஏற்கனவே அவர்கள் நடத்தி வந்த பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து நடத்த குழு ஒன்றை நிறுவுமாறு அவரை வற்புறுத்துவதில் நான் வெற்றி கண்டேன். ஊதிய வாரியங்களின் பரிவுரைகள் இப்பொழுது வரப்பெற்றுள்ளபடியால் இரு தரப்பினரும் பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து நடத்தி, இணக்கமான ஏற்பாடு ஒன்றை அடைவர் என்று நான் திண்ணமாக நம்புகிறேன்.

**எடைகளும் அளவைகளும்.**

எடைகள்-அளவைகள் சட்டம் ஆய்வுரையாண்டில் தொழிலாளர் துறையினரால் தொடர்ந்து நிர்வகிக்கப்பட்டது. வாடகைக் கார் மீட்டர்கள், ஆட்டோ ரிக்ஷா மீட்டர்கள், குழந்தைகளை எடை போடும் இயந்திரங்கள் ஆகியவற்றிற்கு இச்சட்டத்தை நீட்டிப்பது குறித்து அரசு ஆழ நினைந்து வருகிறது.

இப்போதுதான் முடிவடைந்துள்ள இந்த ஆண்டில் அனைத்து நாடுகள் தொழிலாளர் அமைப்பின் 50-வது ஆண்டு விழா இம் மாநிலத்தில் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. விழா வாரத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ராஜாஜி மண்டபத்தில் 1969-ம் ஆண்டு ஜூலை மாதம் 20-ம் தேதி அன்று தொடங்கி வைத்தார். உலகம் முழுவதும் உள்ள தொழிலாளர் நலனுக்காகவும் சமூக நீதியை மேம்படுத்துவதற்காகவும் அனைத்து நாடுகள் தொழிலாளர் அமைப்பு ஆற்றிய நற்பணியை அவர் பாராட்டிப் பேசினார். அனைத்து நாடுகள் தொழிலாளர் அமைப்பின் பணிகளைத் தெளிவு படுத்தும் கவர்ச்சிகரமான பொருட்காட்சி ஒன்று அச்சமயத்தில் திறக்கப்பட்டது. இந்த வாரத்தின் ஒவ்வொரு நாளும், பாதுகாப்பு, உற்பத்தி குறித்த திரைப்படங்கள் திரையிடப்பட்டன. சுமார் 20,000 மக்கள் இத் திரைப்படங்களைக் கண்டு களித்தார்கள். இந்த விழா ஒரு வாரத்துக்கு நடந்தது. முதலமைச்சர், தொழிலாளர் நல அமைச்சர், தொழிலாளர் பிரதிநிதிகள், தொழில் பிரதிநிதிகள் ஆகியோரது உரைகள் அனைத்து இந்திய வானொலியில் ஒலிபரப்பப்பட்டன. வெளியூர்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இந்த விழாவைக் கொண்டாடினர். இந்த விழாவின் நினைவாகத் தமிழ்நாடு தொழிலாளர் நல இதழின் சிறப்பு வெளியீடு ஒன்று கொண்டுவரப்பட்டது.

**தொழிலாளர் நல நிதி.**

அனைத்து நாடுகள் தொழிலாளர் அமைப்பு விழாவைத்தொடங்கிவைத்துப் பேசுகையில், இம் மாநிலம் முழுவதும் உள்ள தொழிற்சாலைத் தொழிலாளர்களின் நலனுக்காக, தொழிலாளர் நல நிதி ஒன்றை அமைப்பது பற்றி அரசு பரிசீலிக்கும் என்று முதல் அமைச்சர் அறிவித்தார். இவ்வித நிதியின் அமைப்பு பற்றி அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

**தொழிலாளர் வகுப்பினருக்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளி.**

வாழ்க்கைச் செலவுப் புள்ளியை 1936 தொடர்களிலிருந்து 1960 தொடர்களுக்கு மாற்றுவது குறித்து அரசு சிறிது காலமாக ஆலோசித்து வருகிறது. இதற்கென நியமிக்கப்பட்ட சிறப்புக் குழுவின் அறிக்கையையொட்டி இது பற்றி மாநிலத் தொழிலாளர் வாரியத்தின் ஒரு சிறப்புக் கூட்டம்

ஆலோசித்தது. 1936 தொடர்களுக்குப் பதிலாக 1960 தொடர்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளது. 1936 தொடர்களை 1960 தொடர்களுடன் இணைப்பதற்கு முன்பு, 1936 தொடர்களில் 1960 புள்ளியுடன் 13·2 புள்ளிகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற வல்லுநர் குழுவின் பரிவுரையை அரசு ஏற்றது. இதுபற்றி இந்திய அரசுடன் கடிதப்போக்குவரத்து நடத்தப்பட்டு வருகிறது.

**மே தின விடுமுறை.**

தொழிற்சாலை ஊழியர்களுக்கு மே தினத்தைச் சம்பளத்துடன் கூடிய கூடுதல் விடுமுறை நாளாக அறிவிப்பதற்குத் தேவையான நடவடிக்கையை மேற்கொள்வதன் மூலம் இம் மாநிலத்தில் தொழிலாளர்களின் நீண்ட நாளைய விருப்பத்தைப் பூர்த்தி செய்வதென அரசு முடிவு செய்துள்ளது. இதன் மூலம் தேசிய—பண்டிகை விடுமுறை நாட்களின் எண்ணிக்கை 8-லிருந்து 9-ஆக உயரும். இதற்கென தேசிய-பண்டிகை விடுமுறை நாட்கள் சட்டத்தைத் திருத்துவதற்கான மசோதா ஒன்று சட்ட மன்றத்தில் முகவுரைக்கப்பட்டுள்ளது.

**தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம்.**

தென் ஆர்க்காடு, தருமபுரி, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக தமிழ்நாடு முழுவதற்கும் தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம் தறபோது பொருந்துகிறது. இத்திட்டத்தின்கீழ் 346,000 குடும்பங்கள் (ஈட்டுறுதி செய்துகொண்ட தொழிலாளர்களின் குடும்பங்கள்) அடங்கிய 13,96,000 பேர் பயனடைந்தனர். 10,200 ஈட்டுறுதி செய்து கொண்டவர்கள் பயனடைந்தனர்.

1969-70ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் மருத்துவ வசதிகள் கோயம்புத்தூர் நகரத்திலும் அதன் புறநகர் பகுதிகளிலும் உள்ள ஈட்டுறுதி செய்துகொண்ட உறுப்பினர்களுக்கு இத்திட்டம் 1969–ம் ஆண்டு ஏப்ரல் மாதம 13–ம் தேதி முதற்கொண்டும் மதுரை நகரிலும் அதன் புறநகர் பகுதிகளிலும் உள்ள ஈட்டுறுதி செய்துகொண்டவர்களின் குடும்பங்களுக்கு 1969-ம் ஆண்டு ஜூன் மாதம் 3-ம் தேதி முதற்கொண்டும் நீட்டிக்கப்பட்டது. இந்த ஆண்டில் வட ஆற்காடு மாவட்டம் ஆரணி பகுதிக்கும் இத்திட்டம் நீடிக்கப்பட்டது. அங்கு வசிக்கும் ஈட்டுறுதி செய்து கொண்டவர்களும் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் இத்திட்டத்தால் பயனடைந்தனர். தூத்துக்குடியிலும் விக்ரமசிங்கபுரத்திலும் உள்ள தொழிலாளர் குடும்பங்களுக்கு இத்திட்டத்தை விரைவிலேயே நீட்டிக்கக் கருதப்படுகிறது.

எல்லா வசதிகளும் கொண்ட தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனை ஒன்று தொழிலாளர் நல ஈட்டுறுதி நோயாளிகளுக்காக வேண்டி 625 படுக்கை வசதியுடன் சென்னை மாநகரில் தற்போது செயல்பட்டு வருகிறது. கோயம்புத்தூரில் 500 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனை ஒன்றைக் கட்டும் பணி முடிந்துவிட்டது. மதுரையிலுள்ள தொற்று நோய் மருத்துவமனைக் கட்டிடங்கள் தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனையை நடத்துவதற்கெனத் தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகத்திடம் ஒப்படைக்கப்படும். அது விரைவிலேயே பயன்படுத்தப்படும். லால்குடி, சிவகாசி, கோவில்பட்டி ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவ மனைகள், கோவை அரசு தலைமையிட மருத்துவமனை, தாம்பரத்தில் உள்ள அரசு காச நோய் நலம் பேண மருத்துவ மனை, நாகர்கோவிலிலுள்ள அரசு காச நோய் மருத்துவ மனை ஆகியவற்றில் தொழிலாளர் நல ஈட்டுறுதி நோயாளிகளுக்காகவென்றே பயன்படுத்துவதற்கென தனி வார்டுகள்/இணைப்புகள் கட்டப்பட்டுள்ளன. இந்தக் கட்டிடங்கள் யாவும் ஏற்கெனவே பயன்படுத்தப்படுகின்றன. இம் மாநிலத்தில் 32 இடங்களில் ரூ. 1·90 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் தனி மருந்தகக் கட்டிடங்கள் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ளன, இந்த மருந்தகக் கட்டிடங்கள் யாவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சூளையிலும், திருவல்லிக்கேணியிலும் மருந்தகக் கட்டிடங்கள் முடிவடையும் தறுவாயில் உள்ளன. அவை விரைவில் பயன்படுத்தப்படும்.



புதுடெல்லியிலுள்ள தொழிலாளர் நல ஈட்டுறுதிக்கழகம், தனது நிதி நிலை இடர்ப்பாடுகளின் காரணமாக, ஒப்பளித்துள்ள எந்தச் செயல் திட்டங்கள் குறித்து பணி தொடங்கப்படவில்லையோ அல்லது நிலங்களைக் கையகப்படுத்துவதற்கென நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லையோ அத்தகைய செயல் திட்டங்கள் குறித்துக் கூட, ஒவ்வொரு பகுதியிலும் கழகத்தினிடமிருந்து நிதிகள் குறித்த புதிய இசைவைப் பெறுமல், எந்தப் புதிய கட்டிடப் பணியும் தொடங்கப்படக் கூடாது என்று அக் கழகம் 1968 ஜூலையில் அரசைக் கேட்டுக் கொண்டது. அதன் பின்னர் மூலதன செலவுள்ள கட்டிடப் பணிகள் அனைத்தையும் தடை செய்வதுடன், ஒவ்வொரு மாநிலத்திலும் தற்போதுள்ள அளவு கோலாகிய 1,000 தொழிலாளர்களுக்கு 11 படுக்கைகள் என்பதை 1,000 தொழிலாளர்களுக்கு நான்கு படுக்கைகள் என்று குறைத்தது.. 1969 மார்ச் திங்களில், தனது நிதி நிலையை ஆய்வு செய்ய குழு ஒன்றை இக்கழகம் நியமித்தது. இக் குழு செய்த பரிவுரைகளின் விளைவாக மருத்துவ வசதியின் பகிர்ந்து கொள்ளத்தக்க செலவிற்கான மொத்த மேல் வரம்பை, தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகம் ஓராண்டில் ஒரு தொழிலாளருக்கு ரூ. 50 வீதம் என்று தற்போது வரையறுத்துள்ளது. அதற்கு மேற்பட்ட செலவை மாநில அரசு முழுவதும் ஏற்க வேண்டும் என்று அது அறிவித்துள்ளது. இதன்படி, இது காரணமாக மாநில அரசு நடப்புச் செலவுப் போக்கைக் கருதிப் பார்க்குமிடத்து ஆண்டொன்றுக்கு சுமார் 100 லட்சம் கூடுதல் பொறுப்பை ஏற்க வேண்டி வரும். இது குறித்து அரசு மேற்கொண்டும் பரிசீலனை செய்து வருகிறது.

**தொழிலாளர் நலன் குறித்த தேசியக் கழகம்.**

இந்த ஆண்டில் தொழிலாளர் நலன் குறித்த தேசியக் கழகம் தனது அறிக்கையை இந்திய அரசுக்குப் பணிந்தனுப்பியது.

நாட்பட்ட பல சிக்கல்களுக்கும், கருத்து வேறுபாடுள்ள பிரச்னைகளுக்கும் இக் கழகம் தன் நீண்ட ஆய்வுக்குப் பின்னர் தக்க ஆலோசனைகளையும் ஏற்ற தீர்வுகளையும் கூறும் என்று தொழில் நிர்வாகத்தினரும், தொழிலாளரும், அரசும் பெரிதும் நம்பியிருந்தனர். ஆனல் இந்த ஆணைக் குழுவின் பரிவுரைகள் தொழிலாளர்களாலோ, தொழில் நிர்வாகத்தினராலோ இன்னும் சொல்லப் போனல் மாநில அரசுகளால் கூட ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இதன் விளைவாக நாம் முன்பு எந்த நிலையில் இருந்தோமோ அதே நிலையிலேயே மீண்டும் விடப்பட்டுள்ளோம். எனவே, தொழிலாளர் நலன் குறித்து யார் வாதிட வேண்டும் என்பதையும், தொழிலாளர்கள் அனைவரும் ஒருங்கு சேர்ந்து கட்டுப்பாடின்றி தங்கள் நலனுக்காகப் பேச அவர்களுக்குள்ள பங்கையும் இது தொடர்பாக அரசு தலையிட வேண்டிய அவசியம் பற்றியும் முடிவு செய்து இச் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் பொறுப்பு நம்மிடத்திலேயே விடப்பட்டுள்ளது. ஆயினும், இந்த ஆணைக் குழுவின் பரிவுரைகளில் சில இம் மாநிலத்தில் முன்னரே செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை ஈண்டு நான் குறிப்பிடுவது சாலச் சிறந்ததாகும்.

**தேசிய வேலை வாய்ப்புப் பணி.**

இரண்டாவது உலகப் போரிலிருந்து மீண்ட படை வீரர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காகவும், அவர்களை வேறு பணிகளில் ஈடுபடுத்துவதற்காகவும் தொடங்கப்பட்ட தேசிய வேலை வாய்ப்புப் பணி, நாட்டில் பல்வேறு வகையான வேலைவாய்ப்பு தேடுபவர்களும் அடங்கும்படியாக தனது நடவடிக்கைகளை நிலையாக விரிவுபடுத்திக் கொண்டது. வழக்கமாக உள்ள வேலை வாய்ப்பகங்களைத் தவிர, உடல் ஊனமுற்றோருக்காக சிறப்பு வேலை வாய்ப்பகம் ஒன்றும் சிறப்புக் கல்வித் தகுதி பெற்றவர்களுக்காக தொழில்–நிர்வாக வேலைவாய்ப்பகம் ஒன்றும், சென்னை, அண்ணாமலை, மதுரைப் பல்கலைக் கழகங்களில் பல்கலைக் கழக வேலைவாய்ப்புத் தகவல் வழிகாட்டி நிறுவனங்கள் மூன்றும் உள்ளன. வேலை தேடுபவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதுடன் இப் பணி, அவர்களுக்கு தொழில் முறையில் வழி காட்டுகிறது. வேலை வாய்ப்பு குறித்து ஆலோசனை கூறுகின்றது. தொழில் குறித்த தகவல்களை அளிக்கின்றது. பர்மா, இலங்கை அகதிகளின் மறுவாழ்வு குறித்தும் சிறப்பு நாட்டம் செலுத்தப்படுகின்றது.

இந்த நோக்கத்திற்காக நியமிக்கப்பட்டுள்ள வேலை வாய்ப்பு தொடர்பு அதிகாரி, இந்த அகதிகளுக்கு முறையாக வேலை அளிக்கப்படுவதை விரைவுபடுத்துவதற்காக, தனியார், பொதுத் துறை தொழிலதிபர்களுடனும், பற்றுள்ள ஏனைய முகவர் நிறுவனங்களுடனும் தொடர்பு கொள்ளுகிறார். உடல் ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுவதை விரைவுபடுத்துவதற்காக, 1969 அக்டோபரில் தமிழ்நாட்டில் சிறப்பு இயக்கம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. அதன் நேரடிப் பலனாக, உடல் ஊனமுற்றோர் 120 பேருக்கு வேலை அளிக்கப்பட்டது. ஹரிஜன, பழங்குடி மக்கள் வகுப்பைச் சேர்ந்த மனுதாரர்களின் வேலை வாய்ப்பு நிலைமையை மேம்படுத்துவதற்காக பயிற்சி—வழிகாட்டி நிலையம் ஒன்றைத் திறக்க இந்திய அரசு கருதியுள்ளது. இந்தப் பிரிவு சென்னையில் ஏற்படுத்தப்பட்டால், ஹரிஜன, பழங்குடி மக்கள் வகுப்பைச் சேர்ந்த மனுதாரர்களுக்கு இது சிறந்த முறையில் வழி காட்டும். நமது மாநிலத்தில் உள்ள தேசிய வேலைவாய்ப்புப் பணியும், நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் பேரவை முன் வைக்கப்பட்டுள்ள ஆய்வறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

நமது மாநிலத்தில் தொழில் நிலைமை மேம்படுவதற்கு, இங்குள்ள தொழிலாளர், பிரதிநிதிகள் தொழிலதிபர்கள் பிரதிநிதிகளின் நல்லெண்ணமும், ஒத்துழைப்பும் பெருமளவுக்குக் காரணமாக இருந்துள்ளது. எனவே அவர்களுக்கு என் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொழிலின் முன்னேற்றத்திற்காகவும், தொழிலாளர்களின் மேம்பாட்டுக்காகவும் இயன்றதை யெல்லாம் எப்பொழுதும் செய்வதே அரசின் கொள்கையாக இருக்கும் என்பதை நான் மீண்டும் உறுதிப்படுத்துகிறேன்.

"வளர்க தொழில்—வாழ்க தொழிலாளர்."

இத் தீர்மானத்தைப் பேரவை ஏற்றுக்கொள்வதற்காக நான் பரிந்துரைக்கிறேன்.

## இணைப்பு II

[ 31-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

## 1969-70-ல் தமிழ்நாட்டில் தொழிலாளர் நிலைமை ஆய்வு.

தொழிலாளர் குறித்த சட்டங்கள் இந்த அறிக்கையில் கீழ்க்கண்ட வகைகளில் ஆய்வு செய்யப்படுகின்றன :—

1. நிறுவனச் சட்டம்.
2. ஊதியச் சட்டம்.
3. தொழில் தகராறுகள் சட்டம்.
4. சமூக காப்புச் சட்டம்.
5. தொழிலாளர் நல ஏற்பாடுகள் சட்டம்.

இவை தவிர, எடைகள், அளவைகள் சட்டத்தைச் செயல்படுத்தல், வேலை வாய்ப்புப் பணி முதலியன குறித்தும் தனித்தனிப் படலங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.



### I. தொழில் நிறுவனங்கள் சட்டம்.

### 2. 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம்.

இந்த ஆண்டுத் தொடக்கத்தில் 6,124 தொழிற்சாலைகள் [உயர் நீதிமன்றத்தின் தடை ஆணையின்படி பிரிவு 85 (1) தொழிற்சாலைகள் 1,350 நீங்கலாக] தொழிற்சாலைகள் பட்டியலில் இருந்தன. இந்த ஆண்டில் 1,683 தொழிற்சாலைகள் பட்டியலில் சேர்க்கப்பட்டன. 1,777 தொழிற்சாலைகள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன. இவ்வாறாக ஆண்டு முடிவில் இம்மாநிலத்திலிருந்த தொழிற்சாலைகளின் மொத்த எண்ணிக்கை 6,218 ஆகும். இதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.—

| | பதிவேட்டிலிருந்த தொழிற்சாலைகளின் எண்ணிக்கை. 1968. | 1969. |
|---|---|---|
| பிரிவு 2 (m) (i) .. .. .. | 5,704 | 5,811 |
| பிரிவு 2 (m) (ii) .. .. .. | 420 | 407 |
| மொத்தம் .. | 6,124 | 6,218 |
| வேலைக்கமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை .. | 3,88,931 | 3,92,558 (தற்காலிகமானது.) |

1968-இல் உரிமக் கட்டணங்களாக ரூ. 17,09,791·50 வசூலிக்கப்பட்டிருக்க, 1969 டிசம்பர் வரையில் உரிமக்கட்டணங்களாக ரூ. 16,83,261·04 வசூலிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

சென்ற ஆண்டில் 10.069 தடவைகளில் தொழிற்சாலைகள் வழக்கமாக மேற்பார்வையிடப்பட்டிருக்க, இந்த ஆண்டில் 10,527 தடவைகள் அவ்வாறு மேற்பார்வையிடப்பட்டன. அவற்றுடன் 1,075 முறை சிறப்பு மேற்பார்வையும், 668 முறை ஞாயிற்றுக்கிழமைகளில் மேற்பார்வையும் 319 முறை எதிர்பாராத மேற்பார்வையும் (மொத்தம் 2,610 முறைகள்) மேற்பார்வையிடப்பட்டன. சென்ற ஆண்டில் இவ்வாறு 2,289 முறைகள் மேற்பார்வையிடப்பட்டன. பதிவு பெறாத தொழிற்சாலை நிறுவனங்களைத் தொழிற்சாலை இன்ஸ்பெக்டர்கள் 662 முறை சென்று பார்வையிட்டனர். தொழிற்சாலைகள் கண்காணிப்பு இன்ஸ்பெக்டர்களால் 840 முறைகள் சோதனை மேற்பார்வை செய்தனர்.

தொழிற்சாலைச் சட்டம் அதற்குத் தொடர்பான சட்டங்கள் இவற்றின் விதித்துறைகளை மீறியதற்காக சென்ற ஆண்டில் 1,487 வழக்குகள் தொடரப்பட்டிருக்க, இவ்வாண்டில் 1832 வழக்குகள் தொழிற்சாலை நிர்வாகத்தினர் மீது தொடரப்பட்டன.

1968-69-ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட விபத்துக்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு. | சாதாரண விபத்துக்கள். | மரண விபத்துக்கள். |
|---|---|---|
| 1968 .. .. .. .. | 21,687 | 56 |
| 1969 .. .. .. .. | 25,896 | 68 |

இந்த ஆண்டில் அறிவிக்கப்படும் விபத்துக்களின் எண்ணிக்கை சற்று அதிகரித்துள்ளது. நவீன இயந்திரங்களைச் செயலுக்குக் கொண்டு வந்தாலும் காப்பு ஏற்பாடுகள் பற்றிய அறிவும் பயிற்சியும் பெற்றிராத புதிய தொழிலாளர்களை நியமித்ததாலும் விபத்துக்கள் பேற்சொன்னவாறு அதிகரித்தன. 1969-ஆம் ஆண்டு 1968-ஆம் ஆண்டைவிட அதிகமாக 458 மிக முறையான மேற்பார்வைகளும், 321 மிகச் சிறப்பாக மிக்கதுமெனச் செய்யப்படும் மேற்பார்வைகளும் நடத்தப்பட்டன. ஏற்பு அளிக்கப்படுவதற்காக அனுப்பப்படும் வரைபடங்களை விரைவாக முடிவு செய்வதற்காகவும், சிறந்த முறையில் மேற்பார்வையிடுவதற்காகவும் சேலத்திலுள்ள தொழிற்சாலைகள் இன்ஸ்பெக்டர்களது பதவிகளில் ஒன்று தரம் உயர்த்தப்பட்டது.

இந்த ஆண்டில், தொழிற்சாலை இன்ஸ்பெக்டர் அலுவலகம் விபத்துக்களைத் தடுக்கும் பணியிற் அதிக கவனம் செலுத்தி அதிகமான மேற்பார்வைகளை நடத்த இயன்றதால் நேர்ந்த விபத்துக்கள் எல்லாவற்றையும் பற்றி கடந்த ஆண்டுகளைக் காட்டிலும் மேலும் சிறந்த முறையில் அறிவிப்புகள் அனுப்பப்பட்டன. விபத்துக்களைத் தடுக்கும் பொருட்டு தொழிற்சாலை இன்ஸ்பெக்டர் அலுவலகம் சேலம், கோயம்பத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள இடை நிறுவனத்தாருக்கும், கண்காணிப்பாளர்களுக்கும் மூன்று காப்புப் பயிற்சிகள் நடத்தின. காப்பு ஏற்பாடுகளினால் ஏற்படக் கூடிய நல்ல பயன்களைத் தொழிலாளர் நன்குணர்ந்து கொள்ளும் பொருட்டு பாதுகாப்பு வாரங்களைக் கொண்டாடுமாறு நிர்வாகத்தினர்க்கு ஊக்கமளிக்கப்பட்டுள்ளது. விபத்துக்களைக் குறைக்க நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ள தொழிற்சாலைகளின் நிர்வாகத்தினருக்குப் பரிசுகள் அளிக்கப்பட்டுள்ளன. காப்பு ஏற்பாடுகள் பற்றியும் உற்பத்தியை அதிகரிப்பது குறித்தும் பயனுள்ள ஆலோசனைகளை நல்கிய தொழிலாளர்களுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன. கடுமையான விபத்துக்கள் பெரும்பாலானவை குறித்தும் எல்லா மரண விபத்துக்கள் பற்றியும் தொழிற்சாலைகள் இன்ஸ்பெக்டர்கள் விசாரித்தனர். தொழிற்சாலை நிர்வாகத்தினர் தங்களது தொழிற்சாலைகளிலும், பிற தொழிற்சாலைகளிலும் விபத்துக்கள் நேராமல் தடுப்பதற்கும் ஒரே தன்மையுள்ள விபத்துக்கள் மீண்டும், மீண்டும் ஏற்படாமல் தடுப்பதற்கும் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து அவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டின் இறுதியில் செயல்பட்டு வந்தது போல 1969-ஆம் ஆண்டு இறுதியிலும் 269 தொழிற்சாலைகளில் பாதுகாப்புக் குழுக்கள் செயல்பட்டு வந்தன.

பத்து அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் வேலை செய்பவையும், விசையின் உதவியுடன் தயாரிப்பு வேலை முறையில் ஈடுபட்டுள்ளவையுமான தொழிற்சாலைகளுக்கும் 20 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் வேலை செய்பவையும் விசையின் உதவி இல்லாமல் தயாரிப்பு முறையில் ஈடுபட்டுள்ளவையுமான தொழிற்சாலைகளுக்கும் இச்சட்டம் பொருந்துகிறது. இன்னும் குறைந்த எண்ணிக்கையுள்ளவர்கள் பணியாற்றும் சிலவகை நிறுவனங்களுக்கும் இச்சட்டத்தின் விதித்துறைகளை நீட்டுதற்கு அறிவிப்பை அரசு 1967 செப்டம்பரில் வெளியிட்டது. அதன் விளைவாக இந்த அறிவிப்பின் செல்திறனை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. இந்த ரிட் மனுவின் மீது தீர்ப்பளிக்கப்படுகிற வரையில் இந்த அறிவிப்பு செயல்படுத்தப்படாமல் நிறுத்தி வைக்கப்பட வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி அறிவிப்பு செல்திறனுள்ளது என்று இப்பொழுது தீர்ப்பளிக்கப்பட்டது.

உற்பத்தி வளம்.

உற்பத்தி வளத்தைப் பெருக்கும் பிரிவு ஒன்றை ஏற்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டுத் தயாராகக் கிடைக்கக்கூடிய நிலையிலுள்ள சில கருவிகள் வாங்கப்பட்டன. இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படாத வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டிய பிற கருவிகள் கிடைக்காததனால் அவை வாங்கப்படவில்லை. அவற்றைத் தருவிக்க முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இக்கருவிகள் அனைத்தும் வாங்கப்பட்ட பின்னர் உற்பத்தி வளம் பெருக்கும் பிரிவு சிறந்த முறையில் செயல்படத் தொடங்கும்.



உற்பத்தி வளம் பெருக்குவது குறித்த திரைப்படங்கள் கொண்ட திரைப்பட நூலகம் ஒன்றும் இயங்கி வருகிறது. இந்தத் திரைப்படங்கள் இலவசமாகக் காட்டப்படுவதற்காக உள்ளூர் உற்பத்தி வளக் குழுக்களுக்கும் கல்வி நிலையங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. இத் திரைப்படங்கள் மக்களால் பெரிதும் விரும்பப்படுகின்றன. மக்களுக்குக் கல்வி புகட்டுவதில் இவை ஆற்றி வரும் பங்கு கல்வி நிறுவனங்களால் பாராட்டப்படுகின்றது. இந்த நூலகத்திற்காக அமெரிக்க நிர்வாகச் சங்கத்திடமிருந்து கூடுதலாகத் திரைப்படங்கள் பெறப்படும். உற்பத்தி வளம் பற்றிய நூல்கள் நூலகத்தில் வைக்கப்பட்டு நிதி வசதி உள்ள போதெல்லாம் புதிய நூல்கள் வாங்கப்படுகின்றன.

உள்ளூர் உற்பத்தி வள மன்றங்களுக்கு அக்குழுக்களை நடத்துவது குறித்து தருந்த ஆலோசனை வழங்கப்படுகிறது. இம்மன்றங்கள் வசூலிக்கும் சந்தாத் தொகைகளுக்கு நிகரான தொகை அவற்றிற்குப் பொது மானியமாக வழங்கப்படுகிறது. இந்த மானியம் 1970-71-ஆம் ஆண்டில் சென்னை உற்பத்தி வள மன்றத்திற்கு ரூ. 5,000 ஆகவும், பிற மன்றங்களுக்கு ரூ. 2,000 ஆகவும் குறைக்கப்படும். இம்மன்றங்கள் 1969-70-ஆம் ஆண்டில் 108 பயிற்சி முறைகளை நடத்தியுள்ளது. ஏறத்தாழ 21,600 பேர் பயிற்சி பெற்றனர். இப்பயிற்சித் திட்டங்களைத் தொழில் உரிமையாளர்கள் பாராட்டியதுடன் வெற்றியுடன் நடத்தத் தங்களது ஒத்துழைப்பையும் நல்கினார்கள். தொழிற்சாலைகளில் உற்பத்தி பெருக இப்பயிற்சி முறைகள் மிகவும் உதவியுள்ளன. உற்பத்தி வேளாண்மைத் துறை, தொழிலாளர் துறை போன்ற அரசுத் துறைகளில் இம்மன்றத்தின பணி பரவலாக பயன்படுத்தப்படுகிறது. இதைத் தவிர தொழிலியல் பொறியாளருக்குக் கொடுக்கத்தக்க சம்பளம் குறித்து 50 சதவீதம் மானியமும் பல்வேறு மன்றங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

1970-ஆம் ஆண்டு ஆசிய உற்பத்தி வள ஆண்டாகும். 1970-ஆம் ஆண்டில் ஆசிய உற்பத்தி வள ஆண்டு விழாவைச் செம்மையுற நடத்துவதற்கு உள்ளூர் உற்பத்தி மன்றங்கள் தனித் தனியாகத் திட்டங்கள் வகுத்துள்ளன. இத்திட்டங்கள் அனைத்திலும் இத்துறை முனைந்து கலந்து கொள்ளுகிறது.

சென்னை (உற்பத்தி வள) தொழிற்சாலைக் கண்காணிப்பு இன்ஸ்பெக்டர் தொழிற்சாலைக் கட்டிடங்களுக்கான வரைபடங்களைப் பரிசீலனை செய்வதிலும் முக்கியமாக உற்பத்தி வளத்தைப் பெருக்கும் நோக்கத்துடன் பொறிகள், கருவிகள், அவற்றைக் கையாளும் முறை முதலியவற்றில் சிறப்பாக நாட்டம் செலுத்தி தலைமை இன்ஸ்பெக்டருக்கு உதவி செய்து வருகிறார்.

## 3. தமிழ் நாடு 1947-ஆம் ஆண்டு கடைகள், நிறுவனங்கள் சட்டம்.

இச்சட்டத்தின் விதித்துறைகள் இம்மாநிலத்தில் தொடர்ந்து செயலில் இருக்கும். இந்த ஆண்டில் இச்சட்டத்தின் விதித்துறைகளும், விதிகளும் எந்தப் புதிய இடங்களுக்கும் நீட்டிக்கப்படவில்லை.

[1970 மார்ச் 26

1968-ஆம் ஆண்டு முதல் 1970-ஆம் ஆண்டு வரை, மூன்றாண்டுகளின் தொடக்கத்தில் இச்சட்டம் பொருந்துகிற கடைகள், நிறுவனங்களின் எண்ணிக்கையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டுத் தொடக்கத்தில். | இச்சட்டம் பொருந்துகிற நிறுவனங்களின் எண்ணிக்கை. | வேலைக்கமர்த்தப் பட்டவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1968 .. .. .. | 1,88,843 | 2,09,424 |
| 1969 .. .. .. | 2,16,538 | 1,84,710 |
| 1970 .. .. .. | 2,09,260 | 1,97,695 |

இச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட இன்ஸ்பெக்டர்கள் 1968-ஆம் ஆண்டில் 3,42,918 மேற்பார்வைகள் செய்திருக்க, 1969-ஆம் ஆண்டில் 3,36,663 மேற்பார்வைகள் நடத்தப்பட்டன.

இந்த ஆண்டில் 894 வழக்குகள் தாக்கல் செய்ய ஒப்பளிப்பு வழங்கப் பட்டன. (1968-ம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட வழக்குகள் 694 ஆகும்.) அவற்றில், 815 வழக்குகளில் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கபட்டன. 15 வழக்குகள் விடுதலை அளித்துத் தீர்ப்பளிக்கப் பட்டன. இந்த ஆண்டில் ரூ. 14,467·00 அபராதமாக வசூலிக்கப் பட்டது. (1968-ம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 10,318·00 ஆகும்.)

மேற்படி சட்டத்தின் 41-வது பிரிவின்கீழ் 1968-ம் ஆண்டில் தொழிலாளர் துறைத் துணை ஆணையருக்கு அனுப்பப்பட்டு அவரால் முடிவு செய்யப்பட்ட மேல்முறையீடுகள் குறித்த விவரங்கள் வருமாறு :

| | |
|---|---|
| 1969-ம் ஆண்டு சனவரி 1-ஆம் நாளன்று முடிவு செய்யப்படாமலிருந்த மேல்முறையீடுகளின் எண்ணிக்கை. | 146 |
| இந்த ஆண்டில் வரப்பெற்ற மேல் முறையீடுகளின் எண்ணிக்கை .. .. .. .. .. | 398 |
| மொத்தம் .. | 544 |
| முடிவு செய்யப்பட்ட முறையீடுகளின் எண்ணிக்கை .. | 330 |
| ஆண்டின் இறுதியில் முடிவு செய்யப்படாமல் உள்ள மேல் முறையீடுகளின் எண்ணிக்கை .. .. | 214 |

தொழிலாளர் துறை ஆணையர் மேற்கொண்ட சமரசப் பணிகளின் எண்ணிக்கை அதிகரித்ததே முடிவு செய்யப்படாது நிற்கும் முறையீடு களின் எண்ணிக்கை உயர்வுக்குக் காரணமாகும். இந்த ஆண்டின் தொடக்கத்தில் இச்சட்டத்தின் 51-ஆவது பிரிவின் கீழ் ஐந்து மனுக்கள் முடிவாகாமல் இருந்தன. இந்த ஆண்டில் பத்து மனுக்கள் பெறப் பட்டன. இந்த ஆண்டில் நான்கு மனுக்கள் முடிவு செய்யப்பட்டன. ஆண்டு முடிவில் பதினொரு மனுக்கள் முடிவாகாமல் இருந்தன.

இந்த ஆண்டில் அரசு நிலையான விலக்குகளை வழங்கவில்லை. பொருட்காட்சிகள், விழாக்கள் தவிர அரசு ஐந்து தாற்காலிக விலக்குகளை வழங்கியுள்ளது. தொழிலாளர் துறைத் துணை ஆணையர், இந்த ஆண்டில் மேற்படிச் சட்டத்தின் 5-ஆவது பிரிவுகளின் கீழ், ... தாற்காலிக விலக்குகளை வழங்கினார். தொழிலாளர் துறைத் துணை ஆணையர் 22 நேர்வுகளின் தாற்காலிக விலக்குகளை வழங்கினார்.



1970 மார்ச் 26]

## 4. தமிழ் நாடு 1958-ம் ஆண்டு உணவு விடுதிகள் சட்டம்.

இந்த ஆண்டில் இச்சட்டத்தின் விதித் துறைகள் மதுரை மாவட்டத்தில் சாத்தமங்கலம் ஊராட்சிக்கு நீட்டிக்கப்பட்டன.

1970-ஆம் ஆண்டு சனவரி திங்கள் 1-ஆம் நாளன்று 19,720 நிறுவனங் கள் இருந்தன. இவற்றில் 8,978-இல் தொழிலாளர்கள் இல்லை. இந்த நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டோர் எண்ணிக்கை 68,608 ஆக இருந்தது. (உணவு விடுதி நிறுவனங்கள் 1969-ஆம் ஆண்டு சனவரி திங்கள் 1-ஆம் நாள் வேலையிலிருந்த தொழிலாளர்கள் எண்ணிக்கை 20,305 ஆகும்.) இந்த ஆண்டில் 3,102 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டன. 1968-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1-ஆம் நாள் முதல் 1968 டிசம்பர் 31-ஆம் நாள் வரை ரூ. 96,143·00 பதிவுக் கட்டணமாக வசூலிக்கப்பட்டிருக்க, 1969-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1-ஆம் நாள் முதல் 1969-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள் வரை பதிவுக்கட்டணமாக வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 1,22,592·50 ஆகும்.

இன்ஸ்பெக்டர்கள் தங்கள் மேற்பார்வைகளின்போது இச்சட்டத்தின் பல்வேறு விதித்துறைகள் மீறப்பட்டதைக் கண்டுபிடித்ததன் விளைவாக 1968-ஆம் ஆண்டில் 839 வழக்குகள் தொடரப்பட்டிருக்க, ஆய்வாண்டில் 1,004 வழக்குகள் தொடரப்பட்டன. இவற்றில் 872 வழக்குகளில் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டன. 4 வழக்குகள் விடுதலை அளித்துத் தீர்ப்பு அளிக்கப்பட்டன. 1968-ஆம் ஆண்டில் அபராதத் தொகையாக ரூ. 13,544·00 வசூலிக்கப்பட்டிருக்க இந்த ஆண்டில் ரூ. 16,802 அபராதமாக வசூலிக்கப்பட்டது.

1969-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில், தொழிலாளர் துறை அதிகாரி களின் முன் 87 மேல்முறையீடுகள் முடிவு பெறாது இருந்தன. 226 மேல்முறையீடுகள் இந்த ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டன. வேலையிலிருந்து அகற்றுதல், வேலை நீக்கம் ஆகியவற்றை எதிர்த்து இச்சட்டத்தின் 19 (2) பிரிவின் கீழ் அந்த முறையீடுகள் செய்துகொள்ளப் பட்டன. 1969-இல் தொழிலாளர் துறை அதிகாரிகள் 255 மேல் முறையீடுகள் குறித்து முடிவு செய்தனர். 1968-ஆம் ஆண்டில் 277 மேல்முறையீடுகள் முடிவு செய்யப்பட்டன.

இந்த ஆண்டில் உணவு விடுதி எதற்கும் அரசோ, தொழிலாளர் துறை ஆணையரோ எந்த விலக்கையும் அளிக்கவில்லை.

1969-ஏப்ரல் திங்களில் தமிழ் நாடு 1958-ஆம் ஆண்டு உணவு வழங்கும் நிறுவனங்கள் சட்டத்தின் 29-ஆவது பிரிவைச்சேர்ந்த (1), (2) உட்பிரிவுகளை ஒட்டித் தொழிலாளர் நல அதிகாரிகள் சிலரது அதிகார வரம்பை மாற்றி அமைப்பதற்காக 1969-ஆம் ஆண்டு தமிழ் நாடு உணவு வழங்கும் நிறுவனங்கள் பற்றிய விதிகளைச் சேர்ந்த 23-ஆவது விதிகளைச் சேர்ந்த (1) துணை விதி திருத்தப்பட்டது.

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த சாத்தமங்கலம் கிராமத்திற்கு மேற்படி சட்டத்தின் விதித் துறைகளை அரசு 1969 நவம்பர் திங்களில் நீட்டித்தது. தமிழ் நாடு 1958-ம் ஆண்டு உணவு வழங்கல் நிறுவனச் சட்டத்தின் 1-ஆவது பிரிவைச் சார்ந்த (3) உட்பிரிவின் (ப) பகுதியை ஒட்டி இது குறித்த அறிவிப்பு தமிழ் நாடு அரசிதழில் 1970-ம் வருடம் ஜனவரி மாதம் 7-ம் தேதி அன்று வெளியிடப்பட்டது.

இம்மாநிலத்தில் உணவு விடுதிகளில் வேலையில் உள்ள தொழிலாளர் களின் வேலை நிலைமைகள் குறித்து மேற்பார்வை செய்ய அரசால் நியமிக்கப் பட்ட சிறப்பு அதிகாரி தனது அறிக்கையைப் பணிந்தனுப்பி விட்டார். அதைத் தொழிலாளர் துறை ஆணையர், தொழிலாளர் பிரதிநிதிகளுடனும் தொழிலதிபர் பிரதிநிதிகளுடனும் கலந்து விவாதித்தார். சில பரிவுரை களையொட்டி அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. வேறு சில பரிவுரைகள் இன்னமும் அரசின் ஆய்வில் உள்ளன.

## 5. 1951-ம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம்.

1969-ம் ஆண்டின் தொடக்கத்தில் 304 மலைத் தோட்டங்கள் இருந்தன. அவற்றில் 85,001 தொழிலாளர்கள் வேலை செய்தனர். 9 புதிய மலைத் தோட்டங்கள் பதிவு செய்யப்பட்டன. இந்த ஆண்டில் 4 மலைத் தோட்டங்கள் அகற்றப்பட்டன. இவ்வாறாக, ஆண்டு இறுதியில் மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம் பொருந்திய மலைத் தோட்டங்களின் எண்ணிக்கை 309 ஆகும். அவற்றில் வேலை செய்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 85,267 ஆகும்.

மலைத் தோட்டங்களின் இன்ஸ்பெக்டர்கள் 625 முறையான நேடுதல்களை நடத்தினர். அவற்றுடன் சிறப்பு மேற்பார்வைகள் ஞாயிற்றுக்கிழமைகளிலும் இந்த ஆண்டில் கதுமெனவும் செய்யப்படும் மேற்பார்வைகள் 389 முறை செய்யப்பட்டன. 50 பதிவாகாத மலைத் தோட்டங்களையும் அவர்கள் இந்த ஆண்டில் மேற்பார்வையிட்டனர்.

அரசு, மலைத் தோட்டங்களில் பணிபுரியும் மருத்துவமனை, மருத்துவப் பணியாளர்கள் வீட்டு வேலையாட்கள், நாற்றங்கால் பணியாளர்கள், காவலாளிகள், கால்நடைப் பாதுகாவலர், துப்புறவுத் தொழிலாளர் ஆகியோருக்குச் சில நிபந்தனைகளுக்குட்பட்டு 1968-ம் வருடம் டிசம்பர் மாதம் 26-ம் தேதி வரை 1951-ம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் 19, 20, 21, 22-ஆவது பிரிவுகளிலிருந்து விலக்கு அளித்தது. அது மேலும் 1969-ம் வருடம் டிசம்பர் மாதம் 26-ம் தேதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. 1948-ஆம் ஆண்டில் குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் 13, 14-ஆவது பிரிவுகளின் கீழ் இதே மாதிரியான விலக்குகள் எல்லா மலைத்தோட்டங்களுக்கும் வழங்கப்பட்டன.

1969-ம் ஆண்டில் ஒரு மலைத் தோட்டத்தின் மருத்துவத் திட்டத்தை அரசு ஏற்றது. ஒரு மலைத் தோட்டத்தின் மருத்துவத் திட்டத்தை அரசு தற்காலிகமாக ஏற்றது. வரையறுக்கப்பட்ட மருத்துவ வசதிகளை அம் மலைத் தோட்டம் அமைத்துக்கொண்டதும் இத் திட்டத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்படும். இந்த ஆண்டில், மருத்துவத் திட்டங்கள் ஒப்புதலளிக்கப்பட்ட 3 மலைத் தோட்டங்கள் 1969-ம் வருடம் டிசம்பர் மாதம் 31-ம் தேதி அன்றைய நிலவரப்படி, ஏற்பளிக்கப்பட்ட மருத்துவத் திட்டங்களையுடைய மலைத் தோட்டங்களின் மொத்த எண்ணிக்கை 257. இவற்றில் 6 மலைத் தோட்டங்களில் மருத்துவத் திட்டங்கள் தற்காலிகமாக ஏற்பளிக்கப்பட்டன.

தொழில் துறை மூலமாக மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு பணியாற்றும் நேரங்களில் அணிவதற்காக கம்பளி உடைகள் வழங்கப்பட்டன. உறங்குகையில் போர்த்திக்கொள்வதற்கான கம்பளிகள் இந்த ஆண்டில் தனியார் தயாரிப்பாளர்கள் மூலம் வழங்கப்பட்டன.

அரசு மலைத் தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதி ஆலோசனைக் குழுவின் பரிவுரையின் மேல் மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்குரிய தரமான வீடுகள் குறித்த குறிப்பீடுகளை வரையறுத்துள்ளது.

1969-ம் வருடம் ஜூன் மாதம் 30-ம் தேதி அன்றைய நிலவரப்படி 1951-ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் கீழ் 5,142 தனிப்பட்ட தொழிலாளர்களும் 32,615 தொழிலாளர் குடும்பங்களும், மலைத் தோட்டங்களில் வசித்து வந்தனர். தரமான 33,901 வீடுகள் தேவைப்பட்டிருக்க, 1969-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ஆம் நாளுடன் முடிவடையும் அரையாண்டில் 30,376 வீடுகள் வரையறுக்கப்பட்டுள்ள தரங்களை ஒட்டிக் கட்டப்பட்டுள்ளன. மூன்றாவது திட்டக்காலத்தில் வழங்கப்பட்ட கடன் உதவியைக் கொண்டு மலைத்தோட்ட உரிமையாளர்கள் 195 வீடுகளைக் கட்டி முடித்தனர். மலைத்தோட்டத் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதித் திட்டத்தினை இந்திய அரசு இப்பொழுது அனுப்பியுள்ளது.





இப்பொழுது வழங்கப்படும் கடன் உதவித் தொகை குறித்த வசதிகளை மலைத் தோட்ட உரிமையாளர்கள் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் இத்திட்டம் மலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு, தகுந்த ஆலோசனைக் குறிப்புகளுடன் அனுப்பப்பட்டுள்ளது.

1969-ஆம் ஆண்டில் 5 மலைத் தோட்டங்களிலிருந்து பெறப்பட்ட வீட்டு வசதித் திட்டங்களுக்கு சென்னை மலைத் தோட்டத் தலைமை இன்ஸ்பெக்டர் ஒப்புதல் அளித்துள்ளார்.

1969-ஆம் ஆண்டில் குழந்தைக் காப்பகங்கள் கட்டுவதற்கான 5 திட்டங்களுக்கு மலைத் தோட்ட தலைமை இன்ஸ்பெக்டர் ஏற்பளித்தார்.

1969-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் நீதிமன்றங்களில் ஆறு வழக்குகள் தொடரப்பட்டு முடிவுறு நிலையிலிருந்தன. 21 வழக்குகள் தொடர அனுமதி வழங்கப்பட்டது. இந்த ஆண்டில் 26 வழக்குகள் முடிவு செய்யப்பட்டன. அவற்றில் 2 வழக்குகளில் விடுதலை அளித்தும் 24 வழக்குகளில் தண்டனை விதித்தும் தீர்ப்பளிக்கப்பட்டன. 1969-ஆம் ஆண்டு முடிவில் வழக்கு ஒன்று நீதிமன்றத்தின் விசாரணையில் இருந்தது.

இந்த ஆண்டுத் தொடக்கத்தில் உயர்நீதி மன்றத்தில் ஒரு மேல் முறையீடு விசாரணையில் இருந்தது. நாகர்கோவில் துணைக் குற்றவியல் நீதிபதியால் தமக்கு விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து, ஒரு தொழில் உரிமையாளர் நாகர்கோவில் மாவட்டக் குற்றவியல் நீதிபதியின் நீதி மன்றத்தில், மேல் முறையீடு ஒன்றைத் தாக்கல் செய்தார். அந்த வழக்கில் அவருக்கு விடுதலை அளிக்கப்பட்டது. அவருக்கு விடுதலை அளிக்கப்பட்டதை எதிர்த்து மேல்முறையீடு ஒன்றைத் தாக்கல் செய்யுமாறு அரசு ஆணையிட்டுள்ளது. மேல் முறையீடு உயர்நீதி மன்றத்தில் விசாரணையில் உள்ளன.

### மலைத் தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழு.

மலைத்தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக்குழுக் கூட்டம் 1969-ம் வருடம் பிப்ரவரி மாதம் 21-ம் தேதி அன்று தொழிலாளர் துறை ஆணையாளரின் தலைமையில் கூடி, ஏனையவற்றுடன் கூட, மகப்பேறு நலப்பயன், மருத்துவமனையில் உள்ள அகப்பிணியாளர்களின் நிலைமைகளையும் உணவையும் வரையறுத்தல் ஆகியவை குறித்து விவாதித்தது.

மலைத் தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதி ஆலோசனை வாரியம் கன்னியாகுமரியிலும், வால்பாறையிலும், முறையே 1969-ம்வருடம் ஏப்ரல் மாதம் 3-ம் தேதி அன்றும், 1969-ம் வருடம் செப்டம்பர் மாதம் 30-ம் தேதி அன்றும் கூடியது. இரு கூட்டங்களுக்கும் அரசு தொழிலாளர் துறைச் செயலாளர் தலைமை வகித்தார். தொழிலாளர்க் குடியிருப்புகளுக்கு மின் வசதி அளித்தல், தெருவிளக்குகள் போடுதல், தொழிலாளர் குடியிருப்புகளுக்கு ஊராட்சி வரி செலுத்துவதிலிருந்தும் விலக்கு, மலைத் தோட்ட தொழிலாளர்களுக்காகச் சலுகை வீத வீட்டு வசதித் திட்டத்தை மாற்றியமைத்தல், தொழிலாளர்களுக்குக் குடியிருப்பதற்கான இரண்டு அறைகளை வழங்கல், ஆசிரியர்களுக்கான வீடுகளைக் குறிப்பிடுதல், எந்த மலைத் தோட்டங்களில் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதித் திட்டம் முடிந்துள்ளதோ அவற்றின் விவரங்களைச் சேகரித்தல் ஆகிய பொருள்கள் குறித்து அக்கூட்டங்களில் விவாதிக்கப்பட்டது. அப்போதுதான் தொழிலாளர்களின் மேற்பார்வையாளர்களுக்குக் கூடுதல் இடவசதி ஏற்படுத்த இயலும்.

[1970 மார்ச் 26

**6. 1966-ம் ஆண்டு பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டம்.**

1966-ம் ஆண்டு பீடி–சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டம் 1968-ம் வருடம் ஜூலை மாதம் 1–ம் தேதி முதல் செயலுக்குக் கொண்டுவரப்பட்டதன் விளைவாக, 1958–ம் ஆண்டு தமிழ்நாடு பீடித் தொழிற்சாலை வளவுகள் (வேலை நிலைமைகளை முறைப்படுத்தல்) சட்டம் செயல்படுத்தப்படுவதில்லை.

1966-ம் ஆண்டு தமிழ் நாடு பீடி–சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளை முறைப்படுத்தல்) சட்டத்தின் கீழ் 1968–69, 1969–70, கால அளவில் உரிமத்துக்காக விண்ணப்பித்துக்கொண்ட பீடித் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | 1968–69. | 1969–70. |
|---|---|---|
| உரிமம் வேண்டி மனுச் செய்துகொண்ட பீடித் தொழில் வளவுகளின் எண்ணிக்கை. | 1,546 | 1,139 |
| எவ்வளவு தொழிலாளர்கள் நியமிக்க உரிமம் வேண்டப்பட்டது என்று. | 21,165 | 5,542 |

உரிமம் பெற்ற வளவுகளில் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைந்தது. ஏனென்றால், பெருமளவு தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியுள்ள பெரிய நிறுவனங்கள் இச் சட்டத்தின் செல்திறனை நிறுத்தி வைப்பதற்கு ஆணைகள் பெற்றன. 1969–70-ல் உரிமத்துக்காக அவை விண்ணப்பம் செய்துகொள்ளவில்லை.

1966-ம் ஆண்டு பீடி–சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளை முறைப்படுத்தல்) சட்டத்தின் அனைத்து விதித்துறைகளும், மூன்றுவது பிரிவு நீங்கலாக 1968–ம் வருடம் ஜூலை மாதம் 1-ம் தேதி முதல் செயலுக்கு வந்தன. மூன்றுவது பிரிவு 1968–ம் வருடம் செப்டம்பர் மாதம் 1-ம் தேதி முதல் செயலுக்கு வந்தது.

1966-ம் ஆண்டு பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டத்தின் கீழ் விதிகளை மாநில அரசு வகுத்துள்ளது. தொழிலாளர் துறை உதவி இன்ஸ்பெக்டர் ஒவ்வொருவரும் தமிழ் நாடு எடைகள், அளவைகள் (செயல்படுத்தல்) சட்டத்தின் கீழ் தமக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு மேற்படி சட்டத்தின்படிக்கான பொருத்தமான அதிகாரியின் அலுவல்களை நிறைவேற்ற அனுமதி அளிக்கப்பட்டுள்ளார்.

மேற்படிச் சட்டத்தின் ஐந்தாவதுப் பிரிவின்படிக்கான மேல் முறையீடுகளை விசாரணை செய்வதற்கெனத் தொழிலாளர் துறைத் துணை ஆணையாளர்கள் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

சென்னை, தொழிலாளர் துணை ஆணையாளர், மேற்பார்வை நீங்கலாக தொழிலாளர் துறைத் துணை ஆணையாளர்கள், தொழிலாளர்த் துறை இன்ஸ்பெக்டர், தொழிலாளர் துறை துணை இன்ஸ்பெக்டர், தொழிலாளர் துறை உதவி இன்ஸ்பெக்டர்கள் ஆகியோர் தங்களது அதிகார வரம்புகளுக்குள் மேற்படி சட்டத்தின்கீழ் இன்ஸ்பெக்டர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

தொழிலாளர்த் துறைத் துணை ஆணையாளர் (மேற்பார்வை) மேற்படிச் சட்டத்தின் 6 (2) பிரிவின் கீழ் தலைமை நேர்முகமாக நியமிக்கப்பட்டுள்ளார்,



1970 மார்ச் 26]

1936-ம் ஆண்டு ஊதியம் வழங்கும் சட்டத்தின் கீழ் (மத்தியச் சட்டம் 4/1936) விதித் துறைகளும் அதன் கீழ் செய்யப்பட்டுள்ள விதிகளும், இச்சட்டம் பொருந்துகிற பீடி-சுருட்டு தொழிற்சாலைகளில் பணிபுரியும் எல்லா தொழிலாளர்களுக்கும் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ளன.

[தமிழ்நாடு 1968-ம் ஆண்டு பீடி-சுருட்டு தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) விதிகளைச் சேர்ந்த 3 (2) விதியின் கீழ் அனுப்பப்பட்ட மனை-கட்டிட வரைபடங்களை பரிசீலித்துப் பார்க்கையில், தகுதி வாய்ந்த அதிகாரி, இச் சட்டத்தின் கீழ் தொழிற்சாலை வளவுகளாக பயன்படுத்துவதற்கு ஏற்றவையாக உள்ளனவா என்றும் மேற்படிச் சட்டத்தின் 8 முதல் 16 வரையுள்ள பிரிவுகளின் தேவைகளை அவை பூர்த்தி செய்கின்றனவா என்றும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அரசு கட்டளைகள் பிறப்பித்துள்ளது.]

1969-ம் ஆண்டில், பீடித் தொழிற்சாலைகளில் இருந்து உரிமக் கட்டணங்களாக ரூ. 14,591 வசூலிக்கப்பட்டது. 1968-ம் ஆண்டில் அவ்வாறு வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 34,205-50 ஆகும்.

ஆண்டுத் தொடக்கத்தில், 12 வழக்குகள் தீர்வு காணா நிலையில் இருந்தன. ஆய்வாண்டில் ஒரு வழக்குத் தொடர ஒப்பளிக்கப்பட்டது. அவற்றில் ஏழு வழக்குகளில் தண்டனை விதித்துத் தீர்ப்பு கூறப்பட்டது. ரூ. 110 அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டது.

தமிழ்நாடு 1958-ம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டத்தின் விதித்துறைகளை 1966-ம் ஆண்டு பீடி-சுருட்டு தொழிலாளர் (வேலை நிலைமைகள்) சட்டத்தின் 2(h)(i) பிரிவில் பொருள் கூறியுள்ள பீடி-சுருட்டு நிறுவனங்கள், தொழிற்சாலை வளவுகள் அனைத்திற்கும் நீட்டிப்பதற்கான செயற் குறிப்புகள் அரசின் ஆய்வில் உள்ளன.

1966-ம் ஆண்டு பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டத்தின் விதித்துறைகளின் செல்திறனை மறுத்து சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுக்களை இம் மாநிலத்திலுள்ள சில பீடி நிறுவனங்களின் நிர்வாகிகள் கொடுத்துக் கொண்டனர். உயர்நீதி மன்றம் அந்த ரிட் மனுக்கள் மீது முடிவெடுக்கும் வரையில், ரிட் மனு கொடுத்துக் கொண்டவர்கள் குறித்து மேற்படி சட்டமும் அதன் விதிகளும் செயல்படுத்தப்படுவதை நிறுத்தி வைக்க அனுமதி வழங்கியது.

ஆனால், திருநெல்வேலி மாவட்டம் முக்கூடலில் உள்ள சொக்கலால் ராம் சேட் பீடி நிறுவனத்தைப் பொறுத்த வரையில், பொது நிபந்தனைகளின் மேல், மேற்படி சட்டத்தின் செல்திறனை உயர்நீதி மன்றம் நிறுத்தி வைத்தது. இதன் விளைவாக, இச் சட்டத்தையும் விதிகளையும் இம் மாநிலத்தில் உள்ள எந்த பீடித் தொழிற்சாலைக்கும் செயல் படுத்த இயலவில்லை. சொக்கலால் ராம் சேட் பீடி நிறுவனம் சம்பந்தப்பட்டத் தடை ஆணையை, அந்த நிறுவனத்துக்கு மட்டும் வரையறுக்குமாறு கேட்டுக்கொண்டு உயர்நீதி மன்றத்தில் அரசு மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.

மாநில அரசும் மத்திய அரசும் ரிட் மனுக்களில் தங்களது எதிர் உறுதி மொழிப் பத்திரங்களை தாக்கல் செய்து, அவர்கள் சார்பாக வாதாட அரசாங்கத் தலைமை வழக்கறிஞரைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

**7. 1961-ம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம்.**

[சென்னை, தொழிலாளர் துறை துணை ஆணையாளர் (நேடுதல்கள்) 1969-ம் ஆண்டில் இச் சட்டத்தின்கீழ் இம் மாநிலத்திற்கான தலைமை நேர்முகமாகத் தொடர்ந்து இருந்து வந்தார். இச் சட்டத்தின் விதித்துறைகள் தொழிலாளர் துறை உதவி நேர்முகர்கள் 156 பேர்களாலும், துணை நேர்முகர்கள் 18 பேர்களாலும், நேர்முகர்கள் 10 பேர்களாலும் செயல்படுத்தப்பட்டன.]

1969-ம் ஆண்டில் 88 புதிய விண்ணப்பங்கள் குறித்துப் பதிவு கட்டணமாக ரூ. 1,682-50 தொகையும் 968 பதிவுச் சான்றுகள் குறித்துப் பதிவு புதுப்பிக்கும் கட்டணங்களாக ரூ. 31,860 தொகையும் வசூலிக்கப் பட்டது. நகல் பதிவுச் சான்றிதழ்கள் வழங்குதவற்கான ரூ. 10 வசூலிக் கப்பட்டது. ஆய்வாண்டில் அத்தகைய இரண்டு சான்றுகள் வழங்கப் பட்டன.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் 1,079 மோட்டார் போக்கு வரத்து நிறுவனங்கள் இருந்தன. 93 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டன. ஆக, ஆண்டின் இறுதி வரை பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை 1,172 ஆகும். ஐந்து அல்லது அதற்கு மேற் பட்டத் தொழிலாளர்களை வேலைக்கு வைத்திருப்பது மெய்ப்பிக்கப்படாத தால் அல்லது நிறுவனங்கள் மூடிவிடப்பட்டதால், இந்த ஆண்டில் 111 நிறுவனங்கள் பதிவேடுகளிலிருந்து நீக்கப்பட்டன. 1969-ம் ஆண்டின் இறுதியில் 1,061 நிறுவனங்கள் இருந்தன.

மலைத் தோட்டங்களில் உள்ள போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு 1961-ம் ஆண்டு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டத்தின் விதித் துறைகளிலிருந்து அளித்துள்ள விலக்கை மேலும் ஒரு ஆண்டுக்கு, அதாவது 22-9-1968 முதல் 21-9-1969 வரை அரசு நீடித்துள்ளது. இந்த விலக்கை மேலும் ஓராண்டுக்கு 21-9-1970 வரை நீட்டிப்பது குறித்து அரசு ஆலோசனை செய்து வருகிறது.

1961-ம் ஆண்டு மோட்டார் போக்கு வரத்துத் தொழிலாளர்கள் சட்டத் தின் விதித் துறைகளைத் திறம்படச் செயல்படுத்துவது குறித்து ஆலோசிப் பதற்கென நியமிக்கப்பட்ட முத்தரப்பு நிலைக் குழுவின் பதவிக் காலத்தை 7-10-1969 முதல் மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்க அரசு ஆணையிட்டுள்ளது. 120 கிலோ மீட்டருக்கு மேற்பட்ட சரக்குப் போக்குவரத்துப் பணிகளிலும் பயணிப் போக்குவரத்துப் பணிகளிலும் பணிபுரிகிற தொழிலாளர்கள் குறித்து இன்ஸ்பெக்டர்கள் தினசரி வேலை நேரங்களைச் செயல்படுத்த வேண் டாம் என்றும், வாராந்தர வேலை நேரங்கள் தான் வலியுறுத்தப்பட வேண்டும் என்றும், 25-11-1967-ல் நடந்த முத்தரப்புக் குழுவின் முதற் கூட்டத்தில் முடிவுமீது அரசு ஆணைகளைப் பிறப்பித்துள்ளது.

முத்தரப்பு குழுவின் இரண்டாம் கூட்டம் 23-9-1969 அன்று சென்னையில் நடந்தது.

141 வழக்குகள் ஆய்வாண்டில் தொடரப்பட்டன. 121 வழக்குகளில் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. அபராதமாக ரூ. 6,900 வசூலிக் கப்பட்டது. இரு வழக்குகளில் குற்றவாளி எனத் தீர்மானிக்கப்படாமல் முடிந்தது. ஏனைய வழக்குகள் நீதிமன்றங்களில் தீர்வு காணாத நிலையில் உள்ளன.

**8. உழைக்கும் பத்திரிகையாளர்கள் வேலை நிலைமைகள்-பலவகை ஏற்பாடுகள் சட்டம்.**—1965-ம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர்கள் (வேலை நிலைமைகள்—பலவகை ஏற்பாடுகள்) சட்டத்தின் விதித் துறைகள், 1969-ம் ஆண்டில் தொடர்ந்து செய்தித்தாள் நிறுவன நேடுநர்கள் என்ற முறையில் தொழிலாளர் துறை நேடுநர்களால் தொடர்ந்து செயல்படுத்தப் பட்டது.

இந்த ஆண்டில் 47 செய்தித்தாள் நிறுவனங்கள் இருந்தன. 3,394 தொழிலாளர்கள் அவற்றில் வேலையில் இருந்தனர். இந்த ஆண்டில் நேடுநர்கள் 77 நேடுதல்களைச் செய்தனர்.

**9. தொழிற்சாலைகளில் வேலைக்கமர்த்தப்படுதல் (நிலை ஆணைகள்) சட்டம், 1946.**—1969-ம் ஆண்டு 35 தொழில் நிறுவனங்களின் நிலை ஆணைகள் குறித்து சான்றளிக்கப்பட்டன. இதனுடன் [illegible]



நிலை ஆணைகளின் மொத்த எண்ணிக்கை 4,514 ஆக அதிகரித்தது 11 நேர்வுகளில் நிலை ஆணைகளுக்கான திருத்தங்களும் இந்த ஆண்டில் சான்றளிக்கப்பட்டன.

**10. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறை [illegible]) சட்டம், 1958.**—ஆய்வு ஆண்டில் 33,761 கடைகளும் நிறுவனங் களும் இம் மாநிலத்தில் செயல்பட்டு வந்தன. இக்கடைகளிலும், நிறுவனங்களிலும் பணி செய்து கொண்டிருந்த பணியாளர்களின் எண்ணிக்கை, 1,24,335 ஆகும்.

இச்சட்டத்தின் விதித்துறைகளை மீறியதற்காக 244 நேர்வுகளில் வழக்குத் தொடர அனுமதி வழங்கப்பட்டது. இவற்றில் 225 வழக்குகளில் தண்டனை விதிக்கப்பட்டது. இரண்டு வழக்குகளில் விடுவிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டது. 10 வழக்குகளில் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. 1968-ம் ஆண்டில் அபராத மாக ரூ. 1,461 வசூலிக்கப்பட்டிருக்க, இந்த ஆண்டில் ரூ. 2,890 அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டது. இந்த ஆண்டில் நேடுநர்கள் 46,264 நேடுதல்களை நடத்தினர்.

## II. ஊதியங்கள் வழங்கல் சட்டம்.

**11. 1948-ம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம்.**—கீழ்க் கண்ட வேலைகளில் அமர்ந்திருத்தல் குறித்து குறைந்த அளவு ஊதியங்களை வழங்க வகை செய்வதற்காக குழுக்கள் அமைக்கும் செயற் குறிப்புகள் அரசின் ஆலோசனையில் உள்ளன :—

1 அரிசி ஆலை அல்லது மாவு ஆலை அல்லது பருப்பு ஆலையில் வேலை.

2 பொது மோட்டார் போக்குவரத்தில் வேலை.

3 மோட்டார் பணிக்களரியில் வேலை.

4 வாசனைப் புகையிலை தயாரிப்புத் தொழிற்சாலையில் வேலை.

5 சிறு துறைமுகங்களில் படகுத் தயாரிப்பில் வேலை.

6 தங்க நகைகள் செய்யும் தொழில்.

7 விசைத் தறித் தொழில்.

8 மலைத் தோட்டம் ஒன்றில் வேலை

9 பின்னல் உள் ஆடைத் தயாரிப்புத் தொழில்.

10 வேளாண்மை, வேளாண்மைத் துணைத் தொழில்களில் வேலைக் கமர்த்தப்பட்டிருத்தல்.

11 உள்ளாட்சி மன்றம் ஒன்றில் வேலைக்கமர்த்தப்பட்டிருத்தல்.

12 சாலை அமைத்தல் அல்லது கட்டிடப் பணிகளிலும், கல் உடைத்தல் அல்லது கற்களைத் தூளாக்குவதிலும், சாலைகளைப் பேணுவதிலும் வேலைக்கமர்த்தப்பட்டிருத்தல்.

13 கற் சுரங்கங்களில் கல்லுடைத்தலில் அல்லது கற்களைத் தூளாக்கு வதில் வேலைக்கமர்த்தப்பட்டிருத்தல்.

கயிற்றுத் தொழில், வெட்டு மரத் தொழில் ஆகியவற்றில் வேலை செய்பவர்களுக்கானக் குறைந்த அளவு ஊதிய வீதங்களை முடிவு செய் வதற்கென அமைக்கப்பட்டக் குழுக்களின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

முந்திரித் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களுக்குக் குறைந்த ஊதிய வீதங்களை அறிவிப்பதற்கான செயற்குறிப்புக்கள் ஆலோசனையில் உள்ளன.

கீழ்க்கண்ட தொழில்களுக்கெனக் குறைந்த அளவு ஊதிய வீதங்கள் வரையறுக்கப்பட்டன/மாற்றியமைக்கப்பட்டன :—

**1. செங்கல் ஓடுகள் தொழிற்சாலை. 2. சலவைச்சாலைகளிலும், கம்பளி, பட்டு நீங்கலான துணிகளை வெளுப்பதிலும் வேலைக்கமர்த்தப் பட்டிருத்தல்.**

பருத்தி விதையெடுத்தல்—அழுத்தல் தொழிற்சாலைகளில் வேலையிலுள்ளோர்களுக்கான குறைந்த அளவு ஊதிய வீதங்களை மாற்றியமைத்தும், பருத்திக் கழிவுத் தொழிற்சாலைகளில் வேலையிலுள்ளோர்களுக்கான ஊதியங்களை வரையறுத்தும் பிறப்பிக்கப்பட்ட அறிவிப்பு, சில தொழிலதிபர்கள் ரிட் மனுக்களைத் தாக்கல் செய்ததன் விளைவாக, சென்னை உயர்நீதி மன்றத்தால் நிறுத்தி வைக்கப்பட்டது.

மலைத் தோட்டங்களில் வேலையில் உள்ள மருத்துவ மனை-மருத்துவப் பணியாளர்களுக்கும், வீட்டு வேலைக்காரர்களுக்கும், செடிப்பண்ணை பணியர்கள் முதலியோர்களுக்கும், 1948-ம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் 13, 14-வது பிரிவுகளின் விதித் துறைகளிலிருந்து, 26-12-1969 வரையிலுள்ள ஒரு கால அளவுக்கு விலக்களிக்கப்பட்டது.

தங்களது சொந்தப் பயனுக்காக வீடு கட்டிக்கொள்பவர்களுக்கு, குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள பதிவேடுகளையும் ஆவணங்களையும் பேணி வருவதனின்றும் இரண்டாண்டுகளுக்கு அரசு விலக்களித்துள்ளது.

169,494 தொழிலாளர்கள் பணிபுரியும் 9,704 நிறுவனங்கள் (தொழிற்சாலைகள் உட்பட) இச் சட்டத்தின் கீழ் இருந்தன.

ஆய்வாண்டில் 120 வழக்குகள் தொடரப்பட்டன. 86 வழக்குகள் குறித்து அபராதத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. மொத்தம் ரூ. 3,590 அபராதம் வசூலிக்கப்பட்டது. (முந்திய ஆண்டில் 52 வழக்குகள் தொடரப்பட்டு அவை அனைத்திற்கும் அபராதத் தண்டனை விதிக்கப்பட்டது. மொத்தம் ரூ. 1,255 அபராதம் வசூலிக்கப்பட்டது.) தற்போது ஆய்வில் உள்ள ஆண்டில் தொழிலாளர் துறை நேடுநர்களும், உதவி ஆய்வாளர்களும் 13,917 நேடுதல்கள் செய்தனர். 1968-ம் ஆண்டில் 13,392 நேடுதல்கள் செய்யப்பட்டன.

தொழிலாளர் துறை துணை நேடுநர்களும் புள்ளி விவர நேடுநர்களும் குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் கீழ் நேடுநர்களாக நியமிக்கப் பட்டுள்ளனர்.

**12. 1936-ம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம்.**—1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் பொருந்துகிற நிறுவனங்கள் நீங்கலாக ஏனைய எல்லா நிறுவனங்கள் குறித்தும் தொழிலாளர் துறைப் பிரிவு இச் சட்டத்தை நிர்வகிக்கின்றது. தொழிற்சாலைகள் உட்பட 18,555 நிறுவனங்களுக்கு இச்சட்டம் பொருந்துகிறது. 1969-ல் இந்த நிறுவனங்களில் பணியாற்றிய 508,636 தொழிலாளர்களுக்கு இச் சட்டம் பொருந்தியது. முந்திய ஆண்டில் 775,818 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டிருந்த 31,111 நிறுவனங்களுக்கு இச் சட்டம் பொருந்தியது.

இருநூற்று ஐம்பத்து நான்கு நேர்வுகளில் (தொழிற்சாலைகள் உட்பட) தொழில் நிறுவன நிர்வாகத்தினர்மீது வழக்குத் தொடரப்பட்டது. அவற்றில் ஆண்டுத் தொடக்கத்தில் விசாரணையில் இருந்த வழக்குகள் உட்பட 221 வழக்குகள் குறித்து தண்டனை விதிக்கப்பட்டது. ஒரு வழக்கு குறித்து விடுவிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டது. இரு வழக்குகளில் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. ரூ. 5,238 அபராதமாக வசூலிக்கப்பட்டது.

ஆய்வாண்டின் தொடக்கத்தில் 408 உரிமை மனுக்கள் விசாரணையில் இருந்தன. ஆய்வாண்டில், ஊதியங்கள் வழங்கப்படவில்லை என 548 உரிமை மனுக்கள் தொழிலாளர் இழப்பீட்டுக்கான கூடுதல் ஆணையாளர்களுக்குக் கொடுத்துக் கொள்ளப்பட்டன. (1968-ம் ஆண்டில் 686 உரிமை மனுக்கள் கொடுத்துக் கொள்ளப்பட்டன.)





தொள்ளாயிரத்து ஐம்பத்து மூன்று உரிமை மனுக்களில், 587 உரிமை மனுக்கள் குறித்து ஆய்வாண்டில் தீர்வு காணப்பட்டது. (1968-ல் 657 உரிமை மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டது.)

ரெயில்வேக்கள், விமானப் போக்குவரத்துப் பணிகள், சுரங்கங்கள் முதலியவற்றில் தொழிலதிபர் செய்து கொடுத்துள்ள சிற்றுண்டிசாலை வசதிகள் குறித்து, ஊதியம் வழங்கல் சட்டத்தின் 11-வது பிரிவின்படிக் கான அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஊதியங்களிலிருந்து தொகைகளைக் கழித்துக் கொள்வதற்கான அதிகாரியாக (மத்திய) தொழிலாளர் துறைத் தலைமை ஆணையாளரை மத்திய அரசு நியமித்துள்ளது.

1936-ம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் காரியங்களுக்காக, அச் சட்டத்தின் 14 (3) பிரிவுக்கு இணங்க தமிழ்நாடு அரசு கீழ்க்கண்ட மத்திய அரசு அதிகாரிகளை நேடுநர்களாக நியமித்துள்ளது. அந்த நேடுநர்கள் 2-வது பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள வகையைச் சேர்ந்த தொழில் நிறுவனங்கள் குறித்து நேடுநர்களாகப் பணியாற்றுவர்.

| அதிகாரிகள். | தொழில் நிறுவனங்களின் வகைகள். |
| --- | --- |
| (1) | (2) |
| (1) தொழிலாளர் துறை வட்டார ஆணையர் (மத்திய), சென்னை. | சென்னை துறைமுகத்தில் உள்ள கப்பல் துறை, சரக்குத் துறை அல்லது தோணித் துறை. |
| (2) சென்னையில் தலைமையிடத்தைக் கொண்டுள்ள (மத்திய) தொழிலாளர் துறை உதவி ஆணையர். | ஷை |
| (3) சென்னையில் தலைமையிடத்தைக் கொண்டுள்ள தொழிலாளர் துறைச் சட்டங்களைச் செயல்படுத்தும் அதிகாரிகள் | ஷை |

தொழில்-தொழிலாளர்-கூட்டுறவுத் துறையில் 11-6-1955 அன்று பிறந்து 29-6-1955 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் I-ம் பாகம், 950-ம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியான 478-ம் எண் அறிவிப்பில், 1936-ம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின் 7-வது பிரிவின் (2) உட்பிரிவில் கண்ட (c) (x) பகுதியின்படியும், 11-வது பிரிவின்படியும், அரசுத் தொழிலாளர்த் துறை 21-6-1969-ம் நாளிட்ட 292-ம் எண் அரசு ஆணையில் திருத்தங்களைச் செய்துள்ளது.

## III. தொழில் தகராறுகள் சட்டம்

**13. 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம்.**—தொழில் தகராறுகளை இசைவான முறையில் தீர்த்து வைக்க சமரச அதிகாரிகள் நடவடிக்கைகள் மேற்கொண்டனர்; அதன் விவரம் வருமாறு :—

| | 1968. | 1969. |
| --- | --- | --- |
| (அ) புலனாய்வு செய்யப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 10,491 | 7,504 |
| (இ) சமரச முயற்சிகள் மூலம் தீர்த்து வைக்கப்பட்ட தொழில் தகராறுகளின் எண்ணிக்கை. | 1,936 | 1,272 |
| (உ) தீர்ப்புக்கென அனுப்பப்பட்ட தொழில் தகராறுகள் எண்ணிக்கை. | 491 | 373 |
| (எ) தனிப்பட்ட முறையில் தீர்வு காண்பதற்கென அனுப்பப்பட்ட தொழில் தகராறுகளின் எண்ணிக்கை. | 72 | 40 |

(இ), (உ), (எ) இனங்களின் வராத நேர்வுகள் தனிப்பட்ட முறையில் தீர்த்து வைக்கப்பட்டன. அல்லது அவற்றைக் குறித்து தீர்ப்பு அளிக்கப்படுவதற்கென விடுவது அவசியம் இல்லை என்று கருதப்பட்டது.

1969-ம் ஆண்டில் புலனாய்வு செய்யப்பட்ட, தீர்த்து வைக்கப்பட்ட அல்லது பிற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை குறைந்திருப்பது, இந்த ஆண்டில் தொழிலாளர்த் துறை அதிகாரியால் பெறப்பட்ட புகார்களின் மொத்த எண்ணிக்கை குறைந்துள்ளதை எதிரொலிக்கின்றது. 1968-ல் வந்த புகார்களின் எண்ணிக்கை 8,522 ஆக இருக்க, ஆய்வாண்டில் பெறப்பட்ட புகார்களின் எண்ணிக்கை 7,640 ஆகும்.

14. (I) **வேலை நிறுத்தங்கள்.**—ஆய்வுரை ஆண்டிலும், சென்ற ஆண்டிலும் நடந்த வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.—

| | 1968. | 1969. |
|---|---|---|
| (அ) கதவடைப்புகள் உட்பட வேலை நிறுத்தங்கள். | 231 | 174 |
| (இ) இழக்கப்பட்ட வேலை நாட்கள் .. | 1,881,559 | 683,059 |

வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் குறித்து தொழில் வாரியான விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| தொடர் எண்ணும் தொழிலும். (1) | வேலை நிறுத்தங்கள் கதவடைப்புகளின் எண்ணிக்கை. (2) | வேலை நிறுத்தத்தில் பங்கு கொண்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை. (3) | இழக்கப்பட்ட வேலை நாட்கள். (4) |
|---|---|---|---|
| **1968.** | | | |
| 1 பஞ்சாலைத் தொழில் .. | 86 | 85,502 | 268,967 |
| 2 பொறியியல் .. .. | 61 | 15,446 | 429,298 |
| 3 தோல் பதனிடும் தொழில். | 7 | 3,936 | 28,076 |
| 4 புகையிலை, பீடி .. .. | 8 | 11,381 | 178,720 |
| 5 மலைத்தோட்டத் தொழில் | 4 | 1,992 | 13,476 |
| 6 ஏனையவை .. .. | 65 | 27,109 | 963,022 |
| மொத்தம் .. | 231 | 115,366 | 1,881,559 |
| **1969.** | | | |
| 1 பஞ்சாலைத் தொழில் .. | 45 | 15,591 | 187,510 |
| 2 பொறியியல் .. .. | 56 | 9,148 | 240,422 |
| 3 தோல் பதனிடும் தொழில். | 2 | 62 | 346 |
| 4 புகையிலை, பீடி .. .. | 2 | 1,200 | 9,600 |
| 5 தோட்டத் தொழில் .. | 10 | 1,398 | 41,552 |
| 6 ஏனையவை .. .. | 59 | 14,501 | 203,629 |
| மொத்தம் .. | 174 | 41,900 | 683,059 |



(II) 1969-ஆம் ஆண்டு வேலை நிறுத்தங்களும், கதவடைப்புகளும் தீர்த்து வைக்கப்பட்ட முறை:—

| | |
|---|---|
| (அ) நேரடி உரையாடல் .. .. .. .. .. | 27 |
| (ஆ) தொழிலாளர் தாங்களாகவே வேலைக்கு வருதல். | 33 |
| (இ) தொழிலாளர்துறை அதிகாரிகளால்/அரசால் சமரச ஏற்பாடு செய்து தீர்த்து வைக்கப்பட்டவை. | 106 |
| (ஈ) அரசு தடைவிதித்த வேலை நிறுத்தங்கள்/கதவடைப்புகள். | 3 |
| (உ) புதிய தொழிலாளரை வேலைக்கமர்த்திக்கொள்வது. | .. |
| (ஊ) ஆண்டு முடிவில் தீர்வு காணப்பட்டு வருபவை .. | 5 |
| மொத்தம் .. | 174 |

6486

**1969-ல் ஏற்பட்ட சில முக்கிய உடன்பாடுகள்.**

**1. சர்க்கரை ஆலைகள்.**

நெல்லிக்குப்பம் இ.ஐ.டி. பாரி கம்பெனித் தொழிலாளர்கள் சுமார் 2,500 பேர், தங்கள் ஊதியம், அகவிலைப் படி முதலியவை மாற்றியமைக்கும்படி கோரிக்கை விடுத்ததையொட்டி 10—1—1969 முதல் வேலை நிறுத்தம் செய்தனர். சென்னை தொழிலாளர்த் துறை ஆணையாளருடன் பேச்சு வார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து 24—1—1969 அன்று தொழிலாளர் வேலை நிறுத்தத்தைத் திரும்பப் பெற்று வேலைக்குத் திரும்பினர்.

(1) திருச்சி மாவட்டம், பேட்டைவாய்த்தலை, காவிரி சர்க்கரை ரசாயனக் கம்பெனி, (2) புகளூர், டெக்கான் சர்க்கரை அப்காரி கம்பெனி, (3) காட்டூர், கோத்தாரி சர்க்கரை, ரசாயனக் கம்பெனி இவற்றின் தொழிலாளர்கள் ஊதியங்களை மாற்றியமைக்குமாறு கோரி 1969 ஜனவரித் திங்களில் வேலை நிறுத்தம் செய்தனர். இத்தகைய நிறுவனங்களில் நடைபெற்ற வேலை நிறுத்தம், தொழிலாளர்த்துறை ஆணையாளர் முன் செய்து கொண்ட உடன்படிக்கைகளினால் அல்லது அவரது ஆலோசனையின் பேரில் 1969 பிப்ரவரித் திங்களில் கைவிடப்பட்டது.

**2. இ.ஐ.டி. பாரி கம்பெனி, ராணிப்பேட்டை.**

தொழிலாளர் ஒருவர், மண்பாண்டப் பிரிவு கண்காணிப்பாளரைத் தாக்கியதால் வேலையிலிருந்து தள்ளிவைக்கப்பட்டதைத் தொடர்ந்து, அந்த நிறுவனத்தின் சுமார் 1,200 தொழிலாளர்கள் 17—3—1969-ம் அன்று வேலை நிறுத்தம் செய்தனர். அந்த நாள் மாலை நிர்வாகத்தினர் கதவடைப்புச் செய்யப்பட்டதாக அறிவித்தனர். 20—3—1969 அன்று தொழிலாளர்த்துறை சிறப்புத்துணை ஆணையாளர் முன்பு செய்துகொண்ட உடன்படிக்கையின் பலனாக, நிர்வாகத்தினர் கதவடைப்பு நீக்கினர். தொழிலாளர்கள் 21—3—1969 அன்று வேலைக்குத் திரும்பினர்.

**3. 'விக் இந்தியா', அம்பத்தூர்.**

ஊதிய உயர்வு போன்ற கோரிக்கைகள் குறித்து நிர்வாகத்திற்கும், 'விக் இந்தியா' தொழிலாளர் சங்கத்திற்குமிடையே பேச்சு வார்த்தை முறிந்ததன் விளைவாக, 10—4—1969 அன்று தொழிலாளர்கள் அந்த வளாவுக்குள்ளேயே நிர்வாகப் பணியாளரை ஒரு சிறிது நேரம்

மடக்கி வைத்தனர். ஒழுங்குமுறை தவறியதற்கான விசாரணை முடிவு செய்யப்படும் வரை நிர்வாகம் 29 தொழிலாளரை வேலையிலிருந்து தள்ளிவைத்தது. தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு 19-4-1969 அன்று வேலைக்குத் திரும்பினர்.

### 4. கார்போராண்டம் யூனிவர்ஸல் கம்பெனி, சென்னை.

வேலையை உடனடியாகச் செய்து கொடுக்கும்படி வேண்டிய போது, செய்து கொடுக்க மறுத்ததற்காக நிர்வாகம் இரு தொழிலாளர்களை வேலையிலிருந்து தள்ளி வைத்தது. இதற்காகச் சுமார் 500 தொழிலாளர்கள், வேலையிலிருந்து தள்ளிவைத்ததை நீக்குமாறு கோரி 15—4—1969 அன்று உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தனர். அதே நாளன்று நிர்வாகம் கதவடைப்பு அறிவித்தது. 28—6—1969-ம் ஆண்டு அன்று தொழிலாளர் துறை ஆணையாளர் முன்பு உடன்படிக்கை ஏற்பட்டது. நிர்வாகம் கதவடைப்பை நீக்கியது. தொழிலாளர்கள் 30—6—1969 அன்று வேலைக்குத் திரும்பினர்.

### 5. கைத்தறிப் பட்டு நெசவு நிறுவனங்கள், கும்பகோணம்.

கும்பகோணம் நெசவாளர் ஊதியத் திருத்தக் கோரிக்கை நடவடிக்கைக் குழுவைச் சேர்ந்த நால்வர், கைத்தறிப் பட்டு நெசவு நிறுவன நிர்வாகத்தினர் ஊதியங்களைத் திருத்தியமைப்பது குறித்து [illegible] தொழிலாளர் அதிகாரி செய்த முடிவை நிறைவேற்றவில்லை [illegible] குற்றம் சாட்டி 30—6—1969 அன்று உண்ணாவிரதம் [illegible]. இதைத் தொடர்ந்து தொழிலாளர்கள் மறியல் செய்தனர். தொழிலாளர்துறை ஆணையாளர் பேச்சுவார்த்தை நடத்தினார். உண்ணா நோன்பும், மறியலும் 4—8—1969 அன்று கைவிடப்பட்டன.

### 6. இந்தியா ஸ்டாண்டர்டு மோட்டார் உற்பத்தி நிறுவனம் (இந்தியா), பெருங்களத்தூர்.

இந்தியா ஸ்டாண்டர்டு மோட்டார் உற்பத்தி நிறுவனத் தொழிலாள சங்க ஊழியர்கள் சுமார் 1,824 பேர், 1968-ம் ஆண்டிற்கான தங்கள் ஊதியத்தி .....19 சதவிதம் பூரிப்பு ஊதியம் (Bonus) கோரி வேலை நிறுத்தம் செய்தனர். இந்தத் தகராறை அரசு நடுவர் தீர்ப்புக்கு அனுப்பி 1947-ம் ஆண்டு தொழில் தகராறுச் சட்டத்தின் 10 (3) பிரிவின்படி வேலை நிறுத்தம் தொடர்ந்து செய்வதற்குத் தடை விதித்தது. இதையடுத்து, [illegible] முதலமைச்சர் [illegible] அறிவுரைக்கிணங்க தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

### 7. சோமசுந்தரம் ஆலை (த), கோவை.

1,335 தொழிலாளர்களில், 1,200 பேர், 1968 நவம்பர் திங்கள் முதல் ஊதியம் கொடுக்குமாறு கோரி 10—1—1969 அன்று காலை 9 மணியிலிருந்து உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தனர். கோவைத் தொழிலாளர் அதிகாரி-I தலையிட்டு உடன்பாடு செய்து வைத்ததன் பேரில் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது. தொழிலாளர்கள் 2—2—1969 முதல் வேலைக்குத் திரும்பினர்.

### 8. எஸ். ஆர். சி. ஆலை லிமிடெட், திருப்பூர்.

மேற்சொன்ன ஆலையில், மொத்தம் உள்ள 1,960 தொழிலாளர்களுள் 966 தொழிலாளர்கள், 1969 ஜனவரி முதல் ஊதியம் கொடுக்குமாறு கோரி 10—2—1969 அன்று உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தனர். கோவைத் தொழிலாளர் அதிகாரி-I தலையிட்டதன் பேரில் வேலை நிறுத்தம் 18—2—1969 அன்று கைவிடப்பட்டது.



நிர்வாகத்தினர் முறைமாற்றுப் பணிக்கான நேரத்தையும், இடைவேளை நேரத்தையும் மாற்றுவதை எதிர்த்து 950 ஊழியர்கள் 2—5—1969 நடு இரவு 12 மணியிலிருந்து உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தனர். கோவை தொழிலாளர்துறைத் துணை ஆணையாளர் தலையிட்டதன்பேரில் வேலை நிறுத்தம் 13—6—1969 அன்று கைவிடப்பட்டது.

மேற்கூறிய ஆலையில், 1968-ம் ஆண்டிற்கான பூரிப்பூதியம் (Bonus) வழங்குவது குறித்து, 935 ஊழியர்கள், 31—10—1969 அன்று உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தனர். நிர்வாகத்தினர் 2—11—1969 லிருந்து கதவடைப்பு செய்யப்பட்டதாக அறிவித்தனர். தொடர்ந்து கதவடைப்பு செய்வதை அரசு தடை செய்தது. அக் கதவடைப்பு தகராறைத் தொழில் நடுவர் மன்றத்தைக் கேட்டுக்கொண்டது. இதற்கிடையில் அரசு, தொழில்கள் (வளர்ச்சி, ஒழுங்குமுறை) சட்டத்தின்கீழ் இவ்வாலையைக் குறித்து விசாரணை செய்யுமாறு இந்திய அரசைக் கேட்டுக்கொண்டது.

### 9. தஞ்சாவூர் ஆலை, தஞ்சாவூர்.

இரு தொழிலாளர்களைத் தற்காலிக வேலை நீக்கம் செய்ததை எதிர்த்து [illegible] தொழிலாளர்கள், 10—4—1969 அன்று வேலை நிறுத்தம் செய்தார்கள். பிறகு நிர்வாகத்தினர், 13—4—1969-லிருந்து கதவடைப்பு செய்யப்பட்டிருப்பதாக அறிவித்தனர். சென்னை தொழிலாளர்துறை ஆணையாளர் தலையிட்டதன் பேரில், தொழில் தகராறுச் சட்டம் 12 (3) பிரிவின்படி செய்துகொண்ட உடன்படிக்கைக்கிணங்க இத்தகராறு இணக்கமாகவே தீர்க்கப்பட்டு, 18—5—1969 அன்று தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

### 10. மேட்டூர் தொழிற்சாலைகள் நிறுவனம், மேட்டூர் அணை.

இந்த ஆலையில் [illegible] வந்தாலும், வேலைப்பளு [illegible] செய்ய, இந்த [illegible] வேலை செய்வோருக்கான தொழிலாளர்களை [illegible] குறித்தும் தொழிலாளர்களும் நிர்வாகத்தினருக்குமிடையே [illegible] எழுந்தது. தொழிலாளர்கள் 21—5—1969 நாளிலிருந்து [illegible] 7 மணிக்கு வேலை நிறுத்தம் செய்யத் தொடங்கினர். [illegible] தொடர்ந்து, நிர்வாகம் கதவடைப்பை நீக்கிவிட்டது. தொழிலாளர்களைத் தாற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கிவிட்டது. உடன்பாடு செய்துவைக்க தொழிலாளர் துறை ஆணையாளர் இவ்விவகாரத்தை எடுத்துக்கொண்டார். இதன் விளைவாக 3—6—1969 அன்று ஓர் உடன்படிக்கை செய்து வைக்கப்பட்டது. இவ்வாலை மீண்டும் 12—6—1969 அன்று வேலை துவங்கியது. இதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளரின் எண்ணிக்கை சுமார் 1,900.

### 11. கோவை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, தாராபுரம்.

மேற்சொன்ன ஆலையில் நிர்வாகம், '7 நாள் வாரம்' வேலை புகுத்தியதற்கு எதிர்ப்பு தெரிவிக்க, 11—5—1969 அன்று ஆலைத் தொழிலாளர்களில் 75 சத விகிதத்தினர் வேலை நிறுத்தம் செய்தனர். ஆலைத் தொழிலாளர்கள் 26—5—1969 அன்று மீண்டும் வேலைக்குத் திரும்பினர் என்று கோவை தொழிலாளர்த் துறை ஆணையாளர் தெரிவித்தார்.

### 12. மதுரை ஆலைக் கம்பெனி, மதுரை.

நிர்வாகம், நெசவுத் துறையில் உள்ள தொழிலாளர்க்கு வேலை ஒப்படைப்பது, ஊதியமளிப்பது குறித்து 84/68 எண் தொழில் தகராறு தீர்வைச் செயல்படுத்தியதன் காரணமாக (சுமார் 451) தொழிலாளர்கள் 18—7—1969 அன்று வேலை நிறுத்தம் செய்தனர். மதுரை தொழிலாளர்த்துறை ஆணையாளர் தலையீட்டின் பேரில் 25—9—1969 அன்று நிலைமை சீரடைந்தது.

நூல் சுற்றும் துறையில் 512 தொழிலாளர்கள், இயல்பாக நூற்புக் கதிர்கள் ஒதுக்கப்படுவதைக் கவனிக்க மறுத்து 16—10—1969-லிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். மதுரை தொழிலாளர் அதிகாரியின் ஆலோசனையின் பேரில் 21—10—1969 அன்று தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

**13. மதுரை ஆலைக் கம்பெனி, மதுரை, அம்பாசமுத்திரம், தூத்துக்குடி.**

மேற்படி ஆலை நிர்வாகத்துடனும், பல்வேறு தொழிற் சங்கங்களுடனும், 1968-ஆம் ஆண்டில் பூரிப்புத் தொகை குறித்த தகராறை விவாதிப்பதற்காக தொழிலாளர்த்துறை ஆணையாளர் எடுத்துக்கொண்டார். இதன் பலனாக 1968, 1969, 1970 ஆண்டுகளுக்குரிய பூரிப்புத் தொகை குறித்து 3 ஆண்டு நீண்டகால உடன்படிக்கையை 23—4—1969 அன்று செய்து முடித்தார்.

**14. மதுரை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை, மேலூர்.**

தொழிலாளருக்கான அடிப்படை ஊதியம், அகவிலைப் படி முடிவு செய்வது குறித்து மேற்படி ஆலைத் தொழிலாளருக்கும் நிர்வாகத்துக்குமிடையே ஏற்பட்ட தகராறு, 8–4–1969 அன்று தொழிலாளர்துறை ஆணையாளரால் தீர்த்து வைக்கப்பட்டது.

பருத்திப் பஞ்சாலைத் தொழிலுக்கு இரண்டாவது ஊதிய வாரியம் செய்த பரிந்துரைகளை நிறைவேற்றுவது குறித்து, எழுந்த தகராறை சென்னை சிறப்புத் துறைத் துணைத் தொழிலாளர் ஆணையாளர் 5–9–1969 அன்று தீர்த்து வைத்தார். (தென்னிந்திய ஆலை அதிபர்கள் சங்கத்தின் பிரதிநிதியாகவுள்ள) கோவை மாவட்டம், 52 ஆலைகளுக்கும் அந்தந்தத் தொழிற்சங்கத்திற்குமிடையே உடன்படிக்கை செய்துவைக்கப்பட்டது.

1968–69-ஆம் ஆண்டு பூரிப்பூதியம் கொடுப்பது குறித்தும் தீபாவளி முன் பணம் கொடுப்பது குறித்தும் கோவை தென்னிந்திய ஆலை அதிபர்கள் சங்கத்திற்கும், தொழிற் சங்கங்களிடையேயும் ஏற்பட்ட தகராறை 14–10–1969 அன்று கோவை தொழிலாளர்துறை ஆணையாளர் தீர்த்து வைத்தார்.

தென்னிந்திய ஆலை அதிபர்கள் சங்கத்திற்கும், கோவை மாவட்டப் பஞ்சாலைப் பணியாளர் சங்கத்திற்குமிடையே 18–10–1969 அன்று, தொழில் தகராறு சட்டத்தின் 18 (1) பிரிவின்படி, உடன்படிக்கை செய்து வைக்கப்பட்டது. கோவை மாவட்டத்தில் சில பஞ்சாலைகளில் உள்ள பணியாளர்கள் இச்சங்கத்தின் உறுப்பினராவர். எழுத்தர்கள், உறையிடும் சிறுவர்கள், அலுவலகச் சிறுவர்கள், சீட்டுச் சிறுவர்கள், பண்டகசாலைச் சிறுவர்கள், வங்கிச் சிற்றெழுத்தர்கள் போன்ற வகையினராக பணியாளர் குறித்து பஞ்சாலைத் தொழில் ஊதிய வாரியப் பரிந்துரைகளை நிறைவேற்றுவது குறித்து, எழுந்த தகராறை தீர்த்துவைக்கப்பட்டது.

**மற்ற முக்கியமான தகராறுகள்.**

9–1–1969 நாளிட்ட இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் வெளியான செய்தி அறிக்கைப்படி, கோவை ஐக்கிய பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தின் ஆதரவில் சுமார் 1,000 தொழிலாளர்கள், பஞ்சாலைகள் மூடப்பட்டதால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்குத் துயர் தணிப்பு கோரி 25–1–1969 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவை முன் ஆர்ப்பாட்டம் செய்யவிருந்தனர். இது பற்றி விசாரிக்கப்பட்டது. (a) மாநில பஞ்சாலைக் கழகம் விரைவில் ஏற்படுத்துவது ; (b) பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்குத் துயர் தணிப்பாக, ரொக்கமளிப்பதற்கு நிதி வாயில்களைத் திரட்ட ஒரு குழு அமைத்தல் ஆகியவை தொழிற்சங்கத்தின் கோரிக்கைகள் எனத் தெரிய வந்தது. உண்மையில் கோவை மாவட்டத்திலிருந்து சென்னைக்கு வந்ததாகச் சொல்லப்படுகிற தொழிலாளர்கள் மொத்தம்





சுமார் 260 பேர் மட்டுமே இருந்ததாகச் சொல்லப்படுகிறது. அவர்களும் (மறைந்த) முதலமைச்சர் நோய்வாய்ப்பட்டிருந்ததன் காரணமாக எவ்வித ஆர்ப்பாட்டமும் செய்யவில்லை.

தமிழ்நாடு ஐ.என்.டி.யூ.சி., இந்திய தேசிய தொழிற்சங்கக் காங்கிரஸ், அரசு, மாநிலப் பஞ்சாலைக் கழகம் நிறுவத் தவறியதற்கு மறுப்பு தெரிவிக்கும் வகையில் தமிழக அரசு போக்குவரத்துத் துறைப் பேருந்துகளுக்கு முன்பு மறியல் நடத்தும் போராட்டத்தை 3–5–1969 அன்று தொடங்குவது என்று தீர்மானம் கொண்டுவந்தது. இருந்தபோதிலும், திட்டமிட்ட போராட்டத்தை ஒத்திப் போடுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

கோவை, தேசிய பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம், பருத்திப் பஞ்சாலைத் தொழிலுக்காக இரண்டாவது ஊதிய வாரியம் செய்த பரிந்துரைகளை நிறைவேற்றுமாறு கோரி, கோவை மாவட்டத்திலுள்ள 68 பஞ்சாலைகளுக்கு வேலை நிறுத்த அறிக்கை கொடுத்தது. இதே கோரிக்கையின் பேரில், மதுரையிலுள்ள பஞ்சாலைத் தொழில் நிர்வாகத்தினருக்கு, மதுரை தேசிய பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் இதைப் போன்றே வேலை நிறுத்த அறிக்கைகள் அனுப்பியது. உடன்பட்டுத் தீர்த்துவைப்பதற்காக, தொழிலாளர் துறை சிறப்புத் துணை ஆணையாளர் இவ் விவகாரத்தை எடுத்துக் கொண்டார். தென்னிந்திய ஆலை அதிபர் சங்கத்துடனும், கோவை, தொழிலாளர் சங்கங்களுடனும் இவர் கலந்து பேசியதன் பயனாக, கோவை மாவட்டத்தில் 52 ஆலைகளைக் குறித்து இரண்டாவது ஊதிய வாரியப் பரிந்துரைகளை நிறைவேற்றுவது பற்றி, தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்படி, 5–9–1969 அன்று உடன்படிக்கை செய்து வைக்கப்பட்டது. சென்னை, தொழிலாளர் துறை சிறப்புத் துணை ஆணையாளர் அறிவுரையின் பேரில், மதுரை தேசிய பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் வேலை நிறுத்தம் செய்யவில்லை. கோவையில் 5–9–1969 அன்று ஏற்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் அந்தந்த வட்டாரங்களில் உள்ள ஆலைகளைக் குறித்து, உடன்படிக்கைகள் செய்து வைக்குமாறு, சென்னை, மதுரை, தொழிலாளர் துறைத் துணை ஆணையாளர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். அவர்களிடமிருந்து முடிவான அறிக்கைகள் இன்னும் வரப்பெறவில்லை.

கீழ்க்காணும் ஆலைகளைப் பொறுத்த மட்டில், வேலை நிறுத்தம்—கதவடைப்பு முதலியன இல்லாமல் வேலை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆலைகள், ஆதாயமில்லாத காரணங்களால் இறுதியில் மூடப்பட்டன:—

| ஆலையின் பெயர். | மூடப்பட்ட நாள். | மீண்டும் திறக்கப்பட்ட நாள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. பங்கஜா ஆலை, கோவை .. | 12–4–1968 | 1969-ஆம் தொடர்ந்து மூடி வைக்கப்பட்டிருந்தது. |
| 2. பத்மா ஆலை, காளப்பட்டி, கோவை மாவட்டம். | 20–5–1968 | ௸ |
| 3. காவிரி நூற்பு, நெசவு ஆலை, காவிரி நகர். | 2–8–1968 | 6–10–1969. |
| 4. வி. ஆர். பஞ்சாலை, புஞ்சை புளியம்பட்டி. | 26–9–1968 | 10–9–1969. |
| 5. தென்னகப் பஞ்சாலை, சூலூர், கோவை. | 15–7–1968 | 20–10–1969 . |

1969-ல் தொழில் தகராறுகள் குறித்த இழந்த உழைப்பு நாட்களின் மொத்தத்தைக் கணக்கிடுகையில், மேற்சொன்ன ஆலைகளில் வேலை நிறுத்தி வைக்கப்பட்டது காரணமாக, இழந்த உழைப்பு நாட்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

இதைப் போலவே, தொழில் தகராறுகள் எவற்றுக்கும் தொடர்பில்லாத காரணங்களுக்காக, கீழ்க்காணும் ஆலைகளில் 1969–ல் ஆர்ப்பாட்டங்கள் அனுதாப வேலை நிறுத்தங்கள் நடத்தப்பட்டன. இத்தகைய நேர்வுகளிலும், 1969–ல் தொழில் தகராறுகள் குறித்து இழந்த உழைப்பு நாட்களின் மொத்தத்தைக் கணக்கிடுகையில், மேற்சொன்ன ஆலைகளில் வேலை நிறுத்தி வைக்கப்பட்டது காரணமாக, இழந்த உழைப்பு நாட்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

| பஞ்சாலையின் பெயர். | வேலை நிறுத்தக் கால அளவு. | காரணங்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| ஆஷர் ஆலை, திருப்பூர், கோவை ; ஸ்ரீ பாலசுப்பிரமணிய ஆலை, கோவை ; ஸ்ரீ ராமகிருஷ்ணா ஆலை, கோவை ; கோபாலகிருஷ்ணா ஆலை, கோவை; ரவீந்திரா ஆலை, கோவை; கோதாரி ஆலை, 2–ம் எண், வட மதுரை. | 18–5–1969 அன்று மட்டும். | முன்னாள் வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. கோவிந்தசாமி அவர்களுக்கு அஞ்சலி செலுத்த. |
| கோவையில் 11 ஆலைகள் .. | 31–8–1969 | தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைக்குப் பெயர்சூட்டு விழா. |
| ஸ்ரீ ராமகிருஷ்ணா ஆலை, கோவை ; கோபாலகிருஷ்ணா ஆலை, கோவை. | 4–9–1969 | வட வியட்நாம் குடியரசுத் தலைவர் மறைவுக்கு வருத்தம் தெரிவிக்க. |
| ஸ்ரீ ராமகிருஷ்ணா ஆலை, கோவை ; ஸ்ரீ பாலசுப்பிரமணிய ஆலை, கோவை. | 14–9–1969 | ஒரிந்து மஜ்தூர் சபா தலைவர்களில் சிலரைக் கைது செய்தது. |
| ஆஷர் ஆலை .. .. .. | 18–11–1969 | திருப்பூர் எஸ்.ஆர்.சி. ஆலையில் துயருற்ற ஆலைத் தொழிலாளர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில். |
| கோபால்ட் ஆலை, திருப்பூர் .. | 17–11–1969 | ௸ |

### பஞ்சாலைகள் மூடப்படுதல்.

**1969–ல் நிதியின்மை காரணத்துக்காக மூடப்பட்ட ஆலைகளாவன:**

| ஆலையின் பெயர். | மூடப்பட்ட நாள். | தொழிலாளர் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. ராஜா ஆலை, மதுரை .. | 12–9–1969 | 330 |
| 2. சோமசுந்தரம் ஆலை (த), கோவை. | 23–5–1969 | 1,390 |



1969–ல் மீண்டும் திறக்கப்பட்ட ஆலைகள் பற்றிய விவரங்கள் II–வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

நாளது தேதிவரை (1) மூடப்பட்டுள்ள, (2) மீண்டும் திறக்கப்பட்ட ஆலைகளைக் கொண்ட பட்டியல் II–வது, III–வது இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

### தனித்தியங்க முடியாத, மூடப்பட்ட ஆலைகளில் பாதிக்கப்பட்ட தொழிலாலர்களுக்காக மேற்கொண்ட துயர்தணிப்பு ஏற்பாடுகள்.

(i) மாநில அரசு கேட்டுக்கொண்டதன் பேரில், கீழ்க்காணும் 20 ஆலைகள் குறித்து தொழில்கள் (வளர்ச்சி–முறைப்படுத்தல்) சட்டத்தின் படி விசாரணைக் குழுக்களை இந்திய அரசு அமைத்தது.

1. ஸ்ரீ ரங்க விலாஸ் பருத்தி விதை நீக்கல்—நூற்பு-நெசவு ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.
2. கிருஷ்ணவேணி பஞ்சாலை, கோயம்புத்தூர்.
3. ராதிகா ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.
4. கோயம்புத்தூர் முருகன் ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.
5. பலராமவர்மா பஞ்சாலை லிமிடெட், செங்கோட்டை.
6. பழனி ஸ்ரீ முருகன் பஞ்சாலை லிமிடெட், பழனி.
7. கம்போடியா ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.
8. காளீஸ்வரர் ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.
9. பழமலை ரங்கநாதன் ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.
10. தமிழ்நாடு நூற்பு ஆலை, திருப்பூர், கோயம்புத்தூர் மாவட்டம்.
11. ஓம் பராசக்தி ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.
12. கஸ்தூரி ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.
13. பங்கஜா ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.
14. கோபால்டு பஞ்சாலை லிமிடெட், திருப்பூர், கோயம்புத்தூர் மாவட்டம்.
15. திருப்பூர் பருத்தி நூற்பு—நெசவு ஆலை, பெரமநல்லூர் சாலை, திருப்பூர், கோயம்புத்தூர் மாவட்டம்.
16. கீதாஞ்சலி ஆலை லிமிடெட், ஸ்ரீ கோமதிபுரம், சங்கரன்கோயில், திருநெல்வேலி மாவட்டம்.
17. V. R. டெக்ஸ்டைல்ஸ், புஞ்சமேலைப்பட்டி, (வழி) ஈரோடு, கோயம்புத்தூர் மாவட்டம்.
18. ராஜா ஆலை, மதுரை.
19. ஸ்ரீ கோதண்டராம நூற்பு ஆலை நபியார் லிமிடெட், மதுரை.
20. பத்மா ஆலை, காளப்பட்டி அஞ்சல், கோயம்புத்தூர்-6.

1969-ம் ஆண்டு தொழிற்சாலைகள் (மேம்பாடு—முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் பின்வரும் ஆலைகள்பற்றி, ஆய்வு செய்யப்படுவதற்காக அறிக்கை விடுமாறு, 1969-ல் மாநில, இந்திய அரசுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளது :

1. காவேரி நூற்பு, நெசவு ஆலை லிமிடெட், காவேரிநகர்.
2. சோமசுந்தரம் ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.
3, சதர்ன் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், குன்னூர்.
4. பயனீர் ஸ்பின்னர்ஸ், காமத்தரூர்.

(ii) கம்போடியா ஆலை லிமிடெட், காளீஸ்வரர் மில்ஸ் லிமிடெட், ஸ்ரீ ரங்க விலாஸ் விதையெடுத்தல்—நூற்பு—நெசவு ஆலை லிமிடெட், வாசுதேவா தொழிற்சாலை, ஸ்ரீ பழமலை ரங்கநாதர் ஆலை லிமிடெட், ஆகியவற்றில் உள்ள 5,132 தொழிலாளர்களுக்கு, ஒருவருக்கு ரூ. 40 என்ற வீதத்தில் முதலமைச்சர் மாநில நிவாரண நிதியிலிருந்து ரூ. 2,05,280 ரொக்க நிவாரணம் அளிப்பதற்கு ஆணையிடப்பட்டது.

(iii) பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு, அச்சுவார்ப்படம் செய்பவர் அல்லது கடைசல் பிடிப்பவர் முதலிய தொழில்களில் பயிற்சியளிப்பதற்கான செயற்குறிப்பு ஆலோசனை செய்யப்பட்டு, தகுந்த தொழிலாளர் குறித்த விவரங்கள் சங்கங்களிடமிருந்து கேட்கப்பட்டன. தகுந்த தொழிலாளர் குறித்த விவரங்களைச் சங்கங்கள் சரியாக அளிக்கவில்லை. பயிற்சித் திட்டம் தனியாகத் தொடங்குவதற்கு தொழிலாளர்கள் போதுமான அளவு ஆதரவளிக்கவில்லை என்றும் அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது

(iv) இரண்டு நாட்கள் ஊதியத்தை நன்கொடையாக அளித்தல்.—பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு இடர் தணிப்பு அளிப்பதற்காக பணியிலுள்ள தொழிலாளர்கள் தங்களுடைய 2 நாட்கள் ஊதியத்தை நன்கொடையாக வழங்குவது குறித்த செயற்குறிப்பை, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முன்னிலையில் சங்கங்கள் ஒப்புக்கொண்ட போதிலும், அந்நன்கொடை உண்மையாகவே வசூலிக்கப்படும் நிலை வந்தபோது மிகவும் குறைவான தொழிலாளர்களே அச்செயற்குறிப்புக்கு இணங்கி வந்ததனால், இத்திட்டத்தை மேற்கொண்டும் தொடர இயலவில்லை. மொத்தம் ரூ. 3,367·32 வசூலிக்கப்பட்டது. (இது கோத்தாரி, ஆஷர், பிரீமியர் ஆலை, கருணாம்பிகை ஆலைத் தொழிலாளர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டது). இத்திட்டத்தை மேற்கொண்டும் தொடர இயலாது என்று அரசுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்செயற்குறிப்பைக் கைவிட அரசு முடிவு செய்துள்ளது.

(v) கூடுதல் முறைமாற்றுகளை நடத்துதல்.—நமக்குக் கிடைத்துள்ள தகவலின்படி, 125 ஆலைகளுள் 110 ஆலைகள் ஏற்கெனவே மூன்று முறை மாற்றுகளில் இயங்குகின்றன. எஞ்சியுள்ள 15 ஆலைகளுள், 5 ஆலைகள் முறைமாற்றுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நிலையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில் கூடுதல் முறை மாற்றுகளின் மூலம் வேலை வாய்ப்பு அளிப்பது கைவிட வேண்டி வந்தது.

(vi) செயல்படும் ஆலைகளில் வேலை காலி ஏற்படுகையில், பாதிக்கப்பட்ட பஞ்சாலைகளின் பணியாளர்களுக்கு முதலிடம் அளிக்குமாறு இந்த அரசு அளித்த ஆலோசனையை கோயம்புத்தூர் தென் இந்திய ஆலை உடைமையாளர் சங்கம் ஏற்றுக்கொண்டது.

(vii) 1951-ம் ஆண்டு தொழிற்சாலைகள் (மேம்பாடு—முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் ஆலைகளை எடுத்துக் கொள்வதற்காக 24—4—1969 முதல் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் ஏற்படுத்தப்பட்டது.

1951-ம் ஆண்டு தொழிற்சாலைகள் (மேம்பாடு—முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் இதுவரை கீழ்க்கண்ட ஆலைகளை கழகம் எடுத்துக்கொண்டுள்ளது :—

1. ஸ்ரீ ரங்கவிலாஸ் விதையெடுப்பு—நூற்பு—நெசவு ஆலை நிறுவனம், கோயம்புத்தூர்.
2. கிருஷ்ணவேணி பஞ்சாலை லிமிடெட், கோயம்புத்தூர்.
3. கம்போடியா ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.
4. ஓம் பராசக்தி ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.

இந்த 4 ஆலைகளில், ஓம் பராசக்தி ஆலை 14—11—1969 முதல் செயல்பட்டு வருகின்றது.



(viii) உத்தரவாத உதவி.—1969-ம் ஆண்டில், கீழ்க்கண்ட ஆலைகளுக்கு, அவற்றின் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள அளவுக்கு அரசு உத்திரவாத உதவி அளித்துள்ளது.

| | |
|---|---|
| 1. காளீஸ்வரர் ஆலை லிமிடெட், கோயம்புத்தூர், (12—12—1968 நாளிட்ட அரசு ஆணை). | ரூ. 25 லட்சம். |
| 2. திருப்பூர் பருத்தி நூற்பு—நெசவு ஆலை லிமிடெட், திருப்பூர். | ரூ. 9 லட்சம். |
| 3. காவேரி நூற்பு—நெசவு ஆலை லிமிடெட், காவேரிநகர். | ரூ. 10 லட்சம் கூடுதல் உத்தரவாத உதவி. |

ஏனைய முக்கியமான மேம்பாடுகள்.—பஞ்சாலைத் தொழிற்சாலைக்கான இரண்டாவது ஊதிய வாரியத்தின் பெரும்பாலான பரிவுரைகளை இந்திய அரசு ஏற்றுக் கொண்டது. இப்பரிவுரைகளை இம்மாநிலத்திலுள்ள பஞ்சாலைகளில் செயல்படுத்தும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இது குறித்து, 5—9—1969 அன்று சென்னை, தொழிலாளர் துறை சிறப்புத் துணை ஆணையர் முன்பு உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது. இதில் 52 ஆலைகள் அடங்கும். இது தவிர, 16-க்கு மேற்பட்ட ஆலைகள் குறித்து பிரிவு நிலையில் இதன் தொடர்பாக உடன்படிக்கைகள் ஏற்பட்டுள்ளன.

**சீரமைத்தல் :—**

1. ஊதிய அமைப்பு முதலியவற்றை மாற்றுவது குறித்து, திருச்சியிலுள்ள சபரி ஆலை (தனியார்) லிமிடெட்டின் தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் இடையே இருந்த தகராறில் சென்னை, தொழிலாளர் துறை சிறப்புத் துணை ஆணையர் தனது பரிவுரைகளை அளித்தார்.

2. நூற்புப் பிரிவு நீங்கலாக ஏனைய துறைகளை சீரமைப்பது தொடர்பாக திருநெல்வேலி, பேட்டையிலுள்ள, தென் இந்திய கூட்டுறவு ஆலை லிமிடெட்டின் தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் இடையே இருந்த தகராறில், சென்னை தொழிலாளர் துறை சிறப்புத் துணை ஆணையர் 5—4—1969 அன்று தனது முடிவை அளித்தார்.

3A. அடிப்படை ஊதியங்கள், அகவிலைப்படி ஆகியவை தொடர்பாக, மேலூரிலுள்ள மதுரை மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை லிமிடெட்டின் தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் இடையே ஏற்பட்ட தகராறில், 8—4—1969 அன்று, தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ், சென்னையிலுள்ள தொழிலாளர் துறை ஆணையர் முன்பாக உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது.

4A. பஞ்சாலைத் தொழிலுக்கான, ஊதிய வாரியத்தின் பரிவுரைகளை நிறைவேற்றுவது குறித்த தகராறில், தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ சென்னையிலுள்ள தொழிலாளர் துறை சிறப்புத் துணை ஆணையர் முன்பாக கோயம்புத்தூரில் 5—9—1969 அன்று உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது. நிலையான குழு ஒன்றை அரசு ஏற்படுத்துவதற்கு இந்த உடன்படிக்கை வகை செய்கிறது. தொழிலாளர் துறைத் துணை ஆணையர் பதவிக்குக் குறையாத, தொழிலாளர் துறையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் (இவர் இக்குழுவின் தலைவராக இருப்பார்). கோயம்புத்தூரிலுள்ள தென் இந்தியப் பஞ்சாலை ஆராய்ச்சி சங்கத்தின் இரண்டு பிரதிநிதிகள் (இவர்களில் ஒருவர் பஞ்சாலைத் தொழில் நுட்ப வல்லுநராகவும் மற்றொருவர் தொழிற்சாலைப் பொறியாளராகவும் இருப்பார்) ஆகியோர் இக்குழுவில் அடங்கியிருப்பர். இந்த உடன்படிக்கையின்படி, சீரமைப்பு பற்றி எழும் தகராறுகள், சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினர்

அல்லது சங்கங்களினால் குழுவிற்குத் தெரிவிக்கப்படலாம். அக்குழுவின் முடிவே இறுதியானதாகும். அது ஆலையின் நிர்வாகத்தினரையும், தொழிலாளர்களையும் கட்டுப்படுத்தும். குழுவிற்கு அனுப்பப்படும் தகராறு குறித்து, அத்தகராறு கொண்டுவரப்படும் நாளிலிருந்து 3 திங்கள் கால அளவுக்குள் சாதாரணமாக முடிவு எடுக்கப்படும்.

5. வெண்மையாக்குதல், சாயம் தோய்த்தல், பளபளப்பாக்கும் துறை உட்பட நெசவு ஆலையில் பணி ஒப்படைகள் ஊதியம், கடமைகள் ஆகியவற்றை முடிவு செய்வது குறித்து அம்பாசமுத்திரம், மதுரை ஆலை கம்பெனி லிமிடெட் தொழிலாளர்களுக்கும், அதன் நிர்வாகத்தினருக்கும் இடையே எழுந்த தகராறில், 1969 ஆகஸ்டு திங்கள் 26-ம் நாளன்று சென்னை தொழிலாளர் துறை சிறப்புத் துணை ஆணையர் ஒரு முடிவு அளித்தார்.

## மலைத் தோட்டங்கள்.

தமிழ்நாடு மலைத் தோட்ட உரிமையாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்களாகிய மலைத் தோட்டங்களின் நிர்வாகத்தினருக்கும், தமிழ் நாட்டில் உள்ள பல்வேறு மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் இடையே, 1968, 1969, 1970-ம் ஆண்டுகளுக்கான பூரிப்பூதியம் குறித்து எழுந்த தகராறில் 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ், கோயம்புத்தூர் தொழிலாளர் துறை சிறப்புத் துணை ஆணையரால் 1969 ஏப்ரல் திங்கள் 16-ம் நாளன்று உடன்படிக்கை செய்து வைக்கப்பட்டது. உடன்படிக்கையின்படி, தொழிலாளர்கள் கீழ்க் கண்டவாறு பூரிப்பூதியம் பெறுவர் :—

### தேயிலை எஸ்டேட்டுகள்.

| | | | | சதவீதம். |
|---|---|---|---|---|
| (1) 1968 மொத்த ரொக்க வருவாயில் | | .. | .. | 9·00 |
| (2) 1969 | ,, | ,, | .. | 8·75 |
| (3) 1970 | ,, | ,, | .. .. | 8·78 |

சேர்வராயன் மலை தவிர ஏனைய மாவட்டங்களில் உள்ள காபபி எஸ்டேட்டுகள்.

| | | | | சதவீதம். |
|---|---|---|---|---|
| (1) 1968 மொத்த ரொக்க வருவாயில் | | .. | .. | 7·25 |
| (2) 1969 | ,, | ,, | .. .. | 7·00 |
| (3) 1970 | ,, | ,, | .. .. | 7·00 |

1968-69, 1969-70, 1970-71-ம் ஆண்டுகளுக்கான பூரிப்பூதியம் குறித்து சேர்வராயன் மலைத் தோட்ட உரிமையாளர் சங்கத்திற்கும், சேர்வராயன் மலையிலுள்ள எட்டு தொழிலாளர் சங்கங்களுக்குமிடையே, 20-6-1969 அன்று 1947-ம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 18 (1)-வது பிரிவின் கீழ் உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது. இந்தப் பகுதியில் உள்ள 3,500 மலைத் தோட்டத் தொழிலாளர்கள், இந்த உடன்படிக்கையின் கீழ் பயன்பெறுவர்.

குன்னூரிலுள்ள தமிழ்நாடு மலைத் தோட்ட உரிமையாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்களாகிய தேயிலை தோட்ட எஸ்டேட்டுகளின் நிர்வாகத்தினருக்கும், பல்வேறு தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளாகிய எஸ்டேட் தொழிலாளர்களுக்குமிடையே ஊதியங்கள், ஊக்க ஊதியங்கள், தேயிலை, காபி தொழிலில் உள்ள வேலை வேறுபாடுகள் ஆகியவை குறித்து



இருந்த தகராறுகளில் 24-6-1969 அன்று 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 18 (1)-வது பிரிவின் கீழ் உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது. உடன்படிக்கையின் நிபந்தனைகளின்படி இது 1-7-1969 முதல் 31-12-1972 வரையிலான கால அளவுக்கு செயலில் இருக்கும்.

இதே போன்று, தமிழ்நாடு மலைத் தோட்ட உரிமையாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்களாக உள்ள, தேயிலைத் தோட்ட எஸ்டேட் நிர்வாகத்தினருக்கும், தேயிலை காபபி மலைத் தோட்டங்களில் பல்வேறு தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளாக உள்ள, பணியாளர் தொகுதியைச் சேராத பணியாளர்களுக்கும் (மேற்பார்வையாளர்கள், உதவி மேற்பார்வையாளர்கள்) இடையே ஊதியம் முதலியவை குறித்து உடன்படிக்கை ஒன்று 18-7-1969 அன்று ஏற்பட்டது. உடன்படிக்கையின் நிபந்தனையின்படி 1-7-1969 முதல் 31-12-1972 வரையிலான கால அளவுக்கு இந்த உடன்படிக்கை செயலில் இருக்கும்.

தென் இந்திய மலைத் தோட்ட உரிமையாளர்கள் சங்கம் (United Planters' Association), தமிழ்நாடு மலைத் தோட்ட உரிமையாளர்கள் சங்கம் ஆகியவற்றிற்கும், தமிழ் நாட்டிலுள்ள மலைத் தோட்ட எஸ்டேட்டுகளின் நிர்வாகப் பணியாளர்கள் வகையைச் சேர்ந்தவர்களும், தென் இந்திய மலைத் தோட்ட உரிமையாளர்கள் சங்கம், தமிழ்நாடு மலைத் தோட்ட உரிமையாளர்கள் சங்கம் ஆகியவற்றின் உறுப்பினர்களுமாகிய தொழிலாளர்களுக்கும் இடையே கோரிக்கைகள் குறித்து 1947-ம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ், சென்னையிலுள்ள தொழிலாளர் துறை ஆணையர் முன்பாக உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது. உடன்படிக்கை நிபந்தனைகளின்படி 1-1-1970 முதல் மூன்று ஆண்டுக்கால அளவுக்கு உடன்படிக்கை செயலில் இருக்க வேண்டும். அந்த உடன்படிக்கை செயலில் இருக்கும் காலத்தில், செலவு ஏற்படக் கூடிய, பொதுவான அல்லது தொழில் வாரியான கோரிக்கை எதுவும் தொழிலாளர்களால் எழுப்பப்படக்கூடாது.

**தோல் பதனிடுதல்**—ஊதியங்களைத் திருத்தியமைத்தல், பணிக்கொடைத் திட்டம் ஆகியவை குறித்து திண்டுக்கல், பல்லாவரம், மாதவரம் திருச்சிராப்பள்ளி, சேலம் நகரம் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள, தோல் பதனிடும் தொழிற்சாலையின் நிர்வாகத்தினருக்கும், அதன் பணியாளர்களுக்கும் இடையே 1947-ம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் சென்னை தொழிலாளர் துறை ஆணையர் முன்பு 23-8-1969 அன்று உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது. உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கிணங்க, மேற்கூறியவற்றை தொழிலாளர் துறை ஆணையரின் முறையின் மரபுப்படியான தீர்ப்புக்கு விடுவதற்கும், அவருடைய முடிவின்படி நடப்பதற்கும் இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர்.

## பஞ்சாலைத் தொழிலில் சீரமைப்பு.

1969-ம் ஆண்டில், பஞ்சாலைத் தொழில் சீரமைப்பு குறித்த 89 தகராறுகள் துறையின் உதவியுடனும், 67 தகராறுகள் நேரடிப் பேச்சு வார்த்தைகள் மூலமும் தீர்த்து வைக்கப்பட்டன.

15. **முறையின் மரபுப்படியான நடுவர் தீர்ப்பு.**—பொதுவாக, வேலையிலிருந்து நீக்குதல், வேலையிலிருந்து தள்ளி வைத்தல், ஆட் குறைப்பு செய்தல் முதலியவை குறித்த தகராறுகளை முறையின் மரபுப்படியான தீர்ப்புக்கு விடுமாறு இரு தரப்பினருக்கும் ஆலோசனை கூறப்படுகிறது. 1969-ம் ஆண்டில், நாற்பது வழக்குகள் முறையின் மரபுப்படியான தீர்ப்புக்கு விடப்பட்டன. வேலையிலிருந்து நீக்குதல், வேலையிலிருந்து தள்ளிவைத்தல், ஆட்குறைப்பு செய்தல் முதலியவற்றை தவிர ஊதியங்கள் பூரிப்பூதியங்கள், பணிச்சுமை முதலிய அதிக அளவுச் செலவு ஏற்படும் தகராறுகளும் இந்த வழக்குகளில் அடங்கும்.

1970 மார்ச் 26]

ஆகியவற்றுக்கு ஊதிய வாரியம் பரிந்துரைத்த இடைக்கால நிவாரணமும், சிமிட்டித் தொழிலுக்கு இரண்டாவது ஊதிய வாரியத்தின் இறுதியான பரிந்துரைகளும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

ஆய்வுரையாண்டில், இரண்டாவது ஊதிய வாரியம் பஞ்சு நூற்பாலைத் தொழில் மீது அளித்த இறுதியான பரிந்துரைகளும், ஊதிய வாரியம் பொறியியல் தொழில்களுக்கு அளித்த இறுதியான பரிந்துரைகளும் வெளியிடப்பட்டன. 1969-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 5-ம் தேதியன்று, சென்னை, தொழிலாளர் துறை சிறப்புத் துணை ஆணையாளர் முன்னிலையில் 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3)-ஆவது பிரிவின் கீழ் ஏற்பட்ட ஒரு உடன்படிக்கையின் மூலமாக, ஊதிய வாரியத்தின் இறுதியான பரிந்துரைகளை நிறைவேற்ற, கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள 52 நூற்பாலைகள், ஏற்பாடுகள் செய்துள்ளன. இத்தகைய உடன்படிக்கையைப் பிற மாவட்டங்களிலும் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

ஊதிய வாரியம், பொறியியல் தொழில்கள் மீது அளித்த இறுதியான பரிந்துரைகள் ஒரு மனதாக அமையவில்லையாதலால், நிர்வாகத் தரப்பிலிருந்து தொழிலாளர் தரப்பிலிருந்து வந்த பிரதிநிதிகளுடன் தொழிலாளர் துறை ஆணையாளர் பேச்சு வார்த்தை நடத்தினர். ஊதிய வாரியத்தின் தலைவரும் தனி நிலை உறுப்பினர்களும் அளித்த பரிந்துரைகளையே செயல்படுத்துவதற்கு அடிப்படையாகக் கொள்ளவேண்டுமென்று இரு தரப்பாரிடமும் கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும், நேரடிப் பேச்சு வார்த்தைகள் மூலம் பரிந்துரைகளை செயல்படுத்துமாறும், உடன்படிக்கை ஏற்படுவது சாத்தியமில்லாத இடங்களில், தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்காக, தொடர்புள்ள நல்லிணக்க அதிகாரிகளை அணுகுமாறும் எல்லா நிர்வாகங்களையும் தொழிற்சங்கங்களையும் கேட்டுக் கொண்டு, அரசு ஒரு பத்திரிகைச் செய்தியும் விடுத்துள்ளது.

தோல், மற்றும் தோற்பொருள் தொழில், பெருந் தொழில் இரசாயனங்கள், மற்றும் இரசாயன உரத் தொழில், சாலைப் போக்குவரத்துத் தொழில் மின்சார நிறுவனங்கள் ஆகியவற்றின் மீது மத்திய ஊதிய வாரியம் அளித்த இறுதியான பரிந்துரைகள் வந்தடைந்துள்ளன. அவற்றை நிறைவேற்றுவதற்குரிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

21. **தொழிற் சங்கங்கள்.**—1960-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ஆம் நாளன்று இம் மாநிலத்தில், பதிவான தொழிற் சங்கங்கள் 1,666 இருந்தன. இந்த ஆண்டில் 231 சங்கங்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டன. 136 சங்கங்களின் பதிவு ரத்து செய்யப்பட்டது. ஒரு சங்கம் கலைக்கப்பட்டது. இரண்டு சங்கங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டன. ஆக இந்த ஆண்டின் இறுதியில் செயல்பட்டுக் கொண்டிருந்த தொழிற் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை 1,758 ஆக இருந்தது.

தொழிற் சங்கங்களை அங்கீகரித்தல்—பொறுப்பாளர் தேர்தல் செல்லுபடியாகின்றனவா என்பது குறித்துத் தீர்மானிக்க, இம்மாநிலத் தொழிற் சங்கங்களின் கூடுதல் பதிவாளருக்கு, அரசு அதிகாரங்களை ஒப்படைத்தது.

22. **தொழிலில் ஒழுங்கு நெறிமுறை விதிகள்.**—தொழிலில் ஒழுங்கு நெறிமுறை விதிகளைச் செயல்படுத்தும் பணி மாநில ஆய்வு செயல் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தொழிலில் ஒழுங்கு நெறிமுறை குறித்த விதித் துறைகள் தொழிலதிபர்களுக்கும், தொழிலாளர் சங்கங்களுக்கும் அச்சிட்டு வழங்கப்பட்டன. தொழிலாளர் நல அதிகாரிகளும் தொழிற்சாலை ஆய்வாளர்களும் எந்த ஒரு மத்திய அமைப்புடனும் இணைக்கப்பட்டிராத பல்வேறு தொழிலதிபர்களுடனும் தொழிலாளர் சங்கங்களுடனும் உள்ளாட்சி மன்றங்களுடனும் தொடர்பு கொண்டு, தொழில் ஒழுங்கு நெறி முறை விதிகளை உறுதிப்படுத்துமாறு அவர்களுக்கு அறிவுரை கூற வேண்டும் என்று கட்டளை இடப்பட்டுள்ளது. 260 நிர்வாகங்களும் 24 உள்ளாட்சி மன்றங்களும் 31—12—1969 வரையில் ஒழுங்கு நெறி முறையை ஏற்றுக்கொண்டுள்ளன. 1969-ம் ஆண்டில் 229 தொழிலாளர் சங்கங்கள் தொழில் ஒழுங்கு நெறி முறை விதிகளை உறுதிப்படுத்தியுள்ளன.

ஒழுங்கு நெறிமுறை விதிகளை மீறியதாகவும் தொழில் மன்றத் தீர்ப்புகளைச் செயல்படுத்தாமல் இருந்ததாகவும் தொழிற்சங்கங்களை ஏற்காமல் இருந்ததாகவும் 73 நேர்வுகளில் முறையீடு செய்து கொள்ளப்பட்டது. (1—1—1969 அன்று 37 முறையீடுகள் விசாரணையில் இருந்தன. 1969-ல் 36 முறையீடுகள் அனுப்பப்பட்டன.) அவற்றில் 36 குறித்து ஆய்வாண்டில் தீர்வு காணப்பட்டது. ஆண்டு இறுதியில் 37 விசாரணையில் இருந்தன.

மாநில ஆய்வு-செயல்குழு 1969-ம் ஆண்டில் இரண்டு முறை (அதாவது 28—3—1969 அன்றும், 15—7—1969 அன்றும்) கூடி தொழில் ஒழுங்கு நெறிமுறை விதிகள் மீறப்பட்டதாகச் செய்துகொண்ட முறையீடுகள் குறித்தும், சங்கங்களை ஏற்பது குறித்தும் ஆய்வு-செயல் பணி குறித்த வினையவை குறித்தும் விவாதித்தது.

இக்குழு 1970-ம் ஆண்டு ஜனவரியில் திருத்தி அமைக்கப்பட்டது. திருத்தியமைக்கப்பட்டபடி, தொழிலாளர் துறை ஆணையாளர் இக்குழுவின் தலைவராவார். தொழிலாளர் துறை தனித்துணை ஆணையாளர் அதன் செயலாளராவார்.

**23. 1965-ம் ஆண்டு பூரிப்பூதியம் வழங்கல் சட்டம்.**—மேற்படி சட்டத்தின் 19-வது பிரிவில் வகை செய்துள்ளபடி பூரிப்பு ஊதியத்தை வழங்குவதற்கான காலத்தை நீட்டிப்பதற்கு அனுமதி அளிக்கும் அதிகாரியாக தொழிலாளர் துறை ஆணையாளரை அரசாங்கம் நியமித்துள்ளது. ஆய்வாண்டின்போது (கூட்டுறவு நிறுவனங்கள் குறித்த 6 நேர்வுகள் உட்பட) 39 நேர்வுகளில் கால நீட்டிப்பு வழங்கப்பட்டது. 1968—ல் 25 கால நீட்டிப்புகள் (கூட்டுறவு நிறுவனங்கள் குறித்த 10 நேர்வுகள் உட்பட) வழங்கப்பட்டன.

1965-ம் ஆண்டு பூரிப்பு ஊதியம் வழங்கல் சட்டத்தின் 2 (1) பிரிவுடன் 1965-ஆம் ஆண்டு பூரிப்பு ஊதியம் வழங்கல் விதிகளில் உள்ள 3 (b) பிரிவையும் சேர்த்து அவற்றின் கீழ் வகை செய்துள்ளபடி நிர்வாகத்தினர் தங்களது கணக்கு ஆண்டை மாற்றிக் கொள்ள அனுமதி அளித்து இரு நேர்வுகளில் ஆணைகள் இந்த ஆண்டில் பிறப்பிக்கப்பட்டன.

## IV. சமூகப்பாதுகாப்புச் சட்டம்.

**24. 1923-ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம்.**—இந்த ஆண்டில் 694 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 1968-ல் 1,194 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அவற்றைத் தவிர, இந்த ஆண்டுத் தொடக்கத்தில் 416 வழக்குகள் விசாரணையில் இருந்தன. மொத்தம் 1,110 வழக்குகளில் 682 வழக்குகளுக்குத் தீர்வு காணப்பட்டது. 1968-ல் 1,329 வழக்குகளுக்குத் தீர்வு காணப்பட்டது.

தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் இழப்பீடு கேட்கிற தகுதியுள்ள ஏழைத் தொழிலாளர்களுக்கு அல்லது அவரைச் சார்ந்துள்ளவர்களுக்கு வழக்காடும் உதவிக்கென அரசாங்கச் செலவில் ரூபாய் 1,000 தொகையை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. தொழிலாளர் இழப்பீட்டுக் கூட்டு ஆணையாளரின் ஆணைகளுக்கு எதிராக நிர்வாகம் முறையீடு செய்துகொள்ளும்போது, காயமுற்ற தொழிலாளர்களுக்கும், மரணம் அடைந்த தொழிலாளர்களைச் சார்ந்து உள்ளவர்களுக்கும் உயர்நீதி மன்றத்தில் எதிர் வழக்காட உதவி அளிக்கப்படுகிறது. தொழிலாளர் இழப்பீட்டுக் கூட்டு ஆணையாளருக்கு முன்பு நடக்கும் சட்ட நடவடிக்கைகள் குறித்து அத்தகைய உதவி வழங்கப்பட்டது. 1969-ல் ஒரு நேர்வில் வழக்காடுவதற்கான உதவியாக மொத்தம் ரூ. 50 வழங்கப்பட்டது.



1923-ம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் இழப்பீடு கேட்கக்கூடிய தகுதியுள்ள தொழிலாளர் அல்லது அவரைச் சார்ந்தவர்கள் ஆகியோருக்கு வழக்காடுவதற்கான உதவி அளிப்பதற்காக சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின் கூட்டு ஆணையாளர்கள் ஒவ்வொருவராலும் ஆண்டொன்றுக்கு ரூ. 300-க்கு மேற்படாத செலவுத் தொகைக்கும் சென்னை தொழிலாளர் இழப்பீட்டு ஆணையாளரால் ஆண்டுதோறும் ரூ. 100-ம் (ரூபாய் நூறு மட்டும்) செலவிட 1970, பிப்ரவரி 28-ம் தேதி வரை அதாவது மூன்றாண்டு கால அளவுக்கு 1967, ஆகஸ்டில் அரசாங்கம் நிலையான ஒப்புதலளித்தது.

**25. 1961-ம் ஆண்டு பேறுகால உதவிச் சட்டம்.**—1—9—1967 முதற்கொண்டு, 1961-ஆம் ஆண்டு பேறுகால உதவி சட்டத்தின் கீழுள்ள விதிகள், விதித்துறைகளின்படி, பெண் தொழிலாளர்க்குப் பேறுகால உதவி வழங்குதல் முறைப்படுத்தப்படுகிறது.

1961-ஆம் ஆண்டு பேறுகால உதவிச்சட்டத்தின் கீழ், மாநில அரசு விதிகளை வகுத்துள்ளது. இவ்விதிகள் 1—12—1967 முதல் நடைமுறைக்கு வந்துள்ளன.

**26. 1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி சட்டம்.**—1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிகள் சட்டம் 1969-ம் ஆண்டில் கீழ்க்கண்ட தொழிலாளர்களுக்கு, வகை நிறுவனங்களுக்கு, அவற்றிற்கெதிராக குறிப்பிட்டுள்ள தேதிகள் முதல் மேற்கொண்டும் நீட்டிக்கப்பட்டது:—

| தொழில்களின்/நிறுவன வகைகளின் பெயர். | பொருந்திய நாள். |
| --- | --- |
| இரும்பு-மாங்கனீசு தொழிற்சாலை .. | 1969-ஆம் ஆண்டு ஏப்ரல் 30-ஆம் நாள். |
| வைரச்சுரங்கங்கள் .. .. .. | ஷை |
| ஐஸ் அல்லது ஐஸ்-கிரீம் தொழிற்சாலை. | ஷை |

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டம் தற்போது 123 தொழில்களுக்கும் பிறவகை நிறுவனங்களுக்கும் பொருந்துகின்றது. (1969-ஆம் ஆண்டு இறுதியில் உள்ளபடி.)

தமிழ்நாட்டில் 5,676 நிறுவனங்களுக்கு/தொழிற்சாலைகளுக்கு 1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டம் பொருந்தும்படிச் செய்யப்பட்டுள்ளது. இச் சட்டம் பொருந்துகிற தொழில் நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கையும் அந்த நிதிக்குத் தவணைத் தொகை செலுத்துபவர்களின் எண்ணிக்கையும் முறையே 578,410-ம், 507,754-ம் ஆகும்.

**இந்த நிதிக்குச் செலுத்தப்படும் தவணைத் தொகை வீதம்.**—சட்டப்படி நோக்கின் சம்பளத்தில் 6¼ சத வீதம் வருங்கால வைப்பு நிதிக்குச் செலுத்தப்பட வேண்டும். ஆனால், 81 தொழில்கள்/நிறுவன வகைகள் குறித்து சம்பளத்தில் 8 சத வீதம் வருங்கால வைப்பு நிதிக்குச் செலுத்த வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது.

வருங்கால வைப்பு நிதிக்குச் செலுத்தவேண்டிய தொகைகள் நிர்வாகச் செலவுகள்/ஆய்வுக் கட்டணங்கள் முதலியன குறித்து கேட்பு/வசூல்/நிலுவைத் தொகைகள் பற்றிய புள்ளி விவரம்.

| பாக்கிகளின் தன்மை. | கேட்பு. | வசூல். | நிலுவை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ரூ. | ரூ. | ரூ. |
| 1 நடப்பு தவணைத் தொகைகள். | 10,03,26,464·44 | 8,99,72,779·88 | 1,03,53,684·56 |
| 2 நிர்வாகச் செலவுகள். | 24,35,462·68 | 22,39,676·55 | 1,95,786·13 |
| 3 ஆய்வுக்கான செலவுகள். | 2,73,614·29 | 2,72,979·54 | 634·75 |
| 4 முன்பு சேர்ந்து வந்திருந்த தொகைகள். | 45,20,322·23 | 45,01,967·70 | 18,354·53 |

வைப்பு நிதிக்குச் செலுத்த வேண்டிய தொகை நிலுவைகளும் நிர்வாகச் செலவுகளும் முந்திய ஆண்டைக்காட்டிலும் அதிகரித்துள்ளதற்கு முக்கியக்காரணம், தொழிலில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக, பஞ்சாலைகள், வருங்கால வைப்பு நிதிக்குத் தொகை வழங்காததே.

பஞ்சாலைத் தொழிலில் இப்போது நிலவிவரும் நெருக்கடி காரணமாக 7—7—69 அன்று தொழிலாளர் நல அமைச்சர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தொகைக்கட்டத்தவறிய பஞ்சாலைகளிடமிருந்து வர வேண்டிய நிலுவைகள் கீழ்க்கண்டவாறு வசூல் செய்யப்படவேண்டும் என்று தமிழ்நாடு அரசு தீர்மானித்துள்ளது :—

(i) 1969-ஆகஸ்டில் கொடுக்கப்படவேண்டிய, 1969 ஜூலைத் திங்களுக்குரிய நிலுவைகள் நடப்பு நிலுவைகளாகக் கருதப்படும். 1969 ஜூலைக்கு முந்தித் தொழிலாளர்களுக்குரிய தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிக்குக் கொடுக்கப்படவேண்டிய தொகைகள் இப்பொழுதிலிருந்து மூன்று திங்களுக்குள் செலுத்தப்பட வேண்டும். இதன் முதல் தவணை 1969 செப்டம்பரில் கொடுக்கப்பட வேண்டும். அத்தகைய நேர்வில் அபராதம் எதும் வசூலிக்கப்பட வேண்டியதில்லை.

(ii) தொழிலாளர்களின் பங்கு மூன்று மாதங்களுக்குள் செலுத்தப்படாவிட்டாலும், 6 மாதத்திற்குள்ளாவது செலுத்தப்பட வேண்டும் ; ஆனால் அபராதம் வசூலிக்கப்படும். அப்போதும் கூடத் தொகை செலுத்தப்படவில்லையென்றால் வழக்குத் தொடரப்பட்டு, வருவாய்த் துறைமூலம் வசூலிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதோடு அபராதமும் வசூலிக்கப்படும்.

(iii) ஏற்பட்டுள்ள இடையூறுகளைக் கருத்தில் கொண்டு, தொழிலாளர்களின் பங்கு வசூலிக்கப்பட்ட பிறகு தொடங்கி, அதாவது 1969 நவம்பரிலிருந்து 36 மாத சமத் தவணைகளில், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் தொகைகளும், நிர்வாகச் செலவுகளும் செலுத்தப்பட, அனுமதியளிக்கப்படும்.

(iv) கணக்குத் தீர்க்கப்படவேண்டியதான கோரிக்கைகளின் நேர்வில், இந்தக் கோரிக்கைகள் தொடர்பான தொகைகள் அங்கேயே அப்பொழுதே கொடுக்கப்படவேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.



(v) பஞ்சாலைக்கழக நிர்வாக இயக்குநர், வட்டார வருங்காலவைப்பு நிதி ஆணையாளர், கைத்தறி இயக்குநர் ஆகிய மூவரும், மூடப்பட்ட பஞ்சாலைகளின் நிலைமையை ஆராய்ந்து, இப்பஞ்சாலைகள் தொடர்பான வசூல்களை எவ்வாறு மேற்கொள்வது என்று பரிந்துரைகள் அளிப்பர் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(vi) பஞ்சாலைகள், மேலே வகுத்துள்ளபடியான வசூல் வரை முறைகளின்படி நடக்கத் தவறினால், நிலுவைகளை வசூலிக்க, வழக்குத் தொடர்தல், வருவாய்த்துறை மூலம் வசூலிப்பு நடவடிக்கை மேற்கொள்ளுதல் ஆகிய வழிகளில் தண்டனை நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அரசு நிலைப்படுத்திய வரையறைகளின்படி நிலுவைகளைச் செலுத்தாத பஞ்சாலைகள் மீது தண்டனை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வருவாய்த்துறை வசூலிப்புச்சட்டத்தின் கீழ் நிலுவைகளை வசூலிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட்டி வீதம்.—1969–70 நிதி ஆண்டில் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிகளில் தனித்தனிக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்ட வட்டி வீதம் 5¾ சத வீதமாகும். முந்திய ஆண்டில் வரவு வைக்கப்பட்ட வட்டி வீதம் 5½ சத வீதமாக இருந்தது.

முன் பணங்கள்.—கீழ்க்கண்ட காரணங்களை முன்னிட்டு, ஆய்வு ஆண்டில் திரும்பச் செலுத்தத்தக்கதாய் இராத முன்பணங்கள் வழங்கப்பட்டன :—

| இன்ன காரியத்துக்காக முன்பணங்கள் வழங்கப்பட்டது என்பது. | நேர்வுகளின் எண்ணிக்கை. | தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | ரூ. பை. |
| (அ) ஆயுள் காப்புறுதித் தவணைத் தொகை செலுத்துதல். | 25,801 | 22,17,695·47 |
| (ஆ) உறைவிடங்கள்/வீட்டுமனைகள் வாங்குதல். | 1,134 | 13,36,373·50 |
| (இ) பயன்துய்ப்போர் கூட்டுறவு சங்கங்களின் பங்கு/பங்குகளை வாங்குவதற்காக. | 827 | 25,330·90 |

| கடன் வழங்கப்பட்டதற்கான காரியம். | கடன் பெற்றோர் நேர்வுகளின் எண்ணிக்கை. | ஒப்பளிக்கப்பட்ட தொகை. |
|---|---|---|
| | | ரூ. பை. |
| 4 மருத்துவக் காரணங்களுக்காக .. | 206 | 53,742·00 |
| 5 உறுப்பினரின் மகள் திருமணம் அல்லது குழந்தைகளின் கல்வி தொடர்பாக. | 718 | 5,65,695·00 |
| 6 நிறுவனங்களைத் தற்காலிகமாக மூடியதன் விளைவாக, வேலையிழந்த உறுப்பினர்களுக்கு சிறப்பு முன்பணம். | 29,364 | 83,05,371·65 |

### வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளை இறுதியாகத் தீர்த்தல்

1—1—1968 முதல் 31—12—1968 வரையிலான கால அளவில் ரூ. 2,55,09,668·01 என்று வருங்கால வைப்பு நிதி கொடுக்கப்பட்டதற்கு மாறாக, 1—1—1969 முதல் 31—11—1969 வரையிலான கால அளவில் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளை இறுதியாகத் தீர்ப்பதற்கு, ரூ. 3,42,61,328·95 தொகை வழங்கப்பட்டது. இத்தொகையைத் தவிர இறந்த உறுப்பினர்கள் 362 பேரின் நியமனதாரர்களுக்கு வாரிசுகளுக்கு மரண உதவியிலிருந்து கூடுதல் உதவித் தொகையாக, ரூ. 1,04,086·98 தொகையும் கொடுக்கப்பட்டது.

### கணக்குகள் குறித்த ஆண்டறிக்கையை வெளியிடல்.

1968-69 ஆண்டில், உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டி யிருந்த 4,30,547 கணக்குகளின் ஆண்டறிக்கைகளுள், 31—1—1969 வரை 3,04,396 ஆண்டறிக்கைகள் அனுப்பப்பட்டன.

### வட்டாரக்குழு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் தமிழ்நாடு வட்டாரம்

ஆய்வுரையாண்டுக் காலத்தில், தமிழ்நாடு வட்டாரத்தின் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியின் வட்டாரக் குழு 3—3—1969 அன்றும், 22—7—1969 அன்றும் கூடியது. 1952-ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதித் திட்டம் செயல்படும் முறை குறித்து முக்கிய மானதும் அவசரத் தன்மை வாய்ந்ததுமான, பல்வேறு பொருட்கள் பற்றி விரிவாக அக்குழு விவாதித்தது. குழுவின் பரிந்துரைகள், உயர் அதிகாரிகளின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

**ஆய்வாண்டுக் காலத்தில் 1952-ஆம் ஆண்டு தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதிகள் திட்டத்தில் செய்யப்பட்ட முக்கியத் திட்டங்கள்.—**

1. 1952-ஆம் ஆண்டு தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதிகள் திட்டத்தின் 68-1-ஆம் பாரா, கூட்டுறவு வீட்டுவசதி-நாணயச் சங்கத்தின் பங்கை (பங்குகளை) வாங்குவதற்காக, தொழிலாளர்களுக்கு முன்பணம் வழங்க வழிகோலும் பொருட்டு திருத்தப்பட்டது.

2. மகளின் திருமணத்திற்காக அல்லது பிள்ளைகளின் மெட்ரிக்குக்கு மேற்பட்ட படிப்பிறகாக தொழிலாளர் வருங்கால வைப்புநிதியிலிருந்து முன்பணம் வழங்க வகை செய்ய (68-K படிவம்) புதிய பாரா ஒன்று சேர்க்கப் பட்டுள்ளது ; ஆனால், அந்த முன்பணம் வழங்கப்படும் நாளன்று வட்டி யுட்பட தொழிலாளர் செலுத்தியிருக்க வேண்டிய தொகை ரூ. 500 அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.

3. ஐஸ்-ஐஸ்கிரீம் தொழிற்சாலை, குறிப்பிட்ட காலங்களில் இயங்கும் தொழிற்சாலையாக வகைப் படுத்தப்பட்டுள்ளது.—

4. விலக்களிக்கப்பட்ட நிறுவனங்களிலும் விலக்களிக்கப்படாத நிறு வனங்களிலும், வருங்கால வைப்பு நிதியை முதலீடு செய்வதில் கீழ்க் கண்ட முதலீட்டு முறையை 1—4—1969 முதல் பின்பற்றவேண்டுமென இந்திய அரசு குறிப்பிட்டுள்ளது:

(i) மத்திய அரசு ஈட்டுப் பத்திரங்களில்—50 சதவீதத்திற்குக் குறை யாமல்,

(ii) மாநில அரசுகளினால் திரட்டப்பட்டதும், வெளியிடப்பட்டதுமான ஈட்டுப்பத்திரங்களின் எஞ்சிய தொகையும் மத்திய அரசினால் அல்லது மாநில அரசுகளினால் உத்திரவாதம் அளிக்கப்பட்ட சிறு சேமிப்புத் தொகைகளும் ஏனைய ஈட்டுப் பத்திரங்களும்.



5. விலக்களிக்கப்பட்ட ஒரு நிறுவனத்திலிருந்து விலகி இச்சட்டம் பொருந்துகிற மற்றொரு நிறுவனத்தில் வேலை கிடைக்கப்பெறும் ஒரு தொழிலாளரது வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளை அவ்வாறு வேலை கிடைக்கப்பெற்ற நிறுவனத்திற்கு அனுப்பப்பட வேண்டிய காலவரையறை மூன்று திங்கள் என்று 1952-ஆம் ஆண்டுத் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டத்தின் 17(3) (c) பிரிவையொட்டி இந்திய அரசு குறிப்பிட்டது.

6. மரணம் அடைந்தோர்களின் நியமதாரர்/வாரிசுகளுக்கு மரண நிதி உதவியிலிருந்து கொடுக்கப்படும் துயர் தணிப்பு நிதியை, ரூ. 500-இல் இருந்து ரூ. 700-க்கு உயர்த்துவதற்குரிய கட்டளைகளை இந்திய அரசு பிறப்பித்தது. இது 1—8—1969 முதல் செயலுக்கு வரும். 1—8—1969 அன்று அல்லது அதற்கு பின்னர் காலமானவர்கள் குறித்து, தற்போதுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, அதிகரிக்கப்பட்ட வீதத்தில் துயர்தணிப்பு நிதி தரப்படும்.

7. வெள்ளம், நில நடுக்கம் அல்லது கலகம் போன்று அசா தாரண தன்மைவாய்ந்த இடர்களினால் தொழிலாளியின் இயங்கும் சொத்துக்களுக்கு அல்லது இயங்காச் சொத்துக்களுக்குச் சேதம் ஏற் படும்பொழுது 200 ரூபாய் அல்லது தொழிலாளர் கணக்கில் வட்டி யுட்படச் செலுத்தியுள்ள மொத்தத் தொகையில் 50 சதவீதம், இதில் எது குறைவோ அத்தொகை, திருப்பித்தர வேண்டியிராத முன் பணமாக (non-refundable advance) வழங்க ஏற்பாடு செய்யும் வகையில் 1952-ம் ஆண்டுத் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியில் 68 என்னும் புதிய பாரா சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால், ஆணையாளருக்கு மனநிறைவு அளிக்கும் வகையில் தொழிலாளி சாட்சியங்கள் தரவேண்டும்; மேலும், சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதம், அந்தப் பகுதியிலுள்ள பொதுமக்களைப் பாதித்தது என்றும் மாநில அரசு சான்றளிக்க வேண்டும்.

ஆய்வுரையாண்டுக்காலம் முடியும் வரை, 183 தொழிற்சாலைகள்/ நிறுவனங்களின் வகைகள், தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதிச் சட்டத்தின் திட்டத்தின் அமைப்பின்கீழ்க் கொண்டுவரப்பட்டன. 81 தொழிற்சாலைகள்/நிறுவனங்களின் வகைகளில், பங்குத் தொகைவீதம் உயர்த்தப்பட்டன. அதிகமான தொழிற்சாலைகளுக்கும் நிறுவனங்களின் வகைகளுக்கும் இச்சட்டத்தை விரிவுப்படுத்தும் ஆலோசனையிலுள்ளது. அரசு கருத்துப்படி வருங்கால வைப்பு நிதிச் சுமையை ஏற்றுக்கொள்ளக் கூடிய தொழிற்சாலைகளையும்/பல்வகையான நிறுவனங்களையும் இச்சட்டத் தின் கீழ்க் கொண்டுவரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இச் சட்டத்தின்கீழ் நிறுவனங்களைக் கொண்டுவரும் காரியத்திற்காக, தொழி லாளர் எண்ணிக்கையை 20-இலிருந்து 15-ஆகக் குறைப்பது குறித்தும், தொழிலாளர்களின் வருங்கால வைப்பு நிதிகள் சட்டத்தில் குறிப் பிட்டுள்ள வேலையில் சேர்வோரின் தொடக்கப்பணிக் காலத்தைக் குறைப் பது குறித்தும் இந்திய அரசு பரிசீலித்து வருகின்றது.

“ தமிழ் நாடு அரசு 1969-ஆம் ஆண்டு தொழிற்சாலைத் தொழிலாளர் களின் வருங்கால வைப்பு நிதி விதிகள் ”, 1969-ஆம் ஆண்டில் வெளியிட்டது. அரசினர் தொழிற்சாலை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் அனைவருக்கும் இந்த விதிகள் பொருந்தும்; ஆனால், சட்டப்படிக்கான பணிவிதிகளின் கீழும், ஓய்வு ஊதியம் பெறத்தக்க பணிகளிலும் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு இந்த விதிகள் பொருந் தாது. தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதிச் சட்டத்தின் கீழ் தொழிலாளர்களுக்குக் கொடுத்துள்ள நன்மைகளைக் காட்டிலும், இந்தத் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படும் நன்மைகள் குறைவானது இல்லை என்பதால், மேற்கொண்ட விதிகளின் கீழ் வரும் தொழிலாளர்களுக்காக

1952-ஆம் ஆண்டு தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதிகள் திட்டத்திலிருந்து விதிவிலக்கு பெற நடவடிக்கை விலக்களிப்பதற்காக எடுக்கப்பட்டுவருகிறது. வருங்கால வைப்பு நிதிக்கு தொழிலதிபர்கள் அளிக்கும் பங்குத்தொகையோடுகூட அரசுக்கும் கணிசமான செலவு ஏற்படுவதாக இருந்தபோதிலும், மேற்சொன்ன விதிகள், அரசு இயற்றிய மிக முக்கியமான தொழிலாளர் நல ஏற்பாடாகும்.

### தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம்.

இம்மாநிலத்தில் தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம் 33 நிலையங்களில் 1970-ஆம் ஆண்டு மார்ச் முதல் செயலில் உள்ளது. இத்திட்டத்தில், 346,500 குடும்பப்பிரிவுகளும் ஈட்டுறுதி செய்து கொண்டவர்கள் 10,200 பேரும் உட்பட, தோராயமாக 1,396,000 பேர்கள் பயன் பெறுகின்றனர். மேற்கண்ட நிலையங்களில், 85 அரசாங்க ஈட்டுறுதி மருந்தகங்களும், 9 வலம் வரும் மருந்தகங்களும், 10 தொழில் அதிபர் பயன்படுத்தும் மருந்தகங்களும் இத்திட்டத்தில் செயல்படுகின்றன. மேலும், 3 பகுதி நேர மருத்துவர்களும் இத்திட்டத்தின்கீழ்ச் செயல்படுகின்றனர்.

1969-70-ஆம் ஆண்டில், தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் 13—4—1969 முதல் கோயம்புத்தூர் நகரம், அதன் புறநகரப் பகுதிகளிலும், 3—6—1969 முதல் மதுரை நகரம், அதன் புறநகரப்பகுதிகளிலும் ஈட்டுறுதி செய்துக் கொண்டவர்களின் குடும்பத்தினருக்கும் மருத்துவ பயன்களை அரசு அளித்தது. இதன் பலனாக, இத்திட்டத்தின்கீழ் தோராயமாக 91,700 குடும்பப் பிரிவுகள் பயன் பெறுகின்றன. இதன் பலனாக ஏற்பட்ட கூடுதல் தொடர் இனச் செலவு ரூ. 34,17,000 என்றும், கூடுதல் தொடரா இனச் செலவு ரூ. 1,27,000 என்றும் மதிப்பிடப்படுகிறது. ஈட்டுறுதி செய்து கொண்டோருக்கு அளிக்கும் மருத்துவப்பணியின் தன்மையை மேம்படுத்தும் வண்ணம் கோயம்புத்தூரில் செயலில் இருந்த மருத்துவப் பிரிவு 13—4—1969 முதல் நீக்கப்பட்டது. முன்னரே நிறுவப்பட்ட 7 தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகங்களின் தரத்தை உயர்த்துவதற்கும் கூடுதலாக, புதிதாக 14 தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகங்கள் கீழ்க்கண்ட இடங்களில் திறக்கப்பட்டன:—

இருகூர்.

குனியமுத்தூர்.

ராமநாதபுரம்.

தூடியலூர்.

பீளமேடு.

ஆர். எஸ். புரம்.

சூலூர்.

போத்தனூர்.

பாப்பநாய்க்கன் பாளையம்.

கணபதி.

பெரிய நாய்க்கன் பாளையம்.

காட்டூர்.

செல்வபுரம்.

மதுக்கரை.

மதுரைப் பகுதியில் ஈட்டுறுதி செய்துகொண்டோர்களின் குடும்பத்தினருக்கு மருத்துவ வசதி அளிப்பதற்காக, ஏற்கெனவே நிறுவப்பட்ட 6 மருந்தகங்களும் கூடுதல் பணியாளர்களுடன் தரம் உயர்த்தப்பட்டன.



கோயம்புத்தூர்ப் பகுதியில், ஈட்டுறுதி செய்து கொண்டோர்களின் குடும்பத்தினருக்கும் சிறப்பு மருத்துவர்களின் சேவைக்கு, வகை செய்வதற்காக, மருந்து, அறுவைச் சிகிச்சை, காசநோய், கண் காது மூக்கு தொண்டை, தோல் நோய்கள், மகப்பேறு, பெண்நோய் மருத்துவம், நோய்க்குறியியல், குழந்தை மருத்துவம் போன்ற பல்வேறு துறைகளில் சிவில் அறுவை மருத்துவரின் தரத்தில் முழு நேர சிறப்புமருத்துவர்கள் கோயம்புத்தூர்ப் பகுதியில் நியமிக்கப்பட்டனர்.

சிறப்பு மருத்துவர்கள், பகுதிநேர மருத்துவர்களாக மதுரையில் நியமிக்கப்பட்டனர். 1969-70-ல் ஈட்டுறுதி செய்து கொண்டோர்கள், அவர்தம் குடும்பத்தினர் ஆகியோர் உட்பட வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஆரணிப்பகுதியிலும், மாநிலத் தொழிலாளர் ஈட்டுறுதி திட்டம் செயல்பட்டது. ஈட்டுறுதி செய்து கொண்டோர் அவர்தம் குடும்பத்தினர் ஆகியோரின் மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு, மருந்தகம் ஒன்றும் ஆரணியில் நிறுவப்பட்டது.

தூத்துக்குடி, விக்கிரமசிங்கபுரம் பகுதிகளில் வாழும் தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு விரைவிலேயே மருத்துவ வசதிகளை அளிப்பதெனக் கருதப்பட்டது.

### மருத்துவ மனை.

தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் வரும் பணியாளர்களுக்கென்றே சென்னை அயன்புரத்தில் அனைத்து வசதிகளுடன் கூடிய மருத்துவமனை ஒன்று, 1962 ஏப்ரல் முதல் செயல்பட்டு வருகின்றது. சென்னை மாநகரிலும், அதன் புறநகர்களிலும் ஈட்டுறுதி செய்து கொண்டவர்களின் குடும்பத்தினருக்கும் இத்திட்டத்தின்கீழ் மருத்துவ வசதி விரிவாக்கப்பட்டுள்ளதால் இந்த மருத்துவ மனையில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை 625 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. கோயம்புத்தூரில் 500 படுக்கை வசதி கொண்ட மருத்துவ மனை ஒன்று கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. மதுரையில் தற்போதுள்ள தொத்துநோய் மருத்துவமனையை இரண்டு அறுவைக் கூடங்களுடன் 66 படுக்கைகள் கொண்ட தொகுதியும் கூடுதல் கட்டிட அமைப்பும் போடப்பட்டு, தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனையாக மாற்றியமைக்கப்பட்டு வருகின்றது. கட்டிட வேலை ஏறக்குறைய முடிந்துவிட்டது. தற்பொழுதுள்ள தொத்துநோய் மருத்துவ மனையை வேறிடத்திற்கு மாற்றியவுடன் இந்த மருத்துவமனை செயல்படத் தொடங்கும்.

### மருத்துவத் தொகுதியும், இணைப்பு மருத்துவமனைகளும்.

தாம்பரம் காசநோய் நலம்பேண் மருத்துவ மனையில் மொத்தம் 52 படுக்கைகளுடன் கூடிய, தொழிலாளர் நல ஈட்டுறுதி நிரந்தரத் தொகுதிகள் பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. சிவகாசி அரசாங்க மருத்துவமனையில் 12 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் நல ஈட்டுறுதி பிரிவு ஒன்று கட்டப்பட்டுள்ளது. லால்குடி அரசினர் மருத்துவ மனையில் ஈட்டுறுதி செய்த பிணியாளர்களுக்கு, 10 படுக்கைகள் கூடிய வார்டு ஒன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. கோயில்பட்டியில் உள்ள அரசாங்க மருத்துவ மனையில் 32 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் நல ஈட்டுறுதிப் பிரிவு ஒன்று கட்டப்பட்டுள்ளது. நாகர் கோயில் காசநோய் அரசினர் மருத்துவ மனையில் 26 படுக்கைகள் கொண்ட காசநோய் தொகுதி ஒன்றைக் கட்டுவதற்கும், வட ஆற்காடு மாவட்டத்தில் பெண்ணாத்தூர் காசநோய் மருத்துவமனை 16 படுக்கைகள் கொண்ட தொகுதி ஒன்றைக் கட்டுவதற்கும் அரசு அனுமதியளித்துள்ளது. நாகர்கோயிலில் உள்ள காசநோய் தொகுதி பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. காவிரி நகரிலும், உசிலம்பட்டியிலும் (திருச்சி மாவட்டம்) உள்ள தொழிலாளர் நல

ஈட்டுறுதி மருந்தகங்களிலும், 10 படுக்கைகள் கொண்ட ஒவ்வொரு தொகுதி கட்டுவதற்கும் அரசு அனுமதியளித்துள்ளது. இம் மாநிலத்தில் உள்ள 13 அரசினர் மருத்துவமனைகள் ஒவ்வொன்றிலும், 10 படுக்கைகள் கூடிய தொகுதி ஒன்று கட்டுவதற்கும் அரசு அனுமதியளித்துள்ளது.

**மாநிலத் தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகங்கள்.**

தற்போது, தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகங்கள் கீழே குறிப்பிட்ட இடங்களில் உள்ள புதிய கட்டிடங்களில் செயல்பட்டு வருகின்றன :—

1. பெரம்பூர்.
2. தண்டையார்ப்பேட்டை.
3. செம்பியம்.
4. கொண்டித்தோப்பு.
5. கீழ்ப்பாக்கம்.
6. திருவொற்றியூர்.
7. செங்குன்றம்.
8. அம்பத்தூர்.
9. ஆவடி.
10. பல்லாவரம்.
11. சிங்காநல்லூர்.
12. ஒண்டிப்புதூர்.
13. சௌரிப்பாளையம்.
14. உப்பிலிப்பாளையம்.
15. வெள்ளலூர்.
16. சிவகாசி.
17. ராஜபாளையம்.
18. தூத்துக்குடி.
19. விக்கிரமசிங்கபுரம்.
20. காவிரிநகர்.
21. ராம்ஜிநகர்.
22. மேட்டூர் மேல் அணை.
23. மேட்டூர் கீழ் அணை.
24. திருநகர்.
25. பொன்னகரம்.





26. பழங்காநத்தம்.
27. பரவை.
28. உடுமலைப்பேட்டை.
29. திருப்பூர்-I.
30. கும்பகோணம்.
31. கோயில்பட்டி.
32. முனிச்சாலை ரோடு.

பணியாளர் குடியிருப்புகளுடன் கூடிய இந்த மருந்தகங்கள் அனைத்தும், ரூ. 1,90,44,400 மதிப்பீட்டுச் செலவில் (அதாவது ஏறத்தாழ இரண்டு கோடி ரூபாய்) கட்டப்பட்டுள்ளன.

மேலும், சூளையிலும் திருவல்லிக்கேணியிலும் மருந்தகக் கட்டிடங்கள் கட்டப்பட்டு, முடியுந்தறுவாயில் உள்ளன. தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகத்தின் சீரற்ற நிதி நிலைமையைக் கருத்திற் கொண்டு, கட்டிட வேலைகள் தொடங்கப்படாத அல்லது நிலங்களைக் கையகப் படுத்தும் தொடக்க நடவடிக்கை எடுக்கப்படாத அல்லது கழகத்திடமிருந்து நிதிகள் குறித்து புதிய அனுமதி பெறாத திட்டங்களுக்கு அவை ஒப்பளிப்பு பெற்றதாயினும் அத்தகைய திட்டங்கள் குறித்து எந்தப் புதிய கட்டிட வேலையும் தொடங்கக்கூடாது என்று 1968 ஜூலையில் ஈட்டுறுதிக் கழகம் அரசைக் கேட்டுக்கொண்டது. தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகத்தின் நிதி நிலைமையை மறு பரிசீலனை செய்வதற்காக, கழகம் துணைக்குழு ஒன்றையும் நியமித்தது. அகத்துள்ள பிணியாளர்கள் சிகிச்சைக்கான படுக்கைகள், நிலம் கையகப்படுத்தல் போன்றவற்றிற்கு வகை செய்வது குறித்து, சில தீவிரமான மாறுதல்களை அத்துணைக்குழு பிறவற்றிற்கிடையே பரிந்துரைத்தது. ஒவ்வொரு மாநிலத்திலும், 1,000 தொழிலாளர்களுக்கு 11 படுக்கைகள் என்ற தற்போதைய அளவுகோலை, 1,000 தொழிலாளர்களுக்கு நான்கு படுக்கைகள் என்ற வீதத்திற்கு தற்சமயம் குறைக்க வேண்டும் என்றும் தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழக மருத்துவ மனைகளில், இணைப்பு மருத்துவமனைகளில் அந்தப் படுக்கைகள் இருக்கலாம் என்றும் அல்லது பிற மருத்துவமனைகளில் இதற்கென இடம் ஒதுக்கப்படலாம் என்றும் அந்தத். துணைக்குழு பரிந்துரைத்தது.

இம்மாநிலத்தைப்பொறுத்தவரை, 1,000 தொழிலாளர்களுக்கு 11 படுக்கைகள் என்ற தற்போதுள்ள அளவுகோலின் அடிப்படையிலேயே, தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகத்தின் கீழ் தனி மருத்துவ மனைகளும், தொகுதிகள்/இணைப்பு மருத்துவ மனைகளும் இதுவரை கட்டப்பட்டுள்ளன. அளவுகோலில் எந்தவிதக் குறைப்பையும் செயற்படுத்தினால், அகத்துள்ள பிணியாளர்களுக்கு சிகிச்சைக்காக தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகத்தில் ஈட்டுறுதி செய்தவர்களும் அவர்தம் குடும்பத்தினரும், அரசினர் மருத்துவ நிலையங்களுக்கு அல்லது தனியார் மருத்துவ நிலையங்களுக்கு, எது இயலுமோ அதற்கு அனுப்பப்படுவார்கள். அளவுகோலைக் குறைப்பதை எதிர்த்து, அரசு வேறு முயற்சிகள் எடுத்துக் கொண்டிருப்பினும், தொழிலாளர் நல ஈட்டுறுதிக்கழகம் தன் முடிவை மாற்றிக்கொள்ளவில்லை.

பெருஞ்செலவு செய்து கட்டிடங்கள் கட்டக்கூடாது என்று தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகத்தின் துணைக்குழு பரிந்துரை செய்ததன் விளைவாக, ஏறத்தாழ ரூ. 75 லட்சம் பெறுமான கட்டிடங்களைக் கட்டுவதற்கான திட்டங்களை அரசும் கழகமும் கைவிட்டன. ஏறத்தாழ ரூ. 100 லட்சம் பெறுமானமுள்ள, அனுமதியளிக்கப்பட்ட

திட்டங்களுக்கு கழகத்தின் புதிய அனுமதி எதிர்பார்க்கப்படுகின்றது. அந்தத் தடை நீக்கப்பட்டாலொழிய, தமிழ்நாட்டில் தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகத் திட்டத்தின் கீழ் மருத்துவ மனை வசதிகளை மேம்படுத்துவது சாத்தியமல்ல.

### செலவினம்.

தொழிலாளர் நல ஈட்டுறுதிச் சட்டத்தின் கீழ் மருத்துவ வசதிகளை வழங்குவதற்கான செலவு முதற்கண் மாநில அரசால் செய்யப்பட்டு தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகம், மாநில அரசு இவற்றிற் கிடையே செலவு பகிர்ந்து கொள்ளப்படும்; ஈட்டுறுதி செய்து கொண்ட பணியாளர்களுக்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும், இத் திட்டத்தின் கீழ் வரும் இடங்களில் 7 : 1 என்ற விகிதத்திலும் ஈட்டுறுதி செய்து கொண்டுள்ளவர்கள் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் வரும் இடங்களில் 3 : 1 என்ற விகிதத்திலும் பகிர்ந்து கொள்ளப்படும்.

1969–70-ல் மருத்துவ வசதிகளுக்காக செய்யப்பட்ட செலவு தோராய மாக ரூ. 203 லட்சமாகும். 1969 ஜனவரி முதல் டிசம்பர் வரையில் உள்ள கால அளவில் ரொக்கமாக வழங்கப்பட்ட தொகை குறித்த புள்ளிவிவரங்கள் வருமாறு :—

| உதவிகளின் வகை. (1) | கொடுத்த தொகை. (2) ரூ. |
|---|---|
| ரொக்க உதவித் தொகை— | |
| (அ) நோய்க்கால உதவி<br>(இ) நீட்டிக்கப்பட்ட நோய்க்கால உதவி .. .. | 1,32,70,066·97 |
| தொழில் வகையில் காயம்பட்டதற்கான உதவி— | |
| (அ) வேலை செய்ய தாற்காலிகமாக இயலாமைக் கான உதவி. | 14,55,971·19 |
| (இ) நிலையாக வேலை செய்ய இயலாமைக்கான உதவி. | 6,94,173·62 |
| (உ) சார்ந்துள்ளவர்களுக்கு உதவி .. .. | 1,26,838·48 |
| பேறுகால உதவி .. .. .. .. | 6,59,453·27 |

தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதிக் கழகத்தின் தற்போதைய நிதி நிலையை பரிசீலனைசெய்ய ஒரு குழுவினை கழகம் 1969 மார்ச் திங்களில் அமைத்தது. கழகத்தின் அதிகரித்துவருகிற செலவினங்களை ஈடுசெய்யும்வகையில் கழகத்தின் வருவாய் கூடுதலாக்கப்பட வேண்டும் என்றும் பொதுவானதும் ஒரே சீரானதுமான மருத்துவ உதவித் திட்டத்தை வகுக்கும் நோக்கத்துடன் மருத்துவ உதவிக்கு கழகத்தின் பங்கு குறித்த மேல் வரம்பு வரையறுக்கப்பட வேண்டும் என்றும் இக்குழு கழகத்திற்கும் பரிந்துரைத்தது. மருத்துவ உதவி குறித்த பங்கிடத்தக்க அதிக அளவுப் பங்காக, மாநில அரசின் பங்கு உட்பட நபர் ஒருவருக்கு ரூ. 50 உச்ச வரம்பு வரையறுக்கப் படவேண்டுமென இக்குழு ஆலோசனை கூறியது.

தொழிலாளர் நல ஈட்டுறுதிக்கழகம் 17—9—1969-ல் புது டில்லியில் கூடிய கூட்டத்தில் இக்கருத்துக்களை கருதிப் பார்த்து, தொழிலாளர் ஒருவருக்கு ஆண்டு ஒன்றுக்கு அனுமதிக்கத்தக்க மருத்துவ உதவியின் உச்ச வரம்பு ரூ. 50 ஆக இருக்கவேண்டுமென்ற கருத்திற்கு



ஒப்பளிப்பு வழங்கியது. மருத்துவ உதவி குறித்த பங்கிடத்தக்க செலவின் அதிக அளவு வரையறையாக இவ்வரம்பு செயல்படும். உண்மையில் ஆகும் செலவு நபர் ஒருவருக்கு 50 ரூபாய்க்கு மேற் பட்டால், அதிகப்படியான செலவை சம்பந்தப்பட்ட மாநில அரசு தனியாக ஏற்கும். தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகம் வரை யறுத்துள்ள மேற்சொன்ன வரம்பு காரணமாக, மேற்படி மேல் வரம் புக்கு அதிகமாக உள்ள ரூ. 70 லட்சம் செலவை இம்மாநில அரசு முழுவதும் ஏற்க வேண்டியுள்ளது. கோயம்புத்தூரிலும், மதுரையிலும் தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழக மருத்துவ மனைகள் செயல் படத் தொடங்குகையில், ஒவ்வொரு ஆண்டும் மாநில நிதிகளிலிருந்து செய்யப்படவேண்டிய ரூபாய் 36 லட்சம் செலவு இதில் சேர்க்கப்படவில்லை. மருத்துவ உதவியின் தரத்தை கடும் அளவிற்குக் குறைக்காமல் இந்த உதவி குறித்த உச்சவரம்பு ஒன்றை மேற்கொள்வது கடினம் என்று தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இம்மாநிலத்தில் இத்திட்டத்தை விரிவு படுத்த எவ்வித வாய்ப்பும் அறவே இராது.

### குடும்ப நலத்திட்டம்.

சென்னை அயன்புரத்திலுள்ள தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனை மும்முரத்திட்டத்தின்கீழ் கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் செய்துகொள்வதற்கென ஏற்பளிக்கப்பட்ட மருத்துவ மனையாக ஒப்புதல் வழங்கப்பெற்றுள்ளது.

தமிழ் நாட்டில் தொழிலாளர் நல ஈட்டுறுதிப் பணித் திட்டம், ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் வராத பணித் திட்டமாகத் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது.

### தொழிலாளர்களுக்கான சலுகை வீட்டு வசதித் திட்டம்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பொதுத்துறை, தனியார்த் துறை, கூட்டுறவுத் துறை ஆகியவற்றில் இப்பணித் திட்டத்திற்காக ரூ. 150 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1968–69, 1969–70 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட சாதனை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1968–69-ஆம் ஆண்டில் இப்பணித் திட்டத்திற்காக ரூ. 10·73 லட்சம் செலவிடப்பட்டது. 168 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

நடப்பு ஆண்டில் (1969–70) பொதுத் துறையில் வீட்டு வசதித் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக வரவு செலவுத் திட்ட மதிப் பீட்டில் ரூ. 2·91 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1969 நவம்பர் திங்கள் வரையில் ரூ. 3·17 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. கோவை மாவட்டத்தில் பீளமேட்டில் 12 குடியிருப்புகளை கட்டுவதற்கு வகை செய்யும் பணித் திட்டம் ஒன்றுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இப்பணித் திட்டத்தை நிறைவேற்றும் பணியை மாநில வீட்டு வசதி வாரியம் மேற்கொள்ளும்.

### தனியார் தொழிலதிபர்கள் திட்டம்.

1969–70 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இப் பணித் திட் டத்திற்காக ரூ. 7·09 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மீனம்பாக்கத்தி லுள்ள தென் இந்திய உருக்கு-சர்க்கரை ஆலையிலிருந்தும், மேட்டூர் அணையிலுள்ள மேட்டூர் கெமிகல்ஸ் இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷனிட மிருந்தும், சிவகாசியிலுள்ள பயனீர் தீக்குச்சித் தொழிற்சாலையினின்றும், வரப்பெற்ற விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன.

## மலைத் தோட்டத் தொழிலாளருக்காக வீட்டு வசதித் திட்டம்.

1958-ம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளருக்கான வீட்டு வசதித் திட்ட விதிகளை ஒட்டி, மலைத் தோட்ட உரிமையாளர்கள் தங்கள் தொழிலாளர்களுக்கு வீடு கட்டித் தருவதற்காக, தொழிலதிபர்களுக்கு உதவியளிப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். மலைத் தோட்டத் தொழிலாளர்க்கான வீட்டு வசதித் திட்டத்திற்கு, அரசு உதவி பெறும் தொழிலாளர் வீட்டு வசதித் திட்ட அடிப்படையில் உதவியளிக்கப்படுகின்றது. திருத்தத் திட்டத்தின்கீழ் விதிகள் இறுதி வடிவம் கொடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூபாய் 10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. திருத்தத் திட்டத்தின்கீழ் விதிகள் 1969 நவம்பர் திங்களில்தான் அரசால் இறுதி வடிவம் அளிக்கப்பட்டதாலும், 1968-69 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கமாகிய ரூ. 0.50 லட்சமும் அரசிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டதாலும், 1968-69-ம் ஆண்டில் மலைத் தோட்ட உரிமையாளர்களுக்குக் கடன் எதும் வழங்க இயலவில்லை.

பதினெட்டு மலைத் தோட்டங்களுக்காக 531 வீடுகள் கட்டப்படுவதற்கான விண்ணப்பங்கள் ஏற்கனவே வந்துள்ளன. மேற்கொண்டும் பல விண்ணப்பங்கள் வந்து சேரலாம். 1969-70 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்காக ரூ. இரண்டு லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த விதிகளில் காணப்படும் சில குறைபாடுகளை சரி செய்த பிறகு, கடன்கள் ஒப்பளிக்கப்படுவதற்காக விண்ணப்பங்கள் வகைப்படுத்தி அனுப்பப்படும்.

## 29. மலைத்தோட்டத் தொழிலாளர் நலன்.

### (i) காப்பி வாரிய மானியங்கள்.

மதுரை மாவட்டம், பண்ணைக்காட்டிலுள்ள அரசு மருத்துவமனைக்கான கருவிகள், சாதனங்களை வாங்குவதற்காக காப்பி வாரியம் தனது வரவு-செலவுத் திட்டத்தினின்று ரூ. 5,000 அரசுக்கு மானியம் அளிக்க முன் வந்துள்ளது. அரசும் இந்த மானியத்தை ஏற்றுக்கொண்டது.

காப்பி வாரியம் வழக்கமான நிபந்தனைகளுக்குட்பட்டு தான் அளிக்கும் தொகையை பயன்படுத்துவதற்கான பணித் திட்டங்களை 1969-70 ஆம் ஆண்டில் அனுப்புமாறு காப்பி வாரியம் அரசை கேட்டுக்கொண்டுள்ளது. ஆனால், காப்பி வாரியம் அளிக்கும் தொகையை மாநில அரசு ஒதுக்குவது குறித்த கணக்குகளையும், அவற்றைப் பயன்படுத்துவது குறித்த கணக்குகளையும் காப்பி வாரியம் தணிக்கை செய்ய வேண்டுமென்ற நிபந்தனை விதிக்கப்பட்டதால், காப்பி வாரியத்தின் மானியத்தின் உதவி கொண்டு திட்டங்கள் வகுப்பது சாத்தியமல்ல என்று தமிழ் நாடு அரசு கருதியது. காப்பி வாரியம் மனமுவந்து அளிக்க முன்வந்துள்ள மானியத்தைப் பயன்படுத்த அரசுக்கு இயலுமாறு எண்ணும் மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளைத் தளர்த்துமாறு காப்பி வாரியம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

### (ii) தேயிலை வாரிய மானியங்கள்.

தேயிலை வாரிய மானியத்திலிருந்து தற்போது கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றன: (1) குன்னூரிலுள்ள தையல் வேலை பிரிவில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி. (2) கோயம்புத்தூரிலுள்ள அரசுத் தலைமையிட மருத்துவமனையில் தேயிலைத் தோட்டத்தைச் சேர்ந்த 9 பேருக்கு துணைச் செவிலியர்-மருத்துவச்சி வகுப்பில் பயிற்சி.

1969-70 ஆம் ஆண்டில் தேயிலை வாரியம் மானியம் எதுவும் அளிக்கவில்லை.



### (iii) ரப்பர் வாரிய மானியங்கள்.

கோட்டயத்திலுள்ள ரப்பர் வாரியம், நாகர்கோயில் காசநோய் நலம் பேணும் அரசு மருத்துவமனையில் நான்கு படுக்கைகள் கொண்ட வார்டு ஒன்று கட்டுவதற்காக, ரூ. 18,900 மானியம் அளிக்க முன்வந்தது. 1967-68 ஆம் ஆண்டுக்கான வாரியத்தின் திருத்த மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் இத்தொகை இதுவரை அளிக்கப்படவில்லை. அந்த மானியத்தை அளிக்கும்படி ரப்பர் வாரியம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## 30. தொழிலாளர் கல்வி.

தொழிலாளர் கல்வித் திட்டம் இந்திய அரசால் நாடு முழுவதும் கொண்டுவரப்பட்டுள்ளது. இது 1969-70 ஆம் ஆண்டில் தொடர்ந்து வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள வட்டார நிலையங்கள், தொழிலாளர்-ஆசிரியர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தி வந்துள்ளன. அதன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | சென்னை. | மதுரை. | கோயம்புத்தூர். |
|---|---|---|---|
| முடிவடைந்த தொழிலாளர்-ஆசிரியர் பயிற்சி வகுப்புகளின் எண்ணிக்கை. | 5 | 53 | 3 |
| பயிற்சி பெற்ற தொழிலாளர்-ஆசிரியர்களின் எண்ணிக்கை. | 117 | 121 | 69 |
| பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை. | 8,000 | 3,638 | 3,500 |

### சென்னை.

வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள 11 நகராட்சிகளிலிருந்து சேர்ந்த 23 நகராட்சித் தொழிலாளர்களுக்கு, தொழிலாளர்-ஆசிரியர் சிறப்புப் பயிற்சி வகுப்பு ஒன்று தமிழ் நாடு அரசின் முனைப்பான ஒத்துழைப்புடன் 20-8-1969 முதல் 19-11-1969 வரை வேலூரில் நடத்தப்பட்டது. இந்த நோக்கத்திற்காக வட்டாரத் துணை நிலையம் ஒன்று வேலூரில் ஏற்படுத்தப்பட்டது. மற்றொரு வட்டார துணை நிலையம் கடலூரில் 30-5-1969 முதல் 29-8-1969 வரை செயல்பட்டது. அதில் பல்வேறு அரசுத் துறை நிறுவனங்களைச் சேர்ந்த 15 தொழிலாளர்கள் பயிற்சி பெற்றனர்.

பல்வேறு மாநிலங்களிலிருந்தும் மத்திய அரசுத் துறை நிறுவனங்களிலிருந்தும் வந்த 28 பணிக் குழு உறுப்பினர்களின் நலனுக்காக 7-7-1969 முதல் 12-7-1969 வரை பணிகள் குழு பற்றிய குறுகிய காலப் பயிற்சி ஒன்று நடத்தப்பட்டது.

### மதுரை.

மதுரையில் 18-9-1969 அன்று நடந்த 11-வது கூட்டத்தில் உள்ளூர்க் குழு தீர்மானித்தபடி, நடப்பாண்டில் பெரும்பான்மையான பணியாளர்களுக்கு பயிற்சி அளித்த நிர்வாகத்தினருக்கு சுழல் கேடயங்களும், 1968 ஆம் ஆண்டில் பெரும்பான்மையான தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளித்த தொழிலாளர்-ஆசிரியர்களுக்கு கோப்பைகளும் வழங்கப்படுகின்றன.

### கோயம்புத்தூர்.

வால்பாறையில் நடத்தப்பட்ட தொழிலாளர்-ஆசிரியர்க்கான 14-வது பயிற்சி முறை மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கான தொழில்வாரிப் பயிற்சித் திட்டமாகும் என்பது இந்த ஆண்டின் சிறப்பு வாய்ந்த அம்சமாகும். பதினேழு மலைத் தோட்ட நிர்வாகங்களும், ஆனைமலை மலைத் தோட்ட உரிமையாளர் சங்கமும், இவ்வாறு சிறப்புப் பணியாசிரியர் பயிற்சி வகுப்புகளை அமைப்பதற்கும் நடத்துவதற்கும், நம்முடன் ஒத்துழைத்தனர். இந்தத் திட்டத்தில் 29 தொழிலாளர்-ஆசிரியர்கள் பயிற்சி பெற்றனர்.

31. **பயன்துய்ப்போர் கூட்டுறவுப் பண்டகசாலைகளும், நியாய விலைக் கடைகளும்.**—250 பணியாளர்களோ, அதற்கு மேற்பட்ட பணியாளர்களோ உள்ள தொழில் நிறுவனங்களும், மலைத் தோட்டங்களுக்கும் அங்கு பணிபுரியும் தொழிலாளர் நலனுக்காக பயன்துய்ப்போர் கூட்டுறவுப் பண்டகசாலைகளை, நியாய விலைக் கடைகளை அமைக்கும்படி கேட்கப்பட்டுள்ளன.

32. **தமிழ் நாடு தொழிலாளர் இதழ்.**—தமிழ் நாடு தொழிலாளர் இதழ், பணியாளர்கள், தொழிலாளர்கள் ஆகியோரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக திங்களுக்கு ஒரு முறை வெளியிடப்படுகின்றது. இதில் தொழில் தகராறுகள், வேலைநிறுத்தங்கள், தொழிற்சங்கங்கள், முக்கியமான ஒப்பந்தங்கள், சென்னை தொழிலாளர் நீதிமன்றம், தொழில் நடுவர் மன்றம், ஆகியவற்றின் தீர்ப்புச் சுருக்கங்கள், உயர்நீதி மன்றம், தலைமை நீதிமன்றம் ஆகியவற்றின் முடிவுகள், பணிபுரியும் வகுப்பிற்கான பயன் துய்ப்போர் பண்ட விலைக் குறிப்பீடுகள் ஆகியவை குறித்த பயன் தரும் தகவல்களும் புள்ளிவிவரங்களும், இதில் வெளியிடப்படுகின்றன. மேலும், தொழிலாளர் சிக்கல்கள், தொழில் நிர்வாகம் ஆகியவை குறித்த சுவையான கட்டுரைகளையும், இது வெளியிடுகிறது. இதைத் தவிர, உலக நாடுகள் தொழிலாளர் நிறுவனம், இந்தியத் தொழிலாளர் மாநாடு, தொழிலாளர் நிலைக் குழு, மாநிலத் தொழிலாளர் ஆலோசனைக் குழு முதலியவற்றின் தீர்மானங்களையும், பரிந்துரைகளையும், இது வெளியிடுகின்றது. அரசிதழின் புள்ளிவிவரப் பகுதிகளின் ஒன்று முதல் ஐந்து வரையுள்ள இனங்களும், 17 முதல் 21 வரையுள்ள இனங்களும் தவிர, அனைத்து இனங்களும் தற்பொழுது தமிழில் அச்சிடப்பட்டு வருகின்றன.

### பொது.

(i) **துய்ப்போர் பொருள் விலைவாசிக் குறியீடுகள்.**—வாழ்க்கைச் செலவுப் புள்ளி அட்டவணையை 1936-ம் வரிசையிலிருந்து 1960-ம் வரிசைக்கு மாற்றுவது குறித்து, இதற்கென நியமிக்கப்பட்ட சிறப்புக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் ஆராய வேண்டும் என்று மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியத்தின் சிறப்புக் குழு கருதியது.

1936-ம் ஆண்டு வரிசையை மீண்டும் சரிபார்த்த பின்னரே, 1960-ம் வரிசைகளுக்கு மாற்றப்பட வேண்டும் என்று அரசு தீர்மானித்தது. அட்டவணையைத் தயாரிக்கையில் தமிழ்நாட்டில் அரிசியின் ஈடு செய் விலையைக் கணக்கில் எடுத்துக்கொள்வதற்கு இந்திய அரசு இசைவளிக்க வேண்டும் என்று அதற்கு எழுதப்பட்டுள்ளது.

1936 தொடர்களை 1960 தொடர்களுடன் சேர்ப்பதற்கு முன்பு 13 2 புள்ளிகளை 1936 தொடர்களில் 1960 குறியீட்டுடன் கூட்டிக்கொள்ள வேண்டும் என்று வல்லுநர்க் குழுவின் பரிவுரையை ஏற்பதென அரசு மேற்கொள்ளும் முடிவு செய்தது.



(ii) **தொழிலாளர் பற்றிய தேசிய ஆணைக்குழு.**—தொழிலாளர் பற்றிய தேசிய ஆணைக் குழு தனது பரிந்துரைகளை இந்திய அரசுக்கு அனுப்பியது. ஆனால் அவற்றைக் குறித்து ஆலோசிப்பதற்கென புது டில்லியில் கூடிய இந்தியத் தொழிலாளர்கள் மாநாட்டில் அவற்றை ஏற்பது குறித்து எந்தவித ஒருமித்த கருத்தும் ஏற்படவில்லை.

(iii) **தொழிலாளர் நலக்குழு.**—தொழிலாளர் பற்றிய தேசிய ஆணைக் குழுவின் உறுப்பினர் என்ற முறையில் தொழிலாளர் துறை ஆணையாளர், புது டெல்லியில் 6—3—1969 முதல் 8—3—1969 வரையிலும், 2—4—1969 முதல் 6—4—1969 வரையிலும், 23—4—1969 முதல் 27—4—1969 வரையிலும், 7—5—1969 முதல் 9—5—1969 வரையிலும் நடந்த தொழிலாளர் நலக் குழுக் கூட்டங்களில் கலந்துகொண்டார். 30—5—1969 முதல் 1—6—1969 வரை உதகமண்டலத்திலும், 18—6—1969, 19—6—1969 நாட்களில் கல்கத்தாவிலும், 30—6—1969 அன்று புது டெல்லியிலும் கூடிய கூட்டத்தில் அவர் கலந்துகொண்டார்.

கொச்சியில் மலைத்தோட்டப் பயிர்கள் குறித்த வரைவு அறிக்கை பற்றி பரிசீலிப்பதற்காக 19—4—1969 அன்று நடந்த தொழிலாளர் நலக் குழுவைச் சேர்ந்த துணைக் குழுவின் கூட்டத்திலும் அவர் கலந்து கொண்டார்.

இந்தக் குழு 31—7—1969 அன்று தனது பணியை முடித்தது; இந்திய அரசுக்குத் தனது அறிக்கையைப் பணிந்தனுப்பியது.

(iv) **தொழிலாளர் நல ஆலோசனைக் குழுக்கள்.**—தொழிலாளர் குறித்த அனைத்து விவகாரங்களிலும் மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சருக்கு ஆலோசனை கூறும் நோக்கத்துடன் தொழிலாளர்கள், தொழில் அதிபர்கள் ஆகியோரின் பிரதிநிதிகள் அடங்கிய தொழிலாளர் நல ஆலோசனைக் குழுவை அரசு அமைத்தது. அது தொடர்ந்து இந்த ஆண்டில் செயல்பட்டது.

சென்னையில் 9—6—1969 அன்று தொழிலாளர்களின் பிரதிநிதிகள் அடங்கிய தொழிலாளர் ஆலோசனைக் குழுவின் நான்காவது கூட்டம் நடைபெற்றது; அன்றே, தொழில் அதிபர்களின் பிரதிநிதிகள் அடங்கிய தொழிலாளர் ஆலோசனைக் கூட்டமும் சென்னையில் நடந்தது. தொழிலாளர்களுக்காக உரையாடல் நடத்துவதற்கேற்ற முகவரைத் தெரிந்தெடுத்தல், தொழிலாளர் நீதி மன்றங்கள் செயல்படும் முறை, இயந்திரமயமாக்குதல் போன்ற பல்வேறு பொருள்கள் குறித்து விவாதிக்கப்பட்டன.

தொழிலாளர்கள் அடங்கிய தொழிலாளர் ஆலோசனைக் குழுவின் பதவிக் காலம் 29—6—1960 அன்றும், தொழில் அதிபர்களின் பிரதிநிதிகள் அடங்கிய தொழிலாளர் ஆலோசனைக் குழுவின் பதவிக்காலம் 27—10—1969 அன்றும் முடிந்தன. தொழிலாளர் பிரதிநிதிகளையும், தொழிலதிபர்களின் பிரதிநிதிகளையும் கொண்டுள்ள மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியமே தொழிலாளர்களுக்குத் தொடர்பானவற்றில் தொழிலாளர்களுடைய கருத்துக்களையும் தொழிலதிபர்களுடைய கருத்துக்களையும் பெறுவதற்கு வகை செய்திருப்பதால், மேற்படி குழுக்களை மாற்றியமைக்க வேண்டிய அவசியமில்லை என்று அரசு முடிவு செய்தது.

(v) **மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியம்.**—இந்த மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியத்திற்கு தொழிலாளர் நல அமைச்சர் தலைவராக இருக்கிறார். மாநில மட்டத்தில், இது மிகவும் முக்கியமான முத்தரப்பு ஆலோசனை வாரியமாகும். தொழிலாளர்களின் முக்கியமான சிக்கல்கள் அனைத்தும் ஆலோசனைக்காக மேற்படி வாரியத்திற்கு அனுப்பப் படுகிறது.

வாரியத்தின் 17-வது கூட்டம் சென்னையில் 1969 ஜூன் திங்கள், 10-ம் நாளில் ஒரு கூட்டத் தொடரிலும், 24-ஆம் நாளில் ஒரு கூட்டத் தொடரிலும் நடந்தது. மே தினத்தை விடுமுறை நாளாக அறிவிப்பது குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. ஊதிய வாரியங்களின்

பரிவுரைகளைச் செயல்படுத்துதல், குறைந்த அளவு ஊதிய ஆலோசனைக் குழு செயல்படுவது, தொழிலாளர் வீட்டு வசதி திட்டத்தைச் செயல் படுத்துவது ஆகியவை குறித்தும் விவாதிக்கப்பட்டன. 20—7—1969 முதல் 26—7—1969 வரை ஒரு வாரத்திற்கு தமிழ் நாட்டில் அனைத்து நாடுகள் தொழிலாளர் நிறுவனத்தின் 50-வது ஆண்டு விழாவைக் கொண்டாட முடிவு செய்யப்பட்டது.

வாழ்க்கைச் செலவுக் குறியீட்டு எண் குறித்து சிறப்புக் குழு அனுப்பிய அறிக்கை பற்றியும், சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் வி. சண்முகசுந்தரம் அவர்களின் தலைமையில் நியமிக்கப்பட்ட வல்லுநர்க் குழு அனுப்பிய முடிவுகள் குறித்தும் சென்னையில் 2—9—1969 அன்று நடைபெற்ற மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியத்தின் 18-வது கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

**அனைத்து நாடுகள் தொழிலாளர் நிறுவனம்:**—அனைத்து நாடுகள் தொழிலாளர் நிறுவனத்தின் 50-வது ஆண்டு விழா தமிழ் நாட்டில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. 20—7—1969 அன்று ராஜாஜி மண்டபத்தில் தமிழ் நாட்டு முதலமைச்சர் இவ்விழாவைத் தொடங்கி வைத்தார். அந்த அனைத்து நாடுகள் குழு 1919-ஆம் ஆண்டு முதல் தொழிலாளர் நலனுக்காகவும், சமூக நீதிக்காகவும் ஆற்றிய பணிக்கு உலகெங்கும் உள்ள ஆண்களும் பெண்களும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக் கிறார்கள் என்று அப்பொழுது அவர் எடுத்துரைத்தார். முன்னாள் தொழிலாளர் நல அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் இவ்விழாவிற்குத் தலைமை வகித்தார்.

அனைத்து நாடுகள் தொழிலாளர் நிறுவனம் குறித்தும், அதன் நட வடிக்கைகள் குறித்தும் தமிழில் சிறு வெளியீடு ஒன்றை, தற்போதைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் துறை அமைச்சர் திரு. என். வி. நடராசன், எம்.எல்.சி. அவர்கள் வெளியிட்டார். இம் மாநிலத்தில் ஒரு வாரத்திற்கு அந்த விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவின் ஒரு பாகமாக, உற்பத்தி கல்வியும் பாதுகாப்பும், தொழிலாளரின் சுகாதாரமும் நலனும் ஆகிய துறைகளில் அனைத்து நாடுகள் தொழிலாளர் நிறுவனம் ஆற்றிய பணிகளை எடுத்துக்காட்டும் வகையில் தொழிலாளர் நலத் துறையினரால் பொருட் காட்சி ஒன்று நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. இப்பொருட்காட்சியை 20—7—1969 அன்று முதல் அமைச்சர் திறந்து வைத்தார். பொருட் காட்சி நடைபெற்ற வாரங்களில் பின்வருபவர்கள் ஆற்றிய உரைகள் அனைத்திந்திய வானொலியின் சென்னை, திருச்சி நிலையங்களில் இருந்து ஒலிபரப்பப்பட்டன:—

1. திரு. மு. கருணாநிதி, தமிழ் நாட்டு முதலமைச்சர்.
2. திரு. ப. உ. சண்முகம், தொழிலாளர் நல அமைச்சர்.
3. திரு. செ. மாதவன், கல்வி-தொழில் அமைச்சர்.
4. திரு. எம். ஜி. ராமச்சந்திரன், எம்.எல்.ஏ.
5. திரு. வி. எஸ். சுப்பையா, ஐ.ஏ.எஸ்., அரசுச் செயலாளர், தொழிலாளர் நலத் துறை.
6. திரு. குப்புசாமி, ரயில் பயணச் சீட்டு கொடுப்பவர், கடலூர்.
7. திரு. கே. எம். சுந்தரம், செயலாளர், தமிழ் நாடு தொழிற்சங்க காங்கிரஸ், சென்னை.
8. திரு. எம். எம். ராஜேந்திரன், ஐ.ஏ.எஸ்., தொழிலாளர் துறை ஆணையாளர், சென்னை.

தமிழ் நாடு உற்பத்தி மன்றத்தின் ஆதரவின்கீழ் அனைத்து நாடுகள் தொழிலாளர் அமைப்பு, உற்பத்தி குறித்த கருத்தரங்கு ஒன்றை 25—7—1969 அன்று நடத்தியது.

ராஜாஜி மண்டபத்தில் 26—7—1969 அன்று அனைத்து நாடுகள் தொழிலாளர் அமைப்பு வாரத்தின் பிரிவு உபசார விழா 26—7—1969 அன்று, நடந்தது. திரு கந்தப்பன், எம்.பி., அவர்கள் பிரிவு உபசார வாழ்த்துரை ஆற்றினர்.



இவ் விழா நடைபெற்றதன் நினைவாக, தமிழ் நாடு தொழிலாளர் இதழின் சிறப்பு வெளியீடு ஒன்று வெளியிடப்பட்டது.

தமிழ் நாட்டில் அனைத்து நாடுகள் தொழிலாளர் அமைப்பின் பொன் விழா கொண்டாடப்பட்டது பற்றி ஒரு குறிப்பு தயாரிப்பதற்கு, மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியம்சிறப்புக் கூட்டம் ஒன்றை 16—12—9169 அன்று நடத்தியது.

தொழிலாளர் ஊட்டச் சத்து உணவுத் திட்டம். இந்த ஆண்டில், தொழிலாளர்களின் 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்கும், தொழி லாளர்களைச் சார்ந்திருக்கிற மகளிருக்கும், குறிப்பாக, பேறுகாலப் பெண் டிருக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் அதிகப் புரதச் சத்து உள்ள உணவை வழங்குவதற்கு தொழிலாளர் ஊட்டச் சத்து உணவுத் திட்டம் ஒன்றைத் தொழிலாளர் நலத்துறை தொடங்கியது. இந்தியாவின் வருங் காலக் குடிமக்களான குழந்தைகளின் சுகாதாரத்தைப் பாதுகாப்பதற் காக, தமிழ் நாடும் கேர் நிறுவனமும் சேர்ந்து இத்திட்டத்தைச் செயல் படுத்துகின்றன. இந்திய வில் செயல்படுத்தப்படவிருக்கிற இது போன்ற திட்டங்களில் இதுவே முதல் திட்டமாகும். ஏற்கெனவே பிறந்த குழந்தைகளின் நலனைக் காக்கும் வகையில் தொழிலாளர்களுக்குக் குடும்ப நலத் திட்டத்தின் அவசியத்தை எடுத்துக் கூற, இத்திட்டம் உதவுகிறது. இத் திட்டத்தை 24—9—1969 அன்று பக்கிங்காம் கர்னடிக் ஆலையில் முதல் அமைச்சர் தொடங்கி வைத்தார். இதைத் தொடர்ந்து கோயம் புத்தூரில் உள்ள 9 பஞ்சாலைகளில் இத்திட்டம் தொடங்கப்பட்டது. பொதுத் துறை நிறுவனம் ஒன்று உள்பட, முன்னணியில் உள்ள சில தொழில் நிறுவனங்களிலும் இத் திட்டத்தைத் தொழிலாளர் நல அமைச்சர் தொடங்கிவைத்தார். தொழிற்சாலைகள், மலைத் தோட்டப்பயிர் நிர்வாகத் தினர் பலர் இத் திட்டத்தை அவர்களது நிறுவனங்களிலும் தொடங்க இசைவு தெரிவித்துள்ளனர். தொழிற்சாலைத் தொழிலாளர்களின் குடும்பங்களின் நலனுக்காக இத் திட்டம் இந்தியாவிலேயே முதலில் தமிழ் நாட்டில்தான் தொடங்கப்பட்டது. இத் திட்டம் கொண்டு வரப்பட்டதி லிருந்து இதுவரை ஏற்பட்ட முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது:—

| | | |
|---|---|---|
| I. | "கேர்" திட்டத்தை பின்பற்றும் தொழிற்சாலை களின் எண்ணிக்கை. | 34 |
| | "கேர்" திட்டத்தைப் பின்பற்றும் மலைத் தோட்டங் களின் எண்ணிக்கை. | 5 |
| II. | தொழிற்சாலைகளில் பயனடைவோர்களின் எண்ணிக்கை. | 7,713 |
| | மலைத் தோட்டங்களில் பயனடைவோர்களின் எண்ணிக்கை. | 1,480 |

### எடைகள்—அளவைகள்

முன்பிருந்த எடைகள்—அளவைகள் துறை, தொழிலாளர் துறை யுடன் இணைக்கப்பட்டதன் விளைவாக, தொழில் நுட்ப வகையைச் சாராத தொழிலாளர் சட்டங்களைச் செயல்படுத்துவதற்குக் கூடுதலாக, 1958-ம் ஆண்டு எடைகள்—அளவைகள் (செயல்படுத்துதல்) சட்டம், அதன்கீழ்ச் செய்யப்பட்ட விதிகள் ஆகியவற்றைச் செயல்படுத்தும் பணி, 1967 ஜனவரி 4-ம் நாள் முதல் தொழிலாளர் துறை ஆய்வாளர் அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ் நாடு 1958-ம் ஆண்டு எடைகள்—அளவைகள் (செயல்படுத்துதல்) சட்டம், தர எடைகள்—அளவைகளைச் செயலுக்குக் கொண்டு வருவதற்கும் அதற்குத் தொடர்பானவற்றிற்கும் வகை செய்கிறது. அது மாநிலம் முழுவதற்கும் பொருந்தும்.

எடைகளையும் அளவைகளையும் மெட்ரிக் முறைக்கு மற்றும் பணி இம்மாநிலத்தில் படிப்படியாகச் செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. 1967 டிசம்பர் 1-ம் நாள் முதல் எல்லாத் தொழில்களுக்கும், வாணிகங் களுக்கும், எல்லா வகைப்பொருள்களில் நடைபெறும் வியாபாரங்களுக்கும் மெட்ரிக் அலகுகளையே கட்டாயமாகப் பயன்படுத்த வேண்டும் என்பது இம்மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்பட்டது.

[1970 மார்ச் 26

உணவுப் பொருள்கள், தானியங்கள், பருப்பு வகைகள், சிறு தானியங்கள் ஆகியவற்றை எடை மூலமே விற்க வேண்டும் என்பது மாநகரில் 1966 ஜூன் முதல் செயலுக்கு வந்தது. 1968 அக்டோபரில் இம் மாநிலத்திலுள்ள நகராட்சிகளிலும், நகரங்களிலும், பேரூராட்சிகளிலும் அம்முறை நீடிக்கப்பட்டது.

உரிமங்கள், எடைகளை—அளவைகளைத் தயாரிக்கும் 109 உற்பத்தியாளர்களுக்கும், 522 வணிகர்களுக்கும், 191 பழுது பார்ப்பவர்களுக்கும் எடைகள்—அளவைகள் சட்டத்தின்கீழ் 1969-ம் ஆண்டில் எடை—அளவைக் கட்டுப்பாட்டு அதிகாரியால் உரிமங்கள் வழங்கப்பட்டன. இதில், புதிய உரிமங்கள், பழைய உரிமைகளைப் புதுப்பித்தல் ஆகிய இருவகையும் அடங்கும். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கான இலக்கங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன:—

| | 1967. | 1968. |
|---|---|---|
| உற்பத்தியாளர்கள் .. .. | 126 | 123 |
| வணிகர்கள் .. .. | 646 | 598 |
| பழுது பார்ப்போர் .. .. | 220 | 201 |

அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள கால அளவில் துறையின் எடைகள்—அளவைகள் பிரிவு ரூ. 12,88,648·63 வருவாய் ஈட்டியது. ரூ. 19,34,766·00 தொகையை செலவு செய்தது. கடந்த ஆண்டிற்கான வரவும் செலவும் முறையே ரூ. 17,85,724·34, ரூ. 22,50,003·00 தொகையாக இருந்தது.

## விளம்பரம்

மெட்ரிக் முறையின் விளம்பர வாரம் 1969 டிசம்பர் 28 முதல் 1970 ஜனவரி 3-ம் நாள் வரை கொண்டாடப்பட்டது. இந்த விளம்பர வாரம் மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் அவர்களால் தொடக்கி வைக்கப்பட்டது. 28—12—1969 அன்று இது குறித்து அனைத்திந்திய வானொலியில் அவர் ஒரு உரையாற்றினார். 2—1—1970 அன்று "Metric System-Pyramid of accuracy" என்பது குறித்து, தமிழ் நாடு, எடைகள்—அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரி அனைத்திந்திய வானொலியில் ஆங்கிலத்தில் உரையாற்றினார். "மெட்ரிக் முறை" என்னும் தலைப்பில் அகில இந்திய வானொலியில் 3—1—1970 அன்று தொழிலாளர் நலத் துறை ஆணையாளர் விழாவின் முடிவுரை ஆற்றினார்.

1969 டிசம்பர் திங்கள் 28-ம் நாள் முதல் 3—1—1970 வரை மெட்ரிக் முறை விளம்பர வாரத்தில், மெட்ரிக் முறையின் பயன்களைப் பொது மக்களுக்கு எடுத்துரைக்கவும், பயன் துய்ப்போர்களுக்கு எடைகள்—அளவைகள் சட்டத்தின் பாதுகாப்புக் கூறுகளைத் தெளிவு படுத்தும் பொருட்டும், தொழிலாளர் இன்ஸ்பெக்டர்கள் அலுவலகங்களில் மாதிரிப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டன.

அறிக்கை ஆண்டில், 1958-ம் ஆண்டு எடைகள்—அளவைகள் (செயல்படுத்துதல்) சட்டத்தின் விதித் துறைகளையும் அதன்கீழ் வகுக்கப்பட்ட விதிகளையும் மீறியதற்காக 489 நேர்வுகளில் வழக்குத் தொடரப்பட்டது. இவற்றில் 305 நேர்வுகளில் தண்டனை விதிக்கப்பட்டது. மூன்று நேர்வுகளில் வழக்கில் குற்றமற்றவர் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. மற்ற வழக்குகள் நீதி மன்றத்தில் முடிவு பெறாமல் உள்ளன. விடுவிக்கப்பட்டுத் தீர்ப்பளிப்பதற்கு எதிராக உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்து கொள்ளப்பட்டதன் மேல் ஒரு வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மாநில எடைகள்—அளவைகள் கட்டுப்பாடு அதிகாரிகளின் 14-வது மாநாடு 2—9—1969 முதல் 6—9—1969 வரை ஔரங்காபாத்தில் நடைபெற்றது. சென்னை, எடைகள்—அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரியான திரு. சையத் ஜீலானி ஹுசைன் அவர்கள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.



1970 மார்ச் 26]

## தேசிய வேலை வாய்ப்புப்பணி

**வேலை வாய்ப்புக்கள்.**—தேசிய வேலை வாய்ப்புப் பணியின்கீழ்த் தமிழ் நாட்டில் 23 வேலை வாய்ப்பு அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில், திண்டுக்கல்லிலும், ஈரோட்டிலும் உள்ள இரண்டு துணை வேலை வாய்ப்பு அலுவலகங்களும், சென்னை-35, தொழில் நிர்வாகப் பணி வாய்ப்பு அலுவலகம் ஒன்றும், உடல் ஊனமுற்றோர்க்கான சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகம் ஒன்றும், அண்ணாமலை நகர், சென்னை, மதுரை பல்கலைக் கழகங்களில் மூன்று பல்கலைக் கழக வேலை வாய்ப்பு தகவல் ஆலோசனைக் கழகங்களும் தேசிய வேலை வாய்ப்புப் பணியின்கீழ்ச் செயல்பட்டு வருகின்றன. மதுரை பல்கலைக் கழகத்தில் உள்ள, பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல் ஆலோசனைக் குழுவும், ஈரோட்டிலும், திண்டுக்கல்லிலும் இரண்டு துணை வேலை வாய்ப்பு அலுவலகங்களும், தலைமை இடங்களில் பணியாளர் பயிற்சிப் பிரிவும் ஆய்வுப் பிரிவும் அறிக்கையாண்டில் செயல்படத் தொடங்கின.

இந்தக் கால அளவின்போது பதிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள், வேலையில் அமர்த்தப்பட்டவர்கள், வேலை வாய்ப்புப் பதிவு ஏட்டில் பதிவு செய்து வேலை வாய்ப்புக் கிடைக்காமல் உள்ளவர்கள், அரசாங்கத் துறையிலும், தனியார் துறையிலும் வேலை வாய்ப்பு அலுவலகத்தின் பணிகளைப் பயன்படுத்திக் கொண்ட தொழிலதிபர்கள் குறித்து ஆய்வாண்டிற்கான விவரமும் 1968–69-ல் நிகரான கால அளவின் விவரமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| தொடர் எண். | விவரம். | ஆய்வுக் காலத்தின் போது 1969 ஏப்ரல் முதல் 1969 நவம்பர் வரை. | 1968-69 வரவு-செலவு திட்ட ஆண்டின் போது 1968 ஏப்ரல் முதல் 1968 நவம்பர் வரையில் உள்ள கால அளவிற்கு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | பதிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் | 2,71,539 | 2,64,007 |
| 2 | வேலையில் அமர்த்தப்பட்டவர்கள். | 28,508 | 28,543 |
| 3 | அறிவிக்கப்பட்ட காலி இடங்களின் எண்ணிக்கை. | 42,074 | 40,711 |
| 4 | வேலை வாய்ப்பு ஏற்பாட்டு அலுவலகங்களின் பணியைப் பயன்படுத்திக் கொண்ட வேலையளிப்போர்களின் சராசரி எண்ணிக்கை— | | |
| | (அ) அரசாங்கம் (பொதுத் துறை). | 1,106 | 1,118 |
| | (ஆ) வேலையளிப்போர் (தனியார் துறை). | 354 | 241 |
| 5 | இந்தக் கால அளவின் முடிவில் இருந்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை.— | 3,23,710 (30-11-1969 அன்று உள்ளபடி) | 2,78,196 (30-11-1968 அன்று உள்ளபடி) |

**II. உடல் ஊனமுற்றவர்களுக்கான வேலைவாய்ப்பு அலுவலகம்.**— இந்த அலுவலகம் தமிழ் நாடு முழுவதும் உள்ள ஊனமுற்ற (குருடர், செவிடர், மூடவர்) விண்ணப்பதாரர்களைப் பதிவு செய்து கொண்டு, தகுந்த வேலை வாய்ப்பு உதவியை அளிக்கிறது. உடல் ஊனமுடைய விண்ணப்பதாரர்களைத் தகுந்த வேலைகளில் அமர்த்தும்பொருட்டு அவர்களுக்கான வேலை வாய்ப்பைப் பற்றி அறிவதற்குச் சிறப்பான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இதற்காகத் தனியார் துறையில், வேலையளிப்போரிடமும், அரசாங்கத்தில் வேலையளிப்போரிடமும் இந்த அலுவலகம் நெருங்கிய முறையில் தொடர்பு கொண்டு பணியாற்றி வருகின்றது. இது போன்ற சிறப்பான முயற்சிகளினாலும் வேலை வாய்ப்பு அளிப்பவர்களின் ஒத்துழைப்பினாலும் உடல் ஊனமுற்றோர்களை வேலையில் அமர்த்த முடிந்தது.

1969 அக்டோபர் திங்களில் உடல் ஊனமுற்றவர்களை வேலையில் அமர்த்தும் பணியை நிறைவு படுத்துவதற்கான ஒரு சிறப்பான செயல் ஊக்கத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இச் செயலூக்கத் திட்டத்தின் கீழ் இத் துறையின் அதிகாரிகள் அனைவரும், இம் மாநிலத்தில் உள்ள பொது-தனியார் துறைகளின் பெரும் தொழில் அதிபர்களுடன் தொடர்பு கொண்டு, உடல் ஊனமுற்ற விண்ணப்பதாரர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதில் ஒத்துழைக்குமாறு அவர்களை வேண்டப்பட்டது. இந்த இயக்கத்தின் நேரடி விளைவாக இம் மாநிலத்தில் 120 விண்ணப்பதாரர்களுக்கு வேலை கிட்டியது.

1969 ஏப்ரல் முதல் நவம்பர் வரை இந்த அலுவலகம் உடல் ஊனமுற்ற 373 விண்ணப்பதாரர்களைப் பதிவு செய்து கொண்டு, அவர்களில் 132 பேர்களை வேலையில் அமர்த்தியுள்ளது.

**III தொழில், நிர்வாகப் பணி வேலைவாய்ப்பு அலுவலகம்.**— இம் மாநிலத்தில தொழில், அறிவியல், பொறியியல், நிர்வாகம், மேற்பார்வை வகையில் உயர் தகுதி பெற்றுள்ளவர்களின் தேவையை இந்த அலுவலகம் நிறைவேற்றி வருகிறது. இதற்காக இந்த அலுவலகம் அரசுத் துறையிலும் தனியார் துறையிலும் வேலையளிப்போரிடம் நெருங்கியத் தொடர்பு கொண்டு செயலாற்றி வருகிறது. 1969 ஆம் ஆண்டில் ஏப்ரல் முதல் நவம்பர் வரை இந்த அலுவலகம், உயர் தகுதி பெற்ற 4,088 விண்ணப்பதாரர்களை பதிவு செய்து அவர்களில் 607 பேர்களுக்கு வேலை பெற்றுக் கொடுத்துள்ளது.

காலி இடங்களுக்கும், தொழிலாளர்களை அனுப்புவதற்கும் இந்த அலுவலகம் 'மாநில வேலை வாய்ப்பு ஒருங்கிணைப்பு அலுவலகமாக' செயல்படுகிறது.

**IV. சென்னை, அண்ணாமலை, மதுரை பல்கலைக் கழகங்களில் உள்ள பல்கலைக் கழக வேலைவாய்ப்புத் தகவல் ஆலோசனைக் கழகங்கள்.**— மதுரை பல்கலைக் கழகத்துடன் இணைந்துள்ள மதுரைப் பல்கலைக்கழக வேலை வாய்ப்புத் தகவல் ஆலோசனைக் கழகம் 1969 மே திங்களில் தொடங்கப்பட்டது. இதைச் சேர்த்து பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல் ஆலோசனைக் கழகங்கள் மூன்று இருக்கின்றன.

பல்கலைக் கழக மாணவர்களுக்கு வேலை வாய்ப்புத் தகவல், ஆலோசனை கூறுதல், வேலை வாய்ப்பினை நாடும் மாணவர்களின் பெயரைப் பதிவு செய்தல் ஆகிய பணிகளை இக் கழகம் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலுள்ள பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல் ஆலோசனைக் கழகம் 1969 ஏப்ரல் முதல நவம்பர் வரை 433 விண்ணப்பதாரர்களைப் பதிவு செய்து 108 பேருக்கு வேலை வாய்ப்பளித்துள்ளது. சென்னைப் பல்கலைக் கழகத்தின் வேலை வாய்ப்புத் தகவல்-ஆலோசனை கழகம் அதே காலத்தில் 325 விண்ணப்பதாரர்களைப் பதிவு செய்து 59 பேர்களுக்கு வேலை வாய்ப்பு



அளித்துள்ளது. அதே காலத்தில் மதுரைப் பல்கலைக் கழகத்தின் வேலை வாய்ப்புத் தகவல்—ஆலோசனைக் கழகம் 333 விண்ணப்பதாரர்களைப் பதிவு செய்து கொண்டு இருந்து பேர்களுக்கு வேலை தேடி தந்துள்ளது.

**V. தொழில் முறை வழிகாட்டுதல் வேலைவாய்ப்பு ஆலோசனை கூறல்.**— நீலகிரி, தருமபுரி, மாவட்டங்கள் தவிர, மற்ற எல்லா மாவட்டங்களிலும் தொழில் முறை வழிகாட்டுதல்; வேலை வாய்ப்பு ஆலோசனை கூறும் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. பிழைப்பிற்குரிய வழி அறிவிக்கும் நிலையங்களாகவும், இதற்குத் தேவையான பயன் உள்ள தகவல் சேகரிக்கும் நிலையங்களாகவும் வேலை வாய்ப்பு, வாழ்க்கை வசதி, பயிற்சி வசதிகள், தொழில் பழகல் போன்ற விண்ணப்பதாரர்களின் நலனுக்காக வசதி செய்யும் வகையில் பேர் சொன்ன பிரிவுகள் செயற்பட்டு வருகின்றன. மாவட்டங்களில் உள்ள தொழில் முறை வழி காட்டும் அலுவலகங்கள் விண்ணப்பதாரர்களுக்குத் தொகுதியாகவோ அல்லது தனிப்பட்ட முறையிலோ வழிகாட்டுதல், ஆலோசனைக் கூறல், ஆகிய பணிகளைச் செய்து வருகின்றன. இவை தங்கள் மாவட்டங்களில் உள்ள பள்ளிகள், கல்லூரிகள், பிறகல்வி நிலையங்கள் பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றில் உள்ள இறுதியாண்டு மாணவர்களுக்குப் பிழைப்பு பற்றியச் செய்திகளை அளித்து வருகின்றன. இந்தத் தொழில் முறை வழிகாட்டும் பிரிவு அந்த பகுதியில் உள்ள விண்ணப்பதாரர்களின் நலனுக்காக வேலை வாய்ப்பு பற்றிய தகவல்களைச் சேகரித்தும், மாவட்டங்களில் "வேலை வாய்ப்பு பயிற்சி பெறுவதற்கான வாய்ப்புகள்" என்னும் காலாண்டுக்கொரு முறை வெளியாகிற இதழை வெளியிட்டு வருகின்றது.

இக்கால அளவில் இத்திட்டத்தினால் பயன் அடைந்தவர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது :—

| அலுவலகத்தின் பெயர். | கூட்டமாய் பலருக்கு வழிகாட்டுதல் திட்டத்திற்கு சென்றவர்கள் எண்ணிக்கை. | தனிப்பட்டவர்களுக்கு வழிகாட்டும் தகவல் அறிவித்தல். | தனிப்பட்டவர்களுக்கு வழிகாட்டுதல். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 சென்னை-35 .. .. | 24,558 | 551 | 14 |
| 2 செங்கற்பட்டு .. .. | 13,578 | 629 | .. |
| 3 வேலூர் .. .. .. | 9,977 | 1,171 | 191 |
| 4 கடலூர் .. .. .. | 4,138 | 3,822 | .. |
| 5 நெய்வேலி .. .. | 1,899 | 182 | .. |
| 6 தஞ்சாவூர் .. .. .. | 7,825 | 310 | .. |
| 7 திருச்சிராப்பள்ளி .. .. | 5,365 | 372 | .. |
| 8 மதுரை .. .. .. | 7,964 | 143 | 156 |
| 9 இராமநாதபுரம் .. .. | 3,435 | 288 | 182 |
| 10 திருநெல்வேலி .. .. | 5,052 | 370 | .. |
| 11 நாகர்கோவில் .. .. | 3,889 | 1,869 | 161 |
| 12 சேலம் .. .. .. | 2,833 | 529 | 213 |
| 13 கோயம்புத்தூர் .. .. | 7,499 | 420 | .. |
| 14 தருமபுரி .. .. .. | 1,938 | 34 | .. |
| மொத்தம் .. | 99,955 | 10,690 | 917 |

வேலை வாய்ப்பு இயக்குநர் அலுவலகத்திலுள்ள மாநிலத் தொழில் முறை வழி காட்டும் பிரிவு, மாவட்டங்களில் தொழில் முறை வழி காட்டும் திட்டத்தின் அலுவல்களை ஒருங்கிணைத்து கண்காணித்து வருகிறது. இக்கால அளவில் எட்டுத் தொழில் முறை வழிகாட்டும் பிரிவுகள் ஆற்றியுள்ள பணியை மாநிலத் தொழில் முறை வழிகாட்டும் பிரிவின் துணை இயக்குநர் மதிப்பீடு செய்தார். தொழில் பயிற்சி நிலையங்களில் சேர்த்துக்கொள்வதற்கான விருப்பச் சோதனைகள் மாநிலத் தொழில் முறை வழிகாட்டும் பிரிவின் மேற்பார்வையின்கீழ் வேலைவாய்ப்பதிகாரிகளால் நடத்தப்பட்டன.

தமிழ் நாட்டின் தரைப் படம் ஒன்று திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், சென்னை ஆகிய இடங்களிலுள்ள தொழிற் பயிற்சி நிறுவனங்களைச் சேர்ந்த பயிற்சி ஆசிரியர்களின் பயனுக்காக மாநிலத் தொழில் வழிகாட்டிப் பிரிவு, வட சென்னையிலுள்ள தொழில் பயிற்சி நிலையம் ஆகியவற்றினால் கூட்டாகத் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டது. விருதுநகரிலுள்ள புகுமுகத் தொழிற் பயிற்சி நிலையத்தால், அமைக்கப்பட்ட வேலை வாய்ப்பு பற்றிய கண்காட்சியில் ராமநாதபுரம் மாவட்ட வேலை வாய்ப்பு அதிகாரி பங்கு கொண்டார். மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு பற்றிய பயனுள்ள தகவல்கள், பயிற்சி, வேலை வாய்ப்பு முதலிய தகவல்கள் அடங்கிய கூடங்கள் அவரால் அமைக்கப்பட்டன. இந்த மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பள்ளியிலும், வேலை வாய்ப்புக் குழுக்களை ஏற்படுத்தவும், வேலூரில் மாணவர் மாநாடு ஒன்றை நடத்தவும் முயற்சிகள் நடந்து வருகின்றன.

## VI. வேலை வாய்ப்பு நிலவரத் தகவல் திட்டம்

ஆய்வு ஆண்டில் வேலை வாய்ப்பு நிலவரத் தகவல் சேகரிப்பிற்காக மூன்று காலாண்டுகளில் (அதாவது 1969 மார்ச், ஜூன், 1969 செப்டெம்பரில் முடிவடையும் காலப் பகுதியில்), விசாரணைகள் நடத்தப்பட்டன. அவற்றிலிருந்து கிடைத்த விவரம் பின் வருமாறு :—

| முடிவடைந்த காலாண்டு. | கடிதம் அனுப்பப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை. | பதில் அனுப்பியவர்களின் எண்ணிக்கை. | சத விகிதம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1969— | | | |
| மார்ச் .. .. .. | 16,726 | 15,708 | 93·9 |
| ஜூன் .. .. .. | 17,096 | 15,802 | 92·4 |
| செப்டெம்பர் .. .. | 16,606 | 15,399 | 92·7 |

1967-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30-ம் தேதியன்றுடன் முடிவடையும் கால அளவில், தனியார் பிரிவு வேலை வாய்ப்புத் தகவல் சேகரிப்புப் பணி இந்த அறிக்கை ஆண்டில் முடிவடைந்தது. வேலை வாய்ப்புக் குறித்து சேகரித்த தகவல்கள் ஆய்வு செய்து முறைப்படுத்தி, இயந்திர முறையில் பட்டியல்படுத்துவதற்காக வேலை வாய்ப்பு—பயிற்சித் தலைமை இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது. 1965 செப்டெம்பரில் முடிவடையும் கால அளவில் தனியார் துறையில் தொழிலதிபர்களின் தொழில் வகை குறித்த அறிக்கையும் முடிவடைந்து விட்டது. கீழ்க்காணும் சிறப்பு ஆய்வுகள் நடந்து வருகின்றன:—

1. தமிழ் நாட்டிலுள்ள பஞ்சாலைகளின் தொழில் வேலைவாய்ப்பு நிலை.
2. தமிழ் நாட்டில் வேலை பற்றுக்குறை பற்றிய ஆய்வு.
3. தமிழ் நாட்டிலுள்ள உப்பு தயாரிக்கும் தொழிற்சாலையில் வேலை வாய்ப்பு பற்றி மதிப்பிடுவது குறித்த நடைமுறைகள்.
4. பள்ளி ஆசிரியர்களின் தேவை பற்றிய ஆய்வு—முன் ஆய்வு.
5. சென்னை மாநகரில் கட்டுமானப் பணியில் எத்தனை பேர் ஈடுபட்டிருப்பர் என்பது பற்றிய முன்னோடி ஆய்வு.



இக்கால அளவில் மாநில வேலை வாய்ப்பு நிலவரத் தகவல் பிரிவின் உதவி இயக்குநர் மாவட்டங்களிலுள்ள மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களோடு இணைக்கப்பட்ட 11 நேரியப் பிரிவுகளின் பணியை மதிப்பிட்டார்.

## VII. மாநிலத் தொழில் தகவல் அறிவிப்புப் பிரிவு, சென்னை–5

இந்த இயக்குநர் அலுவலகத்தின் தொழில் தகவல் பிரிவு ஆய்வு, பகுப்பாய்வுப் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தது.

ஆய்வு ஆண்டில் மருந்து தயாரிப்பவர் பணி குறித்த வேலை வாய்ப்புக் குறிப்பு நூல் பெண்களுக்கான வேலை குறித்த வழிகாட்டி நூல் ஆகியவற்றை மாநிலத் தொழில் தகவல் பிரிவு தயாரித்துள்ளது. மேலும், மற்றொரு சிறுநூல் அதாவது, "சுருக்கெழுத்தாளர்" வேலை வாய்ப்பு நூல் தயாரிக்கப்பட்டு வருகிறது. அது முடியும் தருவாயில் இருக்கிறது. உடல் ஊனமுற்றோருக்கு, தகுதியான பயிற்சி அளித்து, வேலை கொடுப்பதற்கான புதிய தொழில்களைக் கண்டு பிடிப்பதற்குரிய சிறப்பு ஆய்வு புதுடில்லியிலுள்ள, வேலை வாய்ப்பு—பயிற்சித் தலைமை இயக்குநர் அலுவலகத்தின் ஆதரவில் நடந்து வருகிறது.

புதிய தொழில்களைப் பற்றி அறிவதற்காகவும் பிற பணிகளுக்காகவும் இம்மாநிலத்திலுள்ள 66 நிறுவனங்களுடன்/நிலையங்களுடன் மாநிலத் தொழில் தகவல் அதிகாரி தொடர்பு கொண்டார்.

தமிழில், தொழில் வழிகாட்டி நூல் அச்சிடுவதைப் பொறுத்தவரையில் "பள்ளிப் படிப்பு முடித்தவர்களுக்கான வாழ்க்கை வழிகாட்டி" நூல் அச்சிடுவதற்கு இதுவரை ரூ. 4,856·30 செலவாகியுள்ளது. கீழ்க்காணும் வேலை வாய்ப்பு குறித்த வெளியீடுகள் அச்சிடப்படுகின்றன:—

(i) 23. தொழில் குறித்த வெளியீடுகள் மறுபடியும் தமிழில் அச்சிடுவது. இந்தப் பணிக்காக ரூ. 13,500 வழங்கப்பட்டுள்ளது. இது அச்சிடுவதற்காக அனுப்பப்பட்டுள்ளது.

(ii) கொதிகலன் "உதவியாளர்", "செவிலியர்" பணி குறித்த வேலை வாய்ப்புக் குறிப்பு நூல்களை அச்சிடுதல். இதற்காக ரூ. 2,000 வழங்கப்பட்டுள்ளது.

(iii) "நடுத்தரப் பள்ளிக் கல்வியில் தேறியவர்களுக்கான" வேலை வாய்ப்பு வழிகாட்டி நூல் அச்சிடுதல்.

நடுத்தரப் பள்ளிக் கல்வியில் தேறியவர்களுக்கான வேலை வாய்ப்பு வழிகாட்டி நூல் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

எழுதுபொருள்–அச்சுத்துறை இயக்குநரின் கட்டளைப்படி, இவற்றை அச்சிடுவதற்கான விலைப் புள்ளிகள் தனியார் அச்சகங்களிடமிருந்து தருவிக்கப்பட்டுள்ளன. அச்சுப் பணி ஏற்றுக்கொள்ளப்பட்டது. குறிப்பு எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு எவ்வளவு செலவு ஏற்படும் என்று தெரியவில்லை.

## VIII. சென்னை 5-ல் உள்ள வேலை வாய்ப்புத் தொடர்பு அதிகாரியின் நடவடிக்கைகள்.

பர்மா, இலங்கை அகதிகளுக்கு உதவும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ள வேலை வாய்ப்புத் தொடர்பு அலுவலகம் உதவி இயக்குநரின் (வேலை வாய்ப்புத் தொடர்பு அதிகாரி) பொறுப்பில் உள்ளது. பர்மா, இலங்கை முதலிய நாடுகளிலிருந்து வரும் அகதிகளுக்குத் தமிழ் நாட்டில் மறுவாழ்வு அளிப்பதே வேலை வாய்ப்புத் தொடர்புப் பிரிவின் பணியும் கடமையும் ஆகும்.

ஆய்வாண்டில் 1,281 பர்மா அகதிகளும், 350 இலங்கை அகதிகளும் தமிழ் நாட்டிலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் வேலை வாய்ப்பு உதவி நாடிப் பதிவு செய்திருந்தனர். 192 பர்மா அகதிகளும், 63 இலங்கை அகதிகளும் வேலையில் அமர்த்தப்பட்டனர். 1969-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ம் நாளன்று தமிழ் நாட்டிலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களின் பதிவேடுகளில் உள்ள விவரங்களின்படி 1,327 பர்மா அகதிகளும், 301 இலங்கை அகதிகளும் வேலை வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

**(a) தமிழ்நாட்டிலுள்ள தொழில் பயிற்சி நிலையங்களில் பயிற்சி**

மாநிலத்திலுள்ள பயிற்சி நிலையங்களில் சேர்த்துக்கொள்வதற்காக, அகதிகளிடமிருந்து வந்த 64 மனுக்கள், தமிழ் நாட்டின் பல்வேறு இடங்களிலுள்ள தொழில் பயிற்சி நிலையங்களுக்கு அனுப்பப்பட்டன.

**(b) மானா முகாமிலுள்ள (மத்தியப் பிரதேசம்) தொழில் பயிற்சி நிலையத்தினால் அளிக்கப்பட்ட பயிற்சி வசதிகள்.**

மானா ரெய்ப்பூரில் அமைந்துள்ள தொழில் நுட்பப் பயிற்சி நிலையம், பர்மா, இலங்கையிலிருந்து வந்துள்ள அகதிகளுக்கு பொறியியல், பொறியியல் சாராத தொழில்களில் பயிற்சி அளிக்கின்றது. பயிற்சிக் காலம் 1 முதல் 2 ஆண்டுகள் வரை இருக்கும். இந்தப் பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்ட அகதிகள் திங்களொன்றுக்கு ரூ. 55 உதவித் தொகை பெறத் தகுதியுடையவராவர். அறிக்கையாண்டில், 1969 ஏப்ரல் திங்களிலிருந்து தொடங்கிய பயிற்சிப் பிரிவில் கனரக வண்டிகள் இயந்திரக் கம்மியர் வலவர்கள் பயிற்சி பெறுவதற்காக 62 அகதிகள் மானா முகாமிற்கு அனுப்பப்பட்டனர். 1969 ஏப்ரல் திங்களிலிருந்து தொடங்கிய—பயிற்சிப் பிரிவில், உலோகத் தகடு பணியாளர், பற்றவைப்போர், பொருத்துபவர், அச்சு வார்ப்படம் செய்பவர், குளிர்வெளிப்பொறி கம்மியர் போன்ற பல்வேறு தொழில்களில் பயிற்சி பெறுவதற்காக மேற்கொண்டும் 107 பர்மா, இலங்கை அகதிகள் மானா முகாமிற்கு அனுப்பப்பட்டனர்.

**(c) அஸ்தினாபுரத்திலுள்ள (மத்திய பிரதேசம்) மதன் இன்டஸ்ட்ரீஸ் நூற்பு ஆலையில் வேலை வாய்ப்பு.**

பர்மா இலங்கையிலிருந்து வந்த அகதிகளுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும், மேற்சொன்ன தொழிற்சாலை பல்வேறு வேலை வாய்ப்புகளை அளிக்கின்றது. 1969 அக்டோபர் திங்களில் அஸ்தினாபுரத்திலுள்ள மதன் இண்டஸ்ட்ரீஸ் நூற்பு ஆலையில் 86 அகதிகளுக்கு வேலை அளிக்கப்பட்டது.

**(d) புதுடில்லியிலுள்ள மத்திய நீர்-மின்சக்தி ஆணைக் குழுவால் நடத்தப்படுகிற, தொழில் நுட்பப் பயிற்சி நிலையத்தில் கனரக மண்வாரி இயந்திரப் பயிற்சி.**

மேற்சொன்ன நிலையங்களில், கனரக மண்வாரி இயந்திரங்களை இயக்க அகதிகளுக்கு ஒரு வருட காலத்திற்குத் தனிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி பெற முன் வரும் 13 அகதிகளுக்கு, நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்தில் 2 திங்கள் கால அளவுக்குப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. தொடக்கப் பயிற்சி முடிந்தவுடன், 28-12-1969 அன்று, அவர்கள் (பஞ்சாப்) மங்கல், தொழில் நுட்பப் பயிற்சி நிலையத்திற்கு மேற்கொண்டு பயிற்சி பெற அனுப்பப்பட்டனர்.

**(e) அம்பத்தூர், வேவின் இந்தியா நிறுவனம், பி.வி.சி. குழாய்த் தொடர் முறைப் பயிற்சி.**

சென்னை-58. அம்பத்தூர், திருவாளர்கள் வேவின் இந்தியா நிறுவனம், இலங்கை, பர்மா நாடுகளிலிருந்து வரும் அகதிகளுக்கு பிவிசி குழாய்த் தொடர் முறைப் பயிற்சி அளிக்க சம்மதித்துள்ளது. பயிற்சிக் காலம் 2 ஆண்டுகளாகும். திங்களொன்றுக்கு ரூ. 55 வீதம் பயிற்சி



யாளர்களுக்கு பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படும். பயிற்சி பெறும் ஒவ்வொருவருக்கும் திங்களொன்றுக்கு ரூ. 10 வீதம் ஈட்டுத் தொகை நிறுவனத்திற்குக் கொடுக்க அரசு ஒப்புக் கொண்டது முதல் தொகுதியாக 6 அகதிகளுக்கு பயிற்சி அளிக்கும் திட்டம் 17—11—1969 அன்று தொடங்கப்பட்டது.

1969-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் மூன்று நடையாக, 2,883 அகதிகள் பர்மாவிலிருந்து இந்தியாவிற்கு வந்துள்ளார்கள். அவர்களில் வேலை வாய்ப்பு நாடி 59 அகதிகள் கணக்கு எடுப்பவர்களால் பதிவு செய்துகொள்ளப்பட்டனர்.

## IX. உழைப்புச் சக்தியும் வேலை வாய்ப்புத் திட்டங்களும்

சாதனைகள்—நடப்பு ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப் பட்டன.—

(அ) மாநிலத் தலைமையிடத்தில் பணியாளர் பயிற்சிப் பிரிவு ஒன்று நிறுவுதல்.

(இ) மாநிலத் தலைமையிடத்தில் ஆய்வுப் பிரிவு ஒன்றை நிறுவுதல்.

(உ) மதுரை, பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல் அறிவிப்பு—வழிகாட்டும் கழகம் ஒன்றை நிறுவுதல்.

(எ) இரண்டு துணை வேலை வாய்ப்பு நிலையங்கள், ஒன்று ஈரோட்டிலும் ஒன்று திண்டுக்கல்லிலும் நிறுவுதல்.

(ஒ) மாநிலத் தலைமையிடத்தில், மாநிலத் தொழில் முறை வழி காட்டும் பிரிவில் பணியாளரைக் கூடுதலாக்குதல் (ஒரு உதவியாளரையும், ஒரு தொழில் நுட்ப உதவியாளரையும் சேர்த்தல்).

(ஔ) தொழில்களில் அமர்வது குறித்து (Career) "வாழ்க்கை வழிகாட்டி" என்னும் சிறு நூல்களைத் தமிழில் அச்சிடுதல்.

இத்திட்டத்தின்கீழ், குறிப்பிடத்தக்க திட்டச் சாதனை எதுவும் முடிவு செய்யவில்லை. ஆனால், இதற்கான செலவுக்கு மட்டும் ரூ. 25,000 ஒதுக்கப் பட்டுள்ளது. இதில் "பள்ளிப் படிப்பு முடித்தவர்களுக்கான வாழ்க்கை வழிகாட்டி" என்ற நூல்களை அச்சிடுவதற்காக இதுவரை ரூ. 4,856.30 செலவிடப்பட்டுள்ளது.

### இணைப்பு II—அ.

1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம் 33 (2) பிரிவின் படிச் செய்த வசூல்கள்.

| | | | ரூ. | காசு |
|---|---|---|---|---|
| கோயம்புத்தூர் முருகன் நிறுவனம், கோயம்புத்தூர். | திரு. ரங்கரத்தினம் பிள்ளை .. | தொழிலாளர் துறை, அரசு ஆணை எண் 186, நாள் 13-5-69. | 10,598 | 51 |
| ஷை | ஷை .. | அரசு குறிப்பெண் 53169, D-1/69-1 தொழிலாளர் துறை, நாள் 14—5—1969. | | |
| காளீஸ்வரர் ஆலை நிறுவனம், கோயம்புத்தூர். | திரு. எம். ஜே. திவாகர் .. | அரசு ஆணை எண் 461, தொழிலாளர் துறை, நாள் 24—6—1969. | 2,002 | 55 |
| | திரு. எஸ். ஜெகந்நாதன் .. | ஷை | 1,341 | 14 |
| கோயம்புத்தூர் முருகன் நிறுவனம், கோயம்புத்தூர். | திரு. ஆர். ரங்கநாதன், C/o ராமநாதன் வழக்குரைஞர், கோயம்புத்தூர். .. | அரசு ஆணை (ஆர். டி.) எண் 837, தொழிலாளர் துறை. | 2,188 | 08 |
| சோமசுந்தரம் ஆலை நிறுவனம், கோயம்புத்தூர். | திரு. ஆர். ராமசாமி, C/o கோயம்புத்தூர் மாவட்ட ஆலைத் தொழிலாளர்கள் சங்கம், கோயம்புத்தூர். .. | அரசு ஆணை (ஆர். டி.) எண் 1608, நாள் 17-12-1968. | 1,340 | 00 |
| காவேரி நூற்பு நெசவு ஆலை நிறுவனம், காவேரி நகர், திருச்சி. | திரு. எ. சி. சீனிவாசன் .. | அரசு ஆணை எண் 1622, தொழிலாளர் துறை, 18-12-69. | 45 | 00 |
| | | அரசு எண் 114065, நாள் 10—12—1965. | 15 | 00 |



### இணைப்பு II-ஆ

1969-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ந் தேதி வரை மூடப்பட்ட பஞ்சாலைகள் பற்றிய விவரங்கள்.

| தொடர் எண். | ஆலையின் பெயர். | மூடப்பட்ட நாள். | பாதிக்கப்பட்ட தொழிலாளர் எண்ணிக்கை (தோராயமாக). | தொழிலாளர் (பேமெண்ட் [illegible]) பாக்கி பகுதிக்கு (சட்டத்தின்படி) இருக்கிறதா? | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | வாசுதேவ தொழிற்சாலை, கோயம்புத்தூர் .. | 7—9—1965 | 200 | இல்லை. | .. |
| 2 | சீதை ஆலை நிறுவனம், வாலாஜாபாத், செங்கல்பட்டு மாவட்டம். | 14-2-1966 | 400 | இல்லை. | .. |
| 3 | திருமூர்த்தி ஆலை நிறுவனம், உடுமலைப்பேட்டை (நெசவுப் பிரிவு) | 20-6—1966 | 40 | இல்லை. | .. |
| 4 | கம்போடியா ஆலை நிறுவனம், கோயம்புத்தூர் . | 26-9—1966 | 1,800 | ஆம். | தமிழ் நாடு பஞ்சாலைக் கழகத்தினால் 14-12-69 அன்று எடுத்துக் கொள்ளப்பட்டது. |
| 5 | கோயம்புத்தூர் நூற்பு-நெசவு ஆலை (நெசவுப் பிரிவு). கோயம்புத்தூர். | 28-9—1966 | 240 | ஆம். | .. |
| 6 | ஸ்ரீ ரங்கவிலாஸ் பருத்தி விதை எடுத்தல், நூற்பு-நெசவு ஆலை நிறுவனம், கோயம்புத்தூர். | 14-3-1967 | 1,300 | ஆம். | 16-1-1970-லிருந்து அரசினால் எடுத்துக் கொள்ளப்பட்டது. |
| 7 | "பயோனீர் ஸ்பின்னிங்ஸ்", கமுதக்குடி, ராமநாதபுரம் மாவட்டம். | 5-10-1967 | 100 | இல்லை. | .. |
| 8 | ஸ்ரீ பழமலை ரங்கநாதர் ஆலை நிறுவனம், கோயம்புத்தூர் | 16-10-1967 | 500 | ஆம். | .. |

## இணைப்பு II-ஆ

1969-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ந் தேதி வரை மூடப்பட்ட பஞ்சாலை பற்றிய விவரங்கள்—தொடர்ச்சி.

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 9 | கிருஷ்ணவேணி பஞ்சாலை நிறுவனம், கோயம்புத்தூர் | 2-11—1967 | 350 | ஆம். | தமிழ் நாடு பஞ்சாலைக் கழகத்தினால் 17-12-69 அன்று எடுத்துக் கொள்ளப்பட்டது. |
| 10 | ஸ்ரீ கோதண்டராம் நூற்பு நிறுவனம், மதுரை .. | 22-12-1967 | 200 | ஆம். | .. |
| 11 | ராதிகா ஆலை நிறுவனம், உப்பிலிபாளையம், கோயம்புத்தூர் மாவட்டம். | 14-2—1968 | 280 | ஆம். | .. |
| 12 | தமிழ் நாடு நூற்பு ஆலை, திருப்பூர் .. .. | 10-2—1968 (தற்காலிகமாக தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கி ஆலையை 2-7-68-லிருந்து மூடப்பட்டது.) | 82 | ஆம். | .. |
| 13 | கோயம்புத்தூர் முருகன் ஆலை நிறுவனம், கோயம்புத்தூர் | 1—5—1968 | 967 | ஆம். | .. |
| 14 | பழனி ஸ்ரீ முருகன் துணி ஆலை நிறுவனம், பழனி மதுரை மாவட்டம். | 8—4—1968 | 106 | ஆம். | .. |
| 15 | கீதாஞ்சலி ஆலை நிறுவனம், சங்கரன் கோவில் | 5—5—1968 | 284 | ஆம். | .. |
| 16 | ஸ்ரீ பத்மா ஆலை நிறுவனம், காளப்பட்டி, கோயம்புத்தூர் | 20-5—1968 | 100 | ஆம். | .. |
| 17 | பங்கஜா ஆலை நிறுவனம், கோயம்புத்தூர் .. .. | 12-4—1968 | 981 | ஆம். | .. |
| 18 | ராஜா ஆலை, மதுரை .. .. .. .. .. | 12-9—1969 | 390 | ஆம். | மூடிய பிறகு 1968-ஆம் ஆண்டு மீண்டும் திறக்கப்பட்டது. ஆனால் மறுபடியும் 12-9-1969-லிருந்து மூடப்பட்டது. |



## இணைப்பு II-இ

மீண்டும் திறக்கப்பட்ட ஆலைகளின் பட்டியல்.

| தொடர் எண். (1) | ஆலையின் பெயர். (2) | மூடப்பட்ட நாள். (3) | தொழிலாளர்களின் எண்ணிக்கை. (தோராயமாக). (4) | மறுபடி வேலை தொடங்கிய நாள். (5) |
|---|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் நூற்பு நெசவு கம்பெனி நிறுவனம், கோயம்புத்தூர் (நூற்புப்பிரிவு). | 18-6—1968 | 2,000 | 12-12-1968 |
| 2 | பலராமவர்மா பஞ்சாலை நிறுவனம், செங்கோட்டை .. .. | 9—3—1968 | 610 | 14-6—1969 |
| 3 | திருப்பூர் பஞ்சு நூற்பு, நெசவு ஆலை நிறுவனம், திருப்பூர் | 3—5—1969 | 350 | 7—2—1969 |
| 4 | ஜோதி ஆலை, கோயம்புத்தூர் .. .. .. | 1—8—1968 | 600 | 5—2—1969 |
| 5 | லக்ஷ்மி நாராயண பஞ்சாலை நிறுவனம், பல்லடம், கோயம்புத்தூர் | 1—2—1969 | 218 | 23-4—1969 |
| 6 | தென்னிந்திய பஞ்சாலை நிறுவனம், சூலூர், கோயம்புத்தூர் | 15-7—1968 | 246 | 20-10—1969 |
| 7 | காவேரி நூற்பு, நெசவு ஆலை நிறுவனம், காவேரி நகர், திருச்சி மாவட்டம். | 2—8—1968 | 1,000 | 6-10—1969 |
| 8 | வி. ஆர். பஞ்சாலை நிறுவனம், புஞ்சை புளியம்பட்டி .. | 26-9—1968 | 185 | 10-9—1969 |
| 9 | கஸ்தூரி ஆலை நிறுவனம், கோயம்புத்தூர் .. .. .. | 23-4—1968 | 383 | 21-10—1969 |
| 10 | காளீஸ்வரா ஆலை நிறுவனம், கோயம்புத்தூர் .. .. | 10-12-1966 | 2,000 | 11-11-1969 |
| 11 | சோமசுந்தரம் ஆலை நிறுவனம், கோயம்புத்தூர் .. .. | 23-5—1969 | 1,390 | 28-11-1969 |
| 12 | திருமூர்த்தி ஆலை நிறுவனம் (நெசவு), உடுமலைப்பேட்டை .. | 20-9—1968 | 710 | 26-11-1969 |
| 13 | ஓம் பராசக்தி ஆலை நிறுவனம், கோயம்புத்தூர் .. .. | 2—5—1968 | 350 | 14-11-1969 தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தினால் 15-9-1969 அன்று எடுத்துக் கொள்ளப்பட்டது. |

## இணைப்பு II-ஈ

### முக்கியமான புள்ளி விவரக் குறிப்புகள்.

| ஆண்டு. | நிறுவனங்களின் எண்ணிக்கை. | வேலை பெற்றோர்களின் எண்ணிக்கை. | வசூலிக்கப்பட்ட உரிமக் (Licence) கட்டணம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| **1. தொழிற்சாலைகள் சட்டம்—** | | | |
| 1968 | 7,394 | 3,88,931 | 17,09,792 |
| 1969 .. .. .. .. .. | 6,218 | 3,92,558 | 16,83,261 (1969 டிசம்பர் வரை). |
| **2. தமிழ் நாடு கடைகள், நிறுவனங்கள் சட்டம்— (ஆண்டுத் தொடக்கத்தில்.)** | | | |
| 1968 .. .. .. .. .. | 1,88,843 | 2,09,424 | தொகை வசூலிக்க இடமில்லை. |
| 1969 .. .. .. .. | 2,16,538 | 1,84,710 | ஷை |
| 1970 .. .. .. .. .. | 2,09,260 | 1,97,695 | ஷை |
| **3. பீடி, சுருட்டு தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டம் 1966—** | | | |
| 1968–69 .. .. .. .. .. | 1,546 | 21,165 | 34,205·50 |
| 1969–70 .. .. .. .. .. | 1,139 | 5,542 | 14,591·00 |
| **4. தமிழ்நாடு ஓட்டல் நிறுவனங்கள் சட்டம்— (ஆண்டுத் தொடக்கத்தில்.)** | | | |
| 1969 .. .. .. .. .. | 20,305 | 65,620 | 96,143·00 |
| 1970 .. .. .. .. .. | 19.720 | 68,608 | 1,22.592·50 |
| **5. மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம்—** | | | |
| 1968 .. .. .. .. .. | 304 | 85,001 | தொகை வசூலிக்க இடமில்லை. |
| 1969 .. .. .. .. .. | 309 | 85,267 | ஷை |

**6. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டம்—**

| ஆண்டு. | இச்சட்டத்தின் கீழ் வரும் நிறுவனங்களின் எண்ணிக்கை. | இத்திட்டத்தில் அடங்கிய தொழிலாளர்களின் எண்ணிக்கை. | வசூலித்த தொகை. | நிர்வாகச் செலவு. | ஆய்வுச் செலவு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (ரூ. லட்சத்தில்.) | (ரூ. லட்சத்தில்.) | (ரூ. லட்சத்தில்.) |
| 1967 .. .. | 4,979 | 5,36,790 | 7,93·74 | 18·89 | 2·48 |
| 1968 .. .. | 5,157 | 4,89,663 | 8,51·42 | 18·70 | 2·51 |
| 1969 .. .. | 5,676 | 5,07,754 | 9,44·75 | 22·40 | 2·73 |

7. தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதிச் சட்டம்—

| ஆண்டு. | இச்சட்டம் செயல்படும் இடங்கள். | சட்டத்தினால் பலனடைந்து வரும் தொழிலாளர்கள். | நீண்டகாலம் நீங்காத பிணிகளுக்கு மருந்து வசதி அளிப்பது உட்பட நோயாளிகளுக்கு மருத்துவ நலம். | வேலையின்போது காயமடைந்ததற்கான உதவி. தற்காலிக செயல்திறன் அற்றுப் போனதற்கான உதவி. (ரூ. லட்சத்தில்.) | வேலையின்போது காயமடைந்ததற்கான உதவி. நிலையாக செயல்திறன் அற்றுப் போனதற்கான உதவி. (ரூ. லட்சத்தில்.) | தொழிலாளரைச் சார்ந்திருப்போருக்கு உதவி. (ரூ. லட்சத்தில்.) | மகப்பேறு உதவி. (ரூ. லட்சத்தில்.) | மருத்துவ உதவி அளிப்பதற்கான செலவு. (ரூ. லட்சத்தில்.) |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1968 | 43 | 1,01,824 ஈட்டுறுதி செய்து கொண்டோர். 2,49,027 (குடும்பப் பிரிவுகள்). | 128·74 | 10·98 | 14·18 | 0·83 | 6·47 | 181·00 |
| 1969 | 44 | 10,347 ஈட்டுறுதி செய்து கொண்டோர். 3,46,881 (குடும்பப் பிரிவுகள்). | 132·70 | 14·56 | 6·94 | 1·27 | 5·59 | 203·21 |



8. மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம்.—

| முடிவடையும் ஆண்டு. | நிறுவனங்களின் எண்ணிக்கை. | வசூலிக்கப்பட்ட பதிவுக் கட்டணம்/வசூலிக்கப்பட்ட புதுப்பித்தல் கட்டணம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1968 .. .. .. | 1,079 | 35,419·00 |
| 1969 .. .. .. | 1,061 | 33,552·50 |

9. ஊதியம் கொடுப்பது பற்றிய சட்டம்.—

| ஆண்டுகள். | இச்சட்டத்தின்கீழ் வரும் நிறுவனங்களின் எண்ணிக்கை. (தொழிற்சாலைகள் உட்பட.) | இச்சட்டத்தினால் பலன் பெறும் தொழிலாளர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1967 .. .. .. | 35,563 | 6,84,683 |
| 1968 .. .. .. | 31,111 | 7,75,818 |
| 1969 .. .. .. | 18,555 | 5,08,636 |

10. குறைந்தளவு ஊதியச் சட்டம்.—

| | | |
|---|---|---|
| 1967 .. .. .. | 6,311 (தொழிற்சாலைகள் நீங்கலாக.) | 1,43,695 (தொழிற்சாலைகள் நீங்கலாக.) |
| 1968 .. .. .. | 50,842 (தொழிற்சாலைகள் உட்பட.) | 2,21,609 |
| 1969 | 9,704 (தொழிற்சாலைகள் உட்பட.) | 1,69,494 |

11. தொழிற் சங்கங்கள் சட்டம்.—

| 1968 ஜனவரி 1-ம் தேதியுள்ள நிலவரப்படி அமைந்த தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை. | 1969 ஜனவரி 1-ம் தேதிய நிலவரப்படி அமைந்த தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை. | 1970 ஜனவரி 1-ம் தேதிய நிலவரப்படி அமைந்த தொழிற் சங்கங்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1,530 | 1,666 | 1,758 |

12. வேலை நிறுத்தங்கள்—

| ஆண்டு. | நடைபெற்ற வேலை நிறுத்தங்களும் கதவடைப்புகளும். | இழந்த மனித உழைப்பு நாட்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1967 .. .. .. | 305 | 11,20,517 |
| 1968 .. .. .. | 231 | 18,81,559 |
| 1969 .. .. .. | 174 | 6,83,059 |

# தமிழ்நாடு சட்டப் பேரவை

---

**சனிக்கிழமை, 1970 மார்ச் 28.**

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*Additional buildings for Law College.*

* 569 Q.—THIRU K. SAHADEVA KANDER: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether the Public Works Department has undertaken the construction of additional class rooms for the Madras Law College; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்**: (அ) & (இ): சென்னையிலுள்ள சட்டக்கல்லூரிக்கு ரூ. 3·64 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் கூடுதலாகக் கட்டடம் கட்டுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. கட்டடப் பணி மேற்கொள்ளப்பட்டது. 1971 ஜூன் திங்களுக்குள் முடிக்கப்படும்.

**திரு. கே. சகாதேவக் கண்டர்**: தலைவர் அவர்களே, கட்டடத்தைக் கட்டுவதற்கு டெண்டர் மூலமாகக் காண்டிராக்டுக்கு விடப்பட்டுள்ளதா? அல்லது, நாமினேஷன் மூலமாகக் காண்டிராக்டுக்கு விடப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்**: தலைவர் அவர்களே, அது பற்றிக் குறிப்பு இல்லை. பொதுவாக, இப்படிப்பட்ட கட்டடங்களெல்லாம் டெண்டர் மூலமாகத்தான் விடப்படும்.

THIRU K. VINAYAKAM: Sir, in the Law College, the Sections are divided for F.L. and B.L. with the result that one section goes for teaching in the morning and another section in the evening. There is the shift system. At present, there is no provision for canteen, no good provision for Library, no provision for even bath rooms and urinals. With the present building which is being contemplated, may I know whether all these amenities will be provided and will the Hon. Minister assure us that there shall not be any shift system with one class in the morning and one class in the evening? Will the Minister be pleased to give such an assurance?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: "அஷ்யூரன்ஸ்" எல்லாம் கேள்வியிலா கேட்பது?

**திரு. கே. விநாயகம்**: என் கேள்வியைப் படித்துப் பாருங்கள்.

Please read my question. Point out one mistake in my supplementary. Then, I shall tender my apology. I am only asking whether the building would house all these things.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அதைக் கேட்கலாம். அதோடு இருந்தால் பரவாயில்லை. 'ஷிப்ஃட் ஸிஸ்டம்' இல்லாமலிருக்குமா ?—என்று உறுதிமொழி கேட்கிறீர்களே, அது எப்படி வினா நேரத்தில் வரும் ?

**திரு. கே. விநாயகம்** : ஆமாம் ; இந்தக் கேள்வியிலேதான் வரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வரவே வராது.

THIRU K. VINAYAKAM : Sir, you should also assign reasons if you are going to disallow my question. I should like to know where and how exactly I have offended the rules.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : உங்கள் கேள்வியின் எல்லாப் பகுதிகளுக்கும் நான் அனுமதி மறுக்கவில்லை. கேள்வியின் முற்பகுதியை நான் அனுமதிக்கிறேன். பிற்பகுதியைத்தான் அனுமதிப்பதற்கில்லை.

THIRU K. VINAYAKAM : Unless you have developed a dislike for me, I don't know how I am wrong. I cannot help asking such a question to elicit some information as to whether these facilities will be provided in the contemplated building. The Hon. Minister is trying to oblige me by giving the information that I seek of him. At this stage, Sir, you intervene and say, 'No, no. I disallow this question',

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : கட்டடம் கட்டுவதுபற்றிக் கேட்டவரைக்கும் உள்ள கேள்வியை நான் மறுக்கவில்லை.

**திரு. கே. விநாயகம்** : கட்டடத்தில் இதெல்லாம் இருக்கிறதா என்றுதான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அதுவரைக்கும் உள்ள கேள்வியை நான் மறுக்கவில்லை. அதற்குப் பிறகு, காலையிலும் மாலையிலும் ஷிப்ட் ஸிஸ்டம் வைக்காமலிருப்பதற்கு உறுதிமொழி அளிப்பீர்களா ?—என்று கேட்கிறீர்களே, அதைத்தான் நான் அனுமதிக்க மறுக்கிறேன்.

THIRU K. VINAYAKAM : Sir, I don't want to quarrel with you, Mr. Speaker.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு அமைச்சரவர்கள், கேள்வியின் முற்பகுதிக்கு விடை அளிக்கலாம்.

THIRU K. VINAYAKAM : Sir, Please listen to me. I am asking for information as to whether this shift system would be given up. If large accommodation will be available in the proposed new building, there would not be any necessity for the shift system. That is my point. I request you to understand my question. I have put a very clear question. You need not protect the Minister. He is strong enough. The Government is strong enough. The Minister can defend himself.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அவர்கள் "ஸ்ட்ராங்"கா, இல்லையா என்பதல்ல கேள்வி.



**திரு. கே. விநாயகம்** : நான் கேள்வி கேட்கும்போது, சரியல்ல என்று சொன்னால் நான் என்ன செய்ய முடியும் ? நான் கேட்கும் கேள்வியில் தப்பு இருக்கிறதா ? இன்வலிடுவேஷன் இருக்கிறதா என்று பாருங்கள். இன்வலிடுவேஷன் இருந்தால்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இன்வலிடுவேஷன் இல்லை. கேள்வி நேரத்தில் எப்படிக் கேள்வி கேட்கவேண்டும் என்பதற்கு விதிமுறை இருக்கிறது.

**திரு கே. விநாயகம்** : ஏதோ நம் இரண்டு பேருக்கும் ராசிப் பொருத்தம் சரியாக இல்லை ! (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. விநாயகம் அவர்கள் சில சமயம் வேடிக்கையாக பேசுவதாக நினைத்துக்கொண்டு....

**திரு. கே. விநாயகம்** : வேடிக்கை இல்லை. In every word and in every syllable I am serious.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. விநாயகம் அவர்கள் சில சமயம் வேடிக்கையாகப் பேசுவதாக நினைத்துக்கொண்டு, என்ன என்ன கருத்துக்களைக் கூறக்கூடாதோ அவற்றையெல்லாம் சொல்கிறார். அது வழக்கமாக இருக்கிறது. சில நேரங்களில், அவர்கள் தெரியாமல் சொல்கிறாரா, அல்லது உரிமையினாலே சொல்கிறாரா என்று தெரிவதில்லை. என்றாலும், நானே கொஞ்சம் அதற்கெல்லாம் அமைதி தேடிக்கொண்டு போகும் நிலையைத்தான் மேற்கொண்டு வருகிறேன். அந்த ஒரு சலுகையை அவர்கள் அதிகமாகப் பயன்படுத்திக்கொள்ளப் பார்க்கிறார். அது தவறு என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்** : ராகு காலம் !

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இராகு காலம் அவர்கள் பார்க்கலாம். நான் பார்க்கவேண்டியதில்லை. அந்த நிலைமை இல்லை, துணைக் கேள்விகள், மூலக் கேள்விக்குத் தொடர்புடையதாகத்தான் இருக்கவேண்டும். கட்டடம் கட்டுகின்ற அந்த அளவோடு துணைக் கேள்வி நின்றிருக்க வேண்டும். ஆனால் அதற்குமேல், 'அமைச்சரவர்கள் உறுதிமொழி அளிப்பாரா ?' என்று கேட்பதைத்தான் நான் அனுமதிக்க மறுக்கிறேன். உறுதிமொழி வாங்கக்கூடிய நேரமா, கேள்வி நேரம் ? மாண்புமிகு அமைச்சரவர்கள் திரு. விநாயகம் அவர்கள் கேட்ட கேள்வியின் முதல் பகுதிக்கு மட்டிலும் விடை அளிக்கலாம்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, இப்பொழுது துணைக்கட்டடங்கள், அதிகப்படியான வகுப்பறைகள் கட்டும் முறையில்தான் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மூன்று இலட்சத்துச் சில்லறை ரூபாயில் இந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்படவிருக்கிறது. சிறிய கேண்டீன் இருக்கிறது. அதைப் பெரிய அளவில் செய்யவேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. நூல் நிலையமும், ஆடிட்டோரியமும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எதிர்காலத்தில் அதற்கான கட்டடங்கள் எழுப்பப்படும். ஷிப்ட் சிஸ்டத்தை நிறுத்த வேண்டிய நிலை இருக்காது. எண்ணிக்கை அதிகமாக இருப்பதாலும், அதிகமான அளவிற்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்பதாலும் அவர்களுக்கு அந்த சிஸ்டத்தை நிறுத்தி வைக்க முடியாது. நிறுத்த வேண்டுமென்றால் மாணவர்களின் தொகை குறைய வேண்டியிருக்கும். ஆனால் அதிகப்படியான எண்ணிக்கையிருப்பதால், காலையிலும், மாலையிலும் இருப்பதில் எந்தவிதமான சங்கடமும் இருக்காது.

**திரு. வ. ஜார்ஜ்** : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். தலைவரவர்களே, அந்தக் கேள்வியிலுள்ள இரண்டாவது பகுதியை அனுமதிக்கவில்லையென்றும், பதில் கொடுக்க வேண்டாமென்றும் ஆணை பிறப்பித்தீர்கள். அதற்குப்பிறகு அமைச்சரவர்கள் கேள்வியின் இரண்டாவது பகுதிக்கும் பதில் அளித்தது முறையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சரவர்கள் எந்தக் கேள்விக்கும் எந்தவிதமான விடையும் கொடுக்கலாம். அமைச்சரவர்கள் இப்படித்தான் விடையளிக்கவேண்டுமென்று சொல்லக்கூடிய நிலையில்லை. முதல் பகுதியை அனுமதிக்கிறேன் என்று சொன்னேன். மேற்கொண்டு விடை கொடுப்பதை நான் கொடுக்க வேண்டாமென்று சொல்லக்கூடிய நிலையில்லை.

**திரு. ஆர். கருப்பையா :** பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், தலைவரவர்களே, ஆங்கில வினாத்தாளில் 'மினிஸ்டர் ஃபார் எஜுகேஷன் அண்ட் ஹெல்த்' என்றிருக்கிறது. ஆனால் தமிழ் வினாத்தாளில் பொதுப்பணித் துறை அமைச்சர் என்று போட்டிருக்கிறது இப்படி மொழி பெயர்ப்பு பல இடங்களில் தவறாகயிருக்கிறது. இது மாதிரி தவறுகள் பற்றி நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது பாயிண்ட் ஆஃப் ஆர்டரா ?

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவரவர்களே, இப்பொழுதிருக்கும் இட வசதியிலே எவ்வளவு பேருக்கு இட வசதி இருக்கிறது. மேற்கொண்டு கட்டடத்தை விஸ்தரிப்புச் செய்யும்பொழுது எவ்வளவு பேருக்கு இடம் அதிகமாகக் கொடுக்கப்படும் என்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இப்பொழுது எவ்வளவு பேருக்கு என்ற விவரக்குறிப்பில்லை. ஆனால் 700, 800 பேருக்குமேல் இருக்கிறார்கள் என்று குறிப்பாகச் சொல்லலாம். இட நெருக்கடியை ஓரளவுக்குக் குறைக்க வேண்டுமென்ற முறையில் தான் துணைக்கட்டடங்கள் அமையும். ஒரே இடமாக கைக்கு வசதி ஏற்படும் நிலை இருக்க வேண்டும். நெருக்கடி அதிகமாக இருப்பதால் நெருக்கடியைத் தீர்க்க இந்தத் துணைக் கட்டடம் அமையும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, நெருக்கடி அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி நெருக்கடி அதிகமாகயிருப்பதால் மதுரை போன்ற பகுதிகளில் கல்லூரிகள் நிறுவ ஏதாவது குறிப்பு கையிலிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மதுரையில் ஒரு சட்டக்கல்லூரி துவக்க வேண்டுமென்ற யோசனை கூறப்பட்டிருக்கிறது. அது ஆய்வு நிலையிலேயிருந்து வருகிறது.

*Additional buildings for Queen Mary's College.*

* 570 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(a) Whether the construction of additional blocks in the Queen Mary's College in Madras City has been taken up for execution by the Public Works Department; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ): இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. ஒப்பந்தப் புள்ளி விவரங்கள் பெறப்பட்டுள்ளன. அவை கட்டடங்கள் தலைமைப் பொறியாளரின் ஆய்வில் உள்ளன. இப்பணி விரைவில் நிறைவேற்றப்படும்.

**திரு என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவரவர்களே, இந்த இராணி மேரி கல்லூரிக்கு கூடுதல் கட்டடங்கள் கட்டுவதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது ? ஆய்விலே உள்ளது என்றால் எப்பொழுது துவக்கப்படும் ? எப்பொழுது டெண்டர் கோரப்படவிருக்கின்றன ?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, துணைக் கட்டடம் கட்டுவதற்கு 6 இலட்சத்து 80 ஆயிரம் என்றும், மேஜை நாற்காலி போன்ற பொதுநல ஏற்பாடுகளுக்காக, 1 இலட்சத்து 30 ஆயிரம் என்றும் ஆக மொத்தம் 8 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய்க்கு வரைவுத்திட்டம் போட்டிருக்கிறது. 7 இலட்சம் ரூபாய் அளவிற்கு வழங்கப்பட்டிருக்கிறது. டெண்டர்கள் கோரப்பட்டிருக்கின்றன. டெண்டர் வந்தவுடன் வேலைகள் துவங்கப்படும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், கட்டட வேலைகள் என்று சொன்னால் எந்தெந்தவிதமான கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன ? சென்ற ஒரு வருஷ காலத்தில் இரண்டுமுறை திருடர்கள் அங்கே நுழைந்ததாகவும், அவர்கள் பயந்துபோய் மிகப்பெரிய அளவிற்கு பீதியேற்பட்டிருப்பதும் அமைச்சரவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே அந்த காம்பவுண்ட் சுவர்களை உயரமாகக் கட்டும் உத்தேசமிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, புதிதாக சில வகுப்புக்களை மேற்கொள்வதற்காக துணைக்கட்டடம் கட்டப் படவிருக்கின்றது. பாதுகாப்பற்ற நிலையில் இருந்ததை மாற்றி கம்பிகள் அடிக்கப்பட்டு, ஹாஸ்டல் மற்ற இடங்களில் நுழைய முடியாத அளவிற்குச் சென்ற ஆண்டு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதற்குமுன்பு உள்ளே நுழைய வசதியிருந்ததால் திருடர்கள் நுழைய முடிந்தது. இப்பொழுது கம்பிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. எனவே, இங்கு நுழைய வழியில்லை. வேறுவழியிலே நுழைந்தால் முடியுமே தவிர இந்த வழியிலே நுழைய முடியாது.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, நாட்டிலே பொதுவாக மக்கள் தொகை அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. இப்படி மக்கள் தொகை அதிகரிப்பதால் எலிமெண்டரி பள்ளிகளிலேயிருந்து கல்லூரிகள் வரை மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் இடம் கிடைப்பது மிகவும் கஷ்டமாகயிருக்கிறது. எனவே, அரசாங்கம் எல்லாத் துறைகளிலும் இரண்டுவேளை படிப்பை, ஷிப்ட் சிஸ்டத்தைக் கொண்டுவர முன் வருமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி இராணி மேரிக் கல்லூரிக்கு கூடுதலாகக் கட்டடங்கள் பற்றியிருக்கும்பொழுது ஆரம்பப் பள்ளிகள், கல்லூரிகள், ஷிப்ட் சிஸ்டம் என்று கேட்டால் என்ன அர்த்தம் ?

**திரு. நா. வீராசாமி :** க்வீன் மேரிஸ் கல்லூரியில் இடநெருக்கடியிருப்பதால் காலைநேரக்கல்லூரி, மாலைநேரக்கல்லூரி என்று இரண்டு பகுதிகளாகப் பிரித்து ஷிப்ட் சிஸ்டம் கொண்டுவர......

**திரு. சா. மெய்யப்பன் :** தலைவரவர்களே, இராணி மேரிக் கல்லூரியில் கூடுதலாகக் கட்டடம் கட்டவிருப்பதில் விடுதிகளும் சேர்ந்தா அல்லது வகுப்பு அறைகளுக்கு மட்டும்தானா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, வகுப்பு அறைகளுக்கு மட்டும்தான். வகுப்பறைகள் அதிகமாக வேண்டுமென்பதற்காகவும், புதிய புதிய வகுப்புகளுக்கு இட நெருக்கடியிருக்கிற காரணத்தாலும் வகுப்பு அறைகளுக்குத்தான் இந்த துணைக் கட்டடம்.

*Additional buildings for Ophthalmic Hospital at Madras.*

* 571 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

**(a) whether the Public Works Department has undertaken the construction of extension blocks to the Ophthalmic Hospital in Madras; and**

**(b) if so, the details thereof ?**

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) கண் மருத்துவ நிலையத்தில் தற்பொழுது உள்ள புற நோயாளி மருத்துவமனைத் தொகுதிக்கு எதிரே அத்தகைய புற மருத்துவமனைத் தொகுதி புதியது ஒன்று கட்டப்பட்டு, அது 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10-ம் தேதி திறந்து வைக்கப்பட்டது. மேற்சொன்ன புற மருத்துவமனைக் கட்டடத் தொகுதிக்குமேல் இரண்டாவது மாடி கட்டுவதற்காக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கட்டட வேலை விரைவில் மேற்கொள்ளப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, அந்தப் புற நோயாளி மருத்துவ மனைத் தொகுதிக்கு மேல் இரண்டாவது மாடி கட்டுவதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது ? அந்த வேலை எப்பொழுது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 8 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் இரண்டாவது மாடி கட்டும் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. டெண்டர்கள் கோரப்பட்டிருக்கின்றன. டெண்டர்கள் வந்தவுடனே வேலை விரைவில் துவங்கப்படும்.

திரு. கே. போஜன் : தலைவரவர்களே, இப்பொழுது புதிதாக கட்டப்பட்டுள்ள அறைகளிலே மேற்கொண்டு எத்தனை வியாதியஸ்தர்கள் எத்தனை அதிகப்படியான படுக்கைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கட்டடம் பற்றிய விவரக் குறிப்பு இல்லை, தனிக் கேள்வி போடவும்.

### *Visit of Minister for Health and Harijan Welfare to General Hospital.*

* 572 Q.—THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR: **Will the Hon. the Minister for Education and Health be pleased to state—**

(*a*) whether the then Hon. Minister for Health and Harijan Welfare visited the Government General Hospital about the 12th July, 1969; and

(*b*) if so, the purpose of her visit?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) முன்னாள் சுகாதார அரிசன நல அமைச்சர் அரசின் பொது மருத்துவ மனையை 1969-ம் ஆண்டு ஜூலை மாதம் 11ம் தேதியில் சென்று பார்வையிட்டார்கள்.

(இ) இது ஒரு திடீர் சோதனையாகும்.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : தலைவரவர்களே, சென்னை சர்வ கலாசாலையில் வைஸ் சான்சலராகயிருந்த உயர்திரு ஏ. இலட்சுமணசாமி முதலியார் அவர்கள் இதை 'சவுல்ட்ரி' மாதிரியான நிலையில் இருக்கிறது என்று கூறியிருக்கிறார்களே, அந்த நிலை இப்பொழுது மாற்றப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மருத்துவ மனையில் இருக்கும் இட வசதிகளைப் பொறுத்துத்தான் நோயாளிகளை சேர்க்கவேண்டியவர்களாகயிருக்கிறோம். ஆனால் வந்த நோயாளிகளுக்கு சிகிச்சை தருவதற்காக படுக்கைகளுக்குக் கீழேகூட பாய்கள் போட்டு வந்திருப்பதால் திரு. இலட்சுமணசாமி முதலியார் அவர்கள் சத்திரம் போல இருக்கிறது என்று கூறினார்கள். சட்டம் கட்டி அதன்பிறகு சேர்த்துக் கொள்வது என்பது இயலாத காரியம். இருக்கின்ற வாய்ப்பு, வசதிகளைக் கொண்டு அதிகப்படியான நோயாளிகளுக்கு மருத்துவ வசதி அளிக்கும் நிலையிருக்கிறது. இதனால் படுக்கை நெருக்கடிகள், மற்ற நெருக்கடிகள்



ஏற்படுகின்றன. இதற்காக அதிகப்படியான பணத்தை ஒதுக்கி, கோடிக் கணக்கான பணத்தை ஒதுக்கி அதிகப்படியான படுக்கைகள் ஏற்படும் காலத்தில் இதிலே இருக்கும் படுக்கை நெருக்கடிகளின் தன்மைகள் நீங்க வழியேற்படும்.

திரு. எம். பூபதி : தலைவரவர்களே, மாண்புமிகு சுகாதார, அரிசன அமைச்சரவர்கள் மருத்துவ மனையில் திடீரென்று சோதனையிட்டார்களே, அதற்கான காரணம் என்ன ? சோதனையிட்டுப் பார்க்கும் நேரத்தில் என்னென்ன புதிய விவரங்கள் கிடைக்கப்பெற்றன ? அதன் மீது என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அங்கிருக்கும் பணிகள் எப்படி நடைபெறுகின்றன என்று காண்பதற்காக, குறிப்பாக சமையல்கூடம், செவிலியர் விடுதி ஆகியவைகளைப் பார்வையிட்டார்கள். குறிப்பிடத்தக்க பெரிய குறைபாடு எதுவுமில்லை என்று அவர்களுடைய குறிப்பில் கூறியிருக்கிறார்கள்.

திரு. பி. துரைராஜ் : தலைவர் அவர்களே, திடீர் சோதனையின்போது குறிப்பிடத்தக்க பெரிய தவறுகள் எதுவும் இல்லை என்று சொன்னார்கள். ஏதாவது சிறிய அளவில் குறைகள் கண்டுபிடிக்கப்பட்டனவா ? அதைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் ஆலோசிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணி முத்து : அங்கே குறிப்பிட்ட நேரம் என்று இல்லாமல் எப்பொழுதுமே, எந்த நேரத்திலுமே பார்வையாளர்கள் என்று சொல்லிக்கொண்டு, மாணவர்கள் என்று சொல்லிக்கொண்டு பல்வேறு இடங்களில் அலைந்துகொண்டிருந்தார்கள். அதைத் தடுக்க வழிவகைகள் காணவேண்டும் என்று குறிப்பு எழுதி வைத்திருக்கிறேன். உணவுப் பண்டங்கள் இவ்வளவு அளவு என்று கையெழுத்துப் போட்டு குறிப்பு எழுதி வைத்த அளவைவிட அதிகமாக முட்டை, ரொட்டி முதலிய உணவுப் பொருள்கள் இருந்தன. அதற்குக் காரணம் என்ன என்று கேட்டு சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து விளக்கம் பெற வேண்டுமென்றும் கேட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட பல குறைகள் கண்டு, அவற்றைப் போக்க ஆவன செய்யவேண்டும் என்று சொல்லியிருக்கிறேன்.

### உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனை.

* 573 வினா—திரு. மு. கந்தசாமி படையாச்சி : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1961-ம் ஆண்டில், அரசால் மேற்கொள்ளப்பட்ட உளுந்தூர் பேட்டை ஆஸ்பத்திரியை விஸ்தரிக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் என்றால், எப்பொழுது அமுல் செய்யப்படும் ?

(உ) எத்தனை படுக்கைகள் கொண்டதாக அமைக்கப்படவிருக்கிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ), (இ) & (உ) : ஆம். 24 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை ஒன்று கட்டும் திட்டம் 1971-72 நிதியாண்டில் பரிசீலனைக்காக ஒத்திபோடப்பட்டுள்ளது.

திரு. மு. கந்தசாமி படையாச்சி : 1961-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு இதுவரையில் அந்த ஆஸ்பத்திரி விஸ்தரிப்புத் திட்டம் செயல்படுத்தப்படாததற்குக் காரணம் என்ன ? எவ்வளவு தொகைக்கு எஸ்டிமேட் தயார் செய்யப்பட்டது ? உளுந்தூர்பேட்டை ஜங்ஷன் ரோடில் அடிக்கடி ஆக்ஸிடெண்டு ஏற்பட்டு, சிகிச்சைக்கு வேண்டிய வசதி இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே, இதுவரையில் ஏன் இந்த விஸ்தரிப்புத் திட்டத்தை மேற்கொள்ளவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்த மருத்துவமனை பணி இதுவரையில் மேற்கொள்ளப்படாததற்குக் காரணம் நிதிப் பற்றாக்குறைதான். வேறு எந்தக் காரணமும் இல்லை. தொடர்ந்து ஒத்தி வைக்கப்பட்டு, இந்த ஆண்டு பார்ட்டு இரண்டு ஸ்கீமில் கொண்டுவந்தும் நிதிப் பற்றுக்குறையால் அடுத்த ஆண்டிற்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. ரூ. 5,54,000-க்கு வரைவுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதன் மூலம் வெளி நோயப் பிரிவு (அவுட் பேஷண்ட் டிபார்ட்மெண்ட்) 24 படுக்கைகள், மகப்பேறு அறுவை சிகிச்சைக்கூடம் ஒன்று, சமையலறை கூடம் ஒன்று, மகப்பேறு கூடம் ஒன்று, மேல்நிலை நீர்த்தொட்டி ஒன்று, கழிவுநீர் சாக்கடை, குடிநீர் வசதி போன்ற வசதிகளுக்காக ரூ. 5,54,000-ல் திட்டம் இடப்பட்டிருக்கிறது. அதற்காக 0·95 ஏக்கர் புறம்போக்கு நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் அடுத்த ஆண்டு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். நிதிப் பற்றுக்குறையினால் இந்த ஆண்டு மேற்கொள்ளப்படவில்லை, ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. மு. கந்தசாமி படையாச்சி :** சுமார் ரூ. 5 லட்சத்திற்கு எஸ்டிமேட் சாங்ஷன் ஆகியும் பணம் இல்லாத காரணத்தினால் 6 வருஷங்கள் ஆகியும் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இருந்தபோதிலும் அங்கு அதிகமாக ஆக்ஸிடெண்டுகள் ஏற்படுவதன் காரணத்தினால், குறைந்தது ஒரு நாளைக்கு இரண்டு, மூன்று ஆக்ஸிடெண்டுகள் ஏற்படுகிற காரணத்தினால், அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்து, உடனே புதிய கட்டடம் கட்டி, பெட்களை அதிகப் படுத்தி வசதி செய்து கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்த ஆண்டு இந்தத் திட்டத்தைச் சேர்த்துக்கொள்வதற்கு வாய்ப்பு வசதி இல்லை. அடுத்த ஆண்டில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

### அரசு கலைக் கல்லூரி மாணவர்கள் கோரிக்கை.

* 574 வினா—திரு. வி. கே. கோதண்டராமன், திரு. டி. மார்டின் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ம் தேதி அரசு கலைக் கல்லூரி மாணவர்கள் ஊர்வலமாக கோட்டைக்கு வந்து, அவர்களுடைய கோரிக்கைகளைக் கொண்ட மனுவை கனம் முதலமைச்சரிடம் கொடுத்துள்ளார்களா ?

(இ) ஆம் எனில், அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இந்த வினாவிற்கு இடமில்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** கலைக்கல்லூரி மாணவர்கள், பக்கத்தில் இருக்கக்கூடிய எத்திராஜ் பெண்கள் கல்லூரி மாணவிகள் ஆகியோர்களிடையே ஏற்பட்ட தகராறின் விளைவாக நியூ காலேஜ் மாணவர்கள் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கோட்டைக்கு ஊர்வலமாக வரவில்லை, மனுக் கொடுக்கவில்லை என்று சொல்லிவிட்டார்கள். அது சம்பந்தமாக கேள்வி கேளுங்கள். நடந்த வேறு நிகழ்ச்சியைப் பற்றி கேள்வி கேட்கவேண்டாம்.



**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஏற்பட்ட குழப்பத்தின் காரணமாக அவர்கள் வந்து முறையீடு செய்தார்களா ? அது விஷயமாக எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று அவர்களிடையே குழப்ப நிலையின் காரணமாக எந்த மனுவும் வரவில்லை. 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ம் தேதியில் கொடுத்தார்களா என்று கேட்டார்கள், அதற்கு இல்லை என்று பதில் சொன்னேன். ஆனால், 1969-ம் ஆண்டு நவம்பர் மாதம் 26-ம் தேதியில் அவர்கள் வந்து ஒரு மனு கொடுத்திருக்கிறார்கள். அந்த மனு உறுப்பினர் அவர்கள் கூறியமாதிரி தகராறைப் பற்றிய மனு ஒன்றுமில்லை. பொருளாதாரத் துறை மாணவர்கள் தங்களை பி.டி. வகுப்பில் சேர்த்துக்கொள்ள வேண்டும், பள்ளிகளில் பொருளாதாரத்தை பாட திட்டமாக ஆக்கவேண்டும், அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். வேலை கிடைக்கின்ற வரையில் மாதம் ரூ. 50 தரவேண்டுமென்ற கோரிக்கையையும் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு அது சம்பந்தமாக சமாதானம் சொல்லப்பட்டது. வேறு பல காரணங்களும் இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. அவர்களுக்கு, ஒரு வகை சமாதானம் சொன்னதின்பேரில், அமைதி ஏற்படக்கூடிய சூழ்நிலை வந்து சேர்ந்தது.

**திரு. டி. மார்டின் :** மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், மாணவர்களின் கோரிக்கைகளில் ஒன்று வேலையில்லாத நேரத்தில் உபகாரச் சம்பளம் கொடுக்கவேண்டும் என்று அவர்கள் கேட்டிருந்ததாகத் தெரிகிறது. மைசூர் மாநிலத்தில் அந்த ராஜ்யத்தில் வேலை இல்லாதவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கக்கூடிய திட்டம் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தக் கேள்வி 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ம் தேதியில் கலைக்கல்லூரி மாணவர்கள் கோட்டைக்கு ஊர்வலமாக வந்து மனுக் கொடுத்தனரா என்பது பற்றியது . . . .

THIRU T. MARTIN : Sir, the Hon. Minister has accepted that on 26th November 1969 students came here and presented a petition. He has also replied that one of their demands is that a sum of Rs. 50 should be paid to them till they get employment. Therefore, I am putting a question on that. இந்த மாணவர்கள் கொடுத்த கோரிக்கையில் வேலையில்லாத நேரத்தில் அவர்களுக்கு உதவிச் சம்பளம் அளிக்கவேண்டுமென்பதும் ஒன்று என்று அமைச்சர் அவர்கள் பதிலில் தெரிவித்திருக்கிறார். மைசூர் மாநிலத்தில் வேலையில்லாத நேரத்தில் அப்படிப்பட்ட படித்த பட்டதாரிகளுக்கு மாதாந்திர உபகாரச் சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. அதேபோன்று தமிழக அரசின் பரிசீலனையில் ஏதாவது திட்டம்இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தமிழக அரசிடம் அப்படிப் பட்ட திட்டம் எதுவுமில்லை.

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, பொருளாதாரத்தை மெயினாக எடுத்துப் படித்த பட்டதாரிகளை பி.டி. காலேஜில் சேர்க்கவேண்டும் என்று அவர்கள் ஒரு கோரிக்கை வைத்ததாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஏற்கனவே பொருளாதாரத்தை 'மெயின்' ஆக எடுத்துப் படித்தவர்கள், அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக அவர்களை பி.டி. கோர்ஸில் சேர்த்துக்கொள்வதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பொருளாதாரம், ஹிஸ்டரி சப்ஸிடியரியாக எடுத்தவர்களை பி.டி. வகுப்பில் சேர்த்துக்கொள்வதற்கு இடம் இருக்கிறது. உயர்நிலைப் பள்ளிகளில் பொருளாதாரம் எலக்டிவாக வைக்கப்படவில்லை. அப்படி அதைப் பாடமாக வைக்க

வேண்டுமா, வேண்டாமா என்பதை பல்கலைக்கழக வல்லுனர் குழு தான் நிர்ணயிக்கவேண்டும். அது அப்படி பாடம் இல்லாத காரணத்தினால், அதற்கு பி.டி. ஆசிரியர் வகுப்பு வைக்க அவசியமில்லை. பொருளாதாரத்தை சப்ஜெக்டியாக படித்தவர்களுக்கு பி.டி. வகுப்பில் சேர்த்துக் கொள்வதற்கு இடம் இருக்கிறது. ஆனால், பெருவாரியாகத் தேவைப்படுவது ஆங்கிலம், சயன்ஸ் போன்ற பி.டி. ஆசிரியர்கள், ஆகவே அதற்கு அதிக இடங்கள் கொடுக்கப்பட்டு, அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பொருளாதாரத் துறையைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு வேறு பல வாய்ப்புகள் இருக்கின்றன. பொருளாதாரத்தை எடுத்துக் கொண்டு கல்லூரியில் படித்து பட்டம் பெற்றவர்கள், பி.டி. கோர்ஸ் படித்து ஆசிரியராகத்தான் வரவேண்டுமென்பது அல்ல. அவர்களுக்கு வேறு பல துறைகள் இருக்கின்றன. பாங்குத் துறை, கம்பெனித் துறை போன்ற துறைகளுக்குச் செல்வதற்கு பொருளாதாரம் படித்து பட்டம் பெற்ற மாணவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. அத்தகைய வாய்ப்புகளை அவர்கள் தேடிச் செல்லவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். பள்ளிகளில் எந்தப் பாடம் இருக்கிறதோ அந்தப் பாடத்திற்கு ஏற்ற பயிற்சியைத்தான் பெறமுடியும், அப்படிப்பட்ட மாணவர்கள்தான் அங்கு சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்.

**திரு. எம். பூபதி :** அமைச்சர் அவர்கள் கூறியபடி 1969-ம் ஆண்டு நவம்பர் மாதம் 26-ம் தேதியில் கலைக்கல்லூரி மாணவர்கள் கொடுத்த கோரிக்கைகளில் எந்தக் கோரிக்கைகளை அரசு அனுதாபத்துடன் கவனித்து முடிவு செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கொடுத்த நான்கு கோரிக்கைகளும் நடைமுறைக்கு வரமுடியாதவை என்பதை நான் எடுத்துச் சொன்னேன்.

### *Tutorial and concurrent courses in Polytechnics.*

* 575 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether the Government have ordered the starting of tutorial and concurrent courses for diplomas in civil, mechanical and electrical engineering branches at the various Polytechnics in the State; and

(*b*) if so, for what purpose?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) உரிய மதிப்பெண்கள் பெறத் தவறிய பாடங்களைப் படிப்பதற்காகப் போதிய வசதிகளின்மையினாலோ அல்லது படிப்பைத் தொடர்வதற்கான ஊக்கம் அளிக்கப்படாமையினாலோ படிப்பு தடைப்படுவதன் விளைவாகத் தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனங்களில் ஏற்படும் விரயத்தை அக்டோபர் தேர்வில் தவறிய மாணவர்களுக்கான பாடமுறை (Concurrent Course) குறைக்கும். உரிய மதிப்பெண்கள் பெறத் தவறிய பாடங்களில் முனைப்புப் பயிற்சியளித்து, தவறிய மாணவர்களின் நன்மைக்காக தனிப்பயிற்சிப் பாடமுறைகள் (Tutorial Course) நடத்தப்படுகின்றன. அப்போதுதான் மாணவர்கள் துணைத் தேர்வு எழுதித் தேறுவது இயலும். தனிப்பயிற்சி பெற்ற பிறகு, அக்டோபரில் நடக்கும் வாரியத் தேர்வில் தேறும் மாணவர்களின் நன்மைக்காக 'கன்கரண்ட்' பாடமுறை நடத்தப்படுகின்றது. பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில் முறையாக நடத்தப்படுகிற பாடங்களுக்கும் அவற்றின் கால அளவுக்கும் சமமான இந்த அக்டோபர் தேர்வில் தேறும் மாணவர்களுக்கான பாடமுறைகளும் கால அளவும் அமைந்துள்ளன. டிசம்பர்/ஜனவரி திங்களிலிருந்து அடுத்த அக்டோபர் வரை இந்தப் பயிற்சி நடத்தப்படுகிறது.



THIRU K. VINAYAKAM : Sir, if the Government have ordered the starting of this kind of tutorial and concurrent courses for the diploma-holders, does it mean that what we teach in Polytechnics is sub-standard and it is not up to the standard as would enable students to secure enough marks for the examination and if so, will the Government order this kind of tutorial course to be started in Arts Colleges also?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முதலிலே குறிப்பிட்டது பொருந்தாது. பல்வேறு காரணங்களால் தேர்வு பெறாமல் போகிறார்கள். ஒரு ஆண்டு காலம் வீணாகப் போகாமல் இருக்கவேண்டும் என்றுதான் இந்த கன்கரண்ட் கோர்ஸ், ஜூன் என்பதற்குப் பதிலாக, அக்டோபர்-டு-அக்டோபர் என்று வைக்கப்பட்டிருக்கிறது. ட்யூடோரியல் கோர்ஸ் நாம் வைக்கவில்லை என்றால் அவர்கள் வெளியே போகவேண்டும் என்ற நிலை வரும். திறமையை, படிப்பை அதிகப்படுத்த ட்யூடோரியல் முறை பயன்படுகிறது. என்ஜினியரிங் கல்லூரியில் இது வெற்றிகரமாக நடைபெறுகிறது. வேறு பல இடங்களில் செய்ய வேண்டும் என்றால் அது பல்கலைக்கழகத்தினுடைய சிபார்சின் பேரில் செய்யப்படவேண்டும்.

### திருப்பூர் நகர அமைப்புத் திட்டம்.

* 576 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-ம் ஆண்டு, நவம்பர் மாதம், திருப்பூர் சட்டப்பேரவை உறுப்பினர் அவர்களிடமிருந்து திருப்பூர் நகர அமைப்பு முறைபற்றி விண்ணப்பம் ஏதேனும் சுகாதார அமைச்சர் அவர்களுக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) (i) திருப்பூர் நகர் அமைப்புத் திட்டம் 5-1-ஆம் பாகத்தின் கீழ் ராம்நகரில் பெருமாநல்லூர் சாலையைச் சென்றடையும் வழியை அமைப்பதற்கு இணைப்புச் சாலைகள் போடுவது பற்றியும், (ii) திருப்பூர் நகர் அமைப்புத் திட்டம் எண். 3-ஐ உடனடியாகச் செயல்படுத்துவது பற்றியும் உறுப்பினர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நகர் அமைப்புத் திட்டம் 5-1-ம் பாகம்—இதன் கீழ் இணைப்புச் சாலைகள் அமைக்கப்படவிருக்கின்றன-வரைவு நிலையிலுள்ளது. சில திருத்தங்களுக்காகவும், மாற்றங்களுக்காகவும், தமிழ்நாடு 1920-ம் ஆண்டு நகர அமைப்புச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள நடைமுறை விதித்துறைகளைப் பின்பற்றுவதற்காகவும், நகராட்சி மன்றத்திற்கு இத்திட்டம் திருப்பி அனுப்பப்பட்டது. நகராட்சி மன்றத்தினால் பணிந்தனுப்பப்பட்டு, அரசினால் ஒப்பளிக்கப்பட்ட பின்பு நகர் அமைப்புத் திட்டத்தின் கீழ் இணைப்புச் சாலைகளை அமைக்கும் பணி தொடங்க வேண்டும்.

நகர் அமைப்புத் திட்டம் எண். 3 ஏற்கனவே நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதற்கான நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு வருகின்றன.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் நகர அமைப்பு 5-1 என்ற பகுதிக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். 1936-ம் ஆண்டு வரையில் அனுமதி கொடுத்திருக்கிறது. 36-க்குப் பிறகு இப்பொழுது 34 ஆண்டுகள் ஆகிவிட்டது. இருந்தும் நகர அமைப்புத் திட்டத்தை அமுல்படுத்த அதிகாரிகளும், இலாகாவும் மிகவும் தாமதம் செய்கிறார்கள். அதைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமோ என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் சொன்ன பதிலிலிருந்தே அப்படிப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன என்று அறியலாம். 1947-லிருந்து 1967-வரையில் 20 ஆண்டு காலம் இதில் திட்டங்கள் முடிக்க வேண்டும் என்றும், மேலும் 5 ஆண்டுகள் தேவை என்றும் 1972 வரைக்கும் அனுமதி கேட்டு அளிக்கப்பட்டிருக்கிறது. மாற்றங்கள், திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டு, நிலங்கள் ஆர்ஜிதம் செய்து கட்டடங்கள் பெறவேண்டும். அப்படிப் பெறுகின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். சாலைகளுக்கு, வீடு இருப்பவர்கள் நிலங்கள் வழங்கவேண்டும் என்ற முயற்சியில் நகராட்சியே பணம் கொடுப்பது என்றால் ஏராளமான செலவு ஆகிறது. ஆகவே, அந்த முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. முயற்சியில் சற்று காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. அதை விரைவுபடுத்த முயற்சி வலியுறுத்தப்படுகிறது.

திரு. கு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அந்த நடவடிக்கை விரைவுபடுத்தப்படுகிறது என்றார்கள். 1967-ம் ஆண்டு நானே விண்ணப்பம் கொடுத்து மூன்று ஆண்டுகள் ஆகின்றன. ஆகவே, அதை வலியுறுத்தி, துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முதலிலே நான் சொன்னபடி, மீண்டும் 5 ஆண்டுகள் கொடுத்திருக்கிறார்கள். மாற்றங்கள், திருத்தங்கள் பற்றிய நடவடிக்கை மேற்கொள்ளும்போது, நில ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு, வலியுறுத்தப்பட்டு வருகிறது.

## கோடைக்கானலில் குளிர்ப்பதன நிலையம்.

*577 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விதைகள், அறுவடை செய்யப்பட்ட கிழங்குகள் ஆகியவற்றைச் சேமித்து வைப்பதற்கென கோடைக்கானலில் குளிர்ப்பதன நிலையம் ஒன்று அமைக்க முடிவு செய்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) & (இ) உருளைக் கிழங்கு விதைகள், காய்கறிகள் முதலியவற்றைச் சேமித்து வைப்பதற்கென்று குளிர்ப்பதனக் கிடங்கு ஒன்றை நிறுவ, இந்திய அரசு முன்னரே ஒப்பளிப்பு வழங்கியிருந்தது. கடன் தொகையை ஒப்படி [illegible] வழங்கித் தருமாறு இவ்வரசு மத்திய அரசை அணுகியது. இக்கடனை மறுபடி செல்லுபடியாக்கித்தர இந்திய அரசு இசைந்ததும் குளிர்ப்பதனக்கிடங்கை நிறுவும் இடம் குறித்து முடிவு செய்யப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்திய அரசு இசைவு கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும், இந்தமாதிரியான குளிர்ப்பதன நிலையங்கள் அமைக்க, மாவட்டங்களின் தலைநகரங்களில் அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? சென்னையில் பழ வியாபாரிகளுக்கு இப்படிக் கட்டிக் கொடுத்திருப்பதன் காரணமாக, அவர்களுக்கு வசதியாக இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது இந்திய அரசாங்கத்தின் திட்டமாகும். கூட்டுறவு விற்பனைக் குழுக்கள் மூலம் குளிர்ப்பதன சாதனத்தை உண்டாக்கவேண்டும் என்று ஏற்கெனவே திட்டத்தைக் கொடுத்திருந்தார்கள். பரிசீலனை செய்து திட்டத்தை ஏற்றுக்கொள்ளும்போது, அதை கூட்டுறவு சங்கத்திற்குத் தருவதாக இருந்தால், மானியம், கடன் கொடுக்க வேண்டும். முன் தொகை மானியமாகக் கேட்பதாக இருந்தால், மீண்டும் மத்திய சர்க்காருக்கு எழுதி, அவர்கள் ஒப்புதல் தரவேண்டும் என்று மத்திய சர்க்காரை





கேட்டதற்கு, முடியாது என்று அவர்கள் தெரிவித்தார்கள். அப்படி கூட்டுறவு சங்கத்தின் மூலமாகச் செய்யவேண்டும் என்று சொன்னால், விவசாய இலாகாவின் மூலமாக, அந்த இலாகாவிற்கு கடன், கட்டடங்கள் கொடுத்து செய்யும்போது, ஒப்பளிப்பு ஒன்றுமே அவசியம் இல்லை என்று மத்திய சர்க்காருக்குத் தெரிவித்து, மீண்டும் வலியுறுத்தி உதவி தரவேண்டும் என்று இப்பொழுது கடிதப் போக்குவரத்து நடக்கிறது.

திரு. ஜெ. கருணைநாதன் : தலைவர் அவர்களே, உருளைக்கிழங்கு அழுகும் பொருள். ஆகவே, குளிர்ப்பதன சாதனம் அவசியமாகிறது. ஆகவே, மத்திய சர்க்காரை வலியுறுத்தும்போது, நீலகிரி மாவட்டத்திற்கு அதை விஸ்தரிக்க முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : முதலிலே கொடைக்கானலில் நிறைவேற்றுவோம். அதன் பிறகு நீலகிரிக்கு வருவோம்.

THIRU B. VENKATASWAMY : Simla variety of potato is best suited for seed purposes for Hosur taluk. Now we are importing varieties like 'President, Kuprikuber and Chandramukhi' at high cost. Will the Government think of installing a cold storage plant to store seeds locally purchased and if so, when the work on the same will be started?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மத்திய சர்க்கார் கொடைக்கானலில் ஏற்படுத்தியிருந்த அந்த குளிர்ப்பதன சாதனத்தைப் பற்றியது கேள்வி. மாநில அரசாங்கம் பல இடங்களில் குளிர்ப்பதன சாதனங்கள் வைக்க திட்டம் இருக்கிறது. அந்த வகையில்தான் ஹோசூரில் வைக்கக் கவனிக்கப்படும்.

## *Aerial spraying of pesticides*

* 578 *Q.*—THIRU K. SAHADEVA KANDER: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Government's programme of aerial spraying of pesticides has been stopped in Thanjavur District for the present; and

(*b*) if so, the reasons therefor?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இல்லை. 1969–70-ம் ஆண்டில் விமான மூலம் பூச்சி மருந்து தெளிக்கும் திட்டம் தஞ்சை மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. சகாதேவக் கண்டர் : பேரவைத் தலைவர் அவர்களே, விமான மூலம் மருந்து தெளிக்கும்போது, குறிப்பாக கர்ப்பஸ்த்ரீகளுக்கு பாதகம் ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறதே. பாதகம் உண்டாகிறதா? அதைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்ததா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அப்படிப்பட்ட பாதகம் இல்லை என்று முற்றிலும் உணர்ந்த பிறகுதான், தெளிப்பான்களுக்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. சந்தேகப்படவேண்டிய அவசியம் இல்லை.

திரு. சோ. அழகர்சாமி : விமான மூலம் மருந்து தெளிக்க செலவு என்ன ஆகிறது? விவசாயிகளிடம் ஒரு ஏக்கருக்கு எந்த அளவில் வசூலிக்கப் படுகிறது?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** கடந்த ஆண்டு கொடுக்கப்பட்ட பணம் ஒரு ஏக்கருக்கு ரூ. 5.98 புதுக்காசு என்ற விகிதத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு காலமாக கொஞ்சம் அரசாங்கமே மானியத் தொகை கொடுத்து வந்தது. அதைப்பற்றி இப்பொழுது யோசித்துக் கொண்டிருக்கிறது.

**திருமதி வி. ப. பழனியம்மாள் :** பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரைக்கும் விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிக்க மானியம் கொடுத்ததை நிறுத்தியிருக்கிறது என்று தெரிகிறது. மீண்டும் மானியத் தொகையை கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** நிறுத்தவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம். அது மறுபரிசீலனையில் இருக்கிறது.

**திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே, சமீபத்திலே தஞ்சாவூர் ஜில்லாவில் விமானம் மூலம் மருந்து தெளித்தபோது, விமானிக்கு ஆபத்து ஏற்பட்டு இறந்துவிட்டாரே, அவருக்கு நஷ்டாடு கொடுக்கப்பட்டதா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** விமானம் மூலம் மருந்து தெளிப்பதில், அரசாங்கமே செய்வது இல்லை. தனிப்பட்ட கம்பெனிக்காரர்களோடு ஒப்பந்தம் செய்கிறோம். டெண்டர் கொடுத்துத்தான் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். பைலட் இறந்துவிட்டார் என்றால், அந்தக் கம்பெனிக்காரர்தான் தரவேண்டும். அரசாங்கம் தரவேண்டும் என்று இல்லை. அவர்கள் நிச்சயமாக இன்ஷூர் செய்திருப்பார்கள்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, விமானத்தின் மூலம் பூச்சி மருந்துகளைத் தெளிக்கிறபோது, குறிப்பிட்ட ஒப்பந்தம் செய்யப்பட்ட நிலங்களுக்கு மட்டும்தான் பூச்சி மருந்து தெளிக்கப்படுகிறது. இதனால் பக்கத்தில் இருக்கிற நிலங்கள் பாதிக்கப்படுகின்றன. ஆகவே, பக்கத்து நிலக்காரர்கள் ஒப்புதல் தந்தாலும், தராவிட்டாலும் அரசாங்கமே எல்லா நிலங்களுக்கும் பூச்சி மருந்தை தெளித்துவிட்டு, அதற்குரிய கட்டணத்தை நிலவரியோடு சேர்த்து வசூலிக்க முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, ஆரம்பத்தில் அப்படிப்பட்ட நிலைமை இருந்தது. இப்போது குறைந்த நிலம் வைத்திருப்பவர்கள் கூட இதன் அவசியத்தை உணர்ந்து விமானத்தின் மூலம் பூச்சி மருந்தை தெளிக்க வேண்டுமென்று அரசாங்கத்தையும், பஞ்சாயத்தையும் கேட்டுக்கொள்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட நிலைமை வரவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### ஆலம்பாடி கிராம அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்.

* 579 வினா—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமராட்சி யூனியனைச் சேர்ந்த அத்திப்பட்டு பஞ்சாயத்திலுள்ள ஆலம்பாடி கிராமத்து அரிசனங்களுக்கு மனைகள் வழங்கும் திட்டம் தற்போது எந்த நிலையிலுள்ளது ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** 1960-ம் ஆண்டு தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம் அத்திப்பட்டு கிராமத்தில் அரிசனங்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்கு 2·90 ஏக்கர் அரசாங்க புஞ்சை, நஞ்சை நிலம் கையகப்படுத்தப்பட்டது. மேற்படி கிராமத்தில் வீடில்லா 53 அரிசனங்களுக்கு வீட்டுமனைகள் வழங்கப்பட்டு பட்டாக்களும் அளிக்கப்பட்டன.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு பட்டா வழங்குவதில் அரசு எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கை என்ன ? முன்பு பட்டா வழங்கப்பட்டிருக்கிற அரிசனங்கள் வீடுகளைக் கட்டிக்கொள்ள முடியாமல் இருக்கிறார்களே, அவர்களுக்கு எந்த வருஷம் நிலம் வழங்கப்பட்டதோ அதை அடிப்படையாக வைத்து அவர்களுக்கு முதலிடம் கொடுத்து, வீடு கட்ட மானியங்களைக் கொடுக்க அரசு முன்வருமா ?



**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே அரிசன மானியத்தின்மீது பேசும்போது விவரமாகக் கூறியிருக்கிறேன். ஏற்கெனவே நிலங்களைக் கையகப்படுத்தி அரிசனங்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரத்தில், யாரிடமிருந்து, பணம் கொடுத்து நிலத்தைக் கையகப்படுத்தியதோ, அந்த நிலக்காரர்களுடைய ஜாதியுணர்ச்சியின் காரணமாக, அரிசனங்கள் வீடுகளைக் கட்ட முடியாமல் தடுக்கப்பட்டு வருகிறார்கள். இந்த நிலைமை அன்றாடம் காணுகின்ற காட்சியாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிகளில் இப்படிப்பட்ட நிலைமை இருக்குமானால் இருவரையும் அழைத்துப் பேசி சமரசம் செய்துவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கம் வீட்டுமனை கொடுத்தும் வீடுகள் கட்ட முடியாத நிலையில் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு ஒரு வீட்டிற்கு ஆயிரம் ரூபாய் என்ற வகையில், சென்னை மாநகரத்தில் கட்டுவதுபோல தீப்பிடிக்காத வீடுகளாகக் கட்டுவதற்கு இந்த ஆண்டு 5 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. 60, 65 ஆயிரம் மனைக்கட்டுகள் வீடுகள் கட்டாமல் இருக்கின்றன.

### *Buckingham Canal*

* 580 Q.—**Dr. H. V. Hande** / **Thiru N. Kittappa :** Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether it is a fact that the estimates Committee of Parliament has declared Buckingham Canal, a national waterway;

(b) whether the Estimates Committee of Parliament has suggested an integrated development of Buckingham Canal by this Government and the Government of Andhra Pradesh;

(c) if so, whether this Government has any proposal to negotiate with the Government of Andhra Pradesh in this regard and the details thereof;

(d) whether it is a fact that the Centre has approved a Rs. 40 lakh scheme for certain essential improvements to Buckingham Canal; and

(e) whether this sum is included in the State's estimate of Rs. 4.7 crores?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :**

(அ) பக்கிங்காம் கால்வாயைத் தேசிய நீர்வழியாக அறிவிப்பது குறித்தும் கருதிப் பார்க்கப்படவேண்டும் என்று 1968-69-ம் ஆண்டுக்கான மக்கட் பெருமன்ற மதிப்பீட்டுக் குழு இந்திய அரசுக்குப் பரிவுரை செய்துள்ளது.

(இ) பக்கிங்காம் கால்வாய் முழுவதையும் மேம்படுத்துவதற்கான ஒருங்கு இணைந்த திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு இன்றியமையாத் தேவை உள்ளதென்று மதிப்பீட்டுக் குழு தனது அறிக்கையில் வற்புறுத்தியுள்ளது. மேலும், கால்வாயின் நீண்டகால மேம்பாட்டிற்கான திட்டத்தின் தொழில் நுட்ப, பொருளாதார வாய்ப்பு குறித்த திட்ட அறிக்கை தயாரிக்கப்பட வேண்டுமென்றும், அதன் பிறகு இத்திட்டத்தை மேற்கொண்டும் ஆய்வு செய்வதற்காக ஆய்வுக்குழு ஒன்று ஏற்படுத்தப்படவேண்டுமென்றும் கருத்து தெரிவித்துள்ளது.

(உ) இது தற்போது, அரசின் பரிசீலனையில் உள்ளது.

(எ) ஆம். இக்கால்வாய்களுக்குச் செய்ய வேண்டிய பெரும் மேம்பாடுகள் குறித்து இறுதி முடிவு எடுக்கப்படுவதை எதிர்பார்த்து, இக் கால்வாயில் சில சிறு மேம்பாடுகளை இந்திய அரசு நான்காவது திட்டத்தில் தாற்காலிகமாக ரூபாய் 40 லட்சம் ஒதுக்கலாம் என்று குறிப்பிட்டது. அதன்படி ரூ. 44 லட்சம் செலவில் கால்வாயில் சிறு மேம்பாடுகள் செய்வதற்கான திட்டத்தை நிறைவேற்ற இந்த அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

(ஐ) கால்வாயில் பெரும் மேம்பாடுகள் செய்வதற்காக மாநில அரசு தயாரித்துள்ள ரூபாய் 4.7 கோடி திட்ட மதிப்பீட்டில் இந்தத் தொகை சேர்க்கப்படவில்லை.

DR. H. V. HANDE: Sir, in view of the importance of this particular scheme and in view of the fact that the State Government have to play an important role in the execution of the scheme, will the Government get in touch with the Centre to follow up the developmental work already initiated by this Government—certain areas are being repaired and bunds have been erected—so that proper liaison and co-ordination may take place between the State Government and Centre?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே 26—2—70-ல் திரு. கே. விநாயகம் அவர்கள் கேட்ட துணைக்கேள்விக்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று சொன்னேன். தலைமைப் பொறியாளர் அவர்களையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் வைத்து பேச்சுவார்த்தை நடத்த இருக்கிறோம். மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் கூவம் நதி, பக்கிங்காம் கால்வாய் இவற்றைச் சீராக்குவதுபோல தஞ்சை மாவட்டத்திலுள்ள வேதாரண்யம் கால்வாயைப் புதுப்பிக்கும் திட்டம் அரசாங்கத்திடம் இருக்கிறதா?

(விடை இல்லை)

THIRU K. VINAYAKAM: Sir, while executing the improvement to the Buckingham Canal which happens to be an inter-State waterway, is it necessary for the Government to acquire any lands adjacent to the Canal so as to widen the canal. Also while deepening the canal, how do the Government propose to dispose of the earth which is saline and if it is thrown on the agricultural land, crops would be spoiled. That is the complaint of the agriculturists. So, what is the proposal that the Government have got in this respect?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, இறுதி வடிவம் இன்னும் கொடுக்கப்படவில்லை. அப்படி இறுதி வடிவம் கொடுக்கப்படுகிற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்துக்களை மனதிற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, பக்கிங்காம் கால்வாய் [illegible]மைப்பிற்காக நமது அரசு சில முக்கியமான திட்டவேலைகளை மேற்[illegible] வருகிறது. இதேபோல ஆந்திர மாநிலத்திலும் இந்தக் [illegible] சீரமைக்க என்னென்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? [illegible] மாநிலத்திலும் இப்படிச் சீரமைப்பு செய்தால்தான் நல்ல [illegible] என்பதை உணர்ந்து, ஆந்திர அரசை நமது அரசு [illegible]?



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, இது குறித்து ஆந்திர மாநில அரசிடம் தொடர்பு கொள்ளப்பட்டிருக்கிறது. நமது தலைமைப் பொறியாளர் அவர்கள் ஆந்திர மாநில தலைமைப் பொறியாள ருடன் தொடர்புகொண்டு தேவையான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு திட்டங்களைச் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, what is the total length of the Canal and how much of the Canal lies in Andhra Pradesh and how much in our State? Also do this Government expect sharing of the cost from the Government of Andhra Pradesh on the basis of the length of the canal or on the basis of the total cost?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: The Buckingham Canal runs for 100 miles in Tamil Nadu. The length of the north canal is 36 miles and that of the south canal is 64 miles.

* 581 Q.—DR. H. V. HANDE;
THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: } Will the
THIRU K. VINAYAKAM.
Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether this Government has any intention to expand the bridge across Buckingham Canal on Ramakrishna Mutt Road, Mylapore; and

(b) if so, the estimated cost for expanding the bridge and the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) 1969 அக்டோபர் திங்களில் இப்பணிக்கென 15·13 லட்சம் செலவிற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. தற்போது இருக்கும் பாலம் ஒரு பக்கத்தில் 7 அடி அகலமுள்ள நடைபாதை, மற்றொரு பக்கத்தில் 5 அடி அகலமுள்ள நடைபாதையுடன் கூட 27 அடி அகலமுள்ளதாகும். புதுப்பிக்கப்பட்ட பிறகு பாலத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் 8 அடிக்கு நடைபாதையுடன் கூடிய 48 அடி சாலையுடன் 60 அடிக்கு ஒரே ஒரு கண் அகலம் (a single span) உடையதாக இருக்கும். பாலத்தின் செங்குத்துநிலை இடைவெளி குறித்து தலைமைப் பொறியாளருக்கும் (நெடுஞ்சாலை-கிராமப் பணி), தலைமைப் பொறியாளருக்கும் (பாசனம்) இடையே பேசி முடிவு செய்யப்பட்டு வருகிறது.

DR. H. V. HANDE: Sir, in view of the fact that Mylapore and Raja Annamalaipuram areas are also involved, will the Hon. Minister tell us when they are going to start this work and when it is likely to be completed and whether steps have been taken to expedite it?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அதே கருத்துக்காக விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. க. கோமதிசங்கரதீட்சிதர்: தலைவர் அவர்களே, இந்தப் பாலம் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பதால், பிரயாணிகளுக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய நிலையில் இருப்பதால், இந்தப் பாலத்தை அகலப்படுத்த அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இதுகுறித்து நெடுஞ்சாலை-கிராமப்பணி தலைமைப் பொறியாளரும், பாசனம் தலைமைப் பொறியாளரும் கலந்துபேசி முடிவு செய்யப்படு கின்றன. முடிவு விரைவாக எடுக்கப்பட்டு, தக்க நடவடிக்கை எடுக்கப் படும்.

THIRU K. VINAYAKAM : Whereas this Buckingham Canal runs across the City of Madras and whereas there are many bridges over it which are narrow and which are causing inconvenience to pedestrians and wheel traffic, will the Government think of a comprehensive scheme of widening all the bridges where Buckingham canal runs and improving all those bridges? Would it be possible then to negotiate the canal by ferry boats as well as steam boats, if ever we think of launching upon such a thing?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பல கேள்விகளை கனம் உறுப்பினர் அவர்கள் போட்டுவிட்டார்கள். எனவே தனித்தனியாக கேள்வி போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய கேள்வி மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாத காரணத்தினால் என்னால் பதில் சொல்ல இயலவில்லை.

திரு. இராம. அரங்கண்ணல்: எல்லோரும் பாராட்டக்கூடிய அளவிலே கூவத்தைச் சீர்திருத்தம் செய்து வருகிறோம். பக்கிங்காம் கால்வாயையும் திருத்தம் செய்ய இருக்கிறோம். அப்படிச் செய்கிற நேரத்திலே ஆங்காங் குள்ள பல பாலங்கள் கார்ப்பரேஷன் பொறுப்பில் இருப்பதால் கார்ப்பரேஷனோடு தொடர்புகொண்டு அந்தப் பாலங்களையெல்லாம் விரிவுபடுத்துவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அத்தகைய திட்டமும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

### சுற்றுலா செல்லும் மாணவர்களுக்கு பேருந்துகள்

* 582 வினா.—திரு. கரு. சீமைச்சாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சுற்றுலா செல்லும் பள்ளிக்கூட, கல்லூரி மாணவ மாணவிகளுக்கு சர்க்கார் குளுகுளு கார்கள், சொகுசு பஸ்கள் தயாரித்து குறைந்த வாடகையில் தர அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. கே. போஜன்: தலைவர் அவர்களே, குளுகுளு கார்களும், சொகுசு பஸ்களும் இல்லாமலிருந்தாலுங்கூட சர்க்கார் சாதாரண பஸ்களை மாவட்டத்திற்கொன்றாக ஏற்பாடு செய்துகொடுத்தால் படிக்கின்ற குழந்தைகளும் மற்றவர்களும் சுற்றுலா செய்வதற்கு வசதியாக இருக்கும் என்பதால் அதைச் செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மூலக் கேள்வி அரசாங்க பஸ்கள் குறைந்த வாடகைக்குத் தரப்படுகிறதா என்பது. குறைந்த வாடகைக்குத் தரப்படுகிறது. அரசாங்கத்திடம் 30 சீட்டுகள் உள்ள லக்ஸரி கோச் இருக்கிறது. இதைக் குறைந்த கட்டணத்தில் கொடுக்கிறோம். சாதாரண பஸ்களையும் குறைந்த கட்டணத்தில் மாணவர்களுக்குக் கொடுப் பதற்கு ஏற்பாடு செய்கிறோம். மாவட்டவாரியாகக் கொடுப்பதற்குக் குறிப்பு இல்லை.

திரு. நா. காசிராமன்: தலைவர் அவர்களே, அரசாங்கத்திடம் ஏர்-கண்டிஷன் செய்யப்பட்டிருக்கிற, கார்களும் லக்ஸரி பஸ்களும் எத்தனை இருக்கின்றன என்று கூற முடியுமா?



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏர்-கண்டிஷண்டு இல்லை. லக்ஸரிதான் ஒன்று இருக்கிறது.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, மாவட்ட அளவில் பஸ் களைக் கொடுக்க முடியாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கல்வித் திட்டத்தில் சுற்றுலா ஒரு கல்வியாகப் போதிக்கப்படும்பொழுது இதைப்பற்றி மீண்டும் அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாவட்டத்திற்கு ஒரு பஸ் கொடுக்கப்படுமா என்று அவர்கள் கேட்டார்கள். மாவட்ட வாரியாக மாணவர்கள் சுற்றுலா செல்வதற்காகப் பஸ்கள் வேண்டுமென்றால் அந் தந்தக் கல்வி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தமிழக அரசு போக்குவரத் துடன் தொடர்புகொள்வார்களானால் ஏற்பாடு செய்யலாம். இப்பொழுது செய்து வருகிறோம். சாதாரண பஸ்கள் குறைந்த கட்டணத்தில் இப் பொழுது கொடுத்து வருகிறோம்.

திரு. மு. ச. சிவசாமி: தலைவர் அவர்களே, ஐரோப்பிய நாடுகளில் வெளிநாடுகளிலிருந்து சுற்றுப்பயணம் செய்ய வருகிறவர்களுக்காக நவீன வசதிகளடங்கிய பஸ்களை வைத்திருக்கிறார்கள். அதைப்போன்று வெளி நாடுகளிலிருந்து வருகின்ற, வெளி மாநிலங்களில் இருந்து வருகின்ற சுற்றுப்பயணிகளுக்கு நம்முடைய மாநிலத்திலே நவீன வசதிகள் அடங்கிய உல்லாச பஸ்களைத் தயாரிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறார்கள். அங்குள்ள நிலைமைபற்றி எனக்குத் தெரியாது. நம்முடைய நாடு ஏழ்மை நாடு. இந்தியாவிலேயே நம்முடைய அரசுப் போக்குவரத்துதான் வசதிகள் உள்ளதாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

### *State Transport workers*

* 583 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Government has any proposal to conduct classes for State Transport bus conductors as to how they have to move with the public; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறையில் பயணிகள் துணைவர்களாய் (Conductors) நியமிக்கப்படுவோர், நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் 21 நாட்கள் பயிற்சி அளிக்கப்படுகின்றனர். பேருந்துகளில் பயணம் செய்யும் பொது மக்களுடன் பண்புடன் பழகுவதற்கு அப் பயிற்சிக்கால அளவில் போக்கு வரத்துத்துறை அவர்களுக்குப் பயிற்சி அளிக்கின்றது. மேலும் இத்துறையி லுள்ள பொதுமக்கள் தொடர்பு அதிகாரி, தொழிலாளர் கல்வி-மத்திய வாரியத்தினால் நடத்தப்படும் தொழிலாளர் கல்வித் திட்டத்தின்கீழ் பொதுமக்களுடன் தொடர்பு கொள்வது குறித்துத் தொழிலாளர்களுக்கு வகுப்புகள் நடத்துகின்றார்.

DR. H. V. HANDE : In view of the fact that sometimes buses skip over some stops and in view of the fact that this is one of the major complaints among the several complaints, will the Government think of dividing the whole of the complaints into particular groups and evolve a method by which these things could be solved so that there is smooth relationship between conductors and passengers?

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் பஸ் ஸ்டாப் ஓவர் செய்து கொண்டிருக்கின்ற பிரச்சினை இருக்கிறது. இயக்குநர் அவர்கள் பரிசீலித்து வருகிருர்கள். 10 நாட்களுக்குள் இதுபற்றி முடிவு செய்யப்படும்.

* 584 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether porters have been licenced at the long but routes terminus for the convenience of passengers in Madras City?

மாண்புமிகு திரு.எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம். நீள் தொலைப் பேருந்து விரைவு வண்டிகள் நிற்கும் முக்கியமான பேருந்து நிலையங்களில் பயணிகளின் சாமான்களை ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் உரிமம் பெற்ற சுமைக் கூலிகளைத் தமிழ்நாடு போக்குவரத்துத்துறை அமர்த்தியுள்ளது.

திரு என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, இதுபோன்ற உரிமம் பெற்ற சுமைக்கூலிகள் மணங்குக்கு இவ்வளவுதான் காசு பெற வேண்டுமென்ற அட்டவணையிலிருந்தும்கூட சாதாரண மக்களிடத்தில் வற்புறுத்தி அதிகமாகக் கூலி பெறுகிருர்கள். அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் காவலரை நியமித்து ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பாலுக்குக் காவல் பூனை என்ற மாதிரி சொல்கிருர்கள். ஏற்கனவே 50 காசு என்று நிர்ணயித்து இருக்கிறோம். குறிப்பிட்ட புகார் வந்தால் அரசாங்கத்தின் கவனத்திற்கு அதுபற்றிக் கொண்டு வந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா 585 அமைச்சரின் கோரிக்கைப்படி ஒற்றிவைக்கப்படுகிறது.

*Sri Saranatha Perumal temple at Tirucherai.*

* 586 *Q.*—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) whether it is a fact that a Trustee has been appointed for Sri Saranatha Perumal temple at Tirucherai in Kumbakonam taluk by the Commissioner, Hindu Religious and Charitable Endowments in the month of March, 1969; and

(*b*) whether the said trustee was an existing lessee of certain portions of lands of that temple?

மாண்புமிகு திரு. கே.வி. சுப்பையா: (அ) ஆம். இந்து சமய அறக் கட்டளை ஆணையாளரின் 1969-ம் ஆண்டு மார்ச் மாதம் 22-ம் தேதி நாளிட்ட ஆணையின்படி, 3 ஆண்டுக் காலத்திற்கு கோயிலின் அறங்காவலராக திரு டி. எஸ். கோவிந்தராஜன் நியமிக்கப்பட்டார்.

(இ) மேற்சொன்ன அறங்காவலரின் நியமன நாளின்போது நிலம் தொடர்ந்து குத்தகையில் இல்லை என்று அறிவிக்கப்படுகின்றது.

திரு. நா. காசிராமன்: தலைவர் அவர்களே, அந்த டிரஸ்டியானவர் நியமனம் செய்யப்படும் காலத்திலே அவர்களுக்கு கோயிலுடன் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்று சொன்னுர்கள். ஆனல் அந்த நபர் கோயிலிலிருந்து நிலத்தைக் குத்தகைக்கெடுத்து அனுபவித்துக் கொண்டிருந்தார் என்பது எல்லோருக்கும் தெரிந்தது. கோயில் நிர்வாகத்தினருடன் ஒப்பந்தம் செய்த லீஸானது கோயிலின் சம்மதத்தின்பேரில் மாற்றப்பட்டிருக்கிறதா? இப்பொழுது யார் பேரில் இருக்கிறது என்று கூற முடியுமா?



மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: தலைவர் அவர்களே, அந்த கோவிந்தராஜன் என்பவர் எட்டு செண்ட் நிலத்தை ஊராட்சி மன்றத் தலைவர் என்ற முறையில் இரண்டு ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு எடுத்து இருக்கிருர். அந்த குத்தகை 29—3—68 டோடு முடிந்து விட்டது. அதன்பிறகு அவர்கள் பேரிலே குத்தகைக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. 10 செண்ட் நிலம் தன்னுடைய சொந்தப் பெயரில் குத்தகைக்கு எடுக்கப்பட்டு 9—3—68 வரையில் அது இருந்திருக்கிறது. ஆனல் அவர் குத்தகைத் தொகை தரவேண்டியதில்லை. தவறுதலாக அவருடைய பெயரிலே டிமாண்டிலே பாக்கியென்று போட்டிருக்கிருர்கள். கோவிந்தராஜன் என்பவருடைய தகப்பனரிடமிருந்த குத்தகை 13—11—68 அன்று பாகப் பிரிவினை செய்யப்பட்டு தம்பி பேருக்குப் பாகப் பிரிவினை செய்து ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. 22—3—69 அன்றுதான் அவர் அறங்காவலராக நியமிக்கப்பட்டிருக்கிருர். அன்றைய தேதியில் அவர் பெயரில் எந்தவிதமான குத்தகையும் இல்லையென்று தெரிகிறது. ஆகையினல் அவர் அறங்காவலராக நியமிக்கப்பட்டதில் எந்தவிதமான தவறும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*Brothel cases*

* 587 *Q.*—THIRU T. MARTIN · Will the Hon. the Minister for Religious Endowm[illegible] pleased to state the number of house brothel cases boo[illegible] திரு. present Assistant Commissioner of Police, Vigilanc[illegible] T. MARTI[illegible] East Abiramapuram under the suppression of [illegible] ticles in[illegible]ic Act from the date of his assuming charge of hi[illegible] [illegible] 27th November 1969?

மாண்புமிகு [illegible] கே. வி. சுப்பையா: 1 (ஒன்று)

THIRU [illegible] Sir, being aware of the existing of high-class [illegible] Abhiramapuram and Raja Annamalaipuram, th[illegible] Vigilance, Thiru Rajaram who was working u[illegible] Commissioner of Vigilance,, conducted some raids [illegible] conduct raids in East Abhiramapuram in August, [illegible] October 1969. May I know from the Hon. Ministe[illegible] has booked any cases during this period or if his attemp[illegible] n foiled, may I know the reasons for the same?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தலைவர் அவர்களே, ஹவுஸ் ப்ராத்தல் கேஸ்களைப் பொருத்தவரை இப்போது இருக்கக் கூடிய அசிஸ்டெண்ட் கமிஷனர் அவர்கள் பதவி ஏற்ற தேதியிலிருந்து 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரை 33 கேஸ்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அபிராமபுரத்தில் ஒரு கேஸ் கண்டுபிடிக்கப்பட்டு அது சரியானபடி ப்ரூவ் ஆகவில்லை என்று வித்ட்ரா செய்யப்பட்டிருக்கிறது. 33 கேஸ்களில் 8 கேஸ்கள் கன்விக்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது ; 6 கேஸ்கள் அக்விடெட் ; 2 கேஸ்கள் வித்ட்ரா செய்யப்பட்டிருக்கின்றன. ஒரு கேஸ் ட்ராப் செய்யப்பட்டது.

திரு. இராம. அரங்கண்ணல் : என்னுடைய தொகுதியில் இருக்கும் கிழக்கு அபிராமபுரத்தைப் பற்றிச் சாத்தான்குளம் உறுப்பினர் அதிக அக்கறை இந்த விஷயத்தில் காட்டுகின்ற காரணத்தால் அவரைப் பொதுஜன அதிகாரியாக நியமிக்கின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா?

THIRU K. VINAYAKAM : Any hon. Member who has been elected to this House can ask any question pertaining to any part of the State. For instance, I can ask a question about a matter concerning Kalignar's constituency.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் கேள்வியை அனுமதிக்கவில்லை.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கேள்வி ரெக்கார்டில் போகுமானால் நானும் அதைப் பற்றிக் கேள்வி கேட்க அனுமதியளிப்பீர்களா? Sir, while answering a question, the Hon. Minister has stated that one case was booked and it was withdrawn. May I know the particulars regarding the name of the accused and also the officer who booked the case and also the circumstances which led to the withdrawal of the case ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மார்டின் அவர்களுக்கு இதிலே தனிப்பட்ட முறையில் புகார்கள் செய்ய வேண்டுமென்றால் சொல்லுவதற்கு ஏராளமான வழிகள் இருக்கின்றன. அந்தப் புகார்களை எழுதித் தருவார்களேயானால் காவல்துறையினர் உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறார்கள், இப்படிப்பட்ட புகார்கள்தான் காவல்துறையினர் எதிர்பார்க்கக் கூடிய ஒன்றாகும்.

THIRU T. MARTIN : Sir, my q... பாட்டா: ப...t been answered. ..........

...வே 50 காசு

...ல் அரசாங்கத்தி...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மு...க நடவடிக்கை ...தில் சொல்லி விட்டாரே.

...று 585 அ...

THIRU T. MARTIN : Sir, my que... the answer given by the Hon. Minister. I am ...nple at Tiruche... a private grievance. The Hon. Minister has sta... withdrawn one case and I want to know the parti...AN : Will th...se...........

...e pleased to st...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ச... ...மைச்சருக்குப் பதிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்... Trustee has ...துவிட்டார்கள். உங்கள் கேள்விக்கு விடை வர வேண்டுமெ... Tiruchera ...க்க முடியாது. விடை கொடுக்க வேண்டுமென்று மாண்புமி... Religio...ர்களை வற்புறுத்தவும் முடியாது.

1969

* 588 *Q.*—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the number of Hotel brothel cases booked by the present Assistant Commissioner of Police, Vigilance, Madras under the Suppression of Immoral Traffic Act in Madras from the date of his assuming charge of his present post till 27th November 1969.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : 1 (ஒன்று).

THIRU T. MARTIN : Sir, the Hon. Minister has stated that one case which was booked under the Suppression of Immoral Traffic Act has been withdrawn. May I know the reasons for the withdrawal of that case?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: இரண்டு கேள்விகளும் அநேகமாக ஒன்றுதான். சாட்சிகள் விசாரிக்கப்பட்டு ருசுவு ஆகாத காரணத்தால் [illegible] செய்யப்பட்டது என்பதை ஏற்கனவே நான் சொல்லியிருக்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

### (அ) திரு. பி. வேலுசாமி அவர்கள் கொடுத்திருந்த அவையுரிமைக் கேள்வியை வற்புறுத்தாததும், அதன்மீது மேல் நடவடிக்கை எடுக்காததும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் வேலுசாமி அவர்கள் ஒரு உரிமை பிரச்சினையை எழுப்பி 1970-ம் ஆண்டு மார்ச் மாதம் 24-ம் தேதியிட்டு அனுப்பி இருந்தார்கள். 1970-ம் ஆண்டு மார்ச் மாதம் 28-ம் தேதியிட்ட கடிதத்தில் திரு. வேலுசாமி அவர்கள் அந்த உரிமைப் பிரச்சினையை வற்புறுத்தவில்லை என்று தெரிவித்திருப்பதன் காரணமாக அதன்மீது மேல் நடவடிக்கை தேவை இல்லை யென்று தெரிவிக்கிறேன்.

## 3. முதலமைச்சர் கூறாததைக் கூறியதாக திரு. க. ர. நல்லசிவன் அவர்கள் கூறியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் இந்த அவையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிக்கையை யொட்டி கருத்தை வழங்கும் நேரத்தில் இந்த அவையில் முதலமைச்சர் அவர்கள் கூறாத ஒன்றை உறுப்பினர் அவர்கள் கூறினார்கள் என்று எடுத்துக்காட்டி அதற்கு அவர்கள் சமாதானம் அளிக்க ஒரு வாய்ப்பளிக்க வேண்டுமென்று நான் கூறியிருந்தேன். இப்போது உறுப்பினர் அவர்கள் இந்த அவையிலே இருக்கும் காரணத்தால் அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் நல்லசிவன் அவர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. க. ர. நல்லசிவன் : பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நடந்த நிகழ்ச்சிகள் கடந்த 1970-ம் ஆண்டு மார்ச் மாதம் 18-ம் தேதியன்று நடந்த விவசாய இயக்கம் சம்பந்தப்பட்டது. முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளின் கோரிக்கைகளான கடன் ஒத்தி வைப்பு, கோவை மாவட்டம் சம்பந்தப்பட்டவரை மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பது சம்பந்தமாக யோசனை செய்து இரண்டு கோரிக்கைகளையும் ஏற்றுக் கொண்டிருப்பதாகப் பத்திரிகையில் படித்தேன். ஆகவே, முன்னால் நடந்ததை மீண்டும் நினைவுக்குக் கொண்டுவர வேண்டாம்; அதை விட்டுவிடலாம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நடந்த நிகழ்ச்சிபற்றி இந்த அவையில் கருத்துக் கூறுவதற்கில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன வாக்குறுதி கொடுத்தார்கள் என்பது அல்ல இப்போது இருக்கும் பிரச்சினை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே அன்று கூறுகின்ற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினரையும் அவரைச் சார்ந்த கட்சிக்காரர்களைப் பற்றியும், அந்த மாவட்டத்தில் நடந்த போராட்டம் பற்றியும் சில கருத்துக்களைக் கூறினார்கள் என்று அவையிலே சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறாத ஒன்றைக் கூறியதாகக் கூறியிருக்கிறார்கள். அவ்வாறு முதலமைச்சர் அவர்கள் கூறாத ஒன்றைப் பற்றி இந்த அவையிலே எடுத்து சொல்ல வேண்டுமே தவிர, கூறியது பற்றித்தான் உங்கள் கருத்தைச்

[பேரவைத் தலைவர்] [1970 மார்ச் 28

கோவையிலே நடந்த நிகழ்ச்சியைப் பற்றியோ அல்லது அதன்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றியோ கூறுவது இதனுடன் ஒத்து வராது; தொடர்பு இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லாத ஒன்றைச் சொன்னதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அவையிலேயே கூறினார்கள். அது உரிமை மீறிய நிகழ்ச்சி என்று நான் தீர்ப்பளித்திருக்கிறேன். அதைப் பற்றிய விளக்கத்தைத் தர மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்றும் கூறியிருக்கிறேன். அந்த வாய்ப்புதான் இப்போது தரப்பட்டிருக்கிறது. ஆகவே, உறுப்பினர் அவர்கள் அதைப் பற்றி என்ன கூறுகிறார்கள் என்று அறிவிக்க வேண்டும்.

**திரு. க. ர. நல்லசிவன்:** அன்றையதினம் மாண்புமிகு சபைத் தலைவர் அவர்கள் எனக்குச் சந்தர்ப்பம் கொடுத்திருந்தால் தெளிவாக என்னுடைய புகாரைக் கூறியிருக்க முடியும். சந்தர்ப்பம் கொடுக்காத காரணத்தால் சுருக்கமாகத்தான் எனது கருத்தைச் சொல்ல முடிந்தது. எனது கருத்தை முழுமையாகச் சொல்ல முடியவில்லை. அன்று முதலமைச்சர் அவர்கள் பேசியிருக்கும் போக்கை மாத்திரம் வைத்துக் கொண்டு பார்த்தால் ஒன்றை மாத்திரம் குறிப்பிட விரும்புகிறேன். அந்த இயக்கத்தைப் பொறுத்தவரை நான் பூரணமாகக் கலந்து கொண்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்று இந்த அவையிலே கூறியது—

"இதிலே கைது செய்யப்பட்டிருப்பவர்கள் யார் யார் என்று பார்த்தால் குறிப்பிட்ட சில எம்.எல்.ஏ-க்களைத் தவிர, சில முற்போக்குக் கட்சிக்காரர்களைத் தவிர, பெரும்பாலான மற்றவர்கள் இந்த மின் கட்டணத்தால் பாதிக்கப்பட்டவர்களா என்று பார்க்கும் போது மன்றாடியார், சமத்தூர் ஜமீன்தார், வேட்டைக்காரன்புதூர் ஜமீன்தார் ஆகிய இவர்கள்தான்—பாவம், இந்த ஏழைகள் இந்த மின் கட்டணத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.."

அதிலே, போராட்டத்திலே கலந்து கொண்ட எம்.எல்.ஏ.க்களைப் பற்றியோ, முற்போக்குக் கட்சிக்காரர்களைப் பற்றியோ குறைவாகப் பேசவில்லை. அவர்களுக்கு ஒரு உயர்வு கொடுத்து அவர்களோடு வேறு சிலர் கலந்து கொண்ட காரணத்தைக் கூறியிருக்கிறார். அடுத்து வரும் தொடரிலே முதலமைச்சர் அவர்கள் கூறும்போது—

"....பி.எஸ்.பி.யும் மற்ற சில முற்போக்குக் கட்சிகளும் அங்கே இணைந்திருக்கின்றன என்றாலும் இதிலே மற்றவர்கள் கலந்து கொண்டிருப்பதற்கு முக்கிய காரணம் உச்ச வரம்புச் சட்டம்" என்று கூறியிருக்கிறார். முதலமைச்சர் அவர்கள் உச்ச வரம்புச் சட்டத்தைக் காரணமாகக் காட்டும்போது பி.எஸ்.பி-யையும், முற்போக்குக் கட்சிக்காரர்களையும் காட்டவில்லை; மற்றவர்களைத்தான் காட்டுகிறார். அப்படி இருக்கும்போது மாண்புமிகு உறுப்பினர் நல்லசிவன் அவர்கள் பேசும் போது "முதல் அமைச்சர் இங்கே பேசும்போது எங்களுக்கு மாசு கற்பிக்கும் முறையில் பேசியிருக்கிறார்கள்........முதலமைச்சர் அவர்கள் எங்களை நிலச்சுவாந்தார்கள் கையாட்களாக உபயோகித்தார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்" என்று இந்த அவையிலே கூறியிருக்கிறார். இது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லாத ஒன்று என்பது தெளிவு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லாத ஒன்றை இந்த அவையிலே உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அன்று பேரவைத் தலைவர் வாய்ப்புக் கொடுக்கவில்லை என்றெல்லாம் சொல்லுவது சரியல்ல. கொடுத்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு இப்படிப்பட்ட குற்றச்சாட்டைக் கூறியிருக்கக் கூடாது. அதற்குத் தங்களுடைய சமாதானம் என்ன என்பதை மட்டுந்தான் உறுப்பினர் அவர்கள் இப்பொழுது கூற வேண்டும்.



1970 மார்ச் 28]

**திரு. க. ர. நல்லசிவன்:** எங்களை என்று குறிப்பிடும்போது அந்த இயக்கத்தைத்தான் குறிப்பிடுகிறேன். தனிப்பட்ட முறையில் இடையாது. ஒருசில உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். என்னைக் கொஞ்சம் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தேசிய இயக்கம் நடந்தபோது டாடாக்கள், பிர்லாக்கள், ஜமீந்தார்கள், ஜாகீர்தார்கள் எல்லாம் பங்கெடுத்துக் கொண்டார்கள். அதற்காக அந்த இயக்கத்தைப் பார்த்து டாடா இயக்கம் என்றோ, பிர்லாவைப் பாதுகாப்பதற்கான இயக்கம் என்றோ கூற முடியாது. முதலமைச்சர் அவர்கள் வேண்டுமென்று சொன்னார்களோ, எப்படிச் சொன்னார்களோ, தெரியாது.

உண்மையில் நடந்தது என்னவென்றால் பட்டகார் வந்திருந்தார்கள் பல்வேறு நில வசதி படைத்த இன்றைக்கு முதல் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் நிலச்சீர்திருத்தத்தை மாற்றியமைக்கவேண்டும் என்று சொல்லக்கூடிய நண்பர்கள் எல்லாம் வந்திருந்தார்கள். குறைந்தபட்சம் ஒரு பத்தாயிரம் பேர்கள் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அங்கு நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றிய விவரங்கள் தேவை இல்லை. அவையில் நடந்ததைப் பற்றியதன் விளக்கம்தான் தேவை.

**திரு. க. ர. நல்லசிவன்:** சட்டசபை நடவடிக்கைகள் பற்றி குறிப்பேட்டில் இருப்பதைக் கூறுகிறேன். முதல் அமைச்சர் அவர்கள் பேசும்போது, "இதை முதல் ஆரம்பமாக வைத்துக்கொண்டு உச்ச வரம்புச் சட்டத்தை எதிர்ப்பதற்கான முயற்சியைத் தூண்டி விவசாயிகளுடைய படையைத் தயாரிப்பது என்று திட்டம் தீட்டியிருக்கிறார்கள்." என்று சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் கலந்து கொண்டவுடன் அப்படிப்பட்ட கருத்து இருந்திருந்தாலும் அதைச் செயல்படுத்த முடியாது. முதல் அமைச்சர் அவர்கள் எங்களுக்கு மதிப்பு கொடுத்தே சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் அந்த இயக்கத்தில் அவர்களோடு நாங்களும் சேர்ந்துகொண்டு . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நல்லசிவன் அவர்கள் வெளியில் நடந்த போராட்டத்தில் யார்யார் கலந்து கொண்டார்கள். எந்தெந்த நோக்கத்தோடு கலந்து கொண்டார்கள் என்பதைப்பற்றியெல்லாம் விவாதிக்க இந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொள்ள முடியாது. அவர்களுக்குக் கொடுத்திருக்கிற வாய்ப்பெல்லாம் முதல் அமைச்சர் அவர்கள் இந்த அவையில் அதைப் பற்றி ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கருத்தையொட்டி உறுப்பினர் அவர்கள் இந்த அவையில் அவர்களுடைய கருத்தைத் தெரிவிக்கும்போது முதல் அமைச்சர் அவர்கள் சொல்லாத ஒன்றை சொல்லியதாக அங்கு குற்றஞ் சாட்டியிருக்கிறார்கள். அது தெளிவாக இருக்கிறது. அதை இப்போது அவையில் படித்தேன். அதையொட்டி அவர்கள் கூறிய இரண்டு தொடரை எடுத்திக் காட்டியிருக்கிறேன். ஆகவே சொல்லாத ஒன்றைச் சொல்லியதாகக் கூறியிருப்பதால் அது உரிமையை மீறிய நிகழ்ச்சிதான் என்றாலும் அவர்கள் அந்த நேரத்தில் அவையில் இல்லாததால் அவர்களுக்கு ஒரு வாய்ப்பளிக்க வேண்டுமென்ற காரணத்தினால் அதன் மீது முடிவு அளிப்பதை நிறுத்தி வைத்திருக்கிறேன். அந்த வாய்ப்பை இப்போது கொடுத்திருக்கிறேன். அங்கு நடந்த போராட்ட விவரங்களைக் கூற இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது. இதைப்பற்றி தாங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

**திரு. க. ர. நல்லசிவன்:** முதல் அமைச்சர் அவர்களின் கருத்தை விளக்கிச் சொல்ல எனக்கு சந்தர்ப்பம் கொடுக்கவில்லை. அதன் விளைவாக இரண்டொரு வார்த்தைகளை வைத்துக் கொண்டு என் மீது உரிமைப் பிரச்னை எழுப்பப்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் முதல் அமைச்சர் அவர்கள் வேண்டுமென்றே கேவலப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள் என்ற நோக்கில் சொல்லவில்லை. முதல் அமைச்சர் அவர்கள் கூறியதைப் பற்றி நான் நிச்சயமாக விளக்கியிருக்கிறேன்.

நேரம் இருந்தால். நான் என் மனச்சாட்சிப் பிரகாரம் சொல்கிறேன். அந்தமாதிரி என்னைப் பேச விட்டிருந்தால் கருத்து வேறுவிதமாக மாறியிருக்கும். அதற்கான காரணங்களை விளக்கியிருக்கிறேன். இதன் மீது எந்தக் கருத்தையும் நான் சொல்ல விரும்பவில்லை. சபாநாயகர் அவர்கள் என்ன நடவடிக்கைகள் எடுக்க விரும்புகிறார்களோ அந்த நடவடிக்கைகளை எடுப்பதைப் பற்றி எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதன் மேல் உள்ள தீர்ப்பை நான் திங்கட்கிழமை அன்று கூறுகிறேன்.

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்களுடைய கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒத்திவைக்கப்பட்டது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 41-வது விதியின்கீழ் உறுப்பினர் திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்கள் நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒத்திவைக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக அதை ஒத்திவைக்கிறேன்.

## 4. கவன ஈர்ப்பு

### முப்பிலிப்பட்டி கிராமக் கோவில் கிணற்றிலிருந்து அரிசனங்கள் தண்ணீர் எடுக்க அனுமதிக்காதது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு. எம். முத்தையா அவர்கள் மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு அவசர உடனடி பொது முக்கியம் வாய்ந்தக் காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

**திரு. மு. முத்தையா :** தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், ஒட்டபிடாரம் உபவட்டம், முப்பலிப்பட்டி கிராமத்தில் கோவில் கிணற்றில் மற்ற இனத்தாரைத் தண்ணீர் எடுக்க அனுமதிக்கும் அக் கோவில் அர்ச்சகர் அரிசனங்கள் தண்ணீர் எடுக்க அனுமதிக்காதது பற்றியும், அதன் விளைவாக ஏற்பட்டுள்ள இடாபாடுபற்றியுமான அவசரப் பொது முக்கியமான காரியத்தை நான் மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தைச் சேர்ந்த முப்பிலிப்பட்டி சிற்றூரில் 150 அரிசனங்கள் வீடுகளும் யாதவர் வகுப்பைச் சேர்ந்த சாதி இந்துக்களின் 80 வீடுகளும் உள்ளன. கோயில் புறம்போக்கு என்று வகைப்படுத்தப்பட்டுள்ள அரசு நிலத்தில் அமைந்த காமாட்சியம்மன் கோயில் என்கிற கோயில் ஒன்று உள்ளது. மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள நாடார் வகுப்பைச் சேர்ந்தவர்கள் இக்கோயில் தெய்வத்தை வழிபட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. திரு. சக்கரை நாடார் என்பவர் இக்கோயிலின் பூசாரியாக இப்போது பணிபுரிந்து வருகிறார். இந்த சிற்றூரிலுள்ள 4 அல்லது 5 குடிநீர்க் கிணறுகளைவிடச் சிறந்த குடி நீரைத்தரும் வகையில் இக் கோயிலில் குடி நீர்க் கிணறு ஒன்றுள்ளது. அரிசனக் குடியிருப்பில் மற்றொரு குடிநீர்க் கிணறு உள்ளது. ஆனால் இந்த நீர் சற்று உப்புகரிப்பதாகச் சொல்லப் படுகிறது. இக் கோயில் கிணற்றிலிருந்து நீண்டகாலமாகவே வீட்டுக் காரியங்களுக்காக அரிசனங்கள் நீர் எடுத்துவருவதாகச் சொல்லப்படுகிறது. இந்து ஆண்டுகளுக்கு முன்னர் நாடார் வகுப்பு மக்கள் இக்கோயிலையும் கிணற்றையும் அடைத்துச் சுற்றுச்சுவர் ஒன்று கட்டினார்கள்; பின்னர் இக்கிணற்று சுவற்றில் கதவும் அமைக்கப்பட்டது. இக் கிணற்று நீர் பூசைக்குப்





பயன்படுத்தப்படுகின்றதென்ற காரணத்தால் இக் கிணற்றிலிருந்து நீர் எடுப்பது தடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. இக்கதவு அமைக்கப்படுவதற்கு முன், கோயில் சுற்று மதிலுக்குள் நுழைந்து அரிசனங்கள் வழக்கமாக நீர் எடுத்துவந்தனர். கதவு அமைக்கப்பட்டு பூட்டப்பட்ட பின்னர், அரிசனங்கள் இச்சுவரில் ஏறி, நீர் எடுப்பது வழக்கம். கிணற்றுக்கு அருகிலுள்ள சுற்றுச்சுவரின் ஒருபகுதி 23—10—69-ம் நாள் இரவில் இடிக்கப்பட்டிருந்ததாகத் தெரிகிறது. பூசாரி கொடுத்த புகாரின்மேல், இச்சுவரை இடித்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட இக் கிராம அரிசனங்கள் 6 பேர் மீது காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்தனர். அவர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலையாயினர். இது சம்பந்தமாகப் பதிவான வழக்கு, தூத்துக்குடி குற்றத்துறைத் துணை நீதிபதியின் முன்னர் விசாரணையிலுள்ளது.

இக்கோயிலில் நாடார்கள் கொண்டாடும் ஆண்டுத் திருவிழா, 7—3—70-ல் தொடங்கியது; ராமநாதபுரம், மதுரை மாவட்டங்களிலிருந்து பெரும்பான்மையாகவும் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து ஓரளவும் பெரும்பாலும் நாடார்கள் அடங்கிய யாத்திரிகர்கள் இத் திருவிழாவிற்கு வந்து கூடினர். அரிசனத் தலைவர் வடகரையான் என்பவர், இக்கோயில் பூசாரியும் மற்றவர்களும் பூசை நடத்துவதைத் தடைசெய்தும் இந்த ஆண்டுத் திருவிழா கொண்டாடப்படுவதைத் தடுத்தும் கட்டளையிடும்படி தூத்துக்குடி மாவட்ட முன்சீப் நீதி மன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். பூசாரி பூசை நடத்துவார் என்றும் திருவிழா கொண்டாடப்படுமென்றும் அரிசனங்களும் வழிபடலாம் என்றும் ஆனால் இந்த மனுவின் மீது தீர்ப்பு வழங்கப்படும் வரையில் அவர்கள் அக் கிணற்றிலிருந்து நீர் எடுக்கக்கூடாதென்றும் இந்த நீதிமன்றம் இடைக்கால உத்தரவைப் பிறப்பித்ததாகக் கூறப்படுகிறது. இந்த இரண்டு தரப்பினரையும் நேரடியாகச் சந்தித்து அமைதிக்கு ஊறு நேராமல் மாவட்ட ஆட்சித் தலைவர் எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறார். சட்டம், அமைதியை நிலைநாட்ட இக் கிராமத்தில் காவல் துறையினரும் ரோந்துப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இக் கோயிலில் நாடார் வகுப்பினர் நடத்தும் ஆண்டுத் திருவிழா 9—3—70-ல் முடிந்தது. தகராறில் உள்ள வழக்கு, நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளதென்றும், அக் கிராமத்தில் வேண்டாத நிகழ்ச்சி எதுவும் நடக்கவில்லை யென்றும் இப்போது நிலைமை அமைதியாக உள்ளதென்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஒட்டப்பிடாரம் ஊராட்சித் தலைவரிடமிருந்தும் முப்பிலிப்பட்டி கிராம மக்களிடமிருந்தும் இதுகுறித்து மனு வந்துள்ளது; திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர், இந்து சமய, அறக் கட்டளைகள் துறை ஆணையர், காவல் துறையினர் ஆகியோரைக் கலந்து இது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது. ஆண்டுக்கு ரூபாய் 200-க்கும் குறைவாக வருமானமுள்ள இக்கோயில் இதுவரையில் இந்து சமய, அறக்கட்டளைகள் ஆட்சித் துறையால் நிர்வகிக்கப்பட்டு வரவில்லையென்று தெரியவருகிறது.

**திரு. மு. முத்தையா :** தலைவரவர்களே, அரிசனங்கள் அந்த கோயிலில் தண்ணீர் எடுக்கலாமா, எடுக்கக் கூடாதா என்பதுதான் முக்கியமான பிரச்னை. மற்ற இனத்தவர்கள் தண்ணீர் எடுக்கும்பொழுது அரிசனங்கள் ஏன் தண்ணீர் எடுக்கக் கூடாது என்பதற்கு அமைச்சரவர்கள் பதில் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா:** தலைவரவர்களே, நான் ஏற்கெனவே அறிக்கை படிக்கும் பொழுது சொன்னேன். அந்த கேஸ் கோர்ட்டிலே இருக்கின்ற காரணத்தால் கோர்ட்தான் அந்தத் தீர்ப்பைக் கொடுக்க வேண்டும். அது சம்பந்தமாக இங்கே கேட்பது சரியல்ல, அதற்குப் பதில் சொல்வதும் அவ்வளவு சரியல்ல என்று கூறிக் கொள்ளுகின்றேன்.

**திரு. மு. முத்தையா :** தலைவரவர்களே, இதை முன்னிட்டு அங்கேயுள்ள போலீஸ் அதிகாரிகள் அரிசனங்களை மிகவும் துன்புறுத்துகிறார்கள். இதை இந்த அவையிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தலைவரவர்களே, அறிக்கையிலேயே சொன்னேன், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், போலீஸ் துறையினரும், இந்து சமய அறநிலையத் துறையினரும் சேர்ந்து அங்கு அமைதி நிலவ ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னேன். அது தொடர்ந்து நடைபெறுவதோடு, காவலும் போடப்பட்டிருக்கிறது.

**திரு. மு. முத்தையா:** தலைவரவர்களே, . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு முறைதான் வாய்ப்பு கொடுக்கலாம், முறைப்படி.

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (இ) பொதுக் கணக்காய்வுக் குழுவிற்குத் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஓர் அறிவிப்பு. 1970-71-ம் ஆண்டுக்குரிய பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு சட்டப்பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு, பதினாறு உறுப்பினர்களும் முறைப்படி நியமனம் செய்யப்பட்டனர். அவர்களின் பெயர்கள் ஆவன:—

1. திரு. என். சங்கரய்யா
2. திரு. ஆ. கு. சுப்பையா
3. திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்
4. திரு. எம். சுரேந்திரன்
5. திரு. பி. ஜி. கருத்திருமன்
6. திரு. தோ. மு. நல்லசாமி
7. திரு. அ. வெ. சுப்பிரமணியம்
8. திரு. இ. ஜயராமன்
9. திரு. எம். கோபால்
10. திரு. க. துரைசாமி
11. திரு. க. ந. இராமச்சந்திரன்
12. திரு. மு. சண்முகம்
13. திரு. து. ப. அழகமுத்து
14. திரு. நா. இருட்டினன்
15. திரு. ம. சொ. கோவிந்தராசன்
16. திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1970—71-ம் ஆண்டு பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன். அவர்களோடு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், மதிப்பீட்டுக்குழுவின் தலைவர் அவர்களும், அவர்களுடைய அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.

மேலும், சட்டப்பேரவையின் 174-வது விதிக்கிணங்க திரு. பி. ஜி. கருத்திருமன் அவர்களை இக் குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.



### (ஈ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனைவரி (இரண்டாம் திருத்த மசோதா)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ் நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனைவரி (இரண்டாம் திருத்த) மசோதாவை இப்பேரவைக்கு அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவை அளித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துகொள்ளுகிறேன்.

## 5 அரசினர் மசோதாக்கள்

### அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனைவரி (இரண்டாம் திருத்த) மசோதா

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனைவரி (இரண்டாம் திருத்த) மசோதாவை இப் பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, இம்மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இம்மசோதா அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

## 6 1969-70-ம் ஆண்டுக்கான செலவு குறித்த இறுதி துணை நிதி அறிக்கை மீது விவாதம்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவரவர்களே, 1969-70-ம் ஆண்டுக்கு 18½ கோடி ரூபாய்க்கு பேரவையின் அனுமதி வேண்டி வைக்கப்பட்டுள்ள இறுதி துணை மதிப்பீடுகள்மீது என்னுடைய பேரியக்கத்தின் சார்பிலே கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களை இந்த மாமன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன்.

இந்தத் துணை மதிப்பீட்டிலே, வறட்சி நிவாரணப் பணிகளுக்காக 18 கோடி ரூபாய் செலவழித்திருப்பதாகவும், அதில் 14½ கோடி ரூபாய் மத்திய சர்க்காரிடமிருந்து மானியமாகவும், கடனாகவும் பெறப்பட்டிருக்கிறது என்ற விவரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் இந்தத் துணை மதிப்பீட்டிலும் வறட்சித் துயர் தணிப்புக்காக 1,28,16,5(0 ரூபாய் நிதி ஒதுக்கம் கேட்கப்பட்டிருக்கிறது. பொதுவாகவே, சென்ற ஆண்டு 18 கோடி ரூபாய்க்கு தமிழகம் முழுவதும் சென்ற ஆண்டு வறட்சி நிவாரணத்திற்காக செலவு செய்யப்பட்டிருப்பதாகவும், அந்தப் பணி ஒழுங்காக, பயனுள்ளதாக ஊழலுக்கு இடமில்லாமலும் பரவலாகச் செய்யப்பட்டிருந்தால் இந்த ஆண்டு தற்போது மாவட்டங்களில் சில இடங்களில் உள்ள வறட்சி இவ்வளவு கடுமையாக இருக்காது என்று பரவலாகச் சொல்லப்படுகிறது. எனவே, வறட்சி நிவாரண வேலை எவ்வாறு நடைபெற்றிருக்கின்றது என்பதை மதிப்பிடுவது பற்றிய மறு பரிசீலனை மிகவும் அவசியமாகிறது. எத்தகைய தவறுகள் எங்கே இழைக்கப்பட்டிருக்கின்றன என்று ஆராயப்பட்டால் இனி செய்யவிருக்கும் வேலைகள் செவ்வையாக இருக்க வசதியாகயிருக்கும். எனவே, மாநிலத்திலே எங்கெங்கு வறட்சி நிவாரண வேலைகள் எந்த அளவுக்கு நடந்தேறியிருக்கின்றன என்பதைப்பற்றி அரசாங்கம் தாமதமின்றி வெளியிடவேண்டுமென்று இந்த மன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்ளுகின்றேன். இராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சி நிவாரண வேலையாக மிகப் பெரிய சமுதாயக் கிணறுகள் தோண்டப்பட்டிருக்கின்றன.

[திரு என். எஸ். வி. சித்தன்] [1970 மார்ச் 28

மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களிலிருந்த வறட்சியைப் பார்வையிடுவதற்காக தமிழக அரசின் தலைமைக் காரியதரிசி திரு. இராயப்பா அவர்கள் சுற்றுப்பயணம் செய்தார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் ஸ்ரீவல்லிபுத்தூரில் 60 அடி ஆழம் தோண்டப்பட்ட கிணறுகளில் தண்ணீர் இல்லையென்றும், 50,000 சமுதாயக் கிணறுகளில் தண்ணீர் இல்லை யென்று அங்கே சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அங்கே அவர்கள் வந்திருந்த சமயத்தில் நேரடியாகவே கடன் தொகைகளைப் பட்டுவாடா செய்துவந்த ரெவின்யூ அதிகாரிகளின் ஊழல்களைப்பற்றி விவசாயிகள் கூறியிருக்கிறார்கள். அதற்காக விசாரணை செய்ய ஏற்பாடு செய்திருப்பதாகத் தலைமைச் செயலாளர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்த விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்பட்டதா? அந்த அறிக்கை கிடைத்துவிட்டதா என்பதைப்பற்றி இந்த மாமன்றத்திற்கு தகவல் கொடுத்தால் மாமன்றம் பெரிதும் மகிழும் என்று கூறிக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, சில மாதங்களுக்கு முன்பு தமிழகத்திலே பரவலாக எல்லா மாவட்டங்களிலும் மழை பொய்த்துவிட்டது. மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் சில பகுதிகளில் வான் பொய்த்திருக்கிறது. தொடர்ந்து இரண்டு மூன்றாண்டு காலமாக பருவ மழை பொய்த்த காரணத்தினால், இந்த ஆண்டு அந்தப் பகுதி இன்னும் கடுமையாக இருக்கிறது. மதுரை மாவட்டத்தில் திருமங்கலம், வேடசந்தூர் போன்ற யிடங்களில் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் அங்கேயிருக்கும் விவசாயப் பெருமக்களும், சாதாரண மக்களும் கடன் வசூலை ஒத்திவையுங்கள், கிஸ்தி வசூலை வஜா செய்யுங்கள், கிராமப் பகுதிகளில் இருப்பவர்களுக்கு வேலைதரும் திட்டங்களை உருவாக்கித்தாருங்கள் என்று கேட்கிறார்கள். அங்கு அரசாங்க உயர்தர அதிகாரிகள் சென்றாலும்சரி, சட்டமன்ற உறுப்பினர்கள் சென்றாலும்சரி, அமைச்சர்கள் சென்றாலும்சரி, அவர்களின் கோரிக்கை இதுவாகவே இருக்கிறது. இதையே வலியுறுத்தி வருகிறார்கள். கிஸ்தி வஜா செய்வது கலெக்டரின் அதிகாரமாகயிருந்தாலும் மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், போதிய அளவிற்கு வஜா அளிக்கப்படவில்லை. எனவே, அதற்கு உடனடியாக உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்று இந்த மன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பாதிக்கப்பட்ட இடங்களில் கடன் வசூலை ஒத்தி வைக்க வேண்டுமென்று மேலவையில் பிரச்னை கிளம்பிய நேரத்தில் முதலமைச்சரவர்கள் ஆறு மாத காலத்திற்குத் தள்ளிப்போடலாமா என்பதைப்பற்றி ஆராயக் கூடிய அளவிற்கு இருப்பதாகக் கூறியதாகப் பத்திரிகைகளில் படித்தேன். ஆறு மாதம் என்றால் போதாது, ஒரு வருஷ காலத்திற்குக் கடன் வசூலை ஒத்தி வைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளுகின்றேன். வறட்சிப் பகுதிகளிலேயிருக்கும் மக்கள் வறட்சியின் காரணமாக ஓரிடத்திலேயிருந்து இன்னொரு இடத்திற்குக் குடிபெயர்ந்து போகாமல் செய்ய இந்த நடவடிக்கையை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சென்ற ஆண்டு வறட்சி நிவாரண வேலைகள் பலயிடங்களில் நடைபெற்றிருக்கின்றன. ஆனால், அரசாங்கம் அதைத் தொலைதூர நோக்கோடு செய்யவில்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பலயிடங்களில் சென்ற ஆண்டு நடைபெற்ற பணிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை என்று நினைக்கிறேன். அரசாங்கத்தின் அனுமதியோடு செய்யப்பட்ட வேலைகளுக்கு, முடிக்கப்பட்ட வேலைகளுக்கு இன்னும் பணம் கொடுக்கப்படவில்லை. பல மாதங்களாகக் கொடுக்கப்படாமலிருப்பதாக அறிகிறேன். எனவே, இன்னும் எவ்வளவு தொகை கொடுக்கப்பட வேண்டியிருக்கிறது, எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது, எப்பொழுது பாக்கித்தொகை வழங்கப்படும் என்ற விவரங்களை அரசாங்கம் சொன்னால் இந்த மாமன்றம் மிகவும் நன்றியுடையதாகவிருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.



1970 மார்ச் 28] [திரு. என். எஸ். வி. சித்தன்]

சட்டமன்றத்தில் இரண்டு நாட்களுக்கு முன்பு நிதியமைச்சரவர்கள் புதிய லாட்டரிச்சீட்டு நிலைமைகளைப்பற்றிய திட்டத்தை அறிவித்தார்கள். அதிலே புதிய பரிசு திட்டமாக சிறப்புப் பரிசுத் திட்டத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டு சௌமிய ஆண்டு, அடுத்த ஆண்டு சாதாரண ஆண்டு. சாதாரண ஆண்டிலே இந்த அசாதாரண பரிசுத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். பெரிய பரிசை அறிவித்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். முன்பு ஒரு கோடி ரூபாய் வசூலில் 35 இலட்சம் ரூபாய் பரிசாகக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த முறை 2 கோடி ரூபாய் வசூலில் 60 இலட்சம் ரூபாய்தான் கொடுக்கப்போவதாகயிருக்கிறது. முன்பு கொடுத்து வந்த கணக்குப்படி பார்த்தால், இந்த முறை 70 இலட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும். ஆனால் அதில் 10 இலட்சம் ரூபாய் குறைவாக கொடுக்கவிருக்கிறது. எனவே, அரசாங்கம் இதில் லாப நோக்கோடு செயல்பட்டுக்கொண்டிருக்கிறதோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்ட விவாதம் நடந்தபொழுது ஆண்டு ஒன்றுக்கு 5 இலட்சம் வருமானமுள்ளவர்கள் கட்டும் வரியை, மேல் வரியை ரத்து செய்ய வேண்டுமென்று பலரும் வற்புறுத்தினார்கள். அன்று அறிவித்த அமைச்சரவர்கள் 7½ சதவீதம் என்பதை 5 சதவீதமாக குறைப்பதாக அறிவித்தார்கள். இது எப்படியிருக்கிறதுயென்றால், ஒட்டகத்தின் மேல் பாரத்தை ஏற்றிவிட்டு அதற்கு முன்னாலே ஒரு கல்லை எடுத்துப்போட்டு பளுவைக் குறைத்ததாக அதற்குக் காட்டுவதற்கு ஒப்பாகும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். பொதுவாகவே விலைவாசி உயரும் என்று கருதப்படும் இந்த நேரத்தில் இதுபற்றி அரசாங்கம் மீண்டும் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, துணை மதிப்பீட்டிலே, போக்குவரத்துத்துறையின் முற்பகல் 10-30
தொழிலாளர்களுக்கு நாட்படி வீதங்கள், இரவுத் தங்கல் படி முதலிய வற்றை உயர்த்துவதற்காக ஏறத்தாழ 40·59 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் வேண்டப்பட்டிருக்கிறது. இந்த மன்றத்திற்கு ஒரு செய்தியைக் கூற விரும்புகிறேன். 1966-ஆம் ஆண்டு இறுதியிலேயே தமிழக அரசு போக்குவரத்துத்துறைக்கு 400 புதிய 'சாஸிஸ்' வாங்க திட்டமிடப்பட்டது. அதற்காக 1968-69 நிதிநிலை அறிக்கையில் ரூ. 40 இலட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. 1968-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23-ம் தேதியில் போக்குவரத்து இலாகா டைரக்டர் நெ. 79346 எம். டி. என்ற எண்ணிட்ட கடிதத்தில் 244 லேலண்ட் சாஸிஸ்களும் 159 பென்ஸ் வாங்கலாமென்று அரசுக்கு எழுதியுள்ளார்கள். அரசாங்கம் உடனடியாக புதிய வண்டிகள் வாங்க உத்தரவிடவில்லை. 10 மாதங்கள் வரையில் பேரம் நடந்தது. 1969-ம் ஆண்டு ஜூன் மாதம் 26-ம் தேதியிட்ட 558 எண் ஆணையின்படி 403 பஸ்கள் தேவையாகி, 118 லேலண்டு சாஸிஸ்கள்மட்டுமே வாங்கப்பட்டன. பின்னாலே 8 மாதங்கள் கழித்து 1970-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ம் தேதியில் 9243 டி.பி.டி. என்ற அரசாணையின்படி 85 லேலண்டு வண்டிகளும், 200 பென்ஸ் வண்டிகளும் வாங்கப்பட்டன. ஆக, 403 வண்டிகள் வாங்கியதில், இரண்டு ஆண்டு இடைவெளி விட்டு வாங்கப்பட்டிருக்கிறது. காலதாமதத்திற்குக் காரணம் என்ன என்பதை அரசு அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ ஒரு பெரிய விஷயத்தைச் சொல்லியமாதிரி சொல்லக் கூடாது. இதில் என்ன தப்பு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பாக எடுத்துச் சொல்லவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசாங்க பைல்களிலிருந்தே குறிப்புகளைச் சொல்வதுபோல் சொல்கிறார்கள். இதிலிருந்தே அரசாங்கம் ரொம்பவும் வெளிப்படையாக நடந்துகொண்டிருக்கிறது என்பதுதான் பொருள். இதிலே எந்தவிதமான தவறும் இல்லை. இதில் என்ன கோளாறு என்பதை எடுத்துச்சொல்லவேண்டும்.

அதுதான் முறையே தவிர, சந்தேகத்தை தூவுகிற மாதிரி தூவிவிட்டுப் போய்விடக்கூடாது. இவைகளெல்லாம் நேரத்திற்குத் தகுந்தமாதிரி, நிலைமைகளுக்குத் தகுந்தமாதிரி செய்யப்படுகிறது. இதிலே என்ன தாறுமாறாக நடந்திருக்கிறது என்பதை குறிப்பாக எடுத்துச் சொல்ல வேண்டுமே தவிர, பொதுவாக ஒரு தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்துவது நியாயம் இல்லை. இப்படிச் செய்தால் ஏதாவது ஒரு குற்றம் இருந்து அதைச் சொன்னால் கூட, அதற்கு அர்த்தம் இல்லாமல் போய்விடும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : என்னுடைய பேச்சை முழுவதும் பேசி முடிப்பதற்குள் அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுப் பேசிவிட்டார்கள். எங்களுக்குக் கிடைக்கின்ற சாதாரண செய்திகளை அரசாங்கத்தின் முன்னாலே வைக்கிறோம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : லேலண்டு சாலிஸ், பென்ஸ் சாலிஸ் என்ற இரண்டு கம்பெனிகளிடமிருந்து வாங்கப்படுகிறது. லேலண்ட் நம்முடைய மாநிலத்தில் உள்ளது. பென்ஸ் வெளி மாநிலத்திலுள்ளது. இரண்டு வகைகளிலும் நாம் வாங்கிக்கொண்டிருக்கிறோம். ஒரு அபிப்பிராயம் என்னவென்றால், நம்முடைய மாநிலத்தில் இருக்கிற லேலண்ட் சாலிஸ்களை வாங்கலாமா, அல்லது பென்ஸ் சாலிஸ்களை வாங்கலாமா என்பது தான். நம்முடைய மாநிலத்தில் உள்ள லேலண்டு சாலிஸ்கள் இன்னும் நல்ல உறுதியாக இருக்குமா என்றெல்லாம் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. இதைப்பற்றியெல்லாம் நண்பர் காசிராமன் அவர்களுக்குத் தெரியும். இப்படியெல்லாம் முடிவு செய்து பகுதி பகுதியாக வாங்கும்பொழுது காலதாமதம் ஏற்படுகிறது. எனக்குப் பொருள்களைப் பற்றி அதிகம் தெரியாது. இதுதான் இருக்கக்கூடிய நிலைமையே தவிர, அன்றாட நிர்வாக முறையில் நடப்பதை, ஏதோ ஒரு காரியத்திற்காகச் செய்தது, ஒரு எண்ணத்தில் செய்தது என்று பொதுப்படையாகச் சொல்வதில் பயன் இல்லை. அது முறையாகாது. ஏதாவது ஒரு நிலைமை இருக்கும் பொழுது அதை எடுத்துச்சொல்லவேண்டியது தான். ஏதாவது குற்றம்கூட நடைபெறலாம். இல்லை என்று சொல்லவில்லை. எல்லோரும் ரொம்ப அமரர்கள் என்று அர்த்தம் இல்லை. எங்கு குற்றம் இருக்கிறதோ, அதை அழுத்தமாகவும், குறிப்பாகவும் எடுத்துச்சொல்லவேண்டும். பொதுவாக கிடைக்கின்ற செய்திகளை வைத்துக்கொண்டு, ஒரு தவறான எண்ணம் ஏற்படும் வகையில் பேசக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னை மன்னிக்கவேண்டும். நான் மிகவும் அவசியமாக இருந்தால் ஒழிய உறுப்பினர்கள் பேசும்பொழுது குறுக்கிடுவதில்லை. பொதுவாக குற்றச்சாட்டுச் சொல்லி, அதன் மூலம் ஒரு தவறான எண்ணம், வீணான சந்தேகம் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் நான் குறுக்கிட்டேன். தாராளமாக குற்றங்குறைகளை மன்றத்தில் எடுத்துச்சொல்வதற்கு உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது. இல்லாத ஒரு நிலைமையை பொதுப்படையாகக் கூறுவதினால், தப்பு அபிப்பிராயம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகத் தான் நான் இதைச் சொல்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, எனக்கு கிடைக்கின்ற சில செய்திகளை மன்றத்தின் மூலம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டியது என்னுடைய கடமையாகும்...

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நான் மீண்டும் சொல்கிறேன். கிடைக்கின்ற செய்திகளைக் கொண்டு வரவேண்டும். புதியதாக செய்திகள் கூட கொண்டுவரவேண்டும். அரசாங்கம் ஏதாவது தப்புச் செய்தால் அதை எடுத்துக்காட்டுகிற உரிமை கண்டிப்பாக உறுப்பினர்களுக்கு உண்டு. அந்த உரிமையை உறுப்பினர்கள் உபயோகிக்கின்ற நேரத்தில், பொதுப்படையாகச் சொல்வதினால், எந்தவிதமான தப்பு அபிப்பிராயமும் ஏற்பட்டுவிடக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடக்கூடாது என்பது தான் கருத்து.



திரு. என். எஸ். வி. சித்தன் : இம்மாதிரியான செய்திகளைச் சொல்கிற நேரத்தில் அரசாங்கம் அவைகளுக்கு விளக்கம் கூறவேண்டும் என்பது தான் நோக்கம். அரசாங்கத்தில் நடைபெறுகிற தவறுகளை சுட்டிக்காட்ட வேண்டிய பொறுப்பை உணர்ந்துதான், பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற முறையில் நான் இந்தச் செய்திகளைக் கூறுகிறேன். இரண்டு வருடம் காலதாமதம் ஆகியிருக்கிறது. இரண்டு வருடம் காலதாமதம் ஆனதினால், பஸ்களின் விலை கூடிவிட்டது. அரசாங்கத்தில் பொதுமக்களின் பணம் அதிகமாகச் செலவு ஆகியிருக்கிறது. இரண்டு ஆண்டு காலதாமதம் ஏற்பட்டதினால், போக்குவரத்துத் துறையில் 600 தொழிலாளர்கள், ஏறத்தாழ கடந்த 6 மாத காலமாக பாடி பில்டிங் பிரிவில் எந்த விதமான வேலையும் இல்லாமல் பணத்தை வாங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அமைச்சர்கள் இங்கே சொத்துக் கணக்குகளைக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு சட்டத் தொழில் அமைச்சர் அவர்கள் சொத்து விவரக் கணக்கை இங்கே கொடுத்திருக்கிறார். 1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி முடிய என்ற தலைப்பின் கீழ் புஞ்சை ஏக்கர் மனையிடங்கள் 5 என்று போட்டு, 5 ஏக்கருக்கு ரூ. 5,000 மதிப்பு கொடுத்திருக்கிறார்கள். பின்னால் 1968-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி முடிய என்ற தலைப்பின்கீழ் 1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதியில உள்ள அதே சொத்து விவரக் கணக்கை கொடுத்திருக்கிறார்கள். பின்னாலே 1969-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி முடிய என்ற தலைப்பின்கீழ் புஞ்சை ஏக்கர் மனையிடங்கள் 3, மதிப்பு ரூ. 3,000 என்று கொடுத்திருக்கிறார்கள். 1967, 1968-ல் கொடுத்ததைவிட இரண்டு ஏக்கர்கள் குறைத்திருக்கிறார்கள். கடைசியில் பின்னாலே உள்ள குறிப்பில் 'சிங்கம்புணரியில் புஞ்சை நிலம் மனையிடமாக 1·54 ஏக்கர் நில ஆர்ஜிதத்தில் எடுத்துக்கொண்டு தரப்பட்ட தொகை ரூ. 34,000 என்று கொடுத்திருக்கிறார்கள். முதல் ஆண்டுகளில் கொடுக்கப்பட்ட விவரம் 5 ஏக்கர், ரூ. 5,000 மதிப்பு. அதிலே 1·54 ஏக்கருக்கு ரூ. 34,000 தரப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் இது பற்றி விளக்கம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது பற்றி வெளியிலே பரவலாகப் பேசப்படுகிறது, அமைச்சராக இருக்கிற காரணத்தினால் குறைந்த மதிப்புள்ள நிலத்திற்கு அவ்வளவு தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது....

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விளக்கம் கேட்பதற்கு இது அல்ல முறை. கனம் அங்கத்தினர் அவர்கள் நன்றாகத் தெரிந்துகொண்டு பேசவேண்டும். இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளை அள்ளிவீசுவதினால் தலைவராகிவிடலாம் என்று அவர்கள் கருதிவிடக்கூடாது. பேசுவதற்கு முன்னால் நன்றாக விசாரித்துவிட்டுப் பேசவேண்டும். இது போன்ற குற்றச்சாட்டுகளை உறுப்பினர்கள் கூறும்பொழுது, அதை எந்த மாதிரி நாம் விசாரிக்க வேண்டும் என்பதற்கான ஒரு முறையை வகுப்பதற்கு இது ஒரு வாய்ப்பாக இருக்கிறது. அரசாங்கத்திற்காக நிலம் கூடுதல் விலையில் வாங்கப்பட்டது என்பது தான் உறுப்பினர் அவர்கள் கடைசியாகச் சொன்னது. முதலில் சொன்ன குற்றச்சாட்டு, குற்றச்சாட்டு தானா என்பது அவர்களுக்கே புரியவில்லை. அதைப்பற்றி அவர்கள்தான் விளக்கம் சொல்ல வேண்டும். நிலம் இருப்பதை சட்டமன்றத்தில் சொல்கிறோம். அதனுடைய விலை குத்து மதிப்பாக எவ்வளவு வரும் என்று சொல்கிறோம். பின்னாலே விலை கூடுதலாகப் போகிறதா, யாரும் கூடுதல் விலைக்கு வாங்குகிறார்களா என்பதை இப்பொழுதே ஊகித்துக்கொண்டு சொல்ல முடியாது. கூடுதல் விலைக்குப் போனால் சட்டமன்றத்தில் கூடுதல் விலைக்குப் போயிற்று என்று சொல்கிறோம். கனம் அங்கத்தினர் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. முன்னால் சொன்னது மதிப்பு என்ன என்று சுமாராகச் சொல்கிறோம். பின்னாலே விலை போகும்பொழுது என்ன விலை என்ற தகவலை வைத்திருக்கிறோம். எந்தவிதமான

தகவலையும் மறைக்கவில்லை, அப்படி மறைக்காமல் செய்த ஒரு நல்ல காரியத்தைப் பற்றி, கனம் அங்கத்தினர் அவர்கள் ஏதோ ஒரு பெரிய குற்றச்சாட்டு சொல்வதுபோல தவறுதலாகச் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. அரசாங்கத்திற்காக தனிப்பட்டவர்களுடைய நிலம் விலைக்கு வாங்கப்பட்டது என்று அவர்கள் சொல்கிறார்களா? அப்படிச் சொல்லி அதற்கு விளக்கம் கூறவேண்டும் என்று அவர்கள் தப்பித்துக் கொள்வது என்பது வேடிக்கையாக இருக்கிறது. காங்கிரஸ் கட்சி தரப்பிலே அடிக்கடி இப்படிப்பட்ட வாதம் செய்யப்படுகிறது. ஒன்று அங்கத்தினர் அதை வாபஸ் வாங்கவேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். அரசாங்கத்திற்காக கட்டப்படும் வீடுகளுக்காக அரசாங்கப் பணத்திலிருந்து எந்தவிதமான நில ஆர்ஜிதமும சிங்கம்புணரியில் நடக்கவில்லை என்பது என்னுடைய வாதம். இப்படிப்பட்ட கருத்தை அவர்கள் இங்கே சொன்னதினால், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். அவர்கள் கூறியதை சட்டசபை குறிப்பேட்டிலிருந்து எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்தார்கள். இது மாதிரியான குற்றச்சாட்டுகளைக் செய்தால் அதன் மூலம் பெரிய தலைவராகி விடலாம் என்று குறிப்பிட்டார்கள். அது தவறு. காங்கிரஸ் இயக்கத்தில் இருக்கும் கடைசித் தொண்டன் நான். இந்த எண்ணம் என்னுடைய கருத்திலே என்றென்றும் இருக்கிறது. இங்கே குற்றம் சாட்டுகிறேன் என்றால் சில விவரங்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. சில விளக்கங்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றின் அடிப்படையிலேதான் குற்றச்சாட்டுகளை கூறுகிறேன். நில ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. சர்க்கார் ஆர்ஜிதம்....

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறபோது சட்டத்தைத் தெரிந்து கொண்டு பேசவேண்டும். நில ஆர்ஜிதம் என்று சொன்னால், சர்க்கார் மட்டும் ஆர்ஜிதம் செய்வதில்லை. தனிப்பட்டவர்களும் நில ஆர்ஜிதம் செய்கிறார்கள். இந்தச் சாதாரண நிலைமைகளைக் கூடத் தெரிந்துகொள்ளாமல் சர்க்காருக்குத் தான் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்ற முடிவிற்கு வருவது தவறாகும். சட்டமன்றத்தில் இது பற்றி ஏதாவது விளக்கம் வேண்டுமென்றால் உடனடியாக கேள்வி கேட்கலாம். நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது யாருக்காக, என்ன விலைக்கு வாங்கப்பட்டது என்று கேள்வி கேட்கலாம். இந்தச் சாதாரண முறையைக் கூடத் தெரிந்து கொள்ளாமல் குற்றம் சாட்டுவது பொருத்தமானது அல்ல. இருக்கின்ற விவரத்தைச் சொல்லிவிட்டேன். விவரங்களை சரிவரப் புரிந்து கொள்ளாமல், முறையாக கேள்வி கேட்க விருப்பமில்லாமல் எதிர்க்கட்சி உறுப்பினர் ஆளுங்கட்சி அங்கத்தினர்களை, அமைச்சர்களை என்ன கேள்வி வேண்டுமானாலும் கேட்கலாம் என்றால் அது பொருத்தமற்றதாகும். எதிர்க்கட்சி உறுப்பினர் கேள்வி கேட்க வேண்டியதுதான், ஆளுங்கட்சியிலே இருப்பவர்கள் பதில் சொல்ல வேண்டியதுதான். இது பொருத்தமாகும். அதிலேகூட விவரங்களைச் சரிவரத் தெரிந்துகொள்ளாமல் யாரோ தெருவிலே கூறினார்கள் அதைப் பேசுகிறேன், அவர்கள் சொல்லியதைப் பேசுகிறேன் என்று சொன்னால், இந்த மன்றத்திலே இப்படி ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைக் கூறுவது தவறாகும். இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள். அவர் இப்படித் தொடர்ந்து தவறு செய்து கொண்டிருப்பதை அனுமதிக்கப் போகிறீர்களா என்று மாண்புமிகு சபாநாயகரிடம் இருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் இந்தக் குற்றச்சாட்டை கொண்டு வர இருக்கிறார் என்பது எனக்கும் தெரியும், தலைவர் அவர்களுக்கும் தெரியும். நான் விளக்கம் சொல்கிற நேரத்திலே கணக்குக் கொடுக்கப்பட்டிருப்பது சரியான விவரங்களைக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்திலேயே தவிர எதையும் மறைக்க வேண்டுமென்று இல்லை. மாண்புமிகு உறுப்பினர் வேண்டுமென்றே குற்றம் சாட்டுகிற முறையிலே பேசி தவறு செய்துவிட்டார்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். அங்கே 5 ஆயிரம் ரூபாய் போடப்பட்டது மூன்று ஆண்டுகளிலே இவ்வளவு ரூபாய் கூட்டிப் போட்டிருக்கிறார்களே, இது எப்படி விலை கூடிற்று என்று விளக்கம் கேட்கலாம். விளக்கம் கேட்கிற முறை வேறு. மாண்புமிகு உறுப்பினர் கேட்டது நில ஆர்ஜிதம் செய்து இருக்கிறீர்களே, சர்க்கார் இன்ன விலை கொடுத்து இருக்கிறதே, சர்க்காரிலே அமைச்சராக இருக்கிற காரணத்தினாலே இவ்வளவு விலைகொடுத்து விடலாமா என்று கேட்டார்கள். இதை நீங்கள் கேட்டார்கள். நீங்கள் பேசியிருக்கிற பேச்சில் அது இருக்கிறது. வேண்டுமானால் நீங்கள் பாருங்கள். இதைக் கேட்டிருக்கிறீர்கள். அதைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுக்கிறார்கள். அப்படிப்பட்ட குற்றச்சாட்டை சொல்லி இருக்கிறீர்கள். இப்படிக் குற்றச்சாட்டு இல்லாமல் விளக்கம் கேட்கிற முறையிலே சொல்லுங்கள். நான் அமைச்சர் அவர்கள் மீது குற்றம் சொல்ல வேண்டுமென்ற முறையிலே சொல்லவில்லை, விளக்கம் மட்டும் கேட்க விரும்புகிறேன், நான் இந்த அவையிலே அவர்கள் மீது குற்றம்சாட்டி சொன்னதையெல்லாம் திரும்பப் பெறுகிறேன் என்று சொல்லிவிடுங்கள். அமைச்சர் அவர்கள் மீது குற்றஞ்சாட்டுகிற முறையிலே நான் கூறி இருந்தால் திரும்பப் பெறுகிறேன் என்று கூறி விடுங்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** என்னுடைய பேச்சில் அது மாதிரி கூறவில்லை. சொத்துக் கணக்கு விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. முன்னால் நிலத்திற்கு ஒரு விலை போடப்பட்டிருக்கிறது. பின்னால் இப்போது ஒரு விலை கூடுதலான விலை போடப்பட்டிருக்கிறது. நில ஆர்ஜிதம் செய்யும்போது அதிக விலை போடப்பட்டிருக்கிறது. அரசாங்கம் ஆர்ஜிதம் செய்யும்போது அரசாங்கப் பணத்தை..

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆர்ஜிதம் செய்யப்படுகிற நேரத்தில் நீங்கள் அமைச்சராக இருக்கிற காரணத்தினால் அரசாங்கம் பணத்தை இந்த அளவிற்கு அதிகமாகக் கொடுத்துவிட்டது என்ற குற்றஞ்சாட்டுகிற முறையிலே கூறி இருக்கிறீர்கள். இப்படி அதிக விலை கொடுக்கலாமா என்று நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். நீங்கள் பேசிய பேச்சை படித்துப் பாருங்கள். எனக்கு கிடைத்த தகவல் என்று கூறியிருக்கிறீர்கள். நான் இப்படிக்கூறி இருந்தால் அதைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன் என்று கூறி விடுங்கள். தவறான கருத்திலே நான் கூறி இருந்தால், அதை நான் திரும்பப் பெற்றுக்கொள்றேன் என்று தெளிவாகச் சொல்லிவிடுங்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவர் அவர்களே, இதுமாதிரி போட்டு இருக்கிறீர்களே. நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது குறித்து வெளியிலும் பேசிக் கொள்கிறார்கள், இங்கேயும் பேசிக் கொள்கிறார்கள் என்ற விவரத்தைத்தான் சொன்னேனே தவிர, குற்றஞ்சாட்டவில்லை. நில ஆர்ஜிதத்திற்கு முன்னால் உள்ள கணக்கு விவரம் இருக்கிறது. ஆர்ஜிதத்திற்குப் பிறகு உள்ள விவரமும் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் அரசாங்கம் நிலத்தை எடுத்துக் கொள்ளவில்லை, அரசாங்கம் பணம் கொடுக்கவில்லை என்று கூறினார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர் சொல்வது இருக்கட்டும். நீங்கள் சொன்னீர்கள். பொறுப்பு உள்ள அமைச்சராக இருக்கிற காரணத்தினால் இவ்வளவு தொகை கொடுத்து இருக்கிறார்கள். இப்படிக் கொடுக்கலாமா என்று சொன்னீர்கள். கொஞ்ச நேரத்திற்கு முன்னாலே இந்த மன்றத்திலே நீங்கள் கேட்ட கேள்வி அது. அப்படிக் கூறி இருந்தால், திரும்பப் பெற்றுக் கொள்கிறேன் என்று சொல்லுங்கள். அப்படிக் கூறவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. நான் தவறாகக் கூறி இருந்தால், அதைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன் என்று சொல்லுங்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** அவைத் தலைவரவர்களே, இது மாதிரி கொடுக்கப்பட்டிருக்கிறது. அமைச்சராக இருக்கிற காரணத்தினால் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன். நீங்கள் பேசியிருக்கிறீர்கள். அப்படிப்பட்ட குற்றச்சாட்டை சொல்லி இருக்கிறீர்கள். இப்படிப் பேசிய காரணத்தினால், இட்படிச் சொல்லி இருந்தால் அதைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன் என்று சொல்லுங்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: அமைச்சர் அவர்களுடைய நிலத்திற்கு 34 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது நில ஆர்ஜிதத்தில் என்றுதான் கூறி இருக்கிறேன். அமைச்சராக இருக்கிற காரணத்தினால் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாண்புமிகு உறுப்பினர் இப்போதும் தவறு செய்கிறார். ஒரு மதிப்பை முதலில் கொடுக்கிறோம். கொஞ்ச காலத்திற்குப் பிறகு விலை ஏறுகிற காரணத்தினால் மதிப்பு அதிகரிக்கிறது. இப்படி விலை ஏறுவதற்கு சட்டப்படி எந்த விதமான தடையும் இல்லை. இது ஒரு சாதாரண நிகழ்ச்சி. மார்க்கெட் நிலவரப்படி விலை கொடுத்து வாங்கப்பட்டிருக்கிறது. அதைப் பற்றித் தவறாக கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கிறது. எனவே இதை இந்த மன்ற நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை.

விளக்கம் வேண்டுமென்றால் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். ஒரு விஷயத்தைப் பற்றி விளக்கம் வேண்டுமென்று கேட்பது ரொம்ப சாதாரணமானது. யாரிடத்திலும் விளக்கம் கேட்கலாம். மன்றத்தில் கேள்வி கேட்கலாம். அது அழகாக இருக்கும். இதுபற்றி நான் ஒரு சிறு விளக்கம் கொடுப்பது நல்லது என்று கருதுகிறேன். அந்த ஊரிலே பல ஆண்டுகளாக ஒரு கூட்டுறவு சங்கம் இருந்து வருகிறது. அவர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் வீடு கட்டுவதற்கு நிலம் ஆர்ஜிதம் செய்தார்கள். அரசாங்கப் பணத்திலிருந்து அல்ல, கூட்டுறவுச் சங்கத்தின் சொந்தப் பணத்திலிருந்து. அவர்கள் இப்படி நில ஆர்ஜிதம் செய்வதற்கு சட்டப்படி எந்த விதமான தடையும் இல்லை. ஆட்சேபணையும் இல்லை. சர்க்காருக்கும் இதற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. கூட்டுறவுச் சங்கம் நிலம் வாங்குவதற்கு எந்த விலையும் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். கொடுப்பவர்களும், வாங்குபவர்களும் சம்மதப் பட்டால் அரசாங்கம் எதுவும் செய்ய முடியாது. அரசாங்கப் பணம் இதில் சம்பந்தப்படவில்லை. அரசாங்கத்தின் பணம் சம்பந்தப்பட்டதாக உறுப்பினர் அவர்கள் குற்றம் சொல்கிறார்கள். எனக்குத் தெரிந்த சட்ட ஞானத்தின்படி இரண்டு பேர் சம்மதப்பட்டு விட்டால், அதில் மற்றவர்கள் எதுவும் செய்ய முடியாது. அதைத் தடுப்பதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. கொஞ்சம் சட்ட ஞானம் தெரிந்துகொண்டு பேச வேண்டும்.

திரு. கே. விநாயகம்: சப்-ரிஜிஸ்டிரார் எப்படி அதை ஏற்றுக் கொண்டார் என்பது தெரியவில்லை.

What about the latest instructions to the sub-registrars that, if the purchaser and the seller agree and put a lower value in the sale deed, they can set in motion action through the Collector?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாண்புமிகு உறுப்பினரின் குற்றச் சாட்டு குறைவாகப் போடப்பட்டது என்பதல்ல. அமைச்சராக இருக்கிற காரணத்தினால் அதிகம் போட்டு விட்டார்கள் என்று வேண்டுமென்றே மாசு கற்பிக்க வேண்டுமென்ற குற்றஞ்சாட்டியிருக்கிறார். நல்லவர்களும் இருக்கிறார்கள், கெட்டவர்களும் இருக்கிறார்கள். குற்றம் சொல்வதாக இருந்தால் ஆராய்ந்து பார்த்துவிட்டுச் சொல்லவேண்டும். வேண்டுமென்றே புழுதியை வாரி இறைத்து விட்டுப் போய்விடுவதாக இருக்கக்கூடாது. இதுமாதிரி சட்ட மன்ற உறுப்பினர்களின் நிலை இருக்கக் கூடாது. மாண்புமிகு உறுப்பினருக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால், மதுரையைச் சேர்ந்த அவர் இராமநாதபுரம் மாவட்டத்திற்குப்போய் நன்கு விசாரித்து இருந்தால் அவருக்கு உண்மை தெரிந்து இருக்கும். வெளியில்





கேட்டதை எல்லாம் வைத்துக்கொண்டு சட்ட மன்றத்திற்குள் பேசுவ தென்றால் மாண்புமிகு உறுப்பினரையும், இந்தச் சட்ட மன்றத்தையும் பற்றி மக்கள் தவறாக நினைக்க இடம் ஏற்படும். இன்னும் இதில் விளக்கம் சொல்ல வேண்டுமானால், நிலத்திற்குச் சொந்தக்காரர்களாக உள்ள அங்கத்தினர்களிடமிருந்து செண்ட் ஒன்றுக்கு 225 ரூபாய் வீதம் வாங்கப்பட்டது. அதே அங்கத்தினர்களுக்கு திரும்ப நிலம் கொடுக்கப் பட்டபோது செண்ட் ஒன்றுக்கு 450 ரூபாய் வீதம் கொடுக்கப்பட்டது. அந்த அங்கத்தினர்களுக்கு ஒரு பனிஷ்மெண்ட் போல கொடுக்கப் பட்டிருக்கிறது. இதிலே லாபம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இன்னொன்றும் சொல்ல ஆசைப்படுகிறேன், விலை குறைவாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதே ஊரிலே அந்த நிலத்திற்குப் பக்கத்திலே இருக்கும் நிலம் செண்ட் ஒன்று 750 ரூபாய் வீதம் விற்கப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் அவர்கள் புரிந்துகொண்டு விவரம் கேட்டிருந்தால் நன்றாக இருக்கும். இன்னொன்றும் சொல்ல ஆசைப்படுகிறேன், இப்படி எடுக்கப்பட்ட நிலங்களைப் பற்றி ஒரு ரிட் ஐகோர்ட்டிற்கும் போயிற்று. அந்தத் தாவா தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. வேண்டுமென்றே இந்த அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் மீது மாசு கற்பிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப் பினர்கள் குற்றஞ்சாட்டுவது கேடானது, இந்த அவையின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதாக ஆகும். இதை அவர்கள் உணர்ந்து கேட்டால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் கணக்கு பற்றி விளக்கம் கேட்பதிலே தவறு இல்லை. அதிலே ஆட்சேபணை இல்லை. ஆனால் அமைச்சர் அவர்கள் மீது மாசு கற்பிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தக் குற்றச்சாட்டை சாட்டி யிருக்கிறார். அந்த முறையிலே அவர் பேசியிருக்கிறார். அவர் அப்படிப் பேசியது இந்தச் சபை நிகழ்ச்சிக்குறிப்பிலிருந்து நீக்கப்படும்*. அது எந்த எந்தப் பகுதி என்பது அந்த நிகழ்ச்சிக்குறிப்பைத் தொடர்ந்து படித் தால்தான் தெரியும். எனவே அந்தக் குறிப்பிட்ட பகுதிகளைப் பத்திரிக்கைக் காரர்கள் வெளியிட வேண்டாமென்று பத்திரிக்கைக்காரர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அவை எந்த எந்தப் பகுதிகள் என்பதை இந்த நிகழ்ச்சிக்குறிப்பைப் படித்துவிட்டு நாளை கூறுகிறேன்.

THIRU K. VINAYAKAM : On a point of order, Sir. If the Speaker takes objection to some portions of the speech, it has got to be decided here. You cannot ask the Press not to publish till your ruling is given. That is not the way in which it should be done. Either you make up your mind today................... ... .....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விநாயகம் இங்கே இருந்தால் தெரியும். தொடர்ந்து பேசிய பேச்சு இருக்கிறது. குற்றச் சாட்டுப் பகுதி என்ன என்று பார்க்க வேண்டும். மொத்தத்தையும் நீக்கி விடுவதாக இருந்தால், அது இலேசாக முடியும். மாண்புமிகு அமைச்சருடைய சொத்து பற்றி, திரு. சித்தன் பேசிய பகுதியிலிருந்து, அது பற்றிய பேச்சு முடியும் வரையில் நீக்கலாம் என்று கூறிவிட்டால், அதில் விவரம் தெரியவேண்டும். பத்திரிகைகளுக்குச் சொல்ல பேரவைத் தலைவருக்கு உரிமை இருக்கிறது. தவறான பகுதி என்ன என்று நிர்ணயிக்க வேண்டும். இப்பொழுதுதான் குறிப்பு எடுத்துக் கொண் டிருக்கிறார்கள். அது டைப் ஆகி வரவேண்டும். அதைப் பார்த்து, எந்தப் பகுதிகள் நீக்கப்பட வேண்டும் என்பதை பேரவைத் தலைவர் உணர முடியும். பாக்கிப் பகுதியை வைத்துக் கொள்ளலாம். ஆகவே தான், நாளைக்கு அறிவிக்கிறேன் என்றேன். அதற்கும் பேரவைத் தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது. இன்றைக்குப் பேசியதை நாளைக்குக்கூட நீக்கலாம். அதற்கும் பேரவைத் தலைவருக்கு உரிமை இருக்கிறது.

* மாண்புமிகு பேரவைத் தலைவர் 1970-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி அன்று எப்பகுதியும் நீக்கப்படவேண்டியதில்லை என ஆணையிட் டுள்ளார்.

**Thiru K. Vinayakam :** What about the direction to the Press?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சில பகுதிகள் நீக்கப்பட வேண்டும். அந்தப் பகுதிகள் பத்திரிகையில் வெளியிடாமல் இருக்க வேண்டும் என்று சொல்வதற்கும் பேரவைத் தலைவருக்கு உரிமை இருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்தபடியாக, இந்த மாநிலத்தில் காவல் துறையினருக்கு வீடு கட்டிக் கொடுக்கவென்று மனைகள் வாங்கி சிலபல மாதங்கள் ஆகின்றன. ஆனால், அந்த நிலங்களில் வீடுகள் கட்டாமல் இருக்கிறது. உதாரணத்திற்கு கும்பகோணத்தில் அப்படி நிலங்கள் வாங்கி ஆண்டுகள் பல ஆகியும், காவல் துறையினருக்கு வசதி ஏற்படும் வகையில் வீடுகள் கட்டவில்லை. அங்கே முனைப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையைப் பொறுத்தவரையில், சப்-இன்ஸ்பெக்டர்கள் போன்றவர்கள் 10, 15 ஆண்டுகள் ஆகியும், வேறு இடங்களுக்கு மாற்றப் படவில்லை. இங்கேயே இருக்கிறார்கள். அவர்களை வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டும். காவல் துறையில் குறிப்பாக 3 ஆண்டுகள் ஆனால், அவர்களை வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டியது மிக மிக அவசியம். ஏனென்றால் அவர்கள் பொது மக்களோடு அதிகமான தொடர்பு வைத்திருப்பவர்கள், அவர்களுடைய பணி அப்படிப்பட்ட முக்கியமானது. ஆகவே, அவர்கள் அதிகமான அளவில் பொது மக்களோடு தொடர்பு வைக்காமல் இருக்க, அவர்களை மாற்ற வேண்டும்.

அரசாங்கம் போலீஸ் கமிஷனை ஏற்படுத்தியிருக்கிறது. தனிப்பட்ட கான்ஸ்டபிள்கள், ஹெட் கான்ஸ்டபிள்கள், போன்றவர்களுக்கு, நிர்ணயிக்கப்பட்டிருக்கிறபடி மற்றவைகளெல்லாம் குறைவாக இருப்பதால், போலீஸ் கமிஷன் தன்னுடைய டேர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸில் அதையும் பரிசீலனை செய்கிறார்கள் என்று நினைக்கிறேன். அவர்களுடைய சம்பளமும், படியும் நிர்ணயிக்கப்படும் வரையில், இடைக்கால நிவாரணமாக ஒரு தொகையை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. முனு ஆதி:** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற துணை மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த ஆண்டு என்பதைவிட, நடப்பு ஆண்டில் வறட்சி நிவாரணத் திற்காக ஏறக்குறைய 18 கோடி ரூபாய் செலவழித்துப பல நூற்றாண்டு களாக தூர் வாராமல் இருந்த ஏரிகளையும், வெட்டாமல் இருந்த வடிகால்களையும், குடிநீர் வசதியில்லாத கிராமங்களுக்கு குடிநீர் கொடுத்த அரசை நாட்டு மக்கள் நன்றாகப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். 20 ஆண்டு காலமாக ஆண்டவர்கள் மத்திய சர்க்காரிலிருந்து பெறுகின்ற சாமர்த்தியமும் சக்தியும் இல்லாதவர்களாக இருந்து வந்திருக்கிறார்கள். இன்றைக்கு நம்முடைய அரசு கணிசமான தொகைகளைப் பெற்று இருக்கிறார்கள். சென்ற ஒரு ஆண்டு காலத்தில், மத்திய சர்க்காரி லிருந்து ஏறக்குறைய 15 கோடி ரூபாய் மானியமாகவும், கடனாகவும் பெற்றிருக்கிறார்கள். அந்தத் திறமையை ஆண்டவர்கள் பாராட்டுவார்களா என்றால், பாராட்ட மாட்டார்கள்.

இன்றைக்கு பல ஏரிகள் தூர் வாரப்பட்டு, அண்மையில் பெய்த மழையினால், அவற்றில் தண்ணீர் நிறைய நிரம்பி, இரண்டாவது மகசூலுக்குக்கூட தண்ணீர் கிடைக்கும் வகையில் வசதி செய்து கொடுத் திருக்கிறது. பல கிராமங்களில் குடிநீர் இல்லாமல், அவதிப்பட்டவர் களுக்கு, வறட்சி நிவாரணப் பணத்திலிருந்து செலவழித்து மக்களுக்கு நன்மைகளைச் செய்திருக்கிறது. பாதைகளெல்லாம் பழுது அடைந் திருந்ததை, அந்த அந்த கிராமங்களில் சீர்கெட்டிருந்ததை மாற்றி,





பல இடங்களில் நல்லதொரு பாதையை அமைத்துக் கொடுத்தது இந்த ஆண்டில் நம்முடைய அரசு என்றால் அது மிகையாகாது. அதே நேரத்தில் ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தரும் நிதி ஏற்கெனவே இருந்தது போல் ஏதோ அவர்களுக்கு கண் துடைப்பு போல் இருந்த நிலையை மாற்றி, இன்றைக்கு நம்முடைய அரசு பொதுப் பணித் துறை மூலமாக பொறுப்பேற்று செலவழிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதே போன்று, பஞ்சாயத்து யூனியன்களில் தருகின்ற எல்லாப் பணங்களையும், செலவழிக்கும் ஒன்றியங்களுக்குத் தரப்படும் பணம் பற்றாத காரணத்தால் வேலைகளைச் செய்ய முடியவில்லை. ஆகவே, நம்முடைய அரசு அதை மாற்றி, பாதைகளை லிங்க் ரோடுகளை, இண்டர்-வில்லேஜ் ரோடுகளை பொதுப் பணித் துறை எடுத்து நடத்தினால், நம்முடைய அரசுக்கு சிறப்புப் பெயர் கிடைக்கும். இணைப்புப் பாதைகளைப் போட்டு தருவது போன்ற பணிகளை அரசே பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லை என்றால் 374 ஒன்றியங்களில் இருக்கும் நிலை சோதனைக்கு உள்ளாகும். அதற்கு முன்பாகவே அரசு உடனடியாக பொறுப்பு ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மழை பெய்தபோது, பொதுப்பணித் துறை அமைச்சர் தன்னுடைய இலாகா அதிகாரிகளை உற்சாகப்படுத்தி, மழையால் ஏற்பட்ட ஆபத்துக்களை எதிர்பார்த்து, இரவு பகலாக உதவிகள் செய்து, பல ஏரிகளை உடைப்புக்கள் ஏற்படுவதிலிருந்து தடுத்திருக்கிறார்கள். பூண்டி, செங்குன்றம் ஏரிகள் தண்ணீர் நிரம்பி வழியும்போது, உடைந்தால் சென்னைக்கு என்ன ஆபத்து வருமோ என்று மக்கள் பயந்து கொண் டிருந்தபோது, பொதுப்பணித் துறையினர், பொறியியல் அதிகாரிகள் நன்றாகப் பார்த்து செவ்வன செய்த உதவிகளைப் பாராட்ட வேண்டும். எல்லா இடங்களிலும் அவர்கள் பொறுப்போடு, அக்கறையோடு, கவனம் செலுத்தி, செயல்பட்டதற்கு இந்த மன்றமே பாராட்டியாக வேண்டும். சைதாப்பேட்டை டிவிஷனில், என்னுடைய அனுபவத்தை வைத்துப் பார்க்கும்போது, அந்த எக்ஸிக்யூடிவ் எஞ்சினியர் முறையாக செயல்பட்டு, பூண்டி, செங்குன்றம் ஏரிகள் உடையுமோ என்ற ஐயப்பாடு ஏற்பட்ட போது, நன்றாகப் பணிபுரிந்து காத்ததற்கு நிச்சயமாக பொதுப் பணித் துறை அமைச்சரைப பாராட்டவேண்டும்.

எனக்கு முன்னாலே பேசிய நண்பர் சொன்னதற்கு விடை சொல்லியாக வேண்டிய நிலையில் இருக்கிறேன். நாங்கள் எதிர்க் கட்சியில் இருந்தபோது, முறையான ஆதாரமுள்ள குற்றச் சாட்டுக்களைச் சொன்னோம். தப்பிக்க முடியாமல், தவித்து, மந்திரிகள் அப்பொழுது இருந்ததைப் பார்த்தோம். நம்முடைய சக உறுப்பினர்கள், ஆதாரமுள்ள குற்றச்சாட்டுகளைச் சொன்னபோது, அவர்கள் மறுத்துப் பேசவோ, சமாதானம் சொல்லவோ, நடவடிக்கை எடுக்கவோ முடியாமல் இருந்த நிகழ்ச்சிகள் ஏராளமாக இருக்கின்றன. கடந்த ஐந்து ஆண்டுகாலத்தில் அப்படியா? நான் ஒரே ஒரு உதார ணத்தைச் சொல்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

மாதவரம் பால் பண்ணையில் ஆண்டவர்களும் அதிகாரிகளும் கலந்துசெய்த ஊழல்கள் ஏராளம். மனப்பூர்வமாக ஆதாரத்தோடு, அவற்றை எடுத் துக்காட்டியபோது. அன்றைக்கு கக்கன் அவர்கள், சமாதானப்படுத்தி, அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்து, உடனடியாக அத்தனை பேர்களையும் மாற்றினார்கள். அதே போன்று பல உறுப்பினர்கள் எதிர்க்கட்சியிலி ருந்து, அத்தனையையும் ஆதாரங்களோடு எடுத்துக் காட்டினார்கள். இன்றைக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆதாரத்தோடு, குற்றங் களையும் அளவில் இல்லாமல், ஏதோ அள்ளித் தெளித்து விடுவோம், 'பார், பார், நாங்கள் பேசியிருக்கிறோம்' என்று பத்திரிகையில் வரட்டும், என்று இருந்தால், அது பரிதாபத்திற்கு பறைசாற்றிக் கொள்ளலாம் என்று இருந்தால், அது பரிதாபத்திற்கு உரிய ஒன்றாகத்தான் இருக்கும். அமைச்சரவர்கள் பற்றிச் சொல்லும் போது சொன்னார்கள்.

மணலி சுத்திகரிப்பு தொழிற்சாலை இருக்கும் இடம் யாருடையது? இன்றைக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு தெரியாது. ஒரு 10-12 ஆண்டுகளுக்கு முன்னால், அதன் உரிமையாளர், நான் இதற்கான ரெவின்யூ டாக்ஸ் கட்டமுடியவில்லை, அரசாங்கமே எற்றுக்கொள்ளட்டும் என்றபோது, அன்றைக்கு அரசாங்கம், லாண்ட் ரெவின்யூவை இழக்கக்கூடாது என்று எடுக்கத் தயாராக இல்லை. இன்றைக்கு அதே இடத்தை ஆயில் ரிபைனரி இலாகா மத்திய சர்க்காரைச் சேர்ந்தவர்களுக்கு பல லட்சங்களுக்கு விற்கப்பட்டிருக்கிறது. இதை நாடும் அறியும், எல்லோரும் அறிவார்கள், அரசியல் வாதிகளும் அறிவார்கள். சாதாரணமாக ஒரு வட்டாரத்திலே ஒரு நிலத்தின் விலையை நிர்ணயிப்பதற்கு சில சட்ட வரம்புகள் இருக்கின்றன. ஒரு இடத்தில் ஒரு நிலத்தின் விலையை நிர்ணயிக்கவேண்டுமென்று சொன்னால் அங்குள்ள ரிஜிஸ்ட்ராராபீசில் உள்ள ரிகார்டுகளில் உள்ள விபரங்களைச் சேகரிப்பார்கள். நான்கைந்து ஆண்டுகளாக விற்கும் விலை என்ன? கடைசி மூன்று ஆண்டுகளுக்கு உள்ள சராசரி விலை என்ன என்பதையெல்லாம் பார்ப்பார்கள். பிறகுதான் நிலத்தின் விலையை நிர்ணயம் செய்வார்கள். சாதாரணமாக ஆளைப்பார்த்து, ஆளின் முகத்தைப் பார்த்து நிலத்தின் விலையை நிர்ணயிப்பார்கள் என்பதல்ல. சட்ட முறைகளிலு பேசுவதுதான், எதிர்க்கட்சியிலிருந்து நல்ல பணியாற்றி வருகிறோம் என்று சொல்வதற்கு நியாயம் உண்டு. எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் ஆதாரபூர்வமான குற்றச்சாட்டுகளை சொல்ல வேண்டும். அக்கறையான குறைகளை எடுத்துச் சொல்ல வேண்டும்.

அடுத்து, ஊராட்சி மன்றத் தேர்தல்களை நாம் சந்திக்கப் போகிறோம். நேரடித் தேர்தல் என்பது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். நான் நகர மன்றத்தின் தலைவராக இருப்பதால் என்னுடைய அனுபவத்தைச் சொல்ல விரும்புகிறேன். நகர மன்றத் தலைவராக ஐந்தாண்டுகளுக்கு பதவி வகிக்கிறோம். ஆனால் நகராட்சியின் காலம் மூன்று ஆண்டுக் காலம். எதாவது ஒரு நல்ல திட்டத்தை எடுத்து உருவாக்கிக்கொண்டு வரும்போது, காலக் கெடு முடிந்து, மீண்டும் புதிய ஆட்கள் வரக்கூடிய நிலைமை இருக்கிறது. புதிதாக வருபவர்கள் அந்தத் திட்டத்தை மீண்டும் உருவாக்குவதற்குள் மீண்டும் தேர்தல் வந்துவிடும். ஆகவே, நகராட்சி மன்றங்களுக்கும் ஐந்தாண்டுக் காலம் என்ற முறையில் வைக்க வேண்டும். இதனால் நல்ல பல திட்டங்களை உருவாக்கி, மக்களுக்கு நன்மைகளைச் செய்து கொடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, வறட்சி நிவாரணப் பணி என்று செய்தவை அனைத்தும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். இதனால் பல ஏரிகளும், கால்வாய்களும் செப்பனிடப்பட்டு, விவசாயிகளுக்கு நல்ல முறையில் பயன்பட்டு வருகின்றன. வறட்சி நிவாரணப் பணிகளின் போது, அத்தனை அதிகாரிகளும் சிறப்பாகப் பணியாற்றினார்கள். அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். மக்களுக்கு நல்ல பணிகளைச் செய்வதற்காக இந்தத் துணை மானியக் கோரிக்கைகளை ஆதரித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. சா. மெய்யப்பன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையின் மீது நான் கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணையையொட்டி என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். முதலாவதாக சில இடங்களில் செட்டில்மெண்ட் ஆபீசர்கள், தவறான தகவல்களைக் கொடுப்பதன் மூலமாகவும், தவறான அளவுகளின் மூலமாகவும், ஒருவருடைய நிலத்தை சர்க்கார் புறம்போக்காகவும், அளவுகளைக் குறைத்தோ கூட்டியோ கொடுப்பதன் மூலமாகவும் சில தவறுகள் நடந்து விடுகின்றன. இந்தத் தவறுதல்கள் எல்லாம் பதிவேடுகளில் பதிவாகிவிடுகிறது. பின்னர் நாம் அதிகாரிகளிடத்தில் எத்தனை தடவைகள் முறையிட்டாலும், அதைச் சரிசெய்வதற்கு நாட்கள்





பலவாகின்றன. அங்கு பல அதிகாரிகள் இருக்கிறார்கள். ஒவ்வொரு அதிகாரியிடத்திலும் முறையீடு செய்யவேண்டியிருக்கிறது. இதைச் சீர்செய்வதற்கு அதிக நாட்கள் ஆகின்றன. இதை மக்கள் அனுபவித்துக்கொண்டு இருக்கிறார்கள். சில இடங்களில் சில நிலங்களுக்கு தண்டவரி கொடுக்க வேண்டியிருக்கிறது. சர்க்காருடைய நிலமாயிற்றே என்ற காரணத்தினால் விரோதிகள் அதிகமாக ஏற்பட்டு, தண்டவரி செலுத்துவதில் ஒருவருக்கொருவர் போட்டிபோட்டுக் கொள்கிற நிலைமை இருக்கிறது. அதற்காகத்தான் செட்டில்மெண்ட் ஆபீசர் ஒரு முடிவு செய்துவிட்டால், அதன்மேல் அப்பீலுக்குப் போவதற்காக ரெவின்யூ அதிகாரிகளிடத்தில் துணைக் கலெக்டர் அந்தஸ்திலோ, ஆர். டி. ஓ. அந்தஸ்திலோ முறையீடு கொடுக்கலாம், அவர்கள் அது சரியா, தப்பா என்பதை விசாரித்து, தவறுதலாக இருந்தால் அதை மாற்றியமைக்கக்கூடிய அதிகாரம் அவருக்குக் கொடுக்கப்படவேண்டும். அதையும் இன்ன காலவரையறைக்குள் பிரித்துக் கொடுத்தால் தொகுதிவாரியாக, டிவிஷன் வாரியாக- பிரித்துக்கொடுத்தால் நல்லதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லாத் துறைகளிலும் செட்டில்மெண்ட் நடவடிக்கைகளிலே பல கெடுதல்கள் ஏற்படுகின்றன. ஒருவர் பூர்வீகமாக அனுபவித்து வந்த நிலங்கள்' தென்னை மரங்கள், புளிய மரங்கள், மாமரங்கள், கிணறு முதலியவை இருக்கின்றன. அப்படி இருந்தும்கூட அது சர்க்கார் புறம்போக்கு 'அஸெஸ்டு வேஸ்ட்' என்று ரெகார்டுகளிலே பதியப்பட்ட காரணத்தினால் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அந்த நிலம் ஜப்தி செய்யப்படுகிறது. கண்டனூர் பகுதியில் வேங்காவயல் என்ற இடத்திலும், கோட்டையாறு வேலங்குடி பகுதியிலும் காட்டுப் பகுதிகள் என்று செட்டில்மெண்ட் ரெகார்டில் பதியப்பட்டிருக்கின்றன. அந்த நிலத்தில் பூர்வீகமாக விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அங்கு மரங்கள் வைத்தும், பயிர் செய்தும்கூட ரெகார்டில் காட்டுப் பகுதிகள் என்று பதியப்பட்டிருக்கின்றன. ஆகவே, விவசாயத்தின் பலனை விவசாயிகள் நிம்மதியாக அனுபவிக்க முடியவில்லை. எஸ். ஆர். பட்டினம் அதாவது சேதுரகுநாத பட்டினம் என்ற ஊரில் பல இடங்களை காட்டு நிலங்கள் என்று எடுத்துவிட்டார்கள். அதன் மூலமாக அங்குள்ள மக்கள் சுள்ளி பொறுக்குவதற்குக்கூட மிகவும் பயந்து செல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, செட்டில்மெண்ட் மூலமாக ஏற்படுகின்ற தீங்குகளை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக விற்பனை வரியைப்பற்றி ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். விற்பனை வரியை வசூல் செய்கின்ற அதிகாரிகள், வியாபாரிகள் நன்றாக நடந்துகொள்கிறார்களா என்று தெரிந்துகொள்வதற்காக முதலில் குறைந்த ஊதியம் வாங்கும் சேவகர்களை அனுப்புகிறார்கள். பொருத்தமான வியாபாரியாக இருந்தால் அவர்களிடம் சேவகர்கள் நடந்துகொள்ளும் விதம் வேறு, மற்ற வியாபாரிகளிடத்தில் அவர்கள் நடந்து கொள்ளும் விதம் வேறு. ஆகவே, விற்பனை வரியை வசூல் செய்வதற்கு, குறைந்த ஊதியமுள்ள சேவகர்களை அனுப்பாமல் தகுதிபெற்ற அலுவலர்களை அனுப்பினால் பொருத்தமாயிருக்கும். வியாபாரிகளும் வரியைச் செலுத்துவதில் அக்கறை காண்பிப்பார்கள். ஆகவே, தகுந்த தகுதிபெற்ற அலுவலர்களை அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரு வெட்டுத் தீர்மானம், காரைக்குடி தொகுதியில் ஒரு பால்பண்ணை அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கொடுத்திருக்கிறேன். தமிழக அரசு பொறுப்பு ஏற்ற பிறகு அந்நகரின் மேற்குப் பகுதியில் இருந்த பஸ் நிலையம் முனிசிபாலிட்டியினுடைய உடைமையாக்கப்பட்டுவிட்டது. அந்தப் பகுதி வளர்ந்து வருகிறது. மருத்துவமனை வேறிடத்திற்குச் சென்றுவிட்ட காரணத்தினால் அப்பகுதியும் வளர்ந்து வருகிறது. வடக்குப் பகுதியில் கம்பன் மணிமண்டபம் எழ இருப்பதால் அந்தப் பகுதியும் வளருவதற்குக் காரணம் இருக்கிறது.

தெற்குப் பகுதி மட்டும் வளருவதற்கு சாத்தியக்கூறு இல்லாமல் இருக்கிறது. இங்கு நல்ல தண்ணீர் அண்டையில் கிடைக்கக்கூடியதாக இருக்கிறது. ஆகவே, ஒரு பால்பண்ணைத் திட்டத்தை ஆரம்பித்தால் மிகமிக நல்லது. எல்லா பக்கங்களிலும் அபிவிருத்தி செய்யப்படும். நல்ல அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்ற நல்ல பெயர் இந்த அரசுக்குக் கிடைக்கும்.

அடுத்தபடியாக, வறட்சி நிவாரணப் பணிகளைப் பற்றிப் பேசிய எல்லா உறுப்பினர்களும், மதுரை மாவட்டத்தை ஒட்டியிருக்கிற இராமனுதபுரம் மாவட்டத்தைத் தொட்டுத் தொட்டுப் பேசினார்கள். இதைச் சொல்வதற்கு எனக்கும் சில பொறுப்புகள் உண்டு. யார் யார், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் நல்லது செய்தால் அதைப் போற்றத்தான் வேண்டும். இப்பொழுது நான் கண்கூடாகக் காண்கிறேன். எங்கள் பகுதியில் இப்பொழுது குடிப்பதற்குத் தண்ணீர் நிறைய இருக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. எத்தனையோ சமுதாயக் கிணறுகள், எத்தனையோ ரோடுகள் போன்ற நல்ல அபிவிருத்திப் பணிகள் நடந்தன. என்னுடைய தாலுகாவிலும், குறிப்பாக திருப்பத்தூர் தாலுகாவிலும், இராமனுதபுரம் மாவட்டத்தில் அபிவிருத்தி வேலைகள் ஏற்பட்டிருக்கின்றன. தமிழக அரசு வறட்சி நிவாரணப் பணிக்கு ஒதுக்கிய தொகையில் எத்தகைய தவறுதல்களும் நடைபெறுதபடி சட்டசபை உறுப்பினர்களாகிய நாங்களும், ஊராட்சி மன்ற உறுப்பினர்களும் காவலாக இருந்தோம். அதிகாரிகளும் அடிக்கடி எங்களைக் கேட்டுக்கொண்டு வேலைகளைச் செய்தார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சி வேலைகளை அக்கறை காட்டிச் செய்ததைப் போல, பராமரிப்பு வேலைகளையும் செய்ய வேண்டும். ரோடுகளையெல்லாம் செலவு செய்து போட்டிருக்கிறோம் என்றால் அவைகளை நல்லபடியாகச் செலவு செய்து பராமரிப்பு செய்தால்தான் ரோடுகள் நல்ல முறையில் இருக்கும். அபிவிருத்தி வேலைகளை நல்லமுறையில் பராமரிப்பு செய்ய வேண்டும். அதற்கு தமிழக அரசு தக்க உதவிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ஜே.எஸ். இராசு. : பேரவைத் தலைவர் அவர்களே, 1969-70-ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடுகளை வரவேற்று என்னுடைய கருத்துகளைத் தெரிவித்துக் கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய பெரம்பலூர் தொகுதியைப் பொறுத்தவரையில் ஆற்றுப் பாசனமோ வேறு காவிரிபோன்ற நதிகளிலிருந்து நீர் பெறக்கூடிய அத்தகைய நீர்ப்பாசன வசதியோ இல்லாத ஒரு சாதாரணப் பகுதியாகும். பெரம்பலூர் தொகுதியிலே கிராமங்களிலே ஏரிகளை நம்பியும், ஏரிகள் வற்றிவிட்ட நிலையிலே கிணறுகளை நம்பியும்தான் விவசாயம் செய்து வருகிறார்கள். ஆயிரக்கணக்கான கிணறுகளுக்கும் அதிலே பொருத்தப்பட்டிருக்கின்ற ஆயிரக்கணக்கான மின் இணைப்புகளுக்கும் ஏற்பாடு செய்ததன் காரணமாக நல்ல முறையிலே விளைச்சல் ஏற்பட்டிருந்தாலும் கூட இன்னும் நிறைவேற்றப்படவேண்டிய நீர்ப்பாசன வேலைகள் நிரம்ப இருக்கின்றன என்பதையும் மேலபுலியூர், நூத்தப்பூர், ரங்கநாதபுரம், நெற்குணம், பூலாம்பாடி, தமுதாளை, போன்ற பல கிராமங்களில் எஸ்.எம்.ஐ.பி.யால் ஆய்வு செய்யப்பட்டு ரெகுலர் சர்க்கிளிலே சேர்க்கப்பட்டிருக்கிற அந்தத் திட்டங்களிலே பல நிலைகளிலே அவை இருந்து வந்தாலும் பொருளாதார முறையிலே லாபகரமாக இல்லாத காரணத்தால் அந்த ஏரித் திட்டங்களைச் செயல்படுத்த வாய்ப்பில்லாமல் இருக்கிற காரணத்தால் அவற்றையும் உடனடியாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதை சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் புதுநடலூர் என்ற ஏரித் திட்டம் சேர்க்கப்பட்டிருந்தும் இன்னும் நிறைவேற்றப்படாத காரணத்தினால் உணவு உற்பத்திக்கும், விவசாயிகளின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும் அது தடையாக இருக்கிறது. எனவே அதையும் அரசாங்கம் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



பெரம்பலூர் தொகுதியைப் பொறுத்தவரையில் வடகரைக்கும் வெம்பாலூருக்கும் இடையே ஓடுகின்ற கல்லாற்றின் குறுக்கே ஒரு உயர்மட்ட பாலம் கட்டவேண்டும்.

பெரம்பலூர் போன்ற வட்டத் தலைநகரத்திற்கும், திருச்சி போன்ற மாவட்டத் தலைநகருக்கும் வேப்பந்தட்டையிலிருந்து போகவேண்டுமென்றால் அங்கேயுள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். 50 மைல், 60 மைல், 70 மைல் சுற்றிக்கொண்டுதான போகவேண்டியிருக்கிறது. மூன்று மைல் தூரத்திலுள்ள இடங்களுக்குச் செல்லவேண்டுமென்றால் கூட 50 மைல், 60 மைல் சுற்றிக்கொண்டு போகக்கூடிய நிலைமை இருப்பதால் கிராம மக்கள் அதிகமான அலைச்சலுக்கும் பெரும் பணச் செலவுக்கும் ஆளாகிறார்கள். எனவே இந்தத் திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தாலும் பார்ட் 2-ஸ்கீமாக இந்த நடைமுறை ஆண்டிலேயே நிறைவேற்றவேண்டுமென்று நான் பொதுப்பணி அமைச்சர் அவர்களிடத்திலே பல முறைகள் வேண்டியிருக்கிறேன், அவர்களும் மனத்திலே வைத்து நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர்ப் பிரச்னை மிக முக்கியமான பிரச்னை. எவ்வளவு மழை வளம் குன்றினாலும்கூட குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படாத ஒரு தொகுதி என்னுடைய தொகுதி. அப்படியிருந்தும் என் பகுதியில் உண்மையிலேயே கடந்த வறட்சிக் காலத்திலே குடிநீர்த் தட்டுப்பாடு இருந்தது. அரசாங்கம் குடிநீர் வழங்குவதற்காக ஏற்பாடுகள் நல்ல முறையிலே செய்தது. அதற்காக என்னுடைய தொகுதி மக்களின் ஒரு லட்சம் வாக்காளர்களின் சார்பிலேயும் அவர்களுடைய குடும்பத்தினருடைய சார்பிலேயும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வறட்சி நிவாரணப் பணிகளைப்பற்றி அதற்காகச் செலவழிக்கப்பட்ட பணத்தைப் பற்றி எதிர்க்கட்சிக்காரர்கள் பேசும்பொழுது காற்றோடு கலந்துவிட்டதா? கரைந்து போய்விட்டதா? என்று எல்லாம் கூறினார்கள். உதாரணத்திற்கு நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பெரம்பலூர் பேரூராட்சியைப் பொறுத்தவரையில் அங்கே ஒரு ஓவர்ஹெட் டாங்க் 86 ஆயிரம் ரூபாயில் திறக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக பெரம்பலூர் ஒரு பகுதிக்கு தண்ணீர் கிடைக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அன்னமங்கலத்திற்குப் பக்கத்திலே 30 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு பாலம் கட்டப்பட்டு போன மாதத்திலே நல்ல முறையிலே திறக்கப்பட்டிருக்கிறது. இது போன்று மீதம் இருக்கிற காரியங்களையும் சீக்கிரமாக நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்ள இந்த நேரத்திலே நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

சத்திரமனை, குரும்பலூர், பெரம்பலூர், பொம்மனப்பட்டி இந்தப் பகுதிகள் எல்லாம் கற்பாறையாக உள்ள பகுதிகள், ஆழமாகத் தோண்டினால்தான் விவசாயத்துக்கும் குடிப்பதற்கும் தண்ணீர் கிடைக்கும். வாட்டர் போர்டு மூலமாக குடிநீர்த் தேவைகளை அறிந்து எவ்வளவு சீக்கிரம் நிறைவேற்ற முடியுமோ அவ்வளவு சீக்கிரம் நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெரம்பலூர் பகுதியிலே இரண்டு மூன்று உயர்நிலைப்பள்ளிகள்—மருவத்தூர்—அனுக்கூர்—ஆகிய பள்ளிகளில் மாணவர்கள் இல்லை என்ற காரணத்தைக்காட்டி ஒவ்வொரு வருஷமும் செத்து செத்துப் பிழைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அனஎகனாமிக் ஸ்கூல்ஸ் (Uneconmic Schools) என்று சொல்லி அப்படிச் செய்கிறார்கள். அப்படியில்லாமல் கல்விக் கண்ணைத் திறந்துவிட்ட தமிழக அரசு இதையும் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக மின்சாரம் மிக அதிகமாகத் தப்பட்டாலும் நிலவள வங்கிகள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அனைத்தும் கடன் தருவதால் கடனைப்பெற்று விவசாயிகள் 10, 15 நாட்களுக்குள் இணைப்பு தோண்டு வதற்கு வாய்ப்பு இருப்பதால் அதற்கு ஏற்றாற்போல் மின்சார இலாகா இணைப்புத்தரக்கூடிய சூழ்நிலையில் இல்லை. திருச்சி எஸ். இ. மற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வினவுகிற நேரத்திலே பொருட்கள், துணைப் பொருட்கள் பம்பாயிலிருந்து வரவேண்டியிருக்கிறது, கல்கத்தா விலிருந்து வரவேண்டியிருக்கிறது, சேலாவிலிருந்து வரவேண்டியிருக் கிறது. நாம் கம்பம்தான் செய்து கொண்டிருக்கிறோம், அதிகமாக கோட்டைவை வழங்கச் சொல்லுங்கள் என்று என்னைப்போன்ற தொண் டர்களிடத்திலே சொல்கிறார்கள். அதிகமாக மின்சாரம் தருவதற்கு நம்முடைய அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது, அதைப் பாராட்டு கிறேன். அதோடு மின்சார இணைப்புகளையும் விரைவாகத் தருவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும். வீதி விளக்குகளை போடுவதற்குத் திட்டம் இருப்பதால் விவசாயத்திற்குப் பிரகுதான மின்சாரம் தரப்படும் என்ற புகார் வந்தவண்ணமாம் இருக்கிறது. மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அத்தகைய தறைகளைப் போக்கக்கூடிய முறையிலே கைப்பைசைடு இதுவும் தேவை, அதுவும் தேவை என்ற முறையிலே பார்த்து விவசா யத்திற்கும் மின்சாரத்தைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

மற்றொரு சிறிய கருத்தினையும் சொல்லி என்னுடைய உரையை முடிக்கலாம் என கருதுகிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர்கள் எல்லாத் தொகுதிகளுக்கும் வருகை தரவேண்டுமென்று என்னைப் போன்ற உறுப்பினர்கள் விரும்பிக்கொண்டிருக்கிறார்கள். இதில் இரண்டு பட்ட கருத்துக்கள் கிடையாது. என்னுடைய தொகுதிக்கு வந்த அமைச்சர்களும் வராத அமைச்சர்களும் என்னைப்போன்ற சாதாரண உறுப்பினர்கள் கேட்கிற நேரத்திலே அருள் கூர்ந்து வந்து போன பகுதிகளுக்கே போகாமல் வராத பகுதிகளுக்கும் வந்து எப்படித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன, சட்டமன்ற உறுப்பினர்கள் எப்படிப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றியும் என்னு டைய பகுதிக்கு வந்து பார்த்து வரவேண்டுமென்று மாண்புமிகு மின்சா ரத்துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களை யும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு திரு வேழவேந்தன் அவர்களையும் மிக மன்றாடிக் கேட்டுக் கொண்டு இந்த அளவோடு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. எ. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, இந்த இறுதித் துணைமானியக் கோரிக்கை பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். உச்சவரம்புச் சட்டத்தை குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் பலர் ஆதரித்துப் பேசியிருக்கிறார்கள், சிறப்பாகவும் பேசி இருக்கிறார்கள், அதைக்கண்டு என்னுடைய சார்பிலே நான் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைத் தொடர்ந்து சிலர் முதலமைச்சரிடம் மகஜர் கொடுத்திருக்கிறார்கள் என்று பத்தி ரிகைச் செய்தி கூறுகிறது. முதலமைச்சர் அவர்கள் வருத்தம் தெரிவித்து இருக்கிறார்கள், அந்தச் செய்தி வந்தது குறித்து. மிக உறுதியான முறையிலே இந்த அரசு அதை அமல்படுத்த வேண்டும், எந்தவிதமான விதிவிலக்குகளும் அளிக்காமல், வருமான அடிப்படையை வைத்து ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பதைச் சரியாகக் குறிப்பிட்டு, ஒரு குடும்பம் என்றால் எவ்வளவு என்று கறாராக நிர்ணயித்து, இந்த நில உச்ச வரம்புச் சட்டத்தை அமல்படுத்தினால்தான் பொதுமக்கள் எதிர்பார்க்கிற நன்மைகளை அது அளிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிலைப் பொறுத்தவரையில் ஒரு சில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் அவர்களுடைய தேர்தல் அறிக்கையிலே என்ன கொடுத்திருக்கிறார்கள் என்பதைப் படிக்கிறேன்





"தொழில் துறையைப் பொறுத்தமட்டில்–சோஷலிசம் பேசும் காங்கிரசு பெரிய முதலாளிகளிடமே தொழில் துறையை ஒப்படைத்துவிட்டதால் ஏழை–பணக்காரன் பேதம் வளர்ந்துவிட்டதுடன், அரசியலை ஆட்டிப் படைக்கவும், ஆட்சியை அடிமைகொள்ளவுமான வலிவும் ஆதிக்க உணர்வும் முதலாளிகளுக்குத் தடித்துப்போய்விட்டதுடன் பாசிசம் உருவெடுக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது கண்டு கழகம் வந்திருக்கிறது. இந்த முதலாளித்துவப் பிடியைப் போக்கிடும் முறையில் தொழில் துறையைத் திருத்தியமைக்கும் திட்டத்தை மேற்கொள்ளக் கழகம் பொதுமக்கள் ஆதரவையும் ஆணையையும் எதிர்பார்த்து நிற்கிறது" என்று இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையைத்தான் நான் படித்தேன்.

அது கம்யூனிஸ்டு கட்சியின் கொள்கையிலிருந்து அல்ல; கம்யூனிஸ்டு கட்சியின் கொள்கையை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டதாக யாரும் நினைத்துக்கொள்ள வேண்டியதில்லை. இப்போது நடந்திருப்பது என்ன? பிரத்தியட்ச நிலை என்ற வாதம் வருகிறது. "பிராக்மாடிசம்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தும்போது அதன் அர்த்தத்தைப் பார்த்தால் "எய்ம்லெஸ்" என்பதைப் புரிந்துகொள்ள முடியும். ஒரு கொள்கையை நோக்கிப் போகாத நிலை இருக்கிறது. இந்த டைரக்ஷனில்தான் போக வேண்டுமென்ற நிலை இல்லை. வலு இருக்கிறவர்களுக்கு மேலும் வலு ஏறுகிறது; வலு இல்லாதவர்கள் வலு இல்லாதவர்களாகவே இருக் கிறார்கள். இது வலு உள்ளவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் நிலையை ஏற்படுத்தி விடும். "ஸ்டேடஸ்-கோ-ஃபோர்ஸஸ் என்று சொல்லுவார்கள். ஏற்கனவே ஆதிக்கத்தில இருப்பவர்கள் வலுப் பெறுவார்கள் என்ற அபாயம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. மீண்டும் மீண்டும் கூறுகிறோம். பெரிய முதலாளிகளுக்கு ஊக்கம் அளிக்கும் பாதையில் செல்லக் கூடாது. 22 ஆண்டு காலமாக காங்கிரஸ் அரசு சென்ற பாதை அது. கழகத்தின் அறிக்கை கூறுவதைப்போல் அந்தப் பிடிப்பைப் போக்கிடும் முறையில் கொள்கைகளை மாற்றியாக வேண்டும். அதனால்தான் தனியார் துறையில் கூட அந்நிய முதலீடு இருக்கக்கூடாது என்று சொல்லுகிறோம். அதனால் உறவு இருக்கக்கூடாது என்று சொல்ல வில்லை, நாட்டுக்கு நாடு உறவு இருக்க வேண்டும். கடன் பெறுவது போன்ற காரியங்கள் எல்லாம் இருக்க வேண்டியதுதான். ஆசிய ஆப்ரிக்க, தென் அமெரிக்க நாடுகளின் வரலாறு அந்நிய முதலீட்டின் ஆபத்தைக் காட்டுகிறது. அந்த நாடுகளின் கதவைத் திறந்துவிட்டதால் அவர்கள் உள்ளே புகுந்து கொண்டதன் காரணமாக அந்த நாடுகள் எப்படி வாடிக்கிடக்கின்றன என்பது தெரியும். ஆகவே, அந்நிய நாட்டு முதலீடுகள் அபாயகரமானவை என்பது போல், முக்கியமான கேந்திர இடங்களில் பெரிய முதலாளிகளுக்கு இடம் தரக்கூடாது என்பது எங்கள் கட்சிக் கொள்கை.

சிறு தொழில் கார்ப்பரேஷன் இருக்கிறது. அவர்களுக்கு மூன்று கோடி ரூபாய் அரசாங்கம் கடன் கொடுத்திருக்கிறது. நஷ்டம் ஏராளமாக வருகிறது என்று சொல்லப்படுகிறது. உண்மையாகவே இருக்கும். மூன்று கோடி ரூபாய்க்கு வட்டி வாங்குகிறோம். தேய்மான நிதி என்று பணம் ஒதுக்க வேண்டுமென்றும் லாபம் வருகின்ற நிலைமை ஏற்பட வேண்டுமென்றும் கூறுகிறோம். மூன்றுகோடி ரூபாயை மூலதன மாகவே ஒதுக்கிவிடுவது நல்லது. அரசாங்கமே நடத்தும் தொழி லாக இருப்பதற்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். சில சீர் கேடுகள் இருப்பதாகப் புகார்கள் வருகின்றன. ஒன்றிரண்டைச் சுட்டிக் காட்டி அந்தக் குறிப்பை அமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்து விடுகிறேன். ராஜபாளையத்தில் எஞ்சினியரிங் ஒர்க்கர்ஸ் யூனியனில் இருந்து ஒரு குறிப்பு. மூன்று நான்கு ஜடங்களை தனியார் துறைக்கு விற்றிருக்கிறார்கள். விருத்தாசலத்தில் வேகளை விற்றிருக்கிறார்கள். பதினோராயிரம் பெறுமான எவர்சில்வரை பழங்காநத்தத்தைச் சேர்ந்த ஒருவருக்கு விற்றிருக்கிறார்கள். நான் இப்போது பெயரைக் குறிப்பிட வில்லை; விவரங்களை அமைச்சர் அவர்களிடம் அளித்துவிடுகிறேன்.

சிறு தொழில் கார்ப்பரேஷன் மூலம் நடைபெறும் தொழில்கள் லாபகரமாக நடக்கவில்லையென்றால் கண்டிப்பாக நடவடிக்கை எடுத்து, ஆராய்ந்து திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். கீழே இருக்கும் ஊழியர்களுக்குக் குறைந்த சம்பளத்தைக் கொடுத்து வருகிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றும் நிலை இருக்கிறதா என்பது தெரியவில்லை. இருபது பேர் வேலை செய்கிறார்கள் என்றால் அதிலே பத்து பேர் அதிகாரிகளாக இருக்கிறார்கள். உற்பத்தி செய்யக்கூடியவர்கள் பத்துப் பேர்தான் இப்படி இருந்தால் எப்படிக் கட்டி வரும்? இதையெல்லாம் தீவிரமாகக் கவனிக்க வேண்டும்.

முனிசிபல் சுப்பீரியர் செர்விசில் இருப்பவர்களுக்குப் பென்ஷனை 1970-ம் ஆண்டு ஜனவரி மாதம் 14-ம் தேதியிலிருந்து உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தேதிக்கு முன்னால் ரிடையர் ஆனவர்களுக்கும் இதை நீடித்துக் கொடுக்க வேண்டும். அவர்கள் அதிகமாக இருக்க மாட்டார்கள்; இயற்கையின் போக்கில் குறைந்துகொண்டே வருவார்கள். ஆகவே, இதைச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

விவசாய வருமான வரி வசூலைப் பற்றித் தொகுதியில் இருந்தும் வக்கீல்களிடமிருந்தும் புகார்கள் வந்தவண்ணம் இருக்கின்றன. 1968-69, 1969-70 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கும் ஒரே உத்தரவைப் போட்டு 21 நாட்களுக்குள்ளாகக் கட்டியாக வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இரண்டு ஆண்டுகளுக்கும் சேர்த்துக் கட்டவேண்டும் என்று உத்தரவு போட்டிருப்பதால் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. வழக்கறிஞர்களிடமிருந்தெல்லாம் புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. சட்டத்தில் "ஸ்டே" ஆர்டருக்கு இடமில்லை. தகுந்த ஜாமீன்மீது தவணைகளாகக் கட்டவும் வழியில்லை. இதைச் சற்றுக் கவனிக்க வேண்டும்.

'பீஸ் கோர் வாலண்டீயர்ஸ்' பொருத்தவரை ஆந்திராவில்—"not equipped" என்று எடுத்துவிட்டார்கள். கேரளாவிலும் தேவையில்லை என்று கூறி எடுத்துவிட்டார்கள். தமிழகத்தில் ஆங்கிலப் பயிற்சி கொடுப்பதற்கு என்று அவர்களை வைத்திருக்கிறார்கள். நாம் எல்லாம் நன்றாகத்தான் ஆங்கிலம் படித்திருக்கிறோம். இது எவ்வளவு தூரம் தேவை என்று பார்த்து இதை எடுத்துவிட வேண்டுமென்ற கருத்தை வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

மதுரை ரெவின்யூ துறையில் உணவுக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றத்தினால் ஆட்குறைப்பு செய்யப்பட்ட பலரும் செர்விஸ் கமிஷன் மூலம் வந்தவர்கள் உட்பட மறுபடியும், வேலை கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் மறுபடியும், மறுபடியும் நீக்கப்படுகிறார்கள். அங்கு பெரிய கசப்பு வளர்ந்து கொண்டிருக்கிறது. மீண்டும் செர்விஸ் கமிஷனுக்கே அந்தக் கேஸ்களைக் கொடுத்து எங்கெல்லாம் வேலை இருக்கிறது என்று அவர்கள் பார்த்து அவர்கள் மூலமாக உத்தரவு வந்தால் உதவியாக இருக்குமென்று கூறியிருக்கிறார்கள். இதையும் கவனிக்க வேண்டும்.

கருத்துக்களுக்காக, ஒரு கட்சி சார்பு போக்குக்காக மாணவர்கள் பழிவாங்கப்படுவது இங்குமங்குமாகக் காணப்படுகிறது. புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. காலேஜை விட்டு நீக்கிவிடுவோம் என்று மிரட்டுகிறார்கள். கல்லூரிகளில் காங்கிரஸ் சங்கம் இருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழக சங்கம் இருக்கிறது, கம்யூனிஸ்டு சங்கம் இருக்கிறது. மார்க்சிஸ்ட் சங்கம் வைத்துக் கொண்டால் ஸ்பெஷல் போலீசின் விசேஷ கவனம் திருப்பப்படுகிறது. இது நாம் ஏற்றுக் கொண்டிருக்கும் ஜனநாயக மரபுக்கு ஏற்றதல்ல. கண்டிக்கத்தக்கது. இந்தப் போக்கைக் கைவிட வேண்டும். வட ஆற்காடு ஜில்லாவில் ஒரு ஆசிரியர். அவர் பச்சையப்பன் கல்லூரியில் படிக்கும்போது எங்கள் கட்சியின் கருத்தைத் தீவிரமாகக் கொண்டிருந்தார் என்பதற்காக வேலையை விட்டு நீக்கிவிட்டார்கள்.





அரசியல் கருத்துக்காக மாணவர்களையோ, ஆசிரியர்களையோ பழிவாங்குவது என்ற போக்கு நல்லதல்ல. அது ஜனநாயகத்திற்கு விரோதமானது என்பதை வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். இதுபோன்ற நடவடிக்கைகள் தமிழகத்தில் ஏற்பட அனுமதிக்கக் கூடாது.

வறட்சி நிவாரண வேலைகளைக் கவனிப்பதற்காகப் பல இடங்களுக்கு விஜயம் செய்த பிரதம காரியதரிசி வேடசந்தூர் வட்டாரத்திற்கும் விஜயம் செய்தார். அவருக்கு என்ன மன நிலை ஏற்பட்டதோ தெரியாது. கடன் தொல்லையால் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் விவசாயிகளிடம் பக்குவமாகப் பேசினால் நல்லது. ஒன்றும் செய்யாவிட்டாலும் நிம்மதியைக் குலைத்துவிடாமலாவது இருக்க வேண்டும். அவர் மிகவும் முரட்டுத்தனமாகப் பேசிவிட்டார் என்று புகார்கள் வந்தவண்ணமாக இருக்கின்றன. பழைய கடன் வசூலைப் பண்ணாமல் நிறுத்தி வைத்தால் போதும் என்ற நிலைமை இருக்கிறது. அதிகாரிகள் பொறுப்புடன் பொறுமையாகவும் நடந்துகொள்ள வேண்டுமென்பதை இந்த மன்றத்தின் முன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேலூர் தாலுகா தனியமங்கலம் பகுதியில் மேலூர் அபிவிருத்திக் கால்வாய் போட அனுமதிக்கப்பட்டதாகத் தெரிகிறது. ஆனால் தண்ணீர் இதுவரை வரவில்லை. ஆனால் அபிவிருத்தி வரி வசூல் செய்து வருகிறார்கள். இரண்டு வருஷத்திற்குச் சேர்த்து வரி கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொகுதியின் உறுப்பினராக உள்ள அமைச்சர் அவர்களுக்கு விவரம் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: வராத தண்ணீருக்கு வரி வசூல் செய்கிற நிலைமை இல்லை. அப்படி ஏதேனும் இருந்தால் திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கத்திற்கு ஆட்சேபணை இல்லை. தண்டத் தீர்வை வசூலிக்கப்படுகிறது. தண்ணீர் சில இடங்களுக்குப் போகிறது. அந்த இடங்களில் மட்டும் வசூலிக்கப்படுகிறது.

திரு. எ. பாலசுப்பிரமணியன்: அப்படி இருந்தால் நான் சொல்லியே இருக்கமாட்டேன். தண்ணீரும் வருவதில்லை, வரியும் வசூலிக்கப்படுகிறது. அதை உரிய விசாரணை நடத்தி திருத்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று நம்புகிறேன். இதோடு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

(அடுத்து திரு. க. ர. நல்லசிவன், திரு. இரா. நாராயணன் ஆகியோர் பேசுவதற்காக அழைக்கப்பட்டனர். அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் திரு. ஆர். கருப்பையா அவர்கள் அழைக்கப்பட்டார்.)

முற்பகல் 11-30

*திரு. ஆர். கருப்பையா: துணைத் தலைவர் அவர்களே, இந்த இறுதி துணை மானியக் கோரிக்கை மீது என் கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

பொதுவாக, இந்த அரசு மானியக் கோரிக்கைகளைக் கேட்கும்போதெல்லாம் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நல்லதொரு நிலையை உண்டு பண்ணும் என்று நினைத்துக்கொண்டிருந்தோம். ஆனால், பழைய மானியக் கோரிக்கையானாலும் சரி அல்லது இறுதியாக அளிக்கப்பட்டுள்ள இந்தத் துணை மானியக் கோரிக்கையிலானாலும் சரி இவை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு எந்தவிதமான வாய்ப்பு வசதியையும் ஏற்படுத்தும் நிலையில் இல்லாதது பற்றி பொது மக்கள் மிகவும் கவலைப்படுகிறார்கள். விவசாயிகளுக்கு, அவர்களின் சொத்துக்களுக்கு மேல் கடன் இருக்கிற நிலையில் இன்று பல விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்று சொன்னால்......இன்று லாண்ட் சீலிங் 15 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று கொண்டு வந்திருக்கும் நிலையில் பல கிராமங்களில் பல விவசாயக் குடும்பங்கள் இன்றையதினம் கடனில் மூழ்கும் நிலையில் இருக்கின்றன.

ஆகவே, விவசாயிகளுக்கு தனியாக ஒரு கடன் நிவாரணச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட கடன் நிவாரணச் சட்டம் ராஜாஜி அவர்கள் காலத்தில் கொண்டுவரப்பட்டது. இருபது ஆண்டுகள் வட்டி கட்டிவிட்டால், அசல் அளவிற்கு வட்டி கட்டி முடிந்துவிட்டால் அந்தக் கடன் ரத்து செய்யப்பட வேண்டும் என்று அப்போது சொன்னார்கள். அதேபோன்று நாம் இப்போது மத்திய சர்க்காரைக் கேட்கிறோம் கடன்களை வஜா செய்து தரவேண்டுமென்று. அப்படிக் கேட்கிற நேரத்தில் ஏழை விவசாயிகளை அவர்களது கடன் சுமையிலிருந்து மீட்க வேண்டுமென்றால் ஒரு கடன் நிவாரணச் சட்டத்தைக் கொண்டுவந்து விவசாயிகளைப் பாதுகாத்தால்தான் தமிழக விவசாயிகளிடையே ஒரு சீரான நிலை ஏற்பட முடியும். முன்பெல்லாம் நில வள வங்கிகள் மூலம் பழைய கடன்களைத் தீர்ப்பதற்காக கடன் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றவுடன் அப்படி கடன்கள் வழங்கப்படும் நிலை நிறுத்தப்பட்டுவிட்டது. பலபேர்களிடமிருந்து வாங்கிய கடன்களை மொத்தமாக நில வள வங்கியிலிருந்து வாங்கித் தீர்த்துவிட்டு சிறுகச் சிறுக அக்கடனை அடைத்து வந்தார்கள். ஆகவே இந்த அரசாங்கம் பழைய முறையில் நில வள வங்கி மூலம் பழைய கடன்களைத் தீர்ப்பதற்கு கடன் கொடுக்கும் முறையைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்கும் முறையில் இந்த அரசாங்கம் மிகவும் காலதாமதம் காட்டி வருகிறது. அமைச்சர் அவர்கள் அடிக்கடிச் சொல்கிறார்கள், 71-ம் ஆண்டுக்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின் இணைப்பு கொடுத்துவிடுவோம் என்று. அரியலூர், உடையார்பாளையத்தில் மின் இணைப்பு கொடுக்கும் முறையில் மிகவும் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. அங்கு மின்சார போர்ட் மூலமாகவும், தென் இந்திய எலக்ட்ரிஸிட்டி கார்ப்பரேஷன் மூலமாகவும், மின்சாரம் கொடுக்கப்பட்டு வருகிறது. இதனால் பலவிதச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆகவே ஒன்று அந்த தென் இந்திய எலெக்ட்ரிஸிட்டி கார்ப்பரேஷன் தேசீய மயமாக்கப்படவேண்டும். பலயிடங்களில் நிலங்களில் பம்ப் செட்ஸ் அமைத்து மோட்டார்கள் வாங்கி வைத்து பல ஆண்டுகள் ஆகியும் இன்னும் மின் இணைப்பு கிடைக்கவில்லை என்ற நிலை இருக்கிறது. அதன் காரணமாக விவசாயிகள் பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கொடுப்பதற்கு அந்த மின்சார நிறுவனத்திற்கு வசதியும் இல்லை. சர்க்காருக்கும் கொடுக்க முடியாத ஒரு நிலை இருக்கிறது. ஆக இந்தப் பகுதிக்கு பின் இணைப்பு முறை என்பது திருசங்கு சொர்க்க நிலையில் இருக்கிறது. திருமானூரில் பல கிராமங்களிலும், அரியலூரில் பல கிராமங்களிலும் இன்று விவசாயிகள் மோட்டார் பம்ப் செட்ஸ் வாங்கி வைத்துக்கொண்டு மின்சார இணைப்பு கிடைக்காத நிலைமையில் அதற்குண்டான கடனைமட்டும் கட்டிக்கொண்டு வருகிறார்கள்.

இந்த ஆண்டு லால்குடி அரியலூர் வட்டத்தில் நெல் விளைச்சல் மிகவும் பாதிக்கப்பட்டு விட்டது பூச்சி விழுந்ததினால் பாதிக்கப்பட்ட நிலையில் விவசாயிகள் வாங்கிய கடனை திருப்பக் கட்டக்கூடிய நிலையில் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே ஒன்று இந்த ஐ.எம்.எஸ். லோனை வஜா செய்ய வேண்டும் அல்லது ஒரு வருடத் தவணைக் காலமாவது கொடுக்க வேண்டும். அரியலூர், உடையார்பாளையம் மிகவும் பின்தங்கிய வட்டங்களாக இருப்பதால், அங்கு முந்திரி அதிகமாக பயிரிடப்படுகிற காரணத்தினால் அங்கு முந்திரித் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். அப்படிச் செய்தால் நமக்கு அந்நியச் செலாவணியும் கிடைக்கும். அதோடு கூட அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் அவை ஒரு பெரிய துணையாகவும் இருக்கும்.

கேரளத்தில் முந்திரித் தொழிற்சாலைகள் வைத்திருந்த பல நிறுவனங்கள் அங்குள்ள சில சிக்கல்கள் காரணமாக இன்றையதினம் மூடப்பட்டு வருகின்றன. அப்படிப்பட்ட பல நிறுவனங்களை மூடிக் கொண்டு வருகிறார்கள். ஆகவே அவர்களுக்கு இந்தப் பகுதியில்

1970 மார்ச் 23] [திரு. ஆர். கருப்பையா]

வாய்ப்பு கொடுத்தால் அந்தப் பணியை அவர்கள் இங்கு செய்வதற்குத் தயாராயிருக்கிறார்கள் என்று அறிகிறேன். ஆகவே, கூட்டுறவு முறையிலாவது அல்லது அரசாங்கமே ஏற்று சிறிய சிறிய முந்திரிப் பருப்புத் தொழிற்சாலைகளை பரவலாக அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விற்பனை வரி பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். விற்பனை வரி என்பது வியாபாரிகள் தாங்களாகக் கொடுக்கும் பணம் அல்ல. விற்பனைப் பொருள்கள் மீது அவர்கள் அந்த வரியை வாங்கித்தான் கொடுக்கிறார்கள். ஆகவே, அந்த வரி ஏழைகளின் மீதுதான் போடப்படுகிறது. உற்பத்தி செய்கிறவர்களும் அதை வாங்கி உண்பவர்களின் மீதும் தான் அந்த வரி போடப்படுகிறதே தவிர அது வியாபாரிகள் கொடுப்பது அல்ல.

கரும்பு வெல்லத்திற்கு 5 சதவீதம் விற்பனை வரி என்று ஆக்கியிருக்கிறார்கள். சென்ற ஆண்டுகளில் கரும்பின் விலை மிகவும் பாதிக்கப்பட்டுவிட்டதால் கரும்பின் விலைச் சரிவைத் தாங்கமுடியாமல் பல விவசாயிகள் தாங்கள் பயிரிட்ட கரும்பை வெல்லம் வைத்து சொளுத்திய நிலை இரண்டு ஆண்டுகளாக தொடர்ந்து எங்கள் பகுதியில் இருந்து வருகிறது. ஆகவே இந்த விவசாயிகள் பாதுகாக்கப்பட வேண்டும். எவ்வேலைக்கும் பாதுகாப்பு அளித்தால்தான் அது ஒரு நல்ல அரசாங்கமாக இருக்கமுடியும். எனவே விவசாயிகளின் அரசு என்று போட்டுக்கொண்டு விவசாயிகளுக்கு ஒரு இக்கட்டான நிலையை ஏற்படுத்துவது என்பது சரியல்ல. அது சரியான தொரு காரியமல்ல. எனவே கரும்பு வெல்லத்திற்கு போட்டிருக்கக் கூடிய விற்பனை வரியை தேங்காய்க்கு போட்ட வரியை நீக்கியதுபோல் அதையும் நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழகத்திற்கும் கேரளத்திற்கும் இடையே இருக்குந்த வேறுபாடுகள் இருக்கின்றன. அலுவலர்கள், ஜீப் டிரைவர்கள், ஏவலாளர்கள் போன்றவர்களுக்கு தமிழ்நாட்டில் (மணியடிக்கப்பட்டது.)

நாள் படி ரூ. 1-75 தான் கொடுக்க படுகிறது பாலக்காட்டிலிருந்து பொள்ளாச்சிக்கு வந்தால் கேரளாவில் உள்ளவர்களுக்கு தினப்படி ரூ. 7 கொடுக்கப்படுகிறது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் உள்ள அந்தப் பணியாளர்களுக்கு இடையே ஒரு மனக் கசப்பு ஏற்பட்டுள்ளது. இங்கு கொடுக்கப்படும் நாள்படி மிகவும் குறைவாக இருக்கிறது. ஆகவே நாள் படியை உயர்த்தினால்தான் கீழ்த்தர அலுவலர்களுக்கு நல்லதொரு வாய்ப்பாக இருக்கும்.

அடுத்தபடியாக, கொள்ளடம் ஆற்று வட கரையில் 25 மைலுக்கு எந்த விதமான ரோடு வசதியும் இல்லை. ஆற்றின் அருகிலும், ரெயில்வேக்களில் அருகிலும் நல்ல ரோடுகள் இருக்கவேண்டும் என்பது முறை. திருமானூரிலிருந்து கிழக்கே 25 மைல் வரை நல்ல ரோடு வசதி இல்லை. பல பகுதிகளில் ரோடுகளை யூனியன்கள் பராமரிக்க முடியாத தொரு சூழ்நிலை இருக்கிறது. அதனால் அங்குள்ள மக்களுக்கு வெள்ளக் காலங்களில் ஏற்படும் கஷ்டங்கள் கொஞ்சநஞ்சமல்ல. ஆகவே கொள்ளிடத்திற்கு வட கரையில் நல்லதொரு சாலை அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ராமநல்லூர் என்பது கொள்ளிடத்திற்கு நடுவில் உள்ளது. வெள்ளக் காலத்தில் அங்குள்ள மக்கள் பாதுகாப்பில்லாமல் தவிக்கிறார்கள். முன்பெல்லாம் அமைச்சர்கள் பேசினார்கள். ராமேஸ்வரத்திற்கு ஒரு தடுப்புச் சுவர் கட்டலாம் என்று. கொள்ளடத்திற்கு நடுவில் உள்ள ராமநல்லூரைப் பொருத்தவரையில் ஒரு பாதுகாப்புச் சுவர் கட்டினால்தான் அங்குள்ள மக்கள் தண்ணீர் வரக்கூடிய காலத்தில் பயம் இல்லாமல் நிம்மதியாக இருக்க முடியும்.

[திரு. ஆர். கருப்பையா] [1970 மார்ச் 28

விவசாயிகளுக்கு கடன் நிவாரணச் சட்டம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இப்போது விவாதித்துக் கொண்டிருக்கக்கூடிய துணை மானியங்கள் சம்பந்தமாக எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றையதினம் அரசாங்கம் பல்வேறு சட்டங்களை நிறைவேற்றி அந்தச் சட்டங்களை அமல்படுத்த நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகிறது. அவ்வாறு அமல்படுத்த நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகிற இந்தச் சந்தர்ப்பத்தில் நமது அரசாங்கம் 1969-ம் ஆண்டு வேளாண்மை நில உரிமைப் பதிவுச் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறது. ஒரு வருட காலமாகியும் அந்தப் பதிவுச் சட்டம் அமல்படுத்தப்படுவதற்கு அதிகாரிகள் நியமிக்கப்படாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக நிலத்தை வாய் நம்பிக்கையாகப் பெற்று உழுது கொண்டிருக்கக்கூடிய உழவர்கள் வெளியேற்றப்படக்கூடிய ஒரு அபாய நிலை ஏற்பட்டிருக்கிறது. நான் இதைக் கூறக் காரணம் என்னவென்றால், மாவட்ட ஆட்சித் தலைவர்களை அணுகிக் கேட்கும்போது அரசாங்கம் எங்களுக்கு அதிகாரிகளை புதிதாக நியமிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, புதிதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நியமனம் செய்து மாவட்டங்களில் இம்மாதிரி பதிவு செய்து கொள்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் 1969-ல் விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலி உயர்வுச் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தக் கூலி உயர்வுச் சட்டம் தஞ்சை கிழக்கு மாவட்டத்தில் மட்டும்தான் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. மற்ற மாவட்டங்களிலிருக்கும் விவசாயத் தொழிலாளர்களும் தங்களுக்கும் இம்மாதிரி ஒரு நியாயக் கூலிச் சட்டம் வேண்டுமென்று விரும்புகிறார்கள். அரசாங்கம் இந்தச் சட்டத்தை மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிப்பது மட்டுமல்லாமல் தஞ்சை மாவட்டத்தில் அந்தச் சட்டத்தை அமல்படுத்த அதிகாரிகளை இன்னும் நியமனம் செய்யவில்லை. யாரிடம் தங்களுடைய குறைகளைச் சொல்வது என்ற கேள்வி எழுகிறது. அதிகாரிகளிடம் சென்று தங்கள் குறைகளைச் சொல்லும்போது நாங்கள் அதிகாரபூர்வமாக விசாரணை செய்ய நடவடிக்கை இன்னும் ஏற்படவில்லை என்று அதிகாரிகள் தரப்பிலேயிருந்து சொல்லுகிறார்கள். ஆகவே, சட்டம் கொண்டுவந்த பிறகும், அதை அமல்படுத்தக்கூடிய முறையிலே சம்பந்தப்பட்ட இலாக்கா அதிகாரிகளை நியமனம் செய்வதற்குத் தாமதமாகயிருக்கிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

1963-ஆம் வருஷம் நம்முடைய தமிழகத்தில் இனாம் ஒழிப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதன் பிறகு தமிழக அரசு அந்தச் சட்டத்திலே ஒரு திருத்தம் செய்து மற்றொரு இனாம் ஒழிப்புச் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். இந்த இனாம் ஒழிப்புச்சட்டத்தை அமல்படுத்துவதற்காக அதற்காக நியமிக்கப்பட்ட செட்டில்மெண்ட் தாசில்தார் போன்றவர்கள் உண்மையான சட்டத்திற்குப் புறம்பாக ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். பரம்பரையாக விவசாயம் செய்துகொண்டிருந்தாலும், உழுதுகொண்டிருந்தாலும், 12 வருஷங்கள் அந்த நிலத்திலே உழுதுகொண்டிருப்பது நிரூபிக்கப்பட்டாலும் அங்கே ஸ்தலத்திலேயிருக்கும் கிராம அதிகாரிகள் கிராம அடங்கலிலே பெயர் எழுதப்படவில்லை என்பதற்காக அதற்கு விரோதமாக, இனாம்தாரர்களுக்குச் சாதகமாக நடந்து கொண்டிருக்கிறார்கள். தஞ்சை ஜில்லாவில் நூற்றுக்கணக்கான வழக்குகள் இம்மாதிரி விவசாயிகளுக்கு விரோதமாக, இந்தச் சட்டத்திற்குப் புறம்பாக செட்டில்மெண்ட் தாசில்தார்கள்



1970 மார்ச் 28] [திரு. ஆ. கு. சுப்பையா]

பல தீர்ப்பளிக்கும் நிலை நடந்திருக்கிறது. உயர்நீதி மன்றத்திற்கோ, செட்டில்மெண்ட் கோர்ட்டிற்கோ அப்பீல் செய்து வழக்காடுவதென்றால், சாதாரணமாக 4 ஏக்கர், 3 ஏக்கர் நிலம் வைத்துக்கொண்டு பிழைப்பவர்களான அந்த விவசாயிகளுக்கு எந்த அளவிற்குச் சாத்தியப்படும் என்பதை ஆலோசனை செய்து பார்க்க வேண்டும். அந்த முறையிலே, சட்டத்தை நிறைவேற்ற, நியாயமான முறையிலே, விவசாயிகளுக்கு அந்த நிலம் கிடைக்க உரியமுறையிலே நடவடிக்கை எடுக்க சர்க்கார் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சட்டம் நிறைவேற்றப்படும் காலத்திலே இன்றையதினம் சட்டம் விவசாயிகளுக்கு, தொழிலாளர்களுக்குச் சாதகமாகயிருந்தாலும் போலீசார் தலையீடுபற்றி சொல்ல வேண்டியது அவசியமாகிறது. போலீசார், சாதாரண ஜனங்களுக்கு, சாதாரணமாகப் பிழைப்பவர்களுக்கு, சாதாரணத் தொழிலாளர்களுக்கு விரோதமான காரியங்களிலே ஈடுபடும் நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. நிலச்சுவான்தார்களுக்குச் சாதகமான நடவடிக்கைகளிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். நிலச்சுவான்கள் என்று சொல்லும் காலத்தில் இன்றையத்தினம் அரசாங்கம், உச்சவரம்பு சட்டம் கொண்டுவர உத்தேசித்திருக்கிறது. அதை நாட்டிலேயிருக்கும் நல்லவர்கள், மக்கள், சகலபேரும் பாராட்டுகிறார்கள். இந்த நிலையில் தஞ்சை ஜில்லாவிலேயிருக்கும் நிலச்சுவான்தார்கள் இவ்வளவுகாலமாக மக்களை ஏமாற்றிக்கொண்டிருந்தவர்கள், மாநாடு நடத்தி நாங்கள் இனிமேல் குறுவை விவசாயம் செய்யப்போவதில்லை என்று மிரட்டிக்கொண்டிருக்கிறார்கள். மிரட்டக்கூடிய நேரத்தில் தேவையில்லாத நிலையை அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இன்றையத்தினம் அரசாங்கம் அந்த மிரட்டலுக்குக் கொஞ்சங்கூட அஞ்ச வேண்டிய அவசியமில்லை. விவசாயம் செய்வதற்கு, நிலத்தை உழுவதற்கு இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். நிலச்சுவான்தார்கள் இவ்வாறு சொல்லிக்கொண்டு நிலத்தை உழமாட்டோம் என்று சொன்னால் அந்த நிலத்தில் இறங்கி உழுது பாடுபட, உணவு உற்பத்தியைப் பெருக்க இலட்சக்கணக்கான மக்கள் அரசாங்கத்திற்கு ஆதரவாக யிருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ளுகின்றேன். இவ்வாறெல்லாம் சொல்லி, அரசாங்கத்தைக் கொஞ்சம் யோசனை செய்ய வைக்க, அந்த உச்சவரம்புச் சட்டத்தைத் தள்ளி வைக்க நடவடிக்கை எடுக்க முடியும் என்ற முயற்சியை நிலச்சுவான்தார்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். அதற்குச் சிறிதும் அரசாங்கம் அனுமதி கொடுக்கக்கூடாது. தைரியமாக இருக்க வேண்டும். உச்சவரம்பை 15 ஏக்கர் என்று கொண்டுவந்து, உழவர்களுக்கு நலம் விளைவிக்கும் அந்தக் கொள்கையை அரசாங்கம் பின்பற்ற வேண்டுமென்று சொல்லிக்கொள்ளுகின்றேன்.

வறட்சி நிவாரணத்திற்கென்று 18 கோடி ரூபாய் என்ற பெரிய தொகையைச் செலவழித்திருக்கிறோம். பல்வேறு காரியங்கள் செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறு முடிந்த வேலைகளுக்கு, ஸ்தலத்திலே இருக்கும் அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர் போன்றவர்கள், வேலைகளை நீங்கள் செய்யுங்கள் என்று சொல்லி, அந்த வேலை செய்து முடிக்கப்பட்ட பிறகும், செய்த அந்த வேலைகளுக்கு முறையாக ரூபாய் சேங்ஷன் செய்யப்படவில்லை. இவ்வாறு ஒவ்வொரு மாவட்டத்தையும் எடுத்துப்பார்த்தால் 4 இலட்சம், 5 இலட்சம் ரூபாய் அளவிற்கு, செய்த வேலைகளுக்கு அந்தத் தொகையைக் கொடுக்க நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை. அம்மாதிரி நிலையில், ஸ்தலத்திலேயிருக்கும் பஞ்சாயத்து தலைவர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, அவர்களுக்கு அந்தத் தொகையைக் கொடுக்க வேண்டிய முறையிலே அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகின்றேன்

[1970 மார்ச் 28

*திரு. க. மு. கதிரவன் : தலைவரவர்களே, இன்றையத்தினம் இங்கு வைக்கப்பட்டுள்ள 1969–70-ம் ஆண்டுக்கான இந்த துணை மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் பேச ஆசைப்படுகிறேன்.

பொதுவாக இந்த இறுதித் துணை மானியக்கோரிக்கையிலே பேசும் பொழுது வறட்சி நிவாரண நிதியைப் பற்றி பல்வேறு குற்றச்சாட்டுக் களைச் சாட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்த வறட்சி நிவாரணப்பணி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தொகுதிகளுக்கு மட்டும் தான் அதிகமாகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் அந்தக் குற்றச்சாட்டாகும். என்னுடைய தொகுதியான தென்காசி தொகுதியில் உள்ள தென்காசி ஊராட்சி ஒன்றியத்திற்கும், செங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒதுக்கப்பட்ட தொகை, வறட்சி நிவாரணப்பணிகளுக் காக ஒதுக்கப்பட்ட தொகை மிகமிகக் குறைவாகும். அதிலும். நெல்லை மாவட்டத்திலே கடைசியாக அந்தப் பணம் அங்கே ஒதுக்கப் பட்டிருக்கிறது என்பதை மாற்றார்கள் தெரிந்துகொள்ளவேண்டும். இத்தனைக்கும் தென்காசி தொகுதியானது தனிப்பட்ட முறையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தினிடத்திலே சிறப்புப் பெற்ற தொகுதி யாகும். அப்படிப்பட்ட தொகுதிக்கே அவர்கள் குறைந்த அளவுக்குத் தான் பணம் செலவு செய்திருக்கிறார்கள் என்றால், அவர்கள் கட்சி நோக்கோடு பார்க்காமல், எந்தெந்தத் தொகுதியிலே உண்மையான வறட்சியிருக்கிறதோ அந்தப் பகுதிகளுக்குச் செலவழிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு செலவு செய்திருக்கிறார்கள் என்பதை நான் அவர் களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் வறட்சி நிவாரண நிதி என்று கூறும்பொழுது, இப்பொழுது சமீபத்திலே செங்கோட்டை மேற்குப் பகுதியில் ஏறக்குறைய 1000 ஏக்கர்கள் பஞ்சத்திற்கு உட்பட்ட நிலையைப் பார்க்கிறோம். பருவமழை தவறியதன் காரணத்தால் அந்த வருஷம் ஆயிரம் ஏக்கர்களில் அங்கே பாசனம் ஏற்படாமல் அங்குள்ள மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக அங்குள்ள ஆதித்திராவிட மக்கள் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தப் புதிய வறட்சிதான் அங்கே ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்று நினைத்துக் கொண்டிருக்கும்பொழுது தெற்குவேடு என்ற கிராமத்தில் திடீரென்று தீப்பிடித்துக்கொண்டு, 120–க்கு மேற்பட்ட ஹரிஜன மக்கள் வீடிழந்து அவதிப்பட்டுக்கொண்டி ருக்கிறார்கள். அவர்களுடைய வீடுகளுக்கு இந்த அரசாங்கம் உடனடியாக முதலமைச்சருடைய நிதியிலிருந்து பணம் ஒதுக்கீடு செய்து அவர் களுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டுமென்று இந்தச் சபையிலே நான் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இந்த மன்றத்திலேயும் சரி, வெளியிலேயும் சரி, பல்வேறுயிடங் களிலும் செங்கோட்டை, தென்காசி பகுதிகளுக்குத் தேவையான பிரச்னைகளை நாங்கள் எடுத்துக்கூறி வந்திருக்கிறோம். இருந்தாலும், அரசினர் தனிக்கவனம் செலுத்தினாலும்கூட இன்றைக்கு அந்தத் திட்டங்கள் முழு அளவிற்கு ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதை இந்த அரசாங்கத்திற்கு நான் சுட்டிக்காட்டிவிட்டு, செங்கோட்டை பகுதியிலே கண்டுப்புளி அணைத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித்தர வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். கண்டுப்புளி அணைத்திட்டத்தைப் பொறுத்தவரையில், கேரள அரசாங்கத்தோடு செங்கோட்டைப் பகுதியிருந்த நேரத்தில் அந்த அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு திட்டம் இது. அந்தத் திட்டத்தினால் தனிப்பட்டவர்களின் தோப்பு பாதிக்கப் படுகிறது என்கிற காரணத்தால் தமிழக அரசாங்கத்தோடு சேர்ந்த பிறகும் இன்றைக்கும் அது ஒற்றி வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக அரசைப்பொறுத்தவரையில் எந்தத் தனிப் பட்டவர்களைக் கொண்டும் பயங்கொள்ளாது என்பதை நாங்கள் சட்டத்திலே பார்த்திருக்கிறோம். 15 ஏக்கர்தான் குறைந்தபட்சம் என்று அறிவிப்பு கொடுத்து பாராட்டைப்பெற்றிருக்கிற இந்தத் தமிழக அரசு இந்தக் கண்டுப்புளி அணைத் திட்டத்தையும் கட்டி மக்களின் பாராட்டைப்பெறும் என்ற முழு நம்பிக்கை எனக்கிருக்கிறது.



1970 மார்ச் 28] [திரு. க. மு. கதிரவன்]

தென்காசி பகுதியைச் சேர்ந்த அடவிநயினார் அணைக்கட்டப் படுவதற்காக பல நாட்களுக்கு முன்பிருந்தே திட்டம் தீட்டிக்கொண்டு வருகிறார்கள். அப்படியிருந்தும்கூட இன்றையவரையிலும் முடிவுபெறா மலிருக்கிறது. அடவிநயினார் திட்டத்தை அரசாங்கம் எடுத்து சிறப்புற நடத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். அந்தப் பகுதியை யொட்டியிருக்கும் அச்சன்கோயில் அணைக்கட்டைக் கட்ட வேண்டுமென்ற யோசனை இந்த அரசாங்கத்தில் இருந்தது. அந்த யோசனை இதுவரை யிலும் தீவிரமாகச் செயல்படுத்தப்படவில்லை. இனிமேல் அதைத் தீவிரப்படுத்திச் செயல்படுத்தும் என்ற முழு நம்பிக்கை எனக்கிருக்கிறது. அச்சன்கோயில் அணையைக் கட்டுவதனால் நெல்லை மாவட்டத்தின் மேற்குப்பகுதி, நெல்லை மாவட்டத்தின் வடக்குப் பகுதி, நெல்லை மாவட்டத்தின் மத்தியப் பகுதி ஆகியவைகள், எப்படி தாமிரபரணி பகுதிகள் சிறப்புற்றிருக்கிறதோ அதைப்போல் அந்தப் பகுதிகளும் சிறப்புற்று விளங்கும் என்பதை நான் இந்த அரசாங்கத்திற்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, பம்புளி என்ற ஊருக்கும், வடகரை என்ற ஊருக்கும் இடையே புலியோடைப் பாலம் என்ற ஒரு பாலம் இருக் கிறது. அந்தப் பாலம் மிகவும் ஆபத்தான நிலைமையில் இருக்கிறது. உடனடியாக அந்த ஆபத்தைத் தவிர்க்க அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கோருகிறேன்.

அடுத்தபடியாக, காட்டு இலாக்காவைப் பொறுத்த அளவில், இந்த இலாகாவில் வேலைசெய்கின்ற கார்டுகள், வாட்ச்சர்கள் போன்றவர் களுக்கு தேவையான அளவுக்கு வசதிகள் செய்யப்படவில்லை. செய்ய வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசாங்கத்திற்கு இருந்தாலும், உடனடியாகச் செய்துகொடுக்கவேண்டும் என்று நான் வேண்டிக் கொள்கிறேன். இந்த கார்டு, வாட்ச்சர்களைப் போன்ற கடைநிலை ஊழியர்கள் காட்டு வனப்பகுதியில் இயற்கை எதிர்ப்பை தாங்கிக் கொண்டு, மனித எதிர்ப்பை தாங்கிக்கொண்டு, மழையையும், பனியையும் தாங்கிக்கொண்டு தீ பிடித்துக்கொண்டால் அந்த ஆபத்தையும் தாங்கிக்கொண்டு. விலங்கினங்களைக் காப்பாற்றிக்கொண்டு வருகிறார்கள். அவர்களுக்குப் போதிய உடை வசதிகளையும். குடியிருப்பிற்காக வேண்டிய வசதிகளையும் இந்த அரசாங்கம் செய்துதரவேண்டும் என்று நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வனத்துறையைப் பொறுத்தவரையில், இலங்கை அகதிகளுக்கு பல்வேறு துறையினர் சேவை செய்துகொண்டு வருகிறார்கள். அந்தத் துறையில் வனத்துறைதான் சிறப்பு பெற்றிருக்கிறது. வனத்துறையைப் பொறுத்த அளவில் இலங்கையிலிருந்து வருகிற அகதிகளுக்கு எஸ்டேட்களில் வேலை கொடுத்து, அவர்களைக் காப்பாற்று கின்ற வனத்துறையை என்னால் பாராட்டாமல் இருக்கமுடியாது. எனது பாராட்டுதலை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுப்பணித் துறையைப் பொறுத்தவரையில், கூவம் ஆற்றினை மிகச் சிறப்பாக சீர்செய்துகொண்டிருக்கிறார்கள். கூவம் ஆற்றைப் பற்றி சொல்கிறபொழுது ஒரு காலத்தில் நமது சென்னை நகரத்தில் ஓடுகின்ற நாற்றம் பிடித்த கூவம் ஆற்றை தேம்ஸ் நதி போன்று ஆக்கவேண்டும் என்று பேசிக்கொண்டிருந்தோம். தேம்ஸ் நதியை விட சிறப்பான முறையிலே அமையக்கூடிய நிலையில் இந்தக் கூவம் ஆறு இருக்கிறது. இன்னும் சில ஆண்டுகளில் உலக நாடுகளில் எல்லாம் கூவம் ஆற்றைப் பார்க்கின்றபொழுது, கூவம் ஆற்றைப் போன்று நம்முடைய நாட்டிலே ஒரு கால்வாயை வெட்டவேண்டும் என்று உலக நாடுகளில் பேசிக்கொள்வார்கள். அந்த அளவுக்கு சிறப்பு மிக்கதாக இந்தக் கூவம் ஆற்றுத் திட்டம் அமைந்திருக்கிறது. இந்தத் திட்டம் காரணமாக இங்கு வருகிற வெளிநாட்டுக்காரர்கள் இந்தியாவில் உள்ள சிறப்பு மிக்க இடங்களைப் பார்க்கும்பொழுது, கூவம் ஆற்றையும்

பார்க்கவேண்டும் என்று அவர்கள் விரும்பி வருவார்கள். அவர்கள் அப்படி சென்னை நகரத்திற்கு வரும்பொழுது, தமிழகத்திலுள்ள பல்வேறு இடங்களுக்குச் செல்லவேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு வரும்.

மேலும், நெல்லை மாவட்டத்தில் ஒரு விமானத் தளம் ஏற்படுத்த வேண்டும். அந்த விமானத் தளம் ஏற்பட்டால், அருகில் உருவாகிக் கொண்டிருக்கிற தூத்துக்குடி துறைமுகத் திட்டம், கன்யாகுமரி போன்ற பகுதிகளை பார்வையிடுவதற்கும், இன்னும் வனத்துறையால் பாதுகாக்கப்படும் புலி சரணாலயமான முண்டந்துறைக்குச் சென்று வருவதற்கும், குற்றாலம் முதலிய பகுதிகளுக்குச் சென்று வருவதற்கும் பயனுள்ளதாக இருக்கும். ஆகவே நெல்லையில் ஒரு விமான தளத்தை ஏற்படுத்தவேண்டும் என்று விரும்பி வேண்டி கேட்டுக்கொண்டு, இந்தத் துறை மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு துணைச் சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, அமர்கிறேன்.

**திரு. க. ர. நல்லசிவன் :** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னால் பரவலாக தமிழ் நாடு பூராவும் எதிர்பாராத வகையில் மழை பெய்ததன் விளைவாக, தமிழக அரசு அநேகமாக எல்லா மாவட்டங்களிலும் மழை பெய்திருக்கிறது. பஞ்சமை குறையவில்லை என்ற ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது என்று நினைக்கிறேன். ஆனால், கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சரியாக மழை பெய்தது கிடையாது. அதுமட்டுமல்ல. வருடா வருடம் சரியான மழை இல்லாத காரணத்தினால், கடந்த 25 ஆண்டுகளாக கோவை மாவட்டத்தில் நீர்ப்பாசனம் இல்லாத பகுதிகளில் குறிப்பாக பஞ்சத்தால் பாதிக்கப்பட்டு, தொடர்ச்சியாக வறட்சி நிலைமை இருந்து கொண்டுவருகிறது. ஒரு கிணறு வெட்டவேண்டுமானால், 200, 300 அடி வெட்டினால்தான் ஏதோ தண்ணீரைப் பார்க்கலாம். அதுவும் அந்தத் தண்ணீரை வைத்துக்கொண்டு விவசாயம் செய்வது என்பது இயலாத காரியம். இதை அமைச்சர் அவர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

கோவையைப் பொறுத்தவரையில், இன்றைக்கு ஒரு பெரிய எழுச்சி ஏற்பட்டிருக்கிறது. இந்த எழுச்சியைப் பொறுத்தவரையில் ஜனங்களுடைய மனதில் ஒரு உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அவர்களுடைய மனதின் அடித்தளத்தில், என்ன ? சர்க்கார் ஒருவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லையே, தண்ணீர் கிடைப்பதற்கு எந்தவிதமான ஏற்பாட்டையும் செய்யவில்லையே என்ற உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அந்த உணர்ச்சியின் அடிப்படையில் ஏற்பட்ட எழுச்சிதான் இது. ஒரு சில நிலச்சொந்தக்காரர்களும் அதில் கலந்துகொண்டிருக்கலாம். இல்லை என்று சொல்லவில்லை. நான் இந்த இயக்கத்தில் பங்குகொண்டவரையில், இரண்டு நாளைக்கு முன்னால் என்ன நடக்கிறது என்று தெரியாது. யாரும் மக்களுடைய இயக்கத்தை குறைத்துக் கணக்குப் போடவேண்டாம், சரியான முறையில் ஜனங்களின் இயக்கத்தை கணக்குப் போடவேண்டும்.

கிணறுகளில் தண்ணீர் கிடையாது. இரண்டு மோட்டார்கள் வைத்துக் தான் தண்ணீர் எடுக்கவேண்டும். பரம்பிகுளம்–ஆளியாறு, கீழ் பவானி பகுதிகளில் இரண்டு ஆண்டுகளுக்கு, மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் தண்ணீர் வரக்கூடிய நிலை இருக்கிறது. அந்த உணர்ச்சி மக்களிடையே இன்னும் குறைந்தபாடில்லை. அப்படியே இருக்கிறது. அந்த நிலையை மாற்றவேண்டுமென்றால் அதற்கு ஒரே ஒரு வழி தான் இருக்கிறது. பரம்பிகுளம்–ஆளியாறு. கீழ் பவானி திட்டம் இருக்கிறது. கோவை, அவினாசி, பல்லடம், ஈரோடு தாலுக்காக்களில் நீர்ப்பாசனம் இல்லாத புஞ்சைப் பகுதிகளில், அந்த இடங்களிலெல்லாம் ஏரிகள், குளங்களில் இருக்கும் தண்ணீர் குடிநீர்ப் பிரச்சினையைத்தான் தீர்க்க முடியும் அளவுக்கு. ஆனால், அங்கு இருக்கக்கூடிய பெரிய பிரச்சினையைத்





தீர்க்கவேண்டுமென்றால், நீர்ப்பாசனத்திற்கு தண்ணீர் கிடைக்கவில்லை என்ற அடிப்படையில் கூட இந்த இயக்கம் உருவாகியிருக்கிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் இதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. பாண்டியாறு—புன்னப்புழா திட்டத்திற்கு சர்க்கார் அனுமதி கொடுத்தும், வேறு சில காரணங்களுக்காக அது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. தமிழக அரசு கேரள அரசுடன் பேசி, இந்த மின்சாரத் திட்டத்தை நீர்ப்பாசன திட்டமாக மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பொதுப்பணித் துறை மானிய விவாதத்தின்போது கூறினேன். இதை நீர்ப்பாசனத் திட்டமாக எடுத்துக்கொள்வதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. நம்முடைய எஸ்டிமேட் கமிட்டியும் இதுபற்றி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கருத்து தெரிவித்திருக்கிறது. அரசு இதைப் பற்றி கவனித்துக் கொண்டிருக்கிறது.

**திரு. க. ர. நல்லசிவன் :** மராமத்து அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். இதை நீர்ப்பாசன திட்டமாக மாற்றி அமைத்துவிட்டால், மகிழ்ச்சி அடையக் கூடிய முதல் ஆள் நான்தான். இதற்காகமுயற்சி எடுத்துக் கொள்வதற்கு நான் மனப்பூர்வமாக மராமத்து அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். இதிலே விரைவாக ஒப்பந்தத்தை முடித்து, நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதில் ஒரு பெரிய சிக்கலும் இருக்கவில்லை. வீணாகப் போகக்கூடிய தண்ணீர்தான். ஆகவே, துரிதமாக இந்தக் காரியத்தைச் செய்யவேண்டுமென்றுகேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, காவேரி, பவானி, அமராவதி, நொய்யல் போன்ற ஆறுகளில் சட்டவிரோதமாக பம்பு செட்கள் வைத்துத் தண்ணீர் எடுப்பவர்களில் நானும் ஒருவன் என்று பெருமையாகச் சொல்கிறேன். காரணம் என்னவென்றால், என் பேரில் தனிப்பட்ட முறையில் குற்றம் சாட்டுவதில் பயனில்லை. சட்டவிரோதமான முறையில் பம்பு செட்கள் வைத்து தண்ணீர் எடுத்தால் தான் பெர்மிட் கொடுக்கப்படுகிறது என்பதை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். கடந்த 20 ஆண்டு காலமாக காவேரி, நொய்யல், பவானி, அமராவதி ஆகிய ஆறுகளில் இப்படி அதிகமாகப் போகிற தண்ணீரை, ஒரு குறிப்பிட்ட கால்வாயில் அதிகமாகத் தண்ணீர் போகிறது, பெர்மிட் கொடுக்க வேண்டுமென்றால், பெர்மிட் கிடைப்பது கிடையாது சட்டவிரோதமாக தண்ணீர் எடுப்பவர்களுக்குத்தான் பெர்மிட் கொடுக்கப்படுகிறது. ஆகவே, இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் மதிப்பிற்குரிய மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து அடுத்த ஆண்டுக்குள், திட்டவட்டமாக ஒரு காரியத்தைச் செய்யவேண்டும். இல்லாவிட்டால், காவேரி, பவானி, அமராவதி ஆகிய ஆறுகளில் சட்டவிரோதமாக பம்புசெட்கள் வைத்து, தண்ணீர் எடுக்கக்கூடிய போக்கு வளர்ந்து கொண்டே தான் போகும். ஏனென்றால், சட்டவிரோதமாக பம்பு செட்கள் வைத்து தண்ணீர் எடுப்பவர்களுக்குத்தான் பெர்மிட் கொடுக்கப்படுகிறது.

(திரு. ந. தருமலிங்கம் தலைமை)

சேலம் ராஜன் வாய்க்கால், புகலூர் வாய்க்கால், காவேரி, அமராவதி, பவானி பழைய வாய்க்கால்களில் ஒரு க்யூசெக்ஸுக்கு 25 ஏக்கர் என்ற முறை இருந்து வருகிறது. நவீன முறையில் ஒரு க்யூசெக்ஸுக்கு 40 ஏக்கர் நஞ்சைக்குக் கூட சாதாரணமாகப் பாயும். அந்த அளவில் தாராளமாக பாசனம் செய்ய முடியும் என்ற நிலை இருக்கிறது.

ஆகவே, சர்க்கார் அதைப்பற்றி ஒழுங்காக பரிசீலனை செய்து சட்ட விரோதமான முறையிலே யார் தண்ணீர் எடுத்திருந்தாலும் சரி அவர்கள் மேல் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். இப்படி சட்ட விரோத மான முறையிலே தண்ணீர் எடுப்பவர்களுக்கு பழைய அரசாங்கத்தில் பர்மிட் கொடுத்திருந்தார்கள். இதைத் தடை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதை இந்த அரசு தைரியமாகச் செய்யலாம். அதற்கு பரிபூரணமான ஒத்துழைப்பை நான் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். எந்த அளவிற்கு உயர்ந்த பட்ச ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டுமோ அதைக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். யாராக இருந்தாலும், தனிப்பட்டவர்கள், வேண்டியவர்கள் என்று பார்க்காமல் யார் சட்ட விரோதமான முறையிலே பம்பு செட் போட்டி ருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். கடந்த 4, 5 ஆண்டுகளாக 1,500 ஏக்கராவிற்கு பம்பு செட் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு பேர் போட்டிருக்கிறார்கள் என்ற விவரம் எனக்கு சரியாகத் தெரியாது. இந்தப் போக்கு வளர்ந்து கொண்டு வருகிறது. உடனடியாக சர்க்கார் இப்படி சட்ட விரோதமாக பம்பு செட் போட்டிருப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முன் வருமானால் நானும் என் நிலத்தில் போட்டிருக்கிற பம்பு செட்டை எடுத்து விடத் தயாராக இருக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டும் கெட்டான் நிலை கூடாது.

கடைசியாக பாண்டியாறு, • புன்னம்புழா திட்டங்களுக்கு இன்று ஏற்பட்டிருக்கும் பிரச்னைகளை அறிவீர்கள். அவற்றைப் போக்கி அவற்றை நல்ல முறையிலே நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். பன்னீர் செல்வம்:** சட்ட மன்ற மாற்றுத் தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தை களைக் கூற விரும்புகிறேன்.

நமது வட ஆற்காடு மாவட்டம் ஏறத்தாழ ஒரு வறட்சியான மாவட்டம். வட ஆற்காடு மாவட்டம் தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தபடி பெரும் அளவு விவசாயத்தை நம்பி வாழ்கிற மாவட்டம். இந்த மாவட்டத்தில் விவசாயப் பெருங்குடி மக்கள் இன்று என்ன நிலையில் இருக்கிறார்கள் என்று பார்த்தால் சாதாரண விவசாய மக்கள் கரும்பை நம்பி வாழ்கிற மக்களாகக் காட்சியளிக்கிறார்கள். கரும்பின் விலை குறைந்து கொண்டு வருகிறது. 1968-ம் ஆண்டு வட ஆற்காடு மாவட்டத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ஒரு டன்னுக்கு 110 ரூபாய் கொடுத்தார்கள். 1969-ம் ஆண்டு 90 ரூபாய் கொடுத்தார்கள். 1970-ம் ஆண்டு 70 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இந்த நிலையைப் பார்க்கும்போது விவசாயத்தை நம்பி இருக்கும் பெரும்பாலான விவசாய மக்கள் மிகவும் கஷ்டப்படு கிறார்கள் என்று நன்கு தெரியும். இந்த விவசாயிகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து அரசாங்கம் நிர்ணயித்து இருக்கும் விலை மிகக்குறைவு அதை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். மின்சாரத்திற்கு கட்டணம் கடந்த ஆண்டு 8½ பைசாவாக இருந்தது. இந்த ஆண்டு 10 பைசாவாக உயர்த்தப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர்கள் நமது மாண்புமிகு முதலமைச்சரைச் சந்தித்து இதை உடனடியாகக் குறைக்க வேண்டுமென்று கேட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனிக்கிறேன் என்று சொன்னார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். வட ஆற்காடு மாவட்டத்தில் வெல்ல மார்க்கெட் விலை மிகவும் வீழ்ச்சி அடைந்து விட்டது. வேலூர் நகரத்திற்கு வெல்லம் கொண்டு வரும் விவசாயிகள் ஊருக்குத் திரும்பிச் செல்கையில் திரும்பிச் செல்வதற்குக்கூடக் காசு இல்லாத நிலையில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயிகள் கடனைப் பெற்று இருந்த பணத்தை கடந்த ஆண்டு வறட்சி காரணமாக தள்ளி வைக்க வேண்டு மென்று நமது மாண்புமிகு முதலமைச்சர் தள்ளி [illegible]





மென்று வறட்சி நிலை நீங்கி நல்ல மழை பெய்த பிறகு, இரண்டு ஆண்டுகளுக்குக் கொடுக்க வேண்டியதையும் தரவேண்டுமென்று அதிகாரிகள் கேட்டார்கள். விவசாயிகள் கேட்டுக் கொண்டதன் பேரில் 6 மாதத்திற்குத் தள்ளி வைத்து இருக்கிறார்கள். அதை இன்னும் 6 மாதத்திற்குத் தள்ளி வைக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இதை அமைச்சரவை கவனித்து வேண்டிய உத்திரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில 3 ஆயிரம் ஏக்கரா சாகுபடி நிலங்கள் இன்று காட்டிலாகாவால் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. எங்களுடைய மாவட்டத்தில் கலெக்டராக இருந்த பெல்லியப்பா அவர்களை அழைத்துச் சென்று காட்டினோம். அவரும் நடந்து வந்து இந்தப் பகுதியைப் பார்த்தார். இந்த நிலங்களை மீண்டும் சாகுபடிக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார். இதை சாகுபடிக்கு கொண்டு வந்தால் உடனடியாக ஆயிரம் குடும்பங்கள் வாழ்வதற்கு வழி ஏற்படும். இதை நம்முடைய சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த நிலங்களை காட்டிலாகாவிடமிருந்து மாற்றி விவசாயிகளுக்கு சாகுபடிக்கு கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தை வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது ஆம்பூர் தொகுதிக்கும், பேரணம்பட்டுத் தொகுதிக்கும் இடையில் பாலாறு ஓடுகிறது. அதற்குப் பாலம் கட்ட வேண்டுமென்பது நீண்ட நாளைய கோரிக்கை. மழை காலத்தில் வெள்ளம் வந்து விட்டால் ஏறத்தாழ 10 ஆயிரம் மக்கள் ஆம்பூரிலிருந்து, பேரணம்பட்டிற்குப் போக முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். இந்த பாலத்தைக் கட்டினால் இந்த மக்களுக்கு இது வசதியாக இருக்கும். அன்றைக்கு முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு வரவேற்பு கொடுக்கும்போது இந்தப்பாலம் கட்டவேண்டிய அவசியத்தை வரவேற்பு உரையில் குறிப்பிட்டிருந்தார்கள். அது இன்றைய தினம் வரையில் நிறைவேற்றப்படவில்லை. உள்ளபடியே நாங்கள் பெரும்பாலான மக்கள் இந்த அமைச்சரவையைக் கேட்டுக் கொள்கிறோம், இந்தப் பாலத்தை எவ்வளவு சீக்கிரம் கட்டிக் கொடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கட்டிக் கொடுங்கள்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த மட்டில் அகரத்தில் மேம்பாலம் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று கலைஞர் அவர்களை எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்தபோதே கேட்டுக் கொண்டோம். இந்தத் திட்டத்தை இன்றைக்கு நிறைவேற்றித் தர வேண்டுமென்று அமைச்சரவை யைக் கேட்டுக் கொள்கிறேன். இப்படிப் பல திட்டங்கள் மக்களுக்குத் தேவையான திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆம்பூர் தொகுதியில் இருக்கிற ஹரிஜன மக்கள் அனாதை சர்க்காருடைய தரிசு நிலங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இதை வெட்டு வாணத்தை அடுத்து 80 ஏக்கர் நிலம் இருக்கிறது. ஹரிஜன மக்களுக்கு ஏன் பட்டா செய்து கொடுக்கவில்லை என்று தெரியவில்லை. வீட்டு மனைகளுக்கு அவர்களுக்கு இடம் இல்லை. கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு வீட்டு மனை வழங்கப்பட வேண்டும். மேல்பாதிரிப்பட்டு, மேல்பாக்கம், கீழ் முருங்கை ஆகிய கிராமங்களில் வாழ்கிற ஹரிஜன மக்கள் வாழ்கிற பகுதிகளைப் பார்த்தால் அவர்கள் மனிதனுக்கு அப்பாற்பட்ட கீழ்த்தரமான நிலையில் வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள். ஆகவே அரசாங்கம் இதிலே எல்லாம் ஆவன செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

உணவு நிலையைப்பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். இந்தச் சர்க்கார் கடந்த 2, 3 மாதங்களாக 76 பைசாவிற்கு ஒரு கிலோ கோதுமை கொடுத்து வந்தது. இப்போது 92 பைசாவிற்கு அது விற்கப் படுகிறது. ஆம்பூர் பெருங்குடி மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள்,

ஹரிஜன மக்கள் இதனால் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, இந்தப் பகுதியில் மீண்டும் 76 பைசாவிற்குக் கோதுமை விற்கப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் துணை மானியத்தின் மேல் எனக்கு பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ஆர். பொன்னப்ப நாடார்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் துணை மானியக் கோரிக்கையின் மீது எனது கருத்தை எடுத்துக் கூறுவதற்கு முற்படுகிறேன். வறட்சித் துயர்துடைப்புப் பணிக்கு என்று கோடிக் கணக்கிலே இந்த அரசாங்கம் செலவு செய்திருக்கிறது.

இந்தத் திட்டங்களினால் பல பகுதிகளுக்கும் நன்மை ஏற்பட்டிருக்கிறது என்று இங்கே பலரும் எடுத்துச் சொன்னார்கள். நான் இந்தத் திட்டங்களைப் பற்றி ஒரு குறிப்பிட்ட விஷயத்தை மட்டும் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தத் திட்டங்களில் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு போதிய பணம் ஒதுக்கவில்லை என்ற குற்றச் சாட்டை இதன் மூலம் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். 18 கோடி செலவழித்த போதிலும் சுமார் 23 லட்சம் தான் எங்கள் ஜில்லாவிற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. பல ஜில்லாக்களிலும் இருந்து கேட்ட தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கன்னியாகுமரி ஜில்லாவைப் பொறுத்தமட்டில் போதுமான பணம் ஒதுக்கப்படவில்லை. அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், அங்கே நடத்துகின்ற வேலைகளைப் பற்றி சரியான முறையில் நடந்திருக்கிறதா என்று ஆய்வு செய்யவேண்டிய பொறுப்பும் கடமையும் அரசைச் சேர்ந்தது. பல தவறுகள் நடந்திருப்பதாக புகார்கள் வந்த காரணத்தால், போர்டு அங்கத்தினர் திரு. திருமலை அவர்கள் எங்கள் ஜில்லாவிற்கு வந்தார்கள். அங்கே நடந்த காரியங்களை பற்றியெல்லாம் ஆய்வு செய்து அறிக்கையும் அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்திருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். அந்த அறிக்கையின் மீது என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று அமைச்சர் கூறுவார்கள் என்று நினைக்கிறேன். குறிப்பாக புதுக்கடை என்ற கிராமத்தில் தண்ணீர் விஸ்தரிப்புத் திட்டமானது துவங்கப்பட்டது. சரியான முறையில் குழாய்கள் கொடுக்கப்படவில்லை. நல்ல குழாய்களை அமைக்கவில்லை. தண்ணீர் தொட்டியில் தண்ணீர் இல்லாததால் அந்தத் திட்டத்தின் கீழ் பலன் அடையமுடியவில்லை என்கிற குற்றச்சாட்டு பொது மக்களால் கூறப்படுகிறது. அதற்கு எந்த அதிகாரிகள் உடைந்தயாக இருந்தார்கள் என்று அரசாங்கம் கவனித்து, அதற்கு வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன். புதுக்கடை, விளவங்கோடு தாலுக்காவில் இருக்கிறது. வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அதேபோல, தோவாளை தாலுகாவில் பைப்புகள், செகண்ட்ஹாண்ட் பைப்புகள் என்கிற ஆட்சேபணை இருக்கிறது. அதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இதே மாதிரி துயர் தணிப்புப் பணியில் ஈடுபடும்போது, குடிநீர் இல்லாமல் வறட்சி மிகுந்த பகுதிகள் பல இருக்கின்றன. ராதாபுரம் சப்-தாலுகாவை ஒட்டிய பகுதியும், கன்னியாகுமரியில் வறட்சி மிக்க பகுதிகளும் இருக்கின்றன. கருங்கல் என்ற சின்ன கிராமம் இருக்கிறது. விளவங்கோடு தாலுகாவில் குடிநீர் கஷ்டம் அதிகமாக இருக்கிறது. ஒரு குடம் தண்ணீர் நாலு அணுவுக்கு வாங்க வேண்டியதாக இருக்கிறது. ஏற்கனவே ஒரு குழாய் அமைக்கப்பட்டிருக்கிறது. முன்பு திருவாங்கூர் அரசாங்கத்தால் 1,500 நபர்களுக்கு போதிய அளவில் தண்ணீர் கிடைக்கும் திட்டமாக உருவாக்கியிருக்கிறார்கள். பல ஆண்டுகள் ஆகிவிட்டன. அதை விஸ்தரிக்க வேண்டும் என்று ஜில்லா அபிவிருத்தி கவுன்சிலிலும், ஜில்லா கலெக்டரிடமும் அமைச்சரிடமும் பலமுறை மக்களும், சட்டமன்ற பிரதிநிதிகளும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இதுகாறும் பரிகாரம் ஏற்படவில்லை, பரிதாபகரமாக இருக்கிறது.





*என்னுடைய பகுதி, நான் பிறந்து வளர்ந்த பகுதி என்பதற்காகப் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. பகிரங்கமாக அதைச் சுட்டிக்காட்ட, குற்றம் சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைப் பலமுறை எடுத்துக் கூறினேன், கவனிக்கப் படவில்லை என்பதால் அந்த குற்றச் சாட்டினை மீண்டும் எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். ராதாபுரம் பகுதியைப்பற்றி கூறினார்கள். அது நிரந்தரமான வறட்சிப் பகுதி. குடிநீருக்கு மிகவும் கஷ்டமான பகுதியாக இருக்கிறது. காவல் கிணறு, வடக்கங்குளம் போன்ற இடங்களில் தண்ணீரே இல்லை. நிவாரண நடவடிக்கை எடுக்க முற்பட வேண்டும்.

இன்னும், இந்த இறுதி மானியக் கோரிக்கையில், நிலவள வங்கிகளைப் பற்றியும், போக்குவரத்து உயர் அதிகாரிகள்பற்றியும் எடுத்துக் கூறியிருக்கிறது. சாதாரணமாகப் பார்க்கும்போது, அரசுடைமையாக்கப்பட்ட ட்ரான்ஸ்போர்ட் துறை என்ன முறையில் செயலாற்றுகிறது என்பதைக் குறித்து இந்த மன்றத்திலே பலரும் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள். அது லாபகரமாக ஓடவில்லை என்றபோது, இரண்டு கோடி ரூபாய் ஈட்டித்தருவோம் என்று உறுதி கூறினார்கள். ஆனால் முடியவில்லை. சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் நட்டத்தில்தான் ஓடிக்கொண்டிருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக, கன்னியாகுமரி ஜில்லாவில், எல்லா வழித்தடங்களையும் நாட்டுடைமை ஆக்கியதில், இன்னமும் நெரிசலாக இருக்கிறது. பல பகுதிகளில் வண்டிகள் தேவை என்று கேட்டிருக்கிறார்கள். போதிய அளவில் வசதிகள் செய்து கொடுக்கவில்லை. விரைவில் பெருக்கவேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கூற விரும்புகிறேன். போக்குவரத்து சம்பந்தமான உயர்மட்டக் கமிஷனை நியமித்து என்னென்ன பரிந்துரைகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது என்கிற விவரங்களை பதிலில் அமைச்சர் கூறுவார்கள் என்று நினைக்கிறேன். இதற்காக ரூ. 40 லட்சம் ஒதுக்கியிருக்கிறது இந்த இறுதி மானியக் கோரிக்கையில் கேட்டிருக்கிறார்கள். குறிப்பாக, ஊழியர்களிடத்தில் ஒரு நிலை இருக்கிறது. அவர்களிடையே, இப்பொழுது கிடைக்கும் ஊதியம் போதாது என்று ஒரு அபிப்பிராயம் இருந்துகொண்டே இருக்கிறது. இந்தக் காரியங்களுக்கு அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களுக்குத் தினப்படியைக் கொஞ்சம் கூட்டியிருக்கிறார்கள். ஆனால் போதுமான அளவில் விஸ்தரிக்கப்படவில்லை. ஆதலால் இந்த ஊழியர்களை நல்ல முறையில் திருப்தி செய்தால், இந்த இலாகாவானது பொதுமக்களோடு அதிகமாகத் தொடர்பு உள்ள இலாகா என்பதால், இந்த ஊழியர்களை நல்ல முறையில் வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, சிவில் குற்ற இயல் அதிகார வரம்புகளை ஆராய ஒரு கமிஷன் ஏற்படுத்தியிருக்கிறது. அவர்களும் ஆய்வுகளை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள் என்பதையும் இந்த அறிக்கைமூலம் அறிகிறேன். அந்த அந்தக கோர்ட்டுகள்பற்றி, எல்லாப் பகுதிகளிலும் திருத்தவேண்டும். புதிதாக அமைக்க வேண்டுவதுபற்றியும் அதிகாரிகள் பரிசீலனை செய்ய வேண்டும். குறிப்பாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். திருநெல்வேலி ஜில்லாவில், வள்ளியூர் என்ற பட்டணத்தில் அவர்கள் ஒரு முன்சீப் கோர்ட் வேண்டும், ஒரு முன்சீப்-கம்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட் வேண்டும் என்று நீண்ட நெடுங்காலமாக விண்ணப்பம் சமர்ப்பித்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் கோர்ட்டுக்குப் போகவேண்டும் என்றால், சிவில் கோர்ட்டுக்கு அம்பாசமுத்திரம் போகவேண்டியதாக இருக்கிறது. வள்ளியூர் மக்களுக்கு அந்த இடத்தில் ஒரு முன்சீப்-கம்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட் நிறுவுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன். அதிலும் குறிப்பாக இன்னும் பல பகுதிகளில் கோர்ட்டுகளுக்குக் கட்டடங்கள் இல்லை. உதாரணமாக, கன்னியாகுமரி ஜில்லாவில் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் வாடகைக் கட்டடத்தில்தான் இருக்கிறது. அவர்களுக்கு உறுதியான வசதியுள்ள கட்டடத்தைக் கட்டிக் கொடுக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். மாவட்ட நீதி மன்ற காம்பவுண்டு

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1970 மார்ச் 28

வேலையே செய்யலாம். அங்கே ஒரு கட்டடத்தைக் கட்ட வேண்டிய துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். எங்கள் ஜில்லா நீதிபதிக்கு வீடு இல்லை. கலெக்டருக்கு வீடு கட்டுவதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள். கலெக்டர் எவ்வளவு முக்கியமோ அதைவிடச் சிறப்பான நிலையில் இருப்பவர்தான் ஜில்லா நீதிபதியும் என்பதை மறந்து விடக்கூடாது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஜில்லா நீதிபதிக்கும் வீடு கட்டப்பட்டு வருகிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** மிக்க மகிழ்ச்சி. அவர்கள் ஜில்லாக் கலெக்டருக்கு வீடு கட்டுவதுபற்றி நடந்த கூட்டத்தில் எடுத்துக் கூறினார்கள் என்பதையும் அமைச்சரவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் ஆசிரியர்கள் பல பகுதிகளில் சம்பளம் கிடைக்காமல் கஷ்டப் படுகிறார்கள். ராதாபுரம் பகுதி ஆசிரியர்கள் இதுகாறும் சம்பளம் வராமல், பிப்ரவரி சம்பளம் மார்ச் 28-ஆம் தேதிக்குப் பிறகும் கிடைக்காமல் அவதிப்படு கிறார்கள் என்பதை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த மாதிரி ஆசிரியர்களுக்குப் பல கஷ்டங்கள் இருப்பதால், உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, முன்பு பி, சி, ஃபீல்டுமென் என்று இருந்தவர்களை இப்போது பிரித்துவிட்டார்கள். முன்பு அவர்கள் காதி போர்டினிலும் வேலை பார்த்தவர்கள், பஞ்சாயத்து யூனியன் வேலை பார்த்திருந்தார்கள். இதுகாறும் திரும்பவும் அவர்களுக்கு வேலை கொடுக்கப்படவில்லை. இவர்களில் சிலருக்கு டிரான்ஸ்போர்ட்டில் கண்டக்டர்களாகச் செல்வதற்குத் தகுதி இருக்கிறது. அப்படிப்பட்ட தகுதியுடையவர்களை அந்த இலாகாவிலே வேலைக்கு அமர்த்திக்கொள்ள வேண்டும். அவர்கள் அதற்காக மனுச் செய்து கொண்டார்கள். இது வரையில் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. அவர்களை எடுத்துக்கொள்ள அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும்.

இன்னொரு விஷயம். சிவில் சப்ளைஸ் இலாகாவிலே பணிபுரிந்தவர்களுக்கு மாற்று வேலை கொடுப்பதற்காக அரசாங்கம் ஜி. ஓ. பிறப்பித்திருக்கிறது. அப்படி இருந்தும் இன்னும் பலர் வேலை கிடைக்காமல் இருக்கிறார்கள். ஆகவே, அதற்கு வேண்டிய 'ஃபாலோ-அப்-ஆக்ஷன்' எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ரீ-சர்வே அண்ட் செட்டில்மெண்ட்டில் பல கஷ்டங்களும், துன்பங்களும் இருக்கின்றன. முன்பிருந்த சர்வே ரெகார்டுகளை எல்லாம் இல்லாமல் செய்ய வேண்டுமென்ற நடவடிக்கைகளில் அதிகாரிகள் முனைந்திருக்கிறார்கள். முன்பிருந்த பழைய ரெகார்டுகளை அதிகப்படியாக வைத்திருந்தால்தான் பின்பு ஏதாவது கோளாறு ஏற்பட்டாலும் அல்லது கோர்ட்டிலே கேஸை ருசுப்படுத்துவதற்கும் தகுதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக ரீ-சர்வே அண்ட் செட்டில்மென்டில் பல ஆட்சேபனைகள் இருக்கின்றன.

இன்றையதினம் பட்டா ஒழுங்காகக் கொடுக்கப்பட வில்லையென்று கிராமத்திலுள்ள விவசாய மக்கள் புகார்களைக் கூறி வருகிறார்கள். ஆகவே, அதற்கும் வேண்டிய நடவடிக்கைகளைத் துரிதமாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சமீபத்தில் கொளச்சல் பகுதியில் மீனவர் பகுதியில் சுமார் 100 வீடுகள் தீக்கு இரையாயின. கொட்டில்பாடு என்ற கடற்கரை கிராமத்தில் 8 வீடுகள் தீக்கிரையாகின. மாவட்டக் கலெக்டர் அவர்கள் [illegible] ரூபாய் ஒரு குடும்பத்திற்கு என்ற வகையில் உதவி செய்திருக்கிறார்கள். [illegible] பகுதியில் வீடிழந்த மீனவர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண் டிருக்கிறார்கள். அவர்கள் திரும்பவும் வீடுகள் கட்டிக்கொள்வதற்கான



1970 மார்ச் 28] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

வசதிகளை அரசாங்கம் உடனடியாகச் செய்துதர வேண்டும். அவர்கள் அங்குள்ள அதிகாரிகளிடம் பல மனுக்களை அனுப்பியிருக்கிறார்கள். அரசாங்கம் இதைக் கருத்திற்கொண்டு தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவிதாங்கூர்—கொச்சியிலிருந்து மாற்றப்பட்ட வில்லேஜ் ஆபீசர்ஸ்—கிராம சிப்பந்திகள் இன்னும் பழைய சம்பளத்தையே வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உத்தியோக உயர்வு கொடுக்க வழிசெய்ய முடியாவிட்டாலும், சம்பளத்தையாவது உயர்த்தி கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். 1956லிருந்து அதே சம்பள விதத்தில் சம்பளம் வாங்கி வருகிறார்கள். அவர்கள் சில கூடுதலான அலவன்ஸ்களை வாங்கினாலும், அடிப்படைச் சம்பளம் பழைய நிலையிலேயே இருந்து வருகிறது. அவர்களில் பலர் எஸ். எஸ். எல். சி. தேர்ச்சி பெற்றிருக் கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, என்னுடைய பகுதியைப் புறக்கணித்து இருக்கிறார்கள் என்று கூற விரும்புகிறேன். பல்வேறு காரியங்களிலும் அதிகப்படி யான பணத்தை ஒதுக்கவில்லையென்பதைக் கூற விரும்புகிறேன். சித்தார்—பட்டினங்கால் திட்டத்தைத் தவிர, வேறு உருப்படியான திட்டம் ஒன்றுமே கிடையாது. இந்தத் திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்னும் முடியும் தறுவாயில் இல்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது முடிந்து விடுமா என்று ஐயப்படக்கூடிய நிலையில், ஆமை வேகத்தில்தான் நடந்துகொண் டிருக்கிறது. இந்தத் திட்டம் நல்லமுறையில் வேகமாக நடக்கவில்லை. 1969 ஜூன் திங்களிலே தண்ணீர் கிடைக்கும் என்று கூறினார்கள். 1969 போய், 1970-ம் ஆண்டு வந்திருக்கிறது. இந்த 1970-ம் ஆண்டிலாவது அந்தப் பகுதியில் வாழ்கிற, வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குத் தண்ணீர் கிடைக்க அரசாங்கம் முயற்சிகளை எடுத்துக் கொள்ளுமா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பெரிய பெரிய பாலங்கள், ரஸ்தாக்கள்பற்றி அறிக்கை யிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய ஜில்லாவிலே திட்டங்கள் இருக்கின்றனவா என்று அறிக்கையைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தாலும் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. எங்களை வேண்டுமென்றே புறக் கணிக்கிறீர்கள் என்ற குற்றச்சாட்டை மறுமுறையும் கூறக் கடமைப்பட் டிருக்கிறேன். பொதுவாக இந்தத் திட்டங்களைப்பற்றியெல்லாம் அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஞாறும்புழைக்கடவு பகுதியில் பாலம் அமைக்க வேண்டுமென்று அன்றைய ஆட்சியிலே திட்டமிடப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டமும் முடிவுற்றது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் நடந்து கொண்டிருக்கிறது. இதுவரையில் அந்தப் பாலம் ஏற்படவில்லை. கணபதியாம் கடவு பாலம் கட்ட வேண்டுமென்று இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டது. இது கடலோரப் பகுதியில் இருப்பதால் பம்பாய் முதல் கன்னியாகுமரி வரையில் செல்லும் ரஸ்தாவை இணைக்கும் பாலமாக இருக்க வேண்டுமென்று எண்ணிய தால் அன்று இருந்த காங்கிரஸ் அரசாங்கம் திட்டமிட்டது.

மற்றும் மணக்குடியில் பாலம் வேண்டும் என்று ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. எம். சி. பாலன் அவர்கள் பன்முறையும் கேட்டார்கள். அந்தத் திட்டத்தையும் காணோம். சாதாரணக் கிராமப் பகுதிகள் புறக்கணிக்கப்படுகின்றன. கோடிக்கணக்கான ரூபாய்களை பட்டினப் பகுதிகளில் செலவழிக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை மறு முறையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். என் எங்கள் பகுதியில் அந்தத் திட்டங்களையெல்லாம் செய்யக்கூடாது என்பதை ஆய்ந்து பார்க்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] 1970 மார்ச் 28]

இன்னும் பல குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. துரித நடவடிக்கையை மேற்கொள்ள அரசாங்கம் முற்படவேண்டும். ஒரு விஷயத்தை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது உணவுக் கட்டுப்பாட்டைத் தளர்த்தியிருக்கிறார்கள். ஆனால் இன்றையதினம் விளவங்கோடு தாலுகாவில் உணவுத் தானியக் கடைகளை அனுமதிப்பதில் கட்சிக் கண்ணோட்டத்துடனேயே செயல்படுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் பேசும்போது, 'யார் கடை வேண்டுமென்று கேட்டாலும் கொடுக்கத் தயார்' என்று சொன்னார்கள். ஆனால் இன்றையதினம் அதிகாரிகள் நியாயமான முறையில் அனுமதி கொடுப்பதில்லை. வட்டச் செயலாளர், மாவட்டச் செயலாளர், யார் யாருக்குக் கொடுக்க . வேண்டுமென்று சொல்கிறார்களோ அவர்களுக்குத்தான் அனுமதி கொடுக்கும் நிலைமை இருந்து வருகிறது. நியாயமான முறையில் அனுமதி கொடுக்க வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நானே நேரில் அங்குள்ள அதிகாரிகளை அணுகிப் பார்த்தேன். கட்சிக் கண்ணோட்டத்துடன்தான் கடைகளுக்கு அனுமதி தருகிறார்கள். இது சரியல்ல. நாங்கள் எல்லையோரப் பகுதியில் இருப்பதால் நாங்கள் அரிசி கொண்டுபோக முடியாத நிலைமை இருக்கிறது. எங்கள் பகுதியில் கட்சிக் கண்ணோட்டத்துடன் 65 பேர்களுக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் அரிசியை வாங்கித்தான் சாப்பிட வேண்டும். ரேஷன் கிடையாது. வெளியிலிருந்தும் கொண்டு போக முடியாது என்ற நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு நியாயமாக அரிசி கிடைக்க வழி செய்யவேண்டும். என்னுடைய பகுதியில் இருப்பவர்களுக்கு மிகுந்த கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதைப்பற்றி கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்தோம். நீங்கள் புள்ளிவிவரங்களைக் காட்டுகிறீர்கள். புள்ளிவிவரங்கள் எல்லாம் வெறும் ஏட்டளவில்தான் இருக்கின்றன. சரியான முறையில் அமல் நடக்கவில்லை. பொதுவாக இந்த அரசாங்கத்திலே நாங்கள் எல்லையோரப் பகுதியில் இருப்பதால் கேரளத்தோடு இணைந்த பல பிரச்சினைகளும் எங்களுக்கு இருக்கின்றன. பல கஷ்டங்களும் இருக்கின்றன. நக்சல்பாரிகள் பலர் ஊடுருவிப் பல வேலைகளைச் செய்து நிலச்சுவான்தார்களுக்கும் விவசாயிகளுக்கும் தொல்லை கொடுக்கிறார்கள். அவர்களையும் அரசாங்கம் கண்காணித்துத் தக்க நடவடிக்கைகளை உடனுக்குடன் எடுக்க வேண்டுமென்று கூறிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : தலைவரவர்களே, 1969–70-ஆம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீடுகள்பற்றிய விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும், கடைசியாகப் பேசிய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மாண்புமிகு திரு. ஆர். பொன்னப்ப நாடாரும் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். எல்லாக் கருத்துக்களுக்கும் நான் பதில் சொல்லாமல் விட நேரிடும்போது, அந்தக் கருத்துக்குப் பதில் சொல்லவில்லையே, அதை அரசாங்கம் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லையே என்று மாண்புமிகு உறுப்பினர்கள் நினைக்கக்கூடாது என்று வேண்டிக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன ஒவ்வொரு கருத்தும் அரசாங்கத்தின் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும். அந்தக் கருத்து அரசாங்கத்தின் மேலான யோசனைக்குக் கொண்டுவரப்படும் என்ற உறுதியைக் கூறிக்கொண்டு, சொல்லப்பட்ட முக்கியமான ஒன்றிரண்டு விவரங்களுக்குமட்டும் பதில் சொல்வதை என்னுடைய பதிலுரையாகக் கூறலாம் என்று கருதுகிறேன்.

பிற்பகல் 12-30 ஆரம்பத்திலே பேசிய உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் என்னென்னவோ சொன்னார்கள். அவையெல்லாம்பற்றி இங்கு சொல்வதைக் காட்டிலும், அவர்கள் கூறியதிலே இரண்டு முக்கியமான விஷயங்களைக் குறிப்பிட்டார்கள். அவற்றிற்குமட்டிலும் இங்கு பதில் சொல்ல விரும்பு



1970 மார்ச் 28] [திரு. கே. ஏ. மதியழகன்]

கிறேன். முக்கியமான ஒரு விஷயமாக வறட்சித் துயர் தணிப்புப் பணிகளிலே பல வேலைகள் செய்யப்படாமல் இருக்கின்றன, எந்த எந்த அளவுக்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு விவரங்கள் வேண்டுமென்று கேட்டார்கள். இன்னொரு முக்கியமான விஷயமாக கடன்கள் வேறுமாதிரியான வசூலாகவேண்டிய கிஸ்தி பாக்கிகள் இவையெல்லாம் பல்வேறு மாவட்டங்களிலே நிலைமை ஒரு மாதிரியாக இருக்கிறது. மதுரை மாவட்டத்திலே அப்படி இருக்கிறது அதற்கு என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டார்கள். முதலாவதாக வறட்சித் துயர் தணிப்புப் பணிகளைப் பொறுத்தவரையிலும் பல பணிகள் முடிக்கப்படாத பணிகள் என்று இருப்பவை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. அவற்றிலே ஏழு மாவட்டங்களுக்கான பணிகளைப் பற்றி அந்தந்தக் கலெக்டர்கள் விவரங்கள் அளித்துள்ளார்கள். அதனுடைய அடிப்படையிலே 24 லட்சத்து 8 ஆயிரம் ரூபாய் ஏற்கனவே விட்டுப்போன பணிகளை முடிப்பதற்காக என்று, புதிய பணிகளுக்காக அல்ல, கொடுப்பதற்காக அரசாங்கம் 14–3–1970 தேதியன்று உத்திரவு பிறப்பித்து இருக்கிறது. இன்னும் சில கலெக்டர்களிடமிருந்து விட்டகுறை தொட்டகுறை என்ற நிலையில் இருக்கிற விவரங்கள் எல்லாம் வந்தவுடனே இது போன்ற உத்திரவு பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சுருக்கமாக நான் அந்த உத்திரவையே படித்துவிடுகிறேன். அந்த ஆர்டர் பின்வருமாறு :

**(G.O. Ms. No. 790, *Revenue, dated* 14*th March* 1970.)**

The Government have reviewed the position regarding the completion of incomplete and committed drought relief works in the farce of the special reports received in this behalf from most of the Collectors. They consider that no work should be left as infructuous without yielding expected benefit to the people and that therefore sufficient funds should be placed at the disposal of the Collectors to complete such works. The Government accordingly sanction an expenditure not exceeding Rs. 24.08 lakhs (Rupees twenty-four lakhs and eight thousand only) for completing all the incomplete and committed works taken up under the Drought Relief Programme in the various districts as indicated below. The Commissioner for Drought and Famine Relief is requested to take appropriate further action in the matter.

| *Name of district.* | *Allotment (Rs. in lakhs).* |
|---|---|
| Chingleput ... ... ... ... | 1.10 |
| South Arcot ... ... ... ... | 2.30 |
| Thanjavur ... ... ... ... | 1.92 |
| Tiruchirappalli ... ... ... ... | 2.40 |
| Salem ... ... ... ... ... | 2.00 |
| Dharmapuri ... ... ... ... | 4.95 |
| Coimbatore ... ... ... ... | 9.04 |
| Total | 24.08 |

இந்த வகையிலே இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. மீதியுள்ள மாவட்டங்களிலிருந்து தகவல்கள் வந்தவுடனே தொடர்ந்து ஆணை பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிலைமைகள் மாறியும்கூட இன்னும் சில பகுதிகளிலே வறட்சி நிவாரணப் பணிகள் நடைபெறவேண்டுமென்று பல உறுப்பினர்கள் இங்கே எடுத்துசொல்லியிருக்கிறார்கள். கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இன்னும் கவன ஈர்ப்புப் பிரச்னைகள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன, அவையெல்லாம் இந்த சட்டமன்றத்தின் கூட்ட முடிவிற்குள் எடுத்துக்கொள்ளப்பட்டு பதில்சொல்லப்படும். ஏற்கனவே முதலமைச்சர் அவர்கள் கடன் ஒற்றிவைப்புப்பற்றியும் மற்றவற்றையும் பற்றி இங்கே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

இப்பொழுது பிறப்பிக்கப்பட்டிருக்கின்ற உத்திரவைப்பற்றிமட்டும் சொல்லிவிடுகிறேன். இதைத் தொடர்ந்து சில உத்திரவுகளும் பிறப்பிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களையும் பொறுத்த வரையும் கடன் ஒற்றிவைப்பு வேறுமாதிரியான கிஸ்தி பாக்கி ஒற்றிவைப்பு இவற்றைப்பொறுத்து 25-3-1970 ஆம் தேதியன்று ஒரு உத்திரவைப் பிறப்பித்து இருக்கிறோம். அந்த உத்திரவு பின்வருமாறு:

(*G.O. Ms. No.* 906, *Revenue, dated 25th March* 1970.)

The Collectors of Ramanathapuram and Tirunelveli have reported that due to failure of rains again in 1969 and in the first quarter of 1970, acuted distress prevails in several pockets in their respective districts and have requested, among other things, that collection of Government loans and land revenue dues may be postponed in such areas to alleviate the distress caused to those affected. The Collector of Madurai has also reported prevalence of acute drought conditions in certain areas and has asked for relief measures.

The Government have examined the question and they consider that there is a case for postponing the collection of land revenue and loan dues during the current fasli. They accordingly direct that the Collectors of Ramanathapuram, Madurai and Tirunelveli be authorised to postpone collection of all Government loan instalments and land revenue dues in the following areas reported to be worst affected.

*Ramanathapuram district.*—

Nathampatti, Srivilliputhur and Malli firkas in Srivilliputhur taluk.

Tiruchuli firka in Aruppukkottai taluk.

Nachiapuram and Singampunari firka in Tirupattur taluk.

*Tirunelveli district.*

Sankarankoil, Tiruvengadam, Kuruvikulam, Sendamangalam and Vasudevanallur firkas.

Alangulam, Uthumalai, Keelapavoor, V. K. Pudur firkas in Tenkasi taluk and Radhapuram sub-taluk.



*Madurai District*—

Vedasandur and Palayam blocks.

The Collectors are requested to see that the above concession is extended only to cases of extreme hardship keeping in view the difficult resources position in the State and that coercive processes are not resorted to. The Board of Revenue is requested to issue suitable further instructions to these Collectors marking a copy thereof to the Government.

இந்த உத்திரவு இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களுக்காகப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மற்ற வறட்சியாக உள்ள பிரதேசங்களைப் பற்றிய நிலைமைகளைப் பொறுத்தும் உத்திரவு பிறப்பிக்கப்படும் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு பாரபட்சம் காட்டப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். எனக்கு இருக்கிற கவலையெல்லாம் குளச்சல் உபதேர்தல் நடக்கிற நேரத்திலே கடற்கரையைச் சேர்ந்த பிரதேசங்களிலே குடிநீர் வசதிகள் கொடுத்துவிட்டார்கள் என்று அவர்கள் சொல்லாமல் இருக்க வேண்டுமென்பதுதான். நான் முன்பே சொல்லியிருக்கிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட காரியங்களிலே அளவுகோல் காங்கிரஸ் தொகுதியா, கம்யூனிஸ்ட் தொகுதியா அல்லது தோழமைக் கட்சியினுடைய தொகுதியா அல்லது ஆளுங்கட்சித் தொகுதியா என்ற பாரபட்சம் எல்லாம் காட்டப்படுவதில்லை. உதாரணத்திற்காகச் சொல்கிறேன். மந்திரிமார்களுடைய தொகுதிகளுக்குச் செலவு செய்கிறோம் என்று வைத்துக்கொண்டால் சென்னைக்குத்தான் அதிகமான பாத்தியதை வரவேண்டும். அப்படிச் செய்வதில்லை. அதேமாதிரியாக எந்த அளவுக்குக் கன்னியாகுமரிக்குச் செய்யவேண்டுமோ அந்த அளவுக்குச் செய்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் ஜார்ஜ், ஜேம்ஸ் இவர்கள் எல்லாம் குறைபட்டுக்கொண்டார்கள். அம்மாதிரியான நிகழ்ச்சிகளுக்கு எல்லாம் குடிநீர்த் திட்டம், இவற்றிலே எல்லாம் எங்களைக் கவனிப்பதில்லை என்று எல்லாம் சொன்னார்கள். உதாரணத்திற்காகச் சொல்லவேண்டுமென்றால் முதலமைச்சர் அவர்களுடைய சொந்த மாவட்டமான தஞ்சைப் பகுதிக்குக் கொஞ்சம்தான் பணம் கிடைத்திருக்கிறது. ஆட்களைப் பார்த்துக் கொடுப்பதல்ல. அங்கங்கே உள்ள தன்மைகளைப் பொறுத்து கிடைக்கிறது. எங்கு எங்கு அதிகமான வறட்சி நிலைமைகள் இருக்கின்றனவோ அங்கே செலவழிக்கப்படுகின்றது. எனவே இதிலே எந்தவிதமான பாரபட்சமும் இல்லை. இன்னும் நடைபெறவேண்டிய வேலைகள் நடைபெறவில்லை என்றார்கள். ஐந்தாண்டுத் திட்டங்களைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திற்குத்தான் விசேஷமான சிரத்தை நாங்கள் கொண்டிருக்கிறோம். காரணம் அந்த ஒரு தவறான தீவிர எண்ணம்—எதிர்க்கட்சிக்காரர்கள் அதிகமாக இருக்கிறார்கள் அதனால்தான்—என்ற தவறான எண்ணம் ஏற்படக்கூடாது என்பதைக் கவனத்தில்கொண்டுதான் சிரத்தைகாட்டி வருகிறோம். அதிலே எந்தவிதமான தவறான எண்ணமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல பிரச்சினைகளைப்பற்றிச் சொன்னார்கள். திருவிதாங்கூரிலிருந்து மாற்றப்பட்ட ஊழியர்கள் பிரச்சினைபற்றி எல்லாம் சொன்னார்கள். அவை எல்லாம் கவனத்திலே எடுத்துக்கொள்ளப்படும் என்றும் ஒவ்வொன்றுக்கு உரிய மரியாதை கொடுத்து கவனிக்கப்படும் என்றும் பொதுவாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கன்னியாகுமரி—திருநெல்வேலி ரயில் பாதையை ஏற்படுத்த வேண்டும் என்பதைச் சமீபத்தில் முதலமைச்சர் அவர்கள் டில்லிக்குச் சென்றிருந்தபோது கூட இப்போதைய ரயில்வே அமைச்சர் நந்தா அவர்களைச் [illegible] கூறினார்கள். [illegible] வற்புறுத்தி சொன்

[திரு. கே. அ. மதியழகன்] [1970 மார்ச் 28

தற்குப் பிறகு மறுநாள் நான் நந்தா அவர்களைச் சந்தித்து கன்னியா
குமரி ரயில் பாதையையும், எடுக்கப்பட்டுவிட்ட தனுஷ்கோடி ரயில்
பாதையையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்பதற்காக ஒரு மணி
நேரம் விளக்கிப் பேசியிருக்கிறேன். நந்தா அவர்கள் கன்னியாகுமரிக்கும்,
தனுஷ்கோடிக்கும் நேரடியாக வரவேண்டுமென்றும் சொல்லியிருக்
கிறேன். இனொன்றைக்கூடச் சொன்னேன். பம்பாயிலும், டில்லி
யிலும் ரயில்களில் இருக்கும் இடைஞ்சல்களை நேரடியாகப் பரிசோதிக்கச்
சென்ற அமைச்சர் அவர்கள் எங்கள் பகுதியிலும் மூன்றும் வகுப்புப்
பிரயாணிகள் படுகின்ற கஷ்டத்தைப் பார்த்து நிவர்த்திப்பதற்கும் அவர்கள்
தமிழ்நாட்டுக்கு வரவேண்டுமென்று வற்புறுத்திக் கூறியிருக்கிறேன்.
இந்த விஷயம் நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்
அவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருமென்று கருதுகிறேன். தனுஷ்
கோடி ரயில் பாதையை மீண்டும் ஏற்படுத்த முடியாது என்று அவர்கள்
முதலிலே கூறினாலும் இப்போது ரயில்வே போர்டு பரிந்துரைக்குப்பிறகு,
நம்மை எல்லாம் கூப்பிட்டு மாநாடு நடத்திய பிறகு அந்தக் கருத்திலே
மாற்றம் * ஏற்பட்டிருக்கிறது. ஆக, அவர்கள் நேரில் வந்து கன்னியா
குமரியையும், தனுஷ்கோடியையும் பார்ப்பதாக ஒப்புக்கொண்டார்கள்.
கன்னியாகுமரியைப் பொறுத்தவரை எப்போதுமே எங்களுக்கு நிரந்தர
மான ஆசை உண்டு. அது மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்டுத் தமிழ்
நாட்டின் எல்லையாக இருப்பது. அது இரண்டு மாநிலங்களுக்கு இடையில்
இருக்கிறது என்ற நிலைமையை எல்லாம் பார்த்து அந்த மாவட்டத்தின்
வளர்ச்சியிலும், மேம்பாட்டிலும் முன்பு இருந்த அரசாங்கத்தைக்
காட்டிலும் அதிக அக்கறை எடுத்துக்கொண்டு வருகிறது. புறக்
கணிக்கும் நிலை இல்லை. ஜனநாயகத்திலே எல்லோருமே பிரதிநிதி
கள்தான், மாற்றுக்கட்சிக்காரர்கள் என்பதற்காக வேறு நிலைமை ஒன்றும்
கிடையாது.

எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த நல்லசிவம் அவர்கள் கோவை
மாவட்டத்தில் இருக்கும் பிரத்தியேகப் பிரச்சினைகளைப்பற்றிப் பேசினார்கள்.
பிரத்தியேகமான சௌகரியங்களும் சில நேரங்களில் செய்து கொடுக்கப்
படுகிறது. எந்த ஒரு காரியத்தை எடுத்துக்கொண்டாலும் அது நியாய
மான வாதந்தானா என்று பார்த்துத்தான் அரசு ஏற்றுக்கொள்ளு
கிறது. சொல்லுவது நியாயம் என்று அரசு உணர்ந்தால் அதை
ஏற்றுக்கொள்ளத் தயங்குவதில்லை. ஆனால் பல பேர் எதிர்க்கிறார்கள்
என்று சொல்லி அரசாங்கத்தை நிர்ப்பந்தப்படுத்த சிலர் நினைக்கி
றார்கள். அரசு நியாயத்திற்குக் கட்டுப்படுமேதவிர, நிர்ப்பந்தத்திற்கு
ஒருநாளும் கட்டுப்பட முடியாது. நிர்ப்பந்தங்களுக்குக் கட்டுப்படுகின்ற நிலை
ஏற்பட்டால் அந்த அரசு தொடர்ந்து இருந்துவர முடியாது. ஜனநாயக
மரபுகளை உருவாக்க விரும்புகின்ற நாம் இந்த முறையில் நிர்ப்பந்தங்
களில் இறங்குவது புதிய சமூகத்தை அமைப்பதற்கு விரோதமான
ஒன்றாகும்.

நண்பர் நல்லசிவம் அவர்கள் கோவை மாவட்டத்தில் சிரமங்கள்
இருக்கின்றன என்று சொன்னார்கள். அதனால் மற்ற மாவட்டங்களிலே
சிரமங்கள் குறைவானது என்று அர்த்தமல்ல. கூழுக்கு உப்பு வேண்டு
மென்று சிலபேர் சொல்லுகிறார்கள்; காப்பிக்குச் சர்க்கரை வேண்டு
மென்று சிலபேர் சொல்லுகிறார்கள். அவரவர்கள் நிலைமையில் அது
குறைவாகத்தான் தெரியும். காப்பிக்குச் சர்க்கரை வேண்டுமென்று
கேட்பதிலும் குறை இருக்கிறது, கூழுக்கு உப்பு வேண்டுமென்று கேட்பதிலும்
குறை இருக்கிறது. மின்சாரக் கட்டண உயர்வு இன்றைக்கு நேற்று
ஏற்பட்டதல்ல. முன்னால் நிதியமைச்சராக இருந்த திரு. சுப்பிரமணியம்
அவர்களுடன் இதைபபற்றி விவாதித்திருக்கிறேன். முன்னால் தொழி
லமைச்சராக இருந்த திரு. வெங்கட்டராமன் அவர்களுடனும் விவாதித்திருக்
கிறேன். பல மாநிலங்களிலே அதிகப்படியான கட்டணம் இருக்கும்போது
நம்முடைய மாநிலத்தில் மட்டும் 6 கோடி ரூபாய் 8 கோடி ரூபாய் நஷ்டப்
[illegible] இருக்கிறது. படியரிசித் திட்டத்தைவிட அதிகப்படியான
[illegible]. விவசாயிகளுக்கு எவ்வளவோ [illegible]



[1]970 மார்ச் 28] [திரு. கே. அ. மதியழகன்]

வழுமையில் திசை திருப்பிவிடுகிறார்கள். அரசியல் நோக்கத்திற்காகச்
செய்கிறார்களே தவிர வேறு அல்ல. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
சொன்னதிலே மிகுந்த நியாயம் இருக்கிறது, அழுத்தமான பொருள்
இருக்கிறது. பிரத்தியேகமான கஷ்டங்கள் இருந்தால், இரண்டு மூன்று
பம்ப் செட்டுகள் வைத்திருந்தாலோ அல்லது 200, 300 அடியில்
இருந்து தண்ணீர் எடுக்க வேண்டுமென்றிருந்தாலோ அதைப் பற்றி
முறையிடும்போது அவற்றை நிவர்த்திப்பதற்கான வழிவகைகளைக் காண
முடியும். அதற்காக இப்போது கையாளப்பட்டிருக்கின்ற முறை சரியான
ஆயுதங்கள்தானா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். கோவை
மாவட்டத்தைப் போன்றே ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு
விதமான பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் எந்த
அளவுக்கு அனுதாபத்துடன் கவனிக்க வேண்டுமோ அந்த அளவுக்குக்
கவனித்து வருகிறோம். அவற்றை எல்லாம் இங்கே விவாதத்திற்குரிய
பொருளாக்குவது நல்லதல்ல.

பாண்டியாறு திட்டத்தைப் பற்றிக் கேரள அரசிடம் பேச வேண்டு
மென்று சொன்னார்கள். பொதுப்பணி அமைச்சர் அவர்கள், பரிசீலிக்கப்
பட்டு வருகிறது என்று சொன்னார்கள். நாங்கள் அதற்கு முன்னா
லேயே கேரள அரசுடன் பேசிக்கொண்டு வருகிறோம்—பொதுவாக கேரள
நதிநீர்ப் பங்கீடுகள் பற்றி. அதிலே ஒரு நல்ல சூழ்நிலை ஏற்பட்டுக்கொண்
டிருக்கிறது. அதன் விளைவாக கோவை மாவட்டத்திலே 2½ லட்சம்
ஏக்கர் பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தினால் பலன் பெறுகிறது.
தாராபுரம், பல்லடம், உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி ஆகிய இடங்களில்
நல்ல நீர்ப்பாசன வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன. கோவை நகரைச்
சுற்றியிருக்கும் புறநகர்ப் பகுதிகளுக்கு சிறுவாணித் திட்டத்தின் மூலம்
குடிதண்ணீர்த் திட்டத்தைப் பெருக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்தக்
காரியங்கள் எல்லாம் விவசாயிகளுடைய அரசாங்கமான இந்த அரசால்
நல்ல வகையில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அரசியல் நோக்கம்
இல்லாதவர்கள் இவற்றை வரவேற்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

இடதுசாரிக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் திரு. பாலசுப்பிரமணியம்
அவர்களும், வலதுசாரி கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் திரு. சுப்பையா
அவர்களும் ஒரு பெரிய அச்சத்தைத் தெரிவித்தார்கள்.

இன்று நடக்கும் போராட்டம் எல்லாம், இல்லாதவர்களுக்கும் இருப்
பவர்களுக்கும் இடையே நடக்கும் போராட்டம். எங்கு செல்வம் குவிக்
கப்பட்டிருக்கிறதோ அதை அநியாயமாக அல்ல, நியாயமாக எல்லோ
ரிடத்திலும் பகிர்ந்தளிப்பது என்பது எல்லாக் கட்சிகளிடையேயும்
காணும் ஒரு காலக்கூறாகும். முன்னேற்றக் கழகத்தினால் பிரகடனம்
செய்யப்பட்டிருக்கும் உச்சவரம்புச் சட்டம், ஒன்றிரண்டு நாட்களுக்குள்
இந்த மன்றத்தில் மசோதாவாக அறிமுகப்படுத்தப்படும். அதைப்
பற்றி இப்போது நான் விரிவாகப் பேச விரும்பவில்லை. அதை சீக்கிரம்
கொண்டுவரவேண்டும் என்று சொன்னார்கள். அந்த மசோதாவின்
நகலை, ஜனாதிபதி அனுமதி வேண்டியிருக்கிறது என்பதற்காக அதைப்
பெறுவதற்கு விமானம் மூலம் டெல்லிக்கு நம் அதிகாரிகள் எடுத்துச்
சென்றிருக்கிறார்கள். ஒன்றிரண்டு நாட்களில் அந்த மசோதா இந்த
மன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது. அப்போது அது பற்றிய
விவரங்களைக் கூறலாம். கழகத்தில் உள்ளவர்கள் கூட இதையெல்லாம்
மாற்றவேண்டும், இதனால் கெட்டுவிடும் என்ற அச்சம் தெரிவித்ததாகச்
சொன்னார்கள். அப்படி யாரும் முன்னேற்றக் கழகத்தில இருப்பதாகத்
தெரியவில்லை. அப்படியிருந்தால் அவர்கள் கழகத்தினராக ஆகமாட்
டார்கள். வெளியில் இருந்து வருகிற ஊடுருவல் காரணமாக
தொண்டர்களைப் பலி கொடுத்துவிடமாட்டோம். திட்டவட்டமான, தெளி
வான கொள்கையில் உள்ளது முன்னேற்றக் கழகம். ஆகவே அந்த
விதமான அச்சத்திற்குத் தேவை இல்லை.

[திரு. கே. ஏ. மதியழகன்] [1970 மார்ச் 28

எவ்வளவோ காரியங்களை எல்லாம் செய்கிறார்கள். எவ்வளவோ காரியங்களைச் செய்ய முயற்சிக்கிறார்கள். இந்த 15 ஸ்டான்டேர்ட் எக்கர் என்பது எந்தக் காலத்திலும் மாறாது என்பதை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் வெளியில் சொன்னார்கள். அதை இந்த மன்றத்தில் சொல்லவேண்டும் என்பதற்காகத்தான் உறுப்பினர் கேட்டாரோ இல்லையோ தெரியவில்லை. அதில் எந்தவிதமான மாறுதலும் கிடையாது. பிறத்தியாரைக் கேட்டுக்கொண்டு அல்லது அவர்களின் சௌகரியங்களை நாம் நோக்க வேண்டும் என்ற முறையில் முறைகேடான முறையில் எதுவும் அமையாது. ஒன்றிரண்டு நாட்களில் அது அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது. அது பதினைந்து ஸ்டாண்டேர்ட் ஏக்கராகத்தான இருக்கும். கழகம் யாருடைய நிர்ப்பந்தத்திற்கும் பணிய வேண்டிய தன்மையில் இல்லை. யாரானாலும் சரி, எந்த இடத்திலிருந்து முயற்சி செய்தாலும் சரி, நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன், முன்னேற்றக் கழகம் கொள்கை வழிதான் பின்பற்றி நடக்கிறது என்று.

உறுப்பினர்கள் சொன்ன பல்வேறு கருத்துக்களும் தக்கபடி கவனிக்கப்படும். தொழில் கொள்கை பற்றி சொன்னார்கள். அரசாங்க சார்பிலுள்ள இன்டஸ்டிரியல் யூனிட்களில் உள்ள கோளாறுகளைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். அவை தனிப்பட்ட முறையில் தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப் படுமானால், அதில் நியாயம் இருக்குமானால் நியாயத்தை இந்த அரசாங்கம் கண்டிப்பாகச் செய்யும். அதற்கான முறையில் நியாயத்தைச் செய்ய இந்த அரசாங்கம் தயாராயிருக்கிறது. தொழில் கொள்கையைப் பொறுத்தவரையில் பொதுத் துறையே என்ற கொள்கையை முன்னேற்றக் கழக அரசு ஒத்துக்கொள்ளத் தயாராயில்லை. அது முற்போக்கான கொள்கை அல்ல என்று சொன்னாலும் பரவாயில்லை யென்று ஏற்றுக்கொள்ள தயாராயிருக்கிறோம்.

இன்று பெரிய பெரிய பாங்குகள், பெரிய இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் போன்றவை மீது டெல்லியில் எடுக்கப்படுகிற முடிவுகளை எல்லாம் புறக்கணித்துக்கொண்டு போவோமானால் அது மாநிலங்களுக்குப் பெரிய கெடுதல் செய்தவர்களாவோம். முன்பு இங்கு திரு. பிரகாசம்காரு அவர்கள் முதல் அமைச்சராக இருந்தார்கள். அப்போது பம்பாய், அஹமதாபாத் போன்ற இடங்களில் நூற்பாலைகள் போன்றவற்றை தீவிரமாக செயல் படுத்தியபோது இங்கு ஒதுக்கப்பட்ட ஸ்பின்டில்ஸ் வேண்டாம் என்று சொல்லி ராட்டையை வைத்துக்கொண்டும், தக்ளியை வைத்துக் கொண்டும் நூற்றுக்கொண்டிருப்போம் என்று சொன்னார்கள். சபர்மதி ஆஸ்ரமம் இருந்த இடத்திற்கு எதிராக நூற்றுக்கணக்கான புகை போக்கிகளைக்கொண்ட பெரிய பெரிய நூற்பாலைகள் எழும்பின. ஆனால் இங்கு திருப்பூரிலும், சின்னாளபட்டியிலும் ராட்டையை வைத்துக்கொண்டு, நூற்கும் நிலைதான் இருந்தது. அன்று அப்படி அந்த முதல்வர் செய்ததன் காரணமாக, அவர்கள் அன்று விளம்பரத்திற்காக செய்ததன் காரணமாக பஞ்சாலைத் தொழிலாளர்கள்,—முதலாளிகள் அல்ல—கைத்தறி நெசவாளர்கள் அவதியுறும் நிலை உள்ளது. 'ப்ராக் மாட்டிக்' அப்ரோச் என்பது கூடாது. அது சரியானதல்ல என்று சொன்னார்கள். அதனால் நாங்கள் முதலாளிகளை வளர்க்கிறோம் என்பது பொருள் அல்ல. பொருளாதாரக் கொள்கையில் நாம் சுதந்தரமானவர்கள் அல்ல. தனியார் துறை ஓங்கவேண்டும் என்பதல்ல. பம்பாய், டெல்லி போன்ற இடங்களில் எடுக்கப்படுகிற முடிவுகள் நம் மாநிலத்திற்கு அனுகூல மாக இருக்கும்படி நாம் அமைத்துக்கொள்ளவேண்டும். அது பிற்போக்குக் கொள்கை என்றால் கொஞ்ச நாட்கள் பிற்போக்கு என்று சொல்லிக் கொள்வதில் பெருமை கொள்கிறோம். கொள்கை, கொள்கை என்று சொல்லிக்கொண்டு பிரகாசம் செய்த தவறை செய்யக்கூடாது. பாக்கியுள்ள இடங்களில் என்னென்ன நடக்கின்றன என்று பார்க்க வேண்டும். கம்யூனிஸ்ட் கட்சியினரும் ஆட்சி நடத்தினார்கள். கேரளாவைப் பார்த்தோம், வங்காளத்தைப் பார்த்தோம். அங்கெல்லாம் என்னென்ன வகைகளில் காரியங்கள் செய்யப்படுகின்றன என்பதைப் பார்க்கிறோம். எந்தக் காலத்திலும் முதலாளித்துவம் வளரவோ அல்லது தனியார் துறையைப் பலப்படுத்தவோ ஒருநாளும் ஒருப்பட



1970 மார்ச் 28] [திரு. கே. ஏ. மதியழகன்]

மாட்டோம். அந்த வகையில்தான் எங்கள் தொழில் கொள்கை அமைந்திருக்கிறது. மேலும் உறுப்பினர்கள் அவர்களின் குறைகளை தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டு மென்று கேட்டுக்கொண்டு இந்தத் துணை மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள் கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, may I know from the Hon. Minister, what action has been taken on the report submitted by Thiru Thirumalai, Member, Board of Revenue, regarding alleged irregularities in the drought-relief work in the Kanyakumari district?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பெரிய விஷயத்தைச் சொன்னதாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். சாதாரணமாக இந்த மாதிரிக் காரியங்கள் வரும்போது அவைகள் உரிய வகையில் கவனிக் கப்பட்டுவருகின்றன. முதலில் எங்களுக்கு ஒதுக்கப்படவே இல்லை என்று சொன்னார்கள். சாலை போடுவது, கிணறுகள் வெட்டுவது இவைகளில் எல்லாம் அவ்வளவு பற்றி விவரங்கள் இல்லை, அதுபற்றிய விவரங்கள் தெரிந்தவுடன் தேவைப்பட்டால் அது கொடுக்கப்படும்.

7. 1969-70-ம் ஆண்டுக்கான கூடுதல் செலவுக்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. பிற்பகல் 1-00

A. வருவாய்க் கணக்கில் செலவு

நிதிக்கோரிக்கை எண் 1—நிலவரித்துறை.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Sir, on the recommendation of the Governor I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 10,54,900 under Demand No. 1—Land Revenue Department.'

THIRU S. MEIYAPPAN: Sir, I do not move my cut motion.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக்கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 30,700 under Demand No. 2—Motor Vehicles Acts—Administration.'

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக்கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Sir, on the recommendation of the Governor, I move —

'That the Government be granted a further sum not exceeding Rs. 15,94, 700 under Demand No. 3—General Sales Tax and Other Taxes and Duties—Administration.'

THIRU S. MEIYAPPAN: Sir, I do not move my cut motion.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக்கோரிக்கை எண் 4—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Sir, on the recommendation of the Governor, I move —

'That the Government be granted a further sum not exceeding Rs. 1,49,400 under Demand No. 4—Stamps—Administration.'

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக்கோரிக்கை எண் 6—மாநிலச் சட்டமன்றம்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Sir, on the recommendation of the Governor, I move —

'That the Government be granted a further sum not exceeding Rs. 3,88,200 under Demand No. 6—State Legislature.'

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக்கோரிக்கை எண் 7—தேர்தல்கள்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 25,98,400 under Demand No. 7—Elections.'

THIRU S. MEIYAPPAN: Sir, I do not move my cut motion.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.



நிதிக்கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித்தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Sir, on the recommendation of the Governor, I move —

'That the Government be granted a further sum not exceeding Rs. 40,69,900 under Demand No. 8—Head of State, Ministers and Headquarters Staff.'

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக்கோரிக்கை எண் 8-ஏ—பால் வழங்கு திட்டங்கள்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Sir, on the recommendation of the Governor, I move —

'That the Government be granted a further sum not exceeding Rs. 100 under Demand No. 8-A—Milk Supply Schemes.

THIRU S. MEIYAPPAN: Sir, I do not move my cut motion.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக்கோரிக்கை எண்கள் 9 முதல் 14 வரை.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Sir, on the recommendation of the Governor, I move —

'That the Government be granted a further sum not exceeding the amounts noted against the following Demands:—

| | | | Rs. |
|---|---|---|---|
| DEMAND No. | 9 | District Administration and Miscellaneous. | 100 |
| Do. | 10 | Administration of Justice .. | 200 |
| Do. | 11 | Jails .. .. .. .. .. | 17,72,700 |
| Do. | 12 | Police .. | 200 |
| Do. | 13 | Education .. | 50,12,200 |

| | | | Rs. |
|---|---|---|---|
| DEMAND No. | 14 | Medical .. | 15,96,700 |

மேற்கண்ட நிதிக்கோரிக்கைகள் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகைகள் வழங்கப்பட்டன.

நிதிக்கோரிக்கை எண் 15—பொது சுகாதாரம்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Sir, on the recommendation of the Governor, I move —

'That the Government be granted a further sum not exceeding Rs. 79,22,600 under Demand No. 15—Public Health.'

THIRU S. MEIYAPPAN: Sir, I do not move my cut motion.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக்கோரிக்கை எண்கள் 16, 17, 19, 22, 23, 25.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Sir, on the recommendation of the Governor, I move —

'That the Government be granted a further sum not exceeding the amounts noted against the following Demands :—

| | | | Rs. |
|---|---|---|---|
| DEMAND No. | 16 | Agriculture .. .. .. .. | 600 |
| Do. | 17 | Fisheries.. .. .. .. .. | 100 |
| Do. | 19 | Co-operation .. .. .. | 600 |
| Do. | 22 | Khadi .. .. .. .. | 5,08,300 |
| Do. | 23 | Community Development Projects, etc. | 200 |
| Do. | 25 | Welfare of the Scheduled Tribes, Castes and other Backward Classes. | 100 |

மேற்கண்ட நிதிக் கோரிக்கைகள் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகைகள் வழங்கப்பட்டன.

நிதிக்கோரிக்கை எண் 26—பாசனம்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Sir, on the recommendation of the Governor, I move —

'That the Government be granted a further sum not exceeding Rs. 46,96,900 under Demand No. 26—Irrigation.'



நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கைகள் எண்கள் 27 முதல் 35 வரையும், 38, 40 41, 42, 43, 46.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Sir, on the recommendation of the Governor, I move —

'That the Government be granted a further sum not exceeding the amounts noted against the following Demands :—

DEMAND No. 27 Public Works—Works Rs. 59,27,300.

| | | | |
|---|---|---|---|
| Do. | 28 | Public Works—Establishment and Tools and Plant. | 58,97,100 |
| Do. | 29 | Public Works—Grants-in-Aid. | 17,19,400 |
| Do. | 30 | Road Transport Schemes .. .. | 40,59,100 |
| Do. | 31 | Famine Relief .. .. .. | 1,28,16,500 |
| Do. | 32 | Pensions .. .. .. .. | 100 |
| Do. | 33 | Miscellaneous .. .. | 59,01,200 |
| Do. | 34 | Stationery and Printing .. .. | 14,89,500 |
| Do. | 35 | Forest Department .. .. .. | 100 |

B. வருவாய்க் கணக்குக்குப் புறம்பான மூலதனச் செலவு.

| | | | |
|---|---|---|---|
| DEMAND No. | 38 | Capital Outlay on Public Health .. | 41,36,400 |
| Do. | 40 | Capital Outlay on Industrial Development. | 1,500 |
| Do. | 41 | Capital Outlay on Irrigation .. | 58,71,000 |
| Do. | 42 | Capital Outlay on Public Works .. | 8,40,800 |
| Do. | 43 | Capital Outlay on Road Transport Schemes. | 100 |
| Do. | 46 | Capital Outlay on schemes of Government Trading. | 100 |

C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும், கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.

| | | | |
|---|---|---|---|
| Demand No. | 47 | Loans and Advances by the State Government. | 500 |

மேற்கண்ட நிதிக் கோரிக்கைகள் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகைகள் வழங்கப்பட்டன.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(உ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதா

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதாவை இப்பேரவைக்கு அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவை அளித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதா

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்**: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்**: தலைவர் அவர்களே, இம்மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இம்மசோதா அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

பேரவை நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவுறும். திங்கட்கிழமை மார்ச் 30-ஆம் தேதி காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

8. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

@ 179. Notification issued with G.O. Ms. No. 319, Rural Development and Local Administration, dated the 25th February, 1969 in regard to extension of term of office of the Councillors of all municipal councils upto the noon of the 28th day of April 1969. [*Laid on the Table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act, V of 1920).*]

@ 180. Notification issued with G.O. Ms. No. 2743, Revenue, dated the 19th November, 1969 in regard to certain amendments to the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Rules, 1965, published at pages 26 to 63 of Part V of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 15th February 1965, as subsequently amended. [*Laid on the Table of the House under section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963).*]

@ Laid on the Table of the House on 26-3-1970.



181. Notification issued with G.O. Ms. No. 2493, Home, dated the 6th October 1969, in regard to exemption from payment of motor vehicles tax leviable in respect of the vehicle bearing registration number MDO 7670 belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the Superintendent, Government Headquarters Hospital, Nagapattinam Thanjavur district. [*Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).*]

182. Annual Financial Statement for 1970–71 and Supplementary Financial Statement for 1969–70 of the Tamil Nadu Electricity Board. [*Laid on the Table of the House under sub-section (3) of section 61 of the Electricity (Supply) Act, 1948 (Central Act 54 of 1948).*]

B. *Reports, Notifications and other papers.*

† 108. A Review on Labour in Tamil Nadu, 1969–70 (English and Tamil).

† 109. Speech by Hon. Thiru K. VEZHAVENDAN, Minister for Labour on Demand No. 24—Labour including Factories for the year 1970–71 (English and Tamil).

† 110. The Tamil Nadu Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1970 with Annexure (L.A. Bill No. 6 of 1970).

† 111. The Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Second Amendment) Bill, 1970 with Annexure. (L.A. Bill No. 7 of 1970).

† Despatched to Members on 25-3-1970.

# தமிழ் நாடு சட்டப் பேரவை.

திங்கட்கிழமை, 1970 மார்ச் 30.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## (1) வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி எண்கள் 589, 590, 591, 592, 593, 594, 595 ஆகியவை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

### உடல் ஊனமுற்ற ஆதரவில்லாதவர்களுக்கு உதவித்தொகை

*596 வினா.—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அங்கஹீனமுள்ள ஆதரவில்லாதவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இல்லை.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, இத்தகைய அங்கஹீனமுள்ளவர்கள் பெரும்பாலும் ஆதரவற்றவர்களாகவே ஆகிவிடும் காரணத்தால், மீண்டும் அவர்களுக்கு உதவி அளிப்பதுபற்றிப் புனராலோசனை செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, அவர்கள் வேலை வாய்ப்பு அதிகாரியைத் தேடிவரும்போது, அவர்களுக்குப் படி கொடுக்க வேண்டும் என்ற விதி இருக்கிறது. வேலை வாய்ப்பு அதிகாரி இதற்கென்று தனியாக அமைக்கப்பட்டு, தொழில் அதிபர்களோடு தொடர்புகொண்டு வேலை வாய்ப்புத் தேடிக் கொடுப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**திரு. எம். பூபதி:** தலைவர் அவர்களே, அங்கஹீனமுள்ளவர்களுக்கு எங்கெங்கே இந்த மந்திரி ஸ்தாபனங்கள் ஏற்படுத்தப்பட்டு, அவர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பு உருவாக்கிக் கொடுக்கப்படுகிறது என்பதை அமைச்சரவர்கள் தெளிவாக விளக்குவார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நம்முடைய வேலைவாய்ப்புத் தேடித்தரும் அலுவலகங்களை அவர்கள் அணுகலாம். அங்குள்ள அதிகாரிகளுக்கே அந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சென்னையில் உள்ள அதிகாரியோடு தொடர்புகொண்டு, எங்கெங்கே அவர்களுக்கு வேலை வாய்ப்பு இருக்கிறதோ அங்கெல்லாம் அவர்களுக்கு வேலைகள் தேடிக் கொடுப்பதற்கும், இதற்காக அவர்கள் வரும்போது அவர்களுக்குள்ள செலவை ஒரு குறிப்பிட்ட அளவிற்குள் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். கருப்பையா:** தலைவர் அவர்களே, அங்கஹீனமுற்று ஆதரவற்றவர்களுக்கு உதவித்தொகை அளிக்க முன்வரவில்லையென்றாலும், அரசாங்கத்தால் நடத்தப்படும் "கேர் ஹோம்" என்று சொல்லப்படுகிற பாதுகாப்பு இல்லங்களிலாவது அவர்களை அனுமதிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்போதே, அங்கஹீனமுற்றவர்களுக்கென்று தனியான அமைப்புக்களெல்லாம் தனியார் துறையில் நடத்தப்படுகின்றன. அவர்களுக்கு நாம் உதவி செய்கின்றோம். வேலை வாய்ப்புத் தேடித் தருவதைப் பொறுத்து நம்முடைய வேலைவாய்ப்புத் தேடித்தரும் அலுவலகத்திலேயே இதற்கென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அண்மையில் இதுபற்றி மாநாடு நடந்தபோது, அங்கஹீனம் உற்றவர்களுக்கென்று மாநில அளவில் ஒரு அமைப்பு அமைப்பதென்றும், அந்த அமைப்பின் மூலமாக இவர்களுக்கு உதவிகளை அதிகமாகச் செய்வதற்கும், புதிய நிறுவனங்களைத் தோற்றுவித்து இவர்களுக்குப் பயிற்சிகள் கொடுப்பது, வசதிகள் செய்துதருவது போன்ற முறைகளைப் பின்பற்றுவது என்றும் ஒரு முடிவை அரசாங்கம் பரிசிலிப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறது.

**திரு. என். மருதாசலம்:** தலைவர் அவர்களே, கோவையில், அங்கஹீனம் உள்ளவர்களுக்கென்று ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தி, அங்கே அவர்களுக்கு வேலைவாய்ப்பு தேடிக்கொடுப்பது, மற்ற உதவிகள் செய்வது போன்றவற்றில் அரசு ஈடுபடுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கோவையில் உள்ள வேலை வாய்ப்புத் தேடித்தரும் அலுவலகத்தில் உள்ள அதிகாரிகள் சென்னையில் உள்ள அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு இதற்கான ஏற்பாடுகள் செய்வார்கள்.

**திரு. இல. பலராமன்:** 'அங்கஹீனர்' என்று குறிப்பிடும்போது, லெப்ரஸி நோயினால் பாதிக்கப்பட்டவர்களும் இதில் வருகின்றார்கள் என்று கருதுகிறேன். ரெட் கிராஸ் சொஸைட்டி போன்ற சில உலக நிறுவனங்கள் அனுதாபத்தோடு அவர்களுக்கு லேத் போன்ற மெஷின்களில் பயிற்சி தந்து பொருள்களை உற்பத்தி செய்கிறார்கள். அதுபோல, நம்முடைய அரசாங்கம் அங்கஹீனமுற்றவர்களுக்குத் தொழில் பயிற்சி அளித்து ஆதரவு அளிக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இவர்களுக்காக நடத்தப்படுகிற நிறுவனங்களில் இந்தப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. அதிகமாக இந்தப் பயிற்சி கொடுப்பதற்குத் தனியார் நடத்தக்கூடிய நிறுவனங்களோடு தொடர்பு கொண்டு புதிய தொழில்களை அதிகப்படுத்துவதற்காகத்தான் 'State Board for Handicapped People' ஒன்றை அமைக்க வேண்டும் என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

**திரு. எம். எஸ். மணி:** தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் அங்கஹீனம் உள்ளவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? தியாகிகளுக்குப் பென்ஷன் கொடுப்பதுபோல் அங்கஹீனமுள்ளவர்களுக்கும் ஏதாவது பென்ஷன் கொடுக்க அரசு புதிய திட்டமொன்றை வகுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** எத்தனை பேர் என்ற எண்ணிக்கை என்னிடம் இல்லை. பென்ஷன் கொடுக்கும் திட்டம் அவ்வளவு நல்ல திட்டமாக இருக்காது. அதற்குப் பதிலாக, அவர்களுக்கு வேலை வாய்ப்புப் பயிற்சி கொடுத்து, எங்கெங்கே வேலை வாய்ப்பு இருக்கிறதோ அங்கே வேலை தேடிக் கொடுப்பதுதான் நல்ல திட்டமாக அமையும். அதைத்தான் அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

**திரு. கே. விநாயகம்:** காங்கிரஸ் கட்சி பல ஆண்டுகள் ஆட்சி செய்திருந்தும்கூட, குருடன் பார்வை பெற்றானா? கூனன் நிமிர்ந்தானா? என்றெல்லாம் இப்பொழுது ஆட்சிக்கு வந்திருப்பவர்கள் அந்தக் காலத்தில் பிரசாரம் செய்தார்கள். இவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு எத்தனை பேருக்குப் பார்வை கிடைத்தது, எத்தனை பேர் கூன் நிமிர்ந்தனர், எத்தனை செவிடர் கேள்வி ஞானம் பெற்றனர். என்று சொல்ல வேண்டுமா?



**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்த ஆட்சியா, அந்த ஆட்சியா, என்றெல்லாம் நான் பாகுபடுத்தத் தயாராக இல்லை. ஆனால் இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு குருடன் கண் பெறாவிட்டாலும் வாழ்வு பெற்றிருக்கிறான் (ஆரவாரம்).

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவர் அவர்களே, ஊனமுள்ள அநேகருக்குத் தனியார் ஸ்தாபனங்களில் வேலை கொடுப்பது பற்றியும், பல இடங்களில் அவர்களுக்கு அரசு வேலை தேடித் தருவது பற்றியும் அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அவ்வாறு அவர்களுக்கு வேலை தனியார் ஸ்தாபனங்களில் ஒழுங்காகக் கொடுக்கிறார்களா? இல்லையென்றால், என்ன காரணம்? அதற்காக அரசாங்கம் தனியாக ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தி அவர்களுக்கு அந்தத் தொழிலைக் கற்றுக் கொடுத்து அவர்களை அதில் ஈடுபடுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சில நாட்களுக்கு முன்பு, இது பற்றிய கண்காட்சியொன்று சென்னை 'பாலர் அரங்க'த்தில் நடைபெற்றது. மிக அருமையான தொழில் நுட்பக் கலையில் அங்கஹீனமுள்ளவர்களுக்குப் பயிற்சி அளிப்பது பற்றியெல்லாம் அந்தக் கண்காட்சியில் இடம் பெற்றிருந்தது. அதை நானும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் கண்டோம். இப்பொழுதுகூட அவர்களுக்கு எங்கெங்கே வேலை வாய்ப்பு இருக்கிறதோ அங்கெல்லாம் நாம் தேடிக் கொடுக்கின்றோம். வேலை செய்பவர்களுக்குப் பரிசு அளிப்பதோடு வேலை அளிக்கும் தொழில் ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பரிசு கொடுத்திருக்கின்றோம். அடுத்த ஆண்டிலிருந்து யார் யார் அங்கஹீனர்களுக்கு ஏராளமான வேலைவாய்ப்பு கொடுக்கிறார்களோ அவர்களுக்கு நமது அரசாங்கத்தின் சார்பில் பரிசு கொடுப்பது என்றும், சிறந்த முறையில் பயிற்சி பெறும் அங்கஹீனர்களுக்கும் பரிசு கொடுப்பது என்றும் அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள்:** தலைவர் அவர்களே, அங்கஹீனம் உள்ளவர்களுக்கு நிரந்தரமான ஒரு வருமானம் ஏற்படுத்துவதற்கு குடிசைத் தொழிலில் ஈடுபடுத்த அரசு முன்வருமா? அவர்களுக்கென்று ஒரு தொழிற்பேட்டை ஆரம்பித்து, அதிலே சிறு சிறு தொழில்களைத் துவக்கி, அதிலே அங்கஹீனம் உள்ளவர்களை ஈடுபடுத்தி, அதன்மூலம் அவர்களுக்கு நிரந்தர வருவாய் வரக்கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்வது நல்லது என்று அரசு கருதுகிறதா? அதைப் பற்றி அரசுக்கு என்ன யோசனை இருக்கிறது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தொழிற்பேட்டை என்று அமைக்க முடியாது. தொழிற்பயிற்சி அளிக்கலாம். இவர்கள் எந்த, எந்த வேலையைச் செய்ய முடியுமோ அதில் இவர்களுக்கேற்ற பயிற்சி கொடுப்பதுதான் நிறுவனங்களினுடைய பணியாக இருக்கிறது. தனியார் துறையினர் மிக உன்னதமாக இதில் இன்றைக்குச் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு ஊக்கம் கொடுத்து, நம்முடைய அரசுத் தொழிற்சாலையில் கூட இப்படிப்பட்டவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்கிறார்கள். சமீபத்தில் நடந்த போட்டியில்கூட, நம்முடைய அரசாங்கத்தின் சார்பில் சில நிறுவனங்கள் இப்படிப்பட்டவர்களுக்கு வேலை கொடுத்ததன் காரணமாகப் பரிசு பெற்றிருக்கிறார்கள்.

**திரு. க. மு. ராசகோபால்:** தலைவர் அவர்களே, 1967-க்கு முன் எத்தனை அங்கஹீனமுள்ளவர்களுக்கு வேலைகள் கிடைத்திருக்கின்றன, இப்பொழுது மூன்றாண்டுகளில் எத்தனை பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்பொழுது நல்லாட்சி நடைபெறுகின்ற காரணத்தால் அங்கஹீனமுற்றவர்கள் எண்ணிக்கையில் குறைந்து வருகிறார்கள்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** தலைவர் அவர்களே, ஆசிரியர் பள்ளிகளில் கூட இந்த அங்கஹீனர்கள் வேலையில்லாமல் ஒதுக்கப்படுகிறார்கள். போர்க்களத்தில் சென்று கால் இழந்தவர்கள் கூட ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு அவர்கள் மனுக்கொடுத்து, வேலையில்லாமல் அவர்களைத் தள்ளிவிடுகிறார்கள். ஆசிரியர் பதவியை அங்கஹீனர்களுக்குக் கொடுப்பதில் தேர்ந்தரவு இல்லை. எனவே ஆசிரியர் பதவிகளை அங்கஹீனர்களுக்குக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இதுபற்றிய உத்திரவு கல்வித் துறையிலே நீண்ட நாட்களுக்கு முன்னமேயே இருக்கிறது. இப்பொழுது மட்டும் இல்லை. அங்கஹீனமுற்றவர்கள் பள்ளிகளுக்குச் சென்றால், மாணவர்களிடையே ஒரு எண்ணத் தாழ்வு ஏற்படும். ஆகவே, அவர்கள் சரியாகப் பயிற்சி கொடுக்க முடியாது என்ற கருத்திலேதான் அந்த உத்தரவு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த உத்தரவிலேயே அதிகாரிகள் இப்படிப்பட்ட அங்கஹீனர்களுக்கு ஆசிரியர் பயிற்சி கொடுக்கமுடியும், ஆசிரியர் வேலையை சரியாகச் செய்ய முடியும் என்று கருதுவார்களேயானால் அதற்கு விதிவிலக்கு கொடுப்பதற்கும் அந்த உத்தரவிலேயே வகை செய்யப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி விரிவாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் கல்வித்துறையில் கேட்கவேண்டும்.

**திரு. எஸ். முருகையன்:** அங்கஹீனர்கள் அரசாங்க அலுவலகங்களில் தட்டெழுத்தாளர் வேலைக்காக நேர்முகத் தேர்வுக்கு வந்தால், நல்லவர்களும் வருகிறார்கள், அங்கஹீனர்களும் வருகிறார்கள். முதலில் அங்கஹீனர்களுக்கு சலுகை கொடுத்து அவர்களுக்குத் தட்டெழுத்தாளர் போன்ற வேலைகளைக் கொடுப்பதற்கான ஒரு உத்தரவை உடனடியாகப் பிறப்பிப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அரசாங்க நிறுவனங்களிலே வேலைக்கு எடுக்கும்பொழுது இப்படிப்பட்ட அங்கஹீனர்களையும் நம்முடைய வேலை தேடித்தரும் ஸ்தாபனம் அனுப்புகிறது. அவர்கள் வேலைக்குப் பொருத்தமாக இருந்தால் வேலை கொடுக்க வேண்டும் என்று நாம் வற்புறுத்திவருகிறோம். நான் முன்னால் குறிப்பிட்டபடி அரசாங்க நிறுவனங்களில் இப்படிப்பட்டவர்களுக்கு வேலை கொடுத்து, வேலை கொடுக்கிறோம் என்பதற்காகப் பரிசுகளும் பெற்றிருக்கிறார்கள்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது:** பேரவைத் தலைவர் அவர்களே, உடல் உறுப்புகள் ஊனமுற்றவர்களுக்குப் பயிற்சி தருகிற தனியார் பள்ளிகளுக்கு உதவுகின்ற வகையில் அரசு ஏதாவது சிறப்புத் திட்டம் தீட்டுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அப்படிப்பட்ட உதவியும் இப்பொழுது செய்யபட்டுகிறது. எந்த அளவுக்கு உதவி செய்யப்படுகிறது என்ற விவரம் இப்பொழுது என்னிடம் இல்லை.

## *Ground water project*

• 597 *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) Whether the Hon. the Minister held discussion with the U.N. Mission on matters relating to the second phase of the U.N. Ground Water Project; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) ஆம்.

(இ) பேரவைமுன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

*320—323ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



• **திரு. வ. ஜார்ஜ்:** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். நமது அசெம்பளித் துறை விதிப்படி கேள்விகளுக்கு அமைச்சர் அவர்கள பதில் அளிக்க வேண்டும். அரசாங்கத்தின் கூட்டுச் செயலாளர் கையொப்பமிட்டு இந்த அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அது முறைதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்தத் துறைச் செயலாளர்? தவறு என்ன?

**திரு. வ. ஜார்ஜ்:** துறை தெரியாது. அரசாங்க கூட்டுச் செயலாளர் அப்துல் ரஸாக் என்று இருக்கிறது. அமைச்சர் பெயரில் இருக்க வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர்தான் கொடுத்திருக்கிறார் விவர அறிக்கையை. அமைச்சர்தான் அவையிலே பதில் சொல்கிறார். செயலாளர் வந்து சொல்லவில்லை. அதுலே ஒன்றும் பாயிண்ட் ஆப் ஆர்டர் கிடையாது.

**திரு. கே. விநயகம்:** இந்த யுனைடெட் நேஷன்ஸ் கிரௌண்டு வாடர் பிராஜெக்ட் அதிகாரிகள் இதைப் பரிசீலிக்கும்பொழுது, தஞ்சாவூரில் இருக்கிற இந்தப் பிரச்னையை, டிரெய்னேஜ் ஆப் எக்ஸெஸ் வாடர், அதாவது அதிகமாக இருக்கிற தண்ணீரை எப்படி வெளியேற்றுவது என்கின்ற பிரச்சனையைப் பற்றி ஆராய்ந்தார்களா? தஞ்சாவூரில் ஒரு பகுதியிலிருக்கிற தண்ணீரை இன்னொரு பகுதிக்கு—பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, போன்ற இடங்களில் தண்ணீர் இல்லாமல் இருக்கிறது, இந்தப் பகுதிக்கு குழாய் மூலம் அனுப்பி விவசாயிகள் பயன்படுத்துவதற்கு ஏதாவது திட்டத்தை அந்த நிபுணர்கள் நமக்குச் சொல்லியிருக்கிறார்களா? அப்படிச் சொல்லியிருந்தால், அதைப்பற்றி நம்முடைய அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அப்படி இதை ஆராயவில்லை என்றாலும், நம்முடைய அரசின் கருத்து என்ன? அதிகமான தண்ணீரை தண்ணீர் இல்லாத இடங்களுக்கு அனுப்பினால், அவர்களுக்கும் நல்லது, இவர்களுக்கும் நல்லது. ஆகவே இப்படிச் செய்வதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** வடிகால் வசதியைப் பற்றிய பிரச்னை நம்முடைய பொதுப் பணித்துறையினர் மூலமாக ஆராயப்பட்டு வருகிறது. யுனைடெட் நேஷனல் டெவலப்மெண்டு பிராஜெக்ட் மூலமாக அது ஆராயப்படுமா என்பது பற்றிய விவரக் குறிப்பு என்னிடம் இல்லை. வடிகால் பிரச்னை நம்முடைய அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்:** இந்த அறிக்கையில் சொல்லப்பட்டதைப் பார்த்தால், ஒரு பக்கம் பி. டபிள்யூ. டி. வேலை செய்து கொண்டிருக்கிறது, இன்னொரு பக்கம் அக்ரிகல்சரல் டிபார்ட்மெண்டு வேலை செய்துகொண்டிருக்கிறது. ஒரு இணைப்பான திட்டம் சர்க்காரிடத்திலே இல்லாமல் இருக்கிறது. இரண்டு இலாகாக்களின் மேற்பார்வையில் கிரௌண்டு வாடர் ஸ்கீம் செயல்படுத்தப்படுகிறது, சரியாகச் செயல்படவில்லை என்று பரவலான குறை இருப்பது சர்க்காருக்குத் தெரியுமா? இரண்டும் இணைந்து செயல்படக்கூடிய நிலைமையில் ஏதாவது திட்டம் இருந்து கொண்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** விவசாய இலாகா பொதுப் பணித் துறை இலாகா, யுனைடெட் நேஷன்ஸ் பிராஜக்ட்ஸ் கமிட்டி, ஆகியவை கோவார்டினேஷன் அடிப்படையில்தான் இந்த வேலைகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

*Drinking water for Madras City from North Pennar river*

* 598 *Q*.—Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government had a scheme to bring drinking water to the City of Madras from North Pennar river and Somasila Project in Andhra Pradesh; and

(*b*) if so, why was it dropped?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) திட்டம் கைவிடப்படவில்லை.

**திரு. கே. விநாயகம் :** ஸார், சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் சுற்றுப்புறத்தில் இருக்கிற ஆறுகளில் உள்ள தண்ணீரை வீராணத்திற்குக் கொண்டு வருவதைவிட, ஆந்திர சர்க்காருடன் கலந்து பேசி, வட பெண்ணையிலிருந்தும், சோமசீலா திட்டத்திலிருந்தும், தண்ணீர் கொண்டு வரலாம் என்ற திட்டம் நம்முடைய அரசாங்கத்திடம் இருந்தது. அது கைவிடப்படவில்லை என்றாலும் கூட, அதை எடுத்து நடத்துவதற்கு எவ்வளவு பணம் வேண்டியதாக இருக்கும்? எப்பொழுது அவர்களோடு கலந்து பேசி ஏதாவது செய்ய ஒரு குறிப்பு இருக்கிறதா? இதுபற்றி அரசாங்கம் என்ன முடிவுக்கு வந்திருக்கிறது? கைவிடப்படவில்லை என்று சொல்லிவிட்டால் மட்டும் போதாது. அதற்குப் பரிகாரம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மூன்று மாநிலங்களுக்கும் இடையே கிருஷ்ணா நதியின் நீரைப் பகிர்ந்துகொள்ளும் சிக்கல் இறுதியாக முடிவடையாமல் இருப்பதினாலும், உடன்பாடான இறுதிமுடிவு எடுக்க இன்னும் சிலகாலம் செல்லும் என்ற காரணத்தினாலும், இதுபற்றி மேற்கொண்டு எவ்வித நடவடிக்கையும் எடுக்க இயலவில்லை. கிருஷ்ணா நதியில், கீழ்க்காணும் வகையில் மூன்று இடங்களில் ஏதாவது ஒன்றிலிருந்து 1,500 கோடி கன அடி நீரை எடுத்துக்கொள்வது குறித்து துவக்க அறிக்கை ஒன்றை அதற்கு ஆகக்கூடிய தோராய செலவு விவரத்துடன் பொதுச் சுகாதாரப் பொறியியல்—நகராட்சிப்பணிகள் தலைமைப் பொறியாளர், பாசனத் தலைமைப் பொறியாளரைக் கலந்து தயாரித்து அனுப்பியுள்ளார். அதன் விவரம் வருமாறு: நாகார்ஜுன சாகர் நீர்த் தேக்கத்திலிருந்து கிருஷ்ணா நதியைக் கடந்து தண்ணீர் கொண்டு வருதல். செலவு ரூ. 54·20 கோடி. ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்திலிருந்து கிருஷ்ணா நதியைக் கடந்து நீர் கொண்டுவருதல். செலவு ரூ 61·25 கோடி. சுங்கசாலா அணைக்கட்டிலிருந்து துங்கபத்திரா நதியைக் கடந்து நீர் கொண்டு வருதல். செலவு ரூ. 59·00 கோடி.

Thiru K. S. KOTHANDARAMIAH: May I know from the Hon. Minister whether this Government have a proposal to bring water from Hogenakal Cauvery to Madras City via Chembarapakkam tank?

(பதில் இல்லை).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. மகாதேவன் அவர்கள்......

**திரு. ப. மகாதேவன் :** சென்னை நகரத்திற்குக் குடிநீர் கொண்டு வருவதற்குத் திட்டம் தீட்டியதைப்போல கிராமப்புறங்களுக்கும் பக்கத்திலுள்ள அணைத் திட்டங்களிலிருந்து, இப்படித் தண்ணீர் கொண்டுவருவதற்கு அரசு முன்வருமா? உதாரணமாக......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வட பெண்ணையாற்றிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டுவருவது பற்றிய கேள்வி இது. இதைப் பற்றித் துணைக் கேள்வி கேட்கவேண்டும். திரு குமாரசாமி அவர்கள்....



**திரு கே. என். குமாரசாமி :** சென்னை நகரத்திற்கு வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டுவருவதற்கு ரூ. 20 கோடி அரசாங்கம் செலவு செய்திருக்கிறது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தக் கேள்வி வட பெண்ணையாற்றிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டுவருவது பற்றியது. வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டம் பற்றிய கேள்வியல்ல. வட பெண்ணையாற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவருவது பற்றிக் கேட்கவேண்டும்.

**திரு. கே. விநாயகம் :** இந்தத் திட்டத்தை இரு சர்க்காரும் சேர்ந்து போட்டு ஒரு மதிப்பீட்டிற்கு வந்தபிறகு, அந்தச் செலவை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆந்திர சர்க்கார் சொன்னதாகவும், அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்ற முறையில் அது விடப்பட்டது. அப்படி வருகிற வழியில் அந்த ஆற்றுத் தண்ணீரைக் கொடுப்பதற்கு அவர்கள் யோசனை சொல்லியிருக்கிறார்கள். அதை வேண்டாம் என்று நமது சர்க்கார் சொல்லி, அதற்காகத்தான் இது தடைபட்டிருக்கிறதா? இது பரிசீலிக்கப்பட்டு எப்பொழுது முடிவு எடுக்கப்படும்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னமாதிரி, கிருஷ்ணா, பெண்ணாறு நதிகளிலிருந்து சென்னை நகருக்குக் குடி தண்ணீரைக் கொண்டுவரவேண்டும் என்று ஏற்கனவே ஒத்துக்கொள்ளப்பட்டது. அந்தக் குடி தண்ணீர் வசதிக்குப் பயன்படுத்திக்கொள்வதுபற்றிப் பரிசீலித்தது உண்டு. ஆனால் அதற்காக சோமசீலா திட்டத்தின்கீழ் ஒரு நீர்த்தேக்கம் கட்டவேண்டியிருக்கிறது. அதோடு நீர்ப்பாசன திட்டத்திற்கும் அதைப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறார்கள். இதற்கு செலவு ஆகிற மொத்தப் பணத்தையும் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நடக்காத ஒரு யோசனையை ஆந்திர சர்க்கார் சொல்கிறார்கள். அவர்களுக்கு அதிக உற்சாகம் இல்லை. ஏனென்றால் அவர்களுக்கு பெரிய திட்டம், நாகார்ஜுனசாகர் திட்டம் இருக்கிறது. செலவைப் பகிர்ந்துகொள்ளும் பிரச்னை இருப்பதினால், அதில் காலதாமதம் ஏற்படும். காலதாமதம் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான், நாம் காவேரி நதித் திட்டத்தை மேற்கொண்டு இருக்கிறோம். இருந்தாலும், இன்னும் சென்னை நகரத்திற்குத் தண்ணீர் வேண்டியிருக்கிறது. இதற்காகத் தொடர்ந்து முயற்சி செய்து, ஒரு காலத்தில் இது வரலாம்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, சென்னைக் குடி நீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க வேறு எதையும் பார்க்காமல் வடக்கே கொற்றலையாற்றிலிருந்து 'கலெக்ஷன் ஸிஸ்டம்'படி தண்ணீர் கொண்டுவரலாம் என்று பிரெஞ்சு நிபுணர் தெளிவான அறிக்கை கொடுத்திருக்கிறார்களே, அதைப்பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறியலாமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை.

### இளநிலைப்பொறியாளர்கள்

* 599 வினா.—திரு. ஆர். கருப்பையா: திரு. எம். சுரேந்திர : } மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பணியாற்றும் இளம் பொறியாளர்களை அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களாக மாற்ற வேண்டுமென்று ஏதேனும் திகவல் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்பேரில் எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) ஊதியக் குழுவின் பரிந்துரைகளை எதிர்பார்ப்பதென கருதப் படுகிறது.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, இந்த பி. ஈ. படித்த மாணவர்கள் தங்களை ஏ. ஈ.க்களாக கெஜட் பதவியில் நியமிக்கவேண்டும் என்று மனு அனுப்பியிருக்கிறார்களே. அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது ? மற்ற மாநிலங்களைப்போல் பி. ஈ. படித்தவர்களை ஏ. ஈ.க்களாக அமர்த்தி, ரூ. 375 சம்பளமும் கொடுக்கிறார்களே. அந்த வகையில் செய்ய சர்க்கார் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அந்தப் பிரச்சினைகளைப் பரிசீலித்து அரசாங்கத்திற்கு அறிவுரை கூறத்தான் சம்பளக் கமிஷனுக்கு அது தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப் பேற்ற பிறகு பி வி.எஸ்.ஸி. படித்த மாணவர்கள் கெஜட் பதவி உள்ள வர்களாக செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களும் பி. ஈ. போன்று ஒரே நிலையில் படித்தவர்கள்தான். ஒரே நிலையில் உள்ளவர்களுக்கு ஒரே நியாயம் வழங்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர், என்ன சொன்னார் ? 'கமிஷன் வைத்திருக்கிறோம், அவர்களுடைய அறிக்கை வந்தபிறகு நடவடிக்கை எடுக்கலாம்' என்று சொன்னார்கள். இந்தக் கேள்வி சரியில்லை.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, இந்திய அரசிட மிருந்து 'இந்தியன் எஞ்ஜினியர்ஸ் சர்வீஸ்' ஒன்று அமைக்க தமிழக அரசாங்கத்தின் கருத்து கேட்டு வந்ததா ? அரசு அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

*Strike by State Transport workers.*

* 600 Q.—THIRU K. SAHADEVA KANDER : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there was a lightning strike by the Transport Busmen at Madras city about the 21st November 1969?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தமிழ்நாடு அரசு போக்கு வரத்துத் துறையின் தண்டையார்பேட்டைப் பணிமனையில் 1969-ம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ம் தேதி அன்று திடீர் வேலை நிறுத்தம் நிகழ்ந்தது. துறையின் மற்றப் பணிமனைகளில் வேலை நிறுத்தம் நிகழவில்லை.

**திரு. சி. கோவிந்தராஜன் :** தலைவர் அவர்களே, அங்குள்ள தொழி லாளர்களுக்குப் படி கொடுக்கப்படுவது சம்பந்தமாக, 9 நிமிஷம் வரை ப்ரேக் டவுன் ஆனாலும், 9 நிமிஷத்திற்கு மேல் ஆனாலும், படியில் கழித்துக் கொள்வது என்பது சம்பந்தமாக வேலை நிறுத்தம் வந்தது. அது இப்பொழுது சரிப்படுத்தப்பட்டுவிட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அவர்களுடைய குறைபாடுப் படிப் பிரச்சினையைப் பற்றித்தான் ஏற்பட்டது. ஆனால் முன் அறிவிப்பு இல்லாமல் செய்யப்பட்டது. படிப் பிரச்சினை பற்றி ஏற்கனவே உயர் மட்டக் குழுவின் சிபாரிசின் மேல் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.



THIRU K. VINAYAKAM : Sir, were the grievances of the striking bus men conceded or whether the Government sticks to its own old regulation of distributing this batta?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஹை பவர் கமிட்டி சிபாரிசின் பேரில் படி கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

*Stone throwing on State Transport buses.*

* 601 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there was stone throwing on State Transport buses in Madras city about the 4th May 1969;

(b) if so, the details thereof; and

(c) the details of the damage to State buses?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) இல்லை.

(இ) & (உ) வினாக்களுக்கு இடமில்லை.

**முத்துப்பேட்டை—சென்னை பேருந்துப் பணி.**

*602 வினா.—**திரு. ந. தருமலிங்கம் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் [illegible] செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) தஞ்சை மாவட்டம், முத்துப்பேட்டையிலிருந்து சென்னைக்கு அரசாங்கப் பேருந்து [illegible] எதுவும் உள்ளதா ?

(இ) ஆம் எனில் எப்போதிலிருந்து ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

*Madras–Madurai double decker buses*

* 603 Q.—DR. H. V. HANDE : }
THIRU V. SWAMINATHAN : } Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether it is a fact that with the introduction of Pandyan Express train from Madras to Madurai the number of passengers travelling in double decker bus (State Transport) has decreased; and

(b) if so, the steps taken by the Government to effectively complete with the Pandyan Express?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :**

(அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

DR. H. V. HANDE : Sir, is it not a fact that after the introduction of the Pandyan Express train, a number of passengers who want to go from Madras to Madurai quickly and vice versa are going by the train and not by the bus, and that it is inconvenient for the passengers to sit in the bus in the night and reach the

destination in the early morning because there is no sleeping arrangement, and what arrangements do the Government propose to make to increase the facilities in the bus to neutralise the increased number of passengers going by the train?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The average number of passengers who travelled in double decker buses before and after the introduction of Pandyan Express is given below :

| Route 530 | Average passenger per day | |
|---|---|---|
| | September 1969. | November 1969. |
| DD 8 | 88 | 87 |
| DD 9 | 81 | 85 |
| DD 10 | 84 | 83 |
| DD 11 | 75 | 84 |

It may be seen from the above statement that there is no appreciable decrease in the number of passengers who travelled in the double decker services of the Tamil Nadu State Transport Department.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது புதிதாக பாண்டியன் எக்ஸ்பிரஸ் வந்த பிறகு, பொதுமக்களிடம் ரெயிலில் செல்லவேண்டும் என்ற எண்ணம்தான் அதிகமாக இருக்கிறது. அரசாங்க பஸ்ஸில் இரவு நேரங்களில், அதிக வசதிகள் இருப்பதாலும், பிரயாணிகள் குறைவாக இருக்கிறார்கள். வசதியை அதிகப்படுத்தி, பிரயாணிகள் அதிகமாகப் போக வாய்ப்பளிக்க பரிசீலனை செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, பாண்டியன் எக்ஸ்பிரஸ் வந்த பிறகு அரசாங்கப் பெருந்துகளில் பயணிகளின் எண்ணிக்கை குறைவு என்று கூறுவதற்கில்லை. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதுபோல் வசதிகளை ஆராய்ந்து அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. மு. ச. சிவசாமி :** தலைவர் அவர்களே, அரசினரின் மேல் மாடி பெருந்துகளில் மாடியின் உயரம் குறைவாக இருப்பதன் காரணத்தாலும், காலை நீட்டி உட்கார வசதியாக இல்லாததாலும், மக்கள் இவற்றில் போக விரும்பாமல் இருக்கிறார்கள். ஆகவே, உயரத்தை உயர்த்தவும், காலை நீட்டிக்கொள்ள வசதியாகவும் இருக்கையை மாற்றி அமைக்க சர்க்கார் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல் அரசுப் பெருந்து பஸ்களில் வசதி குறைவாக இருப்பதை இயக்குனர், செயலாளரோடு, நானும் பஸ்ஸிலே பார்த்தேன். மாறுதல்கள் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, மதுரையிலிருந்தும் சென்னைக்கும் தினசரி பல ஆம்னிபஸ்கள் போய்வருவதால், அரசாங்கத்திற்கு வரவேண்டிய வருவாய் போகிறது. அதைத் தடுக்க அரசாங்கம் முனைப்பான நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : முனைப்பான நடவடிக்கை எடுக்கப்படுகிறது, கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.**



**திரு. எஸ். முருகையன் :** மாடி பஸ்ஸில் பிரயாணம் செய்ய மக்கள் சற்று பயப்படுகிறார்கள். வசதி குறைவாக இருக்கிறது. மாடி பஸ்களைத் தனியார் துறையில்போல் 64 பாசஞ்சர்கள் உட்காரும் அளவில் அரசாங்கப் பஸ்களிலும் வசதி செய்து கொடுத்து, பிரயாணிகளுக்கு வசதியாகச் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாடி பஸ்களில் வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. வருமானம் குறையவில்லை. மக்களால் வரவேற்கப்படுகிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, இந்த தொலைதூர எக்ஸ்பிரஸ் பஸ், மாடி பஸ்களில், முக்கியமாக பயணம் செய்கிறவர்களுக்கு, அதிக வசதிகளைப் பெருக்கித் தருவதற்கு, பஸ் துறை ஒழுங்காக இயங்குவதற்கு, இந்தத் துறையில் மாடி பஸ்ஸில் வசதிக்குறைவான பிரயாண அமைப்பை இப்படி அமைத்துத் தந்த அதிகாரிகள், இன்னும் சம்பந்தப்பட்டவர்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா:** நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. குறைபாடுகளை நிவர்த்திக்க கடமைப் பட்டிருக்கிறோம். நடவடிக்கைகளெல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன. வேறு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவேண்டிய நிலை இல்லை.

## திருப்பூரிலிருந்து பேருந்து பணிகள்.

*604 கே.—திரு. க. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் சட்டப்பேரவை உறுப்பினர் அவர்களிடமிருந்து, அரசு பஸ்கள் விடுவது பற்றி 1967-ம் ஆண்டு, நவம்பர் மாதத்தில் விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) விரிவான ஆய்வு நடத்தியபின் இவ்வழித்தடங்களில் பெருந்துகள் கிடைப்பதைப் பொறுத்து, பேருந்துப் பணியினைத் தொடங்க நடவடிக்கை எடுக்க கருதப்பட்டுள்ளது. இந்நிலையில் அரசு உடைமையாக்கப்பட்ட "திருச்சி–காங்கேயம்" வழித்தடத்தைத் திருப்பூர் வரை நீடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## குளச்சல் துறைமுகம்.

*585 கே.—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குளச்சல் துறைமுகத்தை விரிவுபடுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) & (இ) குளச்சல் துறைமுக வளர்ச்சிக்காக 16 லட்சம் ரூபாயில் திட்டம் வகுத்து அது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெற்றது. ஒரு பாலம் கட்டுவதற்கு ரூ. 15 லட்சமும், துறைமுக அலுவலகம் கட்டுவதற்கு 50 ஆயிரம் ரூபாயும், அதையொட்டி ஒரு கிடங்கு (கார்கோ ஷெட்) கட்டுவதற்கு 50 ஆயிரம் ரூபாயும் செலவிடத் திட்டமிடப்பட்டு, பாலத்திற்கு 2 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், தமிழகத்தின் ஏதாவது ஒரு துறைமுக வளர்ச்சிக்குமட்டுமே உதவ முற் 9-

முடியும் என்று மத்திய அரசு கூறியதால், கடலூர் துறைமுகச் சீரமைப்புப் பணி நடைபெற்று வருகிறது. குளச்சல் துறைமுக விரிவாக்கம் தடங்கல் பட்டிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, மேற்குக் கடலோரப் பகுதியில் இருக்கிற சிறு துறைமுகம் என்று கருதப்பட்டாலும் முக்கியமான துறைமுகமாக இருக்கிற காரணத்தால் புனர் பரிசீலனை செய்வதற்காக மத்திய அரசாங்கத்தோடு கடிதப் போக்குவரத்து நடத்தி, பெறுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, இது நல்ல துறைமுகம் என்றும், முக்கியமான துறைமுகம் என்றும் இந்த அமைச்சு உணருகிறது. தூத்துக்குடிக்கு கிழக்கே இலங்கை இருக்கிறது. எனவே, புயல் காற்று குறைவு. மேற்கு குளச்சல் துறைமுகத்தில் ஆயிரம் அடி வரையிலும் ஆழப்படுத்தவேண்டும். உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்து நல்ல கருத்து. நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, குளச்சல் துறைமுகத்தை மத்திய அரசு நிறைவேற்றுவிட்டாலும், மாநில அரசே ஏற்று நடத்தி, அதற்கு உண்டாகக்கூடிய செலவை, பிறகு மத்திய அரசிடம் கேட்டுப் பெறுவதற்கு மாநில அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, முதலில் எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய கருத்தைப் பின்பற்றிப் பார்த்து, முடியாமல் போகுமானால், உறுப்பினர் அவர்களுடைய கருத்துச் சிறந்ததாக இருக்குமா செயல்பட ஏதுவாக இருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும்.

**திரு. கே. விநாயகம் :** தலைவர் அவர்களே, அந்த இடத்தில் தேர்தல் வரப்போகிறதே, அதற்கு முன்னாலே இது கட்டி முடிக்கப்படுமா உங்களால் ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, தேர்தல் வரும், போகும். ஆனால் துறைமுகம் என்பது நீண்டகாலம் நிலைத்து நின்று பயன்தரத் தக்க ஒன்றாகும். தேர்தலுக்கும் துறைமுக வளர்ச்சிக்கும் எவ்வித ஒட்டுறவும் இல்லை.

**திரு. எம். எஸ். மணி :** தலைவர் அவர்களே, குளச்சல் துறைமுகத்தை உடனடியாகக் கட்டாவிட்டால் எதிர்க்கட்சியில் இருக்கிற காங்கிரஸ் கட்சி ஒரு பெரிய போராட்டம் நடத்தப்போகிறது என்று ஒரு செய்தி வெளியானதே, அதன்படி போராட்டம் நடத்தப்போகிறார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் போராட்டம் நடத்தத் தேவையில்லை. நாங்கள் மேற்கொள்ளும் நல்ல ஆக்கப் பணிகளுக்கு உதவியாக இருந்தால் போதும்.

*Non-judicial stamp papers.*

* 589 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is shortage in the supply of non-judicial stamp papers and whether they are not readily available in district treasuries; and



(*b*) whether the Government propose to give importance to the use of special adhesive stamps instead?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** (அ) இல்லை.

(இ) இல்லை.

THIRU K. VINAYAKAM : Sir, has the Hon. Minister any personal experience that the people who require these non-judicial stamp papers go to the concerned offices and even vendors only to find out that they are in short supply with the result they are forced to go to some other place and pay even more than what is prescribed? Is the Hon. Minister aware of all these facts at least personally?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வியே தவறானது. அவை போதுமான அளவில் இருக்கின்றன. 1966-ம் வருஷத்தில் இருந்த நிலைமையிலேயே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இப்பொழுதைக்கு அந்தமாதிரியான நிலவரம் இல்லை. உங்களுக்குத்தான் விவரம் தெரியவில்லை. வெளிநாட்டிற்கும் இங்கு வாட்டர்மார்க் பேப்பர்.. பணநோட்டுகளை அச்சிடும் நாசிக் அச்சகத்திற்கும் தகராறு ஏற்பட்ட காரணத்தாலே அப்போது ஸ்டாம்ப் பதிவுத் தாள்களுக்கு நெருக்கடி ஏற்பட்டது. ஆகவே, அட்ஹெஸிவ் பேப்பரைக் குறித்து ஒரு ஏற்பாடு செய்யப்பட்டு ஒரு புதிய உத்தரவு வந்தது. இப்போதுகூடப் பலர் ஏமாந்துபோய்விட்டார்கள். அதுதான் உண்மை நிலை. எந்தவிதமான பத்திரமும் ஸ்டாம்ப் பேப்பரில்தான் எழுதவேண்டும் என்பதில்லை. கிராமப்புறங்களில் பொதுவாக 500 ரூபாய் வேண்டுமானாலும், பணத்தைக் கொடுத்து, சாதாரணத் தாளில் பத்திரம் எழுதிக் கொடுத்துவிடுகிறார்கள். நாம் 18 கோடி ரூபாய்க்கு ஸ்டாம்ப் பேப்பர் ஆர்டர் கொடுத்தோம். 8 கோடி ரூபாய் மதிப்புள்ளவை இப்போது நம்மிடத்தில் இருக்கிறது. தமிழ்நாட்டிலே பதிவுத்துறை மூலமாக 2 கோடி ரூபாய் மதிப்புள்ள பேப்பர் இருக்கிறது. ஸ்டாம்ப் பேப்பர் கிடைப்பதில் எந்தவிதமான இடைஞ்சலும் ஏற்படவில்லை. கிராமப்புறங்களில் பத்திரத்தில்தான் எழுதுவார்கள். அட்ஹெஸிவ் பேப்பர் வேண்டுமென்பதில்லை. இப்போது 2 கோடி ரூபாய் அளவுக்கு எல்லா ஊர்களிலும் இருக்கிறது. சென்னையைப் பொறுத்தவரையில், இது ஒரு எழுச்சிமிக்க நகரமாகையால், பெரிய பெரிய கிரயப் பத்திரங்கள் இதில் எழுதப்படுகின்றன. அச்சிடப்பட்ட பதிவுத் தாள்களிலே எழுதவேண்டுமென்பதில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது இன்றைய நிலவரம் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, முத்திரைத்தாள் விற்பனை ஸ்டாம்ப் வெண்டரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதால், சர்க்கார் கொண்டுவரக்கூடிய உச்சவரம்புச் சட்டத்தைத் தவிர்ப்பதற்காக 100 ரூபாய் பெறுமானமுள்ள ஸ்டாம்ப் பேப்பர் 300 ரூபாய், 500 ரூபாய் என்று விற்கப்படுகிறது. ஸ்டாம்ப் பேப்பர்கள் மார்க்கெட்டில் இல்லையென்று சொல்லப்படுகிறது. ஆகவே, ஸ்டாம்ப் பேப்பர் விற்பனையை அரசாங்கமே மேற்கொள்ள முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, குறிப்பிட்ட நேரத்தில் ஏற்படுகிற நிலைமைகளைப்பொறுத்து முடிவு செய்துவிடுவதல்ல. எங்கெங்கு இப்படியாக ஒரு முறைகேடு நடைபெறுகிறது என்பதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமேதவிர, முறைகேடு ஏற்பட்டுவிட்டது, இந்த முறையை மாற்ற வேண்டும் என்று கூறுவது உகந்ததாக இல்லை. எங்கே, எப்பொழுது,

யார் இப்படி விற்றிருக்கிறார்கள் என்று ஆதாரப் பூர்வமான புகார்கள் வந்தால், அவற்றை ஆய்ந்து பார்த்து, தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, ஸ்டாம்ப் பேப்பர் விற்பனையில் முறைகேடுகள் நடப்பதாகச் சொல்லப்படுகிறதே, எந்தெந்தத் தேதிகளில் ஸ்டாம்ப் பேப்பர்கள் விற்கப்பட்டன, எவ்வளவு ஸ்டாக் இருக்கிறது என்பது அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறதா? அந்த விவரத்தைக்கொண்டு, பரிசீலனை செய்ய ஏற்பாடு நடைபெற்றிருக்கிறதா? அப்படிச் செய்தால் அதிலே ஊழல் நடந்திருக்கிறது என்பதைச் சுலபமாக அறிய முடியுமே ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, ஸ்டாம்ப் விற்பனையாளர்களிடம் எப்படி நீங்கள் அதிக விலைக்கு விற்றீர்கள் என்று கேட்க முடியாது. அப்படி அதிக விலைக்கு வாங்கியவர்கள் அதற்கான ஆதாரத்துடன் கூட புகார்களைச் சொன்னால், இதைக் கண்டுபிடிக்க முடியும். எவ்வளவு ஸ்டாம்புகள் யார் யாரிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன, எவ்வளவு விற்பனையாகியிருக்கின்றன, எவ்வளவு ஸ்டாக் இருக்கின்றன என்பதையெல்லாம் குறித்து பதிவுத் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு விவரங்கள் அனுப்பப்படுகின்றன.

**திரு. மு. ச. சிவசாமி :** தலைவர் அவர்களே, ஒன்றரை மாதங்களுக்கு முன்பு, மதுரை நகரில் திருட்டுத்தனமாக முத்திரைத் தாள்களை அச்சிட்டதாகப் பத்திரிகையில் செய்தி வந்ததே, அது உண்மைதானா? அது உண்மையென்றால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, இது பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. ரிஜிஸ்ட்ரேஷன் அமைச்சர் அவர்களிடத்தில் இதற்கான தகவல் இருக்கிறதா, இல்லையா என்று தெரியவில்லை. அவரிடம் கேட்டால் விவரம் அளிப்பார்.

**திரு. இல. பலராமன்:** தலைவர் அவர்களே, பத்திரம் விற்பனையாளர்களுக்கும், அரசுக்கும் கமிஷன் கொடுப்பதிலே தகராறு ஏற்பட்டு, அந்த விஷயம் கோர்ட்டில் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அதன் மீது அரசு விற்பனையாளர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு கூறியபின் அரசு எடுத்த முடிவு என்ன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை மாண்புமிகு திரு. என். வி. நடராசன் அவர்களிடத்தில் கேட்டால் விவரம் கிடைக்கும்.

### அருமலைக்கோட்டை நிலங்களுக்குத் தண்ணீர்த் தீர்வை

* 590 வினா.—**திரு. க. ர. நல்லசிவன் :** மாண்புமிகு நிதியமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், பாபநாசம் வட்டம், அருமலைக்கோட்டை என்னும் கிராமத்திலுள்ள காவிரி-மேட்டூர் பாசன நிலங்களுக்கு விதிக்கும் தண்ணீர்த் தீர்வை ஏக்கருக்கு எவ்வளவு?

(இ) 1374, 1378 ஆகிய பசலி ஆண்டுகளுக்குத் தாங்கள் செலுத்திய தண்ணீர்த் தீர்வை விவரங்களை அந்தக் கிராம விவசாயிகள் கோரினரா?

(உ) ஆம் எனில், விவரம் கொடுக்கப்பட்டதா?

(எ) அந்த விவரங்கள் யாவை?



**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** (அ) வரிவிதிப்பு தண்ணீர்த் தீர்வை விகிதங்கள் வருமாறு :

| நிலத்தின் வகை. (1) | வரிவிதிப்பு. (2) ஒரு எக்கருக்கு ரூ. காசு. | தண்ணீர்த் தீர்வை ஒரு எக்கருக்கு. முதல் போகம். (3) ரூ. காசு. | தண்ணீர்த் தீர்வை ஒரு எக்கருக்கு. இரண்டாம் போகம். (4) ரூ. காசு. |
|---|---|---|---|
| நன்செய் | 16 62 | .. | 9 00 (பசலி ஜாஸ்தி) |
| புன்செய் | 1 75 முதல் 2 37 வரை. | 10 00 | 5 00 |
| மானவாரி நிலங்கள் | 2 37 | 9 00 | 4 50 |

(இ) இல்லை.

(உ) ஆம். (எ) இவ்வினாக்களுக்கு இடம் இல்லை.

**திரு. ஆர். கருப்பையா :** தண்ணீர்த் தீர்வை விதிக்கிறபோது முதன்முறை சாகுபடிக்கு விதிப்பதைவிட இரண்டாவது சாகுபடிக்குக் குறைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** நான் கொடுத்த விடையைப் பார்த்தாலே தெரியும். முதல் போகச் சாகுபடிக்கு விதிப்பதில் பாதியாகத்தான் இரண்டாவது போகச் சாகுபடிக்கு விதிக்கப்படுகிறது.

**திரு. என். கிட்டப்பா :** உணவு உற்பத்தியிலேயே கவனம் செலுத்தி வருகிற தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தமட்டிலாவது தண்ணீர்த் தீர்வையைக் குறைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** காவிரி நதியைக்கொண்டு சாகுபடிசெய்து வருகிற டெல்டா பிரதேசம் அது. அந்த மாவட்டத்திற்கு 40 கோடி செலவில் வாய்க்கால்களைத் திருத்தி அமைப்பது, சாலைகளைப் புதுப்பிப்பது ஆகிய திட்டத்தை மாண்புமிகு முதல் அமைச்சர் குறிப்பிட்டபடி எடுத்து நடத்தத் திட்டமிட்டிருக்கிறது.

**திரு. பி. வேலுசாமி:** விவசாயத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளப்படுகிற தண்ணீரை அளவிட்டு, அந்த அளவின் பேரில் தீர்வை விதிக்கும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா?

(பதில் இல்லை)

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** புதிய பாசனத்தின்கீழ் தண்ணீர் பெறுகிற நிலங்களுக்கு எந்த அடிப்படையில் தண்ணீர்த் தீர்வை வசூலிக்கப்படுகிறது?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஒவ்வொரு இடத்திற்குமே ஒவ்வொரு முறையில்தான் தீர்வை விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுகின்றது.

**திரு. அ. மாரிமுத்து :** தஞ்சை மாவட்டத்தில் ஒரு போக நிலங்களை இருபோகமாகச் சாகுபடி செய்யுமாறு மாநாடுகள்மூலம் எடுத்துக் கூறி வருகிறார்கள். அப்படிச் செய்கிறவர்களை உற்சாகப்படுத்தும் வகையிலாவது இரண்டாவது போகச் சாகுபடிக்கு 3 ஆண்டுகள் தண்ணீர்த் தீர்வை வசூலிக்காது இருப்பார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** வழக்கமாக இருபோகம் சாகுபடி செய்கிற நிலங்களுக்கு அல்லாது—பசுமைப் புரட்சி வந்த பிறகு ஒரு போக நிலத்தில் இரு போகம் சாகுபடி செய்ய முன்வந்தவர்களுக்கு சென்ற ஆண்டு தண்ணீர்த் தீர்வை வசூலிக்கப்படவில்லை.

**திரு. அ. ஆறுமுகம்** : தண்ணீர்த் தீர்வையை ஒரு தடவையாக வசூலிப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, 2 தவணை முறையில் வசூலிக்க அரசு யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : இது தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தது. தண்ணீர்த் தீர்வை குறைவுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோள்படி கேள்விகள் 591, 592 ஒத்திவைக்கப்படுகின்றன.

### *Cattle feed mixing centre at Madurai.*

*593 Q.—THIRU K. M. RAMASWAMY GOUNDER : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

(*a*) whether there is any proposal to start a cattle feed mixing centre at Madurai; and

(*b*) if so, the stage at which the matter now stands?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : (அ) & (இ) மதுரையில் கால்நடைத் தீவனங்களைக் கலவை செய்யும் புதிய தொழிற் பிரிவு ஒன்றை நிறுவும் செயற்குறிப்பு எதுவுமில்லை. ஆனால், ஸ்ரீவில்லிபுத்தூர் பால்வழங்கு கூட்டுறவுச் சங்கத்திலும், காரைக்குடி பால் வழங்கு கூட்டுறவுச் சங்கத்திலும் உள்ள நாளொன்றுக்கு 3 டன் உற்பத்தித் திறனளவு கொண்ட இரு சிறு கால்நடைத் தீவனக் கலவை இயந்திரங்கள், உலக உணவுத் திட்டத்தால் வழங்கப்படுகிற தானியங்களைக் கொண்டு கால்நடைத் தீவனம் தயாரிப்பதற்காகத் தற்காலிகமாய் மதுரை பால் பண்ணைக்கு மாற்றப்பட்டுள்ளன.

**திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்** : மற்ற மாவட்டங்களுக்கும் இந்தத் துறையை விஸ்தரிக்க யோசனை உண்டா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : தனிக் கேள்வி போடவும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்** : ஸ்ரீவில்லிபுத்தூரில் இருந்து கால்நடைத் தீவனங்களைக் கலவை செய்யும் இயந்திரங்கள் மதுரைக்குத் தற்காலிகமாக மாற்றப்பட்டதற்குக் காரணம் என்ன? நிரந்தரமாக அங்கேயே ஒரு நிலையம் ஏற்படுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : அங்கே கொண்டு போய் அமைப்பதன் மூலம் மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு விநியோகிக்க வழியேற்படும் என்பதுதான். அது பலனுள்ளதாக இருக்குமானால் நிரந்தரமாக்கப்படும். புதிய இயந்திரங்களும் தருவிக்கப்படும்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்** : கூட்டுறவு பால் பண்ணைகளுக்கே இந்தத் தீவனங்கள் வழங்கப்படுகின்றன. தனிப்பட்டவர்களும்கூட பால் பண்ணை வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கும் வழங்க சர்க்கார் யோசிக்குமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : நல்ல யோசனை. தனிக் கேள்வி போட்டால் பரிசீலிக்கலாம்.



### பீ. அளகாபுரி கூட்டுறவு பால்வழங்கு சங்கம்

*594 **வினா—புலவர் பொ. பொன்னம்பலம்** : மாண்புமிகு உணவு, வணிகவரித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் அமைந்துள்ள பீ. அளகாபுரி கூட்டுறவுப் பால் பண்ணையின் நிலை பற்றி ஏதேனும் வழக்கு இருக்கிறதா?

(இ) எவ்வளவு காலமாக வழக்கு நடைபெறுகிறது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : (அ) & (இ) பீ. அளகாபுரி பால் வழங்கு கூட்டுறவு சங்கத்தின் அலுவல்கள் குறித்து விசாரணை நடத்தும்படி, திருச்சி துணைப் பதிவாளர் (பால்பண்ணை) 1967-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 8-ம் தேதி அன்று கட்டளையிட்டார். சங்கத்தின் முன்னாள் தலைவர் ரூ. 3,354·43 அளவிற்குப் பணம் கையாடல் செய்து பொய்க்கணக்குக் காண்பித்ததாக விசாரணையில் தெரிய வந்ததால், புலன் விசாரணை நடத்தி சட்டப்படி மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்காக இது காவல் துறையினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**புலவர் பொ. பொன்னம்பலம்** : பேரவைத் தலைவர் அவர்களே, அளகாபுரி பால்வழங்கு கூட்டுறவுப் பண்ணை ஒழுங்காக நல்ல முறையில் நடைபெறுவதற்கு, நடவடிக்கைகளை விரைவுபடுத்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : 1970-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6-ந் தேதியில்தான் காவல்துறையிடம் தகவல் சேகரிக்க கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கிருந்து தகவல் வந்தவுடன் வழக்குத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

### உணவுப் பொருள் வழங்குதுறையிலுள்ள அரசாங்க லாரிகள்

*595 **வினா—திரு. என். எஸ். வி. சித்தன்** : மாண்புமிகு உணவு-வணிக வரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உணவு இலாகாவுக்குச் சொந்தமான அரசாங்க லாரிகள் எத்தனை?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : உணவுப்பொருள் வழங்குதுறைக்குச் சொந்தமாக முப்பத்தாறு லாரிகள் இருக்கின்றன.

**திரு. என். எஸ். வி. சித்தன்** : அவற்றில் சென்னையில் மட்டும் எத்தனை லாரிகள் இருக்கின்றன? மாவட்டங்களில் எவ்வளவு? சென்னையில் நம்மிடம் லாரிகள் இருக்கும்போது காண்டிராக்ட் லாரியில் ஏற்றி சமீபத்தில் 1,045 அரிசி மூட்டைகள் காணாமற்போகும்படியான நிலைமை ஏன் ஏற்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : சென்னையில் மத்திய சர்க்கார் கோடவுனில் இருந்து சரக்கு கொண்டுவர லாரிகள் பயன்படுத்தப்படவில்லை. காண்டிராக்ட் லாரி மூலமே ஏற்பாடு செய்யப்படுகிறது. நம்முடைய லாரிகள் பெரும்பாலும் மாவட்டங்களில் இருந்து சர்க்கரை, அரிசி, நெல் போன்றவற்றை அவ்வப்போது உடனுக்குடன் கொண்டு வரவே பயன்படுத்தப்படுகின்றன.

### போத்த நதி கிராம ஆற்றின் குறுக்கே பாலம்

*605 **வினா—திருமதி கே. பி. ஜானகியம்மாள்** : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் கள்ளிக்குடி ஊராட்சி மன்றத்திற்குட்பட்ட போத்த நதி கிராம ஆற்றின் மீது பாலம் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், பாலம் கட்டுவது தற்போது எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள்:** தலைவர் அவர்களே, இந்தப் பாலம் இல்லாதது நீண்ட நாட்களாகப் போக்குவரத்திற்கு இடையூருகவும் அங்குள்ள மக்களுக்கு வசதிக் குறைவாகவும் இருப்பதன் காரணத்தால் மீண்டும் பரிசீலனை செய்து கட்டுவதற்கு அரசாங்கம் ஏற்பாடுகள் செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** இந்தப் பாலம் கட்டுவதற்கு ஏறத்தாழ ஒரு லட்ச ரூபாய் செலவாகும் என்று கூறப்படுகிறது. தலைமைப் பொறியாளர் கொடுத்திருக்கிற அறிக்கையின்படி அங்கேயிருக்கிற வண்டிப் பாதைகளைச் சீரமைத்ததற்குப் பிறகு அந்த வேலையைச் செய்வது எளிதாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும் என்று சொல்கிறார்கள். ஆகவே, பொறுத்திருந்து நிலைமைகளைப் பார்த்து எடுத்துக்கொள்ளலாம்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** கள்ளிக்குடி ஊராட்சிமன்றத்திலிருந்து அப்படிப்பட்ட கோரிக்கை ஏதாவது வந்திருக்கிறதா? போத்த நதி கிராமம் மிகவும் பிற்பட்ட பகுதியாக இருக்கிறது. வண்டிப் பாதையை செம்மைப்படுத்திக் கொடுப்பார்களானால் அரசாங்கம் அதைச் சீக்கிரம் எடுத்துக்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்திலிருந்து எந்தவிதமான கோரிக்கையும் அரசுக்கு வரவில்லை. இவையெல்லாம் ஆங்காங்குள்ள ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து எடுத்துக் கொள்ளப்படுகிற திட்டங்களாகும்.

## புதிய ஆவடி சாலையிலுள்ள வீடுகள்.

* 606 வினு.—திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்மையில் சென்னை 38-வது டிவிசன், புதிய ஆவடி சாலையிலுள்ள காந்தி நகரில் கட்டப்பட்டிருந்த சுமார் 1,500 வீடுகள் கார்ப்பரேஷன் அதிகாரிகளால் இடித்துத் தள்ளப்பட்டது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் என்ன?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** (அ) & (இ) புதிய ஆவடி சாலையில் காந்தி நகர் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த சுமார் 150 குடிசைகள் உட்பட, சுமார் 1,200 குடிசைகள் மாநகராட்சியால் 1969, ஆகஸ்ட், 10, 11 நாட்களில் அகற்றப்பட்டன. காந்தி நகரில் மீண்டும் அமைக்கப்பட்ட சுமார் 240 குடிசைகளை அகற்றுவதற்கான நடவடிக்கை 1970, மார்ச் 8-ம் நாளன்று மேற்கொள்ளப்பட்டது.

மாநகராட்சிக்குச் சொந்தமான நிலப்பகுதியில் செங்குன்றம் ஏரியிலிருந்து கீழ்ப்பக்கம் குடிநீர் தூய்மைப்படுத்தும் நிலையத்திற்குத் தண்ணீர் கொண்டுவரும் குழாய் அமைந்திருக்கும் இடத்தில் மாநகராட்சியின் அனுமதியின்றி இக்குடிசைகள் அமைக்கப்பட்டிருந்தன. குழாய் வழியே செல்லும் நீர் அசுத்தப்படுத்தப்பட்டதாலும் குடிசைவாழ் மக்கள் தண்ணீர் கொண்டு செல்லும் குழாயின் மீது பொருத்தப்பட்டிருந்த மூடிகளை அகற்றிவிட்டு நீர் எடுத்துக்கொண்டதாலும் இவர்களை வெளியேற்றுவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.





**திரு. சி. கோவிந்தராஜன்:** தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே வாழக்கூடிய மக்கள் ஏறக்குறைய 15 ஆண்டுகளாக அங்கே வசித்துக் கொண்டிருக்கிறார்கள். கலெக்டரிடத்திலே எப். சி. ஆர். கட்டிக்கொண்டு வருகிறார்கள். அவர்களை அகற்றக்கூடிய அந்த உத்தரவு சென்றவுடனே அவர்கள் எல்லாம் மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர்களைச் சந்தித்ததன் விளைவாக ரெவின்யூ இலாகா 1969-ம் ஆண்டு ஜூலை மாதம் 24-ம் தேதியன்று மூன்று மாதங்களுக்கு அவர்களை அகற்றக்கூடாதென்று ஸ்டே உத்தரவு கொடுக்கப்பட்டிருந்தும் அதை மீறி கார்ப்பரேஷன் அஸிஸ்டெண்ட் கமிஷனர் போலீஸ்காரர்களை வைத்துக்கொண்டு அப்படிச் செய்தது அரசாங்கமே அரசாங்க உத்தரவை மீறக்கூடிய அளவுக்குப் போகக் கூடிய நிலைமையிருப்பதால் மக்கள் பரபரப்பு அடைந்துள்ளார்கள். அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் அப்படிச் செய்ததற்கு என்னிடத்திலே செயற்குறிப்பு இல்லை. லட்சக்கணக்கான மக்களுக்குத் தண்ணீர் வழங்குகின்ற முறையிலே அந்தத் தண்ணீரை சாக்கடைத் தண்ணீராக, நல்ல தண்ணீரை தூய்மை கெடக்கூடிய தண்ணீராகச் செய்யும் நிலைமை இருப்பதாலே அப்படித் தூய்மை கெடுவதைத்தடுப்பதற்காகச் சட்டபூர்வமான நடவடிக்கை எடுப்பது மாநகராட்சி அதிகாரிகளுடைய கடமையாகும்.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கமாகப் பதில் சொன்னார்கள். ஒருமுறை நானே நேரில் சென்று பார்த்திருக்கிறேன். பல இடங்களில் தண்ணீர் போகின்ற இடங்களிலும், ட்ரெயினேஜ் இருக்கிற இடங்களிலும் குடிசைகள் போடப்பட்டிருக்கின்ற காரணத்தினாலே அவற்றிலே பழுது ஏற்பட்டுவிட்டால்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி, பிரிக்கப்பட்ட குடிசைகளைப் பற்றியது.

**திரு. நா. வீராசாமி:** அப்படிப் பழுது ஏற்படுகின்ற நேரங்களில் குடிசைகள் இருப்பதால் பழுதுபார்ப்பதுகூட முடியாமல் இருக்கிற நிலை எல்லாம இருக்கிற காரணத்தினாலே இனிமேலாவது அப்படிப்பட்ட இடங்களில் குடிசைகள் போடாமல் இருப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** அமைக்கப்பட்டிருக்கின்ற குடிசைகள் காரணமாக தண்ணீர் கெடுகின்ற நிலைமை ஏற்படுமானால் அவ்வப்பொழுது நடவடிக்கைகள் அதைத் தடுக்கின்ற முறையிலே எடுக்கப்பட்டு வருகின்றன. அகற்றப்படுகிற இடங்களிலே மீண்டும் குடிசைகள் போடப்படுவதாலே மீண்டும் அவற்றை அகற்றவேண்டிய சூழ்நிலை மாநகராட்சிக்கு ஏற்படுகிறது.

**திரு. ஏ. பாலசுப்பிரமணியன்:** அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து ரெவின்யூ இலாகாவிலிருந்து ஸ்டே கொடுத்ததாக தன் இலாகாவுக்குத் தெரியாது என்று பொருள்படக் கூறினார்கள். அமைச்சர்களுக்குள் இருக்கவேண்டிய கோ-ஆர்டினேஷன், இணைப்பு என்று சொல்வார்களே அதுகூட இல்லாத காரணத்தினாலேதான் அங்கேயுள்ள சாதாரண மக்கள் பாதிக்கப்பட்டுவிட்டார்கள். இனிமேலாவது இதுபோன்ற நிலைமை ஏற்படாமல் இருக்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு சாமானிய மக்களிடத்திலே இருக்கிற அக்கறையைவிட இந்த அரசுக்கு அந்த மக்களிடத்திலே அதிக அக்கறை இருக்கிறது. வருவாய்த் துறை தடையுத்தரவு விதித்ததற்கான விவரம் இல்லையென்று தான் கூறினேனதவிர, இந்த இலாகாவுக்கும் அந்த இலாகாவுக்கும் தொடர்பில்லையென்று நான் கூறவில்லை. இப்படிப்பட்ட மோதல்களை ஏற்படுத்திக் குழப்பம் ஏற்படுத்த வேண்டுமென்று கருதத் தேவையில்லை.

THIRU K. VINAYAKAM : Though on the point that the hut dwellers caused pollution to the drinking water supplied by the Corporation there is no difference of opinion, after de-housing them, after demolishing the huts, were they given alternative sites anywhere to enable them to live or are they shifting from place to place and just continuing the pollution of the drinking water?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி** : பொதுவாக அருகிலே உள்ள வேறு இடங்களிலே அவர்களுக்கு இயலுமானல் இடம் தரப்படுகிறது. ஹவுசிங் போர்டு மூலமாகவும் தேவையான இடத்தை ஒதுக்க நடவடிக்கைகளை மேற்கொள்கிருர்கள்.

**திரு. சி. கோவிந்தராஜன்** : தலைவர் அவர்களே, ரெவின்யூ இலாகாவிலிருந்து வந்த உத்திரவு அமைச்சர் அவர்களுடைய செயற்குறிப்பில் இல்லை என்று சொல்கிருர்கள். ஆனல் அந்த உத்திரவு அஸிஸ்டெண்ட் கார்ப்பரேஷன் கமிஷனர் இடத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த உத்திரவு எண் 67197-பி2/69—1 தேதி 24—7—1969, எ. என். பத்மநாபன், டெபுடி செகரட்டரி என்று கையெழுத்திட்டுள்ள அந்த உத்தரவையும் பொருட்படுத்தாமல் நடவடிக்கை அந்த அஸிஸ்டெண்ட கமிஷனர் எடுத்திருக்கிருர் என்று சொன்னல் இது சட்டபூர்வமான நடவடிக்கை என்று சொல்ல முடியுமா? அரசாங்க அதிகாரிகளே ஸ்டே உத்தரவை மீறி நடவடிக்கை எடுத்தால் மற்றவர்களுக்கும் அப்படிப்பட்ட சட்டவிரோதச் செயலைச் செய்ய ஊக்கம் கொடுக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்துவது ஆகாதா? அங்கே பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு தர அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி** : தேதி என்ன சொன்னீர்கள்?

**திரு. சி. கோவிந்தராஜன்** : 24—7—1969 அன்று.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி** : அப்படிப்பட்ட தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா என்பதை விசாரித்துத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

*Rajaji market at Kancheepuram.*

* 607 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether the Kancheepuram Municipality has suffered losses in running Rajaji market in 1968?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி** : 1968–69-ம் ஆண்டில் நகராட்சி நிர்வாகத்தின் மூலமாக மொத்தம் ரூ. 1,08,860 வசூலிக்கப்பட்டது. வசூல் பணியாளர்களுக்காக ஏற்பட்ட மொத்தச்செலவு ரூ. 18,159 ஆகும். ஏலத்தில் கேட்கப்பட்ட அதிக அளவுத் தொகை ரூ. 93,100 ஆகும். வசூலையும் குத்தகைக்கு விட்டிருப்பின், குத்தகைக்காரர் அப்புரவுச் செலவுக்காக நகராட்சிக்கு ரூ. 6,118 செலுத்தியிருப்பார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)



## (2) அவையுரிமைக் கேள்வி.

### திரு. க. ர. நல்லசிவன் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் கூருத கூற்றைக் கூறியதாகக் கூறியதுகுறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள், இந்த அவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையையொட்டி கருத்து வழங்குகிற நேரத்திலே இந்த மன்றத்திலே முதலமைச்சர் அவர்கள் கூருதஒன்றைக் கூறினர்கள் என்றும் ஆனல் அந்த நிலையைப் பிறகு எடுத்துக்கூறுகின்றநேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் இந்த அவையில் இல்லாத காரணத்தினல் அதற்கு அவர் இடத்திலிருந்து சமாதானம் பெற்று அதன்மீது முடிவு எடுக்கலாம் என்றும் இந்த அவைக்கு அறிவித்திருந்தேன். அவர்களுக்கு அந்த வாய்ப்பு அளித்தபோது அவர்கள் சமாதானம் ஏதும் கூருத காரணத்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் கூருத கூற்றைக் கூறியதாக அவர்கள் இந்த அவையிலேயே கூறியது உண்மையிலேயே உரிமை மீறிய நிகழ்ச்சியாகும் என்ற முடிவுக்கு வருகிறேன். ஆராய்ந்து முடிவுகூற அந்தப் பிரச்னையை உரிமைக் குழுவிற்கு நான் அனுப்புகின்றேன்.

## (3) கவன ஈர்ப்பு.

### (அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் பஞ்சம் ஏற்பட்டுள்ளதால் கடன் வசூலை நிறுத்துவது, தவணையை நீட்டிப்பதுகுறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அடுத்து, சட்டப் பேரவை விதி 41-ன் கீழ் உறுப்பினர் திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்கள் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஓர் அவசர உடனடிப் பொது முக்கியம் வாய்ந்த காரியத்தைக் கொண்டுவருவார்கள்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா**: தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 41-ன் கீழ், இராமநாதபுரம் மாவட்டம் கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டுள்ளதால், விவசாயிகள் வாங்கிய கடன் தொகையை வசூலிப்பதை நிறுத்தவும், தவணைகளை நீட்டிக்கவும் வேண்டியதுபற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, in February 1970 the Collector of Ramanathapuram had reported that due to failure of rains again, acute distress prevailed in several pockets in the district and requested among other things, that collection of Government dues might be postponed in such areas to afford relief.

The Government accepted the Collector's view and have since issued orders permitting the Collector to postpone collection of all Government loan instalments and land revenue dues during the current fasli in the following areas which were reported as worst affected :—

Srivilliputhur taluk—Nathampatti, Srivilliputhur and Malli firkas.

Aruppukkottai taluk—Tiruchuli firka.

Tirupathur taluk—Nachiapuram and Singampunari firkas.

However, these orders will not prevent the Collector from using his discretion in extending the concession to similarly affected parts in the district under intimation to Government.

திரு. ஏ. அ. சுப்பராஜா: அரசாங்கம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு கடன்களை வசூலிப்பதில் 'கோ ஸ்லோ ப்ராஸஸில்' செல்ல வேண்டுமென்று சொல்லியும்கூட இன்னும் ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலூகாவிலும், சாத்தூர் தாலூகாவிலும் கடன்களை வசூலித்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அரசாங்கம் இந்த முக்கியமான விஷயத்தில் உத்தரவிட்ட பின்பும்கூட அதிகாரிகள் கடன்களை வசூலிப்பதில் கெடுபிடி செய்வதை இந்த அரசு அறியுமா? அமைச்சர் அவர்கள் இந்த நிலையை அறிந்து நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இரண்டு குற்றச்சாட்டுகளுமே சரியானவை அல்ல. அரசாங்கம் உத்தரவிட்டதே 25-ம் தேதி தான். அதற்குள்ளாக ஏதோ கொடுமைகள் பண்ணுகிறார்கள் என்று தகவல் வந்திருக்கிறது என்றால் எப்படி என்று தெரியவில்லை. ஃபோனில் தகவல் வந்தது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள். ஃபோனில் பேசுகிற அளவுக்கு சௌகரியமான விவசாயிகள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடன் பேசிக்கொண்டிருக்கிறார்கள். எங்கெங்கு நிலைமை சிரமமாக இருக்கிறதோ அங்கெல்லாம் கடன்களை ஒத்திவைக்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன, அதிகாரிகள் கண்டிப்பாக அரசாங்க உத்தரவின்படி நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வார்கள்.

### (ஆ) மாயவரத்தின் கிழக்கே உள்ள கடைமடைப் பகுதிகளுக்கு பாசன வசதி பாதிக்கப்படுவதுகுறித்து.

திரு. பி. ஜயராஜ்: தலைவர் அவர்களே, காவேரியில் 80/1 மைலில் மாயவரத்தின் அருகில் எப்/5 என்ற இடத்தில் காவேரியில் ஒரு ரெகுலேட்டர் கட்டி மேலே புதுத் தலைப்பு கொடுத்து எப்/4 ஆறுபாதி கால்வாயில் சேர்த்து அதன்மூலம் பழங்காவேரி ஆறுபாதி வகையறா ஆயக்கட்டுக்கு தண்ணீர் வசதி செய்து கொடுப்பதால் கிழக்கே உள்ள கடைமடைப் பகுதிகளான 15,000 ஏக்கருக்குமேல் பாசன வசதி பாதிக்கப்படுவதைப் பற்றிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, பழங்காவேரி வாய்க்கால் மைல் 76/1-2-ல் காவேரி வலது கரையில் ஆரம்பமாகிறது. இதன் ஆயக்கட்டு 2,540 ஏக்கர். மாயவரம் எல்லையில் உள்ள இந்த வாய்க்காலின் ஒரு பகுதி மணல் மேடிட்டு மிகவும் மோசமான நிலையில் இருப்பதால் மாயவரம் எல்லைக்குக் கீழே உள்ள அதன் ஆயக்கட்டான 2,292 ஏக்கருக்குச் சரிவர பாசன நீர் வழங்க இயலவில்லை. இதன் ஆயக்கட்டுதாரர்கள் மேற்கண்ட குறையை நீக்கும்படி கோரியுள்ளனர். இத்திட்டம் தீர ஆராய்ந்து கீழ்க்கண்ட வேலைகளை செய்ய திட்டம் இடப்பட்டு உள்ளது:—

(1) குறிப்பிட்ட அளவு தண்ணீர் பழங்காவேரிக்கு வழங்க காவேரியின் குறுக்கே மைல் 80/1–530-ல் ரெகுலேட்டர் கட்டுவது.

(2) காவேரியின் வலது கரையில் மைல் 80/6–33 தலைப்பு கட்டுவது.

(3) பழங்காவேரியையும் மேல்கண்ட தலையமைப்பையும் இணைக்க இணைப்பு வாய்க்கால் வெட்டுவது.

இரண்டாவதாக குறிப்பிட்டுள்ள தலைப்பு, மாயவரம் எல்லைக்குக் கீழே உள்ள ஆயக்கட்டுக்கு மட்டும் போதுமான நீர் வழங்க கணக்கிடப் பட்டுள்ளது. மேலும் பழங்காவேரி, காவேரியிலிருந்து பிரியும் இடத்தில் விகிதாச்சாரப்படி தண்ணீர் வழங்க, இப்போதுள்ள கண்மாய் அளவைக் குறைக்க உத்தேசித்துள்ளது இதனால் பழங்காவேரிக்கு அதிகப்படியான தண்ணீர் எடுத்துக்கொள்வதை கட்டுப்படுத்த முடியும். இந்தக் கண்மாய் மூலம் சுமார் 542 ஏக்கருக்கு மட்டும் தண்ணீர் வழங்க உத்தேசிக்கப்



பட்டுள்ளது. ரெகுலேட்டர் கட்டுவதன் முக்கிய காரணமே, புதிதாகக் கட்டப்பட இருக்கும் மதகிற்கு பாசனத்திற்கு மட்டம் அளிப்பதற்காக மட்டுந்தான். மேலும் கட்டப்பட இருக்கும் ரெகுலேட்டர் இப்போதுள்ள கீழ் மட்ட நிலங்களுக்கு பாசன நீர் தட்டில்லாமல் வழங்குவதை கணக்கில் கொண்டே திட்டமிடப்பட்டுள்ளது. புதிதாக கட்டப்பட இருக்கும் ரெகுலேட்டரின் கீழே உள்ள ஆயக்கட்டுகளின் விஸ்தீரணம், 21,000 ஏக்கர் என கணக்கிடப்பட்டுள்ளது. இந்த 21,000 ஏக்கர் ஆயக்கட்டுகளுக்குத் தேவையான நீர் வழங்கப்படும். புதிய ரெகுலேட்டரினால் இந்நிலங்கள் பாதிக்கப்படாது, இப்புதிய ரெகுலேட்டரின் கீழ்மட்டம், ஆற்றில் தற்போதுள்ள மட்டத்திலேயே கட்டப்பட இருக்கிறது. ஆகையினால் இந்த ரெகுலேட்டரால் கீழே உள்ள பாசனக்காரர்களின் விவசாயம் பாதிக்கப்படும் என்று அஞ்சத் தேவையில்லை.

திரு. பி. ஜயராஜ்: தலைவர் அவர்களே, மாயவரத்தில் ஓடுகின்ற பழங்காவேரி மேடிட்டதன் காரணமாக புதிய ரெகுலேட்டரைக் கட்ட அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. பழங்காவேரி மேடிட்டிருப்பதை மாடர்னைசேஷன் செய்தால் ஏற்கனவே உள்ள பாசனத்திற்குத் தண்ணீர் செல்லாது. புதிதாக அரசாங்கத்தால் கட்டப்படுகின்ற ரெகுலேட்டர் சாதகமாக இருக்காது என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் ரெகுலேட்டர் கட்டப்படுகிறது. 21,000 ஏக்கருக்குப் பாதகம் ஏற்பட்டதுபற்றியெல்லாம் அரசாங்கம் தீர்க்கமாகப் பரிசீலித்த பிறகுதான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறது.

### (4) உள்ளாட்சித் துறை அமைச்சர்மீது தான் சாட்டிய குற்றச்சாட்டிற்கான ஆதாரங்களைக் கூறும் வகையில் தன்னிலை விளக்கம் அளிக்க திரு. ராமச்சந்திர துரை அனுமதி கோரல்.

திரு. ரா. ராமச்சந்திர துரை: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். 1970-ம் ஆண்டு மார்ச் மாதம் 12-ம் தேதியன்று சட்டப் பேரவைத் துறை செயலாளர் அவர்களிடமிருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது. அதிலே, "1969-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 23-ம் தேதியன்று நடந்த 1969–70-ம் ஆண்டிற்கான துணை நிதி மதிப்பீட்டிற்கான பொது விவாதத்தின்போது, நாமக்கல் கல்லூரிக்காக நன்கொடை வசூலித்தது குறித்து மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள்மீது ஒரு குற்றச்சாட்டைச் சாட்டியது நினைவிருக்கலாம். அதற்கான ஆதாரங்களைத் தாங்கள் தருவதற்குத் தயாராக இருப்பதாகக் கூறியிருப்பதும் நினைவிருக்கலாம். அதுபற்றிய ஆதாரங்கள் ஏதேனும் தங்களிடம் இருப்பின், அவற்றை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு 1970-ம் ஆண்டு மார்ச் மாதம் 20-ம் தேதிக்குள் கிடைக்கும்படி அனுப்பி வைக்குமாறு தாங்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்" என்று இருக்கிறது. அதற்கான ஆதாரங்களைக் கூறும் வகையில் 81-வது விதியின்கீழ் ஒரு தன்னிலை விளக்கம் கொடுக்கவேண்டுமென்று 20-ம் தேதி தங்களுக்கு எழுதிக் கொடுத்திருக்கிறேன். அந்த விளக்கத்தை இந்த அவையிலே படிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்று சொல்லுங்கள்.

திரு. ரா. ராமச்சந்திர துரை: பர்சனல் எக்ஸ்பிளனேஷன் 81–வது விதியின்கீழ் சொல்ல விரும்புகிறேன். இதைப்பற்றித் தங்களுக்கு எழுதிக் கொடுத்திருக்கிறேன். இப்போது அதை அவையிலே படிக்க விரும்புகிறேன்.

(திரு. மார்டின் அவர்கள் இருப்பிடத்தில் இருந்தபடி திரு. ராமச்சந்திர துரை அவர்களிடம் குறிப்புகளைக் கூறியபோது......)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மார்டின் அவர்கள் சொல்ல வேண்டிய விஷயங்களைப்பற்றியெல்லாம் லாபியிலே சொல்லியிருக்க வேண்டுமேயொழிய இங்கே வந்து இவ்வாறு இடத்தில் இருந்துகொண்டே பேசுவது சரியல்ல.

தன்னிலை விளக்கம் கொடுக்கவேண்டுமென்றால் என்னுடைய அனுமதி பெற்றுத்தான் கொடுக்க முடியும். நீங்கள் என்ன எழுதி வைத்திருக்கிறீர்கள் என்பதைப் பார்த்து நான் என்னுடைய தீர்ப்பை அறையிலே கொடுக்கிறேன். இதிலே பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.

**(5) அறிக்கைகள் அளித்தல்.**

**(அ) 'பாசனம்' பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை**

**திரு. ஏ. வி. பி. ஆசைதம்பி:** பேரவைத் தலைவர் அவர்களே, 'பாசனம்' பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் பதினேழாவது அறிக்கையை இப் பேரவைமுன் வைக்கிறேன்.

**(ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் 1969–70-ம் ஆண்டுக்கான ஐந்தாம், ஆறும் அறிக்கைகள்.**

**திரு. கி. ஐயராமன்:** தலைவர் அவர்களே, சட்ட விதிகள் ஆய்வுக் குழுத் தலைவர் சார்பாக 1969–70-ம் ஆண்டுக்கான மேற்படி குழுவின் ஐந்தாம் அறிக்கை, ஆறும் அறிக்கை ஆகியவைகளை அவைமுன் வைக்கிறேன்.

**(இ) திரு. டி. மார்டின்மீது எழுப்பப்பட்ட உரிமை மீறல் வழக்கு, திரு. எ. பாலசுப்ரமணியன் மற்றும் சில உறுப்பினர்கள் ஆளுநர் உரையின் போது வெளிநடப்பு செய்ததைக்குறித்த வழக்கு ஆகியவைபற்றிய அவையுரிமைக் குழுவின் அறிக்கைகள்.**

**திரு. ஜி. ஆர். எட்மண்ட்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மார்டின் மீது எழுப்பப்பட்ட உரிமை மீறல் வழக்கு, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. பாலசுப்ரமணியன் அவர்களும் மற்றும் சில பேரவை உறுப்பினர்களும் 1969-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ம் நாள் ஆளுநர் உரை அன்று வெளிநடப்பு செய்ததைக் குறித்த வழக்கு ஆகியவைபற்றிய அவையுரிமைக் குழுவின் அறிக்கைகளை அவை முன் வைக்கிறேன்.

**திரு. வ. ஜார்ஜ்:** தலைவர் அவர்களே, நான் ஒரு அமெண்ட்மெண்ட் கொடுக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிக்கையைத்தான் கொடுத்திருக்கிறார்கள். கன்சிடரேஷனுக்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று 'மூவ்' பண்ணவில்லை. கன்சிடரேஷனுக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று மோஷன் வந்த பிறகுதான் அமெண்ட்மெண்ட் கொடுக்க முடியும். விதி 191-ல்

'(*a*) The report of the Committee of Privileges shall be presented to the Assembly by the Chairman of the Committee or by any member of the Committee so authorised.

(*b*) As soon as may be, after the report has been presented, a motion in the name of the Chairman of the Committee or any member of the Committee may be made that the report be taken into consideration.



(*c*) Any member may give notice of amendment to the motion for consideration of the report referred to above in such form as may be considered appropriate by the Speaker...........
என்று தெளிவாக இருக்கிறது. ஆகவே, மோஷன் வந்த பிறகு தான் அமெண்ட்மெண்ட் கொடுக்க முடியும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** ரிப்போர்ட் சப்மிட் பண்ணியிருக்கிறார்கள். அமெண்ட்மெண்ட் கொடுக்க நீங்கள் ஒரு டேட் நிர்ணயிக்கவேண்டும்.

Sir, we want to give notice of amendments to the report. That is why we want to know the last date for giving notice of such amendments.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த மோஷன் எப்போது வருகிறது என்று தெரிந்த பிறகுதான் மோஷனுக்கு அமெண்ட்மெண்ட் கொடுக்க காலம் குறிக்க முடியும். மோஷன் எப்போது வருகிறது என்று தெரியாத நேரத்திலே அமெண்ட்மெண்டுக்கு எப்படி காலத்தைக் குறிக்க முடியும்?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** மோஷன் வரப்போகிறதா அல்லது வராமல் விட்டுவிடப் போகிறார்களா என்று கேட்கலாம் அல்லவா? அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு குற்றச்சாட்டு சாட்டப்பட்டிருக்கிறது. அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அது அவைக்கு கண்டிப்பாக வரவேண்டுமென்று என் கட்சி சார்பாக ஆலோசனை சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முன்பு மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்த அவையில் கூறிய கருத்துக்கும் இப்போது கூறுகிற கருத்துக்கும், அவை எப்படி இருக்கின்றன என்பதைத் தெளிவாக்குவதற்கு ஒன்றைச் சொல்கிறேன். 1969-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12-ம் தேதியன்று இதே சபையில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் ஒரு அறிக்கை அளித்தார்கள். அன்று அவர்கள் இந்தப் பேரவைமுன் ஒரு மோஷன் மூவ் செய்தார்கள். "......... 'கடிதம்' தமிழ் நாளிதழின் ஆசிரியர்–பதிப்பாளர் மீதான அவையுரிமைக் குழுவின் அறிக்கை சட்டப் பேரவையின் 191(b) விதியின்கீழ் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்ற ஒரு தீர்மானத்தை முன்மொழிந்தார்கள். அப்போது டாக்டர் ஹாண்டே அவர்கள் இப்படி ஒரு மோஷனைக் கொடுத்திருக்கிறீர்களே, அறிக்கை இப்போதுதான கொடுத்திருக்கிறீர்கள், அதற்கு திருத்தம் கொடுக்க எங்களுக்கு வாய்ப்பு இருக்க வேண்டுமென்று கேட்டார்கள். அவர்கள் கூறியது......

'Under Rule 191 (*a*) and (*c*) the report of the Committee of Privileges shall be presented to the Assembly by the Chairman and any member may give notice of amendment to the motion for consideration of the report. The report of the Committee of Privileges was presented to us this morning at 9 O' clock and we had no time to give notice of amendments. In fact, I want to give a few amendments to the report. If the report had been placed in our hands last night, we would have had time to go through it and give notice of amendments which may even be accepted. Hereafter at least I request the Chair to take a decision that such reports are circulated in advance at least to the members privately.

With regard to the motion itself '. என்று தொடங்கினார்கள். அப்போது நான் கூறினேன், "உங்களுக்குத் திருத்தம் கொடுக்க வாய்ப்பில்லை என்பதுதானே உங்கள் வாதம்? அவையிலே அந்த அறிக்கையைக் கொடுத்தபிறகுதானே, திருத்தம் கொடுக்கும் உரிமை வருகிறது? ஆகவே, இப்பொழுது இன்னொருநாள் இதை எடுத்துக்கொள்ளலாம்—விவாதிக்கலாம் என்றால். இன்றைக்கு அறிக்கையை அவைக்கு அளித்த அளவோடு வைத்துக்கொண்டு, திருத்தம் கொடுத்து, இன்னொருநாள் விவாதித்துக்கொள்ளலாம்" என்று கூறினேன். "நாளைக்கு வைத்துக் கொள்ளலாம்" என்று அவர்கள் சொன்னார்கள். அப்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப் படிக்கிறேன். "சபாநாயகர் அவர்களே, இப்படிப்பட்ட அறிக்கை சபைமுன் வைக்கப்பட வேண்டும். அனேகமாக பிரிவிலேஜ் கமிட்டி அறிக்கை கொடுத்தபிறகு, விவாதம் இல்லாமல் ஏற்றுக்கொள்வது என்கிற மரபு இருக்கிறது என்பதைத் தங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்", எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேரவைத் தலைவர் அவர்களை ஞாபகப்படுத்தியிருக்கிறார்கள். "திருத்தம் கொடுக்க உரிமை இருக்கிறது ஆனாலும், கமிட்டி ஒரு முடிவுக்கு வந்தபிறகு, அநேகமாக விவாதம் நடத்த வேண்டாம் என்கிற மரபைக் கையாண்டு வந்திருக்கிறோம் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்" மீண்டும் அவர்கள் நினைவுபடுத்தியிருக்கிறார்கள். "பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி, எஸ்டிமேட்ஸ் கமிட்டி போன்ற கமிட்டிகளின் ரிப்போர்ட்டுகளை அப்படியே சபை ஏற்றுக்கொள்வதுதான் வழக்கம் என்பதை ஞாபகப் படுத்த விரும்புகிறேன்" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக, அன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் கருத்தும் நோக்கமும் எந்தளவில் இருந்திருக்கின்றன என்பதையும் இப்போது அவர்கள் எந்தளவில் இதற்குத் திருத்தம் கொடுக்க வேண்டுமென்ற வாதத்தை வைக்க விரும்புகிறார்கள் என்பதை நினைவூட்டவே இதைச் சொல்கிறேன். உறுப்பினர்களின் உரிமையை நான் மறுக்கவில்லை. இன்று துணைத் தலைவர் அவர்கள் அறிக்கையைத்தான் அளித்திருக்கிறார்கள். இதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாம் என்ற ஒரு தீர்மானம் வருகிற நேரத்தில் அது வந்தபிறகு திருத்தங்கள் கொடுப்பதற்கு உறுப்பினர்களுக்கு வாய்ப்பு அளிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். வருமா வராமல் போய்விடுமா என்று கேட்டார்கள். அறிக்கை கொடுத்த பிறகு அதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்கிற ஒரு முறை இருக்கிறது என்பதை நான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** ஏற்கனவே நான் சொன்னதை வைத்துக்கொண்டு அதை உங்களுக்குச் சாதகமாக எடுத்துக்கொண்டு உங்கள் ரூலிங்கைக் கொடுத்திருக்கிறீர்கள். பிரிவிலேஜ் கமிட்டியில் நானும் ஒரு உறுப்பினர் என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது, அதில் நான் என்ன சொல்லியிருக்கிறேன் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஏன் சொல்கிறேன் என்றால், பிரிவிலேஜ் கமிட்டியில் நான் உறுப்பினராக இருக்கும்படியான சமயத்தில் நான் சொன்னதற்கு மாறாக இது இருக்கும்போதுதான் இந்தப் பிரச்னை வருகிறது. முன்னால் இப்படிச் சொல்லியிருக்கிறார், இப்போது இப்படிச் சொல்கிறார் என்றால் அதற்குக் காரணம் பிரிவிலேஜ் கமிட்டியில் சொன்னதற்கும் இதற்கும் இடையே மாறுதல் இருப்பதால் இந்த மாறுதலும் வேண்டும் என்று சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வருமா வராதா என்ற கேள்வியை எழுப்பினார்கள். 1969-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12-ம் தேதியன்று துணைத் தலைவர் அவர்கள் அறிக்கை அளித்தார்கள். அப்போதே விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னபோது டாக்டர் ஹாண்டே அவர்கள் விவாதிக்க வாய்ப்பு தரவேண்டும் என்று சொன்னார்கள். வாய்ப்பு தராமல் போய்விடவில்லை. 1970-ம் ஆண்டு ஜனவரி மாதம் 23-ம் தேதி அதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாம் என்று இந்த அவையில் கொண்டுவரப்பட்டு தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. ஆகவே இது வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



## (6) அறிவிப்பு

### அவையுரிமைக் குழுவிற்கான தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1970-71-ம் ஆண்டுக்குரிய அவையுரிமைக் குழுவிற்கு தமிழ் நாடு சட்டப் பேரவையின் பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டு கீழ்க்கண்ட பதினான்கு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டார்கள்.

1. திரு. எ. பாலசுப்பிரமணியன்.
2. திரு. செ. கந்தசாமி கவுண்டர்.
3. திரு. எஸ். முத்துலிங்கம்.
4. திரு. பெ. சௌந்தரபாண்டியன்.
5. திரு. எஸ். இராமச்சந்திரன்.
6. திரு. சு. ம. துரைராஜ்.
7. திரு. சி. வீரமணி.
8. திரு. கொளத்தூர் கோதண்டம்.
9. திரு. மா. பா. சாரதி.
10. திரு. பெ. மலைச்சாமி.
11. திரு. வ. ஆர். மாரிமுத்து.
12. திரு. ரா. கனகசபை.
13. திரு. எஸ். ராமலிங்கம்.
14. திரு. ஆர். பொன்னப்ப நாடார்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை ஏற்கனவே அறிவிக்கப்பட்ட, தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால் 1970-71-ம் ஆண்டு அவையுரிமைக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.

சட்டப் பேரவையின் 183(4)-வது விதிக்கிணங்க மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு ஜி. ஆர். எட்மண்ட் அவர்களை இக் குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

## (7) அரசினர் மசோதா.

### தமிழ் நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 9/1970).

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Sir, I move— 'That the Tamil Nadu Appropriation (No. 2) Bill,* 1970 (L.A. Bill No. 9 of 1970) be taken into consideration'.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு மசோதா பிரிவு வாரியான ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

---

*Published in the FORT ST. GEORGE GAZETTE Extraordinary, dated 26th March 1970.

பிரிவு 2, அட்டவணை, பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 1970–71-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம்.

## (8) தகவல் கோரல்.

### சென்னையில் பத்திரிகை நடத்தும் வடநாட்டு முதலாளியின் வீட்டில் மத்திய காவல்துறை நடத்திய சோதனை.

THIRU P. G. KARUTHIRUMAN : Sir, I want a change in the order of business. I want to get some information from the Hon. Chief Minister.

சென்னையில் பத்திரிகைகள் நடத்திக்கொண்டிருக்கும் ஒரு பெரிய வடநாட்டு முதலாளியின் வீட்டில் இந்த மாதம் 25-ம் தேதி சென்ட்ரல் போலீஸ் ரெயிட் செய்து சில ரிக்கார்ட்களைக் கைப்பற்றியிருக்கிறார்கள் என்ற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. கல்கத்தாவில் உள்ள ஒரு கம்பனி சம்பந்தமான தவறுகள் சம்பந்தமாக நடைபெற்ற புலன் விசாரணையைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுவது உண்மையா? அது சர்க்காருக்குத் தெரியுமா? அப்படி அது சர்க்காருக்குத் தெரிந்திருந்தால் அதைப்பற்றி ஒரு அறிக்கை வெளியிடாமல் இருப்பதன் மர்மம் என்ன? அமைச்சரவைக்கும் இந்த முதலாளிக்கும் ஏதாவது தொடர்பு உண்டா.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனி உறுப்பினர் கேள்வியா?

THIRU P. G. KARUTHIRUMAN : As the Leader of the Opposition, I want to get some information by way of private notice question.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைப் பேரவைத் தலைவரிடம் அனுமதி பெற்றுத்தானே கொண்டுவரவேண்டும்?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** ஒரு பெரிய 'ரெயிட்' நடந்திருக்கிறது. 'சென்ட்ரல் ப்யூரோ ஆஃப் இன்வெஸ்டிகேஷன்' நடத்தியிருக்கிறார்கள். அது தெரியாது இந்த அமைச்சரவை தூங்கிக்கொண்டிருக்கிறதா? அதுபற்றி முதல் அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை தந்திருக்க வேண்டும். இவர்களுக்கு தெரியாமலா நடந்திருக்கிறது. ஏன் அதைப்பற்றி ஒரு அறிக்கை சமர்ப்பிக்கவில்லை என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இப்போது இங்கு ஒரு பிரச்சினையைக் கேள்விகளைப்போல எழுப்பிச் சர்க்கார் தூங்கிக்கொண்டிருக்கிறதா, சர்க்காருக்குத் தெரியாதா என்றெல்லாம் கேட்டார்கள். அவர்கள் சொன்னார்கள், ஒரு வடநாட்டு முதலாளியின் இல்லத்தில் சோதனை நடைபெற்றது என்றும், ரெயிட் நடைபெற்று ரிக்கார்ட்கள் கைப்பற்றப்பட்டதாகவும் அது சர்க்காருக்குத் தெரியாதா என்றும் கேட்டார்கள். அந்தத் தகவல் உண்மை, ஆனாலும்



அதில் நம்முடைய மாநிலத்தின் போலீஸ் துறைக்கும், அதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. அவர்களே குறிப்பிட்டபடி, கல்கத்தாவிலிருந்து அவர்களுக்குத் தொடர்புள்ள ஒரு கம்பெனி சம்பந்தமாக சோதனையிடுவதற்காக Central Bureau of Investigation சி. பி. ஐ. அந்தக் காவல்துறையினர் அந்தச் சோதனையிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அது, இந்த மாநிலத்தின் காவல்துறைக்குத் தெரிவித்துவிட்டுச் செய்ய வேண்டிய அவசியமில்லை. சில விஷயங்களில் மத்திய அரசுக் காவல் துறை நேரடியாகச் சோதனை செய்யலாம் என்றிருக்கிறது. எனவே அதை இந்தச் சர்க்கார் இந்த அவைக்கோ, வெளியிலேயோ பிரகடனப்படுத்த வேண்டிய அவசியமில்லை. அப்படிப்பட்ட பொறுப்பும் இந்த அரசாங்கத்திற்குக் கிடையாது அவர்கள் கூறிய தகவல் உண்மையாக இருக்கலாம். ஆனால் இந்த அரசாங்கத்திற்கும் எந்த முதலாளிக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் முதலாளிகளுக்கும் சம்பந்தமில்லை என்பதையும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் அறிவார்கள் என்று நம்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இந்தச் சர்க்காருக்குத் தெரியாமல் எது வேண்டுமானாலும் நடந்துகொண்டிருக்கலாமா? அதை இந்தச் சர்க்கார் பார்த்துக்கொண்டிருப்பார்களா? அமைச்சர்களையே கைது செய்வது போன்று ஏதாவது செய்தால்கூட பார்த்துக்கொண்டிருப்பார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** மத்திய அரசுக் காவல்துறை, இப்படிப்பட்ட சில விஷயங்களில், வெளிநாட்டு அந்நிய செலாவணி போன்றவைகளில் தவறுகள் நடந்திருந்தால் அவைகளிலே தலையிட இந்தச் சர்க்காரினுடைய அனுமதியைப் பெறவேண்டிய அவசியமில்லாமலேயே தலையிடலாம். அந்த முறையிலே, வடநாட்டு முதலாளி என்று அவர்களுடைய வாயாலேயே வந்தது, அந்த வடநாட்டு முதலாளியிடம் சோதனையிட்டது உண்மை. அதைத்தான் சொல்லுகிறேன். ஆனால் இந்தச் சர்க்காருக்கும் அதற்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது. ஆகவேதான் அதை அறிவிக்கவேண்டிய பொறுப்பும், அவசியமும் இந்தச் சர்க்காருக்குக் கிடையாது. அதை அறிவிக்க வேண்டியது மத்திய அரசே தவிர நாங்கள் அல்ல.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சபாநாயகரவர்களே....

**(9) நடைமுறைக் கேள்வி.—(அ) பேரவைத் தலைவரின் அனுமதியைப் பெறாமல் பேரவையில் ஒரு பிரச்சினையை எழுப்பியது குறித்து.**

**திரு. நா. வீராசாமி:** பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். தலைவரவர்களே எதிர்கட்சித் தலைவரவர்கள் ஒரு பிரச்னையை இப்போது இங்கு எழுப்பினார்கள். அவசரமும், பொது முக்கியத்துவம் வாய்ந்ததுமான அந்தப் பிரச்னையை இப்பொழுது கேட்பதாகச் சொன்னார்கள். நம்முடைய விதி 41-ன்படி அவசரமும், பொதுமுக்கியமும் வாய்ந்த பிரச்னையை எழுப்பவேண்டுமென்றால் தங்கள் அனுமதியைப் பெற்று எழுப்ப வேண்டும், அந்த அறிக்கையை வெளியிடவேண்டும். இப்பொழுது எழுப்பப்பட்ட இந்தப் பிரச்னைக்கு எந்த விதிமுறை இடம் அளிக்கிறது என்பதையும், அது முறைதானா என்பதையும், அதற்கு அவைத் தலைவரவர்கள் தீர்ப்பு அளிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனி உறுப்பினர் கேள்வி என்று ஒன்றிருக்கிறது. அதுகூட, சட்டமன்ற விதிமுறைகளில் இடம் பெறவில்லை. ஆனாலும் நாம் அனுமதிக்கிறோம். தனி உறுப்பினர் கேள்வி கேட்கும் முறைக்கு சட்டமன்ற விதிமுறைகளில் இடமில்லை. அப்படிக்

கேட்கப்படும் அந்தக் கேள்விகூட, பேரவைத் தலைவருக்கு அனுப்பப் பட்டு, பேரவைத் தலைவரின் அனுமதியைப் பெற்ற பிறகுதான் அது இந்த அவைக்கு வரலாமேதவிர, அது இல்லாமல் வருவது முறை யல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனாலும் சில விளக்கங் கள் பெறுவதற்காக எதிர்க்கட்சித் தலைவரவர்கள் எழுந்து கூறினார்கள். மரபைக் கையாளும் முறையில் இதை மேற்கொள்ளலாமே தவிர அதற்கும் நம்முடைய சட்டமன்ற விதிமுறைகளில் இடம் இல்லை என்பதைக் கூறிக்கொள்ளுகின்றேன்.

**திரு பி. ஜி. கருத்திருமன்:** May's Parliamentary Practice இல் Leader of the Opposition—க்கு இன்னின்ன உரிமைகள் இருக்கின்றன என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய விதிமுறைகளிலே இடம் இல்லை என்றிருந்தாலும்கூட ஏதாவது சந்தர்ப்பங்களிலே....

(ஆ) விதிமுறைப்படி எழுப்பப்படாத எப்பொருளும் நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெறலாமா என்பது குறித்து.

**திரு. ம. பொ. சிவஞானம்:** தலைவரவர்களே, ஒரு ஒழுங்குக் கேள்வியை எழுப்ப விரும்புகிறேன். தாங்கள் அளித்த தீர்ப்பில் எந்த விதிப்படியும் எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கிளப்பிய வினா அமைய வில்லை. அப்படி எழுப்ப முறையுமில்லை என்ற தீர்ப்பளித்திருப்பதால், இது சம்பந்தமான எந்த விஷயமும் இந்தச் சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெறலாமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அவர்களுக்கே, ஏனென்றால்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு உறுப்பினர் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பினால் அதற்குத் தீர்ப்பளிக்கவேண்டிய பொறுப்பு பேரவைத் தலைவருக்குத்தான் இருக்கிறது. எழுப்பலாமா, எழுப்பக் கூடாதா என்று உறுப்பினர் வினவுவதற்கு இடம் இல்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** Mays Parliamentary Practice -இலே Leader of the Opposition என்றால் சில சமயங்களிலே, அபூர்வ மான சந்தர்ப்பங்களிலே தகவல் கேட்பதற்கு உரிமையிருக்கிறது, மரபும் இருக்கிறது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது தெரியாமல் இருந்தால்தான் ஞாபகப்படுத்த வேண்டும். எழுந்திருக்க அனுமதி இருக்கிறது என்ற மரபு தெரிந்திருப்பதால்தான் பேரவையில் தாங்கள் கூறுவதற்கு அனுமதித்திருக்கிறது. எனவே எனக்கு நினைவூட்டத் தேவையில்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ஆனால் எதிர்க்கட்சித் தலைவ ரவர்கள், இந்த விஷயத்தை, எந்த விஷயத்தைப்பற்றியும், அவர் சொன்னதுபோல் அபூர்வமான சந்தர்ப்பங்களிலே, சில தகவல்களை அறிந்துகொள்ளும் வகையில் அந்தக் கருத்துக்களைச் சொல்லவேண்டுமே தவிர, இதை இந்த அரசாங்கம் மறுக்கிறதா? இந்த அரசாங்கத் திற்கும் அவர்களுக்கும் தொடர்பிருக்கிறதா, மர்மம் இருக்கிறதா என்று இப்படிப்பட்ட நிலையிலே அவர்கள் பிரச்னைகளைக் கிளப்பாமல் இருப்பது நல்லது என்று கருதுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இப்படிக் கேட்பதின்மூலம், [illegible] பரிசுத்தத் தன்மையை வெளிப்படுத்துகிறேன்.



## (10) 1970-71-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு.

### (அ) கோரிக்கை எண் 14—மருத்துவம்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழி கிறேன்:—

"நிதிக் கோரிக்கை எண். 14—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 15,97,10,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

**THIRU R. RAMACHANDRA DORAI:** கொள்கை பற்றி விவாதிக்க—

I move the cut motion standing in my name:—

"That the allotment of Rs. 15,97,10,000 under Demand No 14—Medical be reduced by Rs. 100."

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** தலைவரவர்களே, புதிய மருத்துவ மனைகள் ஏற்படுத்தும்போது பழைய முறையாகிய ஜில்லா, தாலுகா தலைநகரில் ஏற்படுத்தும் வழக்கத்தை அறவே மாற்றி, ஜனத்தொகைப் பெருக்கம் அதிகம் உள்ள நகரங்களை ஒட்டி அமைப்பது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 14—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 15,97,10,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவரவர்களே, தமிழக அரசு மருத்துவ மனைகளில் பணியாற்றும் மருந்தாளுநர்கள் நிலை குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 14—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 15,97,10,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள்:** தலைவரவர்களே, எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெற்று 2½ ஆண்டுகள் டிப்ளமா இன் பார்மசி (Diploma in Pharmacy) படிப்பு முடித்தவர்களைப் பயன்படுத்தும் இடத்தில், வெளியில் தனியார் மருத்துவரிடம் அனுபவம் பெற்றவர்களுக்கு சான்று கொடுத்துப் பயன்படுத்துதல் பற்றி விவாதிக்க—

'நிதிக் கோரிக்கை எண். 14—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 15,97,10,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**DR. H. V. HANDE:** To discuss the need for appointment to evolve a method by which prompt medical attention is given by Senior Doctors during all hours of the day and also during Sundays when cases of emergency are brought to hospitals I move the following cut-motion:—

"That the allotment of Rs. 15,97,10,000 under Demnad No. 14—Medical be reduced by Rs. 100".

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, தமிழகத்தில் கோவையில் எலும்புருக்கி நோய் அதிகமாக பரவுவதால் அங்குள்ள மக்கள் தங்கி சிகிச்சை பெற எலும்புருக்கி மருத்துவமனை ஒன்றை கோவையில் தனியாக ஏற்படுத்துவது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 14—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 15,97,10,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஆ) கோரிக்கை எண். 15—பொதுச் சுகாதாரம்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண். 15—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,01,05,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, கிராமங்கள்தோறும் நல்ல குடிநீர் வசதியில்லாமல் இருப்பதை நீக்கி நல்ல குடிநீர் வசதியுண்டாக்குவது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 15—பொதுச்சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 9,01,05,200-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஏ. அ. சுப்பராஜு : தலைவரவர்களே, ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்திலும், ஒரு ஆரம்ப சுகாதார நிலையம்தான ஏற்படுத்த வேண்டும் என்பதை மாற்றி, பத்தாயிரம் ஜனத்தொகைக்கு ஒன்று வீதம் அமைப்பது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 15—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 9,01,05,200-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : To discuss the need to open more primary health centres in rural areas, I move the following cut motion :—

"That the allotment of Rs. 9,01,05,200 under Demand No. 15—Public Health be reduced by Rs. 100."

திரு. இல. பலராமன் : தலைவரவர்களே, தாய்சேய் நல விடுதிகள் தனியார் கட்டிடங்களில் கிராமப்புறங்களில் இருப்பதை மாற்றியமைத்தல் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 15—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 9,01,05,200-இல் ரூ 100 குறைக்கவேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சி. கோவிந்தராஜன்: தலைவரவர்களே, நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையிலிருந்து வெளிப்படும் கழிவுநீர், நிலங்களைப் பாழ் படுத்துவதோடு சுகாதாரத்திற்கும் இடையூறாக இருப்பதால் அதை சீர் படுத்தக் கோரியும், இதுவரை தக்க நடவடிக்கை எடுக்காமலிருப்பதைப் பற்றி விவாதிக்க—





"நிதிக் கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 9,01,05,200-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(இ) கோரிக்கை எண் 38—பொதுச் சுகாதார மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண். 38—பொதுச் சுகாதார மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 45,03,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

THIRU K. RAMAMOORTHI : To discuss policy, I move the following cut motion :—

"That the allotment of Rs. 45,03,000 under Demand No. 38. Capital Outlay on Public Health be reduced by Rs. 100".

திரு. எம். பூபதி : தலைவரவர்களே, நகரமன்றத்தின்கீழும், பஞ்சாயத்தின்கீழும் பணியாற்றும் நகர சுத்தித் தொழிலாளர்களின் சம்பளம், வீட்டு வாடகைப் படி இவைகளை மாற்றி அமைக்கவேண்டு மென்பதுபற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 38—பொதுச் சுகாதார மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 45,03,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே, நகரசபைகளில் பல ஆண்டுகளாகப் பணியாற்றும் நகரசுத்தித் தொழிலாளர்களைத் தற்காலிகத் தொழிலாளர்களாக வைத்திருப்பதை மாற்றி நிரந்தரத் தொழிலாளர்க ளாக ஆக்கவேண்டுமென்று விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 38—பொதுச் சுகாதார மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 45,03,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், முற்பகல்
வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப் 10-30
படுகின்றன.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத்துறை* பற்றியும், பொதுநலத்துறை† பற்றியும், பொதுநலத்துறை மூலதனச் செலவு‡ பற்றியும் என்னுடைய விளக்கக் குறிப்புகள் அச்சிடப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக் கின்றன. இந்த விளக்கக் குறிப்புகள் இங்கே படிக்கப்பெற்றவையாகக் கொண்டு, பதிவேட்டில் ஏற்றிக்கொண்டு, அவற்றின் மீது விவாதத்தைத் தொடங்கலாம் என்று கருதுகிறேன்.

---

* 331—356-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது

† 357—369-ம் பக்கங்களில் மூன்றாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது

‡ 369—370-ம் பக்கங்களில் நான்காம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது

370—446-ம் பக்கங்களில் நகர நீர் வழங்கு ஏற்பாடு, கழிவு நீர் அகற்று திட்டங்கள் குறித்த அறிக்கை ஐந்தாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

*திரு. எம் வில்லியம் : சபாநாயகர் அவர்களே, மருத்துவ மானியக் கோரிக்கைகளின் பேரிலும், பொதுநலக் கோரிக்கையின் மீதும் எனது சில கருத்துக்களைக் கூற நான் விரும்புகிறேன். எல்லா மக்களுக்கும் சிறந்த மருத்துவ வசதிகள் அளிக்கப்படவேண்டும், அவைகள் அவர்களுக்கு எளிதில் கிடைக்க வேண்டும் என்பதுதான் சர்க்காரின் கொள்கையாக இருக்கிறது. அவ்வண்ணமான ஒரு கொள்கையை நிறைவேற்ற இந்த ஆண்டு அதற்காக மருத்துவ மானியக் கோரிக்கைக்கு ரூ. 15 கோடிக்கு மேலும், பொது நல மானியக் கோரிக்கைக்கு ரூ. 9 கோடிக்கு மேலும் கோரப்பட்டிருக்கிறது. முதன் முதலாக நமது நாட்டில் தொத்து நோய் அதிகமாகப் பரவாமல் இருக்க பல வேலைகள் நடத்தப்பட்டு வருகின்றன. முக்கியமாக வாந்தி பேதி, பிளேக், பெரிய அம்மை நோய், மலேரியா ஆகிய தொத்து நோய்கள் நமது நாட்டில் அதிகமாக அகற்றப்பட்டிருக்கின்றன என்பதை நான் மிகவும் மகிழ்ச்சியோடு கூறிக்கொள்கிறேன். அதே வேளையில் இதைவிட அதிகமாகத் தொத்துநோயாகக் காணப்படுவது லெப்ரஸி. லெப்ரஸி சென்னை மாநகரத்தில் அதிகமாக இருந்து வருகிறது என்பதைக் கண்டு அனைவரும் துக்கப்படவேண்டிய ஒரு விஷயமாக இருக்கிறது. நமது சென்னை நகரத்தில் எந்த இடத்தில் பார்த்தாலும் அதிகமாக ஸ்லம் ஏரியா இருக்கிறது. நடை பாதைகளில் இந்தத் தொழுநோயால் பீடிக்கப்பட்டவர்கள் அதிகமாக நடமாடிக்கொண்டு திரிவதினால், நகரத்திலுள்ள சுகாதாரம் மிகவும் கெட்டுப்போகிறது என்பதை நாம் அறிவோம். இந்தப் பிணியினால் பாதிக்கப்பட்ட மக்கள் பெக்கர்ஸாக அலைந்து திரிகிறார்கள். ஆகவே, அவர்களை சென்னை நகரத்திலிருந்து அப்புறப்படுத்தி, சென்னை நகருக்கு அருகாமையில் அவர்களுக்குப் பிரத்யேகமான ஒரு நிலயத்தை ஆரம்பித்து, அங்கே அவர்களுக்கு சிகிச்சை முதலிய வசதிகள் செய்து கொடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்று எண்ணுகிறேன். அதே வேளையில் நமது கிராமப் பிரதேசங்களில் எல்லா இடங்களிலும், குக்கிராமங்களிலும் ஒரு சர்வே நடத்தி, இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்கள் இல்லத்திற்குச் சென்று சிகிச்சை செய்யவும், சுகாதார அறிவுரைகளை அவர்களுக்குப் புகட்டவும் வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும். குமரி மாவட்டத்தில் குளச்சல் லெப்பர்ஹோம் சிறந்த முறையில் இந்தத் துறையில் பணியாற்றிக்கொண்டு வருகிறது என்பதை நான் கூற விரும்புகிறேன். அங்கே சுமார் 250 லெப்பர்கள் இருந்து வருகிறார்கள். அங்குள்ள டாக்டர்கள் கிராமப்புறங்களுக்குச் சென்று, இந்த நோயினால் பீடிக்கப்பட்டவர்களின் இல்லங்களுக்குச் சென்று சிகிச்சை அளித்து வருகிறார்கள். குளச்சல் லெப்பர் ஹோமில் பல மாவட்டங்களிலிருந்து ஆட்கள் அங்கு வந்து தங்கி சிகிச்சை பெற்றுக்கொண்டு வருகிறார்கள். ஆனால் சர்க்கார் அவர்களுக்கு அளித்து வரும் உதவித் தொகையானது மிகவும் குறைவு. முன்னால் யுனெஸ்கோ ஸ்தாபனத்திலிருந்து இவர்களுக்கு உதவி கிடைத்து வந்தது. அதை இப்பொழுது நிறுத்திவிட்டார்கள். நமது அரசாங்கத்திடமிருந்து ஒரு நபருக்கு ரூ. 18 என்ற அளவில்தான் அவர்களுக்குத் தற்பொழுது உதவி கிடைத்து வருகிறது. குறைந்தது ஒரு நபருக்கு ரூ. 30 ஆக அதை உயர்த்த வேண்டும் என்று இந்த வேளையிலே கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் மருத்துவச் சிகிச்சைக்கு வேண்டிய வசதிகள் இன்னும் அதிகமாகச் செய்யப்பட வேண்டும். நம்முடைய மாநிலத்தில் வட்டார வளர்ச்சிப் பிரதேசங்களில் ஆரம்ப சுகாதார நிலயங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் 40, 50 இடங்களில்தான் ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலயங்கள் நல்லமுறையில் செயல்படவில்லை என்று நான் தைரியமாகக் கூறமுடியும். முதன்முதலாக இந்த நிலயங்களில் மருந்துகள் வேளாவேளையில் கிடைக்கவில்லை. மேலும், அங்கே கிடைக்கிற மருந்துகள் கையாடப்படுகின்றன என்பதை நானே குற்றச்சாட்டாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அந்த நிலயங்களுக்கு அளிக்கப்படுகிற மருந்துகள் அங்குள்ள சிப்பந்திகளால் நல்ல முறையில் செலவு செய்யப்படாமல், அங்கு மருந்துகள் போய்ச் சேருவதற்கு



முன்னாலே, மருந்துகள் மறைந்து போய்விடுகின்றன அநேக இடங்களில் என்ற குற்றச் சாட்டுகள் வந்துகொண்டிருக்கின்றன. அதற்கான விசாரணையை நடத்தி, நல்ல முறையில் இந்த ஸ்தாபனங்கள் செயல்பட ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதிகமாக மருத்துவ வசதிகள் கிராம மக்களுக்குக் கிடைக்கவேண்டுமானால், அதிகமாக மக்கள் தங்கும் இடங்களில் உள்ள சுகாதார நிலயங்களை ரூரல் ஆஸ்பத்திரிகளாக மாற்றவேண்டும்.

ஆரம்ப சுகாதார நிலயங்களில் இப்பொழுது தடுப்புப் பணிகள்தான் அதிகமாக நடந்துகொண்டிருக்கின்றன. தாய் நலப் பணிகள், குடும்பக் கட்டுப்பாடு திட்ட வேலைகள், இன்னும் பிறப்பு, இறப்புக் கணக்குகள் இந்த வேலைகள்தான் இந்த நிலயங்களில் அதிகமாக நடந்துகொண்டிருக்கின்றன. ஆனால், வியாதிகளினால் பீடிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்குப் பயன்படவில்லை. முக்கியமாக ஒவ்வொரு வட்டார வளர்ச்சிப் பகுதியிலும், அதிக நெருக்கமாக ஜனங்கள் உள்ள இடங்களில், வியாதியினால் பீடிக்கப்பட்ட மக்கள் நல்ல முறையில் சிகிச்சை பெற வேண்டுமானால், டாலுக் ஹெட்குவார்ட்டர்ஸ் ஹாஸ்பிடல் அல்லது டிஸ்ட்ரிக் ஹெட்குவார்ட்டர்ஸ் ஹாஸ்பிடலுக்குப் போகவேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த ஆரம்ப சுகாதார நிலயங்களை ரூரல் ஆஸ்பத்திரிகளாக மாற்றவேண்டும், அப்படிச் செய்தால் மக்களுக்கு எளிதில் மருத்துவ வசதி கிடைக்கும். ஆகவே, அதிகமான அளவுக்கு மக்கள் சிகிச்சை பெறுவதற்கு, இந்த நிலயங்களை ரூரல் ஆஸ்பத்திரிகளாக மாற்ற வேண்டியது மிகவும் அவசியம் என்பதை வற்புறுத்திக் கூறிக்கொள்கிறேன். குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கருங்கல் ஆரம்ப சுகாதார நிலயம், இடைக்கோடு ஆரம்ப சுகாதார நிலயம், செம்மான்விளை ஆரம்ப சுகாதார நிலயம் இவைகளை ரூரல் ஆஸ்பத்திரிகளாக மாற்ற வேண்டும். அங்கெல்லாம் ஜனத் தொகை நெருக்கமாக இருக்கிறது. அந்த மக்களுக்கு நல்லவிதத்தில் மருத்துவ வசதி கிடைக்கவேண்டுமென்றால், சர்க்கார் இதை அவசியம் கவனிக்க வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன். மற்ற மாவட்டங்களிலிருந்தும் அவ்வண்ணம் கோரிக்கைகள் இருக்கின்றன. அவைகெல்லாம் ஆரம்ப சுகாதார நிலயங்களை ஆஸ்பத்திரிகளாக மாற்றி அமைத்தால் நலமாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

அடுத்தபடியாக, கிராமப் பிரதேசங்களுக்கு டாக்டர்கள் போவதற்கு அதிகமாக விரும்புவதில்லை. அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. ஒரு டாக்டர் பட்டணத்தில் படித்துப் பட்டம் பெறுவதற்கு ரூ. 32 000 செலவாகிறது என்றும், கிராமக் கல்லூரிகளில் படிப்பதற்கு ரூ 21,000 செலவாகிறது என்றும் கூறப்படுகிறது. ஆனால், இவர்கள் கிராமப் பிரதேசங்களுக்குப் போவதற்கு என் விருப்பம் இல்லை என்பதற்கான காரணங்களை ஆராயவேண்டும். அவர்கள் பட்டணத்தில் படித்ததற்குப் பின்னால், 10 வருஷம் கழித்து திடீரென்று கிராமங்களுக்குச் சென்று வேலை செய்யவேண்டும் என்று கேட்பதும் சரியில்லை. கிராமப்புறங்களில் அவர்களுக்கு அதிகமாக வசதிகள் இல்லை. படித்துப் பட்டம் பெற்றவுடனேயே கிராமப் பிரதேசத்தில் இரண்டு வருடம் பணியாற்றவேண்டும் என்று சொல்வதை விட, அவர்களை டிஸ்டிரிக் ஹெட்குவார்டர்ஸ் ஆஸ்பத்திரிகளில் 3, 4 வருஷங்களுக்கு வேலை பார்க்கச் செய்துவிட்டு, அப்படி அவர்கள் வேலை பார்த்த பிறகு, நல்ல பக்குவம் அடைந்து நல்ல தேர்ச்சி அடைந்த பிறகு, கிராமப் பிரதேசங்களுக்கு அவர்களை அனுப்பினால் அவர்கள் நல்ல முறையில் கிராம மக்களுக்கு சேவை புரிவார்கள் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். டிஸ்டிரிக்ட் ஹெட்குவார்டர்ஸ் ஆஸ்பத்திரியில் நல்ல தேர்ச்சி பெற்ற பிறகு, அவர்கள் கிராமப் பிரதேசங்களுக்குச் சென்றால் அவர்கள் நல்ல முறையில் இயங்கி, பணியாற்றுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. அவ்வண்ணம் அவர்களை முதலில் டிஸ்ட்ரிக்ட் ஹெட்குவார்டர்ஸ் ஆஸ்பத்திரிகளில் இரண்டு மூன்று வருடங்களுக்கு நியமித்துவிட்டு, அதற்குப் பிற்பாடு கிராமப் பிரதேசங்களுக்கு அவர்களை அனுப்பினால், நலமாக இருக்கும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அத்துடன் இந்த டாக்டர்களுக்கு சம்பளம் மிகவும் குறைவு என்று சொல்ல விரும்புகிறேன். தனிப்பட்டவர்கள் நடத்தும் ஆஸ்பத்திரிகளில் வேலை செய்யும் டாக்டர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. தனிப்பட்ட முறையிலே தொழில் நடத்துகிற டாக்டர்களுக்கு அதிக வருமானம் கிடைக்கிறபோது 10 வருடம் படித்து எம். எஸ்., எம். டி. பட்டம் பெற்றவர்கள் இவ்விதம் 350 ரூபாய் சம்பளம் பெறுவது மிகவும் குறைவு. அவர்களுக்குக கொடுக்கப்பட்டு வருகிற சம்பளம் மிகவும் குறைவு என்பதை எடுத்துச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் படிப்புக்கு ஏற்ற மாதிரி 700 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படவேண்டும், இன்னும் மற்ற வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும். எம்.பி.,பி.எஸ். படித்த டாக்டர்களுக்குக் குறைந்த பட்சம் 500 ரூபாயாவது சம்பளம் கொடுக்கப்படவேண்டும். மருத்துவமனைகளில் வேலை பார்க்கும்போது Private Practice நடத்த அனுமதிக்கக்கூடாது. அவர்கள் அதிக அக்கறையோடு செயலாற்ற வேண்டுமென்றால் அவர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்கப்படவேண்டியது அவசியம். இதைப்பற்றிச் சர்க்கார் கவனிக்க வேண்டும்.

ஆரம்பச் சுகாதார நிலையங்களில் போதுமான டாக்டர்கள் இல்லை. இந்த ஆஸ்பத்திரிகளுக்கு வேண்டிய எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் கிடைப்பதில்லை. ஆகையால் L. M. P. Course ஆரம்பித்து எல். எம். பி. படித்த டாக்டர்களை இந்த ஆஸ்பத்திரிகளுக்கு நியமிக்க வேண்டும். கிராம ஆஸ்பத்திரிகளுக்கு வேண்டிய டாக்டர்கள் கிடைக்க வேண்டுமானால் எல். எம். பி. படிப்பு முறையை மீண்டும் கொண்டு வந்து அதிக அளவில் வைத்தியர்கள் கிடைக்க இந்த அரசு வகை செய்யவேண்டும். எல்.எம்.பி. டாக்டர்களை கிராம ஆஸ்பத்திரிகளுக்கு நியமித்து அவர்களுக்குக் கிராமப் பிரதேசத்தில் குடும்ப நலத் திட்டங்களை மற்றும் சிறு சிறு திட்டங்களை நடதத அதிகாரம் அளிக்கப்படுமானால் நிச்சயம் மருத்துவ வசதி பெருக வாய்ப்பு உண்டு.

தாலூகா ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரி நிலைமைகளைப் பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் குழித்துறையில் விளவங்கோடு தாலூகாவில் ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரி இருக்கிறது. அந்த ஆஸ்பத்திரிக்கு நல்ல கட்டடங்கள் கிடையாது. குறைந்தது 50 படுக்கைகளாவது இருக்க வேண்டும். தாலூகா ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிகளில் எக்ஸ்ரே வசதியும், நோய்களைச் சரியான முறையிலே கண்டு அறிவதற்கான மற்ற வசதிகளும் ஏற்படுத்தப்படவேண்டும். குழித்துறை ஆஸ்பத்திரியை விஸ்தரிக்க இடம் போதவில்லை என்றால், 2, 3 நிலைக் கட்டிடங்கள் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டும். அருமனை ஆஸ்பத்திரி, தக்கலை ஆஸ்பத்திரி, குலசேகரம் ஆஸ்பத்திரி இவைகளையும் விஸ்தரித்து எக்ஸ்ரே முதலிய அமைப்புகள் ஏற்படுத்தித்தர இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மலேரியா ஒழிப்பு இலாகாவிலே சுமார் 4 ஆயிரம் பணியாளர்கள் வேலை செய்து வந்தார்கள். அவர்கள் வெறும் கூலிக்காரர்களாக நடத்தப்படுகிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான பணி உத்தரவாதமும் இல்லை, அவர்கள் 10 ஆண்டு காலம் வேலை பார்த்து இருக்கிறார்கள். ஆனால் இன்னும் நிரந்தரமாக்கப்படவில்லை. எனவே அவர்களை நிரந்தரமாக்குவதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

• **திரு. எஸ். முருகையன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொது சுகாதாரம், மருத்துவம் ஆகியவற்றிற்குச் செலவு செய்வதற்கு 26 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்படவேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். மக்களுடைய ஜனத்தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப இந்த





மானியம் வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். இந்தத் தொகை உயர்ந்துகொண்டே போனாலும், மக்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகளெல்லாம் உரிய காலத்தில், உரிய இடத்தில் கிடைப்பதற்கு ஏற்ப வேண்டிய ஏற்பாடுகளைப் பல வகையிலே அரசு செய்திருக்கிறது. பொதுவாக இந்த மானியக் கோரிக்கையைப் பார்க்கும்போது நோய்க் குறைப்பிற்கு அதிகமாகச் செலவிடவும், நோய்த் தடுப்பிற்குக் குறைந்த அளவு செலவு செய்யவும் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் இதே நிலையில் வந்துகொண்டிருக்கிறது. நோய்த் தடுப்புக்கு எவ்வளவு செலவு செய்கிறோமோ அதைவிடக் குறைவாக நோய்க் குறைப்புக்குச் செலவு செய்தால்தான் நோய் இல்லாமல் சுமுகமாக வாழ்கின்ற நிலை ஏற்படும். இதைப் போன்ற ஒரு நல்ல திட்டத்தை உருவாக்க வேண்டும். நோய்த் தடுப்புக்கு நாம் அதிகமாகச் செலவு செய்துகொண்டே போனால் அது மக்களுடைய தேவைக்கு ஏற்ப அதிகமாகிக்கொண்டே போகும். ஆனால் அதனால் நன்மை ஏற்படுமே தவிர அதற்காகச் செலவு செய்த பணம் வீணாகாது. இதை விட்டு விட்டு நோய்க் குறைப்பிற்காக நாம் அதிகச் செலவு செய்தால் அந்தத் தொகையெல்லாம் வீணான முறையிலே போய்க்கொண்டிருக்கும். ஆகையினாலே நோய்த் தடுப்புக்கு எவ்வளவு தொகை செலவு செய்கிறோமோ அதைவிடக் குறைவாக நோய்க் குறைப்பிற்கு செலவு செய்ய வேண்டும் என்று ஒரு வரையறையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒவ்வொரு உறுப்பினரும் 5 நிமிடத்திற்குமேல் எடுத்துக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிக உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் 5 நிமிடத்திற்கு மேல் எடுத்துக்கொள்ளாமல் இருந்தால்தான் $1\frac{1}{2}$ மணிக்குள் முடிக்க முடியும். எனவே ஒவ்வொரு உறுப்பினரும் 5 நிமிடத்திற்குமேல் எடுத்துக் கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். முருகையன்:** மக்களுடைய நோய்த் தடுப்புக்கு அதிகமாகச் செலவு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் இன்று மருத்துவக் கல்லூரிகளை அரசு பல இடங்களிலும் நிறுவிக்கொண்டு வருகிறது. செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு நல்ல பயிற்சி பெறுவதற்கான வசதி இல்லாமல் பல மாணவர்கள் தொல்லைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய குறையை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு வேண்டிய நல்ல சாதனங்கள் நல்ல முறையிலே கிடைப்பதற்கு வகை செய்ய வேண்டும். அப்படியில்லை என்றால் செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியை சென்னைக்கு மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியை சென்னைக்கு மாற்றிவிடவேண்டுமென்று சொல்கிற காரணம் அங்கு போதுமான வசதிகள் இல்லை என்பதுதான். அங்கு படிக்கக்கூடிய மாணவர்கள் நன்கு படித்து சிறந்த டாக்டர்களாக ஆவதற்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆஸ்பத்திரிகளில் மருந்து கலப்பவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எந்தவிதமான பதவி உயர்வும் பெற வழியில்லாத நிலையில் இருந்து கொண்டு இருக்கிறார்கள். பத்து ஆண்டுகள் சேவை செய்து இருந்த போதிலும் அவர்கள் மேல்பதவிகளுக்குப் போக வாய்ப்பு இல்லை. எனவே அரசாங்கம் அவர்கள் பிரச்னையை மிகவும் அனுதாபத்துடன் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் எலத்தூர் கிராமத்தில தொழுநோய் ஆஸ்பத்திரி 10 ஆண்டு காலம இயங்கி வந்தது. சென்ற புயலின்போது அது போளூருக்கு மாற்றப்பட்டு 4, 5 ஆண்டுகளாக போளூரில் செயல்பட்டுக் கொண்டு வருகின்றது. இன்னும் எலத்தூருக்கு அது மாற்றப்படவில்லை. 2 லட்சம் ரூபாய் வரையில் செலவு செய்து எலத்தூரில் கட்டிடம் கட்டப்

[திரு. எஸ். முருகையன்] [1970 மார்ச் 30

பட்டிருக்கிறது. போளூரில் சிறிய கட்டிடத்தில் அதை வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் எந்தக் காரணத்திற்காகத் தொழு நோய் ஆஸ்பத்திரி கட்டப்பட்டதோ அந்தக் காரணத்தைக் கணக்கில் எடுக்காமல் இன்னும் போளூரிலேயே இந்த ஆஸ்பத்திரி நடைபெற்றுக் கொண்டு வருகிறது. தொழுநோய் உள்ளவர்கள் அதிகமாக அந்தப் பகுதியில் இருக்கிறார்கள் என்ற காரணத்தினால்தான் அங்கே இந்த ஆஸ்பத்திரி ஏற்படுத்தப்படவேண்டுமென்று பத்து ஆண்டுகளுக்கு முன்பு அங்கே இந்த ஆஸ்பத்திரி ஏற்படுத்தப்பட்டது. இதைப் பல முறை பல அதிகாரிகளிடத்தில் எடுத்துச் சொல்லியும் இன்னும் அதைப் பற்றிக் கவனிக்காமலேயே இருக்கிறார்கள். இந்த ஆஸ்பத்திரியைப் போளூரிலிருந்து உடனடியாக எலத்தூர் கிராமத்திற்கு மாற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி டவுன் பஞ்சாயத்துக்களில் உள்ள மருந்தகங்களை உடனடியாக அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். ஏனென்றால் பஞ்சாயத்து ஒன்றியத்திலிருந்து வருடம் ஒன்றிற்கு ரூ. 5 ஆயிரம் கொடுக்கிறார்கள். இந்த 5 ஆயிரம் ரூபாய் டவுன் பஞ்சாயத்து மருந்தகங்களுக்குப் போதவில்லை. உடனடியாக இதைப் போன்ற மருத்துவ மனைகளையெல்லாம் அரசாங்கமே மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தொற்று நோய்களான, காலரா முதலியவை இப்போது குறைந்து கொண்டு வருகின்றன. இருந்தாலும் திடீரென்று ஒரு கிராமத்தில் காலரா ஏற்படுகிறது. அந்த நேரத்திலே அங்கு உள்ள சுகாதார இலாகா சிப்பந்திகள் உடனடியாக அவர்களுக்குத் தேவையான மருந்துகளை எடுத்துக் கொண்டு போவதற்கு முடிவதில்லை. இவர்கள் காலரா ஏற்பட்ட பகுதிகளுக்குச் செல்லுவதற்குள் 10, 15 பேர் இறந்து விடுகிறார்கள். அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகைக்கு அவர்கள் மருந்து வாங்கிக்கொள்ள அதிகாரம் கொடுத்துப் போதுமான அளவிற்கு மருந்தைத் தயாராக வைத்து இருக்குமாறு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பல கரங்களில், குறிப்பாக திருவண்ணாமலையில் சுகாதார அதிகாரிகள் இல்லாமல் இருக்கிறது. நான்கு, ஐந்தாண்டுகளாகக் கவனம் செலுத்த வில்லை. அரசாங்கம் இதிலே கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு 15 ஆண்டுகளாகியும் இன்னும் சரிவர கிராமங்களிலே செயல்படுவதில்லை என்பதை சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். என்னுடைய தொகுதியில் கடலாடி ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தப்பட்டு சிப்பந்திகளுக்கான கட்டிடம் கட்டப் பெற்று இருக்கிறது. ஆனால் சுகாதார நிலையத்திற்கான கட்டிடம் கட்டப் பெறவில்லை. இது உடனடியாகக் கட்டப்பெறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருவண்ணாமலையில் போதிய பாதாள சாக்கடைத் திட்டம் ஆரம்பிக்க வேண்டும். ஏனென்று சொன்னால் அங்கு கொசுத் தொல்லை அதிகமாக இருக்கிறது. அதுவும் திருவிழா அதிகம் நடக்கிற காரணத்தினால் அங்கு உடனடியாகப் பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். கிராமங்களில் வைத்திய வசதி நல்ல முறையிலே கிடைக்க வழி செய்யவேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த மருத்துவம், பொது சுகாதார மானியங்களின்மீது ஒரு சில வார்த்தைகளைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சிதம்பரத்தில் எல்லாக் கல்லூரிகளும் இருக்கின்றன. ஆனால் ஒரு மருத்துவக் கல்லூரி அங்கு இல்லை. அதற்குத் தகுந்த தளவாட சாமான் இல்லை என்று சொல்லலாம். எல்லாக் கல்லூரிகளும் இங்கு இருந்தும்



1970 மார்ச் 30] [திரு. எஸ். சிவசுப்பிரமணியன்]

இதற்கு மட்டும் தளவாட சாமான் இல்லை என்று சொன்னால் அதை நாம் நிச்சயம் ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே உடனடியாக ஒரு மருத்துவக் கல்லூரியை அங்கு அமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிதம்பரம் அரசாங்க மருத்துவ மனையில், ஏராளமான மக்கள் வருகின்றனர். இரண்டு டாக்டர்கள் இருக்கிறார்கள். இன்னொரு டாக்டர் போட்டால் நலமாக இருக்கும். அது மாத்திரமல்ல, 100 படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரியாக அதை மாற்றவேண்டும் என்று கேட்டுக் கொண்டு வருகிறேன். சாங்ஷன் ஆகி இருப்பதாகவும் தெரிகிறது. அதைப் பரிசீலனை செய்து, 100 பெட்டுகள் கொண்ட ஹாஸ்பிடலாக அதை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மருந்தே கிடையாது. சில ஆஸ்பத்திரிகளில் மருந்து கிடைப்பதே இல்லை. என்ன காரணம் என்று தெரியவில்லை. பேஷண்ட்ஸ் ஏழைகளாக இருப்பதால், மருந்து இல்லை என்று டாக்டர்கள் எழுதிக் கொடுத்தால், அவர்கள் வெளியில் போய்க் கேட்கும்போது, மருந்து ஒன்று 3, 4 ரூபாய் என்று இருக்கிறது. அவர்களால் வாங்க முடியவில்லை. அதற்கு ஒரு நல்ல நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏழைகளுக்கு மருந்துகள் கொடுக்க வழி ஏற்படுத்த வேண்டும். காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில், காயம் கட்டுத் துணிகள் வெள்ளை வெளேர் என்று நன்றாக இருந்தது. இப்பொழுது அப்படியில்லை.....

நெய்வேலியில் ஒரு கார்ப்பரேஷன் ஹாஸ்பிடல் இருக்கிறது. அங்கே வேலை செய்கிறவர்களுடைய மனைவி, மக்கள் போனால் தான் வைத்தியம். வேலை செய்யாதவர்களின் மனைவிமார்கள் போனால் 50 ரூபாய் பணம் கொடு என்கிறார்கள். இல்லாவிட்டால் ஆஸ்பத்திரியில் சேர்க்க முடியாது என்கிறார்கள். 50 ரூபாய் கட்ட முடியாமல் ஏழைகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அந்த இடத்தில் நம்முடைய சர்க்கார் ஒரு ஆஸ்பத்திரியை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த ஹாஸ்பிடல் பக்கத்திலேயே வைக்க வேண்டும்.

மற்றும் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் உத்தரவுப்படி 9 மாதம் ஹவுஸ் சர்ஜன் பதவியிலிருந்தால் போதும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு. பழைய உத்தரவுப்படி 176 சீட்டுகள் ஒதுக்கப்பட்டிருந்தன. அதில் 137 இடங்களில் தான ஆதி திராவிட மக்கள் இருக்கிறார்கள். மீதி இடம் 39 இருக்கிறது. அந்த இடத்தைப் பூர்த்திசெய்யத் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 6 மாதம் ஹவுஸ் சர்ஜனாக இருந்தால் போதும் என்று, அவர்கள் அழைக்கப்பட்டு அந்த இடங்களைப் பூர்த்தி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று சீட்டுகள் காலியானால் அவற்றைத் தாழ்த் தப்பட்டவர்களைக் கொண்டே நிரப்ப வேண்டும். ஜெனரல் ஆஸ்பத்திரியில் மொத்தம் 200 டாக்டர்கள் இருக்கிறார்கள். அவர்களில் 4, 5, 6 பேர்கள் தான் ஆதித் திராவிட மக்கள். அவர்களுடைய விகிதாசாரப்படி கொடுக்க வேண்டும்.

ஜெனரல் ஆஸ்பத்திரி (ஜி.எச்.) யில் நர்ஸுகள் போதாது ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள். அதிகமான நர்ஸுகளைப் போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சில வார்டுகளில் கொடுக்கக் கூடிய இட்டிலி, இரண்டு இட்டிலிதான். பாக்கியை அங்கேயே விற்றுவிடுகிறார்கள். பால் அளவுப்படி கொடுப்பதில்லை. அங்கேயே ஸ்டவ்வை வைத்துக்கொண்டு காபி போட்டு 15 பைசாவுக்கு விற்கிறார்கள். இங்கே அதிகாரிகள், டாக்டர்கள், அமைச்சர் இருக்கிறார்கள். இதையெல்லாம் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏழை எளியவர்களுக்குக் கொடுக்க வேண்டிய சாமான்கள் திருட்டுப் போகின்றன. அதைப் பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மலம் எடுக்கும், கூட்ட வரும், தூர் வாரும் நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி கிடையாது, சம்பள வசதி போதாது, பர்மனென்ட் ஆகவில்லை. இவற்றையெல்லாம் சரிசெய்ய வேண்டும்.

[திரு. எஸ். சிவசுப்பிரமணியன்] [1970 மார்ச் 30

ஜெனரல் ஆஸ்பத்திரியில் வேலை செய்யக்கூடிய, மலம் எடுக்கும், கூட்டும், பிணம் தூக்கும், ஆள் தூக்கும், இடம் துடைக்கும் தொழிலாளர்கள் அத்தனைபேரும் தாழ்த்தப்பட்டவர்கள்தான். அவர்களுக்குச் சம்பளம் போதவில்லை. அதை கவனிக்க வேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன். வணக்கம்.

(மணியடிக்கப்பட்டு திரு. கிருஷ்ணன், டாக்டர் ஹாண்டே ஆகியவர்கள் அழைக்கப்பட்டபோது இருக்கையில் இல்லை.)

*திரு. மூ. மாரிமுத்து : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் கொண்டுவந்துள்ள, சுகாதாரம், மருத்துவம், நீர் வழங்கல், கழிவு நீர் அகற்றல் போன்ற மானியங்களை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

கழக ஆட்சி வந்த பிறகு பல திட்டங்கள் செயல்பட்டிருக்கின்றன. குறிப்பாக எங்கள் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் தலைவாசலில் ஆரம்பிக்கப்பட்டு, சுமார் 40,000 மக்கள் அதன் மூலம் பயன் பெறுகிறார்கள். அதைப் போன்றே, கெங்கவல்லியில், ஆரம்ப சுகாதார நிலையம் இருப்பதோடு, அங்கே குடும்பக் கட்டுப்பாடு பகுதியும் ஏற்படுத்தி அந்தத் திட்டத்தின் மூலம் ஒரு பெண் மருத்துவ அதிகாரியும் நியமனம் செய்யப்பட்டு, பணி புரிந்து வருகிறார்கள். தம்மம்பட்டியில், ஊராட்சி ஒன்றியத்தின் மருத்துவ மனையை அரசு ஏற்று நடத்தும் ஒரு திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கும் நிலையில் இருக்கிறது என்று நினைக்கிறேன். நல்ல திட்டங்கள் பலவற்றை அரசு இப்படிச் செய்து வருகிறார்கள். நம் அரசு மேற்கொண்டு செயல்படுவதன் காரணமாகக் கிராம மக்களுக்கு நல்லதொரு சுகாதாரமும், மருத்துவ வசதியும் செய்யப்பட்டு வருகிறது. அதேபோன்று, நடப்பு ஆண்டில் சுமார் 603 பெட்டுகள் மருத்துவ மனையில் அமைக்கவும், 10 அரசு புதிய மனைகள் துவக்கவும், 5 எக்ஸ்ரே நிலையங்கள், 3 காசநோய் மருத்துவ மனைகள் துவக்கவும் திட்டங்களை வகுத்து மக்களுக்கு நடைமுறையில் நன்மைகள் செய்ய இந்த ஆண்டு மானியக் கோரிக்கையில் இடம் பெற்றுள்ளது. நல்ல திட்டங்களை வகுத்து மானியங்கள் வந்துள்ளன. இந்த நிதி நிலை அறிக்கையில் உள்ளவற்றைப் பாராட்டி வரவேற்கிறேன்.

என்னுடைய பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வேண்டிய கட்டிடங்களை வசதி செய்து கொடுக்கவும், அதே போன்று தம்மம்பட்டியில் புதிதாக அரசு மேற்கொள்ள இருக்கும் மருத்துவ மனையை விரைவில் ஏற்றுக்கொண்டு செயல்படவும், ஆத்தூரில் 40 பெட்டுகள் கொண்ட ஒரு கட்டிடம் அமைப்பதற்கும், எக்ஸ்-ரே நிலையத்தை அமைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று, எல்லா மாவட்டங்களிலும் மருத்துவக் கல்லூரிகள் இருந்தும், என்னுடைய மாவட்டமாகிய சேலம் மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி கிடையாது. அதை அமைத்துக் கொடுக்க நம் அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தத் துறையில் பணி புரியும் மருந்து கலப்பாளர் ஊதியத்தை, மற்றவர்கள், குறிப்பாக ஹெல்த் இன்ஸ்பெக்டர், ஹெலத் விசிட்டர், மற்றவர்கள் போன்று அவர்களுடைய ஊதியத்தையும், பயிற்சிக்குத் தக்கவாறு, 125 அளவிலாவது அமைக்கும் நிலையில் ஆவன செய்யவேண்டும் என்று கூறி, பேச வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

*திருமதி கே. பி. ஜானகியம்மாள் : தலைவர் அவர்களே, மருத்துவ மானியக் கோரிக்கையின் மீது பேச விரும்புகிறேன். இன்றைக்கு மெடிகல் காலேஜ்களில் பெண்கள் குறைந்தபட்சம் 50% எடுக்கப்படவேண்டும். அவர்களுக்கு அந்த வகையில் கல்லூரிகளில் இடம் ஒதுக்குவது எதிர்காலத்திற்கு உதவியாக இருக்கும். அடுத்தது என்.ஜி.ஜி.ஓ.-களுக்கு, தமிழ்நாடு



1970 மார்ச் 30] [திருமதி கே. பி. ஜானகியம்மாள்]

முழுவதிலும் இருக்கிற அரசினர் ஊழியர்களுக்கு, இ.எஸ்.ஐ. தொழிலாளர்களுக்கு கார்டு வழங்குவதுபோல், ஒரு அடையாளக் கார்டு வழங்கினால், கடுமையான வியாதி இருக்கும்போது, முன்பணம் கொடுப்பது என்ற கவலையில்லாமல் சிகிச்சை பெற வாய்ப்பாக இருக்கும். பின்னால் பணம் வாங்கிக் கொள்ளலாம். ஆகவே அடையாளக் கார்டு கொடுப்பது உதவியாக இருக்கும்.

அடுத்தபடியாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையில் தொழுநோய் தமிழகம் பூராவிலும் பரவி வருகிறதென்றும், 30 சதவீதம் அளவு தமிழகத்தில் இருக்கிறது என்றும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்காக விசேஷமான நிலைமைகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கற்பட்டில் தொழுநோய் மருத்துவமனை இருக்கிறது. அங்கே இருக்கின்ற ஆர்.எம்.ஓ. அவர்கள் அங்கு வேலை செய்கின்ற சிப்பந்திகளையெல்லாம் 'பை-லா' 9-வது விதியை வைத்துக்கொண்டு பயமுறுத்துவதாகத் தெரிகிறது. சிப்பந்திகளையெல்லாம் கொடுமைப்படுத்துவதாகத் தகவல் வந்திருக்கிறது. மேலும் அங்கிருக்கிற ஸ்டாஃப் நர்ஸுகளுக்குக்கூட கொடுமை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை உடனடியாகக் கவனித்துத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய குஷ்டரோகப் பயிற்சி ஆராய்ச்சி நிறுவனம் மூன்றும் வகுப்பு, நான்காம் வகுப்பு ஊழியர்கள் சங்கம் ஒன்று ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்களுடைய குறைகளையெல்லாம் அனுப்பியிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளைக் கவனித்துத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மலேரியா ஒழிப்புப் பணியாளர்கள் அடிப்படைச் சுகாதார ஊழியர்கள் சங்கம் அமைத்திருக்கிறார்கள். அடிப்படைச் சுகாதார ஊழியர்கள் தங்களுடைய குறைகளை எடுத்துக் கூறுகிற நேரத்தில் டிவிஷன் சுகாதார அதிகாரி அவர்கள் 'நீங்கள் சங்கம் வைக்கக்கூடாது, கோரிக்கைகளை அனுப்பக்கூடாது, மாநாடு நடத்தக்கூடாது, உங்களுடைய சாமான்களை நீங்களே தயாரித்துக்கொள்ள வேண்டும். காக்கி உடுப்புகளைக் கூட சொந்தச் செலவிலே வாங்கிக்கொள்ளவேண்டும்' என்றெல்லாம் சொல்லி அவர்களைப் பயமுறுத்தி வருகிறார்கள். சிப்பந்திகளைப் பயமுறுத்துவதும், அடிக்கடி வெளியூர்களுக்கு மாற்றுவதுமான பல கொடுமைகள் நடந்து வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஜனநாயக நாட்டில் சங்கம் வைத்துக்கொள்வதற்கும், கோரிக்கைகளை வற்புறுத்துவதற்கும்கூட உரிமையில்லாமல் பல கொடுமைகள் நடந்துவருவதைத் தடுத்து நிறுத்த வேண்டும். அந்தச் சங்கத்திற்கு நமது சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர். நாகசுந்தரம், எம்.எல்.ஏ. அவர்கள்தான் தலைவர் என்று அறிகிறேன். அரசு இந்த நிலைமைகளையெல்லாம் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, 1969-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 7-ம் தேதியன்று, தஞ்சை ராஜா மிராசுதார் மருத்துவமனையில் சூப்பிரண்டெண்ட் பரிசோதனை செய்த நேரத்தில் கண் சிகிச்சைக்குப் பயன்படுத்தும் 'கொக்கென்' 20 பாட்டில்கள் காணவில்லையென்று கண்டுபிடிக்கப்பட்டது. அதற்கு சீஃப் பார்மஸிஸ்ட் தான் பொறுப்பாக இருந்தார். அந்த மருந்து பாட்டில்கள் எங்கே போய்விட்டன என்று டாக்டர்கள் தேடினார்கள். அவை வெளியிலே அபின் சாப்பிடக்கூடியவர்களுக்கு விற்கப்பட்டிருக்கின்றன. அந்த மருந்துகள் 5 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ளவை. இந்தக் கேஸை சூப்பிரண்டெண்ட் அவர்களே கண்டுபிடித்துங்கூட, அதன்பேரில் தக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அது கவனிக்கப்பட வேண்டிய விஷயம். அரசு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

[திருமதி கே. பி. ஜானகியம்மாள்] [1970 மார்ச் 30

அடுத்தபடியாக, நாகபட்டினத்தில் தஞ்சை ஜில்லா மருத்துவமனை இருக்கிறது. அங்கு மிகப் பெரிய அளவிற்கு ஒழுகல். அங்கு செல்வதற்கு நல்ல தார் ரோடு கிடையாது. அங்கு தண்ணீர் வசதியில்லை. அங்குள்ள நிலைமை மிகமிகக் கேவலமாக இருக்கின்றது. இதற்குப் பெயர் தான் 'ஜில்லா மருத்துவமனை' என்று இருக்கிறதே தவிர, ஒருவித வசதியும் இல்லை. அரசு இதைக் கவனித்து தக்க ஏற்பாடுகளை உடனடியாகச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மதுரை மாவட்டத்தில் திருமங்கலத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் எக்ஸ்ரே நிலையம் கட்டுவதுபற்றி அறிக்கையில் குறிப்பு உள்ளது. இதைத் துரிதமாகக் கட்டித் தரவேண்டும். மேலும் அங்கே காலரா ஷெட் வைக்கவேண்டும். சாத்தூர் பகுதியில் சமீபத்தில் காலரா பரவி இருந்தது. வெயில் அடித்தும்; மழையில் நனைந்தும் இருக்கக்கூடிய நிலைமை, இதனால் தொத்து நோய் பரவக்கூடிய நிலைமை இருக்கிறது. மேலும் இங்கு ஆண்டு ஒன்றுக்கு 50 ஆயிரம் ரூபாய் அளவிற்குத் தான் மருந்து வாங்கப்படுகிறது. இதை 75 ஆயிரம் ரூபாய் என்ற அளவிலே உயர்த்தினால் ஏழை மக்களுக்குப் பயன்படும். இங்கு அதிகமான ஏழை மக்கள் சிகிச்சை பெறுவதால் இவர்களுக்கு உதவி செய்வதன் பொருட்டு அதிகமான மருந்தை வாங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் அங்கு பணியாற்றும் நர்ஸுகளுக்கு வீடுகள் கிடையாது. நர்ஸுகள் வெளியிடங்களில்தான் குடியிருக்கிறார்கள். ஆகவே, நர்ஸுகளுக்கு வேண்டிய குடியிருப்பு வசதிகளையும் செய்து கொடுக்கவேண்டும். சென்னைக்கு அடுத்தப்படியாகச் சிறந்து விளங்குவது மதுரை நகரம். இங்குள்ள டி. பி. சானடோரியத்தில் 100 படுக்கைகள்தான் தற்போது உள்ளன. தமிழகம் முழுவதற்குமாக 3,351 படுக்கைகள்தான் டி. பி.க்காக உள்ளனவென்று அறிக்கையில் குறிப்பிட்டு இருக்கின்றது. சுமார் 3½ கோடி மக்கள் வாழும் தமிழகத்திற்கு இவ்வளவு குறைந்த படுக்கைகள் இருப்பது மிக மிகக் குறைவு. டி. பி.யைப்பற்றித் தெரியாதவர்கள் யாரும் இல்லை அப்படிப்பட்ட கொடிய நோய். ஆகவே மதுரையில் இருக்கும் டி. பி. மருத்துவமனையில் 500 படுக்கை வசதிகளையாவது செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நகரில் இருக்கக்கூடிய மருத்துவ மனையில் அவசர கேஸ்களுக்காக 25 படுக்கைகள்தான் இருக்கின்றன. இந்த அளவை 100 படுக்கைகள் என்ற அளவில் உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையில் இ.என்.டி. டிபார்ட்மெண்ட் இருக்கிறது. காது பரிசோதனை செய்யக்கூடிய இடத்தில் சுமார் 6 மாதங்களுக்கு முன் ஒரு சிப்பந்தி ஒரு பெண்ணிடத்தில் தகாத முறையில் நடந்துகொண்டார் என்பதைக் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ரிப்போர்ட் செய்யப்பட்டது. என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது தெரியவில்லை. மீண்டும் 15—3—70-ல் நாகம்மாள் என்ற பெண்ணிடத்தில் ஒரு டாக்டர் ஆபாசமாகவும்; தவறாகவும் நடந்து கொண்டார் என்ற குற்றச்சாட்டு வந்திருக்கிறது. இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் அந்த இலாகாவிலிருந்து மட்டும் ஏன் வருகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணர்ந்து பார்த்து, அதைத் தடுத்து நிறுத்த துரித முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை நகர ஆஸ்பத்திரியில் ஒரு சவக் கிடங்கு இருக்கிறது. யாராவது இறந்துவிட்டால் அந்தக் கிடங்கில் பிணத்தைப் போடுகிறார்கள். பிணத்தின் சொந்தக்காரர் அதை வாங்கிக்கொள்ள வரும்போது, அவர்கள் வெய்யிலிலும், மழையிலும் அகப்பட்டு அவதிப்பட வேண்டியிருக்கிறது. ஆகவே, அவர்களுக்காக ஒரு ஷெட் அமைத்துத்தர ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்து, மதுரை மருத்துவமனை பல் வைத்திய சிகிச்சைப் பிரிவில் குறைந்த செலவில் பல் கட்ட வேண்டும் என்ற விதியிருந்தும் அப்படிச் செய்வதில்லை. இப்படிப்பட்ட விதி இருக்கிறது என்று யாருக்குமே தெரியாது. எங்கேயும் இந்த விதி அமல்படுத்தவில்லை. ஆகவே, இந்த



1970 மார்ச் 30] [திருமதி கே. பி. ஜானகியம்மாள்]

விதியை அமல்படுத்த வேண்டும். வெளியில் தனியாக சிகிச்சை செய்யும் பல் வைத்தியர்கள் அதிக அளவுக்குக் கட்டணம் வாங்குகிறார்கள். நகர ஆஸ்பத்திரியில் குறைந்த கட்டணத்திற்குப் பல் கட்டப்பட்டால் தனி டாக்டர்களுக்கு வருமானம் போய்விடும் என்ற காரணத்தினால்தான் இந்த விதியை அமல்படுத்தாமல் இருக்கிறார்கள். ஆகவே, இதில் எவ்வளவு தூரம் மோசடி நடக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் கவனித்துப் பார்க்கவேண்டும். மருந்துகளை பிணியாளர்களுக்கு சீரான முறையில் கொடுக்க நல்ல வழிவகைகளைச் செய்து கொடுக்கவேண்டும்.

மதுரை மருத்துவமனையில் இரத்த சேமிப்புப் பிரிவு இருக்கக்கூடிய காலத்திலே, தனியாரிடத்திலுள்ள இரத்த சேமிப்பு நிலையத்தார்கள் இரத்தம் சேமிப்புச் செய்கிறார்கள். ஆபரேஷன் காலத்தில் 100 ரூபாய், 150 ரூபாய் கொடுத்து தனியார் மனையில் வாங்க வேண்டியிருக்கிறது. ஏழைகள் வாங்க முடிவதில்லை. ஆகவே, தனியாரிடத்திலுள்ள இரத்த சேமிப்பு நிலையத்தில் இப்படி இரத்தம் சேகரிப்பதைத் தடுக்கவேண்டும். ஆஸ்பத்திரியில்தான் எல்லோரும் ரத்தம் கொடுக்க வேண்டும் என்பதை வற்புறுத்த வேண்டும்.

அடுத்தபடியாக, நகரசுத்தித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மேற்கொள்ளும் வேலை தொத்துநோய்கள் உடனடியாகப் பரவக்கூடிய மோசமான வேலை. அவர்களுடைய வாழ்க்கையை உயர்த்த வேண்டும். அவர்களுக்கு சம்பளம், முதலானவற்றை உயர்த்தித்தர வேண்டும். மூன்று பேர்கள் அடங்கிய ஒரு கமிஷனைப் போட்டு, அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர நல்ல முறையில் வழிவகை செய்யவேண்டும்.

அடுத்து, கோவை நகரில் நான்கு லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். இங்கு குடிதண்ணீர்ப் பிரச்சினை நெருக்கடியாக இருக்கிறது. சிறுவாணி நீர்த்தேக்கத்திலுள்ள சுமார் 50 ஆயிரம் லாரி வண்டல்களை அப்புறப் படுத்த வேண்டும். அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. அந்த வண்டல் மண்ணை அப்புறப்படுத்தி, சிறுவாணி நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீர் பெற வேண்டிய வழிவகைகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த உறுப்பினர் திரு. அ. கிருஷ்ணன் அவர்கள் பேசுவார்கள்.

(உறுப்பினர் திரு. அ. கிருஷ்ணன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லை.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுவதற்குப் பெயர் கொடுத்திருக்கிற உறுப்பினர்கள் பேச அழைக்கப்படும்போது, இருப்பிடத்தில் இல்லையென்றால் அவர்களுக்கு மறுபடியும் வாய்ப்புத் தரப்படமாட்டாது.

அடுத்த உறுப்பினர் திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் பேசுவார்கள்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவம்-பொதுச் சுகாதாரம் என்ற மானியங்களின் மேல் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன்.

"சமூகத்தின் இனிய நலனையும் நல்லுடலையும் பேணிக் காக்கவும், மருந்து அளித்தல் பேணுவதற்கான போதிய வசதிகளை ஏற்படுத்தவும் அரசு பெரும் முக்கியத்துவம் அளித்து வருகிறது" என்ற முறையில் அரசு தன்னுடைய கொள்கையை எடுத்துக் கூறியிருக்கிறது. நம்முடைய நாட்டு மக்களுக்கு ஏற்படுகின்ற பிணிகளைப் போக்குவதற்காக எல்லா மருத்துவ வசதிகளும் அளிக்கப்படும் என்ற முறையில் திட்டங்கள்போட்டு, அத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. இவ்வாறு நிறைவேற்றப்படும்

காலத்தில், அரசாங்கம் கொள்கையளவில் கிராமப்புறங்களில் இருக்கக் கூடிய மக்களுக்கு வேண்டிய வைத்திய, சுகாதார வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும். இன்றைய தினம் நடைமுறையில் பார்க்கப்போனால், மக்கள் பெரிய அளவிலே புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று நான் சொல்லவேண்டும். இதற்குக் காரணம், டாக்டர்கள் எல்லாம் நகர்ப் புறங்களிலேதான் பணியாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் பணியாற்றி கிராமப்புறங்களை ஒதுக்கி வருகிறார்கள். நாட்டின் பெரும்பகுதியாக இருக்கக்கூடிய கிராமப்புற மக்களுக்கு வைத்திய வசதி இல்லாத நிலைமை இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். படித்த பட்டதாரிகள் கிராமங்களுக்குச் சென்று பணி செய்ய முன் வருவதில்லை. கிராமங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளில் டாக்டர்களே இல்லை என்றால் அங்கு சென்று பணி செய்ய யாரும் தயாராய் இல்லை என்று பதில் வருகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கிராமப்புறங்கள் மருத்துவத்தைக் கவனிக்க தனியாகவே ஒரு இலாக் காவையே ஏற்படுத்தினால்தான், கிராம மக்களுக்காக நாம் எவ்வளவு ஒதுக்குகிறோம், எவ்வளவு பயன்படுகிறது என்பதை எல்லாம் பார்க்க முடியும். இதை யோசனை செய்வது நலமாக இருக்கும் என்று நினைக் கிறேன்.

இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் 21 ஆயிரம் படுக்கைகள்தான் இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். லட்சக்கணக் கான மக்கள் படுக்கைகள் இல்லாமல் வியாதியோடு திண்டாடிக் கொண் டிருக்கிறார்கள். நடக்க வழி இல்லாது கீழே படுத்திருக்கிறார்கள். தஞ்சாவூர் மருத்துவ மனையைப் போய்ப் பார்த்தால் படுக்கையில்லாது துண்டை விரித்து கீழேபடுத்திருப்பவர்களைப் பார்க்கலாம். மரத்து நிழலில் படுத்திருக்கிறார்கள். இந்த நிலை மாற்றப்பட வேண்டுமென்றால் இன்னும் ஆஸ்பத்திரிகளை விஸ்தரிக்கும் திட்டத்தை மேற்கொண்டாக வேண்டும்.

அடுத்து, மற்ற சில மாநிலங்களில் அரசாங்கத்தில் பணியாற்றுகிற டாக்டர்கள் தனியாக ப்ராக்டீஸ் செய்யக் கூடாது என்கிற தடை இருக் கிறது. அதுபோல நம் மாநிலத்திலும் தடை விதித்தாக வேண்டும். இன்றைய தினம் நில உச்ச வரம்புச் சட்டத்தை எதிர்க்கின்ற மிராசு தாரர்கள் மகாநாட்டில் கூட டாக்டர்களைத்தான் சுட்டிக்காட்டுகிறார்கள். படித்துப் பட்டம் பெற்ற நான்கைந்து ஆண்டுகளுக்குள் லட்சக்கணக்கில் சம்பாதிக்கிறார்களே, அவர்களுடைய வருமானத்திற்கு உச்சவரம்பு இடையாதா என்கிறார்கள். இன்றைய தினம் நம் மாநிலத்தில் அவர்கள் ப்ராக்டிஸ் செயய அனுமதிப்பதன் காரணமாகத்தான் ஆஸ்பத்திரிகளில் சரியான முறையில் வைத்தியம் செய்யப்படுவது பாதிக்கப்படுகிறது. தங்க ளுடைய சொந்த வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள அவர்கள் பல்வேறு வகையான முறைகளைக் கையாள்கிறார்கள். 3 வருடங்களுக்கு மேல் ஒருவரை ஓரிடத்தில் வைக்கக் கூடாது என்கிற விதி இருந்தும் 5 வருஷம் 10 வருஷங்களாகத் தொடர்ந்து ஒரேயிடத்தில இருக்கிறவர்கள் பலர். அதற்குக் காரணம் என்ன என்று தெரிந்து கொள்ள முடியவில்லை. தஞ்சை பெரிய ஆஸ்பததிரியில் 5 ஆண்டுகளுக்கு மேல் உள்ளவர்களை எனக்குத் தெரியும். அவர்கள் மீதுதான் குறைபாடுகள், குற்றச்சாட்டுகள் எல்லாம் வருகின்றன. அரசாங்கம் யாராக இருந்தாலும்—செல்வ வசதி படைத்தவர்கள் வீட்டுப் பிள்ளையாகவே இருந்தாலும் கூட—கண் டிப்பாக 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை மாற்றுகிற முறையை கையாள் வதற்கு உரிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து மருந்தாளுநர்களுக்குப் பல குறைகள் இருக்கின்றன. சென்ற ஆண்டே கோட்டை முன்னால் உண்ணாவிரதம் இருந்தார்கள். அப்போது அமைச்சர்கள் பேச்சுவார்த்தை நடத்தி சலுகைகளை அளிப்பதாக உறு





அளித்து ஒரு வருஷம் ஆகப்போகிறது. அதை நிறைவேற்ற எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை இதன் காரணமாக அவர்க ளிடையே அதிருப்தி வளர்கிறது. அவர்களிடையே அதிருப்தி வளர்வது எந்த அளவுக்கு நோயாளிகளைப் பாதிக்கும் என்கிற அச்சத்தை உணர வேண்டுமெனறு விரும்புகிறேன்.

அடுத்து, பொதுசுகாதார மருத்துவத்துறையில் பல ஆண்டுகளாக தற்காலிகமாக உள்ளவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நிரந்தரமாக்கப் படவேண்டும்.

பள்ளி செல்லும் இளைஞர்கள் எல்லாம் மெடிகல் செக்கப் செய்யப் பட வேண்டும். ஆரோக்கியமான வாழ்க்கைக்கு அதுவே அடிப்படை. அதேபோல பல கிராமங்களில் குடிதண்ணீர் வசதி இல்லாத காரணத் தினால்தான் வியாதிகள் வருகின்றன. பணமில்லை என்கிற நிலையைச் சொல்லாது எப்படியாவது எல்லாக் கிராமங்களுக்கும் குடிதண்ணீர் வசதி செய்து தரப்படவேண்டும்.

இன்னும் செவிலியர்களை எடுத்துக் கொண்டால் 40 பேர், 50 பேர் களுக்குப் பணியாற்ற வேண்டிய நிலை இருக்கிறது. படித்து பயிற்சி பெற்றவர்களும் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே செவிலியர் களுக்கு நோயாளிகள் எண்ணிக்கையைக் குறைத்து அதிக செவிலியர் களைப் போடவேண்டும் என்பதாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் படுக்கை வசதிகளை அதிகப்படுத்தவேண்டும். புதியதாகப் படித்து வருகிறவர்கள் கிராமங்களுக்குப்போக மறுக்கிறார்கள் என்றாலும் இவர்களை நகரத்தில் போட்டு நகரத்திலேயே ஐந்து வருஷங் களுக்கு மேல் இருக்கிறவர்களை சர்வீஸ் ஆனவர்களை கிராமப்புறங்களுக்கு அனுப்பினால் அங்குள்ள மக்கள் நல்ல வைத்திய வசதியைப் பெற வாய்ப்பாக இருக்கும். அதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று சொல்லி நான் முடித்துக்கொள்கிறேன்.

*திரு. கி. ஜயராமன்: மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன்னுள்ள மானியக் கோரிக்கைகளை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

மக்கள் நலன் காக்கும் அரசினர் கடந்த ஆண்டைக் காட்டிலும் நடந்து முடிந்த ஆண்டில் அதிக அக்கறை கொண்டு பல்வேறு துறை களில் அதிகச் செலவு செய்துள்ளனர். அதற்காகப் பாராட்டுகிறேன். இப்பணி மேலும் அபிவிருத்தி அடைந்து முன்னேறி வருகிறது. அதற்காகச் சிறப்பாகப் பல துறைகளுக்கு அதிகச் செலவுக்கு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். பாராட்டுக்குரியதுதான். சென்ற ஆண்டைக் காட்டி லும் இநத ஆண்டிலும் மருத்துவக் கல்லூரிகளிலே, மருத்துவ நிலை யங்களிலே அதிக படுக்கை வசதி செய்யப்பட்டிருக்கிறது. மேலும் மாவட்ட தலைமை மருத்துவ நிலையங்கள் நல்ல வசதி பெறவேண்டு மென்று 1969–70-ல் 5·91 லட்சம் ஒதுக்கப்பட்டது என்றால் 1970–71-ல் 17·66 லட்சம் தொகை ஒதுக்கியிருக்கிறார்கள். குறிப்பாக எங்கள் சேலம் தலைமை மருத்துவ நிலையத்தில் இதுவரை இல்லாதிருந்த வசதியை இப்போது புதியதாக ஏற்படுத்திக் கொடுக்க முன்வந்திருப் பதற்காக மகிழ்ச்சியடைகிறேன். ஸ்டீம் லாண்டரி (Steam Laundry) டீசல் ஜெனரேடர் (Diesel Generator) பப்ளிக் ஹெல்த் லாபரடரி ஆகியவற்றை ரூ. 66,000 மதிப்பீட்டில் ஏற்படுத்திக் கொடுக்க முன்வந்திருப்பதை சுட்டிக் காட்டுகிறேன். மாற்றுக் கட்சியிலே உள்ளவர்கள் இது ஒரு பெரிதா என்று சொல்லலாம். ஆனாலும் இதுவரை இல்லாத ஒன்று இப்போது புதியதாக இந்த அரசினரால் ஏற்படுத்தப்படுகிறது என்பதைப் பாராட்டத் தான் வேண்டும்.

[திரு. கி. ஜயராமன்] [1970 மார்ச் 30

மாவட்ட நகரங்களுக்கு மட்டுமல்லாது தாலுக்கா நகரங்களுக்கும், மற்றைய இடங்களுக்கும் அதிகச் செலவும் செய்யப்படுகின்றது. கிராமங்களையும் இந்த அரசு மறந்துவிடவில்லை. தாலுக்கா நகரங்களுக்கு மட்டும் சென்ற 1969–70-ல் 28·64 லட்சம் ஒதுக்கப்பட்டது என்றால் 1970–71-க்கு 37·36 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள்.

குறிப்பாக எங்கள் மாவட்டத்தில் வெண்ணந்தூர் கிராமத்தில் 20 படுக்கைகள் கொண்ட அரசினர் மருத்துவ விடுதியைத் திறந்து வைக்க அண்மையில் முதல் அமைச்சர் அவர்களே வந்திருந்ததை எங்களால் மறக்க முடியாது.

மருத்துவத் துறையிலும், பொதுநலத் துறையிலும் தமிழக அரசு நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது என இந்தியத் துணைக் கண்டமே ஏன் உலகமே பாராட்டுகிறது. நம்முடைய எம். பி. பி. எஸ். பட்டப் படிப்பையும், நம்முடைய பல்கலைக் கழக திறனையும் அயல்நாடுகள் பாராட்டிக்கொண்டுதான் இருக்கின்றன.

ஒரு செய்தித்தாளில் செய்தி வந்திருக்கிறது, பாட்னா பல்கலைக் கழகத்திலே எம். பி. பி. எஸ். பட்டம் பெற்ற ஒருவருக்கு அந்தத் துறையில் உள்ள அடிப்படை உண்மைகள் கூடத் தெரியாமல் இருக்கின்ற நிலைமை இருக்கிறது என்று வந்திருக்கிறது. அந்த நிலைமையைப் பார்க்கும்பொழுது நம்முடைய மருத்துவ நிலையங்களும் பொதுச் சுகாதார நிலைமையும் முன்னேறியிருக்கிறது என்ற காரணத்தால், நான் அதற்காக அமைச்சர் அவர்களையும் இந்த அரசையும் பாராட்டுகிறேன்.

குடிநீர், சாக்கடைத் திட்டத்திலே வெகு வேகமாக நாம் முன்னேறியிருக்கிறோம். இந்தியத் துணைக் கண்டத்திலேயே நம்முடைய மாநிலம் நல்ல முறையிலே முன்னேற்றம் அடைந்து வருகிறது.

நகரங்களைத்தான் அபிவிருத்தி செய்கிறோம், கிராமங்களை அபிவிருத்தி செய்ய மறந்துவிட்டோம் என்று பேசப்படுகிறது. கிராமங்களில் வசதிகளைச் செய்வதற்காக வறட்சி நிதியிலிருந்து குடிநீர்த் திட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறோம். இதற்காக, தனியாக குடிநீர் அபிவிருத்திக்காக கிராமங்களில் அத்திட்டங்களை ஏற்படுத்த வரவு-செலவுத் திட்டத்திலே தனித் தலைப்பிலே ஒரு தொகையை ஒதுக்கியிருக்கிறோம். அதைப்போலவே கழிவு நீர்த் திட்டத்திற்காக நாம் தனியாக ஒரு போர்டு, வாரியம் அமைத்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

வரலாற்றிலே இதை ஒரு நிகழ்ச்சியாகக்கூட குறிப்பிடலாம். ஆயுள் இன்சூரன்ஸ் நிறுவனத்திலிருந்து குடிநீர்த் திட்டம், சாக்கடைத் திட்டம் இவற்றிற்காக கடனுகத் தொகை பெற்றிருக்கிறோம். அவர்கள் திட்டம் இல்லை திட்டம் இல்லை என்று சொல்கிறார்கள். ஏறத்தாழ 26 திட்டங்கள் போட்டு மொத்த ஒதுக்கீடு 1,392 லட்ச ரூபாய் அளவுக்கு நிர்ணயித்திருக்கிறோம். அதிலே மூன்றில் இரண்டு பங்கை ஆயுள் இன்சூரன்ஸ் நிறுவனம் கொடுக்க முன்வந்திருக்கிறது கடனுக. மீதியை நம்முடைய மாநில அரசு கொடுக்க முன்வந்திருக்கிறது. இதிலே நம்முடைய சேலம் மாநகரமும் ஒரு கணிசமான தொகையைப் பெற்றிருப்பது குறித்து நான் இந்த அரசுக்கு நகரத்தின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக நகரமைப்பு திட்டங்கள், டவுன் பிளானிங் ஸ்கீம்ஸ் பொறுத்தவரையிலே நம்முடைய மாநிலம் மற்றமாநிலங்களைவிட அதிகமாக மெட்ரோபாலிட்டன்சிடிஸ் ஏற்படுத்தவும், ரீஜினல் மாஸ்டர் பிளான்கள் என்ற முறையிலே பல நகரமைப்புத் திட்டங்களை எடுத்துள்ளது. அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவந்து இருக்கிறது. அதிலேயும் சேலம் மாநகரம் ஒரு கணிசமான தொகையைப் பெற்றுக்கொண்டு அதைச் செயல்முறையிலே கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது.



1970 மார்ச் 30] [திரு. கி. ஜயராமன்]

இதுவரையிலும் நாணயத்தின் ஒரு பக்கமாக இருக்கின்ற தலையைப் பற்றிச் சொன்னேன். பூவா தலையா பார்க்கிற மாதிரி பூ பக்கத்தைப் பற்றியும் கோடிட்டுக் காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய பொதுநலத் துறை முன்னேறிவிட்டது என்று பெருமைப்பட்டுக்கொள்கின்ற அதே நேரத்தில் சிறு தொழில்கள் அபிவிருத்தியிலே மற்ற மாநிலங்களை விட சிறு மாநிலங்களைவிடக்கூட நம்முடைய மாநிலம் முன்னேறவில்லை என்று சொல்லப்படுகிறது. அப்படித் தடை இங்கிருப்பதற்குக் காரணம் அரசினுடைய உத்திரவுகள். அரசினுடைய உத்தரவுகள் முன்னேற்றத்திற்காக மக்களுடைய நலனுக்காக இருக்க வேண்டும், அவற்றிற்கு இடையூறாக இருக்கும் என்றால் உடனே அவற்றை தளர்த்துவது மட்டுமல்ல நீக்கிவிடவேண்டும். உள்ளாட்சித் துறை 1963–64-ல் 565என்ற எண்ணுள்ள உத்தரவு போட்டிருக்கிறது. பெரிய கட்டடங்கள் கட்டவேண்டும் 10, 14 அடி உயரம் இருக்கவேண்டும், போகவர இருவழிகள் இருக்கவேண்டும், காற்றோட்டமுள்ள ஜன்னல்கள் இருக்கவேண்டும் கதவுகள் இருக்க வேண்டும் என்றெல்லாம் சிறுதொழில்களுக்கு விதிகளைப் போட்டால் குடிசை தொழில்களை ஆரம்பிப்பதற்கு தடைகள் ஏற்படும். இவையெல்லாம் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் இருண்ட கண்டத்திலே இருப்போம் என்று சொல்லலாம். கொஞ்ச நாட்களுக்கு இப்படிப்பட்ட விதிகளை நம்முடைய மாநிலத்திலே எடுத்துவிட வேண்டும். இதிலே தொழில் துறையும், உள்ளாட்சித் துறையும், பொதுப்பணித் துறையும் அதிகமான அளவுக்கு கவனம் செலுத்தி ஒரு குறிப்பிட்ட காலத்திற்காவது—தளர்த்திவிடலாம் என்று சொல்லலாம். தளர்த்தினால் சாதாரண மக்களுக்கு அதனால் நன்மைகள் ஏற்பட வழியில்லை—எனவே எடுத்துவிடவேண்டும். பஞ்சாப் மாநிலம், மைசூர் மாநிலம் இங்கேயெல்லாம் தளர்த்தக்கூட அல்ல, இந்த விதிகள் எல்லாம் இல்லவே இல்லை. அதேபோன்று நம்முடைய மாநிலத்திலும் செய்ய வேண்டும்.

மருந்து விலைகளை நிர்ணயிக்கக்கூடிய அதிகாரம் இந்திய அரசினிடத்திலே இந்தியன் டிரக்ஸ் கண்ட்ரோல் ஆக்ட் என்ற முறையிலே இருக்கிறது. மத்திய அமைச்சர் அவர்கள் மருந்து விலை பலமடங்கு ஏறிவிட்டது என்றெல்லாம் அங்கலாய்த்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தியன் டிரக்ஸ் கண்ட்ரோல் போர்டிலே நம்முடைய மாநிலத்திற்குச் சரியான பிரதிநிதித்துவம் இல்லை. அதற்கு நம்முடைய அரசு சரியான பிரதிநிதித்துவம் இருக்குமாறு செய்ய பாடுபடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மருந்தகங்களிலும் டிஸ்பென்சரிகளிலும் பயன்படுத்துவதற்கு மருந்துகளைப் பெறுவதற்கு நம்முடைய கட்டுப்பாட்டிலே இல்லாத மத்திய அரசின் மருந்து கிடங்கு அங்கே எம். எஸ். டி. என்று வைத்திருக்கிறார்கள். அதன் மூலம் கோடவுனிலிருந்து மருந்து கேட்டு வாங்கவேண்டிய நிலைமை அவ்வப்பொழுது இருக்கிறது. நம்முடைய மாநிலத்திலேயிருந்து மருந்துகளுக்காக நாம் விண்ணப்பித்தால், அவர்கள் கொடுப்பதற்கு கால தாமதம் ஏற்படுகிறது. நம்முடைய மாநிலத்திலேயே மாநில அரசின் கட்டுப்பாட்டில் எம். எஸ். டி. போன்ற மருந்துக் கிடங்கை ஏற்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். இதிலே நம்முடைய சர்க்கார் பின்தங்காது என்று நம்புகிறேன். (மணியடிக்கப்பட்டது.)

என்னுடைய மாவட்டத்திலே மருத்துவக் கல்லூரி ஏற்படுத்துவதற்கான இடம் இருக்கிறது, நீதி இருக்கிறது, நிதி இருக்கிறது, கருணைதான் வேண்டும். If there is a will, there is a way, என்று சொல்லி அதை ஏற்படுத்தித்தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* Thiru K. S. KOTHANDARAMIAH : Sir, I thank you very much for giving me an opportunity to say a few words on the Medical and Public Health Demands which are very important Demands. The utility and realisation of the objectives of the

other Demands depend mostly on these Demands and the Government have provided about Rs. 25 crores for these two demands. I think even if the Government provides more funds for these Demands,since they are fundamental Demands, no hon. Member will grudge it and I feel if rules permit instead of moving a cut motion to reduce it I wish to make an ' Add motion '.

Now, I want to say a few words about the medical facilities required for the Dhadmapuri district. It has been completely neglected for nearly 100 years since it was only a part of the Salem district and it has also remained at the tail end of the State The Dharmapuri district in every respect stands on a separate footing; because the climatic conditions and its altitude, etc., are different. Villages are scattered and the distance between villages is also long and there are no medical facilities in any taluk. Therefore, medical facilities like hospitals, health centres and drinking water facilities, etc., should be provided to the Dharmapuri district. Otherewise, it will always remain behind the other districts.

Now, with regard to the medical college, there is a demand that the medical college should be started in every district. As per the recommendations of the Health Survey and Planning Committee set up by the Government of India under the Chairmanship of Dr. A. L. Mudaliar, there should be one Medical College for every 50 lakhs of people. Based on this recommendation if a new medical college has to be started, the Dharmapuri district deserves a medical college in every respect. To-day I read in the newspapers that the Union Government have decided to start 10 medical colleges in the entire country and I request our Government to press the Central Government to give two colleges to our State. If that is achieved then the Hon. Minister may start one of them in the Dharmapuri district.

With regard to Hosur taluk I wish to say a few words. It is a very cold place. For six months, especially during the rainy and dew season it is very cold. During the cold season dew falls in the nights and also in the morning. The facilities in the hospital are so lacking that the patients admitted there suffer very much. Last year when the Hon. Thiru Sadiq Pasha came to Hosur in the month of December, he saw the patients lying on the ground which was very chill and cold and the patients, especially women who come for delivery cases suffer very much. During the discussion on the last Budget, our Government promised to expand this hospital, provide new buildings, construct an operation theatre and provide 40 maternity beds. It is more than a year since that promise has been made and sofar I have not heard anything about it. So, I request the Government and the Hon. Minister to give preference to the hospital at Hosur.



With regard to the hospital at Denkanikottah, it is also an important place having a population of 16,000 to 17,000 people. It is in a very bad condition. Medicines are not available there and the people there are demanding that the hospital should be taken over by the Government. I request the Hon. Minister to visit this place and see the hospital and find out the conditions there and then issue orders for the taking over of the hospital by the Government.

With regard to Primary Health Centres there are hundreds of hamlets distributed throughout this taluk and the distance between village to village is six to seven miles. I hear that the Government are thinking of starting 32 Primary Health Centres this year and I hope at least two or three Primary Health Centres may be given to Hosur taluk.

As regards mobile medical aid, villages are scattered and people have to go to long distance to get medical aid. There are no buses also. Therefore, I think it is better to have a mobile medical van which can go to villages and provide medical help.

With regard to drinking water, the Hosur town is suffering from want of drinking water. A scheme has been proposed to bring water from Samathkumara river near the village called, Byraondapalli where a small dam is proposed to be constructed. From this dam water could be pumped out for supplying drinking water to Hosur, though it may be somewhat costly. Six tanks can be filled up by this water and about 2,000 acres of wet land can be cultivated. The Cattle Farm near Hosur also will have adequate water supply. After providing water supply to Hosur, the water will go again to South Pennar river. So, there will be no loss and there will be only gain.

With regard to High Schools, formerly we used to have a scheme by which the boys would be examined medically. Since some years, the scheme has been given up and there is no medical examination in schools. For want of such medical examination, the parents are not able to understand the health conditions of their children. Therefore it is very important that there should be medical examination of children. In the neighbouring State of Mysore, there is an excellent arrangement of medical examination of pupils in schools and I request Government to provide for such medical examination in our State also so that the children might receive better treatment. மு.ப. 11-30

With regard to publication of health journals it is given in the booklet that the Health Education Bureau has been publishing the State Health Education journals, that is quarterly journals in English and also in Tamil. I think since there is a sizable Telugu population in our State, and especially in Hosur taluk there are more Telugu-speaking people, I feel that some of these journals may be published in Telugu also for the sake of the people who speak Telugu and who live in this State.

With these words, I conclude my speech.

***திரு. வை. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முக்கியமாக திருச்சி மாவட்டத்திலே ஒரு மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருச்சி மாவட்டத்திலே ஒரு மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக திரு. எம். ஜி. ஆர். தலைமையிலே ஜெயலலிதா நடனம் நடத்தி அதன் மூலம் 33 லட்ச ரூபாய் வசூலித்து இரண்டு ஆண்டு காலமாக அப்படியே இருக்கிறது. அந்த வைத்தியக் கல்லூரி உண்டா இல்லையா என்பதைப் பற்றி அரசாங்கம் எதுவும் அறிவிக்கவில்லை. இதன் காரணமாக 33 லட்சம் ரூபாய் வட்டி இல்லாமல் அரசாங்கத்திடம் தூங்குகிறது. இதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்தப் போகிறார்களா அல்லது கைவிடப்பட்டதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சி மாவட்ட ஆஸ்பத்திரியிலே புற்று நோய்ப் பிரிவை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். இந்த நோய் ஏற்பட்டவர்கள் இப்பொழுது சென்னைக்குத்தான் வரவேண்டுமென்ற நிலை இருக்கிறது. சென்ற சில மாதங்களுக்கு முன்பு எக்ஸ்ரே பிலிம் கிடைக்காததன் காரணமாக நோயாளிகளுக்கு எக்ஸ்ரே எடுப்பதில் கால தாமதம் ஏற்பட்டது. இந்த மாதிரி நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

கிராமப்புறங்களுக்கு டாக்டர்கள் வருவது கிடையாது. படித்தவர்கள் கிராமத்திற்குச் சென்று வைத்தியம் செய்வதை குறைவாகக் கருதுகிறார்கள். ஆகவே அரசாங்கம் வைத்தியர்கள் எல்லாம் இரண்டு ஆண்டுகள் கட்டாயமாக கிராமங்களில் வேலை செய்யவேண்டும் என்ற உத்தரவை இட வேண்டும். கிராமப்புறங்களில் வேலை செய்யக்கூடிய டாக்டர்களுக்கு சம்பளம் போன்றவற்றில் அதிகச் சலுகைகளைக் கொடுக்க வேண்டும்.

ஆரம்ப சுகாதார நிலையங்கள் பல இடங்களிலும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. ஆரம்ப சுகாதார நிலையங்கள் இல்லாத பகுதிகளில் உடனடியாக அவற்றை ஏற்படுத்த வேண்டும். அப்படி ஏற்படுத்தும் போது அதற்கு வேண்டிய கட்டிட வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். அங்கு வேலை செய்யக்கூடிய டாக்டர்களுக்கு ஜாகை வசதியையும் இதர வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். பல மருத்துவமனைகளில் தேவையான மருந்துகள் கிடைப்பதில்லை. அந்த மருந்துகள் எல்லாம் எப்போதும் கிடைப்பதற்கு ஆவன செய்யவேண்டும். அனுபவம் உள்ள கம்பவுண்டர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நல்ல வாய்ப்பையும், சலுகைகளையும் அளிக்க வேண்டும்.

**திரு. நா. காசிராமன்:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். சபையில் 24 பேராவது இருக்க வேண்டும். அத்தனை நபர்கள் இல்லை யென்று தெரிகிறது. இந்த நிலையில் தொடர்ந்து சபையை நடத்துவது முறைதானா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** (எண்ணிப் பார்த்த பிறகு) 24 பேர்கள் இருக்கிறார்கள். 'கோரம்' இருக்கிறது. திரு. சுவாமிநாதன் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

**திரு. வை. சுவாமிநாதன்:** அடுத்தபடியாக இன்று பென்சிலின் இன்ஜெக்ஷன் போடுவதில் பல உயிர்களுக்கு ஆபத்து வருவதாகக் கூறப்படுகிறது. இதைப் பற்றி ஆராய்ச்சி செய்து பென்சிலின் ஊசி உண்மையிலேயே வியாதிகளைப் போக்குகிறதா அல்லது கெடுதல் பண்ணுகிறதா என்று பார்க்க வேண்டும். ஆயுர்வேதம், யுனானி போன்ற



வைத்தியங்களுக்கு அரசாங்கத்தில் கொடுக்கக்கூடிய சலுகை போதாது. அவை பழைய கால வைத்திய முறைகளாகும். அதற்காகத் தனி இயக்குநரையே ஏற்படுத்த வேண்டும். திருச்சி மாவட்டத்தில் இருக்கும் ஆஸ்பத்திரியில் கூட அதிகப்படியான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். ஆயுர்வேத வைத்திய முறைகள் எல்லாம் சமஸ்கிருதத்திலேதான் இருக்கிறது. அதைத் தமிழ்ப்படுத்தினால்தான் மற்றவர்கள் கற்றுக் கொண்டு வைத்தியம் செய்ய ஏதுவாக இருக்கும். அதற்கு ஆவன செய்ய வேண்டும்.

என்னுடைய தொகுதியில் உய்யக்கொண்டான் ஆற்றில் கழிவு நீர் விடுவது பற்றிப் பலமுறை அமைச்சர் அவர்களிடம் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. ஹெல்த் அமைச்சர் அவர்களிடம் நேரடியாகக் கூட இதைக் காட்டியிருக்கிறோம். மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலும் இதைப் பற்றி அடிக்கடி எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. சர்வ கட்சியினரும் இதற்காகப் பல கூட்டங்களை நடத்தி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். 1970-ம் ஆண்டு மார்ச் மாதம் 23-ம் தேதியன்று தந்தை பெரியார் அவர்கள் தலைமையில் கூட கூட்டம் நடத்தப்பட்டு இதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவில்லையானால் போராட்டம் நடத்த வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. வருகிற ஆகஸ்டு மாதத்திற்குள் அரசாங்கம் இதிலே ஒரு முடிவு எடுத்துக் கொள்ளவில்லையானால் மக்கள் தாங்களாகவே இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள முடிவு செய்திருக்கிறார்கள். ஆகஸ்ட் மாதத்திலே ஒரு பெரிய போராட்டம் நடத்த இருக்கின்றேன், இந்தப் பிரச்சினையை அமைச்சர் அவர்கள் உடனடியாகத் தீர்க்க வேண்டும். அந்தக் கழிவு நீரை எடுத்துக் கொண்டுவந்து எதிர்க்கட்சித் தலைவர் அறையில் வைத்திருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் அதைப் பார்க்கக்கூடிய வண்ணம் எடுத்து வைத்திருக்கிறேன். அதன் விளைவுகளைப் பார்க்க வேண்டும். சுகாதாரத்திற்காகப் பெரிய காரியங்களைச் செய்துவிட்டோம் என்று சொல்லக் கூடிய நிலையில் இந்தக் கழிவுநீரால் மக்கள் மடிகிற நிலையைப் பார்க்கிறோம். வியாதியால் பாதிக்கப் படுகிறார்கள். இதிலே அரசாங்கம் நடவடிக்கை எடுக்காத காரணம் என்ன என்று தெரியவில்லை. ஒருகால் அவர் பெரிய முதலாளி என்ற காரணத்திற்காகப் பயப்படுகிறார்களா என்று தெரியவில்லை. இதற்கு அமைச்சர் அவர்கள் தகுந்த பதில் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பொதுவாக சுகாதார வசதிகள் குறைவாக இருக்கிறது. ஹோட்டல்களில் சுகாதாரக் குறைவு அதிகமாக இருக்கிறது. நாம் பத்திரிகைகளில் பார்க்கிறோம் 'ஹோட்டலில் சாப்பிட்டவர் மரணம்' என்று பார்க்கிறோம். விஷம் பரவுகிறது. ஹோட்டல்களில் சுகாதார முறையைக் கண்காணிக்க இப்போது இருக்கக்கூடிய ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள் போதாது. இதற்காக ஹெல்த் டிபார்ட்மெண்டில் தனிப் பிரிவை ஏற்படுத்தி ஹோட்டல்களுக்குச் சென்று பார்த்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கலப்படம் அதிகமாக இருக்கிறது, அவற்றை எல்லாம் தடுக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

கம்பவுண்டர்களாக இருப்பவர்களுக்கு நிறைய வாய்ப்பு வசதிகளைச் செய்ய வேண்டும். சுகாதார நிலைமையிலே கேடு விளைவிக்கக்கூடிய நிலைமை இருப்பதைப் போக்க வேண்டும். கிராமங்களில் தாய் சேய் நல விடுதி அமைக்க வேண்டுமென்றால் பத்தாயிரம் ஜனத்தொகை இருக்கும் இடங்களில்தான் அமைக்கப்படும் என்று கூறப்படுகிறது. ஐயாயிரம் ஜனத்தொகை உள்ள இடங்களிலேயே தாய் சேய் நல விடுதிகளை அமைக்க வாய்ப்பளிக்க வேண்டுமென்று கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

***திரு. நா. கிருட்டிணன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவை முன் வைத்துள்ள சுகாதார, மருத்துவம் குறித்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என் கருத்துக்களை இங்கு கூற விழைகிறேன்.

[திரு. நா. கிருட்டிணன்] [1970 மார்ச் 30

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு."

என்ற வள்ளுவரது வாய்மொழிக் கிணங்க இம் மாநிலத்தின ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற கழக அரசு கடந்த மூன்று ஆண்டுகளாக இடையில் ஏற்பட்ட இயற்கையின் சதி காரணமாக ஏற்பட்ட பசியை தவிர்க்கும் விதத்தில் நடவடிக்கைகள் எடுத்தது மட்டுமல்லாமல் இந்த மருத்துவத்துறையில் பலவித வசதிகளைச் செய்து தருவதில் எந்தளவிற்கு கழக அரசு முன்னணியில் நிற்கிறது என்பதைப் பார்க்கும்போது நாம் அனைவருமே, அகில இந்தியாவுமே இந்தக் கழக அரசைப் பாராட்டிக் கொண்டிருக்கிறது. இந்த அரசு ஏற்றுக்கொண்ட நடவடிக்கைகள் "Prevention is better than cure" என்ற அளவில் அமைந்திருக்கின்றன. குறிப்பாக எங்கள் ஊரான காஞ்சிபுரத்தை எடுத்துக் கொண்டால் அங்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவாக ஏற்படுத்தப்பட்டிருக்கிற புற்று நோய் ஆராய்ச்சி நிலையத்திற்காக இந்த நிதிநிலை அறிக்கையில் ஐந்து லட்சம் ரூபாய் ஒதுக்கித் தந்திருப்பதை அந்த ஊர் வாழ் மக்கள் சார்பில் நான் பாராட்டி இவ்வரசுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் ஊரிலுள்ள மாவட்ட தலைமையிட மருத்துவ மனையில் ஒரு பொதுச் சுகாதார ஆய்வுக்கூடத்தை ஏற்படுத்துகிற வகையில் ரூ. 66,000 ஒதுக்கப்பட்டுள்ளதைக் குறித்து நான் அரசைப் பாராட்டுகிறேன். கடந்த மாதத்தில் எங்கள் மாவட்ட தலைமையிட மருத்துவ மனையில் ரத்தத்தைப் பரிசோதித்துக் கொள்ள நான் சென்றிருந்தேன். ரத்தத்தை எடுத்து அது செங்கல்பட்டு ஆய்வுக் கூடத்திற்கு அனுப்பப்பட்டு அதற்குரிய முடிவு உருவதற்கு பதினைந்து நாட்கள் ஆயின. அந்த நிலையைத் தவிர்க்கும் விதத்தில் இந்தச் சுகாதார ஆய்வுக்கூடம் அமைந்திருப்பது குறித்து என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் ஊரில் பல ஆண்டு காலமாக இருந்துவரும் கொசுத் தொல்லையை ஒழிக்கும் வகையில் இந்தச் சுகாதாரத் திட்டத்தின்கீழ் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்திருப்பது குறித்து அரசைப் பாராட்டுகிறேன்.

அடுத்து எங்கள் ஊரில் உள்ள மருத்துவமனை 1863-ம் ஆண்டு கட்டப்பட்ட தொன்றாகும். அதைக் கட்டி நூறு ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன. ஆனால் கடந்த ஆறு ஆண்டுகளுக்கு முன்னால் அது மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையாக மாற்றப்பட்டது. அப்படி அது மாவட்ட தலைமையிட மருத்துவ மனையாக மாற்றப் பட்டபோது ஒரே ஒரு கட்டிடம் தான் கூடுதலாகக் கட்டப்பட்டது. அது தவிர மற்ற ஏனைய கட்டிடங்கள் எல்லாம் 1863-ம் ஆண்டில் கட்டப்பட்ட கட்டிடங்களாகும். இதை எடுத்துக் கூற காரணம் என்ன வென்றால், கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னர் எங்கள் ஊரில் உள்ள அந்த மருத்துவ மனையில் தினம் வருகிற நோயாளிகளின் எண்ணிக்கை 200 கூட இருந்ததில்லை. ஆனால் இன்றையதினம் அது மாவட்ட தலைமையிட மருத்துவமனையாகி விட்ட காரணத்தினால் இன்று அங்கு இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட நோயாளிகள் தினம் வருகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அங்கு கண் சிகிச்சைக்கான பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். அங்கு மார்பு நோய்க்கான சிகிச்சைக்கு மருத்துவரும் இல்லை. அதற்கான ஒரு தனிப் பிரிவும் இல்லை என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன். காது, மூக்கு, தொண்டை இவற்றின் சிகிச்சைக்காக ஒரு மருத்துவர் போடப்பட்டிருக்கிறார். ஆனால் அதற்கென தனிப் பிரிவு ஒன்றும் இல்லை.

திரு. வை. சுவாமிநாதன்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். உறுப்பினர் பேசும்போது ஒரு அமைச்சர் கூட சபையில் இல்லை. ஒரு அமைச்சராவது இருக்க வேண்டாமா ?

(மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள் அப்போது வந்து கொண்டிருந்தார்.)



1970 மார்ச் 30]

திரு. நா. கிருட்டிணன்: அங்கு பல் நோய்க்காக ஒரு மருத்துவர் போடப்பட்டிருக்கிறார். ஆனால் பல் வலி என்று வரும் நோயாளிகளின் பல்லைப் பிடுங்கவோ அல்லது பல்லுக்கு மெருகு ஊட்டிக் கொள்வதற்கோ உரிய இயந்திரம் பொறிக்கப்படவில்லை. மேலும் அங்கு இருக்கிற மாவட்ட தலைமையிட மருத்துவமனைக்கு யார் சென்றாலும், நான் சென்றாலும் சரி அல்லது யார் சென்றாலும் சரி பொதுப் பிரிவில்தான் படுத்து சிகிச்சை பெற வேண்டிய நிலை இருக்கிறது. அங்கு தனி படுக்கைகள் கொண்ட ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தப்படவில்லை. ஆகவே அங்கு ஒரு ஸ்பெஷல் வார்ட் அமைத்துத் தருவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்ட தலைமையிட மருத்துவ மனையைப் பொறுத்தவரையில் அது மாவட்ட தலைமையிட மருத்துவ மனையானதற்குப் பிறகு பல திட்டங்கள் வகுக்கப்பட்டு உரிய துறைகளின்மூலம் அவை அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அவை அனைத்தையும் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்கள் மாவட்ட தலைமையிட மருத்துவ மனையின் சமையலறை 1863-ல் கட்டப்பட்டது. அங்கு இப்போது சுமார் 200 படுக்கைகள் உள்ளன. அந்த நோயாளிகளுக்கு சமைத்துப் போடுகிற அளவுக்கு அச் சமையலறை போதுமானதாக இல்லை. ஆகவே அதைப் புதுப்பிக்க வேண்டுமென்றும், அங்குள்ள செவிலியர்களுக்கு தங்கும் விடுதிகள் கட்டித் தர வேண்டுமென்றும் 1,63 000 ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் வகுத்து அனுப்பப்பட்டு அத் திட்டத்தை 1971-72-ல் சேர்ப்பதாகக் கூறப்பட்டுள்ளது. அதைச் செயல்படுத்தித் தரவேண்டும். அங்குள்ள அறுவை அறையில் இரட்டை அறுவை அரங்கங்கள் கட்டுவதற்காக ரூ. 1,32,000 மதிப்பீட்டில் ஒரு திட்டம் அனுப்பப்பட்டிருக்கிறது. அதையும் நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நிர்வாகக் கட்டடத்தின் மேல் கட்டடம் கட்டுவதற்காக 91,000 ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதையும் செயல்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன.

எங்கள் மாவட்ட தலைமையிட மருத்துவமனையில் பல பிரிவுகளை ஏற்படுத்தித் தர வேண்டிய அவசியத்தை எடுத்துக் காட்டுகிற வகையில் ஒரு பெருந் திட்டத்திற்கான மாஸ்டர் ப்ளான் தயாரிக்கப்பட்டு 15 லட்சம் ரூபாய் செலவில் போடப்பட்டு இந்த அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அவற்றை ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் செய்யாவிட்டாலும் ஆண்டுக்கு ஒரு திட்டம் என்ற முறையிலாவது நிறைவேற்றித் தருவதன் மூலம் எங்கள் மாவட்டத் தலைமையிட மருத்துவமனை நிறைவு பெற்ற ஒரு மாவட்டத் தலைமையிட மருத்துவமனையாக விளங்குவதற்குரிய வழிவகை செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக ஒரு மாவட்டத் தலைமையிட மருத்துவமனைக்கு எந்த நோயாளி வந்தாலும் எந்த நோய்க்காக வந்தாலும் அங்கு அதற்கான வைத்திய வசதி பெறுவதற்குரிய வசதிகளிருக்க வேண்டும். இந்த அரசு செயல்பட வேண்டும், செயல்படும் என்று எனது நம்பிக்கையைத் தெரிவித்து, இதனையே வேண்டுகோளாக வைத்து எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு தங்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

*திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மானியக் கோரிக்கை மீது என் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுச் சுகாதாரத்திற்கும், மருத்துவத்திற்கும் நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற செலவு அவற்றிற்காக ஏராளமாக செலவு செய்கிறோம். அப்படிச் செலவு செய்யும் அரசாங்க ஆஸ்பத்திரிகள் சரியான முறையில் செயல்படுகின்றனவா என்பதை அரசாங்கம் ஆய்வு செய்ய வேண்டும். அப்படிச் சரியான முறையில் சிகிச்சை அளிக்கப்படவில்லை என்ற புகார்கள் பொது

மக்கள் மூலம் வந்து கொண்டே இருக்கின்றன. அங்குள்ள டாக்டர்களைக் கண்டிக்கவோ அல்லது அங்குள்ள பிரச்சினைகளை எடுத்துச் சொல்லவோ மானுல் அதைத் தனிப்பட்டதொரு ப்ரஸ்டீஜ் க்வஸ்டிஞக கருதுகிற ஒரு சூழ்நிலை இருப்பதை மாற்றியமைக்க வேண்டும். நோயாளி களுக்கு அனுசரணையான முறையில் சிகிச்சை அளிக்கிற ஒரு மன உணர்வு டாக்டர்களிடம் ஏற்படுமானுல்தான் இந்தத் துறை வெற்றி பெற வாய்ப்பு ஏற்படுமே தவிர அப்படி இல்லை யென்ருல் நாம் எவ்வளவு தான் செலவழித்தாலும் அப்படிப்பட்ட புகார்கள் பொதுமக்களிட மிருந்து வரும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுத்தான் தீரும்.

குறிப்பாக, மாவட்ட மருத்தவ மனைகளில் போதுமான படுக்கை வசதிகள் இல்லை. மாவட்ட ஆஸ்பத்திரிகளில் சென்று பார்த்தால் படுப்பதற்கு படுக்கைகள் இல்லாமல் நோயாளிகள் கீழே பாயகளில் படுத்துக் கொண்டிருப்பதைக் காணலாம். அவசரக் கேஸ்கள் வந்தாலும்கூட இடம் இல்லாத நிலையில் மாவட்ட ஆஸ்பத்திரிகளின் நிலை இருப்பதைக் காண்கிறேம். கோவையில் உள்ள பெரிய ஆஸ்பத்திரி அந்த நிலையில்தான் இருக்கிறது. எந்த அவசரக் கேஸ் வந்தாலும் இரண்டு நாள்கள் தங்கிவிட்டுத்தான் சிகிச்சை பெற வேண்டிய நிலை அங்கு இருக் கிறது. ஆகவே அங்குள்ள படுக்கை வசதிகளை விஸ்தரிக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் இப்போது அதிகப்படியான மக்கள் சிகிச்சை பெற முன்வருகிருர்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னுல் பல்லடம் ஆஸ்பத்திரியை விஸ்தரிப்பதற்காகவும், ஒரு ஆப்பரேஷன தியேட்டர் கட்டுவதற்காகவும், 24 படுக்கைகளை அதிகப்படுத்தவும் ஒரு கோரிக்கை விடப்பட்டது. அரசாங்கம் அந்தக் கோரிக்கையை நிறைவேற்று கிறேன் என்று சொன்ஞர்களேதவி, இந்த ஆண்டும்கூட 24 படுக் கைகள் கொண்ட ஆஸ்பத்திரியும், ஆபரேஷன் தியேட்டரும் கட்ட வேண்டுமென்ற முடிவிற்கு இதுவரையில் வரவில்லை. பட்ஜெட் போட் டிருந்தார்கள். ஆனுல் 1970-71-ம் ஆண்டுத் திட்டத்தில் அதற்கான வேலைகளுக்கு ஒதுக்கப்படவில்லை என்று நினைக்கும்பொழுது மிகவும் வேதனைப்பட வேண்டியிருக்கிறது. அந்த ஆஸ்பத்திரிக் கட்டடம் கிடைக் காமல் இருப்பவர்களுக்கு என்ன பதில் சொன்னுலும் அந்த மக்கள் அதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதை அரசாங்கத்தின் கவ னத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

கோவை சிங்காநல்லூரில் இ எஸ்.ஐ. ஆஸ்பத்திரி, 500 படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரி கட்டப்பட்டு ஒரு ஆண்டுக் காலமாக தூங்கிக் கிடக் கிறது. அதற்கு என்ன காரணம்? மத்திய அரசாங்கம் அவர்கள் சரி யான படுக்கைகள் அலாட்மெண்ட் செய்யவில்லை என்று சொல்லிக் கொண்டு இருப்போமானுல் பல இலட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்து கட்டப்பட்ட ஆஸ்பத்திரி, இயக்குநரையும் அதற்கு நியமித்துவிட்டு, செயல் படாமல் இருப்பதால் யாருக்கு நஷ்டம்? அங்கிருக்கும் தொழிலாளர் களுக்கு என்ன சௌகரியம் இருக்கும் என்பதைப் பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட நிலையில், அங்கிருக்கும் தொழிலாளர்களுக்குச் சிகிச்சை அளிக்க முடியாத நிலையில் ஆஸ்பத்திரி திறக்கப்படாமல் இருப்பதால், அரசாங்கம் மத்திய அரசோடு தொடர்பு கொண்டு உடனடியாக, இந்த ஆண்டிலேயே அந்த ஆஸ்பத்தி ரியைத் திறக்க அமைச்சரவர்கள் முயற்சியெடுத்துக் கொண்டு, அங்கிருக்கும் தொழிலாளர்கள் சிகிச்சை பெறுவதற்கான வாய்ப்பளிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த ஆஸ்பத்திரி திறக்கப்பட்டால் வேறிடத்தில் கோவை பெரிய ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெறும் தொழிலா ளர்கள் இங்கு மாற்றப்பட்டுவிட்டால் அங்கு இட வசதியும் அதிகமாகக் கிடைக்கும், கோவை பெரிய ஆஸ்பத்திரியில் உள்ள இரண்டு, மூன்று வார்டுகளிலே பொதுவாக இருக்கும். மக்கள் தங்கி சிகிச்சை பெறுவ தற்கு வாய்ப்பு ஏற்படும். அதை அமைச்சரவர்கள் கவனித்து, E. S. I. ஆஸ்பத்திரியை உடனடியாகத் திறக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளு கின்றேன்.





சோமனூரில் இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிக்குக் கட்டடம் வாடகைக்குப் பிடிக் கப்பட்டும் அந்த ஆஸ்பத்திரி இன்னும் திறக்கபடாமல் இருக்கிறது. அதறகு என்ன காரணம் என்று தெரியவில்லை. அந்த ஆஸ்பத்திரி யையும உடனடியாகத் திறக்க அதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தின்மூலம் குடும்பங்களுக்கும் விஸ்தரித்தா லும், டாக்டர்கள் முன்பிருந்த அதே அளவிற்குத்தான இருக்கிருர்கள். குடும்பங்களுக்கு விஸ்தரித்த பிறகு அதற்கு வேண்டிய அதிகப்படியான டாக்டர்களையும் இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிகளில் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீர் வசதி சம்பந்தமாகக் கூறினுல், அந்தப் பிரதேசத்தில் இன்றையதினம் எங்கு பார்த்தாலும் குடிநீர்ப் பிரச்சனைதான் பெரிதும் கஷ்டமாகயிருக்கிறது. அதறகாக ஒரு திட்டத்தை முந்தாவிலிருந்து, சிங்காநல்லூர் நகரசபை, பல்லடம் பஞ்சாயத்து வரை இருக்கும் பிர தேசங்களுக்குக் குடிநீர் கொடுகக அரசாங்கம திட்டம் போட்டிருந்தார்கள். அது சம்பந்தமாக முடிவு இன்னும் வெளிவரவில்லை. அது சம்பந்தமாக அரசாங்கம் பல நிலைமைகளிலே சரிசெய்து அந்தத் திட்டத்தை அமல் நடத் துவதால், அந்தப் பிரதேசத்தில் பல ஆண்டுக் காலமாக குடிநீர் வசதியில் லாத நிலைமையைத் தீர்க்க, இந்த ஆண்டு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சிங்காநல்லூர் நகரசபையைச் சேர்ந்த ஒரு வட்டாரத்தில் மையமாக ஒரு குட்டையிருந்து கொண்டு, அதனுல் ஏகப்பட்ட சுகாதாரக் கேடுதல்கள் ஏற்படுகின்றன. நகரசபையிடம் சொன்னுலும், அந்தத் தண்ணீரை அப்புறப்படுத்துவதற்கு வேண்டிய பணம் எங்களிடத்தில் இல்லை யென்று சொல்லுகிருர்கள். அந்தத் தண்ணீரை வடிகால் வெட்டி, அப்புறப் படுத்தினுல் சுகாதாரம் பாதுகாக்கபபடும் நடவடிக்கையாக இருக்கும். அப்படி அப்புறப்படுத்தாமலிருந்தால் சுகாதார வசதிகள் கெட்டு, மலேரியா போன்ற மற்ற தொற்று வியாதிகள் ஏற்படுவதற்குக் காரணமாக அமையும். எனவே அரசாங்கம் முயற்சி யெடுத்து, சிங்காநல்லூரிலுள்ள அந்தக் கழிவுநீரை அப்புறப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

காச நோய், அதாவது டி. பி. இன்று அதிகமாகப் பரவுகின்றது. கோவை மாவட்டத்திலுள்ள தொழிலாளர்களில் 20 சதவிகிதம், 30 சத விகிதம் பேர்களுக்குப் பரவிக் கொண்டிருக்கிறது. ஆனுல் கோவை மாவட்டத்தில் 15 படுக்கைகள் தான் இருக்கின்றன. அந்த 15 படுக்கைகளை வைத்துக் கொண்டு அந்தப் பிரதேசத்திலுள்ள மக்களின் சீக்கைத் தடுத்துவிட முடியாது. ஆகவே, அவர்களுக்கு காசநோய், டி. பி. போன்றவைகள் அதிகமாக யிருப்பதால், கோவையிலே அதற்கான ஆஸ்பத்திரி துவக்க முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டும். அந்தப் பிரதேசத்து மக்கள் சிகிச்சை பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தும் முறையில் தனியாக ஒரு ஆஸ்பத்திரியைக் கட்டவேண்டும் அல்லது ஜெனரல் ஆஸ்பத்திரியிலேயே அதிகப்படியான வார்டுகளை ஒதுக்கி, அந்தச் சீக்கைத் தடுக்கும் அளவிற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேடடுக்கொள்ளுகின்றேன். (மணியடிக்கப்பட்டது.)

*ஹாஜி ம. மு. பீர்முஹம்மது : பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1970-71 ஆம் ஆண்டிற்கான மருத்துவ மானியக் கோரிக்கையின்மீது முஸ்லீம் லீக் சார்பாகப் பேச அனுமதியளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் மருத்துவமனைக்கு 32 படுக்கைகள் கொண்ட ஒரு தனிப்பிரிவை 5 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக் கீட்டின் மூலம் அரசு அமைக்கவிருப்பதை மானியக் கோரிக்கையில் கண்டு நான மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன்.

தென்பாண்டி நாட்டிலே சிறந்ததொரு நகரமாகிய காயல்பட்டணத்தில் நீண்டகாலமாக அரசின் மருத்துவமனை ஒன்றிருக்கிறது. அந்த ஊரைப் பொறுத்த வரையில், மக்கள் மருத்துவமனைக்கு அரசினரிடமிருந்து என்னென்ன உதவிகளெல்லாம் தேவை என்று கேட்கிறார்களோ அவைகளையெல்லாம் அவர்கள் செய்து வந்திருக்கிறார்கள். அப்படிச் செய்து வந்திருக்கும் நேரத்திலேயுங்கூட, அந்த அரசினர் மருத்துவமனை முழுமை பெற்றிருக்கிறதா என்றால் இல்லை என்றே சொல்ல வேண்டும். எக்ஸ்ரே படம் எடுக்கும் வசதியில்லை. மலஜலம் ஆராயும் ஆராய்ச்சிப் பிரிவு இல்லை. அதே சமயத்தில் அறுவைச் சிகிச்சைக் கூடமும் இல்லாததால் அறுவைச் சிகிச்சை செய்வதற்கும் வாய்ப்பில்லாமலிருக்கிறது. காயல் பட்டணத்திலுள்ள மக்கள் அதேபோன்ற மருத்துவ வசதிகளைப் பெற வேண்டுமென்றால் ஏறத்தாழ 32 மைல் தொலைவிலுள்ள பாளையங்கோட்டை மருத்துவமனைக்கு வரவேண்டியதாயிருக்கிறது என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, 'அன்றலர்ந்த மலர்போல் கரமிருக்கும் அதில் அள்ளி அள்ளிக் கொடுத்த தழும்பிருக்கும்' என்று கவிஞர்களால் பாராட்டப்பட்ட வள்ளல் சீதக்காதி பிறந்த காயல்பட்டிணம் ஊர் மக்கள் ஆஸ்பத்திரி முழுமை பெற உதவி புரிவதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொண்டு, அங்குள்ள மருத்துவ மனையை முழுமைபெற்ற மருத்துவ மனையாக ஆக்கித்தர வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பாளையங்கோட்டை நகரத்திலிருக்கும் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் போதிய அளவு படுக்கைகள் இல்லை. அதனால் மருத்துவக் கல்லூரி மாணவர்களும், வியாதியஸ்தர்களும் மிகவும் தொல்லையுறுகின்றனர். அங்கு போதிய படுக்கைகள் இல்லாததால் மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் போதிய அளவிற்கு பிரத்யட்சக் கல்வி பயிலுவதற்கு வாய்ப்பு இல்லை. எம்.எஸ்., எம்.டி., பட்டம் பெற்ற சிறந்த டாக்டர்கள், சிறந்த நோய் வல்லுநர்கள் அங்கிருக்கிறார்கள். அவர்களின் சேவையைப் போதிய அளவிற்குப் பயன் படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் படிக்கும் மாணவர்களுக்கு அறுவைப் பயிற்சி வேண்டியதாயிருக்கிறது. ஆனால் இங்கு ஆப்பரேஷன் தியேட்டர் போதிய அளவிற்குப் பெரிதாக இல்லை. எனவே, விரைவில் புதிதாக ஒரு ஆப்பரேஷன் தியேட்டர் கட்டிக் கொடுக்கவும் அதிகப் படுக்கைகளுக்கு வேண்டி புதிய மாடிக் கட்டடத்தை விரைவில் கட்டிக் கொடுப்பதன் மூலம் மாணவர்களின் கல்வித்தரம் தகுதியுடையதாக இருக்கும் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பாளையங்கோட்டை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் க்ஷயரோகப் பிணியாளர்களுக்கு என்று தனிப் பகுதியில்லை. காலராப் போன்று தொத்து வியாதியஸ்தர்களுடன் சேர்த்து க்ஷயரோகப் பிணியாளர்களையும் வைத்துள்ளனர். க்ஷயரோகத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களை காலரா போன்ற தொத்து வியாதியஸ்தர்களின் அண்மையில் படுக்க வைத்திருப்பதால் காலரா நோய் தொத்திக் கொள்ளும் அபாய நிலை இருக்கிறது. அந்த நிலையை நீக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு அதிகமான மக்கள் வருகிறார்கள். அங்கு சிறந்த மருத்துவ நிபுணர்கள் இருக்கிறார்கள். ஆனால் பணி புரியக்கூடிய செவிலியர்கள் போதிய அளவு இல்லை. செவிலியர்கள் நர்ஸஸ் பற்றாக்குறை இருப்பதனால் நோயாளிகளைக் கவனிக்க முடியாமல், நோயாளிகள் மரணம் அடைகின்ற சூழ்நிலை இருக்கிறது என்பதை மிக வேதனையுடன் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

பேரவைத் துணைத் தலைவரவர்களே, தென் ஆற்காடு மாவட்டம் சிதம்பரம் வட்டத்தைச் சார்ந்த லால்பேட்டை பேரூராட்சி மன்ற எல்லையில் 15 ஆயிரம் மக்கள் உள்ளனர். அவ்வூரைச் சுற்றிலும் உள்ள கிராமங்க





ளில் 75 ஆயிரம் மக்கள் உள்ளனர். ஆனால் அங்கு அரசினர் மருத்துவ மனை இல்லை. 15 மைல் தூரத்தில் இருக்கின்ற சிதம்பரத்திற்கோ அல்லது 8 மைல் தூரத்தில் உள்ள பிரைமரி ஹெல்த் சென்டர் உள்ள ஆயங்குடிக்கோ தான் மருத்துவம் செய்துகொள்ள மக்கள் செல்ல வேண்டியுள்ளது. மாண்புமிகு சுகாதார அமைச்சரவர்கள் அங்கே சென்று நேரிலேயே குறையைக் கண்டிருக்கிறார்கள். அந்தக் குறை நீங்கும் அளவிற்கு உடனடியாக ஒரு சிறப்புத் திட்டத்தின்மூலம் மருத்துவமனை கட்ட அனுமதி தர வேண்டுகிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய உரையை நிறைவு படுத்துவதற்கு முன்னால் ஒன்றை மட்டும் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் பொன்னாகுடி, இராமாநுஜம் புதூர், முன்னீர் பள்ளம் போன்ற கிராமங்களில் போதிய மருத்துவ வசதி இல்லை. இங்குள்ள மக்கள் மருத்துவ வசதி வேண்டுமென்றால் நீண்டதூரம் உள்ள பாளையங்கோட்டைக்கு வரவேண்டிய நிலை இருக்கிறது. அதனால் இதுபோன்ற கிராமங்களுக்குப் போதிய மருத்துவ வசதி கிடைப்பதற்குச் சிறப்புத் திட்டங்களைத் தீட்டவேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய நாட்டில உண்பதற்கு ஒரு வாயும், உழைப்பதற்கு இரு கரமும் கொண்டு பிறக்கிற குழந்தைப் பிறப்பை தடுத்து நிறுத்துவதற்கு அதிகமாக நிதியைப் பயன்படுத்தாமல் அந்தத் துறையிலே அதிகக் கவனம் செலுத்தாமல் உண்பதற்கு ஒரு வாயும், உழைப்பதற்கு இரு கரமும் கொண்டு இந்த நாட்டுக்கு எதிர் காலத்திலே நல்ல பணியாற்ற இருக்கிற குழந்தைகள் பிறப்பதற்கு மருத்துவத் துறையில் மக்களுக்கு நல்ல வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க இந்த அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை நிறைவுபடுத்திக் கொள்கிறேன். மிக்க நன்றி.

நண்பகல் 12-00

*திரு. க. மு. கதிரவன்: துணைத் தலைவர் அவர்களே, பொது சுகாதாரம், மருத்துவத் துறை ஆகியவைகளின் மானியக் கோரிக்கைமீது, அதை ஆதரித்துப் பேச நான் விழைகிறேன். இந்தியாவைப் பொறுத்த அளவிலே மருத்துவக் கல்லூரிகள் ஏறத்தாழ 92 இன்றைய தினம் இருக்கின்றன. அவற்றிலே தமிழ் நாட்டிலே மட்டும் 9 கல்லூரிகள் இருக்கின்றன. அவற்றில் 8 அரசுத் துறையிலும், ஒன்று தனியார் துறையிலும் இருக்கின்றது. வருடந்தோறும் 1,025 டாக்டர்களை பட்டத்திற்கு அனுப்பக்கூடிய அளவிற்கு இந்த மருத்துவக் கல்லூரிகள் இன்றைய தினம் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு மருத்துவரையும் தயாரிப்பதற்கு ஏறத்தாழ 32 ஆயிரம் ரூபாய் அரசினரால் செலவு செய்யப்படுகிறது. இப்படி ஆண்டுதோறும் டாக்டர்களை உருவாக்கி மக்களுக்கு மருத்துவ வசதிகளை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது. இப்படி மருத்துவத் துறையில் நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிற இந்த அரசைப் பாராட்டாமல் இருக்க முடியாது என்பதை நான் இங்கே கூறிக் கொள்ள விழைகிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பொறுத்த அளவில் செங் கோட்டையில் அரசு மருத்துவ மனையில் குழந்தைகள் பேறு காலத்திற்கு என்று ஒரு தனிப் பிரிவு ஒன்று இருக்கிறது. கரையாளர் குடும்பத்தினர் அன்பளிப்பாக ஒரு கட்டிடத்தைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அந்தக் கட்டிடம் எந்தக் காரணத்திற்காகக் கட்டிக் கொடுக்கப்பட்டதோ அந்தக் காரணத்திற்கு அந்தக் கட்டடம் இன்றைய தினம் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. வேறு காரியங்களுக்குப் பயன் படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். எனவே அரசு கரையாளர் குடும்பத்தினர் எந்தக் காரியத்திற்காக அந்தக் கட்டிடத்தைக் கட்டிக் கொடுத்தார்களோ, அன்பளிப்பாகக் கொடுத்தார்களோ அந்தக் காரியத்திற்குப் பயன்படுத்த வேண்டு மென்று அரசினரால் உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அந்த மருத்துவமனையிலே பெண் மருத்துவர் இல்லாமல் ஏறத்தாழ 6 மாதங்களுக்கு மேலாகிறது. இதையும் நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்து, அதே மருத்துவ மனையில் ஏறத்தாழ 32 பெட்டுகள் கொண்ட மருத்துவ மனையாக அதை ஆக்குவதற்குத் திட்டம் போட வேண்டுமென்று பல வருஷங்களுக்கு முன்னால் அரசினரால் அனுமதிக்கப்பட்டு யுத்த நெருக்கடி காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டது. என்ன காரணத்தாலோ அந்தத் திட்டம் ஒத்திவைக்கப்பட்டது. ஆனால் அந்தச் செயல் குறிப்புத் திட்டம் இன்றையதினம் வரையில் மீண்டும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அந்தச் செயல் குறிப்புத் திட்டத்தை மீண்டும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அரசினரைக் கேட்டுக்கொள்ள விழைகிறேன். தென்காசி, பாளையங்கோட்டை மருத்துவ மனைகளில் போதிய இட வசதி இல்லாத காரணத்தினால் அந்த மருத்துவ மனைக்கு வருகிற நோயாளிகள் வெளியில் தங்க வேண்டிய நிலைமையிருக்கிறது. உள்ளே அனுமதிக்க முடியாத நிலைமையிலே அங்குள்ள சூழ்நிலைகள் இருக்கின்றன. ஆகவே தென்காசி, பாளையங்கோட்டை ஆஸ்பத்திரிகளில் அங்குள்ள கட்டிடங்களை விரிவுபடுத்த வேண்டுமென்று அரசினரை நான் பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

அடுத்து, அங்கே சித்த வைத்திய முறையை அபிவிருத்தி செய்வதற்கு இந்த அரசாங்கம் கல்லூரிக்காகவும், மருத்துவமனைக்கு ஆராய்ச்சிக்கூடம் கட்டுவதற்கும் ஏறத்தாழ 25 லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். இது பாராட்டத்தக்க செயலாகும். ஆனால் சித்த வைத்திய கல்லூரியைப் பொறுத்த வரையிலே முதன்முதலிலே குற்றாலத்திலே ஆரம்பிப்பது என்று இருந்தது. ஆனால் எந்தக் காரணத்தினாலோ பாளையங்கோட்டையிலே இன்றையதினம் அமைக்கப்பட்டிருந்தாலும், மருந்து தயாரிக்கும் கூடத்தையாவது குற்றாலத்திலே அமைக்க வேண்டுமென்று நான் இந்த அரசாங்கத்தை வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன். காரணம் மேற்குத் தொடர்ச்சி மலை சீரிய மூலிகைகளைக் கொண்டது என்பதை சித்தர்களும், முனிவர்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே குற்றாலத்திலே இந்தக் கூடத்தை அமைப்பதுதான் மிகச் சிறந்ததாக இருக்கும் என்பதை நினைவுபடுத்திக் கொண்டு, மூலிகைகள் பயிரிட்டு உரமிட்டு வளர்த்து மருந்து தயாரிப்பது நல்ல பலனை அளிக்காது என்பதை சித்தர்களும், முனிவர்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் கவனத்தில் எடுத்துக் கொண்டு, மூலிகைகள் தாமாக வளர்வதற்கு வேண்டிய வளங்கள் குற்றாலத்திலே ஏராளமாக இருக்கின்றன. எனவே குற்றாலத்தைத் தேர்ந்து எடுக்க வேண்டுமென்று பணிவோடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். சித்த வைத்தியத் துறைக்கு என்று தனியாக ஒரு இயக்குநரை நியமிப்பது என்று அரசாங்கம் அறிவித்து இருக்கிறது. இது மகிழ்ச்சிக்குரியதாகும். பாராட்டத்தக்க செயலாகும். ஆனால், அந்தத் தனி இயக்குநர் அந்தத் துறையிலே அறிவு பெற்றவராகவும், அநுபவம் பெற்றவராகவும் அந்தத் துறையிலே ஆற்றல் பெற்றவராகவும் இருக்க வேண்டும். அப்படிப்பட்டவரை இந்திய வைத்தியத் துறைக்கு இயக்குநராக நியமிக்க வேண்டுமென்று நான் இந்த அரசாங்கத்தை வேண்டிக் கொண்டு மலேரியா ஒழிப்பில் அந்த இலாகாவில் பெரும் அளவில் பணியாற்றுகிற சிப்பந்திகள் ஏறத்தாழ 10 ஆண்டுகாலம் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். இந்தச் சிப்பந்திகள் ஒருநாள் லீவ் எடுக்க வேண்டுமென்றாலும் இன்றையதினம் சம்பளம் இல்லாத லீவாக எடுத்துக் கொள்ள வேண்டிய நிலைமை இருக்கிறது. அவர்கள் பணியிலே செயல்பட வேண்டுமென்றாலும் துணிமணிகள் அவர்களுடைய சொந்தப் பணத்திலே வாங்கிக் கொள்ள வேண்டும் என்ற நிலை இருக்கிறது. அச்சிட்ட பாரங்கள் அவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. அதையும் அவர்களே அச்சிட்டுக் கொள்ள வேண்டிய நிலை இருக்கிறது. அவர்கள் இந்த இலாகாவிலே பத்து ஆண்டுகளாகப் பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். அவர்களை நிரந்தரமாக்க வேண்டும். ஊதிய உயர்வு அளிக்க வேண்டும். லீவ் வசதி தரவேண்டுமென்று இந்த அரசாங்கத்தை வேண்டிக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை முழு அளவில் ஆதரிக்கிறேன் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.



திரு. எஸ். பரமசிவம்: அவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சுகாதார, மருத்துவத் துறை மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னால், ஜில்லாபோர்டு நிர்வாகத்தில் இருந்த மருத்துவ மனைகள் சிலவற்றை, அரசாங்கப் பொறுப்பிலே ஏற்றுக் கொண்டிருக்கிறது, அதிலே பணி புரிந்து வருகிற மருத்துவ சிப்பந்திகளுக்குச் சர்க்கார் மருத்துவமனைகளில் பணி புரிந்துகொண்டுவரும் சிப்பந்திகளுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் அளிக்கப்படாமல், சம்பள உயர்வு கொடுக்கப்படாமல் அவர்கள் மிகவும் கஷ்டமான நிலையில் இருந்து வருகிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்து அவர்களுக்கும் சர்க்கார் சிப்பந்திகளுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் கொடுப்பதற்குச் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆண்டிப்பட்டி சர்க்கார் மருத்துவமனை சரிவர இயங்காத காரணத்தினால் 10 மைல் தூரத்தில் உள்ள பெரியகுளம் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டியதாக இருக்கிறது. அல்லது 13 மைல் தூரத்தில் உள்ள உசிலம்பட்டி மருத்துவ மனைக்குச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. ஆண்டிப்பட்டியில் பஞ்சாயத்து யூனியன் பொறுப்பிலே இருக்கிற மருத்துவ மனையில் போதிய மருந்துகள் கொடுக்கப்படாமல் அங்கு சிகிச்சை அளிப்பதற்கு டாக்டர்கள் போன்றவர்கள் இல்லாத காரணத்தினால் மக்கள் மிகவும் அவதியுறுகிறார்கள். சென்ற ஆண்டு, தற்போதைய பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் அங்கு வந்து இருந்த நேரத்தில் பொது மக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அன்னிய உதவியுடன் கூடிய மருத்துவ மனை அங்கு நிறுவ உதவி அளிப்பதாக வாக்குறுதி அளித்து இருந்தார்கள். ஜில்லா மருத்துவ அதிகாரிகளிடமிருந்து அந்த மருத்துவ மனைக்குப் பஞ்சாயத்து யூனியன் 18 ஆயிரம் ரூபாய் மானியம் கொடுத்தால் தான் இது இயங்க முடியும் என்ற பதில் வந்திருக்கிறது. பஞ்சாயத்து யூனியனில் நிதி இல்லாத காரணத்தினால் இந்த மருத்துவ மனைக்கு அரசாங்கம் நிதி உதவி அளிக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். மேலும் வருஷநாடு மலைப் பிரதேசமாக இருப்பதால், தொற்று நோய் பரவுவதால் அங்குள்ள மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதனால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அங்கு ஓர் ஆரம்பச் சுகாதார நிலையத்தை ஏற்படுத்த வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன். உடனடியாக ஆண்டிப்பட்டியிலே ஒரு மருத்துவ மனை அமைப்பதற்குக் கொடுக்க வேண்டுமென்று மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் விடைபெறுகிறேன், வணக்கம்.

திரு. ம. பொ. சிவஞானம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள பொதுச் சுகாதாரம், மருத்துவ மானியங்களை ஒட்டி சில கருத்துக்களை என் தமிழரசுக் கழகத்தின் சார்பில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இங்கே அமைச்சர் கொடுத்துள்ள அறிக்கையை ஆழ்ந்து படித்ததில் மருத்துவத் துறையிலும், பொதுச் சுகாதாரத் துறையிலும் திராவிட முன்னேற்றக் கழக அரசு கடந்த ஆண்டுகளிலே நல்ல முன்னேற்றம் கண்டிருக்கிறது. வரப்போகும் ஆண்டுக்கும் மருத்துவத் துறை முன்னேற்றத்திற்கான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறேன். அதற்காக இந்த அரசினரையும், பொதுச் சுகாதாரத் துறை அமைச்சரையும் பாராட்டுகிறேன். ஆனால், அதே நேரத்தில் நாட்டு மக்கள் எந்த அளவிற்குப் பாதிக்கப்படுகிறார்கள், மருத்துவம் எந்த அளவிற்கு அரசினரால் செய்ய முடிந்தது என்பதை நடுநிலைமையோடு ஆராய்ந்து பார்க்கிறபோது ஒரு சில செய்ய முடிந்திருக்கிறது, செய்திருக்கிறார்கள். ஆயினும், மக்கள் எதிர்பார்ப்பவற்றை எல்லாம் செய்ய முடியவில்லை என்ற நிலையிலேதான் இருக்கிறார்கள் என்பதை அழுத்தம் திருத்தமாக கூறிக் கொள்கிறேன்.

அதற்குக் காரணம் பணமின்மை என்று சொல்லப்படுவது இயற்கை; அதுதான் வழக்கம், வரலாறு. ஆனால், உண்மையில் பணமில்லை என்பது எந்த நியாயத்தில் ஒப்புக்கொள்ளக்கூடியது என்பதை நாம் பார்க்க வேண்டும். மத்திய அரசு மருத்துவத் துறை ஒன்றை வைத்துக் கொண்டிருக்கிறது. அங்கு அதற்காக பல கோடி ரூபாய்களை ஆண்டுதோறும் பாழடித்துக் கொண்டிருக்கிறது. மருத்துவத் துறை நிர்வாகம் ஒவ்வொரு மாநிலத்தின் கையிலும் இருக்கிறது. நேரடியாக எல்லாக் காரியங்களையும் கவனிப்பது மாநிலங்கள்தான். அப்படியிருக்கும்பொழுது, மாநிலங்களிலுள்ள மக்களுக்குத் தேவைப்படுகிற மருத்துவ வசதிகளைக் கொடுப்பதற்கு மாநிலங்களுக்கு நிதி வசதி இல்லை, என்ற நிலைமையில், எஜமானத்துவத்தைக் காட்டுவதற்காக, மத்தியில் ஒரு மருத்துவத் துறை அமைச்சர், ஸ்டேட் மினிஸ்டர், டெபுடி மினிஸ்டர், காரியதரிசிகள் இப்படி மதயானை போன்று ஒரு இலாகாவை வைத்துக் கொண்டு பல கோடி ரூபாயைப் பாழடிப்பானேன்? இங்கே, மாநிலங்களில் மருத்துவ வசதிகள் செய்து கொடுப்பதற்கு நிதி வசதி இல்லை. இவ்வளவுதான் கொடுக்க முடிகிறது என்று சொல்லிக் கொண்டு இருக்கும் நிலை இன்னும் எத்தனை நாட்களுக்குள் முடியப் போகிறது? ஆகவே, மத்தியிலுள்ள மருத்துவ இலாகாவைக் கலைத்து விட்டு, அதில் ஏற்படுகின்ற செலவுத் தொகையான பல கோடி ரூபாய்களை மிச்சப்படுத்தி, மாநிலங்களுக்குப் பிரித்துக் கொடுக்கிற நிலை விரைவிலே வரவேண்டும். அந்த வாய்ப்பை இந்த அரசு நன்கு பயன்படுத்திக் கொண்டு, இன்னும் அதிக வேகத்தில் மக்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகளைச் செய்து கொடுக்கும் நேரம் விரைவில் வரவேண்டும் என்பதை நினைப்பூட்டுவது என்னுடைய கடமையாகக் கருதுகிறேன்.

இங்கே பேசிய அங்கத்தினர் திரு. ஏ. கே. சுப்பையா அவர்களும், மற்றவர்களும் கிராமங்களில் போதிய மருத்துவ வசதி கிடைக்கவில்லை என்பதை எடுத்துக் கூறினார்கள். அந்த வகையிலே கிடைக்கின்ற நிதி வசதியை வைத்துக் கொண்டு இந்த அரசு கிராமங்களில் மருத்துவ வசதி செய்து கொடுத்திருக்கிறது என்பதில் கொஞ்சம்கூட ஐயப்பாடு இல்லை. ஆனால், எந்த அளவுக்குக் கிராமங்களில் வசதி தேவைப்படுகிறதோ, அந்த அளவுக்குச் செய்ய முடியவில்லை. மருத்துவத் துறையில் சிகிச்சை முறைகள் எந்த அளவுக்கு விஞ்ஞான ரீதியில் வளர்ந்திருந்தாலும், இன்னும் துர்பாக்கியமான கிராம வாசிகள், காளியாத்தா, வேப்பிலை, மாந்திரிகர் இவர்களை நம்பித் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வைத்தியரைவிட மாந்திரிகரைத்தான் உடனடியாக உதவிக்கு அழைக்க வேண்டிய நிலைமை கிராமங்களில் நீடித்து வருகிறது. இந்த நிலைமை நீடிப்பதற்கு முக்கிய காரணம், நமக்குக் கிடைக்கின்ற மருத்துவர்களும் கிராமங்களில் தேவைப்படுகின்ற அளவுக்கு அங்கே போக விரும்பாததுதான்.

அரசுக்கு ஒரு எம்.பி.பி.எஸ் பட்டதாரியைத் தயாரிப்பதற்கு ரூ. 32,000 செலவாகிறது என்று அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. ஒரு பட்டதாரிக்கு ரூ. 32,000 மக்கள் கொடுக்கிற வரிப் பணத்திலிருந்து செலவழிக்கப்படுகிறது. அப்படிப் பயிற்சி பெற்ற மருத்துவர்கள் நாட்டிற்குப் பயன்பட வேண்டும். நாட்டிற்குத் தேவையான முறையில் தேவைப்படுகின்ற இடத்தில் பயன்பட வேண்டும். அப்படிப்பட்ட நிலைமை இருந்தால்தான் ரூ. 32,000 பொது மக்கள் வரிப் பணத்திலிருந்து அரசு செலவழிப்பதற்குப் பொருள் உண்டு. ஆனால், எம்.பி.பி.எஸ். படித்துப் பட்டம் பெற்ற ஒரு மருத்துவர், தனக்கு எந்த இடத்தில் எப்படித் தொழில் வரப் போகிறது, தான் எப்படி முன்னேற முடியும் என்று எண்ணுகிறாரே ஒழிய, ரூ. 32,000 நாட்டு மக்களுடைய வரிப் பணத்திலிருந்து செலவழிக்கப்பட்டு நாட்டு மக்களுக்குப் பயன்படுவதற்





காக தயாரிக்கப்பட்டவர்தான் என்ற நினைப்பு எத்தனை பேர்களுக்கு இருக்கிறது என்பது தெரியவில்லை. அரசு ரூ. 32,000 பொது மக்கள் வரிப் பணத்திலிருந்து செலவழித்து ஒரு மருத்துவரைத் தயார் செய்கிற பொழுது அந்த மருத்துவருக்கு ஆணையிட்டு, அவரிடமிருந்து வேலை வாங்குவதற்கு அரசு தயாராக இருக்க வேண்டும். அரசு தன்னுடைய அதிகாரத்தைத் துணிவோடு பயன்படுத்தி, கிராமப்புறங்களுக்கு அலோபதிக் மருத்துவர்களை அனுப்ப வழிவகை செய்ய வேண்டும்.

க்ஷய ரோகத்திற்காக 3,100 படுக்கைகள்தான் ராஜ்யம் முழுவதும் இருக்கின்றன. துரதிருஷ்டவசமாக வளர்ந்து கொண்டு போகிற நோயாக இருக்கிறது இது. சத்துள்ள உணவு அற்ற சமுதாயத்தில் வளர்கிற நோயாக இருக்கிற இதனால் பாதிக்கப்படுகிறவர்களுக்குச் சிகிச்சையளிக்க 3,000-த்து சொச்சம் படுக்கைகள்தான் இருக்கின்றன. இன்னும் மத்திய அரசோடு போராடி, பொருள் பெற்று, க்ஷயரோக நோயைத் தடுப்பதற்கும், குஷ்டரோகத்தைத் தடுப்பதற்கும் அதிகப் பணம் செலவழிக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

மற்றொன்றையும் நாம் பார்க்கிறோம். விபத்துக்கள் இப்பொழுது ஏராளமாக ஆகிவிட்டன. சென்னையிலிருந்து திருச்சி போவதற்குள் அல்லது சென்னையிலிருந்து சேலம் செல்லுவதற்குள், நாம் வழியிலே ஒன்றிரண்டு விபத்துக்களையாவது பார்க்காமல் போக முடியாது. நம் முடைய எதிரிலேயே நடக்காமல் இருக்கலாம். ஆனால், முன்பு விபத்து நடந்து, விழுந்து கிடக்கிற லாரி, மோட்டார் கார்களைப் பார்க்க முடியும். அந்த அளவுக்கு விபத்துக்கள் நேருவதன் காரணத்தினால், விபத்துக்குள்ளாகிறவர்களுக்கு அவசர சிகிச்சை அளிப்பதற்குப் போதிய வசதிகள் இல்லை. உளுந்தூர்ப்பேட்டையிலிருந்து திருச்சி செல்லும் பொழுது, இடையில் 80 மைல் தூரத்திற்கு மருத்துவ வசதி அளிப்பதற்கு ஒரு மருத்துவ மனையும் கிடையாது. அவ்வளவு நீண்டதூரம் உள்ள இடங்களில் விபத்து ஏற்படுமானால், உடனுக்குடன் மருத்துவ உதவி பெறுவதற்கு இடமில்லாமல் இருப்பதினால், விபத்துக்குள்ளானவர்களைக் காப்பாற்றுவதற்கான அவசர முயற்சி எடுத்துக் கொள்வதற்கு வழியில்லாமல் போய்விடுகிறது. அதிலும் மோட்டார் காரில் போகின்றவர்கள் விபத்துக்குள்ளானது என்றால், அவர்களில் பலர் சமுதாயத்திற்கு மிகவும் தேவைப்படுகிறவர்களாக இருந்து விடுகிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், நம்முடைய பெருமதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் விபத்துக்குள்ளானார்கள். முன்பிருந்த முதல் அமைச்சர் அவர்களும் விபத்தில் சிக்கிக் கொண்டார்கள். பல எம்.எல். ஏ.-க்கள் கூட விபத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிச் சமுதாயத்திற்கு இன்றியமையாது தேவைப்படுகின்ற தலைவர்கள் விபத்துகளில் சிக்குகின்ற அபாயம் இருக்கிறது. அப்படி விபத்துக்குள்ளானவர்களுக்கு விரைவிலே மருத்துவ வசதி அளிப்பதற்கு, அவசர சிகிச்சை அளிப்பதற்கு வழியில்லாத நிலை ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே, 50 மைல் தூரத்திற்கு ஒரு இடத்தில் உடனுக்குடன் மருத்துவ வசதி அளிப்பதற்கு, விபத்துக்குள்ளானவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்றையும் நாம் பார்க்கிறோம். போதுமான நர்சுகள் நம் முடைய மருத்துவ மனைகளில் இல்லை. அதுவும் ஜெனரல் வார்டுகளில் அதாவது பொது வார்டுகளில் 20 நோயாளிகளுக்கு ஒரு நர்சு என்ற நிலைதான் இருக்கிறது. அண்ணா அவர்கள் அமெரிக்காவிலிருந்து திரும்பியதும், முதல் முதலாக நான் அவரைச் சந்திக்கச் சென்ற பொழுது, "ஒரு நோயாளிக்கு இரண்டு நர்சுகள் போடுகிறார்கள் அமெரிக்காவில்" என்று சொன்னார்கள். இது அமெரிக்கா இல்லை என்பது எனக்குத் தெரியும். இருந்தபோதிலும், 10 நோயாளிகளுக்கு ஒரு நர்சாவது இருக்க வேண்டாமா? ஒரு நர்சுக்கு 20 நோயாளிகள் இருந்தால் என்ன செய்வது? நோயாளி, 'ஐயோ' என்று அலறினால்,

[திரு. ம. பொ. சிவஞானம்] [1970 மார்ச் 30

'என்ன ஆயிற்று' என்று கேட்பதற்குள், இன்னொரு நோயாளி அலறுகிறார். இப்படி பல நோயாளிகள் அலறும்பொழுது, 'என் ஐயா அலறுகிறாய், என் உயிரே போகிறது என்று கூறுத்துக்கொள்ளக்கூடிய நிலையில் நர்சுகள் இருக்கிறார்கள், கூடுதலான நர்சுகளை தாராளமாக நியமிக்க நம்முடைய அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நர்சுகளுக்குப் பயிற்சி கொடுப்பதைப் பொறுத்தவரையில் ஒருகுறை இருக்கிறது. அவர்கள் எஸ் எஸ். எல்.சி. வரை படித்துவிட்டு, நர்சு வேலைக்காகப் பயிற்சிக்குப் போகிறார்கள். அவர்களுக்கு இங்கிலீஷ் மீடியத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஆங்கிலம் சரிவரத் தெரியாமல் அவர்கள் தடுமாறுகிறார்கள். மருந்துகள் பெயரைச் சொல்லும்பொழுது, அவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளாமல் மருந்தை மாற்றிக் கொடுத்துவிடப் போகிறார்களே என்ற கவலை எனக்கே இருந்தது, நான் மருத்துவ மனையில் படுத்துக் கொண்டிருக்கும்பொழுது. மருத்துவக் கல்லூரியில் தமிழில் போதிப்பதற்கு கொஞ்ச காலதாமதம் ஆனாலும் நர்சு பயிற்சியைப் பொறுத்த அளவில் தமிழ் மீடியத்தில் அவர்களுக்கு பயிற்சி அளிப்பது நலமென்று கருதுகிறேன். தமிழ்மீதுள்ள பற்றினால் என்று இல்லாவிட்டால்கூட, மனித உயிர்மீதுள்ள பற்றினால்தான் இதைச் சொல்கிறேன்.

சென்னை நகரத்தில் ராயப்பேட்டை மருத்துவ மனை ஆலோசனைக் குழுவின் தலைவனாக நான் இருக்கிறேன். அதிலிருந்து அனுபவம் கண்டு நான் இங்கு சிலவற்றைக் கூறுகிறேன். கார் விபத்து ஏற்பட்டால், என்ன நடக்கிறது என்றால், விபத்து ஏற்பட்டதை குறித்து போலீஸுக்குத் தகவல் போனவுடன், சப் இன்ஸ்பெக்டர் போன்ற போலீஸ் அதிகாரி விபத்து நடந்த இடத்திற்குச் செல்கிறார். அவர் விபத்து நடந்த இடத்திற்குச் சென்றவுடன், வழக்குக்கு வேண்டிய தடயங்களைக் காப்பதற்கு அவசர அவசரமாக முயற்சி எடுத்துக் கொள்கிறாரே தவிர, முதலில் விபத்துக்குள்ளாகி இரத்த வெள்ளத்தில் விழுந்து கிடக்கிறவருக்கு உதவி புரிவதில்லை. அந்தப் போலீஸ் அதிகாரி முதலில் வழக்குக்கு வேண்டிய அடையாளங்கள், சாட்சியங்கள் இவைகளை மிக அமைதியோடு தயார் செய்கிறார். பிறகு அடிபட்டவரை, ரிக்ஷா பிடித்து, அதில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்புகிறார். அடிபட்ட வருக்கு ரத்தம் போய்க் கொண்டிருக்கிறது. ராயப்பேட்டை மருத்துவ மனைக்குக் கொண்டு போனால், அங்கே நியூரோ ஸர்ஜிகல் வார்டு இடையாது. மூளை நரம்பு அறுவை சிகிச்சை செய்ய வேண்டியிருக்கும்— ஜெனரல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோக வேண்டும் என்று சொல்லப் படுகிறது. ஜெனரல் ஆஸ்பத்திரிக்குக் நோயாளியைக் கொண்டுபோனால், வார்டுக்குப் போவதற்கு ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் ஆகிறது. இப்படியெல்லாம் நான் நடந்ததைப் பார்த்துச் சொல்கிறேன். ஒரு மணி நேரம் விபத்துக்குள்ளானவர் அப்படியே கிடக்கிறார். ஒரு ஆள்கூட உதவிக்கு வரவில்லை. ஏனென்று கேட்டால் 'சம்பந்தப்பட்ட டாக்டர் ஆபரேஷன் தியேட்டரில் இருக்கிறார் என்று கூறுகிறார்கள். நர்சையாவது' உதவிக்கு அனுப்பக் கூடாதா, ஏன் அனுப்பவில்லை? என்று கேட்டேன். நர்சுகள் போதாது என்று சொல்லிவிட்டுப் போய்விடுகி றார்கள். அதற்குள் விபத்துக்குள்ளானவர் போய்விட்டார். நேரத்தில் சிகிச்சை அளித்து, காக்கத் தவறியதன் விளைவாக அந்த உயிர் போய் விட்டது. அதுவும் சாமானியப்பட்டவர்களாக இருந்தால், அவர்கள் குரல் வெளியுலகுக்குக் கேட்காமலேயே அவர்களுடைய வாழ்க்கை முடிந்து விடுகிறது.

இந்த நிலையை கவனத்தில் கொண்டு, ராயப்பேட்டை மருத்துவ மனையில் 'நியூரோ ஸர்ஜிகல் வார்டு' ஒன்றை ஏற்படுத்த வேண்டும். இந்த வசதி ராயப்பேட்டை மருத்துவ மனையில் இல்லை என்பதே தெரியாத நிலை இருக்கிறது. ஆகவே, தெரியாத் நிலையில் ராயப்பேட்டை மருத்துவ மனைக்குப் போய் ஏமாந்து, பிறகு ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப்



1970 மார்ச் 30] [திரு. ம. பொ. சிவஞானம்]

போகும்பொழுது, இடையிலே காலதாமதம் ஆகி உயிர் போய்விடுகிறது. ஆகவே, நியூரோ சர்ஜிகல் வார்டை ராயப்பேட்டை மருத்துவ மனையில் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தென் சென்னையின் ஜனத்தொகை அதிகமாகிக் கொண்டு வருகிறது. இந்திரா நகர், சாஸ்திரி நகர் போன்ற புதிய நகர்கள் ஏற்பட்டிருக் கின்றன. ஆகவே, ராயப்பேட்டை மருத்துவ மனை தென் சென்னை வாசிகளுக்குப் போதுமானதாக இல்லை. இன்னொரு ஆஸ்பத்திரி தென் சென்னையில் அமைக்கவேண்டும. இடைக்காலத்தில் சைதை மருத்தவ மனையில் 100 படுக்கைகள் வைக்க வசதி செய்து கொடுத்து, அதை ஒரு மருத்துவ மனையாக மாற்றி அமைக்க வேண்டும். ராயப்பேட்டை மருத்துவ மனையில் மேல்மாடிகளை உயர்த்துவதற்கு இடம் இருக்கிறது. சுற்றுப்புறத்தில் காலி நிலம் இருக்கிறது. அதனால், கட்டடங்களை விரிவுபடுத்தவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. ராயப்பேட்டை மருத்துவ மனையை விஸ்தரித்து, கூடுதலாக மருத்துவர்கள் கொடுப்பதற்கும், படுக்கைகளை அதிகரிப்பதற்கும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்திலுள்ள மருத்துவ மனைகள் அனைத்திலும் மொத்தம் 21,000 படுக்கைகள் இருக்கின்றன. 5,000-ஆக இருந்தது, 21,000-ஆக உயர்ந்திருக்கிறது மூன்று ஐந்தாண்டுத் திட்ட காலத்தில். அவ்வளவு வளர்ச்சி ஏற்பட்டும், இன்னும் படுக்கை வசதி போதுமான தாக இல்லை. ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப் போனால், கட்டிலின் மேலே ஒருவர் படுத்துக் கொண்டிருக்கிறார், கீழே ஒருவர் படுத்துக் கொண்டிருக் கிறார். மேலேயிருந்து வயிற்றுவலி என்று ஒரு நோயாளி அலறிக் கொண்டிருக்கிறார். கீழேயிருந்து ஒரு நோயாளி அலறிக் கொண்டிருக் கிறார். அதனால் அங்கிருக்கும் சூழ்நிலையே மோசமாகிவிடுகிறது. இந்த நிலைமை நீடித்து இருந்து கொண்டிருக்கிறது. காங்கிரஸ்காரர்களும் எண்ணிப்பார்க்க வேண்டும், தொன்றுதொட்டு இந்த நிலைமை நீடித்து வருகிறது. இப்பொழுது இருக்கிற ஆட்சியினிடத்தில் விண்ணப்பிக்க வேண்டும். அதனால் விண்ணப்பித்துக்கொள்கிறேன்.

இந்த நிலையைப் பார்க்கும்போது, அரசு மருத்துவ மனைகளில் அதிகப்படியான படுக்கைகள் தேவைப்படுகின்றன. அதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

100 ரூபாய் சம்பளத்திற்கு அதிகமாக வாங்குகிறவர்களுக்கு இலவச சிகிச்சை கிடையாது என்று சொல்லுகிறார்கள். இந்தக் காலத்தில் 100 ரூபாய் சம்பளம் என்ன பெரிய சம்பளம் என்று எனக்குத் தெரியவில்லை. இன்றைக்கு ரேஷனுக்குச் சம்பள வரம்பை உயர்த்தி இருக்கிறோம், வருமான வரிக்கு சம்பள வரம்பை உயர்த்தியிருக்கிறோம், ரூபாயின் மதிப்பு குறைந்து போனதால்! ஆகவே, 100 ரூபாய் என்ற வரம்பை 300 ரூபாய் என்று உயர்த்தி, அதற்குக் குறைந்த சம்பளம் வாங்குகிறவர்களுக் கெல்லாம் இலவச சிகிச்சை என்று ஏற்பாடு செய்ய வேண்டும், அதற்கு நம்முடைய அரசு முன்வர வேண்டும்.

ஜெனரல் ஆஸ்பத்திரி, ராயப்பேட்டை ஆஸ்பத்திரி இவைகளில் பெரிய பெரிய நிபுணர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய மருத்துவத் திறமைக்குத் தமிழ்நாடு பெருமைப்பட வேண்டும், இப்படிப்பட்ட பெருமையை நாட்டுக்குத் தேடித் தந்தவர்களுக்கு நாம் நன்றியும் பாராட்டும் செலுத்த வேண்டும். ஆனால், ஒரு யூனிட் தலைமை மருத்துவருக்கும், இன்னொரு யூனிட் தலைமை மருத்துவருக்கும் இடையே பரஸ்பர நல் லெண்ணம், ஒத்துழைப்பு இல்லை. ஒவ்வொருவரும் ஒரு தனி ராச்சியத்தின் தலைவராக தங்களை நினைத்து இருந்துகொள்கிறார்கள். பரஸ்பர இணக்கமும்,

ஒத்துழைப்பும் இல்லாத ஒரு போக்கு மருத்துவ மனைகளில் இருந்து வருகிறது. நோயாளிகள் தனது யூனிட்டுக்குப் பொறுப்பில்லாத இன்னொருவரிடம் ஆலோசனை பெறக்கூட முடியாமல் இருக்கிறது. நாம் கைதியாக இருக்கிறோமோ என்று எண்ணும் நிலை நோயாளிக்கு இருக்கிறது. மருத்துவர்கள் இப்படிச் செலுத்தும் அதிகாரம், பரஸ்பர ஒத்துழைப்பற்ற தன்மை பெரிய பெரிய மருத்துவ மனைகளில் இருக்கிறது. இந்தப் போக்கு மாற வேண்டும். மருத்துவ மிஷனரி மருத்துவ மனைகளில் ஒரு மனிதனின் உடலில் எவ்வளவு வியாதிகள் வருமோ அது சம்பந்தப்பட்ட மருத்துவர்கள் அவ்வளவுபேரும் பரிசோதித்துப் பார்த்து, முடிவுக்கு வருகிறார்கள். இங்கே மருத்துவ மனைக்குச் செல்பவர்கள் பெரியவர்களாக இருந்தால்தான் அப்படி. சாதாரண ஏகாம்பரம்—குப்பன் என்றால், ஒரே மருத்துவரிடம்தான் இருக்க வேண்டும். அவனுக்கு வேறு நோயே வராது என்ற உறுதியான நம்பிக்கை மருத்துவர்களுக்கு !

சென்னை மருத்துவ மனைகளில், குறிப்பாக ஜெனரல் ஆஸ்பத்திரி போன்றவற்றில் ஏ, பி. வார்டுகள் அதிகப்படுத்தப்பட வேண்டும். அங்கே போய் சிகிச்சை பெற எம்.எல்.ஏ.-களுக்கு உதவியாக இருக்கும். இப்பொழுதெல்லாம் மருத்துவ மனையில் போயிருப்பது நாகரிகமாக எண்ணும் நிலை இருக்கிறது. முன்பு மருத்துவ மனையில் இருப்பதே கௌரவக் குறைவாகக் கருதப்பட்டது. ஆனால், இப்பொழுது, மருத்துவ மனையில் படுத்துக் கொள்வதே அரசியல்வாதிக்கு நாகரிகமாகப் போய் விட்டது. ஆகவே, ஜெனரல் ஆஸ்பத்திரியில் ஏ, பி வார்டுகளை அதிகப் படுத்த வேண்டும் என்று கோரி, இவ்வளவு நேரம் பேச வாய்ப்பினைத் தந்ததற்கு பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

**திரு. எம். மேத்தா :** துணைத் தலைவர் அவர்களே, இம் மானியக் கோரிக்கைகள் மீது எனனுடைய கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன். இந்தக் கோரிக்கைகளில் ஒன்றில் ரூ. 15,97,10,000-க்கு மேற்படாத தொகையும், இன்னொன்றில் ரூ. 9,01,05,200-க்கு மேற்படாத தொகையும், மூன்றாவதில் ரூ. 45,03,000-க்கு மேற்படாத தொகையும், ஆக மொத்தம் ஏறத்தாழ ரூ. 25 கோடியளவில் சுகாதாரம், பொது நலன் ஆகியவற்றிற்கு அளிக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் முன் மொழிந்திருக்கிறார்கள். இந்தப் பெருந் தொகையைப் பார்க்கும்போது, இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் நூல்களையும் பார்க்கும்போது, 1951-ம் ஆண்டு முதல் தொடர்பாக பிரசவமான குழந்தைகள் எத்தனை பேர்கள் இறந்தார்கள், 1961 வரைக்கும் அது குறைக்கப்பட்டிருக்கிறது, தொடர்பாக 1961 வரைக்கும் பிரசவ நேரத்தில் தாய்மார்கள் இறந்தவர்கள் எத்தனை பேர்கள் காப்பாற்றப்படும் சூழ்நிலை முன்னேறியிருக்கிறது என்பதையெல்லாம் இந்த நூலிலே வெளியிட்டு இருக்கிறார்கள். அதே நேரத்தில், இந்த நூல்களில் ஒன்றில், அளவோடு பெற்று வளமோடு வாழ்க என்று குறிப்பிட்டு இருப்பதை ஹாஜி பீர் முஹம்மது அவர்கள் கொஞ்சம் திருத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். நானும் இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்தவன் தான். ஓரளவு அந்த முறையில் கல்வி பெற்றவன்தான். இருப்பினும், அவர்களோடு சர்ச்சையில் இறங்கப் பிரியப்படவில்லை. என்னுடைய சொந்த நிலையைப் பொருத்து, அளவோடு பெற்று வளமோடு வாழ்க என்பது வலியுறுத்துகிறேன். ஏனென்றால், பெருமதிப்பிற்குரிய நாவலர் ஒரு மாத காலத்திற்கு முன்னால், பெரியகுளத்திற்கு வந்தபோது, குடிநீர்ப் பிரச்சினை சம்பந்தமாக சோத்துப்பாறை, குப்பம்பாறை நகராட்சித் தலைவன் என்ற முறையில கோரிக்கையை குறிப்பிட்டபோது, 'உங்களுக்கு நிக்காஹ செய்துவைத்த போது, அளவோடு பெற்றுக்கொள் என்று கூறினேன். ஆனால் நீங்கள் ஆண்டுக்கு ஒரு அவதாரம் என்ற முறையில் வந்து கொண்டிருக்கிறது, நாட்டின் நலத்தில் அக்கறை கொண்டு அளவோடு பெற்றுக்கொள்ளுங்கள்' என்று குறிப்பிட்டார்கள். இதன் தொடர்பாக மறுதினம் ஒரு திருமணத்தின்போது நான் தலைமை வகித்து வாழ்த்துக் கூறியபோது, நீ





இப்படிச் சொல்லுகிறாய், உன் தலைவர் அப்படிக் கூறியிருக்கிறாரே, இது சரியா என்று கேட்ட நேரத்தில் நான், என்னவோ தடபுச் செய்துவிட்டேன், நீங்கள் சரியாக இருங்கள் என்ற முறையில், முறைப் படுத்திப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொன்னேன் என்பதை, ஹாஜி அவர்களுக்குப் பதில் சொல்லும் முறையில் இல்லை, சொந்த நிலை என்பதைத் தெரிவிக்கிறேன். அதிகமாக வரக்கூடிய தொல்லைகளை ஒட்டி அளவோடு பெற்று வளமோடு வாழ்க, நாம் இருவர், நமக்கு இருவர் என்கிற கொள்கையையும் வலியுறுத்த விரும்புகிறேன்.

இந்த நிலையில் பெருந்தொகை ஒதுக்கப்பட்டிருக்கும் கல்விக்கு அடுத்தபடியாக இதற்கு பெரிதாக இருப்பது சரியே என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இந்த நாட்டு மக்கள் ஒதுக்கியிருக்கும் தொகைகளின் பலனைப் பெற வேண்டும் என்றால், அனுபவிக்க வேண்டும் என்றால், நல்ல முறையில் பணிகள் நடைபெற வேண்டும். எனவே அந்த நிலையில் அந்த இலாகாவைச் சேர்ந்தவர்கள் பொது மக்களோடு அன்பாகவும், பண்பாகவும் பழக வேண்டும். மருத்துவ மனைகளைப் பெருக்கியிருக்கிறோம், வசதிகளைப் பெருக்கியிருக்கிறோம் என்று சொல்லும் அதே நேரத்தில், பல்ப் பல மருத்துவ மனைகளில் போதுமான வசதிகள் கிடையாது. உதாரணமாக, போடி மருத்துவ மனையில் போதிய சாமான்கள் இல்லாததால் மக்கள் பக்கத்து ஊர்களுக்குப் போக வேண்டிய நிலை இருக்கிறது. அதே போலத்தான், பெரிய குளத்தில் இருக்கக்கூடிய மருத்துவ மனையில், அது பழமையானது, மருந்துகள், மற்ற வசதிகள் போதாது. கொடைக்கானலை எடுத்துக் கொண்டால், பல்வேறு நாட்டு மக்களெல்லாம் வரும் பகுதி அது. சிறப்பு மானியம் கொடுத்து, உல்லாசப் பயணிகள் வரும் அந்தப் பகுதிக்கு, சிறப்புச் செய்யவேண்டும். இருபது ஆண்டு காலமாக செப்பனிடப்படாத நிலையில் அந்த மருத்துவமனையிருக்கிறது. அந்தப் பகுதியில் இருக்கும் மருத்துவ மனைக்குச் சென்றால், அங்கேயிருக்கக் கூடிய, தரையில் குழிகள காலில் தட்டி, அவதிப்பட வேண்டியிருக்கிறது. அங்கே நார்ப்பாய், கம்பளிகள், மெத்தைகள், ஒலிபெருக்கி அமைப்பது இவை வேண்டும் என்று எவ்வளவோ நாட்களாகக் கேட்டும், மருத்துவ அதிகாரிகள் கொடுத்து அவை சரிவர வந்தபாடில்லை. மலைப்பகுதியில், சுகாதாரத்தை நல்ல முறையில் வைக்க வேண்டும். உல்லாசப் பயணிகள் வரும் பகுதி. அந்தப் பகுதிக்குச் சிறப்பு மானியம் கொடுத்து, சிறப்புப் பணி செய்ய வேண்டும்.

புதிதாக ஒரு பிரசவ விடுதி அண்மையில் திறப்பு விழா நடக்க இருக்கிறது. அந்த மனைக்கு இரண்டு மூன்று ஹீட்டர்கள் தேவை. மலைப் பிரதேசமாக இருப்பதால், அங்கே ஜன்னி என்ற நோய், குளிர் காரணமாக, பிரசவித்தவர்களுக்கு வந்துவிடும். ஆகவே, ஹீட்டர்களை உபயோகப்படுத்தி பெண்களைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் இருக்கிறது. தொண்டிக்காடு, பண்ணைக்காடு போன்ற இடங்களில் டாக்டர் வசதியில்லை. பெரியகுளத்திலும் இல்லை. டாக்டர்கள் வந்தாலும் தங்குவதில்லை. மாற்றம் கேட்டுக் கொள்கிறார்கள், லீவ் போடுகிறார்கள். அதற்குக் காரணம் குடியிருப்பு வசதி கிடையாது. ஆகவேதான் அவர்கள் தங்காமல் போய்விடுகிறார்கள். சுகாதார அமைச்சரிடம் அது பற்றிப் புகார் செய்தபோது, மலைப்பகுதிகளுக்கு ம்யூசுவல் ட்ரான்ஸ்பரில் வருகிறவர்கள் இருந்தால் சொல்லுங்கள் என்றார். அப்படி வரமாட்டேன் என்கிறார்கள்.

அடுத்தபடியாக அண்மையில், கொடைக்கானலில் உள்ள ஒரு நர்ஸ் மதுரைக்கு மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தார்கள். மதுரை பி. 12
யில் உள்ள ஒரு நர்ஸும் கொடைக்கானலுக்குச் செல்கிறேன் என்று சொன்னார்கள். இருவரும் பரஸ்பரம் மாற்றம் செய்து கொள்கிறோம் என்று சொல்லி, இரண்டு மாதங்களுக்கு முன்னால் எழுதிக் கொடுத்தும் இதுவரையில் அந்த மாறுதல் செய்யப்படவில்லை. மலைப்பகுதியில் பழக்கப்

பட்ட மக்களை வைத்தால்தான் அவர்கள் தங்கியிருக்க முடியும். குளிர்ப் பிரதேசங்களில் இருப்பவர்களை தரைப் பகுதிகளுக்கு மாற்றம் செய்யக் கூடாது. எதாவது ஒரு அதிகாரியை குளிர்ப்பிரதேசத்திற்கு மாற்றினால் வழக்கமாகச் செய்கின்றபடி லீவைப் போட்டுவிட்டு இருந்துவிடுகிறார்கள். இந்த நிலைமையினால் அப் பகுதியில் செய்ய வேண்டிய வேலைகள் தடைப்பட்டுப் போகின்றன. இதைக் குறித்து நான் பல தடவைகள் இந்தச் சட்டமன்றத்திலே எடுத்துக் கூறியிருக்கிறேன். மேலும் டாக்டர்களுக்கு நல்ல குடியிருப்பு வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும்.

பெரிய குளத்தைப் பொறுத்தவரையில் ஒரு டாக்டர் அம்மாள் வந்து மூன்று மாதம் ஆகிறது. நல்லபடியாக அங்கு பணியாற்றி வருகிறார்கள். ஆனால் நேற்று ஒரு தபால் வந்தது. அதில் அந்த டாக்டருக்கு மாறுதல் இடம் கொடுத்திருக்கிறார்கள். திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் கூறியமாதிரி ஒரு டாக்டரை குறிப்பிட்ட இடத்தில் ஐந்து வருஷம், பத்து வருஷம் என்று போட்டு வைக்கிறீர்கள். நன்றாக வேலை செய்பவர்களைத் திடீர் திடீரென்று மூன்று மாதம், ஆறுமாதம் என்ற அளவில் உடனே மாற்றிவிடுகிறீர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு இந்த நாட்டில் முக்கியமாக குடிநீர்ப் பிரச்சினைமீது அக்கறை செலுத்தி வந்திருக்கிறது. வறட்சி நிவாரண வேலைகளுக்கு 18 கோடி ரூபாய் அளவில் செலவழித்திருக்கிறது. பத்தாயிரம் ஜனத்தொகை உள்ள ஊர்கள் 590 இருக்கின்றன. இவற்றிற்கு எல்லாம் குடிநீர் வசதிக்காக சுமார் 130 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. சிறுகச் சிறுக செய்ய வேண்டுமென்ற காரணத்தால் 120 கிராமங்களுக்கு 250 லட்சம் ரூபாய் செலவில் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறது. இந்தத் திட்டங்களை உடனடியாகச் செய்து கொடுக்க இந்த அரசு அக்கறை செலுத்தவேண்டும் என்று கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. ஏ. அ. சுப்பராஜா :** தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது மருத்துவ வசதிகள்மீது விரிவாகப் பேசிவிட்டபடியால், டவுன் பிளானிங் ஸ்கீம்—அதாவது நகர் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் நகரங்களிலே ஏழை மக்கள் படுகின்ற பாட்டைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இராஜபாளையம் நகர சபையில் 1944-ம் வருடத்தில் டவுன் பிளானிங் ஸ்கீம் நோட்டிபை செய்யப்பட்டது. இன்றைக்கு கிட்டத்தட்ட 26 வருடங்கள் ஆகியும்கூட 3 ஸ்கீம்கள் சாங்ஷன் ஆகவில்லை. 1944-ம் வருடத்தில் இருக்கக்கூடிய காலி நிலங்களையெல்லாம், சொந்தக்காரர்கள் மினிமம் இவ்வளவு ஸ்கொயர் ஃபீட் முன்பின் பக்கங்களில் இடம் விட வேண்டும். இத்தனை அடி சுற்றுச் சுவர் இருக்க வேண்டும் என்றெல்லாம் பல்வேறுபட்ட சட்டங்களைச் செய்தார்கள். நகரத்தைச் சீரமைப்பதுதான் முக்கிய நோக்கமாகும். இன்றைக்கு நிலைமை எப்படி இருக்கிற தென்றால், சாங்ஷன் ஆனால் தான் சட்டத்திலே அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்கத்தின் ஜி. ஓ. இருக்கிறது. அதாவது,

'In a case where permission has been refused and the party proceeds with or has partly or wholly completed the work of the construction of the building unauthorisedly, it is held by Government in G.O. No. 1916, Public Health, dated 7th July 1944 that action to demolish the building or work or to prosecute the party, in respect of the infringements of the Town Planning Scheme proposed for the area, cannot be taken under the provisions of the Madras District Municipalities Act, 1920. It is also stated by Government that only after Town Planning Scheme is sanctioned and comes into force that proceedings can be initiated by the





responsible authority of the Scheme to demolish or remove the unauthorised building or work in pursuance of section 19 of the Town Planning Act . . .'

என்று இருக்கிறது. ஆக்ஷன் எடுக்க வேண்டும் என்றால், அது சாங்ஷன் ஆக வேண்டும் என்றால், அதற்காக நோட்டிபை செய்ய வேண்டும். ஆறு மாதத்தில் ரிஜிஸ்தார் செய்ய வேண்டும், பின்னர் கலெக்டர் ஆபீசுக்குப் போக வேண்டும் என்றெல்லாம் விதிமுறைகள் இருக்கின்றன. சாங்ஷன் ஆகவில்லையென்றால் சட்டப்படி அந்தக் கட்டிடத்தை இடிக்கவோ, அகற்றவோ முடியாது. இருபது வருடங்களாகப் பணவசதி படைத்தவர்கள் இந்தச் சட்டச் சிக்கலைப் புரிந்து கொண்டு கட்டடங்களைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு ஸ்கீம் வந்தால் ஒரு சட்டம் வந்தால் அதை ஏழை முதல் பணக்காரர் வரை எல்லாருக்கும் ஒரே மாதிரியாக பாரபட்சமற்று அமல்படுத்த வேண்டும்.

சாதாரணமாக ஏழை ஒருவன் தன்னுடைய பாட்டன் காலத்தில் வாங்கிய சொத்தை பாகப் பிரிவினை செய்துகொண்டான் என்றால், அவனை வெளியேற்றும் நிலை இப்போதைக்கு இருக்கிறது என்றால் அதில் ஆச்சரியம் இல்லை. வீடு கட்ட வேண்டுமென்று மனுச் செய்து கொண்டால், வீடு இப்படி இப்படி இருக்க வேண்டும் என்று சொல்வார்கள். இதையெல்லாம் பார்த்தபின் நமக்கு இந்த சொத்து வேண்டாம். விற்றுவிட்டு வேறு எங்காவது போய்விடலாம் என்றுதான் அவன் நினைப்பான். அவனுக்கு இருக்கும் நிலம் பூர்வீகமாக வந்தது. இன்றைக்கு மார்க்கெட் ரேட்டுக்கு அவனால் விலை கொடுத்து வாங்க முடியாது. சாங்ஷன் ஆன ஸ்கீம்களை எல்லாம் உடனடியாக அமல்படுத்த வேண்டுமென்று இந்த மன்றத்தில் மூன்று தடவைகள் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கவனத்தை செலுத்துவோம் என்று சொன்னார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாக உடனடியாகச் செய்ய வேண்டும். 26 வருடங்களுக்கு முன்பு போட்ட ஸ்கீம்களை எடுத்துவிட வேண்டும். ஹை ட்வெல்லர்ஸ், ஏழைகள் வசிக்கும் பகுதி என்று பிரித்துவிட வேண்டும். காலியாக இருக்கக்கூடிய இடங்களுக்குப் புதிதாக ஸ்கீம் போட வேண்டும். புதிதான ஸ்கீம்களை ஏற்படுத்தி, நோட்டிபை ஆனவுடன் யாரும் வீடு கட்டக் கூடாது என்று சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டும். முன்பு 40 அடி என்று ஒதுக்கப்பட்ட இடத்தில் இப்போது 15 அடி கூட ஒதுக்குவதில்லை. இது சம்பந்தமாக நல்ல திருத்தங்களை நல்லவிதமாக எடுக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கும்போது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை விளக்கினால் சந்தோஷமாக இருக்கும்.

மருத்துவத்தைப் பொறுத்த வரையில் டிஸ்ட்ரிக்ட் ஹெட்க்வார்ட்டர்ஸ், அல்லது தாலுக்கா ஹெட்க்வார்ட்டர்ஸில்தான் மருத்துவ மனைகளை அமைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். எங்கே ஜனத்தொகை அதிகமாக இருக்கிறதோ, அங்கேதான் மருத்துவ மனைகளைக் கட்டவேண்டும். ஜில்லா, தாலுகா தலைமையிடங்களில் அமைக்க வேண்டும் என்று சொல்வது சரியல்ல. ஜனத்தொகை அதிகமுள்ள இடங்களில்தான் மருத்துவ மனையை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு உரையை முடிக்கிறேன்.

*** திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். மருத்துவத் துறையைப் பொறுத்த வரையில் கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் புள்ளி விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. முதலாவதாக, அரசு மருத்துவ மனைகளில் 7,955 படுக்கைகள்தான் இருந்தன. தற்போது படுக்கைகளின் எண்ணிக்கை 21,299 ஆக உயர்ந்திருக்கிறது. குறிப்பாக 1966–67 முதல் 1969–70 வரை 1,371 படுக்கைகள் அதிகரித்திருக்கின்றன. மாண்புமிகு ம. பொ. சிவஞானம் அவர்கள் கூறியதுபோல,

[திரு. நா. வீராசாமி] [1970 மார்ச் 30.

ஒரு. எம். பி. பி.எஸ். டாக்டரை உருவாக்க வேண்டுமென்றால் அதற்காக 32 ஆயிரம் ரூபாய் செலவழிக்க வேண்டியிருக்கிறது. அப்படிச் செலவழித்து டாக்டரான பிறகு பயிற்சிக்காக சிலர் வெளி நாடு செல்கிறார்கள். அவர்களில் சிலர் இந்தியாவுக்குத் திரும்பி வருவதே இல்லை. நம்முடைய பணத்தைக் கொண்டு படித்துவிட்டு, பின்னர் வெளி நாட்டில் வாழக் கூடிய நிலைமை உருவாகி வருகிறது. இந்த நிலைமை ஏற்படாதபடி கவனித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வேலைவாய்ப்பைப் பற்றிச் சொன்னார்கள். 1969 ஏப்ரல் வரை 211 ஹவுஸ் சர்ஜன்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். செப்டம்பர் 69-க்குள் 193 பேர்கள நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சீனியர் ஹவுஸ் சர்ஜன்கள் என்பதாக 1969-இல் 166 பேர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படி இந்த அரசு வேலை வாய்ப்புக்களை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் இந்த நேரத்தில் நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் கலவையில் 10 படுக்கைகள் கொண்ட அரசாங்க மருத்துவ மனை ஒன்றை இந்த ஆண்டு ஏற்படுத்தி இருப்பதற்காகப் பாராட்டுகிறேன்.

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை எடுத்துக் கொண்டாலும் 1968–69-இல் வாசக்டமி அறுவை சிகிச்சை மட்டும் 1,02,561 ஆகியிருக்கிறது. அதற்குப் பிறகு 9 மாதத்தில் 78,446 நடைபெற்றிருக்கிறது. மகளிர்க்கான குடும்ப நலத் திட்ட அறுவை சிகிச்சை சென்ற ஆண்டில் 10,973 அதற்குப் பிறகு 9,212 ஆகியிருக்கிறது. ஆக குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திலும் இந்த அரசாங்கம் எவ்வளவு அக்கறை செலுத்தி வருகிறது என்பது இதைப் பார்த்தாலே தெரியும். அதற்காக அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன்.

அடுத்து, ப்ரைமரி ஹெல்த் சென்டர்களை எடுத்துக் கொண்டால் டெல்லியில் இருக்கிறவர்கள் மாடல் போட்டு அந்த மாடல்படிதான் கட்டிடங்கள் கட்டப்பட வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்தக் கட்டிடங்கள் எல்லாயிடத்திலும் ஒரே மாதிரியாக இருக்கிறது. ஒரே மாதிரியாக இருக்கக் கூடாது என்று யாரும் சொல்லவில்லை. ஆனால் இங்குள்ள டாக்டர்கள் ஒரு அறைக்குள் இன்னொரு அறை ஆப்பரேஷன் தியேட்டர் என்பதாக அமைக்கப் பட்டால் தான் ஆப்பரேஷன் தியேட்டரில் தூசுகள் அடையாது, ஆபரேஷன் வெற்றிகரமாவதற்கு ஆப்பரேஷன் தியேட்டர் தூசி அடையாததாக இருக்க வேண்டும் என்கிறார்கள். ஆனால் இப்போது கட்டப்படுகிற ப்ளானில் திறந்தவுடன் ஒரு அறை ஆப்பரேஷன் தியேட்டர். அதனால் தூசி அடைகிறது, கேஸ்கள் வெற்றி அடையாததற்கு இது ஒரு காரணம் என்கிறார்கள். நல்ல அனுபவம் பெற்ற நம்முடைய டாக்டர்களின் யோசனைப் படியே ஒரு புது ப்ளான் அமைத்து இந்த ப்ரைமரி ஹெல்த் சென்டர்களுக்கான கட்டிடம் அமையச் செய்ய வேண்டும்.

அதுமட்டுமல்ல, குடிநீர் வழங்கும் திட்டத்திலும் இந்த அரசு அதிக கவனம் செலுத்தி வருவதைப் பாராட்டுகிறேன் எங்களது ஆற்காடு நகர மன்றத்தை எடுத்துக் கொண்டால் ஒரு குடிநீர்த் திட்டம் இருக்கிறது. அது இராணிப்பேட்டையுடன் இணைந்திருக்கிற திட்டமாக இருக்கிறது. இராணிப் பேட்டை பள்ளமாக இருக்கிறது. ஆற்காடு மேடாக இருக்கிறது. அதனால் ஆற்காட்டிற்குத் தண்ணீர் குறைவாகவே கிடைக்கிறது. ஆகவே, ஆற்காட்டிற்குத் தனியாகவே அந்தக் குடி தண்ணீர் திட்டத்தை விரிவாக்கிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கலவை, திமிரி போன்ற பேரூராட்சிகளுக்குப் பாலாற்றில் இருந்து தண்ணீர் கொண்டுவந்து கொடுக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவக் கல்வியைப் பொறுத்தவரை போஸ்ட் க்ராஜ்வேட் கோர்ஸ் எம்.டி. ஜெனரல் மெடிசன், பாதாலஜி, பிசியாலஜி என்பதாகப் பல துறைகளில் இருக்கிறது. ஆயினும் இருதயத்தைப்பற்றிய எம்.டி. படிப்பு இங்கு இல்லை. ஆகவே அதற்கான பிரிவையும் சென்னையில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1970 மார்ச் 30] [திரு. நா. வீராசாமி]

அடுத்து பொதுவாக நம் நாட்டில் ரிசர்ச் பிரிவு என்பது எப்படி இருக்கிறது என்று பார்க்க வேண்டும். 1941-ஆம் ஆண்டே மருத்துவ ஆராய்ச்சிக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இதுவரை அவர்கள் செய்த ஆராய்ச்சிகள் என்ன, விளைவுகள் என்ன, எத்தகைய புதிய நிலைகளை நமக்கு உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்கிற விவரம் இல்லை. அதற்காக அவர்களைக் குறை சொல்லியும் பயன் இல்லை. மொத்தமாக ஆண்டுக்கு 50 ஆயிரம் ரூபாய்தான் இதற்காக ஒதுக்கப்பட்டு வந்திருக்கிறது. அக் குழுவினர் வருவதற்கு, போவதற்கு வந்து உட்கார்ந்து பேசுவதற்கே இந்தத் தொகை போதாது. 1968-இல் இருந்து நாம் அதை 65 ஆயிரமாக உயர்த்தியிருக்கிறோம். ஆராய்ச்சிக்காக ஒவ்வொரு நாட்டில் கோடிக் கணக்கில் செலவிடுகிறார்கள், ஆயினும் அது கூடப் போதவில்லை என்கிறார்கள். அப்படி இருக்கிறபோது இந்த 65 ஆயிரத்தைக் கொண்டு என்ன செய்ய முடியும்? ஆகவே, மெடிகல் கல்வி, ஹெல்த் என்ற முறையில் டைரெக்டர்களைப் போடுவதுபோல— இந்த ரிசர்ச துறைக்கும் சர்வீஸஸ் பயிற்சி பெற்ற ஸ்பெஷல் ஆபீசரைப் போட்டு ஆராய்ச்சியை நல்ல முறையில் நடத்த ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை எடுத்துக்கொண்டால் தமிழ் நாடு எவ்வளவு கேவலமாகப் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். மத்திய அரசு நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் பத்து வைத்தியக் கல்லூரிகளை ஏற்படுத்த இருக்கிறார்கள். எந்தெந்த இடங்களில் என்று இன்னமும் இடம் குறிப்பிடப்படவில்லை. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் போராடியாவது கண்டிப்பாக நம்முடைய மாநிலத்திற்கு அதில் ஒரு வைத்தியக் கல்லூரியையாவது கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பொதுச்சுகாதாரத் துறைக்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசு 437 கோடிக்குத் திட்டமிட்டிருக்கிறது என்றால் தமிழ் நாட்டைப் பொறுத்தவரை 12 கோடி 53 லட்சம் தான். இது மிக மிக வேதனை தரக்கூடிய ஒன்றாக இருக்கிறது. அமைச்சரவர்கள் மத்திய அரசிடம் போராடியாவது இந்தத் தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் மத்திய அரசு ஆஸ்பத்திரிகளுக்காக 89 கோடி செலவழிக்கத் திட்டமிட்டு இருக்கிறார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்தவரை அதிலே எவ்வளவு நமக்கு என்று ஒன்றும் குறிப்பிடவில்லை. இப்படி கோடிக்கணக்கில் அவர்கள் ஒதுக்கினாலும் தமிழகத்தைப்பற்றிக் கவலைப் படுவதில்லை. டெல்லிக்காரர்கள் நம்மை வஞ்சிக்கிறார்கள். தமிழகம் புறக்கணிக்கப்படுகிறது. நம்முடைய பங்கை, உரிமையைப் போராடிப் பெற இந்த அரசு ஆவன செய்யவேண்டும். எப்படியாவது நமக்குரிய பங்கைப் பெற இந்த அரசு முயலவேண்டுமென்று சொல்லி, எனக்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

*DR. H. V. HANDE: Mr. Deputy Speaker, Sir, I rise in support of the cut motion I and my colleague Thiru K. S. Kothandaramiah have given. At the very beginning itself I have moved a cut motion to discuss the need to evolve a method by which prompt medical attention is given by Senior Doctors during all hours of the day and also during Sundays when cases of emergency are brought to hospitals. I want to highlight this point. Suppose there is a case coming up suddenly on a Sunday or during off-hours, then it is very difficult to get good treatment. This has been the practice for a number of years. They have to fill up a number of registers, before the patient is touched. The whole thing must change immediately. When a serious case comes up,

it should be attended to by senior doctors and not registers. Registers can be looked after later. Immediate treatment should be given to the patient.

I come to the co-ordination between the departments. My distinguished friend Thiru Ma. Po. Si. said that there is no proper co-ordination between the different departmental heads. My complaint is of a more general nature. There is no co-ordination ever since the two departments were created, I mean, the extra department of Public Health. We have a Director of Health Services and we have a Director of Medical Education. There is no proper co-ordination between the two departments. I request the Hon. Minister to bring about proper co-ordination. Unless this is done it will be the case of Jarkins shifting responsibility to Spenlow and Spenlow shifting the responsibility to Jarkins. They are Charles Dickens' characters. (Thiru K. Vinayakam: I only understand him. He is quoting from Charles Dickens) let not these departments behave in that manner.

I now come to upgrading of hospitals. I hope that the old Minister, who had been Leader of the Opposition for a number of years and who is now the new Minister for Health will appreciate the fact that the Medical Department and Public Health Department are in a bad shape. I want to highlight that point. Take the General Hospital. We have all outmoded and out of date instruments there. Take the Thorasic department. If a patient wants thorasic treatment, he has to go to Vellore because here we have only out-of-date and outmoded instruments. That is the tragic thing. If new and up-to-date instruments are installed here, it will not be necessary for our people to rush to Vellore for these small things. I hope and trust new and up-to-date instruments will be installed.

There is no proper treatment even in the headquarters hospitals. Take the hospital at Cuddalore or Chingleput or any other headquarters hospital. Only very, very sub-standard treatment is given there. If there is a serious case, it has to be rushed here to Madras. One has to travel 200 to 300 miles to reach General Hospital. What a shameful thing! Why not these headquarters' hospitals be equipped with these basic things so that good and up-to-date treatment is given there. This is what Dr. A. L. Mudaliar, the previous Leader of the Opposition in the Council had been saying for a number of years, for ten years past. But nothing seems to have been done to upgrade these hospitals. Do we have equipment for cerebral surgery in headquarters hospitals? No. We have to come here. Just like this, I have a number of things to quote. But due to paucity of time, I am only touching upon some points.

Then I come to transfers. This has become a chronic problem. Nobody wants to go to villages. Why not clearly say that for three or four years the doctors should work there, in the villages?



For instance, how many senior doctors are there in the Palayamkottai Medical College? Recently some committee who inspected the hospital complained about the lack of bed strength in this hospital. We find that there is some report about it. I do not remember by whom it was given. The official report is that the bed strength does not warrant or allow us to have a medical college there. I hope the Minister will get particulars from the departmental head and see what exactly the report says. Senior doctors do not go there. This is a very serious thing and I want the Minister to address himself to this particular task.

Then I come to basic amenities. For instance, in the General Hospital we do not have basic amenities. The Nurses Quarters of the General Hospital, which looks imposing from outside, lacks basic amenities. (Interruption.) The General Hospital is in my constituency. I have received a number of complaints from the people in my constituency and I have to voice them on the floor of this House. The complaint is that in the Nurses Quarters the nurses do not have a place to sit and untie the shoe lace. I request the Minister to see that the cause for this complaint is completely removed.

House Surgeons have raised a number of problems and I want the Minister for Health and the Chief Minister to see that their problems are completely solved.

In the beginning I said that in the General Hospital things were in a very bad shape. Electric fans are found switched off in all the wards except the so-called ' Specials '. Fans are restricted to four of them only in the four corners of each ward. Practically connections have been removed in all other fans, perhaps to prevent patients asking for them. I gather that this state will prevail throughout winter. Little is realised of the suffering of the sick especially from dusk to dawn when armies of mosquitoes attack the patients incessantly. All medicines and injections can be of little avail if a patient can hardly have a wink of sleep at nights because of mosquitoes which spring in their millions from their homes in the Cooum for the daily invasion of the hospital. When I was working in the Kilpauk Medical College I had collected bugs from the cot and put them in cover and showed them to the Dean. I do not remember who was the Dean at that time—the effect of whatever injections we gave has been neutralised by the injections by bugs. I want the Minister to address himself to this task and find out remedies for these important problems.

Now I come to malpractices. At the gates of the General Hospital in Madras, the watchmen run a flourishing racket in collecting unauthoised "entrance fee" from those who wish to visit their inpatient relatives. The daily collection must amount to a hundred or two hundred rupees and one does not know how many higher-ups share in this unholy loot.

Another thing about our hospitals is the filthy uniforms worn by the lower categories of staff and their uncouth and duty habits like spitting, scratching, etc., while on duty. The steel furniture, bedsteads, wheel-chairs, stretchers, etc., are rusty and spotty and badly in need of a fresh coat of paint. A gentleman writes 'I had occasion to go to the Government Hospital for Women at Egmore and I was appalled at the unhygienic condition of the wards there. While the nurses are courteous and sympathetic, there is little they can do about the filthy linen and mattresses.

Lack of proper well-dispresed screening clinics leads to patients besieging the main hospitals where there are not enough facilities or trained doctors and nurses to do justice. This is not my opinion; this is the opinion expressed by Mr. K. K. Shah, the Union Health Minister. A complaints receiving section in every major hospital with independent high level staff to act on them may help.

With regard to diet, I am sorry to say that it is very very poor. I want a high power committee to be appointed to investigate the number of complaints that are being received from all over the State. This is a request that I want to make to the Minister.

With regard to medical college admission, I reiterate on the floor of this House that the only way to get a good name for this Government is to go by the examination marks as is done in the Andhra State. Let the Government have trust in the University. If the Government do not trust the University and the marks given by them are not admissible then there must be something wrong with the University and let the Government openly say that they have no confidence in the University.

My distinguished colleague Mr. R. Sreenivasa Naicker wants me to refer to another thing. In Sevalpatti in Pembakkottai Panchayat Union there is a hospital built by private people. It was built four or five years ago and till this date there is no doctor there. When Mr. S. Ramaswami Naidu was representing this constituency, he represented this matter to the previous Health Minister Mr. Sadiq Pasha. This is again represented to the present Minister. I request the Minister to see that a doctor is posted there, because the people are feeling sore about it.

About leprosy, I have told a number of times that one rupee invested is ten rupees saved. Leprosy is a perfectly curable disease. If you cure a leper patient, you prevent the communication of the disease to others. I request the Minister to see that prevention of leprosy is tackled on a war footing.

Thank you very much.

***திரு. அ. கிருஷ்ணன்:** பேரவை உதவித் தலைவர் அவர்களே, 1970-71-ஆம் ஆண்டு பொதுநலத் துறை, மருத்துவத் துறை ஆகிய இரண்டு மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக் களைச் சொல்ல விழைகிறேன்.



கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் கடந்தகால அரசு பல கோடி ரூபாய்களைச் செலவு செய்தும்கூட கிராமங்களில் மருத்துவ பேணுதலில் போதிய வசதிகள் கிடைக்கவில்லை. மருத்துவர்கள் பற்றாக்குறை நீடித்துக்கொண்டே வருகிறது. என்னுடைய தொகுதியிலே மங்களூர் பகுதியானது தென் ஆற்காடு மாவட்டத்திலேயே மிகவும் பின்தங்கிய பகுதியாகும். அத்தொகுதியில் திட்டக்குடியில் அரசு மருத்துவமனை நடைபெற்று வருகிறது. அந்த அரசு மருத்துவமனையை விஸ்தரிப்பதற்காகப் பொது மக்கள் சார்பில் இருபதாயிரம் ரூபாய் நன்கொடை திரட்டி அரசாங்கக் கருவூலத்தில் அது கட்டப்பட்டிருந்தும்கூட இன்னும் விஸ்தரிப்பதற்கான குறிப்புகள் இந்த பட்ஜெட்டிலே வரவில்லை. ஆகவே, அடுத்த ஆண்டிலாவது விஸ்தரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பிட்ட தொகுதியிலே மங்கலூரில் ஆரம்ப சுகாதார நிலையமொன்றும், நல்லூரில் ஆரம்ப சுகாதார நிலையமொன்றும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இரண்டும் கிராமப்புறங்களானதால் அங்கே போயிருக்கிற டாக்டர்கள் நிலையாக அங்கு தங்கியிருப்பதில்லை. அடிக்கடி அவர்கள் மாற்றப்படுகிறார்கள். கூடுமானவரையிலும் அந்த இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் அவர்களை மாற்றாமல் இருப்பதற்கு முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திட்டக்குடி அரசு மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை நிலையமொன்றைத் திறந்து பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திட்டக்குடி அரசு மருத்துவமனையில் ஆண்களைவிடப் பெண் நோயாளிகள் அதிகரித்துக் கொண்டிருப்பதால் ஒரு லேடி டாக்டரை உடனடியாக நியமிக்கும்படி கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. நா. காசிராமன்:** தலைவர் அவர்களே, பொதுநலம், மருத்துவம் ஆகிய துறைகளின் டிமாண்டுகளின்மீது எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற முன்வருகிறேன்.

பொதுநலத்திற்காக 9 கோடி ரூபாயும், மருத்துவத் துறைக்காக 15·97 கோடி ரூபாயும் இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது. முன்பெல்லாம் ஒதுக்கியிருந்ததைவிட இப்போது அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள் என்பது பாராட்டப்படக் கூடிய ஒன்று; மகிழ்ச்சிக்குரிய ஒன்று. அப்படி அதிகமாக ஒதுக்கப்பட்டிருந்தாலும் கூட அது எப்படி நாட்டு மக்களுக்குப் பயன்படுகிறது என்பதற்கான புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது சற்று வேதனையாக இருக்கிறது. 1966–67-ல் 11 கோடி ரூபாய் அளவுக்கு ஒதுக்கியிருந்தார்கள். இப்போது 15 கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தாலும், 4 கோடி ரூ. அதிகமாக ஒதுக்கி இருந்தாலும் கூட, மபஸல் சென்டர்களில் செலவழிக்கப்பட்ட பணத்தைப் பார்க்கும் போது 1966–67-ம் ஆண்டில் இருந்ததைவிட இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட பணத்தில் 88 லட்சம் ரூபாய் குறைவாக இருக்கிறது. மபஸல் சென்டர்களுக்கு 'ஹாஸ்பிடல் அண்டு டிஸ்பென்சரிஸ்' என்பதன்கீழ் 1966–67-ல் ஒதுக்கப்பட்டது 483 லட்சம்; 1967–68-ல் ஒதுக்கப்பட்டது 453 லட்சம்; 1968–69-ல் ஒதுக்கப்பட்டது 407 லட்சம். படிப்படியாக குறைவாக ஒதுக்கப்பட்டு வருகிறது. இப்படிக் குறைக்கப்படுவதன் காரணமாக கிராமங்களிலும், தாலுகா தலைநகர்களிலும் ஆஸ்பத்திரிகளில் மருந்துகள் கிடைக்கவில்லை, வசதிகள் போதவில்லை, டாக்டர்கள் இல்லாத நிலை என்ற வகையிலே புகார்கள் நிறைய வந்து கொண்டிருக்கின்றன. அந்தப் புகார்களைச் சபையிலே உள்ள எல்லா மெம்பர்களும் கூறினார்கள். அந்தப் புகார்கள் வராமல் தடுக்க முடியும். கிராமங்களில் மருத்துவத் துறைக்குச் செலவழிக்கப்படும் பணம் குறைத்துக் கொண்டே வரப்படுகிறது. பிற்பகல் 1-00

பிரசிடென்சி ஹாஸ்பிடல்களில் செலவழிக்கப்படும் பணம் கூடுதலாகச் செலவழிக்கப்பட்டு வருகிறது. சென்னைக்கு அதிகமாகச் செலவழிக்கக்கூடாது என்று சொல்லவில்லை; நிறையச் செலவழிக்கத்தான் வேண்டும். அதற்காக கிராமப்புறங்களிலும், நகரப் புறங்களிலும், தாலுகா ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிகளிலும் செலவழிக்கும் பணத்தைக் குறைப்பது நல்லதுதானா என்பதை அரசில் இருக்கக்கூடியவர்கள் மனசாட்சியைத் தொட்டுப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இந்திய தேசத்திலே 93 காலேஜஸ் இருக்கின்றன. 11,500 சீட்டுகள் இருக்கின்றன என்றும் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இதை அதிகமாக்கப் போவதாகவும் தெரிகிறது. எட்டு மருத்துவக் கல்லூரிகள் அரசாங்கத்தின் சார்பில் நம் மாநிலத்தில் இருக்கிறது. 1,125 சீட்டுகள் இருக்கின்றன. கிட்டத்தட்ட இந்தியாவில் உள்ளதில் பத்தில் ஒரு பங்கு நம்முடைய மாநிலத்தில் இருக்கிறது. டாக்டர்கள் தேவையும் நம்முடைய மாநிலத்தில் அதிகமாக இருக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 4,300 பேருக்கு ஒரு டாக்டர் வீதம் இருந்தார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது பத்து புதிய மருத்துவக் கல்லூரிகளைத் திறக்க இருக்கிறோம் என்று திட்டத்தில் சொல்லும்போது அது நம்முடைய மாநிலத்தைப் பொருத்தவரை குறைந்த அளவு என்றாலும் கூட இரண்டு மருத்துவக் கல்லூரிகளை ஏற்படுத்த முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

முதல் ஐந்தாண்டுத் திட்ட ஆரம்ப காலத்தில் 7,955 படுக்கைகள் இருந்தன. தற்போது நான்காவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்ப நிலையில், தமிழ் நாட்டில் ஜனத்தொகை மூன்றரைக் கோடியாக இருக்கும்போது 21,300 படுக்கைகள்தான் இருக்கின்றன. 6,644 பேர்களுக்கு ஒரு படுக்கை வீதம் இருக்கிறது. இந்த நெருக்கடி காரணமாக யார் ஆஸ்பத்திரிக்குச் சென்று பார்த்தாலும், கட்டிலில் ஒருவர், கீழே ஒருவர், முன்பக்கம் ஒருவர் என்று நோயாளிகள் படுத்திருப்பதைப் பார்க்க முடியும். டாக்டர் உடனடியாக ஒரு பேஷண்டைப் பார்க்கவேண்டுமென்றால் அனுமான் இலங்கைக்குத் தாவியது போல் ஒவ்வொரு பேஷண்டையும் தாவித் தாவித்தான் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட நிலையில் நோயாளிகளுக்கான வசதிகளை எப்படிச் செய்து கொடுக்க முடியும்? இதை அரசு மனத்தில் கொண்டு புதிய கட்டடங்களைக் கட்டி அதிகப்படியான படுக்கைகளை ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக, ஆயிரம் பேருக்கு ஒரு படுக்கை என்ற அளவுக்கு அபிவிருத்தி செய்தாலொழிய தமிழ் நாட்டில் மக்களுக்கு வசதி செய்து கொடுத்தவர்களாக ஆகமாட்டோம் என்பதை வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

ஆஸ்பத்திரிகளுக்குப் புதிய கட்டடங்களை நிறையக் கட்டவேண்டும். பல இடங்களில் அவுட் பேஷண்ட் வார்டைப் பார்த்தால் சினிமா டிக்கெட்டுக்குக் க்யூவில் நிற்பது போன்ற நிலைமை இருக்கிறது. பல இடங்களில் வெயிலில் நிற்கிறார்கள். உட்கார இடம் இல்லை. நோயாளிகள் நிறைய பேர் வருகின்ற நிலையில் அவர்கள் வசதியாக உட்காருவதற்கு உண்டான வசதிகளைச் செய்து தரவேண்டும்.

ஆஸ்பத்திரிகளைச் சுற்றிக் காம்பவுண்ட் வால் கட்ட வேண்டும். லக்சுரி என்று நினைத்தோ என்னவோ ஆஸ்பத்திரிகளை சுற்றியும், டாக்டர்கள் வீட்டைச் சுற்றியும் காம்பவுண்டு வால்கள் கட்டப்படாமலே இருக்கின்றன. உதாரணமாக, கும்பகோணம் ஆஸ்பத்திரியிலும் ஒரு பக்கம் காம்பவுண்ட் வால் இருக்கிறது; மறு பக்கம் இல்லை. பல ஆஸ்பத்திரிகளில் அந்த நிலைமை இருக்கிறது. மெடர்னிடி ஆஸ்பத்திரி வாசல்களில் நாய்களும், கழுதைகளும் வந்து தங்குகின்றன. இதைப் பற்றிப் பல தடவைகள் நாம் பேப்பரில் படித்திருக்கிறோம். இந்த நிலைமைகளைத் தடுக்கவும், விரும்பத்தகாதவர்கள் வருவதைத் தடுக்கவும் காம்பவுண்ட் சுவர் அவசியமானது. திண்டிவனத்தில் ரெசிடெண்ட் மெடிகல்





ஆபீசர் ஒரு அம்மையார். அவருடைய குவார்ட்டர்சுக்குக்கூடச் சுற்றுச் சுவர் இல்லை. 'பேட் எலிமெண்ட்ஸ் ஆப் தி சொசைடி' அங்கே நடமாடும் நிலைமை இருக்கிறது. அவருக்குப் பாதுகாப்பு எப்படி இருக்கமுடியும்? அவர்கள் எப்படி கவலையற்று தங்கள் பணியைச் செய்ய முடியும்? ஆகவே, நல்லமுறையில் கட்டடங்கள் கட்டுவதோடு 'காம்பவுண்ட் வாலும்' அவசியம் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். பல ஊர்களில், நகரங்களில் டாக்டர்களுக்கும், நர்சுகளுக்கும் குடியிருக்க நல்ல கட்டடங்கள் கிடையாது. ஆஸ்பத்திரிகளின் அருகிலேயே அவர்களுக்குக் குடியிருக்கக் கட்டடங்கள் கட்டித்தர வேண்டும். டாக்டர்கள் சென்னையிலேயே இருக்க விரும்புகிறார்கள், பிற ஜில்லாக்களுக்கும், தாலுகா தலைநகரங்களுக்கும் போக விரும்புவதில்லை என்று அவர்கள் பேரில் குற்றம் சொல்லுவதில் பயனில்லை. அங்கெல்லாம் போய் அவர்கள் மன நிறைவுடன் வேலை செய்ய வேண்டுமென்றால், வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும், சவுகரியங்கள் செய்து கொடுக்க வேண்டும். நோயாளிகளை அடிக்கடி பார்த்துக் கொள்ளுவதற்கு வசதியாக ஆஸ்பத்திரிக்கு அருகாமையிலேயே நல்ல வீட்டு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

பல ஊர்களில் உள்ள ஆஸ்பத்திரிகள் நான்கு வருஷங்களுக்கு முன்பு எப்படி இருந்ததோ அதே போன்றுதான் இருந்து கொண்டிருக்கின்றன. பல திட்டங்களைத் கொடுத்தார்கள். நாகர்கோவிலில் 50 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்து ஆஸ்பத்திரியை விஸ்தரிக்க வேண்டுமென்ற திட்டம் என்னவாயிற்று என்று தெரியவில்லை. நடவடிக்கை எடுத்தார்களா என்று தெரியவில்லை. குளச்சலில் ஆஸ்பத்திரியை விஸ்தரிக்க என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று தெரியவில்லை. பல ஊர்களில் நடவடிக்கை எடுக்காததன் காரணமாக அதிப்படியாக வரும் நோயாளிகளுக்கு வசதியைச் செய்து கொடுக்க முடியவில்லை. இருபது, இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னால் ஆஸ்பத்திரிகளில் வைத்தியம் செய்துகொள்ளுவது பெரிய சமாசாரமாக இருந்தது. பணம் இருப்பவர்கள்தான் வைத்தியம் செய்துகொள்ள முடியும் என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். இப்போது கல்வி வளர்ச்சியின் காரணமாக ஏழை மக்களும் தாங்கள் சிறிது நோய்வாய்ப்பட்டாலும் உடனடியாக அரசாங்க மருத்துவமனைக்குச் சென்று வைத்தியம் செய்து கொள்ள வருவதால் கூட்டம் அதிகமாகி வருகிறது. அதற்குத் தகுந்தவாறு எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும்.

பல தாலுகா தலைநகர ஆஸ்பத்திரிகளில் ஆப்பரேஷன் தியேட்டர்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆப்பரேஷன் நடக்கும் இடம் சுத்தமாகவும், தூய்மையாகவும் இருக்க வேண்டும். ஆப்பரேஷன் செய்யும் டாக்டருக்கும் வசதி இருக்க வேண்டும். அரைமணி நேரம் ஒரு மணி நேரம் ஒரு டாக்டர் கதவு எல்லாம் அடைக்கப்பட்ட அந்த அறையில் இருந்து ஆப்பரேஷன் செய்யவேண்டியிருக்கிறது. சில சமயம் ஒரு மணி, இரண்டு மணி நேரம் கூட இருக்கவேண்டியிருக்கிறது. அதனால் வேர்க்க ஆரம்பித்து விடுகிறது. ஆகவே, ஆப்பரேஷன் தியேட்டர்களில் ஏர்கண்டிஷண்டு எக்விப்மெண்ட் வைத்தால் டாக்டர்கள் எவ்வளவு நேரம் பணிபுரிந்தாலும் வேர்க்காது. களைப்பு ஏற்படாமல் நல்ல முறையில் பணியாற்ற முடியும். இதை உடனடியாகச் செய்வது நல்லது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பல ஊர் ஆஸ்பத்திரிகளுக்கு மருந்துகள் சரியானபடி போவதில்லை. பஞ்சாயத்து யூனியன், ஸ்தல ஸ்தாபனங்கள் ஆகியவற்றுக்கு பல ஆயிரக் கணக்கான ரூபாயை மருந்துகளுக்காக ஒதுக்கினாலும் மருந்துகள் சரியான நேரத்தில் போய்ச் சேருகிறதா என்றால் இல்லை. தமிழில் ஒரு பழமொழி. 'ஆடிகழித்து ஐந்தாம் நாள் கோழி அடித்துக் கும்பிட்டாளாம்' என்பது போல் மருந்துகள் வரும் நிலைமை இருக்கிறது. ஆர்டர் போட்டு பத்து மாதம் கழித்து மருந்து அனுப்புவதற்குள் ஆர்டர் லாப்ஸ் ஆகிவிடுகிறது; பிறகு பட்ஜட் லாப்ஸ் ஆகிவிடுகிறது.

[திரு. நா. காசிராமன்] [1970 மார்ச் 30

இப்படித் திருப்பித் திருப்பிச் சுற்றி வரக்கூடிய நிலைமை இருக்கிறதே, தவிர, மருந்துகள் வந்துசேருவதில்லை. டாக்டர்கள் தங்களுடைய டிஸ்க்ரீஷனை உபயோகப்படுத்தி 50 ரூபாய் அளவுக்கு மருந்துகள் வாங்கிக் கொள்ளலாம் என்று இருக்கிறது. இது ஹைதர் காலத்தில் போட்டது. இப்போது இருப்பதை விட பத்து மடங்கு விலை குறைவாக இருந்த போது போட்டது. இதை 500 ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்தினால் தான் மருத்துவர்கள் நல்ல முறையில் பணியாற்ற வாய்ப்பு ஏற்படும்.

ஹார்ட் அட்டாக் இப்போது அதிகமாக வருகிறது. எனக்கு ஏற்பட்ட அனுபவத்தைச் சொல்லுகிறேன். கும்பகோணத்தில் கடந்த செப்டம்பர் மாதத்தில் முனிசிபல் எஞ்சினியருக்கு ஹார்ட் அட்டாக் ஏற்பட்டது. அவரை அரசாங்க ஆஸ்பத்திரியில் சேர்த்தோம். அவருக்குக் கொடுப்பதற்கு ஆக்சிஜன் சிலிண்டர் அங்கே இல்லை. ஒரு சிலிண்டர், இரண்டு சிலிண்டர், மூன்று சிலிண்டர் என்று பார்த்தோம், ஒன்றிலும் ஆக்சிஜன் இல்லை. அதற்கு உடனடியாகத் தேவைப்படுகின்ற சில மருந்துகளும் இல்லை. நாங்கள் வெளியே இருந்து ஆக்சிஜன் சிலிண்டரையும், தேவையான மருந்துகளையும் வாங்கிக் கொடுத்தோம்.

இருந்தாலும் அவர்கள் ஆயுள் காலம் முடிவடைந்துவிட்டது. அவர்கள் தஞ்சாவூர் ஆஸ்பத்திரியில் காலமாகிவிட்டார்கள். அது வேறு விஷயம். கெஜெட்டட் ஆபீசர்களுக்கே இந்த கதி என்றால் சாதாரண ஏழை மக்களுக்கு எந்தவிதமான கதி ஏற்படும் என்பதைப் பற்றி ஆலோசித்து ஆஸ்பத்திரிகளுக்கு வேண்டிய உபகரணங்கள், வசதிகள், மருந்துகள் போன்றவை விரைவில் எந்தவித சுணக்கமும் இல்லாமல் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

நகர சபைகள், பஞ்சாயத்துக்கள் போன்றவை மருந்துகள் வாங்குவதற்காக ஆயிரக்கணக்கான ரூபாயை முடக்குகிறார்கள். அவர்கள் வேறு விதத்தில் அவற்றை வாங்க முடியாது. அப்படி வாங்கினால் ஆடிட் அப்ஜெக்‌ஷன்ஸ் வரும். ஆகவே, இப்படி பணம் முடக்கப்பட்டும் மருந்துகள் கிடைக்காதிருக்கும் நிலையை மாற்ற வேண்டும். இல்லாவிடில் சுகாதாரத்தில் நல்லதொரு நிலையை நாம் ஏற்படுத்த முடியாது.

டாக்டர் அவர்கள் மருத்துவக் கல்லூரி அட்மிஷன் பற்றிச் சொன்னார்கள். எந்தவிதமான புகார்களுக்கும் இடம் இல்லாமல் நல்லமுறையைக் கையாளவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பரீட்சைகள் வைத்து அதில் தேர்வு பெற்றவர்களை சேர்த்துக் கொண்டு அப்படி சேர்த்துக் கொள்பவர்களின் பெயர்கள் அடங்கிய லிஸ்டை பப்ளிஷ் செய்தால் நன்றாகயிருக்கும். ஆந்திரா, கேரளா போன்ற மாநிலங்களில் இந்த மாதிரியான ஒரு முறை பின்பற்றப்படுகிறது என்று கேள்விபடுகிறேன். முன்பெல்லாம் செய்யவில்லையே என்று சொல்லலாம். முன்பு தவறு செய்திருந்தால் இப்போதுள்ளவர்களும் அதே தவறைச் செய்யவேண்டுமா? அதுதான் கொள்கையா என்று ஆலோசித்துப் பார்த்து நல்லதொரு முடிவிற்கு வருவது நல்லது.

ட்ரக் கண்ட்ரோல் ஆக்டின்கீழ் பணியாளர்களை ஏற்படுத்துகிறோம். இவர்கள் மாதத்திற்கு இருபது நாட்களுக்குக் குறையாமல் சுற்றுப் பயணம் செய்யவேண்டுமென்று இருக்கிறது. அதற்கு அவர்களுக்குக் கொடுக்கப்படும் ஃபிக்ஸட் பாட்டா 75 ரூபாய்தான். இது போதுமா? என்று எண்ணிப் பார்க்கவேண்டும். 20 நாட்கள் சுற்றுப்பயணம் செய்வதற்கு இந்த 75 ரூபாய் போதுமானதா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படி குறைவாகக் கொடுத்தால் அவர்களிடமிருந்து நல்ல நிலையான வேலைகளை எப்படி நாம் எதிர்பார்க்க முடியும்?

அடுத்தபடியாக, ஆஸ்பத்திரிகளைச் சுற்றிலும் பலர் திண்பண்டங்கள் விற்கிறார்கள். இதனால் டாக்டர்கள் நல்ல மருந்துகள் கொடுத்தாலும் கூட ஈ மொய்த்த பண்டங்களையும், நல்லமுறையில் தயாரிக்கப்படாத



1970 மார்ச் 30] [திரு. நா. காசிராமன்]

பண்டங்களையும் வாங்கிச் சாப்பிடுவதன் காரணமாக நோயாளிகளின் உடல் நலம் மேலும் கெடுகிறது. அதோடு நோயாளிகளுக்கு ஒத்தாசை செய்ய வருகிறவர்களின் உடல் நலம் கெடுகிறது. ஆகவே, ஆஸ்பத்திரியைச் சுற்றிலும் குறைந்தது ஒன்று அல்லது இரண்டு பர்லாங் தூரத்திற்கு உணவுப் பண்டங்களோ அல்லது வேறு தயாரிப்புகளோ விற்கக்கூடியவர்கள் ஆஸ்பத்திரி டாக்டரிடமிருந்து ஒரு சர்டிபிகேட் வாங்கி அவை நல்லமுறையில் இருந்தால்தான் விற்கலாம் என்ற நிலையை ஏற்படுத்துவது நலமாகயிருக்கும்.

அடுத்து, பொது சுகாதாரத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறி முடித்துக் கொள்கிறேன். திருவள்ளுவரே சொல்லி யிருக்கிறார்கள்.

"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்." என்று,

ஒரு துன்பம் வருவதற்கு முன்னால் நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் அது வைக்கோல் போரில் வைக்கப்படும் நெருப்பைப் போல் நாசத்தை விளைவிக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். பொதுச் சுகாதாரத்திற்கு நாம் எவ்வளவு செலவு செய்கிறோமோ அந்த அளவிற்கு நாட்டு மக்களுக்கு ஏற்படும் கெடுதல்கள் குறையும். அதோடு மருத்துவத்திற்கான செலவும் குறையும். மனிதனுக்கு நல்ல ஆரோக்கியம் இருக்க வேண்டுமென்றால் நல்ல குடி தண்ணீர் திட்டங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும். அதோடு நல்ல முறையில் சாக்கடைத் திட்டத்தையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். இந்த இரண்டும் ஒன்றோடொன்று இணைந்து செயல்படவேண்டும். கொசு இல்லாமல் இருந்த [illegible]ண்டுக்கல்லில் குடி நீர் திட்டம் வந்த பிறகு கொசுவின் [illegible]ப்பத்திரவம் [illegible]திகப்பட்டிருககிறது. குடி நீர் கொடுத்து விட்டு சாக்கடைத் திட்டம் இல்லாத காரணத்தினால் செஸ் பூல் ஏற்படும்போது கொசுவின் உற்பத்தி பெருகி கொசு உபத்திரவம் ஏற்படுகிறது.

அடுத்தபடியாக, வீடுகள் நல்ல முறையில் கட்டப்படவேண்டும். அதற்கு டவுன் ப்ளானிங் லே அவுட் போடுகிறார்கள். அப்படி போடும் போது ரோடுகளை வீட்டுச் சொந்தக்காரர்களே போட்டுக்கொள்ள வேண்டும் என்றிருக்கிறது. லைட் வசதியையும் வீட்டுச் சொந்தக்காரர்களே செய்து கொள்ள வேண்டுமென்றும் இருக்கிறது. [illegible] புறம்போக்கு நிலங்கள் [illegible] மற்ற புறம்போக்கு நிலங்கள் பற்றி நகர சபை [illegible]வில்லை. வீட்டுக்காரர்கள் வீடுகளைக் கட்டிக் கொண்டு குடி[illegible] சொத்து வரி டிமாண்டோடு போய் வருகிறார்கள். ஆகவே, லே அவுட் போடும்போது அதை அப்ரூவ் செய்யும்போது ஒரு ஐந்து வருடங்களுக்காவது அவர்களுக்கு வரி விலக்கு அளித்தால் லே அவுட்டுடன் கூடிய வீடுகளைக் கட்டிக்கொள்ளும் ஒரு வாய்ப்பு ஏற்படும்.

அடுத்தபடியாக, உணவுக் கலப்படத்தைத் தடுப்பதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இப்போது கலப்பற்ற உணவுப் பண்டங்கள் கிடைப்பதே மிக அரிதாக இருக்கிறது. உணவுக் கலப்படம் என்று பிடிக்கப்பட்டு அதைப் பரிசோதனை செய்ய கிண்டிக்கு அனுப்பினால் ரிப்போர்ட் வருவதற்கு காலதாமதமாகிறது. ஆகவே, ஒவ்வொரு ஜில்லா தலைநகரிலும் இப்படி பரிசோதனை செய்யும் நிலையங்களை ஏற்படுத்தி உணவுக் கலப்படத்தைத் தடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். குடிதண்ணீர் பற்றிக் குறிப்பிடும்போது எல்லா ஊர்களிலும் குடிதண்ணீர் நல்ல முறையில் கிடைப்பதில்லை, கன்னியாகுமரி ஜில்லாவில் ஒரு குடத்திற்கு நாலணா என்று விற்கப்படுவதாக என் நண்பர்கள் சொன்னார்கள். அப்படியில்லாத முறையில் எல்லாயிடங்களுக்கும் குடி தண்ணீர் வசதி விஸ்தரிக்கப்பட வேண்டும். இடப்பாடி நகராட்சிக்கு குடிதண்ணீர் வசதி விஸ்தரிப்புக்காக ரூ. 1,75,000-க்கு திட்டம் போட்டு அது நடைமுறையில் வரவில்லை என்ற புகார் இருக்கிறது. அவற்றையெல்லாம் நல்லமுறையில் செய்ய வேண்டும். கடைசியாக,

சென்னைக்கு வீராணத்திலிருந்து குடிதண்ணீர் கொண்டு வருகிறோம். ஆனால் இடை வழியில் உள்ள கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் அது கிடையாது என்று திட்டவட்டமாக அறிவித்து விட்டோம். வேறு இடங்களில் அப்படி வெளியிலிருந்து தண்ணீர் கொண்டு வரும்போது இடையில் உள்ள வே ஸைட் கிராமங்களுக்கும் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று ஒரு கட்டாயத்தை ஏற்படுத்துகிறோம். திருவாரூரில் தண்ணீர் திட்டம் போட்டிருக்கிறார்கள். அப்படி வரும்போது நடுவில் உள்ள கிராமங்களுக்கும் தண்ணீர் கொடுக்கவேண்டும் என்ற திட்டத்தைப் போடுகிறோம். அப்படியிருக்க வீராணத்திலிருந்து வரும் தண்ணீரை கோடிக்கணக்காக ரூபாய் செலவு செய்து தண்ணீர் கொண்டு வரும்போது இன்னும் சிறிது அதிகமாகச் செலவு செய்து நடு வழியில் உள்ள கிராமங்களுக்கும் தண்ணீர் வசதி செய்து கொடுத்தால் வியாதிகள் பரவாமல் நல்ல முறையில் மக்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கு வழி ஏற்படும். அதையும் சர்க்கார் தன் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** மாண்புகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுநலம், மருத்துவம் ஆகிய துறைகள் பற்றிய மானியக்கோரிக்கைகள்மீது இம்மன்ற உறுப்பினர்கள் தங்களது சீரிய கருத்துக்கள் பலவற்றையும் எடுத்துச் சொல்லி இத்துறைகள் மேலும்மேலும் வளர்ச்சியுற்று மேம்பாடு அடைவதற்கு உறுதுணையாக நின்றமைக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுநலத் துறை எவ்வளவு இன்றியமையாதது என்பதை நாம் நன்கு உணரவேண்டும்: மருத்துவத் துறையும், பொது நலத்துறையும் எல்லா மக்களோடும் தொடர்புடைய மிக முக்கியத் துறைகளாக இருக்கின்றன. ஆகவே, இதற்கு எவ்வளவு செலவழித்தாலும் மேலும் தேவைப்படுகிற நிலைதான் இருக்குமே தவிர இதை முற்றிலும் முடித்துவிட்டோம் என்று சொல்கிற நிலை எப்போதுமே ஏற்படாது. இதை நன்றாக உணர்ந்திருக்கிற நிலைமையை அறிந்திருக்கிற காரணத்தினால்தான் இந்த மன்றத்தில் கூட போதுமான அளவிற்கு உறுப்பினர்கள் இல்லை. உறுப்பினர் காசிராமன் அவர்கள் தெரிவித்தபோது நான் குறிப்பிட்டேன், இந்தத் துறையில் எந்தக் குறைபாடும் இல்லை, ஆகவேதான் உறுப்பினர்கள் இங்கு தங்கவில்லை என்று. அவர்களும் மிக்க நலத்தோடு இருக்கிறார்கள், ஆகவே அவர்கள் எடுத்துச்சொல்ல எதுவும் இல்லை. அந்த வகையில் இந்தத் துறைகள் ஓரளவிற்கு சிறப்பாகக் கருதப்படுகிற அளவிற்கு இருக்கிறது என்று குறிப்பிட்டேன்.

இந்தத் துறையைப் பொறுத்தவரையில் அரசு செலவழிக்கத் திட்டம் போட்டிருக்கிற தொகை போதும் என்று அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. அமைச்சரவையும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அதிகப்படியான அளவிற்குப் பணம் செலவழிக்கவேண்டுமென்று எண்ணம் இருந்தாலும் முடியாத நிலைதான் அதைச் செய்யவிடாமல் தடுக்கிறது என்பதை இந்த மன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பொ. சி. அவர்கள் எடுத்துத் தெரிவித்ததுபோல் மனமில்லாத நிலை இல்லை. முடியாத நிலைதான் இருக்கிறது. அதற்காக மன்ற உறுப்பினர்கள் தங்களுடைய குறைபாடுகளையும் மருத்துவத் துறையிலும், பொது நலத் துறையிலும் செய்யப்பட வேண்டிய பணிகள் இவை இவை என்றும் எடுத்துச் சொல்லாமல் இருக்க வேண்டியதில்லை. அவரவர்கள் சொல்லத்தான் வேண்டும். எல்லா உறுப்பினர்களும் இந்தத் துறைகள் மேலும் வளர்ச்சியுறுவதற்கான வழிகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எப்பேர்ப்பட்ட சீர்திருத்த அமைப்புகளை மேற்கொள்ள வேண்டுமென்பதற்கான கருத்துக்களையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, சொல்ல வேண்டியதை மன்ற உறுப்பினர்கள் சொல்ல வேண்டியதுதான். ஆனால் அதிகாரிகள் இவற்றையெல்லாம் முடிந்த அளவிற்கு ஆராய்ந்து அதன்படி திட்டங்களை எங்களிடம் தருவார்கள். நாங்கள் நிதிநிலைமைக்கேற்றவாறு திட்டங்களை மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே, இவற்றிற்கிடையேயுள்ள வேறுபாடுகளை நாம்





உணர்ந்துகொள்வோமேயானால் எங்களுடைய சங்கடங்களை உணர்ந்து கொள்ள முடியும். தட்டினால் திறக்கப்படும், கேட்டால் கொடுக்கப்படும் என்று ஏசுநாதர் வேறு ஒரு இடத்தில் வேறு ஒரு காரியத்திற்காகக் குறிப்பிட்டதைப்போல் உறுப்பினர்கள் எடுத்துச்சொல்லியிருக்கிற கருத்துக்கள் வீண்போகா. இந்தக் கருத்துக்களையெல்லாம் அதிகாரிகளும், அமைச்சரும் கவனத்திற்கொண்டு அவை பற்றி தக்க நடவடிக்கை எடுக்க அரசு முனையும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மருத்துவ வசதியைப் பொறுத்த வரையில் அரசு தன்னால் இயன்ற அளவிற்குச் செலவழிப்பதில் கண்ணும் கருத்துமாகக் கவனம் செலுத்தி வருகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பத்தாண்டு காலத்திற்கு முன்பு சாதாரணமாக மருத்துவ வசதிகளுக்கு 8 கோடியே 31 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டது என்றால் 1970–71-ல் 24 கோடியே 56 இலட்சம் ரூபாய் செலவழிக்கும் அளவிற்கு அந்தத் துறையில் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். 1966–67-ல் 16 கோடியே 75 இலட்சம் ரூபாய் அளவிற்கு இருந்தது. 1970–71-ல் 24 கோடியே 56 இலட்சம் என்ற அளவிற்கு ஒதுக்க வேண்டுமென்று ஒதுக்கியிருக்கிறோம். என்றாலும் அது போதுமான அளவிற்கு இருக்கிறதா என்றால இல்லை. மூன்றாண்டுக் காலத்திலே, 19,928 படுக்கைகளாகயிருந்தது 21,299 படுக்கைகள் என்ற அளவிற்கு ஆகியிருக்கின்றன. அதாவது 1,371 படுக்கைகள் கூடுதல் வசதி செய்ய முடிந்திருக்கிறது. அவ்வளவுக்குத்தான் நிதி இடம் கொடுத்திருக்கிறது. பல்வேறு இடங்களிலும் மருத்துவமனைகள் பெருக வேண்டும், இருக்கும் படுக்கைகள் பெருகவேண்டும் என்ற கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். நான் முதலிலேயே சொன்னபடி முடிந்த அளவிற்குப் பெருக்குகின்ற முயற்சிகளிலே ஈடுபட்டிருக்கிறோம். 1,371 படுக்கைகள் மூன்றாண்டுக் காலத்தில் பெருக்கும் முயற்சியிலே ஈடுபட்டும் பெருக்கியிருக்கிறோம். மருந்துகள், பிற வசதிகளுக்காக 1967–68-ல் 72,45,700 ரூபாய் என்றால் அந்த வகையிலே டாக்டர் ஹாண்டே அவர்களும், மற்ற உறுப்பினர்களும் மருந்துகளுக்கு அதிகம் செலவழிக்க வேண்டுமென்று சொன்ன வகையில், 1970–71-ல் மருந்துகளுக்கும் பிற வசதிகளுக்கும் 84 இலட்சம் ரூபாய் ஒதுக்கி வைத்திருக்கிறோம். அவ்வளவு ரூபாய்தான் முடிந்ததாக அமைந்திருக்கிறது. ஆகவே, இவைகளையெல்லாம் இருக்கின்ற வாய்ப்பு வசதிகளை வைத்துக்கொண்டு ஆங்காங்கு வசதி செய்யக்கூடிய அளவில்தான் அமைந்திருக்கிறது.

கிராமங்கள் புறக்கணிக்கப்படுகின்றன, நகர்ப்புறங்கள் கவனிக்கப்படுகின்றன என்று சொன்னார்கள். ஒன்றைப் புறக்கணித்து மற்றதை வளர்க்க வேண்டுமென்று திட்டமிடப்படுவதில்லை. எல்லாவகையான கூறுகளையும் ஆராய்ந்து திட்டமிடவேண்டியவர்களாயிருக்கிறோம். நகர்ப்புறங்கள என்று சொல்லும்பொழுது நகர்ப்புறங்கள் மட்டுமல்லாமல் அது சுற்றுப்புறங்களிலுள்ள பல்வேறு கிராமங்களையும் ஒவ்வொரு நகரமும் அணைத்துக் கொண்டிருக்கிறது. மாவட்டத் தலைநகரம், வட்டத் தலைநகரம் என்றால் பல கிராமங்களை அது அணைத்துக்கொண்டிருப்பதால் வட்டத் தலைநகர், மாவட்டத் தலைநகர் என்று வைத்திருக்கிறோம். ஆகவே, பெரும்பான்மையான எந்த ஒரு பணிக்கும் வட்டத்தின் தலைநகரத்திற்கு, மாவட்டத்தின் தலைநகரத்திற்கு முதலிடம் அளிக்கவேண்டியதாயிருக்கிறது. நகரத்திலிருப்பவர்கள் கிராமம் நோக்கிப் போகமாட்டார்கள். கிராமத்திலிருப்பவர்கள் நகரம் நோக்கி வருவார்கள். எனவே, பல கிராமங்களையும் அணைத்துக்கொண்டு நகரமிருப்பதால், அந்த அடிப்படையிலே நகரத்தின் பணியைக் கவனிக்கவேண்டியதாயிருக்கிறது. அதற்காகக் கிராமங்களைப் புறக்கணிக்கும் நிலைமை இல்லை. கிராமங்களைப் புறக்கணிக்கக்கூடாது என்று கருதப்பட்டுதான், ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆங்காங்கு ஏற்படுத்தப்பட்டு எல்லா கிராமங்களுக்கும் அதன் பணிகள் செம்மையுறச் செல்ல வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையிலேதான் அந்தத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இங்கே விரிவான விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவை அத்தனையையும் எடுத்துச் சொல்ல நேரம் இடங்கொடுக்கவில்லை. ஆனாலும், நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் இந்திய அரசினரின் பணியில் குடும்ப நலத்திட்டத்திற்கு என்று ஐந்தாண்டுத திட்டத்தில் எவ்வளவு என்று திரு. வீராசாமி அவர்கள கேட்டார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்திய அரசினர் பணிகள் குடும்ப நலத் திட்டத்திற்காக 29 கோடியே 22 இலட்சம் ரூபாயாகவும், தொழுநோய், காசநோய், வி. டி. போன்ற நோய்களை நீக்குவதற்காக 12 கோடியே 53 இலட்சம் ரூபாயாகவும், ஆகமொத்தம் 41 கோடியே 75 இலட்சம் ரூபாய் மத்திய அரசின் பணிகளாக அமைகின்றன என்ற குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் பல்வேறு மருத்துவ வசதிகளுக்காகச் செலவழிக்கப்பட்ட தொகை பற்றிய கணக்கு என்னுடைய விளக்கவுரையில் இருக்கின்றது. இதய நோய் பிரிவுக்காக 17 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் அளவில் கட்டடம் எழுப்பப்படுகிறது. நரம்பியல் மருத்துவப் பிரிவிற்காக 16 லட்சத்து 50,000 ரூபாய் செலவில் கட்டடம் எழுப்பப்படுகிறது. நுண்ணுயிர்ப் பிரிவுக்காக $3\frac{1}{2}$ இலட்சம் ரூபாயில் கட்டடம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. திண்டுக்கல் காசநோய் பிரிவில் 24 படுக்கைகளும் தர்மபுரியில் 20 படுக்கைகளும் காசநோய் பிரிவுகளுக்காக ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. அவை முடியும் தறுவாயில் இருக்கின்றன.

ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பணித் திட்டங்களான, தென் ஆர்க்காடு மாவட்டம், விருதாசலத்திலுள்ள அரசு மருத்துவமனையில் மகப்பேறு அறுவை சிகிச்சை நிலையம் கட்டுதலுக்காக 1,45,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகத்திலுள்ள, அரசு மருத்துவமனையில் 24 படுக்கைகள் கொண்ட பிரிவு கட்டுதலுக்காக, 1,35,000 ரூபாயும், தென் ஆர்க்காடு மாவட்டம், திருக்கோயிலூரிலுள்ள அரசு மருத்துவ மனையில் இரண்டு மருத்துவ அதிகாரிகளுக்குக் குடியிருப்புகள் கட்டிக் கொடுத்தலுக்காக 40,000 ரூபாயும், திருநெல்வேலி மாவட்டம், தென் காசியிலுள்ள அரசு மருத்துவமனையில் சமையல் கூடத்துக்கு மேம்பாடு களுக்காக 12,500 ரூபாயும் தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்திலுள்ள அரசு மருத்துவமனையில் தற்போதிருக்கும் மின்சார அமைப்புக்கு மேம்பாடுகளுக்காக 18,000 ரூபாயும் இப்பொழுது ஒப்பளிப்பு வழங்கப் பட்டிருக்கிறது.

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியிலுள்ள அரசு மருத்துவ மனையில் குருதி சேமிப்பு நிலையம் ஒன்றுக்கு அரசு ஒப்புதல் வழங்கப்பட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், புதிய சமையற்கூடங்களைக் கட்டுவதற்கு மூன்று இடங்களுக்கு, அதாவது திரு மங்கலம் அரசு மருத்துவமனை, பத்மனாபபுரம் அரசு மருத்துவமனை, அரியலூர் அரசு மருத்துவமனை ஆகிய மூன்று இடங்களில் இந்தத் திட் டங்கள் மேற்கொள்ளப்பட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இராயப்பேட்டையில் நான்கு மாடிக் கட்டிடம் கட்டுவதற்காக 10 இலட்சத்து 47 ஆயிரம் ரூபாய் ஒப்புதல் அளிக்கப்பட்டு முடிவுற்ற நிலை யில் இருக்கிறது. 'அரசு கண்நோய் மருத்துவமனையில் பொது, சிறப்பு மருத்துவமனைப் பிரிவுகளுக்கும் அறுவை சிகிச்சை நிலையங்களுக்கும் வசதி செய்து கொடுக்கும் வகையில் 3 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் அரசு கண் நோய் மருத்துவமனையின் புதிய புற நோயாளிப் பிரிவுக்கு மேல் இரண்டாவது மாடி கட்டுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அது மட்டுமல்லாமல், மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளுக்கு மேம்பாடுகள் பல செய்யப்பட்டிருக்கின்றன. ஒப்புதல் வழங்கப்பட்ட பணித் திட்டங்கள் பற்றி விளக்கவுரையில் குறிப்பிட்டிருப்பதால் அதைக் கூற வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன்.

எக்ஸ் கதிர் பிரிவுகள் 3 இடங்களில் நிறுவுவதற்கான திட்டம் இந்த ஆண்டு மேற்கொள்ளட்பட்டிருக்கிறது.





அறந்தாங்கியில் 32 படுக்கைகள் கொண்ட வட்ட மருத்துவ மனை கட்டுவது முடியும் தறுவாயில் உள்ளது. செயங்கொண்ட சோழபுரத்தில் 40 படுக்கைகள் கொண்ட புது அரசு மருத்துவமனையும், திருத்துறைப் பூண்டியில் 32 படுக்கைகள் கொண்ட பிரிவு ஒன்று கட்டும் பணியும் நடந்தேறி வருகின்றன.

வட்ட மருத்துவ நிலையங்கள் அல்லாத பிற மருத்துவ நிலையங் களுக்கு மேம்பாடுகள் குறித்து, ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பணித் திட் டங்கள் மேற்கொள்ளப்பட்டு திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூரில் உள்ள அரசு மருத்துவ மனையில் 32 படுக்கைகள் கொண்ட ஒரு பிரிவு உட்பட கூடுதல் கட்டிடங்கள் கட்டுதலுக்கு 5 இலட்சம் ரூபாயும், திருச்சி ராப்பள்ளி மாவட்டம் புதுக்கோட்டையிலுள்ள நகர் பொது மருத்துவ மனை யில் மேக நோய் தனி மருத்துவ மனை ஒன்று கட்டுதலுக்காக 69,000 ரூபாயும், ஆக இப்படிப்பட்ட திட்டங்கள் பற்றி குறிப்புகளில் தரப்பட்டி ருக்கின்றன. நான் மீண்டும் அவைகளைச் சொல்ல வேண்டிய அவசிய மில்லை என்று கருதுகிறேன்.

புதிய மருத்துவ மனைகள் கட்டும் பணிகளைப் பொருத்தவரையில் செங்கற்பட்டு மாவட்டம், தாம்பரத்தில் 100 படுக்கைகள் கொண்ட மருத் துவ மனை கட்டும் பணி நடந்தேறி வருகின்றது. இராமநாதபுரம் மாவட் டம், தேவக்கோட்டையில் 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையும், மதுரை மாவட்டம் தேனியிலும், இராமநாதபுரம் மாவட்டம், சிங்கம் புணரியிலும் 32 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையும், இராமநாத புரம் மாவட்டம், பாகநேரியில் 10 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை யும் கட்டும் பணி நடந்தேறி வருகின்றது.

இவற்றைத் தவிர, கட்டடத் திட்டங்கள் என்ற வகையில் 1969–70-ல் பல கட்டிடங்களைக் கட்டுவதற்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 1970–71-ல் மேற்கொண்டு செல்லுமளவிற்கு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இவைகளிலெல்லாம் இருக்கும் நிதி வசதிகளைப் பொறுத்தும், ஆங் காங்கு இருக்கின்ற நிலைமைகளையும் கண்டறிந்து திட்டங்களைத் தீட்டி நாம் மேற்கொள்ள வேண்டியவர்களாகயிருக்கிறோம். பரிசீலிப்பதற்கு என்று பல திட்டங்களை வைத்திருக்கிறோம். அதற்காக, சேலம் மாவட்டம், ஓம லூரில் 8 படுக்கைகள் கொண்ட வார்டு, திருச்சி மாவட்டம், ஆலங்குடி யில் 16 படுக்கைகள் கொண்ட புதிய மருத்துவமனை, தென் ஆர்க்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சியில் 8 படுக்கைகள் கொண்ட வார்டு, இராமநாத புரம் வத்திராயிருப்பில் 8 படுக்கைகள் கொண்ட வார்டு, கன்னியாகுமரி யில் 5 படுக்கைகள் கொண்ட புதிய வார்டு, கோவை மாவட்டம், பல்லடத் தில் 12 படுக்கைகள் கொண்ட புதிய வார்டு ஆக இவைகளெல்லாம் 1970–71-ல் இரண்டாம் பிரிவுத் திட்டத்தில் பரிசீலிக்கப்பட இருக் கின்றன.

மருந்துகள் வாங்குவது பற்றிச் சொன்னார்கள். போதுமான அள விற்கு ஆங்காங்கு இடைக்கவில்லை என்றால் ஒரு மருத்துவ அதிகாரி 50 ரூபாய் வரையில் வாங்கிக் கொள்ளலாம் என்று இருக்கிறது. அப்படி வாங்கும்போது அதற்கு சிலபல முறைகளைக் கையாள வேண்டும். அதற்கு எழுதி பதில் வந்து செய்ய வேண்டுமென்பதால் பல டாக்டர்கள் இதிலே ஈடுபடாமல் விட்டுவிடுகிறார்கள். முக்கியமான அவசரமான கேஸ்களுக்கு வாங்குவதைத் தடுத்து நிறுத்தக் கூடிய நிலை இல்லை. மாவட்டத் தலைமை அதிகாரி 2000 ரூபாய் வரையில் வாங்கிக்கொள்ளலாம், தன்னிச்சையாக வாங்கலாம் என்று இருக்கிறது. மருத்துவ அதிகாரிகள், மாவட்ட அதிகாரிகள் மூலமாக அந்த வசதிகளைப் பயன்படுத்திக்கொண்டுகூடச் செய்யலாம். இந்தத் தொகை குறைவு என்று சொன்னார்கள். குறைவுதான். இதை மேலும் உயர்த்துவதற்கு வழிவகை இருக்கிறதா என்று ஆராய்ந்து, நிதி நிலையைப் பொறுத்து தக்க நடவடிக்கைகள் எடுக்க முயற்சி யெடுக்கப்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1970 மார்ச் 30

படும் என்று இப்பொழுது கூறிக்கொள்ள விரும்புகிறேன். மருத்துவ இயக்குநர் 10,000 ரூபாய் வரையில் மருந்துக்கு செலவழிக்கலாம். குறிப்பிட்ட மருந்து அங்கு கிடைக்கவில்லையென்றால், அதற்கான சான்றிதழ் வழங்கப்பட்டு, ஆங்காங்கு வாங்கிக்கொள்ளலாம் என்ற தன்மை இருக்கிறது. ஆனால் அந்த முறையிலே சிலபல சங்கடங்கள் இருக்கும் என்று விட்டுவிடுகிறார்களே தவிர, நோயாளிகளின் ஆபத்தை அறிந்து, அவசரம் இருக்கிறதா என்று அறிந்து அதற்கான முறைகளிலே இவைகளை அறிந்து தக்க பரிசீலனை செய்யலாம்.

இட நெருக்கடிகளைப்பற்றி திரு. காசிராமன் அவர்களும், திரு. ம. பொ. சி. அவர்களும், திரு. பீர் முஹம்மது அவர்களும், எடுத்துச் சொன்னார்கள். இருக்கும் வசதிகளை வைத்து படுக்கைகள், மற்றவைகளை ஏற்பாடு செய்திருக்கிறோம்.

பிற்பகல் 1-30 படுக்கைகளின் எண்ணிக்கைகளுக்கு மேல் நோயாளிகளை அனுமதிப்பதற்கு இல்லை என்று சொல்ல முடியாது. அப்படித் தடுத்து நிறுத்திவிடுவோமானால் பல நோயாளிகளை மருத்துவ மனைக்கே வர விடாமல் தடுத்து நிறுத்திவிட வேண்டியிருக்கும். படுக்கைகளை அதிகரிக்காமல் இருந்தால் நெருக்கடி நிலைமை இருந்து கொண்டே இருக்கும். போடுகிற படுக்கைகளுக்கு நோயாளிகள் நிரம்பி விடுகிறார்கள். ஆகவே, பதிவு செய்து கொண்டு. அந்த முறையின்படிதான் சேர்த்துக் கொள்வது என்று சொன்னால் பல நோயாளிகள் பல நாட்களுக்குக் காத்துக்கொண்டிருக்க நேரிடும். நோயாளிகளை நீண்ட நாட்களுக்கு அப்படிக் காத்துக் கொண்டிருக்கும்படி செய்வது சரியாகாது. பல நாட்களுக்குக் காத்துக் கொண்டிருக்க முடியாத நோயாளிகள் இருப்பார்கள். இப்படி பதிவு முறையை வைத்துத்தான் நோயாளிகளைச் சேர்த்துக் கொள்வது என்ற முறையைக் கொண்டுவந்தால் உண்மையிலே ஏழைகளாக உள்ள, தேவைப்படும் நோயாளிகள் இடம் கிடைக்காமல், உண்மையிலே நோயில்லாதவர்கள், சிபாரிசு அடிப்படையில் அவர் அவர்களுக்குப் போடுகிற கிடிக்கித் தாக்குதல், ஏற்படுகிற தன்மைக்கு ஏற்ப, இந்த படுக்கைகளைப் பிடித்துக் கொள்ளும் நிலைமை ஏற்படும், அதனால் உண்மையான நோயாளிகளுக்கு பலன் ஏற்படாது. வாய்ப்பும் வசதியும் பெற்றவர்கள் மட்டும் இடம் பெறுகிற தன்மை வளர்ந்து விடும். ஆகவே இருக்கிற வசதிகளை வைத்துக் கொண்டு, நோயாளிகளுக்கு வசதி குறைவாக இருந்தாலும் நோயாளிகளைச் சேர்த்துக் கொள்வது, அவர்களுக்கு வேண்டிய சிகிச்சை அளிப்பது என்பதை முடிந்த அளவிலே வைத்துக்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களை அரசு உணருகிறது. அதே சமயத்தில் நமக்கு இருக்கிற வாய்ப்பு வசதி, நோயாளிகளின் தன்மை, இருக்கிற நிலைமைகள் இவற்றை ஆராய்ந்து இட நெருக்கடி இருந்தாலும், படுக்கைகள் இல்லாவிட்டாலும், அவசியமான நோயாளிகளைப் பாயில் படுக்கவைத்து வைத்திய வசதிகளை அளிப்பது என்று அரசாங்கம் முடிவு செய்து படுக்கைகளை அதிகப்படுத்த இந்த அரசு முயற்சித்துக்கொண்டு வருகிறது. படுக்கைகள் போதுமானதாக இல்லாத இடங்களில் பாயிலே நோயாளிகளைப் படுக்க வைக்கும்போது தரைக்கும் அவர்களுக்கும் சம்பந்தம் ஏற்படாமல் ஏதாவது ஏற்பாடு செய்ய முடியுமா என்பதை நான் ஆராய்ந்துகொண்டு வருகிறேன். 1′, 1½″ தரையிலிருந்து இருக்கும்படி ஒரு ஏற்பாடு செய்ய முடியுமா, அதற்காகப் பலகைகளைப் பயன்படுத்த முடியுமா என்பதை ஆராயும்படி சொல்லியிருக்கிறேன். படுக்கைகளை 3′ 4″ உயரத்திற்குப் போட முடியாத நிலைமையில் 1′ அல்லது 1½″ உயரமாவது இருக்கும்படி பலகைகளைப் போடுவதா அல்லது வேறு ஏதாவது ஏற்பாடுகளைச் செய்வதா என்று ஆராய்ந்து ஒரு "டிவைஸ்"ஐ கண்டுபிடித்து இந்த முறைப்படி நோயாளிகளைப் படுக்க வைக்கலாமா என்று யோசித்துக்கொண்டிருக்கிறோம். மருத்துவ மனைக் கண்காணிப்பாளர்களை இதைப்பற்றி ஆராய்ந்து சொல்லும்படி கேட்டுக்கொண்டிருக்கிறேன். அவர்கள் யோசிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.



1970 மார்ச் 30] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

மருந்து வகைகளுக்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு 5,400 ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இதை 5,900 ரூபாயாக அதிகப்படுத்தியிருக்கிறோம். ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 4,500 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மருந்து இயங்கிகள் மருத்துவப் பிரிவுகள் ஏற்படுத்த வேண்டுமென்று கோரிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே 11 இடங்களில் இயங்கும் மருத்துவப் பிரிவுகள் இயங்கிவருகின்றன. மேலும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு உடுமலைப்பேட்டை, கோவை மாவட்டத்திலும், தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த ஒசூரிலும் இப்படிப்பட்ட மருத்துவப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட இருக்கின்றன. ஹரிஜனத் துறை மூலம் தர்மபுரி தலைமை மருத்துவ மனையில் பழங்குடி மக்களின் நன்மைக்காகப் பயன்படுகிற வகையிலே அங்கு ஒரு இயங்கும் மருத்துவப் பிரிவு ஏற்படுத்த ஹரிஜன இலாகா முன்வந்திருக்கிறது. அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. உள்ளாட்சித்துறை நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த கூனூரிலே அரசு மருத்துவமனையோடு தொடர்பு கொண்டு இயங்கும் மருத்துவப் பிரிவு ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

மற்றும் சித்த மருத்துவத்தைப்பற்றி உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். சித்த முறையிலே பயில்கின்ற மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று டாக்டர் ஹண்டேயும் மற்ற உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள். சித்த வைத்திய முறையிலே இயங்கும் பிரிவை 5 மாவட்டத் தலைநகர்களிலே ஏற்படுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. வேலூர், கடலூர், சேலம், கோயம்புத்தூர், இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய மாவட்ட மருத்துவ மனைகளில் சித்த வைத்தியப் பிரிவை ஏற்படுத்தவேண்டுமென்று உத்திரவு பிறப்பிக்கப்பட்டு செயல்பட இருக்கிறது. அதுதவிர கோவில்களின் சார்பாக சித்த மருத்துவ மனைகள் ஆரம்பிக்க வேண்டுமென்ற யோசனை அறநிலையப் பாதுகாப்பு அமைச்சர்மூலம் அந்தத் துறைக்கு விண்ணப்பம் கொடுக்கப்பட்டு அந்தத் துறை ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. ஒரு லட்சம் ரூபாய்க்குமேல் வருமானம் உள்ள கோவில்களின் சார்பாக ஒரு சித்த மருத்துவமனை நிறுவலாம். அது கோவில்களின் அறப்பணிக்குச் சிறப்பாக அமையும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 49 கோவில்களின்மூலம் 49 சித்த வைத்திய மனைகள் ஏற்படுத்துவது எங்கள் நோக்கமாகும். மூன்று ஆண்டு காலத்தில் ஒரு "பேஸ்ட் புரோகிராமில்" நிறுவுவதற்கு அறநிலையப் பாதுகாப்புத் துறை கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அவர்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த மருத்துவ மனைகள் ஏற்பட்டால் சித்த வைத்திய முறையில் படித்துப் பட்டம் பெறுகிற மாணவர்களுக்கு நல்ல வாய்ப்பு கிடைக்கும். இப்பொழுது 13 பேர்களை எடுத்துக்கொள்ளும் வாய்ப்பு,சூழ்நிலை இருக்கிறது. மாவட்டத் தலைநகர்களிலே இப்பொழுது தீர்மானிக்கப்பட்டுள்ளபடி 5 மாவட்டங்களிலே சித்த வைத்தியப் பிரிவு ஏற்படுத்தப்பட்டால் 5 பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படும். இந்த ஆண்டு 26 பேர் படித்துப் பட்டம் பெற்று வருவார்கள். அடுத்த ஆண்டு 26 பேர் வருவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது. ஊராட்சி ஒன்றியங்கள் சித்த வைத்தியப் பிரிவுகளை ஏற்படுத்தினால் இவர்களுக்கு வேலை வாய்ப்பு நிச்சயம் இருக்கும். இவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தர அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளும். அதிலே அக்கறையோடு ஈடுபட்டு வருகிறது. மற்றும் அவர்களைப் பதிவு செய்யாததால் அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று டாக்டர் ஹண்டே கூறினார். அவர்களைப் பதிவு செய்துகொள்ளும்படி உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறது.

மருத்துவக் கல்லூரிகளைப் பொறுத்தமட்டில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதில் எப்படி எப்படிச் செய்யவேண்டுமென்ற யோசனையை சில உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். நம்முடைய மாநிலத்தில் 9 மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. அதில் 8 கல்லூரிகள் அரசுத் துறையிலும், ஒன்று தனியார் துறையில் வேலூரில் சி. எம். சி. கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரி என்ற பெயரில நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இந்த கிருத்துவ மருத்துவ கல்லூரியில் ஆண்டு ஒன்றுக்கு 60 பேர் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். அரசுத் துறையில் உள்ள 8 கல்லூரிகளிலும்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1970 மார்ச் 30

1,125 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். அதில் 21 இடங்கள் பிற மாநிலத்தை சேர்ந்தவர்களுக்காக ஒதுக்கப்பட்டு இருக்கின்றன. 1,104 இடங்கள் நம்முடைய மாநிலத்திற்கு இருக்கின்றன. 110 இடங்கள் பட்டதாரிகளுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கின்றன. மருத்துவக் கல்லூரிக்கு ஏற்படுத்தப்பட்ட தேர்வு முறை 10, 15 ஆண்டுகளாக இருந்து வருகிறது. மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு என்று ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலே ஒரு குற்றமும், எந்த நிலைமைகளும் ஏற்படாத அளவிற்கு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்ற அக்கறையை இந்த அரசு கொண்டிருக்கிறது. அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாணவர்கள் இத்தனை ஆண்டுகளும் சென்னைக்கு வரவேண்டுமென்ற முறை வைக்கப்பட்டிருந்தது. இதனால் ஏழை மாணவர்களுக்கும், அவர்களுடைய பெற்றோர்களுக்கும் பல சிரமங்கள், தொல்லைகள் ஏற்படுகின்றன என்ற காரணத்தினால், இந்த முறையை மாற்றி ஒரே குழு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்குப் பதில் 4 குழுக்களை அமைத்து, சென்னை தஞ்சாவூர், கோயமுத்தூர், மதுரை ஆகிய இடங்களுக்குச் சென்று மாணவர்களைத் தேர்ந்து எடுக்கும் முறையை இப்போது கொண்டுவந்திருக்கிறோம். புகுமுக வகுப்பில் மாணவர்கள் பெற்ற மார்க்குகளை மட்டும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர்கள் வைத்திருக்கிறார்கள். அதற்காக 75 எண்கள், மருத்துவத் துறையில் ஆர்வம், அதற்குத் தகுதி, ஸ்போர்ட்ஸ், கேம்ஸ் ஆகியவைகளுக்கு 25 எண்கள் என்று வைத்திருக்கிறார்கள். குழு தெரிவித்த மற்றொரு கருத்தையும் அரசாங்கம் ஆலோசித்து வருகிறது. புகுமுக எண் அல்லாமல், அந்த எண் சரியாக இருக்கிறதா என்பதை, அவர்களுடைய உண்மையான அறிவை நேரிடையாக ஆராய்வதற்கு ஒரு "என்ட்ரென்ஸ் எக்ஸாமினேஷன்", ஒரு பரீட்சை வைத்து, அதிலே அவர்கள் பெறுகிற மார்க், மூன்றையும் சேர்த்துக் கூட்டி அதன் அடிப்படையில் சேர்க்கலாமா என்று ஒரு அடிப்படையிலே பரிசீலனை இருக்கிறது. இன்னும் அதைப்பற்றி திட்டவட்டமான முடிவு எடுக்கப்படவில்லை. விரைவிலே ஒரு குழுவைப் போட்டு ஏற்கெனவே அனுபவம் பெற்றவர்கள், ஏற்கெனவே இத்தகைய குழுக்களில் இருந்து அனுபவம் பெற்றவர்கள், மருத்துவத் துறையிலிருந்து ஓய்வு பெற்ற அதிகாரிகள், மற்றவர்கள், ஆகியவர்களுடைய ஆலோசனையைக் கேட்டு ஒரு முடிவு எடுக்கப்படலாம் என்ற கருத்தை நான் தெரிவித்து இருக்கிறேன். அதற்கான முயற்சியில் ஈடுபடும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பட்டவர்களையும் மற்றவர்களையும் சேர்த்துக்கொள்வதில்லை என்பது தவறான ஒன்றாகும். பிற்பட்ட வகுப்பினருக்கு 25 சதவிகித இடம் ஒதுக்கி இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்களுக்கு 16 சதவிகிதம் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். 1968-லே பார்ப்போமானால் அவர்களுக்கு உரிய இடம் 25 சத விகிதம் அல்ல, 45 சதவிகிதம் ஆகும். ஆகவே, அவர்களுக்கு என்று ஒதுக்குகின்ற 25 சதவிகிதம் போக, ஜெனரல் பூல் என்று சொல்லப்படுகிற வகையிலும் அவர்கள் அதிக எண்ணிக்கையைப் பெற்று பொதுவாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அந்த வகையிலே அவர்கள் வருவதன்மூலம் 100 பேர்களில் 45 பேர்கள் பிற்பட்ட வகுப்பினர்கள் 1968-ம் ஆண்டில் இடம் பெற்றிருக்கிறார்கள். அதேபோன்று 1969-ம் ஆண்டில் 50 சதவிகிதத்திற்கு பிற்பட்ட வகுப்பினர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். 25 சதவிகிதம் என்று இருந்தால்கூட, பொதுத் தேர்விலே அவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிற காரணத்தினால், பிற்பட்ட வகுப்பினர், அவர்களுக்கு ஒதுக்கப்படுகின்ற இடங்களைத்தவிர, பொது இடங்களிலும் வருவதற்கு வாய்ப்பு இருந்த காரணத்தால், 50 சதவிகித இடங்களைப் பெற்று வந்திருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுடைய நிலைமையைப் பொறுத்த வரையில், 16 சதவிகிதம் என்று அவர்களுக்கு இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும், 16 சதவிகித இடங்களை அவர்கள் பெற்று, அதற்கு மேலும் பொது வகையில்கூட அவர்கள் 9 இடங்களைப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, 17 சதவிகித அளவுக்கு அவர்கள் இடம்பெற்றிருக்கிறார்கள். புகுமுக வகுப்பு படித்து பாஸ் செய்தவர்களுக்கு 16 சதவிகிதம் இடம் ஒதுக்கப்பட்டிருந்தும், பி.எஸ்ஸி. பட்டப் படிப்பு பெற்றவர்கள்



1970 மார்ச் 30] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

9 பேர்கள் வந்திருக்கிறார்கள். மொத்தத்தில் கணக்குப் போட்டால் 16 சதவிகிதத்திற்கு அதிகமான இடங்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வந்திருக்கின்றன.

பெண்களுக்கு 50 சதவிகிதமாவது இடங்களை மருத்துவக் கல்லூரிகளில் ஒதுக்கவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜானகி அம்மாள் குறிப்பிட்டார்கள். இப்பொழுதே ஒரு கணக்கு வைத்து, பெண்களுக்கு என்று கொடுக்கப்படுகிற இடங்களை 25 சதவிகித இடங்களுக்குக் குறையாமல் கொடுக்கலாம் என்று வைத்திருக்கிறோம். ஆனால், பெண்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள இடங்களைக் கணக்கிட்டுப் பார்த்தால், 30, 35 சதவிகித அளவுக்கு அவர்கள் கல்லூரிகளில் இடம் பெற்றிருக்கிறார்கள். இதை 50 சதவிகிதமாக உயர்த்தவேண்டுமென்று சொன்னால், அப்படி 50 சதவிகிதமாக உயர்த்துவதில் சிலபல சங்கடங்கள், இடர்ப்பாடுகள் இருக்கின்றன. பெண்களில் சிலபேர் கல்லூரிகளில் சேர்க்கப்பட்டவுடன் இடையிலே விட்டுவிட்டுச் சென்றுவிடுகிறார்கள். பல பேர் படித்ததற்குப் பிறகு வேலைபார்க்க முன்வருவதில்லை. அப்படியே வேலைபார்க்க முன்வந்தாலும்கூட, அவர்கள் கணவன் இருக்கிற இடத்தை நோக்கி நகரவேண்டியவர்களாக இருக்கிறார்களேதவிர, எந்தக் கணவனும் அவர்கள் இருக்கிற இடத்தை நோக்கி நகர்ந்து வருகிறமாதிரி இல்லை. இவர்கள்தான் கணவன் இருக்கிற இடத்திற்காக நகரவேண்டியிருக்கிறது. ஆகவே, இத்தகைய இடர்பாடுகள் ஏற்படுகின்றன. எனவே 25 சதவிகித இடங்கள் ஒதுக்கியுள்ள நிலையில், உச்ச வரம்பு ஒன்றும் நாம் ஏற்படுத்தவில்லை. 25 சதவிகிதம் என்ற அளவுக்கு வைத்திருந்தாலும், 30, 35 சதவிகித அளவுக்கு, போதுமான அளவுக்கு அவர்கள் இடங்களைப் பெற்றுவிடுகிறார்கள். அவர்கள் தேர்வு பெற்று வந்தாலும் பல காரணங்களின் அடிப்படையில் கிராமப்புறங்களுக்கு அவர்கள் செல்லாத சூழ்நிலை இருந்துவருகிறது. கிராமப் புறங்களில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், மற்ற மருத்துவ மனைகளுக்கும் லேடி டாக்டர்கள் வேண்டும் என்று சொல்லப்படுகிறது. பல இடங்களில் 6 மாதம் 7 மாதம், ஓராண்டு காலத்திற்குக்கூட பெண் டாக்டர்கள் இல்லாத நிலை இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் தொண்டி என்ற இடத்தில் ஓர் ஆண்டு காலமாக லேடி டாக்டர் இல்லாமல் இருந்து, 10 நாட்களுக்கு முன்னால்தான் அங்கே ஒரு லேடி டாக்டர் நியமிக்கப்பட்டார். அவர்கள் அங்கே போகமாட்டேன் என்று சொல்லி, வேறு இடங்கள் தாருங்கள், செல்கிறேன், அந்த இடத்திற்குப் போகவில்லை என்ற அளவுக்குச் சொல்லிக்கொண்டிருக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்படி இடர்பாடுகள் பெண்களைப் பொறுத்தவரையில் எல்லா வகையிலும் வருகின்றன. ஆகவேதான் அவர்களுக்கான இடத்தின் எண்ணிக்கையைப் பெருக்குவது என்பது முடியாத காரியமாக இருக்கிறது. எந்தவகையில் பார்த்தாலும் இடர்பாடுகள் ஏற்படுகின்றன. திருமணம் ஆகாத டாக்டர்களை கிராமப்புறங்களுக்கு அனுப்பலாம் என்று சொன்னால், திருமணம் ஆகவில்லை, ஆகவே நான் செல்ல இயலவில்லை என்று சொல்கிறார்கள். திருமணம் ஆனதற்குப் பிறகு அவர்களை அனுப்பினால், திருமணம் ஆகியும் கணவனிடமிருந்து பிரித்துவிடுகிறீர்களே என்று கேட்கிறார்கள். திருமணம் ஆனதற்கு சில ஆண்டுகள் கழித்து அனுப்பினால், இப்பொழுதுதான் குழந்தை பிறந்திருக்கிறது, இப்பொழுது அனுப்பினால் நான் எப்படிப் போக முடியும் என்று சொல்கிறார்கள். அதற்குப் பிறகு 5 ஆண்டுகள், 6 ஆண்டுகள், 10 ஆண்டுகள் கழித்து அனுப்பினால், குழந்தைகள் பள்ளிகளில் படிக்கின்றனவே, பள்ளிகள் இல்லாத இடத்திற்கு எப்படி குழந்தைகளை அழைத்துச் செல்வது என்று கேட்கிறார்கள். 25 ஆண்டுகள் கழித்து அனுப்பினால், நான் ஓய்வு பெறுவதற்கு இன்னும் 4, 5 ஆண்டுகள்தான் இருக்கின்றன. இப்பொழுது அனுப்புகிறீர்களே என்று கேட்கிறார்கள். அப்படி எந்த வகையில் பார்த்தாலும்கூட, மனித உணர்ச்சி வந்து தடுத்து நிறுத்தி, அவர்களை கிராமப்புறங்களுக்கு அனுப்பப்படமுடியாத நிலை இருக்கிறது. ஆகவே நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையில் இத்தகைய இடர்ப்பாடுகள் இருக்கிற காரணத்தினால், எண்ணிக்கையை அதிகப்படுத்த முடியாத நிலை இருக்கிறது. எனவேதான் பெண்களுக்கான இடங்களை நாம் இந்த அளவோடு விட்டு வைத்திருக்கிறோம்.

அடுத்தபடியாக, போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிட்யூட்டாக உயர்த்த வேண்டும் என்ற ஒரு கோரிக்கை இருந்தது. ஏற்கனவே மத்திய அரசிடம் அதை நாம் தெரிவித்திருக்கிறோம். ரூ. 5½ கோடி மத்திய அரசு வழங்கவேண்டும். போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிட்யூட் ஒன்று ஏற்படுத்துவதற்காக, மற்றைய மாநிலங்களில் இருப்பதுபோன்று இங்கேயும் இருக்கவேண்டும் என்கிற ஒரு விருப்பத்தை நாம் தெரிவித்திருக்கிறோம். முன்னாலே கொள்கை அளவில் இதை மத்திய அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது. பெரும் செலவு காரணமாக மத்திய அரசு அதற்கு இடம் தரவில்லை. அதற்குப் பிறகு நாம் தெரிவித்திருக்கிறோம். அடையாற்றில் புதிய கட்டடம் எழுப்பி ரூ. 5½ கோடி செலவில் புதிய மேற்பட்டப்படிப்பு மருத்துவ அறிவியல்கள் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு பெரிய செலவு ஏற்படும் என்று சொன்னால், சென்னையிலே இருக்கிற பெரிய மருத்துவமனையை போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிட்யூட்டாக மாற்றுவதற்கு வேண்டிய வசதிகளை நாம் செய்து தருகிறோம், அதை அப்படி மாற்றவேண்டும் என்று நாங்கள் கோரிக்கை விடுத்தோம். அந்தவகையில் மத்திய சுகாதார அமைச்சரிடமும், மத்திய அரசிடமும் நாங்கள் எடுத்துத் தெரிவித்திருக்கிறோம். அவர்கள் கொள்கை அளவில் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அப்படி அதை ஆக்கவேண்டுமென்றால், அங்கே இருக்கிற துறைகளை மேலும் மேற்படிப்பிற்கு உரிய துறைகளாக ஆக்க வேண்டும். இப்பொழுது சென்னை பெரிய மருத்துவ மனையில் 5 துறைகள்தான் மேற்படிப்பிற்குரிய துறைகளாக வைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் 8 துறைகளையும் மேற்படிப்புக்கு உரிய துறைகளாக ஆக்கிய பிறகு, அதை போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிட்யூட்டாக மேம்பாடு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய அரசுக்கு நாங்கள் தெரிவித்திருக்கிறோம். சென்னை பெரிய மருத்துவ மனையை மேற்பட்டப்படிப்பு மருத்துவ அறிவியல்கள் ஆராய்ச்சி நிலையமாக மாற்றும்பொழுது, அங்கு இருக்கிற 200 மாணவர்களை 50 ஆகக் குறைக்கவேண்டும். மாணவர்களின் எண்ணிக்கையை 50 ஆகக் குறைத்து, அதற்கான வசதி வாய்ப்புகளை மேற்கொள்ளவேண்டும். சானிடரி இன்ஸ்பெக்டர்ஸ் கோர்ஸ், டிப்ளமா இன் பார்மஸி, லெபரட்டரி டெக்னிஷியன் கோர்ஸ் ஆகியவைகளை இந்த மருத்துவ மனையிலிருந்து எடுத்து, செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரிக்கு, அதற்கு வேண்டிய இடவசதி அளித்து, மாற்றவேண்டும். மத்திய அரசு இந்தத் திட்டத்திற்குக் கொள்கை அளவில் ஒப்புதல் அளித்திருப்பதன் காரணமாக, மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மத்திய அரசு இப்பொழுது 10 மருத்துவக் கல்லூரிகளை இந்தியா முழுவதும் ஏற்படுத்துவதற்கு முயற்சி மேற்கொண்டிருக்கிறது என்று செய்தி வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. காசிராமன், மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி, மற்றும் உறுப்பினர்கள் தெரிவித்ததுபோல, அதிலே ஒரு மருத்துவக் கல்லூரி நமக்கு வரவேண்டும் என்று கேட்பதற்கு நியாயம் இருக்கிறது. திரு. காசிராமன் அவர்கள் இரண்டு கேட்கலாம் என்று கூறினார்கள். ஆனால் 10 கல்லூரிகள்தான் இந்தியா முழுவதற்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. நியாயமான அடிப்படையில் நாம் வற்புறுத்தினால் ஒரு மருத்துவக் கல்லூரிதான் நாம் கேட்கலாம். ஒரு மருத்துவக் கல்லூரி வருவதற்கு சிறப்பாக எல்லா முயற்சிகளையும் மிகத் தீவிரமாக மேற்கொண்டால் தான் அந்த எண்ணத்தைக்கூட நிறைவேற்ற முடியும். ஆகவே, ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்துவதென்றால் ரூ. 1½ கோடி செலவு செய்தால்தான் நல்ல முறையில் அமைய முடியும், அதற்கான பல்வேறு வசதி, வாய்ப்புகளை ஏற்படுத்த முடியும். தஞ்சாவூர், திருநெல்வேலி, கோவை ஆகிய இடங்களில் போதுமான வசதிகள், வாய்ப்புகள் இல்லை என்ற குறைபாடுகள் வந்துகொண்டிருக்கின்றன. இப்பொழுதே தஞ்சை மருத்துவக் கல்லூரிக்கு ரூ. 2 கோடி அளவுக்கு வசதிகள் செய்து கொடுப்பதற்கு செலவு செய்திருக்கிறோம். அதே மாதிரி திருநெல்வேலியில் ஒரு கோடி ரூபாய்க்குமேல் செலவு செய்து, பல்வேறு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அப்படி ஒரு புது மருத்துவக் கல்லூரி வருகிற நிலையில், அதை எந்த இடத்தில் வைக்கலாம் என்று நாம் பிறகு முடிவு செய்யலாம். பலரும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். தக்கதோர் இடத்தில் முறைப்படி வைப்பதற்கு நாம் முயற்சி செய்யலாம் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.





ஹவுஸ் சர்ஜன்களுக்கான வசதிகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். ஹவுஸ் ஸர்ஜன்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு கூடி வளர்ந்து வந்திருக்கிறது. 1963-வது ஆண்டில் 359 பயிற்சி மருத்துவர்கள் இருந்தார்கள், 1969-ல் 630 ஹவுஸ் ஸர்ஜன்கள் எல்லா மருத்துவ மனைகளிலும் பணியாற்றுகிறார்கள். 1970-ம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 650 முதல் 700 வரை உயரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற ஊதியம், ஸ்டைபெண்டு, உதவித்தொகை அதிகப்படுத்தப்பட வேண்டும் என்ற ஒரு கோரிக்கை வைத்துக்கொண்டு வருகிறார்கள். ஒருசில காலத்திற்கு முன்னால் ஊதியத் தொகையே இல்லாமல், படிப்பிலே ஒரு ஆண்டாக அது கணிக்கப்பட்டு அவர்கள் படிக்க வேண்டும் என்ற நிலையில் இருந்தது. 1962-ல் ரூ. 60 உதவித்தொகை அளிக்கப்பட்டு வந்தது. ரூ. 15 வீட்டு வாடகைப் படியாகக் கொடுக்கப்பட்டு வந்தது, அவர்களுக்கு இலவச இட வசதி செய்து தரப்படாவிட்டால், பிறகு அது 110 ஆக உயர்த்தப்பட்டது. அதோடு ரூ. 15 வீட்டு வாடகைப் படியும் கொடுக்கப்பட்டு வந்தது, இலவச இடவசதி செய்து தரப்படாத நிலையில். அதற்குப் பிறகு 1965-ல் அந்த ஊதியம் 150 ஆக உயர்த்தப்பட்டது. ரூ. 15 வீட்டு வாடகைப்படி தருவது என்ற முறையும் இருந்தது. இப்பொழுதும் 1965-ல் இருந்த முறைப்படியே இருந்து வருகிறது. அவர்களுக்கு ரூ. 300 தரவேண்டுமென்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இப்பொழுது மருத்துவ அதிகாரிகளுக்கே ஆரம்பம் ரூ. 300 தான் அளித்து வருகிறோம். தரப்படுகிற உதவித்தொகையின் அளவு மெல்ல மெல்ல வளர்ந்து வருகிற நிலையில், இப்பொழுது அதே தொகை ரூ. 150 கொடுக்கப்படுகிறது. அதோடுகூட வீட்டு வாடகைப்படி ரூ. 15 இப்பொழுதும் தரப்படுகிறது. மற்ற இடங்களில் அதிகமாகத் தருகிறார்கள் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அதையும் நான் ஆராய்ந்து பார்த்தேன். அந்தவகையில் பார்த்தால், வேலூரில் 110 ரூபாய் தருகிறார்கள்; ஆந்திராவில் ரூ. 150 தருகிறார்கள்; கேரளாவில் ரூ. 150 தருகிறார்கள்; மைசூரில் ரூ. 150 தருகிறார்கள். ஆனால், பாண்டிச்சேரியில் இருக்கிற மருத்துவமனை இந்திய அரசினரால் நடத்தப்படுவதால், அங்கே ரூ. 175 தருகிறார்கள். அதிகப்படியாக இருப்பது ரூ. 175 தான். ஆகவே, 1970-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ந் தேதியிலிருந்து ரூ. 175 ஹவுஸ் ஸர்ஜன்களுக்குத் தரலாம் என்று அரசு முடிவு எடுத்திருக்கிறது (ஆரவாரம்) என்பதைக் கூறிக் கொள்ளவிரும்புகிறேன். 25 ரூபாய் அதிகமாகக் கொடுத்து, இந்திய அரசின் மருத்துவ மனையில் இருப்பதுபோல அதிகப்படியாகக் கொடுப்பது நியாயத்தின் அடிப்படையில் அமையும் என்று, அந்த அடிப்படையில் செய்ய இந்த அரசு முடிவு செய்திருக்கிறது என்பதைக் கூற விரும்புகிறேன்.

தொழு நோய் மனைகளைப் பற்றிச் சொன்னார்கள். அரசு 26 கட்டுப்பாடு நிலையங்களை நடத்துகிறது. 116 ஆய்வு நிலையங்களும் பணிபுரிந்து வருகின்றன. பதிவு செய்து கொண்டிருப்பவர்களின் எண்ணிக்கை 1,52,929 தொழுநோய்க் காரர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும் போது, இவைகளெல்லாம் போதாதுதான். ஆனால், தனியார்களும் நடத்துகிறார்கள். நாம் இரண்டு மனைகளை நடத்திவருகிறோம். 136 படுக்கைகள் கொண்ட சேலம் மாவட்டத்தில் எத்தாபூரிலும், திருச்சி மாவட்டத்தில் தொழுவூர்பேட்டையிலும் 100 படுக்கைகள் கொண்ட மனைகள் நடத்திவருகிறோம். அதோடு இந்திய சர்க்காரால் திருமணியில் 950 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையும் இருக்கிறது. தொழுநோய் மருத்துவமனைகளுக்கு மருந்து வசதிகள் மற்றவைகள் அளிப்பது பொறுத்து, இந்திய அரசு போப்பாலில் நடந்த மருத்துவ அமைச்சர்கள் மாநாட்டில், அவை நிறுத்தப்படக்கூடாது, காச நோய், தொழுநோய் முதலியவைகளுக்கு வசதி வாய்ப்புக்கள் குறைக்கப்படக் கூடாது என்றும், வேறு எந்த மாநிலத்தையும் விட நம்முடைய மாநிலத்தில்தான் தொழுநோய் அதிகம், ஆகவே அந்த செலவுகள் பூராவை

யும் நாமே தாங்கமுடியாது, ஆகவே, மத்திய அரசு உதவியை நீடிக்க வேண்டும் என்று நாம் கேட்டதற்கு இணங்க, மருந்து தருவது இன்னும் மற்ற மற்ற உதவிகளை நீடித்துவருகிறது. அப்படிப்பட்ட முயற்சிகளில் நாமும் ஈடுபட்டுவருகிறோம்.

தனியார் 12 இடங்களில் நடத்திவருகிறார்கள். 9 இடங்களில் இருக்கும் நோயாளிகளுக்கு, சிறுவராக இருந்தால் ரூ. 12 என்றும், பெரியவர்களாக இருந்தால் ரூ. 18 என்றும் நாம் அளித்துவருகிறோம். அதை உயர்த்தலாமா என்ற எண்ணம் பரிசீலனையில் இருந்து வருகிறது. அந்தப் பணம் குறைவாக இருக்கிறது என்று சொல்வதால் அவற்றை உயர்த்தலாம் என்கிற எண்ணமும் அரசுக்கு இருந்து கொண்டு இருக்கிறது. 18 ரூபாயை 25 ரூபாயாக உயர்த்தலாமா என்ற முயற்சியின் அடிப்படையிலும், 12 ரூபாயை 17 ரூபாயாக உயர்த்தலாமா என்றும் பரிசீலனையில் இருந்து வருகிறது. ரீஹாபிலிடேஷன் சென்டர் 750 பேர்கள் கொண்டது. மறுவாய்ப்பு தரும் முயற்சியில் தண்டையார்பேட்டைக்கு அருகில் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்காக 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ந் தேதியில் ஆணையும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. 750 பேர்கள் மேலும் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள் என்பதை இந்த வாய்ப்பில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் இரண்டு உதவி நிலையத்தை, கட்டுப்பாடு நிலையமாக மேற்கொள்ள அரசு முனைந்திருக்கிறது. தொழுநோய் நிலையம் சிதம்பரம், ஜெயங்கொண்ட சோழபுரம் என்ற இடங்களில் மேற்கொள்ள இருக்கிறது,

பார்மஸிஸ்ட் பற்றி கருத்துக்கள் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அவை கவனிக்கப்பட்டு வருகின்றன. அவர்களில் 271 பேர்கள் வேலையில் இருந்து வருகிறார்கள். அவர்களில் வெற்றி பெற்றவர்களுக்கு, தகுதி, திறமைக்குத் தக்கவாறு, அந்த அடிப்படையில் பட்டியல் தயார் செய்யப்பட்டு, வேலையில் அமர்த்தப்படுகிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகள் சம்பளக் குழுவிடம் விடப்பட்டிருக்கின்றன. தக்க முறையில் அது ஆராய்ந்து முடிவு கூறும். வேலை உயர்வுபற்றிக் கோரியிருக்கிறார்கள். அந்தக் கருத்து பரிசீலனையில் இருக்கிறது. 15 சதவிகிதம் வேலை உயர்வு கொடுக்கும் சூழ்நிலை ஆண்டுக் கணக்கில் ஏற்படும். குடியிருப்பு நிலையங்கள் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். எதிலே வெட்டு விழுந்தாலும் விழாவிட்டாலும், கட்டடங்கள் என்றால் வெட்டு விழுகிறது. எவ்வளவோ திட்டங்கள் போடுகிறோம். கடைசியில் மற்றவைகளுக்கு எப்படியிருந்தாலும், கட்டடம் என்றால் அடுத்த ஆண்டு பார்த்துக்கொள்ளலாமே என்று 1962-ல் சண்டைக்காலம் முதல் தள்ளிப் போட்டு, தள்ளிப்போட்டு நெருக்கடி தீராமல் போய்க்கொண்டிருக்கிறது. ஆண்டுக்காண்டு எடுத்துக்கொண்டு வருகிறோம்.

விடுப்புக்கு 10 சதவிகிதம் ஒதுக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது. விடுப்பு எடுக்கிறவர்கள், காலிகள் கணக்கு எடுத்த பிறகு ரிசர்வ் போஸ்ட் ஏற்படுத்துகின்ற முயற்சியில் ஈடுபடுவோம்.

எழுத்தர் பணிக்காக அவர்களுக்கு ரூ. 5 தரப்படுகிறது. எழுத்தர் பணிக்கு ஊதியத்தை உர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அது கவனத்தில் இருக்கிறது.

ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பொறுத்தவரையில், திரு. சுப்பராஜா 10,000 மக்கள் இருக்கும் இடங்களில் வைக்கவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். ஊராட்சி ஒன்றியம் ஒன்றுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்கிற அடிப்படை நோக்கத்தை நிறைவேற்றிவிட்டு, 10,000 மக்களுக்கு வரவேண்டியவர்களாக இருக்கிறோம். 374 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. மொத்தம் 341 ஒன்றியங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. 7 ஒன்றியங்களில், இரண்டு, இரண்டு அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆக 348 நிலையங்கள் இருக்கின்றன.





அடுத்தபடியாக, 33 இடங்களில் அமைக்க வேண்டும் என்பதில், வால்பாறையில் தோட்ட முதலாளிகள் செய்வார்கள் என்பதால், அங்கே அவசியம் இல்லை என்று தள்ளிவிட்டு, 32 இடங்களுக்குத் தேவைப்படுகிறது. இதற்கு 6 இடங்களுக்கு கருத்துக்கள் ஆய்வில் இருக்கிறது. ப்ரபோசல்கள் அனுப்பப்பட்டு ஆய்வில் இருந்து கொண்டிருக்கிறது. கருத்துக்கள் செய்யப்படவேண்டியவைகள் 15 இருக்கின்றன. மேற்கொண்டு ஒப்பலிப்பு வழங்கப்பட்டு திறக்கப்படாமல் 11 நிலையங்கள் இருக்கின்றன. ஒப்புதல் அளித்தாலும், பணம் இல்லை, இடம் கிடைக்காத தகராறு, இந்த ஊரில் வேண்டும், அந்த ஊரில் வேண்டும் என்கிற தகராறுகள் இருக்கின்றன. விரைவில் செய்கின்ற முயற்சியை அரசு செய்யும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஜீப் கார் வழங்க, இன்னும் வேறு வசதி வாய்ப்புக்களைக் கொடுக்க முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது.

குடும்ப நல திட்டத்தைப்பற்றி உறுப்பினர்கள் சொன்னார்கள். எந்தத் திட்டங்களையும் விட, இந்தத் திட்டத்திற்கு உறுப்பினர்கள் அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டும் என்கிற வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன். ஒரு தொகுதியில் ஒரு லட்சம் வாக்காளர்களுக்குப் பிரதிநிதிகளாக வந்து பல உறுப்பினர்களும் இங்கே அமர்ந்திருக்கிறார்கள். வேறு எந்தத் திட்டத்தை நிறைவேற்றினாலும், வேறு எந்தத் திட்டம் தடைபட்டு நின்றாலும், நிறைவேற்ற முடியாவிட்டாலும், இந்த ஒரு திட்டத்தை நிறைவேற்றினோமானால், இந்த நாடு வசதி, வாய்ப்புப் பெறும் என்கிற நோக்கத்தின் அடிப்படையில் இந்த வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன். (குறுக்கீடு) எங்களைப் பொறுத்தவரையில், சுயமரியாதை இயக்கத்தில் 32 ஆண்டுகளாகக் கருத்தடை பற்றிச் சொல்லிவந்திருக்கிறோம். "காதலுக்கு வழி வகுத்து, கருத்தடைக்கு ஒரு வழி செய்வோம்" என்று பாரதிதாசன் அப்பொழுதே பாடியிருக்கிறார். அதை உணர்ந்து அப்படிப்பட்ட நூல்களை வெளியிட்டதே சுயமரியாதை இயக்கந்தான்.

திரு. கே. விநாயகம்: சார், ஆன் எ பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன். தாங்களெல்லாம் எதிர்க் கட்சியிலிருந்தபோது, ஐந்து ஆண்டுகளுக்கு முன்னே, லூப் லிஸ்டம் அமலுக்கு வரவேண்டும் என்று காங்கிரஸ் சர்க்கார் சொன்னபோது, தங்கள் தலைவர்கள் 'வக்கில்லாத காங்கிரஸ் சர்க்கார் லூப் போட்டுக்கொள்ளச் சொல்கிறது' என்று கிண்டல் செய்த நீங்கள் இப்பொழுது இரண்டு வாரங்கள் கொண்டாடுகிறீர்களே, நாங்கள் ஒரு வாரம்தான் கொண்டாடினோம். அது ஏன்? ஆதலால், கருத்தை மாற்றிக்கொண்டோம் என்று சொல்லுங்கள். அப்பொழுது கிண்டல் செய்தவர்கள் இப்பொழுது தீவிரமாக அமுலாக்க வேண்டும் என்றால் என்ன அர்த்தம்? ஊரிலே பிரசாரம் செய்தீர்களே. இப்பொழுது பொதுமக்களுக்கு வேறு கண்ணோட்டம் வரக்கூடாது இல்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன விளக்கம் நீங்கள் கேட்டீர்கள்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: முதலிலே சொன்னது நாங்கள்தான். ஆரம்பத்தில் 30-ஆம் ஆண்டிலிருந்து கருத்தடை இயக்கம் வெற்றி பெறவேண்டும் என்பதையும் நாங்கள் சொல்லிக் கொண்டு வந்திருக்கிறோம். ஒவ்வொரு தடவையிலும், கால், அரை மணி நேரம் எதிர்க் கட்சித் தலைவராய் இருந்தபோது, ஐந்து ஆண்டுகளிலும், மருத்துவம், மற்றவைகள் எல்லாவற்றிலும் நானே தான் பேசியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் குறிப்புக்களைப் புரட்டிப்பார்த்தால் தெரியும், குடும்ப நலத் திட்டத்தை மிகத் தெளிவாக ஆதரித்துப் பேசியிருக்கிறேன். இதைக் கேலி செய்கிறவர்கள் இருக்கிறார்கள், எல்லாக் கட்சியிலும் இருந்துகொண்டிருக்கிறார்கள். குடும்பக் கட்டுப்பாடு பிரசாரம் செய்வது குறிப்பிட்ட கட்சிக்கு மட்டும் சொந்தமல்ல. நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட

பிறகும் சொல்லி வருகிறோம், முன்பும் சொல்லி வந்தோம். இதனுடைய அடிப்படைத் தத்துவத்தை உணராத காரணத்தினால் இது கேலிக்குரியதாக இருந்தது. நாங்கள் பேசும்போது பொதுக்கூட்டத்தில் சிறப்புககுரியது என்றுதான் பேசுவோம். முன்பு இருந்த நிலைமை மாறி, இப்போது இதனுடைய அடிப்படைத் தத்துவத்தை உணரக் கூடிய கட்டம் வந்திருக்கிறது. நாங்கள் எதிர்க்கட்சிப் பொறுப்பில் இருந்தபோதும்கூட குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்றுதான் நான் வலியுறுத்தினேன். ஒவ்வொரு தொகுதியிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் மூலமாக இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்களில் சிலர்கூட இதைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1966–67-ல் 2,42, 60 பேர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. 1969–70-ல் பிப்ரவரி முடிய 91,305 பேர்களுக்கு செய்யப்பட்டிருக்கிறது. ட்யூபெக்டமி என்ற முறையில் 1966–67-ல் 5,582 பேராக இருந்தது இன்றையதினம் 11,752 என்ற எண்ணிக்கையில் வளர்ந்து வந்திருக்கிறது. அறுவை சிகிச்சையின் முக்கியம் உணரப்பட்டு, இதனுடைய எண்ணிக்கை வளர்ந்துகொண்டு வருகிறது. கருத்தடை வளையம் பொருத்துவதைப் பொறுத்தவரையில் 1966–67-ல் 5,295 ஆக இருந்தது 1969–70-ல் 34,971 ஆக உயர்ந்திருக்கிறது. அதற்கும் ஒரு முக்கியத்துவம் ஏற்பட்டு, மக்கள் உணரக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. முன்பு இதைக் கேலி செய்வது என்ற கட்டம் இருந்தது, இப்பொழுது அந்த நிலைமை மாறி, இதன் அவசியத்தை உணருகின்ற நிலைமை வளர்ந்திருக்கிறது என்பதைத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

அறுவை சிகிச்சை நிலையங்களில் 194 இடங்களில் கருத்தடை வளையம் பொருத்தும் நிலையத்தை அமைத்திருக்கிறோம். சிற்றூர்ப்புற குடும்ப நலத்திட்டத்தின்கீழ் 1969-70-ல் 225 இடங்களில் இந்த நிலையங்களை அமைக்க இருக்கிறோம். ஆரம்ப சுகாதார நிலையத்தையொட்டி கருத்தடை வளையம் பொருத்தும் நிலையமும் அமைக்கப்படும். இதற்காக ஆரம்பச் சுகாதார நிலையங்களில் பெண் டாக்டர்களுக்கு குடியிருப்பு வசதிகள் செய்துகொடுக்க உத்தேசித்திருக்கிறோம். இதற்காக இந்திய அரசு 90 ஆயிரம் ரூபாய் தருகிற முறையில் திட்டம் அமைந்திருக்கிறது. குறிப்பாக பெண் டாக்டர்களுக்கு குடியிருப்பு வசதி செய்துகொடுக்க திட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது.

நகர்ப்புற குடும்பநலத் திட்டங்களைப் பொறுத்தவரையில் சிறந்த முறையில் இயங்கி வருகின்றன. மொத்தம் 762 இடங்களில் பயிற்சி நிலையங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. குடும்பநலத் திட்டமும், குடியிருப்பு இல்லங்களும் 45 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஏற்பட்டிருக்கின்றன. இன்னும் 78 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 241 சப்சென்டர்களை அமைக்கவும் திட்டமிட்டிருக்கிறோம்.

பொதுநலத் துறையைப் பொறுத்தவரையில் பிளேக் நோய்த் தடுப்பு நடவடிக்கை எடுககப்பட்டிருக்கிறது.

**திரு. எம். பூபதி**: தலைவர் அவர்களே, மருத்துவமனை விளக்க உரையில் 27-வது பக்கத்தில், "கோயம்புத்தூரில் 500 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை ஒன்று பெரும்பாலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது" என்று இருக்கிறது, அதைத் திறப்பதிலே, அதற்குப் பெயர் வைப்பதிலே ஏற்பட்ட சிக்கல் காரணமாக இன்னும் திறக்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: நீங்கள் கேட்க விரும்புவதைக் கடைசியாகக் கேளுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்துவிட்டபிறகு, உங்கள் கேள்வியைக் கேட்கலாம்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்**: தலைவர் அவர்களே, கடைசியிலே இதற்குப் பதில் சொல்ல விரும்புகிறேன். பெரியம்மை நோய்த் தடுப்பில் நாம் நல்ல முறையில் வெற்றி பெற்றிருக்கிறோம்.





1963–64-ல் இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் 9,241 பேர். 2,524 பேர் இறந்தார்கள். படிப்படியாக இந்த நோய் தடுக்கப்பட்டு 1969-ம் ஆண்டு முழுமையாக மொத்தம் 6 பேருக்குத்தான் இந்த நோய் கண்டது. இதில் யாருமே இறக்கவில்லை. இந்த ஆறுபேரும் இந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. வெளி மாநிலங்களிலிருந்து சிகிச்சைக்காக இங்கு வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்து, மலேரியாவைப் பொறுத்தவரையில் 1953-ல் 10,464 பேர் இந்த நோயினால் பாதிககப்பட்டிருந்தார்கள். 1968-ல் இந்த எண்ணிக்கை 354 ஆகி, சென்ற ஆண்டில் 65 ஆகியிருக்கிறது. இம்மாதிரியாக நாம் இந்த நோய்களைக் கட்டுப்படுத்த பல்வேறு முயற்சிகளை எடுத்துக் கொண்டு வெற்றி பெற்றிருக்கிறோம்.

அடுத்து ஆரம்பச் சுகாதார வசதிகளைப் பொதுமக்கள் மத்தியிலே புகுத்தும் நோக்கத்துடன் புதிய முறைகளைக் கைக்கொண்டோம். நான்கு லட்சம் ரூபாய் செலவில் கழிவிடங்கள் அமைக்கவும், மற்ற வசதிகளைச் செய்யவும் அரசு ஈடுபட்டிருக்கிறது.

சென்னை நகர குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் பல உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். நான் அதிகம் கூற வேண்டியதில்லை. சுமார் 21 கோடி ரூபாய் திட்டத்தில் வீராணம் ஏரித் திட்டத்தை மேற்கொள்ள இருக்கிறோம். இன்னும் இரண்டு ஆண்டுக் காலத்திற்குள் இந்தத் திட்டம் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் சோழவரம் ஏரி, புழலேரி தண்ணீரும் கிடைப்பதால் குடிநீர்ப் பிரச்சினை சமாளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான்காவது ஐந்தாண்டுத திட்டத்தில் 12½ கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, சிற்றூர்களில் எல்லாம் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. கூடுமான வரையில் எல்லா ஊர்களுக்கும் குடிநீர்த் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும். மேலும் ஆயுள் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷனிடமிருந்து கடன் வாங்கியும் குடிநீர்த் திட்டம் மேற்கொள்ளப்பட இருக்கிறது. இவைகள் எல்லாம் குறிப்புகளில் இருக்கிற காரணத்தால் நான் எல்லாவற்றையும் சொல்ல முற்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் இதை உணருவார்கள் என்பதை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நகர அமைப்பு வேலைத் திட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். நகர அமைப்புச் சட்டம் 1920-லிருந்து நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் 8 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். நகர—சிற்றூர் அமைப்பைப் பொறுத்தவரையில் டவுன் அண்ட் கன்ட்ரி ப்ளானிங் என்பதைக் கவனிக்கும் வகையில் ஒரு போர்டு அமைக்கலாம் என்றும், இது நகர்ப்புற—சிற்றூர்ப்புற அமைப்பைக் கவனிக்கலாம் என்று அரசு யோசித்து வருகிறது. இதுபற்றிய மசோதா ஒன்று கொண்டுவரப்பட இருக்கிறது.

அடுத்து, பணிபுரிதலோடு பயிற்சிபெறும் இயங்கும் பகுதி அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி ஆரம்பச் சுகாதார நிலையத்தை அமைத்து, அடுத்துள்ள சிற்றூர்களுக்குச் சென்று மாணவர்களுக்குப் பயிற்சி தரலாம். இந்தத் திட்டத்தின்படி சென்னையில் உள்ள ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியோடு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையத்தையும், மதுரையில் உள்ள எர்ஸ்கின் மருத்துவக் கல்லூரியோடு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையத்தைத் தொடர்பு படுத்தியும் நடத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த நிலையம் ஒவ்வொன்றிற்கும் மத்திய அரசின் உதவியாக 10 லட்சம் ரூபாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்காலத்தில் எல்லா மருத்துவக் கல்லூரியோடும் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்தை ஏற்படுத்தும் நோக்கம் இருக்கிறது. மாணவர்கள் சிற்றூர்ப்புற சூழ்நிலையோடு பயிற்சி பெற வாய்ப்பு ஏற்படும். மத்திய அரசின் இசைவும் ஒப்பளிப்பும் கிடைக்கப்பெற்றவுடன் இத்திட்டம் நடைமுறைக்கு வரும்.

மருத்துவமனைகளைப் பொறுத்தவரையில் இட நெருக்கடி மிக அதிகமாக இருக்கிறது. சென்னை நகரைப் பொறுத்தவரையில் வெளி நோயாளிகள் அதிக அளவில் இருக்கின்றனர். இந்த நெருக்கடியைப் போக்க நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டும். இப்பொழுது சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் மாநகராட்சியின்கீழ் 60 மருந்தகங்கள் இருக்கின்றன. பொதுவாக மக்கள் எடுத்ததற்கெல்லாம் பெரிய மருத்துவமனைகளுக்கே வருகின்றனர். ஆகவே, மாநகராட்சியின்கீழ் இருக்கிற 60 மருந்தகங்களையும் பெரிய மருத்துவமனைகளோடு தொடர்பு படுத்த வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறோம். 60 மருந்தகங்களிலும் 60 டாக்டர்களை நியமிக்கவேண்டும். 60 செவிலியர்கள் தேவைப்படுவார்கள். இவர்கள் அவுட்பேஷண்ட்டுகளை அந்தந்தப் பகுதிகளில் கவனித்து, இவர்கள் கேஸ்களைக் கவனித்து ரெஃபர் செய்தால் பெரிய மருத்துவமனைகளில் எடுத்துக்கொள்ளலாம் என்று திட்டமிட எண்ணியுள்ளோம். மருந்துகள் எல்லாம் மருந்தகங்களுக்குக் கொடுக்கப்படும். மருந்தகங்களிலுள்ள டாக்டர்கள் பரிசோதித்து, 'பெரிய மருத்துவமனைக்குப் போகவேண்டும்' என்று அவர்கள் சிபாரிசு செய்பவர்களை மட்டுமே பெரிய மருத்துவமனைகள் கவனிக்கலாம் என்ற யோசனை பரிசீலனையில் இருந்து வருகிறது. சென்னை பெரிய மருத்துவமனையோடு 20 மருந்தகங்களையும், ஸ்டான்லி மருத்துவமனையோடு 20 மருந்தகங்களையும், இராயப்பேட்டை மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் மருத்துவமனையோடு 20 மருந்தகங்களையும் இணைப்பது பற்றி யோசனை செய்யப்பட்டு வருகிறது. மருந்தகங்களில் 60 துணை மருத்துவர்களையும், 60 செவிலியர்களையும் நியமிக்கத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக பெரிய பெரிய டாக்டர்களின் நேரம் எல்லாம் வீணாக்கப்படாமல், அவர்களுடைய சேவையைப் பயன்படுத்திக்கொள்வதில் அரசு முனைந்திருக்கிறது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

அடுத்து பிள்ளை பெற்றோர்களுக்கு குடும்ப நலத் திட்டத்தை ஏதேனும் ஒரு முறையில் ஏற்றுக்கொள்ள ஆலோசனை கூறி, வழி முறைகளை ஏற்படுத்திக் கொடுக்க 3 இடங்களில் அதற்கான வாய்ப்பு, வசதியைப் பெருக்கிக் கொடுத்திருக்கிறோம். சென்னை கஸ்தூரிபா ஆஸ்பத்திரி, எழும்பூர் ஆஸ்பத்திரி, மதுரை ஆஸ்பத்திரி ஆகிய இவற்றைத் தவிர எந்த முறையில் இதை விரிவுபடுத்தலாம் என்றும் யோசித்துக் கொண்டிருக்கிறோம். இதற்கு 4 லட்சத்து 31 ஆயிரம் செலவாகிறது. ஒரு லட்சத்து நாற்பத்தெட்டாயிரம் தொடர் செலவு, என்பதையும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இதுவரை 100 ரூபாய், அதற்குக் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கே இலவச மருத்துவ வசதி அளிக்கப்பட்டு வந்தது. இந்த வரம்பை உயர்த்த வேண்டும் என்று உறுப்பினர்களும் சொன்னார்கள். ஆகவே இனிமேல் 200 ரூபாய், அதற்குக் குறைவான வருமானம் உள்ளவர்களுக்கு இலவச மருந்து வசதியை ஏற்படுத்த அரசு முடிவு செய்திருக்கிறது. இதற்கு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும், நிதி அமைச்சர் அவர்களும் இசைவு தந்திருக்கிறார்கள் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, சிங்காநல்லூரில் காப்பு உறுதித் திட்டத்தின் கீழ் 500 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டப்பட்டு, இன்னும் திறக்கப் படாமல் இருப்பதைப் பற்றிச் சொன்னார்கள். அதில் ஒன்றல்ல, இரண்டல்ல பல சங்கடங்கள் வந்துவிட்டன. முதலில் 500 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டுவதற்கு மத்திய அரசு—இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன் அனுமதி தந்தது. பிறகு 300 படுக்கைகள் கொண்டதாகக் கட்டும்படி சொன்னார்கள். அதற்குப் பிறகு 222 ஆகக் குறைத்துக்கொள்ளவேண்டுமென்று சொன்னார்கள். நாம் வற்புறுத்தியதன் பேரில் மறுபடியும் 300 ஆக வைத்துக்கொள்ள அனுமதி தந்தார்கள். அதோடு முன்னால் அதற்காகும் செலவில் எட்டில் ஒரு பங்கை நாம் போடுவது என்றும், எட்டில் 7 பங்கை அவர்கள் தருவதாகவும் ஒப்புக்கொண்டார்கள். ஆனால் இப்போது ஒரு தொழிலாளிக்கு 50 ரூபாய் என்கிற அளவுக்குத்தான்



முடியும் என்கிறார்கள். ஏற்கனவே கருவிகள் வாங்குவதற்காக ன்பதாக எல்லாம் நாம் 9 லட்சம் செலவழித்திருக்கிறோம். இப்போது வர்கள் சொல்கிறபடி நிதி உதவியைப் பெறுவது என்றால் நமக்கு மலும் 22 லட்சத்திற்குமேல் கைப்பொறுப்பாகும். அவர்களது இந்தப் திய திட்டம் காப்புறுதித் திட்டத்தின் கீழ் மருத்துவமனையே ஏற்படாத ளவுக்கு பெரும் பாதகம் விளைவிக்கக்கூடியதாக இருக்கிறது. நம்முடைய சல்வத்தை அதிக அளவுக்கு இழக்கக்கூடியதாக இருக்கிறது. ஆகவே துபற்றி அவர்களுடன் கடுமையாக வாதிட்டுக் கொண்டிருக்கிறோம். டுக்கையைப் பொறுத்த அளவில் இப்போதைக்கு 300 என்றும், கால ட்டத்தில் தேவை அதிகப்படுகிறபோது 500 என்று ஆக்கிக்கொள்வதா லும் சரி, நிதி உதவியைப் பொறுத்தவரை முன்பு ஒப்புக்கொண்டது பால எட்டில் 7 பங்கை அவர்கள் தரத்தான் வேண்டும் என்பதாக ற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். இது பற்றி திரு. குமாரசுவாமி திரு. பதி அவர்கள் சொன்னது போல கட்டடத்தைக் கட்டிவிட்டு திறக்காமல் வைத்திருப்பதில் பயன் இல்லை. விரைவிலேயே அதைத் திறப்பதற்கான லைமை ஏற்படும் என்கிற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பல்வேறு கருத்துக்களும் இங்கே கூறப்பட்டிருக்கின்றன. வற்றை எல்லாம் இத்துறையினர் குறிப்பு எடுத்திருக்கிறார்கள். ஆகவே வற்றைப் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுப்பார்கள் அவற் றைப் பற்றி எல்லாம் சொல்லப் போனால் பசிப் பிணி வந்துவிடும். ற்றப் பிணிகளை எல்லாம் தடுக்கிற முயற்சியில் ஈடுபட்டிருக்கிற நாம் ந்தப் பிணி மேலோங்கடவிடக்கூடாது என்கிற காரணத்தினால் வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் திரும்பப் பெற்று மானியக் கோரிக் கையை ஏற்கவேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

***திரு. எம். பூபதி:** கோயம்புத்தூரில் மருத்துவக் கல்லூரியில் மேல் மாடி கட்டுவதுபற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். கோவை நகரில் குடிதண்ணீர்க் கஷ்டம் அதிகமாக இருக்கிறது, சிறுவாணித் திட்டத்தை முடிப்பதற்கு 5 ஆண்டுகள் ஆகும். இதற்கிடையில் சிறுவாணி நீர்த் தேக்கத்தில் 50 அடி ஆழம் வண்டல் தங்கியிருக்கிறது, அதை எடுத்தாலேயே தண்ணீரை ஒரு மாதத்திற்கு மேலாகக் கொடுக்க முடியும் என்கிறார்கள், அதைச் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதான குறிப்புத்தான் என்னிடத்தில் தரப்பட்டிருக்கிறது. அது பற்றிய விவரம் கேட்கிறபோது ஆராய்ந்தறிந்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி :** ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள் இப்படித்தான் கட்டப்படவேண்டுமென்று மத்திய சர்க்கார் ப்ளான் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. இந்தப் ப்ளானில் எடுத்தவுடன் ஆப்பரேஷன் அறை இருக்கிறது, அதனால் தூசி படிகிறது. பாமிலி ப்ளானிங் ஆப்பரேஷன் நடைபெறுகிற இங்கே தூசி படிகிற காரணத்தினால் கேஸ்கள் பெய்ல்யூர் ஆவதாகச் சொல்கிறார்கள் நம்முடைய டாக்டர்கள் யோசனைப்படி ஒரு அறைக்குள் ஆப்பரேஷன் அறை இருக்கும்படியாக் கட்டடம் கட்டப்புதுப் ப்ளானை வரைந்து செயல்படுத்துவார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** உறுப்பினர் கூறுவது போன்ற முறையில் வந்தால் கவனித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கே. விநாயகம் :** குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப் பற்றியே பொது மக்களுக்குப் பீதி உண்டாக்குகிற அளவுக்கு கருத்தடைக்கு எதிராகப் பிரசாரம் செய்து, அதிகமான பிள்ளை பெறுகிற வீரத் தாய்மார்களுக்குப் பரிசு அளிக்கும் திட்டத்தையே கொண்டு வந்தவர் அமைச்சரவையில் இருக்கிறாரே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போது புதிய கருத்துக்கள் எதையும் நான் அனுமதிக்க முடியாது.

THIRU K. VINAYAKAM : We must prepare the ground for the people to take to family planning. Family planning has been very successful and we must create a suitable environment for it.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது பழைய கதை. அமைச்சர் அவர்கள் விடையிறுத்த பிறகு ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒவ்வொரு கேள்வி போட உரிமை என்பது இல்லை. விளக்கம் கேட்கிற முறையைத் தவறாகப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது.

THIRU K. VINAYAKAM : It is not as if every one wants to ask for clarification. The Hon. Minister is prepared to give the clarification.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பலர் தங்கள் கருத்துக்களை நிலைமைக்கேற்ப, சூழ்நிலைகளுக்கேற்ப மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். திரு. விநாயகம் அவர்களே கூட எத்தனை முறை தங்கள் கருத்துக்களை மாற்றி வந்திருக்கிறார்கள். (சிரிப்பு) ஒரு காலத்தில் இவருக்கு அப்படி ஒரு கருத்து இருந்திருக்கலாம். இப்போது மாற்றிக் கொண்டுவிட்டார்கள். கேலி செய்கிற அளவுக்கு ஒன்றும் இல்லை. இந்தத் திட்டத்திற்கு ஆட்சேபணையாக யாரும் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது,

கோரிக்கை எண் 14-க்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருந்த திரு. ரா. ராமச்சந்திர துரை, டாக்டர் எச். வி. ஹாண்டே, திருமதி கே.பி. ஜானகியம்மாள் ஆகியவர்கள் இருப்பிடங்களில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திரு. ஏ. அ. சுப்பராஜா, திரு. ஆ. கு. சுப்பையா, திரு. கே. என். குமாரசாமி ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி:—

"நிதிக் கோரிக்கை எண் 14—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 15,97,10,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 15-க்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருந்த திரு. இல. பலராமன், திரு. சி. கோவிந்தராஜன் ஆகியோர் இருப்பிடங்களில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திரு. கே. என். குமாரசாமி, திரு. ஏ. அ. சுப்பராஜா, திரு. கே.எஸ். கோதண்டராமையா ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி:—

"நிதிக் கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 9,01,05,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.



கோரிக்கை எண் 38-க்கு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருந்த திரு. என். மருதாசலம் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.

திரு. க. இராமமூர்த்தி, திரு. எம். பூபதி ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 38—பொதுச் சுகாதார மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 45,03,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இத்துடன் பேரவை ஒற்றிவைக்கப்பட்டு, மீண்டும் நாளை காலை 9 மணியளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

## 11. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள். பிற்பகல் 2-21.

### *A. Statutory Rules and Orders.*

@ 183. Notification issued with G.O. No. 2800, Revenue, dated the 24th November, 1969 in regard to exemption from payment of Sales-tax on the sales made in the catering sections of all guest houses maintained by the Government of Tamil Nadu. [*Laid on the Table of the House under Section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act*, 1959 (*Tamil Nadu Act* I *of* 1959).

### *B. Reports Notifications, and other papers.*

112. Report of the Committee on Estimates on Irrigation (Seventeenth Report).

113. Fifth and sixth Reports of the Committee on Subordinate Legislation for the year 1969-70. (Fourth Assembly.)

114. Report of the Committee of Privileges in regard to matter of Privileges against the Hon. Member Thiru T. Martin.

115. Report of the Committee of Privileges in regard to the case against the Hon. Member Thiru A. Balasubramanyan and some other Members of the Assembly who have participated in the walk-out at the time of the Governor's Address on 25th January 1969.

---

**@ Laid on the Table of the House on 28—3—1970.**

# இணைப்பு I

[228-ம் பக்கத்தில், 597-ம் எண்ணுள்ள வினாவிற்குரிய விடையைக் காண்க.]

**விடை—**

ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தைச் சேர்ந்த நில நீர் ஆய்வுத் திட்டததின் இரண்டாம் நிலையை நேரடியாக மதிப்பிட்டு, ஆய்வு செய்வதற்காக திருவாளர்கள் டாக்டர் மெக்டியார்மிட், திரு கெரக்டி., திரு பான் ஆகியோர் கொண்ட ஐக்கிய நாடுகள் குழு ஒன்று 1968 ஜனவரியில் சென்னைக்கு வருகை தந்தது. இக்குழுவின் குறிக்கோள்கள் பற்றி அரசு அதிகாரிகளுடன் இக்குழு முன்கூட்டி விவாதம் நடத்தியது. இக்குழு தஞ்சாவூர் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்தது. இக்குழு தனது வருகைப் பணியை முடிப்பதற்கு முன்பு, பொதுப்பணி, வேளாண்மை அமைச்சர்களுடனும் அதிகாரிகளுடனும் மேற்கொண்டும் விவாதம் நடத்தியது. ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட நில நீர் ஆய்வுத் திட்டத்தின் இரண்டாவது நிலைக்குத் தொடர்பான சில குறிப்புகள் பற்றி ஐக்கிய நாட்டுக் குழுவினர் கேட்ட தெளிவுரைகளும் அதற்கான விடைகளும் அமைச்சர்களுக்கு அறிவிக்கப்பட்டது. கேட்கப்பட்ட குறிப்புகளுக்காக அரசினால் அளிக்கப்பட்ட தெளிவுரைகள் இந்த விவர அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு I-ல் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்விவாதத்தின் விளைவாக ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தினர் மாநில அரசின் வேண்டுகோளுக்கு சொற்ப மாறுதல்களுடன் இத்திட்டத்தின் இரண்டாவது நிலைக்குப் பரிவுரை செய்யக்கருதினர். இந்த அரசு முகறக்கண் செய்து கொண்ட வேண்டுகோளும், ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டக் குழுவினரால் செய்யப்பட்ட சொற்ப மாறுதல்களும் விவர அட்டவணையின் II-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டக் குழுவின் திருத்தங்கள் இந்த அரசினால் ஒப்புக்கொள்ளப்பட்டன. இந்திய அரசுக்கு இது குறித்துத் தெரிவிக்கப்பட்டது.

| ஐக்கிய நாடுகள் குழுவினரால் கேட்கப்பட்ட தெளிவு விளக்கம். | தமிழ்நாட்டு அரசின் கருத்துர்கள். |
|---|---|
| 1. வேளாண்மைத் துறைச் செயலாளருக்கு திட்ட வேளாண்மை ஆலோசகர் என்ற பதவிப் பெயர் வழங்கப்படலாம். | தமிழ்நாடு அரசு இதை ஏற்கிறது. |
| 2. வேளாண்மைத்துறை இயக்குநர், வேளாண்மைத் துறை இணை இயக்குநர் (பொறியாளர்) ஆகியவர்களை சேர்த்துக்கொள்ளும் வகையில் திட்ட தொழில் நுட்பக் குழுவினை விரிவுபடுத்தலாம். | ஷெ |
| ஊற்று நீர் வளத்தைப் பற்றிய ஆய்வுகளையும் வேளாண்மை மேம்பாட்டுப் பணிகளையும் ஒருங்கிணைப்பதற்கென ஆலோசனை கூற தஞ்சாவூரில் உள்ளூர் மாவட்டக் குழு ஒன்றை அமைக்கலாம் இக்குழுவின் தலைவர் மாவட்ட ஆட்சித் தலைவராவார். பொதுப் பணித் துறையின் மேற்பார்வைப் பொறியாளர் (தஞ்சாவூர்) வேளாண்மைத் துறை இணை இயக்குநர் வேளாண்மை மும்முர வளர்ச்சித் திட்டம் அவ்வப்போது அவசியமாயிருப்பதாகக்கருதப்படும் ஏனையோர் இக்குழுவின் பிற உறுப்பினர்களாவர். | ஷ |



| ஐக்கிய நாடுகள் குழுவினரால் கேட்கப்பட்ட தெளிவு விளக்கம். | தமிழ்நாட்டு அரசின் கருத்துக்கள். |
|---|---|
| 4. வேண்டுகோள் பட்டியலில் குறிப்பிட்டுள்ள நிகரான தரத்திலுள்ள பணியாளர்களைத் தவிர ஐக்கிய நாடுகள் வேளாண்மைத் துறை வல்லுநர்களுககுத் துணையாக வேளாண்மைத் துறைத் துணைப் பணியாளர்களை ஏற்பாடு செய்வதுடன் அலுவலகங்கள், ஆய்வுக் கூடங்கள், ஆராய்ச்சி நிலையங்கள் போன்ற வேளாண்மை ஆய்வுக்குத் தேவையான வசதிகளையும் வேளாண்மைத் துறையினர் செய்து கொடுப்பர். | தற்போதைய வேளாண்மை அதிகாரிகள் அவர்களது தற்போதைய பணியுடன் ஐக்கிய நாட்டு வல்லுநர்களுக்குத் தேவையான உதவிகளையும் செய்வர். இத்திட்டத்தை நிறைவேற்ற மேற்கொண்ட பிறகு முழு நேர அதிகாரிகள் தேவைப்படுவரேல், அவர்களும் நியமிக்கப்படுவர். வேளாண்மை ஆய்வுக்குத் தேவையான எல்லா வசதிகளும் வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களிலும் அரசு விதைப் பண்ணைகளிலும் செய்து கொடுக்கப்படும். இந்த ஏற்பாடுகளுக்கு இக்குழு ஒப்புக்கொண்டுள்ளது. |
| 5. திட்ட நிறைவேற்ற முகவர்கள் ஏற்றுக் கொள்ளத் தக்கதும், காவிரி கயவாய்ப் பகுதியில் உள்ளதுமான ஓர் இடத்தில் (தோராயமாக 5,500 ச. அடி) அலுவலக இட வசதிக்கும் பணிக்களரிக்கூடம், துளையிடும் கருவிகள் இவற்றிற்காக தோராயமாக 9,000 ச. அடி இட வசதிக்கும் அரசு ஏற்பாடு செய்யவேண்டும். | திட்ட நிறைவேற்ற முகவர்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கதும் காவிரி கயவாய்ப் பகுதியில் உள்ளதுமான ஓர் இடத்தில் அலுவலகத்திற்கான இட வசதிக்கும் பணிக்களரி கூடத்திற்கான இடவசதிக்கும் ஏற்பாடு செய்ய தமிழ்நாடு அரசு ஒப்புக்கொள்கிறது. |
| 6. ஐக்கிய நாடுகள் வேளாண்மைத் துறை வல்லுநர்கள் இருவரின் பணி நிலையம் காவிரி கயவாய்ப் பகுதியில் இருந்தால் அவர்கள் முழு அளவுத் திறனுடன் பணி புரிவர் என்று கேட்டுக் கொண்டதற்கேற்ப இவர்களுக்கு தகுதியான இட வசதியை அரசு அமைத்துக் கொடுக்கும். | இந்த நேர்வில் அரசுக்கு எந்தவித செலவும் ஏற்படாது. தேவையான இட வசதிக்கு ஏற்பாடு செய்வதில் தமிழ்நாடு அரசு அதிகாரிகள் உதவிபுரிவர். |
| 7. காவிரி கயவாய்ப் பகுதியில் வேளாண்மை மேம்பாட்டுக்கென உள்நாட்டு, உதவிக்காக விண்ணப்பித்துக் கொள்வதற்கேற்ற வகையில் கருத்துக்கள் தெரிவிக்கும் அறிக்கை ஒன்றைத் தயாரிப்பதற்கு இத்திட்டத்தின் முடிவுகள் உதவவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டக் குழு விழைகிறது. அத்தகைய நிதி உதவி எந்த முறையில் பெறப்படலாம் என்பது குறிப்பிடப்படவேண்டும். | இந்த ஆய்வுக்குப் பிறகு, பின்னர் ஆய்வு முடிவுகளைச் செயல்படுத்தும் வகையிலான சாத்தியக் கூறுகள் அடங்கிய அறிக்கை ஒன்று தயாரிக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு உறுதி அளிக்கலாம். இந்த அறிக்கை தமிழ்நாடு அரசு அதிகாரிகளினால் தயாரிக்கப்படும் அல்லது ஐக்கியநாட்டு வல்லுநர்களின் உதவி தேவையெனில் அவர்களின் உதவியுடன் இந்த அறிக்கை தயாரிக்கப்படும். சாத்தியக் கூறுகளைப் பற்றிய அறிக்கை தயாரிக்கப்பட்டவுடன் தமிழ்நாடு அரசு தேவைப்படும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிதி உதவியுடன் உற்பத்தித் திட்டங்களை மேற்கொள்ளும் என்றும் உறுதியளிக்கலாம். இத் திட்டத்தின் அளவு அதற்குத் தேவைப்படும் |

## இணைப்பு I-அ

| இனம். | தமிழ்நாடு அரசினுல் கேட்கப் பட்ட தொகை. | ஐக்கிய நாடுகள் நிர்வாகி யால் ஒப்புக்கொள்ளப்பட்டு ஐக்கிய நாடுகள் குழுவின் கூட்டத்துக்கு (ஜூன் 1968) பரிந்துரைக்கப்பட்ட இறுதி செயற்குறிப்பு. | மாறுதலுக்கான காரணங் கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (டாலர்) | (டாலர்) | |
| 1. வல்லுநர்கள் | 226,250 | 300,800 | தொடக்கக் காலத்தை தவிர இத்திட்டமும் திட்டத்தின் I-ம் நிலையும் ஒரே சமயத்தில் நிறைவேற்றப்பட மாட்டா என்பதால் திட்ட மேலாளர் பதவி (Project Manager) ஒன்று ஏற்படுத்தப்பட்டது. ஊற்று நீரைப் பயன்படுத்துவதற்கு தொடர்பான வேளாண்மை ஆய்வுப் பணிகளை விரிவுபடுத்துவதற்கு என மண்வள ஆய்வாளர் (Pedologist) நியமிக்கப்பட்டார். வேளாண்மைப் பொருளாதார வல்லுநர்களின் பணிக் கால அளவு நீட்டிக்கப்பட்டது. நீர் நிர்வாக வல்லுநர்களின் பணிகள் 30 வேலைத் திங்களிலிருந்து 12 வேலைத் திங்களுக்கு குறைக்கப்பட்டன. ஏனெனில், இப்பணி உள்ளூரிலேயே கிடைக்கிறது. குறுகிய கால அறிவுரையாளர்களின் (Short-term Consultants) பதவிக் காலம் 6 வேலைத் திங்களிலிருந்து 9 வேலைத் திங்களாக அதிகரிக்கப் |



| இனம். | தமிழ்நாடு அரசினுல் கேட்கப் பட்ட தொகை. | ஐக்கிய நாடுகள் நிர்வாகி யால் ஒப்புக்கொள்ளப்பட்டு ஐக்கிய நாடுகள் குழுவின் கூட்டத்துக்கு (ஜூன் 1968) பரிந்துரைக்கப்பட்ட இறுதி செயற்குறிப்பு. | மாறுதலுக்கான காரணங் கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (டாலர்) | (டாலர்) | |
| 2. ஃபெலோஷிப்புகள். | 24,000 | 29,000 | வேலைத் திங்கள்கள் 51-லிருந்து 66 ஆக அதிகரித்ததனுல் இத் தொகை அதிகரித்துள்ளது. |
| 3. சாதனங்கள் | 325,000 | 285,000 | துளையிடும் சுழற் கருவிக்கான செலவுத் தொகை மிகவும் அதிகமாக இருந்தது. இந்த இனம் 1,00,00C என்பதிலிருந்து 60,000 மாகக் குறைக்கப்பட்டது. |
| 4. துணை ஒப்பந்தம். | இல்லை. | இல்லை. | .... |
| 5. பல்வகை | 12,250 | 18,000 | வல்லுநர்கள் குறித்த மொத்தச் செலவில் 6 சதவிகிதம் என்ற வழக்கமான அடிப்படையில் இது கணக்கிடப்பட்டுள்ளது. |
| 6. திட்ட மொத்தச் செலவு. | 587,500 | 632,800 | .... |
| 7. நேரடிச் செலவு. | .. | 5,500 | நிர்வாகிக்கு ஆலோசனை கூறுவதற்காக 1968 ஜனவரியில் வந்த ஆலோசனை குழுவுக்கான செலவினைச் சரிக்கட்ட இத்தொகை சேர்க்கப்பட்டுள்ளது. |
| 8. பங்கு கொள்ளும் நிர்வாக மூகவர் நிறுவனம்—நிர்வாகச் செலவுகள். | 66,000 | 69,600 | இத்தொகை திட்ட மொத்தச் செலவில் 11 சதவீதமாகும். |
| மொத்தம் .. | 653,500 | 707,900 | |

| இனம். | தமிழ்நாடு அரசினால் கேட்கப்பட்ட தொகை. | ஐக்கிய நாடுகள் நிர்வாகியால் ஒப்புக்கொள்ளப்பட்டு ஐக்கிய நாடுகள் குழுவின் கூட்டத்துக்கு (ஜூன் 1968) இறுதி பரிந்துரைக்கப்பட்ட செயற்குறிப்பு. | மாறுதலுக்கான காரணங்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (டாலர்) | (டாலர்) | |
| அரசின் நிகரான பங்குத் தொகை. | 612,000 | 612,000 | மாறுதல் எதும் இல்லை. |
| திட்ட நிறைவேற்றம் குறித்து உள்ளூர்ச் செலவு. | 33,937 | 45,100 | வல்லுநர்களின் ஆலோசனை குறித்து செலவுக்கென ஐக்கிய நாடுகள் கூடுதலாக நன்கொடை வழங்குவதனால் இத்தொகை அதிகரித்துள்ளது. (வல்லுநர் செலவுத் தொகையில் 15 சதவீதம்.) |
| கால அளவு. | $2\frac{1}{2}$ ஆண்டுகள். | $2\frac{1}{2}$ ஆண்டுகள். | மாறுதல் எதும் இல்லை. |

*Answer*.—A United Nations Mission consisting of Messrs. Dr. Mc. Diarmid, Geraghty and Pan visited Madras in January 1968 for an on the spot evaluation and appraisal of the second phase U. N. D. P. G. W. Project. The mission had a preliminary discussion on the objectives of the mission with the officers of this Government, toured Thanjavur District and had a further discussion with the officers, M(W) and M(A) before the conclusion of its visit. During the discussion the Ministers were apprised of the clarifications brought on certain points pertaining to the second phase of the U. N. D. P. G. W. project and the reply proposed to be given. The clarification sought and, given by this Government will be found at Annexure I to this statement. Consequent on the discussion the U. N. D. P. proposed to recommend the request for a second phase project made by this Government, with slight modifications. The original request made by this Government and the slight modification suggested by U.N.D.P. will be found in Annexure II to this statement. The modified offer of the U.N.D.P. was accepted by this Government and the Government of India was informed accordingly.



## ANNEXURE I.

| *Clarification sought for by United Nations Missions.* | *Views of the Madras Government.* |
|---|---|
| (1) | (2) |
| 1. That the Secretary of Agriculture be designated as Project Agricultural Advisor. | This is acceptable to the Madras Government. |
| 2. That the Technical Committee of the Project be extended to include the Director of Agriculture and the Joint Director of Agriculture (Eng.). | Do. |
| 3. That a local district committee be set up in Thanjavur to guide and co-ordinate the integration of future ground water studies and exploitation of agricultural development. The Chairman of this Committee would be the District Collector, and the other members of the Committee would be the Superintending Engineer of Public Works Department (Thanjavur), the Joint Director of Agriculture (Engineering), the Joint Director of Agriculture (I.A.D.P.) and such others as may be found necessary from time to time. | Do. |
| 4. That the Agriculture Department, outside the counterpart staff now listed in the request, provide support staff for United Nations Agricultural experts. The Agriculture Department would furnish in addition all necessary facilities such as offices, laboratories, and experimental lands that might be needed to support the agricultural studies. | The existing Agricultural Officers will provide necessary support to the United Nation experts in addition to their present work. If, after working of the programme, it is found necessary to have full-time officers they will be provided. All necessary facilities to support agricultural studies will be provided in the Agricultural Research Stations and the State Seed Farms. The mission had concurred with this approach. |
| 5. That the Government provide office space (approximately 5,500 square feet) and yard space for workshop and drilling rigs (approximately 9,000 square feet) at a location in the Cauvery Delta acceptable to the executing agency. | The Madras Government agree to bear the cost of providing office space yard space for workshop and drilling rigs at allocation in the Cauvery Delta acceptable to the executing agency. In this case no expenditure to the State Government is involved. The Madras Government Officers will help find necessary accommodation. |
| 6. Since it has been requested that the duty station of the two United Nations Agricultural experts be in the Cauvery Delta for maximum working efficiency, the Government would provide living accommodation of setable standard for these people. | Do. |
| 7. United Nations Development Programme would like to be assured that the finding of the project will lead to a preparation of a feasibility report suitable for eventual application for seeking internal or external financing | The Madras Government can assure that his investigation will be followed up by the preparation of a feasibility report suitable for eventual application. This report will be prepared by the Madras Government officers or by |

| *Clarification sought for by United Nations Missions.* | *Views of the Madras Government.* |
|---|---|
| (1) | (2) |
| for overall agricultural development of the Cauvery Delta. The manner in which any such finance is to be obtained should be defined. | seeking the assistance of United Nations experts only, if the later is considered necessary by the State Government. They can also assure that after the feasibility reports are prepared the Madras Government will take up actual production schemes with internal financing or external financing as may be found necessary. The details regarding the magnitude of the project and the finance required can be spelt out only at a later stage and consistently with the Governmental plans that are being made and executed from time to time. |
| 8. *Aerial Photography*.—In the new request under the heading "sub-contract" it is stated that the Madras Government have made available Rs. 5,00,000 (rupees equivalent of about 65,000$) in local currency for aerial survey to be run by the Government of India from local resources. It was originally thought that the aerial coverage might be undertaken by the sub-contractors, who would be doing the aerial photographic work in connection with the Mineral Investigation Project in Madras State. The payment towards the aerial coverage by the sub-contractors group could be made in rupees. But now it is learnt that the sub-contractors are not likely to accept rupees. Since the Mission considers that it may be desirable to avail the service of Huntings while they are herein January in which case the cost towards its contract is to be paid in United States dollars. | This is acceptable to the Madras Government and they have already addressed the Government of India for their concurrence. |
| The mission considers that a part of the Government counterpart contribution should be paid in cash to United Nation Development Programme so that a higher degree of flexibility can be had for the project's operations. This amount would be to the tune of 10 per cent of the total Government counterpart contribution shown in the new request for supplementary assistance. | This is acceptable to the Madras Government. |
| 10. That the Government consider utilising the $, 100,000 equipment items in the request (for a 1,500 feet capacity drilling rig) in a manner designed to attain the utmost efficiency from the existing drilling capacity in the State. In essence, the intention here is for the Government to give consideration for he utilisation or this entered item for the purchase of spare parts for exisiting drilling rigs in the State. | The Madras Government consider that a new rig may be provided instead of spares as only one rig in the Agriculture Department not functioning for want of spares. They consider a new rig to be absolutely essential. |



| *Clarification sought for by United Nations Mission.* | *Views of the Madras Government.* |
|---|---|
| (1) | (2) |
| 11. That the Government review the revised allocations recommended from the contingency allocation and for supplementary assistance in the existing and the new request. | The original anticipation was to have commenced the expanded project by about January or February 1968, but the same could not come through. However, the United Nation Mission has recommended to incur a certain amount immediately by way of contingency financing between now and the actual time when the revised expansion will get into full swing after proper sanction. This has resulted in a certain amount of increase in expenditure which will invitably have to be met by United Nation while basically on the counterpart side the provision originally made would remain the same. The State Government agree to the allocation made. |

| *Madras Governments request.* | *Final proposal as approved by United Nation Administrator and recommended for United Nation Government Council Meeting (June 1968.)* | *Reasons for variation.* |
|---|---|---|
| (2) | (3) | (4) |
| RS. | RS. | |
| 2,26,250 | 3,00,800 | Post of Project Manager introduced since the project will not be contemporary with phase I project except for the initial period. |
| | | Pedologist introduced to widen agricultural orientation studies related to Ground Water Utilisation. |
| | | Duration of services of expert in Agronomy increased. |
| | | Water Management Expert services reduced from 30 man months to 12 man months since this kind of expertise is locally available. |
| | | Short-term consultants period increased from 8 man months to 9 man months. |

| Item. (1) | Madras Government request. (2) | Final proposal as approved by United Nation Administrator and recommended for United Nation Government Council Meeting (June 1968). (3) | Reasons for variation. (4) |
|---|---|---|---|
| | RS. | RS. | |
| 2 Fellowships .. | 24,000 | 29,000 | Increase due to increases from 51 man months to 66 man months. |
| 3 Equipment .. | 3,25,000 | 2,85,000 | Costing of rotary drill was found excessive. This item is reduced from 1,00,000 to 60,000. |
| 4 Sub-contract .. | Nil. | Nil. | — |
| 5 Miscellaneous .. | 12,250 | 18,000 | This has been calculated on the usual basis of 6 per cent on total experts cost. |
| 6 Total gross project cost. | 5,87,500 | 6,82,800 | .. |
| 7 Direct cost .. | .. | 55,000 | Sum included to cover cost of mission of consultants, to Administrator received in January 1968. |
| 8 Participating and executing agency over head-costs. | $ 66,000 | $ 69,600 | This figure has been calculated at 11 per cent of the gross project cost. |
| | $ 6,53,500 | $ 7,07,900 | |
| Government counterpart contribution. | $ 6,12,000 | $ 6,12,000 | No change. |
| Local operating cost. | $ 33,937 | $ 45,100 | Increased due to increase in United Nation contribution towards cost of expertise 15 per cent of experts cost. |
| Duration .. | 2½ Years | 2½ Years | No change. |



# இணைப்பு II

[257-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க]

## மருத்துவத் துறை.

### கோரிக்கை 14—மருத்துவம் 1970–71.

### கொள்கை.

சமூகத்தின் இனிய நலனையும் நல்லுடலையும் பேணிக்காக்கவும் மருந்து அளித்தல் பேணுவதற்கான போதிய வசதிகளை ஏற்படுத்தவும் அரசு பெரும் முக்கியத்துவம் அளித்து வருகிறது. குடியாட்சியின் இறுதி வெற்றி நாட்டு மக்களின் வளமார்ந்த நல்லுடலைப் பொறுத்துள்ளதால் மருத்துவப் பணி மேன்மேலும் திறனும் காலத்திற்கேற்ற முன்னேற்றமும் கொண்டதாய் அமையும் வண்ணம் அரசு இடையறாது முயன்று வருகிறது. முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் ஏற்கெனவே உள்ள மருத்துவப் பணிகளை விரிவு படுத்துவதும் எல்லா மக்களுக்கும் சிறந்த மருத்துவ வசதிகளை அதிக அளவில் எளிதில் கிடைக்கச் செய்வதும், மருத்துவப் பட்டதாரிகளின் எண்ணிக்கையும், செவிலியர், மருந்து கலப்பவர்கள் முதலிய துணைப் பணியாளர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதும், குடும்ப நலத் திட்டத்தைப் பரப்புதலும் நாட்டு மக்களின் உடல் நலனைப் படிப்படியாகப் பேணி வளர்ப்பதும் இந்த அரசாங்கத்தின் நோக்கங்களாக இருந்து வந்துள்ளன.

### முதல் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்கள்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மருத்துவப் பணிகளுக்கும் மருத்துவக் கல்விக்கும் திட்ட முதலீடு ரூ. 2·48 கோடியாக இருந்தது. முதல் ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்தில் அரசு மருத்துவ நிறுவனங்களில் 7,955 படுக்கைகள் மட்டுமே இருந்தன. பிறகு 4,851 படுக்கைகள் கூடுதலாக்கப்பட்டு படுக்கைகளின் மொத்த எண்ணிக்கை 12,806 ஆக உயர்த்தப் பட்டது. இத்திட்டக் காலத்தில் உள்ளாட்சி மன்ற மருத்துவ நிறுவனங்களை அரசு எடுத்துக்கொண்டது. இந்த முதல் திட்டக் காலத்திலேதான், மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளின் முக்கியத்துவம் உணரப்பட்டது. மருத்துவத் தனித் துறைகளில் பட்ட மேற்படிப்புத் தகுதியுடைய மருத்துவ அதிகாரிகளைக் கொண்ட வல்லுநர் சிகிச்சை வசதிகளை ஒவ்வொரு மாவட்ட தலைமையிட மருத்துவமனையிலும் ஏற்படுத்துவதும் மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவமனைகளில் கூட்டத்தைக் குறைப்பதும் இதன் முடிவான நோக்கமாகும்.

மருத்துவப் பணிகளுக்கும், மருத்துவக் கல்விக்கும் செய்யப்பட்ட முதலீடு இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ 458·65 லட்சமாக இருந்தது. இத்திட்டக்காலத்தில் ரூ. 458·24 லட்சம் செலவு செய்யப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 4,067 படுக்கைகள் கூடுதலாக்கப் பட்டன. ஆக, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் அரசு மருத்துவ நிறுவனங்களில் படுக்கைகளின் மொத்த எண்ணிக்கை 16,873 ஆக உயர்த்தப்பட்டது.

### மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மருத்துவப் பணிகள், மருத்துவக் கல்வி ஆகிய இவற்றைக் குறித்த திட்ட முதலீடு ரூ. 644·47 லட்சமாக இருந்தது. இத்திட்டக் காலத்தில் செலவிடப்பட்ட தொகை ரூ. 667·03 லட்சம் ஆகும்.

இத்திட்டக் காலத்தில் ரூ. 3,055 படுக்கைகள் கூடுதலாக்கப்பட்டன. ஆக, அரசு மருத்துவ நிறுவனங்களில் படுக்கைகளின் மொத்த எண்ணிக்கை, மூன்ருவது திட்ட முடிவில் 19,928 ஆக உயர்த்தப்பட்டது. 1966–67 முதல் 1969–70 வரை 1,371 படுக்கைகள் கூடுதலாக ஏற்படுத்தப் பட்டு, மொத்த படுக்கைகளின் எண்ணிக்கை 21,299 ஆக உயர்ந்தது.

### நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்.

இம்மாநிலத்தில் பிறப்பு, இறப்பு வீதங்கள், ஆயுட்கால நீடிப்பு வீதம் ஆகியவைப் பற்றிய புள்ளி விவரங்களைக் காட்டுகிற பின் சேர்க்கப்பட்ட அட்டவணை, திட்ட வேலையாக நிறைவேற்றப்பட்ட பல்வேறு திட்டங்களுடன், மக்களின் பொதுவான உடல் நல நிலையையும் முன்னேற்றமடைந்து வருவதைத் தெளிவாக விளக்குகிறது.

| ஆண்டு. | குழந்தை இறப்பு வீதம். | | மகப்பேற்றில் மகளிர் இறப்பு வீதம். | பிறப்பில் ஆயுட்கால நீடிப்பு. | |
|---|---|---|---|---|---|
| | ஆண். | பெண். | | ஆண். | பெண். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1941 | 180·3 | 161·1 | 9·1 | 35·03 | 36·19 |
| 1951 | 123·1 | 113·9 | 5·8 | 36·22 | 37·23 |
| 1961 | 91·5 | 87·2 | 3·6 | 41·09 | 39·24 |

முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் சுகாதாரத் துறையில் மனதில் பதியும் வகையான முன்னேற்றம் சந்தேகமின்றி ஏற்பட்டிருக்கையில் சில குறைபாடுகளும் உள்ளன. இவை இதுவரையில் தவிர்க்கப்படாததற்கு முக்கிய காரணம், நிதிவாயில்கள் தொடர்ந்து இக்கட்டான நிலையில் இருந்து வருவது ஆகும். எனெனில், கிடைக்கக்கூடிய நிதி வாயில்களை ஒப்பு நோக்கின், இது தேவைகள் மிகுதியாக உள்ள ஒரு துறையாகும். எனவே, சுற்றுப்புறச் சுகாதாரம், நிறுவன மருத்துவக் கவனிப்பு, மருத்துவத் துணை மருத்துவப் பணியாளர்கள் பயிற்சி, தொற்று நோய்க் கட்டுப் பாடு போன்ற மிகவும் முன்னுரிமை பெற்ற மிகவும் தவிர்க்க முடியாத தேவைகளுக்கும் வரையறுக்கப்பட்டுள்ள நிதிவாயில்களுக்கும் இடையே சமன் காண்பது மிகவும் அவசியமாகிறது. ஒதுக்கப்பட்ட நிதி வாயில் களுக்குள், குடும்பநலத் திட்டத்திற்கு மிக உயர்ந்த முன்னுரிமை அளிப்பது அவசியம் ஆகிறது. எனெனில், பொருளாதார மேம்பாட்டின் பலன்கள் கட்டுப்படுத்தப்படாத மக்கள் பெருக்கத்திஞல் வீணுவதை அனுமதிக்கக் கூடாது.

கடந்த பதினைந்து ஆண்டுகளில் அடைந்த முன்னேற்றம் மருத்துவப் பேணுதல் நிறுவன வசதிகளைப் பொறுத்தவரையில் குறிப்பாகக் கிராமப் பகுதிகளில் போதியவை என்று சொல்வதற்கில்லை. கிராமப் பகுதிகளில் மருத்துவர்கள் பற்ருக்குறை இன்னும் நீடித்து வருகிறது. கடந்த காலத் தில் ஆண்டுத் திட்டங்கள் வாயிலாக, மாநில மருத்துவக் கல்லூரிகள் எட்டில் அனுமதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 1,125 ஆக உயர்த்த முடிந்தது.

## மருத்துவக் கல்வி.

### பட்டப்படிப்புப் பாடமுறை.

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் தலைமையில் இந்திய அரசு நியமித்துள்ள சுகாதார ஆய்வு திட்டக்குழு கீழ்க்கண்ட பரிவுரையைச் செய்துள்ளது. மருத்துவக் கல்விக்குப் போதிய வசதிகள் செய்ய வேண்டுமாயின், ஒவ்வொரு 50 லட்சம் மக்கள் தொகைக்கும் ஒரு மருத்துவக் கல்லூரி இருக்க வகை செய்யப்பட



வேண்டும். ஒவ்வொரு மாநிலத்துக்கும் குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள மருத்துவக் கல்லூரிகள் கிடைக்கிற வீதத்தில், அந்த மருத்துவக் கல்லூரி கள் பரவலாக ஒதுக்கப்படுவதற்கு வகை செய்யப்பட வேண்டும். அவ்வாறு மருத்துவக் கல்லூரிகள் நிறுவப்பட்டால்தான் அந்த மாநிலத்தில் மருத்துவ வசதிகள் மேம்பாடு அடையவும், மாணவர்கள் மருத்துவப் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கவும், வழி ஏற்படும். நாட்டில் மருத்துவக் கல்லூரிகள் நியாயமான முறையில் சமமாகவும் பரவலாகவும் ஒதுக்கப்படும்பொருட்டு, பல்வேறு மாநிலங்களுக்கு அக்கல் லூரிகளை ஒதுக்குவது குறித்து முடிவு செய்வதில், மாநிலங்களின் மக்கள் தொகையையும் ஏற்கெனவேயுள்ள மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக் கையையும் அக்குழு சீர்தூக்கிப் பார்த்தது. நாட்டில் தற்போது மொத்தம் 92 மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. அவற்றில் 9 மருத்துவக் கல்லூரி கள் இம்மாநிலத்தில் உள்ளன. எட்டு மருத்துவக் கல்லூரிகள் அரசு மருத்துவக் கல்லூரிகளாகவும் 9-வது மருத்துவக் கல்லூரி தனியார் மருத்துவக் கல்லூரியாகும். எட்டு அரசு மருத்துவக் கல்லூரிகளில் 1,125 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப் படுகிருர்கள் :—

| மருத்துவக் கல்லூரியின் பெயர். | இருக்கைகளின் மொத்த எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை .. .. | 200 |
| ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை .. .. | 200 |
| கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை .. .. | 100 |
| மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை .. — .. | 200 |
| தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர் .. .. | 200 |
| செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி, செங்கற்பட்டு .. .. | 50 |
| திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி .. | 75 |
| கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர் .. | 100 |
| | 1,125 |

1960 முதல் 1969 வரை அரசு மருத்துவக் கல்லூரிகளில் இருந்து தேறி வெளிவந்த மருத்துவர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப் பட்டுள்ளது:—

| ஆண்டு. | தேறியவர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1960 .. .. .. | 323 |
| 1961 .. .. .. | 269 |
| 1962 .. .. .. | 364 |
| 1963 .. .. .. | 368 |
| 1964 .. .. .. | 333 |
| 1965 .. .. .. | 452 |
| 1966 .. .. .. | 510 |
| 1967 .. .. .. | 556 |
| 1968 .. .. .. | 579 |
| 1969 .. .. .. | 409 |

(1969 செப்டம்பர்

1970 மார்ச் 30]

### மருத்துவப் பட்டப் படிப்பில் சேருபவர்களுக்குப் பயிற்சியளித்தல்.

ஒரு மருத்துவப் பட்டதாரியின் பயிற்சிக்கான செலவு கீழே கொடுக்கப் பட்டுள்ளது :—

சென்னை மாநகரில் மருத்துவக் கல்லூரிகளிலிருந்தும் மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவ மனைகளிலிருந்தும் வருகிற ஒரு எம்.பி.பி.எஸ். மாணவர்க்குப் பயிற்சி அளிக்க அரசுக்கு ஆகும் தோராயச் செலவு 32,200 ரூபாய்.

வெளியூர் மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவக் கல்லூரிகளிலிருந்தும் மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவ மனைகளிலிருந்தும் வருகிற ஒரு எம்.பி.பி.எஸ். மாணவர்க்குப் பயிற்சி அளிக்க அரசுக்கு ஆகும் தோராயச் செலவு 25,800 ரூபாய்.

### பயிற்சி மருத்துவர்கள்.

கட்டாய "சுழல் முறைப்" பயிற்சி மருத்துவர்கள்.

1969-ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பயிற்சி மருத்துவர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

1969 எப்ரல்—சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை.

| | |
|---|---|
| | 50 (2 பதவிகள்) உணவுப் படி இல்லாமல். |
| ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை .. .. | 44 |
| கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை .. .. | 36 |
| மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை .. .. .. | 48 |
| தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர் .. .. | 33 |
| | 211 பதவிகள். |

1969 செப்டம்பர்—சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை.

| | |
|---|---|
| | 52 (1 பதவி) உணவுப்படி இல்லாமல். |
| ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை .. .. | 44 |
| கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை .. .. | 19 |
| மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை .. .. .. | 50 |
| தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர் .. .. | 28 |
| | 193 பதவிகள். |

ஒவ்வொரு நபருக்கும் மொத்த ஊதியமாகத் திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 150 வழங்கப்படுகிறது. ஒவ்வொருவருக்கும் அகவிலைப்படி இல்லாமல் இலவசக் குடியிருப்புகள் வழங்கப்படுகின்றன. ஆயினும் குடியிருப்புகள் வழங்கப்படாதவிடத்து, சென்னை மாநகரில் ரூபாய் 15 வீட்டு வாடகைப் படியும் வெளியூர்களில் ரூ. 7 வீட்டு வாடகைப் படியும் கொடுக்கப்படுகிறது.



[1970 மார்ச் 30

### முதுநிலைப் பயிற்சி மருத்துவர்கள்.

1969-ல் நியமிக்கப்பட்ட முதுநிலைப் பயிற்சி மருத்துவர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| அரசினர் பொது மருத்துவமனை, சென்னை .. .. .. | 98 |
| அரசினர் ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை .. .. | 30 |
| அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை .. .. | 20 |
| அரசினர் இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை .. | 9 |
| அரசினர் தலைமையிட மருத்துவமனை, கோயம்புத்தூர் .. | 6 |
| தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர் .. | 3 |
| | 166 |

முதுநிலைப் பயிற்சி மருத்துவர் ஒவ்வொருவரும் பயிற்சிக்குரிய கட்டணமாக மருத்துவமனைக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 120 கொடுக்க வேண்டும்.

### பல் மருத்துவப் பட்டப்படிப்பு.

1953-ம் ஆண்டு சென்னை மருத்துவக் கல்லூரியின் பல் மருத்துவப் பிரிவில் பல் மருத்துவப் பட்டப்படிப்பு ஒன்று தொடங்கப்பட்டது. இதில் ஆண்டுதோறும் 15 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். பல் மருத்துவப் பிரிவுக்குப் போதிய அளவு இட வசதியின்மையால், தனிப் பட்ட கட்டிடத் தொகுதி ஒன்று ரூ. 15 லட்சம் செலவில் கட்டப்பட்டது. இதனால் சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 1963 முதல் 45 ஆக உயர்த்தப்பட்டது. இதுவரை இந்த நிறுவனத்திலிருந்து 217 பேர் பல் மருத்துவப் பட்டம் பெற்றுள்ளனர். பல் மருத்துவப் பட்டம் பெற்ற இளம் மருத்துவர்களிடையே வேலையில்லாச் சிக்கல் மிகுந்த கவலையைக் கொடுத்து வருகிறது. ஏனென்றால், அவர்களுக்கு வேலை வாய்ப்புகள் ஏமாற்றம் தரும் வகையில் மிகக் குறைவாக உள்ளன. நமது மாநிலத்தில் பல் மருத்துவப் பட்டதாரிகளின் வேலையில்லாச் சிக்கலைத் தீர்க்கும் பொருட்டும், பல் பாதுகாப்புக்கான வசதிகளை அதிகரிக்க வேண்டியதன் தேவையை முன்னிட்டும், வட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும் மகப்பேறு-குழந்தை நல நிலையங்களிலும் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் முதலியவற்றிலும் பல் மருத்துவத் தனி நிலையங்களைத் துவக்குவதற்கான செயற் குறிப்பு ஆலோசனையில் உள்ளது.

### மருந்து தயாரிப்போர் பட்டப்படிப்பு.

(i) 1939-ம் ஆண்டில் சென்னை மருத்துவக் கல்லூரியில் முதன் முதலாக மருந்து தயாரிப்பு இரண்டாண்டுப் பட்டப்படிப்பு தொடங்கப் பட்டது. மருந்து தயாரிக்கும் துறையில் விரைவான முன்னேற்றம் ஏற் பட்டதன் காரணமாக, இந்தப் படிப்பு 1950-ம் ஆண்டில் 3 ஆண்டுப் படிப்பாக மாற்றியமைக்கப்பட்டது. அதன் பின்னர் இப்படிப்பின் கால அளவு மேலும் ஓராண்டுக் காலம் நீடிக்கப்பட்டது. எனவே, இப்போது இப்படிப்பின் கால அளவு 4 ஆண்டுகளாகும். இப்படிப்பில், 1939-ம் ஆண்டில் 12 பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்க, இப்போது 35 பேர் சேர்க்கப்படுகின்றனர்.

(ii) தனியார் துறையிலும், பொதுத் துறையிலும், மருந்து தயாரிக்கும் பட்டம் பெற்றவர்கள் அதிக அளவு தேவைப்படுவதால் மருந்து தயாரிக்கும் பட்டப்படிப்பு 1963-ம் ஆண்டு முதல் மதுரையிலுள்ள மதுரை மருத்துவக் கல்லூரியிலும் தொடங்கப்பட்டது. இதில் 35 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

## பட்ட மேற்படிப்பு மருத்துவக் கல்வி.

ஏற்கெனவேயுள்ள மருத்துவக் கல்லூரிகளிலும் இனிமேல் தொடங்கப்படும் மருத்துவக் கல்லூரிகளிலும் தகுதியுள்ள ஆசிரியர்கள் தேவையும் மாவட்ட, வட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் தனித்துறை வல்லுநர்களுக்கான தேவையும் அதிகரித்து வருவதை ஈடு செய்யும் நோக்கத்துடன் இம்மாநிலத்தில் பட்ட மேற்படிப்பு வசதிகள் படிப்படியாக அதிகரிக்கப்பட்டு வருகின்றன. தற்போது பட்ட மேற்படிப்புப் பாட முறைகள் சென்னை மருத்துவக் கல்லூரியிலும், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியிலும், மதுரை மருத்துவக் கல்லூரியிலும், மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்துள்ள மருத்துவ மனைகளிலும் நடத்தப்படுகின்றன.

அரசு மருத்துவக் கல்லூரிகளில் நடத்தப்படும் பட்ட மேற்படிப்புப் பாடமுறைகள், ஒவ்வொரு பட்ட மேற்படிப்புப் பாடமுறைக்கும் கிடைக்கும் இடங்களின் எண்ணிக்கைகுறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| பாடமுறையின் பெயர். | இடங்களின் எண்ணிக்கை. |
| --- | --- |
| (1) | (2) |
| **பட்ட மேற்படிப்பு பாடமுறை.** | |
| எம்.டி. (பொது மருத்துவம்) .. .. .. | 50 |
| எ.எஸ். (பொது அறுவை மருத்துவம்) .. .. | 50 |
| எம்.டி. (நோய்க் குறியியல்) .. .. .. | 6 |
| எம்.டி. (நுண்ணுயிரியல்) .. .. .. | 6 |
| எம்.டி. (மருத்துவச்சி பாடமுறை) .. .. .. | 16 |
| எம்.டி. (உடலமைப்பு இயல்) .. .. .. | 8 |
| எம்.டி. (மருந்தியல்) .. .. .. .. | 8 |
| எம்.டி. (சிசு நோயியல்) .. .. .. .. | 8 |
| எம்.டி. (மயக்க மருந்து இயல்) .. .. .. | 4 |
| எம்.டி. (கதிர் வீச்சு-நோய் அறிவியல்) .. .. | 4 |
| எம்.டி. (கதிர் வீச்சு-சிகிச்சையியல்) .. .. .. | 2 |
| எம்.டி. (மேக நோய் மருத்துவம்) .. .. .. | 2 |
| எம்.டி. (சரும நோய் மருத்துவம்) .. .. .. | 2 |
| எம்.டி. (உடல் ரசாயன இயல்) .. .. .. | 4 |
| பி.எச்.டி. (உடற்கூற்று இயல்) .. .. .. | 6 |
| எம்.எஸ். (உடற்கூற்று இயல்) .. .. .. | 12 |
| எம்.எஸ். (கண் நோய் மருத்துவம்) .. .. .. | 6 |
| எம்.எஸ். (காது, மூக்கு, தொண்டை நோய் இயல்) .. | 6 |
| எம்.எஸ். (எலும்பு முறிவு மருத்துவம்) .. .. | 2 |
| எம்.டி.எஸ். (பல், ஈறுகள் சரியாக அமையாதது குறித்த மருத்துவ இயல்). (Periodontia) .. .. | 3 |
| எம்.டி.எஸ். (வாய் சார்ந்த அறுவை சிகிச்சை) .. | 3 |
| **உயர் தனித்துறைகள்.** | |
| எம்.சி.எச். (மூளை அறுவை மருத்துவம்) .. .. | 4 |
| எம்.சி.எச். (சிசு நோய் அறுவை மருத்துவம்) .. | 4 |
| எம்.சி.எச். (பிளாஸ்டிக் அறுவை மருத்துவம்) .. | 2 |





| பாடமுறையின் பெயர். | இடங்களின் எண்ணிக்கை. |
| --- | --- |
| (1) | (2) |
| எம்.சி.எச். (சிறுநீரக-பிறப்புறுப்பு அறுவை மருத்துவம்) .. | 2 |
| எம்.சி.எச். (மார்புப் பகுதி அறுவை மருத்துவம்) .. | 2 |
| எம்.டி. (மூளை அறுவை மருத்துவம்) .. .. | 2 |
| எம்.சி.எச். (மகளிர் நோய் இயல்) .. .. .. | 2 |

அறிவியல் பட்டதாரிகளுக்குப் படுக்கை மருத்துவப் பயிற்சியைச் சாராத பாடங்களில் (Non-clinical subjects), பட்ட மேற்படிப்புப் பாடமுறைகள்.

| | |
| --- | --- |
| எம். எஸ். சி. (உடற்கூற்று இயல்), உடலமைப்பு இயல, உடல் இரசாயன இயல், நுண்ணுயிரியல், மருந்தியல். | 6 |
| எம். ஏ. பட்டம் (குற்றவியல், மருத்துவம், குற்றம் சார்ந்த மருத்துவயியல்). | 8 |

### பட்ட மேற்படிப்புத் தகுதிப் பட்டய பாடமுறை.

| | |
| --- | --- |
| தகுதிப் பட்டயம் (மகப்பேறு, மகளிர் நோயியல்) .. .. | 30 |
| தகுதிப் பட்டயம் (சிசு நலன்) .. .. .. .. .. .. | 24 |
| தகுதிப் பட்டயம் (கதிர் வீச்சு மருத்துவம்) .. .. .. | 18 |
| தகுதிப் பட்டயம் (கண் நோய் மருத்துவம்) .. .. .. | 12 |
| தகுதிப் பட்டயம் (காது, மூக்கு, தொண்டை, நோயியல்) .. | 10 |
| தகுதிப் பட்டயம் (மயக்க மருந்தியல்) .. .. .. .. | 13 |
| தகுதிப் பட்டயம் (எலும்பு முறிவு மருத்துவம்) .. .. | 6 |
| தகுதிப் பட்டயம் (மேகநோய் இயல்) .. .. .. .. | 6 |
| தகுதிப் பட்டயம் (படுக்கை மருத்துவப் பயிற்சியைச் சார்ந்த நோய்க் குறியியல்). | 4 |
| தகுதிப் பட்டயம்—மார்பு வலி (T.D.D.) .. .. .. | 12 |
| தகுதிப் பட்டயம் (சரும நோயியல்) .. .. .. .. | 4 |
| தகுதிப் பட்டயம் (குற்றவியல் மருத்துவம், குற்றம் சார்ந்த மருந்தியல்). | 12 |

சென்னை மருத்துவக் கல்லூரியில் 1970-ல் கீழ்க்கண்ட பட்டமேற்படிப்புப் பாடமுறைகளைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது டி.பி.எம்., எம்.டி.எஸ். (பல் சார்ந்த அறுவை மருத்துவம்).

### குற்றவியல் சட்டம் சார்ந்த மருத்துவ இயலில் தகுதிப் பட்டயப் பாடமுறை.

மாநில அரசின் காவல் சட்டம், சிறைச்சாலைகள், மருத்துவம் ஆகிய துறைகளின் நலனுக்காக சென்னை மருத்துவக் கல்லூரியில் குற்றவியல் சட்டம் சார்ந்த மருத்துவ இயலில் ஓர் ஆண்டு தகுதிப் பட்டய பாடமுறை நடத்தப்பட்டுவருகிறது. இப்பாடமுறை சென்னைப் பல்கலைக் கழகத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் இப்பாடமுறையில் 20 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

## குற்றவியல், சட்டம் சார்ந்த மருத்துவ இயலில் பட்டமேற்படிப்புப் பாடமுறை

1965-ஆம் ஆண்டிலிருந்து சென்னை மருத்துவக் கல்லூரியில் குற்றவியல் சட்டம் சார்ந்த மருத்துவ இயலில் பட்டமேற்படிப்புப் பாடமுறை நடத்தப்படுகிறது. ஒவ்வொரு வகுப்புக்கும் ஆண்டுதோறும் 8 மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். சட்டம் சார்ந்த மருத்துவ இயலில் சிறப்புப் பயிற்சி அளிப்பதற்காக, சென்னை மருத்துவக் கல்லூரியிலும் மதுரை மருத்துவக் கல்லூரியிலும் சட்டம் சார்ந்த மருத்துவ இயல் துறையைத் தரம் உயர்த்தவும், சட்டம் சார்ந்த மருத்துவ இயலில் எம்.டி. பட்டப் படிப்பைக் கொண்டுவரவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

## துணை மருத்துவப் பணியாளர் பயிற்சி மருந்து தயாரிப்பதில் தகுதிப் பட்டயப் பாட முறை.

(i) மருந்து செய்முறைப் பயிற்சியில் இரண்டாண்டுத் தகுதிப் பட்டயப் படிப்பு 1955-ல் சென்னை மருத்துவக் கல்லூரியில் துவக்கப்பட்டது. தொடக்கத்தில் 15 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். 1956-ல் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 60-ஆக உயர்த்தப்பட்டது. மருந்து தயாரிப்போரின் பணி பொதுத்துறையிலும் தனியார் துறையிலும் அதிகமாகத் தேவைப்பட்டதைச் சமாளிப்பதற்கென இப்பாடமுறையில், சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 1959-ல் 100-ஆக உயர்த்தப்பட்டது. மதுரை மருத்துவக் கல்லூரியில் இப்பாடமுறை 1960-ல் கொண்டுவரப்பட்டது. தொடக்கத்தில் அதில் 100 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இரண்டாம் திட்டத்தில் வழங்கப்பட்ட மத்திய உதவியைப் பயன்படுத்திக்கொண்டு இக்கல்லூரியில் சேர்த்துக்கொள்ளப் படும் மாணவர்களின் எண்ணிக்கை 1961 ஜூலையில் 150 ஆகவும் 1963 ஜூலையில் 200 ஆகவும் உயர்த்தப்பட்டது. அதேபோல் சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 1963 ஜூலையிலிருந்து 150 ஆக உயர்த்தப்பட்டது.

மருந்து தயாரித்தல் தகுதிப் பட்டயப் பாடமுறையில் போதுமான அளவு மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை. ஆகையால், சென்னை மருத்துவக் கல்லூரியிலும் மதுரை மருத்துவக் கல்லூரியிலும் ஒவ்வொரு ஆண்டும் இப்பாடமுறையில் சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைக்கப்பட்டது. தற்போது சென்னை மருத்துவக் கல்லூரியிலும் மதுரை மருத்துவக் கல்லூரியிலும் மருந்து தயாரிப்புப் பாடமுறையில் முறையே 50, 100 மாணவர்கள் மேற்படி பாடமுறையில் ஆண்டுதோறும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

(ii) கல்லூரி புகுமுகத் தகுதியைக் கொண்டுள்ள மருந்தியல் தகுதிப் பட்டயம் பெற்றுள்ளவர்கள், இரண்டாவது ஆண்டு ஒருங்கிணைந்த மருந்தியல் பட்டப்பாடமுறையில் நேரடியாகச் சேர இம்மாநிலப் பல்கலைக் கழகங்கள் அனுமதியளித்துள்ளன. அதன் விளைவாக மருந்தியல் துறையில் அவர்கள் உயர்ந்த தகுதியைப் பெறுவது இயலும். இதற்கென சென்னை மருத்துவக் கல்லூரியில் 15 பேரையும், மதுரை மருத்துவக் கல்லூரியில் 15 பேரையும் சேர்த்துக் கொள்ள அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

## கதிர்வீச்சு மருத்துவ உதவியாளர்கள் பயிற்சி.

சென்னை அரசினர்ப் பொது மருத்துவமனையில் உள்ள "பார்னார்டு" கதிர்வீச்சு மருத்துவ நிலையத்தில் இப்பாட முறை முதன் முதலில் துவக்கப்பட்டது. ஆண்டுதோறும் 20 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். மாவட்ட, வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளுக்கென கதிர்வீச்சு மருத்துவப் பணியாளர்கள் அதிகமாகத் தேவைப்பட்டதால் சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியிலும், மதுரை மருத்துவக் கல்லூரியிலும் இப்பாடமுறை துவக்கப்பட்டு, 1960 முதல் ஆண்டுதோறும் 15 பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இப்பாடமுறைக்கான காலம்





ஓர் ஆண்டாகும். எனினும் பயிற்சி பெற்றவர்களுக்குப் போதிய வேலை வாய்ப்புகள் கிட்டாமையால் ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் இப்பாடமுறை பின்னர் நிறுத்திவிடப்பட்டது. தற்போது இப்பாடமுறை சென்னை மருத்துவக் கல்லூரியிலும், மதுரை மருத்துவக் கல்லூரியிலும் தொடர்ந்து நடத்தப்பட்டு, ஆண்டுதோறும் ஒவ்வொரு கல்லூரியிலும் 20 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். இப்பாட முறையில் அனுமதிக்கப் படுபவர்களுக்கு ரூ. 50 பயிற்சி உதவிப் பணம் வழங்கப்படுகிறது.

## நிழற்படம் கழுவுவதற்கான உதவியாளர்களுக்குப் பயிற்சி.

சென்னை "பார்னார்டு" கதிர்வீச்சு மருத்துவ நிலையத்திலும், சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையிலும் இப்பாடமுறை நடத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பயிற்சித் தொடரிலும் ஆண்டுதோறும் இரு முறை மாணவர்கள் இப்படிப்பிற்குச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இப்பாடமுறையின் கால அளவு 6 மாதங்களாகும். இதில் தேறுபவர்கள் இம்மாநிலத்தில் மருத்துவ மனைகளில் உள்ள கதிர்வீச்சு மருத்துவத் துறைகளில் நிழற் படம் கழுவும் உதவியாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். இப்பயிற்சியில் சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களுக்கு மாதம் ரூ. 90 பயிற்சி உதவிப் பணம் கொடுக்கப்படுகிறது.

## மூக்குக் கண்ணாடி தயாரிப்பவருக்குப் பயிற்சி.

சென்னை, அரசு கண் நோய் மருத்துவ மனையில் இப்பயிற்சி முறை 1962-ல் துவக்கப்பட்டது. இப்பயிற்சிக் கால அளவு இரண்டாண்டுகளாகும். ஒவ்வொரு ஆண்டும் இதில் 30 பேர் சேர்க்கப்படுகின்றனர்.

இப்பயிற்சியில் தகுதிபெற்ற மாணவர்களுக்கு வேலைவாய்ப்புக்கு வகை செய்யும் பொருட்டும், மருத்துவ அதிகாரிகள் வழக்கமான பணிகளைக் கவனிக்காமல் சிகிச்சைப் பணிகளைமட்டும் கவனிப்பதற்கு வகை செய்யும் பொருட்டும், இம்மாநிலத்தில் கல்லூரிகளுடன் இணைந்திருக்கும் பல்வேறு மருத்துவ மனைகளின் கண் நோய் மருத்துவத் துறைகளுக்கு மூக்குக் கண்ணாடி செய்பவர்களின் பத்துப் பதவிகளை அரசு ஒப்பளித்தது.

## முட நோய்த்துறைப் பணியாளர் பயிற்சி.

இரண்டாண்டுக்காலம் கொண்ட இப்பயிற்சி வகுப்பு மதுரை மருத்துவக் கல்லூரியில் 6 மாணவர்களுடன் 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதி துவக்கப்பட்டது. பயிற்சிபெறும் மாணவர்களுக்குத் திங்கள் தோறும் ரூ. 60 பயிற்சி உதவிப் பணம் வழங்கப்படுகிறது. இப்பாடமுறையில் இதுவரை, 6 மாணவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். பின்வரும் மருத்துவக் கல்லூரி ஒவ்வொன்றுக்கும் ஒரு முடநோய் வல்லுநர் வீதம் 4 பதவிகளை அரசு ஒப்பளித்தது.

(1) அரசு ஸ்டான்லி மருத்துவ மனை, சென்னை.

(2) அரசு கண்நோய் மருத்துவ மனை, சென்னை.

(3) அரசு எர்ஸ்கின் மருத்துவ மனை, மதுரை.

(4) அரசு ராஜா மிராசுதார் மருத்துவ மனை, தஞ்சாவூர்.

## I-ஆம் தர ஆய்வுக்கூடத் தொழில் நுட்பப் பணியாளர்கள் பயிற்சி.

இந்தப் பயிற்சி முறை, 1966-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம்தேதி முதல் பின்வரும் ஆறு நிலையங்களில் நடத்தப்படுகிறது. சென்னை மருத்துவக் கல்லூரி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, கிண்டி கிங் நிலையம், தஞ்சாவூர் மருத்துவ மனை, மதுரை மருத்துவ மனை, பயிற்சிக்கால அளவு ஓராண்டாகும். 1966 முதல் இந்நாள் வரை பயிற்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 323 ஆகும். பயிற்சி பெற்ற மாணவர்கள் மருத்துவக் கல்லூரியுடன் இணைந்துள்ள மருத்துவ மனைகளிலும், மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்திராத மருத்துவ மனைகளிலும் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

### II-ஆம் தர ஆய்வுக்கூடத் தொழில் நுட்பப் பணியாளர்கள் பயிற்சி.

புதிய மருத்துவக் கல்லூரிகளும் மாவட்டப் பொதுச் சுகாதார ஆய்வுக் கூடங்களும் தொடங்கப்பட்டதன் விளைவாகவும் தற்போதுள்ள மருந்துவக் கல்லூரிகளில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை 1963 முதல் அதிகரித்ததாலும், இந்தப் பணியாளர்கள் அதிகம் தேவைப்பட்டனர். இந்தத் தேவையை நிறைவு செய்யவும் தற்போதுள்ள பணியாளர்களுக்கு இன்னும் மேம்பட்ட பயிற்சியை அளிக்கும் பொருட்டும், 1965-ம் ஆண்டு முதற்கொண்டு கீழ்க்கண்ட ஆறு நிலையங்களில் ஓராண்டுப் பயிற்சிமுறையை நடத்தும்படி அரசு ஆணையிட்டது. சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவ கல்லூரி, கிண்டி கிங் நிலையம், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, மதுரை மருத்துவக் கல்லூரி இந்த நிலையங்கள் ஒவ்வொன்றிலும் முதல் பயிற்சித் தொடரில் 12 பேர் அனுமதிக்கப்பட்டனர். 1966-ஆம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ஆம் தேதி முதல் அந்த எண்ணிக்கை 15-ஆக உயர்த்தப்பட்டது. 1959-ல் மேற்படி பாடமுறை தொடங்கப்பட்ட நாளிலிருந்து இதுவரை சுமார் 438 மாணவர்கள் இப் பாடமுறையில் பயிற்சி பெற்றுள்ளனர். இம் மாநிலத்தில் மருத்துவக் கல்லூரியுடன் சேர்ந்திருக்கும் மருத்துவ மனைகளிலும், தனிப்பட்டுச் செயல்படும் மருத்துவ மனைகளிலும், ஆய்வுக் கூடத் தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர்கள் சேர்த்துக்கொள்ளப் படுகிறார்கள்.

### பல்நோய் சுகாதாரப் பணியாளர்களுக்கும் பல்நோய் குறித்த தொழிலியல் பணியாளர்களுக்கும் பயிற்சி.

பல் மருத்துவத் துறையில் தகுதியுள்ள துணைப் பணியாளர் கிட்டும் பொருட்டு, பல்நோய் சுகாதாரப் பணியாளர்களுக்கும், பல்நோய் குறித்த தொழிலியல் பணியாளர்களுக்கும் உரிய பயிற்சி முறைகள், மத்திய அரசு தரும் நிதி உதவியைப் பயன்படுத்தி, 1965, செப்டம்பர் முதற்கொண்டு சென்னை மருத்துவக் கல்லூரியில் பல் மருத்துவப் பிரிவில் தொடங்கி வைக்கப்பட்டன. பல்நோய் தொழிலியல் பணியாளர்களுக்கு இரண்டாண்டும் பல்நோய் சுகாதாரப் பணியாளர்களுக்கு ஓராண்டும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

1965-ஆம் ஆண்டுமுதல் இதுவரை பல்நோய் சுகாதாரப் பணியாளர்கள் பயிற்சி முறையில் 24 பேருக்கும், பல்நோய் தொழிலியல் பணியாளர் பயிற்சி முறையில் 12 பேருக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. நான்கு பல்நோய் தொழிலியல் பணியாளர் பதவிகளுக்கும் நான்கு பல்நோய் சுகாதாரப் பணியாளர் பதவிகளுக்கும் 1969, மே திங்களில் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

### மருத்துவ ஆராய்ச்சி.

(i) நாட்டு மக்களின் சுகாதாரத்திற்கும் நல்வாழ்வுக்கும் மருத்துவ ஆராய்ச்சி அதிக அளவில் வாய்ப்பு அளிக்கின்றது. எனவே, இம் மாநிலத்தில் 1944-ஆம் ஆண்டு மாநில மருத்துவ ஆராய்ச்சிக் குழு ஒன்று அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றது. இது மருத்துவ விஞ்ஞானத்திலும் மருத்துவக் கலையிலும் ஆராய்ச்சி செய்ய ஊக்க மளிக்கிறது. இம்மாநிலத்தில் ஆராய்ச்சியைத் தொடங்கும், உதவி செய்யும், வளர்க்கும், ஒருங்கிணைக்கும் ஏற்புடைய மருத்துவ நிறுவனங் களுக்குச் சிறு அளவில் மானியம் வழங்குவதுடன் நோய்க் கூறுகளை ஆய்வதற்கும் அவற்றைத் தடுப்பதற்கும் அவற்றின் காரணங்களையும் தீர்வுகளையும் அறிவதற்கும் உதவி செய்கிறது. இதற்காக ஆண்டுதோறும் இக்குழுவிடம் மொத்தமாக ரூ. 50,000 மானியம் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் அதிகமான ஆய்வுப் பணித் திட்டங்கள் பெறப்படுவதால், இத்திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்க இந்த மானியத் தொகையான ரூ. 50,000 போதுமானதாக இல்லையென்று கண்டறியப்பட்டது. எனவே, 1968-லிருந்து இந்த மானியத் தொகை ஆண்டுதோறும் ரூ. 50,000 என்பதிலிருந்து ரூ. 65,000-ஆக உயர்த்தப்பட்டது.



(ii) மருத்துவக் கல்லூரிகளில் ஒவ்வொரு துறையிலும் படுக்கை சார்ந்த மருத்துவ முறைப்படிப்பிற்கு முற்பட்ட துறைகளிலும் (Pre clinical department) படுக்கை சார்ந்த மருத்துவ முறைப் பாடத்துறை களிலும் (Clinical departments) தேவைப்படுவனவற்றிற்கு வகை செய்து கொடுப்பதற்காக, மருத்துவக் கல்லூரியில் ஒவ்வொரு துறையிலும் பொது ஆராய்ச்சி நிலையம் இருக்க வேண்டுமென்றும் தொடர்பான துறைகளின் வசதிகளைத் தொகுப்பதன்மூலம் ஆராய்ச்சிப் பிரிவுகள் அமைக்கப்படலாமென்றும் இந்திய மருத்துவ மன்றம் 1964-ஆம் ஆண்டில் பரிவுரை செய்தது. இந்தப் பரிவுரைக்கிணங்க, சென்னை யிலுள்ள சென்னை மருத்துவக் கல்லூரியில் தேவையான பணியாளர்கள், கருவிகள் முதலியவற்றுடன் மத்திய ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. சென்னை, அரசுப் பொது மருத்துவ மனையில் மற்றொரு மத்திய ஆய்வுப் பிரிவு அமைக்கப் பட்டு வருகிறது.

## நோய் தடுப்பு மருந்து குறித்த கிண்டி கிங் நிறுவனம்.

### நோய் நுண்ம நச்சாய்வியல் பிரிவு.

தொற்று நச்சுத் தன்மையை ஆய்வு செய்வதற்கான வசதிகளை அளிப்பதற்கும், நுண்மையியலில் எம். டி. பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கும் (M. D. Bacteriology) நுண் உயிரியலில் எம். எஸ். சி. பட்ட மேற் படிப்பு படிக்கும் மாணவர்களுக்கும் (M. Sc. Microbiology) பாடம் கற்றுக் கொடுப்பதற்குப் போதிய வசதிகள் அளிக்கும் நோக்கத்துடன் 1969 மார்ச் திங்களில் நோய் நுண்மை நச்சாய்வியல் பிரிவு ஒன்று ஒப்பளிக்கப்பட்டது.

### மூன்று நோய்களைத் தடுப்பதற்கான அம்மைப் பாலைத் தயாரித்தல்.

ஊனிரும் அம்மைப் பாலும் தயாரிப்பதில் தன்னிறைவு எய்தும் நோக்கத்துடன், நோய்த் தடுப்பு அம்மைப் பால், தொண்டை அழற்சி நோய்த் தடுப்பு அம்மைப்பால், மூன்று நோய்கள் தடுப்புக்கான அம்மைப் பால் ஆகியவற்றை கிண்டி கிங் ஆராய்ச்சி நிலையத்தில் தயாரிக்க அரசு ஒப்பளித்துள்ளது. ரூ. 1,25,000 செலவில் பின்வரும் கூடுதல் கட்டிடங் களைக் கட்டுவதற்கு அரசு ஒப்பளித்துள்ளது:—

(1) பிராணவாயு இல்லாமல் உயிர்வாழும் உயிரினங்கள் (Anaerobic) பிரிவு.

(2) பாம்புகள் வைக்கப்படும் பிரிவு.

(3) 25 குதிரை லாயங்கள்.

ஊனிர் நோய்த் தடுப்பு மருந்து முதலியவைகளைத் தரப்படுத்துவதற் கான தொழில் நுட்பத்தையும் முறைகளையும் அறிந்துகொள்வதற்கென கிண்டி கிங் ஆராய்ச்சி நிலையத்தின் பணியாளர்களை பம்பாய், ஹாப்கின் நிலையத்திற்கு அனுப்புவதற்கும்கூட அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

### நோய் நுண்மங்கள் ஒழிக்கப்பெற்ற கரைசல்கள் உற்பத்தியைப் பெருக்குதல்.

நோய் நுண்மங்கள் ஒழிக்கப்பெற்ற கரைசல்கள் தயாரிப்பில் தன்னிறைவு அடையும் நோக்கத்துடன் தற்போது தயாரித்துவரும் அளவான 7·00 லட்சம் ஊசி மருந்து வைப்பதற்கான சிறு புட்டிகள் (Ampoules) 0·5 லட்சம் புட்டிகள் என்ற எண்ணிக்கையை, முறையே 20 லட்சமாக வும் 1·25 லட்சமாகவும் உயர்த்துவதற்கான ஒரு திட்டத்தை 1969 எப்ரலில் அரசு ஒப்பளித்தது.

இது தொடர்பாக, சாதனங்கள் வாங்குவதற்கு ரூ. 50,000 தொடராச் செலவையும் மூலப் பொருட்கள் வாங்குவதற்கு ரூ. 1,50,000 தொடர் செலவையும் அரசு ஒப்பளித்துள்ளது.

### விலங்குகள் வைத்திருக்கப்படும் அறைகள்.

டாக்டர் யு. கிருஷ்ண ராவ் தலைமையில் அமைக்கப்பட்ட வல்லுநர்க் குழுவின் பரிவுரைகளைச் செயல்படுத்துவதற்காக கிண்டி கிங் நிலையத்தில் கூடுதல் விலங்குக் கூடம் ஒன்றை ரூ. 4 லட்சம் செலவில் கட்டுவதற்கு அரசு ஒப்பளித்துள்ளது.

### சென்னை, அரசுப் பொது மருத்துவ மனையில் 24 மணி நேரமும் செயல்படுகிற நோய் குறியியல், நுண்ணுயிரியல், உடல் இரசாயன இயல் ஆய்வுக் கூடம் ஒன்றை நிறுவுதல்.

அவசரச் சிகிச்சை நாடி வருகிற ஆபத்து நிலைப் பிணியாளர்களின் தேவைகளுக்கென சென்னை அரசினர் பொது மருத்துவ மனையில் 24 மணி நேரமும் இயங்குகின்ற நோய்க் குறியியல், நுண்ணுயிரியல், உடல் இரசாயன இயல் ஆய்வுக்கூடம் ஒன்றை நிறுவ அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

உடல் இரசாயனத் துறைக்குத் தேவைப்படுகிற ப்ளேம் போட்டோ மீட்டர் ( Flame Photo Meter ), கேசோ மீட்டர் (Gasometer) இரசாயனங்கள், கண்ணாடிக் கருவிகள், மற்றும் துணைக் கருவிகள் வாங்கிப் பொருத்தவும், தேவையான கூடுதல் பணியாளர்களை நியமிக்கவும் ரூ. 27,000 செலவினத்திற்கும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

### கல்விக் கடன்களும் கல்வி உதவிச் சம்பளங்களும்.

I. போதிய பண வசதி இல்லாத காரணத்தால், சராசரிக்கு மேற்பட்ட திறமையும், மேற்படிப்புப் படிக்க ஆர்வமும், குறிப்பாகத் தொழில் நுட்பத் தொழில் பாட முறைகளில் படித்துத் தேறவேண்டும் என்ற விருப்பமும் கொண்ட பல மாணவர்கள் அத்தகைய கல்வியைப் பெற இயலாமல் உள்ளனர். இம் மாநிலத்திலுள்ள அத்தகைய மாணவர்களுக்கு உதவவேண்டியதன் தேவையை உணர்ந்து, மருத்துவக் கல்லூரிகள் முதலிய தொழிற் கல்லூரிகளில் படிக்கிற மாணவர்களுக்கு வட்டியில்லாக் கடன்களை வழங்கும் திட்டத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

(i) விண்ணப்பம் செய்துகொள்ளும் சமயத்தில் மாநில அரசின் கீழ்ப் பணிபுரிகிற அரசிதழ் பதிவு பெறாத அதிகாரிகள்,

(ii) விண்ணப்பம் செய்துகொள்கிற சமயத்தில் ஏற்பளிக்கப்பட்ட தொடக்க உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரிகிற ஆசிரியர்கள்,

(iii) ஆண்டு வருமானம் ரூ. 1,500-ம் அதற்குக் குறைவாகவும் உள்ள பெற்றோர்கள் ஆகியோரது குழந்தைகள் அனைவரும் இக் கடன் பெறத் தகுதியுள்ளவராவர். மருத்துவக் கல்லூரியில் படிக்கிற மாணவர்களுக்குக் கடன் வழங்கும் பொருட்டு 1969-ல் ரூ. 86,000 தொகை ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

II. அரசியல் தியாகிகள், இளநிலை இராணுவ அதிகாரிகள், மற்றும் பாதுகாப்புப் பணிகளைச் சேர்ந்த ஏனைய தரங்களில் உள்ள அதிகாரிகள் ஆகியோரது குழந்தைகள் மருத்துவக் கல்லூரிகளில் படித்துக்கொண்டிருந்தால், அவர்களுக்கும் கல்வி உதவிச் சம்பளங்களும், கல்விச் சலுகைகளும் வழங்கப்படுகின்றன. (பின்தங்கிய வகுப்பு மக்களுடைய குழந்தைகளுக்கு அளித்துள்ள சலுகைகள் நீங்கலாக.)

### கட்டிடங்கள்.

### சென்னையிலுள்ள அரசுப் பொது மருத்துவமனை.

இதய நோயாளிகளுக்குத் திறம்படச் சிகிச்சையளிப்பதற்கு வகை செய்யும் பொருட்டு இதய நோயியல் பிரிவுக்கான கட்டிடம் ஒன்று சென்னையிலுள்ள அரசுப் பொது மருத்துவ மனையில் கட்டப்பட்டு வருகிறது. இப்



பிரிவுக்கான கட்டிடம் கட்டுவதற்கு 1966-ல் அரசு ரூ. 16 லட்சத்துக்கு ஒப்பளிப்பு வழங்கியது. இதய நோய் பிரிவுக்கு மேல் ஏழாவது மாடி கட்டுவதற்கும் 1969 ஜூன் திங்களில் ரூ. 1·70 லட்சத்துக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

சென்னையிலுள்ள அரசுப் பொது மருத்துவமனையில் நரம்பியல் மருத்துவப் பிரிவு ஒன்றைக் கட்டுவதற்காக 1968 ஜனவரித் திங்களில் ரூ. 7 லட்சத்துக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியது. நரம்பியல் பிரிவின் 3-வது மாடிக்குமேல் கூடுதலாக 3 மாடிகளைக் கட்டுவதற்கு 1969-ல் ரூ. 9·50 லட்சத்துக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

### சென்னையிலுள்ள கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி.

சென்னையிலுள்ள கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி-மருத்துவ மனையில் பிணியியல் பிரிவு ஒன்றும் நுண்ணுயிர்ப் பிரிவு ஒன்றும் கட்டுவதற்காக ரூ. 3·50 லட்சத்துக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியது. கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு அக்கட்டிடத்திற்கான மின் அமைப்புப் பணி நடந்தேறி வருகிறது.

### சென்னையிலுள்ள அரசு இராயப்பேட்டை மருத்துவமனை.

சென்னையிலுள்ள அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில் மூன்று மாடிக் கட்டிடம் கட்டுவதற்காக 1967-ல் ரூ. 6·87 லட்சத்துக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியது. அந்த மூன்று மாடிக்கு மேல் மேற்கொண்டும் ஒரு மாடி கட்டுவதற்காக 1969 மார்ச் திங்களில் ரூ. 3·60 லட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

### அரசு கண் நோய் மருத்துவமனை, சென்னை.

ஒவ்வொரு பிரிவிலும் 100 படுக்கைகள் கொண்ட பொது, சிறப்பு மருத்துவமனைப் பிரிவுகளுக்கும், அறுவை சிகிச்சை நிலையங்களுக்கும் வசதி செய்துகொடுக்கும் வகையில் ரூ. 3·75 லட்சம் செலவில் அரசு கண் நோய் மருத்துவமனையின் புதிய புற நோயாளிப் பிரிவுக்கு மேல் இரண்டாவது மாடி கட்டுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

### 2. மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளுக்கு மேம்பாடுகள்.

மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளுக்கு மேம்பாடுகள் செய்வதற்காகக் கீழ்க்கண்ட பணித் திட்டங்களுக்கு 1969–70-ஆம் ஆண்டில் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது :—

| | ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பணித் திட்டங்கள். | மதிப்பீட்டுச் செலவு. |
|---|---|---|
| | | ரூ. |
| 1 | தூத்துக்குடியிலுள்ள அரசு மருத்துவமனையில் 6 படுக்கைகள் கொண்ட தொற்றுநோய் மருத்துவ மனைப் பிரிவு கட்டுதல். | 46,000 |
| 2 | திருச்சிராப்பள்ளியிலுள்ள அரசுத் தலைமையிட மருத்துவமனையில் குளிர்ச்சாதனம் பொருந்திய அறுவை சிகிச்சை நிலையங்கள். | 1,60,000 |
| 3 | சேலத்திலுள்ள அரசுத் தலைமையிட மருத்துவமனைக்கு மின் உற்பத்திக்கான டீசல் மோட்டார் அமைத்தல். | 54,500 |
| 4 | நாகர்கோயிலிலுள்ள அரசுத் தலைமையிட மருத்துவ மனைக்கு மின் உற்பத்திக்கான டீசல் மோட்டார் அமைத்தல். | 23,000 |
| 5 | தூத்துக்குடியிலுள்ள அரசுத் தலைமையிட மருத்துவ மனையில் எக்ஸ் கதிர் பிரிவு ஒன்று கட்டுதல். | 68,000 |

சேலம் மாவட்டம், சங்ககிரியிலுள்ள அரசு மருத்துவ மனையில் 6 படுக்கைகளைக் கொண்ட பிரிவு பொதுப்பணித் துறையினரால் கட்டி முடிக்கப்பட்டு 1969 செப்டம்பரில் திறக்கப்பட்டது.

மதுரை மாவட்டம், திண்டுக்கல்லிலுள்ள அரசுத் தலைமையிட மருத்துவ மனையில் 24 படுக்கைகள் கொண்ட காசநோய்ப் பிரிவு ஒன்று கட்டுதலும், தர்மபுரியிலுள்ள அரசுத் தலைமையிட மருத்துவமனையில் 20 படுக்கைகள் கொண்ட காசநோய்ப் பிரிவு ஒன்று கட்டுதலும் முடியும் தறுவாயிலுள்ளன.

## வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளுக்கு மேம்பாடுகள்.

வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளைப் பொறுத்தவரையில், கீழ்க்கண்ட பணித் திட்டங்களுக்கு 1969–70-ஆம் ஆண்டில் அரசு ஒப்பளிப்பு வழங்கியது.

| | ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பணித் திட்டங்கள். | மதிப்பீட்டுச் செலவு. |
|---|---|---|
| | | ரூ. |
| 1 | தென் ஆர்க்காடு மாவட்டம், விருத்தாசலத்திலுள்ள அரசு மருத்துவமனையில் மகப்பேறு-அறுவை சிகிச்சை நிலையம் கட்டுதல். | 1,45,000 |
| 2 | செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகத்திலுள்ள அரசு மருத்துவமனையில் 24 படுக்கைகள் கொண்ட பிரிவு கட்டுதல். | 1,35,000 |
| 3 | தென் ஆர்க்காடு மாவட்டம், திருக்கோயிலூரிலுள்ள அரசு மருத்துவமனையில் இரண்டு மருத்துவ அதிகாரிகளுக்குக் குடியிருப்புகள் கட்டிக் கொடுத்தல். | 40,000 |
| 4 | திருநெல்வேலி மாவட்டம், தென்காசியிலுள்ள அரசு மருத்துவமனையில் சமையல் கூடத்துக்கு மேம்பாடுகள். | 12,500 |
| 5 | தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்திலுள்ள அரசு மருத்துவமனையில் தற்போதிருக்கும் மின்சார அமைப்புக்கு மேம்பாடுகள். | 18,000 |

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியிலுள்ள அரசு மருத்துவ மனையில் குருதி சேமிப்பு நிலையம் ஒன்றுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியது.

கீழே குறிப்பிட்டுள்ள வட்ட மருத்துவமனைகளில் புதிய சமையற் கூடங்களைக் கட்டுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது:—

1. அரசு மருத்துவமனை, திருமங்கலம், மதுரை மாவட்டம்.
2. அரசு மருத்துவமனை, பத்மனாபபுரம், கன்னியாகுமரி மாவட்டம்.
3. அரசு மருத்துவமனை, அரியலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

கீழே குறிப்பிட்டுள்ள வட்ட மருத்துவமனைகளில் எக்ஸ் கதிர் பிரிவுகள் கட்டப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளன :—

1. அரசு மருத்துவமனை, முதுகுளத்தூர், ராமநாதபுரம் மாவட்டம்.
2. அரசு மருத்துவமனை, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.
3. அரசு மருத்துவமனை, கோயில்பட்டி, திருநெல்வேலி மாவட்டம்.

அறந்தாங்கியில் புதிதாக 32 படுக்கைகள் கொண்ட வட்ட மருத்துவ மனை கட்டுவது முடியும் தறுவாயில் உள்ளது. தற்போதுள்ள மருந்தகம் 32 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்றப்பட்டு "அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனை, அறந்தாங்கி", என்று பெயரிடப்பட்டுள்ளது.



செங்கற்பட்டு மாவட்டம், ஸ்ரீபெரும்புதூரில் புதிதாக 32 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டுவதும், வட ஆர்க்காடு மாவட்டம், திருவண்ணாமலையில் உள்ள அரசு மருத்துவமனையில் எக்ஸ் கதிர் பிரிவு கட்டுவதும், முடியும் தறுவாயில் உள்ளன.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஜெயங்கொண்ட சோழபுரத்தில் 40 படுக்கைகள் கொண்ட புது அரசு மருத்துவமனை கட்டும் பணியும், தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் 32 படுக்கைகள் கொண்ட பிரிவு ஒன்று கட்டும் பணியும் நடந்தேறி வருகின்றன.

செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகத்தில் கட்டப்பட்ட புது எக்ஸ் கதிர் பிரிவு 22—1—1970 அன்று திறந்து வைக்கப்பட்டது. அந்நாளில் 24 படுக்கைகள் கொண்ட புதிய பிரிவு ஒன்றுக்கான அடிக்கல் நாட்டு விழாவும் நடைபெற்றது.

## வட்ட மருத்துவ நிலையங்கள் அல்லாத பிற மருத்துவ நிலையங்களுக்கு மேம்பாடுகள்.

1969–70-ஆம் ஆண்டில் இதுவரை கீழ்க்கண்ட திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளன :—

| | ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பணித் திட்டங்கள். | மதிப்பீட்டுச் செலவு. |
|---|---|---|
| | | ரூ. |
| 1. | திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூரில் உள்ள அரசு மருத்துவ மனையில் 32 படுக்கைகள் கொண்ட ஒரு பிரிவு உட்பட கூடுதல் கட்டிடங்கள் கட்டுதல். | 5,00,000 |
| 2. | திருச்சிராப்பள்ளி மாவட்டம் புதுக்கோட்டையிலுள்ள நகர் பொது மருத்துவ மனையில் மேக நோய் தனி மருத்துவ மனை ஒன்று கட்டுதல். | 69,000 |
| 3. | சேலம் மாவட்டம், குமாரபாளையத்தில் உள்ள அரசு மருத்துவ மனையில் புதிய பிணப் பரிசோதனை பிரிவு ஒன்றை கட்டுதல். | 10.000 |
| 4. | உதகமண்டலத்திலுள்ள சேட் நினைவு மருத்துவமனைக்கு நீர் வழங்கு ஏற்பாடுகளைச் செய்தல். | 39,000 |

செங்கற்பட்டு மாவட்டம், வண்டலூர் அருகே பொது மருத்துவ மனை ஒன்றை அமைப்பதற்காக ஆரான் சாமுவேல் மருத்துவமனைச் சங்கத்திற்கு 20 ஏக்கர் காட்டு நிலங்களை ஒதுக்குவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் உள்ள அரசு மருத்துவ மனையில் எக்ஸ்-கதிர் பிரிவு ஒன்று கட்டுவதற்கு ஆணையிடப்பட்டது.

சேலம் மாவட்டம், வேம்படித்தலத்தில் உள்ள அரசு மருத்துவ மனையோடு, அங்குள்ள மகப்பேறு-சிசு நல நிலையத்தை இணைப்பதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

வட ஆர்க்காடு மாவட்டம், ஆம்பூரிலுள்ள அரசு மருத்துவ மனைக்குப் புதிய கட்டிடங்களை கட்டுவதும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூரில் 10 படுக்கைகள் கொண்ட புதிய மருத்துவ மனை கட்டுவதும், மதுரை மாவட்டம், கோடைக்கானலில் உள்ள அரசு மருத்துவ மனையில் 6 படுக்கைகள் கொண்ட பிரிவைக் கட்டுவதும் முடியும் தருவாயில் உள்ளன.

கோயம்புத்தூர் மாவட்டம், கோட்டூரில் உள்ள அரசு மருத்துவ மனையில் 10 படுக்கைகள் கொண்ட பிரிவு ஒன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன மருத்துவ மனையில் 10 படுக்கைகள் கொண்ட கூடுதல் பிரிவு ஒன்றைக் கட்டும் பணி பொதுப்பணித் துறையினால் மேற்கொள்ளப் படும்.

கீழ்க்கண்ட இடங்களில் புது மருத்துவ மனைகள் கட்டும் பணி நடந்தேறி வருகின்றது :

1. செங்கற்பட்டு மாவட்டம், தாம்பரத்தில் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை.

2. ராமநாதபுரம் மாவட்டம், தேவக்கோட்டையில் 50 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை.

3. மதுரை மாவட்டம், தேனியிலும், இராமநாதபுரம் மாவட்டம், சிங்கம்புணரியிலும் 32 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை.

4. இராமநாதபுரம் மாவட்டம், பாகநேரியில் 10 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை.

## கட்டிடத் திட்டங்கள்.

1969–70-இல் கீழ்க்கண்ட கட்டிடங்களைக் கட்டுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது :—

| | செலவு. ரூ. |
|---|---|
| 1. சேலத்தில் பொதுச் சுகாதார ஆய்வுக்கூடம் கட்டுதல் .. | 66,000 |
| 2. இராமநாதபுரம் மாவட்டம், சிங்கம்புணரியில் 32 படுக்கைகள் கொண்ட புதிய மருத்துவ மனை கட்டுதல். | 9,00,000 |
| 3. காஞ்சிபுரத்தில் அறிஞர் அண்ணு புற்றுநோய் நிலையத்திற்குக் கட்டிடங்கள் கட்டுதல். | 5,00,000 |
| 4. மதுரை மாவட்டம், திண்டுக்கல்லில் உள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையிலும், தஞ்சாவூர் மாவட்டம், நாகப்பட்டினத்திலுள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையிலும் மேக நோய் சிகிச்சை நிலையம் கட்டுதல். | 80,000 (ஒவ்வொன்றுக்கும்) |
| 5. செங்கற்பட்டு மாவட்டம், காஞ்சிபுரத்திலுள்ள ஒவ்வொன்றுக்கும் தலைமையிட மருத்துவ மனையில் பொதுச் சுகாதார ஆய்வுக் கூடம் கட்டுதல். | 66,000 |

## 1970–71.

கீழ்க்கண்ட கட்டிடப் பணிகள் 1969–70-ஆம் ஆண்டின் இறுதியில் மேற்கொள்ளப்பட்டு 1970–71-இல் தொடர்ந்து நிறைவேற்றப்படும் :—

1. செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகத்திலுள்ள அரசு மருத்துவ மனையில் 24 படுக்கைகள் கொண்ட பிரிவு ஒன்று கட்டுதல்.

2. தென் ஆர்க்காடு மாவட்டம், விருத்தாசலத்தில் மகப்பேறு அறுவை சிகிச்சை நிலையம் கட்டுதல்.

3. தென் ஆர்க்காடு மாவட்டம், திண்டிவனத்தில் அரசு மருத்துவ மனைக்குக் கூடுதலாகக் கட்டிடங்கள் கட்டுதல்.



4. திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூரில் கூடுதலாகக் கட்டிடங்கள் கட்டுதல்.

5. உதகமண்டலத்தில் "சேட்" நினைவு மருத்துவ மனையில் 30 படுக்கைகள் கொண்ட பிரிவு ஒன்று கட்டுதல்.

6. கோயம்புத்தூர் மாவட்டம், பவானியில் 32 படுக்கைகள் கொண்ட புதிய மருத்துவ மனை கட்டுதல்.

7. புதுக்கோட்டையில் மேக நோய் தனி மருத்துவ மனை கட்டுதல்.

8. செங்கற்பட்டு மாவட்டம், திருத்தணியில் 32 படுக்கைகள் கொண்ட புதிய மருத்துவ மனை ஒன்று கட்டுதல்.

9. இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரையில் 50 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை ஒன்றைக் கட்டுதல்.

## புதிய நிலையங்கள்.

(1) மதுரை மாவட்டம், ஒட்டன்சத்திரம் கிராமத்தில் 20 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவ மனையைத் தொடங்குவதற்கும், (2) திருச்சிராப்பள்ளி மாவட்டம், வேலாயுதம்பாளையத்தில் அரசு மருத்துவ மனையைத் தொடங்குவதற்கும், (3) அரிசன நலத் திட்டத்தின்கீழ் தர்மபுரி மாவட்டத்தில் வலம்வரும் மருத்துவப் பிரிவு ஒன்றைத் தொடங்குவதற்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

## நீராவிச் சலவைச் சாலைகளை ஏற்படுத்துதல்.

மதுரையிலுள்ள அரசு எர்ஸ்கின் மருத்துவ மனையிலும், தாம்பரத்தில் அரசு காச நோய் நலம் பேண் நிலையத்திலும், தஞ்சாவூரிலுள்ள அரசு தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலும், சேலத்திலுள்ள அரசுத் தலைமையிட மருத்துவ மனையிலும் நீராவிச் சலவைச் சாலை அமைப்பதற்கான செயற்குறிப்புகளுக்கு அரசு இசைவளித்தது.

## எக்ஸ் கதிர் நிலையம்.

1969–70-இல் கீழே குறிப்பிட்டுள்ளபடி கூடுதலாக எக்ஸ் கதிர் நிலையங்களை அமைப்பதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியது :—

| | | |
|---|---|---|
| 1. | அரசு எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை | 300 கிலோவாட் எக்ஸ் கதிர் சிகிச்சைப் பிரிவு. |
| 2. | ௸ | 30 மெகவாட் வலம்வரும் எக்ஸ் கதிர் பிரிவு. |
| 3. | அரசு காச நோய் நலம் பேண் நிலையம், தாம்பரம். | "கன்வேயர்" இணைப்புடன் கூடிய 200 மெகவாட் எக்ஸ் கதிர் பிரிவு. |
| 4. | அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை. | 100 மெகவாட் வலம்வரும் எக்ஸ் கதிர் பிரிவு. |
| 5. | அரசு பொது மருத்துவமனை, சென்னை. | எளிதில் இடம் பெயரத் தக்க மூன்று 30 மெகவாட் எக்ஸ் கதிர் பிரிவுகள். |
| 6. | அரசு பெண்கள், குழந்தைகளுக்கான கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனை, சென்னை. | இடம் பெயரும் 30 மெகவாட் எக்ஸ் கதிர் சாதனம். |

## செவிலியர் பணி.

### கூடுதல் செவிலியர் நியமனங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கல்.

செவிலியர் பணியை மேம்படுத்தும் பொருட்டு 1969–70-இல் அரசு மருத்துவ நிலையங்களில் (கல்வி) கீழே குறிப்பிட்டுள்ளபடி கூடுதல் செவிலியர் பதவிகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

| | |
|---|---|
| தலைமைச் செவிலியர் .. .. .. .. .. | 1 |
| செவிலியர் .. .. .. .. .. .. | 50 |
| II-ஆம் தரத்தில் மின்முறை-இயன்முறை மருத்துவர். | 1 |

தேவைக்கு மேற்பட்டு 50 II-ஆம் தர செவிலியர் கண்காணிப்பாளர் பதவிகளுக்கும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

### செவிலியர் கல்லூரி.

செவிலியர் பணியில் அறிவியல் பட்டப்படிப்புப் பாட முறையை நடத்துவதற்கு சென்னையிலுள்ள சென்னை மருத்துவக் கல்லூரியில் 1967-ஆம் ஆண்டில் செவிலியர் கல்லூரி ஒன்று துவக்கப்பட்டது.

### செவிலியர் பயிற்சி.

கீழே குறிப்பிட்டுள்ளபடி நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கூடுதலாக 450 பேர் செவிலியர் பயிற்சி பெற அனுமதிக்கப்பட்டனர்:—

| சேர்த்துக்கொள்ளப் பட்டவர்களின் எண்ணிக்கை. | சேர்த்துக் கொள்ளப்பட்ட நாள். | பயிற்சி முடிக்கப்பெற்ற நாள். |
|---|---|---|
| 171 | 1–1–1968 | 30–6–1969. |
| 140 | 1–7–1966 | 31–12–1969. |
| 139 | 1–1–1967 | 30–6–1970. |

1968-ம் வருடம் ஜனவரி மாதம் 1-ம் தேதி முதல், ஒவ்வொரு அரை ஆண்டுக்கும் 150 பேர், அதாவது, ஆண்டொன்றுக்கு 300 பேர் என்ற வீதத்தில் செவிலியர் பயிற்சிக்கு அனுமதிக்கப்படுவர்.

### மின்முறை-இயன் முறை மருத்துவப் பயிற்சி.

சென்னையிலுள்ள அரசு பொது மருத்துவ மனையில் மின்முறை-இயன் முறை மருத்துவப் பயிற்சிப் பாடமுறைக்கென ஒவ்வொரு ஆண்டும் 12 மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்குப் பதிலாக 10 மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு 1967-இல் அரசு அனுமதித்தது. இப் பயிற்சிக் கால அளவு இரண்டு ஆண்டிலிருந்து 3 ஆண்டுகளாக நீட்டிக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் 10 மின்முறை-இயன் முறை மருத்துவர்கள் தேர்ச்சி பெறுகின்றனர்.

### துணைச் செவிலியர்-மருத்துவச்சிகள் பயிற்சி.

இப் பயிற்சிக்கு ஆண்டு தோறும் 265 மாணவிகள் சேர்த்துக்கொள்ளப் படுகின்றனர். பயிற்சிக் கால அளவு இரண்டு ஆண்டுகளாகும். முறையாக, சுமார் 250 துணைச் செவிலியர்-மருத்துவச்சிகள் தேர்ச்சி பெறுவதைத் தவிர நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் கூடுதலாக 600 துணைச் செவிலியர்-மருத்துவச்சிகள் தேவைப்படுவர் என்று எதிர்ப்பார்க்கப்பட்டது. எதிர் பார்த்தபடி, தேவையான துணைச் செவிலியர்-மருத்துவச்சிகள் பதவிகள் ஏற்படுத்தப்படவில்லை. எனவே, மேற்கொண்டும் பயிற்சியளிக்கும் நிலையங்கள் எதுவும் தொடங்கப்படவில்லை.





### புதிய மருத்துவக் கல்லூரிகளை ஏற்படுத்தும் திட்டம்.

கோயம்புத்தூர், திருநெல்வேலி, செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரிகளில் வழக்கமாக எம்.பி.பி.எஸ். வகுப்புக்கு ஆண்டுதோறும் முறையே 100 பேர்களும் 75 பேர்களும், 50 பேர்களும் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். செங்கற்பட்டு, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்ட முதற் தொகுதி மாணவர்களுக்கு வழக்கமான எம்.பி.பி.எஸ். இறுதி வகுப்பு 1970-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதி முதல் தொடங்கப்பட்டது. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் 1968-இல் முதல் ஆண்டு ஒருங்கிணைப்பு எம்.பி.பி.எஸ். வகுப்பு தொடங்கப்பட்டது போன்று செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியிலும் முதல் ஆண்டு ஒருங்கிணைப்பு எம்.பி.பி.எஸ். வகுப்பு 1969-இல் தொடங்கப்பட்டது. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியிலும் 1970 ஜூலை முதல் ஒருங்கிணைப்பு எம்.பி.பி.எஸ். வகுப்பு தொடங்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த 150 மாணவர்களுக்கு சுமார் ரூ. 8 லட்சம் செலவில் கூடுதலாக விடுதி வசதி அளிப்பதற்கு 1969–70-ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. விடுதி கட்டும் பணியும் 1970 ஜூன் திங்கள் இறுதிக்குள் முடிவடையுமென்று எதிர் பார்க்கப்படுகிறது.

திருநெல்வேலி, செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி முதற் தொகுதி மாணவர்கள் 1970 டிசம்பர் திங்களில் எம்.பி.பி.எஸ். இறுதித் தேர்வு எழுதுவர். தற்போது கட்டப்பட்டு வரும் கட்டிடங்களைத் தொடர்ந்து மூன்று புதிய மருத்துவக் கல்லூரிகளுக்கான கட்டிடங்கள் கட்டும் பணி மேற் கொள்ளப்படும்.

### இந்திய மருத்துவ முறை.

பாளையம்கோட்டையிலுள்ள இந்திய மருத்துவ முறைக் கல்லூரி, சித்த மருத்துவ முறையில் பயிற்சி பெறுவதற்காக தொடர்ந்து ஆண்டு தோறும் 30 மாணவர்களைச் சேர்த்துக்கொள்கிறது. இந்திய மருத்துவ முறைக்கென (ஆயுர்வேத, யூனானி, சித்த மருத்துவம்) சென்னை, அரும்பாக்கத்தில் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை ஒன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இது விரைவில் செயல்படத் தொடங்கும்.

இந்திய மருத்துவ முறைக்கென தனியாக ஒரு இயக்குநர் அலுவலகம் அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

நாட்டு மருத்துவ முறையில் பயன்படுத்தப்படும் நாட்டு மருந்துகளைத் தரப்படுத்துவதற்கான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு வருகிறது. இது குறித்து முதல் நடவடிக்கையாக, சென்னை மாநிலக் கல்லூரியிலுள்ள தாவர இயல், இரசாயன இயல் துறைகளிலும், சென்னை மருத்துவக் கல்லூரியின் மருந்து இயல், மருத்துவம்-ஆராய்ச்சித் துறைகளிலும் கிடைக்கிற வசதிகளைப் பயன்படுத்தி மருத்துவ இரசாயன ஆராய்ச்சிப் பிரிவின் முன்னோடித் திட்டம் ஒன்று 1969-ஆம் ஆண்டு இறுதியில் தொடங்கப்பட்டுள்ளது. இம் முன்னோடித் திட்டம் படிப்படியாக ஒரு மருத்துவ இரசாயன ஆராய்ச்சி நிலையமாக வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### பணியிலுள்ளபோது இறக்க நேரிடும் அரசு பணியாளர்களின் குடும்பத்தினருக்கு இலவச மருத்துவச் சலுகைகள் அளித்தல்.

பணியிலுள்ளபோது அரசு பணியாளர் ஒருவர் இறக்க நேரிட்டால் அவர், பணியிலிருந்து ஓய்வு பெறும் வயதை அடைந்திருக்கக்கூடிய கால அளவு வரை அவரையே சார்ந்து வாழ்பவர்களுக்கு இலவச மருத்துவச் சலுகைகளை நீட்டிப்பதற்கு அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான செயற்குறிப்புகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

## தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம்.

1948-ஆம் ஆண்டு தொழிலாளர் நல ஈட்டுறுதிச் சட்டத்தையொட்டி தமிழ் நாட்டில் 1955 ஜனவரி தொடக்கத்தில் செயல்படுத்தப்பட்ட தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம், தற்போது இம் மாநிலத்தில் தென் ஆர்க்காடு, தருமபுரி, நீலகிரி மாவட்டங்களைத் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் செயலில் உள்ளது. இத் திட்டம், மாநிலத்தில் பெரும்பாலான பெரிய தொழில் பகுதிகளைக் கொண்ட 33 இடங்களில் தற்போது செயலில் உள்ளது. 10,127 ஈட்டுறுதி செய்து கொண்டவர்கள், 3,46,447 குடும்பத்தினர் அடங்கிய 13,95,915 பேர்களுக்குப் பயனளிக்கும் பொருட்டு அரசுக்குச் சொந்தமான 85 அரசு மருந்தகங்கள், ஒன்பது வலம் வரும் மருந்தகங்கள், தொழிலாளர் பயனுக்கான 5 மருந்தகங்கள், மூன்று பகுதி நேர தனி மருத்துவ மனைகள், மாநில முழுவதும் அமைக்கப் பட்டுள்ளன.

இம் மாநிலத்தில் ஈட்டுறுதி செய்துகொண்டுள்ள தொழிலாளர்கள் அனைவரும் முழுமையான மருத்துவ வசதிகளைப் பெற்று வருகின்றனர். சென்னை, கோயில்பட்டி பகுதியிலுள்ள ஈட்டுறுதி செய்துகொண்டவர்களின் குடும்பத்தினரும், மருத்துவமனையில் தங்கி மருத்துவ வசதி பெறுவது உட்பட முழுமையான மருத்துவ வசதியைப் பெறுகின்றனர். இத் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ள ஏனைய பகுதிகளில் ஈட்டுறுதி செய்து கொண்டவர்களின் குடும்பத்தினருக்கு விரிவான மருத்துவ வசதி அளிக்கப் படுகிறது. (அதாவது, மருத்துவ மனையில் தங்கி மருத்துவ வசதி பெறுவதற்கு குறைந்த வசதிகள்) தற்பொழுது தூத்துக்குடி, விக்கிரமசிங்கபுரம் பகுதிகளில் ஈட்டுறுதி செய்து கொண்டவர்களுக்கு மட்டும் முழுமையான மருத்துவ வசதியளிக்க இத் திட்டம் செயலுக்குக் கொண்டுவரப் பட்டுள்ளது. இப்பகுதியிலுள்ள ஈட்டுறுதி செய்துகொண்டவர்களின் குடும்பத்தினருக்குக் கூடிய விரைவில் மருத்துவ வசதிகளை நீட்டிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1969-70-ஆம் ஆண்டில் தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டங்களின் மூலம் 1969-ஆம் ஆண்டு ஏப்ரல் 13-ஆம் நாளிலிருந்து கோயம்புத்தூரிலும், அதன் புறநகர்ப் பகுதிகளிலும் 1969-ஆம் ஆண்டு ஜூன் 3-ஆம் நாளிலிருந்து மதுரையிலும் ஈட்டுறுதி செய்து கொண்டவர்களின் குடும்பத்தினருக்கு மருத்துவ வசதிகள் அளிக்கப்பட்டன. இதனால் சுமார் 91,712 ஈட்டுறுதி செய்து கொண்டவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த 366,848 பேர்கள் இத்திட்டத்தின்கீழ் விரிவாக்கப்பட்ட மருத்துவ வசதிகளைப் பெறுவார்கள். ஈட்டுறுதி செய்து கொண்டவர்களின் குடும்பத்தினருக்கு அளிக்கப்படும் மருத்துவ வசதியைப் பெருக்குவதற்காக கோயம்புத்தூரில் அப்பொழுது செயலிலிருந்த பெயர்ப்பட்டியல் முறை நீக்கப்பட்டது. மருத்துவம், மருத்துவம் சார்ந்த ஏனைய பணியாளர்கள் முதலிய எல்லா வசதிகளுடன் கூடிய 14 புதிய தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகங்கள் கீழ்க்கண்ட இடங்களில் திறக்கப்பட்டன. அந்த இடங்களில் முன்பே அமைக்கப்பட்ட ஏழு மருந்தகங்களின் தரம் உயர்த்தப்பட்டது.

இருகூர், குணியமுத்தூர், இராமநாதபுரம், துதியலூர், பீளமேடு, ஆர். எஸ். புரம், சூலூர், போதனூர், பாப்பான் சிக்கன்பாளையம், கணபதி, பெரியநாய்க்கன்பாளையம், காட்டூர், செல்வபுரம், மதுக்கரை.

மதுரைப் பகுதியில் முன்பே தொடங்கப்பட்ட எட்டு தொழிலாளர் அரசு, ஈட்டுறுதி மருந்தகங்களும் (நிலையான, வலம் வரும் மருந்தகங்களும் உள்பட) ஈட்டுறுதி செய்து கொண்ட தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு மருத்துவ வசதிகள் அளிப்பதற்குக் கூடுதல் பணியாளர்களை வேலைக்கமர்த்தி அவைகள் தரமுயர்த்தப்பட்டன. ஈட்டுறுதி செய்து கொண்ட தொழிலாளர்களின் குடும்பங்களுக்குச் சிறப்பு மருத்துவ வசதிகள் அளிப்பதற்காக மருத்துவம், அறுவை சிகிச்சை, காச நோய், கண், காது, மூக்கு, தொண்டை, தோல் நோய், கண்நோய், மகளிர் நோய்க்





குறியியல், குழந்தை நோய் முதலிய துறைகளில் தேர்ச்சி பெற்ற முழு நேர தனித்துறை வல்லுநர்கள், சிவில் மருத்துவர்கள் தரத்தில் கோயம்புத்தூர் பகுதியிலும், மதுரையில் 11 பகுதி நேர தனித் துறை வல்லுநர்களும் வேலைக்கமர்த்தப்பட்டனர்.

1969-70-ம் ஆண்டில் வட ஆர்க்காடு மாவட்டம், ஆரணி பகுதியிலும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் செயல்படுத்தப்பட்டது. ஈட்டுறுதி செய்து கொண்ட தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் மருத்துவ வசதியளிக்க மருந்தகம் ஒன்று திறக்கப்பட்டது.

சென்னை அயன்புரத்தில், 625 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனை ஒன்று (எல்லா வசதிகளுடன் கூடியது) தொழிலாளர் நல ஈட்டுறுதிப் பிணியாளர்களின் நிர்வாகப் பயனுக்கென்று செயல்பட்டு வருகிறது. கோயம்புத்தூரில் 500 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனை ஒன்று பெரும்பாலும் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. மதுரையில் தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனையைச் செயல்படுத்துவதற்காக மதுரையில் உள்ள தொற்று நோய் மருத்துவமனைக் கட்டிடங்கள் தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகத்திற்கு விரைவிலேயே மாற்றப்படும்.

## தொழு நோய்க் கட்டுப்பாட்டுப் பணி.

தொழு நோய் பீடிக்கப்பட்டவர்களுக்கு அவர்கள் வீட்டிலேயே "சல்போன்" மருந்து கொண்டு மருத்துவ சிகிச்சை அளித்தல், தொழு நோய் எந்த அளவிற்குப் பரவியுள்ளதென்பதைப் பொது மக்களின்மீது பொதுவான ஆய்வின் மூலம் கண்டறிதல், தொழு நோய் கண்டவர்கள் வீட்டிலிருப்பவர்களின் சுகாதாரம் பற்றி அடிக்கடி சோதனை செய்தல், பொதுமக்களுக்குத் தொழு நோய் பற்றி அறிவுரை வழங்குதல் ஆகிய மூன்று கோட்பாடுகளின் அடிப்படையில் இம்மாநிலத்தில் 1969-70-ஆம் ஆண்டில் தொழு நோய்க் கட்டுப்பாட்டுச் செயல் திட்டம் மேற்கொள்ளப் பட்டது.

இந்த ஆண்டில் கீழ்க்கண்ட பிரிவுகளுக்கு அரசு ஏற்பளிப்பு வழங்கியதால், இச் செயல் திட்டத்தில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது :—

(அ) சேலம் மாவட்டம், ராசிபுரத்தில் ஒன்றும், வட ஆர்க்காடு மாவட்டம் அரக்கோணத்தில் ஒன்றுமாக இரண்டு தொழு நோய்க் கட்டுப்பாடு பிரிவுகள்.

(ஆ) மதுரை மாவட்டத்தில் ஒருங்கிணைந்த தொழு நோய் கட்டுப் பாட்டுப் பணித் திட்டம்.

(இ) இம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் 32 ஆய்வு-கல்வி பயிற்சிப் பிரிவுகள்.

மேற்கூறப்பட்டுள்ள புதிய பிரிவுகளை ஏற்படுத்துவதற்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பளிப்புடன், முழுமுர தொழு நோய்க் கட்டுப்பாட்டுப் பணியின் மூலம் சுமார் 14·8 லட்சம் மக்கள் கூடுதலாகப் பயனடைவர். இதனால் மொத்தம் 78·8 லட்சம் மக்கள் இத் திட்டத்தின் கீழ் பயன்பெறுவர். மற்றும் 30,000 தொழு நோய் பிணியாளர்களும் கூடுதலாக மருத்துவ வசதி பெறுவர். இதனால் மொத்தம் 2·1 லட்சம் தொழு நோய்ப் பிணியாளர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படும். எனவே, இந்த ஆண்டின் இறுதிக்குள் தொழு நோய்க் கட்டுப்பாட்டு தேசியத் திட்டத்தின் கீழ் மொத்த மக்கள் தொகையில் சுமார் 25 சதவீதத்தினருக்கும், இம்மாநிலத்தில் உள்ளதாக மதிப்பிடப்படுகிற தொழு நோய் பிணியாளர்களில் 30 சதவீதத்தினருக்கும் மருத்துவ வசதி அளிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

1970–71-ஆம் ஆண்டைப் பொறுத்த வரையில், இரண்டு தொழு நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவுகளும், தொழு நோய்க் கட்டுப்பாட்டுத் துணை நிலையத்தைத் தொழுநோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவாக மாற்றும் செயற் குறிப்புகளும் பரிசீலனையில் உள்ளன. எனவே, 1970–71 இறுதிக்குள் திட்டக் குறிக்கோள் அளவான 25 தொழு நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவுகளில் நான்கு பிரிவுகள் ஏற்படுத்தப்படும் என்றும், இரண்டு துணை நிலையங்கள் தொழு நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவுகளாக மாற்றப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

### காச நோய்.

மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டு விரிவான காச நோய்ப்பணிக்கு ஒரு நிறுவனத்தை மேம்பாடு செய்துள்ளதே காச நோய்க்கட்டுப்பாட்டுப் பணியின் குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும். இது மாவட்டக் காச நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம் என அழைக்கப்படுகிறது. இந் நோய் பரவும் தன்மையையும், இதன் சமூகவியல் தன்மையையும் பற்றி நடத்திய ஆய்வுகளின் அடிப்படையிலும், நாடு முழுவதற்கும் பொருந்தும் நோய்க் கண்டறியும் முறைகள், சிகிச்சைப் பணிகள் இவற்றின் அடிப்படையிலும் பங்களூர் தேசிய காச நோய்க் கட்டுப்பாட்டு நிறுவனத்தில் மாவட்டத் திட்டம் வகுக்கப் பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் 13 காச நோய் நலம்பேண் நிலையங்களும், பொது மருத்துவ மனைகளில் 25 காச நோய் மருத்துவப் பிரிவுகளும், 24 காச நோய் தனி மருத்துவமனைகளும் உள்ளன. இம்மாநிலத்தில் காச நோயாளிகளுக்கு 3,351 படுக்கைகள் உள்ளன. இவைத்தவிர இம்மாநிலத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தரமுயர்த்தப்பட்ட மாவட்ட காச நோய்ச் சிகிச்சை நிலையம் ஒன்று உள்ளது. இம்மாநிலத்திலுள்ள 14 மாவட்டங்களிலும் தரமுயர்த்தப்பட்ட காச நோய் சிகிச்சை நிலையங்களைப் பேணி வருவதன் வாயிலாகவும், பி.ஸி.ஜி. ஊசி போடும் பணியை மாவட்ட வேலைத் திட்டத்துடன் இணைத்திருப்பதன் வாயிலாகவும், தமிழ் நாடு இத்துறையில் இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களைவிட முன்னணியில் நிற்கிறது. காச நோய் தேசீய நிறுவனத்தில் பயிற்சி பெற்ற முக்கியப் பணியாளர்கள் மாவட்டக் காசநோய் நிலையங்கள் அனைத்திலும் பணியாற்றி வருகின்றனர். 13 பி.ஸி.ஜி. தொகுதியினர் மாநிலத்தின் மூலை முடுக்குகள் எல்லாவற்றிலும் வீடுவீடாகச் சென்று ஊசி போட்டு வருகின்றனர். வெளியூர்களிலே மாவட்ட காச நோய் சிகிச்சை நிலையம் செயலாற்றுவதைப் போலவே சென்னை மாநகரில் அரசு காச நோய் கட்புல விளக்கப் பயிற்சி நிலையம் செயல்பட்டு வருகிறது.

சென்னை மாநகரத்தில் உள்ள அரசு மகப்பேறு மருத்துவமனைகள் மூன்றில் பிறக்கும் குழந்தைகளுக்கும், அம்மருத்துவமனைகளில் குழந்தை மருத்துவத் துறைக்குச் சிகிச்சைக்கு வரும் குழந்தைகளுக்கும் (நேர்முக) பி. ஸி. ஜி. ஊசி போடப்பட்டது. மற்ற மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளுக்கும் இந்த வேலைத் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. 1965-லிருந்து 1969 ஜூன் திங்கள் முடிய 2,24,194 பிறந்த குழந்தைகளுக்கு ஊசி போடப்பட்டது. எல்லா மாவட்டக் காச நோய் சிகிச்சை நிலையங்களும் அந்தந்த மாவட்டங்களில் பல துணை நிலையங்களைத் தொடங்கியுள்ளன. 30–6–1969 அன்றுள்ளபடி, 655 துணை நிலையங்கள் உள்ளன. அவைகளில் 418 துணை நிலையங்களில் நுண்ணோக்காடி (Microscope) வசதி உள்ளது.

பெருமளவில் பி.ஸி.ஜி. ஊசி போடும் இயக்கத்தின் ஆரம்பத்திலிருந்து மொத்தம் 111,78,645 பேருக்கு காச நோய் சோதனையும், 59,32,408 பி.ஸி.ஜி. ஊசி போடுதலும் மேற்கொள்ளப்பட்டன. (அதாவது 1954 அக்டோபரிலிருந்து 1969-ம் ஆண்டு ஜூன் திங்கள் முடிய) மாவட்டக்



காச நோய் சிகிச்சை நிலையத்துடன் பி.ஸி.ஜி. ஊசி போடும் இயக்கம் ஒருங்கிணைந்த பிறகு, அதாவது 1965-ம் ஆண்டிலிருந்து 1969-ம் ஆண்டு ஜூன் திங்கள் முடிய 28,40,602 பேர்களுக்கு ஊசி போடப் பட்டுள்ளது. காச நோய் கண்டுள்ளதாகக் கண்டு பிடிக்கப்பட்டு, பல்வேறு மாவட்டக் காச நோய் சிகிச்சை நிலையங்களில் 1969-ம் ஆண்டு ஜூன் திங்கள் முடிய "நோய் கண்டோர் பட்டியலில்" சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2,17,059 ஆகும்.

தர்மபுரியில் தேவையான பணியாளர் முதலிய வசதிகளுடன் மாவட்டக் காச நோய் சிகிச்சை நிலையம் ஒன்று நிறுவுவதற்கு 1969 ஜூன் திங்களில் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

### சுகாதாரக் கல்வியும், பிரசாரமும்.

காச நோய் தேசீயத் திட்டத்தின் கீழ், தலைமையிடத்தைச் சென்னையிலும், மதுரையிலும் கொண்ட இரண்டு விளம்பரப் பிரிவுகள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு பிரிவும், ஒரு விளம்பர அதிகாரி, ஒரு திரைப்படம் இயக்குபவர், ஒரு வலவர், ஒரு ஏவலர் ஆகியோரைக் கொண்டுள்ளது. சென்னையில் தலைமையிடத்தைக் கொண்ட விளம்பரப் பிரிவு, திருச்சிராப்பள்ளி, சேலம், தருமபுரி, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், செங்கற்பட்டு, சென்னை மாநகரம் ஆகிய இடங்களில் பிரசாரப்பணியையும் விளம்பரப் பணியையும் செய்து வருகின்றன. இரண்டாவது பிரிவு மற்ற மாவட்டங்களுக்குச் செல்கிறது. பொது இடங்களிலும், பள்ளிக்கூடம் போன்ற நிறுவனங்களிலும் தொடர்பு கொள்ளுதல் மூலமும், கூட்டம் கூட்டி விவாதித்தல் மூலமும், படக் காட்சிகளின் மூலமும் முன் கூட்டியே விளம்பரமும், பிரசாரமும் செய்யும் பணி விளம்பரப் பிரிவுகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நேர்முக பி.ஸி.ஜி. ஊசியை 0—6 வயது வரையுள்ள குழந்தைகளுக்குப் போட வேண்டிய அவசியத்தைப் பெற்றோர்கள் உணருமாறு செய்ய வேண்டியது தேவையாதலாலும் பொது மக்களின் நம்பிக்கையின் பேரில்தான், இத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்பட முடியுமாதலாலும், பிரசார அதிகாரிகள் மாவட்டங்களுக்கு வரும்போதெல்லாம் அவர்களின் பணி முழுமையாக பயன் படுத்தப்படுகிறது. பி.ஸி.ஜி. ஊசி போடும் பணியை ஊக்க மூட்டுவதற்கு மட்டுமல்லாது சிகிச்சைப் பணி, ஊசி போட்டுக் கொள்ளாதவர்களுக்கு ஊசி போடுதல், பொது அறிவுரை வழங்குதல் முதலியவற்றுக்காகவும் அவர்களின் பணி பயன்படுத்தப்படுகின்றது.

### புற்றுநோய்த் தடுப்பு முன்னோடித் திட்டம்.

உலகச் சுகாதார நிறுவனம், அனைத்து நாடுகள் மேம்பாட்டிற்கான நார்வே நாட்டு ஏஜென்ஸி உடனுழைப்புடன் காஞ்சிபுரத்தில் புற்று நோய் தடுப்பு முன்னோடித் திட்டம் தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டம் குறித்த செயல்முறைத் திட்டத்தில் இந்திய அரசும் உலகச் சுகாதார நிறுவனமும் கையொப்பமிட்டுள்ளன. 1968 டிசம்பர் திங்களில் இந்தச் செயல் திட்டத்தை முன்னதாக ஆய்வு செய்வதற்கும் செயல் படுத்துவதற்கும் தேவையான ஆணைகள் அரசால் பிறப்பிக்கப்பட்டன.

21–3–1969-ல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், காஞ்சிபுரத்தில் அறிஞர் அண்ணா நினைவுப் புற்றுநோய் நிறுவனத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இந்நிறுவனத்திற்கான சிவில் மருத்துவ அதிகாரி, இளநிலை மருத்துவ அதிகாரி, வீடுகளுக்குச் சென்று மருத்துவம் பார்ப்பவர்கள், ஆலோசனை உதவியாளர்கள், செவிலியர்கள், புள்ளிவிவரம் தயாரிப்பவர்கள் முதலியோர் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர்.

அனைத்து நாடுகள் மேம்பாட்டிற்கான நார்வே நாட்டு ஏஜென்ஸி கட்டிடங்கள், மருத்துவக் கருவிகள், வண்டிகள் உள்பட மற்ற பொருள்கள் வழங்குவதற்காகவும் ஆகும் மூலதனச் செலவிற்காக 1 மில்லியன் N.K.R. வழங்கியுள்ளது. ஐந்தாண்டுக் கால அளவில், கருவிகள் பேணுதலுக்காக கூடுதல் தொகையையும் அவர்கள் வழங்குவர். முதலாவது ஆண்டில் 70,000 N.K.R.-ல் தொடங்கி, அடுத்தடுத்த ஆண்டுகளில் இத் தொகையிலிருந்து 20 சதவீதம் குறைத்துக் கொள்ளப்படும்.

உலகச் சுகாதார நிறுவனம் ஐந்தாண்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் 20,000 டாலர்கள் உதவி மானியம் வழங்க இசைவளித்துள்ளது. மற்றும், இந் நிறுவனம் தேவையாயிருக்கும் அளவிற்கு உலகச் சுகாதார நிறுவனப் பட்டம் பெற விரும்புவோருக்கு ஆதரவு ஊதியம் (Fellowship) அளிக்கவும் ஒப்புக்கொண்டுள்ளது.

அனைத்து நாடுகள் மேம்பாட்டிற்கான நார்வே நாட்டு நிறுவனத்தின் உதவியைத் தொடர்ந்து, உலகச் சுகாதார நிறுவனமும், 10,00,000 N. K. R.-க்கு (ரூ. 11,00,000-க்கு சமம்) மேற்படாமல் கட்டிடங்கள்; மருத்துவக் கருவிகள் முதலியவற்றிற்காகும் மூலதனச் செலவிற்காக நன்கொடை வழங்கியது.

பொதுப்பணித்துறை, ஆய்வு மாளிகையையும் அதன் சுற்று சுவருக்குள் இருக்கும் இடத்தையும் காஞ்சிபுரம் புற்றுநோய் நிலையம் தொடங்கப்படுவதற்கென மருத்துவத் துறைக்கு மாற்றும்படி அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

மொத்தம் ரூ. 11 லட்சம் செலவில் கட்டிடங்கள் கட்டுவதற்கான திட்டங்களும் மதிப்பீடுகளும் வந்துள்ளன. அவை குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | ரூபாய். |
|---|---|
| 1. மருத்துவமனைக் கட்டிடங்கள் .. .. .. .. | 5,00,000 |
| 2. குடியிருப்புக் கட்டிடங்கள் .. .. .. .. | 3,89,000 |
| 3. பல்வகைப் பணிகள் .. .. .. .. .. | 1,45,000 |
| 4. மேஜை, நாற்காலிகள் வழங்குதல் .. .. .. | 66,000 |
| மொத்தம் .. | 11,00,000 |

ரூ. 5,00,000 செலவில் (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) மருத்துவ மனைக் கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

### மருந்துகள் கட்டுப்பாடு நிர்வாகம்.

மருந்துகள் கட்டுப்பாட்டு அதிகாரி நீங்கலாக பிற பணியாளர்களைப் பேணுதலுக்கான ஆண்டுச் செலவு சுமார் ரூ. 2,85,704 ஆகும். 1940-ம் ஆண்டு மருந்துகள், ஒப்பனைப்பொருள்கள் சட்டத்தின்கீழ் உரிமம் வழங்குவதன் மூலம் கிடைக்கக்கூடிய ஆண்டு வருவாய் ரூ. 2,61,717 ஆகும்.

மருந்துகள் கட்டுப்பாட்டுக் குழு ஒன்றால் பரிந்துரைக்கப்பட்ட புதிய திட்டத்திற்காக, ஏற்கனவே இந்திய அரசு குறிப்பிட்டதற்கிணங்க, கருவிகளுக்கும் ஏனைய மூலதனச் செலவுகளுக்கும் முறையே 100 சத வீதத்திலும் 75 சத வீதத்திலும் மத்திய உதவியளிக்க ஒப்பளிப்பு வழங்க வேண்டுமென இந்திய அரசிடம் மாநில அரசு கேட்டுள்ளது.





### மருத்துவ மானியங்களும், கடன்களும்.

அரசு மருத்துவ நிறுவனங்களல்லாத பிற நிறுவனங்களுக்கு (தனியார் மருத்துவ நிறுவனங்களும், உள்ளாட்சி மருத்துவ நிறுவனங்களும்) அவற்றின் பேணுதல் செலவிற்காகவும் கட்டிடங்கள், கருவிகளுக்காகும் செலவுகளுக்காகவும் அரசு மானியங்களை வழங்கி வந்துள்ளது. இதற்கென 1970-71-ல் ரூ. 17·70 லட்சம் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

நடப்பாண்டில் கீழ்க்கண்ட புதிய மானிய இனங்களுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது:—

(i) அடையாறு, சுகாதாரத் தொண்டு நிறுவனத்துக்கு (Voluntary Health Service) நிலம் கையகப்படுத்துவதற்காக ரூ. 42,347·75-க்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

(ii) சென்னை, அடையாறு புற்றுநோய் சிகிச்சை நிறுவனத்தால் ஆற்றப்பட்ட பணிகளுக்கு ஏற்பளிக்கிற வகையிலும், அவர்களால் மேற்கொள்ளப்படும் பெருமளவு செலவுகளைக் கருத்தில் கொண்டும், அடையாறு புற்றுநோய் நிறுவனத்திற்குக் கொடுக்கப்படும் பேணுதல் மானியம், ரூ. 2·50 லட்சத்திலிருந்து ரூ. 3·25 லட்சமாக அரசால் மேலும் உயர்த்தப்பட்டுள்ளது.

### குடும்ப நலத் திட்டம்.

**அமைப்பு.**—இம் மாநிலத்தில் குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்துவது சுகாதாரப் பணிகள்—நலத் திட்ட இயக்குநரின் பொறுப்பாகும். தலைமையிடத்திலுள்ள மாநிலக் குடும்ப நலத் திட்டக் கழகம் துணை இயக்குநர் (குடும்பநலத் திட்டம்) ஒருவரின் நேரடிப் பொறுப்பிலுள்ளது. அவருக்கு 5 அதிகாரிகள் உதவியாக உள்ளனர். நிர்வாகத்திற்கு ஒன்றும், கல்வி-செய்திப் பரப்புக்கு ஒன்றும், நேரடிப் பணி-மதிப்பீட்டுப் பணிக்கு ஒன்றும் ஆக மொத்தம் 3 பிரிவுகளுடன் மாவட்டக் குடும்பநலத் திட்டக் கழகம் ஒவ்வொரு மாவட்டத்திலும் திறக்கப்பட்டுள்ளது. கிராமப் பகுதியில் ஆரம்பச் சுகாதார நிலையங்களின் மூலமாக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான இத்தகைய அமைப்பு முறையின் கீழ், குடும்பநலத் திட்டப் பிரிவுகளைத் தொடங்குவதன் மூலம் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் வலுப்படுத்தப்படுகின்றன. பெண் மருத்துவ அதிகாரி, வட்டார வளர்ச்சி அறிவுரையாளர், குடும்ப நலத் திட்ட-சுகாதார ஆய்வாளர்கள் நால்வர், துணைச் செவிலியர்-மருத்துவச்சி, சுகாதாரப் பார்வையாளர் ஒருவர் ஆகியோர் அங்கு நியமிக்கப்படுகின்றனர். 1965-ம் ஆண்டில் 125 வட்டாரங்களில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இம்முறையின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. நடப்பு நிதியாண்டில் இம் முறையை மேலும் 100 வட்டாரங்களில் செயல்படுத்த அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அடுத்த ஆண்டின் இறுதிக்குள் மாநிலம் முழுவதிலும் இம் முறை செயல்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

நகர்ப் பகுதிகளில், இத் திட்டம் அரசு மருத்துவ மனைகள், நகராட்சி மருத்துவ நிலையங்கள், தனித் தொண்டு நிறுவனங்கள் ஆகியவை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளுடன் இணைந்த 12 குடும்ப நலத் திட்டத் தனி மருத்துவ மனைகளும், மாநகரிலுள்ள அரசு மருத்துவ மனைகளுடன் இணைந்த 3 குடும்பநல திட்டத் தனி மருத்துவ மனைகளும் தற்போது உள்ளன. இவைகளைத் தவிர, மாநகராட்சியால் நடத்தப்படும் 24 நகர குடும்ப நலத் திட்ட நிலையங்களும் திருச்சி, சேலம், மதுரை, கோயம்புத்தூர், வேலூர்,

திட்ட மதிப்பீடு ரூ. 17·12 லட்சம் ஆகும். நடப்பு ஆண்டில் 0—14 வயதுத் தொகுதியினருக்கு முதல் தடவை அம்மை குத்துதல் முனைப்பாகச் செயல் படுத்தப்படவேண்டுமென்று சுகாதாரப் பணியாளர்களுக்கு உத்தரவிடப் பட்டுள்ளது.

(4) **தொற்றும் கல்லீரல் அழற்சி.**—இந்த ஆண்டின் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் உதகையிலும் அதையடுத்த கிராமங்களிலும் தொற்றும் கல்லீரல் அழற்சி நோயால் பலர் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. உடனடியாக, மும்முரத் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. வேலூர், திருச்சிராப்பள்ளி மத்திய சிறைகளிலும் இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதுபற்றிப் பொது மக்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டது. "காமா குளோபுலின்" மருந்து வாங்கி நோய்த் தடுப்புக்காக நீலகிரி மாவட்ட மருத்துவ அதிகாரிக்கும், மாவட்டச் சுகாதார அதிகாரிக்கும் வழங்கப்பட்டது.

(5) **மலேரியா.**—முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் தொகை பெருமளவாக இருந்தது. தற்போது மலேரியாவினால் இறப்பவர்கள் தொகை பெருமளவு குறைந்துள்ளது. அதாவது 1958-ல் 0.04 சதவீதத்திலிருந்து 1968-ல் 0·01 சதவீதமாக குறைந்துள்ளது.

மலேரியா ஒழிப்புத் தேசியத் திட்டம் கீழ்க்கண்ட பணிகளை நோக்க மாகக் கொண்டுள்ளது :—

(அ) குறிப்பிட்ட காலப்பகுதிக்கு இம் மாநிலத்தில் டி.டி.டி. (D.D.T.) மருந்து தெளித்தல்.

(இ) முறையாக வீடுதோறும் சென்று மும்முரமாகக் கண்காணித்து நோயாளிகளைக் காணும் நடவடிக்கை மூலம் நோய் கண்டவர்களை முனைப்பாகக் கண்டுபிடித்து சிகிச்சை யளித்தல்.

(உ) அதன் பின்னர் விழிப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல்.

மலேரியா ஒழிப்புத் தேசியத் திட்டத்தின் முதற்படியாக, அதாவது நோயைத் தாக்கும் நிலையாக, தமிழகம் முழுவதிலும் டி.டி.டி. மருந்து தெளிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இத் திட்டத்தின் இரண்டாம் நிலையாக, அதாவது மும்முரக் கண்காணிப்பு நிலையாக, மருந்து தெளிப்பதுடன், கண்காணிப்பு பணி நிறைவேற்றப்பட்டது. 1963–64 முதல் மருந்து தெளிப்பு முறை முழுவதும் கைவிடப்பட்டது. எல்லாப் பிரிவுகளிலும் மும்முரமாகவும், சாதாரண நிலையிலும் விழிப்பு ஏற்பாடுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. நான்காவது நிலையின்கீழ், அதாவது விழிப்பு நிலையின் கீழ், மலேரியா விழிப்பு நடவடிக்கை செயல்படுத்தப் பட்டது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சுமார் 24 யூனிட் பகுதிகளில் மேற்படி விழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 1966–67-ல் கூடுதலாக 4·5 யூனிட் பகுதிகளில் விழிப்பு நிலை தொடங்கப் பட்டது. 32-க்கு மேற்பட்ட பிரிவுகளில் எஞ்சிய சில பகுதிகளில் இதற்கு முந்திய நிலையில் மேற்கொண்ட பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சீரமைக்கப்பட்ட குடும்பநலத் திட்டப் பகுதிகளில் குடும்ப நலத் திட்டத்திலிருந்து மலேரியா ஒழிப்புத் திட்டம் பிரிக்கப்பட்டதால், மலேரியா கட்டுப்பாட்டுப் பணியை அரசு மாவட்ட சுகாதார அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளது.



1968–69-ல் செலவிடப்பட்ட தொகை, 1969–70-ம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட தொகை, 1970–71-ல் ஒதுக்கப்பட்ட தொகை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(ரூ. லட்சத்தில்.)

| | |
|---|---|
| (அ) 1968–69-ல் செலவான தொகை .. .. .. | 117·29 |
| (இ) பேணப்படுபவை, பேணப்படாதவை ஆகியவற்றின்கீழ் 1969–70-ம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு. .. | 118·96 |
| (உ) பேணப்படுபவை, பேணப்படாதவை ஆகியவற்றின்கீழ், 1970–71-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. .. .. .. .. .. .. | 144.18 |

(6) **யானைக்கால் நோய்.**—செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர் வட ஆர்க்காடு மாவட்டங்களில் முறையே செங்கற்பட்டு, சிதம்பரம் கும்பகோணம், வேலூர் ஆகிய இடங்களை தலைமையிடங்களாகக் கொண்டு யானைக்கால் நோய் கட்டுப்பாட்டுத் தேசிய திட்டப் பிரிவுகள் நான்கு உள்ளன. இந்த ஆண்டும் இவை தொடர்ந்து செயல்பட்டுவரும்.

இந்த நான்கு கட்டுப்பாட்டுப் பிரிவுகளும், முனைப்பாகக் கொசு ஒழிப்புப் பணியைத் தொடர்ந்து செய்து வருகின்றன. வாரத்திற்கு ஒரு முறையாகக் கொசு ஒழிப்பு மருந்தைத் தெளித்தும் கழிவு நீரை அகற்றும் வகையில் வடிகால் அமைத்தல் போன்ற சிறு பொறியியல் பணிகளை மேற்கொண்டும் இப் பணியை ஆற்றி வருகின்றன. 5 முதல் 15 வயது வரையிலுள்ள பள்ளி செல்லும் சிறுவர்களிடையே யானைக்கால் நோய் ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தினால் 15 லட்சம் மக்கள் பாதுகாக்கப்பட்டுள்ளனர். இந்திய அரசால் இத் திட்டத்திற்கு இதுவரையில் ரூ. 8·92 லட்சம் மதிப்புள்ள பொருள்களும் கருவிகளும் வழங்கப் பட்டுள்ளன.

இம் மாநிலத்தில் சென்னை மாநகர்ப் பகுதி உட்பட நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் யானைக்கால் நோய் ஒழிப்பு தேசியத் திட்டத்தைச் சீரமைப்பதற்கான திருத்திய செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன. 1970–71-ல் தலைமையிடப் பிரிவைத் துவக்குவது மேற்கொள்ளப் படவிருக்கிறது.

## II. நரம்புச் சிலந்தி நோய் ஒழிப்புத் திட்டம்.

3. கன்னியாகுமரி, நீலகிரி மாவட்டங்கள் தவிர தமிழ் நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் இத் திட்டம் செயல்பட்டுவருகிறது.

4. குடிநீர் வாயில்களில் நீரிலிருந்து நரம்புச் சிலந்தி நோய்ப் புழுவை அகற்றுவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். 'கார்போலிக்' நீர்மத்தில் தோய்த்த பஞ்சால், பாதிக்கப்பட்ட இடத்தில் கட்டுக்கட்டியும் துன்பத்தைப் போக்கும் வகையில் ஏ. பி. சி. மாத்திரை கொடுத்தும் மீண்டும் நோய் தொற்றாமல் தவிர்க்க 'சல்பாடயசின்' அளித்தும் நரம்புச் சிலந்தி நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கப்படுகிறது.

5. 1969-ம் ஆண்டில் 18,276 கிராமப் பகுதிகள் பார்வையிடப் பட்டன. அவற்றில் 97 கிராமங்களில் 672 பேர், நரம்புச் சிலந்தி நோயால் பாதிக்கப்பட்டதாகத் தெரியவந்தது. மொத்தம் 907 குடிநீர் நிலைகளில் நீரில் கரையும் டி.டி.டி. மருந்து 7,895 கிலோகிராம் கலக்கப் பட்டது.

6. இத் திட்டத்தின் கீழ் 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரையில் ரூ. 2,21,000 செலவிடப்பட்டுள்ளது.

### III. தொற்றுத் தோல் நோய் ஒழிப்புத் திட்டம்.

7. திருச்சிராப்பள்ளி, மதுரை மாவட்டங்களில் மூன்று பிரிவுகளுடன் இத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

8. 1969-ல் தொற்றுத் தோல் நோய் கண்டுள்ளதற்காக 48,636 மக்கள் தொகை கொண்ட 803 கிராமங்களில் ஆய்வு செய்யப்பட்டது. 40,948 பேர்களைப் பரிசோதனை செய்து பார்த்ததில், தொற்றிக்கொள்ளாத தோல் நோய் 353 பேருக்கு கண்டிருப்பது கண்டறியப்பட்டது. மொத்தம் 278 கிராமங்கள் சிகிச்சைப் பணிககாக மேற்கொள்ளப்பட்டன; 518 பேருக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. தொற்றுத் தோல் நோய்ச் சிகிச்சையுடன், சொறி, சிரங்கு, வயிற்றுப்போக்கு, வயிற்றுக்கடுப்பு, ஆகிய நோய்களுக்கும் 433 பேருக்கு சிகிச்சையளிக்கப்பட்டது.

9. தர்மபுரி மாவட்டத்தில் இந்நோய் கண்டுள்ளதாக முதன்முறையாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப் பகுதிக்கு தொற்றுத் தோல் நோய் ஒழிப்புப் பிரிவு ஒன்றைத் தொடங்கும் அவசியம் பற்றி ஆராயப்பட்டு வருகிறது. 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரையில் ரூ. 34,000 செலவிடப்பட்டுள்ளது.

### IV. ஆரம்ப சுகாதார நிலையங்கள்.

10. மக்களுக்கு தடுப்பு மருத்துவப்பணியும் குணப்படுத்தும் மருத்துவப் பணியும் அளிப்பதற்காகவும் நாளாவட்டத்தில் சமுதாயத்தின் சுகாதாரம் பேணப்படவும், சுற்றுவட்டார அளவில் அமைக்கப்பட்ட பலநோக்கு நிலையமே, ஆரம்ப சுகாதார நிலையமாகும். ஆரம்ப சுகாதார நிலையங்கள் கீழ்க்காணும் பணிகளை ஆற்றிவருகின்றன :—

(1) மருத்துவப் பாதுகாப்பு.

(2) பிறப்பு - இறப்புப் புள்ளிவிவரங்களைச் சேகரித்தலைச் சிறப் பாக்குதல்.

(3) தாய், சேய் நலப்பணிகள்.

(4) குடும்ப நலத் திட்டம்.

(5) பரவும் நோய்களைக் கட்டுப்படுத்தல்.

(6) சுற்றுப்புறத் துப்புரவு.

(7) பள்ளிச் சுகாதாரப் பணிகள்.

(8) சுகாதாரக் கல்வி.

11. வளர்ச்சி வட்டாரத்திற்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் வீதம் ஆரம்ப சுகாதார நிலையங்களைத் திறப்பதுதான் அரசின் கொள்கையாகும். மலேரியா ஒழிப்புத் தேசியத் திட்டத்தில், செயல் நிலையை அடைந்த வளர்ச்சி வட்டாரங்களுக்கு முதலிடம் அளிக்கப்பட்டு வருகிறது. 1969–70-ம் ஆண்டில் 32 ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்க திட்டமிடப்பட்டது. அவற்றில் 31 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்கெனவே திறக்கப் பட்டுள்ளன. எஞ்சிய ஓர் ஆரம்ப சுகாதார நிலையம், 1970, மார்ச் இறுதிக்குள் திறக்கப்படவிருக்கிறது. 1970–71-ம் ஆண்டுக்கு 32 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களைத் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

12. இம் மாநிலத்திலுள்ள 374 வளர்ச்சி வட்டாரங்களில் 348 வளர்ச்சி வட்டாரங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நான்காவது திட்ட இறுதிக்குள் எல்லா வளர்ச்சி வட்டாரங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுமென நம்பப்படுகிறது.



### V. தாய்-சேய் நலம்.

13. பிற்பட்ட பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஏற்படும் செலவினம் முழுவதையும் மாநில அரசு ஏற்றுக்கொள்கிறது. இத் திட்டத்தின்கீழ் திறக்கப்பட்ட 19 முக்கிய நிலையங்களும் அவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள 76 துணை நிலையங்களும் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றன. நகராட்சி களும் அவற்றின் சம்பந்தப்பட்ட பகுதிகளில் பயிற்சி பெற்ற மகப்பேறுப் பணியாளர்களின் உதவியைத் தொடர்ந்து அளித்து வருகின்றன. தற்போது நகராட்சிகளில் 71 மகப்பேறு இல்லங்களும் 213 மகப்பேறு நிலையங்களும் செயற்பட்டு வருகின்றன. 1958-ம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தின் கீழ், 10,000 மக்கள் தொகையுள்ள ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு நிலையமாக, ஒரு வளர்ச்சி வட்டாரத்திற்கு 10 நிலையங்கள் என்னும் உயர் அளவு வரையில் மகப்பேறு நிலையங்களைத் திறக்கும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்ததாகும். ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் 1969-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதி நிலவரப்படி நிர்வகித்துவரும் தாய், சேய் நல நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 2,636 ஆகும். தாய், சேய் நல நிலையங்களைப் பேணி வருவதற்காக 1969–70-ம் ஆண்டுக்கு உள்ளாட்சி மன்றங்களுக்கு ரூ. 3,31,600 மானியத் தொகை வழங்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

### VI. சுகாதாரப் பார்வையாளர்கள் பயிற்சி.

14. சுகாதாரப் பார்வையாளர்களுக்கு சுகாதாரத்துறை தொடர்ந்து பயிற்சியளித்து வருகிறது. முறையான பயிற்சி, ஒருங்கிணைந்த பயிற்சி என்று இரண்டுவகைப் பயிற்சிப் படிப்பு உள்ளது.

### VII. பள்ளி மருத்துவச் சோதனை.

15. இம் மாநிலத்திலுள்ள தேர்ந்தெடுத்த 12 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் 6 வயது முதல் 11 வயது வரையிலுள்ள பள்ளிச் சிறுவர்கள் 2,000 பேருக்கு ஆரம்ப சுகாதார நிலையங்களின் மருத்துவ அதிகாரிகள் மருத்துவச் சோதனை செய்து வருகின்றனர்.

### VIII. ஐக்கிய நாடுகள் உலகச் சிறுவர் நிதி நிறுவன உதவி பெறும் தாய், சேய் நல உணவளிப்புத் திட்டம்.

16. இது மாநிலம் முழுவதிலும் ஏற்பாடு செய்யப்பட்ட மிக முக்கிய துணை உணவளிப்புத் திட்டமாகும். இத் திட்டம் இந்த ஆண்டிலும் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டது. மக்கள் தொகையில் பெரும்பகுதி யினராக உள்ள முன் பள்ளிப் பருவக் குழந்தைகள், நிறை கர்ப்பிணிகள், பால் தரும் நிலையிலுள்ள தாய்மார்கள் ஆகியோரிடையே காணப்படும் சத்துணவுக் குறையை ஈடுசெய்து சத்துணவு நிலையை மேம்படுத்துவதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

17. இத் திட்டத்தின்கீழ், தற்போது வெண்ணெய் நீக்கப்பட்ட பால் வழங்கப்படுகிறது. சுமார் 1,600 நிலையங்கள் மூலமாக இவ்வாறு வழங்கப்படுகிறது. இந் நிலையங்களில், தாய், சேய் நல நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருத்துவ மனையுடன் இணைந்த குழந்தை மருத்துவப் பிரிவு ஆகியவை அடங்கும். இத் திட்டத்தின்கீழ் தினந்தோறும் 60,000 குழந்தைகளும், தாய்மார்களும் பயனடைகின்றனர். இதுவரை இந்த ஆண்டில் சுமார் 5·2 லட்சம் ராத்தல் வெண்ணெய் நீக்கிய பால்பொடி பெறப்பட்டு, மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

18. இதுவரையில் மாநில அரசுக்கு உதவியளித்துவந்த 'யுனிசெஃப்', இத்தகைய திட்டங்களுக்கு உதவியளிப்பதை நிறுத்தும் புதிய கொள்கையைப் பற்றி தெரிவித்துள்ளது. இத் திட்டத்தின் சிறப்புக் கருதி, வேறு நிறுவனத்திடமிருந்து தொடர்ந்து உதவிபெற முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்த நாட்டில் பள்ளிச் சிறுவர்களுக்கு நண்பகல் உணவு அளிக்கும் திட்டத்தை நிறைவேற்றப் பெரிய அளவில் உதவியளித்துவந்த 'கேர்' நிறுவனம், இதற்குத் தேவையான உதவியளிக்க விருப்பத்துடன் முன்வந்துள்ளது. இப்போது அரசின் ஆலோசனையின் கீழுள்ள 'கேர்' நிறுவன உதவியுடன் நிறைவேற்றப்படவிருக்கும் இத் தற்காலிகத் திட்டத்தின்படி, தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் தகுந்த உணவுத் தயாரிப்பு மூலம் புரதச்சத்து மிக்க புதியவகை உணவு வழங்கப்படும். இத் திட்டம் 4,400 நிலையங்களில் செயல்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. 'யுனிசெஃப்' நிறுவன உதவிபெற்ற தாய், சேய் நல உணவளிப்புத் திட்டத்தினால் 1,600 நிலையங்கள் உதவி பெற்று 60,000 பேர் நாள்தோறும் பயனடைந்தனர்; ஆனால் இத்திட்டத்தின்கீழ் அன்றாடம் 1,43,000 பேர் பயனடைவார்கள்.

## IX. பிணித் தடுப்புத் திட்டம்.

19. கக்குவான், தொண்டைக்கட்டு நோய் (டிப்திரியா), இழுப்பு வாதம் ஆகிய சில நோய்களிலிருந்து குழந்தைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் நோக்கத்தில் மூன்று நோய்த் தடுப்பு ஊசி போடுவதற்கு 1964-ல் தொடங்கப்பட்ட இத்திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. மூன்று நோய்த் தடுப்பு ஊசி, 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்குப் போடப்படுகிறது; ஓராண்டு வயதுள்ள குழந்தைகளுக்கு இந்த ஊசி போட முனைப்புச் செலுத்தப்படுகிறது. ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது. தற்போது இத் திட்டம் 348 ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. 1969-ஆம் ஆண்டில் 82,098 குழந்தைகளுக்கு ஊசிகள் போடப்பட்டன. 3,04,590 பேருக்கு மூன்று நோய்த் தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது.

## X. பள்ளிகளில் சுற்றுப்புறத் துப்புரவு.

20. செங்கற்பட்டு, மதுரை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, தென் ஆற்காடு ஆகிய ஐந்து ஆய்வு-நடவடிக்கைத் திட்டத்தினைச் செயல்படுத்த மேற்கொள்ளப்பட்ட மாவட்டங்களில் 15 வளர்ச்சி வட்டாரங்களிலுள்ள 30 பள்ளிகளுக்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 3,333 செலவில் குடி நீர்க் கிணறும், சிறு நீர், மலக்கழிப்பிடமும் அமைக்க இத் திட்டம் வகை செய்கிறது. ஓரளவு திருத்தியமைத்த நடைமுறையுடன், கிராம வளர்ச்சித் துறை இயக்குநரின் ஒத்துழைப்புடன் தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களுக்கும் மேற்படி திட்டத்தை விரிவாக்கும்பொருட்டு அரசு ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 பள்ளிகள் வீதம், ரூ. 4·00 லட்சம் மொத்தச் செலவில் இந்த ஆண்டில் 120 பள்ளிகள் மேற்கொள்ளப்படத் தீர்மானிக்கப்பட்டது. இத் தொகையில் 30 பள்ளிகளுக்கு அரசு ஏற்கனவே 1 லட்சம் தொகையை வழங்க ஒப்பளித்துள்ளது.

21. இதற்கிடையில் 1969, ஏப்ரலில் ஒப்பளிக்கப்பட்ட திட்டம், ஓரளவு நிறைவேற்றப்பட்டு வருகிறது.

## XI. பொருட்காட்சிகளும் திருவிழாக்களும்.

22. இம்மாநிலத்தின் பல பகுதிகளில் சுமார் 600 பெரிய, சிறிய திருவிழாக்கள் நடைபெற்றன. எல்லாத் திருவிழாக்களுக்கும் போதுமான சுகாதார ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தேவைப்படும் இடங்களில் கூடுதலான பணியாளர்கள் அமர்த்தப்பட்டனர். கொள்ளைநோய் எதுவும் பரவாமல் எல்லா விழாக்களும் நடந்தேறின.





## XII. மக்கள் பிறப்பு-இறப்புப் புள்ளிவிவரம்.

### (அ) சிப்பந்திகளும் பயிற்சியும்

23. ஐந்தாண்டுத் திட்டங்கள், பொதுச் சுகாதார வேலைத் திட்டங்கள் இவற்றின் பலன்களை ஆராய்வதற்கு அடிப்படையான புள்ளிவிவரத்தைப் பெறும்பொருட்டு, பிறப்புகள், இறப்புகள், இறந்து பிறப்பவை இவற்றைப் பதிவு செய்வதைச் சிறப்பாக்க முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பிறப்பு-இறப்புப் புள்ளிவிவரத் தொகுப்புவேலை, தற்போது இயந்திரம் மூலம் நடைபெற்று வருகிறது.

24. 1969-70-ல் கீழ்க்கண்டவை மத்திய அரசால் ஊக்குவிக்கப்பட்ட ஐந்தாண்டுத் திட்ட வேலைத் திட்டமாக நிறைவேற்றப்பட்டன. இவை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றிற்கு 75 சதவீதம் மத்திய உதவி கிட்டும்.

(1) மாதிரிப் பதிவுத் திட்டம்.

(2) (i) மாநிலத் தலைமையிடத்தில் இயந்திரம் மூலம் புள்ளி விவர அட்டவணை தயாரிப்புப் பிரிவு அமைத்தல்; மாநில மாவட்ட அளவில் புள்ளி விவரத் தொகுப்பைச் சிறப்பாக்குதல்.

(ii) மாவட்டச் சுகாதார அதிகாரிகளின் அலுவலகங்களின் புள்ளிவிவரத் தொகுப்புப் பணியாளர்களை அதிகரித்தல்.

(3) கீழ்க்காணும் உள்ளாட்சி மன்றங்களின் புள்ளிவிவரப் பிரிவுகளின் பணியாளர்களை அதிகரித்தல்.

(i) ஐந்து லட்சமும் அதற்கு மேற்பட்டும் மக்கள் தொகையுள்ளவை (சென்னை மாநகரம்).

(ii) 1 முதல் 5 லட்சம் வரையில் மக்கள் தொகையுள்ளவை (எட்டு பெரிய நகராட்சிகள்).

மேற்படி திட்டங்களின்கீழ் எல்லா மாவட்டங்களிலும் ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு மேற்பட்ட எட்டு பெரிய நகராட்சிகளிலும் புள்ளிவிவர உதவியாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். சென்னை மாநகராட்சியில் புள்ளிவிவர அதிகாரி ஒருவர் துணைப் பணியாளர்களுடன் அமர்த்தப்பட்டுள்ளார்.

25. மாவட்ட அளவில் மக்கள் பிறப்பு-இறப்புக் கணக்கைச் சிறப்பாகச் செய்யும் பொறுப்பு, மாவட்டங்களில் அமர்த்தப்பட்டுள்ள புள்ளிவிவர உதவியாளர்களைச் சேர்ந்ததாகும். இவர்கள், பிறப்பு—இறப்புப் புள்ளிவிவரத் தொகுப்பில் ஆரம்பப் பதிவாளர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும். ஏனெனில் பிறப்பு-இறப்புகளை உடனடியாகப் பதிவு செய்வதும் இறப்பின் உண்மைக் காரணத்தைப் பதிவு செய்வதும் எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்ததென்பதை இப்பயிற்சி மூலமே அவர்கள் அறிந்துகொள்ள இயலும்; பிறப்பு அல்லது இறப்பு ஒன்றைப் பதிவு செய்வதில் பின்பற்றப்படவேண்டிய நடைமுறையையும் அவர்கள் இப்பயிற்சி மூலம் அறிந்து கொள்வார்கள். நடப்பு ஆண்டிற்கும் இப்பயிற்சித் திட்டத்தை நீட்டிக்க அரசு ஒப்பளித்துள்ளது; இந்த ஆண்டில் இத்திட்டம் முடிவுறுமென எதிர்பார்க்கப்படுகிறது. பிறப்பு-இறப்புப் புள்ளிவிவரக் கழகத்தின் பொறுப்பு வகிக்கும் புள்ளி விவர உதவி இயக்குநர், பிறப்பு-இறப்புப் பதிவின் தரத்தையும், அளவையும் மேம்படுத்தும் பொருட்டு மேற்பார்வைப் பயணம் மேற்கொள்கிறார்.

## (இ) மாதிரிப் பதிவுத் திட்டம் அல்லது இறப்பின் காரணம் குறித்த ஆய்வு.

26. கிராமப் பகுதிகளில் எக்காரணத்தினால் அதிக அளவு மக்கள் இறக்கின்றனர் என்பதைக் கண்டறியவும் பதிவு செய்யப்படாத பிறப்பு–இறப்பு நேர்வுகளைக் கண்டுபிடிக்கவும் வகை செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இறந்துவிட்டவர் எந்தச் சூழ்நிலையில் எக்காரணங்களால் இறக்க நேர்ந்தது என்று அந்த வீட்டைச் சேர்ந்தவர்கள் கூறும் விவரங்களைக்கொண்டு ஆய்வு செய்வதே இதில் மேற்கொள்ளப்படும் முறையாகும். தற்போது இத்திட்டம் 34 ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்பட்டு வருகிறது; மேலும் சில ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இத்திட்டத்தை நீட்டிக்கச் செய்வதற்கான செயற்குறிப்புகள் ஆலோசனையில் உள்ளன. இத்திட்டத்திற்கென செலவு ஏற்படுவதில்லை. மொத்த இறப்புகளில் 7·7 சதவீதம் மட்டுமே மற்றெல்லாக் காரணங்களின் கீழும் காட்டப்பட்டுள்ளன என்பது பெரிதும் பாராட்டுதற்குரியதாகும்.

## (உ) மாதிரிப் பதிவுத் திட்டம்.

27. தேர்ந்தெடுத்த 150 கிராமப்புறப் பிரிவுகளில் தொடர்ந்து பதிவு வேலை செய்வதன் மூலமாக நம்பகமான பிறப்பு–இறப்பு வீதங்களின் மதிப்பீட்டைக் கணக்கிடுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இது, பதிவு செய்தல், ஆய்வு செய்தல் இவற்றின் நலன்களை இணைக்கும் நுண்ணிய பதிவுத் திட்டமாகும். 1968-ஆம் ஆண்டிலிருந்து 150 கிராமப்புறப் பிரிவுகள் அனைத்திலும் முழு அளவு மாதிரிப் பதிவுத் திட்டத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்திட்டத்தில் பணியாற்றும் பகுதி நேரக் கணக்கெடுப்போர் பதிவு செய்யும் பணியைத் தொடர்ந்து செய்கின்றனர்; மாதாந்திர அறிக்கைகளை அளிக்கின்றனர், இந்த அறிக்கைகள் மாநிலத் தலைமையிடத்தில் தொகுக்கப்பட்டு, திங்கள்தோறும் இந்தியத் தலைமைப் பதிவாளருக்கு அனுப்பப்படுகின்றன. 1969-70-ல் அரையாண்டு ஆய்வுகள் இரண்டு மேற்கொள்ளப்பட்டன. 1970-71-ல் 100 நகர்ப்புறப் பிரிவுகளிலும் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான செயற்குறிப்புகள் அரசின் ஆலோசனையில் உள்ளன.

## (எ) மேற்பார்வை.

28. புள்ளி விவர உதவி இயக்குநர், இத்திட்டங்கள் அனைத்திற்கும் மேற்பார்வை அதிகாரியாக உள்ளார்; இவர், இப்பணியின் செயல்திறனை ஆராயவும் அவசியமான இடங்களில் களப் பயிற்சியளிக்கவும் தேர்ந்தெடுத்த பிரிவுகளுக்குச் சென்று பார்வையிடுகிறார்.

## XIII. சுகாதாரக் கல்விக் கழகம்.

29. மாநிலச் சுகாதாரக் கல்விக் கழகம், சுகாதாரக் கல்வி சம்பந்தப்பட்ட பொருள்களைத் தயாரிக்கிறது; அந்தந்த இடங்களிலுள்ள நிறுவனங்கள் அவற்றின் தேவைக்கேற்ப அவற்றைக் கையாண்டு, இம்மாநிலத்தில் சுகாதாரக் கல்விப் பணியை மேம்படுத்தி, ஒருங்கிணைக்கலாம்.

30. இம்மாநிலச் சுகாதாரக் கல்விக் கழகம், (1) தமிழ் நாடு சுகாதாரக் கல்வி (ஆங்கிலம்), (2) ஆரோக்கிய மார்க்கம் (தமிழ்) என்னும் இரண்டு காலாண்டுப் பத்திரிக்கைகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. இந்த இரண்டு வெளியீடுகளிலும் சுகாதாரம் பற்றிய பல்வேறு சிறப்புக் கட்டுரைகள் அடங்கியுள்ளன. பெருமளவில் நடத்தப்படும் விழாக்களின் முக்கியத்துவத்தைக் கருதி, இந்த இதழ்களின் சிறப்பு வெளியீடுகளும் வெளியிடப்படுகின்றன. மகளிர் சங்கங்களிலும், பள்ளிகளிலும் வழங்கப்படுவதற்காக முறையே மகளிர் நலத் துறைக்கு 1,000 பிரதிகளும் பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திற்கு 1,000 பிரதிகளும், 'ஆரோக்கிய மார்க்கம்' இதழ்கள் வழங்கப்படுகின்றன. மேலும் தமிழில் எளிய நடையில் சுற்றறிக்கைகளும், துண்டு வெளியீடுகளும் தயாரிக்கப்படுகின்றன.





31. சுகாதாரக் கல்விக் கழகம், ஆரம்ப சுகாதார நிலையப் பணியாளர்களுக்குப் பணியிலுள்ளபோது பெறும் பயிற்சித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. தற்போது பணியிலுள்ளபோதே பயிற்சிபெறும் நான்கு தொகுதியினருக்கு ஆண்டுதோறும் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. இதுவரையில் பணியிலுள்ளபோதே பயிற்சி பெறும் 17 தொகுதியினருக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. பட்டறைப் பாடமுறை நடத்தப்படுகிறது; இங்கு பயிற்சியாளர்கள் தாங்களே தேர்ந்தெடுத்த பொருள்கள் பற்றி செலவில்லாமல் தங்களே சொந்தப் படக்காட்சிகளைத் தயாரிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

32. இக்கழகம், இம்மாநிலத்தில் பல பொருட்காட்சிகளில் பங்கு கொண்டுள்ளது. சிறப்பாக சென்னையில் நடைபெற்ற அனைத்து இந்தியக் கதர், சுதேசி, தொழில் பொருட்காட்சியில் பங்குகொண்டது குறிப்பிடத்தக்கது.

33. சுகாதாரம் குறித்த 16 மி. மீட்டர் அளவுத் திரைப்படங்கள் சுமார் 384 எண்கள் கொண்டவை இக் கழகத்திடம் உள்ளன. 1969-ல் 10 திரைப்படங்கள் வாங்கப்பட்டன.

## XIV. உணவுக் கலப்படத்தைத் தடுத்தல்.

34. சென்னை மாநகராட்சி உட்பட 277 உள்ளாட்சி மன்றங்களில் உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டம் செயலில் உள்ளது.

35. 1969-ஆம் ஆண்டில் (1969, டிசம்பர் வரையிலும்) இச்சட்டத்தின்கீழ் 24,498 உணவுப்பொருள் மாதிரிகள் எடுக்கப்பட்டன. இவற்றில் கிட்டத்தட்ட 25 சதவீதத்தைக் குறிக்கும் 6,026 மாதிரிகளில் 25 சதவீதம் கலப்படம் செய்யப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. தொடரப்பட்ட 1954 வழக்குகளில் 776 பேருக்குத் தண்டனையளிக்கப்பட்டது. 91 பேருக்கு சிறைத் தண்டனையளிக்கப்பட்டது. இந்த ஆண்டில் 1969, செப்டம்பர் வரையில் அபராதமாக வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 1·05 லட்சம் ஆகும். கோயம்புத்தூரில் வட்டார உணவுப் பகுப்பாய்வுக் கூடம் ஒன்றை அமைக்க அரசு ஒப்பளித்துள்ளது. இந்த ஆய்வுக் கூடத்தை மிக விரைவில் தொடங்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## XV. ஊட்டச்சத்து ஆய்வுக்கூடம்.

36. உணவுப் பொருள்களின் எல்லா வகையான சாதாரண ரசாயனப் பகுப்பாய்வு செய்வதற்கும் பொதுச் சுகாதாரத்துறையுடன் இணைந்துள்ள ஊட்டச்சத்து ஆய்வுக்கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உயிரியல் சோதனைகள் நடத்துவதற்காக விலங்கு ஆய்வு அறை ஒன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக் கூடப் பணியாளர்களுக்காகும் செலவையும் கருவிகளுக்கான செலவையும் மாநில அரசு ஏற்றுக்கொள்கிறது. இந்த ஆய்வுக்கூடம் பின்வரும் பணிகளைச் செய்து வருகின்றது:—

(1) வட்டாரத் தொழில், சமுதாய அடிப்படையில் ஊட்டச்சத்து அட்டவணைப்படிக்கான உணவு முறைகள் குறித்து ஆய்தல்;

(2) குறைந்தளவு பயன்படும் உள்நாட்டு உணவுப் பொருள்களின், குறிப்பாக பசுந்தழைக் காய்கறிகளின் உணவுச் சத்து மதிப்பை ஆய்வுக்கூட முறையில் ஆராய்ச்சி செய்தல்;

(3) மாதிரி உணவு, இல்லங்களில் பெரும்பாலும் தயாரிக்கப்படும் உணவுப் பண்டங்கள் ஆகியவற்றின் ஊட்டச் சத்தினை மதிப்பிடுதல் ;

(4) கல்வி நிலையங்களில் சமையல் செய்யும்போது அதனால் ஏற்படும் சத்து இழப்பு குறித்து ஆய்தல்;

(5) பள்ளிகளில் வழங்கப்படும் நண்பகல் உணவு, மருத்துவ மனைகளில் வழங்கப்படும் உணவு முதலியவை குறைந்த விலையில் ஊட்டச் சத்து மிக்கதாக இருக்கும் பொருட்டுத் தகுந்த தயாரிப்பு வழிவகைகளையும் உணவு வகைகளையும் கண்டறிதல் ;

(6) சரிவிகித உணவாக இல்லாத அரிசி உணவைச் சரிவிகித மாக்குவது குறித்து ஆராய்ச்சி நடத்துதல் ;

(7) அடுத்தடுத்து ஆய்வு செய்வதன் மூலம் உணவு முறையில் காணப்படும் , இயல்புகள் குழந்தைகளின் வளர்ச்சி வீதம் இவைபற்றி ஆராய்தல் ;

(8) பயன்முறை ஊட்டச்சத்துத் திட்டத்தில் பல்வேறு பணி நிலைகளிலுள்ள சுகாதாரப் பணியாளர்களுக்குப் பயிற்சியளித்தல் ;

(9) ஊட்டச் சத்துக் கல்விக்காகப் பொருள்கள் தயாரித்தலும் சிறப்பு ஆய்வுத் திட்டத்தில் ஆய்வுக்கூட உதவியளித்தலும்.

## XVI. சென்னை மாநகர் குடிநீர் வழங்கல், கழிவு நீர்க்கால் வேலைத் திட்டங்கள்.

37. இருபது லட்சம் மக்கள் தொகைக் கொண்ட இம்மாநகருக்காக நாளொன்றுக்குச் சென்னை மாநகராட்சி சுமார் 3·7 கோடி காலன் நீர் மட்டுமே வழங்க முடிகிறது. பொதுச் சுகாதாரத் தரங்களின்படி குறைந்த அளவு தலைக்கு 25 காலன் தண்ணீராவது தேவையாய் இருக்க, தற்போது தண்ணீர் வழங்கப்படும் வீதம் தலைக்கு சுமார் 17½ காலன் அளவே ஆகும். மக்களின் தேவையை நிறைவு செய்வதற்குத் தற்போதைய குடிநீர் வழங்கல் முறை போதுமான தாகவே இல்லை. எனவே, ரூ. 300 லட்சம் செலவு மதிப்பீட்டில் நீர் வழங்கல் முறையை மாற்றியமைப்பதற்கு அடங்கல் திட்டங்களை மாநகராட்சி மேற்கொண்டுள்ளது. தியாகராயநகரில் ரூ. 78 லட்சம் செலவு மதிப்பீட்டில் தனியே தலைப்புப் பகுதி வேலைகளும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

38. சென்னை மாநகருக்குத் தேவைப்படும் குடிநீர், சோழவரம் ஏரி, புழலேரி, பூண்டியிலுள்ள சத்தியமூர்த்தி சாகரம் ஆகிய இடங்களிலிருந்து பெறப்படுகிறது. இத்தகைய ஏரிகள் அனைத்தின் மொத்தக் கொள்திறன் அளவு, 580 கோடி கன அடியாக இருந்த போதிலும் ஆவியாகப் போவது, கசிவது போகப் பயன்படும் கொள் அளவு இதைவிடக் குறைவாகவே இருக்கிறது; புழலேரி, சோழவரம் ஏரி ஆகியவற்றின் கொள்திறனை உயர்த்துவதற்காக ரூ. 24·59 லட்சம் செலவு மதிப்பீட்டில் இவற்றின் நீர் மட்டங்கள் முறையே 2 அடி, 4 அடி உயர்த்தப்பட்டு வருகின்றன. பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து புழலேரிக்குத் தண்ணீர் கொண்டு செல்வதற்கென மூடப்படாத காரைப் பூச்சுக் கால்வாய்கள் ரூ. 85 லட்சம் செலவில் அமைக்கப்பட்டு வருகின்றன.

39. இப்போது பாசனத்திற்காகவும் பயன்படுத்தப்பட்டு வரும் 55 கோடி கன அடி நீரைக் குடிநீர்க் காரியங்களுக்காக பாதுகாக்கப்படும் வகையில் புழலேரி, சோழவரம் ஏரிகளின் கீழ் உள்ள 7,500 ஏக்கர் நன்செய் ஆயக்கட்டு முழுவதையும் கையகப்படுத்துமாறு அரசு ஆணையிட்டது. நிலத்தைக் கையகப்படுத்திய பின்னர், நன்செய் நிலத்தின் மதிப்பில் 50 சதவீதம் வசூலித்துக்கொண்டு புன்செய் நிலமாக மேற்படி நன்செய் நிலங்களை அதன் மூல ஆயக்கட்டுதாரர்களுக்கே திருப்பி ஒப்படைக்கவேண்டுமென்றும் ஆணையிடப்பட்டது.





40. சென்னை மாநகரின் குடிநீர் வளத்தைப் பெருக்குவதற்காக, வீராணம் ஏரி மூலம் காவிரி நீரைக்கொண்டுவரும் திட்டத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இதற்காகும் மதிப்பீட்டுச் செலவு ரூ 21·30 கோடி. ஆண்டு தோறும் அதைப் பேணி வர ரூ. 45 லட்சம் செலவிடவும் அரசு ஒப்பளித்துள்ளது. இத்திட்டம் நிறைவேற்றப் படுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

41. கழிவுநீரைத் தூய்மைப்படுத்தித் தொழிற்சாலைக் காரியங்களுக்குப் பயன்படுத்துவது குறித்து ஆராய்ச்சிப் பிரிவு ஒன்று முன்னோடி ஆய்வுப்பணிகளை மேற்கொண்டுள்ளது.

42. இம் மாநகரின் கழிவுநீர் அகற்றும் ஏற்பாடு நகர மக்களின் தற்போதைய தேவைக்குப் போதுமானதாக அமையவில்லை. இதனால் பக்கிங்ஹாம் கால்வாயிலும், கூவம் ஆற்றிலும் கழிவுநீர் கலந்து விடுகிறது. சென்னை மாநகராட்சியிடம் இதற்கான அடங்கல் வேலைத் திட்டங்கள் உள்ளன. இதன்படிச் சென்னை மாநகரம் ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டலத்திலும். நீர் இறைக்கும் நிலையங்கள் கொண்ட ஒரு தொகுதி அடங்கியுள்ளது. சென்னை மாநகருக்கு வெளியே கழிவு நீரைக் கொண்டு சேர்ப்பதற்குத் தேர்தெடுக்கப்பட்ட இடங்களுக்கு ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இதன் மூலம் கழிவு நீர் அகற்றப்படுகிறது. நான்கு மண்டலங்களைப் பொறுத்த வரையில் திருத்த வேலைத் திட்டங்களுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இவ் வேலைத் திட்டங்கள் நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் முடிக்கப்படுமென எதிர் பார்க்கப்படுகிறது.

43. சென்னை மாநகராட்சி குடிநீர் வழங்கல்-கழிவு நீர் அகற்றல் வேலைத் திட்டங்களுக்கு பாதிக் கடன்-பாதி மானியம் வழங்கும் அடிப்படையில் நிதி உதவி அளிக்கப்படுகிறது.

## XVII. நகரமைப்பு வேலைத் திட்டங்கள்.

44. நகரங்கள், மாநகரங்கள் முறையாக வளர்ச்சியடையவும், அவற்றின் எழிலைக் காக்கவும் அவற்றில் வாழும் குடிமக்களின் உடல் நலம் மேம்பட வழிசெய்யவும், நகரமைப்புத் திட்டம் மிகுந்த சிறப்பிடம் அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ் நாட்டில் நகரமைப்புச் சட்டம் 1920-ல் இருந்து அமுலில் இருக்கிறது. இச் சட்டத்தின் விதித் துறைகளின்கீழ், நகரமைப்புப் பற்றிய வேலைக்குச் செவ்விய நிர்வாக அமைப்பு உள்ளது. தலைமையிடத்தில் நகரமைப்ப இயக்குநரும் இவருக்கு உதவியாகத் தொழில் நுட்பத் தகுதிபெற்ற நகரமைப்பு இணை இயக்குநரும் உள்ளனர். இத் துறை மற்ற தொழில் நுட்ப, நிர்வாகப் பணியாளர்களை கொண்டு செயல்படுகிறது. இத் துறை மிகத் திறமையுடன் செயற்படும் பொருட்டு அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டுள்ளன. இதன் வட்டாரப் பிரிவுகள் சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன ஒவ்வொரு வட்டாரப் பிரிவும் நகரமைப்புத் துணை இயக்குநரைத் தலைமையதிகாரியாகக் கொண்டுள்ளது. இவர் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களின் வேலையைக் கவனித்துக்கொள்கிறார்.

45. இத்துடன், எல்லா நகராட்சிகளிலும் நிர்வாகப் பிரிவுகளின் இணைப்பாக நகரமைப்புப் பணியாளர் உள்ளார். பொதுவாக, நகரமைப்புப் பற்றிய வேலைத் திட்டங்கள் நகராட்சிகளால் அவற்றின் பணியாளர்களின் உதவியுடனும் நகரமைப்புத் துறை வகுத்துக்காட்டும் வழியிலும் தயாரிக்கப்படுகின்றன. இவை நிறைவேற்றப்படுவதற்காக இவ் வேலைத் திட்டங்களுக்கு அரசு அவ்வப்போது ஒப்புதல் வழங்குகிறது.

[1970 மார்ச் 30

46. உள்ளாட்சி மன்றங்கள் நகரமைப்பு வேலைத் திட்டங்களை மேற்கொண்டு நிறைவேற்றுவதற்குப் பொறுப்புள்ளவையாய் உள்ளன. இவ்வேலைத் திட்டங்களை ஐந்தாண்டுத் திட்டங்களின்கீழ் வகுப்பதில் நகராட்சிகளுக்கும் சென்னை மாநகராட்சிக்கும் மாநில அரசு உதவி செய்து வருகிறது. மூன்றாவது திட்டக்காலத்தில் மத்திய அரசு முழு நிதி உதவியுடன் பெரிய மாநகரங்களிலும், நகரங்களிலும் இந்திய அரசு நேரடி ஆட்சிப் பகுதிகளிலும், பெருந் திட்டங்களைத் தயாரிப்பதற்கான திட்டங்களுக்கு ஊக்கம் அளித்துள்ளது. இந்தத் திட்டங்களின்கீழ், சென்னை பெருநகர்ப் பகுதி, கோயம்புத்தூர் பெருநகர்ப்பகுதி, தூத்துக்குடி துறைமுக வளர்ச்சிப் பகுதி ஆகியவற்றுக்கான பொது விவர வளர்ச்சித் திட்டங்களை நகரமைப்புத் துறை ஏற்கெனவே தயாரித்துள்ளது. 1969–70 ஆம் ஆண்டு முதற்கொண்டு நகர அமைப்புத் துறையின் எல்லா வேலைத் திட்டங்களும் பெருந் திட்டங்கள் தயாரிப்பது உட்பட மாநில வேலைத் திட்டங்களாகவே கருதப்பட்டு வருகின்றன. 1969–70 ஆம் நிதியாண்டில் பெரு நகரங்களுக்கான பெருந்திட்டங்களைத் தயாரிக்கும் பணி, மாநிலத் திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. அடியிற்காணும் நான்கு வேலைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன :—

(1) நெய்வேலி பழுப்பு நிலக்கரி வள வட்டாரத் திட்டம் ;

(2) திருச்சிராப்பள்ளி பெருநகரப் பெருந்திட்டம் ;

(3) மதுரைப் பெருநகர்ப் பெருந்திட்டம் ;

(4) சென்னைப் பெருநகர்ப் பகுதியில் போக்குவரத்து ஆய்வு.

தொடர்ந்து இப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி வள வட்டாரத் திட்டம் சம்பந்தப்பட்ட ஆய்வுப் பணி முடிவுற்றதும் சேலம் பெருநகர்ப் பெருந்திட்டம் தயாரிக்கப்படுவது மேற்கொள்ளப்பட்டது. இவ் வேலைத் திட்டங்கள் அடுத்த நிதியாண்டிலும் தொடரப்பட்டு இயன்ற அளவிற்கு விரைந்து முடிக்கப்படும். இத்தகைய பெருந் திட்டங்களை வகுப்பதற்கு ஏற்படும் செலவையும், போக்குவரத்து ஆய்வுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு ஆகும் செலவையும் ஈடுசெய்ய 1970-71 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 13·19 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

47. நகரமைப்பு வல்லுநர்களுக்குப் பயிற்சி யளிப்பதற்கும் திட்டம் உள்ளது; இதன்படி, பட்டமேற்படிப்பிற்காகவும் தகுதிப்பட்டய மேற்படிப்பிற்காகவும் பயிற்சி பெறத் துறையிலிருந்து பணியாளர்கள் அனுப்பப் படுகின்றனர். 1970-71-ல் செலவிடுவதற்காக இது குறித்து ரூ. 50,000 ஒதுக்க வகை செய்யப்பட்டுள்ளது.

48 சென்னை, கோயம்புத்தூர், திருச்சிப் பெருநகர்ப் பகுதிகளுக்குப் போக்குவரத்து ஆய்வுகளை முடிக்க வேண்டுமென்பது நான்காவது திட்ட நோக்கமாகும். 1970–71-ல் 1970 ஜூலை வரையில் சென்னை பெருநகர்ப் பகுதிக்கான போக்குவரத்து ஆய்வுகள் தொடர்ந்து நடக்கும். பின்னர் கோயம்புத்தூர் பெருநகர்ப் பகுதிக்கான போக்குவரத்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

49. மாவட்டங்களுக்கான வட்டாரத் திட்டங்களையும் நகர பகுதிகளுக்கான பொது விவர வளர்ச்சித் திட்டங்களையும் நகரமைப்புத் துறை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. இம் மாநிலத்தில் நகரமைப்பு அலுவல்களை மிகத் திறம்பட நிர்வகிப்பதற்காகவும் குறிக்கோள் அளவுகளை எய்தவும் தற்போதுள்ள நான்கு வட்டார அலுவலகங்களுக்குப் பதிலாக சென்னையிலுள்ள தலைமையிட அமைப்போடுகூட எட்டு வட்டார அலுவலகங்களை அமைத்து இப்பணியை மேலும் பரவலாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

50. சென்னை மாநகருக்கு வந்து கூடும் மக்களின் தொகை பெருகி வருவதால் நிலைமை சீர்கெட்டு வருவதைத் தடுக்கவும் மாநகருக்கு வருவோரின் தொகையை முறைப்படுத்தவும் சென்னை மாநகருக்கு அண்மையில் நிலங்களைக் கைப்படுத்தி மேம்பாடு செய்து சுற்றுப்புற நகரங்களை (Satellite towns) ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.



1970 மார்ச் 30]

51. நகரமைப்புத் திட்டங்களுக்காக உள்ளாட்சி மன்றங்களுக்குக் கடன் வழங்குவதன்மூலம் நிதி உதவியளிக்க 1970-71 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 2·00 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது. அரசு வழங்கும் உதவி மட்டுமின்றி, நிதி வசதிகொண்ட நகராட்சிகளும் அவற்றிடமுள்ள நிதியை நகர அமைப்புப் பணிகளுக்குப் பயன்படுத்துகின்றன. இச் செலவை, நகராட்சிகள் நேரடியாக ஏற்றுக் கொள்கின்றன. இச் செலவு, மாநிலக் கணக்குகளில் காட்டப்படுவதில்லை.

52. இம்மானியக் கோரிக்கையை ஏற்குமாறு இம்மன்றத்தினை வேண்டுகிறேன்.

## இணைப்பு IV

[257-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க].

**கோரிக்கை 38.—பொதுச் சுகாதார மூலதனச் செலவு.**

கீழ்க்காணும் இனங்கள் இந்த மானியக் கோரிக்கையில் அடங்கும் —

| | (ரூபாய்) |
|---|---|
| (i) a. பணிகள் .. .. .. | 30,23,000 |
| (ii) b. உதவி மானியங்கள் .. .. | —1,26,200 |
| (iii) c. வளர்ச்சித் திட்டங்கள் .. .. | 30,000 |
| (iv) d. கழிக்கவும் —"30. பொதுச் சுகாதாரத்திற்கு" மாற்றப்பட்ட மூலதனச் செலவு. | —3,000 |
| மொத்தம் வாக்களிக்கப்பட்டது. | 29,23,800 |
| கூட்டுக—வசூல்-வாக்களிக்கப்பட்டது. | 1,29,200 |
| மொத்தம்-பெருமொத்தக் கோரிக்கை. | 30,53,000 |

(a) இனம் (i)– a. பணிகள் (ரூ 30,23,000).

நகராட்சிகள், ஊராட்சிகள் ஆகியவற்றின் நீர்வழங்கு திட்டங்களையும் கழிவுநீர்க் கால் திட்டங்களையும் விரைந்து நிறைவேற்றும் பொருட்டு, வெளி அங்காடிகளில் எளிதில் கிடைக்கப்பெறாத குழாய்களையும் பிற கருவிகளையும் தேவையான அளவிற்கு அரசு வாங்கி, இருப்பில் வைத்து வருகிறது. நீர் வழங்குதல், கழிவுநீர் அகற்றுதல் ஆகிய வேலைத் திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படும் குழாய்கள் முதலியன குறித்த செலவு, சரிக்கட்டல் மூலம், சம்பந்தப்பட்ட வேலைத் திட்டங்களுக்குப் பற்றாக எழுதப்பட்டு, அந்தந்த உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து வசூலிக்கப்படும். இருப்பு கரையக்கரைய அவ்வப்போது நிறைவு செய்யப்படும்.

(b) இனம் (ii)—உதவி மானியங்கள் (ரூ—1,26,200).

சென்னை மாநகராட்சி நிறைவேற்றும் நீர் வழங்குத் திட்டங்களுக்காகவும் வழங்கப்பட்ட உதவிமானியங்கள் குறித்த செலவினம், 1956–57, 1957–58-ம் ஆண்டுகளில் தொடக்கத்தில் மூலதனக் கணக்கிலிருந்து சரிகட்டப்பட்டது ; இச் செலவுத் தொகையை மூலதனக் கணக்கிலிருந்து 15 ஆண்டுகளில் வருமானக் கணக்கிற்கு மாற்றி எழுதப்படவேண்டுமென்று ஆணையிடப்பட்டது. இத் தொகை, ஆண்டுதோறும் மாற்றப்படுவதற்கான 1970–71-ம் ஆண்டுக்குரிய தொகையைக் காட்டுகிறது.

"30. பொதுச் சுகாதாரம்" என்பதன் கீழ் இதற்கு நிகராகச் செலவு காட்டப்பட்டுள்ளது.

(c) இனம். (iii)—c. வளர்ச்சித் திட்டங்கள் (ரூ. 30,000).

1966, டிசம்பர் திங்களில் நாங்குனேரி ஊராட்சிக்குக் குடிநீர் வழங்கும், திட்டத்திற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இப்பணி நிறைவேறி வருகிறது. இத் திட்டத்திற்காகும் செலவினைச் செய்ய நாங்குனேரி ஊராட்சிக்கு மானிய உதவி வழங்குவதன் பொருட்டு ரூ. 30,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

(d) இனம். (iv)—d. கழிக்கவும்—

"30. பொதுச் சுகாதாரம்" என்பதற்கு மாற்றப்பட்ட மூலதனச் செலவு (ரூ. 3,000).

கிராம நீர் வழங்கு (அடங்கல்) வேலைத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப் படும் பணிகளுக்கு, அவற்றின் மூலம் பயனடைபவர்களிடமிருந்து திட்டத்திற்காகும் செலவில் 25 சத வீதம் வசூலிக்கப்படும். எஞ்சிய தொகையாக ரூ. 3,000 பயனடைபவர்களிடமிருந்து வசூலிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இத் தொகையை மூலதனக் கணக்கிலிருந்து வருமானக் கணக்கிற்கு மாற்றவேண்டும்.

இந்த மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 30,53,000 ஒதுக்கப்படுவதை இம் மன்றம் ஏற்கவேண்டுமென்று வேண்டுகிறேன்.

## இணைப்பு V

[257-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க]

### தமிழ் நாட்டில் நகர நீர்வழங்கு ஏற்பாடு–கழிவு நீர் அகற்று திட்டங்கள் குறித்து பொது சுகாதாரப் பொறியியல் துறை மேற்கொண்ட நடவடிக்கைகள் மீதான அறிக்கை.

### 1. முன்னுரை.

நீர் வழங்கு-கழிவு நீர் அகற்று ஏற்பாடுகள் தமிழ்நாட்டில் சென்ற நூற்றுண்டின் இறுதியிலேயே தொடங்கப்பட்டன. 1890-ம் ஆண்டு தொடங்கி 1946-ம் ஆண்டு வரையில் தமிழ்நாட்டில் தற்போது சேர்க்கப் பட்டுள்ள பல்வேறு மாவட்டங்களில் நகர நீர் வழங்கு-கழிவு நீர் அகற்று ஏற்பாடுகளுக்காக ரூ. 300 லட்சமே செலவிடப்பட்டது. நீர் வழங்கு திட்டங்கள் 36 நகராட்சிகளிலும் 2 பேரூராட்சிகளிலும் செயல்பட்டு வந்தன. 3 நகராட்சிகளில் மட்டுமே புதைச்சாக்கடை அகற்று ஏற்பாடுகள் செயலில் உள்ளன. ஒரு சில பகுதிகளில் மட்டுமே பயன்பட்டு வந்த கழிவு நீர் அகற்று ஏற்பாடுத்திட்டம் 6 நகராட்சிகளிலும் 2 பேரூராட்சிகளிலும் செயல்பட்டு வந்தன. ஏறத்தாழ இத்திட்டங் களனைத்தையும் மேம்படுத்தவும் விரிவுபடுத்தவும் வேண்டிய அவசிய மிருந்தது. அரசால் நியமிக்கப்பட்ட நீர் வழங்கு-கழிவு நீர் அகற்று ஏற்பாட்டுக் குழு ஒன்று 1947-ம் ஆண்டில் தமிழ்நாட்டில் நீர் வழங்கு-கழிவு நீர் அகற்றுத் திட்டம் குறித்த பல்வேறு கூறு களையும் ஆராய்ந்து திட்டவட்டமான பரிவுரைகளைச் செய்தது. இக் குழுவின் பரிவுரைகளையொட்டி நகர்ப்பகுதிகளில் 20 ஆண்டுகளுக்குள் நீர் வழங்கு-கழிவு நீர் அகற்று திட்டங்கள் வகை செய்யப்படவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. முதற்படியாக, இக்குழு, தயாரித்த முதன்மை வரிசைப் பட்டியலும் தேவைப் பட்டியலும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. குழு தயாரித்த வரிசைப் பட்டியலையொட்டியே பல்வேறு நீர் வழங்கு-கழிவு நீர் அகற்று ஏற்பாடுகள் குறித்த ஆய்வு வேலை மேற்கொள்ளப்பட்டது.

### 2. நிறுவனமும் நிர்வாக அமைப்பும்.

நீர் வழங்கு-கழிவு நீர் அகற்று ஏற்பாடுகளுக்கு வகை செய்வது அந்தந்த உள்ளாட்சி மன்றங்களின் பொறுப்பு என்றாலும் நீர் வழங்கு-கழிவு நீர் அகற்று திட்டங்களைக் குறைந்த செலவில் மன நிறைவு தரும் வகையில் தக்க தரத்தில் நிறைவேற்ற முழுவதும் பயிற்சி பெற்ற, அனு பவம் மிகுந்த தொழில் நுட்ப பணியாளர்கள் கொண்ட திறமையான நிறுவனமொன்று அரசின் வசம் இருப்பது அவசியமாகும்.



1955-ம் ஆண்டு பாதிவரையில் பொதுப் பணித் துறையைச் சேர்ந்த துப்புரவு பொறியியல் பிரிவு, இம் மாநிலத்திலுள்ள உள்ளாட்சி மன்றங்களின் நீர் வழங்கு-கழிவு நீர் அகற்று திட்டங்களை ஆய்வு செய்து, அவற்றிற்கான வடிவமைப்பை வகுத்து அவற்றை நிறைவேற்றிப் பேணிவரும் பொறுப்பை ஏற்றுச் செயல்படுத்தி வந்தது. 1955-ம் ஆண்டின் பிற்பகுதியில் பொதுச் சுகாதார செயல் வட்டம் என அழைக்கப் படும் புதியதொரு வட்டம் அமைக்கப்பட்டது. இவ்வட்டம் பொதுச் சுகாதார மேற்பார்வைப் பொறியாளரின் பொறுப்பின்கீழ் செயல்பட்டு வந்தது. துப்புரவுப் பொறியாளர், பொதுச் சுகாதார மேற்பார்வைப் பொறியாளர் ஆகிய இருவரின் அலுவல்களும் பிரிக்கப்பட்டன. நகர நீர் வழங்கு-கழிவு நீர் அகற்று திட்டங்களை ஆய்ந்து அவற்றிற்கான வடிவமைப்பை வகுத்து அவற்றைப் பேணிவரும் பொறுப்பு துப்புரவு பொறியாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவ்வாறு ஆய்ந்து வடிவமைப்பு வகுக்கப்பட்ட திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பு பொதுச் சுகாதார மேற்பார்வைப் பொறியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

1962-ம் ஆண்டில் பொதுச் சுகாதாரப் பொறியியல்-நகராட்சிப் பணிகள் துறை ஒன்றைத் தனியாக அமைக்குமாறு அரசு ஆணையிட்டது. பொதுச் சுகாதாரப் பொறியியல்-நகராட்சிப் பணிகள் தலைமைப் பொறியாளர் இத் துறையின் தலைவராவார். இம் மாநிலத்தில் நகர நீர் வழங்கு-கழிவு நீர் அகற்று ஏற்பாடுகளனைத்தையும் ஆய்ந்து அவற்றிற்கான வடிவமைப்பை வகுத்து அவற்றை நிறைவேற்றிப் பேணிவரும் பொறுப்பு இவரையே முற்றும் சார்ந்ததாகும். துப்புரவுப் பணியாளர் வட்டமும், பொதுச் சுகாதாரச் செயல் வட்டமும் இத் துறையின் அதிகாரத்தின்கீழ் கொண்டு வரப்பட்டன.

பல்வேறு நீர் வழங்கு-கழிவு நீர் அகற்று திட்டங்கள் நிறைவேற்றப் படுவதற்காக மேற்கொள்ளப்பட்டமையால் பொதுச் சுகாதாரச் செயல் வட்டத்தில் வேலைச் சுமை அதிகரித்தது. இத் திட்டங்களை விரைவாக நிறைவேற்றுவது இயல்வதற்காக 1966-ம் ஆண்டு ஜூன் திங்களில் பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை வட்டார அடிப்படையில் மாற்றி அமைக்கப்பட்டது. சீரமைக்கப்பட்ட நிர்வாக அமைப்பில் பொதுச் சுகா தாரப் பொறியியல் வட்டங்கள் இரண்டு செயல்படுகின்றன. ஒன்று சென்னையிலும் மற்றொன்று மதுரையிலுமாக ஒவ்வொன்றும் பொதுச் சுகாதார மேற்பார்வைப் பொறியாளரின் பொறுப்பில் செயல்படுகின்றன. இரண்டு வட்டங்களும் அதனதன் அதிகார வரம்பிற்குள்ள பகுதிகளில் நகர நீர் வழங்கு-கழிவு நீர் அகற்று ஏற்பாடுகளை ஆய்ந்து அவற்றிற்கான வடிவமைப்பை வகுத்து அவற்றை நிறைவேற்றிப் பேணிவரும் பொறுப்பை வகிக்கின்றன. இந்த சீரமைக்கப்பட்ட நிர்வாக அமைப்பில், திட்டங் களைச் செயல்படுத்தும் முறை துரிதப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தி யதால் இதர திட்டங்களின் ஆய்வு, அமைப்புப் பணிகளில் செயல் வேகம் சற்று விரைவு குறைந்து வந்தது. ஆதலின் திட்ட ஆய்வு, அமைப்புப் பணிகட்கான தனிப்பட்ட ஒரு பொது சுகாதார பொறியியல் துறை வட்டம் அமைப்பது பற்றி தீவிரமாக நடவடிக்கை எடுக்கப்பட்டது. தமிழ் அரசு இதன் அடிப்படை நோக்கத்தை உணர்ந்து இப்பணிகளைச் செவ்வனே செய்ய பொது சுகாதாரப் பொறியியல் கோட்டம் ஒன்றினை அமைக்க ஒப்புதல் அளித்தது. இக்கோட்டம் தலைமைப் பொறியாளரின் கீழ் நேரடி நிர்வாகத்தில் அக்டோபர் 1969-லிருந்து செயல்பட்டு வருகிறது. பொதுச் சுகாதாரப் பொறியியல்-நகராட்சிப் பணிகள் துறையின் நிர்வாக அமைப்பைக் காட்டும் பட விளக்கமொன்று 1-வது இணைப்பில் கொடுக்கப் பட்டுள்ளது.

### 3. திட்டங்களுக்கான நிதி ஒதுக்கம்.

உள்ளாட்சி மன்றங்கள் பெரும்பாலும் அரசிடமிருந்து கடன் உதவி பெற்றும் மானியங்கள் பெற்றும் ஓரளவிற்கு அதனதன் நீர் வழங்கு-கழிவு நீர் அகற்று ஏற்பாடுக் கணக்குகளில் சேர்ந்து வந்துள்ள உள்ளாட்சி மன்ற நிதிகளிலிருந்தும் நீர் வழங்கு-கழிவு நீர் அகற்று ஏற்பாடுகளை நிறைவேற்றுகின்றன. திட்டங்களை ஆய்வதற்கு அல்லது தற்போதுள்ள

இவற்றைத் தவிர, குறிப்பிட்ட சில இடங்களுக்கு மட்டும்தான் பயன்படும் கழிவுநீர் அகற்று ஏற்பாடுகள் 9 நகராட்சிகளிலும் 1 நகரியத்திலும் ஏற்படுத்தப்பட்டன. நகர நீர் வழங்கு திட்டங்களிலிருந்து 35 கிராமங்களுக்கு நீர் வழங்கப்பட்டது.

மூன்றுவது திட்டக்கால இறுதியிலே நீர் வழங்கு திட்டத்தினல் 45 லட்சம் மக்களும் நிலத்திற்கடியில் நிறைவேற்றப்பட்ட கழிவு நீர் அகற்றுத் திட்ட ஏற்பாட்டினல் 9 லட்சம் மக்களும் பயனடைந்தனர்.

**7. 1966–67-ல் முன்னேற்றம்.**—மூன்றுவது திட்டத்தில் நிறைவேற்றப்படாது, எஞ்சிய 41 நீர் வழங்கு திட்டங்களும் கழிவு நீர் அகற்றுத் திட்டங்கள் ஒன்பதும் நிறைவேற்றப்படுவதற்காக அந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. இவற்றைத் தவிர திட்டத்தின் கீழே வராத அடியிற்கண்ட பணிகளும் மேற்கொள்ளப்பட்டன :—

(1) இந்தியத் தொழில் நுட்ப நிலையம், மத்தியப் பல்தொழிற் பயிற்சிப் பள்ளிக்கு நீர் வழங்கல் (உரூர் நீர் வழங்கு திட்டம்) ;

(2) ஆவடியிலுள்ள பாதுகாப்புத் தொழில்கள் திட்டத்திற்கு நீர் வழங்கல் முடிக்கப்பட்ட திட்டங்களை பேணுதல் ;

(3) தூத்துக்குடி துறைமுகத் திட்டத்திற்கு நாளொன்றுக்கு 30 லட்சம் காலன் நீர் வழங்கு திட்டம் ;

(4) நாங்குனேரி நீர் வழங்கு திட்டம் (கிராம வேலைத் திட்டம்) ;

(5) ஸ்ரீவில்லிப்புத்தூர் நீர்வழங்கு திட்டத்தை மேம்படுத்தல், தடுப்புச் சுவர் ஒன்றைக் கட்டுதல்.

(6) காயல்பட்டினம் முதலிய ஊராட்சிகளுக்கு ஒருங்கிணைந்த நீர் வழங்குத் திட்டம். காயல் பட்டிணம் ஊராட்சியில் நீர் வழங்கு தலைமைக் குழாய்கள் அமைக்கப்படாத ஒருசில பகுதிகளில் நீர் வழங்கு தலைமைக் குழாய்கள் அமைத்தல்.

ஐந்து புதிய நீர் வழங்கு திட்டங்களையும் 2 நீர் வழங்கு மேம்பாட்டுத் திட்டங்களையும் செயல்படுத்த அரசு 1966–67-ல் (பிற்சேர்க்கை II-ஐக் காண்க) ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. புதிய கழிவுநீர் அகற்றும் திட்டம் எதற்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கவில்லை. இந்த ஆண்டில் (5 புதியவை, 4 மேம்பாடுகள் ஆக) 9 நீர் வழங்குத் திட்டங்களும் கழிவு நீர் அகற்றுத் திட்டம் (புதியது) ஒன்றும் செயல் படுத்தப்பட்டன (பிற்சேர்க்கை V).

இந்த ஆண்டில் நிறைவேற்றப்பட வேண்டிய நீர் வழங்கு-கழிவு நீர் அகற்றுத் திட்டங்கள் எல்லாவற்றிற்கும் ரூ. 150 லட்சம் செலவாகுமென முதலில் முடிவு செய்யப்பட்டது. பின்னர், இச் செலவுத் தொகை ரூ. 180 லட்சமாக மாற்றியமைக்கப்பட்டது. நிதி ஒதுக்கம் முழுவதும் இந்த ஆண்டில் செலவிடப்பட்டது.

**8. 1967–68-ல் சாதனைகள்.**—நாற்பத்துநான்கு நீர் வழங்கு திட்டங்களும் கழிவு நீர் அகற்றுத் திட்டங்கள் ஒன்பதும் தற்போது செயல் படுத்தப்பட்டு வந்தன. இதைத்தவிர மேலே 7-வது பத்தியில் சொன்ன திட்டத்தின்பாற்படாத 6 வேலைகளும் முன்னேறி வந்தன. மேலும் காவிரியிலிருந்து நீர் எடுத்து வந்து சென்னை மாநகர நீர் வழங்குத் திட்டத்தை மேம்படுத்துவது குறித்த திட்டம் பற்றிய ஆய்வும், சிறுவாணியிலிருந்து நீர் பெற்று கோவை நகர நீர் வழங்கு திட்டத்தை மேம்படுத்துவது குறித்த திட்டம் பற்றிய ஆய்வும் நடைபெற்று வந்தன.

புதிய நீர் வழங்கு திட்டங்கள் நான்கும் கழிவு நீர் அகற்று மேம்பாட்டுத் திட்டம் ஒன்றும் 1967–68-ல் நிறைவேற்றப்பட ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. (பிற்சேர்க்கை II). இந்த ஆண்டில் நீர் வழங்கு திட்டங்கள் 10-ம்



(6 புதியவை, 4 மேம்பாடு) கழிவு நீர் அகற்றுத் திட்டங்கள் 2-ம் (புதியது ? 1 மேம்பாடு) முடிக்கப்பட்டு, பொது மக்களின் உபயோகத்திற்கு அவை கொண்டுவரப்பட்டன. (பிற்சேர்க்கை VI). 1967–68-ம் ஆண்டில் நீர் வழங்கு கழிவு நீரகற்றுத் திட்டங்கள் யாவற்றுக்கும் முதலீடு செய்யப்பட்ட தொகை ரூ. 170 லட்சம் ஆகும்.

**9. 1968–69 சாதனைகள்.**—(புதிய பணிகளும், மேம்பாட்டுப் பணிகளுமாக) 65 நீர் வழங்கு திட்டங்களும், 10 கழிவு நீரகற்றுத் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வந்தன. எட்டு புதிய குடிநீர் வழங்கும் திட்டங்களுக்கு அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது (பிற்சேர்க்கை 11). நகர குடிநீர் வழங்கு-கழிவு நீரகற்றும் திட்டங்கள் அனைத்துக்காகவும் இவ்வாண்டு ரூ. 121·77 லட்சம் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாண்டு 7 (6 புதியவை, 1 மேம்பாடு) குடிநீர் வழங்கு திட்டங்களும் 1 கழிவு நீரகற்றுத் திட்டமும் முடிக்கப்பட்டு பொது மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்பட்டன (இணைப்பு VII).

**10. எதிர்கால திட்டங்கள்.**—கடந்த ஐந்தாண்டுத் திட்டங்களின்போதும், மூன்று ஆண்டுத் திட்டங்களிலும் வேலை நிறைவேற்றப்பட்டும் கூட, நீர் வழங்கு திட்ட வசதிகள் 11 நகராட்சிகளிலும் 5 நகரியங்களிலும் 177 பேரூராட்சிகளிலும் (10,000-ம் அதற்கு மேற்பட்டும் மக்கள் தொகையுள்ளவை) ஏற்படுத்தப்படும். பெரும்பாலான நகராட்சிகளிலும், நகரியங்களிலும், பேரூராட்சிகளிலும், விரிவான கழிவுநீர் அகற்றும் திட்டங்கள் இல்லை. மேலும் தற்போதுள்ள வழங்கு கழிவுநீர் அகற்றும் திட்டங்களை நிறைவேற்றி பல ஆண்டுகள் ஆகின்றன. தற்போதையத் தேவைகளைப் பூர்த்தி செய்ய அவை போதுமானவை அல்ல. எனவே அவற்றை தற்போதையத் தேவைகளுக்கு ஏற்றவாறு மேம்படுத்துவது அவசியமாகும்.

புதிய நான்காவது திட்டத்தின்போது மேற்கொள்ளப்பட்ட நகர்ப்புற நீர் வழங்க—கழிவுநீர் அகற்றும் திட்டங்களுக்கான செலவு ரூபாய் 12,50 லட்சமாகும். நான்காவதுத் திட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கிற நீர் வழங்கு—கழிவுநீர் அகற்றும் திட்டங்களின் ஒரு பட்டியல் அரசால் ஏற்கப்பட்டது (இணைப்பு III). ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு மூன்று ஆண்டு திட்டக்கால அளவில் முடிவுறுமலுள்ள திட்டங்களை முடிப்பதற்கு முதலிடம் அளிக்கப்படும்.

தற்சமயம் குடிநீர் வழங்கு திட்டங்கள் கீழ்க்கண்ட இடங்களில் செயலிலுள்ளன :—

| | | |
|---|---|---|
| 84 | நகராட்சிகளில் .. .. .. | 66 |
| 18 | நகரியங்களில் .. .. .. | 13 |
| 210 | பேரூராட்சிகளில் .. .. | 26 |

இவற்றைத் தவிர நகர்ப்புற நீர் வழங்கு திட்டங்களிலிருந்து 55 கிராமங்களுக்கு நீர் வழங்குவது நீடிக்கப்பட்டுள்ளது.

கீழ்க்கண்ட இடங்களில் பூமிக்கடியில் கழிவுநீர் அகற்றும் திட்டங்கள் செயலில் உள்ளன :—

| | | |
|---|---|---|
| 84 | நகராட்சிகளில் .. .. .. | 4 |
| 18 | நகரியங்களில் .. — .. | 5 |
| 210 | பேரூராட்சிகளில் .. .. .. | 2 |

ஒன்பது நகராட்சிகளிலும், 1 பேரூராட்சியிலும் ஊராளவிற்குக் கழிவுநீர் அகற்றும் திட்டங்கள் செயலிலுள்ளன (பிற்சேர்க்கை XI).

11. 1969–70 சாதனைகள்.—(4-ம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாம் ஆண்டு). (புதிய பணிகளும், மேம்பாட்டுப் பணிகளுமாக) 56 குடிநீர் வழங்கு திட்டங்களும், 8 கழிவுநீர் அகற்றுத் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன (இணைப்பு VIII) 58 குடிநீர் வழங்கு திட்டங்களும் 16 கழிவு நீரகற்று திட்டங்களும் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன (இணைப்பு IX).

நான்கு குடிநீர் வழங்கு திட்டங்களுக்கு இவ்வாண்டில் அரசால் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது (பிற்சேர்க்கை II) ஆயுள் இன்ஷூரன்ஸினரால் குடிநீர் வழங்கு, மற்றும் கழிவுநீர் அகற்றும் திட்டங்களுக்கு கடன் வழங்கும் வசதியினை தமிழக அரசு இவ்வாண்டு பயன்படுத்த இருப்பதின் காரணமாக (இதன் விவரம் கீழே பத்தி 12-ல் காண்க) இவ்வாண்டு நகர குடிநீர் வழங்கு, கழிவுநீர் அகற்று திட்டங்கள் அனைத்துக்காகவும் அரசின் நிதியிலிருந்து முதலீடு செய்ய இருக்கும் மொத்த தொகை ரூ. 1,89.00 லக்ஷமாகும்.

இவ்வாண்டு 13 குடிநீர்வழங்கும் திட்டங்கள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயனுக்குக்கொண்டு வரப்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது (இணைப்பு X).

இவ்வாண்டு பருவமழை பெய்யாததின் காரணமாக தமிழகமெங்கும் வறட்சி நிலை ஏற்பட்டு குடிதண்ணீருக்காக மக்கள் அல்லலுற்றனர். இதன் காரணமாக தமிழக அரசு தக்க நடவடிக்கை எடுத்துள்ளது. தற்சமயம் உள்ள கிணறுகளை ஆழப்படுத்தவும் புதிய கிணறுகள்/குழாய் கிணறுகள் அமைத்தும் மேற்படி வறட்சி நிலையினைப் போக்க அவசர காலப் பணிகளின் திட்டங்களை அரசு ஒப்புதல் அளித்தது.

தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலுமாக 94 இடங்களில் இத்தகைய வறட்சி நிவாரணத் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கு பணியினை ரூ. 1,10·62 லட்சம் மதிப்பில் அரசு ஒப்பளிப்பு அளித்து அப்பணியினை பொது சுகாதாரப் பொறியியல் துறையினரால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் பணிகள் அனைத்தும் தற சமயம் விரைவில் செயல்படுத்தி வருவதன் மூலம் எல்லா பணிகளும் பிப்ரவரி 1970-ல் முடிவு பெறும் என்று எதிர்ப் பார்க்கப்படுகிறது.

12. பொது சுகாதார பொறியியல் துறையினரால் தயாரிக்கப்பட்டு தானே இயங்கும் முறையில் உள்ள குடிநீர் வழங்கு, கழிவுநீர் அகற்றும் திட்டங்களைச் செயலாக்க அந்தந்த நகராட்சி/நகரியம்/பேரூராட்சிகளுக்கு கடன் உதவி செய்ய ஆயுள் இன்ஷூரன்ஸ் முன்வந்துள்ளது. தமிழ் நாட்டில் 22 குடிநீர் வழங்கு திட்டங்களுக்கும் 4 கழிவுநீர் அகற்றும் திட்டங்களுக்கும் (பிற்சேர்க்கை III) இக்கடன் உதவியைப் பெற்று செயற் பணிகளை விரைவில் நடத்த தமிழக அரசு முயற்சி எடுத்துள்ளது. இவ்வாண்டுக்கு ரூ. 3,00 லட்சம் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த 26 திட்டங்களின் மொத்த மதிப்பீடு ரூ. 13,92 லட்சம் ஆகும். 1969–70 இத்திட்டங்களின் ரூ. 2,80 லட்சம் மதிப்பீட்டுப் பணிகளை முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கடன் வசதியின் அடிப்படை ஒப் பந்தமாவது திட்டத்தின் மதிப்பீட்டில் மூன்றில் 2 பங்கை ஆயுள் இன் ஷூரன்ஸ் கடனாக அளிக்கும்; மீதி 1 பங்கை தமிழக அரசே ஏற்று திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். ஆயுள் இன்ஷூரன்ஸ் முதலீட்டு மேற்படி 26 திட்டங்களுக்குமாக ரூ. 1,92 லட்சம் கடனை இவ்வாண்டு அளிக்க ஒப்புதல் கொடுத்துள்ளது. இனைய 26 திட்டங்களையும் 18 முதல் 36 மாதங்களுக்குள் நிறைவேற்றி பொது மக்களால் செயல்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆயுள் இன்ஷூரன்ஸின் கடன் அளிக்கும் திட்டத்தினை மேலும் பயனாக்கிக் கொள்ள பல நகர குடிநீர் அபிவிருத்தித் திட்டங்களும், பெரிய பேரூராட்சிகளுக்குக்கான புதிய குடிநீர் திட்டங்



களும், கழிவுநீர் அகற்றும் திட்டங்களும் தயாரிக்கப்பட்டு வருகிறது. இவற்றினை கடந்த திட்டம் 2-வது வரிசையாக அரசுக்கு மேல் நடவடிக்கைக்கு அனுப்ப இருக்கிறது.

இந்த விரிவான கடன் பெறும் திட்டத்தின் காரணமாக இவ்வாண்டி லும் பின்வரும் ஆண்டுகளிலும் வேலைச் சுமை அதிகரிக்க இருப்பதால் தற்சமயம் நிர்வாகத்திலுள்ள பொது சுகாதாரப் பொறியியல் அலுவலர் களுக்கும் பொறியாளர்களுக்கும் வேலைச் சுமை அதிகரிக்கும். அதற்காகத் தேவையான பொறியாளர்களையும் மற்ற அலுவலர்களையும் நியமிக்க அரசு கொள்கையளவில் ஒப்பளித்துள்ளது. ஆய்வு அமைப்புப் பணி கட்கான பொது சுகாதாரப் பொறியியல் வட்டம் ஒன்றையும் தற்சமயம் நிர்வாகத்திலுள்ள 2 வட்டங்களுக்கும் அதிகமாக ஒவ்வொரு கோட்டமும் அமைக்க அரசு ஒப்புதலளித்துள்ளது. இப்புதிய வட்டமும் ஏனைய அலுவலர்களும் நியமிக்கப்பட்டு நிர்வாக அமைப்புப் பணி செய்ய முற்படும் சமயம் பொது சுகாதாரப் பொறியியல் துறை நிர்வாக அட்டவணை திருத்தி அமைக்கப்படும்.

13. தமிழக அரசு தமிழ்நாடு குடிநீர் வழங்கு கழிவுநீர் அகற்றும் வாரியம் ஒன்றினை நிர்மாணிக்க ஒப்புதல் அளித்தது. இந்த வாரியம் தமிழ்நாட்டில் நகர கிராமப்புற இடங்களில் குடிநீர் வழங்கு, கழிவுநீர் அகற்று திட்டப்பணிகள் சம்பந்தப்பட்ட மற்ற துறையினருடன் தொடர்பு கொண்டு இத் துறைப்பணிகளை விரைவாக செயல்படுத்த ஆவன செய்யும்

# இணைப்பு V-A

(அறிக்கையின் இரண்டாவது பாராவைப் பார்க்கவும்.)

**பொதுச் சுகாதாரப் பொறியியல் துறையின் நிர்வாக அமைப்பைக் காட்டும் அட்டவணை.**

**தலைமைப் பொறியாளர், பொதுச் சுகாதார பொறியியல் நகராட்சிப் பணிகள்.**

- மேற்பார்வை பொறியாளர், பொதுச் சுகாதார பொறியியல் வட்டம், சென்னை.
  - நிர்வாகப் பொறியாளர், சென்னை.
    - உதவிப் பொறியாளர்கள். சென்னை, செங்கற்பட்டு, திருவள்ளூர், அரக்கோணம்.
  - நிர்வாகப் பொறியாளர், சேலம்.
    - உதவிப் பொறியாளர்கள். வேலூர், சேலம்-1, சேலம்-2, திருவண்ணாமலை.
  - நிர்வாகப் பொறியாளர், தஞ்சாவூர்.
    - உதவிப் பொறியாளர்கள். தஞ்சாவூர், சிதம்பரம், கும்பகோணம்.
  - உதவிப் பொறியாளர்கள். கொடுங்கையூர், கிண்டி (ஆராய்ச்சி) பண்டகசாலை உட்பிரிவு, மாநகராட்சி (குடிநீர் வழங்குதல்), மாநகராட்சி (கழிவு நீர் அகற்றுதல்), இயந்திர வல்லுனர்.
- துணைத் தலைமைப் பொறியாளர் (பொ.சு.)
  - உதவிப் பொறியாளர்-1.
  - உதவிப் பொறியாளர்-2.
  - தலைமை வரைவாளர்.
  - நேர்முக உதவியாளர்-1.
- நிர்வாகப் பொறியாளர் (அமைப்பு)
  - உதவிப் பொறியாளர் அமைப்பு-1.
  - உதவிப் பொறியாளர் அமைப்பு-2.
  - உதவிப் பொறியாளர் அமைப்பு-3.
- மேற்பார்வை பொறியாளர், பொதுச் சுகாதார பொறியியல் வட்டம், மதுரை.
  - நிர்வாகப் பொறியாளர், மதுரை.
    - உதவிப் பொறியாளர்கள். மதுரை I, மதுரை II, தேனி, பழனி, அருப்புக்கோட்டை.
  - நிர்வாகப் பொறியாளர், திருநெல்வேலி.
    - உதவிப் பொறியாளர்கள். பாளையங்கோட்டை, திருநெல்வேலி, விருதுநகர், தென்காசி, ராஜபாளையம், தூத்துக்குடி (சிறப்பு).
  - நிர்வாகப் பொறியாளர், கோயம்புத்தூர்.
    - உதவிப் பொறியாளர்கள். கோயம்புத்தூர், பொள்ளாச்சி, ஈரோடு, திருச்சிராப் பள்ளி, உதகமண்டலம் (சிறப்பு).
  - உதவிப் பொறியாளர்கள். — மேற்பார்வை பொறியாளருக்கு நேராக உதவியாளர், யந்திர வல்லுநர்.

## பிற்சேர்க்கை I.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முன்னர் நீர்வழங்கு கழிவுநீர் அகற்றும் திட்டங்கள் செயலில் இருந்த நகரங்களின் பட்டியல்.

| மாவட்டம். (1) | நகராட்சிகள். (2) | நகரியங்கள். (3) | பேரூராட்சிகள். (4) |
|---|---|---|---|
| A. நீர் வழங்குதல்— | | | |
| 1 செங்கற்பட்டு | (1) செங்கற்பட்டு | .... | .... |
| | (2) காஞ்சீபுரம் | | (1) திருத்தணி |
| | (3) திருவள்ளூர் | .... | .... |
| 2 வட ஆற்காடு | (4) அரக்கோணம் | .... | .... |
| | (5) திருவண்ணாமலை | .... | .... |
| | (6) வேலூர் | .... | .... |
| | (7) வாலாஜாபேட்டை | .. | .... |
| | (8) குடியாத்தம் | .... | .... |
| 3 தென் ஆற்காடு | (9) சிதம்பரம் | (1) அண்ணாமலை நகர் | .... |
| | (10) கடலூர் | .... | .... |
| 4 சேலம் | (11) சேலம் | (2) மேட்டூர் | .... |
| 5 தஞ்சாவூர் | (12) தஞ்சாவூர் | .... | (2) அறந்தாங்கி |
| | (13) கும்பகோணம் | .... | .... |
| | (14) நாகப்பட்டினம் | .... | .... |
| 6 திருச்சிராப்பள்ளி | (15) திருச்சிராப்பள்ளி | .... | .... |
| | (16) ஸ்ரீரங்கம் | .... | .... |
| | (17) புதுக்கோட்டை | .... | .... |
| | (18) கரூர் | .... | .... |
| | (19) மணப்பாறை | .... | .... |
| 7 கோயம்புத்தூர் | (20) கோயம்புத்தூர் | (3) பவானிசாகர் | .... |
| | (21) ஈரோடு | .... | .... |
| | (22) திருப்பூர் | .... | .... |
| | (23) பொள்ளாச்சி | .... | .... |
| | (24) மேட்டுப்பாளையம் | .... | .... |
| 8 நீலகிரி | (25) உதகமண்டலம் | .... | .... |
| | (26) குன்னூர் | .... | .... |
| 9 மதுரை | (27) மதுரை | .... | (3) வத்தலகுண்டு |
| | (28) திண்டுக்கல் | (4) கொடைக்கானல் | .... |
| | (29) பழனி | .... | .... |
| | (30) பெரியகுளம் | .... | .... |
| | (31) போடிநாயக்கனூர் | .... | .... |
| 10 இராமநாதபுரம் | (32) காரைக்குடி | .... | .... |
| | (33) விருதுநகர் | (5) இராமேஸ்வரம் | .... |
| 11 திருநெல்வேலி | (34) தூத்துக்குடி | .... | .... |
| | (35) செங்கோட்டை | .... | .... |
| 12 கன்னியாகுமரி | (36) நாகர்கோவில் | .... | .... |
| | 36 | 5 | 3 |

| மாவட்டம். (1) | நகராட்சிகள். (2) | நகரியங்கள். (3) | பேரூராட்சிகள். (4) |
|---|---|---|---|
| B. கழிவுநீர் அகற்றுதல்— | | | |
| 1 செங்கற்பட்டு .. .. .. | (1) செங்கற்பட்டு (ஒரு பகுதி) .. | .... | .... |
| 2 வட ஆற்காடு .. .. .. | (2) வேலூர் (ஒரு பகுதி) .. .. | .... | .... |
| 3 தென் ஆற்காடு .. .. | .... .. | (1) அண்ணாமலை நகர் (ஒரு பகுதி) | .... |
| 4 சேலம் .. .. .. .. | (3) சேலம் (ஒரு பகுதி) .. .. | (2) மேட்டூர் (ஒரு பகுதி) | .... |
| 5 தஞ்சாவூர் .. .. .. | .... | | |
| 6 திருச்சிராப்பள்ளி .. .. | (4) புதுக்கோட்டை (ஒரு பகுதி) .. | .... | .... |
| | (5) ஸ்ரீரங்கம் (ஒரு பகுதி) .. .. | .... | .... |
| 7 கோயம்புத்தூர் .. .. | (1) கோயம்புத்தூர் (பாதாளச் சாக்கடை). .. | .... | .... |
| 8 நீலகிரி .. .. .. | (2) உதகமண்டலம் (பாதாளச் சாக்கடை). .. | .... | .... |
| 9 மதுரை .. .. .. | (3) மதுரை (பாதாளச் சாக்கடை) .. | .... | .... |
| 10 இராமநாதபுரம் .. .. .. | (6) பரமக்குடி (ஒரு பகுதி) .. .. | .... | .... |
| 11 திருநெல்வேலி .. .. | .... .. | .... | .... |
| 12 கன்னியாகுமரி .. .. | .... .. | .... | .... |
| மொத்தம் .. | 3 and 6 | 2 | |



## பிற்சேர்க்கை II.

முதல் ஆ... ண்டுத் திட்டகாலத்தில் முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டுவரப்பட்ட திட்டங்கள்.

### (A) குடிநீர் வழங்கல்

(i) வகை செய்யப்பட்டுள்ள புதிய திட்டங்கள்.

| மாவட்டம். (1) | நகராட்சிகள். (2) | நகரியம். (3) | பேரூராட்சி மன்றங்கள். (4) |
|---|---|---|---|
| இராமநாதபுரம் .. .. .. | (1) ஸ்ரீவில்லிபுத்தூர் .. .. | .... | .... |
| திருநெல்வேலி .. .. .. | (2) பாளையங்கோட்டை .. .. | (1) சங்கர் நகர் .. | (1) காயல்பட்டினம். (2) திருச்செந்தூர். (3) ஆறுமுகனேரி. (பயனடைந்த கிராமங்கள்: புன்னைக் காயல், வீரபாண்டியன் பட்டினம், ஆத்தூர்.) |
| கோயம்புத்தூர் .. .. | .. .... | (2) வால்பாறை .. | .... |
| தென் ஆற்காடு .. .. | .. .... | (3) நெய்வேலி .. | .... |
| மொத்தம் .. | 2 | 3 | 3 |

| மாவட்டம். (1) | நகராட்சிகள். (2) | நகரியம். (3) | பேரூராட்சி மன்றங்கள். (4) |
|---|---|---|---|
| | **(A) குடிநீர் வழங்கல்—தொடர்ச்சி.** | | |
| | (ii) தற்போதுள்ள திட்டங்களுக்கு நிறைவேற்றப்பட்ட மேம்பாடுகள். | | |
| கோயம்புத்தூர் .. .. .. | (1) திருப்பூர் .. .. .. | .... | .... |
| | (2) ஈரோடு .. .. .. | .... | .... |
| மொத்தம் .. | 2 | .. | .. |
| | **(B) கழிவுநீர் அகற்றுதல்.** | | |
| திருநெல்வேலி .. .. .. | .... | (1) சங்கர் நகர் .. | .... |
| தென் ஆற்காடு .. .. .. | .... | (2) நெய்வேலி .. | .... |
| மொத்தம் .. | .. | 2 | .. |



**பிற்சேர்க்கை III.**

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்போது நிறைவேற்றப்பட்டு பயனுக்குக் கொண்டுவரப்பட்டவைகள்.

| மாவட்டம். (1) | நகராட்சிகள். (2) | நகரியம். (3) | பேரூராட்சி மன்றங்கள். (4) |
|---|---|---|---|
| | **(A) குடிநீர் வழங்கல்.** | | |
| | (i) வகை செய்யப்பட்டுள்ள புதிய திட்டங்கள். | | |
| வட ஆற்காடு .. .. .. | (1) ஆரணி .. .. ..<br>(2) ஆற்காடு .. .. ..<br>(3) இராணிப்பேட்டை .. .. | ....<br>....<br>.... | ....<br>....<br>(1) திருவத்திபுரம். |
| தென் ஆற்காடு .. .. .. | (4) திண்டிவனம் (இரட்டணை கிராமத்திற்குக் குடிநீர் வழங்கல் விரிவுபடுத்தப்பட்டது). | .... | .... |
| தஞ்சாவூர் .. .. .. | (5) மாயூரம் (முதல் நிலை) ..<br>(6) மன்னார்குடி. .. .. | ....<br>.... | ....<br>.... |
| திருச்சிராப்பள்ளி .. .. .. | .... | .... | (2) துறையூர். |
| கோயம்புத்தூர் .. .. .. | (7) கோபிச்செட்டிபாளையம் .. | .... | .... |
| மதுரை .. .. .. | (8) கம்பம் .. .. .. | .... | (3) கூடலூர், * (4) உத்தமபாளையம், (5) சின்னமனூர் (பயன் அடைந்த மற்ற கிராமங்கள்—புதுப்பட்டி, அனுமந்தம்பட்டி, காமயக்கவுண்டன் பட்டி, மார்க்கையன் கோட்டை). |

| மாவட்டம். (1) | நகராட்சிகள். (2) | நகரியம். (3) | பேரூராட்சி மன்றங்கள் (4) |
|---|---|---|---|
| இராமநாதபுரம் .. .. .. | (9) சிவகாசி .. .. .. | .... | (6) சாத்தூர். |
| திருநெல்வேலி .. .. .. | (10) திருநெல்வேலி .. .. | .... | .... |
| | (11) மேலப்பாளையம் .. .. | .... | .... |
| கன்னியாகுமரி .. .. .. | .... | (1) கன்னியாகுமரி .. | .... |
| மொத்தம் .. | 11 | 1 | 6 |

(ii) தற்போதுள்ள திட்டங்களுக்கு நிறைவேற்றப்பட்ட மேம்பாடுகள்.

| | | | |
|---|---|---|---|
| செங்கற்பட்டு .. .. .. | (1) செங்கற்பட்டு .. .. .. | .... | .... |
| | (2) காஞ்சீபுரம் (முதல் நிலை) .. | .... | .... |
| வட ஆற்காடு .. .. .. | (3) வேலூர் .. .. .. | .... | .... |
| தென் ஆற்காடு .. .. .. | (4) கடலூர் .. .. . | .... | .... |
| | (5) சிதம்பரம் .. .. .. | .... | .... |
| தஞ்சாவூர் .. .. .. | (6) கும்பகோணம் (முதல் நிலை) .. | .... | .... |
| திருச்சிராப்பள்ளி .. .. .. | (7) புதுக்கோட்டை (முதல் நிலை) .. | .... | .... |

* ம்பம் பள்ளத்தாக்கு ஊராட்சிக்கு ஒருங்கிணைந்த நீர்வழங்குத் திட்டம். முண்ணேடி முறையில் குடிநீர் வழங்கப்பட்டது.
† நாகர்கோயில் குடிநீர் வழங்குத் திட்டத்திலிருந்து சுசீந்திரம் ஊராட்சிக்கு தண்ணீர் வழங்கப்பட்டது. (மக்கள் தொகை 01,000-க்கு குறைவாக).



| | | | |
|---|---|---|---|
| இராமநாதபுரம் .. .. | (8) விருதுநகர் .. .. .. .. | .. | .. |
| திருநெல்வேலி .. .. | (9) தூத்துக்குடி .. .. .. | .. | .. |
| கன்னியாகுமரி .. .. | (10) நாகர்கோயில் .. .. .. | .. | |
| மொத்தம் .. | 10 | .. | .. |

(பி) கழிவுநீர் அகற்றல்.

(i) வகை செய்யப்பட்டுள்ள புதிய திட்டங்கள்.

| | | | |
|---|---|---|---|
| இராமநாதபுரம் .. .. | (1) விருதுநகர் (ஒரு பகுதி) .. .. | .. | .. |
| திருநெல்வேலி .. .. | (2) தூத்துக்குடி (ஒரு பகுதி) .. .. | .. | .. |
| மொத்தம் .. | 2 | .. | .. |

(ii) தற்போதுள்ள திட்டங்களுக்கு நிறைவேற்றப்பட்ட மேம்பாடுகள்.

| | | | |
|---|---|---|---|
| தஞ்சாவூர் .. .. .. | (1) நாகப்பட்டினம் (ஒரு பகுதி) .. | .. | .. |
| திருச்சிராப்பள்ளி .. .. | (2) ஸ்ரீரங்கம் (ஒரு பகுதி) .. | .. | .. |
| மதுரை .. .. .. | (3) மதுரை (பாதாள சாக்கடை அமைப்பு) .. | .. | .. |
| மொத்தம் .. | 3 | .. | .. |

## பிற்சேர்க்கை IV.

### மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தின்போது நிறைவேற்றப்பட்டு பயனுக்குக் கொண்டுவரப்பட்டவைகள்.

### (எ) குடிநீர் வழங்கல்.

#### (i) வகை செய்யப்பட்டுள்ள புதிய திட்டங்கள்.

| மாவட்டம். (1) | நகராட்சிகள். (2) | நகரியம். (3) | பேரூராட்சி மன்றங்கள். (4) |
|---|---|---|---|
| செங்கற்பட்டு .. .. .. | (1) திருவொற்றியூர் (நீர்த் தேக்கம் கட்டும் வேலை முடிக்கப்பட வேண்டும்). | — | .... |
| தென் ஆற்காடு .. .. | .. .. .. | .. | (1) விருத்தாசலம். |
| சேலம்* .. .. .. | (2) இடப்பாடி .. — — | .. | (2) சூரமங்கலம் (சேலம் வழியிலுள்ள கிராமங்களுக்கு நீர் வழங்கும் திட்டம்). பயனடைந்த மற்ற கிராமங்கள்—தாரமங்கலம், ஜலகண்டபுரம், நங்கவல்லி, வனவாசி.<br>(3) நாமக்கல் (முன்னோடித் திட்டம்). |
| திருச்சிராப்பள்ளி .. .. | .. .. .. | .. | (4) மணச்சநல்லூர். |
| கோயம்புத்தூர் .. .. | (3) உடுமலைப்பேட்டை † (முன்னோடியாக ஓரளவுக்கு மட்டும் நீர் வழங்கப்பட்டுள்ளது). | .. | .... |
| | (4) தாராபுரம் — — .. | .. | .... |
| ·விரி .. .. .. .. | .. — .. | (1) அரவங்காடு | (5) காரமடை. |
| ·துரை .. .. .. | .. — | .... | (6) சின்னாளப்பட்டி (திண்டுக்கல் வழியிலுள்ள கிராமங்களுக்கு நீர் வழங்குத் திட்டம். பயனடைந்த வழியிலுள்ள மற்ற கிராமங்கள் பித்தளைப் பட்டி, ஆத்தூர், வாக்கம் பட்டி, சித்தய்யன்கோட்டை). |
| ராமநாதபுரம் .. .. | (5) தேவகோட்டை (முன்னோடித் திட்டம்). | —.. | —— |
| | (6) சிவகங்கை .. .. — | .... | ..— |
| | (7) பரமக்குடி (முன்னோடித் திட்டம்). | —.. | ..— |
| | (8) இராசபாளையம் (முன்னோடித் திட்டம்). | .... | ..— |
| ருநெல்வேலி .. .. | (9) சங்கரன்கோயில் (முன்னோடித் திட்டம்). | .... | ..... |
| | (10) புளியங்குடி (முன்னோடித் திட்டம்)‡ (குடிநீர் வழங்கல் திட்டம், சங்கரன்கோயில் குடிநீர் வழங்கல் திட்டத்திலிருந்து விரிவுபடுத்தப்பட்டுள்ளது). | .... | .... |

| மாவட்டம். (1) | நகராட்சிகள். (2) | நகரியம். (3) | பேரூராட்சி மன்றங்கள். (4) |
|---|---|---|---|
| திருநெல்வேலி—தொடர்ச்சி. | | | |
| | (11) தென்காசி (முன்னேடியாக ஓரளவு நீர் வழங்க பட்டது). | (1) குற்றலம் (a) | .... |
| மொத்தம் .. | 11 | 2 | 6 |

குறிப்பு.—கம்பம் பள்ளத்தாக்கு ஊராட்சிகள் குடிநீர் வழங்குத் திட்டம் (முன்னேடித் திட்டம்) இரண்டாவது திட்டத்தில் தொடங்கி மூன்றாவது திட்டக் காலத்தில் முடிக்கப்பட்டது.

* சேலம் மாவட்டத்திலுள்ள வேலூர் ஊராட்சிக்கு குடிநீர் வழங்கல் முடிவடைந்துவிட்டது. (மக்கள் தொகை 10,000-க்கு குறைவாக).

† உடுமலைப்பேட்டை குடிநீர் வழங்குத் திட்டத்திலிருந்து கீழ்க்கண்ட கிராமங்களுக்கு முன்னேடியாக நீர் வழங்குதல் நீடிக்கப் பட்டது:—

(1) தாமை, (2) ஜல்லிப்பட்டி, (3) போடிப்பட்டி, (4) பள்ளப்பாளையம் (இன்னும் செயலுக்கு வரவில்லை).

‡ சங்கரன்கோயில் குடிநீர் வழங்கு திட்டத்திலிருந்து முன்னேடியாக நீர் வழங்கல் கீழ்க்கண்ட கிராமங்களுக்கு நீடிக்கப் பட்டது :—

(1) முல்லிக்குளம், (2) தலைவன் கோட்டை, (3) மலையாடிகுறிச்சி, (4) தாருகாபுரம், (5) நகரம்—துரைசாமிபுரம். (6) வீரிருப்பு, (7) வடக்குப்புதூர்.

@ தென்காசி-குற்றலம் குடிநீர் வழங்கு திட்டத்திலிருந்து முன்னேடியாக நீர் வழங்கல் திட்டம் கீழ்க்கண்ட கிராமங்களுக்கு நீடிக்கப்பட்டது :—

(1) இலஞ்சி, (2) மேலகரம், (3) குடியிருப்பு, (4) நன்னகரம்.



(ii) தற்போதுள்ள குடிநீர் வழங்கல் திட்டங்களுக்குச் செய்யப்பட்ட மேம்பாடுகள்.

| | | | |
|---|---|---|---|
| தென் ஆற்காடு .. .. | (1) கடலூர் (நகர் பழைய குடிநீர் வழங்கல் திட்ட மேம்பாட்டுப் பணிகள்). | .... | .... |
| சேலம் .. .. .. | (2) சேலம் (முதல் பிரிவு) .. | ... | .... |
| தஞ்சாவூர் .. .. .. | (3) மாயூரம் (இரண்டாம் நிலை). | .... | .... |
| | (4) தஞ்சாவூர் (முதல் நிலை) | .... | .... |
| கோயம்புத்தூர் .. .. | (5) கோயம்புத்தூர் (சாய்புக் குழாயகளை இரட்டித்தல்). | .. | .... |
| | (6) திருப்பூர் (வழியிலுள்ள கிராமங்களுக்கும் நீர் வழங்கப்பட்டது. பயன் அடைந்த மற்ற கிராமங்கள் : அன்னூர், அவிஞசி, திருமுருகம்பூண்டி. | .... | .... |
| | (7) பொள்ளாச்சி (பங்கீட்டு குழாய் அமைக்கும் பணியை மேம்படுத்துதல்). | .... | .... |
| மதுரை .. .. | (8) மதுரை (மேலக்கல் தலைப் பகுதி வேலைகள் முடிவுற்றன). | ... | ... |

| மாவட்டம். (1) | நகராட்சிகள். (2) | நகரியம். (3) | பேரூராட்சி மன்றங்கள் (4) |
|---|---|---|---|
| மதுரை—தொடர்ச்சி. | (9) திண்டுக்கல் (புதிய முறை). | | |
| மொத்தம் .. | 9 | .. | .. |

குறிப்பு.—வேலூர் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம் (வட ஆர்க்காடு மாவட்டம்)—இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் போது முடிவடையாத பணியின் எஞ்சிய பகுதி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது முடிவடைந்தது.

(B) கழிவு நீர்.

(i) வகை செய்யப்பட்டுள்ள புதிய திட்டங்கள்.

| | | | |
|---|---|---|---|
| இராமநாதபுரம் .. .. .. | .... | .... | (1) சாத்தூர் (வீட்டுக் குழாய் இணைப்புகள் நீங்கலாக) (நீட்டிக்கப்பட்ட பகுதிகள் நீங்கலாக). |
| நீலகிரி .. .. .. .. | .... | 1. அரவங்காடு. | .... |
| மொத்தம் .. | .. | 1 | 1 |

(ii) தற்போதுள்ள திட்டங்களுக்கு நிறைவேற்றப்பட்ட மேம்பாடுகள்.

| | | | |
|---|---|---|---|
| மதுரை .. .. .. .. | (1) மதுரை (புயல்நீர், கழிவு நீர் அகற்றுத் திட்டம்). | .... | .... |
| மொத்தம் .. | 1 | .. | .. |



## பிற்சேர்க்கை V

1966-67-ம் ஆண்டு பயனுக்குக் கொண்டுவரப்பட்ட திட்டங்கள்.

(A) குடிநீர் வழங்குதல்.

(i) புதிய திட்டங்கள்.

| மாவட்டம். (1) | நகராட்சிகள். (2) | நகரியம். (3) | பேரூராட்சி மன்றங்கள். (4) |
| 12 | திருநெல்வேலி .. .. | (57) மேலப்பாளையம் .. .. | (11) குற்றாலம் .. .. | (24) திருச்செந்தூர். |
| | | (58) பாளையங்கோட்டை .. .. | (12) சங்கர்நகர் .. .. | (25) காயல்பட்டிணம். |
| | | (59) திருநெல்வேலி .. .. | .... | (26) ஆறுமுகனேரி. ஆத்தூர். (வீரபாண்டியப்பட்டிணம்.) |
| | | (60) தூத்துக்குடி .. .. | .... | |
| | | (61) செங்கோட்டை .. .. | .... | †(இலஞ்சி மேலகரம் குடியிருப்பு. நன்னகரம்.) |
| | | (62) சங்கரன்கோயில் (முன்னோடித் திட்டம்). .. .. | .... | |



| தொடர் எண். | மாவட்டம். | நகராட்சிகள். | நகரியம். | பேரூராட்சிகள். |
|---|---|---|---|---|
| | | (63) புளியங்குடி (முன்னோடித் திட்டம்). | .... | *(முள்ளிக்குளம். தலைவன்கோட்டை. மலையடிக்குறிச்சி. தாருகாபுரம். நகரம். துரைசாமிபுரம். வீரிருப்பு. வடக்குப்புதூர்). |
| | | (64) தென்காசி† | .... | |
| 13 | கன்னியாகுமரி .. | (65) நாகர்கோயில். | (13) கன்னியாகுமரி (சுசீந்திரம்). | .... |
| | | (66) குழித்துறை. | .... | .... |
| | மொத்தம் .. | 66 | 13 | 26 |

குறிப்பு.—இத்திட்டத்தில் பயனடையும் வழியிலுள்ள ஊராட்சிகள், அடைப்புக் குறிக்குள் காண்பிக்கப்பட்டிருக்கின்றன.

B. கழிவுநீர் அகற்றல்

| தொடர் எண். | மாவட்டம். | நகராட்சிகள். | நகரியம். | பேரூராட்சிகள். |
|---|---|---|---|---|
| 1 | செங்கற்பட்டு .. | (1) செங்கற்பட்டு (ஓரளவு மூடப்பட்டு ஓரளவு திறந்த சாக்கடை). | .... | .... |

குடிநீர் வழங்கல்.

| தொடர் எண். | மாவட்டம். | நகராட்சிகள். | நகரியம். | பேரூராட்சிகள். |
|---|---|---|---|---|
| 2 | வட ஆற்காடு .. | (2) வேலூர் (ஓரளவு மூடப்பட்டது) | .... | .... |
| 3 | தென் ஆர்க்காடு .. | .... | .... | .... |
| | | (3) சிதம்பரம். | (1) நெய்வேலி. | .... |
| | | | (2) அண்ணாமலை நகர். | .... |

| தொடர் எண். | மாவட்டம். | நகராட்சிகள். | நகரியம். | பேரூராட்சிகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | B. கழிவுநீர் அகற்றல்—தொடர்ச்சி. | | |
| 4 | சேலம் .. | (4) சேலம் (ஓரளவு மூடப் பட்டது). | (3) மேட்டூர் (ஓரளவு மூடப் பட்டது). | .... |
| 5 | தஞ்சாவூர் .. | (5) நாகப்பட்டணம் (ஓரளவு மூடப்பட்டது). | .... | .... |
| 6 | திருச்சிராப்பள்ளி .. | (6) புதுக்கோட்டை (ஓரளவு மூடப்பட்டது). | .... | (2) லால்குடி (திறந்த சாக் கடை). |
| | | (7) ஸ்ரீரங்கம் (ஓரளவு மூடப் பட்டது). | .... | .... |
| 7 | கோயம்புத்தூர் .. | (8) கோயம்புத்தூர். | (4) அரவங்காடு. | |
| 8 | நீலகிரி .. | (9) உதகமண்டலம். | .... | .... |
| 9 | மதுரை .. | (10) மதுரை. | .... | (1) திருமங்கலம். |
| 10 | இராமநாதபுரம் .. | (11) பரமக்குடி (திறந்த சாக்கடை). | .... | (3) சாத்தூர். |
| | | (12) விருதுநகர் (ஓரளவு மூடப்பட்டது). | .... | .... |
| 11 | திருநெல்வேலி .. | (13) தூத்துக்குடி (திறந்த சாக்கடை). | (5) சங்கர் நகர். | .... |
| | மொத்தம் | 13 | 5 | 3 |



சுருக்கம்

| வரிசை எண். | விவரம். | குடிநீர் வழங்கல். | | ஊராட்சிகள். | | | | கழிவுநீர் அகற்றல். | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | நகராட்சி கள். | நகரியம். | பேரூராட்சி. | ஊராட்சி. | நகராட்சி கள். | நகரியம். | பேரூராட்சி. | ஊராட்சி. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1 | செயலிலுள்ள திட்டங்கள் .. | 65+1 | 13 | 26 | 55 | 4+9 * | 5 | 2+1 * | .. |
| 2 | நிறைவேற்றப்படும் புதிய திட்டங்கள் .. | 9 | .. | 7 | 68 | 5 | .. | .. | .. |
| 3 | வகை செய்யப்படாதவை .. | 10 | 5 | 177 | .. | 76 | 13 | 208 | .. |
| | மொத்தம் .. | 85 | 18 | 210 | 87 | 94 | 18 | 211 | .. |

* குறிப்பிட்ட இடங்களுக்கு மட்டும் பயன்படும் திறந்த கழிவுநீர்த் திட்டங்களும், பகுதித் திட்டங்களும் உடுக்குறியிட்டால் காட்டப்பட்டுள்ளன.

[1970 மார்ச் 30

## இணைப்பு V-B.

### அரசு ஒப்பளிப்பு வழங்கிய திடங்கள்.

| தொடர் எண்ணும், மாவட்டமும். (1) | திட்டத்தின் பெயர். (2) | செலவு மதிப்பீடு. (3) (ரூ. லட்சத்தில்.) |
|---|---|---|
| **I. 1966-67—** | | |
| தஞ்சாவூர் .. | (1) நாகபட்டிணம் குடி நீர் வழங்கும் மேம பாட்டுத் திட்டம் கூடு தல் நீர்த் தேக்கம் கட்டுதல். | 1·64 |
| கோயம்புத்தூர் .. | (2) குறிச்சி குடிநீர் வழங் கும் திட்டம். | 15·06 |
| | (3) பெருந்துறை முதலிய பஞ்சாயத்துக்களின் குடிநீர் வழங்கும் திட்டம். | 42·45 |
| இராமநாதபுரம் .. | (4) இராமநாதபுரம் குடி நீர் வழங்கும் திட்டம். | 37·41 |
| திருநெல்வேலி .. | (5) சுடையநல்லூர் குடிநீர் வழங்கும் திட்டம். | 30·00 |
| | (6) விக்ரமசிங்கபுரம் குடி நீர் வழங்கும் திட்டம். | 27·55 |
| கன்னியாகுமரி .. | (7) நாகர்கோயில் குடிநீர் வழங்கும் மேம்பாடு கள், கூடுதல் நீர்த் தேக்கம் கட்டுதல். | 3·28 |
| **II. 1967-68—** | | |
| வட ஆற்காடு .. | (1) ஆம்பூர் குடிநீர் வழங் கும் திட்டம். | 40·00 |
| | (2) திருப்பத்தூர் குடிநீர் வழங்கும் திட்டம். | 28·48 |
| தஞ்சாவூர் .. | (3) திருவாரூர் குடிநீர் வழங்கும் திட்டம். | 27·76 |
| சேலம் .. | (4) கிருஷ்ணகிரி குடிநீர் வழங்கும் திட்டம். | 28·00 |
| திருநெல்வேலி .. | (5) பாளையம்கோட்டை குடி நீர் வழங்கும் திட்டம் பெருமாள்புரம் முத லிய பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டத்தை நீட்டித் தல். | 12·22 |



1970 மார்ச் 30]

| தொடர் எண்ணும், மாவட்டமும். (1) | திட்டத்தின் பெயர். (2) | செலவு மதிப்பீடு. (3) (ரூ. லட்சத்தில்.) |
|---|---|---|
| **III. 1968-69—** | | |
| தென் ஆற்காடு .. .. | (1) திருக்கோயிலூர் குடி நீர் வழங்கும் திட்டம். | 11·45 |
| | (2) கள்ளக்குறிச்சி குடிநீர் வழங்கும் திட்டம். | 9·99 |
| | (3) சிதம்பரம் குடிநீர் வழங்கு திட்ட மேம்பாடு கள்—முதல் கட்டம். | 3·24 |
| திருநெல்வேலி .. .. | (4) தூத்துக்குடி நீர் வழங்கு திட்ட உடனடி மேம்பாடுகள். | 5·848 |
| | (5) சங்கரன்கோயில் குடி நீர்த் திட்டத்தின் வழி யிலுள்ள கிராமங்கள். | 12·63 |
| திருச்சிராப்பள்ளி .. .. | (6) திருச்சி தொழிற் பேட்டை மற்றும் பொறி யியல் கல்லூரி நீர் வழங்கு திட்டம். (பாரத கனரக மின்சார குடி நீர்த் திட்டத்தினின்று 10 லட்சம் காலன் வழங் குதல்.) | 17·211 |
| நீலகிரி .. .. | (7) உதகமண்டலம் குடிநீர் வழங்கு திட்டமும் பார் சான் பள்ளத்தாக்கு அணையினின்று குடிநீர் கொணர்தலும். | 33·00 |
| கோயமுத்தூர் .. .. | (8) திருப்பூர் குடிநீர்த் திட்ட விஸ்தரிப்புத் திட்டம் —விடுபட்ட பகுதிகளுக்கு நீர் வழங்கல். | 20·36 |
| **IV. 1969-70—** | | |
| செங்கற்பட்டு (முதற் கட்டம்) .. .. | (1) ஆலந்தூர் குடிநீர் வழங்கு திட்டம். | 3·52 |
| வட ஆற்காடு .. .. | (2) வாணியம்பாடி குடிநீர் வழங்கு திட்டம். | 27·57 |
| | (3) திருவத்திபுரம் குடிநீர் வழங்கு மேம்பாடு திட்டம். | 1·10 |
| மதுரை .. .. .. | (4) மதுரை குடிநீர்த் திட்ட மேம்பாடுகள் — வைகை ஆற்றில் சேகரக் கிணறு மூலம் குடிநீர் பெருக்கு தல். | 17·00 |

## இணைப்பு V-C.

### நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட குடிநீர் வழங்கல், கழிவுநீர் அகற்றும் திட்டங்கள்.

மூன்றாவது திட்டத்தில் நிறைவேற்றப்படாது எஞ்சியுள்ள திட்டங்கள்.

(A) குடிநீர் வழங்கும் திட்டங்கள்—

1 அருப்புக்கோட்டை குடிநீர் வழங்கும் திட்டம்.

2 விழுப்புரம் குடிநீர் வழங்கும் திட்டம்.

3 இராசிபுரம் குடிநீர் வழங்கும் திட்டம்.

4 பழனி குடிநீர் வழங்கும் மேம்பாட்டுத் திட்டம்.

5 குடியாத்தம் குடிநீர் வழங்கும் மேம்பாட்டுத் திட்டம்.

6 திருவண்ணாமலை குடிநீர் வழங்கும் மேம்பாட்டுத் திட்டம்.

7 திருச்சி குடிநீர் வழங்கும் மேம்பாட்டுத் திட்டம் (இரண்டாம் நிலை).

8 புதுக்கோட்டை குடிநீர் வழங்கும் மேம்பாட்டுத் திட்டம்.

9 சேலம் குடிநீர் வழங்கும் மேம்பாட்டுத் திட்டம்.

10 மதுரை குடிநீர் வழங்கும் மேம்பாட்டுத் திட்டம் (இரண்டாம் நிலை).

11 மதுரை குடிநீர் வழங்கும் மேம்பாட்டுத் திட்டம் (மூன்றாம் நிலை).

12 காஞ்சிபுரம் குடிநீர் வழங்கும் மேம்பாட்டுத் திட்டம் (மூன்றாம் நிலை).

13 கும்பகோணம் குடிநீர் வழங்கும் மேம்பாட்டுத் திட்டம்.

14 திருவள்ளூர் குடிநீர் வழங்கும் மேம்பாட்டுத் திட்டம்.

15 அரக்கோணம் குடிநீர் வழங்கும் மேம்பாட்டுத் திட்டம்.

16 தஞ்சாவூர் குடிநீர் வழங்கும் மேம்பாட்டுத் திட்டம் (இரண்டாம், மூன்றாம் நிலை).

17 பட்டுக்கோட்டை குடிநீர் வழங்கும் திட்டம்.

18 நாமக்கல் குடிநீர் வழங்கும் திட்டம்.

19 சங்கரன்கோயில் குடிநீர் வழங்கும் திட்டம்.

20 அல்லிநகரம் குடிநீர் வழங்கும் திட்டம் (தேனி).

21 திருச்செங்கோடு குடிநீர் வழங்கும் திட்டம்.

22 பரமக்குடி குடிநீர் வழங்கும் திட்டம்.

23 வந்தவாசி குடிநீர் வழங்கும் திட்டம்.

24 திருக்கழுக்குன்றம் குடிநீர் வழங்கும் திட்டம்.

25 திருத்தணி குடிநீர் வழங்கும் திட்டம்.

26 இலக்கம்பட்டி குடிநீர் வழங்கும் திட்டம்.

27 ஆவடியிலுள்ள படைக்கலம் தாங்கிய சிறப்புப்படை முகாம் குடிநீர் வழங்கும் திட்டம்.

28 உதகை குடிநீர் வழங்கும் மேம்பாட்டுத் திட்டம்.





(A) குடிநீர் வழங்கும் திட்டங்கள்—தொடர்ச்சி.

29 உடுமலைப்பேட்டை குடிநீர் வழங்கும் மேம்பாட்டுத் திட்டம்.

30 தாம்பரம் குடிநீர் வழங்கும் திட்டம்.

31 விருதுநகர் குடிநீர் வழங்கும் மேம்பாட்டுத் திட்டம்.

32 இராஜபாளையம் குடிநீர் வழங்கும் திட்டம்.

33 குழித்துறை குடிநீர் வழங்கும் திட்டம்.

34 தென்காசி-குற்றாலம் குடிநீர் வழங்கும் திட்டம்.

35 பவானி-குமாரபாளையம் குடிநீர் வழங்கும் திட்டம்.

36 ஆனைமலை-வேட்டைக்காரன்புதூர், கோட்டூர் முதலியவை குடிநீர் வழங்கும் திட்டம்.

37 சத்தியமங்கலம் குடிநீர் வழங்கும் திட்டம்.

38 காவேரிப்பட்டினம் குடிநீர் வழங்கும் திட்டம்.

39 ஏர்க்காடு குடிநீர் வழங்கும் திட்டம்.

40 இருகூர் குடிநீர் வழங்கும் திட்டம்.

41 திண்டுக்கல் குடிநீர் வழங்கும் திட்டம்.

42 திருவொற்றியூர் குடிநீர் வழங்கும் திட்டம்.

43 மாயூரம் குடிநீர் வழங்கும் திட்டம்.

44 சின்னாளப்பட்டி முதலியவை திண்டுக்கல் வழியில் உள்ள கிராமங்கள் குடிநீர் வழங்கும் திட்டம்.

45 திண்டுக்கல் குடிநீர் வழங்கும் திட்டம் (விட்டுவிடப்பட்ட பகுதிகள்).

(B) கழிவுநீர் அகற்றும் திட்டங்கள்—

46 கோயமுத்தூர் கழிவுநீர்த் திட்டம் (வீடுகளுக்கு இணைப்புக் கொடுப்பது உட்பட).

47 சிதம்பரம் கழிவுநீர்த் திட்டம்.

48 மன்னார்குடி கழிவுநீர்த் திட்டம் (ஒரு பகுதி).

49 பெரியகுளம் கழிவுநீர்த் திட்டம்.

50 லால்குடி கழிவுநீர்த் திட்டம் (சிறந்த சாக்கடைகள்).

51 கும்பகோணம் கழிவுநீர்த் திட்டம்.

52 தூத்துக்குடி கழிவுநீர்த் திட்டம் (கட்டுப்படுத்தப்பட்டது).

53 சாத்தூர் கழிவுநீர்த் திட்டம் (வீடுகளுக்கு இணைப்பு கொடுப்பது).

54 உதகமண்டலம் கழிவுநீர்த் திட்டம் (மேம்பாடுகள்).

55 திருமங்கலம் கழிவுநீர்த் திட்டம்.

இப்போதுள்ள குடிநீர் வழங்கு திட்டங்களுக்குச் செய்யப்படும் மேம்பாடுகள்.

1 பொள்ளாச்சி.

2 நாகப்பட்டிணம்.

3 செங்கற்பட்டு.

4 சிதம்பரம்.

5 குன்னூர்.

6 காரைக்குடி.

7 ஸ்ரீரங்கம்.

மன்னார்குடி.

ஸ்ரீவல்லிபுத்தூர்.

இப்போதுள்ள கழிவுநீர்த் திட்டங்களுக்குச் செய்யப்படும் மேம்பாடுகள்.

1 மதுரை கழிவுநீர்த் திட்டம்.

### புதிய கழிவுநீர்த் திட்டங்கள்.

1 திருச்சிராப்பள்ளி.
2 காஞ்சீபுரம்.
3 கடலூர்.
4 சேலம்.
5 திருநெல்வேலி.
6 ஆலந்தூர்.

### புதிய குடிநீர்த் திட்டங்கள்.

1 இராமநாதபுரம் நகராட்சி.
2 கடையநல்லூர் நகராட்சி.
3 திருப்பத்தூர் நகராட்சி.
4 ஆம்பூர் நகராட்சி.
5 கிருஷ்ணகிரி நகராட்சி.
6 திருவாரூர் நகராட்சி.
7 தர்மபுரி நகராட்சி.
8 வாணியம்பாடி நகராட்சி.
9 கோவில்பட்டி நகராட்சி.
10 ஆலந்தூர் நகராட்சி.
11 சிங்காநல்லூர்-உப்பிலிப்பாளையம்.
12 ஆத்தூர் நகராட்சி.
13 பெருந்துறை, சென்னிமலை முதலான ஊராட்சிகள்
14 விக்கிரமசிங்கபுரம் ஊராட்சி.
15 குறிச்சி ஊராட்சி.
16 கள்ளக்குறிச்சி ஊராட்சி.
17 திருக்கோயிலூர் ஊராட்சி.
18 அம்பத்தூர் நகரியம்.
19 பூவிருந்தவல்லி ஊராட்சி.
20 ஒட்டன்சத்திரம் ஊராட்சி.
21 அந்தியூர் ஊராட்சி.
22 சிறுமுகை ஊராட்சி.
23 மேல்விஷாரம் ஊராட்சி.
24 தச்சநல்லூர் ஊராட்சி.
25 கீழக்கரை ஊராட்சி.
26 குளித்தலை ஊராட்சி.
27 வெங்கரை ஊராட்சி.
28 புஞ்சைப்புகலூர் ஊராட்சி.
29 சோழசிங்கபுரம் ஊராட்சி.
30 பண்ருட்டி நகராட்சி.
31 சேரன்மகாதேவி ஊராட்சி.



## இணைப்பு V-D.

1969-70-ம் ஆண்டில் ஆயுள் இன்ஷூரன்ஸாரிடம் கடனுதவி பெறும் குடிநீர் வழங்கு, கழிவு நீரகற்றுத் திட்டங்கள்—

### A. குடிநீர் வழங்கு திட்டங்கள்.

1 தாம்பரம் குடிநீர் வழங்கு மேம்பாட்டுத் திட்டம்.
2 ஆலந்தூர் குடிநீர் வழங்கு திட்டம்.
3 செங்கல்பட்டு குடிநீர் வழங்கு மேம்பாட்டுத் திட்டம்.
4 ஆம்பூர் குடிநீர் வழங்கு திட்டம்.
5 திருப்பத்தூர் குடிநீர் வழங்கு திட்டம்.
6 வாணியம்பாடி குடிநீர் வழங்கு திட்டம்.
7 மேல்விஷாரம் குடிநீர் வழங்கு திட்டம்.
8 திருக்கோயிலூர் குடிநீர் வழங்கு திட்டம்.
9 கள்ளக்குறிச்சி குடிநீர் வழங்கு திட்டம்.
10 சேலம் குடிநீர் வழங்கு மேம்பாட்டுத் திட்டம்.
11 ஆத்தூர் குடிநீர் வழங்கு திட்டம்.
12 கிருஷ்ணகிரி குடிநீர் வழங்கு திட்டம்.
13 திருவாரூர் குடிநீர் வழங்கு திட்டம்.
14 பொள்ளாச்சி குடிநீர் வழங்கு மேம்பாட்டுத் திட்டம்.
15 பெருந்துறை குடிநீர் வழங்கு திட்டம்.
16 ஈரோடு குடிநீர் வழங்கு மேம்பாட்டுத் திட்டம்.
17 மதுரை குடிநீர் வழங்கு மேம்பாட்டுத் திட்டம் (சேகரக் கிணறு).
18 இராமநாதபுரம் குடிநீர் வழங்கு திட்டம்.
19 உதகமண்டலம் குடிநீர் வழங்கு மேம்பாட்டுத் திட்டம்.
20 கோவில்பட்டி குடிநீர் வழங்கு திட்டம்.
21 கடையநல்லூர் குடிநீர் வழங்கு திட்டம்.
22 விக்கிரமசிங்கபுரம் குடிநீர் வழங்கு திட்டம்.

### B. கழிவு நீரகற்றும் திட்டங்கள்.

23 மதுரை கழிவுநீர்த் திட்டம் (வைகையாற்றின் வட பகுதிகளுக்கு).
24 காஞ்சீபுரம் கழிவுநீர்த் திட்டம்.
25 கோயம்புத்தூர் கழிவுநீர் அகற்றும் மேம்பாட்டுத் திட்டம் (II-ம் பகுதி வேலைகளில் எஞ்சியுள்ளவையும், III-ம் பகுதி முழுமையும்).
26 திருச்சிராப்பள்ளி கழிவுநீர் அகற்றும் திட்டம்.

# தமிழ் நாடு சட்டப் பேரவை.

---

செவ்வாய்க்கிழமை, 1970 மார்ச் 31.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், திரு. ஜி. ஆர் எட்மண்ட் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 608, 609, 610 ஆகிய எண்களை உள்ள வினாக்கள் ஒத்திவைக்கப்படுகின்றன.

### திருமண வயது.

*611 வினா—திரு. ஏ. எம். இராஜா
திரு. என். எஸ். வி. சித்தன் } :மாண்புமிகு கல்வி சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமண வயதை உயர்த்துவது பற்றி இந்தியப் பேரரசு தமிழ்நாடு அரசின் கருத்தைக் கேட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ள கருத்து யாது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) திருமண வயதை ஆண்களுக்கு 21-ஆகவும், பெண்களுக்கு 18-ஆகவும் உயர்த்துவதற்கான சட்டத்தைக் கொண்டு வர இந்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கையில், திருமண வயதை ஆண்களுக்கு 21-ஆகவும், பெண்களுக்கு 18-ஆகவும் உயர்த்துவதற்குச் சம்மதம் அளித்திருப்பதாகத் தெரிவித்தார்கள். பெண்களுக்குத் திருமண வயதை 25-ஆக உயர்த்தினால் அதன் மூலம் மக்கள் தொகைப் பெருக்கத்தை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த முடியும் என்பதை அரசு உணருகிறதா? ஆம் எனில், அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, 1929-ஆம் ஆண்டு, சைல்டு மாரேஜ் ரெஸ்ட்ரெயின்ட் ஆக்ட என்று, குழந்தைகள் திருமணத் தடுப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதற்கு முன்னால், திருமணத்தை ஐந்து வயதிலும், ஆறு வயதிலும், எட்டு வயதிலும் செய்துகொண்டிருந்தார்கள். அதிலே ஒரு வரையறை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் ஆண்களுக்குப் பதினெட்டு

வயதாக இருக்கவேண்டும் என்றும், பெண்களுக்குப் பதினைந்து வயதாக இருக்கவேண்டும் என்றும் சட்டம் வந்தது. நம்முடைய சராசரி வயது உயர்ந்திருக்கிற காரணத்தாலும், குடும்ப நலத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டியிருக்கிற காரணத்தாலும் இப்பொழுது ஆண்களுக்கு 21 வயதாகவும், பெண்களுக்கு 18 வயதாகவும் இருக்கவேண்டும் என்று வந்திருக்கிறது. இதில் படிப்படியாகத்தான் நாம் மேலே போக வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் கூறுகிறபடி பெண்களுக்கு 25 வயதாக ஆக்க வேண்டும் என்று சொல்வதை சமுதாயம் ஏற்றுக்கொள்ளாது. இப்பொழுதிருக்கிற பழக்க வழக்கங்களுக்கும் ஒத்து வராது. முதலில் இந்த அளவு உயர்த்துவதற்கே எதிர்ப்பு இருக்கிறது எங்கு பார்த்தாலும். ஆகவே, இந்த அளவுக்காவது வருவது நியாயம்தான் என்ற கருத்தின் அடிப்படையில், இந்த அரசு ஆண்களுக்கு 21-ஆகவும், பெண்களுக்கு 18-ஆகவும் திருமண வயதை உயர்த்துவதற்கான சட்டத்தைக் கொண்டு வர, இந்திய அரசினர் செய்த பரிந்துரையை ஏற்றுக்கொண்டு ஒப்புதல் அளித்திருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** காலந்தாழ்த்தித் திருமணம் செய்து கொள்வது குடும்பக் கட்டுப்பாட்டுக்கு முக்கியம் என்று சொல்லி, பெண் வயதை மட்டும் உயர்த்துவதைவிட, பெண் வயதை 20-ஆகவும், ஆண் வயதை 25 ஆகவும் உயர்த்துவது பற்றி அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இதற்கே எதிர்ப்பு இருக்கிற காரணத்தால், ஆண் வயதை 18-லிருந்து 21 என்றும், பெண் வயதை 15-இலிருந்து 18 என்றும் இப்பொழுது உயர்த்துகிறார்கள். இது நடைமுறைக்கு வந்தபிறகு நாட்டின் நிலைமையைக் கண்டறிந்து, ஆராய்ந்து, அதற்குப் பிறகு வேண்டுமானாலும்கூட வயதை உயர்த்தலாம். இப்பொழுது ஆண்களுக்கு 21 வயது, பெண்களுக்கு 18 வயது என்ற அளவுக்கு உயர்த்துவதுதான் பொருத்தமாக இருக்கும் என்று இந்தக் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. கரு. சீமைச்சாமி :** ஜனத்தொகைப் பெருக்கம், வயதைப் பொருத்திருக்கிறதா? அறுபது வயதுள்ளவருக்கும் குழந்தை பிறக்கிறதே. குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தமாகப் பிரசாரம் செய்கிற எல்லா அதிகாரிகளும் இந்துக்களல்லாத மக்களிடம் குடும்பக் கட்டுப்பாடு பற்றிப் பிரசாரம் செய்யப்பயப்படுகிறார்கள். ஆகவே, எல்லா மதத்தினரிடையேயும் பயப்படாமல் பிரசாரம் செய்ய அரசு என்ன ஏற்பாடு செய்ய உத்தேசித்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கணக்கெடுத்துக் பார்க்கும்போது, கிட்டத்தட்ட 16 முதல் 25, 30 வயது வரை உள்ளவர்கள்தான் அதிகமாகக் குழந்தைகளைப் பெற்றெடுக்கிறார்கள். சில பேர் அறுபது வயதானாலும் குழந்தை பெற்றெடுப்பதில்லை. ஆகவே, பொதுவான கணக்கின் அடிப்படையில் இந்த வயதின் அளவை ஓரளவு உயர்த்த முயற்சி எடுக்கப்படுகிறது. குடும்ப நலத் திட்டத்திற்காக மட்டும் இந்த வயது உயர்த்தப்படவில்லை. பெண்களின் உடலின் தன்மை கெடாமல், எதிர்காலத்தில் அவர்களுடைய உடல் நலம் பாதிக்கப்படாமலிருக்கும் கருத்தையும் அடிப்படையாக வைத்து, இந்த வயது உயர்த்தப்பட வேண்டும் என்ற முறை மேற்கொள்ளப்படுகிறது.

இப்பொழுது எல்லா மதத்தினரும் ஓரளவுக்காவது நிலைமைகளை உணர்ந்து பின்பற்ற முன் வருகிறார்கள். அறவே எல்லா மதத்தினரும் எதிர்க்கவில்லை. சில மதத்தினர்தான், குறிப்பாக கத்தோலிக்க மதத்தினர் எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்து இருந்தாலும், அந்த மதத்திலே மிகப் பொறுப்பு வாய்ந்த தலைமையிடத்தைப் பெற்றிருக்கிற ரெவரண்டு பிஷப் அருளப்பா அவர்கள் இந்த குடும்பநலத் திட்டத்தினுடைய நோக்கத்தை ஏற்றுக்கொண்டு, அவர்கள் அந்தச் சமூகத்திலே பரப்பி வருகிறார்கள். அப்படிப்பட்ட அந்த மதத்தைச் சேர்ந்த பெரியவர்கள் எல்லாம் எடுத்துச் சொல்லும் அடிப்படையில்



அந்த மதத்தினரிடமிருந்து வரும் எதிர்ப்பைச் சமாளிப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. டாக்டர் ஜாகிர் உசேன் இதை முழு அளவிற்கு வலியுறுத்தியிருக்கும் காரணத்தால், முஸ்லிம் மக்களிடையே பரப்ப அவர்களுடைய கருத்தை அச்சடித்து வழங்கும் முயற்சியும், ரெவரண்டு பிஷப் அருளப்பா போன்றவர்களுடைய கருத்தை அச்சடித்து வழங்கும் முயற்சியும் குடும்ப நலத் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு. நா. வீராசாமி :** துணைத் தலைவர் அவர்களே, திருமண வயது குறித்து என்னதான் சட்டம் கொண்டு வந்தாலும், அது நடைமுறையில் எந்த அளவிற்குச் செயல்படுத்தப்படுகிறது என்பதை நாம் அறிவோம். புரோகிதத் திருமண முறையில் திருமணம் செய்துகொள்ளும்போது, வயதைப் பொறுத்தவரையில் அங்கே சட்டப்படி நடப்பதில்லை. எனவே, உண்மையிலேயே இந்தத் திருமண வயது குறித்து நல்ல முறையில் நாட்டில் ஒரு நிலை உருவாகவேண்டுமானால் பதிவுத் திருமணம் செய்வதுதான் நல்லது. ஆகவே, பதிவுத் திருமணம் கட்டாயப்படுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மூலக் கேள்வி திருமண வயதைப் பொருத்தது. இதிலிருந்து பதிவுத் திருமணத்திற்குத் துணைக் கேள்வி போய்விட்டது. வயதைப் பொருத்த வரையில்தான் கணக்கிடப்படுகிறது. புரோகித தன்மையில் நடைபெறும் திருமணங்களுக்கும் வயது கணக்கிடப்படுகிறது. சட்டம் இயற்றப்படுகிறது. இதைக்கூட நாம் என்ன சிபார்சு செய்கிறோம் என்றால், குற்றம் புரிபவர்களை, டிப்டி சூபரின்டென்டென்ட் ஆஃப் போலீஸ் தகுதிக்கு மேற்பட்ட அதிகாரிதான் இதுபற்றி விசாரிக்கவேண்டும் என்றும், கீழே இருக்கிற அதிகாரி இந்த வழக்குகளை விசாரிப்பதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்றும் இந்த அரசு மத்திய அரசுக்குச் சிபார்சு செய்து இருக்கிறது. மற்றவர்கள் இந்தச் சட்டத்திற்குப் புறம்பாக நடக்கிறார்கள், குற்றம் செய்கிறார்கள் என்பதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், அல்லது தக்க அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்க முடியும். யாரும் வன்முறையாகப் போய் நடவடிக்கை எடுக்கமாட்டார். யாராவது குற்றம் சுமத்த வேண்டும். பலர் அறிந்திருந்தும், மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் அறிந்துகொண்டிருந்தாலுங்கூட குற்றத்தைச் சுமத்த முன்வருவதில்லை. நமக்கு ஏன் வீண் வம்பு ? வீணாக அவர்களுடைய பகைமையைப் பெறுவானேன் ?—என்ற அளவுக்கு உறுப்பினர்களெல்லாம் சென்றுவிடும் காரணத்தால் சில பேர் தப்பித்து விடுகிறார்கள். ஆனால், குற்றவாளியைக் கண்டு பிடித்து அதிகாரிகளிடம் முறையீடு செய்யப்படுமானால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு மற்றவர்களுக்கு எச்சரிக்கையாக அமைய அப்படிப்பட்ட நடவடிக்கை பயன்படுவதாக அமையும்.

**Thiru K. VINAYAKAM :** What is the exact havoc or damage caused if no limit is placed on the marriageable age of Indian couple? What exactly is the appreciable result which the Government of Tamil Nadu and the Central Government expect to get out of this kind of restriction on marriage which is against the very Constitution of India?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, "எகென்ஸ்ட் தி கான்ஸ்டிட்யூஷன்" என்று சொல்ல முடியாது. சட்டத்திற்கு உட்பட்டுதான் இந்த முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஏற்கனவே 1929-ம் ஆண்டு சட்டம் வந்தபோது இந்தியா முழுவதும் பெரும் எதிர்ப்பு இருந்து அதைச் சமாளித்ததற்குப் பிறகுதான் இந்தச் சட்டமே வந்தது. இது ஓரளவு நடைமுறையில் இருந்து வருகிறது. இந்தச் சட்டம் வருவதற்கு முன்னால் நாட்டில் இருந்த நிலைமை

என்னவென்றால், 8, 9, 10 வயதிலேகூட ஏராளமான விதவைகள் நாட்டில் ஏற்படுகிற நிலைமைகளெல்லாம் இருந்தன. அதெல்லாம் இப்பொழுது தடுக்கப்பட்டிருக்கிறது. திருமண வயதை 18-லிருந்து 21-ஆக உயர்த்துவதன் மூலம், 16 வயதில் குழந்தை பெறுவது, 17 வயதில் குழந்தை பெறுவது, 15 வயதிலேகூடக் குழந்தை பெறுவது என்கின்ற இத்தகைய இக்கட்டான நிலைமை தவிர்க்கப்படும். 18 வயதில் திருமணம் ஆனால், 19-ல் குழந்தை பெற முடியும், அதற்கும் மேல்தான் பெறுகின்ற நிலைமை ஏற்படும். இதன் மூலமாக அவர்களுடைய உடல் நலம் பாதுகாக்கப்படும் சூழ்நிலை ஏற்படுகிறது. முன்பு ஏற்பட்ட பல்வேறு சங்கடங்கள் இப்பொழுது சமுதாயத்தில் ஏற்படுவதில்லை. 20, 30 ஆண்டுகளாக சமுதாயத்தில் விதவைகளின் எண்ணிக்கை குறைந்து, குழந்தைத் திருமணத்தினால் ஏற்பட்ட தன்மைகளெல்லாம் நீங்கியிருப்பதை நாம் காணலாம். அதெல்லாம் இப்பொழுது பெருமளவு நீக்கப்பட்டிருக்கிறது. குடும்ப நலத் திட்டத்தின் நோக்கத்தை முழுவதும் இது நிறைவேற்றிவிடும் என்று சொல்லாவிட்டாலும், ஓரளவு நிறைவேற்றுவதற்கு இதுவும் ஒரு படியாக இருக்கிறது என்ற காரணத்தால்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது.

**திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி :** குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்காக மிகவும் தீவிரமாகப் பிரசாரம் செய்யப்பட்டு வரும் காலத்தில் திருமண வயதைச் சட்டபூர்வமாக உயர்த்துவதற்குப் பதிலாக அந்த வயதை உயர்த்துவதற்கான அவசியத்தைப் பற்றி மக்கள் மத்தியில் பிரசாரம் செய்வதைப் பற்றி அரசு சிந்திக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இவற்றை எல்லாம் சட்டம் மூலமாகக் கொண்டு வந்தால்தான் சமுதாயத்தில் கட்டுப்பாட்டை ஏற்படுத்த முடியும். சட்டம் வந்தாலும் கூட, தண்டனை இருக்கிறது என்று தெரிந்தாலும் கூட மீறுகிறவர்கள் பல பேர் இருக்கிறார்கள். சட்டம் இல்லாவிட்டால் மீறுகிறவர்கள் எண்ணிக்கை ஏராளமாக இருக்கும். திருமண வயதை உயர்த்துவதை மக்களில் பெரும்பாலோர் ஏற்றுக் கொள்கிறார்கள். 1929-ல் சட்டம் வந்தபோது பெரும் படையெடுப்பே வந்ததோ என்று சொல்லும் அளவுக்குப் பயங்கரமான நிலைமைகள் ஏற்பட்டன. இப்போது அந்த நிலை இல்லை. திருமண வயதை உயர்த்துவது பற்றி மத்திய அரசு மாநிலங்களின் யோசனையைக் கேட்டிருக்கிறது. அந்த வகையில் நம்முடைய அரசு இந்தப் பரிந்துரைகளைச் செய்து அனுப்பியிருக்கிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஜனப் பெருக்கத்தைத் தடுப்பதற்காகப் பல்வேறு சிகிச்சைகளைச் செய்வதன் காரணமாக உடல்நலம் பாதிக்கப்படுகிறது. ஆகவே, திருமண வயதை 18—21 என்று மூன்று வயது 'காப்' இருப்பதற்குப் பதிலாக பத்து வயது 'காப்' இருக்கும் வகையில் 20—30 என்ற அடிப்படையில் செய்வதன் மூலம் பெரிய அளவுக்கு ஜனப் பெருக்கத்தைத் தடுக்க முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அனுபவத்தில் வேண்டுமானால் பத்தாண்டுகள் வித்தியாசம் இருக்கலாம். பொதுவாக டாக்டர்களே கூட அவ்வளவு வயது அதிகமாக இருக்கக்கூடாது என்ற கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். பொதுவாக இருவர் மனமும் ஒத்து இருக்க வேண்டும். 60 வயதானவர் 18 வயது பெண்ணை மணந்துகொள்ளுவதைச் சமுதாயம் ஏற்றுக்கொள்ளாது. கிட்டத்தட்ட இருக்கிற வயதுடையவர்கள் மனப் பொருத்த சூழ்நிலையில் திருமணம் செய்துகொள்ளலாம். நாம் குறைந்த வயது 18—21 என்று நிர்ணயித்திருக்கிறோமே தவிர 25 வயது, 30 வயதில் திருமணம் செய்து கொள்ளுவதைத் தடை செய்யவில்லை.



**திரு. மு. க. சிவசாமி:** எந்தச் சட்டத்தையும் எந்தச் சமுதாயமும் நூற்றுக்கு நூறு முழுமையாக ஏற்றுக்கொள்ளுவதில்லை. எனவே, இந்த அரசு துணிந்து, வெகு வேகமாகப் பரவிவரும் ஜாதிக் கொடுமைகளை ஒழித்துக்கட்ட, திருமணம் செய்யும்போது கலப்பு மணந்தான் செய்ய வேண்டுமென்று சட்டம் கொண்டுவர முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** வயதை நிர்ணயிப்பதிலேயே இவ்வளவு தகராறுகள் இருக்கும்போது உறுப்பினர் சொல்லுகின்ற கருத்தைக் கட்டாயப்படுத்த முடியாது. அது சமுதாயம் ஏற்றுக் கொள்ளுகின்ற ஒன்றாக இருக்காது. அந்தக் கருத்து பற்றிய பிரச்சாரத்தைச் செய்ய வேண்டும்; சமுதாய மனப்பான்மை மாறுகிற சூழ்நிலை ஏற்படும்போது தானாகவே மாறிவிடும். காதலுக்கு இன்ன இடத்திற்குத்தான் போக வேண்டும், இன்னாரைத்தான் திருமணம் செய்ய வேண்டும் என்று நிர்ணயிக்க முடியாது. வயதுக்கு நிர்ணயம் செய்யலாம் என்ற அடிப்படையில்தான் சட்டம் வருகிறது.

## மதிய உணவுத் திட்டம்.

*612 வினா—திரு. எஸ். கிட்டப்பா, திருமதி வி. ப. பழனியம்மாள்} மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதிய உணவுத் திட்டத்தை உயர்நிலைப் பள்ளிகளுக்கும் விஸ்தரிக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(இ) இத் திட்டம் நமது மாநிலத்தில் அமுலான பிறகு பள்ளி செல்லும் மாணவர்களின் சதவிகிதம் உயர்ந்துள்ளதா?

(உ) ஆம் எனில், எத்தனை சதவிகிதம்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) ஆம்.

(உ) மதிய உணவுத் திட்டம் அமுலுக்கு வருமுன், அதாவது 1955–56-ல், 6–11, 11–14 வயதுடைய பிரிவுகளில் பள்ளி செல்லும் மாணவர்களின் சதவீதம் முறையே 55·69, 22·08 ஆக இருந்தது, 1968–69-ல் முறையே 92·32, 54·53 சதவிதமாக உயர்ந்துள்ளது.

**திரு. எஸ். சிவசுப்ரமணியன்:** தலைவர் அவர்களே, மதிய உணவுத் திட்டத்திற்காக 1970–71 ல் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு? ஒரு பிள்ளைக்கு இப்போது கொடுக்கப்படும் ரேட்டை உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** 1970–71-ல் கிட்டத்தட்ட ரூ. 195 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்போது ஒரு பிள்ளைக்கு அரசாங்கம் 6 காசும், பொது மக்கள் 2 காசும், ஊராட்சி ஒன்றியங்கள் 2 காசும், ஆக, 10 காசு கொடுக்கப்படுகிறது. கேர் நிறுவனத்தினரின் உணவு வரும் காரணத்தால் இதைச் சமாளிக்கிறோம். அவர்கள் கிட்டத்தட்ட 16, 17 காசு தருகிறார்கள். ஆக மொத்தம் ஒரு பிள்ளைக்கு 25, 26 காசு வரை செலவழிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது.

**ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது:** தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு கொடுக்கின்ற திட்டம் இப்போது இல்லை என்றாலும் உயர் துவக்கப்பள்ளி மாணவர்களுக்காவது—அவர்கள் ஊட்டச் சத்துக் குறைவு காரணமாக பலவீனமாக இருக்கின்ற காரணத்தால்—இந்த மதிய உணவுத் திட்டத்தை விஸ்தரிக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இப்போது நடைமுறையில் துவக்கப்பள்ளி, உயர்துவக்கப் பள்ளி மாணவர்களுக்கும் சேர்த்துத்தான் இருக்கிறது. மூன்றில் ஒரு பகுதி மாணவர்களுக்குச் செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் இந்தத் திட்டத்தை மேற்கொண்டு இப்போது 18 லட்சம் மாணவர்கள் பயன் பெற்று வருகிறார்கள்.

**திரு. டி. மார்டின்:** இந்த மதிய உணவுத் திட்டத்தின் காரணமாக ஆசிரியர்கள் தங்கள் பாட நேரத்தைக் கொஞ்சம் செலவு செய்து உணவு தயாரிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த மதிய உணவுத் திட்டத்திற்காக சமையலுக்குத் தனியாக ஆள் வைத்து ஆசிரியர்களுக்குத் தொல்லை இல்லாமல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** சமையல் செய்வதற்காக ஆளை நியமித்துக்கொள்ளலாம் என்ற அளவுக்கு தற்போது ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. பல பள்ளிகளில் அவ்வாறு தனி ஆள் போட்டிருக்கிறார்கள். இந்தச் சங்கடங்களை நீக்குவதற்காக கேர் நிறுவனத்தார் மைய சமையற் கூடங்களை ஏற்படுத்தி வருகிறார்கள். இந்த ஆண்டு 30 சமையற்கூடங்கள் ஏற்படுத்தப்படும். செங்கற்பட்டில் 27 ஊராட்சி ஒன்றியங்களிலும், வட ஆற்காட்டில் 2 இடங்களிலும், தென்னாற்காட்டில் ஒரு இடத்திலும் அமைக்கப்படும். வருகிற ஆண்டில் 66 ஊராட்சி ஒன்றியங்களிலும், 1972-73-ல் 301 மைய சமையற்கூடங்களையும் ஏற்படுத்த கேர் நிறுவனத்தார் திட்டமிட்டிருக்கிறார்கள். இரண்டு லட்சம் ரூபாய் செலவு செய்து கட்டடங்களைக் கட்டுவதையும் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதைப் பாதுகாக்கும் செலவையும் அவர்களே தருகிறார்கள். 8 வான்களைத் தந்திருக்கிறார்கள். வான்களை ஓட்டுவது, மற்றைய செலவுகளை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். தொடரச் செலவு அவ்வளவையும் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். இரண்டு, மூன்று ஆண்டுகளில் இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு ஆசிரியர்களுடைய சங்கடங்கள் நீக்கப்படும்.

**திரு. ஆலடி அருணா:** நண்பகல் உணவு தேவைப்படாத பள்ளிகள் எவ்வளவோ இருக்கின்றன. இத்தகைய பள்ளிகளில் கல்வியின் தரத்தை உயர்த்தும் வகையில் நோட்டுப் புத்தகங்களை வழங்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** மதிய உணவு பெறுகிறவர்களில் ஒன்று முதல் மூன்றும் வகுப்பு வரை படிக்கின்றவர்களுக்கு இலவசமாகவே புத்தகங்கள், கரும்பலகைகள் எல்லாம் வழங்கப்படுகின்றன. மற்ற பல வசதிகளும் செய்யப்பட்டு வருகின்றன.

THIRU K. S. KOTHANDARAMIAH : In most of the high schools about 30 to 40 per cent come from distant villages and they have to start very early in the morning to reach the school in time. They do not bring any tiffin for mid-day. Since there is no food in mid-day they are not interested in afternoon lessons and as such their health is affected. Will the Hon. Minister for Education see to it that at least those boys who come from villages are at least fed by mid-day meal scheme?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** நாம் ஒரு முறையை வைத்திருக்கிறோம். கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதி மாணவர்கள் மதிய உணவைப் பெறுகிற வாய்ப்பு வசதியைப் பெறலாம் அதிலிருந்து. உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல் அதற்கென்று அமைக்கப்பட்டிருக்கிற குழுவில் ஆசிரியர், டி. இ. ஓ. போன்றவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆங்காங்குள்ள மதிய உணவுக் குழுவில் ஊராட்சி மன்றத் தலைவர்களும் இடம் பெறுகிறார்கள். அவர்கள் எல்லாம் பார்த்து தொலைவில் இருந்து வருகிற





மாணவர்களில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதியினருக்குக் கிடைக்கும் விதத்தில், குறிப்பாக ஏழை எளியவர்கள் இடம் பெறக்கூடிய அளவிற்கு, தேர்ந்தெடுத்துக் கொள்வதால் உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஓரளவிற்கு நிறைவேற்றலாம்.

*Leave salaries of Corporation Teachers.*

* 613 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) Whether it is a fact that there is inordinate delay in the disbursement of leave salaries of the Corporation teachers ; and

(b) if so, the reasons therefor ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

THIRU K. VINAYAKAM : Is it not a fact that Corporation teachers who went on leave made a representation to Government that in spite of their repeated requests, the authorities in Ripon Buildings were not in a position to disburse their salaries when they were on leave?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அவர்களுடைய விடுப்பு அனுமதிக்கப்பட்ட பிறகுதான், லீவ் சாங்க்ஷன் செய்தபிறகுதான் அச்சம்பளம் அளிக்கப்படவேண்டும். லீவ் சாங்க்ஷன் செய்வதில் காலத்தாழ்வு ஏற்படவில்லை. சிலவிடங்களில் மெடிக்கல் சர்டிபிகேட் கொடுக்கவேண்டியிருக்கிறது. அப்படி சான்றிதழ்கள் வருவதில் காலத்தாழ்வு ஏற்படுகிறது. எதிர்பார்க்கப்படுகிற அச்சான்றிதழைக் கொண்டு வருவதில் காலத்தாழ்வு ஏற்படுவதினால் சம்பளம் கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. உடனடியாக அந்த முறைகள் எல்லாம் நிறைவேற்றப்படுமானால் விடுப்புச் சம்பளம் கொடுப்பதில் எந்தவிதமான சங்கடமும் இல்லை, எந்தவிதமான கஷ்டமும் இல்லை. உடனுக்குடன் கொடுக்கப்பட்டு வருகிறது. சில கேஸ்களில் அப்படி நடைபெறாமல் இருந்தால் சர்டிபிகேட் காலா காலத்தில் வராமல் இருப்பதுதான் காரணம். அது வந்தவுடன் கொடுக்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. ஒருசில கேஸ்கள் தவிர மற்றபடி காலத்தாழ்வு எதுவும் ஏற்படவில்லை என்றுதான் கார்ப்பரேஷன் கமிஷனர் அவர்கள் குறிப்பு தந்திருக்கிறார்கள்.

**திரு. வை. சுவாமிநாதன்:** இந்த மாதிரி லீவ் போடுகிறவர்களுக்கு அரைச் சம்பளம்தான் கொடுக்க வேண்டும் என்பதை மாற்றி முழுச் சம்பளமும் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இப்போதிருக்கிற நிலைமைகளை மாற்றுவதற்கான எத்தகைய சூழ்நிலையும் ஏற்படவில்லை.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள்:** பத்து ஆண்டுகள் வேலை பார்த்த பின் சில தனியார் பள்ளிகளிலிருந்து பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளுக்குச் செல்லக்கூடிய ஆசிரியர்களுக்கு வருடாந்திர விடுமுறைச் சம்பளம் கொடுக்கப்படாமல் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதனால் அவர்கள் சர்வீஸை விட்டுப்போகும் என்ற நிலைமை ஏற்படுவதால் அப்படிப்பட்டவர்களுக்கு அந்த விடுப்புச் சம்பளத்தைக் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** மாநகராட்சி ஆசிரியர்கள் பற்றிய கேள்வி இது. உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் அவர்கள் கேட்கிற விவரங்களைச் சேகரித்துத் தரலாம்.

**திரு. டி. மார்டின்:** பொதுவாக இப்படி லீவ் போடும், கார்ப்பரேஷன், பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள பள்ளிகளில் பணியாற்றக் கூடிய ஆசிரியர்களுக்கு மாதாமாதம் சம்பளம் கொடுக்கப்படாமல் இருக்கின்றது. குறிப்பாக, திருச்செந்தூர், சாத்தான்குளம், உடன்குடி, ராதாபுரம் போன்ற இடங்களில் அப்படி சம்பளம் கொடுக்காமல் இருந்து வருகிறார்கள் . . .

**திரு. நா. வீராசாமி:** பாயின்ட் ஆஃப் ஆர்டர். கேள்வி நேரத்தில் இந்தமாதிரி குற்றச்சாட்டுக்கள் எல்லாம் சொல்லலாமா?

THIRU T. MARTIN : Please hear me. In my and your constituencies the teachers have not been paid . . .

MR. DEPUTY SPEAKER : Dr. Hande.

DR. H. V. HANDE : Is it not a fact that teachers of Corporation schools do not get their leave salary within a reasonable time and that instances have been brought to my notice of teachers having not received salary even after months of their availing leave, Lady teachers did not get payment for their maternity leave and curiously enough some had subsequently gone on second maternity leave although payment for first maternity leave had not been made? Will the Hon. Minister assure us whether he would investigate the whole matter and see why complaints like these are brought to the notice of hon. Members of the Legislature in this regard?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** மாநகராட்சி மன்ற ஆணையாளர் அவர்கள் இதில் காலத்தாழ்வு எதுவும் ஏற்படவில்லை என்ற குறிப்பைத்தான் எங்களுக்குத் தந்திருக்கிறார்கள். சில சமயங்களில் காலத்தாழ்வு ஏற்படுகிறதென்றால் அவர்கள மெடிக்கல் சர்டிபிகேட் கொடுப்பதில் காலத்தாழ்வு ஏற்படுவதால் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தனியாக அப்படிக் கொடுக்கப்படாத சூழ்நிலை இருந்தால் உறுப்பினர் அவர்கள் அதை என் கவனத்திற்குக் கொண்டுவருவார்களேயானால் அதுபற்றி ஆராய்ந்து என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்ற முயற்சியை மேற்கொள்ளலாம்.

DR. H. V. HANDE : Is it not a fact that family pension has not been paid to the family members of deceased employees of Corporation? No money has been given. In fact cases are pending from 1963 and 1964. Many Corporation teachers who had retired had not been paid their gratuity and pension even after several months after retirement. Is it possible to create a cell to deal with such cases and to alleviate the sufferings and hardships of the poor teachers and their families concerned?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இது லீவ் சாலரியைப் பற்றிய கேள்வியாக இருப்பதால் அதைப் பற்றிய குறிப்புதான் என்னிடம் இருக்கிறது. குடும்ப ஓய்வூதியம் தரப்படாமல் இருக்கிற சூழ்நிலை பற்றி உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள், அது என் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமேயானால் அதைப் பற்றி ஆராய்ந்து தக்க நடவடிக்கைகள் எடுக்க ஆணையிடலாம்.



*Teachers' Training Colleges.*

* 614 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether it is a fact that lessons were not taught in English Medium in the Teachers' Colleges at Saidapet and Katpadi during 1968; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ & இ) கல்வி ஆண்டு 1967–68 லிருந்து சைதாப்பேட்டையிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் எல்லாப் பாடங்களும் தமிழிலேயே கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்தாகி விட்டது. ஆனால் காட்பாடியிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ் மாணவர்கள் அல்லாதவர்க்கென ஆங்கில வகுப்பு 1968–69-ல் துவக்கப்பட்டுள்ளது.

THIRU K S. KOTHANDARAMIAH : There was an English medium section in Katpadi Training College previously. But in 1960 the Principal of the Saidapet Training College issued a circular just like G.O. stating that all non-Tamil candidates should not apply for seats and therefore the boys were not able to submit their applications to the College . . .

MR. DEPUTY SPEAKER : Put the question.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I request the Hon. Minister to state whether non-Tamil medium section was opened there and boys admitted in Katpadi training college in 1968–69?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** 1967–68-ல் எல்லா வகுப்புகளிலும் தமிழில் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டது. அதற்குப் பிறகு உறுப்பினர் அவர்கள் வேண்டுகோள் விடுத்ததற்கு இணங்க அதை ஆராய்ந்து தாய்மொழி தமிழ் அல்லாத மாணவர்களுக்கு இடர்பாடு ஏற்படக்கூடாது என்பதற்காக 1968–69-ல் நாற்பது பேர்கள் அடங்கிய வகுப்பு ஒன்று ஆங்கிலத்தில் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. 1968–69, 1969–70-ல் ஒரு வகுப்பு ஆங்கிலத்தில் காட்பாடி பயிற்சிக் கல்லூரியில் இருந்து வருகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : I thank the Hon. Minister for the information given, viz. that an English medium section was opened in 1968–69. Since it was not known to many boys, a number of boys were not able to send applications. At least now, after the information of the Hon. Minister, it would be better if that information is published through the District Educational Officers to all so that applications may come in large numbers?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** 1968–69-ல் ஒரு வகுப்பு தொடங்கப்பட்டுவிட்டது என்பது தெரிந்திருக்க வேண்டும். இப்போது தெரிவித்திருப்பதிலிருந்து அதைப் பலரும் அறிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்பட முடியும். அரசினர் நடத்துகிற பயிற்சிக் கல்லூரிகளில் நாம் முழுக்க தமிழில் சொல்லிக் கொடுக்கிற முயற்சியை எடுத்திருக்கிறோமே தவிர தனியார் நடத்துகிற பயிற்சிக் கல்லூரிகளில் ஆங்கிலமே பாட

**திரு. கரு. சீமைச்சாமி:** சார், தமிழகத்தில் இருமொழித் திட்டம் என்று சொல்கிறார்கள். தமிழ் நாட்டில் மத்திய சர்க்கார் நடத்தும் பள்ளிகளிலும், தமிழக அரசு நடத்தும் பள்ளிகளிலும், அல்லது தனியார் நடத்தும் பள்ளிகளிலும், தமிழை நடக்காத பள்ளிக்கூடங்கள் ஏதேனும் உண்டா? அப்படியிருந்தால் தமிழை இரண்டாவது மொழியாக நடத்த, குஜராத்தி, மராத்தியைத் தாய்மொழியாக வைத்து நடத்தும் பள்ளிகளில், தமிழை இரண்டாவது மொழியாக நடத்த ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இப்படிப் பட்ட வகையில் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்குப் பிறமொழிப் பாடத்திட்டங்கள் நடத்த அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தியல்லாமல், இரண்டு உயர்நிலைப்பள்ளிகளில் பாடம் நடத்த சென்னை மாநகரில் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. 13 மொழிகளிலும், பிற மொழிகளில் பாடம் நடத்த நாம் இந்த மாநிலத்தில் அனுமதித்திருக்கிறோம். இரண்டாவது பாடமாகக் கட்டாயம் தமிழ் படிக்க வேண்டும். வேறு மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு படிப்பவர்கள், கட்டாயமாக இரண்டாவது பாடமாகத் தமிழைப படிக்க வேண்டுமென்று வற்புறுத்தப் படுகிறது.

**திரு. எம். எஸ். மணி:** தலைவரவர்களே, ஆங்கிலம் கற்றவர்கள்தான் முழுமையான மனிதர் என்று சொல்லுகிறார்கள். அப்படியானால் தமிழை முழுமையாகக் கற்றவர் முழு மனிதர் இல்லையா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் அப்படிக் குறிப்பிட்டார்கள். அதன்படி எண்ணம் கொண்டவர்கள் சிலபேர் நாட்டிலே இருக்கத்தான் செய்கிறார் கள். இந்த அவையிலேயும், தமிழை அறிந்து, தமிழைத் தெரிந்து முழுமை பெற்றவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள் என்பதை அவர்களின் கருத்திற்கு வைத்து, மொழி மட்டும் முழுமையான மனிதர்களை உருவாக்குவது அல்ல என்பதை நாம் நன்றாக அறிவோம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன.

**திரு. டி. மார்டின்:** ஸ்பீக்கர் சார், வருஷாவருஷம் இந்தி மொழி அபிவிருத்திக்காக மத்திய அரசு ஒரு தொகை ஒதுக்குகிறது, அதாவது இந்தி பேசாத மாநிலங்களில் இந்தியைப் பரப்புவதற்காக அந்தப் பணம் ஒதுக்கப்படுகிறது. அதேபோல் ஒதுக்கபடும் தொகையில் தமிழகத்திற்கு எவ்வளவு ஒதுக்கியிருக்கிறது என்று தெரியுமா? இந்த அரசு அந்தத் தொகையில் பங்கு கேட்டிருக்கிறதா? இல்லையென்றால் தமிழக அரசாங்கம் தமிழ் பேசாத மாநிலங்களில் தமிழைப் பரப்புவதற்காக எவ்வளவு பணம் ஒதுக்கீடு செய்து, அதற்கான செலவு செய்யத் திட்டம் வைத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இந்திய அரசு இந்திக்கு என்று அப்படித் தனிச் சலுகை கொடுப்பதை இந்த அரசு எதிர்க்கிறது. அது கல்வியமைச்சர் மாநாட்டிலும் வற்புறுத்தபபட்டிருக் கிறது. ஒரு குறிப்பிட்ட மொழிக்கு மட்டும் 9 கோடி, 10 கோடி ரூபாய் என்ற அளவுக்குச் செலவழிக்கிறார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயும் கூட இந்தியைப் பரப்புவதற்காக 9 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். ஆகவே, இந்தி மொழியான ஒரு மொழிக்கு மட்டும் வாய்ப்பளித்துவிட்டு, மற்ற மொழிகளுக்கு வாய்ப்பு வசதி ஏற்படாவிட்டால் நாளடைவில் ஒரு மொழிக்கு மட்டும்தான் எல்லா வசதிகளும், வாய்ப்புகளும் இருக்கின்றன என்ற நிலை ஏற்பட்டு விடும். அந்த அளவிற்கு மற்ற மொழிகளுக்கும் வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கல்வியமைச்சர்கள் மாநாட்டிலே வற்புறுத்தப்பட்டிருக் கிறது. மற்ற மொழிகளை சேர்ந்தவர்களும் வற்புறுத்தி வந்திருக்கிறோம். ஒரு மொழிக்கு வாய்ப்பு கொடுப்பதை இந்த அரசு எதிர்க்கிறது. மற்ற மொழிகளுக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்பதை வலியுறுத்தி யிருக்கிறது. வேறு பல மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் வற்புறுத்துகிறார்கள்.



அதற்குப்பிறகு, ஒரு மாநிலத்தில், மொழி வளர்ச்சிக்கு 1 கோடி ரூபாய் அளவிலே தருவது என்று சொன்னால் மற்ற மாநிலங்களுக்குக் குறைவாக வந்தால், இந்திக்கு மட்டும் தனிச் சலுகை கொடுப்பதை மாற்றி எல்லா தேசிய மொழிகளும் சம வாய்ப்பும், வசதிகளும் பெற வேண்டுமென்று இந்த அரசாங்கம் தொடர்ந்து வற்புறுத்திக்கொண்டு வருகிறது. அந்தத் தொகை எல்லா மொழிகளுக்கும், குறிப்பாக நம்முடைய தாய்மொழிக்கும் அளிக்கப்படவேண்டுமென்று வற்புறுத்தி வருகிறது, மேலும் வலியுறுத்தி வரும்.

**திரு. ம. பொ. சிவஞானம்:** தலைவரவர்களே, இந்தி மொழியின் இலக்கியங்கள், மற்ற விஞ்ஞான நூல்களை வளர்ப்பதற்காக மத்திய சர்க்கார் பொது நிதியிலிருந்து செலவழித்து வருகிறது. இந்த முயற்சி வெற்றி பெற்றால், இந்தி மொழி வளர்ச்சிக்கு மட்டும் மத்திய அரசு தொடர்ந்து உதவினால், மற்ற பிரதேச மொழிகளுக்குக் கெடுதல் ஏற்படும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்கள். அந்த ஆபத்திலிருந்து தப்புவதற்காக இந்தியை, அது வழங்கும் பிரதேச அரசுகளை வளர்க்க வேண்டும் மத்திய அரசாங்கம் தலையிடக்கூடாது என்ற அளவிற்கு இந்த அரசாங்கம் பார்த்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

• **மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அதைத் தான் முதலிலேயே நான் குறிப்பிட்டேன. ஒரு மொழிக்கு மட்டும் வாய்ப்பு கொடுத்தால், அந்த மொழியில் மட்டும்தான் வாய்ப்பும் வசதியும் இருக்கின்றன என்ற நிலை ஏற்பட்டுவிடும் என்ற கருத்தை நாங்கள் வற்புறுத்தி வருகிறோம். மேலும் கல்வியமைச்சர்கள் மாநாட்டில் ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. இந்தி பேசுகின்ற ஒவ்வொரு மாநிலத் திலும் ஒரு கோடி ரூபாய் என்ற அளவில் இந்தி பேசுகின்ற 4 மாநிலங்களுக்கு 4 கோடி ரூபாய் அந்த வகையிலே கிடைக்கும். எனவே, மாநிலத்திற்கு மாநிலம் என்று ஒதுக்குவதைவிட மொழிக்கு என்று ஒதுக்குவதால் அந்தந்த மொழிகள் வளர முடியும். உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், பீஹார் மாநிலங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு கோடி ரூபாய் என்னும்பொழுது நமக்கும் 1 கோடி, ஆந்திராவிற்கும் 1 கோடி என்றால் நம்முடைய தமிழ் மொழிக்கு 1 கோடியும், ஆந்திராவிற்குத் தெலுங்கிற்கு ஒரு கோடியும்தான் கிடைக்கும். ஆனால் அந்த 4 மாநிலங்களுக்கும் 4 கோடி ரூபாய் கிடைத்து இந்தி வளர முடியும். இதைத் தவிர மத்திய அரசு 9 கோடி ரூபாய செலவிடுகிறார்கள். இதைத் தான் எதிர்த்துச் சொல்லக்கூடிய நேரத்தில், மாநிலத்திற்கு மாநிலம் என்று ஒதுக்காமல் மொழிகள் என்று ஒதுக்க வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறது.

## பாஞ்சாலங்குறிச்சியில் பொருட்காட்சி

*616. வினா—**திரு. கரு. சீமைச்சாமி:** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கட்டபொம்மன் காலத்துப் பொருள்களைக் கொண்ட பொருட் காட்சியை பாஞ்சாலங்குறிச்சியில் ஏற்படுத்த அரசுக்கு உத்தேசமுண்டா?

(இ) ஆம் என்றால் எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ) பாஞ்சாலங் குறிச்சியில் அகழ்ந்து எடுக்கப்பட்ட கட்டபொம்மன் காலத்துப் பொருட் களைக் கொண்ட பொருட்காட்சி ஒன்றை நடத்துவதற்கான செயற்குறிப்பு எதும் தற்போது இல்லை. எனினும், பாஞ்சாலங்குறிச்சியில் அகழ்ந்து எடுக்கப்பட்ட அரண்மனைப் பகுதிகளைப் பொதுமக்கள் தாராளமாகப் போய்ப் பார்க்க அனுமதிக்கப்படுகின்றனர்.

**திரு. கரு. சீமைச்சாமி:** கட்டபொம்மன் காலத்தில் கட்டப்பட்ட கோட்டை ஒன்று கமுதியில் இருக்கிறது. அந்தக் கோட்டை பீரங்கி சுட்டால் கூட

இடிந்து விழக்கூடாத அளவுக்கு ஒரே நாளில் கட்டப்பட்டது. அந்தக் கோட்டையினுடைய மாதிரியை அந்த இடத்தில் பார்வைக்கு வைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தொல் பொருள் ஆராய்ச்சித் துறையினர் இப்படிப்பட்ட பணிகளையெல்லாம் படிப்படியாக மேற்கொண்டு வருகிறார்கள். இந்தப் பணிகளில் கமுதிக் கோட்டை சேர்க்கப்பட்டிருக்கிறதா என்ற விவரக் குறிபபு என்னிடம் இல்லை. இப்படிப்பட்ட கோட்டைகள், பழங்காலச் சின்னங்கள் ஆகியவற்றை அகழ்ந்து எடுத்து, அதன் மூலம வரலாற்றுச் சிறப்பையும், பெருமையையும் நிலைநாட்டும் வகையில் இந்தத் தொல் பொருள் ஆராய்ச்சித் துறையினர் பணியாற்றி வருகின்றனர்.

**திரு. ம. பொ. சிவஞானம்:** விடுதலைப் போரைத் துவக்கி வைத்து, முதல் முழக்கம் செய்து தமிழ் நாட்டிற்கே தனிப் பெருமை தேடித்தந்த வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு ஒரு நினைவுச் சின்னத்தைப் பாஞ்சாலங் குறிச்சியில் அமைப்பதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே! எப்படிப்பட்ட நினைவுச் சின்னம் என்பது பற்றிய குறிப்பு இல்லை. அங்கே ஒரு கட்டபொம்மன் உருவச்சிலை தனியார் ஒருவரால் நிறுவப்பட்டு, அது திறக்கப்பட இருக்கிறது. விரைவில் அது திறக்கப்படுவதற்கான முயற்சி எடுத்துக் கொள்ளப்படுகிறது. பாஞ்சாலங்குறிச்சியில் இருக்கிற அரண்மனையின் அடித்தளம் மட்டும் இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்து அகழ்ந்து எடுக்கப்பட்ட பொருள் தொல் பொருள் ஆராய்ச்சித் துறையினால் வைக்கப்பட்டிருக்கிறது. அங்கே ஒரு பொருட்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டு, அதில் அந்தப் பொருள்கள் வைக்கப்படவேண்டும் என்று அங்கிருக்கிற மக்கள் கேட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட செயற்குறிப்பு இதுவரையில் மேற்கொண்டதாக இல்லை. ஆனாலும் கூட, ஆண்டுக்கு ஒரு முறை இந்தப் பொருள்களையெல்லாம் கொண்டுபோய் சில நாட்களுக்குப் பொருட்காட்சி வைத்துக் காட்டுகிற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வீரசெக்கம்மாள் கோவில் திருவிழா 1969-ம் ஆண்டு மே திங்கள் 9, 10 நாட்களில் நடைபெற்றது. அப்பொழுது தாற்காலிகப் பொருட்காட்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு அதில் இப்படிப்பட்ட பொருள்கள் வைக்கப்பட்டு, மக்களுக்குக் காட்டப்பட்டன. அங்கே நிலையான ஒரு பொருட்காட்சி வைக்கவேண்டுமென்று கூறுகிறார்கள். அந்தப் பொருள்களை சென்னையில் வைத்திருந்தால் தான், இங்கே வருவோர், போவோர் பார்ப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, சென்னையில் கொண்டுவந்து தொல் பொருள் ஆராய்ச்சித் துறையினர் அவைகளை வைத்திருக்கிறார்கள். எதிர்காலத்தில் நினைவுச் சின்னம் எழுப்பவேண்டும், எப்படிப்பட்ட முறையில் எழுப்பவேண்டும் என்பதை எதிர்காலத்தில் சிந்திக்கவேண்டும்.

**திரு. எஸ். அக்னிராஜு:** கயத்தாற்றில் கட்டபொம்மன் சிலை இருக்கிறது. அது ஒரு சினிமா நடிகரின் முகச்சாயலாக இருக்கிறது, உண்மையான கட்டபொம்மன் முகத்தோற்றம் அந்தச் சிலையில் இல்லை என்று கூறப்படுகிறது. ஆகவே, அந்தச் சிலையை எடுத்துவிட்டு, உண்மையான கட்டபொம்மன் முகச்சாயலுள்ள சிலையை அமைப்பதற்கு ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** உண்மையான கட்டபொம்பன் சிலையினுடைய குறிப்புகள் மாண்புமிகு உறுப்பினரிடத்தில் இருக்குமானால், அதை அரசுக்கு அனுப்பிவைக்கலாம். அதற்கேற்ற அளவுக்கு, பொருத்தமான அளவுக்கு வைக்கப்படும். மதுரையில் கூட கட்டபொம்மன் சிலை வைக்கப்பட்டிருக்கிறது. கட்டபொம்மன் சிலை ஓவியங்கள் மற்றவைகளின் அடிப்படையில் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையில் தான் கயத்தாற்றில் கட்டபொம்மன் சிலை உருவாக்கப்பட்டு, திறக்கப்படவேண்டிய நிலையில் இருக்கிறது. ஏற்கனவே இருந்த குறிப்புகள் எப்படியிருந்தாலும், கட்டபொம்மன் என்று காட்டக்கூடிய வகையிலே அமைந்திருக்கிறது. அதற்காக இருக்கிற அகக் குறிப்புகள், அகச் சான்றுகள், புறச்சான்றுகள், ஓவியங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் வைத்து சிலை உருவாக்கப்பட்டிருக்கிறது.



### புதுரக வேர்க்கடலை

*591 வினா—**திரு. என். எஸ்.வி. சித்தன்** மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைசசர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிய ரக நிலக்கடலை (Groundnuts) பரீட்சார்த்தமாக ஏதேனும் பயிரிடப்பட்டதா ?

(இ) ஆம் எனில், எங்கு பயிரிடப்பட்டது ?

(உ) ஏக்கர் ஒன்றுக்குக் கிடைத்த மகசூல் (Yield) எவ்வளவு ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :**

(அ) ஆம், புதிய ரக வேர்க்கடலை டி. எம். வி. 7 முன்னோடி முறையில் பல இடங்களில் பயிரிடப்பட்டது.

(இ) திண்டிவனம் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் மூன்று ஆண்டுகளும், திருக்குப்பம் நெல் ஆராய்ச்சி நிலையத்தில் ஓர் ஆண்டும். பொள்ளாச்சி வேர்க்கடலை ஆராய்ச்சி நிலையத்தில் மூன்று ஆண்டுகளும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் உழவர்களது நிலங்களில் 10 இடங்களில் சேர்ந்தாற்போல் மூன்று ஆண்டுகளும் பரிசோதிக்கப்பட்டது.

(உ) சராசரியாக ஏக்கர் ஒன்றுக்கு 585 கிலோ வேர்க்கடலை கிடைத்தது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவர் அவர்களே, புதிய ரக நிலக்கடலை விளைவிப்பதற்கு மொத்தம் எத்தனை நாட்கள் ஆகின்றன ? ஏக்கர் ஒன்றுக்கு உற்பத்தி செய்வதற்கு எவ்வளவு செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது ? புதிய ரக நிலக்கடலையில் எண்ணெய் சத்து எந்த அளவுக்கு இருக்கும் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** மொத்தம் 105 நாட்கள் பிடிக்கும் இந்தப் பயிர் வருவதற்கு. ஒரு ஹெக்டாருக்கு 1,400 கிலோ கிராம் சராசரி விளைச்சல் கிடைக்கும். டி. எம். வி. 2-க்கும், இதற்கும் இருக்கிற வித்தியாசம், டி. எம். வி. 2-ஐ விட டி. எம். வி. 7-ல் நல்ல எண்ணெய் வளமும், பருப்பு வகை அளவு அதிகமாகவும் இருக்கும் என்று கூறப்படுகிறது. பொதுவாக, முழுவதும் முற்றிய நிலைக்குப் பிறகு 15 நாட்கள் வரையில் 93·7 சதவிகித அளவுக்கு இழுக்கும் திறன் பெற்றிருக்கிறது என்று கூறப்படுகிறது. டி. எம். வி. 7 வகைக்கு அதிக அளவு உரமிட்டால், நல்ல முறையில் வரும் என்றும், டி. எம். வி. 2 வகைக்கு அதிக அளவு உரமிட்டால் நல்ல முறையில் வராது என்றும் கூறப்படுகிறது. இந்த இரண்டு வகைகளுக்கும் அதிக வித்தியாசம் இருக்கிறது. டி. எம். வி. 7 வகையில் அதிக எண்ணெய் சத்து இருக்கிற காரணத்தினால், நல்ல முறையில் வருகிற காரணத்தினால், 105 நாட்களில் நல்ல பயிர் வருவதினால், பரீட்சார்த்தமாகப் பல இடங்களில் இந்த வகை பயிரிடப்பட்டு வருகிறது என்று நான கூற விரும்புகிறேன். ஏக்கர் ஒன்றுக்கு எவ்வளவு செலவாகிறது என்று விவரம் இப்பொழுது இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரம் தருகிறேன்.

**திரு. நா. வீராசாமி:** இந்தப் புதிய ரக வேர்க்கடலையில் நல்ல எண்ணெய் வளம் இருப்பதாகச் சொன்னார்கள். இன்றையதினம் எண்ணெய் விலை ஏறக்கூடிய நிலைமையில், தமிழக அரசு ஐ. ஆர். 8 போன்ற நெல் வகைக்கு அதை ஊக்குவிக்கும் முறையில் கடன் முதலிய வசதிகள் செய்துகொடுப்பது போன்று, புதிய ரக வேர்க்கடலைக்கும் கடன் வசதி ஏற்பாடு செய்து, நிலக்கடலை உற்பத்தியை அதிகமாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** விவசாய மானியக் கோரிக்கை விவாதத்தின்பொழுது விரிவாக அனைவரும் பேச இருக்கிறோம். அப்பொழுது நான் இதற்குப் பதில் கூறலாம் என்று கருதுகிறேன்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்:** இந்தப் புதிய ரகம் எல்லா மாவட்டங்களிலும் வினியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா? எக்ஸ்பெரிமெண்டலாக செய்யப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. விதைகள் எல்லோருக்கும் விநியோகம் செய்வதற்கு வழி வகுக்கப்பட வேண்டும். அப்படி இருந்தால், எல்லா மாவட்டங்களுக்கும் வந்ததாகத் தெரியவில்லை. இனிமேலாவது விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** புதிய ரகம் என்று தான சொன்னேன். எனவே, இதை முழுவதும் பரீட்சித்தபிறகு மற்ற மாவட்டங்களுக்கும் கொடுப்பதற்கு ஏற்பாடு நிச்சயம் செய்யப்படும்.

*Export of rat skins*

* 592 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare, with reference to question No. 456 (576) answered on the floor of the Assembly on 25th March 1969, be pleased to state the steps taken by the Government to explore export market for rat skins?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** சென்னை, மத்திய தோல் தொழில் நுட்ப ஆராய்ச்சி நிலையத்தினருடனும், பெங்களூர், எலி ஒழிப்பு நிறுவனத்தைச் சேர்ந்த திரு. ஒ. ஜி. ராஜாளுவுடனும் தொடர்பு கொள்ளப்பட்டது. எலித் தோலை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவே என்று விசாரணைகள் மூலம் தெரியவருகிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** எலித் தோல் மிக வலுவானது என்றும், எலித் தோலினால் செய்யப்பட்ட பர்ஸுகள், பைகள் எளிதில் கிழிவதில்லை என்றும், ஜெர்மனி முதலிய நாடுகளில் எலித் தோலுக்கு கிராக்கி இருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. இதுபற்றி அரசாங்கம் ஆராய்ந்ததா ? இதுவரையில் ஆராயாவிட்டால், இதை ஏற்றுமதி செய்வதற்கு வழிவகை செய்யப்படுமா ? அதனால் எலித் தொல்லையும் கொஞ்சம் குறையுமே ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** பங்களூர் எலி ஒழிப்பு நிறுவனத்தைச் சேர்ந்த திரு. ஒ. ஜி. ராஜாளுவுடன் தொடர்பு கொள்ளப்பட்டது. அவர் மிகச் சிறிய அளவுக்குத்தான் எலித் தோலை விரும்புவதாகக் கூறப்பட்டது. இந்த எலித் தோல் என்பதில், பெருச்சாளித் தோல்தான் தேவைப்படுகிறது என்று கூறுகிறார்கள். விவசாயிகள் இவற்றை சாதாரணமாக வயல் வெளிகளில் பிடிக்கிறார்கள். அவற்றை பிடிக்க 10 பைசா, 20 பைசா என்று கொடுக்கப்படுகிறது. பெருச்சாளிகளைப் பிடித்து, உடனேயே தோலை உரித்து, குந்தகம் இல்லாமல் அதை 'பிரைனில்' தோய்த்து, உலர்த்திக் கொடுத்தால், ஒரு தோலுக்கு 25 பைசா வீதம் கொடுக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆகவே, இது சிரமமாக இருப்பதால் விவசாயிகள் இதில் அக்கறை காட்டவில்லை; இதைத் தொடர்ந்து செய்யமுடியவில்லை.

**திரு. கு. துரைசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, வடக்கே இருக்கின்ற ஒரு மந்திரி எலி சத்துள்ள உணவு ...........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்தக் கேள்வி அனுமதிக்கப்படவில்லை. திரு. பூபதி.



**திரு. எம். பூபதி:** தலைவர் அவர்களே, இந்த எலித் தோலை எந்த அளவுக்கு அந்நிய நாட்டுக்கு ஏற்றுமதி செய்ய முடிகிறது ? ஏதாவது அந்நியச் செலாவணி கிடைக்கிறதா ? கேரளாவில தவளைகளை ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணி பெறுகிறார்களே அதேபோல் செய்யத் திட்டம் ஏதாவது இருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** அதைத்தான் சொன்னேன். எலியைப் பிடித்து தோலை உரித்துக் கொடுப்பதில் சிரமங்கள் இருக்கின்றன; விவசாயிகள் இதில் நாட்டம் காட்டவில்லை.

**திரு. இல. பலராமன்:** எலிகளைப் பொறுத்தவரையில், அவை உணவு தானியங்களைப் பாழ் படுத்துகின்றன என்பது நாடறிந்த உண்மை. ஆகவே, இப்படிப்பட்ட எலிகள் எவ்வளவு இருக்கின்றன என்று அரசாங்கம் கணக்கெடுத்திருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** எலிகளின் உற்பத்தியில் உறுப்பினர் இவ்வளவு அக்கறை காட்டுவார்கள் என்றால், நிச்சயமாக தனிக் கேள்வி கேட்டால், அந்தக் கணக்கையும் எடுத்துக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.

*Instructors in Industrial Training Institutes*

* 617 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Tamil Nadu Industrial Training Institute Instructional Staff Association have submitted any Memoranda to the Hon. the Minister;

(b) if so, the details of their demands;

(c) whether this Government propose to consider any of their demands; and

(d) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சபை முன் ஒரு விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

DR. H. V. HANDE : Will the Hon. Minister be pleased to state the persons who had been trained in these I.T.I. every year and the number of people who got employment? I think there are a large number, nearly 50 per cent who are without employment. If so, will the Hon. Minister state what steps he proposed to take to see that these people are given employment?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கேள்வி ஐ. டி. ஐயில் பணிபுரியும் ஆசிரியர்கள் பற்றியது.

**திரு. சி. கோவிந்தராஜன்:** அந்த ஆசிரியர்களுடைய கோரிக்கைகளில் ஒன்று, அவர்களுடைய ரிடையர்மெண்ட் வயது 55-க்குமேல் நீட்டவேண்டும் என்பது. மற்ற இடங்களில் டீச்சிங் ஸ்டாப்களுக்கு 55-லிருந்து 58 என்று உயர்த்தப்பட்டிருப்பதுபோல், இங்கேயும் இவர்கள் டீச்சிங்ஸ்டாப்களாக இருப்பதால் அதே சலுகையைக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்பொழுது 55 வயதாக இருப்பதையே யார் யாருக்குக் குறைக்கலாம் என்றுதான் அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கிறது, ஆனால் இருப்பதை எடுக்கக்கூடாது என்று ஆசிரியர்களுக்குக் குறைக்கவில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருப்பதால், 55 வயதைக் கூட்டுவதாக இல்லை.

---

@ 524-526-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

### *Air Port for Salem*

* 618 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whehter this Government has renewed its request to Central Government for establishing an Air Port at Salem; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா**: (அ) ஆம். சேலத்தில் விமான தளம் ஒன்றைக் கட்டுவதற்கான செயற்குறிப்பை மறு ஆய்வு செய்யும்படி இந்த அரசு, இந்திய அரசைக்கேட்டுள்ளது.

(இ) சேலத்தைச்சுற்றி தொழில்கள் பெருகிவருவதன் காரணமாக, சேலத்தில் விமான தளம் ஒன்று கட்டுவது அப்பகுதியில் விமானப் போக்குவரத்து வசதி செய்வது ஆகியவை குறித்த அவசியத்தை இந்த அரசு வற்புறுத்தியுள்ளது. இதற்காக சேலம் நகரிலிருந்து சுமார் 3 மைல் தொலைவில் அமைந்துள்ள விமான தளத்திற்கான ஏற்ற இடங்களைப்பற்றியும் கருத்து தெரிவித்துள்ளது. ஆனால் சேலத்திற்கு விமானப் போக்குவரத்தை நடத்துவதற்குப் போதுமான போக்குவரத்து வாய்ப்புகள் இல்லையென்றும், நான்காம் திட்டத்தில் மற்றைய முக்கியமான, உடனடி அவசரமுள்ள திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டிய அவசியமிருப்பதால் சேலத்தில் விமானக்கூடம் அமைப்பதற்கான செயற்குறிப்பை திட்டத்தில் சேர்ப்பது இயலாது என்று இந்திய அரசு இவ்வரசுக்குத் தற்போது தெரிவித்துள்ளது.

Dr. H. V. HANDE: Will the Hon. Minister impress on the Central Government that in view of the fact that we are likely to get the pelletisation plant at Salem, it is necessary that an aerodrome is set up at Salem and that it is all the more necessary now than before? Will the Hon. Minister be able to tell us whether any other city in Tamil Nadu had been recommended by the State Government for setting up an air field and whether the Central Government have accepted that proposal for construction of any other airfield in Tamil Nadu?

The Hon. Thiru S. J. SADIQ PASHA: We have very strongly impressed upon the Central Government but they have rejected our claim. We have not recommended for any other aerodrome in Tamil Nadu.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்**: தலைவர் அவர்களே, சேலத்தில் உருக்காலை ஏற்படும் என்பதாலும், தொழிற்பேட்டை புதிதாக துவக்க இருப்பதாலும் அங்கே ஒரு விமான நிலையத்தை ஏற்படுத்த மத்திய சர்க்காரை நம் அரசு வலியுறுத்தி, இந்தத் திட்டத்திலேயே அதுவும் இணைக்கப்பட்டு உருவாக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா**: மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதுபோல், ஏற்கனவே வலியுறுத்தியிருக்கிறோம். மீண்டும் வலியுறுத்தி, அதற்கான முயற்சி எடுப்போம்.

**திரு. எம் சுரேந்திரன்**: சார், விமான தளங்கள் ஏற்படுவதில் போக்குவரத்து நபர்கள் எத்தனை தேருவார்கள் என்பதைப் பொறுத்தும், சேலம் உருக்காலை, மேட்டூரில் தொழிற்சாலைகள் ஏற்படுவதாலும்



போக்குவரத்துக்கு எவ்வளவு ஆட்கள் கிடைப்பார்கள் என்பதையும் பொறுத்திருக்கிறது. ஆகவே, அங்குள்ள தொழிற்சாலைகளைச் சேர்ந்தவர்கள் விமான தளத்தை அமைக்கவேண்டும் என்று விண்ணப்பித்திருக்கிறார்களா? அதுபற்றி சர்வே செய்யப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா**: தனியார் விண்ணப்பங்கள் பற்றிய விவரக் குறிப்பு இப்பொழுது என்னிடத்தில் இல்லை. நம்முடைய அரசு வற்புறுத்தியிருக்கிறது. மீண்டும் வற்புறுத்தும்.

**திரு. சி. வீரமணி**: தலைவர் அவர்களே, சேலத்தில் விமான தளம் அமைக்க மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ஆகிறது? சங்ககிரியில் சேலம் தொழில்பேட்டை, தொழிற்சாலைகள் ஏற்படுத்திக் கொண்டு வருவதால், விமான நிலையம் முக்கியமானது என்ற அடிப்படையில் மத்திய சர்க்காரிடம் வலியுறுத்தி உடனடியாகக் கொண்டு வர முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா**: விமான தளத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை நம் அரசு செய்து வருகிறது. ஏற்கனவே செய்திருக்கிறது. மீண்டும் வலியுறுத்தும். விமான தளம் அமைக்க நில ஆர்ஜிதம் செய்ய ரூ. 8 லட்சம் ஆகும் என்று மதிப்பீடு.

Thiru K. S. KOTHANDARAMIAH: Sometime back there was a proposal to construct airports in every district headquarters. May I know from the Hon. Minister whether that proposal is under consideration of Union Government or State Government?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா**: விமான தளத்தை அமைத்தால் வரக்கூடிய வருமானம், ஏற்படக்கூடிய செலவு, போக்குவரத்து வசதிகள் இவையெல்லாம் பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். மாவட்டத்திற்கு ஒரு விமான நிலையம் என்பது பற்றிக் குறிப்பு இல்லை.

### *Rameswaram-Dhanushkodi road*

* 619 Q.—Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Government propose to form a eight- mile long all-whether road from Rameswaram to Dhanushkodi;

(b) if so, at what cost; and

(c) when the work will start?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா**: (அ-உ) இராமேஸ்வரம் நகரிலிருந்து தனுஷ்கோடிக்கு எல்லாக்கால நிலைமைகளிலும் செல்லக் கூடிய சரளைக்கல் சாலை ஒன்று ரூபாய் 21·06 லட்சம் செலவில் ஏற்கெனவே போடப்பட்டுள்ளது.

**திரு. கே. விநாயகம்**: சார். முன்பு ஒரு நாள் புயல் வீசியதே அப்பொழுது தனுஷ்கோடி பாழ் அடைந்து போனது என்று சொல்லப்பட்டிருக்கிறதே, அப்பொழுது எதிர்க்கட்சியில் இருந்த கட்சிக்காரர்கள் அதைத் தடுக்க ஒரு சுவர் நீளமாக, ராமேசுவரத்திலிருந்து தனுஷ்கோடிக்கு கடற்கரையில் கட்டவேண்டும் என்று பிரசாரம் செய்து வந்தார்களே, அந்த யோசனை என்ன ஆனது இப்பொழுது?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா**: மத்திய சர்க்காரிடம் நாங்கள் சொல்லியிருக்கிறோம். அதையும் பரிசீலித்துக்கொண்டு இருக்கிறோம்.

**திரு. கரு. சீமைச்சாமி :** இந்த ரோட்டுக்குத் திட்டத்தட்ட 21 லட்சம் ரூபாய் ஆகும் என்று சொன்னார்கள். எத்தனை லட்சம் செலவழித்தாலும், ரோடு அமைத்த பிறகு அங்கே மணல் அடித்து மூடிவிடுகிறது. அதுதான் அங்கே பெரும் பிரச்னை. இரவில் ஒன்றுமில்லாமல், பகலில் பார்த்தால் மணல் மூடிவிடுகிறது. அதைத் தடுக்கத் திட்டம் இருக்கிறதா? சவுக்கு மரங்களை வைத்துத் தடுக்கலாம் என்கிற திட்டம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது போல, சில வகை மரங்களை வளர்ப்பது பற்றியும் பரிசீலனை செய்கிறோம், நடவடிக்கை எடுக்கிறோம்.

### *Idols dug out at Veerapandi*

* 620 *Q.*—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether a number of idols were dug out at Veerapandi in Madurai District in July, 1969; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** (அ) ஆம்.

(இ) வீரபாண்டி கண்ணீஸ்வரமுடையார் கோவிலில் திருமண மண்டபம் ஒன்று கட்டுவதற்காக அடிக்கல் நாட்டும்போது, ஈஸ்வரர், ஈஸ்வரி, ஸ்கந்தர், நடராஜர், சிவகாமசுந்தரி, பீடம், சந்திரசேகர், அம்மன் ஆகிய எட்டு திருஉருவச் சிலைகள் கிடைக்கப்பெற்றன.

பகல் 10-00 **திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** தலைவர் அவர்களே, இங்கே கண்டெடுக்கப்பட்ட விக்கிரகங்களையெல்லாம் கோயிலில் பிரதிஷ்டை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, அங்குள்ள மக்களும் பக்தர்களும் கேட்டுக்கொண்டபடி, அந்தச் சிலைகள் தற்காலிகமாகக் கண்ணீஸ்வரமுடையார் கோயிலில் வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அதற்கான மற்ற வேலைகளும் செய்யப்பட்டு வருகின்றன.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, இந்தச் சிலைகள் எல்லாம் எந்த உலோகத்தினால் செய்யப்பட்டவை ? அவைகளின் மொத்த மதிப்பு எவ்வளவு இருக்கும் ? அவை எந்த நூற்றாண்டுக் காலத்தைச் சேர்ந்தவை ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, இந்தச் சிலைகள் எல்லாம் 'காப்பர் அண்ட் ப்ரான்ஸ்' என்ற இரண்டுவித உலோகங்களினால் செய்யப்பட்டவை என்று கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக் கோயில் பாண்டியர் காலத்தில் கட்டப்பட்டது என்று சொல்லப்படுகிறது. ஆகையால் இந்தச் சிலைகளும் பாண்டியர் காலத்தைச் சேர்ந்தவையாக இருக்குமோ என்று எண்ணுகிறார்கள். இடைக்காலத்தில் முஸ்லீம்கள் படையெடுத்த காலத்தில் சிலைகளைக் காப்பாற்றி வைக்கவேண்டுமென்ற எண்ணத்தினால் பூமிக்குள் புதைத்து வைக்கப்பட்டனவோ என்று கருதப்படுகிறது. அதற்குமேல் விவரங்கள் ஒன்றும் இதுவரை தெரியவில்லை.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** தலைவர் அவர்களே, விலையுயர்ந்த சிலைகள் எங்கு தோண்டியெடுக்கப்பட்டாலும், அங்கேயே ஒரு கோயிலை எழுப்பி அதில் வைத்துவிடுகிறார்கள். இனி எந்த இடத்தில் எடுத்தாலும் அவைகளை அரசாங்கத்திடம் ஒப்படைத்து, தொல்பொருள் காட்சிச்சாலையில் வைத்து, 'இந்தப் பொருள் இன்ன நாளில், இன்ன இடத்தில் கண்டெடுக்கப்பட்டது' என்ற விவரக் குறிப்புக்களை எழுதி வைத்துப் பாதுகாக்க அரசாங்கம் ஏற்பாடு செய்ய முன்வருமா ?



**மாண்புமிகு திரு கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும். ஆனால் அந்தந்தப் பகுதி மக்கள் கண்டெடுத்த பொருள்களை அரசாங்கத்திடம் கொண்டுவந்து கொடுக்கிறார்களா என்பதைப் பொறுத்துத்தான் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

### 2. நடைமுறைக் கேள்விகள்.

(அ) வினா நேரத்தில் ஓர் அமைச்சரிடம் கேட்ட வினாவிற்கு மற்றோர் அமைச்சர் வினா கேட்ட உறுப்பினரிடமே ஒரு வினா கேட்டது குறித்து.

Thiru K. VINAYAKAM: On a point of order, Sir. In all Parliamentary democratic institutions like the Mother of Parliaments in England, the Lok Sabha and the Rajya Sabha in Delhi and our Tamil Nadu Legislative Assembly, the first hour is set apart for question time. In the question time there is almost a battle of wits between the Ministers and the members who put questions irrespective of the political party to which they belong. It is the prerogative of members to put questions and it is the duty of the Ministers to answer. With due deference to my good Friend Mr. P. U. Shanmugam, I wish to say that he put a question and asked me to answer. I could have answered, but I did not answer because I did not want to spoil the prevailing good spirit. Was the Hon. Minister in order in putting a quetion to me and in my not being allowed to answer? I want a ruling on this.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர்கள் மன்றத்திலே கேள்விகள் கேட்பதற்கும், அமைச்சர்கள் பதில் அளிப்பதற்கும் உரிமை இருக்கிறது. அமைச்சர்கள் பதில் சொல்லும்போது சில நேரங்களில் பதில் கூட கேள்வி ரூபத்திலே இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். Even the answers can be in the form of questions.

Thiru K. VINAYAKAM: The question was addressed to the Education Minister and it is the Education Minister who has got to answer me, or put a question by way of answer.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள், அமைச்சரவைக்குக் கூட்டுப் பொறுப்பு இருக்கிறது என்பதை உணருவார்கள். சில சமயத்தில் திரு. விநாயகம் அவர்கள் செய்யக் கூடிய தவறுகளையும் கட்டிக்காட்டக்கூடிய பொறுப்பு இருக்கிறது. கல்வி, மத்திய சர்க்காருக்கும் மாநில சர்க்காருக்கும் உள்ள கூட்டுப் பொறுப்பில் உள்ளது என்று சொல்லுகிறார்கள். மாநில சர்க்காருடைய அதிகாரத்தில் தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. அறிவிப்புகள்

(அ) ஒத்திவைப்புத் தீர்மானம் மறுநாள் எடுத்துக் கொள்ளப்படுவது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் சட்டப்பேரவை விதி 42ன் கீழ் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையில் இல்லாத காரணத்தினால் நாளைக்கு எடுத்துக்கொள்ளப் படும்.

## 4. அறிக்கை அளித்தல்.

மின்சார வாரியம்பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி:** தலைவர் அவர்களே, தமிழ் நாடு மின்சார வாரியம் பற்றிய 18-வது அறிக்கையை மதிப்பீட்டுக் குழுவின் சார்பிலே அளிக்கிறேன்.

## 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) மதிப்பீட்டுக் குழுவிற்குத் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1970–71ம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு இப்பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு கீழ்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டார்கள் :—

1. திரு. சி. கோவிந்தராஜன் (நெல்லிக்குப்பம்).
2. திரு. ஏ. அ. சுப்பராஜா.
3. திரு. எஸ். சிவசுப்ரமணியன்.
4. திரு. க. முருகேசன்.
5. திரு. மு. கந்தசாமி படையாச்சி.
6. திரு. கே. என். குமாரசாமி.
7. திரு. என். கிட்டப்பா.
8. திருமதி சு. குப்பம்மாள்.
9. திரு. எம். சுப்ரமணிய கவுண்டர்.
10. திரு. ஜே. எஸ். இராசு.
11. திரு. வி. டி. அண்ணாமலை.
12. திரு. ஆர். என். அரங்கநாதன்.
13. திரு. க. மு. கதிரவன்.
14. திருமதி வி. ப. பழனியம்மாள்.
15. திரு. து. ப. அழகமுத்து.
16. திரு. செ. கந்தசாமி கவுண்டர்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, தேர்ந்தெடுக்கப் பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால் 1970–71ம் ஆண்டு மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட தாக நான் அறிவிக்கிறேன். அவர்களோடு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், பொதுக் கணக்காய்வுக் குழுவின் தலைவர் அவர்களும், அவர் களுடைய அலுவல் காரணமாக இக் குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.

மேலும், சட்டப் பேரவையின் 165-வது விதிக்கிணங்க, திரு ஆர். என். அரங்கநாதன் அவர்களை இக் குழுவின் தலைவராகப் பேரவைத் தலைவர் அவர்கள் நியமித்துள்ளார்கள்.



(இ) அவையினர் குழுவிற்குத் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1970–71ம் ஆண்டுக்கான அவையினர் குழுவிற்குச் சட்டப் பேரவையின் பதின்மூன்று உறுப்பினர் களைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டு கீழ்க்கண்ட பதின்மூன்று உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டார்கள்:—

1 திரு. பி. எஸ். தனுஷ்கோடி.
2 திரு. எஸ். பரமசிவம்.
3 திரு. மு. க. து. நடராஜன்.
4 திரு. எம். கண்ணப்பன்.
5 திரு. ஆ. கோவிந்தராசன்.
6 திரு. ந. தருமலிங்கம்.
7 திரு. மு. ஆனந்தன்.
8 திரு. என். இராஜாங்கம்.
9 திரு. எம். சுரேந்திரன்.
10. திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்.
11 திரு. க. கோமதி சங்கர தீட்சிதர்.
12 திரு. ப. தம்பி நாயக்கர்.
13 திரு. என். மருதாசலம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால் 1970–71ம் ஆண்டு அவையினர் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

பேரவையின் 221(1)-வது விதிக்கிணங்க—

1. திரு. மு. கிருஷ்ணமூர்த்தி.
2. திரு. வீ. சா. இளஞ்செழியன்.
3. ஹாஜி ம. மு. பீர் முஹம்மது.
4. திரு. கே. பி. எஸ். மணி.

ஆகியவர்களை இக் குழுவின் உறுப்பினர்களாகப் பேரவைத் தலைவர் அவர்கள் நியமித்துள்ளார்கள்.

பேரவையின் துணைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாக இக்குழு வின் தலைவர் ஆவர்.

## 5. அரசினர் தீர்மானம்.

மதிப்பீட்டுக் குழுவில் சட்ட மேலவை உறுப்பினர்களைச் சேர்த்தல்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** "தலைவர் அவர்களே, 1970–71ம் ஆண்டுக்குரிய சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் சேர்த்துக் கொள்வதற்கென, ஐந்து உறுப்பினர்களை நியமனம் செய்து, அவ்வாறு நியமனம் செய்த உறுப்பினர்களின் பெயர்களை, பேரவைக்கு அறிவிக்கு மாறு இப்பேரவை சட்டமேலவைக்குப் பரிந்துரை செய்கிறது" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, அரசினர் மசோதாக்கள்.

**2. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.**

(ஆ) மாநிலங்கள் அவைத் தேர்தலின்போது தமிழக அமைச்சர் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் திரு. ஏ. கே. கோபாலனிடம் பேசியதாகச் சொல்லப்படுவது குறித்து.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** ஆன் எ பாயின்ட் ஆ∴ப் ஆர்டர் சார், அண்மையிலே நடைபெற்ற ராஜ்ய சபைத் தேர்தலில் நம்முடைய அமைச்சர்களில் ஓர் அமைச்சர், இடதுசாரிக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு. ஏ. கே. கோபாலன் M. P. அவர்களிடம்.........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புவதற்கு முன்னால் 'இந்த விதியின்கீழ் கொண்டு வருகிறேன்' என்பதைச் சொல்ல வேண்டும். நீங்கள் இப்பொழுது எந்த விதியின்கீழ் இந்தப் பிரச்சினையைக் கொண்டு வருகிறீர்கள் ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, இது பாயின்ட் ஆ∴ப் ஆர்டர் அல்ல, பாயின்ட் ஆ∴ப் இன்பர்மேஷன். நம்முடைய அமைச்சர் ஒருவர் திரு. ஏ. கே. கோபாலன் அவர்களிடம் பேசியதாகச் சொல்லப்படுகிறதே, பத்திரிகைகளில் எல்லாம் செய்தி வந்திருக்கிறதே, இது உண்மையா ? ராஜ்ய சபைத் தேர்தலில் இப்படி ஓட் போட வேண்டுமென்று சொன்னது யார் ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பாயின்ட் ஆ∴ப் ஆர்டர் என்பதை எந்த உறுப்பினரும் எழுப்பலாம். பாயின்ட் ஆ∴ப் இன்பர்மேஷன் என்று சொல்லும்போது, முதலில் பேரவைத் தலைவரின் அனுமதி பெற்ற பின்னர்தான் கொண்டுவர வேண்டும். இதற்கு நான் அனுமதி கொடுக்காதபோது எப்படிக் கொண்டுவர முடியும் ?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** தலைவர் அவர்களே, இது முக்கியமான தகவல். இதில் அன்-பார்லிமென்டரி என்ன இருக்கிறது ? இது நாட்டினுடைய பிரச்சினை. அமைச்சரவைக்கு இழுக்கு தேடக்கூடிய பிரச்சினை. நீங்கள் சொல்வது சரியல்ல........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் பாயின்ட் ஆ∴ப் ஆர்டர் என்று கொண்டுவந்த பாயின்ட் ஆ∴ப் இன்பர்மேஷனுக்கு அனுமதி கொடுக்க மறுக்கிறேன் என்று சொன்னபோது, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுந்து, 'நீங்கள் சொல்வது தவறானது' என்று சொல்வது சரியல்ல. தலைவருடைய தீர்ப்பு தவறாக இருக்கிறது என்று சொல்வது சரியல்ல.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இது உரிமையைப் பாதிப்பதாக இருக்கிறது. பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் என்று கேட்கிறபோது அப்படிக் கேட்க உரிமை கொடுக்கமாட்டேன் என்று சொன்னால் என்ன அர்த்தம் ? அதுவும் எல்லாப் பேப்பர்களிலும் வந்துள்ள ஒரு செய்தியைப் பற்றியது. அந்தச் செய்தி சரியானது என்றோ, தவறானது என்றோ உங்கள் மந்திரிகளில் யாரும் இதுவரை மறுக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** "உங்களுடைய மந்திரி" என்று சொல்வதும் சரியல்ல. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவருக்கும் அவர்கள்தான் அமைச்சர்கள். எல்லோருக்கும் அமைச்சர்கள். ஆகவே நம்முடைய அமைச்சர்கள் என்று சொல்ல வேண்டும்.

இரண்டாவது, நமக்கு சில விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளைப் பின்பற்றி சட்டமன்றத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். அப்படி நடத்தினால்தான் ஒழுங்காக நடத்த முடியும். குழப்பமான



இல்லாமல் நடத்த முடியும். அப்படி இதுவரை ஒழுங்காகச் செய்து வருகிறோம். நம்முடைய விதிமுறைகளின்படி சட்டமன்றத்தைப் பேரவைத் தலைவர் நடத்திச் செல்ல எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் ஒத்துழைக்க வேண்டும்.

இப்போதுள்ள பிரச்சினை திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் முதலில் 'ஒரு ஒழுங்குப் பிரச்சினை' என்றார்கள். நான் 'எந்த விதியின் கீழ்க்கொண்டு வருகிறீர்கள் ?' என்று கேட்டேன். அப்படிக் கேட்க பேரவைத் தலைவருக்கு உரிமை இருக்கிறது.

எதிர்க் கட்சித் தலைவரவர்கள் அது 'பாயின்ட் ஆப் இன்பர்மேஷன்' என்றார்கள். பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் பேரவைத் தலைவரின் அனுமதியுடன் தான் கொண்டுவர முடியும். பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லாது முதலிலேயே பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் என்று கோரியிருந்தால் நான் அனுமதிகூட வழங்கியிருக்க முடியும். பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி, அது எந்த விதியின்கீழ் என்று நான் கேட்க, பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் என்று சொன்ன காரணத்தினால் அதற்கு நான் அனுமதி தரவில்லை என்று தீர்ப்பு அளித்துவிட்டேன். அந்தத் தீர்ப்பு சரியல்ல என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வது இந்த மன்றத்தின் கண்ணியத்தையே பாதிப்பதாக இருக்கிறது. நான் தீர்ப்புக் கொடுத்துவிட்ட பிறகு அந்தப் பிரச்சினையை எழுப்புவதற்கே யாருக்கும் உரிமை இல்லை.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தாங்கள் குறிப்பிட்டது போன்று பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் என்றாலும் பேரவைத் தலைவரின் அனுமதியைப் பெற்றுத்தான் கொண்டுவர முடியும்.

அதுவும் தேர்தல் என்பது—ராஜ்ய சபா தேர்தலாக இருந்தாலும், மேலவைத் தேர்தலாக இருந்தாலும் அது கட்சிகளின் பிரச்சினையே தவிர அரசின் பிரச்சினை அல்ல. தேர்தல் சம்பந்தமாகக் கட்சிகள் கலந்து கொள்கிறமுறை, கேட்டுக்கொள்கிற முறை, வோட்டு வாங்கிக்கொள்கிற முறை ஆகியவற்றுக் கெல்லாம் கட்சிகளின் தலைவர்களே பொறுப்பு. விளக்கம் கொடுப்பதோ, விளக்கம் பெறுவதோ கட்சிகளுக்குட்பட்ட காரியம். இந்த அரசுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. இந்த மன்றத்திற்குள் தீரவேண்டிய பிரச்சினையும் அல்ல. பரிசீலிக்க வேண்டிய விஷயமும் அல்ல.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** என்னுடைய அமைச்சர், நம்முடைய அமைச்சர், தமிழக அமைச்சர், எங்களுடைய அருமை நண்பர்கள் தலைசிறந்த கம்யூனிஸ்டுகளுடன் தொடர்பு வைத்திருப்பதை எல்லாப் பத்திரிகை செய்திகளும் வெளியிட்டிருக்கின்றன. இதுவரை அப்படி யாரும் தொடர்பு கொள்ளவில்லை என்கிற மறுப்பும் வரவில்லை. அந்தச் செய்தி ஆதாரபூர்வமானதா, ஆதாரமற்றதா என்கிற விளக்கம் கொடுக்கப் படவில்லை. இந்த அமைச்சரவையின் நன்மைக்காகவே இதுபற்றி விளக்கம் கேட்கிறோம். அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவே கேட்கிறோம். இதற்கு அனுமதி வழங்குவதில் தவறு என்ன இருக்கிறது?

**(இ) எதிர்க்கட்சித் தலைவருக்கு எப்பொழுதும் தகவல் கோர உள்ள உரிமை குறித்து.**

**Thiru K. VINAYAKAM :** Sir, on a point of order. I am not questioning your ruling. I know you are a lawyer with some experience. You have given a correct ruling that nobody can raise a point of order and then turn it into a point of information. But, Sir, coming to a later stage, the Hon. the Leader of the Opposition has got a right to get up at any point of time or moment to intervene and ask for information. He was careful enough to

[Thiru K. Vinayakam] [1970 மார்ச் 31

say that he was only asking for information. Even that you want to deny him. I am only asking the Chair to reconsider his decision. You can deny me and I am a small man. (Interruption) I am on a point of order and I have not finished it. Let the Chair give his ruling on the point of order raised by me. Sir, the Hon. the Leader of the Opposition is as good as a Cabinet Minister. We are supposed to be known as a Shadow Cabinet and the Hon. the Leader of the Opposition is on a par with the Hon. the Leader of the House and that is the position. Is there anything wrong in my thesis? That is the privilege in his favour. You can ask me and other Hon. Members to resume their seat and we are small men evidently. But as far as the point of order or point of information is concerned, that is the privilege which the Hon. the Leader of the Opposition enjoys by virtue of his position as the hon. the Leader of the Opposition. I want the Chair to give a ruling on the point of order raised by me so that at least in future nobody can deny him that privilege to raise a point of information.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் கேட்பதற்கு உரிமை இருக்கிறது. திரு. விநாயகம் சொன்னது முழுமையும் ஏற்றுக்கொள்கிறேன். அதில் எனக்குக் கருத்து வேறுபாடு கிடையாது.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுந்திருந்து 'பாயின்ட் ஆப் இன்பர்மேஷன்' என்று கேட்டிருந்தால் நான் அனுமதி அளித்திருப்பேன். ஆனால் திரு. சௌந்திரபாண்டியன் அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் கொண்டு வந்தார்கள். எந்த விதியின்கீழ் என்று கேட்டேன். அவர் உடனே பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் என்றார்கள். பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் என்றால் தலைவர் அனுமதியுடன் தான் கொண்டுவர முடியும். அதற்கு நான் இப்போது அனுமதி வழங்கவில்லை என்று தீர்ப்பு அளித்தேன். அது தவறு என்கிற முறையில் திரு. சௌந்தரபாண்டியனை நான் அனுமதிக்க வேண்டும் என்று சிபார்சு செய்கிற முறையில்தான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசினார்கள். நான் கொடுத்த தீர்ப்பை மாற்றிக்கொள்ள அவசியம் இல்லை என்றுதான் நான் சொன்னேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** என்னுடைய கட்சி உறுப்பினருக்குச் சிபார்சு செய்ய எனக்கு உரிமை இல்லையா? நான் கேட்கிறேன். சிபார்சோடு மட்டுமல்ல. இந்த 40 பேர்களுடைய உரிமையைப் பாதுகாப்பதற்கே எனக்கு உரிமை உண்டு, பாதுகாப்பேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவர்களுடைய உரிமையைக் காப்பாற்றி வருவதில் தவறு இல்லை. அவைத் தலைவர் அவர்கள் இந்த அவையில் உள்ள அத்தனை உறுப்பினர்களுடைய உரிமையையும் காப்பாற்றவே இருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவராக இருந்தாலும் கூட நம்முடைய விதிப்படி அவைத் தலைவர் அவர்களுக்கு அறிவித்து அனுமதி பெற்ற பிறகே தான் பாயின்ட் ஆப் இன்பர்மேஷனும் கேட்க வேண்டும். அவைத் தலைவருக்கு அறிவிப்பு இல்லாமல் எதையும் நம்முடைய விதிகளின்படி கொண்டுவர முடியாது.

**திரு. மனு ஆதி :** சார் பாயின்ட் ஆப் ஆர்டர். சட்ட பேரவைத் தலைவர் நிற்கிறபோது, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் உட்காராது நின்றுகொண்டே பேசுவது முறையா? தலைவர் நிற்கிறபோதே எதிர்க்கட்சித் தலைவர் உட்காராது வீராப்பாகப் பேசுவதுதான் மரபா? இது பற்றித் தீர்ப்பளிக்க வேண்டுமென்று கோருகிறேன்.



1970 மார்ச் 31]

**[ஈ] மாநிலங்கள் அவைத் தேர்தலில் இரண்டு வாக்குகள் செல்லாதவையாக ஆனது குறித்து.**

**திரு. டி.மார்டின்:** சார், விதி 83-இன் கீழ், பாயின்ட் ஆப் ஆர்டர். கண்ணியமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இருக்கிறார்கள். கண்ணியம் மிக்க பேரவைத்தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள் இருக்கிறார்கள். பல லட்சக்கணக்கான மக்களுடைய பிரதிநிதிகளாக உறுப்பினர்கள் எல்லாம் இருக்கிறோம். ராஜ்ய சபாத் தேர்தலில் 2 வோட்டுக்கள் செல்லாத வோட்டுக்களாக ஆகிவிட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் கொண்டு வருகிற ஒழுங்குப் பிரச்சினை ராஜ்ய சபாத் தேர்தலைப் பற்றியது....

**திரு. டி. மார்டின் :** Sir, you allow me to speak and I will come to the context....

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கண்ணியமான இந்தச் சபையில் நாமெல்லாம் உறுப்பினர்கள். இரண்டு ஓட்டுக்கள் செல்லாத ஓட்டுக்களாகிவிட்டன, இதைப் பற்றி மக்கள் ஓட்டுப் போடுவதற்குக் கூடத் தெரியாத நிலைமையிலே இரண்டு ஓட்டுக்கள் ஆகிவிட்டன என்று பொது மக்கள் பேசக்கூடிய நிலைமையிலே இந்தச் சபையினுடைய கௌரவத்தைப் பாதிக்கக்கூடிய செயல் நடைபெற்று இருப்பதால் தாங்கள் அதைப் பற்றி விசாரணை நடத்தி இரண்டு ஓட்டுக்கள்..........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அது ரூல் 83-இல் எப்படி வரும் என்பதைக் கொஞ்சம் சொல்கிறீர்களா?

THIRU T. MARTIN : Yes. The proviso to Rule 83 states—

Provided that the Speaker may permit a member to raise a point of order during the interval between the termination of one item of business and the commencement of another if it relates to maintenance of order. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்:** நீங்கள் 83-வது விதியைப் படிக்கிறீர்கள். எந்தச் சந்தர்ப்பத்திலே உறுப்பினர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம் என்பதைப் பற்றி அதிலே இருக்கிறது. இந்த அவையிலே இப்பொழுது எப்படி ஒழுங்கு மீறப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்ல வேண்டுமென்றுதான் கேட்டேன். மன்றத்திலே சில விதிமுறைகள் இருக்கின்றன, எந்த வகையிலே அவை மீறப்பட்டிருக்கின்றன என்பதைச் சொல்லவேண்டுமேயொழிய ரூல் 83-ஐ சொல்கிறீர்கள், அந்த ரூல் எல்லாவற்றிற்கும் பொது. எந்த உறுப்பினரும் 83-வது விதியின் கீழ்தான் ஒழுங்குப் பிரச்னை கொண்டுவர வேண்டும்.

**திரு. நா. வீராசாமி :** 20 நிமிடங்களாக இந்த மன்றத்திற்குச் சம்பந்தப்படாதவை விவாதிக்கப்பட்டிருக்கின்றன. அவையெல்லாம் குறிப்பேடுகளில் இருக்கின்றன. அவற்றைக் குறிப்பேடுகளில்.......................

## 6. அரசினர் மசோதாக்கள்.

**(அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் (திருத்த) மசோதா.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தலைவரவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் (திருத்த) மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இம்மசோதாவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

### 7. அவையுரிமைக் கேள்வி

**அவையின் முடிவிற்குக் காத்திருக்கும் ஒரு பொருள் குறித்து, முன் னறிவிப்பின்றி அவையுரிமைக் கேள்வி எழுப்ப அனுமதி கோரல்.**

THIRU K. RAMAMOORTHY : Sir, I raise on a matter of privilege. This is a matter pending before the House.

MR. DEPUTY SPEAKER : Even then you have to give me notice for bringing a privilege motion.

THIRU K. RAMAMOORTHY : No. Sir, it pertains to a matter pending before the House. The proviso to Rule 184 says—

Provided that in respect of a matter of privilege arising during the sitting of the House, the Speaker may waive such notice.

MR. DEPUTY SPEAKER : So it is a power vested in the Speaker and not the Hon. Member. Under the proviso to Rule 184, the Speaker has the power to waive such notice and not any Hon. Member.

THIRU K. RAMAMOORTHY : I have to make it known to the Hon. Speaker. Only then the Speaker can define whether he could waive notice or not, since it pertains to a matter pending before the House.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** விதியிலே தெளிவாகக் குறிப் பிடப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அவையெல்லாம் இந்த மன்றத்திலே எழுப்பப்பட்டு அரசியலமைப்புச் சட்டமெல்லாம் இழுக்கப்பட்டு திருத்தப் பட்டு இருக்கின்றன. ரிட்டன் நோட்டிஸ் முன்னாலே கொடுக்காமல் இருப்பதற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த விதிக்கிணைக் கூடத் தலைவர் அவர்களின் அனுமதியிருந்தால்தான் அப்படி எழுப்ப லாம். தலைவர் அவர்களின் அனுமதியில்லாவிட்டால் எழுப்ப முடியாது.

THIRU K. RAMAMOORTHY : I may bring it to the notice of the Hon. Speaker. It is for the Hon. Speaker . . .

MR. DEPUTY SPEAKER : I have already told that you must give me notice, even if you want to bring a privilege motion under Rule 184.

THIRU K. RAMAMOORTHY : You must hear me.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் கொண்டு வருவதற்கு நான் அனுமதி தரவில்லை. நீங்கள் மறுபடியும் எழுந்திருப்பது சரியல்ல. அடுத்து, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.



THIRU K. RAMAMOORTHY : I must be allowed to explain . . .

MR. DEPUTY SPEAKER : You can give me notice and bring it tomorrow. You cannot raise it now.

THIRU K. RAMAMOORTHY : This refers to a matter pending . . .

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Are you going to allow him to speak after your ruling?

MR. DEPUTY SPEAKER : No.

### 6. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

**(ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நிலத்தின் மீதான உச்சவரம்பு குறைத்தல்) மசோதா.**

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவரவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நிலத்தின் மீதான உச்சவரம்பு குறைத்தல்) மசோதாவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். The Hon. Minister has introduced the Bill....

MR. DEPUTY SPEAKER : The Hon. Minister has only moved a motion for leave to introduce the Bill. The motion is before the House.

மோஷன் மூவ் பண்ணியதற்குப் பிறகு அதன் மேல் ஓட்டெடுப்புத் தான் நடைபெற வேண்டும். இந்த நேரத்தில் நீங்கள் எப்படிப் பேச முடியும்?

### 2. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(உ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நிலத்தின் மீதான உச்ச வரம்பு குறைத்தல்) மசோதாவை, உறுப்பினர்களுக்கு மசோதாவின் படிவத்தை வழங்காமலும், குடியரசுத் தலைவரின் முன் அனுமதியின்றியும் அறிமுகம் செய்ய அரசுக்கு உள்ள அதிகாரம் குறித்து.

( Dr. H. V. Hande: rose in his seat.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் உட்காருங்கள். நான் சொல்வதைக் கேட்டுவிட்டு நீங்கள் பேச வேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மசோதாக்கள் அறிமுகப்படுத்தப் படும்பொழுது பாரம்பரையாக இருந்து வருகிற பாரம்பரியம், கன்வென் ஷன், அது எதிர்க்கட்சித் தரப்பிலேயிருந்து கொண்டுவரப்பட்டாலும் அல்லது அரசாங்கத் தரப்பிலேயிருந்து கொண்டுவரப்பட்டாலும்—அப் பொழுது விவாதிப்பதில்லை, எதிர்ப்பதில்லை. என்று முடிவு செய்திருக் கிறோம். கனம் உறுப்பினர் அவர்கள் சட்டப்பிரச்னை எழுப்பலாம் என்று நினைக்கிறார்கள். எந்தச் சட்டப் பிரச்னையாக இருந்தாலும் நாங்கள் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறோம். எதிர்க்கட்சி எழுப்பினாலும் சரி,

[திரு. செ. மாதவன்] [1970 மார்ச் 31

சுதந்திராக் கட்சி எழுப்பினாலும் சரி பதில் சொல்கிறோம். ஆனால் ஏற்கனவே நாம் ஒரு முறையைப் பின்பற்றி வருகிறோம், அந்த முறையைப் பின்பற்றினால்தான் நல்லது. எந்தச் சட்டமானாலும், கன்ஸிடரேஷன் மோஷன் கொண்டுவரப்படும் பொழுதுதான் விவாதிக்கப்பட வேண்டும், நமக்கு நேரம் இருக்கிறது. அறிமுகப்படுத்துகின்ற சமயத்திலே இதுவரையில் நாம் வேறு முறையைப் பின்பற்றவில்லை. எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து கொண்டுவரப்பட்டாலும் அல்லது அரசாங்கத்தின் சார்பிலே கொண்டுவரப்பட்டாலும் அப்படிச் செய்வது இல்லை.

DR. H. V. HANDE : I shall explain my point of Order. With due respect to our distinguished Minister for Industries, Rule 92 of our Assembly rules states :

" (i) If a motion for leave to introduce a Bill is opposed, the Speaker, after permitting, if he thinks fit, a brief statement from the member who moves and from a member who opposes the motion, may without further debate, put the question thereon. "

I am now on a specific point of order. There is a motion to introduce a Bill. Copies of the Bill have not been given to us. That is point No. 1.

Rule 91 states as follows :—

" If notice is given of any motion in respect of a Bill or an amendment which, in the opinion of the Speaker, cannot be made except on the recommendation of the Governor or with the previous sanction of the President, the Speaker shall, as soon as may be after the receipt of the notice, refer the Bill or the amendment to the authority who would have the power to grant the recommendation or sanction, and the motion shall not be placed on the list of business unless the recommendation or previous sanction required has been granted."

Here we do not know whether the President's sanction has been taken and then the Bill has been brought forward. This Bill requires sanction of the President because it affects fundamental rights guaranteed under the Constitution. Article 31 states as follows :—

31 (1) No person shall be deprived of his property save by authority of law.

31 (2) No property shall be compulsorily acquired or requisitioned save for a public purpose and save by authority of a law which provides for compensation for the property so acquired or requisitioned and either fixes the amount of compensation or specifies the principles on which, and the manner in which, the compensation is to be determined and given . . .

Sub-section (3) says—

(3) No such law as is referred to in clause (2) made by the Legislature of a State shall have effect unless such law, having been reserved for the consideration of the President, has received his assent.



1970 மார்ச் 31] [Dr H. V. Hande]

The point of order is this. I seek clarification as to the nature of the authority by which the Hon. Minister is able to bring in this motion, without giving us a copy. Our rights are taken away. There is abridgement of fundamental rights guaranteed under the Constitution. The President's assent is involved in this far-reaching measure. We do not know whether it has been obtained. I am raising the perfect point of order whether the Hon. Minister is right in bringing this motion, without taking the Members into confidence and without circulating it to us. I request the Hon. Deputy Speaker to give his ruling.

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. செ. மாதவன் : துணைத் தலைவர் அவர்களே, ஒரு மசோதாவை அறிமுகப்படுத்திய பிறகு உடனடியாக அன்றைக்கே எல்லா அங்கத்தினர்களுக்கும் இந்த மசோதாவின் நகல் சேரவேண்டுமென்று முயற்சி எடுப்பது வழக்கம். அந்த வழக்கத்தைப் பின்பற்றி இன்றைக்கு இரவே எல்லா அங்கத்தினர்களுக்கும் மசோதாவின் நகலைக் கொடுக்கவேண்டுமென்ற முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதிலே எந்தவிதமான உரிமையும் மீறப்படவில்லை. பின்னால் கன்சிடரேஷனுக்கு வரும்போது ஐந்து நாட்கள் நோட்டீஸ் கொடுக்கவேண்டுமென்ற விதி இருக்கிறது. அதற்கும்கூட விலக்குக் கொடுக்க தலைவர் அவர்களுக்கு உரிமை இருக்கிறது. இப்போது அறிமுகப்படுத்திய பிறகு மசோதாவின் நகல்களை அங்கத்தினர்களுக்குக் கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. கன்சிடரேஷனுக்கு முன்னால் தங்களுடைய தீர்ப்பு எதுவானாலும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறது.

இந்த மசோதாவை அறிமுகப்படுத்த அதிகாரம் இருக்கிறதா என்ற கேள்வியைக் கேட்டார்கள். கவர்னர் அவர்களுடைய அல்லது குடியரசுத் தலைவருடைய அனுமதியைப் பெறவேண்டுமென்ற விதி இருக்குமானால் அந்த அனுமதியைப் பெறாத மசோதாவைக் கொண்டு வர முடியாது என்று அவர்கள் சொன்னார்கள். அரசியலமைப்புச் சட்டத்தின் எந்த விதியிலும். அனுமதியைப் பெற வேண்டுமென்ற விளக்கம் கொடுக்கப்படவில்லை. நமக்கு இருக்கின்ற அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள உரிமைப்படி மாநில அரசுகளுக்கு இருக்கக்கூடிய அதிகார வரம்புக்குட்பட்டு எந்தச் சட்டத்தையும் கொண்டு வரலாம். யாருடைய அனுமதியும் பெறாமலே மசோதாவை இந்த மன்றத்தின் முன்னாலே கொண்டு வருவதற்கு முழு உரிமை இருக்கிறது என்பதுதான் எங்களுடைய வாதம். அனுமதி பெறுவது என்றால் முன்கூட்டியே பெற வேண்டுமா, வேண்டாமா என்பது பற்றியும் விளக்கமாக இருக்கிறது.

இந்த மசோதாவைப் பொருத்தவரை, 'லாண்ட் ரிஃபார்ம்ஸை'ப் பொருத்தவரை நம்முடைய அரசு கொண்டு வருவதற்கு உரிமை இருக்கிறது. இப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டு வரும்போதெல்லாம் எப்படி அனுமதியைப் பெற வேண்டுமென்பதற்கெல்லாம் அரசியல் அமைப்புச் சட்டத்திலே 'பிசினஸ் ரூல்ஸ்' என்று வகுத்திருக்கிறோம். முன் கூட்டியே அனுமதி பெற வேண்டுமென்றால் எந்த எநதச் சமயத்திலே பெற வேண்டும், அந்த அனுமதி பெறாமல் இந்த மன்றத்தின் முன் கொண்டு வர வேண்டுமானால் எந்த எந்தச் சமயத்திலே கொண்டு வரவேண்டும் என்பதற்கான விதிகள் இருக்கின்றன. அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ள 31-ஏ பிரிவில் உள்ள எக்ஸ்ம்ப்ஷன்ஸ் அப்ளை ஆகுமானால் அதற்கு பிரசிடெண்ட் அனுமதி தேவை. அந்தப் பிரிவு வந்த பின்னால் அந்தப் பிரிவுக்கு ஏற்றவாறு நம்முடைய பிசினஸ் ரூல்ஸை மாற்றியமைத்திருக்கிறோம். பிசினஸ் ரூல்சில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நாம் முன் கூட்டியே மத்திய அரசாங்கத்தைக் கலக்க வேண்டுமென்று போடப்பட்டிருக்கிறது. அதே விதியில் இன்னொன்றையும் போட்டிருக்கிறோம். அவசர காலத்தில் அந்த அனுமதியை எதிர்பாராது இந்த மன்றத்தின்முன் மசோதா கொண்டுவர இந்த அரசாங்கத்திற்கு உரிமை இருக்கிறது என்று 42-வது விதியில் தெளிவாகப் போட்டிருக்கிறோம். எந்த விதியும் மீறப்பட்டு இந்த மசோதா கொண்டுவரப்பட

வில்லை. அரசமைப்புச் சட்டவிதிகளின்படி குடியரசுத் தலைவர் அனுமதி கொடுக்க மறுத்தார்கள் என்று சொன்னால் 31-ஏ-ல் சொல்லியிருக்கக் கூடிய சில விலக்குகள் நமக்குக் கிடைக்காமல் போகலாம். காம்பன்சேஷன் பற்றிய பிரிவுகள் இருக்கின்றன. அது கிடைக்காமல் போகலாம். மசோதாவைக் கொண்டுவரக்கூடாது என்று எந்த இடத்திலும் சொல்லவில்லை. பொதுவான மசோதாக்களைப் பார்த்தாலும் கூட நாம் 'அஸ்ஸெண்ட்' பெறவேண்டுமென்ற நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட மசோதாக்களைக் கூட கொண்டு வந்து பாஸ் செய்த பிறகு கூட அனுமதி கொடுக்கலாம் என்ற விதி இருக்கிறது. இந்த விதியைப் பின்பற்றி நாம் ஏற்கனவே' பலமுறை அனுமதியைப் பெற்றிருக்கிறோம். பல சட்டங்கள் 'ப்ரீசிடெண்ட்' (Precedent) ஆக இருக்கின்றன.

இந்த மசோதாவைப் பொருத்தவரை கூட மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறோம். அவர்களும் உடனடியாக அனுமதி தருவதாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அதிகாரிகள் சென்று பேசி வந்திருக்கிறார்கள். ஆகவே, அனுமதி கொடுத்தால்தான் மசோதாவைக் கொண்டுவர முடியும் என்ற கருத்தை ஏற்கத் தயாராக இல்லை. அப்படி ஒரு அனுமதி மறுக்கப்பட்டுவிட்டால் என்ன ஆகும் என்ற விளக்கத்தையும் அரசியல் அமைப்புச் சட்டத்திலே மிகத் தெளிவாகக் கொடுத்திருக்கிறார்கள். அப்படி அனுமதி மறுக்கப்பட்டால் நம்முடைய சட்டம் செல்லுமா? அல்லது மத்திய அரசாங்கச் சட்டம் செல்லுமா? இரண்டுக்கும் முரண்பாடு இருந்தால் எந்தச் சட்டம் செல்லும்? அப்போது மத்திய அரசாங்கச் சட்டம் செல்லும் என்பதற்கும் விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. இன்னொரு அருமையான பிரிவையும் போட்டிருக்கிறார்கள். நடைமுறைச் சிக்கலின் காரணமாக அனுமதியைப் பெற வேண்டுமென்று ஏற்பட்டாலும் கூட, அந்தச் சிக்கலின் காரணமாக ஒரு சட்டம் செல்லாது என்று சொல்ல யாருக்கும் உரிமை இல்லை என்பதையும் அரசியலமைப்புச் சட்டத்தில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தின் அனுமதியைப் பெறாமல் கொண்டு வந்தாலும் கூட மீண்டும் அனுமதி கொடுக்க உரிமை இருக்கிறது. அதையும் அரசியலமைப்புச் சட்டத்திலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அனுமதியைப் பெற்ற பிறகுதான் மசோதாவைக் கொண்டுவர வேண்டுமென்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் 'பிசினஸ் ரூல்ஸை' உருவாக்கி இருக்கிறோம். அந்த விதி முறைகளுக்கு உட்பட்டு, அதை மீறாத வகையில்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது.

DR. H. V. HANDE : We are grateful to the Minister for clarifying the position. There are two points. First, I want to know whether the Centre has accepted or agreed to this proposal. If they do not agree, there will be a lot of commitment to the State. That is why I say that it is better to wait till we get the concurrence of the Centre.

Secondly, whether we wait for the concurrence or not, this is an important Bill and even fundamental principles are involved. The President also is involved. This is such an important Bill. There are several stages of a Bill-introduction, first reading, second reading and third reading. As this is only the first of the several stages, I request the Deputy Speaker to exercise his power and see that this business is kept in abeyance today, as otherwise it will amount to not taking the House into confidence.

திரு பி. ஜி. கருத்திருமன்: உதவி சபாநாயகர் அவர்களே, சர்க்கார் எந்த மசோதாவையும், எந்தச் சமயத்திலும் அறிமுகப்படுத்தலாம் என்ற விதியை ஆட்சேபிக்கவில்லை எப்போது வேண்டுமானாலும் சபாநாயகர் அனுமதிபெற்று அறிமுகப்படுத்தலாம். அதே சமயத்தில் இது



போன்ற முக்கியமான மசோதாவை உடனடியாக மேஜைமீது வைத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். பிப்ரவரி மாதம் 26-ந் தேதியே இந்த மசோதாவைக் கொண்டுவர வேண்டுமென்று நினைத்தவர்கள் இந்த முக்கியமான மசோதாவின் நகலை ஏன் இந்தச் சபையில் வைக்கவில்லை. மத்திய சர்க்காரின் அனுமதி பெற வேண்டுமா, வேண்டாமா என்பது இந்தச் சர்க்காருக்கும் அந்தச் சர்க்காருக்கும் உள்ள பிரச்சினை. அதற்குப் பிறகு சட்டம் இருக்கிறது, வக்கீல்கள் இருக்கிறார்கள். பார்த்துக் கொள்ளட்டும். இப்போது சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதன் காரணமாக சில சலுகைகளைப் பெற்றிருக்கிறார்களோ என்ற சந்தேகம் வருகிறது. ரகசியங்கள் வெளியே போக வாய்ப்பு இருக்கிறது. நான் ஒரு கேள்வி போட்டிருக்கிறேன். பிப்ரவரி 25, 26, 27-ம் தேதிகளில் மாவட்டங்களில் இருக்கும்படியான ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் யார் யார் பதிவு செய்திருக்கிறார்கள் என்ற கேள்வியைப் போட்டிருக்கிறேன். அதற்கு இன்னும் பதில் வரவில்லைபோல் இருக்கிறது. ஆகவே, சிலபேர் சலுகைகளைப் பெறக்கூடிய நிலை இருக்கிறதோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. ஒருசிலர் தப்பித்துக் கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. செய்தவன் எல்லாம் கெட்டிக்காரன், செய்யாதவன் தள்ளப்பட்டவன் என்ற நிலை ஏற்படுகிறது. பில்லைக் கொண்டுவருகிறவர்கள் தைரியமாக அன்றே கொண்டு வந்திருக்க வேண்டும். இந்தத் தகவல் வெளியே போகாமல் இருக்க வேண்டும். அந்த மசோதாவின் நகலை சட்டமன்றத்தில் வைத்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் எழுப்பிய பிரச்னைக்கு சட்டத்துறை அமைச்சர் மிகத் தெளிவாக, விவரமாகப் பதில் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொன்னதுபோல் இந்த மசோதாவின் நகல் எவ்வளவு விரைவாக மன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவில் கொடுக்கப்படும். மசோதா அறிமுகம் செய்யப்படுவது முதற் கட்டம். இதற்கு கவர்னர் அனுமதி பெறப்பட்டதா, ஜனாதிபதி அனுமதி பெறப்பட்டதா என்று கேட்டார்கள். கவர்னர் அனுமதி பெற்றாகி விட்டது. ஜனாதிபதி அவர்களிடம் தெரிவிக்கப்பட்டுவிட்டது. இதில் எல்லாம் சம்பிரதாயமான அனுமதி பெறுவது வழக்கம் என்பதைப் பற்றி சட்ட அமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொன்னார்கள். இதைக் கொண்டுவருவதற்கான உரிமை நமக்கு இருக்கிறது. இந்த மன்றமே கூட-ஆங்கிலத்தில் 'சாவரின்' என்று சொல்லுவார்கள்-முழு உரிமை பெற்றது. மசோதாவைக் கொண்டு வருவதற்கு அதிகாரத்தைப் பெற்றிருக்கிறோம். இப்போது செய்யப்படுவது எல்லாம் அறிமுகப்படுத்துகிற நிலைதான். அறிமுகப்படுத்துகிற நிலையிலேயே ஊனத்தைக் கற்பிக்கிற அளவுக்கு பயங்கரமாக நீங்கள் நினைத்தால் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. சொல்லிக்கொள்ளட்டும். எங்களுக்கு அந்தமாதிரி நிலைமை இல்லை. முகத்தைப் பார்க்காமலேயே சட்ட நுணுக்கங்களிலே நுழைய வேண்டியதில்லை. இந்த மசோதாவை அறிமுகப்படுத்த இந்த மாமன்றத்தின்முன் ஒட்டுக்குவிட்டு அனுமதி கொடுக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: துணைத் தலைவர் அவர்களே, ஊனம் கற்பிக்க விரும்பவில்லை. யார் ஊனம் கற்பிக்கப் போகிறார்கள் என்பது பின்னால் போகப் போகத் தெரியும். ஊனத்தை சொல்லவில்லை. ஊனத்தை மறைக்கவும் இல்லை. நன்றாக செயல்பட வேண்டும் என்பதற்காக சொல்லுகிறேனே தவிர இது வந்து தடுத்து நிறுத்த வேண்டுமென்ற நிலையில் இல்லை. ஆகவே செய்வதைத் திருந்தச் செய் என்பதற்கு ஒப்ப உடனடியாகச் செய்யவேண்டும், சீக்கிரமாகச் செய்ய வேண்டும் என்பது எங்களுடைய நிலையாகும்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: துணைத் தலைவர் அவர்களே, மசோதா வருகிற நேரத்திலே ஆர அமர யோசித்து தீர்க்கமாகவும் திட்டவட்டமாகவும் தெளிவாகவும்தான் வருகின்றது. அதுவும் விரைவில் கொடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அவகாசம் இருக்கிறது. ஆகவே இதை அறிமுகப்படுத்துவதற்கு மன்றத்தினுடைய அனுமதி இருக்

கிறதா என்று பார்த்து தீர்மானத்தை அனுமதி இருந்தால் அறிமுகப் படுத்தப்படுகிறது என்று அறிவிக்கவேண்டுமென தெரிவித்துக்கொள் கிறேன.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : Sir, on a point of order.

MR. DEPUTY SPEAKER : We have already discussed it.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : Sir, I want to raise another point of order on the same subject. I shall bring to your notice one important feature . . . .

MR. DEPUTY SPEAKER : எந்த ரூலின்கீழ் பாய்ண்ட் ஆப் ஆர்டர்.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : Under rule 91. My point of order relates to the introduction of the Bill.

MR. DEPUTY SPEAKER : Rule 92 (1) says—

'If a motion for leave to introduce a Bill is opposed, the Speaker, after permitting, if he thinks fit, a brief statement from the member who moves and from a member who opposes the motion, may without further debate, put the question thereon.'

அவ்வளவுதான்.

The Hon. Minister moved the motion and there was sufficient time to debate it. The Hon. Member Dr. Hande, who opposed the motion also participated in the debate. With that the matter ends.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : Sir, one important feature is . . .

6. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நிலத்தின் மீதான உச்சவரம்பு குறைத்தல்) மசோதா—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நிலத்தின் மீதான உச்சவரம்பு குறைத்தல்) மசோதாவை அறிமுகப்படுத்த அனுமதி வழங்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தலைவரவர்களே, இம் மசோதாவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.



8. 1970-71-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு

(அ) நிதிக் கோரிக்கை எண் 16—வேளாண்மை.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர் மானத்தை முன்மொழிகிறேன்:

"நிதிக் கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ரூ. 15,95,89,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

திரு. இல. பலராமன்: துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க என் பேரில் உள்ள, "நிதிக் கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 15,95,89.700-இல் ரூ. 100 குறைக்கப்பட வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

DR. H. V. HANDE : Sir, to discuss the grievances of the students of the Agricultural Colleges of Maduari and Coimbatore, I move—

"That the allotment of Rs. 15,95,89,700 under Demand No 16—Agriculture be reduced by Rs. 100."

திரு. வி. கே. கோதண்டராமன்: துணைத் தலைவர் அவர்களே, நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு கிணற்றுப் பாய்ச்சல் சாகுபடியாளர்களுக்கு மின்சாரக் கட்டண ரிபேட் அளிப்பதைப்பற்றி விவாதிக்க "நிதிக் கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 15,95,89,700-இல் ரூ. 100 குறைக்கப்பட வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. என். மருதாசலம்: துணைத் தலைவர் அவர்களே, "கோவை அரசாங்க விவசாயப் பண்ணையில் வேலை செய்யும் விவசாயத் தொழிலாளர் களுக்கு குறைந்த கூலி கொடுக்கப்படுவதால் கூலியை உயர்த்த வேண்டு மென்று விவாதிக்க".

"நிதிக் கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 15,95,89,700-இல் ரூ. 100 குறைக்கப்பட வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஏ. அ. சுப்பராஜா: துணைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டத்தில் வேளாண்மை பரிசோதனைக்கூடம் அமைப்பது குறித்து விவாதிக்க.

"நிதிக் கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக் கப்படுகின்ற ரூ. 15,95,89,700-இல் ரூ. 100 குறைக்கப்பட வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. பி. வேலுசாமி: துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைக்குத் தண்ணீர் உபயோகிக்கின்ற முறை பற்றியும் விளைபொருள்களின் விற்பனை யின் அளவை நிர்ணயிப்பது பற்றியும் விவாதிக்க.

"நிதிக் கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 15,95,89,700-இல் ரூ. 100 குறைக்கப்பட வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஆ) நிதிக் கோரிக்கை எண் 17—மீனளம்

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர் மானத்தை முன்மொழிகிறேன். "நிதிக் கோரிக்கை எண் 17—மீனளம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,75,40,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

**Dr. H. V. HANDE**: Sir, to discuss the need for the supply of more Steam Boats and the need to make necessary changes in the procedure of allotment of Boats for the early disposal of applications, I move—

"That the allotment of Rs. 1,75,40,600 under Demand No. 17—Fisheries be reduced by Rs. 100."

**திரு. ஏ. அ. சுப்பராஜா**: துணைத் தலைவர் அவர்களே, மீனவர்களுக்கு விசை மீன்பிடி படகுகள் இலவசமாக வழங்குவது குறித்து விவாதிக்க,

"நிதிக் கோரிக்கை எண் 17—மீனளம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,75,40,600-இல் ரூ. 100 குறைக்கப்பட வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. கோ. பாரதி மோகன்**: துணைத் தலைவர் அவர்களே, மீனவர்களுக்கு குறைந்த விலையில் நைலான் நூல்களும் இதர வகை நூல்களும் வழங்குவதுபற்றி விவாதிக்க:—

நிதிக் கோரிக்கை எண் 17—மீனளம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,75,40,600—இல் ரூ. 100 குறைக்கப்பட வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முனமொழிகிறேன்.

**(இ) நிதிக் கோரிக்கை எண் 39—வேளாண்மை மூலதனச் செலவு**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து**: துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"நிதிக் கோரிக்கை எண் 39—வேளாண்மை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 22,96,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

**Dr. H. V. HANDE**: Sir, to discuss policy I move—

"That the allotment of Rs. 22,96,800 under Demand No. 39—Capital Outlay on Agriculture be reduced by Rs. 100."

**Thiru K. RAMAMOORTHY**: Sir, to discuss policy I move—

"That the allotment of Rs. 22,96,800 under Demand No.39—Capital Outlay on Agriculture be reduced by Rs. 100."

**திரு. என். வரதராஜன்**: துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு விவசாயப் பண்ணைகளை இயங்கவைக்கும் முறைகளைப்பற்றி விவாதிக்க:—

"நிதிக் கோரிக்கை எண் 39—வேளாண்மை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 22,96,800-இல் ரூ. 100 குறைக்கப்பட வேண்டும்" என்ற வெட்டு தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மான்யக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து**: துணைத் தலைவர் அவர்களே, முன்னுரையாக நான் எதும் சொல்ல விரும்பவில்லையென்றாலும் உறுப்பினர்களுக்கு அச்சிட்டுக் கொடுத்திருக்கிற விளக்க உரையில்* செய்யப்பட வேண்டிய சில திருத்தங்களை முதலில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆங்கிலம் தமிழ் ஆகிய இரண்டு விளக்கங்களிலும் ஆங்கிலத்தில் பக்கம் 20, தமிழ் பக்கம் 26, இவைகளில் பயிர் நோய்களின் நிலைகள், அவை பரவியுள்ள இடங்கள் குறித்து ஆராய்ச்சி நிலையங்களுக்கு தகவல் அளிப்பதும் அப்போது சாத்தியமாகும். முதற்கண் துறையூர்,

*527—559-ம் பக்கங்களில் இரண்டாவது, மூன்றாவது இணைப்புகளாக அச்சிடப்பட்டுள்ளன.





திருவிடைமருதூர் வளர்ச்சி வட்டாரங்களில் இரண்டு இருக்கிறது. துறையூருக்குப் பதிலாக திருவையாறு என்று ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் ஆங்கிலத்திலும் துறையூர் என்பதற்குப் பதிலாக திருவையாறு என்று மாற்றிக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். அடுத்து ஆங்கிலத்தில் 23-வது பக்கத்தில்.

Special Agricultural Refinance Corporation Schemes for Agriculture Development."

என்ற தலைப்பின்கீழ் வருவதில்

"The area to benefit by this Project is 60,000 acres. The cost of a tractor with essential attachments is approximately Rs. 35,000 and therefore the total outlay under the scheme works out to Rs. 10.050 lakhs" என்று இருப்பதை

10·50 என்று மாற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். ஆக இவ்விரண்டு திருத்தங்களை ஏற்றுக்கொண்டு அதன் பிறகு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. இ. எம். சுப்ரமணியம்**: மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்த வேளாண்மைத் துறை மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

நம் நாடு ஒரு விவசாய நாடு. அதிலும் குறிப்பாக, தமிழகத்திலே 100-க்கு 85 சதவீதத்தினர் கிராமப்புறங்களில் வசிக்கின்றனர். அந்த கிராமப்புறங்களில் வசிக்கின்ற மக்களில் 75 சதவீதத்தினர் விவசாயத் தொழிலில் ஈடுபட்டு இருக்கின்றனர். 75 சதவீத மக்களுக்கு இந்த சர்க்கார் நல்ல பல பணிகள் புரியும் என்று எதிர்பார்த்தோம். அந்தத் துறை முக்கியமான துறை. அடிப்படையான துறை விவசாயம். இந்த அரசாங்கமும் சரி இதற்கு முன்பு இருந்த அரசாங்கமும் சரி, இந்தத் துறையை புறக்கணித்து விட்டது என்று இந்தச் சமயத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஏனென்றால் இன்றையதினம் இந்த மானியத்திற்காக பல கோடிக் கணக்கான ரூபாய் ஒதுக்கப்படுகிறது. இப்படி ஒதுக்கப்படுகிற கோடிக்கணக்கான ரூபாயும் விவசாயிகளுக்கு நல்லமுறையில் கிடைக்கவில்லை என்பது தான் எங்கள் கருத்து. 1968-69-ல் விவசாயிகளுக்காக ரூ. 30 லட்சம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. 1970–71-ல் ரூ. 626 லட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்த ஆண்டு அறிக்கையில் பல திட்டங்கள் புதிதாகச் செய்யப் போவதாகத் தெரிவித்துள்ளார்கள். வரவேற்கிறேன். ஐந்து ஆண்டுகளில் முப்பது கோடி ரூபாய் சிறிய நிலக்கிழார்களுக்கும், மிகக்குறைந்த அளவில் உள்ள பண்ணைத் தொழிலாளர்களுக்கு என்றும் திட்டங்களுக்காக தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தத் திட்டங்களினால் விவசாயிகள் நல்ல முறையில் பயன்பெற வேண்டுமானால் அரசு பல உதவிகளையும் செய்ய ஏற்பாடு செய்திருந்தாலும்கூட விவசாயிகள் பல துறைகளின் மூலம் அவற்றைப் பெறுவதற்கு பெரும் கஷ்டமாயிருக்கிறது. அதனால் அவர்கள் பலவித இடையூறுகளுக்கு ஆளாக வேண்டியிருக்கிறது. அதனால் அவர்கள் நல்லமுறையில் பயன்பெறுவது இல்லை. ஏனென்றால் கடன் பெறுதல், பொறுக்கு விதைகள் பெறுதல், உரம் பெறுதல், மானியங்கள் பெறுதல், விவசாயக் கருவிகள் பெறுதல், முதலியவற்றை பல துறைகளிலிருந்து அவர்கள் பெற வேண்டியிருக்கிறது. அப்படி பல துறைகளுக்கு அவர்கள் செல்ல வேண்டுமென்றால் அவர்களுக்கு அது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே நான் இந்தத் தருணத்தில் ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அரசாங்கத்திலிருந்து கொடுக்கப்படும் உதவிகள் விவசாயிகளுக்குப் போதுமான அளவிற்கு பயன்படக்கூடியதாக இல்லை. ஆகவே ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் விவசாயத்திற்கு என்று ஒரு தனிப் பிரிவை

[திரு. இ. எம். சுப்ரமணியம்] [1970 மார்ச் 31

ஏற்படுத்த வேண்டும். விவசாயிகளுக்குத் தேவையான அத்தனை சௌகரியங்களும், சலுகைகளும் அங்கேயே வழங்கப்பட வேண்டும். உரங்கள், புது விதைகள், பம்ப் செட்கள் போன்ற எல்லாம் இத்துறை மூலம் தான் வழங்கப்பட வேண்டும். இதை நான் ஏன் கூறுகிறேன் என்றால் இப்போது அவற்றைப் பெறுவதற்குப் பஞ்சாயத்து யூனியனுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அப்படி விவசாயிகள் செல்லும் அன்றையதினத்தில் கமிஷனர் அவர்கள் அங்கு இருப்பதில்லை. ஆகவே, செல்கிற விவசாயிகள் ஏமாற்றமடைந்து திரும்ப வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். நான் கூறியபடி ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்தினால் அந்தப் பிரிவுக்கு அந்த வேலைகளைத் தவிர வேறு வேலைகள் இருக்க முடியாது. ஆகவே விவசாயிகள் சென்று ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டிய நிலை இருக்காது. அப்படி ஒரே இடத்தில் கிடைக்கக்கூடிய எல்லா உதவிகளையும் பெற வழி வகைகள் செய்தால் விவசாயிகள் சரியான முறையில் நன்மை பெறமுடியும். ஆகவே, அதில் கவனம் செலுத்தி அதைப் பற்றி ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் நெல் பயிரைப் பொறுத்தவரையில் 70 லட்சம் ஏக்கராவில் தமிழகத்தில பயிரிடப்பட்டு வருகிறது. இதில் 26 லட்சம் ஏக்கராவில் 1970–71-ல் ஹை ஈல்டிங் வெரைட்டீஸ் பயிரிடத் திட்டமிடப்பட்டிருக்கிறது. ஐ.ஆர். 8, ஐ.ஆர். 5. போன்ற பல புதுரக விதைகள் பயிரிடப்படுகின்றன. இந்த ஹை ஈல்டிங் வெரைட்டீஸ் நல்ல பலனைத் தருவதில் மிகுந்த சிரமம் இருக்கிறது. இந்த நவரை சீஸனில் ஐ.ஆர்.8-க்கு நிறைந்த பப்ளிஸிட்டி கொடுத்திருக்கிறார்கள். நிறைந்த பப்ளிஸிட்டி என்று ஏன் சொல்கிறேன் என்றால் இதை அமைச்சர் அவர்கள் கூர்ந்து கவனிக்க வேண்டும். பெரிய விழாக் கோலம் பூண்டிருந்தது இந்த ஐ.ஆர்.8-க்குள்ள பப்ளிஸிட்டி. இந்த ஐ.ஆர்.8-க்காக எங்கு பார்த்தாலும் பானர்கள் கட்டப்பட்டு இருந்தன. எங்கு பார்த்தாலும் விழாக் கோலம் பூண்டிருந்தது அந்த அளவிற்கு அது பயன்பட்டு இருக்கிறதா என்றால் இல்லை என்று சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

என் தொகுதியிலும் என் அண்டைத் தொகுதியிலும் மிகு பயன் தரும் தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் ஐ.ஆர்.8 பயிரிடப்பட்டு அதனால் பயிர்கள் கெட்டுவிட்டன என்று அங்குள்ள மக்கள் அதற்காகக் கொடுக்கப்பட்ட கடனைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மீண்டும் பயிர் செய்வதற்கு எங்களுக்குப் புதுக் கடன் கொடுக்கவேண்டுமென்றும் அவர்கள் அறிக்கை ஒன்றை அந்த கோட்டாட்சித் தலைவர் அவர்களிடம் கொடுத்திருக்கிறார்கள். அது சர்க்காருக்குத் தெரியுமா தெரியாதா என்பது எனக்குத் தெரியவில்லை. இதுபோன்ற நிலையில் ஏன் இவ்வித பப்ளிஸிட்டி கொடுக்கவேண்டும் என்று கேட்கிறேன். இந்த ஹை ஈல்டிங் வெரைட்டீஸை அந்த அந்த விவசாய அலுவலர்கள் ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று அங்குள்ள விவசாய மக்களைக் கூட்டி அவர்களிடம் எடுத்துச் சொல்லி அதைச் செய்யலாமே. அதை விட்டு விட்டு பானர்கள் போட்டு இந்தவிதமாகப் பப்ளிஸிட்டி செய்யவேண்டுமா? இந்த பானர்களுக்கான செலவு யாரைச் சேர்ந்தது? அது சர்க்காரைச் சேர்ந்ததா அல்லது தனியாரிடம் வசூலிக்கப்பட்டு அது செய்யப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் தமது முடிவுரையில் அதைப் பற்றிச் சொல்வார்கள் எனக் கருதுகிறேன்.

இந்த ஐ.ஆர்.5, ஐ-ஆர் 8 போன்ற மிகு பயன்தரும் விதைகளைப் பயிரிடும்போது நாற்று விட்டவுடனே அந்தக் கூர் வெளியே வருவதற்குள்ளே பூச்சியால் அது தாக்கப்பட்டு விடுகிறது. நாற்றங்காலுக்கு இரண்டு மூன்று முறை மருந்து அடிக்க வேண்டியிருக்கிறது. பயிர் எழுந்த பிறபாடும் மருந்து அடிக்க வேண்டியிருக்கிறது. அதற்கும் தேவையான இன்ஸெக்டிஸைட்ஸ் வட்டார அலுவலகத்தில் கிடைப்பதில்லை. ஏதோ ஒரு மருந்தைக் கொடுத்துவிட்டு இதை அடியுங்கள் பரவாயில்லை என்று சொல்கிறார்கள். இப்போது யூனியனில் பவர் ஸ்ப்ரேயர்ஸ் வாங்கி வைத்திருக்கிறார்கள். அவை சரியான முறையில் இயங்குவதில்லை. அதைப் பற்றிக்



1970 மார்ச் 31] [திரு. இ. எம். சுப்ரமணியம்]

கேட்டால் நாங்கள் என்ன செய்வது, ஸ்ப்ரேயர்ஸ் நன்றாக வேலை செய்யவில்லையே என்று சொல்கிறார்கள் பவர் ஸ்ப்ரேயர்ஸ் ஆக இருந்தாலும் சரி, விவசாயக் கருவிகளாக இருந்தாலும் சரி அல்லது இன்ஸெக்டிஸைட்ஸ் ஆக இருந்தாலும் சரி சர்க்கார் என்றாலே தனியாக அவைகளை ப்ரொட்யூஸ் செய்கிறார்கள் என்று தெரிகிறது. கொடுக்கப்படும் இன்ஸக்டிஸைட்ஸ் தீவிரம் குறைந்ததாக இருக்கிறது. ஆகவே இவற்றை எல்லாம் நல்லமுறையில் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது பஞ்சாயத்து யூனியன்களில் ட்ராக்டர்கள் கூட வந்திருக்கின்றன. ட்ராக்டர்கள் எல்லாம் இப்போது புதிதாக இருப்பதால் ஓடிக்கொண்டிருக்கின்றன. இன்னும் கொஞ்சம் நாட்களுக்குள் அவை எந்த நிலையில் இருக்கும் என்பதை போகப் போகத் தெரிந்து கொள்ளலாம். ஆகவே ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் பவர் ஸ்ப்ரேயர்ஸ், விவசாயக் கருவிகள், ட்ராக்டர்கள் போன்றவற்றை ரிப்பேர் செய்வதற்காக அங்கு தொழில் கூடங்கள் ஏற்படுத்துவது சாலச் சிறந்தது.

க்ராப் இன்ஷூரன்ஸ் இருந்தால் இந்த ஹை ஈல்டிங் வெரைட்டீஸ்க்கு நன்றாகயிருக்கும் என்று கருதுகிறேன். பலயிடங்களில் ரூ. 600, ரூ 700, ரூ. 1,000 என்று செலவிட்டு பயிர் செய்து நஷ்டமடைந்த விவசாயிகளுக்கு ஹை ஈல்டிங் வெரைட்டீஸைப் புகுத்தி அதனால் பலன் ஏற்படாமல் நஷ்டம் ஏற்படும் விவசாயிகளுக்கு இந்த க்ராப் இன்ஷூரன்ஸ் முறையைக் கொண்டுவந்தால் நன்றாகயிருக்கும் என்று நான் கருதுகிறேன்.

பஞ்சாயத்து யூனியனில் அக்ரிக்கல்ச்சரல் எக்ஸ்டென்ஷன் ஆபிசர் என்று ஒருவரைப் போட்டிருக்கிறார்கள். அந்த எ.இ.ஓ. கிராமப் பகுதிகளிலுள்ள விவசாயிகளிடம் சென்று பயிர்முறைகள் பற்றிச் சொல்லவோ அல்லது அந்தப் பயிர்கள் எப்படி இருக்கின்றன என்று பார்ப்பதற்கோ அவர்களுக்கு நேரம் கிடைப்பதில்லை அவர்களுக்கு விவசாய டிப்போக்களில் விதைகளை விற்பதற்கும், மருந்துகளைக் கொடுப்பதற்கும் நேரம் சரியாகப் போகிறது. பற்றாக்குறைக்குப் பஞ்சாயத்து யூனியன் அதிகாரி அவர்கள், கமிஷனர் அவர்கள் அவர்களுக்கு வேறு வேலைகள் வைத்து விடுகிறார்கள். கடன் வசூலித்தல், அல்லது பஞ்சாயத்து வரி வசூலித்தல் போன்ற வேலைகளுக்கு அவர்களை அனுப்பி விடுகிறார்கள். இவற்றையெல்லாம் தவிர்க்க அவர்களைப் பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்திலிருந்து எடுத்து ஒரு தனி நிறுவனமாக ஆக்கி அந்தப் பதவிகளை கெஸட்டட் ஆக்கி அவர்களின்கீழ் கிராம சேவக்குகள், ஃபீல்ட்மென ஆகியோரைப் போட்டு தனியாக அவர்கள் இயங்கக்கூடிய விதத்தில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாய டிப்போவில் ஒரு யூ.டி.ஸி. அந்தஸ்தில் உள்ள ஒருவரை முற்பகல்
நியமித்து ரசாயன உரங்கள், இயந்திரப் பொருள்கள் போன்றவற்றை 11-00
அவர்களிடம் ஒப்படைத்து அவர்கள் மூலம் அவற்றை விநியோகம் செய்தால் நன்றாகயிருக்கும். இந்த எ.இ.ஓ-க்கள் கிராமங்களுக்குச் சென்றால் விவசாய மக்களை நேரிற்கண்டறிந்து உதவி புரிவதற்கு நன்றாகயிருக்கும் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையத்தினம் 11 வங்கிகளின் மூலம் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கப் போவதாகக் கூறுகிறார்கள். அந்த வங்கிகளின் மூலம் கொடுக்கப்படும் பொருள்களின் விலைக்கும், அந்த விவசாயிகள் அந்தப் பொருள்களையே பணத்தை நேரடியாகக் கொடுத்து வாங்குவதற்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கும் என்பதை யறிந்து மக்கள் பல வகைகளிலும் கஷ்டப்படுகிறார்கள். ஏன் நிரம்ப வித்தியாசம் இருக்கிறது என்பதற்கான காரணத்தை ஆராய வேண்டும். விவசாயி வங்கியின் மூலம் வாங்கினால் 1000 ரூபாய் ஆகிறது, அதையே நேரடியாக அந்த விவசாயி கடைகளிலே சென்று வாங்கினால் 800 ரூபாய் அல்லது 850

[திரு. இ. எம். சுப்ரமணியம்] [1970 மார்ச் 31

ரூபாய்க்குக் கிடைக்கிறது. சுமார் 150 ரூபாய் வித்தியாசமிருக்கிறது பம்பு செட்டுக்கு. ஏனென்றால், அவர்களைக் கேட்டால், இப்படிச் செய்கிறீர்களே என்று கேட்டால் 150 ரூபாய் செலவாகிறது என்று சொல்லுகிறார்கள். இந்த 150 ரூபாய் எங்கே செல்கிறது, ஏன் அதிகமாக வாங்குகிறார்கள் என்பதை அரசாங்கம் கவனத்தில் கொண்டு ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பஞ்சாயத்து யூனியன்களில் பவர் ஸ்ப்ரேயர்கள் இருக்கின்றன. இனிமேல் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் பவர் ஸ்ப்ரேயர் கொடுத்தால் நன்றாகயிருக்கும். அதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஹை ஈல்டிங் வெரைட்டீஸ் புரோக்ரஸ் இருக்கின்ற இடத்திலே அவர்களே அந்த மருந்தை அடிக்காமல், ஏக்கர் பரப்பிலே விவசாயிகளிடமிருந்து வசூலித்துக் கொண்டால் நல்லது என்று கருதுகிறேன். ஏனென்றால் குறிப்பிட்ட இன்செக்டிசைட்ஸ் கிடைக்கும்பொழுது வேறு இன்செக்டிசைடஸ்க்குக் கொடுப்பதால் பல பாதகங்கள் ஏற்படுகின்றன. கிராமப்புற மக்களிலே பலர் எந்த மருந்தைச் சொல்லுகிறார்களோ அதை அடிக்க வேண்டிய நிலையிலிருக்கிறார்களே தவிர, இந்த மருந்தை அடித்தால்தான் பயிர் வளரும் என்று தெரியவில்லை. ஆகவே, சர்க்கார் எடுத்து அடித்தால் நன்றாகயிருக்கும் என்று என்னுடைய கருத்தைச் சொல்லிக்கொள்ளுகின்றேன்.

சர்க்காரிலே விதைப் பண்ணைகள் நடத்துகிறார்கள். 1968–69-இலே இவ்வளவு லாபம் கிடைத்திருக்கிறது, 7·61 இலட்சம் ரூபாய் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் இந்த அறிக்கையிலே. இது எந்தத் தகவலின்படி அறிவித்திருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இந்த நிலத்திற்குண்டான குத்தகையையோ அல்லது வட்டி விகிதத்தையோ கணக்கில் விட்டிருக்கிறார்களா அல்லது ஒட்டு மொத்தமாகக் கூட்டியிருக்கிறார்களோ என்று தெரியவில்லை. அதையும் குறிப்பிடுவார்கள் என்று நம்புகிறேன். அந்த விதைப்பண்ணையிலே வேலை பார்க்கும் மானேஜர் சம்பளத்தையெல்லாம் கணக்கிலெடுத்துக் கொண்டு லாப நஷ்டம் பார்த்திருக்கிறார்களா அல்லது இலாக்கா கணக்கிலே வருகிறதா என்றும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் இப்பொழுது விதைப்பண்ணையில் தயாராகும் விதைகள் சரிவர முளைப்பதில்லை என்ற புகார்கள் இருக்கின்றன. அதற்குக் காரணம் அந்த விதைப்பண்ணையிலே இவ்வளவு விதை கிடைக்க வேண்டுமென்று அவர்களுக்கு ஒரு தாக்கீது கொடுத்துவிடுகிறார்கள். அதனால அவர்கள் சரியாக காயப்போடாமல், ஈரமாக அனுப்பிவிடுகிறார்கள். அந்த நிலைக்கு அவர்கள் பயப்படுகிறார்கள்.

(திரு. ந. தருமலிங்கம்—தலைமை)

இல்லையென்றால் ரிடையரா கும்போது ரெக்கவரி வருகிறது என்று பயப்படுகிறார்கள். என்னுடைய ஊரிலேயேகூட விதைப்பண்ணை இருக்கிறது. அந்தப் பண்ணையின் அனுபவத்தின் வாயிலாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். விதைப்பண்ணைகள் என்றால், விவசாய அதிகாரிகள், மேற்பார்வையாளர்களை, மானேஜர்களை நம்ப வேண்டும். நம்பித்தான் காரியங்கள் செய்யவேண்டும். விவசாய மக்களுக்குக் கூலி கொடுப்பதற்கும் பணம் கொடுக்க வேண்டும். அந்தப் பணம் கொடுப்பதில்லை. இவ்வளவுதான் கையிருப்பு வைத்துக் கொள்ளலாம் என்றால் பொருந்தாது. அம்மாதிரி நிலை ஏற்பட்டிருப்பதால்தான் அவர்கள் பயப்படக்கூடிய நிலை இருக்கிறது. சர்க்கார், ஒரு ஏக்கருக்கு இவ்வளவு அளவுக்குத்தான் அறுவடை செய்யலாம், நடவு செய்யலாம், களை எடுக்கலாம் என்று கூறுகிறார்கள். ஒருசில இடங்களில் ஒரு ஏக்கருக்கு 10 பேர் எடுக்கலாம். ஒரு சில சமயங்களில் 15 பேர் தேவைப்படும். 15 பேர்கள் தேவைப்பட்டால் அந்த அதிகாரி பயப்படுகிறார், மேலிடத்தில் கேட்பார்களே என்று பயப்படுகிறார்கள். அந்த நிலையில் தவறு செய்யக்கூடிய நிலைமைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். எனவே,



1970 மார்ச் 31 ] [திரு. இ. எம். சுப்பிரமணியம்]

எல்லாவற்றையும் ஆராய்ந்து இனிமேலாவது அந்த அதிகாரிகளுக்கு முழுப் பொறுப்பையும் கொடுத்தாக வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இன்று தென்னார்க்காடு மாவட்டத்திலும், பிற மாவட்டங்களிலும் பொதுக் கிணறுகள் தோண்ட மானியம் கொடுக்கிறீர்கள். பொதுக் கிணறுகள் தோண்டுவதற்குத்தான் மானியம் கொடுப்பதாக இருக்கிறது. இதைக் குழாய்க் கிணறுகளுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இறைப்பு வசதியின்றி மிகுந்த கஷ்டப்படுகிறார்கள். போதாக் குறைக்கு சர்க்கார் இந்த ஆண்டு ஜனவரி முதல் மின் கட்டணத்தை $8\frac{1}{2}$ பைசாவிலிருந்து 10 பைசாவாக உயர்த்திவிட்டார்கள். அந்த நிலையில் எப்படி ஊக்கம் ஏற்படும்? கோடை காலத்தில் பயிரிடலாமா, வேண்டாமா என்ற சந்தேகத்திற்காளாகிறார்கள். தொழில்களுக்கு மின்சக்தி சகாய விலையிலே கொடுக்கிறீர்கள். ஆனால் அதே நேரத்தில் முக்கியமான விவசாயத்திற்கு அந்த மின் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறீர்கள். அதற்கு என்ன அர்த்தம் என்று புரியவில்லை. அந்த மின் கட்டணத்தைப் பழையபடி எட்டேகால் பைசாவிற்குக் குறைப்பதோடு மட்டுமல்லாமல், உணவு தானியப் பயிர்களுக்குச் சப்சிடி கொடுப்பது நல்லது என்று கருதுகிறேன். மின் கட்டணம் எப்படி இருக்கிறது என்றே புரியவில்லை. பில் வருகிறபொழுது ஒரு இடத்தில் யூனிட்டிற்கு இவ்வளவு என்றிருக்கிறது, சர்சார்ஜ் என்றிருக்கிறது, டிலேட்டட் பேமெண்ட் என்றிருக்கிறது. மீட்டர் ரெண்ட் என்றிருக்கிறது. கீழே பார்த்தால் 119 ரூபாய், 120 ரூபாய் என்று இருப்பதைப் பார்த்துக் கட்டி விட்டு வந்துவிடுகிறார்கள். இல்லையென்றால், 20, 21-ம் தேதிக்குள் கட்டவில்லையென்றால் இணைப்பு எடுத்துவிடுவார்கள், டிஸ்கனெக்ட் செய்துவிடுகிறார்கள். அந்தப் பயத்தால் கட்டிவிடுகிறார்கள். அதையெல்லாம் கவனிக்க வேண்டும். விவசாயிகள் பிரச்னையை நன்கு கவனித்துச் செய்தால் இந்த நாட்டிலே பஞ்சமே வராது, சர்ப்ளசாக இருக்கும். குறிப்பாகத் தமிழகம் உபரி மாநிலமாக ஆகும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்பொழுது இந்த இன்செக்டிசைட்ஸ் 30 சதவீதம் என்றிருக்கிறது. முன்பெல்லாம் 50 சதவீதம் கொடுத்திருந்தார்கள். மதிப்பிற்குரிய மறைந்த அமைச்சரவர்கள் 1967–68-ல் வந்த சமயத்திலே 30 சதவீதம், 35 சதவீதம் ஆக ஆக்கினார்கள். இப்பொழுது அதையும் எடுத்துவிடுவதாக இன்றைய அறிக்கையிலே தெரிகிறது. அதை எடுத்துவிடக் கூடாது. அதை மீண்டும் நீடித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன், வணக்கம்.

*புலவர் க. முருகையன்: மாண்புமிகு தலைவரவர்களே, இன்று வைக்கப்பட்டிருக்கும் வேளாண் துறை மானியத்தை ஆதரித்துச் சில சொல்ல நினைக்கிறேன்.

முதலாவதாக, வேளாண் துறையில் கீழ்நிலைப் பணியாளர்களாகயிருந்த ஃபீல்ட்மென், மேஸ்திரிகள் ஆகிய இவர்களின் கோரிக்கைகளை ஏற்று அதுவும், ஒரு மாத எல்லைக்குள்ளேயே அவர்கள் விரும்பிய பதவி உயர்வு, ஊதிய உயர்வு, பணி நிரந்தரம் முதலியவற்றை வேளாண்துறை செய்து கொடுத்ததற்காக அமைச்சரவர்களையும், இந்த அரசையும் நான் நாட்டுமக்களின் சார்பாக, அந்த ஊழியர்கள் சார்பாக முதலிலே பாராட்டுகிறேன்.

இன்று தமிழகத்தைப் பொறுத்தவரையிலே வேளாண்துறையிலே இந்த அரசு எப்படிச் செயல்படுகிறது என்பதை உலகமே நன்கு கவனித்துக் கொண்டு வருகிறது. சுருக்கமாகச் சொன்னால், தமிழகத்தைப் பொறுத்த வரையிலே ஒரு விவசாயப் புரட்சி நடத்துவதாக அமெரிக்கா வரையிலேயும் உணரும் நிலை இன்றிருக்கிறது. அதற்குக் காரணம், இந்த நாட்டின் அடிப்படைத் தேவை எது என்பதைத் தங்கள் அனுபவத்தாலும், தாங்கள் கற்ற கல்வியாலும் உணர்ந்தவர்கள் இந்த நாட்டின் அடிப்

படை வேளாண்மை என்று உணர்ந்து, மற்ற துறைகளைக் காட்டிலும் அதிக அக்கறை காட்டுவதால் இந்த மூன்றாண்டுகளிலே வியத்தகு மாற்றம் ஏற்பட்டிருப்பதை உணருகிறோம். 1966-67-இலே இப்படி உணவுப் பங்கீடு இல்லாத ஒரு நிலை வரும் என்று யாராவது கனவிலே கண்டிருக்க முடியுமே தவிர, தெளிவான சிந்தனையிலே சிந்தித்திருக்க முடியாது. 1969-70-இலே உணவுப் பங்கீடு தேவையில்லை என்று யாரும் நம்பியிருக்க முடியாது. அதைவிட மேலாக கடந்த இரண்டாண்டுகளாக, வானம் நம்மைக் கடுமையாகச் சோதித்தது, நேரத்திலே பெய்யவில்லை, நேரங்கெட்ட நேரத்திலே தேவைக்கு மேலாகப் பெய்தது. இத்தனைக்கும் மேலாக வேளாண்துறையிலே செயல்பட்டு நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்திருக்கிறோம் என்றால் இந்த அரசையும், உணவுத் துறையைச் சேர்ந்த பல அலுவலர்களையும், அமைச்சர்களையும் பாராட்டத்தான் இந்த நாடு கடமைபட்டிருக்கிறது. எனக்கு முன்னால் பேசியவர் குறிப்பிட்டார், 'ஐ.ஆர்.8 ஒரு மிகு பயன் தரும் நெல் அல்ல' என்று கேட்பதற்கே கொஞ்சம் வேடிக்கையாக இருந்தது.

திரு. இ. எம். சுப்பிரமணியம்: Personal explanation, Sir. ஐ.ஆர்.8 மிகுபயன் தரக்கூடிய நெல் இல்லை என்று நான் சொல்லவில்லை. மிகு பயன் தரக்கூடிய நெல் தான். மிகவும் கஷ்டமான நிலையிலே அதைப் பயிரிட வேண்டியிருக்கிறது. மிகுந்த சிரமம் ஏற்படுகிறது என்று கூறினேனே தவிர, ஹை ஈல்டிங் வெரைடி இல்லை என்று நான் சொல்லவில்லை.

*புலவர் க. முருகையன்: விவசாயத் துறையில் ஈடுபட்டிருப்பவன் நான். சொந்தமாக விவசாயம் செய்பவன். கஷ்டம் இல்லாமல் விளைகின்ற வேளாண்மை இனிமேல் வரவேண்டும். தஞ்சை மாவட்டத்தில் ஒரு குறை கூட உண்டு. காவேரித் தண்ணீர் இதுவரையில் தட்டு இல்லாமல் கிடைத்து வந்தது. அதனால் எங்கள் தஞ்சை மாவட்டக்காரர்கள் உழைத்துத் தான் வேளாண்மை செய்ய வேண்டும் என்ற நினைவே இல்லாமல் போய் விட்டார்கள். விவசாயத்திற்கு வசதி இல்லாத மாவட்டம் என்று கருதப் படுகிற கோவை மாவட்டத்தில் கிடைக்கின்ற வருமானத்தில் பாதிகூட தஞ்சையிலே கிடைப்பதில்லை. உழைக்க வேண்டும் என்ற எண்ணம் வந்ததன் காரணமாக ஆடுதுறை 27, ஐ.ஆர். 8 நெல்களை இந்த அரசு மக்களிடையே எவ்வளவு தெளிவாக எடுத்துக்காட்ட வேண்டுமோ அவ்வளவு தெளிவாக எடுத்துக்காட்டி, 'தஞ்சை மாவட்ட மக்களே, இன்னும் நீங்கள் உறங்கிக் கொண்டு ஆயிரம் காலத்திற்கு முன்பிருந்த அதே கலப்பையை வைத்துக்கொண்டு, ஆயிரங்காலத்துக்கு முன்பிருந்த, அதே விதையைப் போட்டுக் கொண்டிருந்தால் பயனில்லை' என்று எடுத்துக் காட்டியிருக்கிற காரணத்தினால், இன்று தஞ்சை மாவட்டத்தில் இருபோகம் பயிராகிற ஏறத்தாழ 6 லட்சம் எக்கர்களில், நாலைந்து லட்சம் எக்கர்களில ஆடுதுறை 27 பயிரிடப்படுகிறது ஒருபோகம் செய்யப்படுகிற நிலத்தையும் சேர்த்து, வரப் போகிற ஆண்டில் யாரும் ஐ.ஆர். 8-ஐப் பற்றி விளம்பரம் செய்யவேண்டிய அவசியம் இல்லாத அளவுக்கு அதில் பலன் இருக்கிறது. ஒரு சிறிய உதாரணம் சொல்கிறேன். என் சொந்த வயலில் ஒரு ஏக்கர் இந்த ஆண்டு கார் மகசூலில் ஐ.ஆர். 8 பயிர் செய்து ஏறக்குறைய 47 மூட்டை அறுத்தேன். எனக்குப் பக்கத்தில் இருப்பவர் 56 மூட்டைகள் எடுத்தார். சாதாரண நெல்லைப்போன்று 3 பங்கு அளவு பலன் உள்ளதாக இருக்கும். செலவு சற்று கூட ஆகும் என்பது உண்மை. இதில் வருமானத்தைப் பார்க்கிறபொழுது மற்றொரு நெல்லில் வருகிற வருமானத்தைவிட இது இரண்டு பங்கு அதிகமாக இருக்கிறது. இதற்கு விளம்பரம் செய்வதற்கு எதற்காகத் தட்டி என்று கேட்டார்கள். ஆடுதுறை 27 ரகம் கண்டுபிடித்ததுகூட நாங்களே என்று எதிர்க்கட்சி மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வார்கள். ஆடுதுறை 27 உங்கள் காலத்தில் கண்டு பிடிக்கப்பட்ட நெல் தான்; உண்மை. 1967 மார்சுக்கு முன்னாலேயே ஆடுதுறை 27 கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. ஆனால், மக்களிடையே முறைப் படி அறிமுகப்படுத்தப்படவில்லை. அதை மறக்கவே கூடாது. அதே போலத் தான் ஐ.ஆர். 8-ஐ ஒரே ஆண்டிலே 6 லட்சம் ஏக்கரிலே பயிரிடச் செய்ய முடியும் என்று சொன்னால், மக்கள் அதில் நம்பிக்கை கொள்ள





முடியும் என்று சொன்னால், அது விளம்பரத்தில் இருக்கிறது. அதற்காக இந்தச் சர்க்கார் எத்தனை வேலைகள் செய்கின்றது என்பதைக் கவனிக்க வேண்டும். நல்லெண்ணம் வருகிறபொழுது எல்லோரும் கேட்டு மகிழ வேண்டும். அதற்கு மாறுபட்ட குணமும் இருக்கிறது. உலகத்தில் வேறு எந்தப் பொருளில் தண்ணீர் தெளித்தாலும் குளிரும். ஒரே பொருளில் தண்ணீர் தெளித்தால் அது வேகும். அதாவது சுண்ணாம்பு. அது மாதிரி உள்ளம் யாருக்கும் இருப்பது நல்லது அல்ல. யார் செய்தாலும் அதைப் பாராட்ட வேண்டும். 1965-66-ல் உண்பதற்கு சோறு, கஞ்சி கிடைக்குமா என்ற நிலைமை இருந்தது. இப்பொழுது 1970-ல் உணவுக் கட்டுப்பாடே இல்லை என்று சொன்னால் ஒருவேளை யாராவது 2, 3 ஆண்டுகளுக்குச் சேர்ந்தாற்போல் உறங்குகிறவர்களை எழுப்பிச் சொன்னால், இன்று இந்த நாட்டில் உணவுக் கட்டுப்பாடு இல்லை என்று சொன்னால், நம்பமாட்டார்கள் இப்படிப்பட்ட மாறுதல் எப்படி ஏற்பட்டது என்றால், இந்த அரசு செய்ய வேண்டியதை உணர்ந்து செய்கிறது. நாம் செய்கின்ற பல்வேறு முன்னேற்றங்களில் முதல் முன்னேற்றம், அடிப்படை முன்னேற்றம் வேளாண்மை.

இந்த நாட்டைப் பொறுத்த வரையில் பெரிய முதலீடு செய்து, பெரிய தொழில்கள் செய்து, அவற்றை விரிவுபடுத்துவதைவிட, நாடெங்கிலும் பரவலாகக் கிடக்கின்ற நிலங்களைப் பண்படுத்துதல், பயன் படுத்துதல் என்பது தான் முதல் காரியம். இதற்காக 2 லட்சம், 4 லட்சம் கிணறுகள் தேவை என்றாலும் வெட்ட வேண்டும். இதற்காக 4 லட்சம், 6 லட்சம் பம்புசெட்டுகள் வேண்டும் என்றால், அதையும் கொடுக்க வேண்டும். இதற்காக நம் சக்திக்கு மீறி தேவைப்படுகிற ரூ. 30 கோடி, 40 கோடி, 50 கோடி செலவிடவேண்டும் என்று இந்தச் சர்க்கார் முனைகிறது. இந்த அரசு முனைகிறது, செயல்படுகிறது. அப்படிச் செயல்படுகிறபொழுது எதிர் பாராத பலன்கள் வருகின்றன. இதைக் கண்டு மகிழ்கின்ற உள்ளம் நம் அனைவருக்கும் வேண்டும்.

ஏறக்குறைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் 160 லட்சம் ஏக்கர்கள் புஞ்சை நிலங்கள் இருக்கின்றன. இப்பொழுது பயன்படுத்தப்படுவது 100 லட்சம் ஏக்கர் தான். இவற்றில் பயிரிடப்படும் விதைகளில் இன்னும் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். நஞ்சை நிலத்தில் ஐ.ஆர். 8, ஆடுதுறை 27-ஐவிட இன்னும் குறைந்த வயதுள்ள ஒரு நெல் இப்பொழுது வந்திருக்கிறது. அதாவது கருணை. இவைகளைப் பயிரிட ஏற்பாடு செய்திருக்கிறது. கருணை பயிர் வயதிலே குறைவு, உயரத்தில் ரொம்பக் குறைவு, விளைச்சல் ரொம்ப அதிகம். அதற்கு முன்பிருந்தது வயது மிகுந்தது, வளர்ந்தது, பலன் இல்லாதது. இன்று இருக்கிற வயது ரொம்பக் குறைவு, விளைச்சலில் கருணை உயரத்திலே குறைவு, வயது ரொம்பக் குறைவு, விளைச்சலில் ரொம்ப அதிகம். பாராட்ட வேண்டியது. அதைப் பாராட்ட வேண்டும். அடுத்த வயலில் நான் பார்த்துச் சந்தோஷப்பட்டேன். எனக்கு அடுத்த வயலிலுள்ளவர்க்கு அதைப் பார்த்தபொழுது கொஞ்சம் வயிறு எரிச்சலாக இருக்கிறது. இவ்வளவு சிறிய வயதில் இவ்வளவு நல்ல பலன் தருகிறதே என்று வயிறு எரிச்சலாக இருக்கிறது; என்ன பண்ணுவது?

கடைசியாக ஒன்றே ஒன்றைச் சொல்லி முடிக்கிறேன். எனது தொகுதியைப் பற்றியது. திருவையாறு தொகுதியில் எல்லாப் பரீட்சைகளும் நடத்தப்படுகின்றன. ஆனால் ஒரே ஒரு குறை இருக்கிறது. அதை நான் இங்கே ஞாபகப்படுத்த வேண்டியிருக்கிறது. கல்லணை என்னுடைய தொகுதி தலைப்பில் இருக்கிறது. வெள்ளம் வரும்பொழுது, கல்லணையில் நீர் தேக்கிவைக்கப்படும்பொழுது. என்னுடைய தொகுதி நிலம் காய்ந்துபோய் விடுகிறது. 5 வருஷமாகக் காய்கிறது. பெரிய மாறுதல் செய்யப்படவேண்டும். வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். அந்தப் பகுதி ரொம்ப வளமான பகுதி. ஐந்து ஆண்டுகளாக இரண்டு போகம் கெட்டுப்போகிறது. நிரந்தரமான ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. பி. வேணுசாமி: தலைவர் அவர்களே, என்னுடைய பெயரில் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானத்தின் மீது விவசாயம் சம்பந்தப்பட்ட வரையில் சில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன்.

நமது நாட்டிலே 100-க்கு 74 பேர்கள் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டவர்கள். விவசாயத்தை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம். நதியின் நீரால் பாய்ச்சப்படுகிற விவசாயம், குளத்தடி நீரால் பாய்ச்சப்படுகிற விவசாயம், இயற்கையை நம்பி இருக்கிற விவசாயம், கிணற்றுத் தண்ணீரை வானத்துநீரை அடித்துப் பாய்ச்சப்படுகிற விவசாயம் ஆகிய நான்கு வகைகளாகப் பிரிக்கப்படலாம். நதி நீர்ப்பாசனம், குளத்துநீர்ப்பாசனம் ஆகியவைகளால் ஏற்படுத்தப்படுகிற விவசாயத்தைப பொறுத்தவரையில் பூமிக்குத் தண்ணீர் வந்து சேருகின்ற வரையில் அந்தத் தண்ணீரைப் பொறுத்த வரையில் அதைப் பாதுகாக்கின்ற பணி முழுவதும் அரசைச் சேர்ந்தது. அங்கே வாய்க்காலைச் செம்மைப்படுத்துவதோ, வரப்பை முறைப்படுத்துவதோ முழுவதும் அரசைச் சேர்ந்தது. இதுதான் சாதாரணமாக நதி நீர்ப்பாசனம், குளத்து நீர்ப்பாசனத்திலிருக்கிற நிலைமை. ஆகாயத்தைப் பார்க்கிறவர்கள், கடவுள் நம்பிக்கைக் கொண்டவர்கள் கடவுளால் மழை பெய்யவேண்டும் என்றும், இயற்கையில் நம்பிக்கைக் கொண்டவர்கள் இயற்கையாக மழை பெய்யவேண்டும் என்றும் எதிர் பார்க்கிறார்கள். ஆனால், கிணற்று நீர்ப்பாசனத்தில் இருக்கக்கூடிய நிலைமை, தனக்குக் கிடைக்கின்ற வருவாயை, தான் சேர்த்துவைத்திருக்கின்ற பொருளை முழுவதையும் போட்டு, பம்புசெட்டு, மோட்டார் வைத்து, கிணற்றை ஆழப்படுத்தி, கிணற்றிலிருந்து நீர்ப்பாசனம் செய்யவேண்டியிருக்கிறது. சுமார் 15 லட்சம் ஏக்கர் தமிழகத்தில் இருக்கிற கிணற்று நீர்ப்பாசனத்தினால் விவசாயம் செய்யப்படுகிறது. கிணற்று நீர்ப்பாசனத்தில் ஒரு சொட்டுத் தண்ணீர் அங்கே பாசனத்திற்கு உபயோகப்படுத்தினாலும் அதை முழுவதும் விவசாயி தன்னுடைய உடல் உழைப்பால், தன்னுடைய இதயத்தின் உழைப்பால் உபயோகப் படுத்துகிறான். உழைப்பால் என்னென்ன செய்யமுடியுமோ அதை முழுவதையும் உபயோகப்படுத்தி கிணற்று நீர்ப் பாசனத்தினால் விவசாயம் செய்கிறான்.

அப்படி விவசாயம் செய்கிறவர்கள், கிட்டத்தட்ட இந்த நாட்டில் 15 லட்சம் ஏக்கரில் செய்கிறார்கள். 2 ஆயிரம் ரூபாய் அளவில் மோட்டார் பம்பு செட்டுகள் விவசாயத்தில் ஈடுபடுத்தியிருக்கிறார்கள். இப்படி 5 லட்சம் பம்பு செட்டுகளுக்கும், ரூபாய் 50 கோடி மூலதனம் இருக்கும் என்று நான் கருதுகிறேன். இப்படி 50 கோடி ரூபாய் மூலதனமாகப் போட்டு இருப்பது முழுவதும் விவசாயிகளுடைய கையிலிருந்துதான் போட்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் பரம்பிக்குளம், ஆழியாறு சோலையாறு திட்டத்தின்கீழ் 2,40,000 ஏக்கர்கள் பாசனத்திற்கு வருகின்றன. இந்த 2,40,000 ஏக்கருக்கு, அந்தத் திட்டத்திற்கு இதுவரையில் செலவிடப்பட்டிருப்பது ரூ. 62 கோடி. இன்னும் 8 கோடி செலவாகும் என்று சொல்லப்படுகிறது. 2,40,000 ஏக்கருக்குப் பாசனத்திற்கு செலவு 62 அல்லது 70 கோடி ரூபாய், அதே நேரத்தில் விவசாயிகள் தங்கள் கையிலிருந்து போட்ட ரூ. 50 கோடியில் 15 லட்சம் ஏக்கர்கள் பாசனம் பெறுகின்றன. அவர்களுக்கு அரசு கொடுக்கும் உதவி என்ன? ஏதாவது உதவிகள் கொடுக்கப்படுகின்றனவா என்று பார்த்தால் இல்லை. உதவி இல்லையென்றாலும் பரவாயில்லை; உபத்திரவம் செய்யாமல் இருந்தாலே போதும்.

இன்றைக்கு மின்சாரக் கட்டணத்தை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். நதிநீர், குளத்துநீர் பாசனத்திற்கு ஏக்கருக்கு ரூ. 30 என்றால், பம்பு செட்டு வைத்து இறைப்பதில் ரூ. 300 ஆகிறது. ரூ. 300 செலவான பிறகும் அவர்களுக்கு மின்சாரக் கட்டணத்தையும் அதிகப்படுத்தினால் அவர்களால் அதை எப்படித் தாங்க முடியும், விவசாயத்தை நடக்க முடியும்? அதுதான் இன்றைக்கு யதார்த்தமாக இருக்கும் நிலைமை. ரூ. 30 செலவில் உற்பத்தி செய்யும் பொருளை என்ன விலைக்கு விற்கப்படுகிறதோ அதே விலைக்குத்தான் ரூ. 300 செலவில் உற்பத்தி செய்தவனும் விற்கவேண்டும். அவர்களோடுதான் இவனும் மார்க்கெட்டில்





வியாபாரத்தில் போட்டி போடவேண்டியிருக்கிறது. அதே விலைக்குத்தான் விற்கவேண்டியதாக இருக்கிறது. இதிலிருந்து விவசாயிகள் என்ன கொடுமையான நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. ஆகவேதான் கோவையில் ஒரு கிளர்ச்சி இந்த கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்று நடந்தது. அப்படி அவர்கள் குறைக்கவேண்டும் என்று கிளர்ச்சி நடத்திய காலத்தில், அதில் சம்பந்தப்பட்டவர்கள் மிராசுதார்கள் என்ற எண்ணம் காட்டப்பட்டது. செய்திகளைப் பார்த்தேன். சொன்னதைக் கேட்டேன். சாதாரண விவசாயிகள் கட்ட முடியாது என்கிற நிலையில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்திலே, பல மிராசுதார்கள் சேர்ந்துகொண்டார்கள். மிராசுதார்கள் சேர்ந்து கொண்டார்கள் என்ற காரணத்திற்காக, இது ஒன்றுமில்லை, இவையெல்லாம் மிராசுதார்கள் கட்டுவதற்கு முடியும் என்று சொல்வதானால், வாஸ்தவமாகவே, பல பேர்கள் பல போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள், இப்பொழுது இருக்கும் அரசுகூட இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஆரம்பித்தார்கள். அதிலே பலபேர்கள் சேர்ந்துகொண்டார்கள். சமூக விரோதிகள் சேர்ந்து கொண்டார்கள் எனகிற காரணத்திற்காக, அது ஒரு தவறான போராட்டம் என்று சொல்லமுடியுமா? இதுபோல்தான் விவசாயிகளுடைய போராட்டம். மிராசுதார்களும் சேர்ந்துகொண்டார்கள் என்பதால் அது வேறுவிதமான போராட்டம் என்று கருத்துச் சொல்வது நியாயந்தானா என்பதுதான் இன்றைக்கு இருக்கும் நிலை.

விவசாயிகளைப் பாதுகாக்கும் பணியை எடுத்துக் கொள்ளவில்லையாதலால் விவசாயிகள் குமுறிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க அரசு தவறிவிட்டது என்கிற நிலைக்கு ஆளாகும் நிலைவரும்.

ஒரு ஏக்கர், அரை ஏக்கர் வைத்திருக்கும் விவசாயிகள் சாதாரணமாக தங்கள் குடும்பங்களை நடத்தமுடியாமல் இருப்பதால், அவர்களுக்கு இருக்கின்ற நிலவரியை ரத்து செய்ய முயற்சியை இந்த அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பயிர் இன்ஷூரன்ஸ் திட்டம் என்று சொல்லப்பட்டது. வெகு காலத்திற்கு முன்பே, அமைச்சர், மறைந்த மாண்புமிகு கோவிந்தசாமி அவர்கள் இந்த அரசு பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தைக் கொண்டு வரும் என்று சொன்னார்கள். ஆனால் இதுவரைக்கும் அப்படிக்கொண்டு வரும் நிலைமையைக் காணோம். பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தை உடனடியாகக் கொண்டுவந்து விவசாயிகளைப் பாதுகாக்கும் பணியை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்தைப் பொறுத்தவரையில், விவசாய அதிகாரிகள் ஏதாகிலும் விவசாயத்தைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்தவர்களாக இருக்கவேண்டும் சாதாரணமாக அப்படியிருப்பதில்லை. போன அரசில்கூட விவசாயமே தெரியாத அதிகாரிகளால் அந்த அரசே கவிழ்ந்து போனதைக் கண்டிருக்கிறேன். ஆகவே, விவசாய அதிகாரிகள் உண்மையாக விவசாயத்தைப்பற்றி எந்த வகையிலாவது தெரிந்துகொண்டவர்களாக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் விவசாயத்திற்கு நலமாக இருக்கும். அமைச்சருக்கும், இந்த அரசுக்குக்கூட நல்லதாக இருக்கும். பல அதிகாரிகளுக்கு விவசாயமே தெரியுமோ தெரியாதோ அது ஆண்டவனுக்குத்தான் தெரியும்.

கோவை நிலைமை குமுறிக்கொண்டு எரிமலைபோல் வளர்ந்துகொண்டு இருக்கிறது. ஆகவே, உடனடியாக விவசாயிகளுக்கு உதவி செய்ய முன்வரவேண்டும். 150 அடி, 200 அடி கிணறு வெட்டித் தண்ணீர் எடுக்கும் விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன்.

திரு. தி. பொன்னுமலை: தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த மாமன்றத்திலே விவசாய மானியக் கோரிக்கைபற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. தி. பொன்னுமலை] [1970 மார்ச் 31

தொன்று தொட்டகாலமாக விவசாயிகள் அல்லல்பட்டுக்கொண்டிருந்த நிலை, பன்னெடுங்காலமாக விவசாயிகள் விதைதானியம் கிடைக்காமல் அவதிப்பட்ட நிலை, உரம் கிடைக்காமல் அல்லல்பட்ட நிலை, 100-க்கு 25 ரூபாய், 30 ரூபாய், 40 ரூபாய் என்று வட்டிக்கு வாங்கி, ஒரு ஆண்டு இரண்டு ஆண்டுக் காலத்தில் நிலங்களை விற்றுவிடவேண்டி இருந்த நிலை, இவற்றையெல்லாம் நீக்கி நிலவள வங்கிமூலம், இந்தியன் பாங்கி மூலம், இந்தியன் ஓவர்சீஸ் பாங்கி மூலம் இன்னும் பல பாங்கிகள் மூலம் இந்தச் சர்க்கார் திட்டமிட்டு கடன் வழங்கி வருகிறார்கள். அதன் மூலம் பல நன்மைகளைச் செய்து வருகிறார்கள். அவர்களுடைய நிலைமைகளைச் சரிப்படுத்தியிருக்கிறார்கள், இன்னும் ஒரு ஆண்டு காலம் கழித்துப் பார்த்தால், கடன் வாங்குவதற்கே ஆள் இல்லாத நிலை ஏற்படக்கூடிய நிலையில் பல பாங்கிகளும் கடன்கள் வழங்கி வருகிறார்கள். இப்படி நல்ல வகையில் கடன்கள் வழங்கி விவசாயிகளுக்கு நன்மைகளைச் செய்துகொண்டு வரும் அரசை நாமெல்லாம் மனமார, வாயாரப் பாராட்டுகிறோம்.

இந்த ஆண்டு புதிதாக 60,000 கிணறுகளை வெட்டத் திட்டமிட்டு, விவசாயிகளுக்கு நல்லதொரு ஊக்கம் அளிக்கத் தக்க ஏற்பட்டினைச் செய்திருக்கிறார்கள். அதற்கு இந்த அரசை நாம் பாராட்டுகிறோம்.

அதே போல கிராமங்களில் நாமெல்லாம் பார்த்தால் சென்ற தடவை 5, 6 ஆண்டுகளுக்கு முன்பு, விவசாயி வீட்டிலே குழந்தை பிரசவித்தால், அவனிடம் வண்டி கிடையாது, பக்கத்தில் ஆஸ்பத்திரி கிடையாது. ரோட்டு வசதி கிடையாது என்ற நிலை இருந்தது. அது இன்றைக்கு மாறி, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு பிரசவ விடுதியை ஏற்படுத்தி வசதிசெய்து கிராமமக்களுக்கு, சாதாரண ஏழை எளிய மக்களுக்கு இந்தச் சர்க்கார் வசதிசெய்திருக்கிறது. அதை நாமெல்லாம் மிக மிகப் பாராட்டுகிறோம்.

அதேபோல, விவசாய மக்கள் காடுகளுக்குச் செல்வதாக இருந்தால், இரவு நேரங்களில் பயமாக இருக்கும். இருட்டாக இருக்கும். இன்றைக்கு 40 கோடி ரூபாய்க்குத் திட்டமிட்டு, தெருக்களுக்கும், சாலைகளுக்கும் அலங்கரிக்கும் வகையில். மக்கள் எங்கும் பயமில்லாமல் அடி எடுத்துவைக்கும் அளவில், விளக்குகள் போட ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இன்னும் 20 கோடி ரூபாய்க்குத் திட்டமிட்டு, ஆக மொத்தம் 60 கோடிக்கு, தெருக்களுக்கெல்லாம் வீதிகளுக்கெல்லாம், ரோடுகளுக்கெல்லாம் தேவையுள்ள அளவுக்கு விளக்குகளைப் போட்டு, சாதாரணக் கூலியும் வேலைக்குப் போக, விவசாயிகள் வேலைக்குப்போக இந்தச் சர்க்கார் நல்ல வழிவகைகளை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தப் புள்ளி விவரங்களைப் பார்த்தால், விளக்கமாகத் தெரியும். இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போது, என்ன இப்படிச் சொல்லிக்கொண்டே இருக்கிறீர்களே என்றதற்கு பதில் சொல்லும்போது, எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார்கள், நாங்கள் எதற்காக இருக்கிறோம், இதையெல்லாம் சொல்லத்தானே இருக்கிறோம் என்றார்கள். அவர்களை நான் பாராட்டுகிறேன்.

முற்பகல் 21-30 இந்தத் திட்டங்கள் எல்லாம், செயல்கள் எல்லாம் நடைபெற வேண்டிய அளவிற்கு நல்லபடியாக நடைபெற்று வருவதைப் பாராட்டுகிறேன். என்னுடைய சில யோசனைகளையும் அரசுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

தற்போது விவசாயிகள் கிணறுகள் வெட்டி விவசாயம் செய்து வருகிறார்கள். சுமார் 70 லட்சம் விவசாயிகள் இன்றைக்கு மின்சார இணைப்பு வேண்டும் என்று விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். ஓராண்டுக்கு 50 ஆயிரம், 55 ஆயிரம் மின்சார இணைப்பு என்று செய்து கொடுத்தாலும் கூட எல்லோருடைய தேவைகளையும் பூர்த்தி செய்வதற்குக் குறைந்தது இருபது ஆண்டுகளாகிவிடும். ஆகவே, இதற்குப் புதிதாக ஒரு திட்டம் வகுத்துச் செயல்பட வேண்டும். இப்பொழுது சுமார் 4 லட்சம் பேர் பம்ப் செட்டுகளுக்கு டீசல் ஆயில், க்ரூட் ஆயில் போட்டு மோட்டார் வைத்து



1970 மார்ச் 31 ] [திரு. தி. பொன்னுமலை]

தண்ணீர் இறைத்துக்கொள்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்களுக்கு மோட்டார் களுக்கு வேண்டிய ஆயில் குறைந்த விலையில், அதாவது பாதி விலையில் கொடுத்து வந்தால் அவர்கள் தொடர்ந்து ஆயில் என்ஜின்களைக் கொண்டே விவசாயம் செய்து வருவார்கள். இப்பொழுது எல்லா விவசாயிகளும் என் மின்சார இணைப்பு வேண்டுமென்று கேட்கிறார்கள். நான்கு ஏக்கர் பூமி யுள்ள ஒருவருக்கு மின்சார இணைப்பின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 500 ரூபாய்தான் செலவாகிறது. ஆனால் அவர் ஆயில் என்ஜின் வைத்துச் செலவு செய்தால் ஆண்டு ஒன்றுக்கு அதே பூமிக்கு ஆயிரம் ரூபாய் வரையில் செலவாகிறது. ஆகவே, மின்சார வசதி செய்தால் செலவு குறையும் என்ற எண்ணம் உண்டாகின்றது. அதே நேரத்தில் டீசல் ஆயில், க்ரூட் ஆயில் இவற்றின் விலை ஏறியிருக்கிறது. ஆகவே, இந்த எண்ணெய்களைப் பாதி விலையில் கால்பங்கு விலையில் விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டும். இப்படி விலையைக் குறைத்துக் கொடுத்தால் நூற்றுக்கு எழுபத்தைந்து விவசாயிகள் ஆயில் என்ஜின்களை வைத்தே விவசாயம் செய்வார்கள். இன்றைக்கு நிலவள வங்கி, கூட்டுறவு வங்கி போன்றவை எல்லாம் கடன் வேண்டுமா என்று விவசாயிகளைக் கூப்பிட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். லட்சக்கணக்கான ரூபாய்களை விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து வருகிறார்கள். ஆனால் விவசாயிகளின் முன்னேற்றத்திற்கு டீசல் ஆயில், க்ரூட் ஆயில் இவற்றின் விலையேற்றம் குறுக்கே நிற்கிறது. ஆகவே, இவற்றின் விலையைக் குறைக்க வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில் எல்லோரும் 100 அடி, 150 அடி ஆழம் கிணறுகளை வெட்டி விவசாயம் செய்கிறார்கள். அவர்கள் நிரந்தரமாக மரவள்ளிக்கிழங்கு, நிலக்கடலை உற்பத்தி செய்பவர்கள். இவர்கள் நூற்றுக்கு அறுபது பேர்கள் இருக்கிறார்கள். இவர்களுடைய விவசாயம் இரண்டு ஆண்டுக்காலமாகப் பாதிக்கப்பட்டு, தங்களுடைய கடனைக்கூட திருப்பிக்கட்ட முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஏனெனில் மரவள்ளிக்கிழங்கின் மார்க்கெட் இறங்கிவிட்டது. இங்கிருக்கும் விவசாயிகளுடைய கஷ்டம் இரண்டாண்டுக் காலமாக கொஞ்சநஞ்சம் அல்ல. ஆகவே, நிலக்கடலைக்கும், மரவள்ளிக்கிழங்குக்கும் மானியம் கொடுக்க வேண்டும். சேலம் மாவட்டத்தில் விவசாயிகள் கடனைத் திருப்பிக் கட்ட முடியாமல் அவதிப்படுகிறார்கள். ஆகவே, அவர்களுடைய கடன்களை ஓராண்டுக் காலத்திற்கு நிறுத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிராமப்பகுதிகளில் அரைமணி நேரத்தில் பெய்கின்ற மழையினால் மண் அடிக்கப்பட்டு, காவேரியிலே கலந்து......

(மணியடிக்கப்பட்டு, திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் பேச அழைக்கப் பட்டார்.)

*திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்புக் கிடைத்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையிலே, நம் நாட்டிலே மழைவளம் எவ்வளவு குறைந்திருக்கிறது என்பதற்கான புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறார்கள். மழை பெய்ய வேண்டிய இடத்தில் பெய்யாமலும், பெய்ய வேண்டிய நேரத்தில் பெய்யாமலும். குறைவாகப் பெய்ய வேண்டிய இடத்தில் அதிகமாகவும். அதிகமாகப் பெய்ய வேண்டிய இடத்தில் குறைவாகவும் பெய்கிறது. உலகில் உயிர்வாழ்வதற்கும், விவசாயத்திற்கும் இன்றியமையாதது நீர். நீர் பெற இன்றியமையாதது மழை, மழை பெய்ய இன்றியமையாதது இயற்கை, இந்த இயற்கையை எப்படிச் சரிக்கட்டுவது என்பதிலே எந்த அரசும் அக்கறை செலுத்தவில்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன். விவசாயத்திற்கு மழையும் அதனுடைய அவசியமும் தேவை. இதற்காக நாம் எப்படி இயற்கையைச் சரிக்கட்டுவது? மழைக்கும் இயற்கைக்கும் என்ன சம்பந்தம் என்பதற்கு எப்படிச் சான்று காட்ட முடியும் என்பதைப் பற்றிப் பேசவிரும்புகிறேன். இயற்கையின்

தவறுகளினால்தான் மழை குறைகிறது. இதற்கு ஆட்சியாளர்கள் நிறைந்த அக்கறை செலுத்த வேண்டும். இதை நான் சொல்லவில்லை. பல பேரறிஞர்கள் சொல்லியிருக்கிறார்கள். மலைகளிலே உள்ள காடுகளில் மரங்கள் அதிகமான அளவுக்கு வெட்டப்படுவதால்தான் மழை குறைகிறது என்று சொல்கிறார்கள். இந்த உண்மையை யாராலும் மறுக்க முடியாது. ஆறாயிரம், ஏழாயிரம் அடி உயரத்தில் உயர்ந்து அடர்ந்து வளர்ந்த இயற்கை மரங்களை வெட்டி வருகிறோம். இது இயற்கைக்கு விரோதமான செயல். மரங்களை அதிகமாக வெட்டுவதால் காடுகள் குறைந்து மழை குறைவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. இதை என்னுடைய அனுபவத்தைக் கொண்டே சொல்கிறேன். கூடலூரில், 100, 120 அங்குல மழை பெய்கிறது. மேட்டுப்பாளையம் பகுதியிலே 20 அங்குலம் மழை பெய்கிறது. இன்னும் கொஞ்சம் நான்கு மைல்கள் தள்ளிவந்தால் 60-70 அங்குலம் மழை பெய்கிறது. ஓரிடத்தில அதிகமாகவும், பிறிதொரு இடத்தில் குறைவாகவும் பெய்வதற்குக் காரணத்தை நாம் கவனிக்க வேண்டும். மரங்கள் வெட்டப்படாமல் இயற்கையாக விட்டுவைத்த இடங்களில் ஒழுங்காக மழை பெய்து கொண்டிருக்கிறது. மரங்களை வெட்டா விட்டால் விறகுக்கு என்ன செய்வார்கள் என்று கேட்பார்கள். இப்போது கட்டிடங்கள் கட்டுவதற்கு மரத்திற்குப் பதிலாக இரும்பு, சிமெண்ட் எல்லாம் வந்திருக்கின்றன. விறகுக்கு என்ன செய்வது என்று கேட்கலாம். என்னுடைய வீட்டிலும் தொழிற்சாலையிலும் விறகைப் பயன்படுத்தாமல் சாணி எரிவாயுவைக் கொண்டே நடத்துகிறேன். முதன் முதலில் நான் இந்தச் சட்டமன்றத்திலே 1967-லே இதைப்பற்றிச் சொன்னேன். அண்ணா அவர்களும் வந்து பார்க்கிறேன் என்று சொன்னார்கள். இந்தமாதிரியான காரியங்களில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வேண்டாத சாதனங்களைக்கொண்டு எரிபொருள் வாயு உற்பத்தி செய்யலாம். இதனால் காட்டுமரங்களை வெட்டாமல் இருக்க முடியும். சாணத்திலிருந்து இதைச் செய்யலாம். வேண்டாத கழிவுப்பொருள்கள், குப்பை கூளங்கள், மக்களுடைய கழிவுப்பொருள்கள் இவற்றிலிருந்து எரிவாயு எடுக்க முடியும், நான் இருபத்தேழு ஆண்டுக் காலமாக விறகைத் தொடாமல் எல்லா வேலைகளையும் எரிவாயுவைக் கொண்டே செய்து கொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கழிவுப்பொருள்களையும், மக்களுடைய கழிவுப்பொருள்களையும் கொண்டு தொழிற்சாலைக்கு வேண்டிய 'மீதேன் கேஸ்' உற்பத்தி செய்துகொள்கிறேன்.

நம்முடைய அரசாங்கம் தென்னைமரங்களிலிருந்து கிடைக்கும் தேங்காய் மட்டையிலிருந்து நார் எடுப்பதற்கான தொழிற்சாலை அமைப்பது குறித்துத் திட்டமிட்டிருக்கிறது. இப்பொழுது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகக்கூடிய கதம்பை நார்கள் இருக்கின்றன. அவைகளை, கழிவுப் பொருள்களை எடுத்துவிட்டு கயிறுகளாகவும், பாய்களாகவும் தயாரிக்கலாம். இன்னும் அவற்றில் பொட்டாஷ் அதிகமாக இருக்கிறது. ஏராளமான சாம்பல் சத்து இருக்கிறது. இப்படியாகக் கழிவுப்பொருள்களினால் கேஸ் உற்பத்தி செய்து, உபயோகப்படுத்தினால், விறகுப் பஞ்சத்தைத் தொலைத்துவிட முடியும். இயற்கை உரத்தினுடைய வளமும் பெருகும். இயற்கை உரம் பூமியைக் கெடுக்காது. சக்தியை உயர்த்தும். ரசாயன உரங்கள் உபயோகத்தினால் பூமியின் வளம் கெடுகிறது. இயற்கை உரத்தினால் பணமும் மிச்சமாகும். வேண்டாத மரங்களைப் பயிர் செய்வதாலும், இருக்கின்ற மரங்களை வெட்டுவதாலும், மழை குறைகிறது, சரியான அளவு பெய்வதில்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன். எந்த இடத்தில் பசுமையும், ஈரமும், செழிப்பும் இருக்கிறதோ அங்கே மழை பெய்யும். ஒருமுறை மழை பெய்துவிட்டால அதே இடத்தில் திரும்பத்திரும்ப மழை பெய்வதைக் காண்கிறோம். காங்கேயத்திற்கு மேற்குப் பக்கம் பரம்பிக்குளம், ஆளியாறு பாசனம் ஏற்பட்ட பிறகு சென்ற ஆண்டு அதிகமான மழை பெய்திருப்பதைக் கண்டோம். காய்ந்திருக்கிற இடத்தில மழை பெய்வதில்லை. தஞ்சாவூர் போன்ற இடங்களில் ஏராளமான மழை பெய்திருக்-





கிறது என்றால் என்ன பொருள்? தண்ணீருக்குத் தண்ணீரை ஈர்க்கின்ற சக்தி இருப்பதைக் காண்கிறோம். வாட்டர் டிவைனிங் முறையில் இதைத் தான் நாம் காண்கிறோம்.

இயற்கைக்கு விரோதமாக நடக்கக் கூடாது என்பதாக இதனால்தான் புலவர்கள் எல்லாம் சொல்கிறார்கள்.

மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை அல்லன செயற்கை தோன்றினும்
காவலர் பழிக்கும் நாடு

என்பதாக மழை குறைந்தாலும், வருவாய் குன்றினாலும், இயற்கைக்கு மாறாக செயற்கை நடந்தாலும் ஆட்சியாளர்கள் பழிக்கப்படுவார்கள் என்பார்கள்.

நாம் வள்ளுவரைப் போற்றுகிறோம். விழா எடுக்கிறோம்.

இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு

என்பதாக அறம் வழுவாத இயற்கை முறையில் அரசு செலுத்துகிற நாட்டில் தான் மழையும், வளமும் இருக்கும். நீதி தவறுகிறபோது மழை குன்றும், வளம் குன்றும். ஆகவே, இந்த அரசு நெறி தவறாது, நல்லமுறையில் காரியங்களைச் செய்தால்தான் நாடு வளமாக இருக்கும்.

எங்களுடைய மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் பூமிக்குக் கீழே 150 அடி ஆழத்தில் இருந்து தண்ணீரை மேலே கொண்டுவந்து சாகுபடி செய்து வருகிறோம். பம்பு செட்டு வைத்து விவசாயம் செய்ய வேண்டியிருக்கிறது. மின்சாரக் கட்டணத்தைக் குறைத்து சப்சிடி முறையிலாவது கொடுக்க வேண்டுமென்று கோரி வருகிறோம். இன்னும் போதுமான அளவு காதில் விழுந்ததாகத் தெரியவில்லை. இப்போது மின்சாரக் கட்டணத்தைக் கூட்டியிருக்கிறார்கள், இது சரியல்ல. கூட்டியதையாவது குறைத்து பழைய கட்டண முறையிலாவது மின்சாரம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

அடுத்து, இருக்கின்ற தண்ணீரைச் சிக்கனமாக உபயோகப்படுத்துவதற்கு வேண்டிய முறைகளையும் கொண்டு வந்தாக வேண்டும். எனது சொந்த அனுபவபூர்வமான சின்ன உதாரணத்தைச் சொல்கிறேன்.

ஒரு கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்துப் பக்கத்திலேயே பாய்ச்சுவது என்றால் ஒரு ஏக்கரா பாசனம் செய்யலாம். 100 கஜம் வாய்க்காலில் ஓடிப் பாய்வது என்றால் நான்கில் ஒரு பாகம்தான், கால் ஏக்கராதான் பாய்ச்ச முடியும். தண்ணீர் வாய்க்காலில் உறிஞ்சப்படுகிறது. ஆகவே அந்தப் பகுதி அனைத்துக்கும் சிமிண்ட் பைப்பு வைத்துத் தண்ணீர் பாய்ச்ச உதவி செய்தால் இருக்கிற தண்ணீரை அதிகமான நிலத்திற்குப் பாய்ச்ச சந்தர்ப்பம் ஏற்படும்.

எதையும் நான் பிறருக்காகச் சொல்லவில்லை, நான் 2 கிணற்றை வைத்துக் கொண்டு 60 ஏக்கரா இந்த முறையினால் பாய்ச்சுகிறேன். என்னுடைய பண்ணையை வந்து பார்த்தவர்களுக்குத் தெரியும்.

இன்னும் மேல்நாடுகளைப்போல, இருக்கிற தண்ணீரை செயற்கை மழையாகப் பெய்விக்க முயன்றால் ஒரு ஏக்கராவுக்குப் பாய்ச்சுகிற தண்ணீரையே 8 ஏக்கராக்களுக்குப் பயன்படுத்த முடியும்.

இந்த முறைகளை எல்லாம் பயன்படுத்தி—நவீன முறைகளைக் கொண்டு வரலாம என்றால் நில உச்சவரம்புச் சட்டம் எங்கே கொண்டுபோய் விடுமோ தெரியாது. அதன்மூலம் உற்பத்தி குறைந்து, விவசாயம்

சீரழிந்து, நாடும் நாசமாக கீழ்நிலைக்குத்தான் போகும். இதை அரசு கவனித்து விவசாயத்தை மேல்நிலைக்குக் கொண்டுவர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

**திருமதி வி. ப. பழனியம்மாள் :** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி.

நான் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவள். விவசாயத்தையே தொழிலாகக் கொண்டு வாழும் ஏராளமான மக்களுடன் வாழும் வாய்ப்பைப் பெற்றவள். அவர்களைப் பற்றி வள்ளுவர், உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர் என்று கூறிய குறளைப் படித்துவிட்டு மகிழ்ச்சி அடைய முடிகிறதே தவிர, கிடைத்த விளைவைக் கொண்டு, வளமான வாழ்வு வாழ்ந்து மகிழ்ந்தார்கள் என்று சொல்ல முடியாது. அந்த அளவுக்கு வேதனையும் கண்ணீரும் அவர்கள் வாழ்க்கையில் பெற்றெடுக்கும் விளைவுகள் என்பது திட்டமாகத் தெரிகிறது. இதன் விளைவுதான் "உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது" என்ற பழமொழி பல தலைமுறையாக நம்மிடத்தில் நிலைத்துவிட்டது.

மூன்றாண்டுகளாக, கழகத்தின் கவனிப்பில் இயங்கி வருகின்ற தமிழக அரசு இந்த ஏழைகளின் கண்ணீரைத் துடைக்கவும், இந்த நாட்டின் படியளக்கும் பரமசிவன்களாகிய ஏழை விவசாயிகளின் எதிர் காலத்தை ஒளியுள்ளதாக்கவும் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறது என்பதை இதுவரை இந்த மன்றத்தில் வைக்கப்பட்ட வேளாண்மை மானியக் கோரிக்கைகளும் குறிப்பாக இந்த ஆண்டு வேளாண்மைக் கோரிக்கையும் சுட்டிக்காட்டுகின்றன. மிகச் சிறந்த அம்சங்களை உள்ளடக்கி ஒப்பும் மிக்கும் இல்லாததான இந்தக் கோரிக்கையை நான் வரவேற்கிறேன். பாராட்டுகிறேன்.

இதுவரை, பயிர்களைப் பற்றியழிக்கும் நோய்களைப் போக்க, ஹெலிகாப்டரில் இருந்து மருந்து தூவும் செயல் நடைமுறையில் இருந்தது. அதற்கான செலவில் ஒரு பகுதியை அரசும் எஞ்சிய சிறு பகுதியை விவசாயிகளும் ஏற்றுக் கொண்டார்கள். இப்பொழுது முழுவதையும் விவசாயிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற முறை ஏற்பட்டிருப்பதாக அறிகிறேன். இதனால் இப்படி மருந்து தூவ வேண்டுமென்ற ஆர்வம் விவசாயிகளுக்கு வெகுவாகக் குறைந்துவிடும். இதனால் தமிழக அரசு அதைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு பரிவுடன் ஆய்ந்து அவர்கள் சுமையில் பங்கேற்க வேண்டுகிறேன்.

கழனிகளில் கடும் வெயிலில் பல ஏழைத் தாய்மார்கள் மாடாக உழைத்து ஓடாகத் தேய்கிறார்கள். அவர்களின் வேலை ஆண்களின் விவசாய வேலைக்குச் சிறிதும் குறைந்ததல்ல. இருந்தும் ஆண்களுக்குத் தரப்படும் கூலியளவில் பாதி அளவிற்கே கூலி தரப்படுகிறது. இந்தப் பரிதாப நிலைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். எனவே அரசு அவர்களின் கூலிப் பிரச்சினையைப் பரிசீலனைக்கு எடுத்து பரிவோடு கவனிக்க வேண்டுகிறேன்.

விவசாயிகளுக்கான உரங்கள் பல ஆண்டுகளாக விநியோகிக்கப்படுகின்றன. இதற்காகப் பல முறைகள் கையாளப்பட்டுள்ளன. இருந்தும் ஒவ்வொரு முறையும் அதற்கே உரித்தான குறைபாடுகளுடன், திகழுகின்றன. இதனால் உர விநியோகத்தைப் பற்றிய நிறைவு யாரிடமுமே இல்லை. இருக்கும் முறைக்குப் பதிலாக ஒரு புதிய முறையைப் பின்பற்ற அரசு தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். இதற்காக ஒவ்வொருவருடைய நிலங்களின் அளவுகளுக்கு ஏற்ப உரங்களைப் பெறுவதற்கான உரவிநியோகக் கார்டு முறையை ஏற்படுத்தலாம்.





ஏழை விவசாயிகள் மண்ணில் தங்கள் உழைப்பைக் கொட்டுகிறார்கள். வானம் பொய்க்காது என்ற நம்பிக்கையில் தம் கையிலிருக்கும் நெல்லையும் விதைக்கிறார்கள். ஆனால் சில சமயங்களில் பருவமாற்றங்களும், மழையின்மையும், அவர்களின் நம்பிக்கையைச் சிதைத்து அவர்களை நிரந்தர வறுமையில் நிறுத்தி விடுகின்றன. இந்த அவல நிலையைத் துடைப்பதற்கு அரசு பயிர்ப்பாதுகாப்புத் திட்டம் ஒன்றை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுகிறேன்.

தமிழகத்தைப் பொருத்தவரை பருவமழை அடிக்கடி பொய்த்து விடுகின்ற பரிதாப நிலை ஏற்படுகிறது. இதற்காக வேண்டியபோது வேண்டிய இடங்களில் மழை பெறுவதற்கான செயற்கைமுறை மழைத் திட்டத்தை மற்ற நாடுகளைப்போல நாமும் தீவிரமாகப் பின்பற்ற திட்டமிட வேண்டுகிறேன்.

வளம் நிறைந்தது தான் தமிழக மென்றாலும் வரண்ட பாலைகளின் அறிகுறிகளோடு தோன்றுகின்ற கல்லும் முள்ளும் நிறைந்த பகுதிகள் ஏராளம். குறிப்பாக, எங்கள் கொங்குநாடு கூட மாண்புமிகு கலைஞர் அவர்களின் சோழநாட்டைச் சேர்ந்த கம்பன் பாடியதைப்போல "நீரெல்லாம் சேற்று நாற்றம் நிலமெல்லாம் கல்லும் முள்ளும்" என்றுதான் இருக்கிறது. எனவே தமிழகத்தின் பரப்பின் வளமான பகுதிகளின் பரப்பைவிட வரண்ட பகுதிகளின் பரப்பே மிகுதி. இதைவிட வறண்ட நிலையில்தான் இஸ்ரேல் என்ற நாடும் இருந்தது. ஆனால் ஒரு பத்தாண்டு காலத்தில் அந்த இஸ்ரேல் என்ற பாலைவன நாடு விஞ்ஞான முறைகளால் சமன்படுத்தப்பட்டு, வளப்படுத்தப்பட்டு, விவசாயத்துறையில் தன் நிறைவு பெற்ற நாடாகத் திகழ்கிறது. எனவே நம் தமிழக அரசு ஒரு ஆய்வுக் குழுவை அங்கு அனுப்பி, அவர்கள் பின்பற்றிய முறைகளை அறிந்து வரவேண்டும். அந்த முறைப்படி வறண்ட பகுதிகள் அனைத்தையும் வளமான பகுதிகளாக மாற்ற வேண்டும். இத் திட்டத்தை அரசு விரைந்து பரிசீலிக்க வேண்டுகிறேன்.

நமது அரசாங்கம் விவசாயிகளுக்கு அதிக ஊக்கம் தருகிறது. கடன் காலாகாலத்தில் தந்து, உரம் தந்து, தரமான விதை தந்து உதவுகிறது. ஒரு போகத்தை இருபோகமாக மாற்றி இருபோகத்தை முப்போகமாக மாற்றி, மாவட்டம் தோறும் விவசாய கருத்தரங்குகளைக் கூட்டி, அங்கு அதிகாரிகளையும் விவசாயிகளையும் சந்திக்க வைத்து அவர் தம் குறைபாடுகளை அங்கேயே தீர்ப்பதற்கு ஏற்பாடு செய்கிறது. இப்படிப்பட்ட தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் காரணமாகத்தான் நாட்டில் உணவுக் கட்டுப்பாட்டை எடுத்து, இப்போது எல்லா ஊர்களிலும் கடைகளிலும் ரக ரகமான அரிசிகளை இன்று மக்கள் வாங்கக்கூடிய வசதியை செய்துள்ளது. விவசாயிகளுக்கு நன்மையைச் செய்யும் நம் அரசைப் பாராட்டி என் உரையை முடிக்கிறேன்.

***திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்:** தலைவர் அவர்களே, வேளாண்மை மானியக் கோரிக்கையின்மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மாநிலத்தில் 160 லட்சம் ஏக்கர் புஞ்சை நிலங்களை பயிர் செய்கிற இடங்கள் இருப்பதாகவும் அதிலே 100 லட்சம் ஏக்கர் புஞ்சை நிலங்களுக்குத் தண்ணீர் வசதி இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது அறிக்கையிலே. மொத்த நிலப்பரப்பில் 60% தண்ணீர் வசதியில்லாமல் இருக்கக்கூடிய இடங்களாக இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது, என்ன முயற்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றி இந்த அறிக்கையிலே பார்க்கும்பொழுது ஒன்றுமே சொல்லப்படவில்லை. பல ஆண்டுகளாக இதைக் கவனிக்க வேண்டும் என்று கோரிக்கைகள் இருந்தன. அதைப் பற்றி இந்த அறிக்கையில் ஒன்றும் இல்லை.

'Report on the work in breeding of superior drought—resistant (semi-dry and rainfed) varieties in Tamil Nadu'. இல்

ஒரு திட்டம் உருவாக்கப்பட்டதாகவும் மாநில அளவிலே 3 லட்சம் ஏக்கருக்கு வசதி செய்யக்கூடிய காரியமாக இருக்கும் என்று இருந்தும், அதற்கு நடவடிக்கை இல்லை, ஃபாலோ அப் ஆக்ஷன் இல்லை என்பதைச் சொல்வதற்கு வருத்தமாக இருக்கிறது. நீங்களே சொல்கிறீர்கள் 60%க்கு தண்ணீர் இல்லை என்று. என்னைப் போன்றவர்கள் இருக்கும் பகுதிகளில் 6 ஆண்டுக் காலமாக மழையில்லாமல் தவித்துக்கொண்டு இருக்கிறோம். ஆராய்ச்சி செய்து ரிப்போர்ட்டும் இருக்கிறது, ஏன் அதை அமுல் நடத்தவில்லை? ஆறு ஆண்டுக்காலம், பத்தாண்டுக காலமாக நாங்கள் சொல்லிக்கொண்டேதான் வருகிறோம். ஏன் இதைச் செய்யவில்லை? ஐ.ஆர் 8 கொண்டுவந்தோம், கிராஷ் ப்ரொகிராம் கொண்டு வந்தோம் என்று சொல்கிறார்கள். அதையெல்லாம் நாங்கள் வரவேற்கிறோம். 40 சத வீதம் இருக்கக்கூடியதற்கு அவற்றையெல்லாம் கொண்டு வந்துவிட்டு 60 சதவீத அளவுக்கு இருக்கக்கூடிய புஞ்சைப் பகுதிகளுக்கு ஒரு விரிவான திட்டம் கொண்டுவந்து அதன் மூலம் அந்த அந்தப்பகுதிகளில் வாழக்கூடிய விவசாய மக்களுக்கு ஒரு திட்டமும் செய்யாமல் ஐ.ஆர். 8 பற்றி மட்டும் பேசிக்கொண்டே இருப்பது வருந்தக்கூடியது. 'semi-dry Paddy' போன்றவற்றை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை உடனடியாக எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல முக்கியமான திட்டங்களைப் பற்றிப் பரிசீலனை செய்யக் கேட்டுக் கொள்ளுகிறேன். டாபியோக்காவை எடுத்துக்கொண்டால், குறைந்த தண்ணீர்தான் செலவாகும், நல்ல விளைச்சல் ஆகக்கூடியது, நிறைய ஸ்டார்ச்சு சத்து உள்ளது. அந்தத் திட்டம்கூட ஒற்றிவைக்கப்பட்டிருப்பதாக ஒரு அறிக்கையிலே பார்த்தேன்.

*Development of Tuber Crops* என்று போட்டு

'It is proposed to intensify the production of tapioca by adopting package of improved practices. The Tapioca Development scheme in Killiyur Block of Kanyakumari district is kept in abeyance temporarily from August 1969'. என்று சொல்லியிருக்கிறார்கள். ஏன் இந்தமாதிரி நல்ல காரியங்களை ஒற்றிவைக்கிறீர்கள். அதை விரிவுபடுத்தவேண்டும், கன்யாகுமரி, செங்கோட்டை போன்ற பகுதிகளுக்கு அதை விரிவுபடுத்தலாம்.

அடுத்ததாக வாழைச் சாகுபடி, பூவர்-மென் டயட் என்றும் காமன் மென் டயட் வாழை என்று சொல்வார்கள். திருச்செந்தூர் பகுதிக்கு விரிவுத் திட்டம் கொடுத்திருக்கிறார்கள், வரவேற்கிறேன். உங்கள் அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது 9 ஆயிரம் ஏக்கருக்கு 1969-70-இல் சாகுபடி செய்வதற்காகத் திட்டம் போடப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதில் செங்கற்பட்டிற்கு ஆயிரமும், தூத்துக்குடிக்கு நாலாயிரமும் ஆக மொத்தம் ஐயாயிரம்போக 4 ஆயிரம் பாக்கியிருக்கிறது, தூத்துக்குடியில் உள்ள பாக்கேஜ் புரோக்ராமை தென்காசிப் பகுதிக்கு விரிவுபடுத்த கேட்டுக்கொள்ளுகிறேன். 30 மைல் 40 மைல்தான் தூத்துக்குடியிலிருந்து இருக்கிறது. இது சம்பந்தமாக டைரக்டர் ஆப் அக்ரிகல்சர் அவர்களுக்கு எழுதின கடிதத்திற்குக் கீழ்க்கண்ட பதில் கிடைத்தது: 'I am also specially instructing the District Agricultural Officers to render all necessary assistance for cultivation of bananas in other areas of Tirunelveli district.' என்று எனக்கு ரிப்ளை கொடுத்திருக்கிறார்கள். உங்களுடைய திட்டமே 9 ஆயிரம் ஏக்கர் அளவுக்கு, அதிலே 5 ஆயிரம் ஏக்கர் திட்டத்தைத்தான் உருவாக்கியிருக்கிறீர்கள். தூத்துக்குடியில் வைத்திருக்கிறீர்கள். தென் காசிக்கும் அதை விரிவுபடுத்தவேண்டும். அப்படிச் செய்தால், பஞ்சப் பிரதேசத்திற்குப் பிரயோசனம் ஆகிறது; உணவுக்கும் பயன்படுகிறது. அதைச் செயல்படுத்த வேண்டும்.



அடுத்தபடியாக விதைப் பண்ணைகள். விதைச் சட்டமானது சென்ற அக்டோபர் 1-ம் தேதியிலிருந்து அமுல் நடத்தப்பட்டிருக்கிறது. ஆனால் அது செயல்பட்டு வருவதாகத் தெரியவில்லை. சர்க்கார் விதைகளானால் அவை கேள்விக்குறியாகவேதான் இருக்கின்றன. நானே பார்த்திருக்கிறேன். நான் இதைப் பற்றி எழுதியதற்கு ஆறு மாதம் கழித்து இனிமேல் நடக்காது என்று பதில் தரப்பட்டு இருக்கிறது.

பெஸ்டிசைட்ஸ் பொறுத்தவரையில் கம்பெனிகளுக்கு முன்னாலேயே பணத்தைப் பட்டுவாடா செய்துவிடுகிறார்கள். பரிசோதனையில் குற்றம் இருக்கும்பொழுது பணத்தைத் திருப்பிப் பெறமுடியவில்லை. சர்க்காருக்குப் பண விரயமும் ஏற்படுகிறது. எனவே ஆறு மாதங்களுக்கு முன்னதாக பெஸ்டிசைட்ஸ் வாங்கி பரிசோதனை செய்து வைத்துக்கொண்டு விநியோகம் செய்தால் நல்லது.

அடுத்தபடியாக போரிங் ஆப்பரேஷன் ஒரு பக்கம் பி. டபிள்யூ.டியில் செய்கிறார்கள், விவசாய இலாகாவும் செய்கிறார்கள். இதிலே கோ-ஆர்டினேஷன் இல்லை. அக்ரிகல்சர் டிபார்ட்மெண்டிலே யார் ரூபாய் கொடுக்கிறார்களோ, அதைப் பொறுத்து வரிசைக் கிரமத்திலே செய்கிறார்கள். தண்ணீர் இருக்கிறதா இல்லையா என்றுகூடப் பார்ப்பதில்லை. ஒருவர் போரிங் போட்டிருந்தால், மற்றொருவர் அதன் பக்கத்தில் போட்டால் இருவரையும் பாதிக்கும். தண்ணீர் வேண்டுமென்று 2 ஆயிரம் ரூபாய் 10 ஆயிரம் ரூபாய் செலவழிக்கத் தயாராக இருக்கிறார், நாமும் போடுகிறோம், எனவே சயின்டிபிக் ஆக ஆராய்ச்சி செய்து எத்தனை அடி தூரம் விட்டு போரிங் போடவேண்டுமென்று சொல்லவேண்டும். விவசாய இன்சினீரிங் பகுதியை அக்ரிகல்சரல் பைனான்ஸ் கார்ப்பரேஷனிடம் ஒப்புவிப்பதாகத் தெரிகிறது. லாபத்தை எதிர்பார்த்து இயங்கும் ஸ்தாபனத்தில் இணைப்பதால் விவசாயிகளுக்குப் பிரயோசனப்படுமா என்பதை கவனிக்க வேண்டும். அண்டர்கிரவுண்ட் வாட்டர் தேவைப்படுகிறது எனவே ஜியலாஜிக்கல் சர்வே பண்ணி எந்த இடத்தில் போடலாம் என்று முடிவு செய்து அதன் பிரகாரம் செய்யவேண்டும். வாட்டர் செல் போர்டு ஒன்றை உருவாக்கி அதன்மூலம் தண்ணீர் எடுப்பதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

டிஸ்ட்ரிக்ட் அக்ரிகல்சர் ஆபீஸர் அவர்களை இன்று அளக்கும்படி உத்திரவு போடப்பட்டிருக்கிறது. இது கேவலமான முடிவு. விவசாய அதிகாரியை இன்று சரியாக வெட்டப்பட்டிருக்கிறதா என்று பார்க்கவேண்டுமென்று சொன்னால், விவசாய அபிவிருத்தி வேலைகள் தடைபடும். அதை மாற்றவேண்டும்.

சாயில் கன்சர்வேஷனைப் பொறுத்தவரையில் பாலோ அப் ஆக்ஷன் இல்லை. பணம் கொடுக்கப்பட்டு ஒரு வருஷம் ஆனாலும் அது கவனிக்கப்படுவதில்லை. நண்பகல் 12.00

'ஃபாலோ அப்' ஸ்கீம் ஒன்று இருந்தால்தான் சாயில் கன்சர்வேஷனால் நன்மை ஏற்படும். அதுபோக சாயில் கன்சர்வேஷன் செலவில் சிப்பந்திகள் சம்பளத்தைச் சேர்த்து வசூல் செய்கிறார்கள். அது சரியல்ல. அதிக நேரம் இல்லை, எனவே என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

*திரு. அ. ஆறுமுகம்: சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நான் இந்த விவசாய மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் பதவி ஏற்று குறுகிய காலத்திற்குள் விவசாயத் துறையில் பெரியதொரு மாற்றத்தை ஏற்படுத்தியமைக்கு என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். விவசாய முன்னேற்றத்தின் காரணமாக உணவு உற்பத்தித் துறையில் பெரிதும் முன்னேற்றம் கண்டுள்ளது. மிகப் பயன் தரும் தானிய வகைகளை அதாவது ஐ. ஆர். 8, எ. டி. டி. 27 போன்ற நெல் பயிர்கள்,

[திரு. அ. ஆறுமுகம்] [1970 மார்ச் 31

உழவர்களுக்கு விலையில் பாதி சலுகை திட்டத்தின் கீழ் 3 கோடியை 6·26 கோடியாக உயர்த்தியது பாராட்டத்தக்கதாகும். தரமான உரங்களை உற்பத்திச் செய்தும், விதைப் பண்ணைகளை ஏற்படுத்தியும் உணவு உற்பத்தித் துறையில் பெரியதொரு முன்னேற்றத்தை உண்டாக்கியிருக்கிறது. இதில் தஞ்சாவூர் மாவட்டத்தில் 8·72 லட்சம் டன்னிலிருந்து 12·044 டன்னாக உயர்த்தியிருக்கிறது. ரசாயன உரம் விவசாயிகளுக்கு இன்றியமையாத ஒன்றாகும். இதற்கு மத்திய அரசு 1959 மார்ச் 1-ம் தேதியிலிருந்து இருப்புகளின் மீது 10 சதவீதம் உயர்த்தியிருக்கிறது. எனினும் இந்த அரசு தன்னிடம் உள்ள இருப்புகளுக்கு இந்த உயர்வை செயல்முறைக்குக் கொண்டு வரவில்லை. இப்படி கொண்டு வராத மாநிலம் தமிழகம் ஒன்றுதான். இதை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. மேலும் மண்வகை பரிசோதனை செய்து நிலத்தின் தன்மைகளை அறிந்து அதற்கேற்றவாறு உரம் விதை கொடுத்து விவசாயிகள் லாபம் அடையச் செய்தது பாராட்டுக்குரியதாகும்.

பயிர்களுக்கு வரும் நோய்கள் அதற்கு பூச்சி மருந்துகள் காளான்களை அழிக்கும் மருந்துகள் எளிதில் கிடைக்க வழிசெய்வதற்கும் அதை விமானம் மூலம் தெளித்து பயிர்களை நோய்களிலிருந்து தடுக்கவும் ஏற்பாடு செய்தது பாராட்டுக்குரியதாகும்.

விவசாயிகளுக்கான கடன் வசதிகளைப் பெருக்குவது நிலவள வங்கிகளை புதிதாக ஏற்படுத்தி நீண்டகால குறுகிய கால கடன் வசதிகளைப் பெற வங்கிகளின் மூலம் கடன் தரவும் ஏற்பாடு செய்திருக்கிறது. இதற்கு நம்முடைய அரசை மனமாற பாராட்டுகிறேன்.

மேட்டூர் கீல்கரை வாய்க்காலில் இருபோக சாகுபடிக்கு தண்ணீர் கொடுப்பதற்கு அரசு முன்வரவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். அதோடு இத்திட்டத்தின் கீழ் 3 கோடி ரூபாயிலிருந்து 6·26 கோடியாக உயர்த்தப்பட்டிருப்பது பாராட்டத்தக்க ஒன்றாகும். மேலும் சிறுபாசன திட்டத்தின் கீழ் குழாய் கிணறுகள் வடி முனை குழாய் கிணறுகள் ஏற்படுத்தி 10·1 அரசு மானியத்தை அளித்தது பாராட்டத்தக்க ஒன்றாகும். விவசாயத்தில் உழவர்கள் புதிய முறைகளைக் கற்று விவசாயத்தைப் பெருக்குவதற்கு உழவர்கள் பயிற்சி நிலையங்களை ஏற்படுத்தியதற்கு என் பாராட்டுதலை தெரிவித்துக் கொள்ளுகிறேன். புஞ்சை நிலத்திற்கு வரி நீக்கியதை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. இவ்வாறு பலவகையான முன்னேற்றங்கள் விவசாயத் துறையில் கண்டமைக்கு இந்த அரசுக்கு என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்ற இந்த நேரத்தில் என் சொந்த தொகுதியில் சில குறைபாடுகளை இந்த மன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன்.

ஆற்றுப் பிரச்னை. காவிரி ஆற்றிலிருந்து அருகில் இருக்கிற நிலங்களுக்கு தண்ணீர் எடுப்பதற்கு தடை உத்தரவுகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட தடையை நீக்கி விவசாயிகள் ஏற்றம் இறைப்பதற்கும் பம்புசெட்டுகள் வைத்து தண்ணீர் எடுப்பதற்கும் அரசு அனுமதி தர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியில் மதுரை காளி அம்மன் பள்ளம் என்ற ஒரு நீர்த் தேக்கம் இருக்கிறது. பல வருஷங்களாக சேர்க்கப்பட்ட திட்டங்களில் ஒன்றாகும் அத்திட்டம். அதை நிறைவேற்றினால் அங்கே இருக்கிற விவசாய பெருங்குடிமக்கள் உளமாற நம்முடைய அரசை பாராட்டுவார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய விவசாயிகளுக்கு கிணறு வெட்டுவதற்கு ரூபாய் 2 ஆயிரம் கொடுக்கிறோம். அதற்கு மானியமாக ரூ. 500 தருகிறோம். இந்த மானியத்தை இன்னும் கொஞ்சம் கூடுதலாக்கி



1970 மார்ச் 31] [திரு. அ. ஆறுமுகம்]

விவசாயிகளுக்கு உடனடியாக விரைவில் அந்த மானியத்தை வழங்குவதற்கு நம் அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நாட்டிலே விவசாயம் வளர்ந்தால்தான் நாடு வளரும் என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். விவசாய பெருங்குடி மக்களுக்கு நம்மால் இயன்ற உதவிகளை உடனுக்குடன் விரைவில் தருவதற்கு நம் அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே நேரத்தில் விவசாயிகளின் நிலை உயரவேண்டுமென்றால், விவசாயிகளுக்கு இன்று இருக்கிற சூழ்நிலையில் மாடுகளை வாங்கி ஆட்களை வைத்து விவசாயம் செய்வது என்பது இயலாத காரியம். ஒரு ஜதை மாடுகள் வாங்கவேண்டுமானால், ரூ. 1,000-லிருந்து ரூ. 1,500 வரை ஆகிறது. ஒரு பண்ணை ஆளை வைக்க வேண்டுமானால், ரூ. 600-லிருந்து 700, 800 வரை செலவு ஏற்படுகிறது. ஆகவே ஒரு விவசாயிக்கு கிணற்றில் மின்சாரத்தை வைத்துவிட்டால், அவனுக்கு இரண்டு வகையில் செலவு குறைகிறது. ஆட்களை வேலைக்கு வைப்பது இல்லை. மாடுகள் வாங்க வேண்டிய செலவு இல்லை. ஆகவே விரைவிலே எல்லாக் கிராம மக்களுக்கும் மின்சாரம் வழங்க வேண்டுமென்ற [illegible] நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்களும் நம்முடைய [illegible] மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் உருவாக்கியிருக்கும் திட்டம் [illegible]வேற்றப்படும் வகையில் எல்லோருடைய ஒத்துழைப்பையும் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக எங்களுடைய [illegible]சலம் மாவட்டம் மிகவும் [illegible]ன்தங்கிய மாவட்டம், என்பதை உணருகிறோம். அதற்கு ஒரு விமான [illegible] தளம் வேண்டுமென்று காலையில் கேட்க[illegible] நேரத்தில் அடுத்த [illegible]ந்தாண்டு திட்டத்தில் சேர்க்கப்படும் என்று [illegible]னார்கள். இருந்தாலும் [illegible] மிகவும் தொழில் வளம் நிறைந்த பகுதி[illegible] அங்கே வசிக்கின்ற [illegible]ள் எல்லாம் 100-க்கு 90 முதல் 95 சதவீதத்[illegible] இன்னும் [illegible] விமானத்தை ஆகாயத்தில் பார்த்தவர்களே தவிர, அ[illegible] பார்த்தவர்கள் அல்ல. ஆகவே விரைவில் ஒரு விமான தளத்தை ஏற்படுத்துவதற்கு நம்முடைய அரசு வற்புறுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன். எப்படி நாம் இரும்பு ஆலை வேண்டுமென்று கேட்டோமோ, அதைப்போல விமான தளத்தை அமைக்க வேண்டுமென்று தமிழக அரசு மீண்டும் மீண்டும் வலியுறுத்த வேண்டும். எப்படியாவது எங்கள் மாவட்டத்தின் குறைகளைப் போக்குவதற்கு தமிழக அரசு பெருமுயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, பேசுவதற்கு சந்தர்ப்பத்தைத் தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

***திரு. கொ. இர. ஞானசம்பந்தன்:** தலைவர் அவர்களே, இந்த திட்டங்கள் பல போட்டாலும் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு மனித சக்தியை பெரிதும் பயன்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். மனித சக்தியை நன்கு பயன்படுத்த வேண்டுமென்றால், உழுபவர் அத்தனை பேருக்கும் நிலம் கொடுக்க வேண்டும்.

அடுத்து, இன்று இருக்கக்கூடிய "ஆர்கனைசேஷனல் செட் அப்" அதிகார அமைப்பில் சிலமாற்றங்களைச் செய்ய வேண்டும், என்பது என்னுடைய ஆலோசனை. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் 2,000 முதல் 3,000 வரை இ.ஓ.ஸ். (அக்ரிகல்ச்சர்) இருக்கிறார்கள். அந்த இ.ஓ.ஸ். பொறுப்பான வேலையில் அமர்த்தப்படுகிறார்கள். அவர்களுக்கு பீல்டு வேலை இல்லை. உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் டிப்போவுக்கு பொறுப்பாக இருக்கிறார்கள். ஸ்டோர் கீப்பர் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. படித்த பிறகு கிடைத்த அனுபவத்தை கீழே சொல்ல முடியவில்லை. டிப்போ பொறுப்பை அவர்களிடமிருந்து நீக்கிவிட்டு நேரடி பீல்டு ஒர்க் செய்ய தரமாக, இ.ஓ.ஸ். அதிகாரிகளைப் பயன்படுத்த அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த இ.ஓ.ஸ். விசேஷ பயிற்சி

[திரு. கொ. இர. ஞானசம்பந்தன்] [1970 மார்ச் 31

பெற்றவர்கள். ஆனால் அவர்கள் பி.டி ஓஸ். கீழே வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அதாவது அதிக பயிற்சி இல்லாதவர்களின் கீழ் பயிற்சி பெற்றவர்களாகிய இ.ஓ.ஸ். வேலை செய்யும்பொழுது பல சங்கடங்கள் வருகின்றன. அவர்களைப் பொறுத்தவரையில் " மதர் டிபார்ட் மெண்டோடு " செயல்பட்டு நன்கு பயன்படுவதற்கு ஒரு செட் அப் தேவை.

அதேபோல் கிராம சேவகர்கள். அவர்கள் பெரும்பாலும் விவசாயி களுக்கு பயன்பட வேண்டியவர்கள். ஆனால் இன்றைய நிலைமை கிராம சேவகர்கள் பல டிபார்ட்மெண்டுகளுடைய வேலை செய்ய வேண்டியிருக்கிறது. குடும்பக்கட்டுப்பாடு பிரச்சாரம் போன்ற வேலைகள் செய்ய வேண்டி யிருக்கிறது. ஆகையால் எந்த நோக்கத்திற்காக அவர்கள் செயல்பட வேண்டுமோ, அது செயல்பட முடியாத நிலை ஏற்படுகிறது. இதற்குப் பெரிதும் முக்கியத்வம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளு கிறேன்.

அடுத்தபடி திட்டத்தைப் பொறுத்தவரையில் கீழ் இருந்து திட்டத்தை உருவாக்குவது டிபார்ட்மெண்டு முடிவு செய்ய வேண்டும். நாம் ஒரு டார்ஜெட் நிர்ணயம் செய்கிறோம். அதை அமல்படுத்த கடைசி நேரத்தில் விதைகளை விற்கவேண்டுமென்று கொண்டு போனால் எப்படியாவது விற்றுவிட்டால் போதும் என்ற அளவுக்கு தேவையில்லாதவர்களுக்கு விற்கவேண்டியிருக்கிறது. அவை விதைக்காக பயன்படுவது இல்லை. வேறு காரியத்திற்கு பயன்படுகிறது. ஆகவே கீழ் மட்டத்திலிருந்து விவாதம் செய்து திட்டத்தை உருவாக்கி செயல்படுத்தினால் நல்லவிதமான பயன் கிடைக்கும். திட்டமும் வெற்றி பெறும். இவைகளை எல்லாம் இந்த அரசு கொஞ்சம் யோசிக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, தஞ்சை மாவட்டத்தைப் பொருந்தவரை பல திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். அவற்றைத் தீவிரமாகச் செயல் படுத்த வேண்டுமானால், தஞ்சை மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கக் கூடிய நாகைப்பட்டினம் தாலுகா வேட்டைக்காரனிருப்பு பகுதியைப் பற்றிக் கடந்த பத்து, இருபது ஆண்டுகளாக எடுத்துக் கூறுவதைச் சற்றுக் கவனிக்கவேண்டும். அங்கு பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை விளைச்சலுக்குக் கொண்டுவரக் கூடிய நிலை இருக்கிறது. அந்தப் பகுதிகளுக்கு அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும் நேரடியாகப் பார்த்து இறைவைப் பாசனத்திற்கு வழி செய்து கொடுத்தால் நிச்சயமாக உற்பத்தி பெருகும். எங்கள் பகுதி கடைமடைப் பகுதி, தண்ணீர் வந்து சேருவதற்குள் மற்ற இடங்களில் விவசாய வேலைகள் முடிந்துவிடும். ஆகவே, பவர்டிரில் தேவை. இறைவைப் பாசனத்திற்கு வழி செய்தால் உற்பத்தி அதிகமாகப் பெருகும்.

அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் சிறுபாசனத் திட்டங்களை வேகப் படுத்த வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். இந்த ஆண்டிலேயே தஞ்சை மாவட்டத்தில் அந்தத் திட்டத்தை வேகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். வளம் இருக்கிறது, உழைக்க ஆட்கள் இருக்கிறார்கள். தண்ணீர் விடுவதிலே பல தவறுகள் இருப்பதன் காரணமாக, பாசன வடிகால் திட்டத்திலே சிரமங்கள் இருப்பதன் காரணமாக சிரமங்கள் இருப்பதை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அந்த விஷயத்தைக் கவனத்தோடு பரிசீலித்து அமைச்சரவை நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பண்ணைப் பொருள்களுக்கு ஃப்ளோர் பிரைஸ் வேண்டும், சீலிங் பிரைஸ் வேண்டும். ஸ்பெகுலேட்டர்ஸால் உற்பத்தியாளர்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. உதாரணமாக, பஞ்சை எடுத்துக் கொண்டால் கூட்டுறவுப் பஞ்சாலைகளில் இருந்துகூட மார்க்கெட்டிங் சொசைட்டியில் இருந்து பஞ்சு வாங்குவதில்லை. அவர்களும் வியாபாரிகளிடமிருந்து வாங்குகிறார்கள். கூட்டுறவுப் பஞ்சாலைகள் மார்க்கெட்டிங் சொசைடியில் இருந்துதான் பஞ்சை வாங்க வேண்டுமென்று சொல்ல வேண்டும். இந்த அளவுக்குக் குறைந்த விலை இருக்காது. இந்த அளவுக்கு அதிகமான விலையும் போகாது என்ற அளவுக்கு விலையை நிர்ணயித்து நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். ஸ்டேட் டிரேடிங் மாதிரி செய்ய முடியுமா என்பதையும் பார்க்க வேண்டும். அப்படிச் செய்தால் இரண்டு விஷயத்தைச் சாதிக்க முடியும். விவசாயிகளுக்கும் நியாயமான விலை கிடைக்கும், விலைவாசி உயர்வையும் கட்டுப்படுத்த முடியும். தயவு செய்து அரசு இது பற்றி யோசிக்க வேண்டும்.



1970 மார்ச் 31] [திரு. கொ. இரா. ஞானசம்பந்தன்]

சர்க்கார் ஃபார்ம்களில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு வேஜ் நிர்ணயம் செய்ய வேண்டும். பல இடங்களில் சங்கடங்கள் ஏற்பட்டிருக் கின்றன. அரசாங்கப் பண்ணையில் வேலை செய்கின்றவர்களுக்குக் குறைந்தபட்ச சம்பளம் இருக்க வேண்டுமென்று உத்தரவிட்டால் உதவிகரமாக இருக்கும்.

மின்சாரக் கட்டணத்தைப் பொறுத்தவரை ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். சிறு நிலச் சொந்தக்காரர்களுக்கு குறைவாக மின்சாரக் கட்டணம் இருக்க வேண்டும். பெரு நிலச் சொந்தக்காரர்களுக்கு எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். மூன்று ஏக்கருக்குக் குறைவாக வைத்திருக்கக் கூடியவர்களுக்கு மின்சாரக் கட்டணம் குறைவாக வசூலிக்க வேண்டும்.

அறிக்கையிலே தென்னை வளர்ச்சியைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரை முத்துப்பேட்டையில் தென்னை வளர்ச்சி அதிகம். ஒரு விஷயத்தைக் கூற விரும்புகிறேன். இன்று ஒரு தேங்காய் ஒரு ரூபாய் விற்கிறது. போலீஸ் உதவியோடு தென்னை மரங்களில் எல்லாம் கள்ளு கட்டப்படுவதால் காய்ப்புக்குப் பாதகமாக இருக்கிறது. இதைத் தடுத்து நிறுத்த வேண்டும். இதிலே அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

அறிக்கையிலே மலர்த் தோட்டத்தைப் பற்றியும் கூறியிருக்கிறார்கள் எங்கள் ஊரில் பார்ப்பனச் சேரியில் மலர்த் தோட்டம் இருக்கிறது. வறட்சி காரணமாக மலர்த் தோட்டம் வாடிக் கிடக்கிறது. அவர்களுக்கு உதவி அளித்து அந்த நிலையைப் போக்க உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

மீனளத்தைப் பொறுத்து எடுத்துக் கொண்டால், என்னுடைய தொகுதியில் நாகப்பட்டினத்திலுள்ள சாமந்தாம்பேட்டையில் தண்ணீர் கிடையாது, ரோடு கிடையாது, லைட் கிடையாது. அமைச்சர் கோவிந்தசாமி அவர்கள் இருந்தபோது அந்தப் பகுதியை நேரடியாகப் பார்த்தார்கள். அங்கே மீன் துறைமுகத்தை விரைவில் ஏற்படுத்திக் கொடுக்க அரசு ஆவன செய்யவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

அலங்காநல்லூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் உற்பத்தியில் டன் ஒன்றுக்கு ஷேர் ஃபண்ட் என்று மூன்று ரூபாய் பிடிக்கிறார்கள். ஷேர் காபிடலுக்கு உண்டான ஆதாயமும் வருவதில்லை, வட்டியும் வருவதில்லை. இவ்வாறு ஒரு தவறான காரியம் அங்கு நடந்து கொண்டிருக்கிறது. இதுவரை பிடிக்கப்பட்ட பணத்தை உடனடியாக விவசாயிகளுக்குத் திருப்பிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். நேரம் இல்லாத காரணத்தால், பல விஷயங்களைப் பேச முடியவில்லை.

தஞ்சை மாவட்டத்தில் விழுந்த மாவடி பம்பிங் ஸ்கீம், வேளாங்கண்ணி பம்பிங் ஸ்கீம் நிறைவேற்றப்படாமல் அப்படியே இருக்கின்றன. அவற்றை ஏற்படுத்திக் கொடுத்தால் உற்பத்தியை அதிகரிக்க முடியும். இப்போது தண்ணீர் கிடைக்கவில்லை. சலைன் வாட்டர்தான் வேளாங்கண்ணி பம்பிங் ஸ்கீமில் இருக்கிறது. விழுந்த மாவடி பம்பிங் ஸ்கீம் தண்ணீர் அந்தப் பகுதிக்கே கிடைக்கச் செய்ய வேண்டும். இப்போது கிடைப்பதில்லை. பாசன வடிகால்களைச் செப்பனிட வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் அறிக்கையில் கூறியிருப்பதைத் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை உடனடியாக அந்த வேலைகளைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு நேரம் இல்லாத காரணத்தால், இத்துடன் என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

[1970 மார்ச் 31

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, விவசாய மானியக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழ் நாட்டிலே வறட்சி நிலை, எப்போதும் தோன்றாத வறட்சி நிலை மழை காலத்திலே பெய்யாததன் காரணமாக ஏற்பட்டதை நாம் மறந்து விடுவதற்கில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலேயே பசுமைப் புரட்சிக்கு வித்திடப்பட்டது. அதைத் தொடர்ந்து கலைஞர் பொறுப்பேற்ற பிறகு தொடர்ந்து செம்மையாகச் செயல்படுத்தியதன் காரணமாகவும், திறமையான நடவடிக்கைகளை மேற்கொண்டதன் காரணமாகவும், கடனையும், உரத்தையும் விவசாயிகளுக்குக் காலத்திலே வழங்கியதன் காரணமாகவும் எதிர்பாராது ஏற்பட்ட வறட்சி நிலை கொடுமையான வறட்சி நிலை, சமாளிக்கப்பட்டது. ஐ. ஆர். 8, ஆடுதுறை 27, கருணா போன்ற வீரிய விதைகளை அவ்வப்போது பயிரிட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியதன் காரணமாக, எங்கே பஞ்சம் மிகக் கொடுமையாக ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சிய நேரத்திலே அதிலிருந்து காப்பாற்றிய வேளாண்மைத் துறையை மிகவும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். தஞ்சை மாவட்டத்தில் இருபோக நிலங்களை எல்லாம் முப்போக நிலங்களாக மாற்றுவதற்கான நல்ல காரியங்களை எல்லாம் நம்முடைய அரசு மேற்கொண்டு வருவது நிச்சயமாக பாராட்டப்படக்கூடிய ஒன்று.

1966–67-ல் காங்கிரஸ் ஆண்ட காலத்தில் 57·9 லட்சம் டன்னாக இருந்த உணவு உற்பத்தி 1969–70-ம் ஆண்டில் 63 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. விவசாயத்தில் நம்முடைய அரசு செய்த மகத்தான சாதனையின் விளைவாக ஏற்பட்டதாகும். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் அரிசிக்கு ஆலாய்ப் பறந்த நிலை மாறி இன்றைய தினம் அவர்களாலே உருவாக்கப்பட்ட உணவுக் கட்டுப்பாட்டையே ரத்து செய்யக்கூடிய நல்ல சூழ்நிலை விவசாயத் துறையினால் அரசாங்கத்தின் சிறப்பான ஒத்துழைப்போடு உருவாக்கப்பட்டதற்காக நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேட்டூர் அணையைத் தஞ்சை மாவட்டத்தில் உள்ளவர்கள் மிக அதிகமாக எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் நிலையை மாற்றுவதற்காக பூமிக்கடியில் இருக்கும் தண்ணீரை வெளிக் கொணர நல்ல திட்டத்தை அப்போதே பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி வலியுறுத்தி வந்தார்கள். மற்ற மாவட்டங்களில், திருநெல்வேலி, கோயம்புத்தூர் போன்ற மாவட்டங்களில் கிணறு தோண்டுவதற்காக 15,000 ரூபாய்க்குமேல் வழங்கப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. தஞ்சை மாவட்டத்திற்கு அத்தகைய சிறப்பான வாய்ப்புகள் தரப்படாத நிலைமையை மாற்றியமைக்க இன்றைய நமது அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள சிறு நிலச்சுவான்தார்கள், இரண்டு மூன்று ஏக்கர் நிலங்களே உடையவர்கள், மடங்கள், ஆதீனங்கள், தர்ம ஸ்தாபனங்களின் நிலங்களைக் குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்யக் கூடிய விவசாயிகள் பம்ப் செட் வைத்துக் கொள்ள இயலாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதிலுள்ள சிக்கல்களைத் தீர்க்க நம்முடைய அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மண்வளப் பரிசோதனைப் பற்றியெல்லாம் உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஒவ்வொரு விவசாயிக்கும் சொந்தமான நிலத்தின் மண் எந்தத் தன்மை வாய்ந்தது என்று பரிசோதித்து மண்ணின் தன்மைக்கேற்றவாறு உரத்தை இட்டால் அந்த நிலத்திலிருந்து அதிகமாகப் பயிரை விளைவிக்க முடியும் என்பதால் அதற்குத் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும். சில இடங்களில் மண்ணை எடுத்துக் கொண்டு போகிறார்களே தவிர, ஆராய்ச்சியின் முடிவைக் கூறுவது கிடையாது.



1970 மார்ச் 31] [திரு. என். கிட்டப்பா]

அதற்காக ஒரு இயங்குகிற மண்வளப் பரிசோதனைக் கூடத்தைக் கூட நிறுவி அத்தகைய பரிசோதனைக் கூடங்கள் மூலம் மண் வள ஆராய்ச்சி செய்து உடனடியாக அறிவித்து உதவி புரிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் தாளடி சாகுபடிக்குப் பின்னால் ஏறத்தாழ பல பகுதிகளில் அந்த நிலங்களைச் சாதாரணமாக வெற்றிடமாகவே போட்டு வைத்து விடுகிறார்கள். அவற்றில் பருப்பு, பருத்தி போன்ற குறுகிய காலப் பயிர்களைப் பயிரிட அரசு உதவி செய்யவேண்டும். தஞ்சை மாவட்டத்தில் நெல் பயிரிடும் இடங்களில் கூட அதாவது நன்செய் நிலங்களில் கூட லாப நோக்கத்தை கருத்தில் கொண்டு அதிகப்படியான ஏக்கர்களில் கரும்பு சாகுபடி செய்து வருகிறார்கள். கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக. உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும், உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்று சொல்கிற நேரத்தில் நன்செய் நிலங்களில் கரும்பு உற்பத்தி செய்வதில் தடை எதுவும் இல்லை என்ற காரணத்தினால், லாப நோக்கத்தைக் கருதி கரும்பு சாகுபடி செய்வதை மாற்றியமைக்கும் விதத்தில் அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் ஒன்றைச் சொன்னார்கள். சிந்திரித் தொழில் சிறக்கிறது வடக்கே, முந்திரித் தொழிலும் சிதைகிறது தெற்கே என்று சொன்னார்கள். அண்ணா அவர்களின் வழி வந்திருக்கிற நம் அரசு முந்திரித் தொழிலுக்கு நல்ல ஆக்கம் கொடுத்து அதை நன்கு செயல்படுத்தி வருவது குறித்து நான் அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் பூச்சி மருந்து தெளிப்பதிலும் நல்ல நடவடிக்கைகளை எடுக்கும் விதத்தில் வருகிற ஆண்டு அதிகப்படியான ஏக்கர் அளவில் ஏறத்தாழ பத்து லட்சம் ஏக்கர் அளவில்—பூச்சி மருந்துகள் தெளிப்பதற்கு ஏற்பாடு செய்திருப்பதற்காக விவசாயப் பெருங்குடி மக்கள் சார்பில் நான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். இறுதியாக ஒன்றைச் சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன். கிழக்குத் தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயச் சட்டத்தைக் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் கொண்டு வந்து அவர்களுக்குச் சிறப்பானதொரு நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் கோவில்கள், மடங்கள், ஆதீனங்கள் போன்றவற்றிற்கு சொந்தமான பல ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்றன. அவற்றில் சாகுபடி செய்துவரும் சிறு சிறு விவசாயிகள் பல ஆண்டுகளாக குத்தகை பாக்கி அளக்க முடியாத ஒரு சூழ்நிலையில் இருக்கிறார்கள். சாதாரண கிராமங்களில் கூட 20,000, 30,000 கலம் பாக்கியிருக்கிறது என்ற நிலை இருக்கிறது. அந்தக் குத்தகை பாக்கிகளை முழுக்க இல்லாவிட்டாலும் கணிசமான அளவிற்குக் குத்தகை பாக்கி தர இயலாத நிலையில் இருப்பவர்களிடமிருந்து முக்காலு வாசி பாக்கியையாவது தள்ளுபடி செய்து கொடுப்பதற்காக அரசாங்கம் ஒரு அவசரச் சட்டத்தைக் கூட கொண்டுவந்தாவது அந்த ஏழை விவசாயிகளுக்குப் பயன் தரத்தக்க அளவிற்கு ஒரு ஏற்பாட்டைச் செய்தால் அதைவிட நல்லது அவர்களுக்கு ஏதுவுமே இருக்கமுடியாது என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். நம் அரசு அண்மையில் கொண்டுவரப்பட இருக்கிற உச்சவரம்புச் சட்டத்தில் மிக அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கும் விவசாயிகளுக்கு நல்ல சலுகைகளைத் தர இருக்கிறது என்று விவசாயிகள் சார்பில் நம்பி இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***திரு. கே. என். சாமிநாதன் :** தலைவர் அவர்களே, இன்றைய தினம் அவை முன் வைத்திருக்கும் இந்த விவசாய மானியக் கோரிக்கையை ஆதரித்து என் கருத்துக்களைக் கூறுவதற்கு முன் இந்த இலாகாவின் பொறுப்பை ஏற்றிருந்த மாண்புமிகு விவசாய அமைச்சர் கோவிந்தசாமி அவர்களுக்கு என் நன்றி கலந்த வணக்கத்தைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் கடைசி நேரம் வரையிலும் அந்த இலாகாவிற்காகவும், அந்த இலாகாவை எப்படி நடத்த வேண்டும்

[திரு. கே. என். சாமிநாதன்] [1970 மார்ச் 31

என்பதற்காகவும், தன் உயிருள்ள வரையில் மிகவும் பாடுபட்டு நல்ல முறையில் உழைத்தார்கள் என்பதை விவசாயப் பெருங்குடி மக்கள் யாரும் மறுக்கமுடியாது, மறக்கவும் முடியாது.

இன்றையதினம் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு விவசாயத்திற்கு நல்லதொரு முக்கியத்துவம் கொடுத்து விவசாயப் பெருங்குடி மக்களிடம் நல்ல பெயரைப் பெற்றிருக்கிறது என்பதை மாற்றுக் கட்சித் தோழர்களால் கூட மறுக்க முடியாது. இந்த அரசு எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகள் காரணமாக விவசாய உற்பத்தி பெருகி உணவுப் பொருள்களின் விலை குறைந்துள்ளது. அதேசமயத்தில் இன்றையதினம் உணவு இலாகாவின் பொறுப்பை ஏற்றிருக்கும் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் தைரியமாக துணிச்சலோடு நீண்ட காலமாக இருந்து வந்த உணவுக் கட்டுப்பாட்டை ரத்து செய்ததன் காரணமாக உணவுப் பண்டங்களின் விலைவாசிகள் மளமள என்று குறையத் தொடங்கியுள்ளது. அதற்காக அவர்களையும் பாராட்ட நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

என் தொகுதியைப் பொறுத்தவரையில் விவசாயத்திற்குப் போதுமான நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். நான் இதற்கு முன் பல தடவை இந்த மன்றத்தில் என் தொகுதி சம்பந்தமாக இதுபற்றி சொல்லியிருக்கிறேன். குறிப்பாக, மூலனூரிலுள்ள வண்ணாடிப்புத்தூர் திட்டத்திற்கு அதிக செலவாகும் என்பதால், அதைத் தள்ளிப்போட்டுவிட்டதாகத் தெரிகிறது. ஆழ்நீர் ஊற்று ஆராய்ச்சியிலே அந்தப் பகுதி சேர்ந்திருப்பதாக அதைப்பற்றி ஆராய்ச்சி செய்து அதனால் நல்லமுறையில் பார்த்தேன். ஆனால் இதுவரையில் அதற்கான எந்தவித முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. இன்று வெள்ளக்கோவிலில் அங்குள்ள விவசாயிகளுக்கு விவசாயத்திற்கு தண்ணீர் இல்லை என்பது மட்டுமல்ல, அங்கு குடிப்பதற்குக்கூட தண்ணீர் கிடைப்பது கஷ்டமாகயிருக்கிறது. ஆகவே தான் மிகவும் வேண்டிக் கேட்டுக்கொள்வது, இந்த அரசு அருள் கூர்ந்து பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தை என் தொகுதிக்கு விஸ்தரித்து அங்குள்ள விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் அங்குள்ள குடிநீர் பஞ்சத்தைப் போக்கும் வகையில் வெள்ளக்கோவில் வரை அதை நீட்டித்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் விவசாயம், கால்நடை, உணவு ஆகிய இலாகாக்கள் ஒரு அமைச்சரின்கீழ் இருக்குமானால், அது மிகவும் வசதியாக இருக்கும். விவசாயிகள் உணவு உற்பத்தியைப் பெருக்கி மக்களிடம் விநியோகிப்பது என்றால் விவசாயத்திற்கு கால்நடை மிகவும் அவசியமாக இருக்கிறது. ஆகவே விவசாயம், கால்நடை, உணவு ஆகிய மூன்று இலாகாக்களையும் ஒரே அமைச்சரின் அதிகாரத்திற்கு உட்பட்டிருக்கச் செய்வது நலமாகயிருக்கும், அப்படிச் செயயவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் வெள்ளக்கோவில் பொறுத்தவரையில் அந்தத் தொகுதி பூராவும் பஞ்ச நிலையில் இருப்பதால் அங்கு பஞ்ச நிவாரண வேலைகளைத் தொடங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும். இதற்கு முன்பு பிரதம காரியதரிசி மாண்புமிகு ராயப்பா அவர்கள் பஞ்சப் பிரதேசங்களைச் சுற்றிப் பார்த்து அங்கு உடனடியாக நிவாரண வேலைகள் தொடங்குவதற்காக ஏற்பாடுகள் செய்தார்கள். மாண்புமிகு ராயப்பா அவர்களுக்கு என் தொகுதி பற்றி நன்றாகத் தெரியும். ஆகவே அரசு உடனடியாக அவர்களை அந்தப் பகுதிக்குச் சென்று பார்க்கச் செய்து அங்குள்ள பஞ்ச நிலைமையைப் புரிந்து அந்தப் பகுதி மக்களுக்கு பஞ்ச நிவாரண வேலைகள் உடனடியாகக் கிடைக்கச் செய்வதற்கும் கிஸ்தி, லோன், வரி வசூல் போன்றவற்றைத் தள்ளி வைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



1970 மார்ச் 31]

பிற்பகல் 12-30

* திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, இந்த விவசாய மானியக் கோரிக்கையின்மீது எங்கள் கட்சி சார்பாகக் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல முன்வந்துள்ளேன்.

நம் மாநிலத்தில் 160 லட்சம் எக்கர் சாகுபடி செய்யும் நிலங்களில் 100 லட்சம் எக்கர்களுக்கு எந்தவிதமான பாசன வசதியும் இல்லை, அவை புன்செய் பிரதேசங்கள் என்று அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இன்று அந்தப் புன்செய் பிரதேசங்களில் நெல் தவிர வேறு பல பயிர்கள் சாகுபடி செய்யக்கூடிய காலத்தில் அதற்கு வேண்டிய பாசன வசதிகள், கிணற்றுப் பாசனம் அல்லாமல் வாய்ப்புள்ள இடங்களில் சிறு சிறு குளங்கள் ஏற்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கலாம். ஆனால் இதுவரையில் இந்தப் புன்செய்ப் பகுதியிலே விவசாயம் செய்துவரும் விவசாயிகளின் நிலை என்னவாயிருக்கிறது என்றால், கிணறு வெட்டுவதற்காக அரசாங்கத்திடமிருந்து வாங்கிய கடன்களைத் திரும்பச் செலுத்த முடியாமலும், அதே நேரத்தில் இன்று அதிகப்படியான பலன் அளிக்கும் முறையில் உரங்களையோ அல்லது நவீன விவசாயப் பூச்சி மருந்து போன்றவைகளையோ பயன்படுத்த முடியாத நிலையிலிருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால், இன்றைக்குப் பொறுக்கு விதை ஒரு கிலோ 10 ரூபாய் என்று சொல்லப்படுகிறது. இன்று வீரியக் கம்பு, வீரியச் சோளம் போன்ற பொருள்கள் தனிப்பட்ட கம்பெனியிடமிருந்து விற்பனை செய்யப்படுகிறது. அந்த விதைகளையெல்லாம் அரசாங்கப் பண்ணை மூலம் உற்பத்தி செய்யத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது. இருந்தாலும்கூட, ஒரு கிலோ 10 ரூபாய் என்றால் 10 எக்கருக்கு வீரியக் கம்பை மானாவாரிப் பிரதேசத்தில் பயிரிட வேண்டுமென்றால் குறைந்தது 300 ரூபாய் விதைக்காக மட்டும் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. அதுவே 10 எக்கர் தானியம் விளையக்கூடிய நிலத்தில், 1 எக்கர், 2 எக்கருக்கு மட்டும் பொறுக்குவிதையைப் போட்டுவிட்டு மற்ற இடங்களில் ஒரு கிலோ ஒரு ரூபாய் என்று விற்கும் விதைகளைப் போடுவதால் கிடைக்கவேண்டிய அதிகப்படியான உற்பத்தி கிடைக்காமல் போகிறது.

இன்று உரங்கள் சர்க்காரால் கட்டுப்பாட்டிலையில், மானாவாரிப் பிரதேசங்களில் கொஞ்சம் மழைக் காலங்களில் ரசாயன உரங்கள், யூரியா, அமோனியம் சல்பேட் போன்ற உரங்களைப் போடுகிறார்கள். விலை அதிகமாக இருப்பதால் அந்த உரங்களை அதிகப்படியான விவசாயிகள், சாதாரண ஏழை எளிய விவசாயிகள் பயன்படுத்த முடியவில்லை. அதற்கு மத்திய சர்க்கார் கொடுக்கும் மானியமும் நிறுத்திவிட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்காரிடம் மானியத்தைத் திரும்பவும் பெற வற்புறுத்துவதோடு மட்டுமல்லாமல் மாநில அரசாங்கமும் மானியம் வழங்கி மலிவான விலையில் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பூச்சி மருந்து தெளிப்பது சம்பிரதாயமாக விமானம் மூலம் தெளிப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அது பருத்தி போன்ற புன்செய்ப் பிரதேசங்களில் விமான மூலம் மருந்து தெளிப்பதால் பிரயோசனமில்லை என்று கூறிக்கொள்ளுகின்றேன். அந்த இடங்களிலே பூச்சி மருந்து தெளிப்பதற்காக, பவர் ஸ்ப்ரேயரின் மூலம் தெளிக்க, கிராமப் பிரதேசங்களிலேயிருக்கும் படித்துவிட்டு வேலையில்லாமலிருப்பவர்களுக்குப் பயிற்சி கொடுத்து ஒரே நேரத்தில், எப்பொழுது எப்படி காலரா, வைசூரி போன்ற நோய்களைத் தடுத்து நிறுத்த அரசாங்கமே தனது பொறுப்பில் அந்தத் தடுப்பு ஊசிகளைப் போடுகிறதோ அதுபோல், அந்தந்தப் பகுதிகளிலிருக்கும் இடங்களுக்கு மருந்து அடிக்க வேண்டும். அந்த முறையிலே நோய் பரவாமல் அரசாங்கப் பொறுப்பிலேயே, விவசாயிகளிடமிருந்து எந்தவிதமான கட்டணமும் வசூல் செய்யாமல் பஞ்சாயத்து யூனியன் மூலமோ அல்லது அரசாங்க விவசாயத்துறையின் மூலமோ

பவர் ஸ்ப்ரேயர்களின் மூலம் மருந்து தெளித்து நோய்களைத் தடுக்க வேண்டும். ஒரு சில இடங்களில் அந்த நோய்த் தடுப்பிற்காக பூச்சி மருந்துகளை அடித்த பிறகு, ஒரு சிலர் உபயோகப்படுத்தாமல் விட்டுவிட்டால் அடுத்தபடியாக உள்ள வேறு நிலத்திலிருந்து அந்தப் பூச்சிகள் அடுத்த நிலங்களுக்குப் பரவி விடுகிறது. எப்படி காலரா, வைசூரி போன்ற தொத்துநோய்கள் பரவி விடுகிறதோ, சிலர் தடுப்பு ஊசிபோட்டுக் கொள்ளாததால் எப்படிப் பரவிவிடுகிறதோ அதைப்போல் சில விவசாயிகள் பூச்சி மருந்துகளை அடிக்காமல் இருப்பதால் பலயிடங்களில் பரவிவிடுகின்றன. அரசாங்கமே, பொதுவாக உற்பத்தியின் வளர்ச்சியைக் கருதி அல்லது விவசாயப் பயிர்களைப் பாதுகாக்கவேண்டுமென்று தெரிந்து, அரசாங்கப் பொறுப்பிலேயே மருந்துகளை பவர் ஸ்ப்ரேயர்களின் மூலம் எந்தெந்தக் காலங்களில் என்னென்ன மருந்து அடிக்க வேண்டுமோ அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, பாசன வசதி சம்பந்தமாக எடுத்துக்கொண்டால், கோவில்பட்டி, சங்கரன்கோவில் தாலுக்காக்களிலும், இராமநாதபுரம் ஜில்லா பெரும் பகுதிகளிலும் கிணற்றுப் பாசனத்தை நம்பித்தான் விவசாயம் செய்யவேண்டியிருக்கிறது. 10,000 ரூபாய் செலவு செய்து ஒரு கிணறு வெட்டி பம்பு செட் போட வேண்டியதாயிருக்கிறது. 4 ஏக்கர்களிலே மின்சாரம் மூலம் தண்ணீர் இறைக்க வேண்டுமென்றால் 400 ரூபாய் மின்சாரக் கட்டணம் ஆகிறது. காவேரி நீர்ப்பாசன வசதியில் ஒரு ஏக்கருக்கு 30 ரூபாய், 40 ரூபாய் என்று வரி செலுத்த வேண்டியிருக்கிறது. கிணற்றுப் பாசனம் வேண்டுமென்றால் 10,000 ரூபாய் கடன் வாங்கி கிணறு வெட்டிய பிறகு, மின்சாரக் கட்டணம் 4 ஏக்கருக்கு 400 ரூபாய் என்றும், 3 ஏக்கருக்கு 300 ரூபாய் என்றும் வருஷமொன்றுக்கு ஆகிறது. இந்த 300 ரூபாய் தண்ணீருக்காக மட்டும் செலவு செய்கிறார்கள். மேற்கொண்டு 10,000 ரூபாய் கடன் வாங்கியதற்கு, வருடாவருடம் 2000, 2,000 ஆகக் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கிறது. ஆகவே, கிணற்றுப்பாசன வசதிக்காக கடன் பெற்றவர்கள் அதைக் கட்ட முடியாமலிருப்பதால், விவசாயத்தில் திறமையாகச் சாகுபடி செய்யமுடியாமல் இருக்கிறது. மின்சாரக் கட்டணம் உற்பத்திச் செலவைவிட மலிவான விலையில் தருகிறோம் என்று சொல்வது வாஸ்தவம். அதோடு நாட்டினுடைய உற்பத்திக்குப் பிரதானமாக, மூலாதாரமாக வேண்டிய மூலப்பொருள் உற்பத்தியையும் மனத்தில் கொண்டு இன்னும் மலிவான ரேட்டிலே மின்சாரக் கட்டணத்தை வழங்க வேண்டும். பெரிய பெரிய தொழில் நிறுவனங்களுக்கெல்லாம் மலிவான விலையில் மின்சாரம் கொடுக்கப்படுகிறது. யூனிட் ஒன்று 4 பைசா, 2 பைசா ரேட்டுக்கு வழங்கப்படுகிறது. அது மட்டுமல்ல. பெரிய தொழிற்சாலைகளில் மொத்த உற்பத்திச் செலவில் மின்சாரக் கட்டணம் என்பது அரை சதவிகிதம்தான். ஆனால் விவசாயத்தில், மொத்த உற்பத்திச் செலவில் கணக்கிட்டால் 15 சதவிகிதம், 16 சதவிகிதம் மின்சாரத்திற்குச் செலவாகிறது. மொத்தச் செலவு 100 ரூபாய் என்று விவசாயி செய்தால் அதில் 15 ரூபாய் மின்சாரக் கட்டணமாகயிருக்கிறது. தொழில் உற்பத்திக்கு மொத்தச் செலவில் அரை சதவிகிதம் மின்சாரக் கட்டணம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் விவசாயிகள் சம்பந்தப்பட்டவரையில் 15 சதவிகிதம் மின்கட்டணம் செலுத்துகிறார்கள். ஆகவே மின்சாரத்தை மலிவான விலையில் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். தவிர உற்பத்திச் செலவைக் கணக்கிட்டு, அதிகப்படியாகக் கூட்டிய மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

புன்செய் உற்பத்தியைப் பொறுத்தவரையிலும், பணப் பயிர் சம்பந்தமாக எடுத்துக்கொண்டால் உற்பத்தி செய்யும்பொழுது ஒரு விலை இருக்கிறது. உற்பத்தி செய்து போட்ட பிறகு விலை உயர்ந்துவிடுகிறது. இதனால் வாங்கிச் சாப்பிடுபவர்களுக்கும் மலிவான விலையில் கிடைக்கவில்லை, உற்பத்தி செய்பவர்களுக்கும் நியாயமான விலை கிடைப்பதில்லை. எனவே, அரசாங்கம் இந்தப் பொருள்களுக்குப் பிறகு மார்க்கெட் ஏற்படுத்துவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும், ஸ்டேட் டிரேடிங்





கார்ப்பொரேஷன் அமைக்க வேண்டும். வேறு சில மாநிலங்களில் அமைக்கப்பட்டிருக்கிறது. மாநில அளவில் அரசாங்க வியாபார நிறுவனங்கள் அமைத்து விவசாயிகளிடமிருந்து விளைபொருள்களை மொத்தமாக வாங்கிக் கொண்டு விற்பனை செய்யவேண்டும். ஏனென்றால் உற்பத்தி அடிப்படையில் விலை ஒன்றாக இருக்கிறது. விற்கும்பொழுது வேறு ஒரு விலையாக இருக்கிறது. விற்று முடிந்தவுடன் அந்த விலை உயர்ந்துவிடுகிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், மிளகாய் வத்தலை எடுத்துக்கொண்டால் மாநிலத்தில் 2 இலட்சம் ஏக்கரில் விளைகிறது என்று சொல்லப்படுகிறது. விவசாயிகள் விற்று முடிந்தவுடன் சென்ற ஆண்டு குவிண்டாலுக்கு 1,100 ரூபாய் என்றிருந்தது. அது இப்போது விவசாயி கைக்கு வரும்பொழுது 350, 400 ரூபாய் என்ற அளவிற்குக் குறைந்து இருக்கிறது. இன்னமும் 200 ரூபாய்க்குப் போகுமோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது. நிலக்கடலையை எடுத்துக் கொண்டால் 100 ரூபாயாக இருந்தது 40 என்ற அளவுக்குக் குறைந்துவிடுகிறது. இதனால் விவசாயிகளுக்கும் நல்ல நியாய விலை கிடைக்கவில்லை, வாங்கிச் சாப்பிடுபவர்களுக்கும் நியாயமான விலையில் கிடைப்பதில்லை. ஆகையால் அரசாங்கமே ஸ்டேட் டிரேடிங் கார்ப்பொரேஷன் அமைத்து விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இன்றையதினம் சர்க்கார் கடன்களைத் தவணைகளில் திருப்பி வாங்கிக் கொள்ளுகிறார்கள். அவர்களுக்குப் பஞ்ச நிலைமையைக் கருதி வறட்சிப் பகுதிகளில் கடன்களை வசூலிப்பது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கடன்களை அடுத்த ஆண்டு தவணையில் சென்ற ஆண்டு ஒத்திவைத்ததையும் சேர்த்து வசூலிக்கப்படுவது சரியல்ல. 10 ஆண்டுக் கடன் என்றால் 11-வது ஆண்டு முதல் வசூல் செய்யவேண்டுமே தவிர இரண்டு மூன்று ஆண்டுத் தவணைத் தொகையைச் சேர்த்து வசூல் செய்யக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

அரசாங்கப் பண்ணைத் தொழிலாளர்களில் ஆண்களுக்கு இரண்டே கால் ரூபாயும், பெண் தொழிலாளர்களுக்கு 1 ரூபாய் 60 காசும், சிறுவர்களுக்கு 1 ரூபாய் என்றும் சம்பளம் இருக்கிறது. விலைவாசி உயர்ந்துள்ள இக்காலத்தில் அது எப்படிப் போதுமானதாகயிருக்கும் என்பதை உணர்ந்து, அவர்களுக்கு நியாயமான, போதுமான அளவில் சம்பளத்தை உயர்த்தி, அரசாங்கப் பண்ணைகளில் வேலை பார்க்கும் விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டும். அந்த விவசாயத் தொழிலாளர்கள் அதிகப்படியாக உழைப்பவர்கள், இப்பொழுது கொடுக்கும் சம்பளம் போதாது என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

டிராக்டர்கள் வாங்குவதென்றால் பெரிய பெரிய விவசாயிகள்தான் வாங்க முடிகிறது. சிறிய விவசாயிகள் நான்கைந்து பேர்கள் சேர்ந்து கூட்டாக டிராக்டர்கள் வாங்கக் கடன் வழங்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. வ. க. இராமராசன்: தலைவரவர்களே, நமது விவசாய அமைச்சர் அம்மையார் அவர்கள் அளித்துள்ள விவசாய மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.

குழந்தை பிறந்தவுடன் அம்மா என்று அழைக்கிறது. அதைப் போல, ஏழை எளிய விவசாயிகள் நல்ல முறையிலே இருக்க வேண்டுமென்பதற்காக பெருமதிப்பிற்குரிய நமது முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தாயிடம் அந்த இலாக்காவை ஒப்படைத்திருக்கிறார்கள். அமைச்சரும் தாய், அதனுடைய செயலாளரும் தாய்க்குலம்; ஆகவே இந்த முறையிலே ஏழை எளிய விவசாயிகளின் குறைகளை நன்கு ஆராய்ந்தறிந்து, குழந்தை அழுதால் எப்படிச் சிரிக்க வைக்கிறார்களோ

அதைப்போல விவசாயிகளின் குறைகளை நன்கறிந்து, அவர்களின் குறைகளைத் தீர்ப்பார்கள் என்ற நம்பிக்கை நமக்கிருக்கிறது. ஆகவே, 1967–ஆம் ஆண்டு ஏதோ, தேர்தலில் தான் வெற்றி பெற்று மந்திரியாக வரவேண்டுமென்ற காரணத்தால் அங்குள்ள தாளவாடி, ஆசனூர் பகுதியை மைசூரோடு இணைத்துக் காட்டுகிறேன் என்று வீராப்புப் பேசி எதிர்க்கட்சித் தலைவரவர்கள் ஓட்டு வாங்கி சட்டமன்றத்திற்கு வந்தார்கள். ஆகவே, இதை வைத்துக் கொண்டு ....

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** காதில் சரியாகக் கேட்கவில்லை. கொஞ்சம் நன்றாகச் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வ. க. இராமராசன்:** தலைவரவர்களே, மைசூர் மாநிலச் சட்டமன்ற உறுப்பினர் வட்டல் நாகராஜ் அதை மைசூரோடுதான் இணைக்க வேண்டுமென்று பல போராட்டம் நடத்தினர். ஆகவே, தாளவாடி பகுதி மக்கள் தூங்கிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் சொன்ன காரணத்தால்தான் அந்த வட்டல் நாகராஜ் அவ்வாறு செய்திருப்பார் என்று நம்ப வேண்டியதாயிருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இதை நிரூபிக்க வேண்டும். நான் இவ்வாறு எப்பொழுது வாக்குறுதி கொடுத்தேன். வட்டல் நாகராஜ் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். இது சாதாரண விஷயமல்ல. உரிமை பாதிக்கப்படுகிறது. இதை நிரூபிக்க வேண்டும். இல்லாவிட்டால் நான் விடமாட்டேன்.

உங்களுடைய தீர்ப்பு என்ன? வட்டல் நாகராஜ் பற்றியெல்லாம் சொல்கிறார். விவசாய மானியத்திற்கும் அதற்கும் என்ன சம்பந்தம்? இது ஒரு பெரிய குற்றச்சாட்டு, இதை நிரூபிக்க வேண்டும். இதை நிரூபிக்கத் தயாரா?

**திரு. வ. க. இராமராசன்:** தலைவர் அவர்களே, நமது காவேரி அணையின்........

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உறுப்பினர் அவர்கள் சொன்னதை வாபஸ் பெறவேண்டும், அல்லது அதை நிரூபிக்க வேண்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் :** (திரு. ந. தருமலிங்கம்) உறுப்பினர் சொன்ன தகவலுக்கு ஆதாரம் இருக்கிறதா அவர்களிடம் ?

**திரு. வ. க. இராமராசன்:** நான் மக்கள் அப்படிச் சொல்கிறார்கள், பேசிக் கொள்கிறார்கள் என்றுதான் சொன்னேனே தவிர, வேறு ஒன்றுமில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மக்கள் எதை எதையோ பேசிக்கொள்கிறார்கள். முதல் அமைச்சரும், மந்திரி சபையும் எதை எதையோ அடமானம் வைக்கிற நிலை இருக்கிறது என்றெல்லாம் பேசிக்கொள்கிறார்கள்.

**திரு. வ. க. இராமராசன்:** ஆகவே, நமது காவேரிக்கு வரவேண்டிய தண்ணீரை ஹேமாவதி நதியில் அணை கட்டி தடுத்துவிடுவோம் என்று வீராப்பு பேசிக்கொண்டிருக்கிறார்கள். நமது ஆசனூர், தாளவாடிப் பகுதியில் காரைப்பள்ளம் என்ற ஒரு பெரிய பள்ளம் இருக்கிறது. அதில் ஏராளமான தண்ணீர் வந்திருக்கிறது. அது இப்பொழுது மைசூர் மாநிலத்திலுள்ள சுவர்ணா நதிக்குப் போய்ச் சேருகிறது. அதை ஆசனூர், திம்பம் வழியாகத் திருப்பி, அந்தத் தண்ணீரை பவானிக்குக் கொண்டுவந்தால், காலிங்கராயன் சானல், தாட்டப்பள்ளி சானல் போன்ற பகுதிகளுக்கெல்லாம் விவசாயத்திற்குத் தண்ணீர் பயன்படும். கீழ்





பவானி அணை ரூ. 10 கோடிக்கு மேல் செலவிடப்பட்ட பெரிய திட்டமாக இருந்தும், அதனால் பயன்பெற வேண்டிய விவசாயிகளில் ஒரு பகுதியினர் இன்றும் துன்பப்படுகிறார்கள். பவானி தண்ணீரை ஆசனூர், திம்பம் வழியாகத் திருப்பி பவானிசாகருக்குக் கொண்டு வந்தால், விவசாயிகள் நல்ல பலன் அடைவார்கள். நீர் அறியும் வல்லுநர்களை அனுப்பிவைத்து பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இதை ஆராய்ந்து, இந்தக் காரியத்தை உடனடியாகச் செய்வார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. மாயார் பகுதியில்......

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** உறுப்பினர் நிலைமை தவறிப் பேசுகிறார்கள். இரிகேஷன்பற்றிப், பேசுகிறார்கள் தாளவாடிப் பிர்காவைப் பற்றி பேசுகிறார்கள். பரிசோதனை செய்யவேண்டிய கேஸ் இது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்:** (திரு. ந. தருமலிங்கம்) உறுப்பினர் அவர்கள் இந்த மானியத்தின் மீது பேசவேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** விவசாயத்திற்கு தண்ணீர் வேண்டும். அதனால் நீர்ப்பாசனத்தைப் பற்றி பேசுகிறார் உறுப்பினர் அவர்கள். எதிர்ககட்சித் தலைவர் அவர்கள் அவர் மீது அபாண்டமான குற்றச்சாட்டைச் சாட்டுகிறார்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** உறுப்பினர் அவர்கள் தாளவாடி பிர்காவைப் பற்றி பேசினாரே? நீர்ப்பாசனத்தைப்பற்றிப் பேசலாம் என்று பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு சிபார்சுக்கு வருபவர், தாளவாடி பிர்காவை மைசூர் மாநிலத்தோடு இணைத்துக் காட்டுவதாக எதிர்க்கட்சித் தலைவர் தேர்தலின்போது பேசியதாக உறுப்பினர் அவர்கள் சொன்னாரே, அப்பொழுது அதற்கும் அக்ரிகல்சர் மானியத்திற்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கவேண்டாமா?

**திரு. வ. க. இராமராசன்:** நீலகிரி மாவட்டத்தில் தென்குமராட்டாவில் விவசாயக் கூட்டுறவுப் பண்ணை 500 ஏக்கரா பரப்பில் ஏற்பட்டிருப்பதுபோல, மைசூர் பகுதியிலிருந்து வருகிற மாயார் பகுதியிலே மங்களப்பட்டியில் ஏறத்தாழ 2,000, 3,000 ஏக்கர் நிலம் இருக்கிறது, அதைக் கூட்டுறவு முறையில் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் விவசாயிகளுக்கு, ஏழை எளிய விவசாயிகளுக்குக் கொடுத்தால் கூட, அவர்கள் நல்ல பலன் அடைவார்கள். ஆகவே, அந்தக் காரியத்தைச் செய்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பவானிசாகரில் 500 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு பெரிய விவசாயப் பண்ணை இருக்கிறது. ஆகவே, அந்தப் பண்ணையை வைத்தக்கொண்டு, பவானிசாகரில் ஒரு விவசாயக் கல்லூரியை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அறநிலைய அமைச்சர் பன்னாரி மாரியம்மன் கோயிலுக்கு வந்தபொழுது கூட, அங்கு ஒரு கல்லூரி ஏற்படுத்தப்படவேண்டும், அதறகு ரூ. 4, 5 லட்சம் கொடுக்கிறோம் என்று வாக்குறுதி கொடுக்கப்பட்டது. ஆகவே, அங்கே ஒரு விவசாயக் கல்லூரி ஏறபடுத்தித் தரவேண்டும் என்றும், இந்த ஆண்டே அதைத் துவக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

எல்.பி.பி. கெனலில் நான்கு மாதங்களுக்கு ஒரு முறை தண்ணீர் விடுகிறார்கள். எட்டு மாதங்களுக்கு தண்ணீர் விடவேண்டும். முதல் டர்னுக்கு நான்கு மாதம், இரண்டாவது டர்னுக்கு நான்கு மாதம். முதல் டர்னுக்கு விடுகிற தண்ணீரை தொடர்ந்து விடவில்லை. பத்து நாளுக்கு ஒரு முறை விடுகிறார்கள். அதனால் விளைச்சல் சரியான முறையில் இல்லை. ஆகவே, கூட்டுறவுத் துறையினால் கொடுக்கப்பட்ட கடன் தொகை அத்தனையையும் வசூல் செய்வதை ஒத்திப்போடுமாறு பணிவுடன் கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. இல. பலராமன்:** தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைத் துறை மானியத்தின்மீது என்னுடைய கட்சி சார்பாக கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து. நான் சில வார்த்தைகள் பேச விழைகின்றேன்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்

தொழுதுண்டு பின்செல் பவர்."

என்று தமிழ் நாட்டைப் போற்றக்கூடிய வள்ளுவர் கூறிய நிலையில் இன்று தமிழ் நாடு விவசாயிகள் இருக்கிறார்களா. என்று பார்த்தால், இல்லவே இல்லை. ராமாயணத்திற்கு எதிராக ராவணாயணம் என்று சொல்வதுபோல், குறளுக்கு எதிராக கிறள் என்று ஒன்று இருக்குமானால், அதில் இப்படித்தான் இருக்கும்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்

கொழுத்துண்டு முன் செல்பவர்"

என்றுதான் இருக்கும். அந்த ஒரு நிலைதான் இன்று இருக்கிறது என்பதை நான் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். விவசாயிகள் முன்னேறியிருக்கிறார்களா என்று பார்த்தால், இன்றைக்கு தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் விவசாயிகள் பின்தங்கியிருக்கிறார்கள்....

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், ஸார். அப்படியானால் உறுப்பினர் அவர்கள் சொல்கிற கிறள்படி "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்பதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதுதானே?

**திரு. இல. பலராமன்:** விவசாயிகள் ஒழுங்காக வாழ்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு அரசு உதவியாக இருக்கவில்லை என்பதைத்தான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன். நாட்டிலுள்ள மற்ற துறைகளைக்காட்டிலும் விவசாயம் வளர்ந்திருக்கிறதா என்றால், வளரவில்லை. விவசாயம் இன்றைக்கு பின்நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. கொழுத்துண்டு முன் செல்கிறார்கள் மற்றவர்கள் என்ற ஒரு வார்த்தையைத்தான் அமைச்சரவைக்கு நான் ஞாபகப்படுத்துகிறேன்.

நம்முடைய நாட்டினுடைய பொருளாதாரம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்பது எல்லாப் பொருளாதார நிபுணர்களும் ஒத்துக்கொண்ட விஷயமாக இருந்தாலும், உண்மையிலேயே விவசாயிகள் முன்னேற நாம் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன என்பதைப் பார்த்தால், ஒன்றுமில்லை என்றுதான் கூறமுடியும். இந்த அரசு வந்ததற்குப் பின்னால், அதிலும் விவசாயத்தை நாங்கள் அமோகமாக நிறைவேற்றிவிட்டோம், விவசாய உற்பத்தி அமோகமான நிலைக்கு வந்துவிட்டது என்று விளம்பரத்திற்காகக் கூறிக்கொண்டிருக்கிறார்கள். அதற்கான அடிப்படைத் திட்டம் என்ன என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அதற்கு வேண்டிய அணைகள் அல்லது மற்றைய நீர் ஊற்றுகள், அல்லது மற்றைய வசதிகள் ஏதாகிலும் செய்து கொடுத்திருக்கிறார்களா, புதிய திட்டம் ஏதேனும் இருக்கிறதா என்று பார்த்தால், இல்லவே இல்லை என்பதை நான் இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

உணவையும், நிலத்தோடு நீரையும் இணைக்க வேண்டும். அப்படி இணைப்பதற்கேற்ப உணவோடு பொதுப்பணித் துறையும் ஒன்றாக இருக்க வேண்டும், இரண்டிற்கும் ஒரே அமைச்சராக இருக்க வேண்டும் என்று இந்த அவையிலே ஏற்கனவே இருந்தவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். நானும் அதை நினைவூட்டுகிறேன். குறிப்பாக தமிழ் நாட்டை எடுத்துக்கொண்டால், பூமிக்கு அடியில் இருக்கிற ஊற்றுத்





தண்ணீரை நல்லமுறையில் எடுக்க விரிவான ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்று நான் இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன். குறிப்பாக, வட ஆற்காடு மாவட்டம் இயற்கை சாதகமாக இல்லாத ஒரு மாவட்டமாக இருந்தும், அங்கே தஞ்சை மாவட்டத்தில் உள்ளதுபோல் உணவு உற்பத்தி நல்லமுறையில் வரக்கூடிய ஒரு மாவட்டமாக இருக்கிறது. அங்கு பயிர் செய்யக்கூடிய விவசாயிகள் நில ஊற்றைக் கொண்டுதான் பயிர் செய்கிறார்கள். அங்கும் இப்பொழுது ஊற்றுக்கொள்ளாத நிலை இருக்கும்பொழுது, எதாகிலும் விரிவாக ஆராய்ச்சி செய்து, இங்கே இங்கே ஊற்று இருக்கிறது, இந்த ஊற்றைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று ஆராய்ச்சி ஏதாகிலும் செய்யப்பட்டதா என்று பார்த்தால், இல்லவே இல்லை. துளைக் கருவியைக் கொண்டு போரிங் போடக்கூடிய ஒரு மெஷினை விவசாய டிபார்ட்மெண்டில் வைத்திருக்கிறார்கள். அதற்கு ரூ. 25 வாடகை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அது அதிகமாக இருப்பதால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிற நிலையில் இருக்கிறார்கள்.

ஐ.ஆர்.8 ரக நெல் விளைச்சல் 59 சதவீதம் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு உணவு உற்பத்தி அதிகரித்துள்ளது என்று இங்கே குறிப்பிட்டுள்ளார்கள். ஐ.ஆர்.8 பயிரிடக்கூடிய விவசாயி இன்றைக்கு என்ன நிலையில் இருக்கிறான் என்று பார்த்தால், அவர்கள் போட்ட முதலுக்குத் தக்க லாபம் இருக்கிறதா என்று பார்த்தால், இல்லவே இல்லை. அதற்கு போடக்கூடிய எருக்கள், இங்கே தரப்பட்ட எருக்களை அப்படியே நிலத்தில் போட்டுக்கொண்டே இருந்தால் அந்த நிலம் என்ன ஆகும் எதிர்காலத்தில் என்று ஒரு பயத்தை அளிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அம்மோனியம் சல்பேட் போன்ற ரசாயன உரங்களில் 22 சதவீதம் நைட்ரஜன் தழை சத்துக்கள் இருப்பதாகவும், மற்ற சத்துக்கள் சல்பர் போன்றவைகள் அதிகமாக இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. சல்பர் போன்றவைகளை நிலத்தில் போட்டுக்கொண்டே இருந்தால், நிலம் எதிர்காலத்தில் என்ன ஆகும் என்று கேள்வியை எழுப்பக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. விவசாயிகள் அதைப் பார்த்து பயப்படக்கூடிய ஒரு சூழ்நிலையில் இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் அமைச்சர் அவைக்குக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த நிலைக்குச் சென்றுகொண்டிருந்தால் உணவுப் பஞ்சம் எதிர்காலத்தில் நீடிக்கும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். விவசாயிகள் எப்படி எப்படிச் செய்ய வேண்டும் என்கிற சூழ்நிலை இல்லை. இன்றைக்கு 'பாலிடால்' போன்ற ரசாயன மருந்துகளை அடிக்கும்போது, பரிதாபத்திற்குரியவர்களாக ஆகிவிடுகிறார்கள், விபத்துக்கள் ஏற்பட்டு அவதிப்படுகிறார்கள். என் தொகுதியில் பூச்சிக் கொல்லி மருந்துகளை அடித்தபோது இரண்டுபேர்கள் இறந்துபோனார்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** உறுப்பினர், இரண்டு பேர்கள் இறந்திருக்கிறார்கள் என்கிறார்கள். அவர்கள் மருந்து அடிக்கும்போது விபத்தில் சிக்கினார்களா அல்லது வேறு வகையில் பாதிக்கப்பட்டார்களா என்று சொல்ல வேண்டும்.

**திரு. இல. பலராமன்:** மாண்புமிகு அமைச்சர் கேட்ட கேள்விக்கு நன்றி. பூச்சிக் கொல்லி மருந்து அடிக்கும்போதுதான் அவர்கள் இறந்தார்கள் என்பதை அமைச்சருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மருந்துகளால் பொதுமக்களுக்கு ஆபத்தான சூழ்நிலைகள் ஏற்படுவதை நிவர்த்திக்க அங்கத்தினர்கள் நல்ல ஆலோசனைகளை எடுத்துச் சொன்னார்கள். நகரங்களில் காலரா போன்ற தொத்து நோய்கள் வரும் காலத்தில்போல, இதிலேயும் அரசாங்கமே தங்கள் சிப்பந்திகளைக் கொண்டு இந்த மருந்துகளையும் அடிக்க வேண்டும். பயிர் பாதுகாப்பு செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அந்த முறையை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பூச்சிக் கொல்லி மருந்துகளால் மக்களுக்கு உணவு உற்பத்தியில் ஏற்படக்கூடிய பாதகங்கள் என்னென்ன என்பதையெல்லாம் ஆராய்ச்சி செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. அது ஆராய்ச்சிக்குரிய விஷயமாக இருக்கிறது.

ஐ.நா. சபையில் கூடகொஞ்ச நாட்களுக்கு முன்னால், டி.டி.டி. போன்றவைகளால் மக்களுக்கு பாதகம் ஏற்படுகிறது என்று குறிப்பிட்டதாகப் படித்தோம். ஆகவே, இம்மாதிரியான பாலிடால் போன்ற ரசாயன மருந்துகளால மனித உடலுக்கு என்னென்ன தீங்குகள் ஏற்படும் என்பதை ஆராய்ச்சி செய்யக் கூடிய நிலையில், அரசு ஆராய்ச்சியை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஐ.ஆர். 8 ரக நெற்கள் இந்த இந்த நிலத்தில் பயிர் செய்யப்பட வேண்டும் என்று விவசாயிகளுக்குத் தெரிவிக்காத காரணத்தால், விவசாயிகள் எல்லா நிலங்களிலும் பயிர் செய்து அதனால் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் பல விவசாயிகள் பயிர் நல்ல முறையில் விளையாததால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எடுத்துக் காட்டாக, கண்ணியம்பாடி யூனியனில் 6,000 ஏக்கர் என்று அதிகாரிகள் சொன்னாலும், 1,500 ஏக்கர்தான் ஐ.ஆர். 8 போட்டார்கள். அதற்குக் காரணம் அதிகமாகச் செய்ய முடியவில்லை. 6,000 ஏக்கர் என்று தவறான புள்ளிவிவரங்களைத் தந்திருப்பவர்கள் கூட மொத்தமாகக் கொடுத்திருப்பார்கள், நிர்ணயமாகக் கொடுத்திருக்க முடியாது. அதேபோன்று ஐ.ஆர். 8 புதிய ரக நெல் எந்த எந்த நிலங்களில் பயிராகும், எந்த எந்த இடங்களில் விளையும் என்பதை முன்கூட்டியே ஒவ்வொரு விவசாய அதிகாரியும் நிர்ணயித்துவிட வேண்டும்.

அதோடு கூட, நிலத்தின் தரத்தைக் கண்டுபிடிக்க, மண் வள ஆராய்ச்சிக்கு, ஒரு மொபைல் யூனிட் என்ற முறையில் வைத்து நடத்தவேண்டும் என்று பல உறுப்பினர்களும் வலியுறுத்தினார்கள். அந்தப் பிரச்சினையை அரசு பரிசீலிக்கவில்லை. ஒரு நிலத்தின் தரம் என்ன என்று அறிந்தால்தான், ரசாயன உரங்கள் எந்த அளவுக்கு இடமுடியும், விளைச்சலை அமோகப்படுத்த முடியும் என்பதையெல்லாம் அறிய முடியும். அந்த அந்த கிராமத்திற்கு வான்களை அனுப்பி, நடமாடும், மொபைல் யூனிட்டை வைத்து, மண்ணைப் பரிசோதிக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, இந்த வீரிய விதைகளைக் கொடுக்கிறார்கள். கடந்த போகத்தில் ஜனவரி சீசனில் அமோக விளைச்சல் விதை என்று சொல்லி, விளையாத நெற்கள் வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு வந்து இருக்கின்றன. தற்போது கதிர் அளவில் இருந்தாலும், மூன்று விதமான வகைகள் காணப்படுகின்றன. முதல் அறுவடையா, இரண்டாவது அறுவடையா, மூன்றாவது அறுவடையா என்று புரியாத வகையில், ஐ.ஆர்.8 நெல்லில் கலப்படங்கள் அதிகமாக இருக்கிறது. ஹைப்ரிட் வெரைட்டி என்று கூறுகின்ற நெற்களை வின் தரிக்க, விதைகளை உற்பத்தி செய்ய பண்ணைகள் இல்லை. இந்த ஆண்டு 10,000 டன் என்றால், அடுத்த ஆண்டு 20,000 டன் இருக்கிறது. வேண்டிய விதைகளை, தரமுள்ள விதைகளை அரசாங்கத்திலேயே தயார் செய்து கொடுக்க வேண்டும். விவசாயிகளுடைய விதைகளை வாங்குவதில் கலப்படம் ஏற்படுகிறது. மூன்று ஆண்டுகளில் இந்த விதைகள் பலன் தராத நிலைக்கு வந்துவிடுகின்றன. இன்றைக்கு விளம்பர நெல்லாகத்தான் இருக்கிறது. ஆடுதுறை நெல் பழைய நிலையில் இல்லாமல், மகசூல் குறைந்திருப்பதற்குக் காரணம் தெரியவில்லை என்று சொல்லி, இந்த மானியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று கூறி, என் கட்சியின் பெயரில் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து, விவசாயிகளுக்கு நல்வாழ்வு கொடுக்க அரசு நல்ல நடவடிக்கைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

* திரு. செ. கந்தசாமி கவுண்டர்: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கைமீது கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்துப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அதற்கு என் ஆதரவையும் தெரிவித்துக்கொண்டு வேளாண் கழகத்தையும் கொஞ்சம் தாராளமாகவே சொல்ல விரும்புகிறேன்.





பூர்வ காலத்தில் இந்த பூமியிலுள்ள ஜீவராசிகள் உயிர்வாழ்வான் வேண்டி அவைகளுக்கு உணவும் பிற உதவிகளும் செய்ய மகாவிஷ்ணு வானவர், கங்கைக் கரையில் அவதரித்து, காவிரிக்கரை வந்து விவசாயத்தைச் செய்ய விரும்பி, தேவலோகம் சென்று, விவசாயத் தொழிலுக்குரிய முறைகளையும், பிற கலைகளையும் கற்றுத் திரும்பி காஞ்சிபுரத்திலுள்ள காமாட்சி அம்மையிடம் கால் நாழி நெல்லும், ஒரு ஏரும் பெற்று விவசாயத்தைத் தொடங்கி, குபேரன் மகள் ஐந்திரியையும் தேவேந்திரன் மகளையும் திருமணம் செய்துகொண்டு அவர்கள்பால் 106 மக்களைப் பெற்று அந்த 106 பேருக்கும் நளகூபரன் மக்கள் 106 பேரையும் மணம் புரிவித்து அதன் வாயிலாக 12 ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் நாடெங்கும் பரவின என்று விவசாய கால ஆரம்ப சரித்திரம் வேளாள புராணத்தில் கூறப்பட்டிருக்கிறது. இப்படி ஆரம்பிக்கப்பட்ட விவசாயத் தொழில் கஷ்டத்தோடோ, நஷ்டத்தோடோ காங்கிரஸ் ஆட்சிக்காலம் வரை சீராக நடைபெற்று வந்தது. அவர்கள் காலத்தில் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று குறைத்து விவசாயிகளின் ஆர்வத்தையும் உற்பத்தித்திறனையும் குறைத்துவிட்டனர். அதாவது ஸ்டாண்டர்டாக இருக்கிறதா என்றால், அதுவும் இல்லை. இன்று மீண்டும் 15 ஸ்டாண்டர்ட் ஆகக் குறைந்து விட்டது. இப்படி இந்த விவசாயத் தொழில் ஒரு ஸ்டாண்டர்ட் ஆக இல்லாமல் ஸ்டாண்டர்டு குறைந்து கொண்டே வந்தால், உணவு உற்பத்தி ஒரு ஸ்டாண்டர்டாக இருக்காது.

மேலும், மின் கட்டண உயர்வு, மினிமம் சார்ஜ், ஆண்டு குறைந்த கட்டணம், மின்சார வரி, விவசாய வருமான வரி, குறைக்கப்பட்ட நிலப்பரப்பு, இயற்கையின் சதியால் அவதியுறும் ஆற்[illegible] நிலக கடன் தொல்லை இவையனைத்தையும் நிவர்த்தி செய்ய அரசு முயற்சி மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த நிலையில் அரசு மின் கட்டணத்தைக் குறைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நமது மாநிலத்தில் குறைவான மழை பெய்யக்கூடிய பகுதி என்று அரசினரால் ஒப்புக்கொள்ளப்பட்ட கரூர் தாலுகா, தாராபுரம் தாலுக்கா, திருநெல்வேலி, ராமநாதபுரம் ஜில்லாக்களில் 1½ லட்சம் ஏக்கரில பயிரிட திட்டமிட்டுள்ள மிகுபயன் தருவதும், வறட்சியையும், நோயையும் தாங்கக்கூடிய எச். பி. 3 கம்பை பயிரிட அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும், இந்த வறட்சிப் பிரதேசங்களுக்கு எது உகந்தது என்று ஆராய்ச்சி செய்து வறட்சியைத் தாங்கக் கூடிய மிளகாய், புகையிலை, வேர்க்கடலை போன்ற பயிர்களை பயிர் செய்வதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அந்த வகையில் விவசாயிகளை முன்னேற்றத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு வேண்டிய மெஷினரிகளையும், நிலத்தைச் சமம்செய்யும் கருவிகளையும் உபயோகிப்பதற்கு வேண்டிய செலவுகளை அரசே மேற்கொண்டு, தவணை முறையில் வட்டியில்லாமல் வசூலிக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ப

அடுத்தபடியாக, என்னுடைய பகுதியில் உள்ள நிலம் முந்திரி, திராட்சை போன்ற பயிர்கள் வைப்பதற்கு ஏற்ற நிலமா என்பதை மண்வளப் பாதுகாப்பு வல்லுநர்களைக் கொண்டு ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்தப் பயிர்களைச் செய்தால் லாபகரமாக இருக்குமா என்பதை அரசாங்கம் கவனித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்து, என்னுடைய பகுதியில் வறட்சி நிலைமை நீடித்திருப்பதால் வறட்சி நீங்கும் வரை சர்க்காருக்குச் சேரவேண்டிய கடன்களையும், கூட்டுறவு விவசாயக் கடன்களையும் ஒத்திவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, குடகனாறு திட்டத்தையும், நொய்யலார் உங்காம்பாளையம் திட்டத்தையும், சண்முக சின்னாறுதிட்டத்தையும் நிறைவேற்றித்

தந்தால்தான் அந்தப் பகுதி மக்கள் மிகவும் வளமாக வாழ முடியும். ஆகவே, இந்தத் திட்டங்களையெல்லாம் அரசு விரைவில் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. எம். கோபால்:** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே வேளாண்மைத் துறை மானியத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய நாடு விவசாயத்தை நம்பியிருக்கும் நாடு. இருபது ஆண்டுக் காலமாக ஆட்சி செய்த காங்கிரசார் விவசாய மக்களை நம்பவில்லை. விவசாயம் பெருகுவதற்காக வேண்டிய அளவில் அக்கறை காட்டவில்லை. விவசாய மக்களுக்கு உற்சாகத்தை அளிக்கவில்லை. விவசாய மக்களுக்குத் தேவையான உரமோ, சல்பேட்டோ கண்ட்ரோல் விலைக்குக் கொடுக்கவில்லை. தங்களுக்கு வேண்டியவர்களுக்கு மட்டும் கண்ட்ரோல் விலைக்கு இந்த உரங்களைக் கொடுத்துவிட்டு, மற்ற விவசாயிகளுக்கு ரசாயன உரத்தைக் கொடுக்கவில்லை. இந்தமாதிரியான நிலைமைகளையெல்லாம் திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் வந்த பிறகுதான் மாற்றினோம். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபிறகு கண்ட்ரோல் விலைக்கே எல்லா விவசாய மக்களுக்கும் உரம் கிடைக்க வழி செய்தோம். முன்பெல்லாம் ஒரு வங்கியில் கடன் வாங்க வேண்டுமென்றால் சுமார் 6 மாத காலமோ, ஒரு வருஷமோ அங்கு போய் காத்திருக்க வேண்டிய நிலைமை இருந்தது. அவற்றையெல்லாம் இந்த அரசு மாற்றியமைத்து, விவசாயத்தைப் பெருக்குவதற்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்து வந்திருக்கிறது.

அடுத்தபடியாக, விவசாயத்திற்கு ஏரி, குளம், கிணறு முதலியவை முக்கியம். என்னுடைய தொகுதியில் ஏறத்தாழ 13,500 ஏக்கர் பாயக் கூடிய செம்பரம்பாக்கம் ஏரி ஆயக்கட்டு இருக்கிறது. அந்த ஏரி முன்பு 24 அடி ஆழம் உள்ளதாக இருந்தது. மெல்ல மெல்ல தூர்ந்து இன்றைக்கு 20 அடி ஆழம் உள்ளதாக இருக்கிறது. வெள்ளையன் ஆண்ட காலத்திலே அந்த ஏரியை தூர் எடுத்தார்கள், சீரமைப்பு வேலை செய்தார்கள். ஆனால் காங்கிரஸ் அரசாங்கம் இதுகாறும் அந்த ஏரியின் பராமரிப்புக்கு ஒன்றுமே செய்யவில்லை. நாளை நடைபெறவிருக்கும் விவசாயக் கருத்தரங்கின்போது நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும், விவசாய அமைச்சர் அவர்களும் அந்த ஏரியைப் பார்வையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது செங்கற்பட்டு மாவட்டத்திலேயே பெரிய ஏரியாகும். அண்மையில் பட்ஜெட்டிலே இந்த ஏரியின் பராமரிப்புக்காகவும், வாய்க்கால்களை வெட்டுவதற்காகவும் நிதி ஒதுக்கப்படவில்லை. துணை மானியத்திலாவது ஏதாவது ஒதுக்கி அந்த ஏரியைப் பராமரித்துத் தர வேண்டும்.

அடுத்தபடியாக, கடந்த ஆண்டு வறட்சி நிலைமை ஏற்பட்டது. விவசாயிகள் கடன் வாங்கினார்கள். சர்க்காருக்குக் கட்ட வேண்டிய வட்டி கட்ட முடியவில்லை. கடந்த ஆண்டு, இந்த ஆண்டு இரண்டையும் சேர்த்துக் கட்ட வேண்டுமென்று அதிகாரிகள் வற்புறுத்துகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் சொன்னாலும் அதைக் கேட்க மறுக்கிறார்கள். ஆகவே, விவசாயிகளிடமிருந்து மெல்ல மெல்ல கடன் வசூலை வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, செம்பரம்பாக்கம் ஏரி ஆயக்கட்டு கால்வாய் தூர் எடுக்கப்படவில்லை. மேலே போகிற கால்வாய்களில் உடைப்பு ஏற்பட்டு தண்ணீர் சேதமாகிறது. கால்வாய்கள் ஒழுங்கான முறையில் நல்லபடியாக அமைக்கப்பட வேண்டும். அப்போதுதான் தண்ணீர் நல்ல முறையில் விவசாயத்திற்குப் போய்ச் சேரும். கால்வாய்களில் உடைப்பு ஏற்பட்டு, நீர் சைதாப்பேட்டை ஆற்றிலே கலந்து பின்னர் கடலிலே போய்ச் சேருகிறது, இதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர்கள் கண்கூடாகக் கவனிக்க வேண்டும்.





அடுத்தபடியாக. அம்மையார் அவர்கள் தைரியமாகவும், தெளிவாகவும் 'இந்த ஆண்டு செங்கல்பட்டு மாவட்டத்தில் 2 லட்சம் ஏக்கரில் நல்ல விளைச்சல்' என்று சொன்னார்கள். இந்த ஏரியை நல்ல முறையில் செப்பனிட்டுப் பயன்படுத்தினால் இரண்டு லட்சம் என்ன, நான்கு லட்சம் ஏக்கரிலும் பயிரிடலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு கொண்டுவந்த ஸ்டாண்டர்ட் ஏக்கர் திட்டத்தை எல்லா மக்களும் பாராட்டுகிறார்கள். குறிப்பாக ஏழை விவசாய மக்கள், ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர், ஐந்து ஏக்கர் என்று வைத்திருக்கக்கூடிய விவசாயிகள் எல்லோரும் பாராட்டுகிறார்கள்.

அடுத்தபடியாக, கார் வைத்திருப்பவர்கள் ஆர். சி. புக் வைத்திருக்கிறார்கள். அதைப்போல பட்டாக்கள் உள்ள விவசாயிகளுக்கு ஒரு பாஸ் புத்தகம் கொடுத்து, அவர்கள் வங்கிகளில் கடன் வாங்கும்போதும், கடன் திருப்பிக் கொடுக்கும்போதும் உபயோகப்படுத்த வழி செய்ய வேண்டும். இது ஒரு நல்ல திட்டம். கடன் வாங்க வேண்டுமென்று விவசாயி நினைத்தால், முதலில் அவன் கிராம முன்சீப், ரெவின்யூ அதிகாரிகள் போன்றவர்களிடத்தில் ஒரு சான்றிதழ் பெற வேண்டும். அந்தச் சான்றிதழைப் பெறுவது என்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. அதற்காக நாம் பணத்தைக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால், சான்றிதழ் அவ்வளவு சீக்கிரத்தில் விவசாயிக்குக் கிடைக்காது. ஆகவே, ஒவ்வொரு பட்டாதாரருக்கும் விவரங்கள் அடங்கிய ஒரு பாஸ் புத்தகத்தைக் கொடுத்தால், அதை வங்கியில் காண்பித்து, தேவையான கடனை எளிதில் பெற முடியும். ஒவ்வொரு விவசாயிடமும் இந்த புத்தகம் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும். அரசு மிக்க கவனம் செலுத்தி இதை அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாய மக்கள் உரம் வாங்க வேண்டுமென்றால், உரத்தை சேகரித்து வைத்திருக்கிற இடத்தில் விதைகள் தருகிறார்கள். விவசாயி அந்த விதையை சும்மாதான் வைத்திருக்கிறான். அந்த விதையைக் கட்டாயம் வாங்க வேண்டுமென்று சொல்கிறார்கள். புஞ்சை நிலமாக இருந்தால் இதைக் கொண்டுபோய்ப் போடலாம். நஞ்சை நிலத்தில் போட முடியாது. ஆகவே, இந்தத் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டும். இதனால் சிறிய விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

என்னுடைய தொகுதியிலே ஆதனூர் என்ற இடத்திலே ஒரு விவசாயப் பண்ணையை அமைத்தார்கள். அதற்காக 70 ஏக்கர் நிலம் ஒதுக்கப் பட்டது. அது சீர்படவில்லை. தற்பொழுது சும்மாதான் அந்த நிலம் இருக்கிறது. அந்த நிலத்தை அங்குள்ள ஏழை அரிசன மக்களுக்கு ஆளுக்கு ஒரு ஏக்கர் என்ற முறையில் பிரித்துக் கொடுத்தால், அவர்கள் பயிரிட்டு, விவசாய உற்பத்தியை அதிகரிக்க ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. நா. சௌந்தரபாண்டியன்:** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் வேளாண்மை மானியம், மீனளம் இவைகளின்பேரில் என்னுடைய கட்சியின் சார்பாகக் கொடுத்திருக்கும் வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஒருசில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

நமது நாட்டைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 75 சதவீத மக்கள் வேளாண்மையில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் இதற்கு ஒதுக்கப்பட்ட தொகை 16 கோடி ரூபாய். இது தமிழக அரசின் மொத்த வருமானத்தில் ஐந்து சதவீதம்தான். இது மிகவும் வருந்தத்தக்கது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். 75 சதவீத விவசாய மக்கள் இருக்கக் கூடிய வேளாண்மைக்கு அரசாங்க வருமானத்திலிருந்து ஐந்து சதவீதம் செலவிடும் இந்தத் துறையானது முன்னேறியிருக்கிறதா, முன்னேற்றத்திற்கு இந்த அரசு உதவியிருக்கிறதா என்று பார்த்தால் இல்லையென்பதைத் தெள்ளத் தெளிவாக இந்த அறிக்கை எடுத்துக் காட்டுகிறது. வேளாண்மைத் துறையில் ஈடுபட்டிருக்கும் விவசாய

மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான திட்டம் எதுவும் அந்த அறிக்கையில் இல்லை, அரசிடமும் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நமது நாட்டைப் பொறுத்தவரையில் விவசாயத்தைப் பெருக்க வேண்டுமானால், சிறுபாசனத் திட்டங்களுக்கு முதலிடம் கொடுக்கவேண்டும். மண்வளப் பாதுகாப்புத் திட்டத்திலே நாட்டம் செலுத்த வேண்டும், மண்வளர்ப்பு திட்டத்தில் காட்டாறு, சிறுசிறு ஓடைகளைத் தடுத்து, சுவர்களைக் கட்டி, தண்ணீரை விவசாயத்திற்குக் கொடுக்க அரசு திட்டம் தீட்ட வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயத்துறையில் பெரும்புரட்சி கண்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். உள்ளே பார்க்கும்போது இந்தப் புள்ளிவிவரங்கள் எல்லாம் இந்தத் துறை அதிகாரிகளால் கொடுக்கப்பட்டனவே தவிர உணவுத் துறையில் தன்னிறைவு ஏற்பட்டிருக்கிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

மிகுபயன்தரக்கூடிய ஐ. ஆர். 8 நெல் அதிக அளவில் பயிர் செய்யப்பட்டிருக்கிறது என்றாலும் அதிக விளைச்சல் தந்திருக்கிறதா, அரசு எதிர்பார்த்த அளவுக்கு உணவு உற்பத்தி பெருகியிருக்கிறதா என்று பார்த்தால் பெருகவில்லை என்றுதான் என்னால் சொல்லமுடியும்.

குறிப்பாக ஐ. ஆர். 8 நெல் வேளாண்மை சம்பந்தமாக அதிகாரிகள் சாகுபடி செய்கிற முறையில் தெளிவான கருத்தைக் கொண்டிருக்கவில்லை.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அவைமுன் வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் கொடுத்துள்ள விவரங்கள் முழுவதையும் படித்துவிட்டுப் பேசுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். நாம் கொண்ட இலக்கையும் தாண்டியிருக்கிறோம் என்பதையே புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

மேலும் இந்தப் புள்ளிவிவரங்களை விவசாய இலாக்கா தயாரிக்கவில்லை. டைரெக்டர் ஆப் ஸ்டாட்டிஸ்டிக்ஸ்தான் தயாரிக்கிறார்கள். ஆகவே, அந்தப் புள்ளிவிவரம் தவறு என்று சொல்வது சரியல்ல.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : ஐ. ஆர். 8 நெல் சாகுபடி நிலத்திற்கு நிலம், காலத்திற்குக் காலம் தண்ணீரின் தன்மைக்கேற்ப மாறுபடக்கூடியதாக இருக்கிறது. தஞ்சை மாவட்டத்திற்குப் பொருத்தமாக இருக்கிறது என்பதால் எல்லா மாவட்டங்களுக்கும் பொருந்தும் என்று சொல்ல முடியாது. சில அதிகாரிகள் அடிக்கடி தண்ணீர் பாயக்கூடாது என்கிறார்கள். சிலர் தண்ணீரிலேயே நிரந்தரமாக இருக்கலாம் என்கிறார்கள். இப்படி அதிகாரிகளிடத்திலேயே தெளிவான கருத்து இல்லை.

விவசாயத்துறையில் நல்ல முன்னேற்றம் காணவேண்டுமென்றால்—சில இடம் கரிசல் மண்ணாக இருக்கும், சில இடம் செம்மண் உள்ளதாக இருக்கும். அந்த அந்த இடத்து மண்ணின் தன்மை, தண்ணீரின் தன்மை, பருவநிலை இவற்றை எல்லாம் ஆராய்ந்து அங்கங்கே என்ன பயிர் வைக்கவேண்டும், அந்தப் பயிருக்கு என்ன உரம் போடவேண்டும் என்பதை எல்லாம் சொல்லி, அவற்றைக் கொடுக்கவும் முன்வந்தால்தான் நன்றாக இருக்கும்.

மேலும் மிகு பயன் தரக்கூடிய ஐ. ஆர். 8 நெல் சாகுபடி செய்பவர்களுக்கு செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் அளிக்கப்படும் உர விலையில் புதுச்சலுகை அளிக்க இருப்பதை அறிக்கையில் காண்கிறோம். இந்த மாவட்டங்களில் பெருவாரியாகச் செய்கிறார்கள் என்றால் மற்ற இடங்களில் உள்ளவர்களும் சிறுசிறு அளவில் செய்கிறார்கள். ஆகவே, எல்லா மாவட்டங்களுக்கும் இந்தச் சலுகை தரப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து, சிறிய நிலக்காரர்களுக்கும், குறைந்த அளவு நிலங்களை உடைய பண்ணைத் தொழிலாளர்களுக்கும் நன்மை கொடுக்கக்கூடிய திட்டத்தை எல்லா மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தவேண்டும். தென்னாற்காட்டிற்கு மட்டும் வைத்துக்கொள்ளக் கூடாது.

மேலும் இந்தத்துறை கொடுக்கும் விதைகள் தரமானவையாக இல்லை. அந்த விதைகளை வழங்குவதிலும் கருத்துவேறுபாடு இருக்கிறது. ஊராட்சி ஒன்றியம் மூலம் வருவது என்றால் காலதாமதம் ஆகிறது. குறிப்பாக என்பகுதியில் வீரிய ஒட்டுச்சோள விதை வேண்டுமென்று விவசாயப் பெருமக்கள் கேட்டார்கள். அது தை மாதத்தில் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படவேண்டும். ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளைக் கேட்டால் இல்லை என்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்கும் கொண்டுபோகப்பட்டது. ஆயினும் விதை கிடைக்கவில்லை. இதனால் வேளாண்மை பாதிக்கப்படுகிறது. விதை விநியோகிப்பதை வேளாண்மைத் துறைதான் வைத்துக்கொள்ளவேண்டும்.

அடுத்து, மீனளத்தைப்பற்றி ஒருசில கருத்துக்களைக்கூற விரும்புகிறேன். நமது மாநிலத்தில் 500 மைல் நீளக் கடற்கரை இருக்கிறது. பெருவாரியான மீனவ மக்கள் அங்கே வசிக்கிறார்கள். அவர்களுக்கு யாதொரு திட்டமும் இல்லாதது வருத்தத்தை அளிக்கிறது. நாட்டுப் படகு, கட்டுமரம் வைத்திருப்பவர்களும் பிழைக்கவேண்டும் என்பதற்காக இயந்திரப்படகுகள் 5 மைல்களுக்குள் மீன் பிடிக்கக்கூடாது என்று ஆணை இருக்கிறது. அதைத் தீவிரமாக அமுல்படுத்த வேண்டும். அப்போதுதான் கட்டுமரம், பாய்மரம் படகுகள் வைத்திருப்பவர்கள் பிழைப்பதற்கும் வழியேற்படும். நார்வே–இண்டோ திட்டத்தை உடனடியாக அமுல்படுத்தவேண்டும். இந்தப் பகுதியில் ரோடுவசதி செய்யவேண்டும். இதன் மூலம் அப்பகுதி மக்களின் முன்னேற்றத்திற்கு உதவும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு .தி. சி. திம்மராய கவுண்டர்: மதிப்பிற்குரிய சட்டமன்ற மாற்றுத் தலைவர் அவர்களே, 1970-71-ஆம் ஆண்டுக்கான விவசாய மானியக் கோரிக்கையை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிப்பொறுப்பை ஏற்றவுடன் 3 ஆண்டுகளுக்குள்ளே விவசாயிகளுக்கு பல நல்ல சாதனைகளை ஏற்படுத்திக் கொடுத்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

மேலும் திருப்பத்தூர் தாலுக்காவில் விவசாயிகளுக்கு இப்போது புதியதாக சர்க்கரை ஆலை ஒன்றை அம்பலூர் கிராமத்தில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதற்காக ஒரு திட்டத்தை அனுமதித்து அந்த வேலையும் இப்போது நடந்துகொண்டிருக்கிறது. அதற்காக எங்கள் தாலுக்கா பொது மக்கள் சார்பில் இந்த அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக உணவுக் கட்டுப்பாட்டை நீக்கிய பிறகு விவசாயிகள் பெரும் அளவு நெல் பயிர் செய்ய முன்வந்திருக்கிறார்கள். கட்டுப்பாடு இருந்தபோது வேறு பயிர்களை வைத்து வந்தவர்கள் கூட கட்டுப்பாடு நீக்கப்பட்ட பிறகு நெல் பயிரிட—ஐ. ஆர். 8 பயிர் வைக்க முன்வந்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 2,500 ஏக்கரா சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய உரங்கள், விதைகள் எல்லாவற்றையும் கிராமத்திலேயே கொண்டுவந்து கொடுத்ததற்கு இந்த அரசை எல்லோரும் பாராட்டுகிறார்கள்.

ஆயினும் எங்கள் நாட்றம்பள்ளி வட்டாரத்தில் மழை இல்லாத காரணத்தினால் பல ஏக்கராக்கள் பயிர் உலர்ந்துகிடக்கின்றன. கிணற்றில் தண்ணீர் வற்றிவிட்டது. போன வருஷ பஞ்சத்தால் ஏற்பட்ட கடன், இந்த ஐ. ஆர். 8-ன் காரணமாக ஏற்பட்ட கடன் இரண்டையும்

[திரு. தி. சி. திம்மராய கவுண்டர்] [1970 மார்ச் 31

இப்போது வசூலிக்க முனைந்திருக்கிறார்கள். அதனால் விவசாயிகளுக்கும் பெரும் கஷ்டமாக இருப்பதால் இதனைத் தள்ளி வைக்க ஆவன செய்யவேண்டுகிறேன்.

எங்கள் பகுதி மிகவும் பின்தங்கிய பிரதேசம், விவசாயச் சங்கங்கள் தங்களுடைய கோரிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் அரசுக்கும் அனுப்பியிருக்கின்றன. அங்கு நாட்றம்பள்ளி பஞ்சாயத்து யூனியன் இருக்கிறது. அதனால் நிலவள வங்கியை ஆரம்பிக்கவில்லை. நூற்றுக் கணக்கான விவசாயிகளுடைய நன்மையைக் கருதி உடனடியாக அந்தப் பகுதியில் நாட்றம்பள்ளியில் நிலவள வங்கியை ஆரம்பித்துத் தரும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

வட ஆர்காடு மாவட்டத்திலே பாலாறு படுகை விதி என்ற விதி ஒன்று இருக்கிறது. பாலாறுக்கும் எங்கள் தொகுதிக்கும் 15, 20 மைல் இருக்கிறது. மத்தியிலே மலைகள், காடுகள் இருக்கின்றன. இந்தப் பாலாறு படுகை விதியை வைத்துக்கொண்டு பம்புசெட்டுகள் சர்வீஸ் வாங்கவேண்டுமென்று போகிற விவசாயிகளுக்குத் தொந்திரவு கொடுக்கிறார்கள். அதற்காக என்றே மூன்று நான்கு மாதங்கள், தாசில்தார் அல்லது ரெவின்யூ இன்ஸ்பெக்டரிடம் பேசி அநேகக் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. அதனால் பாலாறு படுகை விதியை முழுவதுமாக நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே எலக்கலநத்தம் செட்டேரிநீர்த் தேக்கத் திட்டத்திற்கு எஸ்டிமேட் எல்லாம் தயார்செய்து அந்த மாவட்டக் கலெக்டர் அவர்கள் சிபார்சுசெய்து அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் சுமார் பத்தாயிரம் ஏக்கர் அளவுக்குப் பாசன வசதிகள் கிடைக்கவும் திருப்பத்தூர் தாலுகாவிலே உள்ள 14 ஏரிகளும் நிரம்புவதற்கும் வசதியாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

வாணியம்பாடியில் உள்ள புல்லூர் கிராமத்தில் பாலாறு நீர்த் தேக்கம் என்ற திட்டத்திற்காக எஸ்டிமேட் எல்லாம் தயார்செய்து அனுப்பியிருக்கிறார்கள். திருப்பத்தூர் தொகுதியைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர் திரு சி. கே. சின்னராஜி கவுண்டர் அவர்களும், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் எம். பி. வடிவேலு அவர்களும் நானும் இதைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஒரு மனுவைக் கொடுத்திருக்கிறோம். அதைப் பரிசீலனை செய்வதாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய அமைச்சர் அவர்கள் இதைக் கவனித்து உடனடியாகச்செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருப்பத்தூர், வாணியம்பாடி, ஆம்பூர் ஆகிய மூன்று நகரங் களுக்கும் அரசாங்கம் ரூபாய் ஒரு கோடி கடனாகக் கொடுத்திருக் கிறது. பாலாற்றிலிருந்துதான் இந்த மூன்று நகரங்களுக்கும் தண்ணீர் கொண்டுவரவேண்டும். ஏற்கனவே ஜோலார்பேட்டை ரயில்வே ஸ்டேஷனுக்கு பாலாற்றிலிருந்துதான் தண்ணீர் கொண்டுவருகிறார்கள். புல்லூர் கிராமத்திலே ஒரு நீர்த்தேக்கம் கட்டாவிட்டால் ஒரு கோடி ரூபாயும் பயனற்றதாகிவிடும்.

வட ஆர்காடு மாவட்டத்திலே டிராக்டர்கள், ஜீப்கள் இவற்றை சர்வீஸ் செய்வதற்காக ஒரு டிவிஷனை ஏற்படுத்த இருக்கிறதாகத் தெரிகிறது. அந்த சர்வீஸ் ஸ்டேஷனை அமைக்க பின்தங்கிய தாலுகாவாக உள்ள திருப்பத்தூரில் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்ததற்காக தலைவரவர்களுக்கு நன்றியைக்கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.



1970 மார்ச் 31]

திரு. கே. சகாதேவக் கவுண்டர்: மதிப்பிற்குரிய பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, என் கட்சிக்காரர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஒருசில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாகத் தமிழ்நாடு வேளாண்மையைப் பொறுத்தவரையிலும் நல்லபல முன்னேற்றங்கள் கண்டிருக்கிறது. இருப்பினும் விவசாய மக்கள் படும் கஷ்ட நஷ்டங்களைப் பார்க்கின்றபொழுது வேதனையளிக்கக் கூடியதாக இருக்கிறது. பம்புசெட்டுக்காகக் கடன் வாங்கவேண்டுமானால் அதிலே நாலில் ஒரு பங்கைத் தானமாகவோ அன்பளிப்பாகவோ அல்லது தாகாகவோ அல்லது லஞ்சமாகவோ கொடுக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. குறிப்பாக நிலத்தையே அடகு வைத்து கடன் வாங்குகிறான் விவசாயி. நிலத்தையே கடனுக்காக அடகுவைக்கக்கூடிய அவனிடத்தில் செக்கைக் கொடுக்காமல் அவனை நம்பாமல் இந்தச் சர்க்கார் இடையிலே உள்ள தரகரின் மூலமாகக் கொடுக்கிறார்கள். அவனுக்குக் கொடுக்க வேண்டிய செக்கை அவனிடமே கொடுத்து 30 தினங்களுக்குள் பம்புசெட் வாங்கவேண்டும், இல்லாவிட்டால் நிலத்தைப் பறிமுதல் செய்வோம் என்று சொல்லவேண்டும், அப்படிச் செய்தால் பம்புசெட் வாங்குவதிலே அவனுக்கு 300 ரூபாய் 400 ரூபாய் லாபம் கிடைக்கிறது. அப்படிச் செய்யாமல் இருப்பதால் எல்லாவற்றையும் அவனுடைய தலையிலேயே கட்டிவிடக்கூடிய நிலைமைதான் வருகிறது. இந்த நிலைமையை உடனடியாக மாற்றவேண்டும்.

வேளாண்மை அபிவிருத்திக்காக உரக் கடன்கள் சர்க்கார் வழங்கு கிறது. அப்படிக் கடன் வழங்கப்படுவதிலே கூட பாரபட்சம் காட்டப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உதாரணமாக இந்த ஆண்டிலே விவசாய அதிகாரிகள், கிராம சேவக்குகள் கிராமங்கள் தோறும் சென்று ஐ. ஆர். 8 பயிர் செய்யவேண்டுமென்று சொல்லி உரத்திற்காக மனுக்களை வாங்குகிறார்கள். அவர்கள் சேகரித்த மனுக்களுக்கு உரம் கொடுக்காமல் விவசாயிகள் அவர்களை நம்பிப் பயிர்செய்து உரம் கிடைக்காத காரணத்தினால் பயிர் அழியக்கூடிய நிலைமை இருக்கிறது. சர்க்காரே விரும்பிக் கடன் மனுக்களை வாங்கும்பொழுது மனுக்களுக்காக உரங்களை ஒதுக்கிவைக்கவேண்டும். அப்படியில்லையென்றால் மனுக்களை வாங்கவேண்டிய அவசியமில்லை. இதன்காரணமாக விவசாயிகள் பல கஷ்டங்கள் அடைந்துள்ளார்கள். என்னுடைய தொகுதியிலே டிசம்பர் மாதத்திலே மனுப்போட்டவர்களுக்கு உரம் வழங்கப்படவில்லை, ஆனால் ஜனவரி மாதத்திலே போட்டவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது, ஏன் இந்தப் பாரபட்சம் காட்டப்படுகிறது?

வேளாண்மை நல்ல முன்னேற்றம் அடையவேண்டுமானால் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை அதிகமாக மேற்கொள்ளவேண்டும். தமிழ் நாட்டிலே ஆயிரக்கணக்கான பழைய காலத்திலே உடைந்துபோன ஏரிகள் இருக்கின்றன, ரிக்கார்டுகளில் விவரங்கள் இருக்கின்றன, அவற்றையெல்லாம் பார்த்து சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை அதிகமாகப் போடவேண்டும்.

விவசாயிகள் சர்க்காரிடமிருந்து பெறக்கூடிய கடன்களை வாங்குவதிலே அதிகமான சிரமங்கள் ஏற்படுகின்றன. எனவே இதற்காக புதிய திட்டம் மேற்கொள்ளப்படுமா என்று கேட்க விரும்புகிறேன். கடன்கள் வழங்கு வதற்காக அவர்களுக்கு இருக்கிற சொத்துக்களைப் பதிவுசெய்து, பாஸ்புக் கொடுக்கவேண்டும். சொத்துக்களின் விவரங்கள், வில்லங்கங்கள் பற்றிய விவரங்கள், இதர சொத்துக்கள் இவற்றைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டு ஒரு பாஸ் புக் கொடுத்துவிடவேண்டும். அதை எடுத்துக் கொண்டு அவர்கள் எங்கே சென்றாலும் பாங்குகள் மூலமாக அல்லது நிலவள வங்கிகள் மூலமாக அல்லது வேறு வழிகள் மூலமாகக் கடன்கள் பெற முடியும். இந்தப் புதிய திட்டத்தைச் செய்தால் விவசாயிகளுக்குக் கஷ்டநஷ்டங்கள் இருக்காது. 1967-இல் வேளாண்மை செய்வதற்காக நில வள வங்கிகள் கடன் வழங்கும் என்று சொன்னதின்பேரில்

பம்புசெட் கடனுக்காக அநேகர் மனுக்கள் போட்டார்கள். ஆனால் அவையெல்லாம் இன்றைக்கு வாபஸ் பெறப்படுகின்றன. மூன்று வருடங்கள் கழித்து திடீரென்று வாபஸ்செய்தால் பாங்குகளிலோ அல்லது கூட்டுறவு சொஸைடிகளிலோ வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொன்னால் இதுதானா நியாயம்? ஒரு விவசாயி கடனுக்காக மனுப் போட்டால் குறைந்தது மூன்று மாதங்களுக்குள்ளாக கடன் வழங்கப் படும் என்றோ அல்லது நிராகரிக்கப்பட்டது என்றோ தெரியப்படுத்தி விட்டால் விவசாயி மேலும் நடந்து அலைய வேண்டியதில்லை. இப்படிப் பட்ட கஷ்டங்களைப் போக்குவதற்காக புதிய திட்டத்தைக் கொண்டு வரவேண்டும்.

விவசாயத் துறையிலே நல்ல முறையிலே முன்னேற்றம் காண திட்டங்கள் போடுகின்ற நேரத்திலே விவசாய மின்சாரக் கட்டணத்தை உயர்த்தியிருப்பது வேதனைக்குரியதாக இருக்கிறது. ஒரு பக்கம் சர்க்காருக்கு நஷ்டம் ஏற்பட்டாலும் வேளாண்மைத் துறையின் அபிவிருத்தியை மனதில்கொண்டு உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறவேண்டு மென்றும், மற்ற நாடுகளைவிட நம்முடைய நாடு அதிகமாக உற்பத்தி செய்யவேண்டுமென்றும் நாம் பாடுபட்டுக்கொண்டு வருகிற நேரத்தில் சர்க்காருக்கு நஷ்டம் ஏற்பட்டாலும் மீண்டும் அந்த உயர்வை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஐ. ஆர். 8 நெல் அதிக வேகமாகப் பரவிவருகிறது. விவசாயிகளுக்கு லாபம் வருகிறது. அடிக்கடி மருந்து தெளிக்கவேண்டிய நிலைமையைப் பார்த்து பூச்சிமருந்துக்குக் கொடுக்கப்பட்ட மானியத்தை ரத்து செய்திருப் பதைப் பார்த்தால் வேதனைக்குரியதாக இருக்கிறது, உடனே அதைக் கொடுப்பதற்குப் புனர் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மின்சாரக் கட்டணத்தை விவசாயிகளுக்கு உயர்த்தியிருப்பதை நீக்க வேண்டுமென்ற கோரிக்கையை எப்ரல் 30-ம் தேதிக்குள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் அதற்காக சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் :** (திரு. ந. தருமலிங்கம்) இத்துடன் பேரவை ஒத்திவைக்கப்பட்டு, மீண்டும் நாளை காலை 9 மணியளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

### 9. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

@ 184. Notification issued with G.O. No. 2576, Revenue, dated the 1st November 1969 in regard to an amendment to the Revenue Department Notification III No. 84 of 1963, dated the 14th December 1962, published at page 188 of Part III of the *Fort St. George Gazette*, dated the 23rd January 1963. [Laid on the Table of the House under Section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

*B. Reports, Notifications and other papers.*

@ 116. Notification issued with G.O. Ps. No. 2803, Revenue, dated the 24th November 1969 in regard to an amendment to the Central Sales Tax (Madras) Rules, 1957 published at pages 1 to 10 of Part I of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 28th February 1957 as subsequently amended.

@ Laid on the Table of the House on 30th March 1970.





† 117. Speech by Hon. Thiru V. R. Nedunchezhiyan, Minister for Education and Health while moving the Demand No. 38—Capital Outlay on Public Health. (English and Tamil).

† 118. Speech by Hon. Thiru V. R. Nedunchezhiyan, Minister for Education and Health, on Demand No. 15—Public Health, 1970–71 (English and Tamil).

§ 119. Report on Urban Water-Supply and Drainage Schemes. (English and Tamil).

§ 120. Policy note on Demand No. 17—Fisheries (Tamil).

§ 121. Speech by Hon. Thiru V. R. Nedunchezhiyan, Minister for Education and Health, on Demand No. 14—Medical 1970–71. (English and Tamil).

§ 122. Report of the Committee on Estimates on Tamil Nadu State Electricity Board (Eighteenth Report).

† Laid on the Table of the House on 28th March 1970.

§ Despatched to Members on 29th March 1970.

## இணைப்பு I.

[......463-ம் பக்கத்தில் 617-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

*A*.—

(*a*) Yes.

(*b*) The Instructional Staff Association of the Tamil Nadu Industrial Training Institute has made representations in respect of the following matters :—

1. Retrenchment likely to be caused due to the proposed redesignation of Instructional Staff.

2. (*a*) Late regularisation and late declaration of probation of staff and consequential anomalies.

(*b*) Need for giving higher start of Rs. 150 per mensem from the date of regularisation to Craft Instructors whose services have been regularised with retrospective effect.

3. Lack of scope for promotion for the certificate-holders compared to diploma-holders.

4. Need for making appointment to the post of Vice-Principal by promotion from the ranks of non-Gazetted technical staff of the Training Wing.

5. Disparity in pay-scales of the instructional staff of this Government and Central and other State Government.

6. Need for adopting a uniform policy in giving extension of service after 55 years to Gazetted Officers and non-Gazetted Officers in the technical side.

7. Need to give fair treatment to Instructional staff of Industrial Training Centre attached to Stree Seva Mandir.

(*c*) & (*d*) These demands were already under consideration of the Government. The present position in respect of these demands is as follows :—

1. It is proposed to drop the proposal for redesignation of Instructional staff.

2. (*a*) The delay in regularisation of Supervisory Instructors is due to the fact that qualification rule has to be relaxed in their favour to regularise their services. Orders have since been issued relaxing the qualification rule in favour of the Supervisory Instructors and regularising their services with retrospective effect.

(*b*) Orders have since been issued granting higher initial pay to all qualified Craft Instructors including Drawing Instructors and Allied Trade Instructors. The question of granting higher initial pay to qualified Mathematics Instructors has been referred to the Pay Commission.



3. It is considered that the certificate-holders and diploma-holders cannot be treated on an equal footing and that there is no case for revising the present rules to give more scope for promotion to certificate-holders who can now go up to the posts in the scale of pay of Rs. 175–10–225–15–375.

4. The Government have examined this suggestion and have decided that a non-technical person who knows about the office administration will be better suited to hold the post of Personal Assistant to Principal than a technical person.

5. The existing scales of pay of the posts of Instructors in the Department of Employment and Training were compared with those prevailing in other States and it was considered not necessary to revise the scales of pay of the Instructors. However, the revision of scales of pay of Instructors in Industrial Training Institutes is under consideration of the Pay Commission.

6. The Government have issued orders fixing the age of supperannuation of Gazetted and non-gagzetted Officers of the technical side of the Department of Employment and Training at 55 years.

7. The working of this Institution is being examined by the Government.

விடை—

(அ) ஆம்.

(இ) தமிழ்நாட்டுத் தொழிற் பயிற்சி நிறுவனத்தின் ஆசிரியப் பணியாளர் சங்கம் கீழ்க்காணும் பொருள்கள் குறித்து முறையீடுகள் செய்துள்ளது:—

(1) ஆசிரியப் பணியாளர்களின் பதவிப் பெயர்கள் குறித்து செய்யக் கருதியுள்ள மாற்றத்தால் ஆட்குறைப்பு ஏற்படக்கூடும் என்ற நிலைமை.

(2) (அ) பணி முறைப்படுத்தலைக் காலந்தாழ்த்திச் செய்வதும் தகுதிக்காண் பருவம் முடிந்திருப்பதாகக் காலந்தாழ்த்தி அறிவித்தலும் அவற்றால் ஏற்படும் முரண்பாடுகளும்.

(இ) பணி முறைப்படுத்தப்பட்ட கைவினை ஆசிரியர்களுக்கு முறைப் படுத்தப்பட்ட நாளிலிருந்து திங்கள் ஒன்றுக்கு ரூ. 150 உயர் அளவு தொடக்கச் சம்பள விகிதம் கொடுக்கப்படுவது அவசியமாகும்.

(3) தகுதிப்பட்டயம் (டிப்ளமா) பெற்றுள்ள ஆசிரியர்களுடன் ஒப்பிடுகையில், சான்றிதழ் பெற்றுள்ள ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு பெற வாய்ப்பேதும் இல்லை.

(4) பயிற்சிப் பிரிவைச் சேர்ந்த அரசிதழ்ப் பதிவு பெறாத தொழில் நுட்பப் பணியாளர்களின் தரத்திலிருந்து பதவி உயர்வு மூலம் துணை முதல்வர் பதவி நிரப்பப்பட வேண்டியது அவசியமானதாகும்.

(5) இம் மாநில அரசு, மத்திய அரசு, ஏனைய மாநில அரசுகளின் நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர் பணியாளர்களின் சம்பள வீதங்களில் வேறுபாடுகள்.

(6) தொழில் நுட்பப் பிரிவில் அரசிதழ் பதிவு பெற்ற, பதிவு பெறாத அதிகாரிகளுக்கு 55 வயதுக்கு மேல் பணி நீட்டிப்பு அளிப்பதற்கு ஒரே மாதிரியான முறையைப் பின்பற்ற வேண்டும்.

(7) மகளிர் சேவா மந்திருடன் (Stree Sava Mandir) இணைக்கப்பட்டுள்ள தொழிற்பயிற்சிப் பள்ளியின் ஆசிரியப் பணியாளர்களை நல்ல முறையில் நடத்தவேண்டும்.

(உ) & (எ) இந்தக் கோரிக்கைகள் முன்பே அரசின் பரிசீலனையிலுள்ளன. இந்தக் கோரிக்கைகளின் தற்பொழுதைய நிலை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

(1) ஆசிரியப் பணியாளர்களின் பதவிப் பெயர்களில் மாற்றம் செய்யும் செயற்குறிப்பைக் கைவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

(2) (அ) மேற்பார்வை ஆசிரியர்களின் பணி முறைப்படுத்தலில் காலதாமதம் ஏற்பட்டதற்கு, தகுதி விதியை அவர்களுக்குச் சாதகமாகத் தளர்த்த வேண்டியிருந்ததே காரணமாகும். எனவே மேற்பார்வை ஆசிரியர்களுக்குச் சாதகமாக தகுதி விதியைத் தளர்த்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, கடந்த காலம் உட்பட செயலிலிருக்கும் வகையில் அவர்களின் பணி முறைப்படுத்தப்பட்டது.

(இ) தகுதிவாய்ந்த எல்லா கைவினை ஆசிரியர்கள், ஓவிய ஆசிரியர்கள், வணிகம் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் இவர்களுக்கு உயர் அளவு தொடக்கச் சம்பளம் கொடுக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. தகுதிவாய்ந்த கணித ஆசிரியர்களுக்கு உயரளவு தொடக்கச் சம்பளம் கொடுப்பது பற்றி ஆலோசனை கூறுமாறு சம்பள ஆணைக் குழுவிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

(3) சான்றிதழ் ஆசிரியர்களையும் தகுதிப்பட்டயம் பெற்ற (டிப்ளமா) ஆசிரியர்களையும் ஒரே அடிப்படையில் நடத்த முடியாதெனக் கருதப்படுகிறது. தற்பொழுது ரூ. 175—10—225—15—375 சம்பள வீதம் வரை செல்லக்கூடிய சான்றிதழ் ஆசிரியர்களின் பதவி உயர்வுக்கு மேலும் வகை செய்யும் விதத்தில் தற்பொழுதுள்ள விதிகளைத் திருத்தியமைப்பது அவசியமில்லை.

(4) இதுபற்றி அரசு ஆய்வு செய்தது. அலுவலக நிர்வாகம் பற்றித் தெரிந்த தொழில் நுட்பக் கல்வி பெறாதவர்களே தொழில் நுட்பக் கல்வி பெற்றவர்களைக் காட்டிலும், கல்லூரி முதல்வருக்கு நேர்முக உதவியாளர் பதவியை வகிக்கத் தகுதியானவர்கள் என்று முடிவு செய்யப்பட்டது.

(5) வேலைவாய்ப்பு-பயிற்சித் துறையில் பணிபுரியும் ஆசிரியர்களின் தற்பொழுதைய சம்பள வீதங்கள் ஏனைய மாநிலங்களிலுள்ள ஆசிரியர்கள் குறித்து நடைமுறையிலுள்ள சம்பள வீதங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டன. ஆசிரியர்களின் சம்பள வீதங்களை மாற்றியமைக்க வேண்டியது அவசியமில்லையென முடிவு செய்யப்பட்டது. எனினும் தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் பணிபுரியும் ஆசிரியர்களின் சம்பள வீதங்களை மாற்றியமைப்பது சம்பள ஆணைக் குழுவின் பரிசீலனையிலுள்ளது.

(6) வேலை வாய்ப்பு—பயிற்சித் துறையின் தொழில் நுட்பப் பிரிவில் பணிபுரியும் அரசிதழ் பதிவு பெற்ற, அரசிதழ் பதிவு பெறாத அதிகாரிகளின் ஓய்வு வயதை 55 ஆண்டுகளாக வரையறுத்து அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

(7) இந்த நிறுவனம் செயல்படும் முறை அரசால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.



# இணைப்பு II.

[ 482-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

(கோரிக்கை எண் 16-வேளாண்மை-கொள்கை விளக்கக் குறிப்பு.)

## முன்னுரை.

1969-70-ம் ஆண்டில் அரசால் நிறைவேற்றப்பட்ட முக்கியமான வேளாண்மைப் பணித்திட்டங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் பற்றிப் பின்வரும் பத்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1970-71-ல் எடுத்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள புதிய திட்டங்கள்பற்றிய முக்கியக்கூறுகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு, காலஞ்சென்ற திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் வேளாண்மைத் துறைக் கோரிக்கைகளை அவையின் முன் வைத்தார். தமது நைந்த உடல் நிலையையும் பொருட்படுத்தாது இந்த மானியக் கோரிக்கைகளை அவையின் முன் வைக்க அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளை மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவு கூர்வர் என்று நம்புகிறேன்.

திரு. கோவிந்தசாமி அவர்கள் இன்று நம்மிடையே இல்லாதது நம் அனைவருக்கும் ஆழ்ந்த வருத்தத்தைத் தருவதாகும்.

## கால நிலைமைகள்.

அடுத்தடுத்து இரண்டு ஆண்டுகளாக நமது மாநிலம் தொடர்ந்து கடும் வறட்சியால் பீடிக்கப்பெற்றது. நமது மாநிலத்தில் இயல்பான மழையளவு 926 மி.மீட்டர் என்றிருக்க, 1968-ல் 742 மி.மீட்டர் மழையே பெய்தது. எனவே, பெருமளவு பகுதிகளில் பயிர் செய்யப்படவில்லை. பயிர் செய்ய எடுத்துக்கொண்ட பல இடங்களில் கூட, பயிர்கள் சாவியாகி விட்டன. 1969-70-லும் தென் மேற்குப் பருவ மழை போதுமானதாக இல்லை. 1969-70-ல் இயல்பான மழையளவு 307 மி.மீட்டராக இருக்க, 1969-70-ல் பெய்த மழையின் மொத்த அளவு 237 மி.மீட்டர்தான். எனவே, ஓரளவு அவ நம்பிக்கையுடன்தான் அரசு, வேளாண்மைத் துறையில் இந்த ஆண்டுக்கான தனது வேளாண்மைத் திட்டங்களைச் செயல்படுத்தத் தொடங்கியது. எனினும் மேற்குக் கடற்கரையில் தென்மேற்கு பருவ மழை ஓரளவு நன்றாகப் பெய்த காரணத்தால், மேட்டூர், பரம்பிக்குளம்-ஆழியாறு போன்ற மாநிலப் பெரும் பாசனத்திட்டங்களிலிருந்து நீர் திறந்துவிடுவதற்குச் சிறிது தாமதம் ஏற்பட்ட போதிலும், அவை வெகுவாகப் பாதிக்கப்படவில்லை. வட கிழக்குப் பருவ மழை அதிர்ஷ்டவசமாக, அக்டோபர் திங்களிலேயே ஆரம்பித்து விட்டது. விரும்பத்தக்க அளவு இடைவெளி விட்டு இரண்டு முறை மழை பெய்தது. பல மாவட்டங்களிலும் சராசரிக்கு மேலான மழையும், கடற்கரைப் பகுதி மாவட்டங்களில் இதற்கு ஒப்பிடுகையில் அதிக அளவு மழையும் பெய்துள்ளது. வட கிழக்குப் பருவ மழையின்போது இயல்பான மழையளவு 449·7 மி.மீட்டராக இருக்க, பெய்த மழையின் மொத்த அளவு 610·7 மி.மீட்டராக இருந்தது.

## உற்பத்தியின் அளவு.

1969-70-ம் ஆண்டில் எல்லா உணவு தானிய உற்பத்தியின் அளவு 63 லட்சம் டன்களாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இது 1968-69-ம் ஆண்டுடன் முடிவடைந்த மூன்று ஆண்டுகளில் சராசரி உற்பத்தி அளவான 54·45 லட்சம் டன்னையும் 1968-69-ம் ஆண்டு உற்பத்தியான 53·53 லட்சம் டன்னையும் விட கணிசமான அளவிற்கு உயர்ந்துள்ளது.

பிற உணவு தானியங்களைக் காட்டிலும், 1969–70-ல் நெல் உற்பத்தி மிகவும் அதிகரித்துள்ளது. அரிசியைப் பொறுத்தவரையில் 1968–69-ம் ஆண்டுடன் முடிவடைந்த மூன்று ஆண்டுகளில் சராசரி உற்பத்தி 38·75 லட்சம் டன்னுகவும், 1968–69-ல் உற்பத்தியின் அளவு 36·59 லட்சம் டன்களாகவும் இருக்க, 1969–70-ல் உற்பத்தி 45·32 லட்சம் டன்னுக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சாதனைகள் ஊக்கமளித்ததால், 1970–71-ற்கான திட்டக் குறிக்கோள் அளவுகள் கீழ்க்கண்டவாறு துறையால் வரையறுக்கப்படுள்ளன:—

(டன் லட்சத்தில்.)

| | |
|---|---|
| அரிசி .. .. .. .. .. .. | 49·00 |
| ஏனைய தானியங்களும், சிறு தானியங்களும் .. .. | 16·50 |
| பருப்பு வகைகள் .. .. .. .. .. | 1·50 |
| மொத்தம்.. | 67·00 |

மிகு பயன் தரும் தானிய ரகங்கள்.

1969–70-ம் ஆண்டின் பிந்திய அரை ஆண்டில் பருவ மழை சாதகமாக இருந்ததனுல் மட்டுமல்லாமல், மிகு பயன் தரும் தானிய ரகத் திட்டத்தின் கீழ் வேளாண்மைத் துறை எடுத்துக் கொண்ட மும்முர விரிவாக்க முயற்சிகளாலும் மேற்படி ஆண்டில், வேளாண்மை உற்பத்தியில் முன்னேற்றங்காண முடிந்தது. 1966–67-ல் சிறு அளவான 5·27 லட்சம் எக்கர் என்பதிலிருந்து தொடங்கி (4.75 லட்சம் எக்கர்களில் நெல்லும், 0·52 லட்சம் எக்கர் நிலத்தில் சிறு தானியங்களும்), 1968–69-ஆம் ஆண்டில் 17-10 லட்சம் எக்கர் நிலம் (15·69 லட்சம் எக்கரில் நெல்லும், 1·41 லட்சம் எக்கர் நிலத்தில சிறு தானியங்களும்) இத்திட்டத்தின்கீழ் பயிரிடபபட்டது. 1969–70-ம் ஆண்டுக்கான ஆர்வம் மிக்க குறிக்கோள் அளவு 24·75 லட்சம் எக்கர் நிலமாக (23 லட்சம் எக்கர் நிலத்தில் நெல்லும், 1·75 லட்சம் எக்கர் நிலத்தில் சிறு தானியங்களும்) வரையறுக்கப்பட்டது. இந்தக் குறிக்கோள் அளவு முழுவதையும் எய்தியதோடல்லாமல் அது விஞ்சப்பட்டும் விட்டது என்பது மன நிறைவு அளிக்கிறது. 1969–70-ம் ஆண்டில் (28—2—1970 அன்றுள்ளபடி) இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்ட நிலத்தின் பரப்பளவு 27·11 லட்சம் எக்கராகும். முந்திய ஆண்டின் பரப்பளவைக் காட்டிலும் 59 சதவீதம் அதிகரித்துள்ளது.

நெல்லைப் பொறுத்தவரையில் 1969–70-ம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் கிடைத்த மகத்தான பலன்களினுல் உந்தப்பட்டு, 1970–71-ம் ஆண்டில் 37·5 லட்சம் எக்கர் நிலத்தில் (மாநிலத்தில் நெல் பயிரிடும் மொத்தப் பரப்பளவில் பாதிக்கு மேல்) மிகு பயன் தரும் நெல் ரகத்தைப் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்காலிக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின்படி, மிகுபயன்தரும் நெல் ரகங்களைப் பயிரிடுவதற்காக திட்டமிடப்பட்ட பரப்பளவு 1970–71-ம் ஆண்டில் 26 லட்சம் எக்கரும், 1973–74-ல் 33·50 லட்சம் எக்கரும் தான் என்பதை நினைவு கூறும்போது இந்த முயற்சி எவ்வளவு மகத்தானது என்பது புலனுகும். 1970–71-ம் ஆண்டில் 2.50 லட்சம் எக்கர் நிலத்தில் சிறு தானியங்கள் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இது நான்காவது திட்டத்தில் 1973–74-ம் ஆண்டுக்கான குறிக்கோள் அளவாகும். 1970–71-ம் ஆண்டில் தமிழ் நாட்டில் தொடர்ந்து வான் வளம் சுரக்குமென்றும், இந்தக் குறிக்கோள் அளவுகளை எய்துவதற்கு உழவர்கள் தொடர்ந்து தங்கள் முழு ஒத்துழைப்பையும் நல்குவர் என்றும் எதிர்பார்க்கிறேம்.



1969–70-ம் ஆண்டில் மிகு பயன்தரும் தானியங்கள் திட்டத்தின்கீழ் துறை மேற்கொண்டுள்ள நவரைப்பருவம் குறித்த விரைவுத் திட்டத்தை இங்கே சிறப்பாகக் குறிப்பிடலாம். நவரை, சுவர்ணவாரி பருவக்காலங்களில் மிகு பயன்தரும் நெல் ரகத்தைக் குறிப்பாக, ஐ. ஆர். 8-ஐ பயிர் செய்வதற்காக நவம்பர் கடைசியில் இந்த விரைவுத்திட்டம் கொண்டுவரப்பட்டது. ஜனவரி இறுதியில் ஆளுநர் அவர்கள் இப் பேரவையில் ஆற்றிய உரையில் இத்திட்டத்தின் கீழ், மாநிலத்தின் பல பகுதிகளில் இந்தப் புதுவகை ஐ. ஆர். 8 நெல் பயிர் செய்யப்படுமென்றும், இந்த நெல் ரகத்தைப் பயிரிடப்படுவது விரிவாகப் பரவும் என்றும் அரசு எதிர்பார்க்கிறது எனவும் குறிப்பிட்டார்; எதிர்பார்த்ததற்குமேல் பலன் கிட்டியுள்ளது. செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய மூன்று மாவட்டங்களிலும் இந்த ஐ. ஆர் 8 நெல்லை பயிர் செய்வதற்கு முடிவு செய்யப்பட்ட 3·5 லட்சம் எக்கர் குறிக்கோளளவுக்கு எதிராக, 7—3—1970 அன்று வரை 5.26 லட்சம் எக்கரில் இந்த நெல் வகை பயிரிடப்பட்டது. இதற்குக் கூடுதலாக, மற்ற மாவட்டங்களிலும் 1970 ஜனவரி வரை, 1·69 லட்சம் எக்கர் நிலத்தில் இந்த ஐ. ஆர். 8 நெல்லை பயிர் செய்யப்பட்டது மிகுபயன்தரும் பிற நெல்வகைகளான ADT. 27, C.O 29, ஐ.ஆர். 5 ஆகிய நெல் வகைகள் இம் மாநிலத்தில் 2·05 லட்சம் எக்கர் நிலத்தில் இப் பருவத்தின் போது பயிர் செய்யப்பட்டன. ஐ. ஆர். 8 விளைச்சல் வளமிக்க நெல் வகையாகும். மிகக்குறைத்து மதிப்பிட்டாலும், இம்மாநிலத்தில் ஏனைய மிகு பயன்தரும் நெல் ரகங்களைக் காட்டிலும் இந்த ரக நெல் மூலம் கிடைக்கும் கூடுதலான விளைச்சல் எக்கர் ஒன்றுக்கு அரிசி அளவில் 500 கிலோ கிராமாகும். எனவே, நவரை பருவத்தின் போது 6.95 லட்சம் எக்கரில் ஐ.ஆர். 8 பயிரிடுவதன் மூலம் நடப்பாண்டில் தோராயமாக 3·47 லட்சம் டன் கூடுதலாக அரிசி உற்பத்திக் கிட்டுமென எதிர்பார்க்கலாம்.

செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய மூன்று மாவட்டங்களில் ஐ.ஆர். 8 நெல் ரகத்தைப் பயிரிடும் உழவர்களுக்குத் தொகுப்பு உரவிலையில் பொதுச் சலுகை அளிப்பதற்குக் கூடுதலாக இது பற்றி பிரிதோர் இடத்தில் கூறப்பட்டுள்ளது—வேறு சில சலுகைகளையும் அரசு வழங்குகின்றது. மதுரை, திருநெல்வேலி போன்ற தென் மாவட்டங்களிலிருந்து பெறப்படும் விதைகளை எடுத்துச் செல்வதற்கான செலவை அரசு ஏற்கிறது. மேலும், பயிர் விளைச்சலுக்குத் தேவையான பிறவற்றை வாங்குவோரின் வீட்டுக்குக் கொண்டு சேர்ப்பிக்கும் செலவில் ஒரு பகுதியையும் அரசு ஏற்கிறது. கடன் வசதிகளைப் பொறுத்த வரையில், இந்தத் திட்டத்தில் பங்கு கொள்ளும் உழவர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கென இம்மாநிலத்தின் மும்முர எருவிடும் திட்ட ஒதுக்கீடாகிய ரூ. 3 கோடி என்பது ரூ. 6·26 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இத் திட்டத்தில் பங்குகொள்ளும் உழவர்களுக்கு உற்பத்திக் கடன் வழங்குமாறு கூட்டுறவுச் சங்கங்களும் ஒரு சில வாணிப வங்கிகளும் தூண்டப்பட்டன.

பல் பயிர் முறைத்திட்டம்.

மிகு பயன்தரும் தானியங்கள் திட்டத்திற்கு அடுத்தபடியாக, முக்கியத்துவம் வாய்ந்தது பல் பயிர் முறைத் திட்டமாகும். வழக்கமாகப் பயிரிடப்படும் பயிர்களுக்குப் பதிலாகக் குறுகியகாலப் பயிர்களைப் பயிரிடும் முறையைப் புகுத்துவதும் நிரந்தரமான நீர்ப்பாசன வசதிகள் உள்ள பகுதிகளில் ஒரு போக விளைச்சலை இருபோக விளைச்சலாக்குவதும், இருபோக விளைச்சல் உள்ள பகுதிகளில் முப்போக விளைச்சலை ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். 1969–70-ஆம் ஆண்டில் தென் மேற்குப் பருவமழை தவறிய காரணத்தால் இந்த திட்டம் பாதிக்கப்பட்டது. இதனுல் பல பகுதிகளில் முதல் போகம் பயிரிட முடியாமல் போனது. ஆகையால், இத்திட்டத்தின் கீழ் முடிவு செய்யப்பட்ட ஆண்டுவாரியான குறிக்கோள் அளவுகளும் கிட்டிய சாதனைகளும் 1969, அக்டோபரில் சிறப்பாக ஆய்வு செய்யப்பட்டன. குறிக்கோள் அளவுகள் மாற்றி முடிவு செய்யப்பட்டன. அவற்றை அடைவதற்குச் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பருப்பு வகையை இத்திட்டத்தின் கீழ்

சேர்த்துக் கொண்டது மட்டுமல்லாமல் எள், ரொக்கப்பயிர்கள் இவற்றையும் இத்திட்டத்தில் சேர்த்துக் கொண்டது மற்றொரு முக்கிய மாறுதல் ஆகும். 1967–68-ம் ஆண்டில் 2.15 லட்சம் எக்கராவும், 1968–69-ம் ஆண்டில் 5·53 லட்சம் எக்கர்களாகவும் சாதனைக் கிட்டியிருக்கையில் 1969–70-ம் ஆண்டில், 1970, ஜனவரித் திங்கள் வரை 5.23 லட்சம் எக்கர் பரப்பளவு இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. 1970–71-ம் ஆண்டுக்கான குறிக்கோள் அளவு 12 லட்சம் எக்கர்களாகும்.

### மாவட்ட மும்முர வேளாண்மைத் திட்டமும் பகுதி மும்முர வேளாண்மைத் திட்டமும், இந்திய—ஜெர்மனி, நீலகிரி மேம்பாட்டுப் பணித்திட்டமும்.

மாவட்ட மும்முர வேளாண்மைத் திட்டம் செயல்படுத்தப்பட்டுவரும் தஞ்சாவூர் மாவட்டம் நாட்டில் புதிய கண்டுபிடிப்புக்களைச் செய்துவரும் ஐந்து மாவட்டங்களில் தஞ்சை மாவட்டமும் ஒன்றாகும். உணவு தானிய உற்பத்தியில் தொடர்ந்து முன்னேற்றத்தைக் காட்டி வருகிறது. இருபோகப் பயிர் முறை செயலுக்கு வருவதற்குமுன்பு 1966–67-ல் மொத்தம் பயிர் செய்யப்பட்டு வந்த பரப்பளவு 14.70 லட்சம் எக்கர்களாக இருந்தது. இந்த அளவு 1969–70-ல் 16·65 லட்சம் எக்கர்களாக உயர்ந்தது. இந்த மாவட்டத்தில் மொத்த அரிசி உற்பத்தி 1966–67-ல் 8·72 லட்சம் டன்களிலிருந்து 1969–70-ல் 12·044 லட்சம் டன்களாக உயர்ந்தது. இந்த உற்பத்தி அதிகரிப்புக்கு முக்கிய காரணம் ADT. 27, IR. 8, IR. 5 ஆகிய நெல் ரகங்களைப் பயிர் செய்ததேயாகும். 1969–70-ஆம் ஆண்டில் குறுவைப் பயிர் நல்ல விளைச்சலைத் தந்தது. கயவாய்ப் பகுதி முழுவதிலும் எக்கர் ஒன்றுக்கு 100 கிலோ வீதம் உற்பத்தி அதிகரித்திருக்கிறது. 1970–71-ம் ஆண்டில், கும்பகோணத்தில் டிராக்டர் பழுது பார்க்கும் நிலையம் ஒன்றையும், தஞ்சாவூரில் பயிர் பாதுகாப்புப் பிரிவு ஒன்றையும், பயிர் பாதுகாப்பு ஆய்வுக்கூடம் ஒன்றையும் அமைக்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

தற்போது செங்கற்பட்டு, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுவரும் பகுதி மும்முர வேளாண்மைத் திட்டம், 1970–71-ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கும் நீட்டிக்கப்படும்.

ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசின் தொழில் நுட்ப உதவியுடனும் நிதி உதவியுடனும் 1967-ம் ஆண்டில் இந்திய-ஜெர்மனி நீலகிரி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. நீலகிரி மாவட்டத்தில் வேளாண்மை உற்பத்தியை விரைவாக பெருக்குவதற்கும் நீலகிரியில் உள்ள உழவர்களின் பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதற்கும் வேண்டிய பணிகளை இது தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது. இத்திட்டத்தின நிர்வாகம் கோதுமை குறித்தும் உருளைக்கிழங்கு குறித்தும் குறிப்பாக, உருளைக் கிழங்கு கருகல் நோய், பொன்னிறப் புழுநோய் ஆகியவற்றை தடுப்பது குறித்தும், பயனுள்ள விஞ்ஞான ஆராய்ச்சியையும் பெருமளவில் நேரிடச் சோதனைகளையும் நடத்தி ஊக்கமளிக்கத்தக்க விளைவுகளைப் பெற்றுள்ளனர். பார்லி, ஸ்டராபெரி, காய்கறிகள், கால்நடைத் தீவனம் ஆகியவைக் குறித்து நடத்திய பரிசோதனைகள் நல்ல முடிவுகளை அளித்துள்ளன. இத்திட்ட நிர்வாகத்தினர் தங்களால் உருவாக்கப்பட்டுள்ள முனைப்பு முறைகளையும் உழவர்கள் நிலங்களுக்கு நீட்டிக்க முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

### புன்செய் நிலப்பயிர் விளைச்சல்.

மாநிலத்தில் பயிர் செய்யப்பட்ட 160 லட்சம் ஏக்கர் மொத்தப் பரப்பளவில் 100 லட்சம் எக்கர்கள் புன்செய் நிலங்களாகும். (எந்தப் பாசனமும் இல்லாதவை) வேளாண்மைத் தொழிலுக்கேற்ற கால நிலைமைகளின் அடிப்படையில் வழக்கமாக வகைப்படுத்தப்பட்டதற்கேற்ப கடற்கரைப் பகுதியான தஞ்சாவூர், செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு மாவட்டங்களிலுள்ள புன்செய் நிலங்களைத் தவிர, தமிழ்நாட்டில் உள்ள மற்ற புன்செய் நிலங்கள் 50-லிருந்து 100 செண்டிமீட்டர் வரை குறைந்த அளவு மழை பெய்யும் வறண்ட நிலப்பிரிவுகளின்கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதிகளில்



சொந்தமாக நிலம் வைத்திருக்கும் உழவர்களில் பெரும்பான்மையோர் ஏழைகளாகவும் சிறு அளவு நிலம் வைத்திருப்பவர்களாகவும் இருக்கிறார்கள். மாநிலத்தில் பயிரிடப்படும் மொத்த நிலப்பரப்பில் 60 சத வீதத்திற்கு மேற்பட்டு புன்செய் நிலங்களாக இருப்பதாலும், பெரும்பான்மையான உழவர்கள் இந்த நிலங்களையே நம்பி இருப்பதாலும் இந்த பகுதிகளில் உற்பத்தித், திறனை உயர்த்துவதற்கு வேண்டிய உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென வேளாண்மைத் துறை கருதுகிறது.

வறட்சி வட்டாரங்களில் புரட்சிகரமான பயிர் முறையை ஏற்படுத்துவதற்கு வேண்டிய முக்கியத் தேவையை மத்திய அரசும் உணர்ந்து விட்டது. ஏழு மாநிலங்களில் உள்ள குறைந்த அளவு மழை பொழியும் மாவட்டங்களில் சிறப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என்று மத்திய அரசு அறிவித்தது. இதில் தமிழ்நாடு மாநிலமும் ஒன்றாகும்.

புன்செய் நிலப் பயிரிடும் முறை இம் மாநிலத்திற்குப் புதிது அல்ல. மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதன் மூலமும் மண்ணிலுள்ள ஈரம் ஆவியாய்ப் போய்விடாமல் காக்கும் பொருட்டு மழை நீர் மண்ணில் நன்றாக இறங்க வகை செய்வதன் மூலமும் புன்செய் நிலங்களில் பயிர் செய்தலை மேம்படுத்த இயலும். மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தை இதுவரை 6 லட்சம் எக்கர் பரப்பளவில் துறை செயலுக்குக் கொண்டு வந்துள்ளது. வேர்க்கடலை, பருத்தி போன்ற புன்செய் நிலப் பயிர்களுக்காக 6·26 லட்சம் எக்கர் பரப்பளவுக்குப் பொருந்தும் வகையில் முனைப்புத் திட்டத் துறை புகுத்தியுள்ளது.

ஆனால் இந்த நடவடிக்கைகள், வேளாண்மை மேம்பாட்டில் மாறுபட்ட சூழ்நிலையில் ஆலோசிக்கப்படுகின்றன. எனவே, 1970–71-ம் ஆண்டில் மிகு பயன் தருவதும் வறட்சியையும் பயிர் நோயையும் தாங்குவதுமான HB. 3 கம்புப் பயிரை திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் 1·50 லட்சம் எக்கர் பரப்பளவில் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த வறண்ட பகுதிகளில் உள்ள உழவர்களுக்கு வேளாண்மைத் தேவைகளை வழங்குவதில் சில சலுகைகள் வழங்குவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

### சிறிய அளவு நிலக் கிழார்களுக்கான திட்டம்.

மூன்று திட்டக்கால அளவுகளில் வேளாண்மைக்கென கணிசமான முதலீடுகள் செய்திருந்தபோதிலும், சிறிய அளவில் நிலம் வைத்துள்ள உழவர்களது நலனுக்காக குறிப்பிட்ட எந்தத் திட்டமும் இதுவரை செயல்படுத்தப்படவில்லை என்பதைத் திட்ட ஆணைக்குழு உணர்ந்துள்ளது. எனவே திட்ட ஆணைக்குழு நான்காவது திட்ட வரைவில் சிறு அளவு நிலம் வைத்துள்ள உழவர்களின் நலனுக்காக, நாடு முழுவதற்கும் ஐந்தாண்டுக் கால அளவுக்கு ரூ. 30 கோடி தற்காலிக நிதி ஒதுக்கத்துடன் ஒரு திட்டத்தைச் சேர்த்துள்ளது. இது மத்திய அரசு பணித்திட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ளது. மாநிலத் திட்டவரம்புக்கு மேற்பட்டு மத்திய அரசிடமிருந்து முழு நிதி உதவி இதற்குக்கிட்டும். நாடு முழுவதும் சுமார் 20 மாவட்டங்களில் முன்னோடி அடிப்படையில் இத் திட்டத்தைச் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டுக்கு ஒரு மாவட்டம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தைச் செயல்படுத்தும் ஏற்புடைய உழவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு உரிய சமயத்தில் உதவி செய்து தன்னிறைவு கொள்ளச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தை தென் ஆர்க்காடு மாவட்டத்தில் செயலபடுத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. 5 ஏக்கர் புன்செய் நிலம், 2½ எக்கர் நன்செய் நிலம் என்ற அளவிற்குள் நிலம் உடைய உழவர்கள் இத்திட்டத்தின்கீழ் சிறு உழவர்களாகக் கருதப்படுவார்கள். இத்திட்டத்தின் விவரங்கள் இறுதி உருப்பெற்று வருகின்றன.

### மிகக் குறைந்த அளவு நிலங்களை உடைய குறு நிலக்கிழார்களுக்கும் பண்ணைத் தொழிலாளர்களுக்கும் உரிய திட்டம்.

சிறு குடியானவர்களின் மேம்பாட்டிற்காக நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ள திட்டத்தைத் தவிர, மிகக் குறைந்த நிலங்களை உடைய குறு நிலக்கிழார்களுக்கும், பண்ணைத் தொழிலாளர்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் திட்டப்பணிகள் பலவற்றை மேற்கொள்வது அவசியம் எனத் திட்ட ஆணைக்குழு கருதியது. இப்பணித்திட்டம் எந்த அளவில் இருக்க வேண்டும் என்பதையும், அவற்றிற்கு எந்த அளவிற்கு நிதி ஒதுக்கம் செய்யப்படவேண்டும் என்பதையும் ஆணைக்குழு இன்னும் முடிவு செய்யவில்லை. ஆயினும், ஒரு ஹெக்டர் பரப்பளவிற்கும் குறைவாக உள்ள நிலம் வைத்துள்ள குறு நிலக்கிழார்களுக்கும் தமது வருமானத்திற்கு வேளாண்மையையே பெரிதும் நம்பியிருக்கும் பண்ணைத் தொழிலாளர்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் இப்பணித்திட்டங்கள் அமையும். மிகக் குறைந்த அளவு நிலங்களையுடைய குறுநிலக்கிழார்களுக்கும், பண்ணைத் தொழிலாளர்களுக்கும் பயனளிக்கக் கூடிய கோழி வளர்ப்பு அல்லது பால் பண்ணை போன்ற வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய நடவடிக்கைகளே இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும். இப்பணித் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அந்தந்த மாநிலத்தில் தகுந்த இடத்தைக் கண்டறிந்து அது குறித்து புள்ளி விவரங்களை சேகரித்து இந்திய அரசுக்கு அனுப்புமாறு இந்திய அரசு மாநில அரசுகளைக் கேட்டுக் கொண்டுள்ளது. அப்பணித் திட்டங்களுக்கு நான்காவது திட்டத்தின் மத்திய அரசுத் துறையின் கீழ் ஒப்பளிப்பு வழங்குவதே அதன் நோக்கமாகும். இம்மாநிலத்துக்குகந்த பணித் திட்டம் ஒன்றை வருவாய்த் துறை வாரியத்தையும் (உணவு உற்பத்தி) புள்ளி விவரத்துறை இயக்குநரையும் கலந்து மாநில அரசு வகுத்துவருகிறது.

### வணிகப் பயிர்கள்

#### கரும்பு.

தமிழ் நாட்டில் தலையாய வணிகப் பயிரான கரும்பு 1967-68, 1968-69-ஆம் ஆண்டுகளில் பயிரிடப்பட்ட பரப்பளவு, அதன் உற்பத்தி அளவு குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | கரும்பு பயிரிடப்படும் பரப்பு (லட்சம் ஏக்கரில்.) | கரும்பு உற்பத்தி அளவு. (லட்சம் டன்களில்.) |
|---|---|---|
| 1967–68 | 2·35 | 75·59 |
| 1968–69 | 2·50 | 89·60 |

கரும்பு விலை அதிகரித்ததும் கரும்பு பயிரிடப்படும் பகுதிகளில் மும்முரச் சாகுபடி முறைகளை மேற்கொண்டதும் கடந்த இரண்டு ஆண்டுகளில் கரும்பு உற்பத்தி அதிகரித்ததற்குக் காரணமாகும். நடப்பாண்டிலும் கரும்பு அதே அளவில் உற்பத்தி செய்யப்பட்டது. 91·10 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படவேண்டுமென முடிவு செய்யப்பட்டுள்ள குறிக்கோள் அளவு விஞ்சப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1970-71-ம் ஆண்டில் 94·60 லட்சம் டன் கரும்பு உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது இம் மாநிலத்தில் 39 வளர்ச்சி நிலையங்களும், 8 மும்முரச் சாகுபடிப் பிரிவுகளும், முன்னோடிக் கட்புல விளக்க நிலையம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றன. 1970–71-ஆம் ஆண்டில் மேற்கொண்டும் 8 புதிய வளர்ச்சி நிலையங்களைத் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. மும்முரச் சாகுபடித் திட்டத்தை மேற்கொள்வதன் மூலம் ஏக்கர் ஒன்றுக்கு உற்பத்தி வரும் அளவை அதிகரிப்பதே இந்த நடவடிக்கைகளின் தலையாய



நோக்கமாகும். கரும்பு வேரைத் துளைத்துப் பாதிக்கக்கூடிய பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்காக 1970–71-ல் ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையங்கள் ஆறினைத் தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. பயிரிடப்படும் கரும்பை விரைந்து ஆலைகளுக்கு எடுத்துச் செல்வதற்கான வசதிகளைச் சீராக்கும் நோக்குடன் சாலைகள் அமைக்கும் பணித்திட்டத்திற்குத் தொடர்ந்து சிறப்பிடம் அளிக்கப்பட்டுவந்தது. நடப்பு ஆண்டில் ரூ. 28 லட்சம் செலவில் 8 புதிய சாலைகள் அமைக்கப்பட்டன. 1970–71-ஆம் ஆண்டில் சாலைகள் அமைப்பதற்காக ரூ. 36·51 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

#### எண்ணெய் வித்துக்கள்—வேர்க்கடலை.

எண்ணெய் வித்துக்களில், வேர்க்கடலை முக்கியமானதாகும். இம் மாநிலத்தில் எண்ணெய் வித்துக்கள் பயிரிடப்படும் பரப்பளவில் 95 சத வீதத்திற்கு மேல் நிலக்கடலை பயிரிடப்படுகிறது. கடந்த இரண்டாண்டுகளாகத் தொடர்ந்து வான் பொய்த்ததன் காரணமாக ஏற்பட்ட வறட்சி இப்பயிரைப் பாதித்தது. 1967–68-ல் 9·21 லட்சம் மெட்ரிக் டன் அளவுகூட நிலக்கடலை பயிராகவில்லை. அதே போல 1968–69-ல் இப் பயிர் 8·72 லட்சம் மெட்ரிக் டன்தான பயிரிடப்பட்டது. இந்த அளவு சாதாரண அளவைவிட மிகக் குறைந்ததாகும். 1969–70-ல் 23·98 லட்சம் ஏக்கர் பரப்பளவில் எண்ணெய் வித்துக்கள் பயிரிடப்படும் என்றும் 9·60 லட்சம் மெட்ரிக் டன் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாகும் என்றும் மதிப்பிடப்படுகிறது. 1970–71-ல் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை 13 லட்சம் டன்களாக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை அதுவும் குறிப்பாக நிலக்கடலையின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான தேவையை உணர்ந்து, இம் மாநிலத்தில் கோயம்புத்தூர், தென் ஆர்க்காடு, மதுரை, திருச்சி மாவட்டங்களில் 1968–69-ல் 2·10 லட்சம் ஏக்கருக்கும் மேற்பட்ட பரப்பளவில் முனைப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் 1969–70-ல் 2·33 லட்சம் ஏக்கராவில் நீட்டிக்கப்பட்டன. 1970–71-ல் 2·66 லட்சம் ஏக்கர்களுக்கு மேற்பட்ட பரப்பளவில் இத்திட்டங்களைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

நிலக்கடலையை ஏற்றுமதிக்காகவே உற்பத்தி செய்யும் பணித்திட்டம் ஒன்று 1967–68-ஆம் ஆண்டில் வட ஆர்க்காடு, சேலம், தருமபுரி, செங்கற்பட்டு மாவட்டங்களில் தொடங்கப்பட்டது. 1970–71-ல் திட்டத்தை 4·24 லட்சம் ஏக்கர் பரப்பளவில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் குறுகிய காலக் கடன் வடிவில் நிலக்கடலை பயிரிடுவோருக்கு நிதி உதவி வழங்கப்படுகின்றது. தரமான விதைகள் பயிரிடுவோருக்கு வழங்கப்படுவதே இப் பணித்திட்டத்தின் முக்கியமான கூறாகும். இக்காரியத்திற்காக. தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் மூல விதைகள் உற்பத்திக்காக 700 ஏக்கர் கொண்ட மண்டலப் பண்ணைகள் நடத்தப்படுகின்றன. தரமான விதைகளுக்கான தேவை நாளுக்கு நாள் பெருகிவருகிறது. பெருகிவரும் இத்தேவையை நிறைவு செய்ய 1970–71-ஆம் ஆண்டில் தரமான விதைகளை உற்பத்தி செய்வதற்காக 300 ஏக்கர் பரப்பளவில் மூல விதைப்பண்ணையொன்றை அமைக்கவும் விதைகளை மேற்கொண்டு 400 ஏக்கர் பரப்பளவில் மேற்கொண்டும் ஒரு மண்டலப் பண்ணையை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

#### ஆமணக்கு.

என் பி.ஹெச். 1 எனப்படும் புதிய வகைக் கலப்பிய ஆமணக்கு விதை ஒன்று அண்மையில் தயாரிக்கப்பட்டுள்ளது. மிகுபயன் தரும் இவ்விதை தற்போது பயனிலுள்ள விதை வகையைவிட ஒரு திங்களுக்கு முன்பே பயனளிக்கத்தக்கதாகும். இவ்வகை ஆமணக்கு விதையை உழவர்கள் பரவலாகப் பயிரிட ஊக்கம் அளிக்கும் பொருட்டு விதைகளை இலவசமாக வழங்குவதற்காக 1970-ல் ரூ. 19,000 செலவில் மேற்கொள்ளப்பட்ட, கட்புல விளக்க மத்திய அரசுத் திட்டம் 1970–71-ம் ஆண்டிலும் தொடர்ந்து நிறைவேற்றப்படும்.

## தென்னை.

எண்ணெயும் அளிக்கக்கூடிய மற்றொரு முக்கிய பயிர் தென்னை ஆகும். இம்மாநிலத்தில் 1·30 லட்சம் ஏக்கர் பரப்பளவில் தென்னை பயிரிடப்படுகிறது. தென்னை வளர்ப்புப் பரப்பளவை இருவழிகளில் அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1. தென்னந் தோப்புகளின் பரப்பை அதிகரித்தல்.
2. மும்முர வளர்ப்பு முறைகளை மேற்கொள்ளுதல்.

இம்முயற்சிகளின் காரணமாக 1968–69-ல் 1,716 ஏக்கர் பரப்பில் கூடுதலாகத் தென்னை வளர்க்கப்பட்டது. 1969-70-ல் இதுவரையில் ஏறத்தாழ 703 ஏக்கர் பரப்பில் தென்னை வளர்க்கப்பட்டுள்ளது. 1970–71-ல் மேற்கொண்டும் 2,000 ஏக்கர் பரப்பில் தென்னை பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது:—

தென்னை வளர்ச்சித் திட்டத்தின் மற்றொரு முக்கியமான பணித்திட்டம் பெருமளவில் தென்னங்கன்றுகளை வளர்த்து வழங்குவதாகும். இக்காரியத்திற்காக இம்மாநிலம் முழுவதிலும் தென்னந்தோப்புகள் அதிக அளவில் இருந்துவரும் பகுதிகளில் தென்னம்பிள்ளைகள் வளர்ப்பிடங்கள் 18 ஏற்படுத்தப்பட்டுள்ளன. உழவர்களுக்கு தென்னம்பிள்ளைகள் எளிதில் கிடைக்க வகைசெய்வதே இதன் நோக்கமாகும். இந்த வளர்ப்பிடங்கள் 1968–69-ல் 6·55 லட்சம் தென்னங்கன்றுகளை வழங்கின. 1969–70-ல் 4·47 லட்சம் தென்னம்பிள்ளைகள் வழங்கப்பட்டுள்ளன. 1970–71-ஆம் ஆண்டில் 7·12 லட்சம் தென்னம்பிள்ளைகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக மேற்கொண்டும் தென்னம்பிள்ளை வளர்ப்பிடம் ஒன்றை சைதையில் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அடுத்தடுத்து அமைந்துள்ள ,000 ஏக்கர் கொண்ட தென்னந்தோப்புகள் கொண்ட முனைப்பு உற்பத்திப் பிரிவுகள் ஆறும் இந்த ஆண்டில் தொடர்ந்து செயல்பட்டன. 1964–65-ஆம் ஆண்டில் அதிராம்பட்டினத்தில் தொடங்கப்பட்ட முனைப்பு உற்பத்திப் பிரிவு முதன் முதலாகத் தொடங்கப்பட்ட பிரிவாகும். சாதாரணமாகக் கிடைக்கும் அளவைவிட மரம் ஒன்றுக்கு 30 முதல் 50 சதவீதம் வரை அதிகரித்த உற்பத்தி இப்பிரிவிலிருந்து கிடைத்துள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் கடற்கரையோரமாக தரிசாகக் கிடக்கும் நிலங்களில் இயன்ற வரையில் அதிக அளவு தென்னந்தோப்புகளை வளர்க்கும் நோக்குடன் நிலமற்ற ஏழை மக்களுக்கும், அந்நிய நாடுகளிலிருந்து திரும்பிவரும் அகதிகளுக்கும், குடும்பம் ஒன்றுக்கு 5 ஏக்கர் பரப்பளவை ஒதுக்க வகை செய்யும் திட்டம் தொடர்ந்து செயலில் இருந்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1968–69-ஆம் ஆண்டில் 315·75 ஏக்கர் பரப்பளவில் தென்னந்தோப்புகள் புதிதாக வளர்க்கப்பட்டன. 1969–70-ல் இதுவரையில் 437 ஏக்கர் பரப்பளவில் தென்னந்தோப்புகள் வளர்க்கப்பட்டுள்ளன. 1970-71-ஆம் ஆண்டில் 100 குடும்பங்களைக் குடியேற்றுவதற்காக மேற்கொண்டும் 1,200 ஏக்கர் பரப்பளவில் தென்னந்தோப்புகளை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. குட்டைவகைத் தென்னைமரங்களையும் நெட்டை வகைத் தென்னை மரங்களையும் கலப்பினம் செய்யும் வகையில் கலப்பினத் தென்னை வகைகளை உற்பத்தி செய்வது, தென்னை வளர்ச்சிப் பணியில் புதியதொரு கூறாகும். மத்திய அரசு ஆதரவு தரும் இத்திட்டம் தஞ்சாவூர் மாவட்டத்தில் வேப்பங்குளத்தில் உள்ள தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் செயல்படத் தொடங்கியுள்ளது. ஆண்டொன்றுக்கு 5,000 தென்னம்பிள்ளைகள் வளர்க்கப்படவேண்டும் என்ற குறிக்கோள் அளவுடன் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. கலப்பினத் தென்னம்பிள்ளைகள் தயாரிக்கும் பணி நடந்து வருகிறது. நெடிய குட்டை வகைகளைக் கலப்பு செய்து, இங்கு உற்பத்தி செய்யப்படும் கலப்பினத் தென்னம்பிள்ளைகள் இரண்டு நன்மைகளை அளிப்பவையாக உள்ளன. அதாவது நட்ட மூன்றாவது ஆண்டிலேயே காய்க்கத் தொடங்கும் தன்மையுள்ளவை. இந்த வகைகள். சாதாரண வகைகளைவிட இவ்வகை அதிக அளவு பயன் தரக்கூடியவையாகும்.



## பருத்தி.

எண்ணெய் வித்துக்களுக்கு அடுத்தாற்போல் பருத்தி இம்மாநிலத்தின் முக்கிய ரொக்கப்பயிராகும். 1967–68-இல் 8·79 லட்சம் ஏக்கர் பரப்பளவில் பருத்தி பயிரிடப்பட்டது. 1967–68, 1968–69-ஆம் ஆண்டுகளில் பருத்தி பயிரிடப்படும் மாவட்டங்களாகிய கோயம்புத்தூர், திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் நிலவியிருந்த கடும் வறட்சிகாரணமாக பருத்தி உற்பத்தி கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இதனால் பருத்தி பயிரிடப்படும் பரப்பளவும் பருத்தி உற்பத்தி அளவும், இயல்பான நிலையைவிட மிகவும் குறைந்துவிட்டது. 1968–69-ஆம் ஆண்டில் பருத்தி பயிரிடப்படும் பரப்பளவு, 6·20 லட்சம் ஏக்கராவாக மேற்கொண்டும் குறைந்தது. உற்பத்தி அளவும் 2.56 லட்சம் பேல்களாகக் குறைந்தது. ஆயினும் நடப்பு ஆண்டில் மான் வழங்கியதலைப் பலனாக, குறிப்பாக மாரிக்காலத்துப் பருத்தி பயிரிடப்படும் பகுதிகளில் பருத்தி உற்பத்தி அளவு, கணிசமாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தரத்திலும் உற்பத்தி வளத்திலும் சிறந்த புதிய வகைப் பருத்தியாகிய M. C. U. 5. என்ற வகை, பருத்தி வளர்ச்சிப் பணிகளில் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான பணியாகும்.

முனைப்புப் பயிர் முறைகளை மேற்கொள்வதன் மூலம், பருத்தி உற்பத்தியை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1969–70-ஆம் ஆண்டில் கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் மொத்தம் 2·15 லட்சம் ஏக்கருக்கு மேற்பட்ட பரப்பளவில் பருத்திச் சாகுபடி முனைப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. உலர்ந்த பருத்தி சாகுபடியை மும்முரமாக்குவதற்காக, திருநெல்வேலி மாவட்டத்தில் 20,000 ஏக்கர் பரப்பளவுள்ள புதியதொரு பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. 1970–71-ஆம் ஆண்டில், திருநெல்வேலி மாவட்டத்தில் முனைப்புத் திட்டத்தை மேற்கொண்டும் செயல்படுத்தவும், பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தில் 30,000 ஏக்கர் பரப்பளவில் பருத்திச் சாகுபடி முனைப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. சாதாரண சாகுபடித் திட்டங்களைவிட முனைப்பு உற்பத்தி பிரிவுகளில் அதிக அளவு உற்பத்தி, அதாவது 80 முதல் 100 சதவீதம் அதிக அளவு உற்பத்தி கிடைப்பது ஊக்கமளிப்பதாக அமைந்துள்ளது.

## புகையிலை.

தமிழ் நாட்டில் 41,000 ஏக்கர் பரப்பளவில் புகையிலை பயிரிடப்படுகிறது. பதப்படுத்திய இலையின் உற்பத்தி 22,500 டன்களாகும். புகையிலை உற்பத்தி வளர்ச்சி அடைவதற்கு வாய்ப்பு உள்ளது. முக்கியமாக வாசனைப் புகையிலையும் அதிலும் குறிப்பாக தும்புதூசியின்றிப் பதப்படுத்திய வர்ஜீனியா புகையிலையையும் குறிப்பிடலாம். இவ்வகைப் புகையிலை சிறந்த தரமுடையதும், ஏற்றுமதி செய்யத்தக்க ரகத்தைச் சேர்ந்ததும் ஆகும். 1968–69-ல் கோவை மாவட்டத்தில் 8,000 ஏக்கர் பரப்பளவுக்குமேல் முனைப்புத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இது 1969–70-ல் 10,000 ஏக்கராக உயர்த்தப்பட்டது. புது முறையான பயிர் முறைகளைப் பின்பற்றுவதால் ஏற்படும் நன்மைகளைக் குடியானவர்களுக்கு எடுத்துச் சொல்லும் வகையில், ஒருங்கிணைந்த கட்புல விளக்கங்களும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. 1970-ல் புகையிலை முனைப்புத் திட்டத்தைக் கூடுதலாக, 2,000 ஏக்கர் பரப்பளவில் விரிவு படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. புகையிலைப் பயிர் முறைகளில் முனைப்பு ஏற்பாடுகளை ஒருமுகப்படுத்தியதனால் முனைப்புத் திட்டப் பகுதிகளில், உற்பத்தி அதிகரிப்பு 60 சதவீதத்திற்கு மேல் ஏற்பட்டது.

தும்புதூசியின்றிப் பதப்படுத்திய வர்ஜீனியா புகையிலை பயிரிடும் திட்டம், தர்மபுரி மாவட்டம், ஓசூர் பகுதிகளில் மத்திய அரசு பொறுப்பேற்கும் ஒரு சிறப்புத் திட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்டது. தும்புதூசின்றிப் பதப்படுத்திய வர்ஜீனியா புகையிலைப்பயிர் ஓசூர் பகுதியில்

கணிசமான உற்பத்தியை ஏற்படுத்தியது. இங்கு பயிராகும் புகையிலையின் தரம் மிக உயரிய தரமாகக் கணக்கிடப்படுகிறது. வர்ஜீனியா புகையிலைப் பயிராகும் பரப்பளவு 1970–71-ல் 600 ஏக்கருக்குக் கொண்டு வரவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் புகையிலைக் கிடங்குகள் கட்டுவதற்கு, கிடங்கு ஒன்றுக்கு 1,000 ரூபாயும் கிணறு வெட்டுவதற்கு கிணறு ஒன்றுக்கு 1,250 ரூபாயும், உதவித் தொகை கொடுக்கப்பட்டு வருகிறது. பாசன நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் நோக்குடன் பாசன நீர்த் தெளிப்புக் கருவிகள் நிறுவ 2,250 ரூபாய் வரை உதவித் தொகை அளிப்பதன் மூலம் ஊக்கமளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## முந்திரி.

டாலர் ஈட்டித் தரும் இம்மாநிலத்தின் மிக முக்கியமான பயிர் முந்திரி. மூன்றும் திட்டக் காலத்திலிருந்து முந்திரி வளர்ச்சித் திட்டத்தின்கீழ், முந்திரி உற்பத்தியை அதிகரிக்க ஏற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளன. நபர் ஒன்றுக்கு ரூ. 2,000 என்று இருந்த பேரளவை ரூ. 3,000-த்திற்கு உயர்த்தியும் எக்கருக்கு ரூ. 100 என்று இருந்ததை ரூ. 150 ஆக உயர்த்தியும் புதிய முந்திரித் தோட்டங்களை ஏற்படுத்த இத் திட்டத்தின்கீழ் நீண்டகாலக் கடன் வழங்கப்பட்டது. இப்பணித் திட்டத்தின் மூலம் இதுவரை முந்திரிப் பயிரின்கீழ், புதிதாக 7,600 எக்கர் வரை கொண்டு வரப்பட்டுள்ளது.

முந்திரித் தோட்டங்களில் பெரியதாக கப்புல விளக்க நிலையங்கள் 310 அமைக்கவும், ரூ. 3·70 லட்சம் செலவு மதிப்பீட்டில் சுமார் 7,000 எக்கருக்கு மேல் மும்முரச் செடிப் பாதுகாப்பு மேற்கொள்ளவுமான மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், 1970–71-ல் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. கூட்டுறவுத்துறையின்கீழ், புதுவகையான முந்திரி தரப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்துவதற்கும், தரப்படுத்துதல், ஏற்றுமதி, விற்பனை இவற்றை மேம்படுத்துவதற்கும் முந்திரிக் கழகம் ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஒன்று அரசின் ஆலோசனையில் உள்ளது.

## கோகோ.

கோகோ, பானமாக மட்டுமல்லாமல், உணவாகவும், பயன்படுத்துகிற மிக முக்கிய பொருளாகும். தமிழ்நாட்டில் அதிலும் குறிப்பாக கீழ் பழனி, ஏர்க்காடு, கல்ராயன் மலைகள், நீலகிரி போன்ற மலைப் பகுதிகளில் பயிராவதற்குச் சிறந்ததொரு வாய்ப்புள்ளது. கோகோ இம் மாநிலத்தில் பயிரிடப்படும் புதுவகை பயிராகும். ஆனால், இது மிக முக்கியமான பயிராகும். மேலும், இது மிக உயர்ந்த வகை பானமாகவும் இருப்பதோடு, செறிவாக அமைந்த மிகச் சிறந்த சத்தூட்டும் வல்லமையும் பெற்றது. எல்லாப் பருவ காலங்களிலும் பயிரிடக்கூடிய பயிராகையால், பெரிய அளவில் பயிரிடுவதற்குக் குடியானவர்கள் உவந்து முயற்சி மேற்கொள்ள சிறிது காலம் பிடிக்கும். நீலகிரியில் கோகோ பயிரிடுவதில் நாம் தொடக்கத்தில் மேற்கொண்ட முயற்சியினால் பிற நாடுகளுக்கு இணையாக உயர்ந்த ரக கோகோ தமிழ் நாட்டில் உற்பத்தி செய்யக்கூடும் என்பது புலனாயிற்று.

கோகோ வெற்றிகரமாக பயிரிடப்படுவது எவ்வாறு என்பதைப் பயிரிடுவோர்க்கு நன்கு விளக்க மங்கலம் கொம்பு, பேச்சிப்பாறை, பாபநாசம் ஆகிய இடங்களில் முன்னோடித் திட்ட கப்புல விளக்க நிலையங்கள் உள்ளன. 1970–71-ல் ரூ. 80,000 செலவு மதிப்பீட்டில் மங்கலம் கொம்பு பணியாளர் குடியிருப்பு, அலுவலகம் இவற்றுக்கான கட்டிடங்களைக் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது.



சிறு அளவில் இத்தகைய வெற்றி அடைந்ததைக் கொண்டு, பெரிய மலைத்தோட்ட அளவில், கோகோவைப் பயிரிடுவதற்கான மாபெரும் திட்டமொன்றை தொடங்கவும் இப்பொழுது திட்டமிடப்பட்டுள்ளது. மதுரை மாவட்டத்தில் கெங்குவார் ஓடையில் 2,000 எக்கர் நிலப்பரப்பு, கன்னியாகுமரி மாவட்டத்தில் 1,000 எக்கர் நிலப்பரப்பு கோகோ பயிரிட தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. முறையே இவற்றுக்கு வேளாண்மை நிதிக்கழகமும், வேளாண்மை மறு கடன் உதவிக்கழகம் கடன் உதவி அளிக்கும்

## தோட்டக்கலை.

### வாழை.

வாழை உற்பத்தி குறிப்பாக, ஏற்றுமதிக்கேற்ற ரகங்களைச் சேர்ந்த வாழை உற்பத்தி 1964–65-ல் முனைப்புத் திட்டம் மூலமாகத் தொடங்கி வைக்கப்பட்டது. இதன் உற்பத்தி இப்போது வட ஆற்காடு, செங்கற்பட்டு, திருச்சி, கோவை, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 1968–69 முடிவில் 17,210 எக்கரிலும் 1969–70-ல் 20,000 எக்கர் பரப்பளவிலும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 1970–71-ல் இப்பொழுதுள்ள பணித் திட்டங்கள் தொடர்ந்து நிறைவேற்றப்படும். வாழை பயிராகும் பகுதிகளில், முனைப்பான பயிர் முறைகளைப் பின்பற்றியதன் பலனாக, எல்லா வகையாலும் மேம்பாடு ஏற்பட்டுள்ளது. எக்கர் ஒன்றுக்கு உற்பத்தி 35 சதவீதம் அதிகரித்துள்ளது. இதன் பலனாக குலையின் அளவும் பெருகியது. தாரின் அளவும், சீப்புகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. வாழைப் பயிரில் செடிப் பாதுகாப்பின் அவசியத்தை வாழைப் பயிரிடுவோர்கள் பெரிதும் உணர்ந்துள்ளனர். முக்கோண முறையில் கன்று நடுவதாலும், இரு சாரிகளிலும் கன்றுகளை நடும் முறையைப் பின்பற்றுவதன் மூலமாகவும் வேளாண்மைப் பொருளாதார முறைகளில் ஏற்பட்ட சீர்திருத்தத்தினால் எக்கர் உற்பத்தியின் அளவு 60 முதல் 80 சத விகிதமாக அதிகரித்துள்ளது. தூத்துக்குடியைச் சுற்றிலும், உவர்மண் நிலப் பகுதிகளைப் பண்படுத்தி படிப்படியாக 6,000 எக்கர் அளவுக்கு மேல் வாழை பயிரிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### மற்ற வகையான பழங்கள்.

புதிய பழத் தோட்டங்களை ஏற்படுத்தி பழவகைப் பயிர்த் திட்டத்தின்கீழ் பயிர்ப் பகுதியை அதிகரிப்பதன் வாயிலாக பழ உற்பத்தித் திட்டம் மூன்றும் திட்டக் காலத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டது. இவற்றுக்கு முக்கியமாக நீண்டகாலக் கடன் வழங்கப்பட்டது. 1967–68-ல் 1,698 எக்கருக்கும், 1968–69-ல், 1,229 எக்கருக்கும் கடன் வழங்கப்பட்டது, 1969–70-ல் திட்ட இலக்கு 1,600 எக்கராக இருக்கையில் இதுவரை 840 எக்கர் மட்டுமே பயிராகியுள்ளது. 1970–71-ல் சுமார் ரூ. 6 லட்சம் கடன் வழங்குவதன் மூலம் மேலும் 1,600 எக்கர் பயிரிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. பழ உற்பத்தித் திட்டத்தின் சிறப்பான கூறு என்னவெனில். திராட்சை உற்பத்தியைக் கணிசமான அளவுக்கு விரிவுபடுத்துவதேயாகும், தமிழ்நாட்டில் திராட்சைக் கொடிகள் உற்பத்தி ஓர் ஆண்டில் இருமுறை பறிக்கப்பட்டதில் அதிக அளவு 30,000 முதல் 40,000 கிலோ வரையில் கிடைத்துள்ளது. இதன் பலனாக, திராட்சை பயிரிடுவோர் எக்கர் ஒன்றுக்கு ரூ. 25,000 வரையில் பெருத்த வருவாய் ஈட்டியுள்ளனர்.

### உருளைக் கிழங்கு.

நமது மாநிலத்தில் உருளைக்கிழங்கு பயிராகும் பரப்பளவு 31,000 எக்கராகும். இதில் 19,000 எக்கர் நீலகிரியிலும். எஞ்சியவை கோடைக்கானலிலும் உள்ளது, உருளைக்கிழங்கு பயிருக்கு ஏற்படக்கூடிய "லேட் பிளைட்" (Late blight) பெருவிளிறப் பூழிநோய் போன்ற கடுமையான நோயின் காரணமாக நீலகிரியில் உருளைக்கிழங்கு பயிராகும் பரப்பளவு குறைந்துகொண்டே வருகிறது. மாற்றிடத்தில் உருளைக்கிழங்கைப் பயிரிடும் நோக்குடன், உருளைக்கிழங்கு வளர்ச்சித் திட்டம் 1965-ல் கோடைக்கானலிலும், 1966-ல் தர்மபுரி மாவட்டம் ஒசூர் பகுதியிலும் கொண்டுவரப்பட்டது, இத்துறை எடுத்துக்கொண்ட தீவிர முயற்சிகளின் பலனாக,

கொடைக்கானல் பகுதியில் 2,000 எக்கர் கூட இராத உருளைக்கிழங்கு பயிராகும் பரப்பளவு 1968–69-ல் 12,000 எக்கராகவும், 1969–70-ல் 13,000 எக்கராகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இதுவரை முன்னர் எப்போதும் உருளைக்கிழங்கு பயிரிடப்படாத ஓசூர் பகுதியில் 1968–69-ல் 151 எக்கர் ஆகவும், 1969–70-ல் 300 எக்கராகவும் பயிரிடப்பட்டது. இப்பகுதியில் உருளைக்கிழங்கு பயிரிடுவோர் பயிரிடுவதில் புதுமையான முறைகளையும், பயிர் நோய் (Late blight) கட்டுப்படுத்த செடி பாதுகாப்பு முறைகளைச் செவ்வையாகப் பயன்படுத்துவதைப்பற்றிப் பெரிதும் உணர்ந்து உள்ளனர்.

### காய்கறித் தோட்டங்கள்.

இம்மாநிலத்தில் காய்கறி உற்பத்தியைப் பெருக்க ஒவ்வொரு பயிர் காலத்திலும் எக்கர் ஒன்றுக்கு ரூ. 120 குறுகிய காலக் கடன் பெற்று காய்கறி பயிரிடுவதை முனைப்பாக்க காய்கறி பயிரிடுவோர் ஊக்கப்படுத்தப்படுகின்றனர். அவர்களுக்கு மலிவு விலையில் அதாவது பாதி விலையில் விதைகள் கொடுக்கப்படுகின்றன. இத்தகைய ஊக்கங்களினால் 1969–70-ல் திட்ட இலக்கு 2,000 எக்கராக இருக்க, 2,828 எக்கர் கூடுதலாகப் பயிராகியுள்ளது. 1970–71-ல், காய்கறிப் பயிரின்கீழ் மேலும் 2,500 எக்கர் கொண்டு வரவும், திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பினும், நாளொன்றுக்குக் காய்கறி செலவாகும் அளவு 6,00 டன்னாக இருக்கின்ற சென்னை மாநகருக்கு மேலும் 2,00 முதல் 3,00 டன் புதிய காய்கறிகள் தேவைப்படுகிறது. இந்தப் பற்றாக்குறையை ஈடு செய்யும் பொருட்டு, காய்கறித் தோட்டம் வைக்கும் திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மாநிலப் பண்ணைகளில் நேரிடையாகப் பயிர் செய்தல் தனியார் நிலவுடைமைகளில் பயிராகும் காய்கறிகளைச் சேகரித்தல், நியாயமான, மலிவு விலையில் பசுமையான "காய்கறிகளை" விற்பனை செய்தல் ஆகியவை இவ்வாண்டில் நிறைவேற்றப்பட்டன. இத் திட்டத்தின்கீழ், மண்ணூரில் ஒன்றும், சென்னை அரசினர் எஸ்டேட்டிலும், காய்கறிப் பண்ணைகள் தொடங்கப்பட்டன. நீர் பற்றாக்குறையினால், இவ்விரு பண்ணைகளும் உள்ள காய்கறி பயிராகும் பரப்பு முறையே 7-லிருந்து 3·5 எக்கராக குறைக்கப்பட்டுள்ளது. இவ்விரு பண்ணைகளும், பசுமையான காய்கறிகளை விற்பனை செய்யும் பணியை ஏற்கச் சிறப்பாக அமைக்கப்பட்ட சென்னை, காய்கறி பழம் உற்பத்தியாளர் சங்கத்திற்கு, காய்கறிகளை அனுப்பிவைக்கின்றன. இச்சங்கம் சென்னை மாநகரில் காய்கறிப் பயிரிடுவோர்களையும், ஓட்டல்காரர்கள், மாணவ விடுதி நடத்துபவர்கள் போன்ற அதிக அளவு காய்கறிச் செலவு செய்பவர்களையும் பிரதிநிதிகளாகக் கொண்டுள்ளது. இச்சங்கம், சென்னை மாநகரைச் சுற்றியுள்ள பல்வேறு பகுதிகளிலிருந்தும் (மலைப் பகுதி காய்கறிகளுக்காக) கொடைக்கானல், நீலகிரி போன்ற, சங்கப் பிரதிநிதித்துவம் பெற்ற இடங்களிலிருந்தும் காய்கறிகளைப் பெற்றுச் சேகரித்து மாநகரில் பரவலாக உள்ள பல்வேறு விற்பனை நிலையங்கள் மூலமாகப் பசுமை காய்கறிகளை விற்பனை செய்கிறது. நியாயமான விலையில் பசுமைக் காய்கறிகளைப் போதுமான அளவுக்கு கிடைக்கச் செய்வதோடு மட்டுமல்லாமல், நாளாவட்டத்தில் காய்கறி செலவிடுவோர் ஆரோக்கியத்தை வளர்க்க உதவுவதாகவும் இந்த ஏற்பாடு அமையும் என்று எதிர்பார்க்கலாம். இந்த ஏற்பாடு 1—10—69 முதல் தொடங்கிய காலத்திலிருந்து இச்சங்கம் ரூ. 69,426 மதிப்புள்ள 90 டன் பலவகையான காய்கறிகளைச் சேகரித்து, இம் மாநகரில் உள்ள மக்களுக்குப் பயன் உள்ள வகையில் விற்பனை செய்தது.

### கொய்த மலர்கள் ஏற்றுமதி.

மணம் கமழும் மலர்களும், எழில் கொழிக்கும் வண்ணப் பூக்களும் அந்நிய நாட்டினர்களால் விரும்பி வரவேற்கப்படுவதால் அவற்றை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புப் பெருமளவில் உள்ளபோதிலும், தமிழ் நாட்டில் பூந்தோட்டக் கலையில் உரிய கவனம் செலுத்தப்படவில்லை.



கடந்த ஆண்டில், வாணிக முக்கியத்துவம் பெற்ற மலர்கள் வளர்ச்சி குறித்து ஆராய்ச்சிப் பணியைச் செறிவுபடுத்தும் நோக்குடன் தமிழ்நாட்டில் பூந்தோட்டக் கலைப் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. இதற்கு முன்னோடியாக, வெப்ப நாடுகளில் பயிராகுபவையும், தமிழ் நாட்டில் பாராட்டத்தக்க வகையில் வளர்ந்து வருபவையுமான ரகங்களைச் சேர்ந்த பூக்களைப் பெருவாரியாக ஏற்றுமதி செய்யும் திட்டத்திற்கு முன்னோடியாக, பெல்ஜியம் நகரில் ஏப்ரல் 25 முதல் மே 4 வரை நடக்கவிருக்கும் கெண்ட் மலர்க் கண்காட்சிக்கு அனுப்பப்படுவதற்காக, ஏற்றுமதி செய்யத்தக்க ரோஜா மலர்களும், பல வண்ணங்களிலுள்ள பூக்களும், முதன் முறையாகச் சோதனை அடிப்படையில் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. இத்தகைய மலர்களுக்கு மிகுந்த கிராக்கியுள்ளது. ஐரோப்பிய நாடுகளில் இம் மலர்களின் விற்பனைக்கு ஏராளமான வாய்ப்புள்ளது.

தெரிந்தெடுக்கப்பட்ட சிறந்த ஜாதி ரோஜா மலர்களும், பிற வண்ண மலர்களும் ஏற்றுமதிக்குகந்தவையாகும். இவ்வகைப் பூச்செடிகளைப் பயிரிடப் பூந்தோட்டம் வளர்ப்பவர்களுக்கு உதவும் வகையில் உயர்ந்த வகைப் பூஞ்செடிகளும், இலவசத் தொழில் நுட்ப ஆலோசனையும் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. மலர்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் வணிகக் கழகத்தின் உதவியும் பெறப்பட்டுள்ளது.

### மலைத்தோட்டச் சிறு பயிர்கள்—ஏலக்காய்.

மங்கலம்கொம்பு, குற்றாலம் ஆகிய இடங்களில் இடத்திற்கு ஒன்றாக உள்ள நாற்றங்கால் வளர்ப்பிடங்களில் தரமான நாற்றுக்களை உற்பத்தி செய்து, வழங்குவதன்மூலம், ஏலக்காய் உற்பத்தி வளர்ச்சி பெரும்பாலும் கவனிக்கப்படுகின்றது. மங்கலம்கொம்பில், ஏலக்காய் வாரியம் தனது சொந்த நாற்று வளர்ப்பிடத்தை ஏற்படுத்தியுள்ளதால், மங்கலம் கொம்பிலுள்ள ஏலக்காய் நாற்று வளர்ப்பிடத்தை 1970–71-ம் ஆண்டில் கொல்லிமலைக்கு மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு 1968–69-ம் ஆண்டில் 14,450 நாற்றுகளை வழங்கியதன்மூலம் 14·50 எக்கர் பரப்பளவில் ஏலக்காய் பயிரிடப்பட்டது. 1969–70-ம் ஆண்டில் 50,000 நாற்றுகளை வழங்கியதன் மூலம் 50 எக்கர் பரப்பளவில் ஏலக்காய் பயிரிடப்பட்டது.

### மிளகு.

பயிர் பாதுகாப்புக் கருவிகளை சலுகை விலையில் வழங்குவதுடன் கூட, தரமான, நோயற்ற மிளகு நாற்றுகளை உற்பத்தி செய்து அவற்றை 50சதவீத ஈடுசெய் விலையில் வழங்குவதன்மூலம் நமது மாநிலத்தில் மிளகு பயிரிடுவதற்கு ஊக்கமளிக்கப்படுகிறது. நாற்று உற்பத்திக்காகக் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த பேச்சிப்பாறையில் ஒன்றும், நீலகிரி மாவட்டத்தில் கூடலூரில் ஒன்றும் ஆக இரண்டு நாற்று வளர்ப்பிடங்கள் செயல்படுகின்றன. 1968-69-ம் ஆண்டில் 16,500 நாற்றுகள், 55 தெளிப்பான்களையும் வழங்கியதன்மூலம், 20·50 எக்கர் பரப்பளவில் மிளகு பயிரிடப்பட்டது. 1969–70-ம் ஆண்டில் 50 எக்கரில் மிளகு பயிரிடப்படும். 40,000 நாற்றுகளும், 20 தெளிப்பான்களும் வழங்கப்படும். இந்தத் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தவும், பண்ணையூர் '1' என்ற மிகுபயன்தரும் மிளகு வகையைக் கொண்டு கட்புல விளக்க நிலங்களை அமைப்பதற்காக மத்திய அரசு ஆதரவு தரும் திட்டமாக மற்றொரு திட்டத்தை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### மிளகாய்.

தமிழ்நாட்டில் சுமார் 2·00 லட்சம் எக்கரில் மிளகாய் பயிரிடப்படுகிறது. ஏராளமான அளவு மிளகாய் தமிழ்நாட்டுக்கு வெளியே ஏற்றுமதி செய்யப்படுகின்றது. மத்திய அரசு ஆதரவு தரும் திட்டமாக திருநெல்வேலி மாவட்டத்தில் 10,000 எக்கர் பரப்பளவில் மிளகாய் பயிரிடுவதற்கான முனைப்புத் திட்டம் ஒன்றுடன்கூட, மேம்பட்ட வகையான K–1 மிளகாயை உற்பத்தி செய்து வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### மஞ்சள்.

தமிழ்நாட்டில் சுமார் 16,000 ஏக்கர் பரப்பளவில் மஞ்சள் பயிரிடப்படுகின்றது. இது கோயம்புத்தூரில் மட்டும் பெருவாரியாக, 11,000 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்படுகின்றது. மும்முரமாகப் பயிரிடுவதன்மூலம் மஞ்சள் உற்பத்தியை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஈரோடு வட்டத்தில் 2,500 ஏக்கர் பரப்பளவில் மஞ்சள் பயிரிடுவதுகுறித்து முன்னோடித் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது.

### சர்க்கரை வள்ளிக் கிழங்கு.

இம்மாநிலம் முழுவதும் பரவலாக, 10,570 ஏக்கர் பரப்பளவில் சர்க்கரை வள்ளிக்கிழங்கு பயிரிடப்படுகின்றது. துணை உணவுப் பொருளின் உற்பத்தியைப் பெருக்கும் நடவடிக்கையாக, திருநெல்வேலி, திருச்சி மாவட்டங்களில் 1,600 ஏக்கரில் சர்க்கரை வள்ளிக்கிழங்கு பயிரிடும் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டது. சர்க்கரை வள்ளிக்கிழங்கு மொத்த உற்பத்தியை 70,000 டன்களாக அதிகரிப்பதே இதன் முக்கிய நோக்கமாகும். இத் திட்டத்தின்கீழ் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 150 என்ற வீதத்தில் ரூ. 1,000 என்ற பேரளவுக்கு உட்பட்டுக் குறுகிய காலக் கடன்கள் வழங்கப்படுகின்றன. வட ஆற்காடு, ராமநாதபுரம் மாவட்டங்களில் கூடுதலாக 2,400 ஏக்கர் பரப்பளவில் இத் திட்டத்தை விரிவுபடுத்தக் கருதப்பட்டுள்ளது.

### பாக்கு.

நீலகிரியில் உள்ள கூடலூர், கல்லார், மதுரை மாவட்டத்தில் பெரியகுளம், கன்னியாகுமரி மாவட்டத்தில் கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டத்தில் குற்றாலம் ஆகிய இடங்களில் உள்ள ஐந்து நாற்று வளர்ப்பிடங்களில் தரமான கமுகுக் கன்றுகளை உற்பத்தி செய்து, வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுகின்றது. மூன்றாவது திட்டத்தில் இந்த நாற்று வளர்ப்பிடங்களிலிருந்து 2·84 லட்சம் நாற்றுகள் வழங்கப்பட்டன. 1968–69-ம் ஆண்டில் ஒரு லட்சம் நாற்றுகள் வழங்கப்பட்டன. 1969–70-ம் ஆண்டில் ஒரு லட்சம் நாற்றுகள் வழங்கவேண்டும் என்பது குறிக்கோள் அளவாக இருக்க, இதுவரையில் 74,000 நாற்றுகள் வழங்கப்பட்டுள்ளன. 1970–71-ஆம் ஆண்டில் ஒரு லட்சம் நாற்றுகளை வழங்கக் கருதப்பட்டுள்ளது. உரிய காலத்தில் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்காக, 1968–69-ல் 20 தெளிப்பான்கள் வழங்கப்பட்டன. 1969–70, 1970–71-ம் ஆண்டுகளில், ஒவ்வொரு ஆண்டிலும் 20 தெளிப்பான்கள் பாதி விலையில் வழங்கப்படும்.

### சிறு பாசனம் வேளாண்மைப் பொறியியல் நடவடிக்கைகள்.

தண்ணீரை நன்கு பயன்படுத்துவதன்மூலமும், இறைவைப் பாசன வசதிகளை விரிவுபடுத்துவதன்மூலமுமே மிகு பயன் தரும் பயிர்வகைத் திட்டம், உர வகைகளை அதிக அளவில் பயன்படுத்தும் திட்டம் ஆகிய உற்பத்திப் பெருக்கத் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும். எனவே, தனியார் குழாய்க் கிணறுகள், துளைக் கிணறுகள், வடிமுனைக் குழாய்க் கிணறுகள் ஆகியவற்றை வெட்டுவதற்கும், அரசு குழாய்க் கிணறுகள் அல்லது ஊருணிகளை அமைப்பதற்கும் நான்காவது திட்டம் வகை செய்கிறது. இத்திட்டங்களுக்கு கடன் வழங்கும் பொறுப்பு, நில வள வங்கிகள், வணிக வங்கிகள் முதலிய கடன் வழங்கு நிறுவனங்களிடம் மாற்றப்பட்டுள்ள போதிலும், குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கு அல்லது துளைக் கிணறுகளை ஆழப்படுத்துவதற்குத் தேவையான இயந்திரங்களையும் ரூ. 150 முதல் 500 வரையில் உள்ள வீதங்களிலோ, செலவில் 10 சதவீதமோ, இவற்றில் எது குறைவோ, அத்தொகையை உதவித் தொகையாக அரசு அளிக்கிறது. ஊருணியிலிருந்து நீர் இறைக்கும் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு, தற்போது வேளாண்மைப் பொறியியல் துறையிடம் உள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை, மாவட்ட



ஆட்சித் தலைவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றுவதுகுறித்து அரசு ஆலோசித்துள்ளது. இந்த ஆண்டின் தொடக்கத்தில் இம்மாநிலத்தில் நிலவிய வறட்சி நிலைமையில் காரணமாக கிணறுகளை ஆழப்படுத்தும் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகள் விரைந்து நிறைவேற்றப்பட்டன. 1968–69-ம் ஆண்டில் 854 கிணற்றுப் பணிகள் முடிக்கப்பட்டிருக்கிறது. 1969–ம் ஆண்டு டிசம்பர் இறுதி வரை 1,050 கிணறுகள் இத்துறையினால் ஆழப்படுத்தப்பட்டன. வேளாண்மை மறு கடன் கழகத்தின் உதவியுடன். தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் சிறு பாசனத்திட்டங்களை மும்முரமாக நிறைவேற்றுவதற்காக விரிவான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

நிலங்களைப் பண்படுத்துதல், சமன்படுத்துதல் ஆகிய பணிகளுக்காக உழவர்களுக்கு வாடகைக்கு அளிக்கும் பொருட்டு. 130 சங்கிலி சக்கர டிராக்டர்களும், 69 சக்கர வகை டிராக்டர்களும் துறையிடம் உள்ளன. ரஷ்யாவிலிருந்து ஒன்பது டிராக்டர்கள், அமெரிக்காவிலிருந்து 30 சங்கிலி சக்கர டிராக்டர்கள், பெங்களூரிலுள்ள பாரத் எர்த் மூவர்ஸ் லிமிடெட்டிலிருந்து இரண்டு சங்கிலி சக்கர டிராக்டர்கள், ஆறு களரக டிராக்டர்கள், ஆகியவை துறையிலுள்ள டிராக்டர்களுடன் சேர்க்கப்பட்டுள்ளன. குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கும், கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும், இத்துறையிடம் 97 விசைத் துளையிடு கருவிகள், 315 கையினால் துளையிடும் கருவிகள், 107 R. B· கருவிகள் ஆகியவை உள்ளன. கோயம்புத்தூர், சேலம், தென் ஆர்க்காடில் இடத்திற்கு ஒன்றாக மூன்று வெடி மருந்துக் கிடங்குகளை துறை ஏற்படுத்தியுள்ளது. குடியானவர்களுக்குத் தேவையான வெடி மருந்துகள் கிடைப்பதற்காக இந்த ஆண்டில் மேலும் மூன்று வெடி மருந்துக் கிடங்குகள் அமைக்கப்படும். வேளாண்மை இயந்திரங்களைச் செப்பனிடுவதற்காக (கோயம்புத்தூர், திருவாரூர், சென்னை ஆகிய இடங்களில்) மூன்று பணிக்களரிகள் செயல்படுகின்றன. திருச்சிராப்பள்ளியில் ஒன்று, வேலூரில் ஒன்று, மதுரையில் ஒன்று ஆக மூன்று பணிக் களரிகளை ஏற்படுத்துவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. பணிக்களரி கட்டும் பணி நடந்து வருகின்றது. செப்பனிடு கருவிகளுடன்கூடிய இரண்டு வலம் வரும் வண்டிகள் விரைவில் விடப்படும். தருமபுரி மாவட்டத்திற்குத் தனியான வேளாண்மைப் பொறியியல் உட்கோட்டம் ஒன்று ஏற்படுத்த ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இது விரைவில் செயல்படத் தொடங்கும். தமிழ்நாடு உற்பத்தி வளமன்றம், துறையின் வேளாண்மைப் பொறியியல் பிரிவுகுறித்து நன்கு ஆய்வு செய்த பிறகு, அதன் நடவடிக்கைகள் எவ்வாறு மேம்படுத்தப்படலாம் என்பது பற்றிய ஆய்வு அறிக்கையை இப்பொழுது அளித்துள்ளது. இந்த அறிக்கை அரசின் ஆலோசனையில் உள்ளது. பொறியியல் பிரிவின் சில நடவடிக்கைகளை வேளாண்மைத் தொழில் கழகத்திற்கு மாற்ற வேண்டுமென்பது, மன்றத்தின் முக்கியமான பரிவுரைகளில் ஒன்றாகும்.

டிராக்டர்கள், விசையேற்றங்கள் முதலிய பண்ணை யந்திரங்கள் வாங்குவதற்கு உதவி நிதி வழங்கி உதவ இம்மாநிலத்தில் உள்ள மற்றொரு நிறுவனம், வேளாண்மைத் தொழில் கழகமாகும். இக்கழகத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் முழுவதையும், மத்திய, மாநில அரசுகள் அளித்துள்ளன. வருங்காலத்தில் இக்கழகம் தனது நடவடிக்கைகளைப் பல்கூறுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### விதைகள்.

வேளாண்மையில், விதைத்தாள் மிகவும் முக்கியமானது. உரம் அதிக அளவு பயன்படுத்தப்பட்ட போதிலும், தரமற்ற விதைகள் நடப்பட்டால், உற்பத்தியைப் பெருக்க நாம் படும் பாடு முழுவதும் விழலுக் கிறைத்த நீராகும்.

அடிப்படையான விதைகளை உற்பத்தி செய்வதற்காக 1969–70-ம் ஆண்டில் 62 அரசு விதைப் பண்ணைகளை அரசு பேணி வந்துள்ளது. ஒவ்வொரு பண்ணையும் செயல்படுவதுகுறித்து ஒவ்வொரு அரை ஆண்டிலும் அரசு விரிவாக அறிக்கை வெளியிடுகின்றது. போதிய ஆதாயமின்றி செயல்பட்டுவந்த பண்ணைகளும், மேம்படுத்த இயலாத பண்ணைகளும் மூடப்பட்டு

விட்டன. பண்ணைகள் செயல்படுவதை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் பலனாக கடந்த சில ஆண்டுகளில் அந்தப் பண்ணைகள் மிகுந்த ஆதாயம் காட்டியுள்ளன. 1966–67, 1967–68, 1968–69-ம் ஆண்டுகளில் கிடைத்த மொத்த ஆதாயம் முறையே 1·64 லட்சம், 2·39 லட்சம், 7·61 லட்சமாகும்.

இதுவரையில் மூல விதைகளை உற்பத்தி செய்யும் பொருட்டு மாநில விதைப் பண்ணைகளைப் பேணி வந்தது தவிர அரசு இரண்டாம் நிலை விதைகளைத்தான், வாங்கி வழங்கி வந்துள்ளது. எனவே தனியாரால் குடியானவர்களுக்கு விற்கப்பட்ட விதைகளின் தரம்குறித்து அரசு மாநில அளவில் மேற்பார்வை அதிகாரம் எதையும் தன்னகத்தே வைத்திருக்கவில்லை. ஆயினும், 1966-ம் ஆண்டு விதைகள் சட்டம், 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம் தேதி அன்று செயலுக்கு வந்ததனால், இம் மாநிலத்தில் வழங்கப்படும் விதைகளின் தரத்தைக் கண்காணிப்பது அரசுக்கு இயன்றுள்ளது. வரையறுக்கப்பட்டுள்ள தரத்தில் உள்ள விதைகள் மட்டுமே இந்தச் சட்டத்தின்கீழ், உழவர்களுக்கு விற்கப்படலாம். தரமற்ற விதைகளை விற்பவர்கள் தண்டிக்கப்படத்தக்கவர்களாவர். தரமற்ற விதை உற்பத்தியாளர் போட்டியிட்டதனால், தரமான விதைகளை உற்பத்தி செய்துவந்த தனி நபர்கள் இதுவரையில் தங்களுடைய தரவிதை விற்பனையில் ஆதாயம் கிட்டாது தவித்தனர். தரமான விதைகளையும் தரமற்ற விதைகளையும் பகுத்துணர்ந்து கொள்ளும் வகையில் தரமான விதைகளுக்குச் சான்றளிப்பதற்கு திட்டம் எதுவும் இதுவரை இராமலிருந்ததே இதன் காரணமாகும். அத்தகைய உற்பத்தியாளர்கள் தங்களுடைய விதைகளுக்கு ஆதாயமான விலை பெறுவதற்கு இந்த விதைச் சட்டம் உதவிபுரியும். விதை வணிகத்தில் ஏராளமான தனியார் முனைவர்கள் தற்போது ஈடுபடுவர் என்று அரசு நம்புகிறது.

விதைகளுக்குச் சான்றளிக்கும் பணி இதுவரை தாமாகவே முன்வந்து செய்யும் அடிப்படையில், முறையின் மரபுப்படி தேசிய விதைகள் கழகத்தினால் செய்யப்பட்டு வந்துள்ளது. இந்தப் பணி, தற்போது விதைச் சட்டத்தின் கீழ் அரசினால் ஏற்படுத்தப்பட்ட விதைச் சான்றிதழ் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும். வேளாண்மைத் துறையினால் சான்றளிக்கப்பட்ட விதைகள், தூய்மைக்கும், தரத்திற்கும், உற்பத்தி வளத்திற்கும் உத்திரவாதம் பெற்றவையாகும். விதைகள் சட்டம் நிறைவேற்றப்பட்டதனால் விதைப் பரிசோதனைகுறித்த பணி அதிகரித்துள்ளது. கோயம்புத்தூரில் உள்ள விதைப் பரிசோதனை ஆய்வுக்கூடம் ஆண்டொன்றுக்கு 10,000 முதல் 12,000 மாதிரிகளைப் பரிசோதிக்கும் திறனுடையதாகும். 8,000 மாதிரிகளைப் பரிசோதிக்கும் அளவில் பணிச் சுமை உடனடியாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால் மதுரையில் 1970–71-ம் ஆண்டில் கூடுதலாக ஆய்வுக் கூடம் ஒன்று திறக்கப்படும்.

விதை உற்பத்தி குறித்த 1970–71-ம் ஆண்டுக்கான அரசுத் திட்டத்தில் தஞ்சாவூர் மாவட்டம் சாக்கோட்டையில் நெல் விதை பக்குவப்படுத்தும் பிரிவு ஒன்று ஏற்படுத்துவதும் குடுமியாமலையில் உள்ள மாநில வேளாண்மைப் பண்ணையில் சிறுதானிய விதை பக்குவப்படுத்தும் பிரிவு ஒன்று ஏற்படுத்துவதும் அடங்கும். விதைகள் இயந்திர முறையில் பக்குவப்படுத்தப்படுவதால் விதைகள் வீணாவது தடுக்கப்படுவதுடன், ஈரம், உற்பத்திவளம், தரம், கெடாத தன்மை ஆகியவை மேம்படுகின்றன நெல்லைப் பொறுத்தவரையில், திருவாரூரில், கூட்டுறவுத் துறையில் ஒரு பிரிவு செயலாற்றுகின்றது. இந்தப் பிரிவு, உழவர்களுக்கு வழங்குவதற்காக, இரண்டாம் நிலை விதைகளைப் பக்குவப்படுத்துகின்றது. சாக்கோட்டையில் நிறுவ எண்ணியுள்ள பிரிவு, அரசின்கீழ் பணிபுரியும். இது தஞ்சாவூர் மாவட்டத்திலும், தென் ஆர்க்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டத்திலும் உள்ள மாநில விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் (சுமார் 2,000 டன்கள்) மூல விதைகளைப் பக்குவப்படுத்தும். சிறு தானியங்களைப் பொறுத்த வரையில், நவலாக்கில் உள்ள அரசு விதைப் பண்ணையில், அரசு அதிகாரத்தின்கீழ் விதை பக்குவப்



படுத்தும் சிறிய பிரிவு ஒன்று உள்ளது. குடுமியாமலையில் உள்ள அரசு விதைப் பண்ணையில், 450 ஏக்கர் பெரும்பரப்பளவில் சிறு தானியம் பயிரிடப்படுகின்றது. இந்த பரப்பளவு அடுத்த சில ஆண்டுகளில் அதிகரிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே 1970–71-ம் ஆண்டில் சிறுதானிய விதை பக்குவப்படுத்தும் பிரிவு ஒன்றை குடுமியாமலையில் நிறுவக் கருதப்பட்டுள்ளது. மறைந்த மேன்மைதங்கிய முதல் அமைச்சரின் நன் முயற்சிகளால்தான் இப்பண்ணை மாநில அரசின் ஆளுகையில் கொண்டுவரப்பட்டு, இயந்திரங்களமைந்த பெரிய பண்ணையாக வளர்ந்துள்ளது. இந்த உண்மையை ஏற்றுக் கொள்ளும் வகையில், குடுமியாமலையில் உள்ள அரசு வேளாண்மைப் பண்ணைக்கு "அண்ணா பண்ணை" என்று பெயரிட அரசு முடிவு செய்துள்ளது.

## இரசாயன உரங்கள்.

ஆதாயமளிக்கத் தக்க வகையில் பயிர்கள் விளைவிப்பதற்கு இரசாயன உரங்கள் இன்றியமையாதனவாகும். மிகு பயன்தரும் தானிய ரகங்கள் பயிரிடும் திட்டத்தைச் செயலுக்குக் கொண்டுவந்த பிறகு, உரங்கள் குறித்த முக்கியத்துவம் பன்மடங்கு அதிகரித்துள்ளது.

1968–69-ம் ஆண்டுக்கு முந்திய ஆண்டுகளில் உரங்கள் கிடைப்பதில் இடர்ப்பாடு இருந்து வந்தது. 1968–69-ல் நிலைமை ஓரளவு மனநிறைவு அளிக்கத்தக்கதாய் இருந்தது. நமது வேளாண்மைச் செயல் திட்டங்கள் எவற்றிற்கும் இரசாயன உரங்கள் கிடைப்பதில் எந்தத் தட்டுப்பாடும் இல்லை. உள்நாட்டு உரத்தயாரிப்பாளர்கள், 1969-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதி முதல் தங்களது உற்பத்தி முழுவதையும் வெளிச் சந்தையில் விற்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். நவரைத் திட்டத்தின் தேவைகள், குறிப்பாக, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில், அரசால் ஆய்வு செய்யப்பட்டன. மத்திய உரத் தொகுப்பிலிருந்து 79,000 டன் யூரியா ஒதுக்கப்பட்டுள்ளது. 1970–71-ம் ஆண்டில் உரங்கள் கிடைப்பதில் இடர்ப்பாடு இருக்குமென்று தோன்றவில்லை. 1970–71-ஆம் ஆண்டுக்கான இம்மாநில உரத் தேவைகள் 1·75 லட்சம் டன் நைட்ரஜன் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பகுதியிலுள்ள உற்பத்தியாளர்கள் தங்களது உற்பத்தியிலிருந்து 85,000 டன் வழங்க உறுதி அளித்துள்ளனர். எஞ்சியத் தேவைகளைச் சமாளிக்கவும் அடுத்த ஆண்டு இறுதியில் முடை இருப்பிற்காகவும் மத்திய உரத் தொகுப்பிலிருந்து பழக்கத்தில் மிகுதியாக உள்ள யூரியா அல்லது அம்மோனியம் சல்பேட்டு வகைகள் வடிவில் 86,000 டன் ஒதுக்குமாறு வேண்டப்பட்டுள்ளது.

இம் மாநிலத்தில் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களும், தனி வணிகர்களும் உரம் வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். சில்லரை இருப்பு நிலையங்களின் எண்ணிக்கை 12,000 மாக உயர்ந்துள்ளது. இதன் வாயிலாக இம்மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள உழவர்கள் எளிதில் உரங்களை வாங்கிப் பயன்படுத்த வசதி ஏற்பட்டது.

உர வழங்கல் நிலையம் மேம்பட்டதன் விளைவாக, உழவர்கள் செலுத்த வேண்டிய விலை நியாயமானதுதானா என்பதுகுறித்து அரசு நாட்டம் செலுத்துகிறது. உரங்களின் விலை அதிகரிப்பதால் வேளாண்மை உற்பத்தி பாதிக்கப்படும் என்ற இந்த அரசின் கவலை இந்திய அரசுக்குப் பல தடவைகளில் தெரிவிக்கப்பட்டது. சார்புரைகள் பல அனுப்பியும்கூட, இந்திய அரசு, தனது 1969–70 வரவு-செலவுத் திட்டத்தில் உரங்கள்மீது அதிகரித்த ஆயத் தீர்வையை விதித்து, அதன் விளைவாக, மத்திய உரத் தொகுப்பு ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்படும் பெரும்பாலான உரங்களின் விலைகளை, 1969-ம் வருடம் மார்ச் மாதம் 1-ம் தேதி முதல் அத் தேதிக்கு முன்பிருந்த இருப்புகளின்மீதும்கூட சுமார் 10 சதவீதம் உயர்த்தியது. எனினும், இந்த அரசு தன்னிடம் உள்ள இருப்புகளுக்காக இந்த விலை உயர்வைச் செயலுக்குக் கொண்டுவரவில்லை. உண்மையாகக் கூறின் பழைய உர இருப்புகளைப் பழைய விலையிலேயே விற்ற ஒரே மாநிலம் தமிழ்நாடு ஒன்றுதான். எல்லா வகை உரங்களும் 1969-ம் வருடம் மார்ச் மாதம் 1-ம் தேதிக்கு முந்திய விலைகளில் 1969-ம் வருடம் நவம்பர்

மாதம் 30-ம் தேதிவரை வழங்கப்பட்டன. டை-அம்மோனியம் பாஸ்பேட்டு, பொட்டாஷ் மியூரியேட், என்.பி.கே. காம்ப்ளக்ஸ் (இவை யாவும் யூரியா அல்லது அம்மோனியம் சல்பேட்டு போன்று விரைவில் விற்பனையாகும் உரங்கள் அல்ல) போன்ற உர வகைகளுக்கு இச்சலுகை 1969-ம் வருடம் நவம்பர் மாதம் 30-ம் தேதிக்கு பிறகு 1970-ம் வருடம் மார்ச் மாதம் 31-ம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்தச் சலுகை விலை, எதிர்பார்த்ததுபோல், உழவர்கள் உரங்களை வாங்குவதற்கு ஊக்கமூட்டுவதாக இருந்தது. உரங்கள் வாங்கப்பட்டதுகுறித்த ஆய்வுரையைப் பார்த்தால் முந்திய ஆண்டுடன் ஒப்பிட்டுப்பார்க்கையில், ஏற்பட்டுள்ள அதிகரிப்பு. 1966–67-ல் 17 சதவீதமாகவும், 1967–68-ல் 13 சதவீதமாகவும், 1968–69-ல் 18 சதவீதமாகவும், 1969–70-ல் 25 சதவீதமாகவும் இருந்தது. மெட்ரிக் டன் அளவில் விற்பனை செய்யப்பட்ட அளவு, 1966–67-ல் 85,000 டன்னிலிருந்து 1969–70-ல் 1,36,000 டன்னாக உயர்ந்தது.

உரங்களை வாங்கும் அளவு அதிகரித்த போதிலும், பல உழவர்கள் பரிவுரை செய்யப்பட்ட உரவகைகளை அல்லது பரிவுரை செய்யப்பட்ட அளவிற்கு உரங்களை பயன்படுத்தாமல், தங்களுக்கு விருப்பமான வெவ்வேறு வகை உரங்களையும், உரங்களைக் குறைவான அளவிலும் பயன்படுத்திப் பெரும் அளவுக்கு விளைச்சல் கிட்டும் என்று நம்பிக்கொண்டிருக்கின்றனர். சில உழவர்கள் பரிவுரை செய்யப்பட்ட அளவைக் காட்டிலும் 40 சதவீதம் குறைவான அளவைப் பயன்படுத்தியுள்ளனர். வேறு சில உழவர்கள் பாஸ்பேட்டு, பொட்டாஷ் பாஸ்பேட்டு அல்லது பொட்டாஷ் உரத்தைப் பயன்படுத்தும் முறையை இன்னும் மேற்கொள்ளாமல் நைட்ரஜன் உரமே போதுமென்று இருக்கின்றனர். உரிய காலத்தில் போதிய அளவுக்கு உரங்கள் கிடைப்பதற்கு வகை செய்யப்படுவதன்மூலம், 1970–71-ம் ஆண்டில் உழவர்கள் உரப்பரிவுரைகளைச் சரிவரவும், முழுமையுமாகவும் மேற்கொள்ள அவர்களைத் தூண்டுவதில் நாட்டம் செலுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. மிகு பயன் தரும் தானிய ரகங்கள் பயிரிடப்படும் பகுதிகளில் இதுகுறித்து ஒரு சிறப்பு இயக்கம் தொடங்கப்படும். 1969–70 ஆண்டுகளுக்கான இலக்கங்களுக்கு 25 சதவீதம் அதிகமான உரங்கள் பயன்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதன்மூலம், 1970–71-ல் 5·25 லட்சம் கூடுதல் உணவு உற்பத்தி கிட்டும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

### மண்வளப் பரிசோதனையும் மண்வள வரைபடம் தயாரித்தலும்.

தேவையான எல்லா உர வகைகளும் போதிய அளவுக்கு உரிய காலத்தில் வழங்கப்பட்டாலும், நமது உழவர்களுக்குத் தங்களது நிலங்களுக்கும் பயிர்களுக்கும் தேவையான சத்து எது என்பதை நிச்சயித்தறியும் தொழில் நுட்ப உத்தி தெரியாமல் உள்ளது. மேலும், அந்தச் சத்துக்களை வழங்குகிற உரங்கள் எந்த வகையில் கலக்கப்பட வேண்டும் என்பதையும் அவர்கள் அறிய வழி எதும் இல்லாமல் உள்ளன. எனவே, நமது உழவர்கள் உரங்களைத் திறம்படவும், சீரான முறையிலும் பயன்படுத்துவதை அதிகரிப்பதற்கு, மண்வளப் பரிசோதனை இன்றியமையாததாகிறது. இம்மாநிலத்தில் மண்வளப் பரிசோதனை ஆய்வுக் கூடங்கள் 7 ஏற்கனவே செயல்பட்டு வருகின்றன. கோயம்புத்தூர், தஞ்சாவூர், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு, திருநெல்வேலி, மதுரை ஆகிய மாவட்டங்களில் மாவட்டத்துக்கு ஒன்றாக அவை இருக்கின்றன. தஞ்சாவூர் மாவட்டம் ஆடுதுறையில் உள்ள ஆய்வுக்கூடம் ஆண்டொன்றுக்கு 48,000 மண் மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்கிறது. ஏனைய ஆய்வுக்கூடங்கள் ஒவ்வொன்றும் ஆண்டுக்கு 15,000 மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்யும். மேலும், ஒரு ஆய்வுக் கூடம் சேலம் மாவட்டத்திலும் மற்றொன்று இந்திய-ஜெர்மனிய நீலகிரி மேம்பாட்டுச் செயல் திட்டத்தின்கீழ் நீலகிரியிலும் விரைவில் நிறுவப்படும். 1970–71-ல் இராமநாதபுரத்தில் ஒன்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மற்றொன்றும் ஆக இரண்டு புதிய ஆய்வு கூடங்கள் நிறுவப்படும். வலம்வரும் மூன்று மண்வள ஆய்வுக் கூடங்களை இம்மாநிலத்தில் நிறுவுவதற்குத் தேவையான வண்டிகளும் பிற சாதனங்



களும் இந்திய அரசிடமிருந்து பெறப்படும் என்றும், மாநில அரசு எதிர்பார்க்கிறது. கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருநெல்வேலி மாவட்டங்களில் செயல்படுகிற நிலையான ஆய்வுக்கூடங்களுடன் இந்த வலம்வரும் ஆய்வுக் கூடங்கள் இணைக்கப்படும். உழவர் ஒருவரின் பண்ணைக்காகத் தனிப்பட்ட மண்வளப் பரிசோதனையின் அடிப்படையில் குறிப்பிட்ட பரிவுரைகள் கிடைக்காவிட்டாலும், ஒவ்வொரு உழவரும் நல்ல பயிர் விளைச்சலைப் பெறுவதற்கென, தனது பகுதிக்குப் பொதுவாகத் தகுதியாயுள்ள ஏதாவதொரு உர முறையை மேற்கொள்ள இயல வேண்டும். இந்த நோக்கத்துடன் வேளாண்மைத் துறை மண்வள வரைபடத் திட்டமொன்றை மேற்கொண்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் எந்த அளவுக்கு மும்முரமாகவும் விரிவாகவும் மண்வள ஆய்வு செய்ய இயலுமோ அந்த அளவுக்கு மண்வள ஆய்வு செய்யத் துறை திட்டமிட்டுள்ளது. அதன்படி, தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒவ்வொரு ஐந்து ஏக்கருக்கு ஒரு மாதிரி என்ற வீதத்திலும், ஏனைய மாவட்டங்களில் ஒவ்வொரு 25 ஏக்கருக்கும் ஒரு மாதிரி என்ற வீதத்திலும் மண்வள ஆய்வு நடத்தப்படுகிறது. 1971-ஆம் ஆண்டு இறுதிக்குள் இப்பணி முடிவுறுவதுடன், தமிழ்நாடு முழுவதற்கும் ஒரு மண்வள வரைபடம் கிடைக்கும்.

### பயிர்ப் பாதுகாப்பு.

மிகு பயன்தரும் தானிய ரகங்கள் திட்டம், நவரை முனைப்புத் திட்டம், வேர்க்கடலை, பருத்திபோன்ற ஏற்றுமதிக்குரிய வாணிகப் பயிர்கள் குறித்த முனைப்புத் திட்டங்கள்போன்ற பல ஆர்வமிக்க பணித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதன் விளைவாகப் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. பூச்சிக் கொல்லி மருந்துகளையும், களை ஒழிப்பு மருந்துகளையும் பயன்படுத்துவதன்மூலம் தங்களது பயிர்களைப் பாதுகாப்பதில் உழவர்கள் அதிக ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளனர். இதனால் தரையில் இருந்துகொண்டே மருந்து தெளிக்கும் முறை அதிகரித்துள்ளது. வேர்க்கடலை, பருத்தி, நெல் போன்ற பயிர்கள்மீது கடந்த சில ஆண்டுகளில் விமானத்திலிருந்து மருந்து தெளித்ததால் நல்ல பலன்கள் கிட்டியுள்ளன. நடப்பு நிதியாண்டில், இதுவரை 1·87 லட்சம் ஏக்கர் பரப்பளவில் விமானத்திலிருந்து மருந்து தெளிக்கப்பட்டது. அடுத்த ஆண்டில் சுமார் 10 லட்சம் ஏக்கர் பரப்பளவில் விமானத்திலிருந்து மருந்து தெளிக்கும் பணியை மேற்கொள்ளத் திட்டமிடப்படுகிறது. கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரி-ஆராய்ச்சி நிலையத்தில் பயிர்ப் பாதுகாப்புத் துறையில் தொடங்கத் திட்டமிட்டுள்ள எம்.எஸ்ஸி. பாடமுறைக்கு இணைப்பாக விமானத்திலிருந்து மருந்து தெளிக்கும் பயிற்சிப் பள்ளி ஒன்றைத் துவக்குவதுகுறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. 1970–71 வரவு-செலவுத் திட்டத்தில் இதற்கென ரூ. 100 அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. பயிர்ப் பாதுகாப்பு இரசாயன மருந்துகள் இதுவரையில் துறையிலிருந்து 70 சதவீதக் சலுகை விலையில் வழங்கப்பட்டு வந்தன. உழவர்கள் பூச்சிக் கொல்லி மருந்துகளைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ளதாலும் விமானக் கட்டணங்கள்குறித்து 50 சதவீத உதவித் தொகையை இந்திய அரசு வழங்காததாலும் அடுத்த நிதி ஆண்டு முதற்கொண்டு, பூச்சிக் கொல்லி மருந்துகள்குறித்த சலுகையை நிறுத்திவிடுவதெனக் கருதப்படுகிறது. புன்செய் முனைப்புத் திட்டப்பகுதிகள் எவற்றில் இந்திய அரசு உதவித் தொகைகுறித்த செலவைத் தொடர்ந்து ஈடுசெய்கிறதோ அத்தகைய பகுதிகளைப் பொறுத்தவரையில், அவர்களால் ஏற்கப்பட்ட சலுகை வீதங்களில் பூச்சிக்கொல்லி மருந்துகள் வழங்கப்படும். 1969–70-ல் 1,589 தூவு கருவிகள் வாங்கப்பட்டன. மேலும் 1970–71-ல் 500 விசைத்தூவு கருவிகளை வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தரமான இரசாயன மருந்துகள் சந்தைக்கு வருவதை முறைப்படுத்தும்பொருட்டும், உழவர்களுக்குத் தரமான பூச்சிக் கொல்லி மருந்துகள் கிடைப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டும், கோவை, கோவில்பட்டி, ஆடுதுறை ஆகிய இடங்களில் பூச்சிக் கொல்லி மருந்து பரிசோதனை ஆய்வுக்கூடங்கள் மூன்று ஏற்கனவே உள்ளன. மேலும், ஒரு ஆய்வுக்கூடம் காஞ்சிபுரத்தில் விரைவிலேயே செயல்படத் தொடங்கும். மதுரையில் மற்றொரு ஆய்வுக்கூடத்தைத் தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

வில்லங்கச் சான்றுகளுக்குத் தேடுகூலி, ஆவணப் பதிவுக் கட்டணம் ஆகியவற்றில் கீழ்க்கண்ட சலுகைகளை வேளாண்மைக் காரியங்களுக்கான வங்கிக் கடன்களுக்கு சாதகமாக அரசு விரிவுபடுத்தியுள்ளது. இச்சலுகைகள் கூட்டுறவுகளுக்கு அளிக்கப்படும் சலுகைகளுக்கு இணையானது.

**ஆவணப் பதிவுக் கட்டணம்.**—ரூ. 5,000 வரைக்குமான கடன் தொகைக்கு அரைக் கட்டணமும், ரூ. 5,000-க்கு மேற்பட்ட கடன தொகைக்கு முழுக் கட்டணமும் வசூலிக்கப்படும். கடன் தொகை எவ்வளவாக இருப்பினும், அரிசனங்களுக்கு ஆவணப் பதிவுக் கட்டணம் எதும் இல்லை.

**வில்லங்கச் சான்றிதழ் தேடு கூலி.**—ரூ. 5,000 வரையிலான கடன் தொகைக்குத் தேடு கூலி கிடையாது. ரூ. 5,000-க்கு மேற்பட்ட கடன் தொகைக்கு முழுக் கட்டணம் வசூலிக்கப்படும். கடன் தொகை எவ்வளவாக இருப்பினும், அரிசனங்களுக்கு தேடு கூலி எதுவும் வசூலிக்கப்படமாட்டாது.

வாணிக வங்கிகளால் அளிக்கப்படும் வேளாண்மைக் கடன்களுக்கு முத்திரைத் தாள் கட்டணத்திலிருந்து விதிவிலக்கு அளிப்பது குறித்து இவ்வரசு மும்முரமாகப் பரிசீலித்து வருகிறது. தமிழ் நாடு வேளாண்மைக் கடன் நிவாரணச் சட்டத்தையும், தமிழ்நாடு வட்டிக்குக் கடன் கொடுப்போர் சட்டத்தையும் திருத்தி, மேற்கூறிய சட்டங்களின் கீழ் உள்ள விதித் துறைகளிலிருந்து வங்கிகளுக்கு விதி விலக்கு அளிப்பது குறித்தும் இவ்வரசு பரிசீலித்து வருகிறது.

வேளாண்மைக் கடன்களுக்கு உத்திரவாதம் அளிக்கும் திட்டம் ஒன்றைக் கொண்டுவர அரசு முன்வந்துள்ளது. இத்திட்டம் கன்னியாகுமரி, நீலகிரி மாவட்டங்களைத் தவிர்த்து, இம்மாநிலத்தின் எல்லா மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகிறது. இம்மாநிலத்தில் இந்த உத்திரவாதத் திட்டத்தின்கீழ் 11 பெரிய வணிக வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இத் திட்டத்தின்கீழ், வணிக வங்கிகள் விவசாயிகளுக்கு டிராக்டர்கள், விசையேற்றங்கள், எண்ணெய்ப் பொறிகள், உழவு கருவிகள் முதலிய வேளாண்மை யந்திரங்களை வாங்குவதற்கு 5 ஆண்டுகால கடன்கள் வழங்குகின்றன. வருவாய்த் துறை, மற்றும் வட்டார வளர்ச்சி அதிகாரிகள் கடன் வாங்குவோருள் நல்ல நிலையில் இருப்போரைத் தெரிந்தெடுத்து அவர்களிடமிருந்து மனுக்களைப் பெற்று, ஆய்வு செய்து வணிக வங்கிகளுக்குப் பரிந்தனுப்புகின்றனர். பிறகு அவற்றை வங்கிகள் பரிசீலித்து தகுந்த மனுதாரர்களுக்குக் கடன்களை வழங்குகின்றனர். தகுதியில்லாதவையென்று தெரியவரும் மனுக்களைத் தள்ளிவிடுவதற்கு வங்கிகளுக்கு உரிமை உண்டு. வங்கிகள் தம்மிடம் அரசு அதிகாரிகள் பரிந்துரை செய்து அனுப்பிய மனுக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கட்டாயம் எதுமில்லை. வங்கிகள் அளிக்கும் கடன்களுக்கு 100 சதவிகிதம் மாநில அரசு கடன் உத்தரவாதம் அளித்துள்ளது.

அரசிடமிருந்து கடன் உத்தரவாதம் எதுமின்றியேகூட, சில திட்டங்கள் வணிக வங்கிகளால் நிறைவேற்றப்படுகின்றன. அரசின் முழு நிர்வாக உதவியும் அவற்றுக்கு உண்டு என்பதில் ஐயமில்லை.

வேளாண்மைக் கடனுதவிக் கழகம் வங்கிகளின் கூட்டமைப்பாகும். இந் நிறுவனம் தமிழ்நாட்டில் கீழ்க்கண்டுள்ள இரண்டு திட்டங்களை முறையே ரூ. 109 லட்சம், ரூ. 443 லட்சம் செலவு மதிப்பீட்டில் நிறைவேற்ற கடன் வசதியை விரிவுபடுத்துவதற்கு முன் வந்துள்ளது:—

(1) திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் வட்டத்தில் உள்ள மணற்பாங்கான நிலங்களில் சிமிட்டிக் கற்கலவைத் தள அமைப்பு மூலம் நெல் சாகுபடிச் செய்யும் திட்டம்,

(2) தூத்துக்குடியிலும் அதைச் சுற்றிலும் உள்ள இடங்களில் உள்ள உவர் மண் நிலங்களை மேம்படுத்தி வாழைச் சாகுபடி செய்யும் திட்டம். இவ்விரு திட்டங்களுக்கும் வேளாண்மைக் கடனுதவிக் கழக நிறுவனம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இவை விரைவிலேயே நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.



## சிறப்பு வேளாண்மை மறு கடனுதவி கழகத்தின் வேளாண்மை வளர்ச்சித் திட்டங்கள்.

மாநிலத்தில் வேளாண்மை வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்காக ரூ. 72 கோடி செலவில் திட்ட அறிக்கையொன்று, வேளாண்மை மறு கடனுதவிக் கழகத்திற்கும் இந்திய அரசிற்கும் மாநில அரசால் பணிந்தனுப்பப்பட்டுள்ளது. பிற திட்டங்களோடு ஏறத்தாழ ரூ. 1,240 லட்சம் மொத்தச் செலவிற்கான இயந்திர முறையில் பண்ணைப் பயிரிடும் திட்டம், நிலம் பண்படுத்தும் திட்டம் ஆகிய திட்டங்களும் இத் திட்ட அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. இயந்திரப் பண்ணைத் திட்டம் மூன்று ஆண்டுக்கால அளவில் கீழ்க்காணும் 12 மாவட்டங்களுக்கு 3,000 டிராக்டர்களை பிரித்துக்கொடுக்கும் நோக்கமுடையது:—

(1) செங்கற்பட்டு.

(2) தென் ஆர்க்காடு.

(3) தஞ்சாவூர்.

(4) திருச்சிராப்பள்ளி.

(5) மதுரை.

(6) இராமநாதபுரம்.

(7) திருநெல்வேலி.

(8) கன்னியாகுமரி.

(9) சேலம்.

(10) தர்மபுரி.

(11) வட ஆர்க்காடு.

(12) கோயம்புத்தூர்

இத் திட்டத்தால் பயன்பெறும் பரப்பளவு 60,000 எக்கராகும். இன்றியமையாத இணைப்புகளுடன் ஒவ்வொரு டிராக்டருக்கும் செலவு தோராயமாக ரூ. 35,000 ஆகும். எனவே இத்திட்டத்தின் மொத்த மூலதனச் செலவு ரூ. 1050 லட்சம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. திட்டத்தில் பங்கேற்றுக் கொண்டுள்ள உழவர்கள் ஒவ்வொருவருக்கும் டிராக்டரும், துணைக் கருவிகளும் வாங்குவதற்காக, வேளாண்மை மறு கடனுதவிக் கழகத்திடமிருந்து மறு கடன் உதவி பெறுகின்ற நில வள வங்கிகள் ரூ.35,000 கடன் வழங்குகிறது. இயந்திரப் பண்ணைத் திட்டம் நற்போதுள்ள பண்ணை பயிர் முறைகளுக்கு உறுதுணையானதாகவே இருக்கிறது. இத் திட்டம் பயிர் உற்பத்தி முறையை மாற்றுவதன் வாயிலாகவும் பயிர் வேலைகள் உரிய காலத்தில் நடைபெற வகை செய்வதன் மூலமாகவும் செலவில் சிக்கனத்தையும் அதிக விளைச்சலையும், உழவர்களுக்கு அதிக ஆதாயத்தையும் தருகின்றது.

நிலத்தை பண்படுத்தும் திட்டத்தைப் பொறுத்தமட்டிலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் பரம்பிகுளம்–ஆழியாறு திட்டத்தின் கீழ் சுமார் 75,000 ஏக்கர் நிலத்தைப் பயன்படுத்த நிதி உதவும் திட்டமொன்று வேளாண்மை மறு கடனுதவிக் கழகத்தின் உதவியுடன் மாநில நில வள வங்கியால் மேற்கொள்ளப்பட்டு அண்மையில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது. முதற் கட்டத்தில் 85,000 ஏக்கர் பயன்படுத்தப்பட்டுள்ளது. திட்டப் பகுதியில் நீர்ப்பாசனத்தை விரிவு படுத்துவடன் ரூ. 190 லட்சம் செலவில், 32,000 ஏக்கரைப் பயன்படுத்துவதற்கு நிதி உதவ வகை செய்கின்ற திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை திட்ட அறிக்கையில் சேர்ப்பதற்குக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, தாராபுரம், பல்லடம் ஆகிய வட்டங்களில் நிறைவேற்றப்படவிருக்கின்றது. நிலம் பண்படுத்தப்படுவதன்

பலனுக, நில விளைச்சலில் குறிப்பிடத்தக்க மாறுதல் ஏற்படும் ஒவ்வொர் ஆண்டும் நல்ல விளைச்சலின் பயனைச் சாகுபடியாளர் நல்ல ஆதாயம் பெறுவார். மேலும், இந்த வளர்ச்சி நிலையானதாகவும், நிலத்தின் மதிப்பும் உயரும். நிறைவேற்றக் கருதியுள்ள இத் திட்டத்தால், நீர்ப்பாசன வசதிகளைக் காலதாமதமின்றிப் பயன்படுத்தி பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டத்தில் உள்ள ஆயக்கட்டுகளை உடனடியாகப் பண்படுத்த முடியும்; அப்பகுதியில் உள்ள உழவர்களின் வேளாண்மை வருமானமும், உணவு உற்பத்தியும் பெருகும்.

### வேளாண்மைக் கல்வி.

நம் நாட்டில் தற்பொழுது எட்டு வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் உள்ளன. வேளாண்மைப் பல்கலைக் கழகங்களினால் அடைந்து வரும் நன்மைகள் பலப்பல. சிறப்புச்சட்டம் ஒன்றின்கீழ், ஏற்படுத்தப்பட்ட தன்னாட்சி நிறுவனத்திடம், வேளாண்மை ஆராய்ச்சி, கல்வி, நேரிடைப் பயிற்சி ஆகியவற்றை ஒப்படைப்பதன் மூலம், கல்வி ஆராய்ச்சிப் பணிகளைச் சிவப்பு நாடா முறை பாதிப்பதாகச் சொல்லும் புகார்கள் குறையலாம். வேளாண்மைக் கல்வித் துறையில், வேளாண்மைப் பல்கலைக் கழகம் சுதந்திரமாகச் செயல்படும். அரசின் நிதிவாயில்கள் குறைவாக இருப்பதனால், அரசு நடத்தும் வேளாண்மை நிறுவனங்களுக்கு வகை செய்யப்படும் நிதிகளும் வழக்கமாகவே குறைவாக உள்ளது. வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஒன்றை அமைக்கும்போது வேளாண்மை வளர்ச்சியில் ஆர்வங்கொண்டுள்ள தனியார் அமைப்புகளிடமிருந்து பல்கலைக் கழகம் நிதி உதவி பெறலாம். எனவே கோயம்புத்தூரில் தற்பொழுது நிலவும் வசதிகளையும் இது குறித்து ஏற்கெனவே உருவாகியுள்ள உறுதியான எண்ணத்தையும் பயன்படுத்திக்கொண்டு, அங்கே வேளாண்மை பல்கலைக் கழகம் ஒன்றை அமைப்பதென கொள்கை முடிவொன்றை அரசு அண்மையில் எடுத்துள்ளது. இத்திட்டத்திற்காக ஐந்து ஆண்டுக் காலத்தில் இந்திய அரசின் மூலமாக ரூ. 2 கோடி கிடைக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான ஆக்கத் திட்டங்கள் முனைப்பாகத் தயாரிக்கப்பட்டு வருகின்றன; பல்கலைக் கழகம் அமைப்பதற்கு முன்னே, சட்டம் ஒன்று நிறைவேற்றப்படும்.

கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பிற்கான கூடுதல் வசதிகளுக்கு வகை செய்வதைக் கருத்திற்கொண்டு, கீழ்க்காணும் புதிய பணித் திட்டங்களைக் கொண்டு வருவது குறித்து பரிசீலிக்கப்படுகிறது:—

(1) கலப்பின முறையில் பயிர் வளர்ப்பு—மரபியல் துறையின் ஆய்வுப் பணியை விரிவுபடுத்துதலும் பரவலாக்குதலும்;

(2) மண்வள அறிவியற் துறையில் உள்ள வேளாண்மை குறித்த உயிர் வேதியல் பிரிவை நிறுவுதல்;

(3) வேளாண்மைப் பொருளாதார இயலில் பட்ட மேற்படிப்பை கூடுதலாகத் தொடங்குதல்;

(4) பட்ட மேற்படிப்பிற்காக வேளாண்மைப் புள்ளி விவர இயலில் விரிவுரையாளர்களை நியமித்தல்;

(5) நுண்ம உயிரியல் ஆய்வுத் துறையையும் (Microbiology), நுண்ணுயிரியல் ஆய்வுத் துறையையும் (Bacteriology Unit) ஏற்படுத்தல்;

(6) வேளாண்மை எம். எஸ். சி. பட்டம் பெறுதற்கு பயிர்ப் பாதுகாப்பியலில் மேநிலைப் பயிற்சி (Advanced Course);

(7) எம்.எஸ்.சி. பட்டம் பெறுதற்கு பண்ணையில் இயந்திர முறையில் பயிரிடும் பயிற்சி வகுப்பைத் தொடங்குதல்;

(8) மண்வள அறிவியல் துறையில் ஆய்வு முறைகளை விரிவுபடுத்துதலும் - பரவலாக்குதலும்.



மேற்சொன்ன பணித் திட்டங்கள், மத்திய அரசுப் பொறுப்பேற்கும் திட்டங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளதால, இத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக இந்திய வேளாண்மை ஆராய்ச்சி மன்றத்திடமிருந்து அனுமதி பெற அரசு ஏற்பாடு செய்து வருகிறது. கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரி—ஆராய்ச்சி நிறுவனத்துடன், நிலையான செடி உடற் கூறியல் பிரிவு (Plant Physiology) ஒன்றை இணைக்க வேண்டுமென்றும் 1970–71-இல் திட்டமிடப்பட்டது; மேற் சொன்ன நிறுவனத்தில், கதிரியக்க மரபுவழிப் பண்பியல் (Radiation genetics) ஆராய்ச்சி பிரிவு ஒன்றை நிறுவுவதற்கு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## ஆராய்ச்சி

### புதிய வகைகள்.

சென்ற ஆண்டில் ஆடுதுறை 27, ஐ. ஆர். 5, ஐ. ஆர். 8 போன்ற நெல் ரகங்கள் நல்ல விளைச்சலைத் தந்தது பற்றி முன்னமே குறிப்பிடப்பட்டது. குறிப்பாக ஐ.ஆர். 8 பயிரிடப்படும் நிலம், 1967–68-இல் 0·12 லட்சமாக இருந்தது, 1968–69-இல் 1·32 லட்சம் ஏக்கராகவும் 1969–70-இல் 7·66 லட்சம் ஏக்கராகவும் திடுக்கிடும்வண்ண உயர்ந்தது பற்றி ஆர்வத்துடன் குறிப்பிடுகையில், ஐ.ஆர். 8, ஏற்கெனவே நமக்கு தெரிந்துள்ள நல்ல விளைச்சல் தரும் ஏனைய நெல் ரகங்கள் இவற்றை மட்டுமே பரப்புவதுடன் இத்துறையாளர் இருக்கவில்லை. கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிறுவனமும், அதனுடன் இணைந்த ஆராய்ச்சி நிலையங்களும், நல்ல தரமான புத்தம் புதிய நெல் ரகங்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் தொடர்ந்து பாடுபட்டு வருகின்றது. "கருணை" என்ற தரப்படுத்திய ரகம் கண்டுபிடிக்கப்பட்டது. இது, ஐ.ஆர். 8, ஆடுதுறை 27 ஆகிய இரண்டின் கலப்பினமாகும். சிறிய குலைவுடு தானிய வகையாக இது உழவர்களுக்குக் கிடைக்கின்றது. இந்த வகை நெல், நீர் நிரம்பியுள்ளபோதும் தலை சாயாத் தன்மையையும், சமையலுக்கு உகந்ததாயும் உள்ளது. ஆடுதுறை 27 நெல் வகையின் விளைச்சல் ஏக்கர் ஒன்றுக்கு 1,824 கிலோ கிராம் என்றிருக்க, இந்த வகையின் விளைச்சலோ ஏக்கர் ஒன்றுக்கு 2,22[illegible] கிலோ கிராம் ஆகும். நல்ல தரம் வாய்ந்த அரிசி கொண்ட ஐ.ஆர். 20, கொள்ளை நோயை எதிர்க்கும் ஆற்றல் கொண்ட ஐ.ஆர். 28, தண்ணீரில் தலை சாயாத் தன்மையையும் மிக விளைச்சல் நல்கும் ஏனைய சில நெல் வகைகள் முதலியன குறித்து இத் துறை சோதனைகள் நடத்திக் கொண்டு வருகின்றது. மாண்புமிகு பொதுப்பணித் தலைவர் அவர்கள், நல்ல தானியத் தரமும், கொள்ளை நோயை எதிர்க்கும் ஆற்றலும் கொண்டுள்ள இரண்டு நெல் வகைகளின் கலப்பின விதைகளை பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து கொண்டு வந்தார். இவை குறித்தும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நெல் குறித்து மட்டுமே ஆராய்ச்சி நடத்தப்படவில்லை. பருப்புத் தானியங்களின்மீது வரும் நச்சு நோய்கள் பற்றி ஆராய்ச்சி நடத்துவதற்காக, ரூ. 2·32 லட்சம் செலவில், தமிழ் நாட்டில் மூன்றாண்டுக் கால அளவிற்கான திட்டமொன்றை, அரசு அனுமதியளித்துள்ளது. இதற்கான செலவில் பாதியை பி.எல். 480 நிதிகளின் கீழ், இந்திய அரசு ஏற்றுக்கொள்கிறது. சோளம், கேழ்வரகு, வரகு, மொச்சை, அவரை, எள், ஆமணக்கு, பேய் எள், நிலக்கடலை, சாம்பற் பூசணி, பறங்கிக்காய் ஆகியவற்றில் புதிய ரகங்கள் விரைவிலேயே வெளியிடப்படும். வானம் பார்த்த கருமணற் பகுதிகளில், "லட்சுமி" என்ற பருத்தி ரகத்துக்குப் பதிலாக, "பாரதி" என்ற தரமான புதிய பருத்தி ரகம் பயிரிடப்படுவதற்கு ஆயத்தமாகவுள்ளது. "லட்சுமி" ரகப் பருத்தி விளைச்சலைவிட, இந்தப் புதிய ரகம் 49 சத விதம் அதிகமான விளைச்சலைத் தரும். இம் மாநிலத்தில் உள்ள மண் வகைகள், பருவ காலங்கள், ஏனைய நிலைமைகள் ஆகியவற்றிற்கேற்ப புதிய ரகங்களை மேம்படுத்துவதில், வேளாண்மைத் துறையின் பங்கு கணிசமானது என்பதை மறுப்பதற்கில்லை.

## உழவர்களுக்குப் பயிற்சி

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கென இத்துறை மேற்கொண்டுள்ள மகத்தான திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட வேண்டுமானால், ஏராளமான உழவர்களை இத் திட்டங்களை நிறைவேற்றுவதில் பங்குகொள்ளச் செய்ய வேண்டும். தற்போதைய ஆராய்ச்சி மூலம் கண்டறிந்த முறைகளை அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதோடு புதிய உத்திகளைப் பின்பற்றுவதற்குத் தேவையான அறிவைப் பெறுவதில் அவர்களுக்குப் பயிற்சியும் அளிக்க வேண்டும். இந்த நோக்கத்தைக் கருத்தில் கொண்டு பவானிசாகர், ஆடுதுறை, ராணிப்பேட்டைக்கு அருகில் சத்திய விஜயநகரம் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்றாக, உழவர்களுக்குப் பயிற்சியளிக்கும் மூன்று நிலையங்கள், மத்திய அரசின் முழு நிதி உதவியுடன் இத் துறையினால் நடத்தப்படுகின்றன. அதுபோன்ற மற்றொரு நிலையம் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கோவில்பட்டியில் திறப்பதற்கு அண்மையில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. 1970–71-இல் நமது மாநிலத்தில் கூடுதல் நிலையங்களைத் திறப்பதற்கான செயற்குறிப்புகள் இந்திய அரசுக்கு அனுப்பப்படும்.

## பல்பயிர் கட்புல விளக்கம்—தேசிய கட்புல விளக்கம்

மேம்பாடான முறைகளில் பயிரிடுவது குறித்து உழவர்களுக்குக் கற்பிக்கும் நோக்கத்துடன், உழவர்களுக்குச் சொந்தமான நிலங்களில் 1968–69-ஆம் ஆண்டு முதல் பல்பயிர் கட்புல விளக்கப் பண்ணைகளை அமைக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. நல்ல மண்வளத்துடனும் நிலையான பாசன வசதியுடனும் உள்ள 5 ஏக்கர் நிலங்களில் இப் பண்ணைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இத் திட்டத்தின்கீழ் வரும் பயிர்கள் நெல், கோதுமை, சோளம், மக்காச்சோளம், காராமணிப் பருப்புவகை, வேர்க்கடலை, பருத்தி, கரும்பு ஆகியவையேயாகும். எந்த மாவட்டங்களிலும் வட்டாரங்களிலும் விற்பனையாகக்கூடிய உணவு தானியங்கள் மிகுதியாக உற்பத்திச் செய்யப்பட்டு மிகுபயன் தரும் பயிர் வகைகள் திட்டம் செயல்படுத்தப்படுகிறதோ அத்தகைய மாவட்டங்களில் இருந்தும் வட்டாரங்களிலிருந்தும் இத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான வட்டாரங்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றன. 1968–69-இல், மத்திய அரசின் 50 சத வீத உதவியோடு 250 கட்புல விளக்கங்கள் நடத்தப்பட்டன. செலவின் எஞ்சிய பகுதியை உழவர்கள் ஏற்றனர். 1969–70 முதல் இத் திட்டம், மாநிலத் திட்டத்தில் ஒன்றாகக் கருதப்பட்டு பயனடைகிற உழவர்களிடமிருந்து அத் திட்டத்திற்கான செலவில் 50 சத வீதத்தைப் பெறுவதன்மூலம் 110 கட்புல விளக்கங்கள் நடத்தப் பெற்றன. 1970–71-இல் இதுபோன்ற கட்புல விளக்கங்கள் மதுரை, திருச்சி மாவட்டங்களில், ரூ. 1·54 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் நடத்தப்படும். தேசிய கட்புல விளக்கங்களை நடத்துவதற்கான திட்டத்தின்கீழ், 1966–67-ஆம் ஆண்டில் 121 கட்புல விளக்கங்களும், 1967–68-இல் 65 கட்புல விளக்கங்களும், 1968–69-இல் 65 கட்புல விளக்கங்களும் நடைபெற்றன. இத்திட்டத்தின்கீழ் பல்பயிர் முறை அடங்குவதுடன், பயிர் மாற்று முறையில் முக்கிய உணவுப் பயிர்களை விளைவிப்பது குறித்தும் வலியுறுத்தப்படும். இதற்கான செலவு முழுவதையும் இந்திய அரசே ஏற்றது. 1970–71-இல், மிகுபயன் தரும் பயிர் வகைகளையும், முனைப்புப் பயிர் முறைகளையும் பயன்படுத்துவதன் மூலம், பல்பயிர் முறையை மேற்கொண்டு தேசிய கட்புல விளக்கத்தை நடத்துவதற்கான ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றுக்கு திட்ட ஆணைக்குழு இசைவளித்துள்ளது. இத் திட்டத்தின்கீழ், இம் மாநிலத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட மூன்று இடங்கள் ஒவ்வொன்றிலும் பணியாற்றுவதற்கென வேளாண்மைப் பொருளாதாரம், மண், இரசாயனம், பயிர்ப் பாதுகாப்பு, வேளாண்மைப் பொறியியல் ஆகியவை குறித்த நான்கு வல்லுநர்களை நியமிக்க வேளாண்மைத் துறை இயக்குநர் திட்டமிட்டுள்ளார். இத் திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு சுமார் ரூ. 4 லட்சமாகும். வேளாண்மைத் துறை இயக்குநரின் செயற் குறிப்புகள் அரசினால் தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.



## விற்பனை வசதி

உணவு தானியங்கள், வணிகப் பயிர் ஆகியவற்றை அதிகமாக உற்பத்தி செய்வதுடன், உணவு தானிய உற்பத்தியை முறைப்படுத்துவது, வாங்குவது, விற்பது ஆகியவற்றிற்கு வசதியாக சந்தைகள் நிறுவ வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். சிறந்த முறையில் விற்பனை செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்துடனும், நுகர்வோர் கொடுக்கிற விலையிலிருந்து தகுந்த பங்கை உற்பத்தியாளர், பெறுவது இயலும் பொருட்டும், முறைப்படுத்தப்பட்ட ஒன்பது சந்தைக் குழுக்கள் இதுவரை அமைக்கப்பட்டுள்ளன. இக் குழுக்கள் 100-க்கு மேற்பட்ட முறைப்படுத்தப்பட்ட சந்தைகளை ஏற்படுத்தியுள்ளன. 1970–71-இல் கூடுதலாக இவை போன்ற சந்தைகள் ஏற்படுத்தப்படும். உழவர்களின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்துடனும், தங்களது உற்பத்திப் பொருள்களின் தரத்தை மேம்படுத்த அவர்களைத் தூண்டும் நோக்கத்துடனும், 10 தரம் பிரிக்கும் நிலையங்கள் இதுவரை நிறுவப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டில் மேற்கொண்டும் 10 நிலையங்களை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. 1969–70 வரை, நெய், எண்ணெய் ஆகியவற்றைச் சோதனை செய்வதற்காகவும், அவற்றில் கலப்படம் செய்யப்படுவதைத் தவிர்க்கும் நோக்கத்துடன் அவற்றின் தரத்தைச் சோதிப்பதற்காகவும், இம் மாநிலத்தில் 10 தரம் பிரிக்கும் ஆய்வுக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அடுத்த நிதி ஆண்டில், வேலூரில் அது போன்ற மற்றொரு ஆய்வுக்கூடம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. திருப்பூர், ராஜபாளையம், பொள்ளாச்சி ஆகிய இடங்களிலுள்ள கப்பாஸ் பஞ்சு தரம் பிரிக்கும் நிலையங்கள் மூன்றும், விற்பனைக்கென கொண்டுவரப்படும் கப்பாஸ் பஞ்சை மதிப்பிடுவதிலும் அவைகளது தரத்தைக் கண்டறிவதிலும் பயனுள்ள வகையில் பணியாற்றி வந்துள்ளன. அடுத்த ஆண்டில், யூகலிப்டஸ் எண்ணெய், ஜெரானியம் எண்ணெய், தேன் ஆகியவற்றைத் தரம் பிரிப்பதற்கென உதகமண்டலத்தில் ஓர் ஆய்வுக்கூடம் நிறுவவும் அரசு கருதியுள்ளது.

மைசூர், பஞ்சாப் மாநிலங்களில் செயல்படும் விற்பனை வசதி வாரியம் போல தமிழ்நாட்டிலும் அலுவலர்களையும், அலுவலர் சார்பற்ற உறுப்பினர்களையும் கொண்ட ஒரு விற்பனை வசதி வேளாண்மை வாரியம் அமைப்பது குறித்து தமிழ்நாடு அரசின் பரிசீலனையில் உள்ளது. அந்த வாரியம் தலைமை வாரியமாக பல வேளாண்மை விற்பனைக் குழுக்களின் வேலைகளை ஒருமுகப் படுத்தவும், விற்பனையில் கூடிய மட்டும் ஒரே நிலையான தரத்தைக் காக்கவும் செயல்படும்.

## வேளாண்மைக் கிடங்குகளை மேற்கொண்டு நிறுவுதல்

மும்முரப் பயிர்ச் சாகுபடி முறைகளைப் பின்பற்றுவதற்குத் தேவையான விதைகள், பயிர் பாதுகாப்புக்கான இரசாயன மருந்துகள், மேம்பாடடைந்த உழவுக் கருவிகள் முதலியன போன்ற தேவையான பொருள்களைச் சேமித்து வைக்கவும், அவற்றைப் பகிர்ந்தளிக்கவும், தற்போது ஒரு வேளாண்மைக் கிடங்கு மட்டுமேயுள்ள வட்டாரம் ஒவ்வொன்றிலும் மேற்கொண்டும் ஒரு வேளாண்மைக் கிடங்கு இருப்பது அவசியமெனக் கருதப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ், நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், படிப்படியாக, ஆண்டொன்றுக்கு 50 கிடங்குகள் அமைப்பது என்ற வீதத்தில் 250 வேளாண்மைத் துணைக் கிடங்குகள் துவக்கப்பட வேண்டி வரலாமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது காரியத்திற்காக, திட்டத்தில் ரூ. 31·50 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ், கடந்த ஆண்டில் 50 துணைக் கிடங்குகள் துவக்கப்பட வேண்டுமென ஆணையிடப்பட்டது. மேற்கொண்டும் 50 துணைக்கிடங்குகள் ரூ. 2·10 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் 1970–71-இல் துவக்கப்படும்.

## இணைப்பு III

[....482-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## மானியக் கோரிக்கை-17 மீனளம்

## 1970–71-ம் ஆண்டின் வரவு—செலவுத் திட்ட மதிப்பீடு—ரூ. 1,75,40,600

---

### தமிழ் நாட்டில் மீனள வளர்ச்சி.

#### 1. நோக்கம்.

நீண்ட கடற்கரையும் பல எண்ணற்ற நீர்த் தேக்கங்களும் குளங்களும் நிறைந்துள்ள தமிழ் நாடு, கடல் மீன் வளமும் உள்நாட்டு மீன் வளமும் வாணிக முறையில் வளர்ச்சியடைவதற்கேற்ற வாய்ப்புக் கூறுகளைப் பெருமளவில் பெற்றுள்ளது. 77,700 சதுர கிலோ மீட்டர் பரப்பள விற்கு நிலப்பகுதியை அடுத்த கடற்பரப்பைக் கொண்ட சுமார் 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரை தமிழ் நாட்டில் உள்ளது. உள்நாட்டு நீர் நிலைகளின் பரப்பளவு 7,90,000 ஹெக்டேராகும். உணவு உற்பத்தியைப் பெருக்கும் சிறப்பான முயற்சியில் ஈடுபட்டிருக்கும்போது உணவிற்கும் வாழ்க்கைக்குமான இப் பரந்த வாயிலைப் பயன்படுத்திக் கொள்வது மிகவும் அவசியமாகும்.

இயந்திரப் படகுகளையும், நைலான் வலைகளையும், மீனையும் அது போன்ற யாவற்றையும் பாதுகாப்பதற்காக குளிர் சாதனப் பெட்டிகளையும் வழங்குவதன் மூலம், மீனவர்களுக்குப் பல வசதிகள் அளித்து மீன் உற்பத்தியைப் பெருக்குவதற்கு மீனளத்துறை உதவுகிறது. வீட்டு வசதி, மீனவர் கிராமங்களுக்குச் சாலைகள் அமைத்தல் போன்ற சமூக—பொருளாதார நலத் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மீனளத்துறை வளர்ச்சிக்காக 1968–69-ஆம் ஆண்டில் ஏற்பட்ட செலவையும் 1969–70, 1970–71-ஆம் ஆண்டுகளில் செய்துள்ள நிதி ஒதுக்கத்தையும் கீழேயுள்ள விவர அறிக்கையில் காணலாம்:—

| | மத்திய அரசின் உதவி பெறுபவை. (ரூ. லட்சத்தில்.) | மத்திய அரசு பொறுப்பிலுள்ளவை. (ரூ. லட்சத்தில்.) |
|---|---|---|
| 1968–69 .. .. .. | 81·02 | 4·33 |
| 1969–70 .. .. .. | 140·64 | 45·77 |
| 1970–71 .. .. .. | 136·84 | 88·76 |

#### 2. மீன் உற்பத்தி.

கடல் மீன் பிடிப்பின் ஆண்டு உற்பத்தி, 1951-ல் 0·44 லட்சம் டன்களி லிருந்து 1969-ல் 2 லட்சம் டன்களுக்கு மேல் அதிகரித்துள்ளது. 1968–69-ஆம் ஆண்டில் உள்நாட்டு மீன் பிடிப்பு 677 டன்கள் உயர்ந் துள்ளது. இதனால் உள்நாட்டு மீன் உற்பத்தி, 1,31,000 டன்களாக உயர்ந்தது. உள்நாட்டு நீர் நிலைகளிலிருந்து கிடைக்கும் மீன் உற்பத்தி அளவை 2,00,000 டன்களுக்கு அதிகரிப்பதும், கடல் நீர் வாயில்களி லிருந்து மீன் உற்பத்தி அளவை 3,00,000 டன்களுக்கு உயர்த்துவதும் நான்காவது திட்டத்தின் குறிக்கோள்கள் ஆகும். கடலோரப் பகுதிகளைக் கொண்ட 9 மாநிலங்களில், கடல் மீன் பிடிப்பைப் பொறுத்தவரை, தமிழ் நாடு இரண்டாவதாக உள்ளது.



மீன்பிடித் தொழிலில் ஈடுபட ஆர்வத்துடன் வருபவர்களுக்கு, மீன் பிடித் துறைமுகங்கள் அமைத்துத் தருதல், பனிக்கட்டி குளிர் சாதனப் பிரிவுகள், உறைய வைக்கும் பிரிவுகள் முதலியன போன்ற மீனைப் பதப் படுத்தும் இயந்திரங்களுக்கு வகை செய்தல், இயந்திரப் படகுகளைக் கட்டித் தருதலும், வழங்குதலும், நைலான் வலைகள் போன்ற மீன்பிடி கருவி கள் வழங்குதல். இயந்திரப் படகுகளை இயக்குவதற்கும், நவீன முறையில் மீன் பிடிப்பதற்கும் மீனவர்களுக்குப் பயிற்சி அளித்தல், மீனவர் கிராமங்களுக்கு சாலை வசதி அளித்தல், மீனவர்களுக்கு வீட்டு மனைகள் அளித்தலும், வீடுகள் கட்டித்தருதலும், கடன்களும், முன் பணமும் வழங்குவதன் மூலம் மீனவர்களுக்கான கூட்டுறவு நிறுவனத்தை வலுப் படுத்துதல், மனையில் செல்லும் போக்குவரத்து வண்டிகள் அளித்தல் முதலியன போன்ற தேவையான வசதிகள் அளிப்பது மூலம் மீனளத் துறை இவர்களுக்கு ஊக்கமளிப்பதால் கடல் மீன் உற்பத்தியையும், உள்நாட்டு மீன் உற்பத்தியையும் அதிகரிக்க இயலுகிறது.

#### 3. மீன்பிடி படகுகளை இயந்திரப் படகுகளாக்குதல்.

இரண்டாம் திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மீன் பிடி விசைப் படகுகள் திட்டம், அதனை அடுத்து வந்த எல்லாத் திட்டங்களிலும் மீனள வளர்ச்சித் திட்டத்தின் முக்கிய திட்டமாக இருந்து வந்துள்ளது. இத் திட்டத்திற்காகவென்றே திட்டச் செலவில் சுமார் 75 சதவீதம் ஒதுக்கப்படு கிறது. நான்காவது திட்டத்தில், மீனளத்துறையின் மூலம் 1,000 படகு களைக் கட்டி வழங்கவும், [illegible] நிதிக் கழகத்தின் உதவி யுடன் மீனவர் கூட்டுறவுக் கூட்டமைப்புகள் மூலம் 275 படகுகளைக் கட்டி வழங்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. இத் திட்டத்திற்கு 1968–69 ஆம் ஆண்டில் ரூ. 50 லட்சம் தொகை செலவிடப்பட்டுள்ளது. துறையைச் சேர்ந்த படகு கட்டும் தளங்கள் மூலம் 104 படகுகள் கட்டப்பட்டன 1969–70 ஆம் ஆண்டில் இதுவரை ரூ. 58 லட்சம் தொகை செலவிடப் பட்டுள்ளது. துறையைச் சேர்ந்த படகு கட்டும் தளங்களில் 140 படகுகள் கட்டப்பட்டுள்ளன. தனியார் படகு கட்டும் தளங்கள் மூலம் 80 படகுகள் கட்டுவதற்கும் திட்டமிடப்பட்டிருக்கிறது. 1970–71 ஆம் ஆண்டில் துறைத் தளங்களில் 115 படகுகள் கட்டத் திட்டமிடப்பட்டிருக் கிறது. 1970–71 ஆம் ஆண்டில் படகுகள் கட்டுவதற்காக ரூ. 94·26 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

#### 4. ஆழ்கடல் மீன் பிடிப்பு.

ஐம்பத்தெட்டு அடி நீளமுள்ள நான்கு ஆழ்கடல் மீன் பிடி இழு படகு களைக் கட்டி மீனவர்களுக்கு வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கல்கத்தாவில் உள்ள இரண்டு கப்பல் கட்டும் தளங்களில் இந்த இழு படகுகள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன. இதில் இரண்டு இழு படகுகள் 1970, ஏப்ரலில் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நான்கு இழு படகுகளை கட்டுவதற்காகும் செலவுக்கு நடப்பு ஆண் டில் ரூ. 16 லட்சமும், 1970-71 ஆம் ஆண்டுக்காக ரூ. 20 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

#### 5. மீனவர்களுக்குத் தேவையான மீன் பிடிப் பொருள்கள் வழங்கல்.

மீனவர்களுக்கு வழங்குவதற்காக 1968-69 ஆம் ஆண்டில் 9,415 கிலோ கிராம் நைலான் வாங்கப்பட்டது. இயந்திரப் படகுகளுக்கு வழங்குவதற்காக 1969-70 ஆம் ஆண்டில் 10,380 கிலோ கிராம் நைலான் முறுக்கு நூல் வாங்கப்பட்டது.

1970–71 ஆம் ஆண்டில் இயந்திரப் படகுகளுடன் சலுகை விலையில் நைலான் முறுக்குக் கயிறு வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்து செயல் படுத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது. 15,000 கிலோ நைலான் வாங்குவதற்காக ரூ. 6 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் நைலான் வாங்கி, ஈடுசெய் விலையில் அதைத் தன் உறுப்பினர்களுக்கு வழங்கும் வகையில் அவற்றிற்கு உதவித் தொகை வழங்க வகை செய்யும் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்நோக்கத்திற்காக 1970–71 ஆம் ஆண்டில் ரூ. 1 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 1968–69 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மொத்த செலவு ரூ. 1·62 லட்சமாகும். 1969–70, 1970–71 ஆம் ஆண்டுகளுக்கான மொத்த நிதி ஒதுக்கம் முறையே ரூ. 5·39 லட்சமும், ரூ. 7·00 லட்சமும் ஆகும்.

## 6. மீன் பண்ணைகள் அமைத்தல்.

1968–69 ஆம் ஆண்டில், பறங்கிப்பேட்டையில் ரூ 0·54 லட்சம் செலவில் மீன் பண்ணை ஒன்று அமைக்கப்பட்டது. பூங்கார், சாத்தனூர், மணிமுத்தாறு, பூண்டி, புத்தேரி, கோருகி, மஞ்சளாறு, வைகை ஆகிய இடங்களில் மீன் பண்ணைகளை அமைக்கும் பணி 1969–70 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளது. மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்வதற்காக மணிமுத்தாறு, பவானி சாகர் ஆகிய இடங்களில் தூண்டல் முறை மீனின் உற்பத்தி நிலையங்கள் கட்டப்பட்டுவரும் மீன் பண்ணைகள் 1970–71 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டு செயல்படத் தொடங்கும். தேவையான மீன் வளர்ப்பிடங்கள், மீன் வளர்ப்பு குளங்கள் ஆகியவற்றை ஏற்படுத்தும் பொருட்டு, திருச்சியிலும், கோயமுபுத்தூர் மாவட்டத்தில் மேலணையிலும், மீன் பண்ணைகளையும், மீன் வளர்ப்பிடங்களையும் 1970–71 ஆம் ஆண்டில் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அவலாஞ்சி, திருமூர்த்தி நீர்த்தேக்கங்களில் கெண்டை மீன் குஞ்சு பொரிக்கும் இடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இவை 1970–71-க்குள் முடிந்துவிடும். 1968–69-ல் ஏற்பட்ட செலவு ரூ. 0·18 லட்சமாகும். 1969–70, 1970–71 ஆம் ஆண்டுகளுக்கான நிதி ஒதுக்கம் முறையே ரூ. 4·52 லட்சம், ரூ. 3·04 லட்சமாகும்.

## 7. மீன் குஞ்சு உற்பத்தி.

இயற்கை நீர் நிலைகளிலிருந்து மீன் குஞ்சுகளைச் சேகரிக்கும் திட்டத்தினாலும், தூண்டல் முறையில் உற்பத்தி செய்யும் மீன் குஞ்சுகளினாலும் உள் நாட்டு நீர் நிலைகளில் மீன் குஞ்சு உற்பத்தி பெருகியுள்ளது. 1968–69 ஆம் ஆண்டில் 4·61 கோடி மீன் குஞ்சுகளும், 6·51 கோடி நுண்ணிய மீன் குஞ்சுகளும் வளர்க்கப்பட்டன. 1969–70 ஆம் ஆண்டில் நான்கு கோடி மீன் குஞ்சுகளும், 8 கோடி சிறு மீன் குஞ்சுகளும் வளர்க்கப்பட்டன. 1968–69 ஆம் ஆண்டில் வளர்க்கப்பட்ட மீன்களின் அளவு சுமார் 1·31 லட்சம் டன்களாகும். நான்காவது திட்டத்தில் இந்த அளவை இரண்டு லட்சமாக உயர்த்துவதற்காக மீன் குஞ்சுகள் வளர்ப்பை முழுமுரமாகப் பெருக்கி ஆண்டு ஒன்றுக்கு ஆறு கோடி மீன் குஞ்சுகளையும், ஒன்பது கோடி நுண்ணிய மீன் குஞ்சுகளையும் வளர்க்க வேண்டும் என்ற நோக்கேள் அளவை எய்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 1970–71 ஆம் ஆண்டில், ஆறு கோடி மீன் குஞ்சுகளையும், எட்டு கோடி சிறு மீன் குஞ்சுகளையும் வளர்த்து உள்நாட்டு நீர் நிலைகள் அனைத்திலும் நேரடியாகவும், ஊராட்சி மன்றங்கள் மூலமும் அவற்றை விடுவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மீனளத்துறையின் நிர்வாகத்தின்கீழ் உள்ள ஆறுகளிலும், ஏரிகளிலும் பொதுப்பணித்துறையைச் சேர்ந்த பாசன வாயில்களிலும் மீன் பிடிக்கும் உரிமைகள் 1965 ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டு களுக்கு உள் நாட்டு நீர் நிலை மீன் பிடிப்போர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, 1963, 1964 ஆம் ஆண்டுகளின் சராசரி ஏலத்தொகைக்கு 10 சதவீத அதிகரிப்புடன் குத்தகைக்கு விடப்பட்டன. சில மாறுதல்களுடன் இச்சலுகையை மேற்கொண்டு மூன்று ஆண்டுகளுக்கு 1970 முதல் தொடர்ந்து வழங்குவது குறித்து அரசு ஆலோசித்து, வருகிறது.





## 8. பயிற்சி.

கடலோரப் பகுதியிலுள்ள மாவட்டங்களுக்கு, மாவட்டத்திற்கு ஒரு பயிற்சி நிலையமாக 6 கடல் மீன் பிடி பயிற்சி நிலையங்கள் உள்ளன மேட்டூர் அணையில் உள்நாட்டு நீர் நிலை மீனவர் பயிற்சி நிலையம் ஒன்று உள்ளது. ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும் ஒரே நேரத்தில், 50 மீனவர்களுக்கு பயிற்சியளிக்கப்படுகின்றது. பயிற்சிக்கால அளவு பத்து தினங்களாகும். 1968–69-ல் இந்தப் பயிற்சி நிலையங்களில் உள்நாட்டு நீர் நிலைகளில் மீன் பிடிக்கும் 89 மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கும் 183 மீனவர்கள், இரண்டு அதிகாரிகள், இரண்டு யந்திரக் கம்மியர்கள் ஆகியோருக்கு பயிற்சியளிக்கப்பட்டது. 1969–70 ஆம் ஆண்டில் 350 மீனவர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. 1970–71ஆம் ஆண்டிலும் இந்த நிலையங்களில் 350 மீனவர்களுக்குப் பயிற்சியளிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. 1968–69 ஆம் ஆண்டில் ஏற்பட்ட செலவு ரூ. 6·02 லட்சமாகும். 1969–70, 1970–71 ஆம் ஆண்டில் ரூ. 2·33 லட்சமும், ரூ. 2·07 லட்சமும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது.

## 9. பனிக்கட்டி யந்திரப் பிரிவு, குளிர்சாதனப் பிரிவு, உறைய வைக்கும் பிரிவு

நாளொன்றுக்கு மொத்தம் 94 டன்கள் பனிக்கட்டி உற்பத்தி செய்யும் திறனுள்ள 21 பனிக்கட்டி யந்திரப் பிரிவுகள், மீன்களைக் கரை சேர்ப்பதற்கான பல்வேறு இடங்களில் கட்டப்பட்டு, துறையினால் இயக்கப்பட்டு வருகின்றன. கடலில் பிடிக்கப்படும் மீன்களைக் கரை சேர்ப்பதற்கான முக்கிய இடங்களிலும், உள் நாட்டு நிலையங்களிலும் குளிர் சாதன வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. மொத்தம் 150 டன்கள் மீன்களை உறைய வைக்கும் திறனுள்ள 27 குளிர்சாதன பிரிவுகள் இதுவரையில நிறுவப்பட்டுள்ளன. 1968-69 ஆம் ஆண்டு 10 பனிக்கட்டி யந்திரப் பிரிவுகள் கட்டப்பட்டு வந்தன. உறைய வைக்கும் பிரிவு ஒன்று கட்டி முடிக்கப்பட்டது. கட்டப்பட்டு வந்த 10 பனிக் கட்டி யந்திரப் பிரிவுகளும் 1969–70-ல் முடிக்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இந்தப் பிரிவுகள் முழுமையாகப் பயன்படுத்தப் படவில்லை என்பது கண்டறியப்பட்டது. எனவே, இந்த வசதிகளை பயன்படுத்திக்கொள்வதற்காகத் தனியார் தொழிற்சாலைகளுக்கு ஊக்கம் அளிக்கும்பொருட்டு எண்ணூரிலுள்ள உறைய வைக்கும் பிரிவு குத்தகைக்கு விடப்பட்டது. இந்திய-நார்வே திட்டத்தின்கீழ் 10 டன்கள் மீன்களை உறைய வைக்கும் திறனுள்ள உறைய வைக்கும் நிலையம் (Tunnel freezer) ஒன்றும், உறைய வைக்கப்பட்ட 50 டன் மீன்களை சேகரித்து வைக்கக்கூடிய குளிர் பதன அறை ஒன்றும், பனிக்கட்டியில் வைக்கப்பட்ட 50 டன் மீன்களை வைத்திருக்கக்கூடிய அறை ஒன்றும் மண்டபத்தில் கட்டப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு 2·5 டன் மீன்களை உறைய வைக்கும் திறனுள்ள உறை செய் தொழிற்சாலை ஒன்றும், உறைய வைக்கப்பட்ட 50 டன் மீன்களை சேகரித்து வைக்கக்கூடிய பனி அறை ஒன்றும் தூத்துக்குடியில் கட்டப்பட்டு வருகிறது. 1968-69-ல் இது குறித்து 1·77 லட்சம் செலவு ஏற்பட்டது. 1969–70 ஆம் ஆண்டிற்காகவும், 1970–71 ஆம் ஆண்டிற்காகவும், முறையே ரூ. 1·22 லட்சம், ரூ. 1·06 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 10. பதப்படுத்திய மீன்களை டப்பியில் அடைக்கும் பிரிவு.

பதப்படுத்திய மீன்களை டப்பியில் அடைப்பதற்காக, துறையினால் கட்டப் பட்ட தொழிற்சாலை, தனியார் தொழிற்சாலை ஒன்றுக்கு ஏலத்தில் குத்த கைக்கு விடப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலையில், மீன் மாவு தயாரிப்பது துணைத் தொழிலாக மேற்கொள்ளப்படுகிறது. நாளொன்றுக்கு 50 டன்கள் மீன்களை மீன் மாவாக மாற்றுவதற்கான மீன் மாவுத் தொழிற் சாலை ஒன்று இந்திய-நார்வே திட்டத்தின்கீழ் மண்டபத்தில் கட்டப்பட்டு வருகிறது. 1968–69 ஆம் ஆண்டில், கடற்கோரையிலிருந்து கூழ் தயாரிக்கும் தொழிற் பிரிவு ஒன்றை தூத்துக்குடியில் நிறுவுவதற்காக

ரூ. 11,000 செலவிடப்பட்டுள்ளது. 1969-70, 1970-71 ஆம் ஆண்டில் இத்தொழிற் பிரிவுகளைக் கட்டி முடிப்பதற்காக முறையே ரூ. 5·41 லட்சமும், ரூ. 1·62 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடியில், கடற்கோரையிலிருந்து கூழ் தயாரிக்கும் பிரிவைக் குத்தகைக்கு விடுவது குறித்து ஆலோசனை செய்யப்பட்டு வருகின்றது.

## 11. மீனவர் வேலைத் திட்டங்கள்.

பல ஆண்டுகளுக்குப் பின் முதல் தடவையாக, துறையின் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 100 வீடுகள் கட்டுவதற்காக ரூ. 1 லட்சம் தொகையை 1968-69 ஆம் ஆண்டில் அரசு அனுமதித்தது; இவற்றுள், 50 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. 1969-70 ஆம் ஆண்டில் இந்த 100 வீடுகளும் கட்டி முடிக்கப்பெறும். ரூ. 1 லட்சம் செலவில் இன்னும் 100 வீடுகள் கட்டுவதற்கு 1969-70 ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இந்த 100 வீடுகளும் 1970-71 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1969-70-ல் இத்திட்டத்திற்காக, ரூ. 1·08 லட்சம் தொகை செலவு செய்யப்பட்டுள்ளது.

இதைத் தவிர, புயல் நிவாரண நிதியிலிருந்து ரூ. 2·62 லட்சம் செலவில் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அம்மாபட்டினத்தில் 70 வீடுகள் கட்டுவதற்கு 1969-70 ஆம் ஆண்டில் அரசு அனுமதியளித்துள்ளது. 1970-71 ஆம் ஆண்டில் இந்த 70 வீடுகள் கட்டி முடிக்கப்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ரூ. 4 லட்சம் செலவில் தஞ்சாவூர் மாவட்டத்தில் இரண்டு அணுகுச் சாலைகள் கட்டுவதற்காக 1969-70 ஆம் ஆண்டில் அரசு அனுமதித்துள்ளது. மீனவர் குப்பங்களை இணைக்கும் சிறிய இணைப்புச் சாலைகளை அமைப்பதற்கு, சேலம் மாவட்டத்திற்கு ரூ. 53,600 தொகையும் அனுமதிக்கப்பட்டுள்ளது. 1970-71 ஆம் ஆண்டில் இப்பணிகள் நிறைவேற்றி முடிக்கப்பெறும். 1970-71 ஆம் ஆண்டில் ரூ. 25,000 செலவில் சேலம் மாவட்டத்தில், ஒரு சாலையை மேம்படுத்துவது என்றும் திட்டமிடப்பட்டுள்ளது.

மீன் பிடிக்கும்பொழுது அபாயத்தையும், எதிர்பாரா விபத்தையும், மீனவர்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளது. இதைக் கருத்திற்கொண்டு, கடலில் மீன் பிடிக்கும்பொழுது மரணமடைகின்ற மீனவர் ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும், கருணை மானியமாக ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது. மீனவர் சமுதாய நலனுக்காக அரசு அமைத்த துயர் தணிப்பு நிதியின்கீழ் ரூ. 1·50 லட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. இதுவரை, இயற்கையின் பேராபத்துக்களினால், பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு, ரூ. 0·47 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## 12. மத்தியத் திட்டங்கள்.

இந்த அரசின் விடா முயற்சியின் பலனாக, மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின்கீழ் ரூ. 210 லட்சம் செலவில், தூத்துக்குடியில் மீன்பிடி துறைமுகம் ஒன்றை அமைப்பதற்கு இந்திய அரசு முன்வந்து, அதற்கு 1968-69-ல் அனுமதியளித்துள்ளது என்பது நமக்குப் பெரும் ஆறுதல் அளிக்கும் செய்தியாகும். இதைத் தவிர, 1968-69-ல் இராமேசுவரத்தில் ஒன்றும், மண்டபத்தில் ஒன்றுமாக, இரண்டு மீன்பிடி தோணித் துறைகள் கட்டுவதற்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தோணித் துறைகளின் வேலை நடந்தேறி வருகிறது. 1968-69-ல் தூத்துக்குடியில் மீன்பிடித் துறைமுகம்—மீன்பிடி தோணித் துறைகள் ஆகியவை கட்டுவதற்கு ரூ. 4·33 லட்சம் தொகை செலவு செய்யப்பட்டது. 1969-70-ல் இத்திட்டங்களுக்கு ரூ. 45·77 லட்சம் செலவு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகைய பணிகளை நிறைவேற்றுவதற்காக, 1970-71 ஆம் ஆண்டில் ரூ. 88·76 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசுத் திட்டத்தின்கீழ் ரூ. 388 லட்சம் செலவில் சென்னையில் மீன்பிடித் துறைமுகம் கட்டுவதற்கு இந்திய அரசு அனுமதியளித்துள்ளது. சென்னை துறைமுகப் பொறுப்பாண்மைக் கழகத்தால்



இப்பணி ஏற்றுச் செய்யப் பெற்று வருகின்றது. இத்தகைய துறைமுகங்களையும் தோணித் துறைகளையும், கட்டி முடித்த பின்னர், தங்களுடைய இயந்திரப் படகுகளைக் கரை சேர்ப்பதாகும், நிறுத்துவதற்குமான வசதிகள் கொண்டு தனியார் தொழில் முனைவர்கள் இத்துறையில் தீவிரமாகப் பங்கேற்றுக்கொள்ளும் நிலை உருவாகும். தமிழ் நாட்டின் கடற்கரைப் பகுதியில் உள்ள முக்கியப் பகுதிகளில் மேற்கண்ட வசதிகள் வகை செய்யப்படுவதுடன், மீன்பிடித் தொழில் யகத்தான வளர்ச்சி அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 13. மீன் ஏற்றுமதி.

அரசினால் வகை செய்யப்பட்ட மீன்பிடி வசதிகளின் பலனாக, நடப்பு நிதி ஆண்டில், 1970 ஜனவரி முடிய, தமிழ் நாட்டின் துறைமுகங்களிலிருந்து ரூ. 2·04 கோடி பெறுமானமுள்ள மீன் ஏற்றுமதி செய்யப்பட்டது மற்றொரு சாதனையாகும். இதில், ரூ. 1·3 கோடி பெறுமான முள்ளா கருவாடும், ரூ. 0·81 கோடி பெறுமானமுள்ள உறைய வைக்கப்பட்ட கூனி இறால், சிங்கி இறால் மீன் வகைகளும், பெச்-டி-மெர் (beche-de-mer) கடல் மீன் [illegible] இறைப்பைகளும், தவளைக் கால்களும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

## 14. டீசல் இயந்திரத் தொழிற்சாலையை அமைத்தல்.

இறுதியாக, கடல் மீன்பிடி படகுகளில் பொருத்தப்படும் யான்மார் டீசல் இயந்திரத் தொழிற்சாலை (Yanmar Marine Diesel Engine Project) ஜப்பான் நாட்டின் ஒத்துழைப்புடன் சென்னைக்கு அருகில் நிறுவப்படத் திட்டமிட்டதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்திருப்பர். இத்திட்டம் சாத்தியமானது என்றே இந்திய அரசும், வெளிநாட்டு வல்லுநர்களும் கருதினர். எனினும் இத்திட்டம் இன்னும் தொடங்கப்படாதது பெருத்த ஏமாற்றத்தை அளிக்கிறது.

மீன்பிடித் தொழிலை வளர்க்கப் பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் இத்தருணத்தில், இத்தன்மையதானதொரு திட்டம் இன்றியமையாதது என்று சொல்லத் தேவையே இல்லை. தமிழ் நாட்டில் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான ஒப்பளிப்பையும், அனுமதியையும் விரைவில் அளிக்க வேண்டுமென்று இச் சந்தர்ப்பத்தில் இந்திய அரசிடம் வற்புறுத்திக் கூற விழைகின்றேன்.

## உள்ளடக்கம்


பக்கம்.

1. வினாக்கள்—விடைகள் .. .. 561—581

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள் : .. ..

(அ) இராதாபுரம் ஊராட்சிப் பகுதியில் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படாமையும் அதனால் ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகளும். 581

(ஆ) வத்தலக்குண்டில் பொதுக் கிணற்று நீரைப் பருகிய சிலரும், பூசாரிப்பட்டியில் உணவு விடுதியில் உணவு அருந்திய சிலரும் மரணம் அடைந்தது குறித்து .. .. 581—583

3. அரசினர் தீர்மானம் :

விதி 41 (3)-ஐத் தளர்த்தல் .. .. 583

4. கவன ஈர்ப்பு :

(அ) கோவை மாவட்டத்தில் பருவமழை தவறியதால் ஒத்திவைக்கப்பட்டிருந்த மூன்றாண்டுக் கடனைத் திருப்பிக் கட்டவேண்டிய நிலை .. 583—584

(ஆ) வட ஆற்காடு, மதுரை, கோவை, திருச்சி, இராமநாதபுரம், தஞ்சை, செங்கல்பட்டு, நெல்லை மாவட்டங்களில் பருவமழையின்மையும் அரசு கடன் வசூலை ஒத்திவைத்தலும். 584

(இ) வட ஆற்காடு, கோவை மாவட்டங்களில் பருவமழையின்மையும், துயர் தணிப்புப் பணிகள் துவங்க வேண்டியதன் அவசியமும் .. 584—585

5. அறிவிப்புகள் :

(அ) சட்டப்பேரவை சுதந்திராக் கட்சியின் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டதுபற்றி அக்கட்சித் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி .. 585—586

(ஆ) பேரவை அலுவல் குறித்து .. .. 646

6. மாண்புமிகு திரு. செ. மாதவன்மீது, திரு எஸ்.எஸ். வி. சித்தன் சாட்டியுள்ள குற்றச்சாட்டு குறித்து .. 586—592

7. தகவல் கோரல் :

நிலச்சீர்திருத்த மசோதாவின் தமிழ் மொழி பெயர்ப்பு உறுப்பினர்களுக்கு வழங்கப்படுவது குறித்து .. .. .. .. 592

8. 1970–71-ம் ஆண்டிற்கான நிதிக்கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) நிதிக்கோரிக்கை எண் 16—வேளாண்மை ..
(ஆ) நிதிக்கோரிக்கை எண் 17—மீனளம் ..
(இ) நிதிக்கோரிக்கை எண் 39—வேளாண்மை மூலதனச் செலவு.
} 592—646

9. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. 646—647

# தமிழ் நாடு சட்டப் பேரவை

## புதன்கிழமை, 1970 ஏப்ரல் 1.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி எண்கள் 608, 609, 610 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

### அரசு அலுவலகங்களில் தமிழ்

*621 வினா—**திரு. ம. பொ. சிவஞானம் :** மாண்புமிகு கல்வி சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழில் மட்டுமே நிர்வாகம் நடத்தப்பட்டு வரும் அரசு அலுவலகங்கள், தற்பொழுது எத்தனை, இலாகாவாரியாக ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** துறைவாரியாக 56 துறைத் தலைமை அலுவலகங்களும், 14 மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்களும் உள்ளன. துறை தலைமை அலுவலகங்கள் அவற்றின் மாவட்ட நிலை அலுவலகங்கள் மற்றும் சார்பு அலுவலகங்களிலும், மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்கள் அவற்றின் சார்பு அலுவலகங்களிலும் தமிழிலே நிர்வாகம் நடைபெற அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

மேலும் அரசின் தலைமைச் செயலகத்துப் பொதுத் துறையின் தமிழ் வளர்ச்சிப் பிரிவுகளிலும் செய்தி விளம்பரத் துறையிலும் ஏறத்தாழ கடந்த மூன்று ஆண்டுகளாகவே தமிழ்த் திட்டம் முழு அளவில் செயல்பட்டு வருகின்றது. நிதி சட்டம் நீங்கலான மற்றச் செயலகத் துறைகளிலும் பெரும்பான்மையாகத் தமிழே பயன்படுத்தப்பட வேண்டும் என்று கடந்த ஆண்டு இறுதியில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. நிதி, சட்டம் ஆகிய துறைகளிலும் கூட 1—1—1970 முதல் தமிழ்த் திட்டத்தின் முதல் நிலை துவக்கப் பெற அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனினும் மாநிலக் கணக்காய்வுத் தலைவர் அலுவலகத் தொடர்புடைய சம்பளப் பட்டியல், பயணப்படிப் பட்டியல் போன்ற நிதித் தொடர்புடைய பொருள்கள், மைய அரசு, மற்ற மாநில அரசுகள் ஆகியவற்றுடன் தொடர்பு கொள்ளல், சட்டம், தொழில் நுட்பம் குறித்த பொருள்கள், வெளி நாட்டினருடன் தொடர்பு கொள்ளல் ஆகியவற்றுக்கு ஆங்கிலத்தைத் தொடர்ந்து பயன்படுத்தலாம் என்று விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**திரு. ம. பொ. சிவஞானம் :** பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் கேட்டிருப்பது, "தமிழில் மட்டுமே நிர்வாகம் நடத்தப்பட்டுவரும் அரசு அலுவலகங்கள் தற்பொழுது எத்தனை, இலாகாவாரியாக ?" என்பதாகும். அமைச்சர் விடையளிக்கும்போது, 'தமிழில் நடைபெற' என்று சொல்லியிருக்கிறார்கள். நான் இங்கே தெரிந்துகொள்ள விரும்புவது—அரசாங்க அலுவலகங்களைப் பொறுத்த வரையில்—துறைவாரியாக எத்தனை அலுவலகங்கள் ஆங்கிலத்தைக் கைவிட்டுத் தமிழில் மட்டுமே நடைபெறுகின்றன என்பதைத்தான்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தமிழில் மட்டுமே நூற்றுக்கு நூறு நடைபெறுகிறது என்று எந்தத் துறையும் சொல்ல முடியாது. 100-க்கு 90, 100-க்கு 85, 100-க்கு 70, 100-க்கு 60 என்ற அளவுக்குத்தான் இப்பொழுது இருக்கிறது. இப்பொழுது அக்கவுண்டண்ட்-ஜெனரல் அலுவலகத்தோடு ஆங்கிலத்தில்தான் தொடர்பு

கொள்ளவேண்டியிருக்கிறது. சம்பளப் பட்டியல், பயணப்படி பட்டியல் போன்ற நிதித் தொடர்புடைய பொருள்கள்பற்றி ஆங்கிலத்தில்தான் தொடர்பு கொள்ளவேண்டியிருக்கிறது. வேறு மாநில அரசுகளோடு தொடர்பு கொள்ளும்போதும் ஆங்கிலத்திலதான் தொடர்பு கொள்ள வேண்டியிருக்கிறது. எந்த ஒரு துறையும் நூற்றுக்கு நூறு தமிழில்தான் நடைபெறுகிறது, ஆங்கிலத்தில் கடிதப் போக்குவரத்தே இல்லை என்று சொல்லுவதற்கில்லை. குறைந்த அளவில் இருக்கக் கூடும். தமிழில் நடைபெறுவதென்பது சில துறைகளில் 90 சத வீதம், சில துறைகளில் 80 சதவீதம், சில துறைகளில் 60 சத வீதம் என்ற அளவுக்கு இருக்கிறது. எந்த ஒரு துறையும் நூற்றுக்கு நூறு தமிழிலேயே நடைபெறுகிறது என்று சொல்லுவதற்கில்லை.

**திரு. கரு. சிமைச்சாமி :** தலைவர் அவர்களே, ஆட்சிச் சொற்கள்—அட்மினிஸ்ட்ரேடிவ் வேர்ட்ஸ் திட்டவட்டமாக—சந்தேகத்திற்கிடமில்லாமல்—வரையறுக்கப்பட்டுவிட்டனவா ? ஆட்சிச் சொற்களெல்லாம் தமிழில் இன்னும் கண்டுபிடிக்கப்படாமல் ஆராய்ச்சி நிலையிலேயே இருக்கிறதா ? இன்னும் ஆராய்ச்சி பண்ணிக்கொண்டிருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஏற்கனவே ஆட்சிச் சொல் அகராதியொன்று உருவாக்கப்பட்டு எல்லா அலுவலகங்களுக்கும் தரப்பட்டிருக்கிறது. அண்மையில் அது விரிவுபடுத்தப்பட்டு, மேலும் சொற்கள் சேர்க்கப்பட்டு, செம்மைப்படுத்தப்பட்டு, அச்சுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எல்லா அலுவலகங்களுக்கும் கொடுக்கவேண்டும் என்று 75,000 பிரதிகள் அச்சடிக்கப்படுகின்றன. அவை எல்லாத் துறைகளிலும் ஒவ்வொருவருடைய கையிலும் ஒன்று இருக்கவேண்டும் என்றும், அவர்களுக்கு ஐயப்பாடு ஏற்படும்போது, சொற்களைப் பயன்படுத்துவதற்கு எந்தத் தடங்கலும் இருக்கக்கூடாது என்ற நோக்கத்தோடும் புதிதாக அச்சடிக்கப்பட்டு வருகிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** ஆங்கிலத்தை ஒழித்துத் தமிழை மாத்திரம் அரசு அலுவலகங்களில் பயன்படுத்துவதனால் இந்த நாட்டிலிருக்கும் மொழிவாரி மைனாரிடியினராகிய மலையாளிகள், தெலுங்கர்கள் ஆகியவர்களுக்கு இடையூறுகள் ஏற்படும் ஆதலால், தமிழோடு ஆங்கிலமும் பயன்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஆங்கிலம் தான் பெரும்பகுதி பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதைத் தமிழாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப் போன்று எந்தச் சிறுபான்மையினரும் தங்களுக்குச் சங்கடம் இருக்கிறதாக இதுவரையில் அரசுக்குத் தெரிவிக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர்தான் தெரிவித்திருக்கிறாரே தவிர, யாரும் அப்படிப்பட்ட சங்கடங்கள் இருப்பதாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவில்லை.

**திரு. சு. துரைசாமி :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்றபோது, அக்கவுண்டென்ட்-ஜெனரல் ஆபீஸ் போன்றவற்றோடு ஆங்கிலத்தில்தான் தொடர்பு கொள்ள வேண்டியிருக்கிறது என்று தெரிவித்தார்கள். பொது மக்களோடு அரசாங்கத்திலிருந்து அல்லது இலாக்காவிலிருந்து தொடர்புகொள்ளக்கூடிய அந்தக் கடிதப் போக்குவரத்து தமிழில்தான் என்கிற முறை எந்த அளவு இதுவரை அமல்படுத்தப்படுகிறது ? அமல்படுத்த எவ்வளவு காலம் ஆகும் ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் முதலில் குறிப்பிட்டபடி, நிதி, சட்டம் நீங்கலான மற்றச் செயலகத் துறைகள் அத்தனையிலும் படிப்படியாகத் தமிழை ஆட்சிமொழியாக கொண்டுவரவேண்டும் என்பது வகுத்தப்பட்டிருக்கிறது. மாவட்டத்திற்கு மாவட்டம் அலுவலர்கள் எல்லாம்கூட நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். புதிதாக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு அலுவலர் வேண்டும் என்று தேர்ந்து



நியமிக்கப்பட்டு, அவர் ஒவ்வொரு அலுவலகத்திற்கும் சென்று பார்க்க வேண்டும் என்றும், கடிதப் போக்குவரத்து தமிழில் நடைபெறுவதை மேலும் ஊக்குவிக்க வேண்டுமென்றும் எடுத்துச்சொல்லப்பட்டு வருகின்றது. தமிழில் கடிதங்கள், எழுதுகிறவர்களுக்குத் தமிழில்தான் பதில் கடிதங்கள் இருக்கவேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டு அதுவும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. அதை மேலும் விரிவுபடுத்தவும், பரவலாக ஆக்கவும், தமிழை ஆட்சிமொழியாக ஆக்கும் சதவீதம் மேலும் வளருவதற்கான நடவடிக்கைகள் பலவும் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. ம. பொ. சிவஞானம் :** தலைவர் அவர்களே, ஆங்கிலத்தை மூலமாக வைத்துக்கொண்டு, அதனுடைய மொழிபெயர்ப்பாகத்தான் பெரும்பாலும் நடந்துகொண்டிருக்கிறது. ஆனால், தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் ஆகியதிலிருந்து தமிழுக்கு மாறுவது என்பதுதான் ஆட்சிமொழிச் சட்டத்தின் அடிப்படைக் குறிக்கோள் ஆகும். கட்டம் கட்டமாக மாறுவதைப் பற்றி மட்டும் குறிப்பிட்டார்கள். ஆனால், ஆண்டு 14 ஆகியும் இன்னும் நூற்றுக்கு நூறு தமிழ் என்ற நிலை ஒரு அலுவலகத்தில் கூட வர முடியவில்லையென்றால் நிச்சயமான கால வரம்பு எப்பொழுதுதான் வரும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, துவக்கப்பட்டுப் பதினைந்தாண்டுகள் ஆனாலும், தீவிரமாக இரண்டு, மூன்று ஆண்டுகளாகத்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் கொஞ்சம் தீவிரப்படுத்தும் முயற்சிகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் அலுவலகங்களில் ஊக்குவிக்கும் நிலைமைகளெல்லாம் ஏற்பட்டு வருகின்றன. மொழி பெயர்த்துத் தருவதிலும், எடுத்துக்காட்டாக விளங்கத்தக்க அளவுக்கு மாதிரித் தமிழாக ஏராளமாக இப்பொழுது மொழிபெயர்க்கப்பட்டு, தனித்தனியாக அச்சடித்து வழங்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இருந்த வேகத்தின் அளவை விட கொஞ்சம் அதிக வேகம் ஆண்டுக்காண்டு கூடும்போது மிக விரைவில் கொண்டுவருவதற்கு எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளலாம். ஆனால், இந்த நேரத்தில்தான் வந்துசேரும் என்று கூறுவதற்கில்லை. கூடுமான வரையில் விரைவுபடுத்தும் முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** தொழிலாளர் நல இலாகாவிலாவது உடனடியாக ஆணையரில் இருந்து கீழ் வரை தமிழில் நடைபெறும் ஏற்பாட்டை அரசாங்கம் செய்ய உத்தேசம் உண்டா ? லேபர் ஆபீசர் ரிப்போர்ட் மற்றவை எல்லாம் ஆங்கிலத்தில் வருவதனால் மூலமாக தொழிலாளர்கள் தமிழ்ப்படுத்திய பிறகுதான் புரிந்து கொள்ளும் நிலை இருக்கிறது. ஆகவே, அந்த இலாகாவிலாவது தமிழைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தொழிலாளர் நலத் துறையிலும் தமிழில் நடத்தப்பட வேண்டுமென்று உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு படிப்படியாகக் கொண்டு வரும் முயற்சியில் இருக்கிறார்கள். 40, 45, 50, 60 என்று சதவீதம் ஏறிக் கொண்டே இருக்கிறது. முதலில் கடிதப் போக்குவரத்து தமிழில் இருக்க வேண்டும், பிறகு துறைத் தலைமை அலுவலகத்தோடு சார்பு நிலையங்கள் தொடர்பு கொள்ளுகின்ற அளவுக்கும், பிறகு தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுகின்ற அளவுக்கும் படிப்படியாக தமிழைக் கொண்டு வரும் முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தாமதம் இல்லாமல் விரைவில் கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தொழிலாளர் நலத் துறையைப் பொருத்தவரை கமிஷனரிடமிருந்து அரசாங்கத்திற்திற்கு அனுப்புகின்ற அறிக்கைகள் வேண்டுமானால் ஆங்கிலத்தில் இருக்கலாமே தவிர, தொழிற்சங்கங்களுக்கு அனுப்புகின்ற அறிக்கைகள் எல்லாம் தமிழிலேதான் இப்போதே அனுப்பப்பட்டு வருகின்றன. அப்படி அனுப்பப் படவில்லை என்று ஏதாவது இருந்தால் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தமிழில் அனுப்ப தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

### நெமிலி [illegible] ஒன்றிய ஆரம்ப சுகாதார நிலையம்.

*622 வி.—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு கல்வி சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1961-ம் ஆண்டில், அரக்கோணம் தாலுக்கா, நெமிலி பஞ்சாயத்து யூனியனில் பிரைமரி ஹெல்த் சென்டர் ஒன்று அமைப்பதற்கென பொதுமக்கள் ரூ. 7,500 கொடுத்து, இடமும் கொடுத்துள்ளது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான கட்டடம் கட்டி முடிந்துவிட்டதா ?

(உ) இல்லை எனில், காரணமென்ன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ), (இ) & (உ) : நெமிலி பஞ்சாயத்து யூனியனில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்கு மக்கள் உரிய தொகையாக ரூ. 7,500, 1961-ம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப் பட்டது. ஆனால் மேற்படி நிலையம் கட்டுவதற்கான நிலத்தை இதுவரை அரசிற்கு வழங்காததால் சுகாதார குடும்ப நல இயக்குநரால் மேற்படி நிலையத்திற்கு கட்டிடம் கட்டுவதற்கான திட்டம் தயாரிக்கப்படவில்லை.

**திரு. நா. வீராசாமி :** நெமிலி பஞ்சாயத்தில் நிலம் கொடுக்கப்படவில்லை. எனவே, அமைச்சர் அவர்கள் கட்டடம் கட்டிக் கொடுக்க அனுமதி இல்லையென்று சொன்னார்கள். பொதுவாக தமிழ் நாட்டில் பிரைமரி ஹெல்த் சென்டர்கள் எல்லாம் சொந்தக் கட்டடங்கள் இல்லாமல் வாடகைக் கட்டடங்களில் இருக்கக் காரணம் செலவுக்கான படையெடுத்தபோது மத்திய அரசாங்கம் உதவியை நிறுத்திவிட்டதுதான். இப்போது மீண்டும் மத்திய அரசை அனுகி அவர்களிடமிருந்து பணத்தைப் பெற்று தமிழகத்தில் இருக்கும் எல்லா பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்கும் கட்டடம் கட்டித் தர நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மானியக் கோரிக்கை விவாதத்தின் போதே சொன்னேன். 121 ஆரம்ப சுகாதார நிலையங்கள் சொந்தக் கட்டடங்களைப் பெற்றிருக்கின்றன. 1962 முதல் 1966 வரை நெருக்கடி காரணமாகக் கட்டடங்கள் கட்டுவது நிறுத்தப்பட்டது. இந்த ஆண்டு 30 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்ட முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. எங்கே இடம் ஐந்து எக்கர் அளவுக்கு இருந்தாலும் பத்தாயிரம் ரூபாய் வரை பணமும் கொடுக்கிறார்கள். இதிலே மேலும் சங்கடம் எதுவும் இல்லாமல் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் பட்டு வருகின்றன.

### *Reservation of seats in colleges*

*623 Q.—THIRU K VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Health be pleased to state, whether the Government proposes to retain and observe the rules of reservation of certain percentage of seats for Scheduled Castes and Backward Classes in the matter of admission of students in Government Colleges?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஆம்.

**திரு. கே. விநாயகம் :** மெடிகல் கல்லூரிகளைப் போலவே டெக்னிகல் கல்லூரிகளிலும் பிற்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்ற அடிப்படையையும், மாவட்டத்திற்கு இவ்வளவு பர்சன்டேஜ் என்ற அடிப்படையையும் அனுசரிக்கக்கூடாது என்று ஹைகோர்ட்டில் தீர்ப்பு வந்திருக்கிறது. அதற்கும் இதற்கும் முரண்பாடாக இருக்கிறதே. இதை [illegible]



[illegible] போகிறார்கள் ? மெடிகல் காலேஜ், டெக்னிகல் காலேஜ்களை தவிர சாதாரண காலேஜ்களிலாவது இவ்வித ஜட்ஜ்மெண்டுக்கு இடம் தராமல் ஏற்கனவே இருக்கும் முறையை அனுசரிக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போன்று பிற்பட்ட வகுப்பினருக்கும் தாழ்த்தப் பட்ட வகுப்பினருக்கும் இடம் ஒதுக்கக்கூடாது என்று தீர்ப்பு வரவில்லை. மாவட்ட வாரியாக மருத்துவக் கல்லூரிக்கும் பொறியியற் கல்லூரிக்கும் இடம் ஒதுக்கக்கூடாது என்பதுதான் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு. பிற்பட்ட வகுப்பினருக்கும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் எந்த அளவுக்கு ஒதுக்க வேண்டுமோ அது ஒதுக்கப்பட்டு மாணவர்களும் வந்து சேருகிறார்கள். அந்த வகையிலே பள்ளி கல்வி இயக்குநரும், கல்லூரிக் கல்வி இயக்குநரும் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

**திரு. பி. துரைராஜ் :** தாழ்த்தப்பட்டவர்களையும், பிற்படுத்தப்பட்டவர்களையும் கல்லூரிகளில சேர்த்துக் கொள்ளுவதற்கான விகிதாசாரம் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்படுத்தப்பட்டது. தற்சமயம் ஏராளமான மாணவர்கள் சேருவதற்குக் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இந்த சதவிகிதத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்த சதவிகிதம் மக்கள் எண்ணிக்கை அடிப்படையில் வைக்கப்பட்டது. தாழ்த்தப்பட்டவர்களில் இருந்து ஒதுக்கப்பட்ட 16 சதவிகிதம் அளவுக்கே வந்து சேராத நிலை இருந்தது. இப்போது அந்த அளவுக்கு வந்து சேருகிறார்கள். மருத்துவக் கல்லூரிக்கு 16 சதவிகிதம் என்று ஒதுக்கியிருந்தாலும் அவர்கள் 'ஜெனரல் பூலில்' கூட 9 இடங்களைப் பெற்றிருக்கிறார்கள். பிற்பட்டவர்களுக்கு 25 சதவிகிதம் என்று ஒதுக்கப்பட்டிருந்தாலும் சென்ற ஆண்டுக் கணக்கைப் பார்க்கும்போது 41, 42 சதவிகிதம் அளவுக்கு வருகிறது. மருத்துவக் கல்லூரியை எடுத்துக் கொண்டால் 50 சதவிகிதத்தினர் பிற்படுத்தப்பட்டவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். பொறியியற் கல்லூரியில் 55, 56 சதவிகிதம் வருகிறது. இந்த சதவிகிதத்தை மேலும் உயர்த்த வேண்டிய அவசியம் இல்லை. குறைந்தது 25 சதவிகிதமே தவிர, உச்ச வரம்பு கிடையாது. பொதுவாக அந்த சதவிகிதத்திற்கு அதிகமாகவேதான் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

*624 Q.— THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether the Government propose to reserve larger number of seats in the Engineering Colleges from 1968 for students from other States?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தற்பொழுது அவ்வாறான செயற்குறிப்பு எதுவும் இல்லை. அவ்வாறான வேண்டுகோள்கள் வரும் பொழுது அவைகளை தகுதிக்கு ஏற்ப பரிசீலனை செய்யப்படும்.

**திரு. வை. சுவாமிநாதன் :** பொறி இயல் கல்லூரியில் இப்போது ஒதுக்கப்பட்ட இடங்களில் வெளி மாநிலங்களில் இருந்து யாரும் வந்து சேருவதில்லை. அந்த இடங்களில் நம்முடைய மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள வழி செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நம்முடைய மாநிலத்திலே ஓரளவு மாணவர்கள் எண்ணிக்கை குறைந்திருக்கிறது. மத்திய அரசு குறைக்கும்படி சொல்லியிருக்கிறது. 30 சதவிகிதம் அவர்கள் குறைக்க வேண்டுமென்று சொன்னாலும் ஐந்தாண்டுகளுக்குப் பிறகு நிலைமை எப்படி இருக்குமோ என்ற காரணத்தால் அந்த அளவுக்குக் குறைக்கவில்லை. பிற மாநிலங்களுக்கு ஒதுக்கப்படுகின்ற இடங்களும் ஆண்டுக்கு ஆண்டு பெருகியிருக்கிறது. சிங்கப்பூர், மலேயா, பிஜித் தீவு போன்ற இடங்களிலிருந்து வருகின்ற மாணவர்களை எடுத்துக் கொள்வதற்காக அந்த இடங்கள் [illegible]

ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஐ.ஐ.டி. இந்திய அரசாங்கத்தின் உதவி பெற்று நடத்தப் பெறுவதிலும் பிற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். ரீஜினல் எஞ்சினியரிங் காலேஜிலும் 50 சதவிகிதம் பிற மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கும், 50 சதவிகிதம் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கும் ஒதுக்கியிருக்கிறார்கள். 180 இடங்களில் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு 90 இடங்கள், பிற மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு 90 இடங்கள், பிற மாநிலத்தில் இருப்பவர்கள் இங்கு வந்து கல்லூரியில் சேர்ந்து படிப்பதில் சங்கடங்கள் இல்லை; இடம் வேண்டுமென்ற கோரிக்கையும் வரவில்லை.

### பெரியநாயக்கன்பாளையத்துக்கு குடிநீர் வசதி

*625 வினா.—திரு. இரா. மாணிக்கவாசகம்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொண்டாமுத்தூர் தொகுதியிலுள்ள, பெரியநாயக்கன் பாளையம் பஞ்சாயத்து குடிதண்ணீர் பிரச்னையைத் தீர்க்க பஞ்சாயத்து மூலமாகவும், ஊர் பொதுமக்கள் சார்பாகவும் கோரிக்கை வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வந்துள்ளது?

(உ) அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) 1969-ம் ஆண்டு ஜூன் மாதம் 10-ம் தேதியிலும் 1969-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 21-ம் தேதியிலும் ஊராட்சித் தலைவர் மூலம் பொதுப்பணித்துறை அமைச்சரிடம் கோரிக்கைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

(உ) கோரிக்கைகளை நிறைவேற்ற இப்பொழுது வாய்ப்பு ஏற்படவில்லை.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பெரியநாயக்கன் பாளையத்திற்குப் பவானி ஆற்றில் இருந்து தண்ணீர் கொடுக்கும் திட்டம் தயாரிப்பதாகக் கேள்வி. அந்தத் திட்டத்தை இந்த ஆண்டு கொண்டு வர அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: ஊராட்சி மன்றத் தலைவர் பவானி ஆற்றுத் தண்ணீரில் தங்களுக்கும் பங்கு வேண்டுமென்று கேட்டார்கள். அதிலிருந்து தண்ணீர் கொடுப்பதற்கான கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. சிங்காநல்லூருக்குக் குடிதண்ணீர்த் திட்டத்திற்காகக் குந்தாவிலிருந்து திட்டம் தீட்டப்படுகிறது. அந்தத் திட்டம் வரும்போது சிங்காநல்லூரின் பக்கத்துப் பகுதிகளுக்குத் தண்ணீர் கொடுப்பதோடு பெரியநாயக்கன்பாளையத்திற்கும் கொடுக்க முடியுமா என்பது பற்றி அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. எம். பூபதி: அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது குந்தா நீர்த் தேக்கத்திலிருந்து மற்றப் பகுதிகளுக்கெல்லாம் தண்ணீர் கொடுக்கப்படும், சிங்காநல்லூருக்குக் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். ஆகவே அந்த விஷயம் உடனடியாக அமல் நடத்தப்படுமா? தண்ணீர் அதிகமாகத் தேங்கிக் கிடக்கிறது என்று மத்திய சர்க்காரே ஒத்துக்கொண்டு நம் அரசுக்கும் அதைச் சொல்லியிருக்கிறதே. ஆகவே அதுகுறித்து உடனடியாக அந்த நீர்த் தேக்கத் தண்ணீரை குடிநீருக்காவது உபயோகப்படுத்த உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: குந்தாவிலிருந்து குடிநீர் கொண்டுவருகிற முயற்சிதான் ஆராயப்பட்டு வருகிறது. எல்லாத் துறையினரின் ஒப்புதல் பெற்ற பிறகுதான் நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும். எதற்கும் ஒரு ஆல்டர்னேட்டிவ் திட்டம் இருக்க வேண்டுமென்பதற்காக அதற்கு அனுமதி கிடைக்காத ஒரு சூழ்நிலை ஏற்படுமானால் பவானியில்



இருந்து கொண்டுவருகிற அத்தகைய திட்டமும் ஆராய்ச்சி செய்யப்படுவதற்காக உருவாக்கப்பட்டிருக்கிறது. இப்போது குந்தாவிலிருந்து குடிநீர் கொண்டுவருகிற முயற்சிதான் இருக்கிறது. மின்சாரத் துறை, பொதுப் பணித் துறை போன்ற பல துறைகளிலிருந்து கண்டு ஆராய்ந்து அதற்குப் பிறகு வரவேண்டியிருக்கிறது. விரைவாக நடவடிக்கைகள் எடுக்கும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆராயப்பட்டு வருகிறது.

### *Visit of Banking Commission to Madras*

*626 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) Whether the Banking Commission Chairman and Members visited Madras about 16th February, 1970; and

(b) if so, whether the State Government had any talks with them?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) ஆம்.

(இ) ஆம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: இந்த வங்கித் தொழில் பற்றிய ஆணைக் குழு தலைவர் அவர்களிடத்திலும், உறுப்பினர்களிடத்திலும் இந்த அரசாங்கம் எந்த அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் நடத்தியது? இந்த ஆணைக்குழுவிடம் நிதி ஒதுக்கீடு பற்றியும், வட்டி வீதங்கள் பற்றியும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதா? ஆம் எனில் அதன் விவரங்கள் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: 1969-ல் பாங்குகள் தேசியமயமாக்கப்பட்டன. அதை அமல்படுத்துவதில் சில மாற்றங்கள் செய்வதற்காக இந்தக் கமிஷன் நியமிக்கப்பட்டது. இதன் வேலைகள் பற்றி ஆங்கிலத்தில் படிக்கிறேன்,

The terms of reference to the Banking Commission are as follows:—

(i) to enquire into the existing structure of the Commercial banking system, having particular regard to size, dispersion and area of operation and to make recommendations for improving the structure:

(ii) to make recommendations for extending the geographical and functional coverage of the commercial banking system;

(iii) to make recommendations for improving and modernising the operating methods and procedures and the management policies of commercial banks;

(iv) to examine the cost and capital structure and to review the adequacy of available surplus and reserves, having regard to the developmental needs of the banking system and to make recommendations in the light of the findings;

(v) to review the existing arrangements relating to recruitment, training and other relevant matters connected with manpower planning of bank personnel and to make recommendations for building up the requisite professional cadre of bank personnel at all levels of management.

(vi) to review the working of co-operative banks and to make recommendations with a view to ensuring a co-ordinated development of commercial and co-operative banks, having regard in particular to (ii) above;

(vii) to review the role of various classes of non-banking financial intermeditries, to enquire into their structure and methods of operation and to recommend measures for their orderly growth;

(viii) to review the working of the various classes of indigenous banking agencies such as Multanis and shroffs, evaluate their utility in the money market complex and to make recommendations in the light of the finding;

(ix) to review the existing legislative enactments relating to commercial and co-operative banking;

(x) to make recommendation on any other related subject matter as the Commission may consider germane to the subject of the enquiry, on any related matter which may be specifically referred to the Commission by the Government.

கடந்த மாதம் நம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களிடத்திலும் மற்ற அமைச்சர்களிடத்திலும் பேச்சு வார்த்தை நடத்தினோம். அப்போது பொதுவாக நம் தொழில்களுக்கு பாங்குகள் பணம் கொடுக்க வேண்டிய முறைகள் பற்றியும், விவசாயத் துறைக்காக செய்யவேண்டிய முறைகள் பற்றியும் தேசியமயமாக்கப்பட்ட பாங்குகள் அந்தந்த பிராந்திய உணர்வுகளின் அடிப்படையில், அங்காங்குள்ள தலைமையின் அடிப்படையில், பம்பாய், கல்கத்தா போன்றவைகளை தலைமையிடமாகக் கொள்ளாமல் நமக்கும் அதனால் அனுகூலம் கிடைக்கும் முறையிலும் பல கருத்துக்கள் கொண்ட அறிக்கையை வைத்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி எண் 627.

**திரு. கே. விநாயகம்:** கேள்வி நேரமே வேண்டாமே. ஸ்டேட்மெண்ட் ரீஸ் போட்டு நம் நாட்டுக்கு எது நல்லது என்பதைக் கேட்க விடமாட்டேன் என்கிறீர்களே. I must catch your eye. I caught it. Your eye wants to elude. You have seen me and you have not called me. What can I do?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 234 உறுப்பினர்களைக் கையைத் தூக்குகிறார்கள். 234 கைகளை என் கண்கள் பார்க்கின்றன. அதனால் எல்லோருக்கும் துணை வினா கேட்க வாய்ப்புக் கொடுக்க முடியாது.

**திரு. கே. விநாயகம்:** கன்னீர், பிரைமரி ஹெல்த் சென்டர் போன்றவற்றில் வைத்துக் கேள்வி கேட்கிறீர்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியின் முக்கியத்துவத்தை அறிந்துதான் சில கேள்விகளுக்கு இடம் கொடுத்து வருகிறேன். அமைச்சர் அவர்கள் விரிவாக விளக்கமாகப் பதில் கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. கே. விநாயகம்:** அவர்கள் 'டேர்ம்ஸ் ஆஃப் ரெஃபரன்ஸ்' பற்றித்தான் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்தக் கேள்விக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்பது எனக்குத் தெரியும். உங்கள் உருவமே எனக்கு நன்றாகத் தெரியும். தெரியாத அளவில் சின்ன உருவம் அல்ல. தெரிந்

தால் கொடுத்துவிட வேண்டும் என்பதில்லை. எல்லாரும் கையைத் தூக்கினால் எல்லோருக்கும் அனுமதி கொடுக்க முடியுமா ? கேள்வி நேரம் ஒரு மணி நேரம் என்றிருக்கிறது. அது வேண்டாம், எவ்வளவு மணி நேரம் வேண்டுமானாலும் கேள்வி நேரத்திற்கு வைத்துக் கொள்ளலாம் என்றால் விதியை மாற்றுங்கள். தூக்கிய கை ஓய்கிற வரையில் கேள்விகளை அனுமதிக்க வேண்டுமென்று விதியை மாற்றுங்கள். எவ்வளவு உறுப்பினர்கள் துணைக் கேள்விகள் கேட்க விரும்புகிறார்களோ அவர்களுக்கு வாய்ப்பு கொடுத்த பிறகுதான் அடுத்த கேள்விக்குப் போக வேண்டுமென்றால் அதற்கான முறையில் விதியை மாற்றுங்கள். அப்போது எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் போகலாம். அப்படிச் செய்யுங்கள். அதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை.

**திரு. கே. விநாயகம் :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். நம் விதியில் குறைந்தது ஒரு மணி நேரம் கேள்விக்காக செலவிடவேண்டுமென்றுதான் இருக்கிறது. அது மினிமம். மாக்ஸிமம் லிமிட் இவ்வளவு என்று இல்லை. அது உங்கள் டிஸ்க்ரீஷன். ரூல்ஸை படித்துச் சொல்லுங்கள்.

The first hour shall be allotted for question time. The time can be extended at your discretion. You don't want to use your discretion. What can I do?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படிப் போட்டிருக்கிறதா ?

### பரிசு திட்டத்தில் இழப்பு.

* 627 வினா—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

1969 எப்ரல், மே, ஜூன் மாதங்களில் பரிசுச் சீட்டில் அரசுக்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** 1969 எப்ரல், மே, ஜூன் திங்களில் தமிழ் நாடு அரசுக்கு இழப்பு எதும் இல்லை ஆனால் 8,04,850 பரிசுச் சீட்டுகள் விற்பனையாகாததால் ஆதாயத்தில் மட்டுமே ரூ. 8,04,850 குறைந்தது.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** எப்ரல், மே மாதங்களில் எவ்வளவு வரிசைச் சீட்டுகள் வெளியிடப்பட்டன ? அப்படி வெளியிடப்பட்ட சீட்டுகளில் சில சீட்டுகள் விற்பனையாகவில்லை என்று சொன்னார்கள். அதனால் எந்த நஷ்டமும் ஏற்படவில்லையா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மூன்று மாதங்களுக்குள்ளது இருக்கிறது, அதைச் சொல்லிவிடுகிறேன்.

எப்ரல் மாதத்தில் பரிசுச் சீட்டுகள் மொத்தம் 90 லட்சம் டிக்கட்டுகள் அச்சிடப்பட்டன. அதில் விற்பனையானது 89,14,650. விற்பனையாகாமல் அழிக்கப்பட்டது. 85,350. மே மாதத்தில் 60 லட்சம் அச்சிடப்பட்டன. அதில் விற்பனையாகியது 54,40,450. விற்பனையாகாதது 5,59,550. ஜூன் மாதத்தில் 40 லட்சம் அச்சிடப்பட்டன. அதில் விற்பனையானது 38,40,050 விற்பனையாகாதது 1,59,950. மொத்தம் 1,90,00,000. அதில் விற்பனையானது 1,81,95,150. விற்பனையாகாமல் தங்கியது. பேப்பராக இருக்கிற டிக்கட்டுகள் 8,04,850. இதில் நஷ்டம் இல்லை. வந்திருக்கிற லாபத்தில் கொஞ்சம் குறைந்துவிட்டது.

**திரு. டி. மார்டின் :** ஸ்பீக்கர் சார், அநேக இடங்களில் ஒரு ரூபாய்க்கு முழுமை பரிசுச் சீட்டு வாங்கச் செல்லும் பொழுது ஒரு ரூபாய்க்குக் 9-30. கொடுக்காமல், 10 அணாவிற்குக் கொடுக்கிறோம், 20 டிக்கட்டுகளில் பங்கு கொடுக்கிறோம் என்று சொல்லி விற்பனை செய்வதாக அரசுக்குத் தாக்கீது வந்துள்ளதா ? ஆமெனில் அரசு அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன? குறிப்பாக திருநெல்வேலியிலிருந்து அப்படி தகவல் வந்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தாக்கீது அரசுக்கு அப்படி வராது. அரசாங்கம்தான் அனுப்புமே தவிர, அப்படி அவர்களிடம் ஏதாவது தகவல்கள், புகார்கள் இருந்தால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கவனத்திற்கு கொண்டு வந்தால், அப்படி முறைகேடுகள் இருந்தால் அந்த முறைகேடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. எஸ். அக்னிராஜு :** தலைவரவர்களே, இந்தப் பரிசுச் சீட்டு ஒவ்வொரு மாகாணத்திலும் நடத்தப்படுகிறது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் அதன் வருமானம், இந்தியாவிலுள்ள எல்லா மாகாணங்களிலும் உள்ள வருமானங்களில் நம்முடைய மாகாணத்தின் வருமானம் எந்த வரிசைக் கிரமத்தில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இதிலே நாம் ஒன்றும் போட்டி போட முயற்சிக்கவில்லை. சில நல்ல காரியங்களுக்காக செய்ய நாம் முயற்சியெடுக்கிறோம்.

**திரு. கரு. சீமைச்சாமி :** சார், மாதா மாதம் இலட்சம் ரூபாய் பரிசளிக்கும் பரிசுத் திட்டத்தை நடத்தி வருகிறது. ஆனால் பொங்கல் பரிசு என்று 5 இலட்சம் ரூபாய் சிறப்புப் பரிசு என்று வழங்கியது. இப்பொழுது புத்தாண்டுப் பரிசு என்று 10 இலட்சம் என்றிருக்கிறது. இப்படி பரிசுத் தொகை ஏறிக்கொண்டே வருகிறதே, அது எந்த அளவில் போய் நிற்கும் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அவர்கள் அதிகமாக வேண்டுமென்று கருதுகிறார்களா அல்லது சமதர்மத்திலே திடீரென்று நம்முடைய சுதந்திரா கட்சி உறுப்பினரவர்களுக்கு ரொம்ப அக்கறை வந்துவிட்டதா என்பது எனக்குத் தெரியவில்லை. மக்கள் நலத்துறை நிறுவனமாக ஆக்கி சில காரியங்கள் செய்யப்படும் முயற்சியாக இருக்கிறது. அந்த முயற்சியில் யாரோ சில பேர்களைப் பணக்காரர்களாகச் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட முயற்சியல்ல. எல்லோரும் பங்கு கொள்கிறோம். நம்முடைய அபிவிருத்தி வேலைகளிலே. குடிநீர் வசதி, பள்ளிக்கூடங்கள் அமைக்க இப்படிப்பட்ட சமூக நலப் பணிகளுக்காக சகல மக்களின் பங்கும், பணியும் அதிலேயிருக்கிறது.

**திரு. எம். அப்துல் கபூர் சாகிப் :** தலைவரவர்களே, விற்பனையாகாத பரிசுச் சீட்டிற்குப் பரிசு விழுந்தால் அது யாருக்குச் சேரும் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** விற்பனையாகாத டிக்கெட்டுகளைப் பொறுத்தவரையிலே, முதல் பரிசிலே விற்பனையாகாத டிக்கெட்டுகளுக்கு வந்தால், அது விற்பனையான டிக்கெட்டிற்கு வரும் வரையில் குலுக்கப்படும், இரண்டாவது பரிசுக்கும் அப்படித்தான். மூன்றாவது பரிசுக்கும் விற்பனையாகிற டிக்கெட்டிற்குக் கொடுக்கப்படும். 4-வது பரிசுச் சீட்டைப் பொறுத்த வரையிலே (combination) ஆக 4 டிஜிட்கள்தான் ஒதுக்கப்படுகிறது. 100 ரூபாய் பரிசு விற்பனையான பரிசுச் சீட்டிற்கும் விற்பனையாகாத பரிசுச் சீட்டிற்கும் கொடுக்கப்படுகிறது. விற்பனையாகாத டிக்கெட்டிற்குப் பரிசுக் கிடைத்தாலும் அது அரசாங்கத்தினுடைய கஜானாவிலே, அரசாங்கம் வெற்றி பெற்றதாகச் சேர்க்கப்படுகிறது. அது ரொம்ப சொற்பத் தொகைதான்.

*Fire accident in Royapettah*

* 608 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether five children between four and eight years of age, died in a fire which broke out in a shed on the terrace of a home in Royapettah, Madras on 17th January 1970; and

(*b*) the causes for the fire?



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(ஆ) திறந்த வெளி மேல் தளத்தில் வைக்கோல் குவிக்கப்பட்டிருந்த இடத்துக்கு அருகில் அமைந்த புகைபோக்கியிலிருந்து வந்த தீப்பொறியால் இத் தீவிபத்து ஏற்பட்டதாகச் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரும் சென்னை, காவல்துறை ஆணையாளரும் தெரிவித்துள்ளனர்.

**திரு. கே. விநாயகம் :** மாடிகள் வைத்த அந்தப் பகுதியிலே வாழும் அந்த மக்கள் அங்கெல்லாம் குறிப்பிட்ட இடத்திலேதான வைக்கோல் போர் போட்டு வைக்க வேண்டுமென்று கார்ப்பொரேஷன் விதிகள் இருந்தும் மாடி மீது வைத்திருந்ததற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? கார்ப்பொரேஷன் அதிகாரிகள் அப்போதைக்கப்பொழுது கண்காணித்து வருகிறார்களா, இல்லையா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்போதைக்கப்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவைகளைத் தடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். ஆனாலும் சிலமிட்ங்களில் அவைகளையும் மீறி இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறுகின்றன. மேல்மாடியிலே வைககோல் வைக்கப்பட்டிருந்தது மட்டுமல்ல, பக்கத்திலே வீட்டினுடைய புகைபோக்கிக் குழாயும் இருந்திருக்கிறது. அதன் வழியாகத் தீப்பொறி வைக்கோல் போரிலே பட்டுத்தான் இந்த விபத்து ஏற்பட்டிருக்கிறது.

**திரு. கே. விநாயகம்:** இறந்துபோன இந்த ஐந்து குழந்தைகளின் பெற்றோர்களுக்கு ஏதாவது நஷ்டஈடு அரசாங்கம் தந்ததா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவரோடு கலந்திருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் கவனிப்பதாகத் தெரிகிறது.

*Representations received by Vigilance Commission*

* 609 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether complaints and letters sent to the Vigilance Commission are being transferred by the Commission to the Departments concerned for disposal; and

(*b*) the details of the "follow up" work done by the Commission in such cases?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** (அ) எப்போதுமே அல்ல, ஆனால் 'பிடியாணை' யின்றி பிடிக்கத் தகா வழக்குகள் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகள் மட்டும் அனுப்பப்படுகின்றன.

(ஆ) கடிதங்கள் 'முடிவு செய்யப்படுவதற்காக' சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்பட்டால் முறையீடுகளிலுள்ள குற்றச்சாட்டுகள் குறித்துத் தேவையான நடவடிக்கைகளை அந்தத் துறைகள் மேற்கொள்ளும். எனவே, இது குறித்து "தொடர் நடவடிக்கை"க்குத் தேவை எதுவுமில்லை.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, for streamlining the administration of the Vigilance organisation, the Vigilance Commission has sent some proposals to this Government and they are pending before this Government. In view of the prevalence of a large amount of mamuls and corruption in the various departments, may I request the Hon. Chief Minister to state whether the Govern-

ment have taken any action on the suggestions sent by the Vigilance Commission so far and if not, when action would be taken on that?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அப்படி அனுப்பும் அந்தத் தகவல்கள் மீது அவ்வப்பொழுது தேவைப்பட்ட நடவடிக்கைகள் அரசாங்கத்தால் எடுக்கப்பட்டுத்தான் வருகின்றன.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவரவர்களே, ஒரு குறிப்பிட்ட துறையின்மீது புகார் செய்யப்படும்பொழுது, அந்தப் புகாரைக் குறிப்பிட்ட துறைக்கு அனுப்பி பைசல் செய்வதைவிட, ஒழுக்கக் கண்காணிப்பு ஆணைக் குழுவோ அல்லது வேறு இலாக்காவோ பார்ப்பது பொருத்தமாக இராதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** கூறப்படுகின்ற புகார்களின் தன்மையைப் பொறுத்து நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

THIRU T. MARTIN : Mr Speaker, Sir may I request the Hon. Chief Minister to state whether suggestions for reorganising the Vigilance Organisation have been sent by the Vigilance Commission to the Government and whether the Government have taken action on those suggestions and if not, when action would be taken on those suggesttions for streamlining the organisation?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அவர்கள் அதுபற்றி அளித்துள்ள அபிப்பிராயங்கள் அரசுக்கு வந்திருக்கின்றன. அவர்களும் அபிப்பிராயங்கள் அளித்திருக்கிறார்கள். ஆனால் அந்த அபிப்பிராயங்களின் மீது அரசு நடவடிக்கை எடுப்பதா அல்லது வேறு முறையிலே செய்வதா என்பதைப் பற்றி யோசிக்கப்பட்டு வருகிறது.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, ஒழுக்கக் கண்காணிப்பு ஆணைக் குழுவால் பெறப்படும் முறையீடுகள் மீது அந்த முறையீடுகளைப் பெற்றவுடன் எந்த அதிகாரி தவறு செய்தாரோ அந்த அதிகாரியைப் பற்றிச் சம்பந்தப்பட்ட இலாக்காவிற்கு எழுதுகிறார்கள். இவர் இன்ன குற்றம் செய்திருக்கிறார், எனவே, இந்த இடத்திலிருந்தால் நடவடிக்கை எடுக்க முடியாது, உடனே வேறு நடவடிக்கை எடுங்கள் என்று இலாக்காவிற்கு அனுப்புகிறார்கள். உடனே இலாக்காவினர் அந்த இடத்தைவிட்டு 200, 250 மைல்களுக்கப்பால் மாற்றிவிடுகிறார்கள். அப்படி மாற்றாமல் உடனே சஸ்பெண்ட் செய்து, வழக்குத் தீரும்வரை சஸ்பெண்ட் செய்ய அரசாங்கம் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இதில் வேலையிலிருந்து சஸ்பெண்ட் செய்யவைத்து விசாரணை செய்வதுஒரு முறை. சஸ்பெண்ட் செய்யாமலேயே அந்த வழக்கை விசாரணை செய்வது ஒருமுறை. இவை அவர்களின் மீது வந்துள்ள வழக்குகளின் தன்மையைப் பொறுத்து அரசு எடுத்துக் கொள்ளும் முறைகளாயிருக்கின்றன.

### கூட்டுறவுத் துறை;

*610 வினா—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தில் இதுகாறும் விவசாய இலாகாவுடன் இணைந்திருந்த கூட்டுறவு இலாகா தனியாகப் பிரிக்கப்பட்டுப் புதிய செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளாரா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** (அ) ஆம்.

(இ) இம்மாநிலத்தில் கூட்டுறவு இயக்கத்தின் சிறப்பு அதிகரித்து வருவதால், கூட்டுறவுப் பணி குறித்து முழு அளவில் கவனிப்பதற்காக வென்றே செயலகத்தில் கூட்டுறவுத் துறை தனியாக அமைக்கப்பட்டுள்ளது. இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதியைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் இத்துறையில் அரசுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவுத் துறையைத் தனியாகப் பிரித்ததால் நல்ல முறையிலே இயங்குவதாக அரசாங்கம் கருதுகிறதா? அதுபோல் வேறு ஏதாவது இலாக்காக்களைப் பிரிக்க அரசாங்கம் கருதியிருக்கிறதா? கடந்த ஓராண்டுக் காலத்தில் கூட்டுறவுத் துறைக்கு இரண்டு செயலாளர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்களா? அதற்கு என்ன காரணம்?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இத்துறை இரண்டாகப் பிரிக்கப்பட்டது, நிர்வாக வசதிக்காகவும், காரியங்களை விரைவுபடுத்த வேண்டியதற்காகவும் இருக்கிறது. 1965-ம் ஆண்டிலேகூட உணவு, வேளாண்மைத் துறை இரண்டாகத் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டன. 1967-க்குப் பிறகு தனித்தனியாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. கூட்டுறவுத் துறை இன்னும் அதிகப் பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டியிருப்பதால் நிலவள வங்கி போன்ற காரியங்களில் ஈடுபட வேண்டியிருப்பதால் இப்படி இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. தனியாக ஒரு நிலை ஏற்பட வேண்டுமென்ற அளவில் அரசு அந்த முயற்சியை மேற்கொண்டது. அதிலே செயலாளர்கள் அடிக்கடி மாற்றப்படுவதாகச் சொல்லுகிறார்கள். நிர்வாக வசதியைப் பொறுத்து அப்படிப்பட்ட காரியங்களை மேற்கொள்வதில் தவறு ஏதுமில்லை.

### *Classification of Backward Communities.*

*628 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Backward Classes be pleased to sttte :

(a) whether the Government is considering the revision of the system of classification of Backward Communities; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** (அ) இல்லை.

(இ) பின்னிலை வகுப்பினர் நலனை ஆராய அரசு அண்மையில் அமைத்துள்ள குழுவின அறிகை கிடைத்தபின் அவசியமானால் இப்பிரச்னை ஆராயப்படும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பின்னிலை வகுப்பினர் பிரச்னையைப் பற்றி ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழு தன்னுடைய அறிக்கையை எந்த கால கட்டத்தில் கொடுக்க வேண்டும் என்று ஏதாவது காலவரை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, ஜூன் திங்கள் முடிவதற்குள் இந்த அறிக்கை கிடைக்குமாறு அவர்கள் பணிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள்:** தலைவர் அவர்களே, பின்தங்கிய வகுப்பினர் பகுதிகளில் வீரகுடி வேளாளர், வேடுவ நாயக்கர் என்று இரண்டு பகுதியினர் ஜாபிதாவில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றனர். அப்படியிருந்தபோதிலும் ஒரு ஜில்லாவில் தான் இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக, வீரகுடி வேளாளர் மதுரை மாவட்டத்தில் இல்லை என்று கூறியும், வேடுவர் நாயக்கர் என்று கையெழுத்துப் போடுவ

இருந்தும் அவர்களுக்கு எவ்விதச் சலுகையும் கிடைப்பதில்லை. ஆகையால் அவர்களுக்கு எல்லாச் சலுகைகளையும் கொடுப்பதுபற்றி, மறு பரிசீலனை செய்து, எந்தத் தடங்கலும் இல்லாத முறையில், தகுந்த சான்றிதழ் கொண்டுவந்தால் அவர்களுக்குச் சலுகைகள் கிடைக்க ஏற்பாடு செய்து இந்த ஜாபிதாவை புனர் பரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: இதுபோன்ற வேண்டுகோளை அல்லது கோரிக்கையை குழுவினருடைய அறிக்கை வந்த பிறகு, பொதுவாகப் பரிசீலனை செய்து, தக்க முடிவு எடுக்கப்படும்.

திரு. ப. மகாதேவன்: குமரி மாவட்டத்தில் மட்டும் வாழ்கின்ற நாஞ்சில் நாடு வேளாளர் என்று சொல்கிற மக்களுக்கும் பின்தங்கிய வகுப்பினருக்கு அளிக்கக்கூடிய சலுகைகளைக் கொடுக்க முடியுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: இதுபோன்ற கோரிக்கைகளையெல்லாம் ஒழுங்குற அவர்கள் பரிசீலனை செய்து, அரசுக்கு அறிக்கை தரவேண்டும் என்ற அடிப்படையில் தான் இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது, கனம் உறுப்பினர் தெரிவித்த அந்த கோரிக்கையும் இந்தக் குழுவினுடைய அறிக்கைக்குப் பிறகு பரிசீலிக்கப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : There is need to revise the list of backward classes because among the Telugu backward classes there is a caste called Kapu (cultivators). In Kanada the same caste is called 'Vakkaliga' If you say 'Vakkaliga' he is considered backward. But if he is called 'Kapu' no concession is given. He is not considered backward. Only if he is called 'Vakkaliga' he is given backward class concession. So I request that the name of 'Kapu' be included in the list of backward classes. There are other castes. There is the 'Jalakara' Caste that is one who cleans the impliments of goldsmiths. He gets about three or four annas per day. He is very poor. Their name should be included in the backward class list. Will the Government take into consideration my request and include the classes in the revised list of backward classes?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கோரிக்கைகளையெல்லாம், அவர்கள் அந்தக் குழுவினிடத்திலே கூட நேரில் சந்தித்து அவர்களுடைய எண்ணங்களை அறிவிக்கலாம். அல்லது, சம்பந்தப்பட்ட வகுப்பினர்களும் அறிவிக்கலாம். அவ்வாறு அறிவித்த பிறகு, குழுவினுடைய பரிந்துரைகளின் மீது அரசு முடிவெடுக்கும்பொழுது, உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கோரிக்கையையும் நினைவில் வைத்து, அரசு ஆவன செய்யும்.

* 629 வினா—திரு. டி. மார்டின்: மாண்புமிகு பின்னிலை வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) Joint Council of Christians of Tamil Nadu 10—1—70 தேதியிட்ட மனு ஒன்றினை தமிழ்நாடு அரசுக்கும், பின்தங்கிய வகுப்பினர் குழுவுக்கும் அனுப்பியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) ஆம்.

(ஆ) பின்தங்கிய வகுப்பினர் நலக் குழுவின் பரிந்துரை அரசுக்கு கிடைத்த பிறகு இதுபோன்ற கோரிக்கைகளை அரசு ஆலோசிக்கும்.



THIRU T. MARTIN : The Supreme Court has held in some cases that religion should not be the sole basis for considering the social and economic backwardness of a particular community May I request the Hon. Minister to state whether this Government will send a directive to that Commission to consider this aspect also and then include those backward class persons who have changed their religion in the list of Backward classes, ignoring religion as sole basis?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: ஏற்கனவே எந்தெந்த வகுப்பு பின்தங்கிய வகுப்பு என்று நாம் வரையறுத்து வைத்திருக்கிறோமோ அந்த வகுப்பினர்களுக்கு மேற்கொண்டு என்னென்ன நன்மைகளைச் செய்ய வேண்டும் என்பதை ஆராய்வதற்காக இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. கனம் உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கோரிக்கைகளைப்பற்றி கிறிஸ்துவ இணைப்புக் குழுத் தலைவர் என்னிடத்திலே ஒரு மனுவைத் தந்திருக்கிறார்கள். குழுவின் அறிக்கை வந்த பிறகு அதுகுறித்து ஆலோசிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: பேரவைத் தலைவர் அவர்களே, கிறிஸ்துவ சமுதாயக் கூட்டுக் குழுவினர் என்னென்ன கோரிக்கைகளைச் சமர்ப்பித்திருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கிக் கூற முடியுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: இப்பொழுது அதைத் தெரிவிப்பது குழுவுக்கு நாம் அளித்துள்ள அதிகாரத்தை மீறுவதாகும் என்று நான் கருதுகிறேன்.

திரு. கே. விநாயகம்: இப்பொழுது நடைமுறையில் இருக்கிற பிற்பட்ட வகுப்பினர் பட்டியலே தவறு என்று இந்த அரசாங்கம் கருதுகிறதா? அதில் முற்போக்கானவர்களும் நுழைந்திருக்கிறார்கள், பிற்போக்கானவர்களும் விடுபட்டிருக்கிறார்கள் என்கிற கொள்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறதா? இந்த அறிக்கை வந்த பிறகு, சென்ட்ரல் கவர்ன்மென்டு காகா சாகிப் கலேல்கர் ரிபோர்டை உடைப்பிலே போட்டமாதிரி, நீங்கள் இந்த ரிபோர்ட்டை உடைப்பில் போடமாட்டீர்கள் என்று உறுதிமொழி தரமுடியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உடைப்பிலே போடுவது என்றெல்லாம் சொல்வது குற்றச்சாட்டு. கேள்வியைப் போடுங்கள்.

THIRU K. VINAYAKAM : I stand by it. They have not done it.

குற்றச்சாட்டிற்கு நான் பொறுப்பேற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு கூடாது.

திரு. கே. விநாயகம்: இந்தக் குழுவின் சிபாரிசுகளை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நியாய, அநியாயங்கள் எது என்று ஆராய்ந்து குழு நல்ல முடிவை அளிக்கும் என்றுதான் அரசு எதிர்பார்க்கிறது, நாடும் எதிர்பார்க்கிறது. 'அங்கே உடைப்பிலே போட்டார்களே அதேபோல் இங்கும் உடைப்பிலே போடாமல் இருப்பீர்களா' என்று உறுப்பினர் கேட்கிறார். எங்கே தேடிப் பார்த்தாலும் உடைப்பு இருப்பதாகத் தெரியவில்லை. அப்படிப் போடுவதென்றால், உங்களிடத்திலே இருக்கிற உடைப்பிலேதான் போட வேண்டும், வேறு உடைப்பு இல்லை.

### *Galvanised tubes for Tamil Nadu Small Industries Corporation.*

* 630 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Tamil Nadu Small Industries Corporation have been purchasing large quantities of galvanised tubes from private parties during 1969?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இல்லை.

### *High Court-buildings.*

* 631 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Industries be pleased to state the cost of maintenance of the High Court buildings for the year 1968-69?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ரூ. 33,625-95.

DR. H. V. HANDE : In this maintenance cost, does it include the present requirement of the advocates who had been displaced because of this repair? Due to the repair, they are given place outside the High Court and they are finding it difficult. They had complained to Government. Will the Hon. Minister state whether he would provide them alternative arrangement and also provide basic amenities like tap water, bath room, etc., for the advocates, in view of the large complaints we have received from advocates?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஆண்டுதோறும் நடைமுறைச் செலவைப்பற்றி நான் எவ்வளவு தொகை என்று குறிப்பிட்டேன். வழக்கறிஞர்களுக்கு இடம் கொடுப்பதுபற்றித் தனியாக திட்டத்தை உயர்நீதி மன்றம் பரிசீலித்து வருகிறது, ரூ. 10 லட்சத்திற்கு. அந்தத் திட்டம் வந்த பிறகு வழக்கறிஞர்களுக்கு இடம் கொடுப்பது பற்றி முடிவு எடுக்கப்படும். அவர்களுக்குத் தேவையான வசதிகளைப் பற்றி, அமெனிடீஸ் என்ன தேவை என்பதைப் பற்றி உயர்நீதி மன்றம் பரிந்துரை செய்து அனுப்பினால், அதைப்பற்றியும் பரிசீலிக்கலாம்.

THIRU T. MARTIN : From the High Court, I learn that a proposal for construction of chambers for advocates had been sent and that it is pending in the PWD for a long time for sanction. May I request the Hon. Minister for Law to state whether he would expedite the sanction of the scheme and send it to the High Court?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பொழுதுதான் பதில் சொன்னார்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நீண்ட காலமாகத் தள்ளிப்போடப்படுகிறது என்பது தவறான தகவலாகும். எனக்குச் சரியாக நினைவு இருக்குமானால், நான் பல தடவை தொலைபேசிமூலம் கூறி, இந்தத் திட்டத்தை உடனடியாக அனுப்பச் சொல்லியிருக்கிறேன். வந்தவுடன் பரிசீலிக்கலாம்.



### சிறைக் கைதிகளுக்கு ஊதியம்.

* 632 வினா—திரு. டி. மார்டின்: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயிலில் வேலை செய்யும் கைதிகளுக்குச் சம்பளம் கொடுப்பதற்கான திட்டம் தமிழ்நாடு அரசின் பரிசீலனையில் தற்சமயம் உள்ளதா?

(இ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) & (இ) தற்பொழுது திறந்த வெளிச் சிறைகளில் வேலை செய்யும் கைதிகள் ஒவ்வொருவருக்கும் நாள் ஒன்றுக்கு 25 காசுகள் ஊதியம் கொடுக்கப்படுகிறது. சிறைச்சாலைகளிலேயே வேலை செய்யும் கைதிகள் ஊதியம் ஈட்டிடும் திட்டம் அரசின் பரிசீலனையிலிருக்கிறது.

THIRU T. MARTIN : May I request the Hon. Minister to state when this scheme would be implemented for other prisoners who are being taken outside Central Jail for work in the Transport Department and other departments?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்போதைக்கு அதை அமல் நடத்துவதாக இல்லை.

**திரு. கோ. இரா. ஞானசம்பந்தன்:** தலைவர் அவர்களே, இப்பொழுது இல்லாவிட்டாலும், எதிர்காலத்தில் கைதிகளுக்குத் தேவையானவற்றைச் சிறையிலேயே வாங்கிக்கொள்ள அரசு ஏற்பாடு செய்ய முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்பொழுதே தேவையானவற்றை அவர்கள் வாங்கிக்கொள்ள வசதியிருக்கிறது. கூலி கொடுத்துத்தான் செய்ய வேண்டும் என்பதில்லை.

**திரு. பி. வேலுசாமி:** தலைவர் அவர்களே, கைதிகளில் திருந்தினவர்கள், திருத்தப்படாதவர்கள் என்று இருப்பவர்களைத் தனித்தனியாக வைத்து திருந்தினவர்களுக்குச் சலுகை கொடுக்க உத்தேசம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** விதிமுறைகளின்படி, நல்லவர்கள் என்று திருந்தியவர்களுக்கு மார்க்குகள் கொடுக்கிறார்கள். அடையாளச் சின்னங்களும் கொடுக்கிறார்கள். எந்த எந்த வசதிகளைச் செய்ய முடியுமோ, அவற்றைச் செய்து, விடுதலை செய்வதில்கூட நல்லவர்களுக்கு முதல் உரிமை கொடுக்கப்படுகிறது.

**திரு. என். மருதாசலம்:** தலைவர் அவர்களே, கைதிகளில் திருந்தியவர்கள், ஜன்ம தண்டனை அடைந்தவர்கள், 10 12 ஆண்டுகளானால், அவர்களை விடுதலை செய்ய உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** 9, 10 ஆண்டு கழித்தால், அங்கேயிருக்கும் அட்வைசரி போர்டு சிபாரிசு செய்தால், அரசாங்கம் அப்படிப்பட்டவர்களை விடுதலை செய்கிறார்கள்.

### கடையனோடைக் கிராமத்துக்குப் பேருந்துப் பணி.

*633 வினா—திரு. டி. மார்டின்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், திருச்செந்தூர் தாலுகாவிலுள்ள தெந்திருப்பேறை கிராமத்திலிருந்து நாங்குநேரிக்குச் செல்லும் தனியார் பேருந்தை கடயனோடை கிராமம் வரைக்கும் நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் தற்சமயம் தமிழ்நாடு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது செயல் படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. டி. மார்டின்:** பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் திருச்செந்தூர் தாலுகாவிலுள்ள தெந்திருப்பேறை என்ற கிராமத்தில் இரவில் போகும் பஸ்கள் கடயனோடைப் பகுதி மக்கள் போகமுடியாத நிலையில் இருப்பதால், இனிமேலாவது இதை ரீஜினல் ட்ரான்ஸ்போர்ட் அதாரிடிக்குத் தெரிவித்து, அதன்பேரில் நடவடிக்கை எடுக்க அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** கடயனோடைக்கு பஸ்ஸை நீட்டுவதுபற்றி ஆர். டி. ஓ. வைக் கேட்டதில், ஒரு பஸ்ஸுக்கே பயணிகள் வருவதில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, மேற்கொண்டு பரிசீலிக்கப்படுவதற்கில்லை.

*** 634 வினா—திரு. டி. மார்டின்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில், ஆழ்வார் திருநகரியிலிருந்து தூத்துக்குடிக்குச் செல்லும் தனியார் பேருந்தை தெந்திருப்பேறை, ஆறுமுகநேரி மார்க்கமாக கடையனோடைப் பகுதி வரைக்கும் நீட்டிப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் தற்சமயம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது செயற்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. டி. மார்டின்:** பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூர் தாலுகாவில் ஆறுமுகனேரி டவுனில் ஏராளமான ஜனத்தொகை இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் இந்தக் கடயனோடை இருக்கிறது. ஆகவே, அரசு ஆறுமுகநேரிக்கும், கடயனோடைக்கும் பஸ் போக்குவரத்தை விஸ்தரிக்க ஆர். டி. ஓ. வைக் கேட்டதற்கு அவருடைய பதில் என்ன.

**மாண்புமிகு திரு.எஸ். ஜே. சாதிக் பாட்சா:** நான் ஏற்கனவே சொல்லியதுபோல

Even the one bus which is now serving adayanodai is found to be lacking in traffic potentialities.

எனவே, போதுமான பயணிகள் இல்லாததால் நடவடிக்கை எடுக்க இயலவில்லை.

## அரசுப் பேருந்து பயணச் சீட்டுகள்

***635 வினா—திரு. என். கிட்டப்பா, திரு. கே. போஜன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாடு அரசு பஸ் போக்குவரத்துக்குத் தேவைப்படும் டிக்கெட்டுகளை நமது மாநில அரசின் அச்சகத்தில் அச்சிடாமல் வெளி மாநில அரசின் அச்சகத்தில் அச்சடிப்பது உண்மையா?

(இ) ஆமெனில் அதற்குரிய காரணம் யாது?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறைக்குத் தேவைப்படுகின்ற பயணச் சீட்டுகளில் ஒரு பகுதி, டில்லிப் போக்குவரத்து நிறுவனத்தால் அச்சிடப்பட்டுப் பெறப்படுகின்றது.

(இ) அரசு அச்சகத்தில் வேலைச்சுமை அதிகரித்துள்ளதன் காரணமாக, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறைக்குத் தேவைப்படுகின்ற பயணச் சீட்டுக்களை அரசு அச்சகம் உரிய காலத்தில் அச்சிட இயலவில்லை.





**திரு. ம. பொ. சிவஞானம்:** பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளில் பயணச் சீட்டுகள் ஆங்கிலத்தில் அச்சடித்து இருக்கிறது. சாதாரண மக்களுக்கு ஆங்கிலத்தில் படிக்கத் தெரியாது என்பதால், தமிழிலே அச்சிட அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தமிழிலும் அச்சடிக்க முயற்சி எடுக்கப்படும்.

**திரு. என். வரதராஜன்:** தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசு அச்சகத்தில் பல மெஷின்கள் வேலை செய்யாமல் இருக்கின்றன. ஏராளமானவர்களுக்கு வேலை கொடுத்து, அரசு பஸ் டிக்கட்டுகளை அச்சடிக்க அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு உறுப்பினர் அச்சகத்துறை அமைச்சருக்குத் தனிக் கேள்வி போட்டு விவரம் பெற வேண்டும்.

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கின்ற அளவில் சீட்டுகள் அதிகமாக பெரிதாக இருக்கிறதனால், ஒவ்வொரு டிக்கட்டையும் இரண்டு இரண்டாகச் செய்வதனால் நலமாக இருக்கும். அதை அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** டிக்கெட்டை இரண்டாக்குவதுபற்றித் தனியாகக் கவனிக்கலாம்.

**திரு. கே. விநாயகம்:** சார், நமது அரசாங்கம் ராபின் ஸிஸ்டம் ஆரம்பித்த பிறகுதான் இந்த டிக்கெட்டுகளை அடிக்க போதிய அளவில் இயந்திரங்கள் இல்லாமல், ஏற்கனவே இங்கு அடித்த பஸ் டிக்கட்டுகளை டெல்லிக்கும் பம்பாய்க்கும் அனுப்பப்படுவதாகச் சொல்லப்படுகிறதே, நம்முடைய தாள்களைக்கூட நாமே அடிக்க முடியவில்லை எனபது நமக்கே பெருமையாக இல்லாததால், விஸ்தரிப்புச் செய்து எந்த வகையிலாவது இங்கேயே செய்ய முடியுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே சாதிக் பாட்சா:** பரிசுச் சீட்டுகளை அடித்ததால், பஸ் டிக்கெட்டுகளை அடிக்க முடியவில்லை என்று சொல்வது சரியில்லை. ஏற்கனவே அச்சகத்தில் பயண டிக்கட் கள் அடிப்பதில், மாதம் ஒன்றுக்குத் தேவைப்படுவது 11,20,00,000. எனவே பஸ் டிக்கட்டுகளை அரசாங்க அச்சகத்திலேயே அடிக்க நெருக்கடியாக இருந்ததால் ஓரளவுக்கு வேறு வழிகளில் ஏற்பாடு செய்யப்படுகிறது. அச்சகத்தை இன்னும் பலப்படுத்த, போக்குவரத்துத் துறையிலேயே ஒரு அச்சகத்தை அமைக்க செயற் குறிப்பு இருக்கிறது. அதை 1970-71-ம் ஆண்டில் பரிசீலிக்கலாம்.

**திரு. இல. பலராமன்:** தலைவர் அவர்களே, அரசாங்கப் போக்குவரத்துத் துறை டிக்கெட்டுகளை அச்சடிப்பதில் மற்ற மாநிலங்களுக்குக் கொடுக்கப்படும் தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** வேறு மாநிலத்திற்கு எவ்வளவு தொகை என்பதில்லை. டெல்லி ட்ரான்ஸ்போர்ட் அண்டர்டேகிங்கில் அச்சடிப்பதில் ஒரு லட்சம் டிக்கெட்டுக்கு ரூ. 175. பாம்பே எலெக்ட்ரிக் சப்ளை அண்டர்டேகிங்கில் ரூ. 180. இதில் போக்குவரத்துச் செலவு, ட்ரான்ஸ்போர்ட்டேஷன் செலவு ரூ 10, 15 ஆகிறது, ஆக ரூ. 190 ஆகிறது. நம்முடைய அச்சகத்தில் செய்ய 190 ரூபாய் செலவு ஏற்படுகிறது.

**கன்னியாகுமரி மாவட்டத்தில் மாணவர்களுக்குத் தனிப் பேருந்து**

*636 வினா—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாணவர்களுக்கென தனி பஸ் விடும்படி கன்னியாகுமரி மாவட்டக் கலெக்டர், கன்னியாகுமரி டி. டி. எஸ்ஸுக்கு உத்தரவிட்டிருக்கிறாரா?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ப. மகாதேவன்: தலைவர் அவர்களே. கன்னியாகுமரி மாவட்டத்தில் பீக் அவர் என்று சொல்லக் கூடிய நேரத்தில் பல இடங்களில், மார்த்தாண்டம் போன்ற இடங்களில் கல்லூரி மாணவர்கள் பஸ் இல்லாமல் தொல்லைப்படுகிறார்கள். அங்கே அதிக பஸ் விட ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கல்லூரி மாணவர்களுக்கு ஏற்படும் தொல்லையைக் கவனத்திற்கொண்டு 18 சர்வீஸ்கள் விட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அவை :

Nagercoil to Thittuvilai,
Kurusadi to Mekkamandapam.
Kurusadi to Verkilambi,
Kurusadi to Monday Market,
Kurusadi to Thuckalai,
Nagercoil to Marungoor,
Nagercoil to Parakkai,
Nagercoil to Aloor,
Nagercoil to Colachel,
Nagercoil to Monday Market,
Nagercoil to Palvoor,
Nagercoil to Mekkamandapam,
Nagercoil to Verkilambi,
Nagercoil to Pallivadi (via) Kurusadi
Thiruvattar to Virivilai,
Melpalai to Iranipuram,
Karingal to Kuzhithurai and
Kollengode to Thoduvetti.

*Madurai Sourashtra Co-operative Bank*

*637 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Co-operation be pleased to state:

(a) whether the Board of Directors of the Madurai Sourashtra Co-operative Bank have granted membership to a person adjudged as an insolvent;

(b) if so, the details thereof and the reasons therefor;

(c) whether it is a fact that a loan is still pending recovery from him; and

(d) if so, the action taken to recover the same?



மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

(உ) கடன் வழங்கப்பட்ட பிறகு இன்ஸால்வெண்ட் எனத் தீர்ப்பளிக்கப்பட்ட இருவரிடமிருந்து, கடன் தொகை வசூலிக்கப்படவில்லை.

(எ) இந்தக் கடன்களைக்குறித்து வங்கியின் இயக்குனர்மீது ஸர்-சார்ஜ் நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது.

Dr. H. V. HANDE: Sir, is it not a fact that the election for the filling up of three vacancies in the Bank was held on 16–6–1968 and that a member, who was a defaulter, was taken as a Director against the rules and the Deputy Registrar of Co-operative Societies also issued a show cause notice? When the matter was *sub judice* this Director was taken. Are the Government aware of this and if so what action have they taken on this?

THE HON. THIRU SI. PA. ADITANAR: I have already stated that among the Directors of the Bank, there was no one, who was adjudged insolvent.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், இன்சால்வன்சி கொடுத்தவர்களிடமிருந்து, வசூலிக்கப்படவில்லை என்றார்கள். அப்படிக் கொடுத்தவர்கள் யார் யார், எவ்வளவு பாக்கி அவர்கள் செலுத்தவேண்டும் என்பதை தெரிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இன்சால்வென்சி கொடுத்தவர்கள், சதாசிவம் என்பவரும், பூர்ணசாரி என்பவரும், ஆக இரண்டு பேர்கள். இவர்களின் பாக்கி, சதாசிவம் ரூ. 435 ஒன்றும், 335 ரூபாய் ஒன்றும்; திரு பூர்ணசாரி, ஒன்று ரூ. 430-ம், இன்னொன்று ரூ. 335-ம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள், விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

## 2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

**(அ) இராதாபுரம் ஊராட்சிப் பகுதியில் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படாமையும் அதனால் ஏற்பட்டுள்ள இடர்பாடுகளும்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு என். சௌந்தர பாண்டியன் அவர்கள் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதாவது,

"The teachers employed in the local bodies and the other private managements have not been paid their salary due on 1st March till this date and consequent plight of the teachers and their families and the impact on the students on their studies and the consequent public concern and anxiety in Radhapuram Panchayat Union area in Tirunelveli district". முற்பகல் 10 0

என்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது அரசின் அன்றாட நிர்வாக நிகழ்ச்சிக்குட்பட்டிருக்கிற காரணத்தால், இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

**(ஆ) வத்தலக்குண்டில் பொதுக் கிணற்று நீரைப் பருகிய சிலரும், பூசாரிப்பட்டியில் உணவு விடுதியில் உணவு அருந்திய சிலரும் மரணம் அடைந்தது குறித்து.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு என். எஸ். வி. சித்தன், திரு. வை. சுவாமிநாதன், திரு. ஆர். கருப்பையா ஆகியோர் வத்தலகுண்டு என்ற இடத்திற்கு அருகில் தண்ணீர் குடித்த காரணத்தினால் 9 பேர் இறந்ததைக்குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

மூவரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள், கொடுத்திருக்கும் தேதியைப் பார்த்ததில் திரு. சித்தன் அவர்களுடைய தேதி முந்தையதாக இருப்பதால் அவர் ஒருவர் மட்டும் தீர்மானத்தைப் படிக்க அனுமதிக்கிறேன்.

THIRU N. S. V. CHITHAN : Mr. Speaker, Sir, under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules, we have given notice of the following adjournment motions :—

' To adjourn the proceedings of the House to discuss an urgent matter of public importance namely,

the death of 9 persons including 6 students due to the consumption of water from a public well on 28-3-1970 at Batlagundu in Madurai district,

and the death of 8 persons and the admission of 11 persons in the Hospital, consequent to their dining in a hotel in Poosaripatti village in Madurai district and the unrest prevalent among the villagers '.

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நெஞ்சுருக்கும் நிகழ்ச்சி மதுரை மாவட்டத்தில் வத்தலகுண்டுக்கு அருகில் பூசாரிப்பட்டி என்ற கிராமத்திலே நடைபெற்றிருக்கிறது. விஷம் கலந்த தண்ணீரைக் குடித்ததாலும், ஓட்டலிலுள்ள பலகாரத்தைச் சாப்பிட்டதாலும் ஏறத்தாழ 25 பேர் வத்தலகுண்டு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர் என்ற தகவல் கிடைத்திருக்கிறது. அவர்களில் 9 பேர் இறந்துவிட்டார்கள். இறந்துபோன 9 பேர்களில் மாணவர்கள் 6 பேர் உயிர் இழந்திருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சி நமக்கு வேதனையாக இருக்கிறது. இது தற்செயலாக நிகழ்ந்த நிகழ்ச்சியா, விஷம் கலந்ததென்றால் எப்படி? இது சம்பந்தமாகத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆகவே, இது அவசரமும் பொது முக்கியமும் உள்ள நிகழ்ச்சியாக இருப்பதால், இந்தப் பேரவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இதை விவாதிக்கவேண்டும்.

* மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் பூசாரிப்பட்டி என்னும் கிராமத்திலே நடைபெற்ற எதிர்பாராத நிகழ்ச்சி உள்ளபடியே வேதனைக்குரிய ஒன்றாகும். இந்த நிகழ்ச்சிபற்றி, எனக்குக் கிடைத்த தகவலின்படி இறந்தவர்கள் ஒன்பதுபேர் என்றும், அதில் 6 பேர் மாணவர்கள் என்றும் சொன்னார்கள். இறந்தவர்கள் பேயாண்டித்தேவர்—வயது 50, மணிச்செட்டியார்—வயது 40, சரஸ்வதி—வயது 3½, தாயுமானவன்—வயது 2, நாகராஜன்—வயது 1, ஜெயலட்சுமி—வயது 3, முருகேசன்—வயது 1, வளர்மதி—வயது 2, சந்திரசேகரன் என்ற விவரங்கள் எனக்குக் கிடைத்திருக்கின்றன. இதில் சந்திரசேகரன் என்பவன் ஓட்டல் சொந்தக்காரருடைய மகன். ஓட்டல் சொந்தக்காரர் சார்பாகத் தவறு எதுவும் நடக்கவில்லை. அவருடைய மகன் இறந்ததிலிருந்து இது நன்றாகத் தெரிகிறது. கிணற்றுத் தண்ணீரால் இந்த நிகழ்ச்சி ஏற்பட்டது. ஓட்டலிலுள்ள சட்டனி, மற்றும் உணவுப் பொருள்களில் விஷம் ஏதேனும் கலந்திருக்கிறதா என்பதைச் சோதனை செய்வதற்காக அவை, சென்னைக்கு அனுப்பப்பட்டு ஆய்வில் இருக்கின்றன; ஆய்வு வெகு விரைவிலே செய்யப்பட்டு விவரங்கள் அறிவிக்கப்பட இருக்கின்றன. இதற்கிடையில் அந்தக் கிணற்று நீர் முழுவதும் இறைக்கப்பட்டு, அந்தக் கிராம மக்களுக்கு மாற்றுத் தண்ணீர் கிடைக்க வசதியும் செய்துதரப்பட்டிருக்கிறது இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு நிதி உதவி அளிக்கவேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் செய்திக் குறிப்பு ஒன்று நேற்றையதினம் அரசுக்குக் கிடைத்திருக்கிறது. விரைவில் அது பரிசீலிக்கப்பட்டு, நிதி உதவி அளிக்கப்பட இருக்கிறது.



பொதுவாக இந்த நிகழ்ச்சி வேதனையையும், வருத்தத்தையும் தரக்கூடிய நிகழ்ச்சியாகும். இது தற்செயலாக ஏற்பட்ட நிகழ்ச்சியா? ஏன் இப்படி ஏற்பட்டது? என்பவைகளையெல்லாம் கண்டுபிடிக்க ஈடுபட்டிருக்கிற காரணத்தாலும், இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு நிதி உதவி அளிக்க நடவடிக்கை எடுத்திருப்பதாலும் எந்த அளவிற்கு அரசு அக்கறை காட்டி வருகிறது என்பது தெரியவருகிறது. ஆகவே இந்தப் பிரச்சினையை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டாமென்று கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு, பேரவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து இதை விவாதிக்கத் தேவையில்லையென்று கூறி, அனுமதி தர மறுக்கிறேன்.

## (3) அரசினர் தீர்மானம்

### விதி 41 [3]ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து பேரவை 41 [3] விதியின் கீழ் அவை முன்னவர் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்: "தமிழ்நாடு சட்டப் பேரவையின் 41 [3]-வது விதியின் கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டிற்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டுவரக் கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும்".

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

## (4) கவன ஈர்ப்பு

(அ) கோவை மாவட்டத்தில் பருவமழை தவறியதால் ஒத்திவைக்கப்பட்டிருந்த மூன்றாண்டுக் கடனைத் திருப்பி கட்டவேண்டிய நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. சு. துரைசாமி, திரு. மு கண்ணப்பன், திரு இரா. மாணிக்கவாசகம் ஆகியோர்கள் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். மூவரும் ஒரே பொருளைப் பற்றிக் கொடுத்திருப்பதால், அவர்களில் ஒருவரான திரு. சு. துரைசாமி அவர்கள் மட்டும் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டுவர அனுமதிக்கிறேன்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

> "கடந்த மூன்றாண்டுக் காலமாக பருவமழை தவறியதை முன்னிட்டு கோவை மாவட்டத்தில் அரசாங்கக் கடன்களை இரண்டு ஆண்டுக்காலமாக ஒத்திவைக்கப்பட்டிருந்து, இந்த ஆண்டில் மூன்றாண்டுகளுக்கு உண்டான முழு கடன் தொகையைத் திருப்பிச் செலுத்த வேண்டும் என்பதால், பொதுமக்களும் விவசாயிகளும் பாதிக்கப்படுகின்றனர்".

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, the Government have considered that due to failure of rains again, acute distress prevtils in several parts of the Coimbatore district. Orders have already been issued to the Collector to postpone collection of

all Government loans and land revenue dues for a period of six months in the areas where the Collector is satisfied after a personal assessment that owing to failure of rains, acute conditions prevail and warrant such postponement. The Collector has also been asked to send immediately to the Government particulars of places where the grant of this concession has become necessary.

**(ஆ) வட ஆற்காடு, மதுரை, கோவை, திருச்சி, இராமநாதபுரம், தஞ்சை, செங்கல்பட்டு, நெல்லை மாவட்டங்களில் பருவமழையின்மையும், அரசு கடன் வசூலை ஒற்றிவைத்தலும்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்.**—அடுத்து, திரு. வி. கே. கோதண்டராமன், திரு. இ. பலராமன், திரு. எ. . நரசிம்மன், திரு. என். வரதராஜன், திரு. கே. என். குமாரசாமி, திரு. என். மருதாசலம், திரு. சி. கந்தசாமி கவுண்டர், திரு. கே. என். சாமிநாதன், திரு. கரு சீமைச்சாமி, திரு. எ. அ. சுப்பராஜா, திரு. பி. எஸ். தனுஷ்கோடி, திரு. கொளத்தூர் கோதண்டம், திரு. என். துரைபாண்டியன், திரு. நா. சௌந்தரபாண்டியன் ஆகியோர் ஒரே பொருளைக் குறித்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு, சட்டப் பேரவை 41-வது விதியின்கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேரும் படிப்பதற்குப் பதிலாக, நானே இந்த அவைக்கு அதைப் படித்துவிடுகிறேன்.

> "வட ஆற்காடு, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், தஞ்சாவூர், செங்கல்பட்டு, மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பருவமழை தவறியதால் மேற்படி மாவட்டங்களில் அரசாங்கக் கடன்களை ஒத்தி வைக்க வேண்டும்".

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, இம்மாநிலத்தின் சில பகுதிகளில், அதாவது, வட ஆற்காடு, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், தஞ்சாவூர், செங்கல்பட்டு, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மிகக் கொடிய வறட்சி நிலவுவதாக அரசு கருதுகிறது. இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அறிக்கைகளின் மேல் அத்தகைய பகுதிகளில் அரசுக்குச் சேரவேண்டிய நிலுவைகளை மெதுவாக வசூலிக்கும் கொள்கையை பின்பற்றும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஏனைய மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து குறிப்பிட்ட அறிக்கை எதுவும் வரப் பெறாவிடினும், அவர்கள் பொறுப்பில் உள்ள குறிப்பிட்ட பகுதிகளில் மழையின்மை காரணமாக மிகவும் மோசமான வறட்சி நிலை இருப்பதாகத் தாங்கள் சரிவர அறிந்த பின் இதைப் போன்ற கொள்கையைப் பின்பற்றவும், ஏனைய மாவட்ட ஆட்சித் தலைவர்களை அனுமதித்து ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

அத்தகைய பகுதிகளைக் கொண்ட பட்டியல் ஒன்றை உடனடியாக அரசுக்கு அனுப்பிவைக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

**(இ) வட ஆற்காடு, கோவை மாவட்டங்களில் பருவமழையின்மையும், துயர் தணிப்புப் பணிகள் துவக்க வேண்டியதன் அவசியமும்.**

**திரு. வி. கே. கோதண்டராமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

> "வட ஆற்காடு, கோயம்புத்தூர் மாவட்டங்களில் பருவ மழை தவறியதால் அப்பகுதிகளில் உடனடி பஞ்ச நிவாரண வேலைகள் துவங்க வேண்டும்".



**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, வட ஆற்காடு: 1968, 1969 ஆண்டுகளில் இருந்த வறட்சிச் சூழ்நிலையில், இம்மாவட்டம் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியென்று அறிவிக்கப்பட்டது. பல்வேறு துயர் தணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. நகர்ப்புறத்திலும், கிராமப் பகுதிகளிலும் குடிநீர் வசதியை மேம்படுத்த முதலீடு கொடுக்கப்பட்டது. இதற்கென இம்மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை ரூபாய் 2·87 கோடியாகும். இது இம்மாநிலத்திலேயே ஒரு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட மிக உயரிய தொகையாகும். துயர் தணிப்புக்காக மொத்தம் ரூ 3·07 கோடி செலவிடப்பட்டது. மேலும், கூடுதலாக ஒதுக்கப்பட்ட தொகை இதில் சேராது. இப்பகுதியைப் பார்வையிட்ட வருவாய்த்துறை செயலாளர் அறிக்கைக் கிடைக்கப் பெற்று ஆய்வு செய்யப்பட்டதும் ஒப்புக்கொண்ட வேலைகளையும் முடிக்கப்பெறாத வேலைகளையும், முடிப்பதற்குக் கூடுதல் தொகை செலவழிக்கப்படும்.

திருப்பத்தூர், குடியாத்தம் வட்டங்களும், வாணியம்பாடி துணை வட்டமும் அடங்கிய குறிப்பாக திருப்பத்தூர் கோட்டத்தில் நிலவும் வறட்சி நிலைமைகளைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை ஒன்று இப்போது அனுப்பியுள்ளார். அவர் பாசன வசதிகளும், கிணறுகளும் மிக விரைவில் வறண்டு வருவதாகவும், குடிநீர்ப் பற்றாக்குறையும் உணரப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். இந்தத் துயரைத் துடைப்பதற்காக திருப்பத்தூர் கோட்டத்தில் தகுந்த துயர் தணிப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள ரூ. 7 லட்சம் கூடுதல் நிதி ஒதுக்குமாறு கேட்டுக் கொண்டார். மேலும், அவர் இம்மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் நிலவும் நிலைமையைப்பற்றி மேற்கொண்டும் ஒரு அறிக்கை அனுப்பி வைப்பதாக உறுதி கூறினார். மாவட்ட ஆட்சித் தலைவரின் சயற் குறிப்புகளின் மேல் இது குறித்து வருவாய்த்துறை வாரியத்தின் குறிப்புரை கிடைக்கப்பெற்று அது ஆய்வு செய்யப்பட்டவுடன் ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

**கோயம்புத்தூர் :** இம்மாவட்டம் முழுவதும் 1969-ல் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியென அறிவிக்கப்பட்டது. தொழிலாளருக்கு போதிய வேலை கொடுக்கும் நோக்கத்துடனேயே துயர் தணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இம்மாநிலத்தில் மிக உயர்ந்த தொகை பெறும் 4-வது மாவட்டமாக உள்ள இம்மாவட்டத்திற்கு, ரூ. 2·19 கோடி ஒதுக்கப்பட்ட தொகையில் துயர் தணிப்பு பணிகளுக்காக ரூ. 2·38 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் குடிநீர் வழங்கும் பணிக்காக வெள்ளக்கோவில் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு ரூ 3·41 லட்சம் ஒதுக்கப்பட்டது. ஒப்புக்கொண்ட துயர் தணிப்பு பணிகள் யாவும் மக்கள் நலனைக் கருதி முடிக்கப்பெறும் வகையில், அரசு அண்மையில் இம்மாவட்டத்திற்கு ரூ 9·41 லட்சம் அனுமதித்தது. முடிக்கப்பெறாத வேலைகளுக்காக கூடுதல் நிதி வேண்டி, சொற் குறிப்புகளை அனுப்பி வைக்கையில், மாவட்ட ஆட்சித் தலைவர், துயர் தணிப்புப் பணிகள் தொடங்குவதற்கு அவசியமான வறட்சி நிலை அண்மையில் எதுவும் ஏற்பட்டதாகத் தெரிவிக்கவில்லை. இருப்பினும் அரசு இந்த நிலைமை குறித்து உன்னிப்பாக கவனித்து வருகிறது. அத்தகைய அறிக்கை ஒன்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இருந்து கிடைக்கும் போது, மக்களைப் பாதிப்பதற்குக் காரணமாயுள்ள, அயறுரு நிலைமைகளைத் தணிக்கக்கூடிய தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## (5) அறிவிப்புகள்

(அ) சட்டப்பேரவை சுதந்திராக் கட்சியின் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டதுபற்றி அக்கட்சித் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டசபை சுதந்திராக் கட்சித் தலைவரிடம் இருந்து எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது.

"அன்புடையீர்,

வணக்கம், தமிழ்நாடு சட்டசபை சுதந்திராக் கட்சியின் கூட்டம் இன்று மாலை (31-3-70) சென்னையில் நடை பெற்றது. கீழ்க்கண்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். தலைவர் : திரு. கரு. சீமைச்சாமி, உபதலைவர்/ செயலாளர் : டாக்டர் எச். வி. ஹாண்டே, பொருளாளர் : திரு. ஆர். கிருஷ்ணசாமி கௌண்டர், கொறடா : திரு. கே. எம். ராமசாமி கௌண்டர்.

தங்கள் அன்புள்ள

கரு. சீமைச்சாமி."

இதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

6. மாண்புமிகு திரு. செ. மாதவன் மீது திரு. என். எஸ். வி. சித்தன் சாட்டியுள்ள குற்றச்சாட்டு குறித்து.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். 28-3-70 ஆம் தேதியன்று நான் இந்த மன்றத்தில் பேசிய பேச்சில் சில பகுதிகளை நீக்கப்போவதாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அறிவித்தார்கள். இப்போது நான் அவருடைய தீர்ப்பை எதிர்பார்க் கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 28-3-70 அன்று திரு. என்.எஸ்.வி. சித்தன் அவர்கள் இந்த அவையில் பேசியபோது மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் தம் பகுதியில் நிலம் வாங்கியதைப் பற்றியும், அவருடைய சொந்த நிலத்தை விற்றது பற்றியும் ஒரு கருத்தைக் கூறினார்கள். அமைச்சர் என்பதனாலே அதிகமான விலைக்கு அந்த நிலத்தை அரசாங்கம் எடுத்துக் கொண்டதாக குற்றம் சாட்டினார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எழுந்திருந்து அப்படிப்பட்ட நிலைமை இல்லை என்பதற்கு விளக்கம் கூறினார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் கூறிய பிறகு நான் திரு. சித்தன் அவர்களிடம் "அப்படிக் கூறியதற்காக வருந்துகிறேன். அதைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்" என்பதாக அவர்களே கூறி விடுவது நல்லது என்று பலமுறை சொன்னேன்.

அப்போதும் "நான் அப்படிக் கூறவில்லை" என்பதாகக் கூறினார்கள்.

நான் உடனேயே "அப்படிக் கூறியிருந்தால் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன். வருத்தம் தெரிவித்துக்கொள்கிறேன்" என்பதாகச் சொன்னாலும் போதும் என்றேன்.

அதற்கும் அவர் இசைவு தரவில்லை. நான் சொன்ன கருத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தார். அதன் காரணத்தினால் நான் அவருடைய உரையில் இருந்து அந்தப் பகுதி நீக்கப்படும் என்று அப்போதே அறி வித்தேன்.

பிறகு அவருடைய உரையின் சட்டசபை குறிப்பை எடுத்துப் படித்துப் பார்த்த நேரத்தில், 'நான் கூறவில்லை' என்று அவர் சொன்னது அங்கே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"அமைச்சராக இருக்கிற காரணத்தினால் குறைந்த மதிப்புள்ள நிலத் திற்கு அவ்வளவு தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று திரு. சித்தன் அவர்களே கூறியிருக்கிறார்கள். இது அவையின் நிகழ்ச்சிக் குறிப்பில் இருந்து நீக்கப்படும் என்று அறிவித்திருக்கிறேன்.

ஆனாலும் மேலும் ஒன்றையும் கூறிவிட விரும்புகிறேன். அவையில் எந்தக் கருத்தை வேண்டுமானாலும் கூறிவிடுவது, எப்படிப்பட்ட குற்றச் சாட்டை வேண்டுமானாலும் கூறிவிடுவது, கூறிவிட்ட பிறகு அதற்கு



ஆதாரம் இல்லை என்ற அளவில் அதைச் சபைக் குறிப்பிலிருந்து நீக்குவது என்ற முறை பேரவையின் பெருமையை, கண்ணியத்தை காப்பாற்றுவ தாக இருக்காது.

இன்னும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். நேற்று இந்த மன்றத் தில் ஒரு கருத்து கேட்கப்பட்டிருக்கிறது. இந்தப் பேரவையில் எந்தப் பிரச்சினையை எழுப்புவதாக இருந்தாலும் அது இந்த அவையை ஒட்டியதாக இருக்கவேண்டும். இந்த அரசை ஒட்டியதாக இருக்க வேண்டும். இந்த அமைச்சரவைக்குச் சம்பந்தப்பட்ட ஒன்றாக இருக்க வேண்டும். கட்சிகளுக்குள் எத்தனையோ பிரச்சினைகள் இருக்கலாம். கட்சிக்குட்பட்ட பிரச்சினையை இந்த அவையில் எழுப்புவதற்கு உரிமை யாருக்கும் இல்லை. கட்சிக்குட்பட்ட பிரச்சினைகளைப் பற்றி இங்கே எழுந்து விளக்கம் கேட்பது என்பது ஒரு தவறான முறையாகும். எதுவும் இந்த அவையில் எழுப்பப்படுகிற காரணத்தினால் பத்திரிகைகளில் வருகிறது. அப்படி பத்திரிகைகளில் வரவேண்டும் என்கிற காரணத்திற் காக இந்த அவையில் எதை வேண்டுமானாலும் கேட்டுவிடுவது என்கிற போக்கு சரியானதல்ல. அது முற்றிலும் நம் அவையின் மரபுக்கே முரண்பட்டது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மன்ற உறுப்பினர்கள் அவைத் தலைவரின் அனுமதி பெறாமல் எழுப்பிவிடுவது, சில நேரங்களில் தாம் சொல்வது என்ன என்று கேட்கும்படியாகச் சொல்லி கருத்தைச் சொல்லிவிடுவது,—அவை பேரவை நிகழ்ச்சிக் குறிப்பிலும் ஏறிவிடுவது, பத்திரிகைகளிலும் வந்துவிடுவது என்பதை எல்லாம் பார்க்கிறபோது இனி பேரவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுவதோடு, பத்திரிகைகளிலும் வராமல் இருக்க ஒரு தடை விதிக்கப் படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சித்தன் அவர்கள் தான் கூறவில்லை என்ற தொடரைக் கூறி யிருக்கிறார்கள். "கூறியிருந்தால் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்" என்று கேட்டுக்கொள்ள சொன்னதற்கும் மறுத்து இருக்கிறார்கள். இப்போது அவர் கூறிய அந்தப் பகுதி அவை நிகழ்ச்சிக் குறிப்பில் இருந்து நீக்கிவிடுவதாக இருந்தாலும் அது அவையின் கண்ணியத்தைக் காப்பாற்றுவதாக இருக்காது. இதைப்பற்றி என்ன முடிவு எடுப்பது என்பதுபற்றி யோசித்துப் பிறகு தீர்ப்புத் தெரிவிக்கிறேன்.

**Thiru K. Vinayakam :** I am not going into the relative merits of the issue. May be the Hon. Member Thiru N. S. V. Chithan is wrong or the Hon. Minister Thiru Madhavan is wrong. That has to be decided by facts. But supposing an Hon. Member of this House alleges some misconduct or alleges use of his office in his own favour by an Hon. Minister, supposing an Hon. Member also takes responsibility to prove the same before an impartial Tribunal or Commission if the Government is prepared to appoint the same, then how is this relevant ? After all, in all these things, why should the Government feel so touchy ? You, also, Sir should not be expected to come to their aid every now and then. I want your clarification, Sir. Supposing the Hon. Member takes responsibility..

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. விநாயகம் அவர்கள் சொல்வது போல இந்த அவையில் அமைச்சர்கள் மீது, அரசின் மீது குற்றம் சாட்டுவதற்கு மன்ற உறுப்பினர்களுக்கு முழு உரிமை இருக்கிறது. அதை மறுக்கவில்லை. அந்த உரிமையைத் தவறான முறையில் பயன்படுத்திக்கொள்ளும்போதுதான், ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை இந்த அவையில் சொல்வதுதான் இப்போது பிரச்சினைக்குரியதாகிறது. மன்ற உறுப்பினர்களுக்கே தெரியும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆதார மற்ற ஒரு குற்றச்சாட்டை இந்த அவைமுன் வைத்தபோது அதை அவரால் நிரூபிக்க முடியாத நிலைமை ஏற்பட்டபோது அதுபற்றி என்ன

என்ன நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளலாம், அஸ்ஸாம் மாநிலத்தில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை எல்லாம் அன்றைய தினமே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இன்னும் மேஸ் பார்லிமெண்டரி ப்ராக்டீசை எடுத்துக்கொண்டால்—ஆதாரமற்ற பெரும் குற்றச்சாட்டை இந்த அவையில் கூறுகிற உறுப்பினருக்கு சிறைதண்டனை கூடக் கொடுக்க முடியும் என்பதைக் காணலாம்.

(Thiru K. Vinayakam: Let us have the pleasure of going to prison under your regime. We will go with pleasure.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நம்முடைய விநாயகம் அவர்கள் பலமுறைகள் முறைதவறிப் போகிறார்கள். என்னுடைய ரிஜிமிலே, நீங்கள் சிறைத்தண்டனை அடையவேண்டுமென்று சொல்லுகிற பேரவைத் தலைவர் அல்ல நான். திரு. விநாயகம் அவர்களோ இந்த மன்றத்திலே அப்படி நடந்து கொண்டிருக்கின்ற ஒவ்வொரு முறைக்கும் கண்டிப்பான நடவடிக்கை எடுப்பதென்றால் இந்த மன்றத்திலே எத்தனை முறைகள் என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் அறிவார்கள். அந்த ஒரு சொல்லை மட்டிலும் எடுத்துக் கொள்ளக்கூடாது. கூறிய குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாது போனால் அதைக் கூறியவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்றுதான் சொன்னேனே தவிர, அப்படிப்பட்டவர்களைச் சிறைக்கே அனுப்பலாம் என்பதல்ல. ஒரு மாதம் ஒரு வாரம் அவையிலிருந்து விலக்கி வைக்கலாம். சிறைக்கு அனுப்புகிறேன் என்பதல்ல. நம்முடைய விநாயகம் அவர்கள் வக்கீலுக்குப் படித்தவர்கள். அதையெல்லாம் நான் படிக்கவில்லை. ஆனால் விநாயகம் அவர்கள் இந்தச் சாதாரணச் சட்டத்தைச் கூடப் புரிந்துகொள்ளவில்லை என்பது விந்தையாக இருக்கிறது. திரு. விநாயகம் அவர்கள் சொன்னதுபோல அந்த சித்தன் அவர்கள் நிரூபிக்கிறார்கள். அதற்கு ஆதாரம் இருக்கிறது என்று சொன்னால் அதற்குப் பேரவைத் தலைவர் குறுக்கே நிற்க மாட்டார். சித்தன் அவர்கள் கூறியது நிரூபிக்கப்பட்டால் அமைச்சரவை அந்த அமைச்சர் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதை முடிவு செய்யும். அதுவல்ல இப்பொழுது. சித்தன் அவர்கள் கூறிய குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்பதைப் பேசல் அவர்களோ நான் அப்படிக் கூறவில்லை, கூறவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். கூறியிருக்கிறார்கள் திரும்பப் பெறுங்கள் என்று நான் சொன்னேன். அதற்குள்ளே விநாயகம் அவர்கள் விளக்கம் தேவையென்று சொன்னார்கள். தேவையில்லாத விளக்கம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆதாரமுள்ள குற்றச்சாட்டுகளாக இருந்தால் கூறுவதற்கு மறுக்கவில்லை, ஆதாரமற்ற குற்றச்சாட்டாக இருந்தால் கூறக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இந்தப் பேரவையின் மரபையும் கண்ணியத்தையும் காக்கக்கூடிய பொறுப்பு எல்லோருக்கும் இருக்கிறது என்பதை காங்கிரஸ் கட்சிக்காரர்களாகிய நாங்களும் ஒப்புக்கொள்கிறோம். பேரவைத் தலைவர் அவர்களுடைய தீர்ப்புதான் இறுதியானது என்பதையும் ஒப்புக்கொள்கிறோம். பேரவைத் தலைவர் அவர்கள் பேசும் பொழுது குறுக்கிடக்கூடாது என்பதால்தான் நான் குறுக்கிடவில்லை, முழுமையும் கேட்டுக்கொண்டிருந்து இப்பொழுது பேசுகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கப் பணத்திலிருந்து சிங்கம்புணரியில் வாங்கியதாய் நான் கூறியதாகச் சொல்லியிருக்கிறார்கள் அமைச்சர் அவர்கள். என்னுடைய பேச்சிலே அரசாங்கப் பணத்தைக் கொண்டு நிலம் வாங்கியிருப்பதாக நான் எங்கே சொல்லியிருக்கிறேன்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை வைத்துத்தானே உங்களுடைய வாதத்தைத் தொடங்கப் போகிறீர்கள்?

**திரு. என். எஸ். வி. சித்தன்:** இல்லை..........





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதை வைத்துக் கொண்டு விவாதத்தைத் தொடங்கப் போகிறீர்கள், ஆகவே நான் சொல்லி விடுவது நல்லது. நீங்கள் கூறியிருப்பது, "அமைச்சராக இருக்கிற காரணத்தினால் குறைந்த மதிப்புள்ள நிலத்திற்கு அவ்வளவு தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று பேசியிருக்கிறீர்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** முன்னாலே இருக்கிற இரண்டு வரிகளையும் பார்த்துவிட்டு நான் பேசி முடித்திருக்கிறேனா இடைமறிக்கப்பட்டிருக்கிறதா என்பதையும் தாங்கள் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** "அமைச்சர்கள் இங்கே சொத்துக் கணக்குகளைக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு சட்டத் தொழில் அமைச்சர் அவர்கள் சொத்து விவரக் கணக்கை இங்கே கொடுத்திருக்கிறார். 31-3-67 முடிய என்ற தலைப்பின் கீழ் புஞ்சை எக்கர் மனையிடங்கள் 5 என்று போட்டு, 5 ஏக்கருக்கு ரூ. 5,000 மதிப்புக் கொடுத்திருக்கிறார்கள். பின்னால் 31-3-1968 முடிய என்ற தலைப்பின் கீழ் 31-3-67 ல் உள்ள அதே சொத்து விவரக் கணக்கைக் கொடுத்திருக்கிறார்கள். பின்னாலே 31-3-69 முடிய என்ற தலைப்பின் கீழ் புஞ்சை எக்கர் மனையிடங்கள் 3, மதிப்பு ரூ 3,000 என்று கொடுத்திருக்கிறார்கள். 1967, 1968-ல் கொடுத்ததைவிட இரண்டு ஏக்கர்கள் குறைத்திருக்கிறார்கள் கடைசியில் பின்னாலே உள்ள குறிப்பில் 'சிங்கம்புணரியில் புஞ்சை நிலம் மனையிடமாக 1.54 ஏக்கர் நில ஆர்ஜிதத்தில் எடுத்துக் கொண்டு தரப்பட்ட தொகை ரூ. 34,000' என்று கொடுத்திருக்கிறார்கள். முதல் ஆண்டுகளில் கொடுக்கப்பட்ட விவரம் 5 ஏக்கர், ரூ. 5,000 மதிப்பு. அதிலே 1·54 ஏக்கருக்கு ரூ. 34.000 தரப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் இதுபற்றி விளக்கம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்."

இதுவரைக்கும் சரி. இதற்குப் பிறகு, "இதுபற்றி வெளியிலே பரவலாகப் பேசப்படுகிறது, அமைச்சராக இருக்கிற காரணத்தினால் குறைந்த மதிப்புள்ள நிலத்திற்கு அவ்வளவு தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று கூறியிருக்கிறார்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** என்னுடைய பேச்சில் குறுக்கீடு இருக்கிறதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** அதையும் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் எழுந்து "விளக்கம் கேட்பதற்கு இது அல்ல முறை. கனம் அங்கத்தினர் அவர்கள் நன்றாகத் தெரிந்து கொண்டு பேசவேண்டும். இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளை அள்ளி வீசுவதினால் தலைவராகிவிடலாம் என்று அவர்கள் கருதிவிடக்கூடாது. பேசுவதற்கு முன்னால் நன்றாக விசாரித்துவிட்டுப் பேசவேண்டும். இதுபோன்ற குற்றச்சாட்டுகளை உறுப்பினர்கள் கூறும் பொழுது, அதை எந்த முறையில் நாம் விசாரிக்க வேண்டும் என்பதற்கான ஒரு முறையை வகுப்பதற்கு இது ஒரு வாய்ப்பாக இருக்கிறது. அரசாங்கத்திற்காக நிலம் கூடுதல் விலையில் வாங்கப்பட்டது என்பதுதான் உறுப்பினர் அவர்கள் கடைசியாகச் சொன்னது. முதலில் சொன்ன குற்றச்சாட்டு, குற்றச்சாட்டுதானா என்பது அவர்களுக்கே புரியவில்லை. அதைப்பற்றி அவர்கள்தான் விளக்கம் சொல்ல வேண்டும். நிலம் இருப்பதைச் சட்டமன்றத்தில் சொல்கிறோம். அதனுடைய விலை குத்து மதிப்பாக எவ்வளவு வரும் என்று சொல்கிறோம். பின்னாலே விலை கூடுதலாகப் போகிறதா, யாரும் கூடுதல் விலைக்கு வாங்குகிறார்களா என்பதை இப்பொழுதே ஊகித்துக் கொண்டு சொல்ல முடியாது. கூடுதல் விலைக்குப் போனால் சட்டமன்றத்தில் கூடுதல் விலைக்குப் போயிற்று என்று சொல்கிறோம். கனம் அங்கத்தினர் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. முன்னால் சொன்னது மதிப்பு என்ன என்று சுமாராகச் சொல்கிறோம். பின்னாலே விலை போகும்பொழுது என்ன விலை என்ற

தகவலை வைத்திருக்கிறோம். எந்தவிதமான தகவலையும் மறைக்கவில்லை. அப்படி மறைக்காமல் செய்த ஒரு நல்ல காரியத்தைப் பற்றி, கனம் அங்கத்தினர் அவர்கள் ஏதோ ஒரு பெரிய குற்றச்சாட்டு சொல்வது போலத் தவறுதலாகச் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. அரசாங்கத்திற்காக தனிப்பட்டவர்களுடைய நிலம் விலைக்கு வாங்கப்பட்டது என்று அவர்கள் சொல்கிறார்களா? அதற்கு விளக்கம் கூறவேண்டும் என்று அப்படிச் சொல்லி அவர்கள் தப்பித்துக் கொள்வது வேடிக்கையாக இருக்கிறது" என்று அவர்கள் விளக்கத்தைச் சொல்லி யிருக்கிறார்கள். ஆனால் சித்தன் அவர்கள் சொல்லியிருப்பது, "அமைச்சராக இருக்கிற காரணத்தினால் குறைந்த மதிப்புள்ள நிலத்திற்கு அவ்வளவு தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று சொல்லியிருககிறார்கள்.

முன்பொரு முறை இதே மன்றத்திலே தொழில் அமைச்சர் ஆக இருந்தவரைப் பற்றி ஒரு கருத்துக் கூறப்பட்டது. அப்பொழுது தொழிலமைச்சராக இருந்த திரு. வெங்கட்டராமன் அவர்கள் அவர்களுடைய பெயரிலே அமைக்கப்பட்டிருக்கிற வெங்கட்டராமபுரத்தில் என்ன விலை கொடுக்கப்பட்டது என்று கூறப்பட்ட நேரத்திலே, 'என்னுடைய பெயரை அதோடு இணைத்துக் கூறுவதன் நோக்கமென்ன, ஏதாவது தொடர்பிருக்கிறதா? குற்றஞ்சாட்டுகிறார்களா? அந்தத் தொடரை நீக்கிவிட்டுச் சொல்லுங்கள்' என்று சொல்லி அந்தத் தொடரை நீக்கிவிட்ட பிறகுதான் அவர்கள் விட்டார்கள்.

இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், அவர்களுடைய பெயராலே உள்ளதைச் சொல்கிற நேரத்திலே அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது என்றால் திரு சித்தன் அவர்கள் "அமைச்சராக இருக்கிற காரணத்தினால் குறைந்த மதிப்புள்ள நிலத்திற்கு அவ்வளவு தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று கூறியிருக்கிறார்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இன்னும் முடிக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது குற்றச்சாட்டு ஆகிறது. அப்படிச் சொல்கிற காரணத்தினால் அமைச்சராக இருக்கிற காரணத்தினாலே பதவியைப் பயன்படுத்திக் கொண்டு அதிக விலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது தெளிவாகிறது என்ற நிலைமையிலே சொல்லியிருக்கிறார்கள். இதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பின்னால் நான் அறிவிக்க இருக்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** என்னுடைய பேச்சிலிருந்து சில பகுதிகளைப் படித்துக் காட்டினீர்கள், அதேபோல அமைச்சர் அவர்கள் சொல்லிய பகுதியையும் இங்கே படித்துக் காட்டினீர்கள். நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்குவதற்குத் தங்களுக்கு உரிமை இருக்கிறது. 'சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்..' என்ற குறளின்படி நீதி வழங்குவீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது......(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்தக் குறளைச் சொல்லி........

**திரு. ஜே. ஜேம்ஸ்:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

**THIRU T. MARTIN :** Who is the Speaker, Sir?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நம்முடைய மார்டின் அவர்கள் 'Who is the Speaker, Sir?' என்று கேட்பது முறையா?

**THIRU T. MARTIN :** I requested you, Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ரிக்வஸ்ட் பண்ணுவது என்றால் எல்லோரும் எழுந்து பேசலாமா? இந்த அவையில் முறைகேடு நடந்தால் அதைக் குறிப்பிடுவதற்கு ஒரு முறை இருக்கிறது. அதற்காக எழுந்து நின்று யார் ஸ்பீக்கர் என்று கேட்டீர்களே அதுவே முறையில்லை,





**THIRU T. MARTIN :** You were on your legs.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் நிற்கிற நேரத்திலே நீங்கள் எழுந்து நிற்கிறீர்களே இது என்ன முறை? முறையைப்பற்றிப் பேசிக் கொண்டே மீண்டும் நீங்கள் நான் நிற்கும்பொழுது நிற்கிறீர்களே அது என்ன முறை ? 'ஏதிலார் குற்றம்போல் தமகுற்றங் காண்கிற்பின் தீதுண்டோ மன்னு முயிர்க்கு' என்றும் திருக்குறள் இருக்கிறது.

**THIRU K. VINAYAKAM :** When will you sit ? If you sit, we will speak. A Speaker seldom speaks.

முற்பகல் 10–30.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 24 மணி நேரமும், சபை நடக்கிற எல்லா நேரத்திலும் பேரவைத் தலைவர் எழுந்து நின்று கொண்டிருக்க மாட்டார். சித்தன் அவர்கள் சமன் செய்து சீர்தூக்குங் கோல் போல் நீதி வழங்குவார்கள் என்று சொன்னார்கள். அந்த முறையில் ஏதாவது இருந்தால் அதைச் சுட்டிக்காட்டுவதற்கு வேறு முறை இருக்கிறது. பேரவைத் தலைவர் தவறு செய்துவிட்டால் அதைப் பற்றிக் கண்டனமே தெரிவிக்கக் கூடாது, அதைப் பற்றிக் கூறவே கூடாது என்று சொல்லவில்லை. அதற்கு வேறு முறை இருக்கிறது, அதைப் பின்பற்றுங்கள். அன்று நீங்கள் கூறியதைப் பற்றி மட்டும் இப்போது விளக்கம் கூறுங்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** என்னுடைய பேச்சிலிருந்து அந்தப் பகுதியை நீக்க வேண்டுமென்றால் அமைச்சர் அவர்கள் என்னைப் பற்றிச் சற்று வேகமாக அன்று பேசிய பகுதிகளையும் நீக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் பேச்சிலே இரண்டு முரணான கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஒன்று, அரசாங்கத்திற்காக நிலம் கூடுதல் விலையில் வாங்கப்பட்டது என்று நான் கூறியதாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். நான் அப்படிச் சொல்லவில்லை. இரண்டாவது, நில ஆர்ஜிதம் என்று சொன்னால், சர்க்கார் மட்டும் ஆர்ஜிதம் செய்வதில்லை, தனிப்பட்டவர்களும் நில ஆர்ஜிதம் செய்கிறார்கள் என்று சட்டம் தெரிந்த சட்ட அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனக்குச் சட்டம் தெரியாது. சர்க்காருக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்றும் சொல்லுகிறார். விவரங்களைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் கேள்வி கேட்பதாகக் கூறியிருக்கிறார். எனக்குத் தெரிந்த வரை நில ஆர்ஜிதம் என்று சொன்னாலே அது சர்க்கார் செய்வதுதான். நான் அறிந்தது அதுதான்.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த விளக்கத்தை எல்லாம், அமைச்சரைப் பற்றிய இந்தக் குறைகளை எல்லாம் இப்பொழுது சொல்லிக்கொண்டிருக்கக்கூடாது. அதைப்பற்றிக் கூறுவதற்குப் பின்னால் சந்தர்ப்பம் இருந்தால் கூறலாம், அது அமைச்சருக்கும், உறுப்பினருக்கும் உள்ள உரிமைகளைப் பொருத்தது. அன்று நீங்கள் கூறியதைப் பற்றிய விளக்கத்தைக் கூறுவதாக இருந்தால் கூறுங்கள், இல்லையென்றால் பேசுவதற்கு இடம் இல்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** அன்று நான் பேசி முடிப்பதற்குள்ளாகவே பல இடையூறுகளும், குறுக்கீடுகளும் இருந்தன. நான் பேசாத ஒன்றைப் பேசியதாகக் கூறி பேரவைத் தலைவர் அவர்கள் என்னைப் பற்றிக் கூறியதையும் எடுத்துவிட வேண்டும் என்பதுதான் என்னுடைய வாதம். நான் முடிக்காத ஒன்றை......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்னுடைய ரூலிங்கை இப்படி கண்டிஷன் போட்டுக் கொடுக்க முடியாது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** வேண்டுகோள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது வேண்டுகோள் அல்ல......

**திரு. கே. விநாயகம் :** அது கிளாரிபிகேஷன்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது கிளாரிபிகேஷன்தானா என்பதை வக்கீல்கள் எல்லாம் சேர்ந்து பேசித் தெரிந்து கொண்டு வாருங்கள்.

THIRU K. VINAYAKAM : That is an insult. I cannot pocket this kind of insult. மாநாடு போடறதா ?

Please withdraw that expression.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் கட்சி உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் 'என்னுடைய பேச்சை எடுத்து விடுவதானல் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதையும் எடுத்துவிட வேண்டும்' என்று கூறுவது விளக்கந்தானு? இது விளக்கம் என்று எந்தச் சட்டத்திலே, எந்த 'சேம்பர் லா'விலே வருகிறது?

THIRU K. VINAYAKAM : You have given him the opportunity to speak and he clears his position.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேறு. சித்தன் அவர்கள் சொன்னதற்கு அப்படிப்பட்ட கண்டிஷன் சொல்லக்கூடாது என்று சொன்ன நேரத்தில், சித்தன் சொன்னது விளக்கம் என்று தாங்கள் சொன்னீர்களே, அது விளக்கம்தானு? அது விளக்கம் என்று எந்தச் சட்டத்திலே அல்லது எந்த சட்ட நிபுணர்கள் கூறுகிருர்கள் என்பதைப் பற்றி விநாயகம் அவர்களே சொல்லட்டும் என்றுதான் சொன்னேன். அதை நீக்குவதாக நான் இப்போது சொல்லவில்லை. நீக்குவதா இல்லையா என்பது பற்றி என்ன முடிவு எடுப்பது என்று பிறகு தீர்ப்புக் கூறுகிறேன் என்றுதான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

## 7. தகவல் கோரல்.

### நிலச் சீர்திருத்த மசோதாவின் தமிழ் மொழி பெயர்ப்பு உறுப்பினர்களுக்கு வழங்கப்படுவது குறித்து.

திரு. ம. பொ. சிவஞானம் : தலைவர் அவர்களே. இங்கே உறுப்பினர்களுக்குத் தரப்பட்டுள்ள நிலச் சீர்திருத்த மசோதாவின் நகல்கள் ஆங்கிலத்திலே இருக்கின்றன. ஆறு பக்கங்கள் உள்ள இந்த நகலை, அரசாங்கத் துறை விரும்பியிருந்தால், சில மணி நேரத்தில் தமிழிலே தயாரித்துக் கொடுத்திருக்கலாம். விவாதத்திற்கு வருவதற்கு முன்பாவது தமிழிலே தயாரித்துக் கொடுப்பார்களா? கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு அச்சுத் துறைக்குப் போயிருக்கிறது. வந்தவுடன் உரிய நேரத்தில் கொடுக்கப்படும்.

திரு. ம. பொ. சிவஞானம் : தலைவர் அவர்கள் கூறியதை வணக்கத்துடன் ஏற்றுக்கொள்ளுகிறேன். தமிழ் மொழி பின்தங்குகின்ற முறை இல்லாமல் இரண்டும் சேர்ந்து வருவதுதான் முறை என்று முறையிட்டுக் கொள்ளுகிறேன்.

## 8. 1970-71-ம் ஆண்டிற்கான நிதிக்கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு-தொடர்ச்சி.

(அ) நிதிக்கோரிக்கை எண் 16—வேளாண்மை
(ஆ) நிதிக்கோரிக்கை எண் 17—மீனளம்
(இ) நிதிக்கோரிக்கை எண் 39—வேளாண்மை மூலதனச் செலவு
} தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின்மீது விவாதம் தொடரும். 21 பேர் பேசுவதற்காகப் பெயர் கொடுத்திருக்கிருர்கள். உறுப்பினர்கள் எல்லாம் பேசிய பிறகு எதிர்க் கட்சி தலைவர் அல்லது அவரது கட்சியைச் சார்ந்த ஒருவர் பேச வேண்டும்.





கடைசியாக, அமைச்சர் விடையளிக்க வேண்டும். அமைச்சருக்கு அரை மணி நேரம் தேவை என்று கூறுகிருர்கள். அமைச்சருக்கும் எதிர்க் கட்சித் தலைவருக்கும் ஒரு மணி நேரம் என்ருல் உறுப்பினர்களுக்கு இரண்டு மணி நேரந்தான் கிடைக்கும். ஆக 20 பேர் பேச இருப்பதால் ஓர் உறுப்பினருக்கு 6 நிமிடம் வரும் என்ருலும் அமைச்சர்கள் குறுக்கீடு போன்றவற்றைச் சேர்த்தால் ஓர் உறுப்பினருக்கு ஐந்து நிமிடத்திற்கு மேல் கொடுக்க இயலாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். உறுப்பினர்கள் ஐந்து நிமிடத்திற்குள் முடித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்போது திரு. திப்பையா அவர்கள் பேசுவார்கள்.

*திரு. டி. டி. எஸ். திப்பையா : கனம் சபாநாயகர் அவர்களே, 1970–71-ம் ஆண்டு வேளாண்மைத் துறை மானியத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நேற்று மாண்புமிகு உறுப்பினர்கள் விவசாய முன்னேற்றத்தைப் பற்றியும், விவசாயத்தில் இருக்கக்கூடிய கஷ்ட நஷ்டங்களைப் பற்றியும், எந்தெந்த முறையில் மாற்றியமைக்க வேண்டுமென்பதைப் பற்றியும் கருத்துக்களைக் கூறினர்கள். என்னுடைய கருத்துக்களை இன்று சுருக்கமாகக் கூற ஆசைப்படுகிறேன். விவசாய முன்னேற்றம் என்று சொல்லும்போது வேளாண்மை முன்னேற்றம் இருந்தாலும் விவசாய பின்னேற்றம் என்றுதான் நிலைமை இருக்கிறது. விவசாய முன்னேற்றம் ஓரளவுக்குக் கணிசமாக இருந்தாலும் கூட, அந்த விவசாயத்தை நம்பி இருக்கக்கூடிய விவசாயிகள் நிலை நாளுக்கு நாள் கீழ் நோக்கிச் சென்று கொண்டிருப்பதை நாம் உணருவோம். திருந்திய விவசாயம் அல்லது நல்ல விதைகளை இட்டு பலன் பெறக்கூடிய விவசாயத்தைச் செய்கிறோம் என்று பார்க்கும் போது அதிலே ஏற்படக்கூடிய பல சிரமங்களைப் போக்கியாக வேண்டும். சென்ற பத்தாண்டுகளுக்கு முன்பு விவசாயம் ஒரு முறையில் இருந்தாலும் கூட அன்று விவசாயிகள் நல்ல நிலையில் குடும்பத்தைக் காப்பாற்றி தங்களுடைய விவசாயத்தையும் நல்ல முறையில் செய்து சந்தோஷமாக இருந்தார்கள். இன்று எல்லா விதமான முன்னேற்றமும் அடைந்து விட்டிருந்தாலும் கூட, அதிகமான விளைச்சலைப் பெருக்கி யிருந்தாலும் கூட அவனுக்குக் கிடைக்கக்கூடிய வருமானம் மிகவும் குறைவாகவே இருக்கிறது.

ஐ. ஆர். 8 நெல் பற்றிப் பெருமையாகப் பேசினர்கள். ஐ. ஆர். 8 நெல் ஏக்கருக்கு 40, 45 மூட்டை விளைந்தாலும் கூட அந்த விவசாயத்தைச் செய்ய முற்படும்போது அதற்கு இடும் எரு, பூச்சி மருந்துகள், கொடுக்கக்கூடிய தண்ணீர் இவற்றைக் கணக்கிட்டுப் பார்க்கும் போது, அதற்காகும் செலவைப் பார்க்கும் போது கடைசியாக விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய வருமானம் முன்பு எவ்வளவு கிடைத்து வந்ததோ அதே அளவுதான் கிடைக்கிறது. இன்று விவசாயிகள் அதிகப்படியாக உற்பத்தி செய்கிறார்கள் என்பது பெருமையாக இருக்கிறது. பத்து மூட்டை விளைந்த இடத்தில் 15 மூட்டையும், 25 மூட்டை விளைந்த இடத்தில் 40 மூட்டையும் விளைகிறது என்ற நம்பிக்கை இருக்கிறது. அதே சமயத்தில் விவசாயிகளுக்கு அதற்குத் தகுந்த வருமானம் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

அக்ரிகல்சுரல் எக்ஸ்டென்ஷன் ஆபீசர்கள், கிராம சேவக்குகள் எல்லாம் ஆங்காங்கு இருக்கக்கூடிய நிலையை எல்லாம் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறி விவசாயத்தைப் பெருக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்ற நிலை இருந்தாலும் கூட அவர்களுக்குப் போதிய அவகாசம் இருப்பதில்லை. அவர்கள் டெப்போக்களில் இருந்து கொண்டு பூச்சி மருந்து கொடுப்பது போன்ற காரியங்களைச் செய்வதிலேயே நேரம் சென்றுவிடுகிறது. எங்கள் யோசனை அந்த வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் பணியாற்றுகிற விஸ்தரிப்பு அதிகாரிகள் விவசாயத் துறையை மாத்திரம் பார்க்க வேண்டும். மற்ற பண பொறுப்பையோ டிப்போ பொறுப்பையோ ஒதுக்கி வைத்துவிட்டு அதற்கென்று வேறு ஒரு அதிகாரியை போட்டு

விட்டு அவர் விவசாயத்தை மட்டும் கவனிக்க வேண்டுமென்ற நிலையை ஏற்படுத்தினாலொழிய விவசாயத்திற்கு அவ்வளவு ஊக்கம் இருக்காது என்று யோசனை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் ஒவ்வொரு வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும் ஒரு லட்ச ரூபாய்க்குக் குறைவு இல்லாமல் அங்கு பூச்சி தெளிக்கும் மருந்துகள், டிராக்டர்கள், பம்பு செட்டுகள், டஸ்டர்கள் பழுது அடைந்து பார்க்க முடியாத அளவில் அங்கு வைத்துக்கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். இவைகள் எல்லாம் விவசாயிகள் உபயோகிக்க முடியாத அளவில் இருக்கின்றன. அவைகளை எல்லாம் ரிப்பேர் செய்து விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும். விவசாயிகள் அதிகமான அளவில் உற்பத்தி செய்ய வேண்டுமென்ற நிலையில் அரசாங்கம் இந்த ஒரு முயற்சி செய்வதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே சமயத்தில் ஒரு ஏக்கர் விவசாயம் செய்ய.......(மணியடிக்கப்பட்டது)

*திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்: சட்ட மன்றத் தலைவர் அவர்களே வேளாண்மை மானிய கோரிக்கையை ஆதரித்து நான் கருத்துக்களை சொல்ல ஆசைப்படுகிறேன்.

இப்போது விவசாயிகள் எல்லாம் இந்த அரசாங்கத்தின்மீது சற்றுக் கோபம் கொண்டிருக்கிறார்கள். காரணம் இந்த அரசாங்கம் நிலச் சீர்திருத்த சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்பதற்காக. இந்தக் கோபத்தைத் தணிப்பதற்கு நான் அரசாங்கத்திற்கு ஒரு யோசனை சொல்ல ஆசைப்படுகிறேன். விவசாய நில உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டு வந்த பிறகு அந்த நிலங்களுக்கு விவசாய வருமான வரி என்று ஒன்று இருக்கிறதே அதை தயவு செய்து எடுத்துவிடுங்கள் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக இந்த ஐ. ஆர். 8 நெல்லைப் பற்றி நீண்ட விளக்கங்கள் எல்லாம் இரண்டு தரப்பிலும் தந்தார்கள். விதைகள் கொடுப்பதும், உரம் கிடைப்பதும், பூச்சி மருந்துகள் கிடைப்பதும் எந்த நேரத்தில் எந்தக் காலத்தில் பயிர் செய்ய வேண்டுமென்று விரும்புகிறார்களோ அந்த நேரத்தில் கிடைக்கவில்லையென்று குறை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் குறைகள் உடனடியாகத் தவிர்க்கப்பட வேண்டும். தவிர்க்கப்பட்டாலும் கூட நெல் மகசூலை விவசாயிகள் எல்லாம் பேசும் பொழுது இரண்டாம்தர ரகத்தில் சேர்த்திருக்கிறார்கள். முதல்தர ரகத்தில் இருக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். அது அரசாங்கத்திற்கு எந்த அளவுக்கு ஒத்துவருகிறது என்று பரிசீலித்து முதல் ரகத்தில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னும் குறிப்பாக விவசாயிகளுக்கு இந்த விவசாயத்தில் ரொம்பவும் அதிருப்தி இருக்கிறது. காரணம் விவசாயம் எந்த நிலத்தில் செய்தாலும் அறுவடை ஆகிவருகிறவரையில் ஆபத்து இருக்கிறது என்ற தவறான அபிப்ராயம் இருப்பதால் விவசாயிகளுக்குப் பயிர் பாதுகாப்புச் சட்டம் வரவேண்டும். அப்படி வந்தால்தான் அவர்களுக்கு அந்த பயம் தீரும். இதை அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எங்கள் பகுதியில் அதிகமாகக் கரும்பு பயிரிடுகிறார்கள். ஒரு டன் கரும்புக்கு ரூ. 5 செஸ் வாங்குகிறார்கள். சென்ற 1967, 1968, 1969 ஆண்டுகளில் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 75 லட்சம் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2 லட்சம் தான் செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே மிஞ்சிய தொகை எங்கு செலவு செய்யப்பட்டது ஏன் ரோடுகளுக்குச் செலவு செய்யப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். காரணம் எங்கள் பகுதி அதிகமான ரோடுகள் இல்லாத பகுதி. ரொம்பவும் சங்கடமாக இருக்கிற காரணத்தால் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 73 லட்சம் மீதம் ஆகிறது. மூன்று ஆண்டுகளாக என்ன வந்தது? செலவாகிற்று, ஏன் ரோடுகள் போடுவதற்கு வழிவகை செய்யவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.





அடுத்தபடியாக, எனது தொகுதியில் கழுவெளி கழுவெளி என்று ஒன்று இருக்கிறது. அதனுடைய விஸ்தீரணம் சுமார் 20,000 ஏக்கர். பல ஆண்டுகளாக குறைந்தது 8, 9 ஆண்டுகளாக இந்தச் சட்டமன்றத்தில் கழுவெளி கழுவெளி என்று சொல்லிக்கொண்டிருக்கிறேனே தவிர அது பற்றிபரிசீலனை செய்ததாகத் தெரியவில்லை, உடனடியாக பரிசீலனை செய்து மேற்படி நிலங்களை விவசாயத்திற்குக் கொண்டு வருவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். லேண்டு சீலிங் சட்டத்தால் எடுக்கப்படுகிற நிலங்களை விவசாயிகளுக்குத் தனித்தனியாக கொடுக்காமல் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக மீனவர்கள் பகுதியைப் பொறுத்தவரையில் எனது தொகுதி 30 மைல் தூரம் இருக்கிறது. தாழங்குடியிலிருந்து கோட்டக்குப்பம் வரை மீனவர்கள் வாழுகின்ற பகுதிகளுக்கு கிளை ரோடுகள் கிடையாது. தெரு விளக்கு கிடையாது. பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் கிடையாது. ஒரு சில இடங்களில் பள்ளிக்கூடங்கள் கூட கிடையாது. வீடு கட்டுவதற்கு வழியில்லை. அருகாமையில் புறம்போக்கு நிலம் பாரஸ்ட் என்ற பெயரால் இருக்கிறது அவைகளை எல்லாம் மீனவர்களுக்கு வீடு கட்டவும் பயிர் செய்வதற்கும் பட்டா செய்து கொடுக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நேரம் இல்லாத காரணத்தால் இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

திரு. பி. வெங்கடசாமி அவர்கள் தெலுங்கில் உரையாற்றினார்.

*திரு. பி. எஸ். தனுஷ்கோடி: தலைவர் அவர்களே, இந்த விவசாய மானியக் கோரிக்கைமீது எங்கள் கட்சி சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானத்தைத் ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன்.

விவசாயத்தைத் தீவிரமாக நடத்தக்கூடிய இந்த நேரத்தில் விவசாயிகளுக்கு வரக்கூடிய பல கஷ்டங்களை நீக்குவதற்கு அரசு உடனடி நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உரங்களின் விலை ஏறி இருப்பதால் சிறிய விவசாயிகள் அந்த விலை கொடுத்து வாங்க முடியாமல் தீவிர சாகுபடித் திட்டத்தில் அதிகக் கவனம் செலுத்தமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே விவசாயிகளுக்கு உரத்தின் விலையைக் குறைத்துக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பூச்சி மருந்து, எலி மருந்து போன்றவைகள் கொடுப்பதை சர்க்காரே விநியோகிக்க வேண்டும். பூச்சி மருந்துகளை சர்க்காரே இலவசமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பூச்சி, எலி மருந்துகள் தெளிக்கும்போது பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக பஞ்சாயத்துக்களுக்குக் கொடுத்தால் பஞ்சாயத்தே கிராமம் பூராவும் தெளிப்பதற்கு, எந்தெந்த வயல்களுக்கு எந்தெந்த நேரத்தில் எங்கெங்கு தெளிப்பது என்பதில் பஞ்சாயத்தே ஒரு முடிவு செய்தால் உதவிகரமாகயிருக்கும். 1963-ல் இப்படி ஒரு முறை கையாளப்பட்டது. எலிப்பொறி எல்லாம் வைத்து, மருந்து கலந்து வைத்து, பஞ்சாயத்திலுள்ள இரண்டு மூன்று கிராமங்கள் பூராவிற்கும் அப்படி மருந்து வைக்கப்பட்டதால் ஓரளவிற்கு எலித் தொல்லை ஒழிந்தது. அப்படி எல்லா வயல்களுக்கும் பரவலாகத் தெளிக்கப்பட்டு கடைசியில் அதன் விலை வசூலிக்கப்பட்டது. அந்த முறையை நாம் பின்பற்ற வேண்டும். அப்படிச் செய்தால் தெளித்தவர்கள் தெளிக்காதவர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் சீரான முறையில் கிராமம் பூராவிற்கும் மருந்து தெளிக்கும் ஒரு வாய்ப்பை ஏற்படுத்த முடியும்.

அடுத்தபடியாக, ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் பவர் ஸ்ப்ரேயர்ஸ் வாங்கிக் கொடுக்க வேண்டும். அதற்காக மானியம் ஒதுக்கி ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் இரண்டு பவர் ஸ்ப்ரேயர்ஸ் கொடுத்தால் அது சிறிய விவசாயிகளுக்கு மிகவும் உதவிகரமாகயிருக்கும். பவர் ஸ்ப்ரேயர்ஸ்க்கு

நாம் வாடகை வாங்குகிறோம். ஆகவே அந்த வாடகையும் கிடைக்கும். அதோடு எல்லா விவசாயிகளுக்கும் அது பயன்படவும் செய்யும். ஆகவே அப்படி பவர் ஸ்ப்ரேயர்ஸ் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். முன்னால் காங்கிரஸ் கட்சி ஆட்சி இருந்த காலத்தில் அப்படி வாங்கிக் கொடுக்கத் திட்டம் இருந்ததாக தெரிய வருகிறது. அதை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ப்ளேனில் இருந்து மருந்து அடிப்பது என்பது எங்கள் மாவட்டத்தை பொறுத்தவரையில் சரியல்ல. அறுவடையான வயல்களிலும் மருந்து தெளிக்கப்படுகிறது. ஆகவே அவர்களிடமிருந்தும் பணம் வசூலிக்கப்படுகிறது. அதனால் விவசாயிகள் மத்தியில் ஒரு அதிருப்தி இருக்கிறது. ஆகவே ப்ளேனில் இருந்து மருந்துகளை தெளிப்பதை விடுத்து பவர் ஸ்ப்ரேயர்ஸ் மூலம் தெளிப்பது உதவிகரமாகயிருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். ஒரு பஞ்சாயத்துக்கு ஒரு கிராம நல ஊழியர் என்று போட்டால்தான் எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில நல்ல முறையில் வேலைகள் நடக்கும்.

இப்போது இரண்டு மூன்று பஞ்சாயத்துக்களுக்கு என்று ஒரு கிராம நல ஊழியர் போடப்படுகிறார். இரண்டு மூன்று பஞ்சாயத்துகள் என்றால் கிட்டத்தட்ட அதன் கீழ் ஆயிரம் ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. ஆகவே ஒரு ஊழியர் என்று இருப்பது போதாது. விவசாயிகள் தொடர்ந்து குறுகிய காலப் பயிர்கள் பயிரிடும்போது ஒரு கிராம நல ஊழியர் எல்லாயிடங்களுக்கும் சென்று பார்க்க முடியாது. ஆகவே ஒரு பஞ்சாயத்துக்கு ஒரு கிராம நல ஊழியர் என்ற முறையில் நியமிக்கப்பட்டால் விவசாயிகளுக்கு மிக உதவிகரமாகயிருக்கும்.

அடுத்தபடியாக, மீனவர்கள் பொறுத்தவரையில் நாகப்பட்டினம் ஒரு முக்கியமான பகுதியாக இருக்கிறது. (மணியடிக்கப்பட்டது.) ஆகவே நாகபட்டனத்தில் ஒரு மீனவர் துறைமுகம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதோடு மீனவர்களுக்கு நைலான் நூல் குறைந்த விலையில் கொடுக்க வேண்டும். அதோடு மீனவர்கள் குடியிருக்கும் பகுதிகளில் குடி நீர்வசதி, லைட்வசதி, ரோடு வசதி போன்ற வசதிகளை மீன் இலாகா செய்து கொடுக்க வேண்டும்.

நாகப்பட்டினத்தில் ஒரு உதவி இயக்குநரை நியமிக்க வேண்டும். அவர்கள் இப்போது தஞ்சையில் இருக்கிறார். அது போதாது. கடற்கரையோரமுள்ள மக்களுக்கு ஆலோசனைகள் கூறுவதற்கு நாகப்பட்டணத்தில் ஒரு உதவி இயக்குநரை நியமிப்பது அவர்களுக்கு உதவிகரமாகயிருக்கும். அதிலும் அரசு கவனம் செலுத்தவேண்டும்.

தீவிர சாகுபடித் திட்டத்தை அமலுக்குக் கொண்டுவர வேண்டுமென்றால் பலவிடங்களில் பாசன வசதியிருந்தும் வடிகால் வசதி இல்லாமல் இருக்கிறது. உரம் கொடுக்கிறோம், பூச்சிமருந்துகள் கொடுக்கிறோம். நல்ல பயிர் விளைகிறது. அறுவடையாகும்போது சில சமயங்களில் மழை பெய்துவிட்டால் விவசாயம் பூராவும் பாதிக்கப்படுகிறது. கிழக்குத் தஞ்சையில் எந்தயிடத்திலும் வடிகால் வசதிகள் இல்லை. ஆகவே பி.டப்ளியூ.டி. விவசாய இலாகா, ரெவின்யூ இலாகா மூன்றும் சேர்ந்து வடிகால் வசதிகளைச் செய்து கொடுத்தால் மிகவும் உதவியாக இருக்கும்.........

(திரு. சுப்பிரமணிய கவுண்டர் அவர்கள் அழைக்கப்பட்டார்).

**திரு. எம். சுப்ரமணிய கவுண்டர்:** தலைவர் அவர்களே, இந்த விவசாய மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

தமிழக அரசு விவசாயக் கருத்தரங்குகளையும், நீர்ப்பாசன மாநாடுகளையும், மாவட்ட அபிவிருத்தி மன்ற மாநாடுகளையும் கூட்டி அந்தந்தப் பகுதிகளிலுள்ள விவசாயிகளின் அபிப்பிராயங்களை எல்லாம் நல்ல முறையில் கேட்டு நல்ல முறையில் விவசாய அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது விவசாயிகளுக்கு நல்ல முறையில் நல்ல விதைகளையும்



நல்ல உரங்களையும் அப்போதைக்கப்போது தடை இல்லாமல் அரசு வழங்கி வருகிறது. இப்போது உணவுக் கட்டுப்பாடு எடுக்கப்பட்டு விட்டதால் விவசாயிகள் திராவிட முன்னேற்றக் கழக அரசை எங்கு பார்த்தாலும் பாராட்டுகிறார்கள். கூட்டுறவு பாங்குகளின் மூலம் விவசாயிகளுக்கு கடன் உதவி வழங்கப்பட்டு வருகிறது.

முன்மழை இல்லாததால் பலவிடங்களில் விவசாயிகள் கஷ்டப்பட்டார்கள். அவர்கள் ஒரு இனத்திற்கு கடன் வாங்கி வேறு செலவிற்கு அதை செலவிட்டு விடுவதால் முன்மழை இல்லாததால் அவர்கள் இப்போது கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே விவசாயிகளிடம் இருந்து சிறுகச் சிறுக அந்தக் கடன் தொகையைப் பெற்று அவற்றை வரவு வைத்துக்கொள்ளும்படி தமிழக அரசை நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசு நிறையப் பம்ப் செட்களுக்கு மின்சாரம் கொடுத்து வருகிறது. மேட்டூர் லிஸ்டத்தை தர்மபுரியில் ஏற்படுத்தி நல்லமுறையில் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. தர்மபுரியில் உள்ள சின்னாற்றிலிருந்து தர்மபுரி எல்லைவரையில் தண்ணீர் கொண்டுவர நல்லமுறையில் கால்வாய்கள் வெட்டி எங்களுக்கு நீர்பாசன வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சோலக்கோட்டை ஆற்றில் வீணாகப் போகும் தண்ணீரை செட்டிக்கரை வரையில் கொண்டு வந்து நல்ல முறையில் தண்ணீரைப் பாய்ச்சி அவ்விடங்களை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், அங்காரள்ளி அணைக்கட்டுத் திட்டம், சில்லாரள்ளி அணைக்கட்டுத் திட்டம் போன்றவற்றை உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டும். தர்மபுரி மாவட்டத்தில் நிறைய தரிசு நிலங்கள் இருக்கின்றன. எங்கள் மாவட்டத்தில் ஏழை விவசாயிகள் நிறையப் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு தலா ஐந்து ஏக்கர் வீதம் பட்டா செய்து கொடுத்து அவர்களுக்கு அதைச் சொந்தமாக்கிக் கொடுப்பதில் ஊக்கம் காட்டவேண்டும்.

தர்மபுரி மாவட்டத்தில் தென்கரை கோட்டையில் இரண்டாயிரம் ஏக்கரா நிலம் முள்ளுக காடாக இருக்கிறது. அதில் அரசாங்கம் ஒரு பழத் தோட்டத்தை அமைத்துக் கொடுக்க வேண்டும். தர்மபுரி பகுதியில் சாமான்ய நிலங்கள் நிறைய இருக்கிறது. பல ஏழை எளிய மக்களுக்கு அந்நிலங்கள் சொந்தமாக்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கு அதைப் பட்டா செய்து கொடுத்து கூட்டுறவு முறையில் அவர்களுக்கு கிணறுகள் வெட்ட, நிலச் சீர்திருத்தம் செய்ய, பம்ப் செட்ஸ் வைத்துக்கொள்ள, இவற்றிற்கு நல்லமுறையில் கடன் உதவிகள் அளிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல் ஸ்கீம், பஞ்சப்பட்டி ஸ்கீம் என்று இருக்கிறது. அவைகளை உடனடியாக நடத்த ஆவன செய்தால் தர்மபுரி மாவட்டம் பிற்பட்ட மாவட்டமாக இருப்பது முற்பட்ட மாவட்டமாக ஆவதற்கு ஏதுவாக இருக்கும் என்று விவசாய அமைச்சரவர்களையும், நிதியமைச்சரவர்களையும் மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன், வணக்கம். முற்பகல் 11-00

***திரு. எம். சி. பாலன்:** மாண்புமிகு உதவி சபாநாயகரவர்களே, இன்றையதினம் விவசாயத்துறை அமைச்சரவர்களால் இந்த மாமன்றத்தில் கொண்டுவரப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

குமரி மாவட்டம் கிட்டத்தட்ட 45 மைல்கள் நீளமுள்ள கடலோரப் பகுதிகளைக் கொண்ட மாவட்டமாகும். 35 மீனவர் கிராமங்களில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் இந்தியாவிலேயே இந்தத் தமிழகந்தான் ஆயிரம் கிலோமீட்டர் நீளமுள்ள நீண்ட கடற்கரையைக் கொண்ட மாநிலமாகும். இந்த மாநிலத்தில் கிட்டத்தட்ட 500-க்கு மேற்பட்ட மீனவர் கிராமங்களில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத்தரம் கடந்த 23 ஆண்டுக் காலத்திலே எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பதை எண்ணிப்

பார்க்க வேண்டும். மீன் என்பது உணவுப் பொருள்களில் மிக முக்கியமானதொன்றாகும். அந்த மீன் உற்பத்தி கடந்த 23 ஆண்டுக் காலத்திலே எப்படி உற்பத்தியாக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கருத்திற்கொள்ள வேண்டும். ஒருகாலத்தில் கட்டுமரத்தில் மீனவர்கள் சென்று மீன் பிடித்து வந்த காலம் போய் இன்று மீனவர்களுக்குத் தமிழக அரசு விசைப் படகுகளை நல்கி, புதுவிதமான நைலான் நூல்களைத் தந்து மீன் பிடிக்க, ஆழ்கடலிலே சென்று மீன் பிடிப்பதற்கும் நல்ல பல வசதிகளைத் தமிழக அரசு செய்திருக்கிறது. அதற்காக உள்ளபடியே நான் தமிழக அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் சுமார் 31 இலட்சம் ரூபாய் மீனவர்களுக்காக, மீனவர்களின் வாழ்க்கைத்தரம் உயருவதற்காக, மீன் உற்பத்தி பெருகுவதற்காகச் செலவு செய்யப்பட்டது. அதற்குப் பிறகு 1 லட்சத்து 8 ஆயிரம் டன் மீன் கிடைத்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 75 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, கிட்டத்தட்ட 16 திட்டங்களைத் தமிழக அரசு நிறைவேற்றியிருக்கிறது. இதற்குப்பிறகு 1 இலட்சத்து 34 ஆயிரம் டன் உருவாக்க முடிந்தது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 2 கோடியே 22 ஆயிரம் ரூபாய் தமிழக அரசு ஒதுக்கி அதன் மூலம் 20-க்கு மேற்பட்ட திட்டங்களை நிறைவேற்றிய பிறகு 2 இலட்சம் அளவிற்கு மீன் உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள்.

கடந்த 15 ஆண்டுக் காலத்தில், அதாவது 3 ஐந்தாண்டுத் திட்டங்களில் சுமார் 750-க்கு மேற்பட்ட விசைப்படகுகளைத் தந்திருக்கிறார்கள். ஆனால் கடந்த மூன்றாண்டுக் காலத்தில் தமிழக அரசு மீனவப் பெருங்குடி மக்களுக்கு 300-க்கு மேற்பட்ட விசைப்படகுகளைத் தந்திருக்கிறார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1000 விசைப்படகுகளை தரவும்,வேளாண்மை மறுநிதிக் கழகத்தின் உதவியுடன் மீனவர் கூட்டுறவுக்கூட்டமைப்புகள் மூலம் 275 படகுகளை நல்கவும் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. 1968–69-ஆம் ஆண்டில் 50 இலட்சம் ரூபாய் செலவிட்டு 104 விசைப்படகுகள் கட்டப்பட்டன. 1969–70-ம் ஆண்டில் 140 விசைப் படகுகளுக்காக 58 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. 1970–71-ஆம் ஆண்டில் 145 விசைப்படகுகளைக் கட்ட 94·26 இலட்சம் ரூபாய் ஒதுக்க திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இதேபோல், ஆழ்கடலிலே மீன் பிடிப்பதற்காக 36 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, நான்கு ஆழக்கடல் மீன்பிடி இழு படகுகளை நல்கவும் காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். இவைகளுக்காக இந்தச் சர்க்காரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மீனவர்களுக்குத் தேவையான நைலான் நூல்களும் மூன்றாண்டுக் காலமாக வழங்கப்பட்டிருக்கின்றன. 1968–69-ஆம் ஆண்டில் 9,415 கிலோ கிராம் நைலான் நல்கியிருக்கிறோம். 1969–70-இல் 10,360 கிலோ கிராம் நைலான் நூல்களை நல்கியிருக்கிறோம். 1970–71-ஆம் ஆண்டில் 15,000 கிலோ கிராம் நைலான் நூல்களை நாம் நல்கவிருக்கிறோம்.

இன்றையதினம் கடலிலே மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள், விசைப்படகுகளை ஓட்டுவதற்காகப் பயிற்சியளிக்க வேண்டுமென்பதற்காக சென்னையிலும், நாகப்பட்டினத்திலும், மண்டபத்திலும், குளச்சலிலும், தூத்துக்குடியிலும் பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. மேட்டூர் அணையில் உள்நாட்டு மீனவர் பயிற்சி நிலையம் ஒன்றிருக்கிறது. இவ்வாறு அவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கான நிலையங்களை உருவாக்கி, 1968–69-இல் 272 பேர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டிருக்கிறது. (மணியடிக்கப்பட்டது)

உதவி சபாநாயகரவர்கள் பேச முடியாத காரணத்தினால் அவர்களின் கருத்தைத்தான் பேசுகிறேன். இன்னும் ஐந்து நிமிஷங்கள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். 1969–70-ஆம் ஆண்டில் 350 மீனவர்களுக்குப் பயிற்சி தந்திருக்கிறார்கள். 1970–71-இல் 350 பேர்களுக்குப் பயிற்சியளிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. குமரி மாவட்டப் பிரச்னைகளை உதவி சபாநாயகரவர்கள் அறிவார்கள். அதைப் பற்றி நான் ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.



குமரி மாவட்டம் தென் மேற்குப் பகுதியாக இருக்கிறது. அங்கு வாட்ஜ் பேங்கிலே அதிகப்படியான மீன் கிடைக்கிறது என்று தெரிவிக்கிறார்கள். ஆனால் அந்தப் பகுதியில் கொழும்பிலேயிருக்கும் கப்பல்கள் அந்த இடத்திலே வந்து மீன் பிடிப்பதோடு மட்டுமல்லாமல், விசைப் படகு ஓட்டுபவர்கள் அங்கு போட்டிருக்கும் நைலான் வலைகளை அறுத்தெறிந்துவிட்டுச் செல்லுகிறார்கள். இதுகுறித்துப் பல்வேறு சந்தர்ப்பங்களில் அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தும், நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டும் பயனில்லை. ஆழ்கடல் மீன்பிடி விசைப் படகுக்காரர்கள், கட்டுமரங்களில் வந்து மீன்பிடிக்கின்றவர்களின் வலைகளை அறுத்துவிட்டுச் செல்லுகின்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

எங்கள் பகுதியிலே கிறித்தவ மீனவர்கள் இருந்தாலும், அவர்களுக்குப் பிற்படுத்தப்பட்டவர்களுக்குத் தரும் எந்தச் சலுகையையும் தருவதில்லை. அவர்கள் மதம் மாறினாலும்கூட, அவர்களுடைய பொருளாதாரத்தில் ஏற்றம் காணவில்லை. பிற்பட்டவர்களிலும் பிற்பட்டவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்குப் பல நன்மைகள் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பல ஊர்களில் செல்லுவதற்கு ரோடுகள் இல்லை. பல ஊர்களில் மருத்துவ வசதி இல்லை பல ஊர்களில் பஸ் விடப்படவில்லை, தெரு விளக்கு இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் மீனவர்கள் வருந்துகிறார்கள். அதற்காக மீன் துறையினர் மிகச் சிறப்பாகப் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

குளச்சல் கடற்கரைப் பகுதியில் கடந்த மாதம் கிட்டத்தட்ட 100 வீடுகளில் தீப்பிடித்து அவர்கள் வீடின்றி வாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் 80 ரூபாய் தரப்பட்டிருக்கிறது. இந்த மீன்துறையினர் அவர்களின் வீடுகளை மேம்படுத்தி எரியாத வீடுகளைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்,

* திரு. கோ. பூவராகன்: கனம் உதவி சபாநாயகரவர்களே, விவசாய மானியத்தின்மீது என்னுடைய கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுத்தீர்மானத்தையொட்டிச் சில கருத்துக்களைக் கூறலாம் என்று கருதுகிறேன்

விவசாயம் இன்று நல்லமுறையிலே ஒரு மேம்பாட்டிற்கு வந்தால்தான் உணவுப் பிரச்னை மட்டுமல்ல, வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்கக்கூடிய அளவில் அமையும் ஒரு முக்கிய இலாக்காவாக இந்த விவசாய இலாக்கா இருக்கிறது. நமக்கிருக்கும் வசதிகளையும், வாய்ப்புக்கூறுகளையும் வைத்துக்கொண்டு, அதிக அளவிலே நாம் காரியங்கள் ஆற்றக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பதை விவசாய இலாகாவிலிருப்பவர்கள் கொஞ்சம் கவனமாகத் தெரிந்திருக்க வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

160 இலட்சம் எக்கரா நிலப்பரப்பிலே 100 இலட்சம் எக்கராவிற்குமேல் புஞ்சை நிலங்களாகயிருப்பதால் அவைகளுக்குத் தண்ணீர் வசதி கிடையாது. பல வசதிகள் குறைவாக இருப்பதால் இந்த 100 இலட்சம் எக்கராக்களை எந்த அளவிற்கு நாம் அதிக அளவிலே பயன்படுத்துகிறோம் என்று பார்க்கவேண்டும். விவசாயத் திட்டங்களுக்கு அந்த நிலங்களை எந்த அளவிற்குக் காரிய சாத்தியமாக்கலாம் என்பதை விவசாய இலாக்காவில் பரிட்சார்த்தமாக ஏற்பாடு செய்யப்படவேண்டும். மத்திய சர்க்காரிலே இதற்கென்று ஒரு திட்டம், புஞ்சை நிலங்களுக்கென்று ஒரு திட்டம் தீட்டியிருக்கிறார்கள். அதற்கு 7 மாநிலங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஐந்தாண்டுக் காலங்களில் 30 கோடி ரூபாய் செலவழிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதிலே நம்முடைய மாநிலமும் சேர்ந்திருப்பதற்காக மத்திய சர்க்காருக்குப் பாராட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். அப்படியிருக்கும்பொழுது 30 கோடி ரூபாயிலே, இன்று 7 மாநிலங்களுக்குக் கொடுத்திருக்கும் பணத்தில், நம்முடைய மாநிலத்திற்கு எவ்வளவு பங்கு வரவிருக்கிறது என்று தெரியவில்லை. இருந்தாலும்

நம்முடைய மாநில விவசாய இலாக்கா, நம்முடைய மாநிலத்தில் ஒரு திட்டம் தயாரித்து, எந்தெந்தப் பகுதியிலே புஞ்சை நிலங்கள் இருக்கின்றன, அந்த நிலங்களை எவ்வாறு பயன்படுத்த இருக்கிறோம் என்பதை நாம் கொஞ்சம் கருத்தாகப் பார்க்க வேண்டும்.

நம்முடைய கவனத்திலேயெல்லாம் நஞ்சை நிலங்களைப்பற்றித்தான் இருக்கிறது, ஒரு போகத்தை இரண்டு போகச் சாகுபடியாகச் செய்ய வேண்டுமென்று கருதியிருக்கிறோம். இருக்கும் தண்ணீரை எந்த அளவிற்குப் பயன்படுத்தி புஞ்சை நிலங்களைப் பயன்படுத்துகிறோம்? மழையிருக்கின்ற கால அளவுகளையும், குறுகிய காலத்திலே பயிர் செய்ய விவசாயிகளுக்கு ஊக்கமளித்து, வருவாய் தேடும் முறையிலே திட்டம் இருக்கிறதா? ஆராய்ச்சி செய்திருக்கிறோமா என்று இன்று கவனிக்க வேண்டியவர்களாகவிருக்கிறோம். அப்படிக் கவனித்தால் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கும் நிலைபோய், வாய்ப்புகள் ஏற்படும், எல்லோருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும், அவ்வாறு வேலை வாய்ப்பு தேடிக்கொடுக்க விவசாய இலாக்காவால் முடியும். இதற்காகப் பணம் ஒதுக்கித்தான் ஆகவேண்டும். இது மற்ற இலாக்காக்கள் மாதிரி அல்ல, விவசாயம் நன்றாக இருந்தால்தான் மற்றத்தொழில்கள் வளர முடியும்

நம்முடைய நாட்டில் கரும்பு உற்பத்தி அதிகமாக இருந்தால்தான் சர்க்கரை ஆலைகள் செயல்பட முடியும். பருத்தி அதிக விளைச்சல் இருந்தால்தான் நூற்பு ஆலைகள் செயல்பட முடியும். பருத்தி விளைச்சல் ஆண்டுதோறும் குறைந்துகொண்டு வருவதைப் பார்க்கிறோம். கரும்பு உற்பத்தி அதிகமாக இருக்கிறது. கரும்பு உற்பத்தி செய்பவர்களுக்கு அதிகப்படியான வருமானம், அதிக வருவாய் கிடைக்கிறதா என்று பார்க்கும்பொழுது அவர்களுக்குப் போதாத நிலையிலே இருக்கிறது. எனவே, விலை அதிகமாக ஆக்கப்பட வேண்டும்.

நாம் வறட்சி வட்டாரங்களைப்பற்றிச் சொல்லும்பொழுது, என்ன திட்டங்களை வைத்திருக்கிறோம், அதற்காக நாம் எவ்வளவு செலவிடப் போகிறோம், எந்தப் பயிரினங்களை அதற்காக ஒதுக்கியிருக்கிறோம், அதுபற்றி ஏதாவது ஆராய்ச்சி நடந்துகொண்டிருக்கிறதா என்பதையெல்லாம் குறித்து அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்பொழுது சொல்வார்கள் என்று நினைக்கிறேன். நம்முடைய இலாகா இதிலெல்லாம் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும்.

ஆங்காங்கு பல்வேறு ஏரி, குளங்கள் இருக்கின்றன. ஏரி, குளங்களை ஆக்கிரமிப்புச் செய்துகொண்டு விவசாயம் நடந்துகொண்டிருக்கிறது. ஏரி, குளங்களை சீர்செய்யவேண்டும். அணைகளை சரிப்படுத்தவேண்டும். இன்னும் வருகிற வரத்து வாய்க்கால்களை சீர்படுத்தவேண்டும். இம்மாதிரி காரியங்களில் அரசு அதிகமாக ஈடுபடவேண்டும்.

குழாய் கிணறுகள் எந்த அளவுக்கு பயன்படக்கூடிய நிலைமையில் இருக்கின்றன என்பதைப் பார்க்கவேண்டும். அந்த குழாய்க் கிணறுகளைத் தோண்டுவதற்கான கருவிகள் எத்தனை நாட்கள் வேலை செய்கின்றன என்று பார்த்தால், வேலை செய்கிற நாட்களை விட வேலை செய்யாத நாட்கள்தான் அதிகமாக இருக்கும். அந்தக் கருவிகள் அடிக்கடி பழுது அடைந்துவிடுகின்றன. அப்படி பழுதடைந்துவிட்டால், அதை சீர்செய்வதற்கு சென்னைக்கு வரவேண்டியிருக்கிறது, அமைச்சரிடம் வரவேண்டியிருக்கிறது, மேல் இலாகாவிற்கு வரவேண்டியிருக்கிறது, அதிகாரிகளிடம் வரவேண்டியிருக்கிறது. இந்த நிலையில் அடிக்கடி அவைகள் வேலையில் ஈடுபடமுடியாத சூழ்நிலை இருக்கிறது. வறண்ட பகுதிகளில் குழாய்க் கிணறுகளை மேலும் அதிகமாக்க ஏற்பாடு செய்யவேண்டும். இப்பொழுது இருக்கிற நிலைமையில் குழாய்க் கிணறுகளுக்கான கருவிகள் நம்மிடத்தில் பற்றாக்குறையாக இருக்கிறது. மேலும் கருவிகள் தருவிக்கப்படவேண்டும். அதற்கு பாரின் எக்ஸேஞ்ச் வேண்டுமென்றாலும், மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, விரைவிலே அதிகக் கருவிகளை நாம் வரவழைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.



இனிமேல் நாம் புஞ்சை நிலங்கள் இருக்கிற பகுதிகளை எவ்வாறு அதிகமாக விளைச்சலுக்குக் கொண்டுவருவது. எந்த இடங்களை எவ்வாறு அதிகமான அளவில் பயன்படுத்துவது என்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். அப்பொழுது தான் தயாரிக்கும் உரங்களை அதிக அளவுக்கு பயன்படுத்த முடியும். அதிக உற்பத்தி இருந்தால் உரத் தொழிற்சாலையில் அதிகம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். இன்னும் மற்ற துறைகளிலும் மக்களுக்கு அதி வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டும். நம்முடைய இலாகா இதிலெல்லாம் அதிக கவனம் காட்டவேண்டும். அதற்கு தனியான ஒரு நிலையிலே ஏற்பாடு செய்து, ஒரு தனிப் பிரிவுகூட அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டால் நலமாக இருக்கும். விவசாய இலாகாவில் பல பிரிவுகள் இருக்கின்றன. 'டிரை லாண்ட்ஸ் இம்ப்ருவ்மெண்ட்ஸ்' என்று சொல்லக்கூடிய அளவுக்கு தனி இலாகா ஏற்படுத்தி, அதற்சென்று ஒரு தனி டைரக்டரைப் போட்டால் கூட அதை நான் வரவேற்பேன். அமைச்சர் அவர்கள் முதல் அமைச்சர் அவர்களுடன் கலந்துகொண்டு, இலாகா அதிகாரிகளோடும் கலந்து கொண்டு. இதற்கு என்று ஒரு தனி அதிகாரியிடம், டைரக்டர் அளவிலே பொறுப்பு கொடுத்து, அவருக்கு வேண்டிய அதிகாரங்களையும், கொடுத்து, நல்ல முறையில், மேலும் சரியான முறையில் இதைச் செய்வதற்கு வழிவகை காணவேண்டும். இதற்காக தனியாக ஒரு அலாட்மெண்டு செய்யவேண்டும். கோடிக்கணக்கான ரூபாய்களை நாம் விவசாயத்திற்காக ஒதுக்குகிறோம். நஞ்சை நிலங்களுக்கு தொகை ஒதுக்குவதுபோல, புஞ்சை நிலங்களுக்கும் தொகை ஒதுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

புதிய ரக விதைகளை நாம் கொடுக்கிறோம். புதிய ரக விதைகளைப் பற்றி நாம் விளம்பரப்படுத்துகிறோம். வானொலியில் அதைப்பற்றி கூறுகிறோம். அதோடு நின்றுவிடுகிறது. அதிகாரிகள் விவசாயிகளோடு அடிக்கடி தொடர்பு வைத்துக்கொள்ளவேண்டும். ஐ. ஆர். 8 அதிக விளைச்சலை உண்டாக்கக்கூடிய அளவில் இருந்தாலும், விவசாயிகளுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இலாகாவில் இருப்பவர்கள், நெல் முளை வரும்பொழுது, பயிராக வரும்பொழுது, நடுகிறபொழுது, இப்படித் தொடர்ந்து அறுவடை காலம் வரையில் விவசாயிகளிடத்தில் தொடர்பு வைத்துக்கொள்ளவேண்டும். இலாகாவில் இருப்பவர்கள் அதைப்பற்றி இன்னும் அதிகமாக கவனம் செலுத்த வேண்டும். விளம்பரம் செய்துவிட்டால் மட்டும் போதாது. விவசாயிகளுக்கு உதவியாக இருக்கவேண்டும். விவசாயிகளோடு தக்க தருணத்தில் உடனிருந்து, அவர்களுக்கு என்ன குறைகள் இருக்கின்றனவோ அக்குறைகளைக் களைவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். நல்ல விளைச்சல் கொடுக்கக் கூடிய விதைகளாக இருந்தாலும், ஏதோ ஒரு காரணத்தினால், இலாகாவினுடைய அதிகாரிகளின் கவனக் குறைவினால், மக்கள் மத்தியிலே அதிருப்தி ஏற்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதைப் போக்குவதற்கு இலாகா தக்க முயற்சி எடுக்கவேண்டும்.

அதேபோன்று நாம் எண்ணெய் வித்துக்களை அதிகமாக உற்பத்தி செய்யவேண்டும். விலை ஏற்றத்தை தடுக்கவேண்டுமானால், உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். அதற்கு என்ன ஏற்பாடு நடந்திருக்கிறது? அறிக்கையில் பார்த்தால் லட்சக்கணக்கான ஏக்கர், ஆயிரக்கணக்கான ஏக்கர் ஆண்டுதோறும் அதிக அளவில் சாகுபடிக்குக் கொண்டுவரப் பட்டதாக கூறப்பட்டிருக்கிறது. ஆனால், உற்பத்தி ஏதாவது கூடியிருக்கிறதா, எந்த அளவுக்கு கூடியிருக்கிறது என்று பரிசீலனை செய்து பார்க்கவேண்டும்.

முந்திரி உற்பத்தியைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கென்று ஒரு நிறுவனம், கார்ப்பரேஷன் ஏற்பாடு செய்யப்பட இருக்கிறது. தென் ஆற்காடு மாவட்டத்தில் அரசாங்கத்திற்குச் சொந்தமான காடுகள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 15,000 ஏக்கர் இருக்கிறது. திருச்சி மாவட்டத்திலும் கூட இருக்கிறது. இந்த கார்ப்பரேஷனை சென்னையில் நிறுவிடாமல், விருத்தாசலம் போன்ற பகுதியில் எந்த வட்டாரத்தில்

முந்திரித் தோப்புகள் அதிகமாக இருக்கின்றனவோ அந்த வட்டாரத்தில் அந்தக் கார்ப்பரேஷனை நிறுவினால், அந்தத் தொழிலை நல்ல முறையில் அபிவிருத்தி செய்ய முடியும்.

வாழைப்பழம் ஏற்றுமதி கார்ப்பரேஷன் ஒன்றை மத்திய அரசு நிறுவியிருக்கிறது. அது எந்த அளவுக்கு பயன்பட்டிருக்கிறது, எந்த அளவுக்கு அதிலே நாம் முன்னேற்றம் கண்டிருக்கிறோம், நமக்கு எந்த அளவுக்கு அன்னியச் செலாவணி கிடைத்திருக்கிறது என்பது பற்றி குறிப்பிலிருந்து தெரிந்துகொள்ள முடியவில்லை. அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி பதிலில் கூறுவார்கள் என்று நம்புகிறேன். புஞ்சைப் பகுதிகளிலே வாழைத் தோட்டங்களை அதிகமாக ஏற்படுத்துவதற்கு வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றன. அதை அதிக அளவிலே பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இன்னும் பழம் கொடுக்கக்கூடிய பழவகை மரங்களை நாம் அதிகமாக உற்பத்தி செய்யவேண்டும். இன்றைய நிலைமை நம்முடைய தேவைக்கு ஏற்ப இல்லை, அதற்கு மேலும் ஊக்கம் அளிக்கவேண்டும் என்று இந்த சமயத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

சர்க்கரைவள்ளி கிழங்கு சம்பந்தமாக குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. மரவள்ளி கிழங்கு, குச்சி கிழங்கு இவை பயிரிடுவதினால் சேலம் மாவட்டத்தில் சிறு தொழில் பெரும் அளவிலே செய்யப்படுகிறது. தென் ஆற்காடு மாவட்டம் வரையிலும் இருக்கிறது. அது போன்ற காரியங்களிலே அதிக அக்கறை எடுத்துக்கொண்டு, புதிய முறையிலே அதிக விளைச்சல் கொடுக்கக்கூடிய, அதிக வருவாய் தேடித்தரக்கூடிய கிழங்கு வகைகளை பயிரிடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கு அதிக ஊக்கம் அளிக்கவேண்டும்.

சிறு, சிறு விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு கோழி வளர்ப்பு, ஆடு, மாடு வளர்ப்பு போன்றவைகளுக்கு உதவி செய்ய வேண்டும். மத்திய அரசிடம் ஒரு திட்டம் இருக்கிறது. சிறிய விவசாயிகளுக்கு கடன் உதவி அளிக்கவேண்டும் என்ற திட்டம் இருக்கிறது. இப்பொழுது நம்முடைய மாநிலத்தில் பின்தங்கிய பகுதிகள் இருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்தை எடுத்துக்கொண்டாலும், அந்த மாவட்டத்தில் சில பகுதிகள் பின்தங்கிய பகுதிகளாக இருக்கின்றன. ஒரு தாலுகாவில் ஒரு பகுதி பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. பின்தங்கிய பகுதிகளுக்கும் ஆக்கமும், ஊக்கமும் அளிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்து, அங்குள்ள மக்களுக்கு சலுகைகளையும், தேவையான உதவிகளையும் அளிக்கவேண்டும். அவர்களை மேம்பாட்டிற்குக் கொண்டு வரவேண்டும்.

விவசாயிகள் கடன் பெறுகிறார்கள். அந்தக் கடனில் பாதி வேறு காரியங்கள் அரசாங்கம் எழுப்புகிற கடனுக்காகத் திருப்பி எடுத்துக் கொள்ளப்படுகிறது. பம்பு செட்டுகளுக்கு கடன் கொடுத்தால் வேறு காரியங்களுக்கு வாங்கப்பட்ட அரசாங்கக் கடனை எழுப்புகிற சமயத்தில் இது வருகிறது. இந்தக் கடன் தொகையிலிருந்து, அந்தக் கடன் தொகைக்கு இவ்வளவு எடுத்துக்கொண்டு, பாக்கித் தொகையை கொடுக்கிறோம் என்ற அளவிலே இருக்கிறது. இந்த முறை மாற வேண்டும். விவசாயிகளுக்கு கடன் கொடுக்கப்படும்பொழுது, பணம் பூராவும் அவர்கள் கையில் செல்லக்கூடிய அளவுக்கு இருக்கவேண்டும் என்று இந்த சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் பம்பு செட்டுக்கு மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார்கள். மின்சாரக் கட்டண உயர்வைத் தவிர்க்கவேண்டும் என்று சொன்னால், மற்ற மாநிலங்களில் பாருங்கள், இந்தியா முழுவதும் ஒப்பிட்டுப் பாருங்கள் என்று இந்தியாவையே ஒப்பிட்டுப் பார்க்கச் சொல்கிறார்கள். நான் ஒன்று சொல்கிறேன். தொழில் துறையிலே இருப்பவர்களோடு ஒப்பிட்டுப் பாருங்கள். தொழில் துறையிலே இருப்பவர்களுக்காக கோடிக்கணக்கான ரூபாய், லட்சக்கணக்கான ரூபாய் முதலீடு கொடுக்கிறோம். விவசாயிகளுக்கு ஆயிரக்கணக்கான ரூபாயில்தான் கொடுக்கிறோம். கோடிக்கணக்கில் இல்லை, லட்சக்கணக்கில் இல்லை. விவசாயிகளுக்கு ஆயிரக்கணக்கான ரூபாய்களைத்தான் கடனாகத் கொடுக்கிறோம். ஆனால், தொழில் துறையில் கோடிக்கணக்கான ரூபாய், லட்சக்கணக்கான ரூபாய் கொடுத்து உதவி செய்து, ஒரு தொழிற் சாலையை ஆரம்பிக்கிறோம். அவர்களுக்கு மின்சாரக் கட்டணம் மிகவும் குறைவான கட்டணம். அவர்களுக்கு இருக்கிற கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்று நான் சொல்லவில்லை. தொழில் துறையிலே இருப்பவர்கள் மின்சாரக் கட்டணம் கட்டாமலேயே பாக்கி வைத்திருக்கிறார்கள். சுமார் ½ கோடி ரூபாய் மின்சாரக் கட்டணம் கட்டாமல் பாக்கி இருக்கிறது. கிட்டத்தட்ட ரூ. 87 லட்சம் தொழில் துறையிலிருந்து, தொழில் நிறுவனங்களிடமிருந்து மின்சார இலாகாவிற்கு வரவேண்டியது பாக்கி இருக்கிறது. எங்கேயாவது இப்படி ஒரு விவசாயி ஒரு பைசா கூட மின்சாரக் கட்டணத்தை கட்டாமல் பாக்கி வைத்திருக்கிறானா? விவசாயி மின்சாரக் கட்டணத்தைக் கட்டவில்லையென்றால் நிலைமை என்ன ஆகும்? கரெண்டை கட் செய்துவிடுவார்கள். மின்சார இலாக்காவிற்கு விவசாயிகள் யாராவது மின்சாரக் கட்டணத்தை கட்டாமல் பாக்கி வைத்திருக்கிறார்களா? ஆனால் தொழில் துறையில் இருப்பவர்கள் கட்டணத்தை கட்டாவிட்டாலும், லட்சக்கணக்கான ரூபாய் ரைட் ஆஃப் செய்யப்படுகிறது. ஒரு தொழில் நிறுவனம் ரூ. 3 லட்சம், 4 லட்சம் மின்சாரக் கட்டணம் கட்டவில்லை. ரைட் ஆஃப் செய்கிறார்கள். ஆனால், விவசாயிகள் கட்டவில்லை, என்றால் ரூ. 100-ஆவது ரைட் ஆஃப் செய்தது உண்டா என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.





எட்டேகால் பைசாவிலிருந்து 10 பைசாவுக்கு உயர்த்தியிருப்பது, அதிகமாக இருக்கிறது என்று சொன்னால், இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களில் உள்ள கட்டணத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், இது ஓரளவுக்கு குறைவாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. நான் ஒன்று சொல்வேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மைசூர், நெய்வேலியிலிருந்து நாம் மின்சாரத்தை என்ன விலைக்கு வாங்கினோம்? 8, 9 பைசாவுக்கு வாங்கினோம். இப்பொழுது $5\frac{1}{4}$, $5\frac{1}{2}$ பைசாவுக்கு மைசூரிலிருந்தும், நெய்வேலியிலிருந்தும் மின்சாரத்தை வாங்குகிறோம். $5\frac{1}{4}$, $5\frac{1}{2}$ பைசாவுக்கு வாங்கும்பொழுது 10 பைசாவிற்கு உயர்த்தியிருக்கிறோம். $1\frac{3}{4}$ பைசா கூட்டியிருக்கிறோம். ஏற்கனவே 9 பைசாவுக்கு வாங்கிய பொழுது, மின்சாரக் கட்டணம் $8\frac{1}{4}$ பைசாவாக இருந்தது விவசாயிகளுக்கு. குறைவாக வாங்கி அதிகமாக விற்கிறோம். இது என்ன நியாயம் என்பதை சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். $1\frac{3}{4}$ பைசா கூட்டியிருப்பதை சட்டாயம் குறைக்கவேண்டும். மின்சார இலாகா கொஞ்சம் கவனம் செலுத்திப் பார்த்தால், எவ்வளவோ வேஸ்டேஜ் இருக்கிறது, அந்த வேஸ்டேஜைக் குறைக்கலாம். மின்சாரம் திருட்டுப் போகிறது. அதையும் மின்சார இலாகாவினர் கவனத்தோடு இருந்து கண்டுபிடிக்கவேண்டும். விவசாயிகளுக்கு மின்சாரக்கட்டணத்தை $1\frac{3}{4}$ பைசா அதிகரித்திருப்பதைக் குறைக்கவேண்டும், அப்படிக் குறைக்கிற நிலைமை இல்லை என்று சொன்னால், விவசாயிகளுக்கு உதவி செய்தவர்களாக ஆகமாட்டோம் என்று இந்த சமயத்தில் நான் சொல்லிக் கொள்கிறேன்.

விவசாயத்தை ஒட்டியிருக்கிற அக்ரோ இண்டஸ்டிரீஸ் கார்பரேஷன் என்ற ஒரு நிறுவனம் மூலமாக விவசாயிகள் சிறு தொழில்களை ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று சொல்லப்படுகிறது. விவசாயிகள் என்னென்ன தொழில்களை ஆரம்பிக்கலாம் என்று அறிவிக்கவேண்டும். அதற்கு என்னென்ன வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றன என்பதை இந்த இலாகாவில் இருப்பவர்கள் விவசாயிகளுக்குத் தெரிவிக்கவேண்டும். ஆங்காங்குள்ள விவசாயிகள் விவசாயம் சம்பந்தப்பட்ட சிறு தொழில்களில் ஈடுபடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

மீன் இலாகாவைப்பற்றி, நேரம் இல்லாததால், ஓரிரு வார்த்தைகள் மட்டும் சொல்லி முடிக்கலாம் என்று நினைக்கிறேன். விவசாய இலாகாவோடு இணையான இலாகா இந்த மீன் இலாகா. இந்த இலாகாவிற்கு ஒதுக்கியிருக்கும் பணம் மிகக்குறைவாக இருக்கிறது

[திரு. கோ. பூவராகன்] [1970 ஏப்ரல் 1

அதிகமாக ஒதுக்க வேண்டும் என்று விரும்புகிறேன். இரண்டாவது, மூன்றாவது திட்டங்களில் அதிகமாக ஒதுக்கவில்லை. இந்த நான்காவது திட்டத்தில், தமிழ் நாட்டில் அதிகமாக ஒதுக்கியிருக்கிறோம். அதை முறையாகச் செலவழிக்க வேண்டும், அந்த வகையில் கவனம் செலுத்த வேண்டும். ஆண்டுதோறும் பெரிய ட்ராலர்கள் வருகின்றன, வருகின்றன என்று சொல்கிறார்கள். வந்தமாதிரித் தெரியவில்லை. ஏன் காலதாமதம் என்று கவனிக்க வேண்டும். நான் இருந்த போதிருந்தே முயற்சி நடக்கிறது. வெளிநாட்டில் நல்ல வகையில் செய்கிறார்கள். நம்முடைய மண்டபத்தில் இருக்கும் படகு கட்டும் துறையை அதிகமாக விருத்தி செய்து, மற்றவர்களுடைய கையை எதிர் பார்க்காமல் நாமே செய்ய வேண்டும். பணந்தான் தவக்கம் என்று தெரிகிறது. பணம் வேண்டிய அளவு ஒதுக்கி படகு கட்டும் தொழிலுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம்முடைய அரசாங்கத் துறையில் ஆரம்பித்த 'கேனிங்' பாக்டரி தூத்துக்குடியில் தனியார் துறைக்குக் கொடுத்திருப்பதாக அறிகிறேன். நாம் ஆரம்பித்து தனியாருக்குக் கொடுப்பது சரியில்லை. தனியார் செய்ய முன் வந்தால் அவர்களுக்கு ஊக்கம் அளிக்கலாம், மற்ற மற்ற வசதிகள் கொடுக்க வேண்டும். ஆனால் நாம் ஆரம்பித்து விட்டு, அந்தத் தொழிலை தனியாருக்குக் கொடுப்பது பொருத்தமாக இருக்கவில்லை. நாம் ஆரம்பித்து தனியாருக்குக் கொடுப்பதில்லை என்பதை ஒரு பாலிசியாக வைத்துக் கொள்ள வேண்டும். அந்தத் தொழிலுக்கு நல்ல கிராக்கி இருந்தது; வரவேற்பு இருந்தது.

வெளிநாட்டில் வற்றல் மீன் விற்க, மார்கெட்டு பிடிக்க ஒரு அதிகாரி சென்றார். ஆண்டு தோரும் அதிகரித்திருக்கிறதா என்றால் அதற்கு விவரம் இல்லை. நம்முடைய வற்றல் மீனுக்கும் மற்றவர்கள் மீனுக்கும் விலை வித்தியாசம் இருப்பதால், நன்றாக விற்க முடியும் என்றிருந்தது. அப்படி நன்றாக விற்கவில்லை என்றால் அதற்கு என்ன காரணம் என்று கண்டு, வற்றல் மீன் ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும்.

கடற்கரை ஓரங்களில் இருக்கும் பாசியை எடுத்துப் பயன் படுத்த என்ன திட்டம் என்பதை திட்டவட்டமாக அறிவிக்க வேண்டும்.

மீன் இலாகாவில் கடற்கரைத் துறைமுகங்களை அபிவிருத்தி செய்ய மத்திய சர்க்காரில் பண உதவி செய்ய வில்லை என்பதால் நின்று விட்டது என்று தெரிகிறது. துறைமுகங்களுக்கு நம் பங்கைப் போட்டு, ஏற்பாடு செய்ய வேண்டும். குளச்சல் துறைமுகம் இருக்கிறது. சென்ற முறைகூட அந்தத் துறைமுகத்தை எடுப்பதாக இல்லை என்று அமைச்சர் சொன்னார்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** : குளச்சல் துறை முகத்தை எடுக்க சம்மதம் இல்லை என்று சொன்னதாகச் சொல் கிறார்கள். கேள்வி நேரத்தில் குளச்சல் மீன்பிடித் துறைமுகத்தை மத்திய சர்க்கார் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னேன. லீபுரம் பற்றித்தான் ஒப்புக்கொள்ளவில்லை. ஐட்டியை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள.

(திரு. ந. தருமலிங்கம் தலைமை)

**திரு. கோ. பூவராகன்** : கூட்டுறவு அமைச்சர் வராது என்றார்கள். மீன் இலாகாவில் சிறு சிறு துறைமுகங்களை வேறு இலாகாவில் இருந்தால், குறுகிய காலத்தில் அவற்றைப் பயன் படுத்த முடியாது. சென்னை ஹார்பரில் கூட அவர்கள் சம்மதம் பெற்றுத்தான் உள்ளே செல்ல வேண்டியிருக்கிறது. அடிபிய காலங்களில்கூட படகு கொடுக்கிறோம். அது சர்க்கார் பணம். மீன்பிடித் தொழில் செய்பவர்களுக்குப் படகு பழுது இருந்தால் ஏராளமான நஷ்டம் ஏற்படும். இரண்டு மூன்று படகு போய்விட்டால், அரசாங்கதிற்கும் இழப்பு, மீனவர்களுக்கும் இழப்பு. ஆகவே, அவற்றில் கவனம் செலுத்தி, தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொண்டு, இந்த மீன் இலாகாவிற்கு ஒதுக்கியிருக்கும் பணம் போதாது, அதிகமாக ஒதுக்க வேண்டும்.



1970 ஏப்ரல் 1] [திரு. கோ. பூவராகன்]

நைலான் நூல்கள் கொடுக்கிறோம். படகுகள் அதிகமாக உபயோகிக்க வேண்டும் என்று, எண்ணூரில் யான்மார் எஞ்ஜின் பாக்டரி வைப்பதாக இருந்தது. மத்திய சர்க்கார் அனுமதியும் தந்தது. அப்போது இருந்த பிரச்சினை பணம் தான். எவ்வளவோ காரியங்களுக்கு நாம் 5 கோடி ரூபாய் செலவழிக்கிறோம். ஒரே ஆண்டில் இல்லாவிட்டாலும், ஆண்டுக்கு ஒரு கோடி என்றாவது செய்து, மூலதனம் வைத்து, 5 கோடி ரூபாயில் பாக்டரி, நம் ராச்சியத்திற்கு வர பொறுப்பு எடுக்க வேண்டும். மத்திய சர்க்கார் இல்லாவிட்டாலும், மாநில சர்க்காரே எடுத்து நடத்த வேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன், வணக்கம்.

***திரு. மு. வேதாசலம்** : தலைவர் அவர்களே, இன்று நம்முடைய மீன் இலாகா அமைச்சர் கொண்டு வந்துள்ள மானியத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன்.

இந்த இலாகாவிற்கு அதிகப்படியாக மானியத் தொகையை ஒதுக்க வேண்டும் என்று நம்முடைய முன்னாள் அமைச்சர் திரு. பூவராகன் சொன்னதை நான் வரவேற்கிறேன். காரணம் என்னவென்று சொன்னால், மீன் உற்பத்தி நாட்டுக்குத் தேவையான உணவு பொருளாக இருக்கிற காரணத்தால் அந்த இலாக்காவிற்கு அதிகப் பணம் ஒதுக்க வேண்டும். கடந்த ஆண்டும் இதைப் பற்றிச் சொன்னேன். இப்பொழுதும் சொல்லுகிறேன். இந்த இலாகாவில் இவ்வளவு வேலைகள் செய்தும், சிலர், மீனவர்களுக்கு இந்த அரசால் எதுவும் செய்யப்படவில்லை என்று தவறான பிரசாரம் செய்கிறார்கள். எந்த நல்ல காரியமும் செய்ய வில்லை என்று சொல்லுகிறார்கள். இந்த மானியம் பற்றிய குறிப்புக்களைப் படித்துப் பார்த்தால் தெரியும். அவ்வளவு நல்ல முறையில் திட்டங்கள் வந்திருப்பதைப் பாராட்டுகிறேன். மீன் பிடிக்கும் தொழில் ஒரு கடினமான தொழில். அது எல்லோருக்கும் தெரியும், ஆபத்தான தொழில்கூட, கடலில் கொந்தளிப்பு வந்தால், பல உயிர்கள் போகும், ஆகையினால் அவர்களுக்கு ஒரு லைப் இன்ஷூரன்ஸ் திட்டம் ஏற்படுத்த வேண்டும்.

அதே போல, மீனவர்களுக்கு, எந்தக் குப்பத்தை எடுத்துக் கொண் டாலும், கடற்கரை ஓரங்களில தான் வீடுகள் இருக்கின்றன. அவர்களுக்கு குப்பங்களில் இதுவரை நிலம் பட்டா செய்து கொடுக்கப்படவில்லை. அது பொது புறம்போக்காக இருந்தாலும், நத்தம் புறம்போக்காக இருந்தா லும் சரி. அவர்களுக்கு பட்டா வழங்க வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அவர்களுக்கு பிடித்த மீன்களைக் கொண்டு போக கடற்கரை ஓரங்களில் இணைப்புச் சாலைகள் ஏற்படுத்த வேண்டும். அப்பொழுதான மீன்களைக் கொண்டு போக போக்கு வரத்து வசதியிருக்கும்.

எண்ணூரில் யான்மார் என்ஜின் செய்வதற்கான தொழிற்சாலை கட்ட திட்டம் இருக்கிறது. மத்திய சர்க்கார் அனுமதி தரவில்லை என்கிறார்கள். மத்திய சர்க்காரை வற்புறுத்தி, அதை ஏற்படுத்த வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மீனவர்களிடையில், லாஞ்ச் மூலம் மீன் பிடிக்கிறவர்களுக்கும், கட்டு மரம் மூலம் மீன் பிடிப்பவர்களுக்கும் தகராறுகள் வருகின்றன காரணம், கட்டுமரத்துக்காரர்களின வலைகளை லாஞ்சுகாரர்கள் அறுத்து, நட்டம் ஏற்படுத்திவிடுகிறார்கள். அதனால் இவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். கட்டு மரக்காரர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. இவர்களுக்குப் பாதுகாப்பு சர்க்கார் தருவது இல்லை. இலாகாவினரும் தருவதில்லை. ஆகவே, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கெனவே லாஞ்ச் சம்பந்தமாக மாக, ஜி. ஓ. 2102—/18-பி—யில், "Hirers shall not conduct fishing operations within three miles from the shore", என்று கொடுத் திருக்கிறார்கள். அந்த ஜீவோவை அமுல் படுத்த வேண்டும், என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 11-30 மீனவர்களுக்கு நைலான் நூல்கள் வழங்குகிறார்கள். அதற்கு 20 சத விகிதம் மானியம் கொடுக்கிறார்கள். முன்பு போலவே அதற்கு 25 சதவிகிதம் மானியம் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, ஐந்து குப்பங்களுக்கு ஒரு பிள்ளைப் பேறு விடுதி வேண்டும். அமைச்சரவர்கள் கடந்த இரண்டு மூன்று நாட்களுக்கு முன் சொன்னார்கள், சென்னை ராயபுரத்தில் துறைமுகம் கட்டுவது 72-ல் முடியும் என்று சொன்னார்கள். உண்மையிலே அதை நான் வரவேற்கிறேன். என்னுடைய தொகுதியாகிய இராயபுரத்தில் ஒரு துறைமுகம் வரும் என்று சொன்னார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை. இதுவரையில் அது துவங்கப்படவில்லை. உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னைப் பகுதியில் இறால் ஏற்றுமதி அதிகமாக இருக்கிறது. இறால் வெளிநாடுகளுக்கு அதிகமாக ஏற்றுமதி செய்தால் நம் நாட்டுக்கு அந்நியச் செலாவணி அதிகமாகக் கிடைக்கும். இறால் ஏற்றுமதியை இந்த இலாகாவே ஏற்று நடத்தினால் இதன் காரணமாக நமக்கு அந்நியச் செலாவணி அதிகமாகக் கிடைக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

இந்த இலாகாவில் இருக்கிற அதிகாரிகள் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் இருக்கக் கூடாது. அப்படி தொடர்ந்து இருப்பவர்களை உடனே மாற்ற வேண்டும். பல நல்ல காரியங்களை அப்போதுதான் செய்ய முடியும். அடுத்தபடியாக, "போட்" வழங்குவதில் காலதாமதமாகிறது என்று குறை சொல்லுகிறார்கள். குலுக்கல் முறையில் போட் வழங்குவது நல்ல ஏற்பாடு. அதே நேரத்தில் ஏற்படுகின்ற சில தவறுதல்களைத் தடுப்பதற்கு வழி வகை செய்ய வேண்டும். மேலும், போட் வைத்திருப்பவர்களுக்கே மறுபடியும் போட் வழங்குகிறார்கள். இது சரியல்ல. முன்பிருந்த அரசாங்கம் சீனியாரிட்டி வைத்திருந்தார்கள். முன்பு, மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினரைச் சேர்க்க முடியாத நிலை இருந்தது. இந்த அரசாங்கம் ஏற்பட்ட பின்னர்தான் கூட்டுறவுச் சங்கத்தில் சேர முடிந்தது. சீனியாரிடி முறையை ஒழித்துவிட வேண்டும். மேலும், மீனவர்கள் அல்லாத தனிப்பட்டவர்களுக்குப் போட் வழங்குவதை வன்மையாகக் கண்டிக்கிறேன். கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் 6 போட்டுகள் தனியாருக்கு வழங்கப்பட்டதாகத் தெரிகிறது. இப்படிச் செய்வது மீனவர் முன்னேற்றத்திற்குக் குந்தகமாக இருக்கிறது. இப்போது டிராலர்ஸ் வந்தால், அதிகமாக முன்பைக் காட்டிலும் மீன் பிடிக்க முடியும் என்று கூறி உரையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ந. தருமலிங்கம்) :** அடுத்து, ஏ. மாரிமுத்து.

(உறுப்பினர் இருக்கையில் இல்லை.)

***திரு. டி. தங்கப்பன் :** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நம்முடைய அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற வேளாண்மை மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய நாடு விவசாய நாடு. கடந்த இருபது ஆண்டுகளாக ஆட்சியை நடத்திய காங்கிரஸ் நண்பர்கள் எந்த அளவிற்கு முன்னேற்றம் கண்டார்கள் என்றால், அவர்களால் மக்களுக்கு அரிசி கொடுக்க முடிய வில்லை, உணவு வழங்க முடியவில்லை. இன்றைய தினம் நம்முடைய ஆட்சியிலே 1967-லிருந்து 1970-க்குள் மூன்று ஆண்டுகளிலே நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளக்கூடிய அளவிற்கு நாம் வளர்ந் திருக்கிறோம், விவசாயத் துறையிலே பல மாற்றங்களைக் கண்டிருக்கிறோம் என்று சொன்னால் அது மிகையாகாது. இன்றையதினம் நம்முடைய உற்பத்தி 65 லட்சம் டன்னாக உயர்ந்திருக்கிறது. எல்லா மாவட்டங்களிலும் விவசாயத் துறையிலே பல முன்னேற்றமான வேலைகளை விவசாயத் துறை செய்திருந்தாலும் கூட, இராமநாதபுரம் மாவட்டத்திலே சரியான





ஏற்பாடுகள் செய்யப்படவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயத் துறை என்னுடைய மாவட்டத்திலே சரியாகச் செயல்படவில்லை யென்றே விவசாயிகள் மத்தியிலே சொல்லப்படுகிறது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்றையதினம் அமோக விளைச்சல் தரும் வீரிய வித்துக்களான ஐ. ஆர். 8, கருணா போன்ற வித்துக்களை உபயோகித்து விவசாயிகள் அதைப் பயிரிட்டு வருகிறார்கள். இந்தப் பயிர்கள் வேகமாக வளர்ந்து அதிக பலனைத் தருகின்றன. இந்த ரக வித்துக்களை என்னுடைய தாலுகாவிலும் 2 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் பயிர் செய்திருக்கிறார்கள். ஆனால், நல்ல நேரத்திலே, நல்ல முறையிலே, யோசனை சொல்லப்படுகின்ற நிலையில் அதிகாரிகள் இல்லை. இந்தப பயிரின் வயது என்ன, எப்போது விதைக்க வேண்டும், எப்போது எவ்வளவு தண்ணீர் பாய்ச்ச வேண்டும், எத்தனை நாளில் நட வேண்டும், எப்போது மருந்து தெளிக்கப்பட வேண்டும், எப்படி உரமிட வேண்டும் என்பதுபோன்ற விவரங்களை அதிகாரிகள் சரியாக விவசாயிகளுக்குச் சொல்வதில்லை. ஒவ்வொரு பஞ்சாயத்திலும் விவசாய அபிவிருத்தி அதிகாரி என்றும், மாவட்ட அளவில் மாவட்ட விவசாய அபிவிருத்தி அதிகாரி என்றும் இருக்கிறார் கள். இவர்கள் முறையாக விவசாயிகளின் மத்தியிலே சென்று, இந்தப் பயிர்களின் வளர்ச்சிக்கு உறுதுணை செய்வதில்லை. இந்தப் பயிர் களுக்கு மருந்து தெளிக்கும் பிரச்சினை மிகவும் முக்கியமானது. கோயம்புத்தூர், தஞ்சை போன்ற மாவட்டங்களில் விமானம் மூலம் மருந்து தெளிக்கிறார்கள். என்னுடைய மாவட்டத்தில் மோட்டார் ஸ்ப்ரேயின் மூலமாகத்தான் மருந்து தெளிக்கிறார்கள். மேலும் ஒரு பஞ்சாயத்து யூனியனில் நான்கைந்து ஸ்ப்ரேயர்கள்தான் வைத்திருக்கிறார் கள். இரண்டாயிரம் ஏக்கர் நிலங்களுக்கு மருந்து தெளிக்க வேண்டு மானால் மிகுந்த கஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, ஒவ்வொரு பஞ்சாயத் திலும் ஒரு ஸ்ப்ரேயர் இருக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த ஆண்டு 2 ஆயிரம் ஏக்கருக்குமேல் ஐ. ஆர். 8 பயிரிட்டிருக்கிறார்கள். தக்க உதவிகள் செய்தால் 4, 5 ஆயிரம் ஏக்கர் நிலத்திலும் இதைப் பயிரிட லாம். மோட்டார் ஸ்ப்ரேயர்களை அதிகப்படுத்த வேண்டும்.

அடுத்தபடியாக, நான் மீனவர் முன்னேற்ற ஆலோசனைக் குழுவில் மெம்பராக இருக்கிற காரணத்தால், மீனவர்கள் நலன்பற்றி இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். மீனவ சமுதாயமும், விவசாயிகளைப் போல நல்ல முறையிலே உணவுப் பிரச்சினைக்கு உதவி செய்கிறது. மீனவர்கள் கடலில் சென்று உணவு பொருள்களைக் கண்டுபிடித்து வருகிறார்கள். மீனவர்கள் தங்களுக்கு ஏற்படப் போகும் பேராபத்துக்களையும் கஷ்டங்களையும் பொருட்படுத்தாமல் கடலில் சென்று மீன் பிடித்து வருகிறார் கள். ஏற்படுகின்ற கஷ்டங்களை ஏற்றுக் கொள்கிறார்கள். இதில் சங்கு குளிக்கும் தொழிலாளர்களும் இருக்கிறார்கள். இப்பொழுது சங்கு குளிக்கும் தொழிலை குத்தகைக்கு விட்டு வருகிறோம். சங்கு குளிக்கும் தொழிலா ளர்கள் சுமார் நான்கைந்தாயிரம் பேர் இந்தத் தொழிலையே நம்பி ஜீவனம் நடத்துகிறார்கள். குத்தகைக்கு எடுத்தவர்கள், இந்தத் தொழிலாளிகளிடமிருந்து சங்குகளை குறைந்த விலைக்கே எடுத்துக் கொள் கிறார்கள். ஆகவே, இவர்கள் தங்களுடைய உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்காமல் மிகுந்த கஷ்டப்படுகிறார்கள். நம்முடைய அரசு தொழிலாளர் அரசு, விவசாயிகள் அரசு, பாட்டாளிகள் அரசு என்று பிரகடனப்படுத்தி இருக்கிறது. சங்கு குளிக்கும் தொழிலை குத்தகைக்கு விடுவதனால் 4 அல்லது 5 லட்சம் ரூபாய் கிடைக்கிறது. இதை அரசாங்கம் பெரிதாகக் கருதாமல் சங்கு குளிக்கும் தொழிலை குத்தகைக்கு விடாமல், அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டும்.

அடுத்து, மீனவர்கள் ஆழ்கடலில் சென்று மீன் பிடிக்கிறார்கள். டிராலர்ஸ் போன்ற படகுகளில் சென்று மீன் பிடித்து வர வேண்டிய நிலைமை ஏற்பட இருக்கிறது, அப்படி மீன் பிடிக்கும் காலத்தில் நான்கைந்து மைல்கள் தாண்டிச் சென்று மீன் பிடிக்க முடியாத நிலை இருக்கிறது. அப்படிச் சென்றால், சிலோன் இராணுவம் அவர்களைப் பிடித்து, கள்ளத் தோணிகள் என்று பிடித்து வைத்துக்கொள்கிறார்கள்.

[திரு. டி. தங்கப்பன்] [1970 ஏப்ரல் 1

இது மீனவர்களுக்கு அடிக்கடி ஏற்படுகிற தொல்லையாக இருக்கிறது. கட்டுமரத் தொழிலாளர்கள் இந்த இடத்தில் மீன் பிடிக்க வேண்டும். மோட்டார் படகு இந்த இடத்தில்தான் பிடிக்க வேண்டும் என்று சட்டம் இருக்கிறது. நாம் அந்தச் சட்டத்தைச் சரியாக அமல்படுத்த வேண்டுமானால், நம்மைக் கள்ளத்தோணி என்று கைது செய்வதை நிறுத்தி, மீனவர்களுக்குத் தக்க பாதுகாப்பைக் கொடுக்க வேண்டும். ஆகவே, அவர்களுக்காக விசேஷ போலீஸ் பிரிவு ஒன்றை தனுஷ்கோடியிலோ அல்லது கச்சத் தீவிலோ வைத்து மீனவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. கே. என். குமாரசாமி: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, விவசாய மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகளுக்கு அரசாங்கம் பல சலுகைகளை வழங்குவதாக அறிக்கையில் சொல்லப்பட்டிருந்தாலுங்கூட, விவசாயிகளுக்குப் பூரணமாகக் கிடைக்கின்ற பயன் அதிகம் இல்லையென்று கருதுகிறேன். இப்போது 170 லட்சம் ஏக்கரிலே பயிரிடுவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. 60 லட்சம் ஏக்கரில் நெல் பயிர் கிணற்றுப் பாசனம் மூலமாகவும், ஆற்றுப் பாசனம் மூலமாகவும் நடைபெறுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. பாக்கி 100 லட்சம் ஏக்கருக்கு எந்த விதமான பாதுகாப்பும் இல்லை. புஞ்சை நிலங்களை நம்பி விவசாயம் செய்யும் நிலைமை இருக்கிறது. எந்த விதமான முயற்சியும் அரசாங்கத்தாரால் செய்ய முடியவில்லை. 100 லட்சம் ஏக்கரில் பயிர்செய்யும் மக்களின் நிலை என்ன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். புஞ்சை நிலத்தில் நான்கு மாதம் உழைத்து ஒரு வெள்ளாமை எடுத்துவிட்டால், பாக்கி 8 மாதங்களுக்கு விவசாயி வேலையில்லாமல் இருக்கிறான். அதை நம்பி வாழ்கிற பல கோடிக் கணக்கான மக்கள் மிகுந்த கஷ்டங்களுக்கும் துன்பங்களுக்கும் உள்ளாகிறார்கள். அவர்களுக்கு ஏதாவது மாற்றுத் திட்டங்களை ஏற்படுத்தி உப தொழில்கள், பிற தொழில்கள் கொடுக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜப்பான் போன்ற வளர்ச்சி அடைந்துள்ள நாடுகளை எடுத்துக் கொண்டால் ஒரு ஏக்கராவில் மூவாயிரம் கிலோ கிராம் உற்பத்தி செய்கிறார்கள். ஆனால் நம்முடைய நாட்டில் இப்போதுதான் ஒருசில இடங்களில் ஏக்கருக்கு 2,500 கிலோ கிராம் மகசூல் காண்கிறார்கள். மொத்தம் 27 லட்சம் ஏக்கரா, 30 லட்சம் ஏக்கரா சாகுபடியின் கீழ் இருக்கிறது என்றால் அத்தனை இடங்களிலும் இதுபோன்று அதிக உற்பத்தியைப் பெருக்க வழி செய்தால் நன்றாக இருக்கும். இப்போது அப்படியில்லை. எல்லா இடங்களிலும் அந்த ஈல்டு கிடைப்பதில்லை. கிணற்றுப் பாசனப் பகுதியில், வேறு ஒன்றிரண்டு இடங்களில்தான் இந்த ஹை ஈல்டு எடுத்திருக்கிறார்கள். எல்லா இடங்களிலும் அதிக உற்பத்தியைக் காண்பதற்கு என்ன வழி என்று கண்டு, அதைச் செயல்படுத்தினால் தான் மிக்க நன்மை உண்டு. வழி என்ன என்று தெரிந்தாலும் இவர்களுக்குச் செயல்படுத்துகிற எண்ணம் இல்லையோ என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது.

பூச்சி மருந்து பாதி விலையில் கொடுக்கப்பட்டதாகப் பிரகடனம் செய்யப்பட்டது. அந்தப் பூச்சி மருந்தின் தரமே குறைந்துவிட்டதோ என்கிற ஐயப்பாடு எழுகிறது. ஆனால் அதைப்பற்றி எதுவும் பரிசீலனை செய்வதாகத் தெரியவில்லை. பருத்தி வேளாண்மையை எடுத்துக் கொண்டால் 20 தடவைகளுக்கு மேல் பூச்சி மருந்து அடித்தாலும் பூச்சி சாகவில்லை. இந்த ஆண்டு பூச்சியினால் பருத்தி சாகுபடி பாதிக்கப்பட்டிருக்கிறது. நான்கு ஏக்கர் விவசாயம் செய்கிறவன் 2 ஆயிரம் ரூபாய் பூச்சி மருந்துக்கே செலவழித்து, மகசூலையும் இழந்துவிட்டான் என்றால் அவன் நிலை என்ன? பெருங் கடனாளியாகத்தான் ஆகிவிடுகிறான். இயற்கை கெடுப்பதோடு, இப்படி பூச்சி மருந்து வாங்கியும், அது சரியான முறையில் பயன் அளிக்காத காரணத்தினால் பெரிதும் அழிந்துவிடுகிறான். இதை அரசு கவனிக்க வேண்டும்.



1970 ஏப்ரல் 1] [திரு கே. என். குமாரசாமி]

உர வகைகளின் விலை ஏற்றப்பட்டிருக்கிறது. நூறு கிலோ கிராம் 46 ரூபாய் என்றால் விவசாயிகளினால் எத்தனை மூட்டை உரம் வாங்கிப் போட முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பல்வேறு விவசாயிகள் உரம் வாங்கியும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அதே நேரத்தில் பம்பு செட்டுகளுக்கு 10./· டாக்ஸ் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. பம்பு செட் விவசாயிகளுக்கு இது பெரும் பாதகமான நிலை.

மின்சாரக் கட்டணத்தை வேறு அதிகப்படுத்தி இருக்கிறார்கள். இப்படி இரண்டு மூன்று துறைகளில் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவற்றை எல்லாம் அரசு நல்லமுறையில் பரிசீலனை செய்து விவசாயிகளுடைய துன்பத்தைக் குறைப்பதற்கு முன்வர வேண்டும்.

அடுத்து பயிர் பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். அது இல்லாத காரணத்தினால் விவசாயத்தில் பெரும் நஷ்டம் ஏற்படுகிறபோது மனமுடைந்து போன விவசாய குடும்பங்கள் எத்தனையோ. ஆகவே உடனடியாக பயிர் பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டுவர இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கூறி, எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்ததற்காக நன்றி சொல்லி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. அ. மாரிமுத்து: தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து ஒருசில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, உழவனுக்கு உழவு மாடு எந்த அளவு தேவையோ அதைப் போலத்தான் இந்த நாட்டு மக்களுக்கு உழவனும் தேவை என்பதை இந்த நல்ல நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் உணவு உற்பத்தி நல்ல முறையில் பெருக வேண்டும் என்றால் உழவனது முன்னேற்றத்திலும், வளர்ச்சித் திட்டத்திலும் இந்த அரசு அக்கறை காட்ட வேண்டும்.

ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து இரண்டு, அறுபத்து மூன்றிலே இயற்கைச் சோதனையின் காரணமாக பற்றுக்குறை ஏற்பட்டபோது விவசாயிகள் நாணயச் சங்கங்களிலே வாங்கிய கடனை இன்றைய வரையில் கொடுக்க முடியாத நிலையில் இருந்து வருவதை இந்த அரசு நன்கு உணர்ந்துங்கூட அவர்களுக்குத் தக்க சலுகை தர முன்வரவில்லை என்பதை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நாணயச் சங்கத்தில் வாங்கிய கடன் எல்லாம் வட்டி, வட்டிக்கு வட்டி என்பதாக முதலோடு சேர்ந்து பெருந் தொகையாகி—அதை எவ்வாறு தீர்ப்பது என்பதே பெரும் பிரச்சினையாகியிருக்கிறது. அப்படிப்பட்ட கடனை விவசாயிகளிடம் இருந்து கடுமை முறையில் வசூலிக்க உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பூச்சி மருந்து அடிப்பது விவசாயத்திற்கு ஏற்றதாக இருந்தும் அரசு மானியமாக 45 விதித்திருப்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். ஏழை விவசாயிகளால் 225 க்கு ஸ்பிரேயர் வாங்க முடியுமா என்பதைச் சிந்திக்க வேண்டும். ஒரு பாகத்தில் மட்டும் ஒரு சிலர் கேட்டுக்கொண்டார்கள் என்பதற்காக விமானத்தின் மூலம் மருந்து தெளிப்பது என்பது சரியல்ல. எல்லா இடங்களுக்கும் விமானத்தின் மூலம் மருந்து தெளிக்க வேண்டும். விமானம் மூலம் மருந்து தெளிப்பதற்கு அதிகக் கட்டணம் ஆகிறது என்கிறார்கள். பாதித் தொகையை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில் ஒருபோக நிலத்தில் இருபோக சாகுபடி செய்ய பல மாநாடுகள் கூட்டி ஆர்வத்தை உண்டாக்கி வருகிறார்கள். ஆனாலும் ஆங்காங்கு சரியான நீர்ப்பாசனம் இல்லாத காரணத்தினால்

[திரு. அ. மாரிமுத்து] [1970 ஏப்ரல் 1]

இரண்டாவது போகம் சாகுபடி செய்தவர்கள் பயிர் கெட்டிருக்கிறது. அவர்களுடைய நிலைமையை இந்த அரசு கவனித்து, உதவி அளிக்க முன்வர வேண்டும்.

பசுமைப் புரட்சி என்ற திட்டத்தை சொல்லிக் கொண்டிருப்பதைக் காட்டிலும் எனது தாழ்மையான வேண்டுகோள்—விவசாயம் நல்லதொரு முறையில் நடக்க வேண்டும் என்பதை மனதில் கொண்டு நல்ல பல சலுகைகளை விவசாயிகளுக்கு அளிக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, சாகுபடியிலே ஈடுபட்டிருக்கிற ஏழை எளிய விவசாயிகளுக்கு தஞ்சை மாவட்டத்திலே கூலிப் பிரச்னை பெரிய பிரச்னையாக இருந்து கொண்டிருக்கிறது. கீழ் தஞ்சையிலே ஒரு கூலியும் மேல் தஞ்சையிலே ஒரு கூலியுமாக இருப்பதை மாற்றி எல்லா இடங்களிலும் ஒரே கூலியாக நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவைக் கல்லூரியில் ஒரு நெல் கண்டு பிடித்திருக்கிறார்கள். அதற்கு கருணை என்று பெயர் வைத்தார்கள். கருணை என்று ஏன் பெயர் வைத்திருக்கிறார்கள் என்று எல்லோரும் என்னைக் கேட்டார்கள். முதலமைச்சர் பெயரா என்று கேட்டார்கள், நான் சொன்னேன், உள்ளபடி அந்த நெல்லுக்குப் பெயர் வைக்க வேண்டுமென்றால் அண்ணாவின் பெயரைத்தான் வைப்பார்கள், இது ஏதோ ஒரு காரணத்திற்காக வைத்து இருக்கிறார்கள் என்று சொன்னேன். விவசாயிகள் உண்மையான நிலையை தெரிந்து கொள்ள விரும்புகிறார்கள். நெல்லுகளுக்குப் பெயர் வைப்பது போலில்லாமல் [illegible] சம்பா, [illegible] சம்பா என்று பழைய காலத்தில் மங்களமாக வைத்த மாதிரி இப்பொழுதும் [illegible] முறையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு இந்த சந்தர்ப்பத்தை அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. ஆ. கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, இங்கு கொண்டுவரப்பட்டிருக்கும் வேளாண்மை மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

இப்பொழுது எங்களுடைய பகுதியிலே ஐ.ஆர். 8 உற்பத்தி செய்வதற்காகப் பெரு முயற்சிகள் எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அங்கேயுள்ள விவசாயிகள் கூட்டுறவு மன்றங்களின் மூலமாகப் பல கடன்களை வாங்கி நல்ல முறையிலே சாகுபடி செய்துள்ளார்கள். ஆனால் தண்ணீர் பற்றாக்குறை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக நீர்ப்பாசன சீப் என்ஜினியர் அவர்களைக் கண்டு கேட்டதற்கு எங்களிடத்தில் அவர்கள் சொல்கிறார்கள், எங்களைக் கேட்காமலே எப்படி அந்தச் சாகுபடிக்கு ஊக்கம் அளித்தார்கள் என்று கேட்டார்கள். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஏனென்றால் அவர்களும் நம்முடைய தமிழக அரசைச் சேர்ந்தவர்கள், விவசாய இயக்குநர் அவர்களும் தமிழக அரசைச் சேர்ந்தவர்கள். அவர்கள் இவர்களைக் கேட்டுக் கொள்ள வேண்டுமென்று நினைக்கிறார்கள். அதனால் விவசாயம் நல்லமுறையிலே செய்ய முடியாமல் போகிறது. என்னுடைய பகுதியிலே ஐ.ஆர். 8 ஏழு அல்லது எட்டு ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களையும் அரசையும் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு டிராக்டர்கள் வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். அவற்றிற்கு ஸ்பேர் பார்ட்ஸ் சாமான்கள் கிடைக்கவில்லை. தவணை முறையிலே வாங்குகிற டிராக்டர்களையெல்லாம் இந்தக் காரணத்தினால் விலைக்குக் கேட்டால் கொடுத்து விடலாம் என்ற நிலைமையிலே இருக்கிறார்கள். அவர்களுக்குச் சாமான்கள் கிடைப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும்.

கூட்டு மன்றங்களிலே பவர் ஸ்ப்ரேயர் இருக்கிறது. ஒரு பவர் ஸ்ப்ரேயர் கூட நல்ல நிலைமையிலே இல்லை. சாமான்கள் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். இதற்கும் அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



[1970 ஏப்ரல் 1] [திரு ஆ. கோவிந்தராசன்]

என்னுடைய பகுதி சிதம்பரம் வட்டம். அங்கே வறட்சி நிலை இருப்பதால் பணம் கொடுக்க வேண்டுமென்று கேட்டால் இல்லையென்று சொல்லிவிடுகிறார்கள். தஞ்சை ஜில்லாவிற்குக் கொடுக்கப்படுகின்ற சலுகைகளைப் போல் அங்கேயும் சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கும் ஒன்றும் கொடுக்கவில்லை. இரண்டும் கெட்டானாக இருந்து வருகிறது. பாதி நஞ்சையாகவும், பாதி புஞ்சையாகவும் இருக்கிறது. புஞ்சைப் பகுதிகளில் சர்க்கரை ஆலை ஏற்படுத்திக் கொடுத்தால் விவசாயிகள் பலன் அடைவார்கள். இதைச் செய்ய வேண்டும்.

சிதம்பரம் வட்டத்தில் வடிகால் வசதிகள் கிடையாது. ஐ.ஆர். 8 சாகுபடி செய்தால் வடிகால் வசதி தேவை. அது இல்லாவிட்டால் நீர்ப்பிடிப்பு ஏற்பட்டு ஐ.ஆர். சாகுபடி கெட்டுப்போகும். எனவே வடிகால் வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

என்னுடைய வட்டத்திலே வெள்ளாறு என்ற ஆறு ஓடுகிறது. மழைக் காலத்திலே வெள்ளம் புரண்டு நஞ்சை நிலங்களை ஒவ்வொரு வருடமும் அடித்துச் சென்று அறுவடை பாதிக்கப்படுகிறது. இரண்டு ஆண்டுகளாக மழை பெய்யவில்லை. தமிழ்நாடு பூராவும் [illegible] என்னுடைய பகுதியைப் பொறுத்த [illegible] கஷ்டப்பட்டார்கள் [illegible] மழை [illegible] வெள்ளம் [illegible] பெய்யாததால் சந்தோஷப்பட்டார்கள் [illegible] அறுவடை பாதிக்க [illegible] செய்திருக்கிறார்கள் வெள்ளாற்றுக்கு [illegible] தடுப்பு அணைகளைக் கட்டி விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவர் அவர்களே, இந்த விவாதத்தில் இருக்கின்ற வேளாண்மைத் துறை மானியத்தைப்பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முனைவருகிறேன்.

உணவு உற்பத்தியினுடைய இலக்கு 79 லட்சம் டன் என்று குறிப்பிட்டு அதற்காக புதிய ரக நெல்லைப் பயிரிட ஆரம்பித்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 49 லட்சம் டன் அரிசியை உற்பத்தி செய்ய முடியும் என்று கெட்டு திருக்கிறார்கள். புதிய ரக நெல்லைப் பயிரிடக்கூடிய ஆர்வம் விவசாயிகளுக்கு அதிகரித்து வருகிறது. ஐ. ஆர். 8, ஜெயா, பத்மா போன்ற தானியங்களை வெகு நல்ல முறையிலே விவசாயம் செய்வதற்கு முன் வருகிறார்கள். இந்த நிலையில் தஞ்சாவூர் ஜில்லாவிலே 14 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பு இருந்து கொண்டிருக்கிறது. ஐ. ஆர். போன்ற தானியத்தை விவசாயம் செய்வதற்கு அவர்கள் ஆர்வமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். ஐ. ஆர். 8 அதிகக் கண்டுமுதல் காட்டுவதன் காரணமாக அந்த ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது.

தண்ணீர் வடிவதற்குச் சரியான வசதிகள் இல்லாத காரணத்தினால் அந்த நெல்லைச் சாகுபடி செய்வதற்குத் தடை இருக்கிறது. வடிகால் வசதிகளைச் செய்து கொடுத்தால் 10, 15 லட்சம் டன் அதிகமாக உற்பத்தி செய்வதற்கு வசதியும் வாய்ப்பும் இருந்து கொண்டிருக்கிறது. கோ. 25 என்று சொல்லக்கூடிய தானியமும் நல்ல முறையிலே சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. ஆனால் அதற்கு விலை குறைவாக இருந்துகொண்டிருக்கிறது. இரண்டாவது தரமாக அரசாங்கம் அதை நிர்ணயித்து இருப்பதால் அந்த விலை விவசாயிகளுக்குக் கட்டுபடியாகவில்லை. அவர்களுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலையைக் கொடுப்பதற்கு ஏற்ற வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டால்தான் அந்த விவசாயிகளுக்கு உதவிகரமாக இருக்கும்.

உழவடை செய்வதற்கு டிராக்டர்கள் தேவைப்படுகின்றன. 3 ஆயிரம் டிராக்டர்கள் தருவித்து 12 ஜில்லாக்களுக்குக் கொடுப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. தனியார் 35 ஆயிரம் விலையுள்ள டிராக்டர்களை வாங்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் குறிப்பிலே கூறியிருக்கிறார்

[திரு. அ. கு. சுப்பையா] [1970 ஏப்ரல் 1

கள். 4, 5 ஏக்கர் வைத்துள்ள விவசாயிகளுக்கு வசதியாக பஞ்சாயத்து யூனியன்கள் தங்களுடைய நிதியிலிருந்து வாங்கி அல்லது அரசாங்கம் வாங்கி ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் 4, 5 என்ற அளவிற்கு டிராக்டர்கள் வாங்கி குறைந்த வாடகைக்கு விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும். டிராக்டர்கள் ரிப்பேர் ஆனால் சரிசெய்வதற்கு இப்பொழுது கும்பகோணத்திலே ஒரு நிலையம் ஆரம்பிக்கப் போவதாகச் சொல்லப்படுகிறது. தஞ்சை மாவட்டத்திலே இரண்டு இருக்கின்றன. ஒன்று திருவாரூரிலே, இன்னொன்று கும்பகோணத்திலே. அது போதாது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும், மாவட்ட விவசாய அதிகாரியின் எல்லைக்குட்பட்ட பகுதியில் இந்தப் பழுது பார்க்கக்கூடிய நிலையத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00 சிறு நிலக்காரர்களுக்கு நன்மை செய்யக்கூடிய முறையில் விவசாயத் திட்டத்தை உருவாக்குகிற நேரத்தில் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டு நிறைவேற்றியும்கூட கணிசமான அளவுக்கு சிறுநிலக்காரர்களுக்கு எந்தவிதமான பயனும் ஏற்படவில்லை. இதைத் திட்ட ஆணைக்குழு சுட்டிக் காட்டியிருக்கிறது என்று அமைச்சர்கள் கூறுகிறார்கள். ஆகவே சிறு நில விவசாயிகள் தொடர்ந்து புறக்கணிக்கக்கூடிய நிலை தொடர்ந்து இருந்து வருகிறது. அவர்களுக்கு உரியமுறையில் அரசாங்கம் மேற்கொண்டு இருக்கக்கூடிய மத்திய அரசு முழு உதவித் திட்டத்தை தஞ்சாவூருக்கும் சேர்த்து அமுலுக்குக் கொண்டுவருமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தியாவிலேயே 20 மாவட்டங்கள்தான் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்றாலும் நம்முடைய தமிழ்நாடு அதிகமாக உற்பத்தி செய்யக்கூடிய ஒரு நாடாக இருப்பதால் தமிழ்நாட்டில் இன்னொரு மாவட்டத்தைச் சேர்ப்பது உதவிகரமாக இருக்கமுடியும், அதிக உற்பத்தி பெருக வாய்ப்பாக இருக்கமுடியும் என்ற முறையில் தஞ்சாவூரும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து பண்ணைத் தொழிலாளர்களுக்கு உரிய திட்டத்தை தயாரிப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. பண்ணைத் தொழிலாளர்கள் விவசாயத் தொழிலாளர்கள்தான். அவர்களுக்கு விவசாயம் செய்கிற காலம் போக மற்ற காலங்களில் எந்தவிதமான வேலையும் இல்லை. அவர்களுக்கு பால் பண்ணை, கோழி வளர்ப்பு போன்ற உதவிகள் செய்வதற்கு திட்டங்கள் இருந்தாலும் இந்தத் திட்டங்களைப் பரவலாக தஞ்சை மாவட்டம் போன்ற பகுதிகளிலே ஆரம்பிப்பதன் மூலம் விவசாயத் தொழிலாளர்கள் விவசாயம் இல்லாத காலத்தில் அவர்களுக்கு வருவாய் வரக்கூடிய முறையில் செயல்படுத்த முடியும்.

அடுத்து, இந்த அரசாங்கத்தை நான் பாராட்டுகிறேன் அரிசனங்களுக்கு ஆவணப் பதிவு கட்டணத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிற காரணத்தால். இதைச் சொல்லிக் கொண்டு மீனளம் சம்பந்தமாக ஒரு விஷயத்தை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தஞ்சாவூர் மாவட்டத்தில் கடற்கரை ஓரங்கள் அதிகமாக உள்ளன. சிறிய மீனளங்கள் இருக்கின்றன. அங்கு மீன் பிடிக்கும் துறைமுகங்கள் ஏற்படுத்த வேண்டும். முத்துப்பேட்டை, அதிராம்பட்டணம் போன்ற பிரதேசங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதையே ஜீவனமாகக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே முத்துப்பேட்டை, அதிராம்பட்டணம் முதலிய இடங்களை மீன்பிடி துறைமுகங்களாக்க அரசாங்கம் ஆலோசனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். மீன்பிடிப்பவர்கள் சங்கம் என்று ஒன்று இருக்கிறது. அதில் சம்பந்தம் இல்லாதவர்கள் மீனைத் தொட்டுப் பார்க்காதவர்கள்கூட அங்கத்தினராகி சர்க்கார் அளிக்கும் சலுகையைப் பெறக்கூடிய அபாயகரமான நிலைமை இருந்து கொண்டு வருகிறது. ஆகவே அதைக் கண்டறிந்து பரிசீலனை செய்து உண்மையிலேயே அத்துறையில் யார் ஈடுபட்டிருக்கிறார்கள் மீனவர்கள் என்று சான்றிதழ் வைத்திருக்கிறார்களா என்று பார்த்து அவர்களை அந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் சேர்த்து சர்க்கார் வழங்குகிற சலுகைகளை வழங்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.



1970 ஏப்ரல் 1]

*திரு. ஆர். சீனிவாச நாயக்கர்: மதிப்புக்குரிய தலைவர் அவர்களே, விவசாய மானியக் கோரிக்கையின்மீது எனது கருத்துக்களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். புஞ்சை நிலங்களில் சாகுபடி செய்யும் விவசாயிகள் பற்றிய விவசாய மானியக் கோரிக்கையில் அவர்கள் மிகவும் ஏழைகளாக வாழ்கிறார்கள் என்பதைக் குறிப்பிட்டிருக்கிறது. ஆனால் அவ்வாறு வாழும் விவசாயிகளுக்கு எந்தவிதமான காரியங்களையும் செய்து அவர்களை முன்னேற்றிக் கொண்டு வருவதற்கு உத்தேசித்து இருக்கிறார்கள் என்பது தெளிவாகக் காட்டப்படவில்லை. மேலும் புஞ்சை சாகுபடி செய்யும் நிலப் பிரதேசங்களில் உள்ள விவசாயிகள் மழை இல்லாத காரணத்தால் வறட்சியின் காரணமாக குடிதண்ணீருக்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற சூழ்நிலையைக் காண்கிறோம். அந்த சூழ்நிலையை மாற்றவேண்டுமென்றால் அந்தப் புஞ்சை நிலச் சாகுபடி செய்யும் கிராமங்களில் சிறு சிறு குடிநீர்த் தேக்கங்கள் இருக்கின்றன. அது ஊரணி என்று சொல்லப்படும். அவைகளை ஆழப்படுத்தி, மழை பெய்யும் காலத்தில் ஊரணியில் நீரைத் தேக்கி வைத்தால், மழையில்லாத காலத்தில் மனிதர்கள் குடிக்கவும், கால்நடைகள் குடிக்கவும் அது ஏதுவாக இருக்கும். அதற்கு ஏற்பாடு செய்தால் அது மிகவும் நலமாக இருக்கும் என்று என்னுடைய கருத்தை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மேலும் புஞ்சைப் பிரதேசங்களில் உள்ள விவசாயிகள் பெரும்பாலும் கடன்பட்டு கடன் தொல்லைகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்கள் எவ்வாறு கடன்பட்டிருக்கிறார்கள் என்றால், கிணறுகளைத் தோண்டி கிணறுகள் மூலம் இறைத்து சாகுபடி செய்து விவசாயத்தைப் பெருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அரசாங்கத்திடமும் கூட்டுறவு நிலவள வங்கிகள் மூலமும் கடன்களைப் பெற்று கிணறுகளைத் தோண்டும் பொழுது, அந்த கிணறுகளில் ஜலம் இல்லாமலும் கரும்பாறை விழுந்தும் அதை மேலும் தோண்ட முடியாத நிலையில் திருப்பக் கடன்களைக் கொடுக்கமுடியாத நிலையில் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அந்த நிலத்தை அரசாங்கத்திடம் ஒப்படைத்துவிட்டு ஓடிவிடுவதா என்ற சூழ்நிலையில் இருக்கிறார்கள். அந்த வரிசையில் இருப்பவர்களை எல்லாம் அரசாங்கம் கணக்கெடுத்து, அவர்களுக்கு வழங்கிய கடன்களை இனமாக விட்டுவிடுவது நல்லது என்று என்னுடைய கருத்தை கூறிக் கொள்ளுகிறேன்.

மேலும் சிறு சிறு விவசாயிகளுக்குத் தங்களது உடல் உழைப்பிற்கேற்ப நிலங்களைக் கொடுத்து உதவ வேண்டும். அது அரசாங்கத்தின் கடமையாகும். உடல் உழைப்புக்கு ஏற்ப அவர்களுக்கு நிலம் கொடுத்தால், அந்த விவசாயிகள் நிலத்தில் உழைத்து, அவர்கள் முன்னேறிவர முடியும். தரிசு நிலங்களானாலும்சரி, தேவஸ்தான நிலங்கள் ஆதீனகர்த்தாக்களுக்கு உடமையாக உள்ள நிலங்களை அவர்களுக்குக் கொடுத்து அதில் அவர்கள் தீவிரமாகச் சாகுபடி செய்து அவர்கள் முன்னேற்றம் அடையும்படியான ஒரு சூழ்நிலையை அரசாங்கம் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சிப் பகுதிகளில் சில நீர் ஓடைகளும் ஆறுகளும் அங்கு ஓடிக் கொண்டிருக்கின்றன. மழை பெய்யும் காலங்களில் நீர் ஓடைகளிலும் ஆறுகளிலும் ஜலம் நிரம்பி வீணாகக் கடலுக்குச் சென்றுவிடுகிறது. அதைத் தடுத்து நிறுத்தி, ஆங்காங்கு சில நீர் நிலையங்களை ஏற்படுத்தினால் அங்கு இருக்கும் இறைவைக் கிணறுகளுக்கு அது ஊற்றுக்களாகச் சுரந்து அதன் மூலம் செழிப்பு அடையச் செய்ய முடியும் என்பது என்னுடைய மேலான அபிப்பிராயமாகும். இதற்கு அரசாங்கம் சிறு சிறு தடுப்புச்சுவர்களைத் தடுத்து நீர் நிலையங்கள் ஏற்படுத்தினால், அந்த இடங்களில் நல்லவிதமான மகசூலைக் காண முடியும். அது அல்லாமல் நீர் ஓடைக்குப் பக்கத்தில் சமுதாயக் கிணறுகள் தோண்டினாலும்கூட தோண்டிய கிணறுகளில் உப்புத் தண்ணீர் இருக்கிறது. அந்த நீர் சாகுபடிக்கு ஏற்றதாக இல்லை. அங்கு நல்ல தண்ணீர் அமைய வேண்டுமென்றால், தடுப்புச் சுவர்களைக் கட்டி சிறிய நீர்த்தேக்கங்களை ஏற்படுத்தி அந்த நீர்த் தேக்கங்கள் மூலம் விவசாயிகளுக்குப் பயன்படும்படி செய்தால், அது மிகவும் நலமாக இருக்குமென்று கூறிக்கொள்கிறேன்.

மேலும் விவசாயிகள் இவ்வாண்டு செலுத்தக்கூடிய கடன்களைச் செலுத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் அளிக்க ஏற்பாடுகள் அரசாங்கம் செய்துகொண்டிருக்கிறது என்பதை அறிகிறேன். இருந்தாலும் கூட அங்கு தொடர்ந்து தீர்வை வசூலும் வரி வசூலும் நடந்து கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அதை நிறுத்தி வைத்து அதற்கடுத்தாற்போல் வரக்கூடிய தவணைகளில் தவணைகளை நீடித்துக் கொடுத்து 6 வருஷம் கொடுத்த தவணையை 7 அல்லது 8 வருஷமாகக் கொடுத்து வசூல் செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சிறு விவசாயிகளுக்குத் தேவையான கால்நடைகளைக் கொடுத்து அதன் மூலம் அவர்களுடைய முதலீடுகளை அதிகப்படுத்தி நல்ல முறையில் விவசாயம் செய்ய ஊக்கம் அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் உற்பத்தி செய்பவர்களுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு நியாயமான விலை கிடைப்பதற்கு ஏற்பாடு செய்தாலொழிய விவசாயிகள் முன்னேறுவதற்குச் சாத்தியமில்லை என்று ஞாபகப்படுத்த விரும்புகிறேன். சமுதாயத்திற்குத் தேவையான உணவு உடைக்கான மூலப் பொருட்களை விவசாயிகள் உற்பத்தி செய்த போதிலும் கூட, அவர்களுடைய நிலை மிகவும் மோசமான நிலையில் இருப்பதைக் காண்கிறோம். சமுதாயத்திற்கான தேவையை அவர்கள் உற்பத்தி செய்து கிடைத்ததை அவர்கள் அனுபவிக்க முடியாத சூழ்நிலையில் அவர்கள் மிகவும் ஏழ்மை நிலையில் இருப்பதை நாம் பார்க்கிறோம். இதற்குக் காரணம் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்காது அவர்கள் உபயோகிக்கும் பொருள்களுக்கு அதிக விலை கொடுத்து அவர்கள் நாளடைவில் வறுமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது தான் என்னுடைய மேலான கருத்தாகும்.

*திரு. மு. க. து. நடராசன்: தலைவர் அவர்களே, விவசாய மானியத்தின்மீது எனக்குப் பேச வாய்ப்புக் கொடுத்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை கரும்புப் பயிர் செய்வதில் மிக அதிகமாக அக்கறை உடையவர்களாக இருக்கிறார்கள். அந்த அளவுக்கும் அக்கறை கொண்டு கரும்பை நல்ல முறையில் பயிர் செய்தாலும் நல்ல தருணத்தில் வெட்டுவதற்கு இயலாத நிலையில் இருக்கிறார்கள். குறிப்பாக, ஒவ்வொரு ஆலைக்கும் ஒதுக்கப்பட்ட எல்லைகள் மறு மாவட்டத்தைத் தொடுகின்ற காரணத்தால், அடுத்த மாவட்டங்களில் இருக்கும் கரும்புகள் மறு பகுதியில் இருக்கும் ஆலைக்கு வெட்டிச் செல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. அவ்வாறு மறு பகுதியில் இருக்கிறது என்பது அந்த ஆலையினருக்குத் தெரியாமலே வெட்டிக் கொண்டு வரக்கூடிய நிலைமையில் எல்லைகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அந்த எல்லைகளை நல்ல முறையில் அடைத்துக் கொடுத்தால் கரும்பை உற்பத்தி செய்யும் விவசாயிகள் நல்ல முறையில் வாழ ஏற்றதாக இருக்கும்.

நம்முடைய மாநிலத்தில் திருச்சியும், தஞ்சையுந்தான் மிக அதிகமான விவசாயக் குடிகளைக் கொண்டதாக இருக்கிறது. அங்கு ஒரு விவசாயக் கல்லூரி அமைக்க ஏற்ற இடமாக முசிறி இருப்பதால், முசிறியில் தும்பளம் என்ற இடத்தில் சர்க்கார் நிலம் அதிகமாக இருப்பதால், அந்த இடத்தில் கல்லூரியை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத் துறையைப் பொறுத்தவரை சர்க்கார் துறையில் செயல்படுகின்ற விவசாயப் பண்ணைகள் இயங்கிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். இப்போது டைரக்டராக இருக்கக்கூடியவர்கள் எங்கள் பகுதியில் குடுமியான்மலை என்ற இடத்தில் விவசாயப் பண்ணையை ஆரம்பித்து ஓராண்டு காலத்தில் கிட்டத்தட்ட 80,000 ரூபாய் லாபம் கிடைக்கக்கூடிய நிலையில் இலாகா பணிபுரிவதைப் பார்க்கும்போது உண்மையிலேயே பாராட்டத்தான் வேண்டும். அந்த அளவுக்கு நம்முடைய அரசு விவ



சாயச் செயலரும் செயலகத்தில் இருக்கக்கூடிய அலுவலர்களும் அக்கறையோடு செயல்பட்டு வருவதைப் பார்க்கும்போது விவசாயிகளுக்குப் பல நல்ல காரியங்களைச் செய்து கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

தஞ்சையை ஒட்டிய லால்குடி பகுதிக்கு தஞ்சைக்குக் கொடுக்கும் சகல வாய்ப்புகளையும் அளித்தால் மேலும் நல்ல முறையில் விவசாயம் செய்ய ஏற்றதாக இருக்கும். லால்குடி பகுதி நீர்வளம் நிறைந்த பகுதி என்று நினைக்கிறார்கள் இருந்தாலும்கூட வானம் பார்த்து விளைகின்ற பகுதிகளும் அங்கு இருக்கின்றன. புள்ளம்பாடி ஒன்றியத்தில் பல பகுதிகளும், வாளாடியில் நாலைந்து கிராமங்களும், லால்குடி ஒன்றியத்தில் பத்துப் பன்னிரண்டு கிராமங்களும் புஞ்சை நிலங்களாக இருந்ததை நஞ்சையாக மாற்றியிருக்கிறார்கள். இருபது ஆண்டுகாலமாக அந்தப் பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சி வந்தார்கள். திடீரென்று போன ஆண்டிலிருந்து அவைகளுக்குத் தண்ணீர் தீர்வை விதித்திருக்கிறார்கள். அதை நீக்க அரசு முன்வர வேண்டும். அதோடு கிராமங்களில் இருக்கும் நீர்ப்பாசன கண்ணாறு வாய்க்கால்களை எல்லாம், ஊராட்சிகளிடத்தில் ஒப்படைத்து ஊராட்சிகளே அவற்றைச் சீர்திருத்தம் செய்தால், நல்ல முறையில் சாகுபடி செய்வதற்கு ஏற்புடையதாக இருக்கும்.

நிலச் சீர்திருத்தத்தால் அரசாங்கம் பாதிக்கப்படும் என்ற அச்சத்தை சிலபேர் தெரிவித்திருக்கிறார்கள். நான்கு கோடி மக்கள் வாழும் இந்த நாட்டிலே பத்தாயிரம்பேர் பாதிக்கப்பட்டால் மீதம் உள்ள குடிமக்கள் இந்த அரசைப் பாராட்டுவார்கள், போற்றுவார்கள் என்ற கருத்தைக் கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*ஹாஜி மா. மு. பீர்முஹம்மது: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மை, மீன்வள மானியக் கோரிக்கைகள் மீது முஸ்லிம் லீக்கின் சார்பில் பேச அனுமதித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய நாடு நிலவளமுடைய நாடு; கடல் அலை வளமுடைய நாடு; அதேநேரத்தில் மதிவளமும், செயல்வளமும் நிறைந்த அமைச்சர்களை, அரசைப் பெற்றிருக்கிற திருநாடு. இந்தத் திருநாட்டில் வேளாண்மை அபிவிருத்தியைச் செய்வதன் மூலந்தான் இந்த நாட்டு மக்களுக்கு நல் வாழ்க்கையைத் தேடித்தர முடியுமென்று இருப்பதைப்போலத்தான் கடலில் சென்று மீனைக் கரைக்குக் கொண்டு வருவதன் மூலம் இந்த நாட்டு மக்களுடைய உணவுப் பிரச்சினையிலே மீனவர்கள் சிறப்பாகப் பணிபுரிகிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எப்படி நிலத்திலே உழுகின்ற விவசாயி நச்சுப் பாம்பையும், தேளையும் கண்டு அஞ்சாமல் நிலத்திலே உழைப்பதன் மூலம் உணவுப்பொருளை உற்பத்தி செய்து தருகிறானோ, அதேபோன்று கடலில் சென்று மீன் பிடிக்கும் மீனவன் சீறிவரும் அலைகளையும் சுறாவையும், திமிங்கலத்தையும் கண்டு அஞ்சாமல் கரையில் வாழும் மக்களுக்காகக் கடலில் உற்பத்தியாகும் மீனைக் கொண்டுவந்து உணவுப் பிரச்சினையைத் தீர்க்கத் துணைபுரிகிறான். அந்த மீனவனுக்கு அரசு நல்ல முறையில் வேண்டுவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எப்படி நிலத்திலே விவசாயம் செய்கிற விவசாயிக்கு அரிசனங்கள் என்ற பெயரால் பல்வேறு சலுகைகளும், மானியங்களும் இருக்கின்றனவோ அதேபோன்று கடலில் சென்று உணவுப் பொருளைக் கொண்டு வந்து தருகின்ற மீனவர்களுக்கும் அந்தச் சலுகைகளைக் கொடுக்க இந்த அரசு கடமைப்பட்டிருக்கிறது.

விவசாயக் கடன் தொல்லைகளுக்கு ஆட்பட்டிருக்கும் விவசாயிகளைக் கடன் தொல்லையிலிருந்து மீட்பதற்காகச் சென்ற காலத்தில் விவசாயக் கடன் ரத்து மசோதா என்ற பெயரால் மசோதா கொண்டு வந்து அரசு நிறைவேற்றியது போன்று இரண்டு மூன்று தலைமுறைகளாக கடலில் சென்று மீன்பிடிப்பதற்கு கட்டுமரத்திற்காகக் கடனை வாங்கி வட்டியைக் கட்டித்தொல்லைக்கும் துயரத்திற்கும் ஆளாகியிருக்கும் மீனவனுக்குக் கடன்

[ஹாஜி மா. மு. பீர்முஹம்மது] [1970 ஏப்ரல் 1

தொல்லையிலிருந்து மீளும் முறையில் கடன் ரத்து மசோதாவை மீனவர்களுக்காகக் கொண்டுவர வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மீன்விசைப் படகுகளை ஆழ்கடலில் சென்று மீன் பிடிக்கத் துணைபுரிய வேண்டுமென்ற அடிப்படையில் வழங்குகிறோம். ஆனால் அவர்கள் ஆழ் கடலுக்குச் செல்லாது கரை ஓரத்தில் கிடைக்கும் மீன்களைப் பிடித்துத் திரும்புகிறார்கள். இது கட்டுமரத்தை வைத்துக் கொண்டு மீன் பிடிப்பவர்களுக்குத் தொல்லை விளைவிக்கும் வகையில் அமைந்திருக்கிறது. அதை நீக்க அரசு விசேஷ கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மீனவர்கள் கட்டுமரம் வாங்குவதற்கும், நைலான் வலை பெறுவதற்கும் 3500 ரூபாய் கொடுத்துதவுவதுடன் கட்டுமரத்திற்குத் தரமான மரம் நம் நாட்டில் கிடைக்கவில்லையாதலால், பக்கத்து நாடான இலங்கையில் மலைவேம்பு என்ற மரம் கிடைப்பதால் அதை நம்முடைய நாட்டிலுள்ள மீனவர்களுக்குக் கட்டுமரத்திற்குக் கொடுக்க அரசு முயற்சிக்க வேண்டுவதுடன் ஜப்பான், டென்மார்க், ஹாலந்து போன்ற நாடுகளில் தயாராகும் நைலான் வலைகள் நம்முடைய மீனவர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயக் கருத்தரங்குகள் மூலம் விவசாயத் துறைக்கும் விவசாயிகளுக்கும் ஒரு நல்ல பணியை நம்முடைய அரசு எப்படிச் செய்து வருகிறதோ அதேபோன்று மீனவர்களுடைய கருத்தரங்குகளை ஆங்காங்கே ஏற்படுத்துவதன்மூலம் கடலில் இருந்து கரைக்கு மீனைக் கொண்டு வரும் அந்தத் துறையில் புதிய முறைகளைக் கையாளவும், மீனவர்களுக்கு ஊக்கம் தரும் வகையிலும் நம்முடைய அரசு மீனவர்கள் கருத்தரங்கை ஆங்காங்கே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் அறிந்த வரையில் ஒரு மீனவர் கருத்தரங்கு நடைபெற்றிருக்கிறது. அதற்குப் பிறகு அது விடப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் தொடருகின்ற வகையில் திருநெல்வேலி மாவட்டத்தில் மீனவர் கருத்தரங்கை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம்முடைய விவசாயத் துறையைப் பொறுத்தவரையில் குழாய்க் கிணறுகளை அமைத்துத் தருவதன்மூலந்தான் பூமிக்கடியில் இருக்கும் நீரை வெளிக் கொணருவதன் மூலந்தான் வேளாண்மைத் துறையை வளப்படுத்த முடியும் என்ற வகையில் அதிலே அரசு விசேஷ கவனம் செலுத்துவதை நான் பாராட்டுகிறேன். திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரை ஒரே ஒரு பவர் டிரில்லர்தான், குழாய்க் கிணறு தோண்டுகிற இயந்திரந்தான் இருக்கிறது. அதுவும்கூட இப்பொழுது முறையாக செயல்படவில்லை. அதை விரைவில் செயல்படச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு ஒரு பவர் டிரில்லர் திருநெல்வேலி போன்ற விவசாய மாவட்டத்திற்குக் காணாது. அதனால் இன்னும் ஒரு பவர் ட்ரில்லர் அங்கு இருக்க அவசர அவசியமாக வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாப் மாநிலத்திற்கு நாங்கள் சென்றிருந்த நேரத்தில் அங்குள்ள அரசு இந்தப் பவர் ட்ரில்லர்களைப் பயன்படுத்தி குழாய்க் கிணறுகளை அமைத்துத் தருகிறார்கள். கிணறு வெற்றியடைந்தால் மூன்றில் ஒரு பகுதி மானியமாகக் கொடுத்துவிட்டு மீதி இரண்டு பகுதிச் செலவை நீண்ட காலக் கடனாகக் கொடுத்து விவசாயிகளுக்கு துணை புரிந்து வருகிறது. அப்படி வெற்றியடையவில்லை என்றால் அதற்கான செலவு அனைத்தையும் அரசே ஏற்றுக் கொள்கிறது. நமது மாநிலத்தில் குழாய்க் கிணறுகள் அமைக்கிற இடங்களில் நீர் கிடைக்கிற வகையில் வெற்றி ஏற்படுமானால் ஒரு பகுதி மானியமாகவும் இரண்டு பகுதி கடனாகவும் ஆக்கிக் கொள்ளலாம். அப்படி வெற்றி பெறவில்லை என்றால் நஷ்டம் அனைத்தையும் அரசே ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பச்சையாறு அணைக்கட்டுத் திட்டம் ஆய்வு முடிந்து அரசினர் ஒப்புதலுக்கு வந்திருக்கிறது. அடுத்த நிதி ஆண்டில் அதற்கு நிதி ஒதுக்குவதன் மூலம் விரைவில் அதைச் செயல்படச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1970 ஏப்ரல் 1] [ஹாஜி ம. மு. பீர் முஹம்மது]

பூச்சி மருந்து தெளிக்கும் வகையில் அரசினர் கொடுத்து வந்த மானியத்தை நிறுத்திவிட்டார்கள். அப்படி நிறுத்திவிடுவதன் மூலம் உணவு பொருள்களின் உற்பத்தி குறைந்துவிடலாம். ஆகவே, அந்த மானியத்தை மீண்டும் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும். அதோடு பரவலாக விமானம் மூலம் பூச்சி மருந்துகள் தெளிப்பதற்குரிய வசதியையும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைக் கூறி முடித்துக்கொள்கிறேன். மணிமுத்தாறு மேல் மட்டக் கால்வாய்ப் பகுதிகளில் ஒரு குளம் பாய்ந்து நாலைந்து குளங்களுக்கு மறுகால் வந்த பின்னர்தான் நீர் பாய்கிற நிலை இருக்கிறது. ஒவ்வொரு குளத்திற்கும் தனிக் கால் என்ற நிலை இருக்குமானால் நீர் நிறைந்து வருகிறபோது குளங்கள் எல்லாம் நிறைய வாய்ப்பு இருக்கிறது. அப்படித் தனிக்கால் வெட்டுகிற செலவை அந்தப் பகுதியிலுள்ள விவசாய மக்கள் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராயிருக்கிறார்கள். ஆகவே, அதற்கு அரசு உறுதுணை புரிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 69 லட்சம் டன் உணவுப் பொருளை உற்பத்தி செய்வதை தன் லட்சியக் குறியீடாக வைத்திருக்கிறது தமிழக அரசு. அதற்குத் துணை புரியும் வகையில் பழந்தொளி விவசாயம் செய்வதற்குரிய வாய்ப்பை அளிக்க வேண்டும். மருதூர் மேலக்கால் பகுதிக்கு பழந்தொளி வாய்ப்பு கிடைக்காததொரு சூழலை ஆதிக்க அரசியல் செல்வாக்கால் சொல்வாக்குப் பெற்றவர்கள் செய்துள்ளார்கள். ஆகவே மருதூர் மேலக்கால் பகுதிக்கும் பழந்தொளி விவசாயம் செய்ய வாய்ப்பளிக்க வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

நாம் பழச் சாகுபடியை அதிகமாகச் செய்வதன்மூலம் பழ உற்பத்தியை பெருக்கவேண்டும். மலைப்பகுதிகளில் நாம் பழச் செடிகளையும், மரங்களையும் அதிகமாக வளர்க்கலாம். கொல்லி மலை, பச்சை மலை, பவழ மலை, பொதிகை மலை, ஜவ்வாது மலை, கல்வராயன் மலை, கொடைக்கானல், நீலகிரி மலை ஆகிய இடங்களில் ஆரஞ்சு, கொய்யா, சப்போட்டா, மா, பலா, வாழை போன்றவைகளை நல்ல முறையில் பயிர் செய்வதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன. அதே நேரத்தில் அங்குள்ள மலை ஜாதி மக்களை முன்னேற்றுவதற்கும் துணைபுரியும் ஒரு நிலை இருக்கிறது. ஆகவே அரசு பழ உற்பத்தியைப் பெருக்குவதற்கு என்று ஒரு சிறப்புத் திட்டத்தை தீட்டி பழ உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் அங்குள்ள மலைஜாதி மக்களுக்கும் நலன் தேடுகிற முறையில் துணை புரியவேண்டும் என்று கூறி நிறைவுபடுத்திக்கொள்கிறேன். நன்றி.

*திரு. சோ. கருணைநாதன் : தலைவர் அவர்களே, வேளாண்மை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மானியக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நமது மாநிலத்தில் உருளைக்கிழங்கு பயிராகும் பரப்பளவு 31,000 எக்கர். இதில் நீலகிரியில் 19,000 எக்கர் பயிராகிறது. லேட் ப்ளைட் என்ற நோயின் காரணமாக உருளைக்கிழங்கு பயிராகும் பரப்பளவு குறைந்து கொண்டே வருகிற காரணத்தினால் 1965–66-ல் கொடைக்கானலில் 2,000 எக்கர் கூட இல்லை என்ற நிலைமை இருந்தது, 1968–69-ல் 12,000 எக்கராகவும், 1969–70-ல் 13,000 எக்கராகவும், உருளைக்கிழங்கு பயிரிடப்படாத ஊசூர் பகுதியில் 1968–69-ல் 151 எக்கராகவும், 1969–70-ல் 300 எக்கராகவும் பயிரிடப்பட்டுள்ளது என்பதைப் பாராட்டுகிறேன். நீலகிரியில் இருந்த 10,000 எக்கர் குறைந்து சேர்ழிவதை அரசு அறியும் என்று நினைக்கிறேன். ஆகவே விவசாயிகளுக்கு உயர்ந்த ரக விதைகள், உரம் போன்றவைகளை தருவதோடு நோயில் இருந்து பயிரைக் காப்பாற்ற உரிய நேரத்தில் மருந்து வகைகளையும் தருவதற்கு அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரியில் உருளைக்கிழங்கு விற்பனையாகும் முறையில் ஒரு உருளைக்கிழங்கு வத்தல் தொழிற்சாலை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீலகிரி மாவட்டத்தில் அங்குள்ள சர்க்காருக்குச் சொந்தமான தரிசு நிலங்களை யுத்த காலத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்க விவசாயத்திற்காக லீஸ்க்கு விட்டார்கள். லீஸ்க்கு எடுத்த விவசாயிகள் அங்கு நலலமுறையில் உருளைக்கிழங்கை சாகுபடி செய்து வந்தார்கள். அதோடு கூட ராகி, சாமை போன்றவைகளையும் தங்களுக்கு வேண்டிய அளவிற்கு விளைவித்துக் கொண்டிருந்தார்கள். அப்படி மகிழ்ச்சியோடு இருந்த விவசாயிகள் இன்று அந்த நிலங்கள் இல்லாமல் இருக்கிறார்கள். பல புரட்சிகரமான திட்டங்களை ஏற்படுத்துகிற இந்த அரசு இந்த விஷயத்தில் தயக்கம் காட்டுவது ஏன் என்று புரியவில்லை. ஆகவே அந்நிலங்களை திரும்ப விவசாயத்திற்குக் கொடுக்கவேண்டுமென்று அரசை கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காய்கறிகள். சென்னைக்கு நாள் ஒன்றுக்கு 600 டன் போதாமல் மேலும் 200 அல்லது 300 டன் அதிகப்படியாகத் தேவைப்படுவதாக நான் அறிகின்றேன். ஆகவே, காய்கறி உற்பத்தியைப் பெருக்கும் விதத்தில் எங்கள் மாவட்டத்தில் செக் டாம்களை அதிகமான அளவில் கட்டிக் கொடுத்து விளைகின்ற காய்கறிகளை கெட்டுப்போகாமல் வைத்திருப்பதற்கு நீலகிரியில் ஒரு குளிர்பதன அறையும் அதேபோல் சென்னை நகரில் ஒரு குளிர் பதன அறையும் அமைத்துக் கொண்டால் காய்கறிகள் கெட்டுப்போகாமல் அவற்றை நல்ல முறையில் மக்களுக்கு வழங்க முடியும்.

அடுத்த ஆண்டில் கற்பூரத் தைலம், ஜெரேனியம், தேன் இவற்றை தரம் பிரிக்கும் ஆய்வுக்கூடத்தை ஏற்படுத்த அரசு முன்வந்துள்ளதை நான் பாராட்டுகிறேன். ஜெரேனியம் உற்பத்தியை எப்படிப் பெருக்குவது என்பது அங்குள்ள மக்களுக்கு சரியாகப் புரியவில்லை. ஆகவே அது பற்றி விளக்கிக் கூறினால் அதன் உற்பத்தியை நாம் அதிகப்படுத்த முடியும்.

அடுத்தபடியாக, நீலகிரி மாவட்டத்தில் கொக்கோ நல்லமுறையில் விளைகின்றது என்பதை அரசு உணர்வதாக அறிகிறேன். கொக்கோ பயிரிடும் திட்டம் ஒன்றை ஏற்படுத்தி மதுரையில் 2000 ஏக்கர், கன்னியாகுமரியில் 1000 ஏக்கர் என்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிகிறேன். நீலகிரியில் ஆனைகட்டி, தெங்குமராடா பகுதிகளில் அரசுக்கு சொந்தமான நிலங்கள் இருக்கின்றன. அங்கு கொக்கோ பயிரிட்டால் நல்லமுறையில் விளையும். ஆகவே, இத்திட்டத்தில் அப்பகுதிகளையும் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். விவசாய மக்களுக்கு தமிழக அரசு பலவிதமான உதவிகள் செய்து வருகின்றன. இன்று ஒரு புரட்சிகரமான எண்ணம் தோன்றியிருக்கிறது எங்கள் மாவட்ட மக்களிடத்தில். தேயிலை விவசாயம் செய்யும் விவசாயிகள் மத்திய அரசு விதித்துள்ள வரி காரணமாக அந்த விவசாயத்தை செய்ய அஞ்சுகிறார்கள். அதற்காக எல்லா கட்சிகளைச் சேர்ந்தவர்களும் சேர்ந்து ஒரு மாபெரும் ஊர்வலம் நடத்தி மாவட்ட கலெக்டரிடம் ஒரு மகஜரை தந்திருக்கிறார்கள். தேயிலை விவசாயத்தைச் செய்யவேண்டுமா வேண்டாமா என்ற நிலையில் அங்குள்ள தேயிலை விவசாயம் செய்துவரும் விவசாயிகள் இருக்கிறார்கள். ஆகவே இந்த அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்து அந்த வரியில் இருந்து விலக்கு அளிக்கும்படி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்..

* திரு. எ. பட்டாபி நாயுடு : தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கை மீது எங்கள் கட்சி சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

வேளாண்மைத் துறை மிக மிக முக்கியமான ஒரு துறையாகும். அதற்கு உறுதுணையாக இருப்பது கால்நடை இலாகாவும், நீர்ப்பாசனத் துறையும் ஆகும். இந்த மூன்று துறைகளும் ஒருங்கே இணைந்து * செயல்





பட்டால்தான் வேளாண்மை நல்லமுறையில் செயல்படமுடியும். இன்று நம் மாநிலத்தை எடுத்துக்கொண்டால் இங்கு ஜீவநதி எதுவும் கிடையாது. பருவ மழையையே எதிர்நோக்கி வாழவேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். பருவ மழை தவறிவிட்டால் நாட்டை பஞ்சம் சூழ்ந்து கொண்டு விடும். அந்நிலையில்தான் நாம் இன்று இருக்கிறோம். அதைப் போக்க வேண்டுமென்றால் பருவ மழை காலத்தில் மழை பெய்து வருகிற வெள்ளம் ஓடி கடலில் சென்று விழுந்துவிடுவதை தடுத்து நிறுத்தி வைக்கவேண்டும். அதற்கு எங்கெங்கெல்லாம் அணைகள் கட்ட வாய்ப்பு உள்ளதோ அங்கெல்லாம் அணைகள் கட்டப்படவேண்டும். எங்கெங்கெல்லாம் ஏரிகளைக் கட்ட வாய்ப்பிருக்கிறதோ அங்கெல்லாம் ஏரிகளைக் கட்ட வேண்டும். எங்கெங்கெல்லாம் சிறு சிறு தடுப்புகளைக் கட்ட வாய்ப்பிருக்கிறதோ அங்கெல்லாம் சிறு சிறு தடுப்புகளைக் கட்டவேண்டும். அப்படியெல்லாம் கட்டி மழைத் தண்ணீரை தேக்கி வைத்தால்தான் நம் விவசாயம் நல்லமுறையில் முன்னேற்றமடைய முடியும். அப்போது பருவமழை தவறினாலும் பஞ்சம் என்பது இல்லாதிருக்கக்கூடிய ஒரு நிலை ஏற்படும்.

அதுமட்டுமின்றி, இந்த மாநிலத்திலே இன்றையதினம் ஏரிகளெல்லாம் தூர்ந்து போயிருக்கின்றன. ஒரு ஏரிக்கு, 6 மாதங்களுக்கு அதனுடைய கொள் அளவு என்றிருந்தால் இன்றைக்கு இரண்டு மாதங்களுக்குக்கூட தண்ணீர் அதில் இருப்பது இல்லை. அப்படியிருந்தால் விவசாயம் எப்படி முன்னேற முடியும்? ஆகவே, தூர் எடுக்கும் இயந்திரங்கள் நம்முடைய மாநிலத்தில் அதிகமாகக் கிடையாது. ஏரிகளெல்லாம் தூர் எடுக்கப்பட்டால்தான் விவசாயம் நல்ல முறையிலே செயல்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பிற 12-

நாம், இன்றைக்குக் கொடுக்கும் புள்ளிவிவரங்களைப் பார்க்கும் பொழுது, எல்லாம் நஞ்சை நிலங்களை அடிப்படையாகக் கொண்டுதான் இந்த அரசு செயல்பட்டுக்கொண்டு வந்திருக்கிறது. பெரும்பான்மையான பரப்புள்ள புஞ்சை நிலங்களைப்பற்றி இன்றைக்குக் கவனம் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. இன்றையதினம் நம்முடைய நாட்டில் இவ்வளவு உற்பத்திப் பெருக்கம் செய்திருந்தும்கூட நம் நாட்டிற்குப் போதுமான உணவு உற்பத்தியைச் செய்யவில்லை என்றுதான் நமக்குத் தோன்றுகிறது. அதற்குக் காரணம் என்னவென்றால், இன்றைக்கு புஞ்சை நிலங்களில் இருக்கும் உற்பத்தி குறைந்து கொண்டே போகிறது அன்று விளைந்ததைவிட இன்றைக்கு 40 சதவிகிதம்தான் புஞ்சை நிலங்களிலே உற்பத்தியிருந்து கொண்டிருக்கிறது. காரணம், கால்நடைகள் குறைந்துவிட்டன. ஆகவே, விவசாய உற்பத்தியும் குறைந்துவிட்டது. முன்பு அமைச்சராயிருந்த, காலஞ்சென்ற திரு. கோவிந்தசாமி அவர்கள் இதற்கு ஒரு நல்ல திட்டத்தைத் தீட்டியிருந்தார்கள். அந்தத் திட்டம் அவர் மறைந்ததும் அதுவும் மறைந்துவிட்டது என்றுதான் நினைக்கிறேன். அவர் என்ன திட்டம் தீட்டியிருந்தார் என்றால், இன்றைக்கிருக்கும் எஸ்டேட் காடுகளையெல்லாம் அந்தந்தப் பஞ்சாயத்துக்குக் கொடுத்து, அதிலே ஆடுமாடுகளை மேய்க்க வாய்ப்பு செய்து கொடுக்கிறேன் என்று வாக்குறுதி அளித்திருந்தார்கள். அதைச் செயல்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் இன்று அந்த நிலை என்னவாயிற்று, இன்னும் அது செயல்படவில்லை. அதை மாண்புமிகு அமைச்சரவர்கள் இன்றைக்காவது நினைவில் வைத்து, ஆடுமாடுகள் மேய்ப்பதற்காக நல்ல வாய்ப்புகளைச் செய்து கொடுத்தால், புஞ்சை நிலங்கள் நன்றாக விளைச்சல் தரும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எப்படியென்றால், ஒரு விவசாயிக்கு நாம் என்னதான் செயற்கை உரம் கொடுத்தாலும் நல்ல வாய்ப்பிருப்பதில்லை. குறைந்தது ஒரு ஏக்கருக்கு 200 ரூபாய்க்கு உரம் போட வேண்டியிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் அந்த விவசாயியிடம் ஆடுமாடுகள் இருக்குமேயானால், அவன் இராக்காலங்களிலே அந்த நிலங்களிலே நிறுத்திவைத்தால் நல்ல உரமாக அமைந்து, நல்ல பலன்கள் கிடைக்கும். அதேபோல் இன்றிருக்கும் நிலையிலே பார்க்கும்பொழுது அதையெல்லாம் நாம் செய்துகொடுத்தாலொழிய விவசாயிகள் எந்த வகையிலும் முன்னேற முடியாது. இந்த நஞ்சைநிலத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு நாம் வாழ முடி

யாது. புஞ்சை நிலங்கள் அதிகமாக இருக்கின்றன. இன்றைக்கு நம்முடைய நாட்டிலே சோளம், கம்பு போன்ற பொருள்கள் குறைந்துகொண்டு போகின்றன. இந்தக் காரணத்தினுல்தான் எவ்வளவு உற்பத்தியைப் பெருக்கினுலும் பஞ்சம் தாண்டவமாடிக்கொண்டிருக்கிறது என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்த்து, புஞ்சை நிலங்களிலும் சற்று அக்கறை காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதைப்போல, முன்பு, மறைந்த அமைச்சரவர்கள் என்ன சொன்ஞர்கள் என்ருல், காடுகளிலே மரங்கள் இல்லாத இடங்களையெல்லாம் விவசாயத்திற்காக, விவசாய உற்பத்திக்காகக் கொடுக்கிறேன் என்று சொல்லியிருந்தார்கள். அதுவும் எந்த நிலையில் இன்றைக்கிருக்கிறது என்று தெரியவில்லை. அதையும் செயல்படச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

விவசாயிகளுக்கு உரம் வழங்கப்படுகிறது. உரம் கொடுக்கும் நேரத்தில் 6 மாத தவணை என்ற முறையில் கொடுத்திருக்கிருர்கள். 6 மாத தவணை என்ருல் விவசாயிகளுக்கு 6 மாதம் என்று அவர்களுக்கு ஒன்றும் தெரிவதில்லை. அந்த 6 மாதம் தவறிவிட்டால், ஒரு நாள் அதிகமாக ஆகிவிட்டாலுமகூட அவனுக்கு வட்டி அதிகமாகப் போடுகின்ருர்கள். அந்த வட்டியை எந்த அளவிற்குப் போடுகிருர்கள் என்று சொன்ஞல், 130 ரூபாய கடஞகக் கொடுத்திருந்தால் நாற்பத்தியெட்டே முக்கால் ரூபாய் வட்டியாகப் போடுகின்ருர்கள். இந்த அரசு மக்களினுடைய நலனைக் குறித்திருக்கிறது என்று சொல்லிக்கொண்டு இன்றைக்கு விவசாயிகளுக்குக் கொடுக்கும் 130 ரூபாய் கடனுக்கு நாற்பத்தியெட்டே முக்கால் ரூபாயை வட்டியாகப் போடுகிருர்கள். இது மிகவும் அதிகமான வட்டியாகும். மார்வாடி வட்டியையும் மிஞ்சிவிட்டது. அரசு என்ன மார்வாடி போல வட்டிக் கடையா என்று எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. ஆகவே, இத்தகைய முறையிலே வசூலிப்பதை நிறுத்திவிட்டு, அதற்குண்டான அளவிற்கு, அதாவது 5½ சதவிகிதம் என்று சொல்லப்படுகிறது, அந்த 5½ சதவிகிதத்தை மட்டும் வாங்கிக்கொண்டு மீதியை அவர்களிடம் வசூல் செய்யாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதைப்போல நம்முடைய ஜில்லாவிலே ஏராளமானவர்கள் பாங்கு கடன் பெற்றிருக்கிருர்கள். கூட்டுறவுச் சங்கங்களிலே பெற்றிருக்கும் கடனைத் தற்போது திருப்பிக்கொடுக்கச் சக்தியற்றவர்களாகயிருக்கிருர்கள். அதற்குக் காரணம், சென்ற ஆண்டு மழையில்லாத காரணத்தால், அங்கு வறட்சி ஏற்பட்டு, விவசாயத்தில் நஷ்டம் வந்ததால் அவர்களால் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் இருந்துகொண்டிருக்கிருர்கள். அப்படியிருக்கும் விவசாயிகளை, இப்பொழுது அந்தப் பணத்தை திருப்பிச் செலுத்தும்படி வற்புறுத்துகிருர்கள். அந்த வற்புறுத்தலுக்கு அவர்கள் ஆளாகி, இன்று ஆடுமாடுகளை விற்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிருர்கள். அந்த ஆடுமாடுகளையும் விற்றுவிட்டால் இன்னும் அந்த விவசாயிகளின் நிலைமை மிகமிக மோசமான நிலையை அடைந்துவிடும். ஆகவே, அதைப் பார்த்து இந்த அரசு எந்த வகையிலும் இந்த ஆண்டு அந்தக் கடனை வசூல் செய்யாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று மிகப் பணிவன்போடு கேட்டுக்கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பளித்தமைக்காக உதவித் தலைவரவர்களுக்கு நன்றியைச் சொல்லிக்கொள்ளுகிறேன், வணக்கம்.

*திரு. ஈ. எம். நடராசன் : சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, விவசாய மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இன்றைக்கு நம்முடைய நாட்டிலே பசுமைப் புரட்சித் திட்டத்தைப்பற்றி அதிகமாகப் பேசுகின்ருர்கள் பசுமைப் புரட்சித் திட்டம் வெற்றியடைய வேண்டுமென்ருல், விவசாயம், மின்சாரம், கூட்டுறவு ஆகிய மூன்று துறைகளிலேயும் நாம் வெற்றியடைந்தாக வேண்டும். பசுமைப்புரட்சித் திட்டத்தில் விவசாயத்தின் முன்





னேற்றம் மிகவும் முக்கியமானது என்று எல்லோரும் கருதுகிருர்கள். தமிழ்நாட்டிலேயுள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தமிழக அரசு எவ்வளவோ உதவிகளையும், ஆலோசனைகளையும், சலுகைகளையும் அளித்து வருகிறது. என்ருலும்கூட, விவசாயப் பெருங்குடி மக்களின் முன்னேற்றம் நாம் நினைக்கும் அளவிற்கு அடையவில்லை. அவர்களின் குறைகளையெல்லாம் நாம் கண்டறிந்து, அவர்களின் முன்னேற்றத்திற்கான வழிவகைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கூறிக்கொள்ளுகின்றேன்.

விவசாயப் பெருங்குடி மக்கள் அதிக அளவிற்கு லாபமடையக் கூடிய அளவில் அவர்களுக்கு அதிகப்படியான விளைச்சல் தரும் ஐ.ஆர்.8, எ.டி.டி. 27 என்ற நெல் வகைகளை விவசாயப் பெருங்குடி மக்கள் அதிக அளவில் பயிரிடத் தமிழக அரசு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். மேலும் விவசாயப் பெருங்குடி மக்கள் கரும்பு, மஞ்சள், பருத்தி போன்ற பயிர் வகைகளைப் பயிரிடும் அளவிலேயும் அவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

விவசாயப் பெருங்குடி மக்கள் எங்கள் பகுதியில் கரும்பை அதிகமாகச் சாகுபடி செய்கிருர்கள். அவர்கள் சாகுபடி செய்யும் அந்தக் கரும்புகளை எடுத்துச் செல்வதற்கு ரோடு வசதிகள் கிடையாது. ஆப்பக்கூடல் சர்க்கரை ஆலை என்றிருக்கிறது. விவசாயப் பெருங்குடி மக்கள் அந்த ஆலைக்குக் கரும்பை எடுத்துச் செல்ல வேண்டுமென்ருல் நல்ல ரோடுகள் இல்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள். எனவே, ஆப்பக்கூடல் சர்க்கரை ஆலைக்குச் செல்லும் சாலையையும் அந்தியூர் நகரத்தில் தவிட்டுப்பாளையம் ரோட்டையும், கரும்பு அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் உடனடியாக மேற்கொண்டு செயல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மேலும் விவசாயத் தொழிலாளர்கள் போதிய அளவுக்கு வருமானம் இல்லாமல், வாழ்க்கைத் தரத்தில் மிகவும் கீழ்மட்டத்தில் இருக்கிருர்கள். அவர்களின் வருமானத்தை அதிகப்படுத்த கோழிப்பண்ணை, பால்பண்ணை போன்றவைகளில் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். விவசாயப் பெருங்குடி மக்களுககுத் தேவையான டிராக்டர்கள், கிணறு வெட்ட போரிங் மெஷின்கள் போன்றவைகள் எளிதில் கிடைக்க வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலத்தைப் பண்படுத்தவும், நிலத்தைச் சமன்படுத்தவும் புல்டோசர்கள் எங்கள் பகுதியில் கிடைப்பதில்லை. எனவே, அந்த புல்டோசர்கள் கிடைப்பதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தேவையான இரசாயன உரம், மருந்துகள், பொறுக்கு விதைகள் ஆகியவைகள் காலதாமதமில்லாமல் கிடைக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், வறட்சி, வெள்ளம், புயல் போன்றவற்ருல் பயிர்கள் அழிகின்றன. எனவே, பயிர் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் திட்டத்தை அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். மக்கள் விரைவில் எதிர்பார்க்கும் வறட்டுப்பள்ளம், வழுக்குப் பாறை, காட்டூர் திட்டம் ஆகிய திட்டங்களை விரைவில் மேற்கொள்ள வேண்டும். எங்கள் பகுதியில் வேளாண்மைக்கு மின்சாரத் தேவை மிக மிக அவசியம். பவானி, ஈரோடு, கோபி தாலுக்காக்களில் 98,000 கிணறுகள் இருக்கின்றன. ஆனுல் 18,000 கிணறுகளுக்குத்தான் மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

எங்கள் பகுதியில் ஆண்டு ஒன்றுக்கு 900 கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த முறையில் சென்ருல், இன்னும் 100 ஆண்டுகள் ஆகும், 98,000 கிணறுகளுக்கும் மின் இணைப்பு கொடுப்ப

தற்கு. ஆகவே, இவ்வளவு காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்க மின் இணைப்புக் கொடுப்பதை அதிகரிக்க எங்கள் பகுதியில் ஈரோடு லிஸ்டத்தை ஏற்படுத்தித் தரவேண்டும். பவானியில் டிராக்டர் சர்வீஸ் ஒன்று ஏற்படுத்த வேண்டும். எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** தலைவர் அவர்களே, இந்த மானியத்திற்கு இதற்கு முன்பு எவ்வளவு ஒதுக்கப்பட்டது, ஒவ்வொரு வகைக்கும் எவ்வளவு ஒதுக்கப்பட்டது, இந்த வருடம் கூட ரூ. 5 லட்சம், இல்லையென்று சொன்னால் ரூ. 50,000 என்ற அளவுக்கு டிமாண்டு வருகிறதே தவிர, நடைமுறையில் விவசாயத்தை எப்படிப் பெருக்குவது என்பதற்கு ஒரு நல்ல ஸ்கீம் போட்டு, பேஸ்டு புரோகிராம் போட்டு ஏதாவது செய்திருக்கிறார்களா என்றால், கொஞ்சம் கவனக் குறைவு இருக்கிறது என்பதைத்தான் பார்க்கிறோம். முறையாகப் பார்ப்போமானால், நிலத்தை சிறு சிறு துண்டுகளாகச் செய்வதினாலும், நிலத்தை வைத்துக்கொள்வதற்கான லீலிங்கைக் குறைப்பதினாலும், விவசாயத்தைப் பெருக்கிவிடமுடியுமா என்றால், அதிலே பிராக்டிகலாக சில சிக்கல்கள் வரும். ஏனென்று சொன்னால், சரியாக பாடுபடக்கூடியவர்கள் கையில் நிலம் போய்ச்சேரவில்லை என்று சொன்னால், உற்பத்தி ஆகாது, கொண்டுவருகிற சட்டமும் நடைமுறைக்கு வராது. அமெரிக்கா, ரஷ்யாவில் நிலைமை என்னவென்று சொன்னால், அவர்களுடைய சூழ்நிலையில், ஜனத்தொகை குறைவாக இருப்பதினாலும், நிலம் அதிகமான பரப்பு அளவிலே இருப்பதினாலும், அதை மெகனைஸ் பண்ணி விவசாயம் செய்தால், 1,000 ஏக்கர், 2,000 ஏக்கர் விவசாயம் செய்தால், அதனால் நல்ல மகசூல் கிடைக்கும் என்பது அவர்கள் அபிப்பிராயம். அதே நேரத்தில் ஜப்பான் நாட்டில் வீட்டிற்குப் பின்னால் இருக்கக்கூடிய சிறு சிறு துண்டு நிலமாக இருந்தால்கூட, மிக அருமையாக அதிகமாக மகசூலை எடுக்கலாம் என்று அவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். அதையும் நாம் மறுக்க முடியாது.

இந்திய நாட்டில் நிலைமை எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். மற்றைய அயல் தேசங்களில் குளிர் பிரதேசங்களில் வருடம் பூராவும் பயிர் செய்ய முடியாத நிலை இருக்கிறது. நம்முடைய நாட்டில் வருடம் பூராவும். எல்லாக் காலங்களிலும் விவசாயம் செய்வதற்கு நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன. அதை உபயோகப்படுத்தி, அதற்கு ஊக்கம் கொடுத்து, நமது அரசாங்கம் என்ன விதத்தில் விவசாயத்தைப் பெருக்கவேண்டும் என்பது பற்றி ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்

பொதுவாக, இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமை என்னவென்றால், பெரிய ஜனத்தொகை கொண்ட கிராமங்களிலுள்ள விவசாயத்தை நாடியிருப்பவர்களின் வாங்கும் சக்தி பெருகி, வாழ்க்கை நிலை உயர்ந்துவிட்டால், இத்தனை டிபார்ட்மெண்டுகள் தேவையில்லை, இத்தனை டிமாண்டுகள் தேவையில்லை. இந்த நிலையை முக்கியமாக வைத்துப்பார்க்கும்பொழுது ரூரல் அக்ரிகல்சரை இம்ப்ரூவ் செய்வதற்கான முறையைப்பற்றி அரசாங்கமும், தனிப்பட்டவர்களும், இரண்டு விதத்திலும் திட்டம் தீட்டவேண்டும். அரசாங்கத்தின் சார்பிலே ரூரல் சர்வீஸிங் யூனிட்ஸ் ஆங்காங்கு அமைத்து, அவர்களுடைய வேலை என்னவென்று சொன்னால்—இங்கு இர்ரிகேஷனையும் சேர்த்து சொல்லவேண்டிய நிலைமைதான் வருகிறது—வாடர் மானேஜ்மெண்டு, அதாவது இருக்கிற தண்ணீரை பகிர்ந்து கொள்வது, எந்த முறையில், எந்தப் பயிருக்கு எவ்வளவு தண்ணீர் வேண்டுமோ அந்த அளவில் விடக்கூடிய நிலைமையில் ஏற்பாடு செய்யவேண்டும். அதற்கான ஸ்கீம்ஸ் வேண்டும்.

நமது மகாணத்தைப் பொறுத்த மட்டில், எந்த அளவுக்கு புஞ்சை நிலம் இருக்கிறது, என்ன நிலையில் இருக்கிறது, மண் வளம் எப்படி, காடுகள் எத்தனை இருக்கிறது, என்பது பற்றியெல்லாம் டோபாஸ்கெட்ச் கிளீனை நமது அரசாங்கத்தின் கையில் இருக்கவேண்டும். ஒரு இடத்தை எடுத்துக்கொண்டால், அங்கு என்ன டெபிஷியென்ஸி, அந்த





நிலத்தில் எந்தப் பயிரைப் போட்டால் வரும் என்பதெல்லாம் கையில் இருக்கவேண்டும். அதே மாதிரி ஸாயில் அனலிஸிஸ் சர்வீஸ் யூனிட்களில் அவர்கள் செய்யவேண்டும். ஃபார்ம் டெக்னாலஜியைப் பொறுத்த மட்டில், எங்கு பார்த்தாலும் பாலிடெக்னிக்ஸ் என்று சொல்லி, இல்லாத முறைகளையெல்லாம் மேல் நாட்டிலிருந்து கொண்டுவந்து, நவீன ரகத்தை உற்பத்தி செய்து புஸ்தகங்களிலோ, பட்ஜெட் உரைகளிலோ போடுகிறோம். உண்மையாக இருக்கக்கூடிய விவசாயத்தைப் பெருக்கக்கூடிய முறையிலே, போஸ்டு மெட்ரிகுலேஷன் கோர்ஸ், அக்ரிகல்சர் பாலிடெக்னிக்ஸை நல்ல விதத்தில் ஆங்காங்கு ஏற்படுத்தி, அவைகளுக்கு மிகுந்த ஆதரவு காட்டவேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். அங்கே ஃபார்ம் டெக்னாலஜி, ஹை யீல்டிங் வெரைடி ஸீட்ஸ், பெர்டிலைஸர்ஸ், இன்புட்ஸ், கிராப் ரொடேஷன் இவைகளைப் பற்றியெல்லாம் கற்றுக்கொடுக்கவேண்டும். ஒரு நிலத்தில் ஒரு பயிரைப் போட்டுவிட்டால், சில கெமிகல் டெபிஷியன்ஸீஸ் ஏற்பட்டுவிடும். அப்பொழுது அந்த நிலத்தில் வேறு என்ன பயிர் போட்டால் வரும் என்பதைப் பற்றியெல்லாம் விவசாயிகளுக்கு அரசாங்கம் யோசனை சொல்லித் தரவேண்டும். இம்ப்ரூவ்டு பார்ம் இம்ப்லிமெண்ட்ஸ் என்ன முறையில் நாம் எதை உபயோகப்படுத்தினால் நல்லது என்று கண்டறிந்து, அதையெல்லாம் நாம் அங்கே புகுத்தவேண்டும். அக்ரிகல்சர் பாலிடெக்னிக்ஸ் ஃபார்ம் ஓரியண்டட்டாக இருக்கவேண்டும். அதில நல்ல முறையில் அதிக கவனம் செலுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதிலே அவர்களுக்கு டிரையினிங் கொடுக்கவேண்டும். மெகனைஸ்டு ஸ்ப்ரேயர்ஸ், எலெக்ட்ரிகல் பம்பு செட்ஸ், மெயின்டெனன்ஸ் ஆஃப் ஃபார்ம் மெஷினரி இவைகள் சம்பந்தமாக, இந்த முறைகளெல்லாம் பற்றி நல்ல விதமாக அவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன.

அதே நேரத்தில் தனிப்பட்ட முறையில், அரசாங்கம் அதிகமாக பணம் செலவிட்டாலும் கூட, அக்ரிகல்சரல் கஸ்டம் சர்வீஸ் ஏற்படுத்த, பாங்குகள் மூலம், அக்ரிகல்சரல் ரீபினான்ஸ் கார்ப்பரேஷன், ஸ்டேட் பாங்கு இவைகள் மூலம் பணத்தைக் கொடுத்து, இன்ஸ்டிடியூஷன் அல்லது ஆர்கனைஸேஷன் அல்லது இண்டிவிஜுவல் இவர்களுக்கு நாம் ஊக்கத்தை அளிக்க வேண்டும். அவர்கள் என்ன செய்யவேண்டுமென்றால், டிராக்டர்ஸ், புல் டோஸர்ஸ், வெல் போரிங் எக்விப்மெண்ட்ஸ், திராஷேர்ஸ், இம்மாதிரியாக சாதாரணமாக விவசாயிகளுக்கு வேண்டிய சாமான்களை வாங்கி வைக்கவேண்டும் எதற்காக நான் இதைக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், கையில் பணம் இல்லாத விவசாயிகள் தாங்களே அவ்வளவு பணத்தையும் போட்டு இன்வெஸ்ட் செய்து வாங்கமுடியாத நிலையில், அவர்களுக்கு வாடகையைக் கொடுத்துவிட்டு அந்த சாமான்களை உபயோகித்துக்கொள்வதற்கு வழிவகைகள் செய்தால், நல்லவிதமாக இருக்கும். இம்மாதிரியான திட்டங்களை நடைமுறைப்படுத்தினால், நாட்டில் வேலையில்லா திண்டாட்டம் தீரும், கிராம மக்கள் நல்ல விதத்தில் வாழ்க்கையை நடத்துவார்கள், விவசாய உற்பத்தி பெருகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் பேஸ்டு புரொகிராம் மாதிரி போட்டு, பைலட் பிராஜெக்ட் ஒன்றை ஆரம்பித்து, சர்க்கார் செலவில் சர்வீஸ் சென்டர்களை ஆரம்பிக்கவேண்டும். அதோடு கூட தனிப்பட்ட முறையில் சில பேர்களுக்கு ஸ்கீம்ஸ் போட்டு, கஸ்டம் சர்வீஸ் ஆரம்பிப்பதற்கு அவர்களுக்கு நிதியை ஒதுக்கிவைத்து, அம்மாதிரி ஒரு நல்ல ஸ்கீமை ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

***திரு. கி. நஞ்சன் :** தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியத்தின்மீது எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நமது நாட்டில் எங்கு பார்த்தாலும் உணவு தானியப் பற்றாக்குறை என்பது பொதுவாக நாம் எல்லோரும் அறிந்த உண்மை. ஆனால், உணவு தானிய உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்றும் ஒரு திட்டத்தை

அரசாங்கம் நல்ல முறையில் செயல்படுத்த வேண்டும் என்றும் பல ஜில்லாக்களில் பல திட்டங்களை போட்டு வருகிறது. நீலகிரி ஜில்லாவைப் பொறுத்தவரையில், கூடலூர்ப் பகுதியில் விவசாயத்திற்குத் தகுந்த தரிசு பூமிகள் ஏராளமாக இருக்கின்றன. விவசாயம் செய்வதற்கு தகுதியாக உள்ள பூமிகளில் விவசாயம் செய்யவேண்டும் என்று அங்கு இருக்கக்கூடிய வேலையில்லாதவர்கள் முன் வந்தால் செய்ய முடிய வில்லை. ஏனென்றால், தேயிலைத் தோட்டப் பகுதிகளிலே அந்த பூமிகள் இருக்கின்றன. தோட்டத்திற்குச் சொந்தமான பூமியாக இருப்பதால், அந்த பூமியில் விவசாயம் செய்யவேண்டுமென்றால், முடியவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட பூமிகளை அரசாங்கம் எடுத்து, வேலையில்லாத தொழிலாளர்களுக்கு அந்தப் பூமிகளைக் கொடுத்தால், விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு பயனுள்ளதாக இருக்கும். அதே சமயத்தில் அங்கு பல ஆண்டுகளாக விவசாயம் செய்துகொண்டு வருகிற விவசாயிகளை அப்புறப்படுத்தக்கூடிய நிலைமையில் இந்த அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.

என்னுடைய பகுதியில் எடுமாடு வில்லேஜ், பிதிர்காடு வில்லேஜ் ஆகிய பகுதிகளில் இருக்கக்கூடிய சாதாரண விவசாயிகள் நாளுக்கு நாள் என்குரோச்மெண்டு செய்துவிடுவார்கள் என்று சொல்லி, எவிக்ஷன் ஆர்டர் போட்டு, அவர்களுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். அதை நிறுத்த வேண்டும். அந்தப் பகுதிகளிலுள்ள விவசாயிகள் மலையாளிகள் என்றோ அல்லது கம்யூனிஸ்டுகள் என்றோ அரசாங்கத்திடம் தப்பு அபிப்பிராயத்தைச் சொல்லி, அதன் மூலம் அங்கு உள்ள விவசாயிகளை அப்புறப்படுத்த வேண்டும் என்று பரவலாக அங்கு இருக்கக்கூடிய மக்கள் பேசிக்கொண்டு வருகிறார்கள். அதைத் தவிர்க்க வேண்டும். எவிக்ஷன் விஷயத்தில் உடனே அரசாங்கம் நடவடிக்கை எடுத்து, அங்கு இருக்கக்கூடிய விவசாயிகள் நிரந்தரமாக விவசாயம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு பட்டா வழங்கவேண்டும் என்று மிகவும் தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், எனக்கு முன்பு பேசிய நண்பர், திரு. கருணைநாதன் அவர்கள் எங்கள் பகுதியில் தேயிலைக்கு வரி பற்றிச் சொன்னார்கள். இன்றைக்கு இருக்கும் நிலையில் மத்திய சர்க்காருடைய வரியினால், தேயிலை விவசாயத்திற்கு பாதகம் ஏற்பட்டிருக்கிறது. தேயிலை விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கு இந்த அரசாங்கம் மத்திய சர்க்காரிடம், இன்றைக்குப் போட்டிருக்கும் வரியை அவர்கள் குறைத்தால், உற்பத்தியாளர்கள் விவசாயம் செய்ய முடியும் என்பதை எடுத்துச் சொல்ல வேண்டும். இல்லையென்றால் அவர்களால் விவசாயத்தை நடத்த முடியாது என்கிற நிலை ஏற்படும். விவசாயிகள் விவசாயத்தை நடத்த முடியாத வகையில் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே பெரிய பெரிய எஸ்டேட்டுகளுக்குப் போடலாம். ஆனால் சிறிய சிறிய விவசாயிகளுக்கும் போட்டு இருப்பதை உடனடியாக நிவர்த்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனது பகுதியில் செக்டாம்கள் கட்டி விவசாயத்திற்கு தகுதியுள்ள பூமிகளை நிரந்தரமாக ஏழைகளுக்குக் கொடுத்தால் நலமாக இருக்கும் என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், மின்சாரக் கட்டணத்தை பற்றிப் பல பாகங்களில் போராட்டங்கள் ஆரம்பித்திருக்கிறார்கள். இந்தப் போராட்டங்களை இந்த அரசாங்கம் மிகக் கவனமாகப் பார்த்து, அவர்களுடைய வாதத்திற்கு உட்பட்ட கட்டணத்தைக் குறைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உருளைக்கிழங்கு விவசாயத்தில் விதைக் கிழங்குகள் கிடைப்பதில்லை. அதற்கு வேண்டிய மருந்துகள் கிடைப்பதில்லை. இந்த அரசாங்கம் உடனடியாக நீலகிரிப் பகுதிக்கு உருளைக்கிழங்குக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த வாய்ப்புக் கொடுத்த தலைவருக்கு நன்றி செலுத்தி முடிக்கிறேன்.





*திரு. பி. துரைராஜ்: தலைவர் அவர்களே, இங்கே வைத்துள்ள விவாதத்தில் இருக்கிற மானியங்களை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன்.

தமிழகத்தில் இந்தத் துறை எவ்வளவு முக்கியமானது என்பது அதிகமான மக்கள் விவசாயத்தை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதாலேயே வெள்ளிடமலையாகும். அவர்களுடைய குறைகளை மனத்தில் கொண்டு நாட்டிலுள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கு எவ்வளவு சலுகைகள் வழங்கவேண்டும் என்று இருக்கிறதோ அவ்வளவையும் வழங்கியிருப்பதை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம் வேளாண்மைத் துறைக்கு பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற நமது டாக்டர் சத்தியவாணிமுத்து அம்மையார் கொடுத்திருக்கக் கூடிய மானியக் கோரிக்கைகள் மீது, விவரமாக சிறப்பான திட்டங்களைக் கொடுத்திருக்கிறார்கள்.

, தமிழக அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு முதன் முதலாக நம மாநிலத்தில் ஒரு விவசாயப் பல்கலைக் கழகம் ஏற்பட்டிருக்கிறது. இந்திய துணைக் கண்டத்திலேயே மக்களெல்லாம் இந்த அரசாங்கத்தைப பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். விவசாயத்தை அபிவிருத்தி செய்வதன் மூலமாகத்தான் உணவுப் பிரச்சினையை சமாளிக்க முடியும் என்கிற கொள்கைக்கு ஆதரவாக இருக்கிறது. விவசாய உற்பத்தியைப் பெருக்க நல்ல பல திட்டங்களைப் போட்டிருக்கும் நம் அரசு, மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருந்த உணவுக் கட்டுப்பாட்டை நீக்கியிருக்கிறது. இந்த அரசாங்கம் விவசாயத் துறையில் எவ்வளவு அக்கறையோடு இருக்கிறது என்பதற்கு இதுவே ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது.

விவசாயக் கடன் சலுகைகள் கொடுப்பதில், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆவணக் கட்டணச் சலுகைகள் கொடுத்திருப்பதற்கு தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பில் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், நெல்லை மாவட்டத்தில், சங்கரன்கோயில் வட்டாரம் மிகவும் பின்தங்கிய பகுதி என்று இந்திய அரசாலேயே தீர்வு செய்யப்பட்டிருக்கிறது. அங்கே ஆற்றுப் பாசனமோ, சிறு அணைக்கட்டோ கூடக் கிடையாது. விவசாயத்திற்கு நீர்ப்பாசனம் மிகத் தேவை. அங்கே முழுக்க முழுக்க கிணற்றுப் பாசனம்தான். விவசாயத்திற்குப் பயன்படும் கிணறுகள் அத்தனையும் ஆழப்படுத்தப்பட்டாலொழிய, விவசாயம் செய்ய முடியாது. சங்கரன்கோயில் வட்டாரம் முழுதும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அதிகமாகக் கடன் வசதிகளைச் செய்து கொடுத்து, விவசாயக் கிணறுகளை ஆழப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த விவசாயக் கிணறுகளை ஆழப்படுத்த பவர் ட்ரில்லர்கள், துளை போடும் கருவிகள் அதிகமாகத் தேவைப்படுகிறது. எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் குறிப்பிட்டார்கள், பவர் ட்ரில்லர்களை அரசாங்கச் செலவில் வைத்து விவசாயிகளுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று. அப்படிச் செய்வதுதான விவசாயத்திற்கு நன்மை பயக்கும் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, சங்கரன்கோயில் வட்டாரத்தைப் பொறுத்தவரையில், 20 ஆண்டு காலமாக அந்தப் பிரச்சினை இருக்கிறது. மக்களுக்கு விவசாயத்திற்குப் பயன்படாமல் ஏராளமாக பூமிகள் இருக்கின்றன. ஆகவே, எங்கள் பகுதி கீரி ஆறு திட்டத்தை, முதலாவது திட்டத்திலேயே சேர்த்திருந்தும் என்ன காரணத்தாலேயோ அது விடுபட்டுவிட்டது. இப்பொழுது நம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன், இந்தக் கீரியாறுத் திட்டத்தை கேரள அரசோடு உடன்பாடு கண்டு ஏற்படுத்திக் கொடுத்தால், ஏறத்தாழ, 10 கோடி ரூபாய் செலவானாலும் பாதகமில்லை, ஏறத்தாழ ஒரு லட்சம் ஏக்கராவுக்கும் மேற்பட்ட நிலங்கள் பாசன வசதி பெறும்; அதிகமாக விவசாயத்தில் முன்னேற்றம் காண

வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இன்றைய நிலையில் இதைப் பரிசீலித்து, இந்த கீரியாறுத் திட்டத்தை பெற்றுத் தந்து, மக்களுடைய வாழ்வில் ஒளியேற்றி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பல்கலைக்கழகத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திறமைவாய்ந்த, பயிற்சி பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து, சிறந்த முறையில் அமைத்து வைக்க வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, முன்னால் வாங்கிய கடன்களைக் கொடுக்க விவசாயிகள் மிகக் கஷ்டப்படுகிறார்கள். ஒரு சில காலத்திற்கு கடன்கள் ஒத்திவைக்கப்பட்டன. மறுபடியும் பல சலுகைகளை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நில உச்சவரம்புச் சட்டத்தால் மீதமாகக் கிடைக்கும் நிலங்களை பகிர்ந்து கொடுத்து, கூட்டுறவு முறையில் விவசாயம் செய்ய அவர்களுக்கு நல்ல முறையில் வசதிகளைச் செய்து கொடுத்து விவசாய உற்பத்தியில் அவர்களை ஈடுபடுத்த வேண்டும் என்றும், வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு, இந்த சந்தர்ப்பம் கொடுத்த அவைத் தலைவருக்கு நன்றி செலுத்தி முடிக்கிறேன், வணக்கம்.

*திரு. தோ. மு. நல்லசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மையின் கீழ் 16–வது மானியமாகவும், 39–வது மானியமாகவும் வந்திருக்கும் கோரிக்கைகள் மீது என்னுடைய கட்சியால் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து, என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன்.

இந்தத் துறையின் முக்கியத்துவத்தைப் பற்றி, நான் நீண்டதொரு விளக்கம் கொடுக்கத் தேவையில்லை. 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகு' என்பது முன்னோர் வகுத்த மொழி. உணவுக்கு, உடைக்கு, வேலை வாய்ப்புக்கு, விலைவாசிக் கட்டுப்பாட்டுக்கு, அந்நியச் செலாவணி தேடுவதில், நாட்டின் ஆரோக்கியத்திற்கு, அமைதிக்கு என்று இப்படி வரிசையாகச் சொல்லிக் கொண்டே போகலாம். இந்த மானியத்தைப் பொறுத்த வரையில், வேளாண்மை உற்பத்தி, சிறு பாசனம், மண்வளப் பாதுகாப்பு, ஆயக்கட்டு மேம்பாடு ஆகிய இந்த நான்கு அமைப்புகளும் தான் முக்கியமானவை. இந்த நான்கு அமைப்புக்களையும் பொறுத்து நான்காவது திட்டத்தில் நிதி ஒதுக்கீடு ரூ. 65 கோடி. 1970–71-ல் நிதி ஆண்டிற்கு ரூ. 9 கோடி 16 லட்சம். இந்த நிதி ஒதுக்கம் போதாது என்பது என்னுடைய கருத்து. இந்த ஒதுக்கீட்டைப் பார்க்கும் போது, இது மொத்த ஒதுக்கீட்டு நிதியில் 5% வருகிறது. இந்த முக்கியமான துறைக்கு 5% நிதி ஒதுக்கம் போதுமா என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இது போதாது என்பது மட்டுமல்ல, சென்ற ஆண்டு, 1969–70-ல் நிதி ஒதுக்கப்பட்டது 15 கோடி 99 லட்சம், கிட்டத்தட்ட 16 கோடி ரூபாய். ஆனால் செலவானது, ரிவைஸ்ட் எஸ்டிமேட்டின் புள்ளிவிவரப்படி, 14 கோடி 69 லட்சம் தான் செலவாகியிருக்கிறது. ஆக, கிட்டத்தட்ட ஒரு கோடி 30 லட்சம் ஒதுக்கப்பட்ட தொகையில் செலவழிக்கவில்லை என்று ஆகிறது.

அதாவது துஃபைனான்சியல் டார்கெட்டை எட்டிப் பிடிக்க முடியவில்லை. நாம் நிர்ணயித்துக் கொண்ட லட்சிய அளவை, என்ன என்ன சாதனை

பிற்பகல் 1-00

களைச் செய்யவேண்டுமென்று எண்ணினோமோ அவைகளையெல்லாம் நம்மால் எய்தமுடியவில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. கொடுத்திருக்கிற புள்ளிவிவரங்களிலே, சென்ற ஆண்டிலே, அதற்கு முந்தைய ஆண்டிலே அடைய எண்ணிய சாதனைகள், அடைந்த சாதனைகள் என்று வரமாகக் கொடுத்திருந்தால் நாம் எவ்வளவுதூரம் வெற்றிபெற்றிருக்கிறோம் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். சென்ற ஆண்டிக எவ்வளவு அடைய எண்ணியிருந்தோம், எவ்வளவு அடைந்திருக்





கிறோம் என்பதற்கான புள்ளிவிவரம் அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. ஒரு துறை வெற்றி பெற்றிருக்கிறது என்று சொல்லும் போது, அந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டை வைத்து அதை மதிப்பிடுவது கிடையாது. அந்தத் துறையானது செய்த சாதனைகளை வைத்துத்தான் வெற்றிபெற்றிருக்கிறதா, இல்லையா என்பதை நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது. இலக்குகள் என்ன, சாதனைகள் என்ன என்பதை ஒப்பிட்டுப் பார்க்கும் அளவிற்கு மன்ற உறுப்பினர்களுக்கு புள்ளிவிவரங்கள் அடங்கிய விவரக் குறிப்பு, அரசு வழங்கிய பட்ஜெட் தஸ்தாவேஜுகளில் சேர்க்கப்படவில்லை.

அடுத்து, "வேளாண்மை" மேம்பாடு அடைய வேண்டும், பெரிய "புரட்சித் திட்டத்தை" உருவாக்க வேண்டும், "பசுமைப் புரட்சியை" உண்டாக்க வேண்டும என்கிறார்கள். பசுமைப் புரட்சியை உண்டாக்க வேண்டுமென்றால் அதற்கு அடிப்படைத் தேவையான பத்து அம்சங்களில் தக்க கவனத்தைச் செலுத்த வேண்டும். நீர், நிதி, தர விதைகள், நிலத்தைச் செப்பனிடல், எருவும்—உரமும், பயிர் பாதுகாப்பு; வேளாண்மைக் கல்வியும், ஆராய்ச்சியும், வேளாண்மைத் துறையில் அமைவோரின் நலனும், அமைதியும் சமூக உறவும், பயிர் இன்ஷ்யூரன்ஸ் விளை பொருளைப் பாதுகாப்பாக வைக்கவும் நியாய விலையும், வேர் ஹவுஸிங் அண்ட் மார்க்கெட்டிங் இவை அத்தனையும் இருந்தால் விவசாயம் மேம்பாடு அடையும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இதன் அடிப்படையில் என்னுடைய ஆலோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

அரசாங்கம் பல்வேறு அமைச்சர்களைக் கொண்டு இயங்குகிறது. விவசாயத்துறை முன்னேற்றம் காண வேண்டுமென்றால், இந்தத் துறையானது முதலமைச்சர் அவர்களுடைய மேற்பார்வையில் இருக்க வேண்டுமென்பது என்னுடைய கருத்து. நான் இதைக் கூறும்போது இந்தத் துறையை நிர்வகித்துவரும் திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்களுக்கு திறமையில்லையென்றோ, இந்தத் துறை அவரிடம் இருக்கக்கூடாது என்ற எண்ணத்திலோ நான் சொல்லவில்லையென்பதைக் கூறிக் கொள்கிறேன். இந்தத் துறைக்கு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பாளியாக இருக்க வேண்டும். இதற்கு என்ன காரணம் என்பதை உரையின் இறுதியில் சொல்ல விரும்புகிறேன். இந்த பத்து அம்சங்களில் "நீர்" பற்றி முதலில் எடுத்துக்கொள்வோம். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், அநேகமாக நாட்டிலே இருக்கக்கூடிய நீர் ஆதாரங்களையெல்லாம நாம் பயன்படுத்திவிட்டோம். இனி வரக்கூடிய ஆதாரங்கள் நிலத்திற்குள் மேலே கிடைக்கும் தண்ணீரைப் பற்றியதாக திட்டத்தை வகுக்கமுடியாது. இது எல்லோரும் அறிந்த விஷயம். அடுத்தபடியாக பூமிக்குள்ளே இருக்கும் தண்ணீரைப் பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டியது இன்றைக்கு இருக்கும் நிலவரம் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்கிறோம்.

ஆழமாகக் கிணறுகளை வெட்டுவதன் மூலமாகவும் தண்ணீரை எடுக்க முடியும். மேலும் நிலத்திற்கு மேலே உள்ள தண்ணீரை சிக்கனமாக உபயோகிப்பதை கடைப்பிடிப்பதன் மூலமாகவும விவசாயத்தை மேம்படுத்தலாம். மேலும நாம் சிறுபாசனத்தை வளர்க்கக் கூடிய விதத்தில் கிணறுகளை ஆழப்படுத்த வேண்டும். நாம் பவர் டிரில்களை உபயோகப்படுத்த வேண்டும். நம்முடைய மாநிலத்தில் டிரில்களின் உபயோகம் மிகமிகக் குறைவு என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். பஞ்சாப் மாநிலத்தில் கிட்டத்தட்ட 25 ஆயிரம் கிணறுகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஒரு லட்சம் கிணறுகளை உருவாக்க திட்டம் உருவாக்கியிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலே டிரில்கள் சரிவர இயங்குவதில்லையென்பது என்னுடைய குற்றச்சாட்டு. இருக்கக்கூடிய டிரில்களும் சும்மா இருப்பது மிகவும் வருந்தத்தக்கது. ஐக்கிய நாடுகள் சபை உதவித் திட்டத்தின் கீழ் நம்முடைய மாநிலத்தில் பூமிக்கு அடியில் இருக்கும் தண்ணீரை ஆராய்ச்சி செய்து பயன்படுத்துவதைக் குறித்து திட்டம் இருக்கிறது. என்னுடைய பகுதியிலே டிரில்களை வைத்து 300 அடி, 320 அடி ஆழம்

என்ற அளவிலே குழாய்க் கிணறுகள் போட்டார்கள். அதற்குள் அந்த இயந்திரம் கெட்டுவிட்டது. மேலும் அந்த இயந்திரத்தினால் ஆழப்படுத்த முடியவில்லை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

கடலோரப் பகுதிகளிலும், ஆற்றோரப் பகுதிகளிலும் தவிர மற்ற மேட்டுப் பிரதேசங்களில் ஆயிரம் அடி வரை ஆழப்படுத்த வேண்டும். வறண்ட பிரதேங்களிலும் ஆயிரம் அடி வரை ஆழப்படுத்தலாம். சேலம், கோவை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி மாவட்டங்கள் போன்ற வறண்ட பிரதேசங்களில் ஆயிரம் அடி ஆழம் வரை தோண்ட வேண்டும். இப்படி ஒரு நல்ல திட்டத்தை உருவாக்க வேண்டும்.

அடுத்தபடியாக, மத்திய அரசாகட்டும், மாநில அரசாகட்டும், புஞ்சைப் பிரதேசங்களில் எப்படி வேளாண்மையை விருத்தி செய்வது என்ற நோக்கத்தில் இயங்கி வருகின்றன. தமிழ்நாட்டில் ஆழமான கிணறுகளை வெட்டியும், அதற்கான மின்சார வசதிகளைச் செய்து கொடுப்பதின் மூலமும் உதவ வேண்டும். இப்படிச் செய்கின்ற தனிப்பட்ட விவசாயிகளுக்கு மானியம் கொடுப்பது சிறந்ததும் தலையாய கடமையும் ஆகும். கிணறு வெட்டுபவர்களுக்கு நாம் சப்சிடி கொடுக்கிறோம். அதேபோல உற்சாகமான விவசாயிகளுக்கு சப்சிடி கொடுத்தால் நல்ல ஆழமான கிணறுகளை வெட்ட முற்படுவார்கள். உற்சாகமான விவசாயிகளுக்குச் சில அதிகாரிகள் தொல்லை கொடுக்கிறார்கள். சரியான கணக்கு வைத்து, சரியாகப் பணம் கட்டும் விவசாயிகளுக்கு அதிகாரிகள் தொல்லை கொடுக்கிறார்கள். ஆனால் அதே சமயத்தில் சரியான கணக்குக் கொடுக்காத விவசாயிகளுக்குத் தொல்லை கொடுப்பதில்லை என்பது என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. நல்ல திட்டங்களை இலாகாவினர் விழிப்போடு இருந்து செயல்படுத்த வேண்டும்.

அடுத்தபடியாக, மின்சார மோட்டார் கடன் கொடுக்கிறோம். பம்ப் செட்டுக் கடன் கொடுத்து விடுகிறார்கள். நான்காயிரம், ஐந்தாயிரம் ரூபாய் என்று பம்ப் செட் வாங்கி வைத்துக்கொண்டவர்களுக்கு சர்வீஸ் கனெக்ஷன் கொடுக்கவில்லையென்று சொன்னால் என்ன செய்வது? மின்சார இணைப்பு கிடைக்காததினால் ஏராளமான மோட்டார் பம்ப் செட்டுகள் ஓடாமல் இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதை சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மின்சார இலாகாவுக்கும் விவசாயக் கடன் கொடுக்கும் துறைக்கும் ஓர் இணைப்பு இல்லாததுதான் இதற்குக் காரணம் என்று கருதுகிறேன். பணம் கடன்பட்ட விவசாயிகள் மோட்டார் பம்ப் செட் வைத்திருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு காலத்தில் மின் இணைப்பு கிடைக்கவில்லையென்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன். சில இடங்களில் டிரான்ஸ்பார்மர்களில் எவ்வளவு லோடு தாங்குமோ அதற்கு அதிகப்படியான கரண்ட் சப்ளை செய்வதால் மோட்டார்கள் எல்லாம் வெந்து போகக்கூடிய, எரிந்து போகக்கூடிய நிலைமை இருக்கிறது.

நம்முடைய நாட்டிலே மின் இணைப்பு மூலமாக மட்டுமல்லாமல், ஆயில் என்ஜின்களை உபயோகப்படுத்தியும் விவசாயம் செய்துவருகிறோம். பஸ்கள், லாரிகள், பெரிய பெரிய தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கக் கூடிய விலையில்தான் டீசல் ஆயில், க்ரூட் ஆயில் போன்றவைகளை விவசாயிகளுக்கும் கொடுக்கிறார்கள். இவ்வளவு அதிக விலை கொடுத்து வாங்க விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். இந்த விலை விவசாயிகளுக்குக் கட்டுபடியாகுமா என்பதைச் சிந்திக்க வேண்டும். ஆகவே, விவசாயிகள் உபயோகப்படுத்தக்கூடிய எண்ணெய்க்கு சப்சிடி கொடுக்க வேண்டும். விவசாயிகளுக்கு எண்ணெய்களை சப்சிடி ரேட்டில் கொடுக்க வேண்டும். அதேபோல விவசாயிகளுக்கு மின்சாரமும் சப்சிடி ரேட்டில் கொடுக்க வேண்டும். இவற்றையெல்லாம் பட்ஜெட் உரையின்போது சொல்லலாம் என்று வந்தேன். எதிர்பாராதவிதமாக யூனிட் ஒன்றுக்கு ஒன்றேமுக்கால்





பைசாவைக் கூட்டி, யூனிட் ஒன்றுக்கு பத்து பைசா என்று ஆக்கிவிட்டார்கள். இது மிகவும் வருந்தத்தக்கது. தமிழ்நாடு எங்கும் மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று விவசாயிகள் போராடுகிறார்கள். விவசாயிகள் தங்களுடைய விசேஷமான, நியாயமான கோரிக்கையை எழுப்பியிருக்கிறார்கள். அரசு நல்லபடியாக கூர்ந்து கவனித்து, மின்சாரக் கட்டண உயர்வைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்று செய்யலாம். நாம் இத்துறைக்கு பொது நிதியில் 5 சதவீதம் தான் ஒதுக்குகிறோம். 16 கோடிதான் ஒதுக்கியிருக்கிறோம். இந்த மின்சாரக் கட்டணக் குறைவினால் 2½ கோடி மின்சார வாரியத்திற்குக் குறைகிறது என்றால் நாம் விவசாயிகளுக்கு "சப்சிடி" கொடுத்து மின்சார வாரியத்திற்கு நாமே அந்தத் தொகையை ஒதுக்கிவிடலாம். அதைவிட்டு விவசாயிகள் தலையில் அதைச் சுமத்துவது நியாயம் அல்ல என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நதி ஓரப் பகுதிகளில் அதிகச் செலவு செய்து மோட்டார்கள் எல்லாம் வைத்து சாகுபடி செய்து வருகிறார்கள். அதை உறுதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காவேரி ஓரப் பகுதிகளில் இப்போது புதியதாக சிரமம் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, ஈரோடில் சேஷசாயி பேப்பர் மில்ஸ் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் ஆலையின் கழிவு நீரை காவேரியில் விடுகிறார்கள் அதனால் தண்ணீர் கெட்டுப் போகிறது. அதை எடுத்துக் குடிக்கிற மக்களது ஆரோக்கியம் கெடுகிறது என்பது ஒரு புறம். அந்தத் தண்ணீரைப் பாய்ச்சுவதனால் பயிர் பாழாகிறது. சாகுபடி பாதிக்கப்படுகிறது. ஆகவே, அதுபோல ஆலைகளின் கழிவு நீரை ஆற்றில் கலக்கவிடக்கூடாது. குறிப்பாக ஈரோடு பக்கத்தில் இதுபோல நடப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

"அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை, பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்கிற பழமொழி அந்தக்காலம் முதற்கொண்டு இந்தக் காலம் வரை உண்மையாகவே இருக்கிறது. இந்த நிதிச் சங்கடம் விவசாயிகளுக்கு வரக்கூடாது என்றுதான் மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் விவசாயிகளுக்கு நிதி உதவி அளிக்க பலவகையில் முன்வந்திருக்கிறது. பல பாங்குகள், நிலவள வங்கிகள் அப்புறம் தனியார் நடத்தக்கூடிய சர்க்கரை ஆலைகள் ஆகியவற்றின் மூலம் பணம் கொடுக்க ஏற்பாடு செய்கிறோம். ஆனால் அந்த நிதி நியாயமாகப் பயன்படுத்தப்படுகிறதா என்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டும். இன்றைக்கு விவசாயிகளுக்கு அம்மாதிரி பல துறைகளிலும் கடன் கிடைக்க வழி செய்யத்தான் வேண்டும் என்றாலும் பஞ்சாயத்து யூனியனுக்கு வருகிற 10 விவசாயிகளில் 2 பேர்கள் தான் உண்மையில் விதை, உரம், பயிர்பாதுகாப்பு வேலைகளுக்காகக் கடன் வாங்குகிறார்கள். வாங்கிய கடனையும் செலவழிக்கிறார்கள். பாக்கி 8 விவசாயிகள் எந்த எந்த ரூபத்தில் எல்லாம் கடன் பெறுவது என்று வருகிறார்களே தவிர விவசாயத்திற்காகச் செலவிட கடன் வாங்குவதில்லை. இது நல்ல போக்கு அல்ல. விவசாய முன்னேற்றத்திற்காக கடன் கொடுத்து உதவ அரசாங்கம் முன் வருகிறது. விவசாய முன்னேற்றத்திற்கே இது கொடுக்கப்படவேண்டுமென்பது எனது கருத்து. அதற்கானதை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கனவே பம்பு செட்டு லோனைப் பற்றிச் சொன்னேன். அதைப் போலவே டிராக்டர் லோன். ஒரு விவசாயி குறிப்பிட்ட டர்குசன் டிராக்டர் வேண்டுமென்று கோரி கடன் மனுப் போடுகிறான். அவனுக்கு லோன் சாங்ஷன் ஆகிவிடுகிறது. ஆனால் அந்த ரக டிராக்டர் கிடைக்கவில்லை. அதன் காரணமாக நிதி ஒதுக்கப்பட்டாலும் ஒதுக்கப்பட்ட நிதியைச் செலவழிக்க முடியாத நிலை இருக்கிறது.

அடுத்தபடியாக, தரவிதைகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அதன் பெருமையைப் பற்றி யாரும் குறைத்துச் சொல்ல முடியாது. பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் இருந்த நிலைமைக்கும் இப்போதுள்ள நிலைமைக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு என்று சொல்லலாம். கொஞ்ச காலத்திற்கு முன்பு விவசாயத்துறை ரிசர்ச் பிரிவில் இருந்து ஏ.டி.டி. 27, கோ. 25, கோ. 33, கோ. 39 போன்ற விதைகள் எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டுவந்தன. இப்போது ஐ.ஆர். 5ம், ஐ.ஆர். 8ம் வந்திருக்கின்றன. இந்த இரண்டும் அபரிமிதமான விளைச்சலைக் கொடுக்கிறது என்பதில் கருத்து வேற்றுமை கிடையாது. ஆனால் மக்கள் மத்தியில் ஒரு சிலர் இதைப் "பயன்படுத்தலாம்" என்கிறார்கள். ஒரு சிலர் இது நோய் நொடிகளுக்குத் தாக்குப் பிடிக்காத ஒன்றாக இருக்கிறது, ஆகவே, இதைப் "பயன்படுத்தக்கூடாது" என்கிறார்கள்.

பொதுவாக மண்வளம், நீர்வசதி, சீதோஷ்ணநிலை ஆகியவை எல்லா இடங்களிலும் ஒரேமாதிரியாக இருப்பதில்லை. கோவை மாவட்ட மண் வளம் ஒருவகை, கடற்கரையோர செங்கல்பட்டு மாவட்ட மண்வளம் ஒருவகை, கிணற்றுப் பாசனம் உள்ள இடங்களும் இருக்கின்றன. ஆற்றுப் பாசனம் உள்ள இடங்களும் இருக்கின்றன. ஆகவே இதற்கு நான் ஒரு வழி சொல்கிறேன். புதிய ஆராய்ச்சி ரக விதைகள் வருகிறபோது பல்வேறு ப்ளாக்குகளில் பரிட்சார்த்தமாக முதலில் பயிரிடப்பட வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் புதிய ரக வித்துக்கள் சோதிக்கப்பட்ட வேண்டும். அப்படி ஆராய்ச்சி செய்து எந்த எந்தப் பகுதியில் ஐ.ஆர்.8 சிறப்பாக வருகிறது, எந்த ரக நெல் எல்லாப் பருவக் காலங்களுக்கும் ஏற்றதாக இருக்கிறது, எந்தப் பயிர் குறிப்பிட்ட பருவத்திலேயே பயிரிடப்பட வேண்டும் என்பனவற்றையெல்லாம் நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்ல வாய்ப்பு ஏற்படும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நாம் விதைப் பண்ணைகள் வைத்திருக்கிறோம். வரவேற்கத் தக்கது தான். அந்த விதைப் பண்ணைகளில் எல்லாம் நல்லமுறையில் விதைகளைக் காயவைத்து எடுக்க ஓரிடத்திலும் த்ரஷ்ஷிங் ஃப்ளோர் கிடையாது. அதேபோல விவசாயிகளிடத்தில் விநியோகிக்கும் வரை நல்லமுறையில் பாதுகாத்து, பூச்சிகள் அடிக்காமல் வைத்திருக்க கோடவுன் வசதி செய்து கொடுப்பதில்லை. நாம் 300 பார்ம்களை நடத்துகிறோம். இவை போதாது என்று இதை நல்ல முறையில் விரைவுபடுத்தவும் திட்டம் வைத்திருக்கிறோம். ஆனாலும் விதைகள் விவசாயிகள் கைக்குப் போய், காட்டில் பரப்பப்பட்டு, முளை வரக்கூடிய அளவுக்கு பொறுப்பும், அக்கறையும் எடுத்துக்கொள்ளக்கூடிய நிலைமை இருந்தாக வேண்டும். இப்போது அத்தகைய நிலைமை இல்லை என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, கோ. 33-க்கு 'கருணை' என்ற பெயரைக் கொடுத்திருக்கிறார்கள். பல நாட்கள் பாடுபட்டு அந்த ரக விதையை ஆராய்ச்சி செய்து கொண்டுவந்தவர் 'அன்—நோன் வாரியராக', பெயர் இடம் தெரியாமல் இருந்துகொண்டிருக்கிறார். அப்படியிருக்க அதற்கு அரசியல் தலைவர் பெயரைக் கொடுக்கத் தேவையில்லை என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நிலத்தைச் செப்பனிட நவீன இயந்திரங்கள் மிகமிக அவசியம். பழைய கலப்பையையும், மண்வெட்டியையும் வைத்துக் கொண்டே இருக்க முடியாது. அதிவேகத்தில் பெருகிக் கொண்டிருக்கிற ஜனத்தொகைக்கு இது போதாது.

நம் நாட்டில் பஞ்சாப் மாநிலம் தான் இயந்திரங்களைப் பயன்படுத்துவதில் மிகத் தீவிரமாக இருக்கிறார்கள். விவசாயிகளுக்கு அதனால் ஏற்படக்கூடிய பலாபலன்களை நன்கு தெரிந்து **agricultural techniques with marked emphasis on mechanisation** என்ற அடிப்படையில் இயந்



திரங்களைப் பயன்படுத்துவதால் பஞ்சாப் மாநிலம் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக விளங்குகின்றது. அதன் விளைவு என்ன ஆயிற்று என்றால் தமிழ் நாட்டில் இருந்த டிராக்டர்களை எல்லாம் கூட செகண்டு ஹாண்டில் வாங்கி அங்கே கொண்டு சென்றிருக்கிறார்கள். அதைப்போல நாமும் விவசாயத் துறையில் இன்னும் தீவிரமாக நவீன இயந்திரங்களைப் பயன்படுத்த முன்வந்தால்தான் அதிக அளவில் பயன் ஏற்படும். அப்படி ஒரு நிலை ஏற்படுகிறபோது—தனியார் டிராக்டர்களைக் கூட அரசாங்கப் பண்ணையில் ரிப்பேர் செய்து கொடுக்க வழிவகை செய்யப்படவேண்டும். இப்போது அரசாங்க வொர்க்ஷாப்பில் செய்கிறார்கள். ஆனால் 300 பர்செண்ட் சார்ஜ் விதிக்கிறார்கள். அதைத் தவிர்க்க வேண்டும். நூறு பர்செண்ட்டுக்குமேல் போடவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சாயில் கன்சர்வேஷனைப் பற்றிச் சொல்ல வேண்டும். மண் வளப் பாதுகாப்புக்காக மத்திய சர்க்கார் உதவுகிறது, மாநில சர்க்காரும் உதவுகிறது. அதுபற்றி மலைப்பிரதேச உறுப்பினர்கள் சிலர் கூடச் சொன்னார்கள். இப்போது 50% சப்சிடி கொடுப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் ஒரு வேலைக்கு ஆயிரம் ரூபாய் ஆகிறது என்றால் அதிகாரிகள் சம்பளம், அலவன்சு ஆகிய எல்லாவற்றையும் சேர்த்து 2,000 என்று வைத்து, அதில் ஆயிரம் சப்சிடி என்கிறபோது இதனால் விவசாயிகளுக்கு எந்த விதமான நன்மையும் ஏற்படாது போகிறது. அப்படியின்றி ஒரு வேலைக்கு ஆயிரம் ரூபாய் என்றால் விவசாயிக்கு 500 ரூபாய் சப்சிடி கிடைக்கச் செய்ய வேண்டும். அந்த முறையில் இந்தப் பிரச்சினையை அணுகவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று, பெரிய நிலங்களை எல்லாம் உடைக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்துவிட்டோம். சட்டங்கள் போட்டிருக்கிறோம். இனி பெரிய 35 ஹார்ஸ் பவர், 50 ஹார்ஸ் பவர் இயந்திரங்கள் எல்லாம் வாங்கிக் கொடுக்க நாம் திட்டமிட்டிருந்தாலும் அவை அவசியந்தானா என்ற நிலை ஏற்படுகிறது. ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்ற அடிப்படையில் ஒரு திட்டத்தைச் சொல்ல விரும்புகிறேன். இன்றையதினம் மெக்கானிகல் எஞ்ஜினியர்கள் பலர் வேலையில்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். நல்ல முறையில் ஆழமாக உழக்கூடிய கருவிகளைக் கண்டுபிடித்து சிறிய சிறிய இயந்திரங்களை உருவாக்கி அவற்றைப் பயன்படுத்துவதின்மூலம் நாம் சிறிய சிறிய நிலங்களைத் தீவிர விவசாயத்திற்குக் கொண்டு வரலாம். அதோடு வேலையில்லாதவர்களுக்கும் வேலை வாய்ப்பைக் கொடுக்கலாம். எனவே இதிலே கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்தது, எருவும் உரமும். "ஆர்கானிக் மேன்யூரியல் வேல்யூ" சக்தி நிலத்தில் குறைந்து வருகிறது......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சீக்கிரம் முடித்துவிடுங்கள். அமைச்சர் அவர்கள் அரைமணி நேரம் கேட்டிருக்கிறார்கள்.

**திரு. தோ. மு. நல்லசாமி :** மணி அடியுங்கள், உட்கார்ந்துவிடுகிறேன். இலையானால் வாக்அவுட் செய்து என் கட்சி சார்பில் பேசுவதால் அதிகமாகக் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படியில்லை.

**திரு. தோ. மு. நல்லசாமி :** நாட்டிற்கு நல்ல பயன்களைத் தருகின்ற பாயிண்ட்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். அதிகமாக நேரம் கொடுத்து எனக்கு வாய்ப்பு கொடுத்தால் நல்லது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னொரு ஐந்து நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

**திரு. தோ. மு. நல்லசாமி :** இன்னொரு பத்து நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : 3 மணிக்கு கவுன்சில் இருக்கிறது.

**திரு. தோ. மு. நல்லசாமி** : ஐந்து நிமிடத்திற்கும் பத்து நிமிடத்திற்கும் அதிக வித்தியாசம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : எல்லாம் அப்படி அப்படியேதான் போய்விடும்.

**திரு. தோ. மு. நல்லசாமி** : தலைப்புகளைமட்டும் அப்படியே படித்துவிட்டு முடிக்கிறேன். ஆர்கானிக் மேன்யூர் போடுவது குறைந்துவிட்டது. நிலத்தில் அதனால் சக்தி குறைந்துவிட்டது. அந்த சக்தியை மேம்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். உரம் இடுவதற்கு முன்னால் சாயில் டெஸ்ட் நடத்தப்படவேண்டும். ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள மண் வளத்தைப் பரிசோதித்து அதன் பிறகுதான் உரம் இடவேண்டும்.

அடுத்தது, பயிர் பாதுகாப்பு. அடிக்கடி மருந்துகள் தெளித்து அதிலே கவனம் செலுத்துகிறோம். அதோடு ஒட்டுண்ணிகளை வளர்த்து என்டோமோலஜியை வளர்க்கக்கூடிய முறையிலே நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

அடுத்ததாக பூச்சி மருந்துகளை சப்ஸிடைஸ்டு ரேட்டிலே நல்ல முறையிலே விநியோகிக்க வேண்டும்.

வேளாண்மை கல்வியும் ஆராய்ச்சியும் என்ற தலைப்பிலே அக்ரிகல்சரல் எஞ்சினியரிங் விங் என்று இருக்கிறது. எஞ்சினியரிங் படித்தவர்களை எஞ்சினியரிங் பகுதியிலே எடுத்துக்கொள்ளவேண்டும். ப்யூர் சயின்ஸ் படித்தவர்களை தனியாக எடுத்துக் கொள்ள வேண்டும். பி.எஸ்ஸி. அக்ரி. படித்தவர்களை தனியாக எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படியில்லாமல் இருந்ததால்தான் கோவையிலே குழப்பங்கள் எல்லாம் ஏற்பட்டன. கோவையிலே ப்யூர் சயின்ஸ் கிராஜுவேட்ஸுக்கு புரொமோஷன் கொடுத்ததால்தான் பி.எஸ்ஸி. அக்ரி. கிராஜுவேட்ஸ்கள் பின்தங்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறதே என்றுதான் அவர்கள் அதற்காக பெரிய ஸ்ட்ரைக் பண்ணி குழப்பங்கள் எல்லாம் ஏற்பட்டன என்பதை நினைவூட்டுகிறேன்.

வேளாண்மைத் துறையிலே பதவி உயர்வுபற்றிச் சொல்லும்பொழுது அந்தத் துறையிலேயே பல ஆண்டுகள் அனுபவம் பெற்றுள்ளவர்களுக்குத்தான் புரொமோஷன் கொடுக்கவேண்டும்.

வேளாண்மைத் துறையிலே தக்கபடி மனித சக்தியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நீரும், நிலமும், விதையும், அணியான பாதையும் ஆழ உழுவதற்கு ஏரும் இருந்தால் மட்டும் போதாது. "செய்வாரும் சொல் கேட்டால் தான் என்றும் உழவே இனிது" என்றார் ஔவையார். இத்துறையின் மூலம் இத்தொழிலில் அமைதி காக்கப்பட ஈடுபடுவோருக்குத் தக்க கூலி மட்டுமல்ல வாழ்க்கை வசதிகள் அனைத்தும் கிடைக்க ஆவன செய்ய வேண்டும். கீழத் தஞ்சையிலே நிலைமையைப் பார்த்தோம். அப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வேகரீஸ் ஆப் நேச்சர், மழையின்மை, அதிக மழை, புயல் இவற்றால் பாதிக்கப்படுகிற நேரத்திலே அதை ஈடுகட்டுவதற்காக பயிர் பாதுகாப்புத் திட்டம் "கிராப் இன்ஷூரன்ஸ்" திட்டம் புகுத்தப்படவேண்டும். மாநில அரசுகள் தக்க ஆர்வம் இதிலே நடைமுறையிலே காட்டவில்லை என்று மத்திய அமைச்சர் அவர்கள் பாராளுமன்றத்திலே சொல்லியிருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்ததாக வேர்ஹவுஸிங் அண்ட் மார்க்கெட்டிங். தானியங்கள் கெட்டுப்போகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். அவற்றிற்குத் தகுந்த பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். அதோடு விவசாயிகளுக்கு கட்டுபடியாகக்





கூடிய விலை கொடுக்க வேண்டும். ஃப்ளோர் பிரைஸ் கொடுத்தால்தான் அவர்கள் தொடர்ந்து விவசாயம் செய்யமுடியும். ஒரு வருஷம் அதிகமாக விலையும், ஒரு வருஷம் பற்றாக்குறையும் ஏற்படுகிறது. எனவே, "ஃப்ளோர் பிரைஸ்" "சீலிங் பிரைஸ்" ஏற்படுத்தி அவர்களுக்கு உதவி செய்யவேண்டும்.

அடுத்ததாக, கரும்பு உற்பத்தி. நம்முடைய நாட்டிலே அதற்குத் தகுந்த டிராபிக்கல் க்ளைமேட் இருக்கிறது. ஆனால் ஆலைச் சொந்தக்காரர்கள் தங்கள் இஷ்டம்போல் நடக்கிறார்கள். 1967–68-லே குறைந்த அளவு கரும்பை அரவை செய்து உற்பத்திசெய்து அதிகமாக லாபம் சம்பாதித்தார்கள். அதற்குமாறாக 1968–69-லே அதிகமான அளவுக் கரும்பை அரவை செய்து உற்பத்திசெய்து அதிகமாக லாபம் சம்பாதித்தார்கள். பதிவுசெய்த கரும்பு விவசாயிகளுக்கு நன்மைகள் இல்லை. அவர்கள் தஞ்சம் புகவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. மத்திய அரசாங்கம் ஒரு சூத்திரம் நிர்ணயித்துள்ளது. ஆனால் அதன்படி விலை கொடுப்பதில்லை. விவசாயிகள் வஞ்சிக்கப்படுகிறார்கள். டன் 1க்கு ரூ. 65 கொடுக்க வேண்டுமென்று கேன் கமிஷனர் உத்திரவு போட்டிருக்கிறார்கள் அப்படியிருந்தும் புகளூர் D.S. A.Co. ஆலையினர் அந்த அளவுக்குக் கொடுக்க முன்வராத நிலைமை இருக்கிறது. இதைக் கவனிக்க வேண்டும்.

அடுத்தபடியாக வாழை அபிவிருத்தியைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இதனுடைய முக்கியத்துவத்தைப்பற்றி நான் சொல்ல வேண்டியதில்லை இரண்டு பழங்கள் இருந்தால் ஒரு நேர சாப்பாட்டை மிச்சப்படுத்தலாம். இதிலே இப்பொழுது கவனம் செலுத்தப்படுகிற தென்றாலும் இன்னும் அதிகமாகக் கவனம் செலுத்தி இதனுடைய மாவை வெளி நாடுகளுக்கு அனுப்புவதற்கு ஆராய்ச்சிகள் செய்யவேண்டும்.

சேலம், கன்னியாகுமரி மாவட்டங்களிலே குச்சிக் கிழங்கு அதாவது மரவல்லிக் கிழங்கு பயிர் செய்யப்படுகிறது. இதை அதிகப்படுத்த வேண்டும். இது மூன்று வகைகளில் பயன்படுகிறது. ஒன்று உணவுப் பஞ்சத்தைத் தீர்க்கும். இரண்டாவது வேலையில்லாதவர்களுக்கு சிறு சிறு ஆலைகள் இதற்காகத் தோற்றுவித்தால் வேலை கிடைக்க வசதிகள் ஏற்படும். மூன்றாவதாக கால்நடைச் செல்வம் அபிவிருத்தி அடைய இதைப் பயன்படுத்தலாம். எனவே இதையும் கவனிக்க வேண்டும்.

பருத்தி அபிவிருத்தியைப் பொறுத்தவரையில் தமிழகத்திலே உள்ள ஆலைகள் எவ்வளவு, பஞ்சுத் தேவை எவ்வளவு என்பதைப்பார்த்து தேவைப்படுகின்ற அளவுக்கு பஞ்சு அத்தனையையும் நம்முடைய நாட்டிலே உற்பத்தி செய்வதற்கு திட்டமிடவேண்டும்.

பஞ்சாப் மாநிலத்திலே ஏற்பட்டிருக்கிற அபிவிருத்தியைப்பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். 1947-ஆம் ஆண்டிலே ஏற்பட்ட பிரிவினையிலே அது சின்னாபின்னமான பகுதி. 1950–60-ம் ஆண்டிலே பற்றாக்குறையாக இருந்தது. 1960–70-லே கிரானரி ஆப் இன்டியா என்ற பெயர் வாங்கியிருக்கிறது. 20 லட்சம் டன் உற்பத்தி நிலையாக இருந்தது அதற்கு மாறாக, 64 லட்சம் டன் உற்பத்தியாகக்கூடிய நிலைக்கு எட்டி இருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தினுடைய உணவுச் சேமிப்பு 36 லட்சம் டன் என்றால் அதிலே 18½ லட்சம் டன் பஞ்சாப் மாநிலம் மட்டுமே கொடுக்கக்கூடிய உயர்ந்த நிலைக்கு வந்திருக்கிறார்கள். தரிசாகக் கிடக்கக்கூடிய அவ்வளவு நிலங்களையும் சாகுபடிக்குக் கொண்டுவந்து விட்டார்கள்

Almost the entire cultivable area in the State has been brought under the plough and now the efforts of the planners and farmers are directed towards increasing the output per hectare by large-scale use of fertilizers and improved varieties of seeds

என்ற நிலைமைக்கு வந்திருக்கிறார்கள்.

1960-61-இல் ஒரு ஹெக்டேருக்கு 821 கிலோகிராம் உற்பத்தி செய்த இடத்தில் 1967-68-ல் 1,863 கிலோகிராம் என்ற அளவுக்கு விளையக்கூடிய நிலைமைக்கு வந்திருக்கிறார்கள். மூன்றுதடவை மந்திரிசபைகள் கவிழ்ந்தும், பிரஸிடெண்ட் ரூல் வந்தும் நிலையில்லாத அரசாங்கம் இருந்தும் அந்த இலாகா எவ்வளவு திறமையாக நடக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். நம்முடைய மாநிலத்திலே இரண்டு போகம், மூன்று போகம் விளைவிப்பதைப் பற்றிச் சொல்லவில்லை. இதைத்தவிர பேரண லாண்டாக இருக்கின்றவற்றை அதாவது வறண்ட பகுதிகளாக உள்ளவற்றை இராமநாதபுரம், திருநெல்வேலி, வட ஆற்காடு, தென் ஆற்காடு, கோவை போன்ற மாவட்டங்களில் உள்ள வறண்ட பகுதிகளை விவசாயத்திற்குக் கொண்டு வரவேண்டும். கடைசிப் பட்சமாக பனைமரம், புளியமரமாவது தரிசுப் பகுதிகளில் பயிராக்க வேண்டும். அதையெல்லாம் "ஜாயின்ட் பார்மிங்" என்ற முறையிலே வைத்து, "மாதிரிப் பண்ணைகள்" ஏற்படுத்தி செயல்படுத்திப் பார்க்கவேண்டும். சர்வீஸ் கோவாப்பரேடிவ் மூலம் இயந்திரங்களை வைத்து பண்ணைகள் செயல்படுத்தப்பட வேண்டும், இப்படியெல்லாம் செய்து எல்லாப் பகுதிகளுக்கும் தண்ணீர் கிடைக்கச் செய்தால் உற்பத்தியை அதிகமாக்க முடியும். நான் முடிவில் வேகமாகக் கூறிய 10 அம்சங்களையும் இதற்குப் பொறுப்பு வகிக்கின்ற அத்தனை இலாக்காக்களும் சரியாக கவனித்து வேலை செய்தால்தான் நிறைவேற்றமுடியும். அதற்காகத்தான் இந்த இலாகா முதலமைச்சரிடம் இருக்கவேண்டும் என்று சொன்னேன். 13 வருடம் சட்டமன்ற உறுப்பினராக இருந்த அனுபவத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன். முதலமைச்சருடைய பிரைவேட் செக்ரட்டரி மணியடித்தால் பைல்கள் எவ்வளவு துரிதமாக வரும் என்பதை தெரிந்துதான அந்த இலாகா முதலமைச்சரிடம் இருப்பது நல்லது என்று நான் மட்டும் சொல்லவில்லை. மறைந்த மேதை, நவஇந்தியாவின் சிற்பி, பாரதப் பிரதமர் நேருஜி அவர்கள் அந்த அந்த மாநிலங்களின் முதல்வர்கள் இந்த வேளாண்மை இலாகாவினை ஏற்று நடத்த வேண்டுமென்று ஆலோசனை சொன்னார்கள். எனவே பல இலாகாக்களின் நல்ல கோ-ஆர்டினேஷன் இருப்பதற்காக இந்த இலாகாவை முதல் அமைச்சரே எடுத்துக்கொள்ள வேண்டும்.

கடைசியாக ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். ஐ.ஆர். 8 நெல்லை விளைவிக்கிறார்கள். ஆனால் தஞ்சையில் அதை புரோக்யூர் பண்ணுவதற்கு மறுக்கிறார்கள். ஆண்டவன் படைத்த நெல்லையும் அரிசியையும் நாம் எல்லாம் விரும்பிச் சாப்பிடுகிறோம். கோவையிலே ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்று போடுவதிலே இருந்து ஒரு நண்பர் எனக்கு அந்த அரிசிப் பொட்டலத்தை அனுப்பியிருக்கிறார்கள். கனம் சபாநாயகர் அவர்கள் அனுமதியோடு நான் இதைக் கொடுக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: நான் என்ன என்று முதலிலே பார்க்கவேண்டும்.

**திரு. தோ. மு. நல்லசாமி**: உங்கள் அனுமதியோடுதான் கொடுக்கிறேன். சாப்பிடக்கூடிய முடியாத நிலைமையில் மோசமாக இருக்கிறது. இதிலே இந்த இலாகா கவனம் செலுத்த வேண்டும்.

**மாண்புமிகு கே. ஏ. திரு. மதியழகன்**: பிரச்சாரத்திற்காக தயார் பண்ணிய அரிசியா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இது எந்த அளவுக்கு ஆதன்டிக் என்று தெரிய வேண்டும்.

பி.பகல் 1-30 **திரு. தோ. மு. நல்லசாமி**: கடந்த காலத்தில் நானும் சட்டமன்ற உறுப்பினராக இருந்தேன். அப்போது இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டது.





**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்**: அதனால் கனம் உறுப்பினருக்கு உரிமை இல்லை என்று வாதம் செய்யவில்லை. தாராளமாக உரிமை இருக்கிறது.

**திரு. கோ. மு. நல்லசாமி**: ரொம்ப பணிவாக மனிதாபிமானத்தின் பெயரால்—இப்படி எல்லாம் விநியோகிக்கப்படுகிறது—இது நியாயமா என்று நான் கேட்கிறேன். தவறு என்று சொன்னால் திரும்பப் பெற்றுக் கொள்ளுகிறேன். நீங்கள் எல்லாம் மந்திரிகள். நாங்கள் சட்டசபை உறுப்பினர்கள். இது நியாயம் அல்ல, தடுத்து நிறுத்துங்கள், என்று நான் மன்றாடி கேட்டுக் கொள்ளுகிறேன் என்று சொல்லி இந்த மானியத்தின் மீது என்னுடைய கட்சி கொண்டுவந்துள்ள வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து முடித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து**: தலைவர் அவர்களே, நேற்றும் இன்றும் விவசாயம் மீனளம் ஆகிய இரண்டு துறைகளில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி எந்த எந்த வகையான செலவினங்கள் முறையானவை எது முறையற்றது என்கிற வகையிலும் முறையற்றது என்பதற்காக சில வெட்டுத் தீர்மானங்களையும் தந்து வேறு பல நல்ல ஆலோசனைகளையும் தந்து நல்ல கருத்துக்களை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆனால் பதில் சொல்லக் கூடிய நேரம்தான் அதிகமாக இருக்கவில்லை என்று நான் கொஞ்சம் வருத்தத்துடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயத் துறையில் இன்றைக்கு நமது அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிற நல்ல முன்னோடியான திட்டங்களை எல்லாம் சிலர் பாராட்டி இருக்கிறார்கள். ஒரு சிலர் ஏதோ வெறுப்பாகவே பேசியிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு யாரும் விவசாயத்தின் மேம்பாட்டிற்காகவும் விஞ்ஞான முறையில் விவசாயத்தை செய்வதற்கும் நல்ல ஆராய்ச்சிகளை செய்வதற்காகவும் இன்றைக்கு நமது மாநிலத்தில் கோவையில் நமது அரசாங்கம் கொண்டு வர இருக்கும் விவசாயப் பல்கலைக் கழகத்தைப் பற்றி ஒரு வார்த்தை கூட கூறவில்லை என்பதற்காக நான் மிகவும் வருந்துகிறேன். கிட்டத்தட்ட ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 2 கோடி ஒதுக்கீடு செய்து மத்திய சர்க்கார் உதவியோடு கோவையில் இன்றைக்கு இப்படி ஒரு பல்கலைக் கழகம் நிறுவ இருக்கிறோம் என்றால் அது இந்த மாநிலத்திற்கே பெருமை தரத் தக்க செய்தியாகும். பூரிப்புத் தரத்தக்க நல்ல முறையாகும். எனவே அதைப் பற்றி யாரும் சொல்லவில்லை என்பதற்காக வருந்துகிறேன்.

எல்லோருமே பொதுவாக நாங்கள் கொடுத்திருக்கிற கொள்கை விளக்க உரையை படித்திருக்கிறார்கள் என்றாலும் சிலர் அவற்றை ஆழ்ந்து படிக்கவில்லை என்றே கருதுகிறேன். ஒவ்வொருவரும் அதில் கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்கள், பல திட்டங்கள் இவைகளை எல்லாம் சரியாகக் கூர்ந்து கவனிக்காமல் மேல் எழுந்தவாரியாக படித்துவிட்டு தங்கள் கருத்துக்களை சொல்லியிருப்பதாக கருதுகிறேன். நாங்கள் கொடுத்திருக்கிற கொள்கை விளக்க உரையிலே திட்டவட்டமாக எவ்வளவு புதிய திட்டங்களை எல்லாம் இன்றைக்கு இந்த அரசாங்கம் எடுத்திருக்கிறது, இந்த ஆண்டு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்து எந்த வகையான முறைகளைக் கையாண்டு விவசாயத்தின் மேம்பாட்டிற்கு பணியாற்ற இருக்கிறோம் என்பதை எல்லாம் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே நல்ல திட்டங்களாக இருப்பது சிறிய உழவர்களுக்கு, சிறிய நிலக்கிழார்களுக்கு மத்திய சர்க்கார் ரூ. 30 கோடி தற்காலிகமாக நிதி உதவி செய்து அதில் நமது மாநிலத்தில் தென்னாற்காடு மாவட்டத்தில் 5 ஏக்கர் புஞ்சை நிலம் 2½ ஏக்கர் நஞ்சை நிலம் என்ற அளவுக்கு நிலம் உடைய உழவர்கள் இத்திட்டத்தில் நல்ல பலன் பெறத்தக்க வகையில் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. இன்னும் சில மாவட்டங்கள் எடுக்கப்படவிருக்கின்றன என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த 70 கோடி

ரூபாயில் நமக்கு எவ்வளவு சேருகிறது என்று மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. கோ. பூவராகவன் அவர்கள் கேட்டார்கள். கிட்டத்தட்ட ரூ. 1½ கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். மேலும் பல மாவட்டங்களை எடுத்துக் கொள்ள இருக்கிறோம். அதற்குப் பிறகு தேவைப்பட்டாலும், கேட்க உரிமை இருக்கிறது கொடுப்பது அவர்களுடைய கடமையாக இருக்கிறது. கேட்டுப் பெறுவோம் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

புஞ்சை நிலங்களுக்கான புதிய திட்டங்களைப் பற்றி பலர் பேசினார்கள். நாங்கள் கொடுத்திருக்கிற விளக்க உரையில் 160 லட்சம் ஏக்கர் மொத்த பரப்பில் 100 லட்சம் ஏக்கர் புஞ்சை என்று கொடுத்திருக்கிறோம். 100 லட்சம் ஏக்கர் புஞ்சை இருக்கிறதே என்ன செய்தீர்கள் என்று கேட்கிறார்கள். அதற்காகத் தான் வறட்சிப் பகுதிகளில் புரட்சிகரமான ஒரு பயிர் முறையை ஏற்படுத்தி மத்திய சர்க்கார் ஏனைய மாநிலங்களோடு நமது மாநிலத்தையும் ஒன்றாகச் சேர்த்து புதிய திட்டங்களை நிறைவேற்ற இங்கு 6 லட்சம் பரப்பளவில் மண்வள பாதுகாப்பு திட்டத்தைச் சேர்த்தோம். வேர்க்கடலை பருத்தி போன்ற பயிர்கள் 6·25 லட்சம் ஏக்கர் பரப்பளவில் முனைப்புத் திட்டத்தை புகுத்தி உள்ளோம், என்று குறிப்பில் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எச். பி 3 கம்பு பயிரை திருநெல்வேலி. இராமநாதபுரம் மாவட்டங்களில் 1·5 ஏக்கர் பரப்பளவில் பயிரிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. இவைகள் எல்லாம் புஞ்சைப் பயிர்களுக்கு இந்த அரசாங்கம் அதிகப்படியாக அக்கறை எடுத்துக்கொண்டு இருக்கிறது என்பதைக் காட்டுவதாகும்.

எல்லோருமே பரவலாக ஒன்றைப்பற்றி சொன்னார்கள். பசுமைப் புரட்சி என்ற திட்டத்தை தஞ்சையில் செய்கிறீர்கள் ஏன் மற்ற மாவட்டங்களில் செய்யக்கூடாது, என்ன அக்கறை காட்டியிருக்கிறீர்கள் என்று. நான் அதை கேள்வி நேரத்தில்கூட பலமுறை கூறியிருக்கிறேன். பொதுமேடைகளிலும் பேசிக் கொண்டிருக்கிறோம். பசுமைப் புரட்சி திட்டத்தை எந்த அளவுக்கு நல்ல முறையில் இந்த அரசாங்கம் நிறைவேற்றிக்கொண்டு வருகிறது என்பதற்கு சில புள்ளி விவரங்களை எல்லாம் இப்போதும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏறத்தாழ 72 கோடி ரூபாய் திட்டம் என்ற ஏ. ஆர். சி. திட்டத்தின் மூலமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த 72 கோடியில் 69 கோடி செலவு செய்து 25 ஆயிரம் புதிய கிணறுகள் 11 ஆயிரம் கிணறுகளை ஆழப் படுத்துதல் 34,600 பம்பு செட்டுகள், 15 ஆயிரம் வடிமுனைக் குழாய்கள், முதலியவைகளை 59 கோடி ரூபாய் செலவில் இன்றைக்கு இந்த அரசாங்கம் செய்திருக்கிறது. இதுவும் அன்றி பத்துக் கோடி ஐம்பது லட்ச ரூபாய் செலவில், இப்போது சொன்னார்களே, பெரிய இயந்திரங்களை வைக்க வேண்டுமென்று, அந்தவகையில் நிறைய டிராக்டர்கள் வாங்கி கொடுக்க வேண்டுமென்று எண்ணத்தில் மூவாயிரம் டிராக்டர்கள் வாங்க வேண்டுமென்று திட்டமிட்டு பத்துக் கோடியே ஐம்பது லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். அதிலும் பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தில் மண் வளப்படுத்துவதற்கு 1·90 கோடி ரூபாய் ஒதுக்கி இதற்காக அக்கறை எடுத்து குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகளுக்குள் ரூ. 72 கோடியை செலவு செய்ய வேண்டுமென்று அரசாங்கம் திட்டம் இட்டிருக்கிறது. தஞ்சையில் வடிகால் திட்டம் ஒன்று 49 கோடி ரூபாய் செலவில் ஒப்புக் கொள்ளப்பட்டு எடுத்திருக்கிறோம். அது பொதுப் பணித்துறையின் பார்வையில் இருக்கிறது அது நிச்சயமாக நிறைவேற்றித் தரப்பட்டால் இப்போது வடிகால் ஏற்படுத்தப்படவில்லை என்ற குறைபாடுகள் நீங்கும். அது குறித்து மாண்புமிகு தனுஷ்கோடி போன்றவர்கள் கூட குறைப் பட்டுக் கொண்டார்கள். இவைகள் எல்லாம் ஏற்கனவே உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்ட திட்டங்கள் என்பதை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்னும் பவர் டிரில் இல்லை என்று சொன்னார்கள். இப்போது 7 பவர் டிரில் உண்டு. அதுவும் தவிர 23 லட்ச ரூபாய்க்கு பவர் டிரில் வாங்க நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம். இந்த அரசாங்கம் புரட்சிகரமான



பசுமைப் புரட்சி திட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்று அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைக் காட்டுவதற்குத் தான் இந்த புள்ளி விவரங்களை மீண்டும் மீண்டும் சொல்லிக் கொள்ளுகிறேன். பொதுவாகவே இன்னும் நல்ல திட்டங்களுக்கு இந்த அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருப்பதெல்லாம் ஐ. எம். எஸ். லோன். யாரோ சொன்னார்கள் கடந்த ஆண்டு புள்ளி விவரம் கிடைக்காத காரணத்தால் இந்த ஆண்டு அதிகமா குறைவா என்று தெரியவில்லையென்று. அதுபோல விளைச்சலிலும் எடுத்துக் கொண்டிருக்கிற இலக்கு எவ்வளவு என்று கேட்டிருக்கிறார்கள். விளக்க உரையில் நல்ல முறையில் தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது. உதாரணமாக மிகுபயன்தரும் நெல் ரகங்களை பயிரிடுவதற்காக திட்டமிட்ட பரப்பளவு 1970–71-ல் 26 லட்சம் ஏக்கர் ஆகும். 1973–74-ல் 33·50 லட்சம் ஏக்கராகும். இன்றைக்கு 70–71-ல் இந்த 26 லட்சம் ஏக்கர் இலக்கை எட்டிவிட முடியும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது. பிப்ரவரி மாதம் 28-ம் தேதிக்குள் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கணக்கின்படி 27·11 லட்சம் ஏக்கரில் மிகுபயன்தரு ரக நெல்களைப் பயிரிட்டிருக்கிறோம். நாம் நினைத்த டார்கெட்டைவிட அதிகமாக முடித்திருக்கிறோமே தவிர, குறைவாக அல்ல. அந்த விளக்கம் எல்லாம் உரையிலே தரப்பட்டிருக்கிறது. அவைகளை எல்லாம் சரியான முறையில் கூர்ந்து கவனிக்காமல் மன்ற உறுப்பினர்கள் பேசுவது வருந்தத்தக்கது. ஐ. எம். எஸ். லோன் தீவிர உரக் கடன் எல்லாம் கொடுத்துக்கொண்டு வருகிறோம். இன்றைக்கு 6.28 கோடி ரூபாய் அளவுக்கு ஏ. ஆர். சி. மூலமாக கொடுப்பதோடு மட்டு மல்லாமல் கூட்டுறவுத் துறையின் மூலமாகக் கொடுக்கின்ற உதவிகள் அல்லாமல், விவசாய இலாகா மூலமாக விவசாயிகளுக்கு 6½ கோடி ரூபாய் கடன் கொடுக்க இந்த அரசாங்கம் முனைந்திருப்பதெல்லாம் விவசாயத்தைச் செழிப்புறச் செய்யவும், மேம்பாடு செய்யவும், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவி செய்யவும் ஆன திட்டங்கள் ஆகும். இவை எல்லாம் விளக்க உரையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

'கிராப் இன்ஷூரன்ஸ்' பற்றிச் சொன்னார்கள். இதை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று நினைத்து பரீட்சார்த்தமாக உடுமலைப் பேட்டை, கோபி, தாராபுரம், காங்கேயம் போன்ற இடங்களில் எந்த அளவுக்குப் பரப்பளவு நிலம் இருக்கிறது. எவ்வளவு மகசூல் வருகிறது, எந்த வகையில் தீங்கு ஏற்படுகிறது என்ற புள்ளிவிவரங்களைக் கேட்டிருக்கிறோம். மத்திய அரசு இன்னும் இதற்கான சட்டத்தை கொண்டுவரவில்லை. மத்திய அரசு இதற்கான சட்டத்தைக் கொண்டுவந்த பிறகுதான மற்ற மாநிலங்களில் கொண்டு வர முடியும். இருந்தாலும் மத்திய அரசு இதைப்பற்றி கேட்டிருப்பதால் அதைப் பற்றிய விவரங்களைச் சேகரித்துக் கொண்டிருக்கிறோம். எந்த அளவுக்கு உதவி செய்ய வேண்டும். எந்த அளவு பாக்கேஜ் கொடுக்க வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் அரசாங்கம் பரிசீலித்து வருகிறது. மத்திய அரசாங்கம் அதற்கான சட்டத்தைக் கொண்டுவந்தவுடன் மாநில அரசாங்கமும் அதைச் செய்யும் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பரவலாகப் ப்ரொக்யூர்மெண்ட் விலையைப் பற்றிச் சொன்னார்கள் கடைசியாகப் பேசிய மாண்புமிகு நல்லசாமி அவர்கள் கூட 'விவசாயிகள் பயப்படுகிறார்கள். கொள்முதலை ஏற்றுக்கொள்ள மாட்டார்களோ என்று அஞ்சுகிறார்கள்' என்று சொன்னார்கள். புதிய ரக நெல் ஐ. ஆர். 8–ஐப் பற்றிப் புகார் கூறினார்கள். நானே நேரிலேயே ஐ. ஆர். 8 பயிரிடப்பட்டுள்ள இடங்களுக்குச் சென்று பார்த்து வந்தேன். இங்கே உறுப்பினர்கள் பேசுவதற்கு, விவசாயிகள் சொல்லுவதற்கும் இடையே பெருத்த வித்தியாசம் இருக்கிறது. விவசாய மானியம் வருவதை உத்தேசித்து சில தினங்களுக்கு முன்பு செங்கற்பட்டு மாவட்டத்திற்கு அதிகாரிகளுடன் திடீரென்று விஜயம் செய்து பல இடங்களைப் பார்வையிட்டேன். நாம் எல்லாம் அதிசயிக்கத்தக்க அளவுக்கு நல்ல முறையில் ஐ. ஆர். 8 நெல்லை விவசாயிகள் பயிர் செய்து வருகிறார்கள். நரசிங்கபுரம் என்ற கிராமத்திற்கு ஐ. ஆர். 8 என்ற பெயரையே வைத்திருக்கிறார்கள்.

[டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து] [1970 ஏப்ரல் 1

அங்குள்ள 368 ஏக்கர் நிலம் முழுவதிலும் ஐ. ஆர். 8 நெல்லை விவசாயிகள் பயிரிட்டிருக்கிறார்கள். கடந்தமுறை 'வேர்க்கடலை போட்டோம், இந்த முறை ஐ. ஆர். 8 நெல்லைப் போட்டு நன்றாக விளைந்திருக்கிறது. கொள்முதலை ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்று வேண்டுகோளாகச் சொன்னார்களே தவிர, அச்சத்துடன் கூறவில்லை. விவசாயப் பெருங்குடி மக்களிடமிருந்து கொள்முதலை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது என்ற அச்சம் அவர்களுக்குத் தேவையில்லை. மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் பதிலுரை தரும்போது கூட இதைப் பற்றி விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த முறையில் ஐ. ஆர். 8 நெல்லை பயிரிட்டு அதை அரசாங்கம் கொள்முதல் செய்யவேண்டுமென்று சொன்னால் அவ்வளவையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும். ஆனால் அதே நேரத்தில் பதுக்கி வைத்துக் கொள்ளாதீர்கள். வியாபாரிகள் விவசாயி களிடமிருந்து வாங்கி வைத்துக்கொண்டு பிறகு தேங்கிவிட்டது. இந்த விலையைச் சற்றுக் கூட்டிக் கொடுங்கள் என்று கூறினால் அதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாது. விவசாயிகளுடைய விளைச்சல் எந்த அளவுக்குக் கண்டுமுதல் இருந்தாலும் ஏற்றுக்கொள்ளுவோம் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நாம் நியாயமான விலையைத்தான் வைத்திருக்கிறோம். ஏ.டி.டி. 27 போன்ற சன்ன ரக வெரைடிக்கு 50 ரூபாய்; ஐ. ஆர். 8 மீடியம் க்வாலிடி என்பதற்காக 47 ரூபாய், துள்ள கார், ரோஸ் கார் போன்ற வெரைடிகளுக்கு 45 ரூபாய், கொடுக்கிறோம். இதைக் கட்டுபடியாகாத விலை என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. எப்படியும் ஒரு ஏக்கருக்கு 600 ரூபாய் லாபம் கிடைக்கும். அடிக்கடி திட்டமிட்டு விவசாய அலுவலர்கள் சொல்லுகிற அளவுக்கு உரிய நேரத்தில் தேவையான உரங்கள் அவ்வளவையும் போட்டால் கூட ஓரளவுக்கு நியாயமாக எதிர்பார்க்க முடியும். கோவையில் நாம் பரிசு கொடுத்திருக்கிறோம். அங்கே சில விவசாயிகள் ஒரு ஏக்கரில் ஆறு டன் விளைச்சல் கண்டிருக்கிறார்கள். எல்லா இடங்களிலும் அவ்வளவு விளைச்சல் இல்லாவிட்டாலும் குறைந்த பட்சம் இரண்டரை டன் கிடைத்தால் கூட, அதற்காக ஏக்கருக்கு 600 ரூபாய் செலவழித்தாலும் கடைசியில் 1,175 ரூபாய் வரும். ஆக 600 அல்லது 700 ரூபாய் வரை லாபம் கிடைக்கும்.

நான் சென்ற கிராமங்களில் எல்லாம் விளைச்சல் அதிகமாக இருக்கிறது என்று பெருமையாகச் சொன்னார்கள். நேற்றுக் கூட மேலவையில் ஒரு செய்தியைச் சொன்னேன். இந்து பத்திரிகையில் இன்று போட்டிருக்கி றார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் களம்பூர் கிராமத்தில் ஒரு விவசாயி வறட்சி காரணமாக எந்த நெல்லைப் போடுவது என்று அஞ்சிக் கொண்டிருந்த நேரத்தில், யாரோ ஐ. ஆர். 8 நெல்லைப் போடச் சொன்னதன் பேரில் போட்டு இன்று அது அவருக்கு அபரிமிதமான லாபத்தைத் தந்திருக்கிறது. மூன்று ஏக்கர் நிலத்தில் இந்த ஆண்டு அவர்கள் கண்ட விளைச்சலைப்போல் இதற்கு முன் எந்த ஆண்டிலும் பெறவில்லை. இப்போது அவருக்கு ஒரு ஆண் குழந்தையும் பிறந்திருக் கிறது, குழந்தைக்குக் கூட அவர் ஐ. ஆர். 8 என்ற பெயரை வைத்திருக்கிறார். இதெல்லாம் விவசாயிகளே கூறுவதே தவிர, விவசாய இலாகா கூறுவதல்ல. இந்த இலாகா தவறான புள்ளி விவரங்களையே தருகிறது. அந்த இடங்களுக்குச் சென்று பார்த்தால் இந்த நிலை இல்லை என்று சொன்னார்கள். ஆனால் நாங்கள் கேட்கிற புள்ளி விவரங்களை மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பெறுகிறோம். நாங்களாக இங்கே சொல்லுவதில்லை. தீர்க்கமான முறையில் பரிசீலனை செய்து டைரக்டர் ஆப் ஸ்டாடிஸ்டிக்சும் நல்ல புள்ளி விவரங்களைக் கொடுக்கிறார்கள். நாங்கள் செய்கின்ற பணிகளுக்காக நாங்களே பெருமை தேடிக்கொள்ள புள்ளி விவரங்களை நாங்களே அதிகப்படுத்திக் கொடுக்கிறோம் என்று தவறாகக் கணித்துவிடக்கூடாது. மக்களுக்கு நல்ல பயன் கிடைக்க வேண்டுமென்பதற்காக பல்வேறு துறைகளில் பணியாற்றுகின்றவர்கள் அந்தப் புள்ளி விவரங்களைத் தயாரித்துக் கொடுக்கிறார்கள்.



1970 ஏப்ரல் 1] [டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து]

அதிகப்படியான விளைச்சல் வந்துவிட்டது என்ற காரணத்தினால் என்ன ஆகுமோ, விலை குறைந்துவிடுமோ என்று அஞ்சலாம். இப்படித்தான் முன்பு ஒருமுறை செய்தார்கள். அதிகப்படியாக நெல் பயிரிட்டுவிட்டால் என்ன ஆகுமோ என்று அஞ்சி கரும்பைப் போடவேண்டுமென்று விரும்பி எல்லா இடங்களிலும் கரும்பைப் போட்டுவிட்டார்கள். இப்போது கரும்புக்கு விலை குறைந்துவிட்டது, அதை அதிகப்படுத்தி கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். நாங்களா கரும்புக்கு விலையை நிர்ணயிக்கிறோம்? மத்திய அரசாங்கம் நிர்ணயிக்கிறது. அதே போன்று உரத்திற்கும் மத்திய அரசாங்கந்தான் விலையை நிர்ணயிக்கிறது. மாநில அரசாங்கம் உங்களைப்போல் சிபாரிசுதான் செய்ய முடியும். கரும்பாக இருந்தாலும், உரமாக இருந்தாலும், நெல்லாக இருந்தாலும் விலையை நிர்ணயிப்பது மத்திய அரசு. விவசாயிகளுக்கு நஷ்டத்தைத் தரக்கூடாது என்பதை உணருகிறோம். இதிலே தவறான பிரசாரங்களுக்கு இடம் கொடுக்காமல் விவசாயிகள் நல்ல முறையில் சாகுபடி செய்ய வேண்டும். விவசாய அதிகாரிகள் கூறும் நல்ல ஆலோசனைகளை ஏற்று அதிகப்படியான நிலத்தில் விளைச்சலைப் பெருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு ஏற்றவகையில் அரசாங்கம் எல்லாவிதமான நன்மைகளையும் செய்திருக்கிறது.

இன்றைக்கு அரசாங்கம் விவசாயிகளுக்குப் பல துறைகளில் துணை புரிவது போல பம்பாயில் உள்ள 20, 28 கமர்ஷியல் பாங்க்ஸ் ஒன்றாகச் சேர்ந்து அக்ரோ பினான்ஷியல் கார்ப்பரேஷன் என்ற நிறுவனத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். 5½ கோடி ரூபாயை நம் மாநிலத்தில் புதிய முறையில் சாகுபடி செய்வதற்கு ஒதுக்கியிருக்கிறார்கள். திருச்செந்தூர் பக்கத்தில் ஒரு கோடி ஒன்பது லட்சம் ரூபாய்க்கு சிமெண்ட் காங்கிரீட் போட்டு தனி தளமாக அமைத்து சிமெண்ட் தளத்தில் நெல்லைச் சாகுபடி செய்ய வேண்டுமென்ற புதிய முறையைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இன்னும் வாழையைப் பற்றிச் சொன்னார்கள். மற்ற நாடுகளுக்கு வாழை அனுப்பவேண்டுமென்று சொன்னார்கள். அதற்காக தூத்துக்குடியில் ரூ. 4,43,00,000 செலவில் ஒரு திட்டத்தை அரசு செயலாற்றி வருகிறது. வெளிநாட்டினர் விரும்புகிற அளவிற்கு நல்ல வாழைகளை, பார்ப்பதற்கு அழகாக உள்ள வாழைகளை, தோல் பழு தடையாமல் இருக்கும் வாழைகளை, விமானங்கள் மூலம் அனுப்பி வைத்தால் நல்லது. கெடாமல் இருக்கக்கூடிய அளவிற்கு உள்ள நல்ல வாழைகளை உற்பத்தி செய்யவேண்டும். அப்படி நம்மால் உற்பத்தி செய்யவும் முடியும். அதனால் நாம் அன்னியச் செலா வணியும் பெறமுடியும். வாழையை அனுப்பலாம் என்று சொன் னார்கள. பழமாகவே அனுப்பலாம். இந்த தூத்துக்குடியில் உள்ள திட்டத்தை அனைவரும் ஏற்றுக்கொள்வர், ஆனால் அவர்கள் அதைச் சரியாக கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். ஆகவேதான் அதைப் பற்றி பேசவில்லை என்று கருதுகிறேன்.

விதைகள் பற்றி சொன்னார்கள். தனிப்பட்ட விவசாயிகள் விதைகளை பயிர் செய்து கொடுத்துக்கொண்டிருந்தார்கள். அதில் பல குறைபாடுகள் இருந்தன. அதை உணர்ந்துதான் அரசாங்கம் ஒரு திட்டத்தை, 'சீட் சர்ட்டிபிக்கேஷன் ஸ்கீம்' என்று உருவாக்கியிருக்கிறது. அதிகாரிகள் ஒவ்வொரு விதைப் பண்ணைக்கும் சென்று எப்படி எல்லாம் நீர் பாய்ச்சப்படவேண்டும், எந்தக் காலத்தில் எந்த உரத்தைப் போட வேண்டும். எப்படி பூச்சி மருந்துகள் தெளிக்கவேண்டும். எப்படி பயிர் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது பற்றியெல்லாம் அறிவுரை வழங்கி நல்ல தரமான விதைகளை, பொறுக்கு விதைகளைக் கொடுப்பதற்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. விதைகள் சரியாகக் கிடைக்கவில்லை, ஆகவே, விளைச்சலை அதிகமாகப் பெறமுடியவில்லை என்று இனி கூறுவதற்கு இடம் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

புன்செய் நிலங்கள் பற்றிச் சொல்லப்பட்டது. அதில் கூட பரீட்சார்த்தமாக சில காரியங்களைச் செய்து வருகிறார்கள். புன்செய் நிலங்களில் நெல் சாகுபடி செய்ய முடியுமா என்பது பற்றியெல்லாம் இப்போது இந்த இலாகாவின் யோசனையில் இருக்கிறது. மொழிக் கருப்பு என்ற நெல்லை இப்போது தூய்மைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அது புன்செய்யில் வரும் என்று நினைக்கிறார்கள். வி. ஒ. 31-ம் புன்செய்யில் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஐ. ஆர். 8-ஐக்கூட பயன்படுத்தலாம் என்று நினைக்கிறார்கள்.

இந்த ஐ. ஆர். 8-ஐ எந்த நேரத்தில் எந்த இடத்தில் பயிரிட வேண்டும் என்பதைப் பற்றிச் சொல்லவில்லையே என்று சொன்னார்கள். இதை எந்தக் காலத்தில், எந்த இடத்தில் பயிரிட்டாலும் விளையும். வருடம் பூராவும் எங்கேயாவது ஒரு இடத்தில் இது விளைந்துகொண்டேயிருக்கும். அதற்காகத்தான் இதற்கு "அதிசய நெல்" என்று பெயரிட்டார்கள். அந்தப் பெயரை நாங்கள் வைக்கவில்லை. அதைக் கண்டு பிடித்தவரே, அதன் பெற்றோரே அந்தப் பெயரை வைத்து விட்டார்கள். "மிராக்குலஸ் பாடி" என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அது எங்கு வேண்டுமானாலும் பயிராகும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். "ரெக்டூன்" என்று சொல்கிறார்கள். அறுவடையில் குறுத்திலிருந்து வரும் ஐ. ஆர். 8 முதல் முறை பயிரிடும்போது வருகிற மணி எண்ணிக்கை சற்று குறையும். முதலில் பயிரிடும்போது 135 நாட்கள் என்றால் அறுவடை செய்துவிட்ட பிறகு குறுத்தில் வரும்போது 60 நாளில் வருகிறது. அதனால் நாளும் குறைகிறது. பயனும் அதிகமாகக் கிடைக்கிறது. கம்பம் பள்ளத்தாக்கில் கொஞ்சம் ஏக்கரை இதற்காக ஒதுக்கி பரீட்சை செய்துவருகிறார்கள். அது வெற்றிகரமாக இருந்தால் பலயிடங்களில் ரெக்டூன் மூலம் அதிகப்படியாக ஐ. ஆர். 8-ஐயைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்ற நம்பிக்கை இந்த இலாகாவிற்கு இருக்கிறது.

